# ஆனந்தபோதினி

## ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

26 JUL 1922

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(தொகுதி 7.)

துன்மதி௵ ஆடி௴ முதல் துந்துபி௵
ஆனி௴ வரையில்
1921௵ ஜூலை௴ முதல் 1922௵ ஜூன்௴ வரையில்.

நா. முனிசாமி முதலியார்,
"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

*All Rights Reserved.*

கலிகோ பைண்ட் விலை ரூபா 1—6—0. | 1922 | தபாற் கூலி பிரத்தியேகம்

160929
சென்னை-600 008.




| விஷயங்கள். | பக்கம். |
|---|---|
| நல்லாயன் தவறுதலும் பொய்க் கூற்றும் ... | 72 |
| நாட்டுக்கோட்டை வைசிய சந்தா நண்பர்களுக்கு அறிவிப்பு ... | 68, 108 |
| ஆனந்தபோதினியின் பவிஷ்காரமும், உண்டசோற்றுக்கு இரண்டகமும் ... | 72 அ |
| ஆனந்தபோதினி அறிவிப்பு ... | 73, 107, 232, 272, 362, 383, 418, 473 |
| நம்மாதர்க்கு உயர்தரக்கல்வி அவசியமோ ... | 82 |
| நம்நாட்டுக் குறைகள் ... | 97 |
| ஸ்ரீ பஞ்சாக்ஷரம் ... | 99 |
| "நல்லாயன்" நலமின்மையும் "ஆனந்தபோதினி" யின் அருமையும் ... | 111 |
| வர்த்தகம் ... | 122 |
| அவாவும் அவாவறுத்தலும் ... | 129 |
| "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" | 133 |
| சில ஆக்ஷேபணைகள் ... | 140 |
| ஓர் நற்செய்தி ... | 149 |
| ஓர் அதிசயநாடு ... | 162 |
| தாய்ப்பாஷையின் அவசியம் .. | 169 |
| இந்தியகைத்தொழில் ... | 178 |
| நல்லாயனும் நம்சம்பந்தமும் ... | 192 |
| கைத்தொழிலும் தாய்நாடும் ... | 202 |
| பிரபஞ்ச அனுபவம் ... | 206 |
| "மோனமென்பது ஞானவரம்பு" ... | 209 |
| பிரகலாதன் ... | 212, 264, 284, 384, 414, 448 |
| திருப்பதிமலையின் அக்கிரமங்கள் ... | 216 |
| மேற்கு நாட்டார்களும் கிழக்கு நாட்டார்களும் ... | 222 |





| விஷயங்கள். | பக்கம். |
|---|---|
| ஹிந்துமதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை ... ... | 233 |
| பக்தி ... ... | 242 |
| கல்வி-கேள்வி ... | 246 |
| ஒப்புரவொழுகு ... | 249 |
| தமிழின் பெருமையும் தற்கால நிலைமையும் ... | 253 |
| கடவுள் உருவமா அருவமா ... | 258 |
| மதபக்தி ... | 282 |
| வீட்டு நெறி ... | 287 |
| ஓர் கடிதம் ... | 290 |
| இந்துமத ஆசாரமும் நூதன எந்திரமும் ... | 292 |
| ஓர் விடை ... | 307 |
| கம்பன் ... | 308 |
| அம்மை—பிள்ளை ... | 310 |
| ஓர்கடிதம் ... | 311 |
| பசு ... | 313, 381 |
| சயநலம் ... | 322 |
| உபவாசம் ... | 326 |
| குருவணக்கம் ... | 329 |
| மனச்சாட்சி ... | 332 |
| காலப்பிரமாணம் ... | 334 |
| விவசாயமுன்னேற்றமும் தனவைசிய சமுகமும் ... | 338 |
| தமிழ்நாடு ... | 341 |
| கடுஞ்சினம் ... | 347 |
| இந்தியா ... | 349 |
| பள்ளிக்கூடம்போய் கெட்டுப்போனான் ... | 352 |
| கிராமவாழ்க்கை ... | 363 |
| தன்னடக்கம் ... | 371 |
| தென்மொழியுள் வடமொழிக் கலப்பு ... | 374 |

| விஷயங்கள். | பக்கம். |
|---|---|
| பிள்ளையார் சுழி ... | 376 |
| பசு ... | 381 |
| ஓர் மூடபோதனை ... | 387 |
| இந்தியாவில் பிறமதபிரசாரம். ... | 392 |
| கைத்தொழிலும் கல்வியும் ... | 403 |
| ஜீவகாருண்யம் ... | 407 |
| திருநீறு ... | 409 |
| பகவத்கீதை வசனம் ... | 425, 457 |
| கனவு ... | 430 |
| வீண்பிரமை ... | 443 |
| சர்வகலாசாலையும் தமிழின் உயர்ந்தபாத்தியதையும் ... | 452 |
| கடிதங்கள், ... | 454, 456 |
| சிந்தனைத்திரட்டு ... | 464 |
| நீதிவாக்கியங்களின் உரைப்பிரதி ... | 469 |
| பெரியோரைத் துணைக்கொள் ... | 474 |
| மாணவர் பக்கம்.— | |
| மாணவர்களுக்குச் சிலபோதனைகள்... | 33,70,136,185,227, 463, 270, 298, 419 |
| நாகரீகமென்பது என்ன?... ... | 51 |
| மாதர் பக்கம்:— | |
| மாதர்நெறிகள் ... | 35, 73, 155, 188, 230, 273, 302, 416 |
| பெண்மக்கள் வேட்கை ... | 417 |
| ஷை அவசரம் ... | 465 |
| நாவல்-தபால்கொள்ளைக்காரர்கள் ... | 36, 75, 117, 156, 196 234, 274, 316, 356, 396, 435, 475 |
| பொதுசமாசாரங்கள் ... | 39, 79, 119, 159, 199 238, 278, 319, 359, 399, 439, 478 |
| பஞ்சாங்கம் ... | 40, 80, 120, 160, 200 240, 280, 320, 360, 400, 440, 480 |



# குசேலோபாக்கியான வசனம்.

## நான்கு சித்திரப்படங்களுடன் கூடியது.

### செம்பூர் வித்துவான் ஆறுமுகஞ்சேர்வை இயற்றியது.

*வல்லூர் தேவராஜபிள்ளை யவர்கள் இயற்றிய குசேலோபாக்கியானச் செய்யுட்பொருளைத் தழுவி இவ்வசனம் செம்பாகமான நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. தெய்வபக்தி, குருபக்தி, ஞானம், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இல்லறவியல்பு, பதிவிரதைகளின் தன்மை, பிள்ளைகளைக் காப்பாற்றும் முறைமை, தந்தை மக்கட்குச் செய்யும் நன்றி, மக்கள் தந்தைக்குச் செய்யும் நன்றி, தரித்திரக் கொடுமை, செல்வச்சிறப்பு, செங்கோன் மன்னரியல்பு, கொடுங்கோன் மன்னரியல்பு, நற்சேவகரியல்பு துர்ச்சேவகரியல்பு, மெய்ஞ்ஞானிகள் தன்மை, அஞ்ஞானிகள் தன்மை, மாணாக்கர் இயல்பு, ஆசிரியரியல்பு, சிநேகவாஞ்சை, பள்ளிக்கூட சிநேகிதத்தின் உயர்வு, நன்னட்பின் தன்மை, தீ நட்பின் தன்மை, செருக்கின்மையின் உயர்வு, தெய்வத்தின் திருவருட்டிறம், மெய்யடியார் விரைவில் மேன்மை யடைவரென்பது முதலிய பல நன்மையான விஷயங்களெல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்படுமென்பது உலகறிந்ததே, ஆண், பெண், பாலர், விருத்தர் ஆகிய எல்லோருக்கும் நற்போதனை செய்து அறிவை விருத்தி செய்வதில் இந்நூல் முதன்மை பெற்றதாகும். கலாசாலைகளுக்கு இது, சிற்சில சமயங்களில் பாடமாக வைக்கப்பட்டு வருவதைக்கொண்டே இதன் உயர்வை நன்குணர்ந்து கொள்ளலாம். இது உயர்ந்த கடிதத்தில் கிரௌன் 270-பக்கங் கொண்ட புத்தகமாக அச்சிடப் பெற்றிருக்கிறது.*

இதன் விலை ரூபா 1 0 0

**2-ம் பதிப்பு** **வெளியாய் விட்டது.**

# இரத்தினபுரி இரகசியம்

## ஓர் மகா அற்புதமான புதிய நாவல்

*இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அநேக நீதிகளும், புத்திமதிகளும், தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய, இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதல் பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.*

*இது இரண்டாம் தரம் அச்சிடப்பட்டது. டபிள் கிரௌன் 1-க்கு 16 அளவில் கொண்டது. 2-ம் பாகத்திலும் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது.*

விலை 2 பாகங்களும் ரூபா 3 8 0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

புதிய] **சதானந்தர்** [நாவல்

அல்லது சமரபுரித் துறவியின் சம்சார வாழ்க்கை.

ஆய்ந்து பாராமல் ஆத்திரத்தால் தன் உத்தம மனைவியின் மேல் சந்தேகங்கொண்டு சந்நியாசியாகி மறுபடி மணம் புரிந்துகொண்ட ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இந்த நாவல் ஸ்ரீமான் நாகை சோ. தண்டபாணிப்பிள்ளை யவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இக்கதையால் எந்தக் காரியத்தையும் தீர்க்காலோசனை செய்து உண்மையை யறியாது அவசரப்பட்டு செய்வது பெருந்தவறென்பதும், உண்மை விரக்தி வராத சந்நியாசம் நிலைக்காதென்பதும், உத்தமமான மனைவி வாய்க்கப்பெற்றவன் சகல பாக்கியங்களையும் சந்தோஷத்தையும் பெறுவானென்பதும் இன்னும் பல உலக அநுபவங்களும் நன்கு விளங்கும். இது நேர்த்தியாக அச்சியற்றப்பட்டிருக்கிறது. விலை ரூபா 1-4-0

இரண்டாம்] **ஆனந்தஸிங்** [பதிப்பு.

ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப்போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தஸிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்திலுள்ளவர்களும், கல்வியறிவுடையோருமாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். இந்த நாவல் முழுமையும் புத்திக்கு மிக்க நன்மையளிக்கும் உணவு நிறைந்திருக்கிறது.

இதில் நூலாசிரியருடைய ஆப்டோன் படமும்
சேர்க்கப்பட்டிருக்கிறது.

**இப்புத்தகத்தி லடங்கிய கதைகள்.**

| | |
|---|---|
| 1. ஆனந்தஸிங் அல்லது அற்புதத் துப்பறி நிபுணன் | 7. ஆறு நெபோலியன்களின் அதிசயம் |
| 2. பள்ளத்தெரு படுகொலை | 8. மூன்று மாணவர்களின் மர்மம் |
| 3. மாயக்களவு | 9. பொன் கண்ணாடியின் மர்மம் |
| 4. காட்டேர் கடுங்கொலை | 10. அபயமாளிகை யதிசயம் |
| 5. மாயஜாலம் கற்ற மர்ம சுந்தரம் பிள்ளை | 11. மாயாண்டிப் பிள்ளையின் முடிவு. |
| 6. இண்டாவது கறையின் மர்மம் | |

இதன் விலை ரூபா 1—12—0 தபாற்கூலி வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி 7 | துன்மதி ஆடிமீ கஉ / 1921ஆ ஜூலைமீ 16உ | பகுதி 1 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

கல்லாத வறிவுமேற் கேளாத கேள்வியுங்
கருணைசிறி தேது மில்லாக்
காட்சியுங் கொலைகளவு கட்காம மாட்சியாய்க்
காதலித் திடுநெஞ் சமும்
பொல்லாத பொய்ம்மொழியு மல்லாது நன்மைகள்
பொருந்துகுண மேதுமறி யேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்த மேதுமில் லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ண முய்வண் ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறு
மெனக்குநின் னருடா ரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாள நினையாய்
மந்தாகுரு வேயோங் தங்காகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

அளியுங் கனியொத் தருவினை யானொந் தயர்வுறு வேன்
தெளியும் படிக்குப் பரிபாக காலமும் சித்திக் குமோ
வொளியுங் கருணையு மாறுத வின்பமு மோருரு வாய்
வெளிவந் தடியர் களிக்கநின் றூடும் விழுப்பொருளே.

அடையார் புரஞ்செற்ற தேவேநின் பொன்னடிக் கன்புசற்றும்
படையாத வென்னைப் படைத்திந்தப் பாரிற் படர்ந்த வினைத்
தடையாற் றளையிட்டு நெஞ்சம் புண்ணாகத் தளர வைத்தா
யுடையா யுடைய படியன்றி யான்செய்த தொன்றிலையே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ ஆடி௴ ௧௨

## நமது புது வருடம்.

அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பரம்பொருளி னின்னருளால் நமது "ஆனந்தனுடைய" ஆறும் ஆண்டு திருப்தியோடுகழிந்து இம்மாதம் ஏழாவது ஆண்டு பிறந்திருக்கிறது. காகிதம் முதலியவற்றால் உண்டாயிருக்கும் கஷ்டம் குறையாமலேயிருந்தும், நமது "ஆனந்தன்" கடந்த ஐந்து வருடங்கள்போல் ஆறாவது வருடமும் காலந் தவறாமல் வெளிவரும்படி அருள் புரிந்ததற்காகக் கருணாநிதியாகிய பகவானுக்கு நமது பிரார்த்தனையைச் செலுத்துகிறோம்.

சந்தா நேயர்கள் "ஆனந்தனை" யாதரிப்பதிலும், அவன் அபிவிர்த்தியிலும் வைத்திருக்கும் அன்பைக் குறைக்காமலே கூடியவரையில் தங்கள் நண்பர்களுக்குச் சிபாரிசு செய்யச் சிரமம் எடுத்துக் கொண்டதற்காக அவர்களுக்கும், "ஆனந்தன்" யாவர்க்கும் ஆனந்தத்தை யூட்டும்வண்ணம் சிரத்தையோடு எவ்விதப் பிரதிபலனையும் எதிர் பாராமல் இனிய விஷயங்களைத் தானம் செய்த கல்வியாளர்களாகிய நண்பர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அநேக நண்பர்கள் சந்தாவை யுயர்த்தும்படிக்கும், சந்தாவை யுயர்த்தி மாத மிருமுறை ஆனந்தனை வெளிவரச் செய்யும்படிக்கும் எழுதுகிறார்கள். இவர்களுக்கு "ஆனந்தனது" அபிவிர்த்தியிலுள்ள ஆவலுக்காக மிக்க மகிழ்வடைகின்றோம். ஆனால் தற்கால நிலைமையை யனுசரித்து அத்தகைய ஆலோசனையை யிச்சமயம் நிறுத்தி வைக்கவேண்டி யிருக்கிறதென்று அறிவித்துக் கொள்கிறோம்,

அநேக நண்பர்கள் "ஆனந்தனைப்" பற்றி புகழ்ந்து எழுதியுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் நமக்களித்த உற்சாகத்திற்காக அவர்களுக்கு அன்பார்ந்த வந்தன மளிக்கிறோம். ஆனால் அவைகளையெல்லாம் சஞ்சிகையில் வெளியிட்டுக்கொண்டிருந்தால் தற்புகழ்ச்சியாகத் தோன்றுமென்று வெளியிடாததற்காக மன்னிக்கப் பிரார்த்திக்கிறோம்.

சந்தாநேயரில் சிலர் விசேஷ சிரத்தை யெடுத்துக்கொண்டு ஒவ்வொருவர் 4, 5, 10 நண்பர்களைக் கூடச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். சிலர் ஒருவர் இருவரைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலார் இது விஷயத்தில் இன்னும் பராமுகமாகவே யிருக்கிறார்கள். இவ்வருடமாயினும் ஒவ்வொரு சந்தாதாரரும் ஒரு கடமையாக அல்லது பிரதிக்கினையாகக் கருதி தலைக்கு ஒரு சந்தாதாரைத் தவறாது சிபாரிசு செய்தால், இக்குறைந்த சந்தாவிலேயே "ஆனந்தனை" யினனும் விர்த்திசெய்ய நாம் கொண்டிருக்கும் ஆவல் நிறைவேறுமென்று நம்புகிறோம். நாம் நமது ஆனந்தனுடைய ஆதரணைக்குச் சந்தாதாரரையே பூரணமாக நம்பியிருப்பதால் நேயர்கள் இவ்விஷயத்தில் மனம வைத்து நமது கோரிக்கையை யீடேற்றி வைப்பார்களென்று பூரணமாக நம்புகிறோம். இப்போது முன்பண மனுப்புவதிலும் வி. பி.-யில் சஞ்சிகையை வரவழைப்பதால் 3 அணு அதிகச் செலவு நேரிடுகிறதென்பதைக் கவனத்தில் வைக்கும்படி கோருகிறோம.

மூன்றாவது வருட சஞ்சிகைகள் வேண்டுமென அநேகர் மிக்க ஆவலோடு எழுதியதால் அவற்றை யச்சியற்றத் தொடங்கியுள்ளோம். அவசியமான வரையிலேயே அச்சியற்றக் கருதுவதால் வேண்டுவோர் உடனே உத்தரவு அனுப்பிவிடக் கோருகிறோம்.

எல்லாம் வல்ல கருணாநிதி நமது சந்தாநேயர்களுக்கும், விஷயதானம் புரியும் நண்பர்களுக்கும், தீர்க்காயுளையும், கலப்பிலாச் சந்தோஷத்தையும், ஆனந்தனிடம் பூரண அன்பையும் சிரத்தையையுமளிக்கும்படிக்கும், ஆனந்தனுக்கு நல்லாசி புரியும்படிக்கும் மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் தத் ஸத்.

பத்திராதிபர்.

---

## நாகரீகம்

நாகரீகம் என்பது ஜனசமூக சம்பந்தமாகக் கூறப்படுகிறதேயன்றி வேறு பிராணிகளைப்பற்றிக் கூறப்படுவதில்லை. மானிடர்களே ஒற்றுமையாகக் கூடிவாழும் இயற்கை யுடையோர். இவ்வாறு கூடி வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் முறைமையில் ஒரு ஒழுங்குண்டு. அவ்வாறு மனிதர் ஒன்றுகூடி வாழத் தம் கடமைகளைச் செய்வதில் ஒழுங்கு பிறழாது நடந்து கொள்வதே நாகரீகம் என்று கூறலாம். ஒருவனுக்கு அளவுகடந்த செல்வமிருப்பினும் பூமியில் அவன் ஒரு குடும்பமட்டுமே இருந்தால் அச்செலவத்தால் அவன் என்ன சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவிக்கலாகும்? பலஜனங்கள் ஒன்று கூடிவாழ்வதே

உலக இன்பம் என்று விளங்குகிறது. இவ்வாறு வாழ்வதற்குப் பரஸ்பர அன்பு வேண்டும். எல்லாப் பிராணிகளிடத்திலும் காட்டப்படும் அன்பிற்கே ஜீவகாருண்ய மென்றுபெயர். ஆகையால் ஜீவகாருண்யமே நாகரீகத்தின் அடிப்படையாக விருக்கிறது. ஒருமனிதர் நமது மனைக்கு வந்ததே "ஆ! வாருங்கள்! உட்காருங்கள். தாகபானம் செய்யுங்கள்" என்கிறோம். மனதிலுண்டாகும் நெகிழ்ச்சியாகிய அன்பே யிதற்குக் காரணமென்று நன்றாகவறியலாகும்.

ஆதியில் எல்லா நாடுகளும் சுத்த அநாகரீகம் பொருந்திய தாழ்ந்த நிலைமையிலிருந்து பிறகே கொஞ்சங் கொஞ்சமாக நாகரீகமடைந்தனவென்று சரித்திரவாயிலாக அறிகிறோம். அப்படி நாகரீகமடைந்த சில ஜாதியார் பிற்காலத்தில் கீழிறங்கி விட்டதாகவும் தெரிகிறது.

மேல் நாடுகளெல்லாம் சுமார் இரண்டாயிர வருடங்களுக்கு முன் மிக்க அநாகரீக நிலைமையிலிருந்ததாகத் தெரிகிறது. ஆனால் நமது புண்ணிய பூமியாகிய இப்பாரத பூமியோ அநாதிகாலந் தொட்டு நாகரீக நிலையிலிருந்ததாகவும், இன்னும் அதே நிலையில் ஏறக்குறைய இருப்பதாகவும் தெரிகிறது. மற்ற நாடுகள் மட்டும் இன்னும் நாகரீகத்தில் விர்த்தி யடைந்து கொண்டே யிருப்பதாக மதிக்கப் படுகின்றன. அப்படியிருக்க நமது நாடுமட்டும் எப்போதும் ஒரே நிலையிலிருப்பானேன்?

ஏனெனில், நமதுமுதாதைகள் உண்மையான நாகரீகம் இன்னதென்பதை யுணர்ந்து அதைக் கைப்பற்றினார்கள். மனிதன் இவ்வுலகத்திலும் மறுவுலகத்திலும் அடையத்தக்க உயர்ந்த ஒப்புயர்வற்ற இன்பம் எது என்பதை யறிந்துகொண்டு, அதையடைய முயன்றார்கள். சத்தியமும் பூரணமுமான வஸ்து என்றும் மாறுவதில்லை; எப்போதும் ஒரே நிலையில்தான் இருக்கும்.

மேல் நாட்டார் ஜடபதார்த்தங்களில் இன்பமிருப்பதாகவும், அவற்றையடைந் தனுபவிப்பதே நாகரீகத்தின் பயனெனவும் கருதி, கானல் நீரை மெய்யான நீர்நிலை என்று நம்பிச் செல்வோர் போல் துன்பங்களை யனுபவிக்கிறார்கள். ஆனால், மயக்கமாகிய இந்த நாகரீக விஷம் தலைக்கேறி யிருப்பதால், அதனால் உண்டாகும் ஆபத்துகளையும் அடையும் துன்பங்களையும் கவனியாதிருக்கிறார்கள்.

நமது முன்னோர்கள் உலகிலுள்ள ஜடப் பொருள்களில் இன்பமில்லையென்றும், இன்பமும் துன்பமும் மனோ நிலைமையைப் பொறுத்ததென்றும், மனோ சலனத்தை யொழித்து (போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து என்பதுபோல்) மனோ திருப்தியடைவதே கலப்பில்லாத இன்பத்தை யடையத்தக்க மார்க்க மென்றும் உணர்ந்தார்கள். இயற்கையா யமைந்துள்ள இன்பம் பூரணமான தென்றும், அழியாத தென்றும், துன்பமற்றதென்றும், ஜடப்பொருள்களின் மூலமாக அடையும் செயற்கை யின்பம் நிலையற்ற தென்றும், சொல்பப் போலி இன்பத்தோடு பெரிய துன்பங்களை யளிக்கக்கூடிய தென்றும் உணர்ந்தார்கள்.



மேல் நாட்டார் மனதிற்கப்பால் ஒன்றுமில்லை யென்ற கொள்கையாலும், உலக போகங்களை மனிதன் அடையத்தக்க முடிவான ஆனந்தமென்ற அஞ்ஞானத்தாலும், மனம்போன போக்கே போகவிட்டு, அதற்கு அடிமையாகி அதனால் அலைப்புண்டு மாலைக்கண்ணனுக்கு எல்லாம் மஞ்சள்நிறமாகத் தோன்றுவதுபோல், யாவற்றையும் மேலான காரியசித்தியாகவே கருதி மகிழ்கிறார்கள். மனதின் ஆவலும் அலைவும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு மனிதன் துன்பத்திற் குள்ளாவதோடு, ஆயுளின் அளவையும் குறைத்துக் கொள்கிறான் என்ற உண்மையை நம்முன்னோர் அனுபவமாக அறிந்தவர்கள்.

இயற்கை விதிகளை யறிவதையும், இயற்கை இரகசியங்களைக் கண்டறிவதையும் பெரிய ஆச்சரியமான காரிய சித்திகளாக மேல் நாட்டார்கள் கருதுகிறார்கள். இதோடு ஜடப்பொருள்களைக் கைவசப்படுத்தி யாளுவதில் மிக்க அவா வுடையவர்களாக விருக்கிறார்கள். நீராவி எந்திரத்தால் கப்பல், இரயில் இவற்றில் அதிவேகமாகச் செல்வதும், மின்சார சக்தியால் எந்திரங்களை யோட்டுவதும், தூரத்திலுள்ளவர்களோடு ஒரு விநாடியில் பேசுவதும் நாகரீகத்தின் அபிவிர்த்தியாகக் கருதப்படுகின்றன.

இந்த விஷயங்களெல்லாம் நமது முன்னோருக்குத் தெரியாதவையல்ல. அவர்கள் இவற்றை யறிந்தே யிருந்தார்களென்பதற்கு அநேக அத்தாட்சிகளுண்டு. ஆனால் அவற்றில் காலத்தைப் போக்க அவர்கள் பிரியப்படவில்லை. அவ்வேலைகளை யலட்சியமாகக் கருதினார்கள். அதோடு அவற்றை யுணரும் மார்க்கங்களை நூல்களில் எழுதி ஜனங்கள் அவற்றைக் கையாளும்படிச் செய்தால் பின்னால் ஜனசமூகத்திற்குப் பல இடையூறுகள் நேரிடுமென்பதை யுணர்ந்தே அவர்களப்படிச் செய்யவில்லை.

மனிதன் கால்களால் எவ்வளவு துரிதமாக நடக்கலாகுமோ அவ்வளவே இவன் நடக்க வேண்டுமென்று கடவுள் இயற்கையில் அமைத்திருக்கிறார். இவன் அதற்குமேல் எவ்வளவு வேகமாகப் பிரயாணம் செய்யக் கருதுகிறானோ, அவ்வளவுக் கவ்வளவு ஆபத்தையும் அதிகமாக்கிக் கொள்கிறான் என்று பிரத்யட்சமாகக் காணலாம். இக்காலத்தில் நாகரீகம் என்று கருதப்படுகிறவை யனைத்தும் மனதிற்கு அளவு கடந்த பரபரப்பையும், தீராக்கவலையையும்,

முடிவில்லாத உலகபோக ஆசையையும் அதிகப் படுத்துகிறவைகளே. இந்த நாகரீகம் வெளிவேடமாதலால் அதிக பணச் செல்வையுடையது. அதனால் மனிதன் எந்த வழியிலேனும் அதிக பணந் தேட முயன்று அலைச்சலுக்கும் கவலைக்கும் பாபத்திற்கும் உள்ளாகிறான். சாதாரணமாய் இரயில், தந்தி முதலியவற்றால் பல நன்மைகள் உண்டாவதாகத் தோன்றினும், மற்றொரு பக்கம் அவற்றால் பெருங் கெடுதிகளும் ஜனசமூகத்திற்கு உண்டாகின்றன. இதை விவரிக்கின் பெருகும்.

நமது முன்னோர்கள் இத்தகைய விஷயங்களில் காலத்தைக் கழிக்காமல் தெய்வீகமான சூக்கும சக்தியை யறிந்து கைப்பற்றி அதனால் என்று மழியாத கலப்பில்லாத பூரண சுகத்தை யடைய முயல்வதே மானிடஜன்ம மெடுத்ததனாலடையும் பயனென மதித்தார்கள். அத்தகைய சூக்கும ஆத்மசக்தியில் ஓர் சிறுபாகத்தாலேயே அவர்கள் அரிய காரியங்களை யெல்லாம் சாதித்தார்கள். இராமேசுவரத்திலுள்ள ஒரு தீர்த்தத்தில் முழுகி அடுத்த நிமிடம் கங்கையில் காளி கட்டத்தில் எழுதல், காலையில் காசி விசுவேசுரரைத் தரிசித்தல், அதேதினம் மாலை சிதம்பரம் நடராஜரைத் தரிசித்தல், உலகத்தின் எப்பாகத்திற்கும் நினைத்த விநாடியில் செல்லுதல், தேவருலகம் முதலிய அன்னிய உலகங்களுக்குச் சென்று திரும்புதல் முதலிய எவ்வளவோ அரிய காரியங்களைச் செய்தார்கள். ஆகாயக் கப்பல் முதலிய ஒன்றுமில்லாமலே ஆகாய கமனம் செய்தார்கள். இப்போதும் அத்தகையோர் இல்லாமலில்லை.

நம் முன்னோர்கள் உலகில் ஜன சமூகத்தின் சுக வாழ்க்கைக்கு அவசியமான சாத்திரங்களை யெல்லாம் கண்டு பிடித்தே யிருக்கிறார்கள். மேல் நாட்டார் கடந்த ஐந்தாறு நூற்றாண்டுகளாகக் கண்டு பிடித்ததாய்க் கூறும் சாத்திரங்களை யெல்லாம், அவர்கள் நிரக்ஷரகுட்சிகளாய் நாகரீக வாசனையே யின்றி யிருந்த அக்காலத்திலேயே நம் முன்னோர் கண்டு பிடித்திருக்கிறார்கள். அனேக விசேடமான சாத்திர ஆராய்ச்சிகளில் உலகிற்கு ஹிந்துக்களே வழிகாட்டிகளாக விருந்தார்களென்று மேல்நாட்டு சாத்திர ஆராய்ச்சி நிபுணர்களே இப்போது கண்டறிந்து கூறுகிறார்கள்.

வைத்திய சம்பந்தமான அங்க இலட்சண சாத்திரத்தில் இருதயத்தில் இருக்கும் மிக நுட்பமான நரம்பைக்கூட கண்டறிந்து, அது சாதாரண உரோமத்தில் நூற்றில் ஒரு பங்கு தடிப்புடையதென்று அளவு குறித்து அதற்குப் பெயரும் இட்டிருக்கிறார்கள். தாவர சாத்திரம், இரசாயன சாத்திரம், கோண சாத்திரம், திரிகோணசாத்திரம், பீஜ கணிதம், அர்த்த சாத்திரம், யுத்தசாத்திரம், வான சாத்திரம் முதலிய யாவும் நெடுங்காலத்திற்கு முன்பே நம் முன்னோர் அறிந்திருக்கிறார்கள். ஜலவாயுவில் இரண்டு பாகத்



தையும் (Hydrogen 2 parts), பிராணவாயு ஒரு பாகத்தையும் (Oxygen) சேர்த்தால் ஜலம் உண்டாகுமென்பது உபநிடதம் உண்டான காலத்திலேயே நம் முன்னோர்கள் அறிந்திருக்கிற விஷயம். ஜனங்களை யாளுவதில் உபயோகிக்க வேண்டிய சாம பேத தான தண்டம் என்ற சதுர்வித உபாயங்களைப்பற்றிச் கூறும் நூலாகிய பஞ்ச தந்திரத்திற்குச் சமதையான நூல் உலகில் வேறில்லையென்று கூறலாம். சிற்பசாத்திரத்தில் நம்முன்னோர் சக்தி உலகப் பிரசித்தி பெற்றது. இப்போது பிரம்மாண்டமான எந்திரங்களின் உதவியால் செய்யப்படும் அரிய காரியங்களில் சிலவற்றைக் காண்போர் பிரமிக்கும்வண்ணம் ஒரு எந்திரமு மின்றியே அக்காலத்தில் அவர்கள் செய்திருக்கிறார்கள். இவை யுண்மை யென்பதற்கு எண்ணிறந்த அத்தாட்சிகளுள. அவற்றில் சில இக்காலத்தில் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அநேகம் வெளிவந்தே யிருக்கின்றன. ஹிந்துக்களின் நாகரீகம் ஓர்காலத்தில் உலகில் பெரும் பாகத்தில் ஈஜிப்ட், அமெரிகா, ஆப்ரிகாவில் கூட பரவியிருந்ததென்பதற்கு ஆங்காங்கு நிலையான அத்தாட்சிகள் நாளைக்கும் அகப்பட்டுக்கொண் டிருக்கின்றன. விரிவஞ்சி இதை யிம்மட்டோடு நிறுத்துகிறோம்.

நம் முன்னோர்களின் நாகரீகம் மன நிம்மதியையும், சந்தோஷத்தையு மளித்து தேக பலத்தையும், சுகத்தையும், நீண்ட ஆயுளையும் தந்துகொண் டிருந்தது. இப்போது நாகரீகம் என்று கருதப்படுவது, மனதிற்கு பரபரப்பையும், அடங்காத ஆசைகளையும், தீராக்கவலைகளையும் உண்டாக்கி ஆயுளைக்குறைத்துக்கொண்டே வருகிறது. வைத்தியர்களும் வைத்திய சாலைகளும் பெருகியது நாகரீகத்தின் ஓர் அறிகுறியாகக் கருதப்படுகிறது. அவற்றோடு இதுகாறும் கேட்டிராத புது புது வியாதிகளும் அதிகமாகிக்கொண்டே வருகின்றன; ஜனங்களின் தேகத்தில் பலம் குறைந்து கொண்டே போகிறது; ஆயுளின் அளவும் குறைந்துகொண்டே போகிறது; இப்போதுள்ள மேல் நாட்டு நாகரீகம் பணம் விழுங்கிப்பூதம் எனலாம். நமது நாட்டார் இந்த நாகரீகத்தைப் பின்பற்றத் தொடங்குவதால் தரித்திரத்தை யடைந்து வருந்த நேர்கிறது; நம் முன்னோர் நாகரீகம் சிக்கனம் அதாவது, குறைந்த பொருட்செலவை யுடையதாகவும், ஆனால் சுகத்தையும், மனத் திருப்தியையும் அளிப்பதாகவும் இருந்தது.

நமது ஹிந்து அரசர்கள் இராஜ்ஜிய பரிபாலனம் செய்வது ஜன சமூகத்தின் நன்மைக்காகக் கடவுளின் பிரதிநிதியாயிருந்து நாம் செய்யவேண்டிய ஒரு கடமை யென்று கருதினார்கள். அதனால் தமது குமாரர் தக்க வயதடைந்ததே இராஜ்ஜிய பாரத்தை அவர்களிடம் ஒப்பித்துவிட்டுத் தாங்கள் காட்டில் சென்று தவம்புரிந்து

மோக்ஷவின்பம் பெற முயன்றார்கள். உலகில் நாங்களே நாகரீகத்தில் மேம்பட்டோர் என்று கூறிக்கொள்ளும் மேல் நாட்டு அரசர்களோ தங்கள் தங்களுக்குப் பூர்வீகமாகவுள்ள பூமியோடு திருப்தியடையாமல், மேலும் மேலும் தங்கள் நாட்டின் விஸ்தீரணத்தைப் பெருகச் செய்ய வேண்டுமென்ற ஆசைகொண்டு, அற்ப காரணத்திற்காகப் போர் தொடங்கி இலக்ஷக்கணக்கான சீவன்களை மடியச் செய்கிறார்கள். க்ஷண நேரத்தில் எண்ணிறந்த ஜனங்களை உருவில்லாது செய்துவிடத்தக்க எந்திரங்கள் முதலிய வற்றைச் செய்வது பெரிய நாகரீகத்தின் அறிகுறியாக விருக்கிறது.

ஒருவன் தனக்கு உண்மையாகவே தீங்கிழைத்த மற்றொருவனைக் கோபத்தால் கொன்றுவிட்டால், அவன் கொலைபாதகனென்று யாவராலும் நிந்திக்கப்பட்டு, அரசனால் மரண தண்டனை விதிக்கப்பெறுகிறான். ஆனால் தனக்கு எவ்விதத்திலும் ஒரு தீங்கும் செய்யாத பலபேரை மறைவில் பதுங்கியிருந்து சுட்டுக் கொல்கிறவன் மகாவீரனென்று புகழப்பட்டுப் பரிசும் பெறுகிறான். இதுதானா நாகரீகம் ?

ஒருவனுடைய பூமியிலாவது பொருளிலாவது அவனுக்குத் தெரியாமல், அவனுக்கு வேறு கெடுதியும் செய்யாமல், கொஞ்சம் பாகம் அபகரித்துக் கொள்கிறவன் கள்ளனென்றும் மோசக்காரனென்றும் தூற்றப்பட்டு அரசனால் தண்டிக்கப்படுகிறான். செல்வ பலத்தால் பல்லாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு போய்த் தன்னிலும் பலங்குறைந்த அரசனுடைய நாட்டில் புகுந்து அவனுக்கு உதவி வருவோரையும் அவன் குடிகளையும் சர்வசங்காரம் செய்து பெருங்கொள்ளை யடிக்கிறவன் வெற்றிச்சிங்கமென விருதுபுனைந்து கொள்கிறான். இதுவா நாகரீகம் ?

உலகில் நம்மால் கூடியவரை குறைந்த காலத்தில் அதிக பணத்தைச் சம்பாதித்து உலக போக பாக்கியங்களை யனுபவிப்பதே மனித ஜென்ம மெடுத்ததன் பயன் என்பதே இப்போது பரவி வரும் நாகரீகத்தின் கொள்கையாக விருக்கிறது. இந்த நாகரீகம் கடவுள் என்ற நினைவையே ஒழித்து விடத்தக்கதெனலாம். கடவுளென்ற ஒன்று இருக்கவேண்டிய அவசியமில்லை யென்ற அபிப்பிராயத்தை மனதில் விதைக்கக்கூடியது இந்நாகரீகம். பலங்குறைந்தவன் அதிகபலமுடையவனுக்கு ஊழியனாக விருக்கச் செய்வதும், பலவான் ஒரு காரியத்தைச் செய்தால் அதைக் கௌரவமாகவும் அதையே பலங்குறைந்தவன் செய்தால் பெரும்பாதகமாகவும் கருதச் செய்வதும், ஜீவகாருண்ய மற்றதுமாகிய இந்நாகரீகம், மிருகத்தன்மையினின்று வடிகட்டி எடுக்கப்பட்ட நாகரீகமெனலாம். விரிக்கிற் பெருகும். நண்பர்களே! மேல் நாட்டு நாகரீகம் நம் நாட்டில் பரவு முன் நம் நாடிருந்த நிலைமையையும் இப்போதிருக்கும் நிலை



மையையும் சீர்தூக்கிப் பாருங்கள். இப்போதுகூட இந்நாகரீகம் பரவாத (இரயில் பாதைக்குத் தூரத்திலுள்ள) சில விடங்களிலிருக்கும் ஜனங்கள் பூர்வ நாகரீகத்தோடேயே யிருக்கிறார்கள். அவர்களுக்கிருக்கும் மனோதிருப்தி, நிம்மதி, தேகசுகம், பலம், சந்தோஷம், ஆயுள் விர்த்தி இவற்றில் கால்பங்குகூட நாகரீகவலையில் சிக்கியிருக்கும் நமக்கில்லை யென்று பிரத்தியட்சத்தில் காணலாம்.

மண் அகலில் முத்துக்கொட்டை யெண்ணெயிட்டுத் தீபம் ஏற்றிக்கொண்டிருந்தபோது, அறுபது வயதிற்கு அதிகப்பட்டவர்களில் சிலரே மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது அதிக பணச் செலவுடைய நாகரீகமான மண்ணெண்ணெய் சிம்னி விளக்குகள், மின்சார விளக்குகள் ஏற்படவே பன்னிரண்டு வயதிலேயே மூக்குக் கண்ணாடி லாரன்ஸ் அண்ட் மேயோவில் 20, 30 ரூபா கொடுத்து வாங்கவேண்டும்.

அந்தோ ! இப்போது மேல் நாட்டார், இன்னும் அன்னிய நாட்டார், எவற்றைச் செய்கிறார்களோ அவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதே நாகரீகச் சீர்திருத்தமென்று நம் நாட்டில் கருதப்படுகிறது. முன், மிக்க வயது முதிர்ந்தவர்களில் சிலரே சுருட்டு பிடித்தார்களென்றால், இப்போது பாடசாலையில் வாசிக்கும் சிறுவர்கள் கூட—பனிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் கூட— பகிரங்கமாக பீடி, ஸிகரெட் பிடிப்பது ஒரு நாகரீகமாய் விட்டது. அந்தோ! இந்த நாகரீகவிடம் இப்போதே தடுக்கப்படாவிட்டால் சீக்கிரம் இது இருதயத்தில் பிரவேசித்து ஆளைக்கொல்லும் என்பதில் சற்றும் அய்யமின்று.

சகோதர சகோதரிகளே ! சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால், நாம் கூறும் விஷயம் ஒவ்வொன்றும் உண்மை யென்று மனதார உணர்வீர்கள். இந்த அந்நிய நாகரீகத்தைப் பின்பற்றுவதினின்றும் உடனே விலகுங்கள். நாகரீக மென்று மயங்கி, நம் நாட்டு வழக்கப்படி நம் நாட்டு வஸ்துக்களை யுபயோகிக்காமல் அந்நியநாட்டு ரீதியாகவும், அந்நிய நாட்டு வஸ்துக்களையும் உபயோகிப்பதால் வீண் பணச்செலவும் தீமையுமே பயனாகுமென்று நம்புங்கள். திருட்டாந்தமாய், சிகைக்காய், இலுப்பைப் பிண்ணாக்கு, பயறு, கிச்சிலிக்கிழங்கு, வித்து தினுசுகள், மஞ்சள், எள் எண்ணெய் இவற்றைவிட்டு சோப் என்ற சௌக்காரத்தை யுபயோகிப்பதால் எத்தனை கெடுதிகளிருக்கின்றன வென்பதை மட்டும் சிந்தித்துப் பாருங்கள். வீணான பொருள் விரயம், தேகத்திற் குண்டாகக்கூடிய ஆரோக்கியத்தை யிழத்தல், நம்நாட்டில் உற்பத்தி குறைவு, அதனால் தொழில் குறைவு, அதனால் வருமானக்குறைவு, தரித்திரம் அதிகரித்தல், இத்தனை தீமைகளும் உண்டாகின்றன.

நண்பர்களே! நமது முன்னோருடைய ஆசாரவொழுக்கங்களே நமக்கு க்ஷேமத்தை யுண்டாக்கும். வீணான வெளிவேடங்களைப் பின்பற்றுதல் ஒருபோதும் நாகரீகமாகாது. மேல் நாட்டாரிடமிருந்து நாம் கைக்கொள்ள வேண்டியவை நாகரீகம், ஆசாரம், மதம், இவையல்ல. இலௌகீக விஷயங்களில் அவர்கள் நடந்துகொள்ளும் ஒழுங்குகளில் அனேகம் நாம் பின்பற்றத் தக்கவையுள. முக்கியமாய் கைத்தொழில், வர்த்தகம் இத்தகைய சுயாதீனவழியில் பொருளீட்டமுயலல், கல்வியில் விர்த்தியடைதல், ஒற்றுமையாய் நடத்தல், வைராக்கியத்தோடும் ஊக்கத்தோடும் சுயநலங் கருதாமல் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடல், எடுத்த காரியத்தை நிறைவேற்றல், பலர் ஒன்றுகூடிப் பெரிய வியாபாரம் முதலிய திரண்ட செல்வம்தரும் தொழில்களைச் செய்தல், யாரிடமிருப்பதாயினும் நமக்கு அவசியமும் அநுகூலமுமான விஷயங்களை மட்டும் பின்பற்றுதல், தாய் நாடு, தாய்ப்பாஷை யிவற்றில் பூரணப் பற்றும் விசுவாசமும் வைத்தல், இத்தகைய விஷயங்களை நாம் பின்பற்றவேண்டும். அந்தோ! இவற்றைமட்டும் நாம் கவனிப்பதேயில்லை. அநாவசியமானவைகளும், நமக்குக் கெடுதியுண்டாக்கத் தக்கனவைகளுமான விஷயங்களையே பின்பற்றுகிறோம்.

சச்சிதானந்தப் பரம்பொருள் இனியேனும் நம்மவர்க்குள்ள வீண்மயக்கை யொழித்து, நாம் நம்முன்னோர் நெறியில் நடந்து நம்தாய்நாடு அதன் பூர்வீகப் பெருமையையும், க்ஷேமத்தையும், செல்வாக்கையு மடையுமாறு அருள்புரிய வேண்டிப் பிரார்த்தனை செய்வோமாக.

ஓம் தத் ஸத்.

---

## சகோதர பாவம்

இந்தக் குணம் யாரிடத்தில் இருக்கின்றதோ அவர்களைத்தான் அறிவுடையவர்கள், பெருந்தன்மை யுடையவர்கள் எனப் பலவாறு கூறுவது. இந்த எண்ணம் உண்டாக வேண்டுமானால் மனிதர்கள் தம்மிலுள்ள சம்பந்தம் உணரவேண்டும்.

பூமியின் கண்ணுள்ள சகல சராசரங்களையும் படைத்துக் காத்துவரும் ஈசன் யாவருக்கும் பொது என்றும், அவருக்கு நாம் எல்லோரும் சமம் என்றும் அறிவோம். ஒரு தந்தைக்குப் பிள்ளைகள் பலவிருந்தாலும் அவனுக்குத் தனது எல்லாப்பிள்ளைகள் பேரிலும் அன்பிருக்கிறதல்லவா? ஆனாலும் நல்ல பிள்ளைகள் பேரில் அதிக அன்பு முண்டு. ஆனால், யாரையும் வெறுப்பதுமில்லை. எல்லா மக்களும் நல்லவர்கள் ஆகவேண்டு மென்றும் ஒற்றுமையாய் வாழவேண்டு மென்றும் அல்லவா தந்தையின் நோக்கமிருக்கும். அதுபோலவே எல்லாம் வல்ல இறைவனுக்கும் நாம் எல்லோரும் ஒற்றுமையா யிருப்பதே விருப்பம். அதற்குமாறாக நடப்பது கடவுளுக்கு நம்மேலிருக்கும் அன்பைக் குறைக்குமல்லவா?



எல்லா சீவசாலங்களுக்கும் ஆத்மா உண்டென்றும் எல்லா ஆத்மாக்களும் பரம்பொருளின் அம்சங்களே யென்றும், அக்கினி ஒவ்வொரு பொருளிடமும் சேரும்போதும் வெவ்வேறு வித உருவமாகத் தோன்றினும் அக்கினி என்றபொருள் ஒன்றே ஆவதுபோல, ஆத்மாக்களும் வெவ்வேறு தேகங்களில் புகுந்திருப்பதால் வெவ்வேறு விதமாகத் தோன்றுகிறதென்றும் நாம் அறியவேண்டும். பல இராந்தல்களி லிருந்து வெளிச்சம் கொடுப்பது ஒரே பொருளாகிய அக்கினியே ஆயினும் கண்ணாடியின் தரம், நிறம், அதில் அடைந்திருக்கும் அழுக்கு இவைகளை அனுசரித்து வெளிச்சம் பல விதங்களாகத் தோன்றுகிறது. அதுபோல வெவ்வேறு விதமாக நாம் தோன்றினும் எல்லாத் தேகங்களுக்குள்ளு மிருக்கும் ஆத்மாக்களும் களங்கமற்ற பரம் பொருளின் அம்சங்களே ஆகும்.

நேயர்களே! இப்போது நாம் நம்மிலுள்ள சம்பந்தம் எத்தகையதென உணர்வதால் நாம் எல்லாச் சீவசாலங்களையும் வெறுக்காது சிநேகிக்கவேண்டுமென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? இன்னும் சுயநலத்தின் பொருட்டே இந்தக் குணம் எவ்வளவு அவசியம் என்று பார்ப்போம்.

அவனவன் செய்யும் கருமத்தின் பலன் அவனவன் சற்றேனும் பிசகாமல் அனுபவித்தே தீரவேண்டும் என்பது உண்மை. ஆனதால் நல்ல பலனைக்கோரும் நாமெல்லோரும் சத்கருமம் செய்யவேண்டிய தவசியமன்றோ? பிறரை இகழாது அவரைச்சிநேகித்து அவர்களுக்குக் கூடிய மட்டும் உதவிசெய்து சீவிப்பது சத்கருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததன்றோ! அது தன் பொருட்டன்றோ! பிறரை நிந்தைசெய்து அவர்கள் வருந்துவது பார்த்து, பரிகசித்து சந்தோஷிப்பது மிக்க ஈன கருமம் அன்றோ!

சகோதரபாவம் ஏற்படும்போது பொறாமை என்னும் தீயகுணம் அடியோடு நம்மைவிட்டு அகல்கிறது. நம்மை அதனாலுண்டாகும் தீமைகளிலிருந்து இரட்சிக்கின்றோம். ஒருவரைத் தூஷித்து மற்றொருவருக்குச் சொல்லும் புறங்கூறுதல் என்ற துற்செய்கையி லிருந்து நாம் தப்புகிறோம். பிறரை வஞ்சித்து அவர்களுடைய சொத்தைக் கைவசப்படுத்தலாகிய வஞ்சித்தல் என்ற கெட்டகுணத்திற்கு நமது மனம் இடம் தாமல் நம்மைப் பரிசுத்த மனமுடையவர்களாக்குகிறது. தருமம் என்ற நற்செய்கைபுரிய நமது மனம் இச்சித்து அதனாலுண்டாகும் புண்ணியத்தை நம்மிடம் சேர்க்கின்றது.

மற்றவர்களோடு அன்பு ஏற்படும்போது அவர்களிடம் அதன் வழியே நம்பிக்கையும் உண்டாய் விடுவதால், நமக்கு வேண்டிய அனேகம் காரியங்களை அவர்களுடைய உதவியால் இலவசமாக முடிக்கக்கூடும். சத்துருக்கள் குறைகின்றார்கள். கைகால் முதலியன உழைத்து வயிற்றிற் குணவு கொடுப்பது வயிற்றின் பொருட்டோ? மற்றவர்களைச் சிநேகித்து நடப்போமானால் நமக்கு இடையூறு ஏற்படும்போது அவர்கள் மனம் இரங்கி நமக்கு உதவிபுரிவார்கள்; நாம் துக்கிக்கும்போது தேறுதல் சொல்லித் துக்கத்தைத் தணிப்பார்கள்.

நமது கையிலுள்ள எல்லாவிரல்களும் ஒன்றுசேர்ந்து இருக்கும்போது அவை எத்தனையோ அருமையான காரியங்களைச் செய்கின்றன. ஒவ்வொன்றும் வேறுதிசையை நோக்கித் தம்மில் ஒன்றுபடாதுவிலகியிருக்குமானால் அந்தக் கையைக்கொண்டு என்னவேலை செய்யக்கூடும்? குஷ்டரோகியின் கைபோலன்றோ ஆய்விடும். ஆனதால் ஒவ்வொருவரும் சுயநலத்தின் பொருட்டேனும் அவ்வாறு நடக்கவேண்டியதே. சகோதர பாவமாய் ஒற்றுமையோடு நடந்துகொள்ள வேண்டியது அவசியமேயாகிறது.

ஆதியில் மனிதர்கள் தொழில்களைப் பிரித்துக்கொண்டபோது ஒரு தொழில் சிரேஷ்டமென்றும் மற்றொன்று ஈனமென்றும் ஏற்பட்டிருந்தால் ஈனத் தொழிலுக்கு யாரேனும் துணிந்திருப்பார்களா? காலப்பழக்கத்தால், வேலைகளின் தரம், ஆதாயத்தின் கிரமம் முதலானவைகளை அனுசரித்து ஒன்று சிரேஷ்டம் மற்றொன்று ஈனம் என்று எண்ண இடமாயிற்று. ஈனத்தொழில்கள் செய்பவர்களை ஈனசாதியார் என்று இகழுகிறோம். நமது சுகசீவியத்திற்கு எல்லாவித வேலைகளுமே செய்து முடிக்கவேண்டி யிருக்கிறது. சில தொழிலாளர்களை நாம் நிந்திப்பதால் அவர்கள் தாங்கள் செய்துவரும் தொழில்களை விட்டுவிடத் தொடங்குகிறார்கள். பின்பு ஒருகால் நாமே அவைகளையும் செய்துகொள்ள வேண்டிவரும். அப்படிவரின் நாமதை ஈனம் என்று நினைப்போமா?

நண்பர்களே! சுயநலத்தையே கருதிப் பார்க்குங்காலும் சகோதர பாவம் ஆவசியமா யிருக்கிறது. அதாவது நாம் சுகமாக இவ்வுலகில் சீவிக்கவும் நமது ஆத்மா நற்கதியடையவும் சகோதரபாவம் அவசியமே. ஆனதால், நாம் தொழில், ஜாதி, மதம் முதலிய எவ்விஷயத்திலும் உயர்வு தாழ்வு முதலிய எவ்வித வித்தியாசமும் பாராட்டாது, யாவரும் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களாகவே பாவித்து ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு கருணையோடு ஒற்றுமையாய் நடந்துவர முயலவேண்டும். அப்போது கடவுள் நமது குறைகளையெல்லாம் நீக்கி நாம் பூரண க்ஷேமமடையவும் நம் தாய்நாடு தன் பூர்வீக உந்நத நிலையடையவும் பூரண அருள்புரிவாரென்பது உண்மை.

பி. பெருமாள்பிள்ளை,
குனச்சல்.

---

## கல்வி அபிவிருத்தி கூடாதாம்.

அன்பார்ந்த ஐயன்மீர்!

பசுந்தைக் கிராமத்தில், கல்விக்கும், அறிவிற்கும், ஒழுக்கத்திற்கும், ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் சாதனமாயுள்ள செந்தமிழ்க் கழகமொன்றை ஸ்தாபிக்க, எனது நண்பர் ஒருவரும் நானும் முயற்சி செய்துவருங்கால், ஓர் பெரியவர் வீட்டிற்குச் சென்று அன்னார் குமாரருக்கு சங்கங்களின் பயன்களை உரைத்து அவரை ஓர் அங்கத்தினராகச் சேரும்படி சொன்னோம்.

அந்தோ! அச்சமயம் அறைக்குள்ளிருந்த பெரியவரொருவர் "ஏது வாழைப்பழத்தில் மெல்ல ஊசியை இறக்குகின்றீர்கள்." என்றனர். யாங்கள் உடனே அவரிடஞ் சென்று, "என்ன? இப்படிச் சொல்லுகிறீர்கள்?"



என்றோம். அவர் எனது நண்பரைப் பார்த்து எங்கள் மனம் எரியும்படி பின் வருமாறு கூறலானார்:—'ஐயா! பட்டர்வாள்! உங்களுக்கு இதுதான் ஜோலியாய்விட்டது! நீங்கள் சங்கம் ஸ்தாபிக்கிறதாவது! விருத்தியடைகிறதாவது! வைக்கிறதாவது! அடா பைத்தியங்களே! பைத்தியங்களே! கோயிலிற் பூஜைசெய்துவிட்டுத் தின்று சுற்றிவருவதும் சங்கம் ஸ்தாபிப்பதுந்தான் உங்களுக்கு அலுவல்போலும்! இதெல்லாம் உங்களுக்கேன் ஐயா!" என்றார்.

அதற்கு என் சிநேகிதர், "ஐயா! ஏது? காரணமென்ன? தங்களைப் போலொத்த பெரிய மனிதரே இங்ஙனம் கூறினால் சங்கம் ஏற்படுவதெப்படி? விருத்தியடைவதெப்படி? தங்களைப்போலுள்ள யாவரும் இதற்காக அதிக சிரமத்தோடுழைக்க வேண்டியது கடமையல்லவா? அப்படியிருக்கத் தாங்கள் இப்படிக் கூறலாமா?" என்றார்.

அதற்கவர் "ஐயா! இவ்வூரில் பெரிய மனிதர்கள் இருந்தாலல்லவா சங்கம் ஸ்தாபிக்கலாம்! நீங்கள் சங்கத்தைக் கூட்டுவதைப் பார்க்கலாம்! நடத்துவதைப் பார்க்கலாம்! நான் சொல்வதற்காக உங்களுக்கு ஆக்கிரமம் ஏற்பட்டு அதிக சிரமப்பட்டாலும் அது விருத்தி யடையவே அடையாது! இப்பொழுதே என்னை ஒருவரும் மதிப்பதில்லை. இனிச் சங்கம் உண்டாகி அதனால் இவ்வூரார் கொஞ்சம் விருத்தி யடைந்தால், சரிதான், நம்மைப் பிறகு ஒரு துரும்பாக எண்ணிவிடுவர். ஐயோ! புத்தியில்லாதவர்களே! உங்கள் பித்தத்திற்கு இவ்வூரில் எலுமிச்சம்பழம் கிடையாததைப் பற்றி வருத்தப்படுகிறேன்," என்று பெருமையாகக் கூறினார்.

அந்தோ! கடவுளே! என்னே! இப்பெரியார் அறிவின் மாட்சி!

M. நாகலிங்கம்,
விக்டோரியா ஹால், திருநெல்வேலி டவுன்.

குறிப்பு:—இப்பெரியார் (இங்கு 'பெரியார்' என்பதற்கு வயது அதிகமுடையவர் என்ற பொருள் மட்டுமே கொள்ளத்தகும்) போன்றவர்கள் இக்காலத்திலும் உளரே என்பதற்காக நாம் மிக விசனிக்கிறோம். சில சுயநலக்காரர், பாமர ஜனங்கள் கல்வியில்லா மூடர்களாகவும் ஒரு விஷயமும் அறியா மந்தர்களாகவும் இருந்தால் நம்மிடம் அடிமைகள்போல் நடந்துகொண்டிருப்பார்கள் என்ற எண்ணமுடையவர்களாக விருக்கிறார்கள். குறித்த ஆசாமி இவர்களில் ஒருவர் என்று நன்கு விளங்குகிறது. இத்தகையோர் ஜீவகாருணியமாவது சகோதரத்துவமாவது சற்றுமில்லாதவர்கள். இவர்கள் நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திறகு இடையூறு செய்கிறார்களாதலின் இவர்கள் மாதுர் துரோகிகளாவார்கள்.

தான்மட்டும் க்ஷேமமாக வாழ்ந்தால் போதும் என்ற சுய நல நோக்கமுடையோர் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு அவசியமான பொது நல ஊழியத்தைக் கனவிலும் சிந்திப்பதில்லை. யாரேனும் பொது நன்மைக்குரிய ஒரு காரியத்தைச் செய்ய முயன்று பலர் உதவியைக் கோரி வேண்டிக்கொள்ளும்போது, இவர்கள் மேற் கண்டவாறு "ஏன் உனக்கு வேறே வேலை யில்லையோ? இராப்பாடசாலை வைத்து ஏழைகளுக்குக் கல்வி கற்பிக்க விரும்புகிறவன் உன் பணத்தை வைத்து வேலை செய், அதற்குச்

சக்தியில்லாவிட்டால் பேசாமலிரு. பிச்சையெடுக்க வருவானேன்?" என்று கேட்கிறார்கள். அந்தோ இவ்வறிவிலிகள் அவ்வாறு நடந்து கொள்வதன் காரணம் போதிய கல்வியில்லாக் குறையே. பொது நல ஊழியம் செய்வோர் இத்தகையோர் முகதரிசனமே செய்யாமல மதம், பாஷை, தேசம் இவற்றில அபிமானமுடைய உத்தமர் உதவியைப் பெற்று எடுத்த காரியத்தை முடிக்கவேண்டும்.. இனியேனும் கருணாநிதியாகிய பரமபொருள் இத்தகையோருக்கு நல்லறிவு உதிக்கச் செய்து தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஓரிடையூறும் நேரா வண்ணம் அருள் புரியவேண்டுமாய்த் திரிகரண சுத்தியோடு பிரார்த்திப்போமாக.

ஓம் தத்ஸத் பத்திரிகாசிரியர்.

---

## தற்கால குடும்ப நிலைமை.

ஒவ்வொரு 'ஆனந்தபோதினி' சஞ்சிகையிலும் உள்ள கல்விசம்பந்தமான அருமையான அம்சங்களை வாசிப்பதாலும், முக்கியமாய் வைகாசிமீ சஞ்சிகையில் உள்ள 'மாணவர்களுக்கு எச்சரிக்கை' 'பெற்றோர்ப்பேணல்' என்னும் வியாசங்களைப் பார்த்ததாலும் மேற்படி விஷயத்தைக் குறித்து நான் எழுதத்துணிந்தேன். ஒரு குடும்பத்தில் புருஷர்களுககும் ஸ்திரீகளுக்கும் தற்காலம் இருக்கும் சம்பந்தங்களையும், இருக்கவேண்டிய முறையையும் பற்றி மாத்திரம் நாம் கருதுவோம்.

தற்கால நிலைமையை உத்தேசித்தால் ஒரே பிடிவாதமாக எல்லாம் கெட்டது அல்லது எல்லாம் நல்லது என்று சொல்வதற்கிடமில்லாமல் 'உலகம் பலவிதம்' என்று யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. சில வேளைகளில் பரிதாபமும், சிலவேளைகளில் சிரிப்பும் சந்தோஷமும் உண்டாகின்றன. வறுமையால் பீடிக்கப்பட்டு, நாள்முழுவதும் வியர்வை தரையில் சொட்டும்படி குடும்பத்தினர்கள் வேலை செய்தாலும குழந்தைகள்கூட சந்தோஷமாய்க் கால்வயிற்றுக் கஞ்சி சாப்பிடுவதற்குக்கூட வழியில்லாததும், சந்தோஷம் என்பது எந்த ஜன்மத்தில கிடைக்குமோ என்று எண்ணக்கூடியதுமான குடும்பங்கள் அநேகம் இருக்கின்றன. அக்குடும்பத்தினர்கள் காவாலிகளாகவும், திருடர்களாகவும, மானமென்பது இலவலேசமுமில்லாத அனாதைகளாகவும் ஆவது ஆச்சரியமோ? சொத்தையுள்ள தனவந்தர்கள் அக்குடும்பங்களுக்கு உதவி செய்யாமல் போனால அவைகள் அழிவது நிச்சயம்.

தற்காலம் நாகரீகம் என்று சொல்லிக்கொண்டு, தங்கள் தேசாசாரங்களையும், அவைகளின் மகிமையையும் சிறிதேனும் கவனியாமல எல்லா விஷயங்களிலும் மேனாட்டார்களைப் போல பாவித்து சுதந்திரத்தை இழந்து, மேனாட்டார்களை ஏளனம் செய்யும்படிக்குச் சிலர் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புகள்போல திரிகிறார்கள். கால் அல்லது அரைக்கால் மீசை, கிராப், முகக்ஷவரம், சிகரெட்டு பிடித்தல் ஆகியவற்றைக் கௌரவமாக எண்ணி அவற்றைக் கொண்டிருப்பதனாலேயே தங்களைச் சம்பத்துள்ளவர்களாக மதித்து, விதவாவிவாஹம், ஜாதும்பதம, வயது நிபந்தம் இல்லாமல கல்யாணம் சீக்கிரம் வந்தால்தான் நமது நாட்டிற்கு



நன்மை, அப்படி இப்படி யென்று, சொல்வது தங்களுக்கே புரியாமலும், சில புருஷர்கள் திரிவதை அநேகர்கள் பார்த்திருக்கலாம். அதற்குத் தகுந்தாற்போலப் பெண்மணிகளிற் சிலர் அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு இல்லாமல் 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று பள்ளிக்கூடத்தில் படிக்கிறோம் என்கிற கர்வத்தினாலேயோ, அல்லது கலியின் கொடுமையாலேயோ, தலையின் ஒரு புறத்தில் வகுப்பும், குங்குமமே கண்டறியா நெற்றியும் உடையவராய் சோப், பவுடர் போட்டு தெய்வம் கொடுத்த பார்வையை அவலக்ஷணம் செய்து கொண்டும், உடைகளும் நகைகளும்தான் தங்கள் மரியாதையைக் காப்பாற்றித் தங்களுக்கு அந்தஸ்து தரும் என்ற எண்ணமுடையவர்களாய் அவைகளைத் தேகமுழுவதும் நிரப்பிக்கொண்டும், தங்களை இரம்பையோ அல்லது ஊர்வசியோ என்று எல்லோரும் எண்ணுவார்கள் என்று அற்ப சந்தோஷத்துடன் தேகத்தை நடக்கும்போது ஆயிரம் கோணல்கள் செய்துகொண்டும் போவதை அநேகர்கள் பார்த்திருக்கலராம். பாவம் இவர்கள் என்னத்திற்கு இப்படி இயற்கைக்கு விரோதமாய் நடக்கவேண்டும். இவர்கள் ஒருகால் புருஷன் மனைவியாய் நேரிட்டால் குடும்பம் எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஊகிக்கலாம். தங்கள் சொந்த புத்தியை இழந்து விளக்குப்பூச்சி விளக்கில் சாவதுபோல, மேல்நாட்டு நாகரீகத்தில் என் இவர்கள் சாகவேண்டும்? அந்த நாகரீகத்தால் அநேக குடும்பங்களில் காரியங்கள் முற்றிலும் கோணல்வழியில் நடக்கின்றன. கலெக்டர், ஜட்ஜி முதலிய உத்தியோக பதவியிலிருக்கும் சிலர் கண் மண் தெரியாமல், தங்களை அங்கமெல்லாம் நொந்து பெற்றெடுத்து ஆதரித்த தாய்களையும், அன்புடன் ஆதரித்த தந்தைகளையும் சிறிதேனும் கவனியாமல், அவர்களைச் சமையல்காரிகளென்றும், வீட்டுப் பூஜைசெய்கிறவர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அப்பாவிகள் மனிதர்களுக்கு பயந்தும் கடவுளுக்கு பயப்படாமலும் அப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்வது அடாது. காலத்தின் கொடுமையைப் பாருங்கள். சில ஸ்திரீகளும் கொஞ்சம் இங்கிலீஷ் படித்துவிட்டால் தாங்கள் சர்வஞானிகள் என்று நினைத்து இங்கிலீஷ் பத்திரிகையும் கையுமாய், நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு, அக்னி சாக்ஷியாய் மணம் புரிந்த தங்கள் கணவர்கள் எதிர் வரினும் சிறிதேனும் அச்சம் மரியாதையின்றி உட்கார்ந்து இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட குடும்பங்களில் மாப்பிள்ளைகளின் கதி என்ன? நாகரீகம் என்கிற பேச்சை வைத்துக்கொண்டு கேட்பவர்கள்கூட நம்பத் தகாததான அநியாய காரியங்கள் அக்குடும்பங்களில் நடைபெறுகின்றன. இதைத்தவிர புருஷர்கள் மனைவிகளுக்கும், நாத்திகள் மாமியார்களுக்கும், நாட்டுப்பெண்களுக்கும் இடைவிடாச் சண்டைகளும், எப்பொழுதும் புடவை நகை என்ற பேச்சே நிறைந்த வம்பர் மகா சபைகளும் நடக்கின்றன. இருப்பது இரண்டரைப் பேரானாலும், கக்ஷிகள் மூன்றரை உள்ள குடும்பங்கள் அநேகங்கள் இருக்கின்றன. இக்குடும்பங்களில் தர்மவழி எப்பொழுதுதான் ஸ்திரமாயிருக்குமோ? இதுவரையில் சொல்லிய விஷயங்களுக்கு விரோதமாய், சில குடும்பஜனங்கள் கிடைத்ததைக் கொண்டு ஒற்றுமையுடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். 'உயிர் விளக்கொளிர்வானுறு நறுநெய்'யும், பின் உலகத்தா ரெல்லோ

ரையும் நேசிக்க ஏதுவாயுள்ளதுமான வரைவு அருந்தனம் அன்றோ? புருஷன் ஆசாரஸ்தானத்தில் தயையுடன் கூடினவனாயும் பத்னி சிஷ்ய ஸ்தானத்தில், பதிபக்தி பொறுமை முதலிய பூஷணங்கள் அணிந்தவளாயும் இருப்பதுடன், அக்குடும்பங்களில் கொடை, என்னும் நற்குணம் மேன்மேலும் வளர்ந்து வருகின்றன.

“ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.”

இதுவரை குடும்பங்கள் இருக்கும் ரீதியைப்பற்றி எழுதினதிலிருந்து, எப்படிக் குடும்பத்தினர்கள் இருக்கவேண்டுமென்று புலப்படும். இருந்தாலும் இரண்டொரு முக்கிய விஷயங்களைக் கருதுவோம். நம்மைப்படைத்த கடவுளின் மகிமையை அறிந்து, புலன்களை அடக்கி மனதை நல்வழிப்படுத்தி ஆத்ம ஞானசுகத்தை அடைவதே யாவரும் கற்கவேண்டிய கல்வி. களங்கமற்றதும், சந்தோஷமுமான மனது என்கிற புஷ்பத்தை ஒவ்வொருவரும் ஈசுவரனுக்கு அற்பிக்கவேண்டும். நாஸ்திகம், கர்வம், மனசாக்ஷிக்கு விரோதம் செய்தல் முதலிய துர்க்குணங்கள் இருந்தால் இக்காரியம் சித்திக்காது. பூரண பக்தியுடன் கடவுளைத் தோத்திரம் செய்வதைவிட வேறு பாக்கியமில்லை என்பது பெரியோர்கள் கொள்கை. குழந்தைகள் களங்கமற்ற மனதுடன் எப்பொழுதும் சந்தோஷமா யிருப்பதை உத்தேசித்துத் தான் எல்லோரும் குழந்தைகளாயிருந்தால் பாசகமில்லை என்று தோன்றுகிறது. ஆகையால் பெற்றோர்கள் குழந்தைகளை நல்வழியிற் கொண்டு செலுத்தும் பாக்கியம் பெறவேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பையும் தேக சௌக்கியத்தையும் முக்கியம் கவனிக்க வேண்டும்.

“தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்”

“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்” (குறள்)

ஆகையால் குழந்தைகள் நன்னடக்கையை யனுசரிக்கும்படி கவனிக்க வேண்டியது பெற்றோர் கடமை. குழந்தைகள் பிடிவாதம் தப்பிதம் செய்தால் பொறுமையுடன் பேசி அவர்களைச் சரியானவழிக்குக் கொண்டு வரவேண்டும். குழந்தைகள் தெய்வத்திற்குச் சமானமன்றோ? அப்படி நினைக்காமல் குழந்தைகளைச் சனியன்களாக போகவும், கட்டையில் போகவும், பாதாளத்தில் புதைக்கவும் சில குடும்பங்களில் சபிக்கிறார்கள். குழந்தைகளுக்குத் தாயார்களிடத்தில் பற்று அதிகமாதலால் அவர்கள் இது விஷயத்தைச் சரிவர கவனிக்க வேண்டும். அப்படி யிருந்தால் குழந்தைகள் பெற்றோர்களை தெய்வமாகக் கொண்டாடுவதற்குச் சந்தேகமென்ன?

“தாயினிற் சிறந்த தெய்வ மில்லை
தந்தைதனின் ஏயாற் குருவு மில்லை”



என்று குழந்தைகள் அவசியம் அறியும்படிச் செய்யவேண்டும். நமது ஆத்மாவுக்கு நம் தேகமே இருப்பிடமானதால் தேக சௌக்கியத்தை ஜாக்கிரதையாகக் கவனித்து வரவேண்டும். காபி, டீ, சாராயம், சுருட்டு முதலியன குடித்தால் தீரா வியாதிகள் ஒருவனைப்பீடிப்பதற்கு சந்தேகமில்லை. சாப்பாட்டுக்காக தேகதிடத்தைத் தேடும் ‘பெரிய மனிதர்’ வீட்டில் மருந்துக்காகச் செலவிடும் பணத்தைக்கொண்டு இந்தியா முழுவதற்குமே ஒரு அன்னதான மடம் கட்டலாம். அருணோதயத்தில் எழுந்து வேதவிதிப்படி அநுஷ்டானங்களைச் செய்து, தேகதிடம் மனோதிடம் இரண்டையும் செலவில்லாமல் யாவரும் அடையலாம். முக்கியமாக ஸ்திரீகள், தங்கள் தேக சௌக்கியத்தைக் கருதவேண்டும்.

“மனைக்கு விளக்கு மடவாள்” என்று தெரிந்து ஒரு புருஷன் தன் மனைவியை ஆதரிக்கவேண்டும். சில புருஷர்கள், தாங்களே வீட்டிற்கு ராஜா என்று மனம் போனபடி தங்களதிகாரத்தைத் தங்கள் பெண்டு பிள்ளைகளிடம் காட்டி அவர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள். அவர்களே அன்னியர்களிடத்தில் மரியாதையாய் நடந்து கொள்ளுகிறார்கள். தன் பெண்டு பிள்ளைகளிடம் கபடமில்லாமலும், குடும்ப விஷயங்களைச் சந்தோஷமாய் நிர்வகித்துக் கொண்டும், ஒவ்வொருவனும் தன் குடும்பத்தில் உண்மையில் இராஜாவாக இருக்கவேண்டும். ஆனால் தன் குடும்பமே பெரிது, என்கிற சுயாலம் சிறிதும் இல்லாமல் தியாகத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

‘இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை’

என்றபடி ஒருவன் எல்லா நன்மைகளையும் அடையவேண்டும்.

ஸ்திரீகள், தங்களுக்கு வீட்டில் ‘சர்வ சுதந்திரம் உண்டென்றாலும் “இல்லிருந்து தீங்கொழுகுவள் கூற்றம்” என்று அறிந்து “தரித்திரம் அறியாப்பெண்டிர்” “பெண்பிள்ளை ராஜ்யம்” என்ற ஊரார் ஏளனத்திற்கு இடமில்லாமல் இல்லறம் செய்து வரவேண்டும். நவீன நாவல்களும், ஹார்மோனியப் பெட்டிகளும், தங்களுக்கு நல்லகதி தராவென்று கண்டும், வீட்டிற்குப் போனால் ஓய்வு உண்டு என்று தங்கள் கணவர்கள் நினைக்கும்படிக்கும், அவர்களிடத்தில் சூதாட்டம், களவு, குடி, முதலிய துர்க்குணங்க ளிருந்தால் அவர்களை நல்வழிக்குக் கொண்டு வருவது தங்கள் கடமையென்று தெரிந்துகொண்டும், ஸ்திரீகள் தங்கள் புருஷர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டும்.

“கொண்ட தலைவனுக் கெண்டரும் பெற்றி
நாடி யொழுகி வாடிய போழ்தத்
துளக்குளிர் வசனங் களங்கமின் றுரைத்திட்
டின்னிசை பாடி மன்னி யருகிருந்
தூக்க முயர்த்தி யுறுசுவை யுணவிடூஉ
ஆக்க முறுத்தவ னன்புரை கேட்டுத்
தான்மகிழ் வுறாஉந் தேன்மொழி யாட்டியாய்
இல்லறக் கலனை யியக்கு மீகானாய்

இல்லிற் பதித்த முல்லையங் கொடியாய்த்
துன்ப விருளொழித் தின்ப வொளிதரும்
நந்தா விளக்காய்ச் சிந்தா மணியாய்
இறைவ னளித்த வின்னுயிர்த் தலைவியாய்
இலகுறு மனைவியே யிம்மை யிவ்
வுலகினைத் துறக்கமா வுறச்செயுந் துணையென"

(தனிப்பாசுரத் தொகை)

என்றபடி வீட்டிற் செய்யவேண்டிய காரியம் ஒவ்வொரு ஸ்திரீயும் செய்தால் நாடு சீக்கிரத்தில் விருத்தி யடைவதில் ஐயமுண்டா? அதன்றி சுதேச பாஷைகளிலுள்ள இரம்மியமான கிரந்தங்களைப் படிக்கலாம். 'அனாதி'யாகிய தமிழைப்பற்றி யோசிக்கையில் 'திருவாசகம்' 'திருக்குறள்' முதலிய அரிய நூல்களின் பொருள்களை அறிவதைவிட ஆனந்தம் வேறுண்டோ? என்பது விளங்கும். அப்படியின்றி, புருஷர்களைப்போல தங்களுக்கும் சுதந்திரம் வேண்டுமென்றும், தாங்களும் கவுன்சில் மெம்பர்களாகி (Council Members) ப் பேசி இந்திய ஸ்திரீகளுக்கு ஒரு அந்தஸ்து கொண்டுவர வேண்டுமென்றும் நினைக்கிறார்கள். இத்தனை நாளாய்ப் புருஷர்கள் சட்டசபைகளில் பேசிப் பேசிக் காரியம் சாதித்தது போராது. ஸ்திரீகள்தான் பாக்கி. இல்லறம் வழுவாது நடத்துவதே பெரிய அந்தஸ்து என்று நினைத்தும், இருக்கவேண்டிய நிலைமையைச் சிறிதும் கவனியாமல் கண் மூடித்தனமாய்க் காரியங்கள் செய்யாமலும், ஸ்திரீகள் இருந்தால் அதே நம் நாட்டுக்குப் பெரிய அந்தஸ்து.

"விழுப்பஞ் சான்ற வியத்தகு மில்லறம்
ஒழுக்க வியலறி வுறுத்துஞ் சாலையாய்
நன்மை தழைத்து நயக்கொடை நிழற்றி
மென்மை யரும்பி மேன்மை மலர்ந்துபே
ரன்பு காய்த்துநல் லருள்கனிந் தலகிலா
இன்பநறை பிலிற்று மினியகற் பகமாய்
இலகிடு முண்மை மலையிலக் கன்றோ?
எத்துறுந் தகைய வில்லற மெனுமிம்
மாத்தடந் தேரினை வாழ்க்கையாம் போர்க்களஞ்
செறுத்துபு துன்பத் தீயரை யெறிந்து
தொலைத்திட லறியார் துறவு துறவென
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்து
மயக்கினு 'மாழ்கலீர்! மாந்தர்காள்!
உயக்கமின் றில்லற முற்றுமெய் யுணர்மினோ"

(தனிப்பாசுரத் தொகை)

என்றபடி இல்லற நன்மையை அடையும்படிக்கும், நமக்கு நல்லகர் தரும்படிக்கும், எல்லாம் வல்ல ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

K. C. Sesha Iyer, B.A., L.T.
*Boar] High School,*
Penukonda, (Anautapur.)

---



## கைவல்ய நவநீத வசனம்.

(துன்மதி௵ ஆனி௴ சஞ்சிகையின்).

(461-ம் பக்கத் தொடர்ச்சி.)

(குரு பின்னும் ஐயமற வருள்கின்றார்)

பொய்யாகிய தியானம் உண்மையான மோக்ஷத்தைத் தரக்கூடிய திடத்தை யெவ்வாறு உடைத்தா யிருக்கிறது என்று சங்கிப்பையாயின் கூறுதும். மரணகாலத்தில் அவரவர்கள் எத்தகைய உருவத்தைத் தியானம் செய்கிறார்களோ அத்தகைய ஜன்மத்தையே யடைவர். இச்சையோடு நாமரூபத்தை யுடைய வற்றைத் தியானிக்கின் அந்த உருவத்தையே யடைவர். நெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் இப்பிறவி யொழிய வேண்டுமென்று நாமரூபமற்ற சுத்த நிர்க்குணப் பொருளைத் தியானிப்பவன் அப்பிரம்ம சொரூபமே யாவன்; இதுசத்தியம்.

[" * * * * *

யாதொன்று பாவிக்க நான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கி
னத்துவித மார்க்க முறலாம்
எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள்செய்
யெந்தைநீ குறையு முண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்ற பொருளே."

என்று தாயுமானவரும்,

"இந்த வடலம் விடும்பொழுது யாவன் யாதொன் றினைநினைந்தா
னந்த வளவே யந்தப்பா வனையா லதனை யடையுமா
லென்ற னியல்பே யெப்பொழுது மிதயத் திடைகொண் டென்பாலாஞ்
சிந்தை யொடும்வா ளமர்தொடங்கி லதனாலெனையே சேருதியால்"

என்று பகவான் கீதையிலும் அருளியது காண்க.]

பிரமரூபத்தைத் தியானித்த பேர்களும் பிரம்ம மாகுவார்களெனின் விசாரமென்னத்திற்கு, விசாரத்தாலடையும் ஞான மென்னத்திற்கு என்று நினைக்காதே, நீ முதலில் தியானிக்கும் பிரம்மத் தியானமானது பரோக்ஷபுத்தியே யாகும். அது திடப்பட்ட பின்னர்தான் அப்பரோட்ச புத்தி அபரோட்ச புத்தியாகி, திரமான விசாரமாய் ஞானமாகும். அதுவே மோக்ஷமு மாகும். இது வேதவாக்கியம் என்றுணர்வாய்.

முத்தி நிலையாகிய பரிபூரண சொரூபத்தில் அந்தக்கரண சம்பந்த முடைய விருத்தி ஞானமும் கூடியிருக்குமாயின் அகண்டாகார மாகிய அநுபவம் எப்படி சித்திக்கும் என்று கேட்பாயாகில் கூறுகிறோம்:—

நீர் நிறைந்த ஜாடியிலுள்ள மண்ணை நீரினின்றும் பிரிப்பதற்காக, அதில் சேர்க்கப்பட்ட தேற்றான் கொட்டைப்பொடி அம்மண்ணைப் பிரித்துவிட்டு தானும் அம்மண்ணோடு சேர்ந்து எப்படிகெடுமோ அதுபோலவே விர்த்தி ஞானமும் அஞ்ஞானத்தோடேயே கெடும்.

[விருத்தி ஞானம் என்பது சுத்த சத்துவமாய்ச் சேடித்த அந்தக் கரண விர்த்தியாகும். மனம் சத்துவமாத்திரமாய் நிற்கும்போது இதற்கு முன் பல விடங்களில் சிதறி அலைந்துகொண் டிருந்த அதன் வல்லமை முழுமையும் ஒரேவிடத்தில் சேர்ந்து நிலைக்கிறது. அதுவும் மாயையேயாகும். ஆனால் அது சத்துவகுணமாயை; இது ஆவரணமாகிய அவித்தையை யழிக்கும் சத்தியுடையது. இதையே முன்பு தத்துவவிளக்கப்படலத்தில "நஞ்சை முறிப்பு ஔடதமாகிய வேறொரு நஞ்சாலும், சிலையிலுள்ள அழுக்கை உவர்மண்ணாகிய அழுக்காலும், அம்பினை வேறொரு அம்பாலும் உலகோர் அழிப்பதுபோல் மாயையைச் சத்துவகுண மாயையால கெடுப்பார்கள். பின்பு அந்த அசுத்தமாயையோடு இச்சுததமாயையும் (சுடலையில் சவத்தைச் சுடும்கோல் தீயைக் கிளறிச் சவத்தைச் சுட்டு முடிவில் அத்தீயிலேயே தானும் வெந்து அழிவதுபோல்) அழியும்" என்று கூறியது.]

(குரு பிறகு இந்த அநுபவம் ஜீவன் முத்தரிடம் எவ்வாறிருக்குமென் பதைக் கூறுகிறார்).

"மைந்தனே! மேற்கூறப்பட்ட நிச்சய ரூபமான அகண்டாநுபவம் ஜீவன் முத்தரிடம் எவ்வாறு விளங்குமெனின, அவர்கள் கவலையற்ற ஒரு சக்கிரவர்த்திபோலவும், தாயின் பாலை யருந்தியதும் வேறொரு கவலையுமின்றி சுகானந்த சொரூபியா யிருக்கும் சிசுவைப்போலவும் பரமானந்த அநுபவத்தில் முழுகிச் சற்றும் கவலையின்றி யிருப்பார்கள். மோக்ஷம் நரகம் பிறப்பு என்ற நினைவே யொழிந்துபோம். உண்டென்று யாரேனும் கூறினால், ("ஒரு கொசு ஆகாயத்தை விழுங்கிக் கக்கிவிட்டது" என்று யாரேனும் கூறக் கேட்ட ஒருவன் எப்படி நகைப்பானோ, அது போலவே) "அட! இதென்ன பிராந்தி" என்று நகைப்பார்கள்.

[பிரம்மான்ம ஐக்கிய அனுபவத்தில் சீவத்தன்மை அடியோடு போய் விட்டிருப்பதாலும, அப்போதடைந்திருக்கும் நிலையே சாசுவதமாகத் தன்னிலையெனத் தோன்றலாலும், மாயைமுதல் யாவும் கனவாய்ப் பறந்துவிட்டதாலும், பந்தம் முத்தி காலம் இடம வஸ்து முதலிய எவ்வித விகற்பத் தோற்றவும் அங்கில்லை. உண்டென்று கூறுவோரைக் கண்டு, அவர்கள் உண்மை தெரியாமல் மாயாமயக்கால் இப்படிக் கூறுகிறார்களென்ற கருததால் நகைப்பார்கள் என்பதாம. இது சகச சமாதியல காலதேச வஸது பரிச்சேதமற் றிருக்கும் ஜீவன் முத்தனுடைய நிலைமையைக் கூறியதாம்.

பிரம்ம சொரூபத்தைத் தியானிப்போர் பிரம்மமாகுவ ரென்பதும், அந்த அநுபவநிலையில் மரணம் பிறப்பாதிய விகற்பங்கள் இல்லையென்பதும் பின்வரும் தாயுமான சுவாமிகளின் வாக்காலும் விளங்கக் காணலாம்:—

"சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தானவந்து முற்று மெனலாற்
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பதைச்
சதாநிஷ்டர் நினைவ தில்லை
* * * * *"

இந்த நிலை சகசநிஷ்டை யென்பதாம். சதாநிஷ்டர் என்பதற்குச் சகசநிஷ்டையி லிருப்போர் என்பது பொருளாம். நிஷ்டை சவிகற்பம், நிருவிகற்பம், சகசம் என மூவகைத்தாம்.



சவிகற்பநிஷ்டை.—ஆன்மாவை யணுவுக்கணுவாய்த் தரிசித்தல். இதில் ஞாதுரு ஞான ஞேயம் என்ற திரிபுடிகளுண்டு.

நிருவிகற்பநிஷ்டை.—ஆன்மாவை அகண்ட சொரூபமாகத் தரிசித்தல். இது ஏகமயமான பிரம்ம சொரூப மாத்திரமாய் விளங்கும் அநுபவம்.

இந்த இரண்டு நிஷ்டைகளும் சத்துவகுணத் தொழில்களேயாகும். இவற்றில் ஒருவன் எவ்வளவு காலமிருந்தாலும் மறுபடி பகிர்முகத்திற்கு வரவேண்டியதே. இவற்றிற்கு ஆதியந்தமுண்டு.

சகசநிஷ்டை.—காலம், தேசம், வஸ்து, தநு, கரணாதிகள், தேகம், இந்திரியம் முதலிய ஒரு தோற்றவுமின்றி மாயையின்றி, இரண்டற்று யாவும் ஒரே அகண்டாகார சொரூபமாய் முடிவின்றி பிரகாசித்து ஒரேநிலையில் நிற்பது.

" * * * * *
சொல்லரிய தன்மையதா யான்று ளென்னத்
தோன்றுதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல வவித்தை யெல்லா
மடையவுண்டு தடையறவுன் னறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளங்குந் தானே."

(தாயுமானவர்.)

அந்த நிலை நின்றோர்க்கு உலகமுதல் யாவும் அச்சொரூபமாகவே விளங்கும்.

"விளக்குஞ் சொரூப நோக்காது விளங்கு முலகை நோக்கியிடின்
விளக்குஞ் சொரூபந் தோற்றாது விளங்கு முலகே தோன்றியிடும்
விளக்குஞ் சொரூபந் தனைநோக்கி விளங்கு முலக நோக்கமறின்
விளக்குஞ் சொரூப மேதோன்றும் விளங்கு முலக மதுவாய்ப்போம்."

(அத்துவித உண்மை)

"சகசநன்னிட்டை யியல்புதம் முயற்சி சற்றொன்று மின்றியே யருளால்
சகமதும்போக மதுவுந்தம் முடலூர் தருகர ணமுமெவை யவையாய்
அகமதிலுதித்த வதுமறை யாம லகன்றது பின்னுதி யாமல்
அகமுரைகாய வருத்தமே யின்றி யமர்ந்துநின் றிடுநின்ற படியே."

(சுத்த சாதகம்.)

இச்சகச நிட்டையிலுள்ள மகான்கள் அனுபவிப்பது பரிபூரணமான ஆனந்தம் என்று விளங்குவது காண்க.]

(மாயா சம்பந்தமான ஒன்றையும் கவனியாது பிரம்மானந்த நிலையி லிருப்பாயெனச் சீடனுக்குப் பின்னும் கூறுகிறார்.)

மைந்தனே! சகத் காரணமாகிய மாயையென்பது மித்தையென்று சுருதிகள் கூறுமாயின் அம்மாயையினின்றும் உற்பத்தியான எல்லா வகைப் பொருள்களும் மித்தையேயாகும். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்களுக்குத் தாயையன்றி யொரு ஜன்மமும் ஜாதியுமுண்டோ. இல்லை

யாதலின் சுவர்க்கம், நரகம், நன்மை தீமை முதலிய ஒன்றையுமே கவனி யாமல் பரிசுத்தமான சச்சிதானந்த பரிபூரண சொரூபமா யிருப்பாயாக.

(யாவற்றையும் பொய்யெனல் பாபமன்றோவென்று சீடன் வினாதல்)

சீடன்:—எனது பிறவிப்பிணியை நீக்கிய கருணாமூர்த்தியே! பிரம்மன், விஷ்ணு முதலிய பல தேவர்கள், உலகிலுள்ள பெரியோர், கங்கை முதலிய தீர்த்தங்கள், தேசங்கள், வேதங்கள், மந்திரங்கள், விரதங் கள் முதலியவைகளைச் சுருதியின்படி யாவரும் நம்பி வழிபட்டு பாவ மொழிந்து மோக்ஷமடையக் காரணமாய்க் கொண்டிருக்கிறார்களே! அப்படிப்பட்ட யாவற்றையும் பொய்யென்று கூறுவது குற்ற மாகாதோ?

குரு:—மைந்தனே! சொற்பனத்தில் கண்டதைப் பொய்யென்று கூறுவது குற்றமாயின், அற்பமான மாயையில் உண்டான பிரபஞ்சங்களை மித்தையெனல் குற்றமாகும். சொற்பனத்தில் கண்டவற்றை மித்தையென்பது குற்றமல்ல வென்கிறவரையில், மாயையின் காரிய மாகிய பிரபஞ்சங்களை மித்தையெனலும் தோஷமாகாது.

மேலும் சுருதியாதிகளால் ஞானகாண்டத்தில் பொய்யென்று நிஷே திக்கப்பட்ட சொரூபாதிகளைச் சத்தியமென்று கூறி வழிபடுவோரையே புண்ணியவான்க ளென்று புராணங்கள் கூறுகின்றன வெனின், வேதங் களில் சத்தியமென்று கூறப்பட்ட உண்மையை மெய்யென்று சாதிக்கும் ஞானிக்குக் குற்றங்கள் விதிக்கும் சாத்திரங்கள்கூட வுண்டோ? இல்லை. நாமரூபங்களாகிய மாயாகாரியங்கள் யாவுமே மித்தையாம்; எங்கும் நிறை ந்த சச்சிதானந்த சொரூபமே சத்தியம்.

[நித்திரைவிட்டு விழிப்படைந்தவனுக்கு கனவிற்கண்டவை பொய் யென்று சுபாவமாகவே தோன்றுவதுபோல, அவித்தை யொழிந்து அகண்டாகார அநுபவமடைந்த ஞானிக்கு யாவும் மித்தையாகத் தோன் றுவதால் அவன் அப்படிக் கூறுவது குற்றமாகாது என்றார்.

குறிப்பு:—அநுபவமாக அந்த பிரம்மசொரூப நிலையை யடைந்த ஞானியைப்பற்றி யிது கூறியதேயன்றி, சீவபாவங்கெடாது ஆன்மதரிச னம்பெறாது, அஞ்ஞானத்தில் மூழ்கிக்கிடப்போர் நூலில் கூறியிருப்பதை மட்டும் பார்த்து விட்டு "எல்லாம் பொய், கோயிலிலென்ன விருக்கி றது? எல்லாம் நமக்குள்ளே யிருக்கிறது" என்று வாயால் மட்டும் பிதற் றித் திரிந்தால், அவர்கள் தாம் கெடுவதன்றி பிறரையும் கெடுத்து நரக வேதனைக் காளாவார்கள்.] (தொடரும்)

சீடன்.

---

## பெற்றோர்ப் பேணல்.

(6-ம் வ௵ 11-ம் சஞ்சிகை 432-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்டிசையுங் கொண்டாடும் பண்டரி புரத்தில், சில நூற்றாண்டு கட்குமுன் சதிபதிகளாகிய இருவர் வாசஞ் செய்துகொண் டிருந்தனர். எல்லாச் செல்வங்களையும் குறைவறப் பெற்றிருந்தும், புத்திரப் பேறின்



மையால் மனமாழ்கின அவர்கள் பலவித விரதங்களை யனுட்டித்தும், ஆலயங்களி லங்கப் பிரதக்ஷணஞ் செய்தும், தான தருமங்க ளியற்றியும் வந்தனர். வெகு நாட்களுக்குப் பின்பு ஓர் ஆண்மக வுதித்தது. அதனால் அவர்க ளளவிலாத ஆனந்தங் கொண்டு, புண்டரீகன் எனப் பேரிட்டுச் சீராட்டிப் பாராட்டி, எல்லாவித சிறப்புக்களையுஞ் செய்து வளர்த்து வந் தனர். அக்குழந்தையும் சுக்கில பக்ஷத்து மதியைப் போல் வளர்ந்து, ஐந் தாம் பருவத்தில் வித்யாரம்பஞ் செய்விக்கப் பெற்று, பல நூல்களில் தேர்ந்து, விவாகத்திற் குரிய பருவத்தனானான். பெற்றோர் ஓர் அழகுள்ள கன்னிகையைப் பேசி விவாகஞ் செய்து நேத்திரானந்தமாய்க் கண்டு களித்துத் தங்களை முதுமைப் பருவங் கிட்டியதால் குடும்ப பாரத்தைப் பிள்ளையிடம் ஒப்புவித்தனர்.

அவர்களுக்குப் பிரதிநிதியாக விருந்து அவர்களது பணிவிடையையே தான் பெற்றதாக நினையாமல், மனைவி வந்துவிடவே காமக்கடலில் மூழ்கிக் கரைகாணாதவனானான் புண்டரிகன். அவளுக் கூழியஞ் செய்தலையே ஜன் மப் பயனாக் கருதினான். மாதா பிதாக்களை மறந்தான். அவர்கள் ஏதாவது புத்தி கூறவந்தால், 'சரி, இக்கிழப்பிணங்களுக்கு வேலை யில்லை,' என அலக்ஷியம் செய்து காது கொடாமற் போய்விடுவான். உண்மையைக் கூறு மிடத்து, 'அவர்களிருப்பது தன் காரியங்களுக்குத் தடையா' மென்று வெறுத்தான். "பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்," என்னும் வாக்கியம் பொய்க்குமோ? யாது செய்வர் பெற் றோர். பருவமோ முதுமை. ஒரு பிள்ளை யிருந்தால் தள்ளாத காலத்தில் தாங்குவானே என்று தாங்கள் கொண்ட எண்ணமெல்லாம் நிஷ்பிரயோ சனமாய்விடவே, "இனி இங்கிருத்தல் தகாது, நாம் பட்ட பாடுகள் ஆற்றிற் கரைத்த புளியாயின. பகவத் கைங்கர்யத்தில் இவ்வளவு உழைத் திருந்தால் பிறவிப் பிணியையே போக்கலாமே. இப்போது பசிப்பிணி யையு மன்றோ போக்க வியலாதவரானோம். போன விஷயத்தைப் பேசிப் பயனென்ன. 'கற்றார் மூன் தோன்றா கழிவிரக்கம்' என்பது நீதியல்லவா? இனியேனும் திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்து நற்கதி யடைய முயல் வோமெனின் அதற்கும் வயது இடந் தரவில்லையே. 'எக்காரியத்தையும் முடிக்க வல்ல வாலிபத்திலேயே இகபர சாதனங்களைத் தேடிக்கொள் ளாது, 'பெரியேனாயின பின் பிறர்க்கே யுழைத் தேழையானேன்,' என்ற படி வீணிற் குழைத்துச் சாகிற காலத்தில் சங்கரா! சங்கரா! என்றால் என் னுண்டாம். உள்ளபடி யாகிறது. 'வருந்தி யழைத்தாலும் வாராதவாரா, பொருந்துவன போமினென்றாற் போகா, புறப்படுதலே சரி" எனத் துணி வுற்று மகனிடம் விடை கேட்டனர். அவனும் சனி தொலைந்த தென மகிழ்ந்து, போய் வாருங்கள் என்றான்.

கையிற் காசின்றிக் காசி யாத்திரை புறப்பட்ட வயோதிக ரிருவரும் ஐயமேற்றுண்டு, தள்ளாடித் தள்ளாடி நடந்து, மிக்க வருத்தத்துடன் பிரயாணஞ் செய்துகொண் டிருந்தனர். ஆ! பத்து மாதஞ் சுமந்து பெற்ற வயிற்றிற்குப் பிடியன்னம் கொடா தலையவிட்டானே பாவி. இவ னுக்கெந்த நரகந்தான் வாய்க்குமோ "மாதா வயிறெரிய வாழாரொரு காலும்' என்பதை யறியாமற் போனானே. நாய்க்கும் இவனுக்கு மென்ன பேதம்?

சில நாட்களுக்குப் பின்பு, புண்டரீகன் மனைவியும் தேசயாத்திரையை விரும்பிக் கணவற் குரைத்தாள். அவனும் மிக்க சந்தோஷத்துடன் வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு வண்டி வாகனங்களுடன் புறப்பட்டு வெகு கேளிக்கையாய், தலங்கடோறும் தங்கிச் சேவித்துக் கொண்டே காசிக் கண்மையிற் செல்கையில், பொழுதுபட்டது. மேலே போக முடியவில்லை. இருப்பிடந் தேடி ஆண்டிருந்ததோர் சிறுகுடிலின் புறத்திற்றங்கினர். வைகறையிற் றுயிலுணர்ந்தபோது அவ்வில்வா யருகிற் சௌந்தர்யமுள்ள மங்கையர் சிலர் மெழுகிப் பெருக்கிக் கோலமிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு, 'நேற்று நாம் வந்தபோது இவ்வீட்டில் யாருமில்லை, இத்தனை பெண்களிருக்கும் வீடு நிச்சத்தமா யிருக்குமோ'? என் றையுற்றவனாய் அதன் உண்மையை யறியவேண்டி அம்மங்கையர் அண்டையிற் செல்வான் ஓரடி யெடுத்து வைத்தான்.

'அதோ மாதுர்த்ரோகியாகிய சண்டாளன் நம்மைக் காணவருகிறான். அவன் முகத்தில் விழிக்கலாகாது. வாருங்கள் போவோம் விரைந்து,' என அவர்களு ளோரணங்கு கூறியது இவன் காதிற்பட்டது. கண்டான் அவர்களேகுவதை; திடுக்கிட்டான் புண்டரீகன். ஓடினான்கடுகி, சூடினான் பதங்களைச் சிரத்தில்; எதிரில் நின்று கை கூப்பி, "புண்யவதிகளே! நீங்கள் யாவர்? உம் வரலாறியாது? உண்மையைவிளம்புதிர்" என வினவலும், அவர்களில் ஒருவள் வாய் மலர்ந்து 'நாங்கள் தேவமாதர். நதிரூபமாயிருப்போம். எம்மில் நீராடுகின்றவர் பாவங்கள் எம்மை அடைவதால், அதனை யொழிக்க இவ்வில்லின்கண் ணெழுந்தருளியுள்ள மகனீயருக்குத் தொண்டு புரிகின்றோம். பெற்றோரைப் பரிதபிக்கவிட்ட பாதகரைக் காணின் எம் விரதம் பாழ்படும். தீயாரைக் காண்பதுவுந் தீதே யன்றோ? நீயும் அத்தகையோனாகலின் உன்னைக் காணவும் கூசினோம். ஆயினும் இவ்வீட்டண்டை நீ தங்கியிருந்தமையின் எங்களைக்கண்டு போம் பாக்கியத்தைப் பெற்றனை" என்றுரைத்துக் கொண்டே அந்தரத் தானமாயினர்.

புண்டரீகனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை. திகைப்பூண்டு மிதித்தான் போன்றான். 'என்னே வியப்பு! சகல பாபங்களையும் பரிகரிக்கும் பாகிரதியாதிய நதி மடந்தையரையும் பணிகொளும் பரமபுருடன் யாவனோ? சாக்ஷாத் பராபரனேயோ! அவரைத் தரிசிக்கவேண்டும். எதனால் இவ்வித மேன்மையடைந்தன ரென்பதை யறிவோ"மென்று விரைந்து சென்றான் அக்குரம்பையுள்; ஆண்டமர்ந்திருந்த ஓர் முதியாரைக்கண்டு தான் கண்டதைக் கூறி காரணம் வினவினான். அதற்கு அவர் "அப்பா! நானோரேழை. என்மாட்டியாதொரு மகிமையுங் கிடையாது. நிரக்ஷரகுக்ஷி. நான் காசியென்பதே யின்ன தென்றறியேன், கடவுளைக் கை தொழுதறியேன். எனது தாய்தந்தையரே எனக்குத் தெய்வம். அவர்கள் வதியுமிவ்வில்லே காசி. அவர்கள் பணிவிடையே எனது தேவதார்ச்சனை, தவம், நோம்பு, முதலிய யாவும். மற்றொன்றும் நானறியேன்" எனக் கூறிவிட்டு, "நேரமாகிறது. பெற்றோர் எதிர்பார்த்திருப்பர். உண்டியுதவவேண்டும். நீர் போய் வாரும்" என்று உள்ளே போய்விட்டனர். நல்லார் தரிசன விசேடத்தால் அஞ்ஞானப்பேய் அகன்றோடலும், வெளிவந்த புண்டரீகன் தன் பிழையை எண்ணி யெண்ணி நெஞ்சம் புண்ணானான். மனையாளை வெறுத்தான். தன்னையே நொந்து கொண்டான். வெறி கொண்டவன்போ லோடினான்.



"அந்தோ! நேற்று மார்க்கத்திற் கண்டும் காணாதவன் போல் வந்து விட்டேனே. என்னைப் போன்ற பாவிகளு மிருப்பரோ? நான் காசிக்குப் போனாலென்ன? கங்கையிற் குளித்தாலென்ன? என் பாபமொழியுமோ! அவர்களே மன்னித்தாலன்றி உய்வுண்டாமோ?" என்று கூறி மனையாள் அழுதுகொண்டே தொடர்ந்துவரப் பெற்றோரைத் தேடி ஓடினான். அவர்கள் பசியால் நடக்கவியலாமல் களைத்துப் படுத்திருப்பதைக் கண்டான். கண்களி லறைந்து கொண்டான். கால்களில் விழுந்து, "அம்மா! அப்பா! என்னைக் காப்பாற்ற வேண்டும். சிறியேன் அறியாது செய்த பிழைகளை மன்னிக்கவேண்டும். 'சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற், பொறுப்பது கடனே' என்பது நீதிவாக்கிய மாயிற்றே" எனப் பலவாறு இரந்து புலம்பினான். உடனே அவர்களையோர் வண்டியிலேற்றிப் பல தலங்களையும் சேவிக்கச்செய்து வேணபணி புரியுமாறு பாரிக்குப் பணித்தான். பிறகு, யாதொரு குறையுமின்றி வீட்டிற் சேர்த்து, அவர்களுக்குரிய குற்றேவல் புரிதலையே முக்கிய கடமையாகக் கொண்டு அவ்வாறே புரிந்துவந்தான். "சீரொழுகு சான்றோர் சினம் நீர்கிழிய வெய்த வடுப்போல மாறு" மாகலின், அம்முதியோரும் சீற்றமாறி, மிக்க களிப்புடனிருந்தனர். இங்ஙனம் சின்னாட் கழிந்தன.

ஓர்நாள் புண்டரீகாக்ஷன் புண்டரீகனுக்குக்காட்சி யளிக்கத் திருவுளங்கொண்டு, அவன் வீட்டை யடைந்தான். அச்சமயம் புண்டரீகன் தன் பெற்றோர் கைங்கரியத்திற்றலைநின்றானாகையால் அண்டர் பிரானைக் கண்டு தெண்டனிட்டு இரண்டு செங்கற்களையவர் முன்னிட்டு "பெருமானே! க்ஷமிக்கவேண்டும். பரந்தாமா! தாய் தந்தையர்க்குப் பணிவிடை செய்துகொண் டிருக்கிறேன். தயை கூர்ந்து சிறிது போழ்து இச்சிலையின்மீ தெழுந்தருளியிருப்பீர்களானால் அதைமுடித்து வருகிறேன்" எனச் சென்று தன் கடமையைச் சரிவரச் செய்த பின்னர் ஆண்டவன் பக்கலடைந்து கண்களிலானந்த வருவிபாய உரோமஞ்சிலிர்க்கத் தன்வயமற்றுப் பணிந்து, "பாண்டவர் சகாயா! பக்தவத்ஸலா! மாதா பிதாக்களை மனமெரியச் செய்த மாபாவிக்கும், மாதவா! நின்மலரடி சேவை கிடைப்பதோ!" வெனப் பலபடப் புலம்பலும், சாரங்கபாணி அவனை நோக்கி "அன்ப! உலகத்திலே கற்புடைப் பெண்டிர்க்குத் தெய்வம் கொழுநனே. தாய் தந்தையரே புதல்வர்க்குக் கடவுள். இவ்வாறு கொண்டொழுகுவோர் நம்மைத் தொழாரெனினும், அவர்களுக்கு நாம் எளியோம். அதற்கு மாறுபட்டோர் நம்மைச் சதாகாலமும் பஜிப்பவராயினும் புறக்கணிக்கப் படுவர். நீ திரிகரணங்களு மொத்து உன் இருமுது குரவரைப் பணிகின்றனை யாகலின், என் அத்தியந்த பத்தனாயினை நினக்கு வேண்டியது யாது? கேள் தருவோம்" என்றனர். அவனும் அவர் பாதபத்மங்களைப் பணிந்து, 'அடியார்க் கெளியாய்! 'காயிலை தின்றும், கானிலுறைந்தும், தீயிடை நின்றும், பூவலம் வந்தும், அலைவ தெல்லாம் தங்கள் திருவடி காணவேண்டியே யன்றோ? அதனை அடியேன் எளிதிற் பெற்றபின்னும் பெறற்குரிய பேறு வேறுளதோ? ஆயினும் ஐயனே! எனது சரித்திரத்தை யாவரு மறிந்துய்யத் தாங்கள் ஈண்டுத் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருந்து, பக்த கோடிகளுக்குக் காட்சிதரவேணு' மென்று பிரார்த்தித்தனன். அண்ணலும் 'அங்ஙனமே யாகுக' வென வர மீந்தனர். அன்று

தொட்டு அவ்வில்லே தேவாலய மாயிற்று. இன்னும் அன்பர்களியாவரும் சென்று தரிசித்து அருள்பெற் றுய்கின்றனர். (தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப் பண்டிதர், ராணிப்பேட்டை.

---

## தமிழர் புராதனம்.

" நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதிற்
றக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடு
மத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
வெத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்"

கின் வரலாறும் அவள்தன் பெருமையும் ஒருவாறு எடுத்தோத நினைந்து, அவள்மக்களின் விசேஷத்தையும் அவர்கள் வரலாற்றையும் ஒரு சிறிது பகுக்கப் புகுந்தனன்.

பண்டைய நூற்க ளனைத்துந் தமிழ் மொழியைக் குறிக்கு மிடத் தெல்லா மதன் பழைமையையே யதிகமாகக் கூறும். அவ்வணங்குதான்,

" பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள் "

இன்னுந் திருக்குறள், சிந்தாமணி, கம்பராமாயணம், ஆதிய இலக்கியங்களும், தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும், நுகர்ந்த தமிழின் பெருமையையும் அருமையையும்,

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்தது ங்கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்ற சிவஞான முனிவர் கூற்றிலே விடுக்கலாமே யன்றி யான் மீண்டும் புகலப் புகுவது நாழியைக் கொண்டு ஆழியை முகத்தல் போலாம்.

இனி இத்தகைய சிறப்பு வாய்ந்த மொழியின் வரலாற்றையுங் காலத்தையு முணர்வதற்கு முன், மொழிப்பெயரின் பொருள் யாதென ஆராய்வாம்: பொதுவகையாகத் தமிழ் என்பதற்கு இனிமை யென்றே யனைவரும் பொருள் கூறா நின்றனர். இப்பொருள் பிற்காலத்திய நூற்களில் அதிகமாகப் பயிலும். ஓர் வனிதையின் அளகபாரத்தியல் கூறுமிடத்துத் "தமிழறியார் நெஞ்சம் போன்று" இருண்டிருந்த தென்பார். இஃது மிகவும் விநோதமா யிருப்பினும், ஆசிரியருடைய பாஷாபிமானம் நன்கெடுத்தோதுகின்றது. பழைய காப்பியங்களில் இப்பிரயோகஞ் சிந்தாமணி தவிர வேறெந்நூலினு முளதாகத் தோற்றவில்லை.



"தமிழ் தழிய சாயலவர்......எந்த" ‡. என்ற பாவுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'இனிமை தழுவிய சாயலையுடையவர்......எந்த' என்று பொருள் வகுத்தனர் எனவே தமிழ் என்னுஞ் சொற்கு இனிமை யென்னும் பொருளுண்மை பெறப்படும். ஈண்டு இனிமையாவது யாழிசைக் கொப்ப இயற்கை யோசை யுடைமையாம்.

இனி மொழிநூலுடையார் வருமாறு கூறுப; "தமிழில் வல்லோசையும், மெல்லோசையும், இடைப்பட்ட வோசையுஞ் சிறந்திருத்தலின் அம்மூவினத்தாற் றமிழாயிற்றென்க. (த-வல்லினம்; ம்-மெல்லினம்; ழ்-இடையினம்.) முதல் வல்லினமும், பின் மெல்லினமும், அதன்பின் இடையினமும் உண்டானமையின் அம்முறைமையும் அமையத் தமிழ் ஆயிற்றென்க. ......தமிழென்பது மூன்றெழுத்தால் விளங்குதலின், உலக மூன்று, சுடர் மூன்று, நிறம் மூன்று, தொழில் மூன்று, தமிழ் மூன்று, நூல் மூன்று, கால மூன்று முதலியன வெலலாங் கொள்க."

விநோதமே! தமிழ்ப் பெயர் அமைத்தோர் மொழி யுறழ்வில் இனப் பாகு பாடு படுதல் இயல்பு. ஆனால், திரியங்கம் அமைத்துக் காட்டுவது அசம்பாவிதமெனவே கோடல் வேண்டும். (தொடரும்.)

து. தீனதயாளு.

---

## தாயுமானவர் அடைந்த காலம்.

துன்மதி௵ சித்திரை௴ வெளியான "ஆனந்த போதினியின்" 379-வது பக்கத்தில் தாயுமான சுவாமிகளின் கால நிர்ணயத்தைப்பற்றி இராமநாதபுரத்திலுள்ள அவர் சமாதியில் இருக்கும் கல்வெட்டில் குறித்துள்ள விஷயத்தை சந்தாதாரர்களேனும் வேறு யாரேனும் வரைந்தனுப்பும்படி வேண்டிக் கொண்டோம், என்பது நேயர்களறிந்த விஷயமே.

முன்பு தைமாதம் பூரணையோடு விசாக நட்சத்திரம் வந்ததாகக்கூறுவது தவறு என்று ஜோதிடமறிந்தோர் காரணத்தோடு ஆக்ஷேபித்திருந்தனர். அதுவரையில் அது உண்மையே யாயினும் பாட்டு தப்பல்ல வென்றே யேற்படுகிறது. எவ்வாறெனில்:—

பூரணை யென்பதற்கு பௌர்ணமி என்ற ஒரு அர்த்தம்மட்டு மல்லவென்றும், பூர்வபக்ஷ அமரபக்ஷங்களில் வரும் பஞ்சமி, தசமி, பௌர்ணமாவாசி, அமாவாசை இவைகளுக்கெல்லாம் பூரணையென்று சாத்திரங்களில் கூறப்பட்டிருப்பதாகவும், ஆதலின் அமரபக்ஷ தசமி-விசாகநக்ஷத்திரத்திற்கு பூரணை விசாகம் என்று கூறலாமெனவும் நமது சந்தாநேயர் ம-ா-ா-ஸ்ரீ ஆ. ரு. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் (சந்நிதிவீதி - திருக்காட்டுப்பள்ளி) தெரிவித்திருக்கிறார்.

இன்னும் முன்பு தைமாதம் பௌரணையில் விசாகம் வாராதென்று ஆக்ஷேபித்தவர்களில் ஒருவரான நண்பர் ம-ா-ா-ஸ்ரீ கா. செ. தருமலிங்க முதலியார் (குடியாத்தம) அவர்கள், பிறகு தாம நூலில் ஆராய்ச்சி செய்த போது ஜோதிடக்களஞ்சியம் என்ற நூலின் 32-வது பக்கத்தில் மேற்

‡ சிந்தாமணி—சுரமஞ்சரியாரிலம்பகம் 32.

கண்டவாறே பிரதமை, சஷ்டி, ஏகாதசி, நந்தைதறும்திதி, திரிதிகை, அஷ்டமி, திரயோதசி, சதையத்திதி, பஞ்சமி, தசமி, உ வாபௌர்ணமி இவற்றிற்கெல்லாம் பூர்ணைத்திதி யென்று பெயர்கூறப்பட டிருப்பதைக்கண்டு சந்தேகந் தெளிந்ததாகவும் வரைந்துள்ளார்.

ஆதலில் இங்கு சாமகவியில் பூர்ணைத்திதி என் பதற்கு தசமிதிதி என்று பொருள் கொள்ளவேண்டும். பௌர்ணமியே உ ண்மையெனில் பூசநக்ஷத்திரமாக விருக்கவேண்டும். ஆனால் சுவாமிகளுக் த எங்கும் குருபூசை விசாகத்தில் நடப்பது பிரத்தியக்ஷம்.

இன்னொரு நண்பர் ம-ா-ா-ஸ்ரீ நா. ஜம்புநாதன் அவர்க ள் (சுருட்டு கம்பெனி, பவானி) சித்திரைமாதம் இராமேசுரயாத்திரை சென்று திரும்பி வருகையில் இராமநாதபுரத்தில் தங்கியபோது தாயுமா ர சுவாமிகளின் சமாதியிருக்குமிடம் சென்று பார்த்ததில் - 1661ஞு பிப் ரவரிமீ 9உக்குச் சரியான சுபக்கிருதுஞு தைமீ சோமவாரம் விசாகந க்ஷத்திரத்தில் சுவாமிகள் பரிபூரண மடைந்ததாக வரையப்பட்டிருக்கிற ன்று தெரிவித்திருக்கிறார். ஆலயத்தின் தென்பாரிச மிருக்கும் சுவரிலும் அவ்வாறே வரையப்பட் டிருந்ததாம். பிப்ரவரிமீ தைமீ காலமேயாகும். இவ்விஷயங்களால், சாலிவாகன சகாப்தம் 1584, கலி 4763-சுபக்கிருதுஞு தைமீ சோமவாரம், அமரபக்ஷம், தசமி, விசாக நக்ஷத்திரம், கூடியதினமே (1661ஞு பிப்ரவரிமீ 9உ) தாயுமான சுவாமிகள் பரிபூரணமடைந்த காலம் என்று ஐயமறக் கொள்ளலாகும்.

மேற்கண்ட விஷயங்களை யறிவிக்க சிரமமெடுத்துக் கொண்ட பர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டுகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## இளைஞர் கல்வி.

(1) கல்வி அபிவிர்த்தியில் நவீனமாக அடிப்படையான சில தத்வங்கள மென்மேலும் நாகரீகம் அடைந்த தேசங்களில் பின் பற்றப் பட்டு வருகின்றன. எடுத்துக்கொண்ட விஷயத்திற் குறியவை அவைகளில் மூன்றெனவே கூறலாம்.

(2) துன்ப முறுத்துவதே அறியாத இளைஞனிடத்தில் எல்லாம் ஜனங்களுக்கும் விசேஷ அபிமானமும், அன்பு மிகுந்த அனுதாபமும் உதித்து வளர்ந்தோங்கி வருகிறது. இதற்கிணங்க, அமெரிக்கா தேசத்து கல்வி நிபுணராகிய ஸ்டான்லிஹால் என்ற பெரியோனும் "இளம்பிராயம்" என்ற அறிய விஷயத்தில் விசேஷ ஊக்கம் காண்பித்திருக்கிறார். நம் முதியோர் வாக்கிற்கிணங்க, குழந்தையைத் தெய்வமெனவே கொண்டாட வேண்டியதற்கு சாஸ்திர ஆராய்ச்சி பூர்வமாகவும் தக்க சான்றுகள் கூறப் பட்டு வருகின்றன.

(3) மனிதன் மிருகத்தினது இனமோ எனச் சந்தேகிப்பதற்கு அனுகுணமாக தண்டப் பிரயோகந்தான் தக்க உபாயம் என்ற கொள்கை மாறுபாடு அடைந்தாய் விட்டது. அதற்குப் பதிலாக ஸ்வாதந்தர்யமு



ஸ்வய நிர்ணயமுமே தகுந்த மார்க்கமென்று பின்பற்றப்பட்டு வருகின்றது. இதனாற்றான் ஆரம்பப் பாடசாலைகளிலும் கொடிய தண்டனைகள் எடுபட்டுப் போய்விட்டன. மேலும் குரு சிஷ்ய சம்பந்தம் பயத்தினால் மாத்திரம் நிலைநிற்கற் பாலதில்லை என்பதும், அன்பே அதற்கு ஆதாரம் என்ற நம்பிக்கையும் மென்மேலும் ஊர்ச்சித மாய்க்கொண்டு வருகின்றன.

(4) இந்நூற்றாண்டில் கல்வியின் அவசியத்தைப் பற்றி எழுதுவது மிகையாகும். எம்மதத்தினராயினும் சரி, எத்தேசத்தினராயினும் சரி, தமது பாலர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டுமென்ற அவசியம் நன்றாய் அறிந்தவர்களே. இதற்கு அனுசாரணையாக ஆரம்பக் கல்வி கட்டாயமாயும், இலவசமாயும் எல்லாத் தேசங்களிலும் ஏற்பாடாய் வருகிறது. இவ்வுலகின் போக்கை உற்றுநோக்கு மிடத்து கல்வி புகட்டப்படாத பாலன் இனி இருப்பது அரிது என்பது வெளிப்படையாய்த் தெரிகிறது.

(5) இது நிற்க, இளைஞர் கல்வி எவ்வழிகளில் சீர்திருத்தம் அடையக்கூடும் என்பதை மட்டில் சற்று ஆராய்வோம். நவீன மார்க்கத்திலோ வஸ்துவின் மூலமாகவே படிப்பு சொல்லப்படவேண்டும் என்ற கொள்கை பின்பற்றப் பட்டுவருகிறது. ஏனெனில், இளம் பிள்ளைகளது மூளைக்கு அதிகமான சிரமம் கொடுப்பது, நன்றாய்ப் பருவமடைந்து புத்தி விசாலமாகிறதற்கு இடையூறென்று சாஸ்திர ஆராய்ச்சியால் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. ஆனால் எவ்வளவு நேரம் இம்மாதிரி போதனாமுறை அனுசரித்து வந்தபோதிலும், கடைசியாக அந்தப் பாடத்தின் முக்கிய விஷயத்தை மனனம் செய்தாக வேண்டியே இருக்கிறது. நமது முன்னோர்களோ விசேஷ குருபக்தியுடன் மனன சக்தியை விர்த்தி பண்ணி கைவல்லிய பதவி யடையும் வரையில் சித்தி யடைந்து வந்தவர்கள். 1 + 1 = 2 என்பதைப் போதிப்பதற்கு 30 நிமிஷ நேரமெடுத்து நேர் வழியில் (Direct Method) புகட்டுவதுதான் சிரேஷ்டமான வழி யென்றும், இதற்கு முன்னமே இருந்த முறை தப்பென்றும் சொல்வது பொருந்தாது. அரிய நுட்பமான விஷயங்களில் மட்டும் உபகரணங்களால் போதித்துப் புகட்ட வேண்டும் என்பதுதான் நிலை நிற்கக் கூடிய கொள்கை.

(6) கல்வி இலாகாவிலும் இப்பாலர் கல்வியில் விசேஷ சிரத்தை செலுத்தப்பட்டு வருவதால், இனிப் பெற்றோர் தமது கடமையையே சரிவரச் செய்ய வேண்டும். சில கிராமங்களில் குடியானவர்கள் தங்கள் சிறுவர்களை சம்பாதிப்பதில் ஆத்திரப்பட்டு, கூலி வேலைக்காக 7, 8 வயதிலேயே அனுப்புகிறார்கள். இப்படிச் செய்வதினால் விவசாயத்தில் அபிவிர்த்தி யடைவதற்கு வேண்டிய ஆரம்பக் கல்விகூட் குந்தக மடைகிறது. இது விசனிக்கத்தக்க விஷயங்களில் ஒன்று.

(7) கல்வியில் மாத்திரம் சிரத்தை எடுத்து (சித்திர மெழுதுவோன் சுவரைக் கவனிப்பது போல்) தேகசுகத்தைக் கவனிக்காமலிருப்பது சரியா? இதை யொட்டியே மேனாடுகளில்விசேஷமாகவும், நம் இந்தியாவில் சுமார் மூன்று வருஷங்களாகவும், கல்லூரி மாணவர்களுக்கு வைத்திய பரிசீலனம் அவசியம் என்று அங்கீகாரமாகி விட்டது. நமது ஆகாரத்தின் புஷ்டிக் குறைவினாலோ, நம் இளைஞரது பலக் குறைவாலோ,

வெகு சீக்கிரமே 3, 9 பிராயங்களில் வெளியூர்களிலுள்ள சாப்பாட்டு விடுதிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதால் விளைகிற தேக சௌக்கியக் குறைவாலோ, பெற்றோரை விட்டுப் பிரிவதால் மாணவர்களுக்கு நன்னடக்கையில் நேருகிற சிரத்தைக் குறைவினாலோ, பிள்ளைகள் மண்ணெண்ணெய் விளக்குகளில் காலந் தப்பி வாசித்தலால் சம்பவிக்கிற பல ஹீனத்தாலோ, நமது சர்வ கலாசாலை அங்கத்தார் ஒரே ஒரு வருஷாந்திரப் பரீக்ஷை ஏற்படுத்தியதினின்று இறுதி ஒருமாதம் மாத்திரம் மாணாக்கர்கள் அதிகமாயும் ஒழுங்கீனமாயும் படிக்கிற காரணத்தாலோ, அல்லது நமது நவீனக் கல்வியிலுள்ள கடவுள் விஷயக் குறைவினாலோ, இவற்றில் சிலவாலோ, கடைசியில் வைத்தியர்களது தேவை விர்த்தியாய்க் கொண்டே வருகிறது. பல காரணங்களால் விளையக்கூடிய ஒரு தீங்கிற்கு பல முறைகளாய் உபாயம் தேடவேண்டிய நியாயத்தை ஒட்டி, பெற்றோர் முயற்சியாலும், தேர்ச்சி யடைந்த வைத்தியர்களாலும், அவசியமான வைத்திய துண்டுப் பிரசுரங்களாலும், நன்மை விளையக்கூடும்.

(8) எவ்வாறு நோக்கினும் "இளமையிற் கல்" என்ற முதியோர் வார்த்தை அங்கீகார மடையவேண்டிய அவசியம் நன்கு புலப்படுகிறது. பொது அபிவிர்த்திக்கும், பரசாம்பி ராஜ்யத்திற்கும், கல்வியினது மேன்மையை அறியாதவரும் இந்நூற்றாண்டில் இருக்க முடியுமா?

K. R. ஜம்பத்ரா சாஸ்திரி.
B. A. (Hons.) M. R. A. S.,
ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர், தர்மபுரி (சேலம்).

---

குறிப்பு:—நமது மாணவர்களின் பலக் குறைவிற்குக் காரணம், கல்வியாளராகிய நமது நண்பர் மேலே 7-வது பத்தியில் கூறிய விஷயங்களில் பெரும்பாலானவைகளும் என்று கூறலாம். இளவயதிலேயே மேல்நாட்டார் தங்கள் மக்களை போர்டிங்கு பாடசாலைகளுக்கு - வெகு தூரத்திலுள்ள இடங்களுக்கும் - அனுப்பி விடுகிறார்கள். அங்கு கொடுக்க வேண்டிய கட்டணத்தை யளித்துவிட்டால், பிள்ளைகளுக்கு உண்டி முதலிய யாவும் அங்கேயே யளிக்கப்படுகின்றன. அங்கு அவர்களுக்கு காலந் தவறாமல் கிரமப்படி உண்டி சிற்றுண்டி யளித்தல், ஸ்நானம் செய்துவைத்தல், தேகப்பயிற்சி செய்வித்தல் முதலிய யாவும் மிக்க சாக்கிரதையாகவும், ஒழுங்காகவும் கவனிக்கப்பட்டு வருகின்றன. இவைகளுக்கென்று மேல்பார்வைக்குப் பிரத்தியேக ஆள் ஏற்படுத்தப்பட் டிருக்கிறான். அவர்களுடைய நடவடிக்கையும் மிக்க ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படுகிறது. உண்டி முதலியவை சுத்தமாகவும் தேகாரோக்கியத்திற்குத் தக்கவையாகவும் இருக்கின்றனவாவென்று கவனிக்கப் படுகின்றன.

நம் நாட்டில் வெளியூர்களிலிருந்து இராஜதானி நகருக்குக் கல்வி கற்க வரும் பிள்ளைகள் தங்கள் பிரியப்படி ஏதோ ஒரு ஹோட்டலில் போஜனம் செய்கிறார்கள். சில பாடசாலைகளில் போஜன சாலைகள் சமீப காலத்தில் ஏற்பாடாகி யிருக்கின்றன ஆயினும் அவை குழந்தைப் பருவத்திலேயே தவழ்ந்துகொண் டிருக்கின்றன. நமது மாணவர்கள் தங்கள் பெற்றோரின் போஷணையை யிழந்துவிட் டிருப்பதால் பலவித அசௌகரியங்களை யனுபவிக்க நேர்கிறது. இதோடு அவர்களுக்கு மேல்பார்வையாவது கண்டிப்போராவது அடியோடில்லை. பாலியவயதில் குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கைக்கொள்ளும் மனோவல்லமை யில்லாததால், அவர்கள் மனப்பிரியப்படி நடக்கத் தொடங்குகிறார்கள். கெட்ட பழக்கங்களில் சுலபமாய் இறங்குகிறார்கள். இச்சென்னையிலுள்ள மாணவரில் பெரும்பாலார் ஸிகரெட் பிடிப்பதும், அடிக்கடி நாடகங்களுக்குச் செல்வதும், அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றுவதும் யாவரும் பிரத்தியட்சத்தில் காணலாம். இவர்கள் வாசிப்பில் கடவுளைப்பற்றிய விஷயமே தடவிப்பார்த்தாலும் கிடையாது. "அடே! காலை மாலை அனுஷ்டானம் செய் - நெற்றியில் என் விபூதி - திருமண் அணியவில்லை? இன்று கிருத்திகை, மாலை ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வருவதுதானே" என்று இவர்களுக்குப் புத்தி கூறுகிறவர்களாவது, தகாத காரியங்களை யிவர்கள் செய்யும் போது கண்டிக்கிறவர்களாவது, "நாம் தீபம்வைத்து நெடுநேரம் வெளியில் திரிந்துவிட்டுச் சென்றால், அப்பா வைவார் என்று அஞ்சி நடக்கவேண்டிய அவசியமாவது, ஒன்றுமே கிடையாது.



பாடசாலையில் உபாத்திமாரோ ஹிந்துக்களாயிருந்தாலும் பாடபுத்தகத்தி லிருக்கிற விஷயம் தவிர, இவர்களுடைய நன்மைக்குரிய வேறு எவ்விஷயத்தைப் பற்றியும் கேட்பதேயில்லை. கடைசியில் இவர்களுக்கு ஈசுர சிந்தனை வெகுதூரமாய் விடுவதோடு, நமது மதவிஷயத்தைப்பற்றிய நாட்டமே யில்லாமற் போகிறது. பிற்காலத்தில் இவர்கள் பாபபுண்ணியம், நீதி யநீதி பாராமல் பணம் சம்பாதிப்பதும், உலகபோகங்களை யனுபவிப்பதுமே தொழிலாகக் கொண்டு, உலகாயதனுக்கு உறவினர்களாகிறார்கள் என்பது அதிசயமுமல்ல, எதிர்பார்க்காத விஷயமுமல்ல. இவர்கள் குடும்பங்களில் நமது மதவுணர்ச்சி யடியோடழியாவண்ணம் பாதுகாப்போர் நமது மாதரசிகளாகிய சகோதரிகளே யாவர். இக்கொடுஞ் சாபம் நம் புண்ணிய பூமியை விட்டொழியும்படி பாரதமாதா எப்போதருள் பாலிப்பாளோ அறியோம். நம் நாட்டாரில் இக்குறையை நீக்கச் செல்வாக்குடைய அறிவாளிகள் இதில் கவனம் செலுத்தாதிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. ஆரம்பக் கல்வியில் இதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய பொறுப்பு அவர்களுடைய தன்றோ! ஆண்டவர் அவர்கள் மனம் திரும்பச் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

---

## இல்லறம்—மறு உலகம்

இந்தப் பேரண்டத்தின் வடகோடி சூரியனுக்கு அதிக சமீபத்திலிருக்கின்றது. ஆதலால் அவ்விடத்தில் தாங்கமுடியாத உஷ்ணமாயிருக்கும். அவ்விடத்தில் சூரியபிரகாசம் வில்வடிவாக அவ்வண்டத்தின் பதினாறில் ஒருபங்கை மூடிக்கொண்டிருக்கும். அவ்விடத்தின் கீழுள்ள அண்டங்களில் எப்போதுந் தீமயமாகவே யிருக்கும். அவற்றையே தீ நரக

மென்று கூறுவது. அங்குசெல்லும் ஜீவாத்மாக்கள் படும் துன்பத்துக்கு அளவேயில்லை. தெற்கே செல்லச் செல்ல உஷ்ணம் சற்றுக் குறைந்திருக்கும். ஆயினும் அவ்விடத்தின் கீழுள்ள சிற்றண்டங்களில் புழுக்கமிகுதியா யிருப்பதால் தேள், நண்டுவாய்க்காலி, சரமண்டலி முதலிய துஷ்ட ஜந்துக்களும், அவ்வண்டங்களுக்குரிய வேறு பலவிஷ ஜந்துக்களும் ஜனிக்கும். தென்கோடியில் பதினாலாவது பாகத்தில் உஷ்ணம் அதிகக்குறைவாக இருப்பதனால் அவ்விடத்தில் தேவர்களும் அசுரர்களும் வசிப்பார்கள். இவர்களே எமதூதர்கள் என்னப்படுவார்கள். இவ்விடத்தில் எமதர்மராஜ னுலகமும், பிதிர்லோகமு மிருக்கின்றன. இவ்வுலகம் தெய்வத்தன்மை யுள்ளதாதலால் புண்ணிய லோகத்தைப்போலவே கருதப்படும். சில புண்ணியாத்மாக்கள் தங்கள் புண்ணிய வசத்தால் அவ்விடம் சென்று சுகமனுபவிப்பார்கள்.

"எமனுலகத்தில் ஒரு சபையுள்ளது. விசுவகர்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டது. நூறுயோஜனை யகல நீளமுள்ளது. ஒளிமயமானது. நினைத்த உருவமெடுக்கக் கூடியது. சீதோஷ்ணங்கள் சமமாயிருப்பது. அவ்விடத்தில் பசி, தாகம், மூப்பு, துக்கம், வெறுப்பு, களைப்பு முதலியன இடையா. தேவர்களும் மனிதர்களும் அனுபவிக்கத் தக்க போகங்களெல்லாம் அவ்விடத்தி லிருக்கின்றன. தெவிட்டாத பட்சணம், போஜனம், லேகியங்களு முண்டு. நினைத்தவற்றைக் கொடுக்கும் விருட்சங்கள், தண்ணீர், வெந்நீர் எல்லாமும் அங்கே யிருக்கின்றன. புண்ணியம் செய்த இராஜரிஷிகளும், பிரமரிஷிகளும் எமனைச் சேவித்துக்கொண் டங்கே வசிக்கிறார்கள். யயாதி, நகுஷன், பூரு, மாந்தாதா, ஸோமகன், நிருகன், திரஸதஸ்யு, கிருதவீரியன், சுருதசிருவன், அரிஷ்டநேமி, சித்ரன், கிருதவேகன், கிருதி, நிமி, பிரதர்த்தனன், சிபி, மத்ஸியன், பிருகத்ரதன், கார்த்தவீரியார்ஜுனன், பரதன், சாதன், சுரீதன், அநலன், திவோதாஸன், அம்பரீஷன், பகீரதன், வசுமனன், இந்திரதுய்மன், கூபன், திலீபன், உசீநரன், சர்யாதி, சரபன், வேனன், இன்னம் அநேக இராஜரிஷிகளும், அங்கே வசிக்கின்றார்கள். அகஸ்தியர், மதங்கர், காமர், மிருத்தியு, பேனபர்கள், ஊஷ்மபர்கள், ஸுதாவந்தர்கள், பர்ஹிஷதர்கள், முதலான பிதிர்த்தேவர்களும், எமனைச் சேவித்துக்கொண்டு அங்கே வசிக்கின்றார்கள். தக்ஷிணாயனத்தில் மரண மடைந்தவர்கள், நியமந் தவறாதவர்களும், பொய் சொல்லாதவர்களும், சாந்தருமான சந்நியாசிகளும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும் அங்கேபோய் வருகிறார்கள். எப்போதும் அவ்விடத்தில் ஆட்டமும் பாட்டும் சிரிப்பும் விளையாட்டு மாகவேயிருக்கும். நூறு லட்சம் பேர்கள் எமனையு பாசித்துக்கொண்டு அவ்விடத்தில் வசிக்கிறார்கள். எமதர்மராஜன் பாசமும் சூலமுந் தரித்துக்கொண்டு பிரசன்னமான முகத்துடன் புண்ணியர்த்மாக்களை யுபசரித்துக் கொண்டும், கோரமான பயங்கரசொரூபத்துடன் பாபிகளைத் தண்டித்துக் கொண்டும் தமது அரசை நடத்திக்கொண்டு வருகிறார்" என்று பாரதம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

(தொடரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

---



## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

மாணவர்களாகிய நண்பர்களே! பிற்காலத்தில் நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுடையதாகவே யிருக்கிறது. பாரதமாதா உங்கள் தேசப்பற்றையும், மதப் பற்றையும், தேசபக்தியையும், வைராக்கியம் பொருந்திய ஊக்கத்தையுமே மிக்க ஆவலோடு எதிர்பார்க்கிறாள்.

ஆதலின் நமது "ஆனந்தனுடைய" ஏழாவதாண்டின் ஆரம்பமாகிய இம்மதியில், இக்காலத்திற்குத் தக்கவையும் அவசிய மானவைகளுமாகிய சில போதனைகளை யுங்களுக்குப் புகட்ட ஆவல் கொண்டோம். நாம்கூறுபவை ஆன்றோர் கருத்துகளும், உங்கள் முன்னேற்றத்திற்கும், நம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் அவசியமானவைகளுமே யாதலின், "இவனென்ன நம் போன்ற சிடன் தானே" என்று கருதி இப்போதனைகளை யலட்சியம் செய்யாமல் கருத்தில் வைத்து அவற்றின்படி நடக்க முயல்வீர்களென்று பூரணமாக நம்புகிறோம். மாணவ நண்பர்களே!

1. தினந்தோறும் காலையில் துயிலெழும் போதும், இரவு நித்திரைக்கு முன்னும் கடவுளை நமது ஆசாரப்படித் தொழ மறவாதீர்கள்.

2. தாய் தந்தையரிடத்தும் ஆசானிடத்தும் மனப்பூர்வமான பக்தி விசுவாசம் வையுங்கள்.

3. கல்விகற்பது வயிறு வளர்க்கமட்டுமே என்று கருதாதீர்கள். அறிவை விசாலிக்கச் செய்து பரம்பொருளை யறிவதே கல்வியாலடையத் தக்க பயனாகும்.

4. தாய்ப்பாஷையில் பிரத்தியேக அன்பும் சிரத்தையும் வையுங்கள். தாய்ப்பாஷையிலுள்ள நம் முன்னோர் நூல்களை எவ்வாற்றானும் கற்க முயலுங்கள். வேறு எக்கல்வியைக் கற்றாலும் கற்காவிடினும் இக்கல்வியைக் கட்டாயக் கடமையாகக் கருதுங்கள்.

நண்பர்களே! இப்போது ஆங்கில பாஷையில் நீங்கள் கற்கும் கல்வி துரைத்தனத்தாருக்குச் சாதகமாகிய அவர்கள் சேவகத்தைச் செய்யும் சக்தியை மட்டுமே யுங்களுக் குண்டாக்கும். நமக்கு உயிரினும் சிறந்த தெய்வபக்தியையாவது, மெய்ஞ்ஞானத்தையாவது, தேசபக்தி, மதப் பற்று இவற்றையாவது ஒருபோதும் அளிக்காது. இவை யின்றேல் நாம் மிருகங்கள், அல்லது நடைப் பிணங்களுக்கே சமமாவோம். ஆகையால் தாய்ப் பாஷையிலும் நம் முன்னோர் நூல்களிலும் பிரத்தியேக அன்பு வைக்க மறவாதீர்கள்.

5. நவீன நாகரீக மயக்கில் சிக்காதிருக்க விசேஷ எச்சரிக்கை யெடுத்துக் கொள்ளுங்கள். கண்மூடித் தனமாக அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றுவது ஒருபோதும் சீர்திருத்த மாகுமென்று எண்ணாதீர்கள். வாலிப வயதில் உங்கள் மனம் வெளிப்பகட்டில் மயங்கிவிடுவது சுபாவம். சற்று சிந்தித்துப் பார்ப்பீர்களாயின் அதனாலுண்டாகும் தீமைகள் எப்படியும் விளங்கிவிடும். கண்மூடித்தனமாக இத்தகைய நாகரீக முறைகளைப் பின்பற்றுவதால் காண்போர் ஏளனம் செய்து நகைக்கக்கூடிய வேலைகளையெல்லாம்நம்மவர் செய்கின்றனர். ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம்:

கையொப்பம் வைக்கும்போது, ஒன்று முழுதும் தாய்ப்பாஷையிலாவது எழுதவேண்டும், அல்லது, ஆங்கிலத்தில் எழுத அசிவயம் நேர்ந்தால் முழுமையும் அப் பாஷையிலாவது எழுதிவிடவேண்டும். கி. மு. வரதராஜு என்ற பெயரை ஆங்கிலத்தில் வரைவதாயின் K. M. Varadaraju என்று வரையவேண்டும்; அதைவிட்டு K. M. வரதராஜு என்று தலையெழுத்துகளை மட்டும் ஆங்கிலத்தில் எழுதுவதே வெட்கக்கேடான விஷயம்; அந்த இரண்டெழுத்துகளை அன்னியபாஷையில் எழுதுவதுபெரிய கௌரவம் என்று கருதுகிறார்கள்போலும். உலகில் வேறெந்த நாட்டாரும் தங்கள் தாய்ப்பாஷையை யவ்வாறு அவலட்சணப் படுத்துவதில்லையெனின், அப்படி எழுதுவது அகௌரவமென்றே நன்கு விளங்கும். அந்தோ! இன்னும் அதைவிட்டு அதிக மேலான சீர்திருத்தத்தோடு சிலர் எழுதுகிறார்கள். அதாவது. "கே. யம். வரதராஜு" என்று தலையெழுத்துகளைத் தமிழ் எழுத்தால், ஆனால் ஆங்கில எழுத்துகளின் உச்சரிப்பைக் கொடுக்கும் வண்ணம் எழுதுகிறார்கள். அந்தோ! இதுதானா நாகரீக சீர்திருத்தம்? இது மானக்கேடன்றோ? நமது பூரணமான தெய்வத்தன்மை பொருந்திய தாய்ப் பாஷைக்கு இதைவிட நாம் செய்யத்தக்க அகௌரவம் வேறென்ன விருக்கிறது?

நண்பர்களே! இத்தகைய அநாசார வழிகளைப் பின் பற்றாதீர்கள். அப்படிச் செய்வோரைக் கண்டித்து நல்லறி வூட்டுங்கள். இது தமிழ்த் தெய்வத்திற்கு நீங்கள் செய்யும் பெரும் புண்ணியத் தொண்டாகும். உடை யணிதல் முதலிய விஷயங்களில் நாம் நமது முன்னோர் ஆசாரத்தை விட்டு அந்நிய ஆசாரத்தைப் பின்பற்றுவது பின்னால் நமக்கும், நம் தாய் நாட்டிற்கும் பெருந் தீங்கை விளைவிக்குமென்று சத்தியமாக நம்புங்கள். ஒரு நாளைக்கு நாம் உடுக்கும் சாதாரண உடைக்கே மேல்நாடுகளை யெதிர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய காலம் வந்துவிடும். இப்போது கண் மூடித்தனமாக நடந்துகொண்டு அப்போது துக்கப்படுவதில் பயனென்னை? அப்போது யாவரும் நம்மைக் கண்டு நகைக்க நேரிடும். ஒரு காலத்தில் இங்கிலாந்தில் அந்நியநாட்டுத் துணிகளைக் கட்டலாகாது என்ற கட்டளையை மீறி நடந்த ஒரு மாது, நம் நாட்டு டெக்கா மஸ்லினால் கவுன் தைத்து அணிந்ததற்காக லண்டன் நகர சங்கத்தாரால் 20 பவுன் அபராதம் விதிக்கப் பெற்றாள். இத்தகைய தேசாபிமானத்தில் நாம் மேல்நாட்டாரைப் பின்பற்றினாலன்றோ நாம் ஆண்பிள்ளைகள், அறிவாளிகள் எனப் படுவோம், நண்பர்களே! இம்மொழிகளை யலட்சியம் செய்யாதீர்கள். உங்களில் சூக்கும அறிவுடையோர்க்கு நாம் மொழிவதன் உண்மை யிப்போதே புலப்படலாகும். ஏனையோர்க்கும் உலக விஷயங்களின் உணர்ச்சி கொஞ்சம் உண்டாகும்போது இவ்வுண்மை புலப்படாமற் போகாது.

அன்பார்ந்த நமது நண்பர்களே! மேற்கூறிய விஷயங்களை கவனத்தோடு பன்முறை வாசித்து மனதில் வையுங்கள். ஏககாலத்தில் அதிகமாகக் கூறின் உங்கள் மனதிற் றங்குவது கஷ்டமெனக் கருதி இச்சமயம் இம்மட்டோடு நிறுத்துகிறோம். கருணையே யுருவாகிய பரம்பொருள் உங்களுக்கு நல்லாசி புரியப் பிரார்த்திக்கிறோம். (தொடரும்)

சீடன்.



## மாதர் நெறிகள்.

நம் தாய்நாட்டுச் சகோதரிகளே! நமது "ஆனந்தனுடைய" ஏழாவது வருட ஆரம்பத்தில் உங்கள் நன்மையையும் தாய் நாட்டின் க்ஷேமத்தையும் கருதிச் சில முக்கியமான விஷயங்களை யுங்களுக்குக் கூற விரும்புகிறோம். அவற்றைக் கருத்தில் வைத்து நடந்து கொள்வீர்களென்று நம்புகிறோம்.

கற்பரசிகளின் வழிவந்த உங்களுக்குக் கணவனையே கடவுளாகக் கருதும் குணம் இயற்கையிலேயே யமைந்துள்ளதாதலின், அதைப்பற்றி உங்களுக்கு வற்புறுத்திக் கூறவேண்டிய அவசியமின்றாம். ஆனால் இக்காலத்தில் புது நாகரீகமென்ற பேய் உங்களை மயக்கத் தொடங்கி யிருப்பதால் சில விஷயங்களைப்பற்றி யுங்களுக்குக் கூறவேண்டிய தவசியமாயிருக்கிறது.

சகோதரிகளே! தயவுவைத்து கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனமாய் வாசித்து மனதில் வைத்து நடவுங்கள்:—

1. நமது முன்னோரது ஆசாரங்களை யலட்சியம் செய்யாதீர்கள். கண்மூடித்தனமாக அநாவசியமாய் அன்னியர் ஆசாரங்களைப் பின் பற்றாதீர்கள்.

2. காலையில் கணவனுக்குமுன் துயிலெழுந்து தேக சுத்தம் செய்துகொண்டு நெற்றியில் குங்குமமோ, விபூதியோ, திருமண்ணோ, அவரவர் ஆசாரப்படி ஒன்றை யணிந்து கடவுளைக் கொஞ்ச நேரமாவது துதித்துவிட்டுப் பிறகு வீட்டு வேலையைக் கவனியுங்கள். மாலை தீபம் ஏற்றி அதைத் துதித்து வணங்குங்கள்.

3. மஞ்சளையும் குங்குமத்தையும் அலட்சியமாய் எண்ணினீர்களோ இலட்சுமி யுங்களை விட்டு விலகுவாள் என்பது நிச்சயம். அவற்றை விட்டு விட்டு நாகரீகம் என்று வீண் மயக்கங்கொண்டு அன்னியரைப் போல் வேடமணிவது அகௌரவமே யன்றி ஒரு போதும் நாகரீகமுமாகாது, அது நன்மையையும் அளிக்காது.

4. நமது புண்ணிய நாடாகிய பாரத பூமியில் மதத்தையும், மதாசாரத்தையும் காப்பாற்றும் வீரர்கள் மாதரசிகளாகிய நீங்களேயென்று கீர்த்தி பெற்றிருக்கிறீர்கள். சகோதரிகளே! உலகில் எந்த நாட்டு மாதர்க்கும் இக்கௌரவப் பட்டம் கிடையாது. அந்தோ! இப்போது வீண் மயக்கங்கொண்டு அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றி அக்கீர்த்தியை யிழந்து விடாதீர்கள்.

5. உங்கள் மக்களை அன்னிய மதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக் கனுப்பாதீர்கள். அன்னிய ஆசாரங்களில் அவர்களைப் பழக்காதீர்கள். அப்படிச் செய்தால் அவர்களுக்குப் பெருந்தீங்கிழைத்தவர்களாவீர்கள். அது மட்டுமல்ல; நமது முன்னோரின் கோபத்திற் காளாவீர்கள்.

அன்னிய ஆசாரப்படி நம்மக்களுக்கு உடை முதலிய வணிவித்து அலங்காரம் செய்வதை யடியோடு நீக்குங்கள். அது அழகென்று கருதுவது நல்ல ஜாதி நாகம் கண்ணுக்கு அழகாகத் தோன்றுவதைக்கண்டு அதற்கு முத்தமளிப்பது போன்றதே யாகும். அது ஒருபோதும் அழகாகாது,

சிறுவர்கள்தானே! பிறகு வயதுவந்தால் சரியாய் நடந்து கொள்வார்கள் என்று இப்போது அலட்சியம் செய்யாதீர்கள். "தொட்டிற் பழக்கம் சுடுகாட்டு மட்டும்" என்பதுபோல் இப்போது நாம் எந்த வழியில் அவர்களைப் பழக்குகிறோமோ அவ்வழியே அவர்கள் மனதில் வேரூன்றிவிடும்.

6. உங்கள் மக்களுக்கு வீட்டில் நமதுமதம், ஆசாரங்கள், இவற்றைப் பற்றி போதியுங்கள். தினம் கடவுள் பூசை செய்யும்படி பழக்குங்கள். வெளிப் பழக்கத்தால் அவர்கள் அன்னிய ஆசாரத்தில் பிரவேசித்தால் உடனே கண்டித்து அதை விட்டுவிடும்படி செய்யுங்கள். கேவலம் வயிற்றுப் படிப்பை யவர்களுக்குக் கற்பித்துக் கொடுப்பதாலேயே அவர்களுக்கு பெரிய நன்மை செய்து விட்டதாகக் கருதிவிடாதீர்கள். மதாசாரங்களில் நம்மக்கள் சீர்கேடுற்றால் பிறகு ஒருபோதும் க்ஷேமப்பட மாட்டார்கள்.

அன்னிய ஆசாரமாய் மேல்வேட மணிவதில் என்ன கெடுதி வந்துவிடும் என்று கருதாதீர்கள். "தீயாரைக் காண்பதுவுந் தீதே" என்று வன் கூறப்பட்டது. வெளிவேடமாகிய ஆசாரம் பிறகு மனதிலும் படியும்.

சகோதரன் (தொடரும்.)

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(துன்மதி௵ ஆனி௴ சஞ்சிகையின் 474-ம் பக்கத்தொடர்ச்சி)

அம்பலவாணன் சற்றும் அஞ்சாது கயற்றை யெடுத்துக் கொண்டு அம்மரத்தின்மேல் ஏறி அறையை நோக்கிச் சாய்ந்து செல்லும் அக்கிளையின் நுனிக்குச் சென்றான். அக்கன்னிகை அங்கு ஆயத்தமாய் நின்றுகொண்டு இவன் செய்யும் முயற்சிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். சாளரத்திற்கும் இப்போதிவன் இருக்குமிடத்திற்கும் சுமார் ஐந்து அடி தூரமே யிருக்கும்.

அக்கன்னிகை யிவனைக் கண்டதே குயில் போன்ற குரலோடு, "பெருந்தன்மையுள்ள அய்யா! என் உயிருள்ள மட்டும் என் நன்றியை மறக்க மாட்டேன். உமக்கும் பெரும் புண்ணியம். ஏனெனில், தாங்கள் இப்போது செய்யும் உதவி ஒரு பெரிய அக்கிரமத்தைத் தடுத்து தாய் தந்தையில்லாத ஒரு அனாதைப் பெண்ணை பெரிய ஆபத்திலிருந்து மீட்டதாகும்" என்றாள்.

அம்பலவாணன்.—"அதைப்பற்றி ஒன்றுமே கூறவேண்டாம். அக்கிரமத்தைத் தடுக்க வேண்டியதும், ஆபத்தில் சிக்கியிருப்போரைக் காப்பாற்ற வேண்டியதும் எல்லா மனிதர்களுக்கும் கடமையாகும் என்று கூறுவதற்குள் அக்கன்னிகை "அய்யா என்னைக் கொண்டுபோய் நவீன புரியிலிருக்கும் என் இரட்சகர்களிடம் விட்டு விட்டால் தங்களுக்கு நல்ல பரிசளிக்காது போகமாட்டார்கள்..." என்றாள்.

அம்பலவாணன்—"அதைப்பற்றி யொன்றும் கூறவேண்டாம்; நான் எவ்விதப் பிரதிபலனையும் கருதி யுனக்கு உதவிசெய்ய வரவில்லை. இந்தச் சாமிநாதன் என்ன கருத்தோடு உன்னைக் களவாடி இங்கு கொண்டுவந்து வைத்திருக்கிறான் என்பதை யறியவே ஆவலுள்ளவனாயிருக்கிறேன்" என்றான்.



அக்கன்னிகை.—எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் இந்த வீட்டுக்காரன் இதில் எம்மாதிரியோ சம்பந்தப்பட்டிருக்கிறானென்று மட்டும் தெரிகிறது. ஆனால் என்னைக் களவாடிவந்தவன் வேறொரு தடித்த மனிதன். அவன்பெயர் இரங்கநாதன். அவன் என் தந்தையென்றான். என் தந்தையும் தாயும இருவரும் இறந்துபோனார்கள். எனக்கு நன்றாய்க் கவனமிருக்கிறது.

அம்ப.—உன் தந்தையென்று கூறுபவன் உன்னைக் களவாடிவருவானேன்?

கன்னி.—நான் அவன்கூட வசிக்கமாட்டேன் என்பதனால்.

அம்ப.—அப்படித் தந்தையா யிருப்பது உண்மையாயின், உன்னைக் களவாடி இங்கு இத்துஷ்டன் வீட்டில் கொண்டுவந்து சிறையில் வைக்க வேண்டியதேன்?

கன்னி.—"எனக்குத் தெரியவில்லை. அம்மனிதன் நேற்று இங்குவந்து இந்த வீட்டுககார மனிதனை நான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினான்" என்றாள்.

இதைக் கேட்டதே என்ன காரணத்தாலோ அம்பலவாணனுடைய மனம் பதைத்துக் கோபம் பொங்கியது. யாவற்றையும் அடக்கிக்கொண்டு, "இந்த வீட்டுக்காரனை மணம்புரிய உனக்குச் சம்மதந்தானோ?" என்றான். அக்கன்னிகை யுடனே சற்றும் தடுமாற்றமாவது யோசனையாவது இல்லாமல், "எனககா? அவனை மணம்புரிய இஷ்டமா? என்ன காரணத்தாலோ அவனும் அந்த இரங்கநாதன் என்பவனும் இருவரும் என் ஜன்மவிரோதிகள் என்று என் மனதிலிருந்து யாரோ கூறிக்கொண்டே யிருப்பதாய்த் தெரிகிறது. அவனை மணம் புரிவதைவிடத் தற்கொலைசெய்து கொள்வேன்" என்றாள்.

அதைக் கேட்டதே அம்பலவாணன் மனம் ஏனோ குளிர்ச்சியடைந்தது. சற்றுநேரம் மௌனமா யிருந்தான். பிறகு அம்மரத்தி லிருந்து கயிற்றைச் சாளரத்தில் எறிந்து சாளரக்கம்பிகளில கட்டச்செய்து, அதன் வழியாய்ச் சென்று அக்கன்னிகையை யழைத்துக்கொண்டு பூமியில்வந்து இறங்கினான்.

முன்பு ஒருநாள் காற்று மழை யடிக்கும்போது வண்டியில் ஒரு மூட்டை கொண்டுவந்து இறக்கினார்களென்று நாம் கூறியது இன்னதென்று, நேயர்கள் இப்போது அறிந்து கொள்ளலாம். அதாவது அச்சமயம் இரங்கநாதனும் சாமிநாதனும் மூட்டையில் கொண்டுவந்தது என்னவெனில், இக்கன்னிகைக்கு மயக்கமருந்து கொடுத்து பிணமாகச்செய்து (அடியோடு ஸ்மரணை போகச்செய்து) மூட்டையில் கட்டி அங்குகொண்டு வந்தார்கள். ஹோட்டல் காரனாகிய மார்க்கபந்துவை யெப்படியோ யேமாற்றி அக்கன்னிகையைச் களவாடிக்கொண்டு வந்து விட்டார்கள்.

அம்பலவாணன் அப்பெண்ணைத் தூக்கிக்கொண்டு மாடியிலிருந்து பூமியி லிறங்கியதே மாளிகைக்குள் குழப்பம் உண்டாயிற்று. எப்படியோ அக்கன்னிகை தப்பித்துக்கொண்டு போய்விட்டதை யறிந்துகொண்டார்கள். மாளிகையில் உடனே கூச்சல்கள் கிளம்பின, தீபங்கள் ஏற்றப்பட்டன.

அம்பலவாணன் இதையறிந்ததே அப் பெண்ணைக் கரத்தில் பிடித்துக்கொண்டு தன் மனைக்குச் செல்லும் நேர்வழியே சென்று வேலியைத் தாண்டி விட்டான். கன்னிகை மிக்க தைரியத்தோடேயே சென்றாள். பின்னால் ஆட்கள் துறத்திவருகிறார்கள் என்று தெரிந்தது. உடனே அப்பெண்ணுக்குத் தைரியம் கூறிக் கூட்டிக்கொண்டு குறுக்கு வழிகளில் நுழைந்து வேகமாய்ச் சென்றான். பின்னால் தொடர்ந்தவர்களும் விடாமல் தொடர்ந்தே வருகிறார்கள்.

அம்பலவாணன் செடிகள், புதர்கள், வேலிகள் என்று பாராமல் ஒரே துணிகரமாய் அக்கன்னிகையின் கரத்தைப் பிடித்துக்கொண்டு தன் வீட்டை நோக்கிச் சென்றான். அடிக்கடி எதிரிகள் மிக்கசமீபமாய் நெருங்கிவந்து விட்டபோது, மிக்க சாமார்த்தியத்தோடும் தைரியத்தோடும் துணிகரத்தோடும் தன் காரியம் நிறைவேற வேண்டும் என்ற தீர்மானத்தோடு நடந்தான்.

கடைசியில் வீட்டைநெருங்கி விட்டான். எதிரிகளும் கண்ணுக்கெட்டும் தூரத்திலேயே வருகிறார்கள். வீட்டண்டை சென்றதும் முழுபலத்தோடும் கதவைக்காலால் உதைத்துத் திறந்து உள்ளே சென்றதும், ஆயாசத்தோடு கன்னிகையை யங்கிருந்த மஞ்சத்தில் போட்டுவிட்டுத் தானும் தரையில் சாய்ந்துவிட்டான். உடனே சட்டென் றெழுந்துபோய் தெருக்கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு திரும்பிவந்து உட்கார்ந்தான்.

இவர்கள் வந்தமாதிரியையும் அலங் கோலத்தையும் கண்ட அவன் தாய் மிக்க கலவரமும் வியப்பு மடைந்து ஒரு தீபத்தைக் கையில் பிடித்துக்கொண்டு வந்து கலவரத்தோடு, இருவர் முகத்தையும் நோக்கினாள்.

அம்பலவாணன்.—அம்மா இந்தக் குற்றமற்ற கன்னிகையைத் துஷ்டர்கள் களவாடிவந்து சிறைவைத் திருந்தார்கள். நான் மீட்டுவந்தேன்" என்றான்.

இதற்குள் துறத்தி வந்தவர்கள் வந்து கதவைத்தட்ட ஆரம்பித்தார்கள். அம்பலவாணன் தாயார் அக்கன்னிகை முகத்தைக்கண்டதே அவள் கள்ளங்கபடறியாத குற்றமற்ற கன்னிகையென்று அவள் மனதிற் பட்டது. உடனே யக்கன்னிகையை யாலிங்கனம் செய்துகொண்டு "பாயம் குற்றமற்ற குழந்தை, குழந்தாய்! நீயொன்றுக்கும் அஞ்சாதே, அம்பலவாணா! நீ கருணையோடும் தைரியத்தோடும் செய்த இந்த பெருந்தன்மைககாக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். இதனாலென்ன கஷ்டம் வந்தாலும் வரட்டும்" என்றாள்.

அந்தத் துஷ்டர்கள் முரட்டுத் தனமாய்க் கதவை யுடைத்துவிடுவார்கள்போல் தோன்றியது. உடைத்து விட்டே யிருப்பார்கள். ஆனால் அதற்குள் அம்பலவாணன் ஒரு தந்திரமான யோசனை செய்தான். அதாவது தன்னிடமிருந்த ஒரு துப்பாக்கியை யெடுத்துச் சாளரத்தின் வழியாய் மேல்நோக்கிச் சுட்டுவிட்டு.

"இந்நேரத்தில் ஒருவர் வீட்டின்கதவை யுடைத்து உள்ளே பிரவேசிக்க முயல்வது யார்? மறுபடி எவன் கதவைத்தொடுகிறானோ அவன் மறுநிமிடம் சவமாய் விழுந்து விடுவான்" என்று கூவினான்.

(இன்னும் வரும்).

ஆரணி குப்புசாமி முதலியார்.

# பொதுசமாசாரங்கள்

## துருக்கிய நியாய ஸ்தலத்தில் குரங்கு சாட்சிசொன்ன அதிசயம்.

துருக்கியின் தலை நகராகிய கான்ஸ்டாண்டி நோபலில் போன மாதம் "அக்கர்மன் சர்க்கஸ்" என்ற சர்க்கஸ் கம்பெனியார் காட்சி நடத்தி வந்தார்கள். அக்கம்பெனியில் வேலை பார்த்து வந்த இரண்டு பேர் திடீரென்று ஒருநாள் மேற்படி கம்பெனியின் மானேஜரைக் கொலை செய்து விட்டதாக பலமானவதந்தி ஏற்பட்டதாயினும், கொலைக்கு அவர்கள்தான் ஜவாப்தாரி யென்று நிரூபிக்கச் சாட்சிகள் அகப்படவில்லை. கொலை செய்யப்பட்ட கம்பெனி மானேஜர் "ஸ்காம்பு" என்ற ஓர் இந்தியக்குரங்குக்கு தீனிவைத்துக்கொண் டிருந்த சமயத்தில் கொலை நடந்ததாக மட்டும் கோர்ட்டாருக்குத் தெரிந்தது. சந்தேகப்பட்ட (புருஷன் பெண்ஜாதி) இருவரும் அக்குரங்கு இருந்தவிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அது வரையில் அவர்கள் மீது விசேஷ விசுவாசங் காட்டி வந்த அக்குரங்கு இத்தடவை அவர்களைக் கண்டதும் ஆத்திரத்துடன் பாய்ந்து பெருங் கூச்சல் போட்டது. நடுக்கோர்ட்டிலும் இதே மாதிரி அக்குரங்கு எதிரிகளைக் கண்டதும் நடு நடுங்கிப்போய் கோபக் குறிகளோடு நின்றது. இதைக் கவனித்த கோர்ட்டார் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிகை கூசாமல் வாசித்து விட்டனர்.

## காட்டு மிருகங்களின் கூச்சல்.

பல சாஸ்திர நிபுணர்களும் தேசாந்திரிகளும் கீழ்க்கண்ட அபிப்பிராயத்தை ஒரு மனதாய் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்:—"ஒரு சிங்கத்தின் கர்ச்சனை மற்றெந்தப் பிராணியின் சத்தத்தைக் காட்டிலும் அதிக தூரங் கேட்கும். கழுதைப்புலியின் சத்தத்தை இதற்கடுத்தாற்போல் சொல்லலாம்; ஆந்தையும் சிறுத்தையும் நரியும் கழுதைப் புலியைவிடக் கொஞ்சம் சுமாராகவே கூச்சல் போடும்; ஒரு நாய் குலைக்கும்போது கேட்கிற சத்தத்தைவிட ஒரு பூனையின் சத்தம் 10 மடங்கு தூரம் அதிகமாய்க் கேட்கும்; ஒரு குதிரையின் கனைப்பைவிட ஒரு கழுதையின் கூச்சல் 50 மடங்கு அதிக தூரம் கேட்கும்."

## வருமானவரி

ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து வருமான வரி அதிக வரிச் சட்டங்களின்படி கீழ்க் கண்டவாறு விதிக்கும்படி இந்தியா அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

2000-ரூபாய்க்குக் குறைந்த வருமானத்திற்கு வரியில்லை. 2000-முதல் 5000-க்குள்ளாக உள்ள வருமானத்திற்கு, ரூபாய்க்கு 5-பைசா வீதம் வரி விதிக்கப்படும்.

5000-முதல் 10000-வரை ரூபாய்க்கு 6-பைசா வீதம் வரி விதிக்கப்படும்.

10000-முதல் 20000-வரை ரூபாய்க்கு 9-பைசா வீதம் வரி விதிக்கப்படும்.

20000-முதல் 30000-வரை ரூபாய்க்கு ஒரு அணா வீதம் வரி விதிக்கப்படும்.

30000-முதல் 40000-வரை ரூபாய்க்கு 1-அணா 2-பை வீதம் வரி விதிக்கப்படும்.

40000-ரூபாயும் அதற்கு மேற்பட்டும் வரும் ரூபாய்க்கு 1-அணா 4-பை வீதம் வரி விதிக்கப்படும்.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதி௵ ஆவணி௴—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921௵ ஆகஸ்ட்டு௴—செப்டம்பர்௴

| ஆவணி௴ | ஆகஸ்டு௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | செ | திர25-35 | உத்-43-35 | பி43-35சி | சூன்யதிதி கிரேதா யுகா [ந்தம் |
| 2 | 17 | புத | சது31-27 | திரு-50-57 | சி50-57பி | கரிநாள், சூன்யதிதி |
| 3 | 18 | வியா | ○37-30 | அவி-58-20 | சி58-20ம | ஆவணி அவிட்டம் |
| 4 | 19 | வெ | பிர43-15 | சதை-60-0 | சித்-60 | தானியம் வாங்க |
| 5 | 20 | சனி | து48-45 | சதை-5-27 | அ5-27மர | அசூன்யசயன விரதம் |
| 6 | 21 | ஞா | திரி53-35 | பூரட்-12-10 | சி12-10அ | கர்ப்பாதானம், முடிசூட |
| 7 | 22 | திங் | சது57-32 | உத்-18-12 | சித்-60 | பகுலசதுர்த்தி |
| 8 | 23 | செ | பஞ்60-0 | ரேவ-23-24 | சித்-60 | சித்தயோகம் |
| 9 | 24 | புத | பஞ்0-20 | அசு-27-16 | ம27-16சி | கரிநாள் [ங்க |
| 10 | 25 | வியா | சஷ்1-42 | பர-29-36 | சி29-36ம | சீதளா சப்தமி, மாடு வா |
| 11 | 26 | வெ | சப்1-27 அ59-33 | கிரு-30-17 | சி30-17ம | கிருஷ்ண ஜன்மாஷ்டமி |
| 12 | 27 | சனி | நவ55-32 | ரோ-29-11 | சித்-60 | |
| 13 | 28 | ஞா | தச50-5 | மிரு-26-16 | சித்-60 | |
| 14 | 29 | திங் | ஏகா43-9 | திரு-21-49 | சி21-49அ | |
| 15 | 30 | செ | துவா35-0 | புன-16-5 | சித்-60 | |
| 16 | 31 | புத | திர26-9 | பூச-9-24 | சித்-60 | |
| 17 | 1 | வியா | சது16-51 | ஆயி-2-12 மக-54-55 | சி2-12அ | |
| 18 | 2 | வெ | ●7-35 பிர58-59 | பூர-48-4 | சித்-60 | |
| 19 | 3 | சனி | து51-13 | உத்-42-3 | மர-60 | மரணயோகம்; [ஜயந்தி |
| 20 | 4 | ஞா | திரி44-40 | அஸ்-37-14 | சித்-60 | வராகஜயந்தி, பலராம |
| 21 | 5 | திங் | சது39-42 | சித்-34-1 | பிர34-1அ | விநாயக சதுர்த்தி |
| 22 | 6 | செ | பஞ்36-38 | சுவா-32-33 | சி32-33ம | ரிஷிபஞ்சமி |
| 23 | 7 | புத | சஷ்35-32 | விசா-33-11 | சித்-60 | சஷ்டி விரதம் [ய்ய |
| 24 | 8 | வியா | சப்36-23 | அனு-35-40 | சி35-40பி | விவாகம், உபநயனம செ |
| 25 | 9 | வெ | அஷ்39-3 | கேட்-39-50 | ம39-50அ | குளம் கிணறு வெட்ட |
| 26 | 10 | சனி | நவ43-12 | மூல-45-28 | சித்-60 | கிரிஷியாரம்பம் செய்ய |
| 27 | 11 | ஞா | தச48-25 | பூரா-52-5 | சி52-5அ | யாத்திரைக்கு விலக்கப் |
| 28 | 12 | திங் | ஏகா54-12 | உத்-59-19 | ம59-19அ | கரிநாள் [பட்டது |
| 29 | 13 | செ | துவா60-0 | திரு-60-0 | சித்-60 | வாமன ஜயந்தி |
| 30 | 14 | புத | துவா0-20 | திரு-6-42 | சி6-42பிர | கிரகபிரவேசம் செய்ய |
| 31 | 15 | வியா | திர6-20 | அவி-14-3 | சி14-3மர | கன்னியா ரவி நா-59-17 அனந்த சதுர்த்திவிரதம் |

1921௵ செப்டம்பர்௴

| | | | |
|---|---|---|---|
| கே | | | சுக் |
| | 5௳ சி-பு<br>7 ,, க-கு<br>10 ,, க-சு<br>22 ,, க-பு<br>23 ,, சி-செ | | செ பு<br>சு குரு |
| | | | ராகு சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI' POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

27 SEP 1921

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதி௵ ஆவணி௴ கவ { பகுதி 2
1921௵ ஆகஸ்ட்௴ 16௳

## கடவுள் வணக்கம்.

எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவு
 மென்னிதய மெனவாட் டுதே
எதென்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவறவு
 மிற்றைவரை யாதுபெற் றேன்
பந்தமா னதிவிட்ட மெழுகாகி யுள்ளம்
 பதைத்துப் பதைத்துரு கவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
 பலகாலு மூர்ச்சிப் பதோ
சிந்தையா னதுமறிவை யென்னறிவி லறிவான
 தெய்வநீ யன்றியு ளதோ
தேகநிலை யல்லவே யுடைகப்பல் கப்பலாய்த்
 திரையாழி யூடுசெ லுமோ
சொந்தமா யாண்டநீ யறியார்கள் போலவே
 துன்பத்தி லாழ்த்தன் முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
 சோதியே சுகவா ரியே.

பாயப் புலிமுன மான்கன்றைக் காட்டும் படியகில
மாயைப் பெரும்படைக் கேயிலக் காவெனை வைத்தனையோ
நீயெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங்கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே.

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன் றிருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றுடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ ஆவணிமீ ௧௨


## ஆன்மா.

‘ஆன்மா’ என்பது மூன்றே யெழுத்துக்களா லாய ஒரு சிறு வார்த்தையே யாயினும், அதன் பொருள் விவகரிப்பதற்கு அபார மானதாகும். அதைப் பூரணமாக விவகரிக்கப் போதுமான ஆற்றல் நமக்கில்லை யெனினும், ஒருவாறு நமது சிற்றறிவிற் கெட்டியவரை அதைப்பற்றி ஆன்றோர் கூறியுள்ள வற்றைச் சுருக்கமாகக் கூறுவாம்.

ஆன்மா என்பது எவ்வித ரூபமுமில்லாத சூக்குமவஸ்து. அது இத்தகைய தென்று சுட்டிக்காட்டக் கூடாதது. எவரும் அதைக் குறிப்பாய்க் காட்ட முடியாது. அதை யொருவன் அறியவேண்டின் மிகப்பாடுபட்டுக் கடைசியில் தனக்குத் தானே யனுபவித் தறியவேண்டு மன்றி, இன்னொருவர் கூறுவதனாலேயே தெரிந்து கொள்ளத் தக்கதல்ல. அது சூக்குமத்தில் அதிசூக்கும மானதென்றும், அகண்டத்தில் மகா அகண்டமான தென்றும் முதல் நூல் கூறுகிறது. அது, பரமான்மா என்ன இலட்சண முடையதோ அதே இலட்சண முடையது. அதாவது சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று இலட்சணங்களை யுடையது.

சத்து:—என்றால், முக்காலத்து மழியாமல் என்று முள்ளது என்று பொருள். ஆன்மா என்று மழியாத நித்தியப் பொருளென்பதை யெம்மதத்தினரும் மறுக்கார்.

சித்து.—என்றால், “ சுயப்பிரகாச முடையதாய், அன்னிய பிரகாசத்தை விரும்பாமல், தன் பிரகாசத்தால் யாவற்றையும் விளக்கி வைப்பது.” என்று பொருள்.

ஆனந்தம்.—என்றால், “ துக்கமற்றதும் சலிப்பில்லாததுமான திருப்தி யுடையது ” என்று பொருள்.

ஆன்மாவிற்கும் பரமான்மாவிற்கும் அளவினால் பேதமேயன்றிக் குணத்தில் பேதமில்லை. ஆன்மா பரமான்மாவினின்றும் வேறானதல்ல; அதின் ஓர் இலவலேசமாகிய அம்சமேயாகும். பரமான்மாவையன்றி யான்மாவிற்கு வேறு இருப்பிடமில்லை. எல்லா வஸ்துக்களுக்கும் பரமான்மாவே யிருப்பிடம். ஆன்மாவின் வல்லமை அபாரமானது. ஆன்மாவை யறிவதற்கு எல்லாவற்றினும் மிக்கசூக்குமமான அறிவு வேண்டும். அதை யறிவதே ஒருவன் செய்யத்தக்க எல்லாக் காரியங்களினும் மிகக் கஷ்டமானது. ஆனால் அசாத்திய மானதல்ல. ஆன்மாவை யறிவதற்கே ஆத்மஞானம் என்று கூறப்படுகிறது. அதை யறிந்தோரே மகான்கள் என்றும் பிரம்மஞானிக ளென்றும் கூறப்படுகிறார்கள்.

ஆத்மஞான ஆராய்ச்சியிலும் அனுபவத்திலும் நமது முன்னோரே உலகில் முதன்மை யானவர்கள். பாரதபூமியாகிய இப்புண்ணியபூமியே ஞானம் பிறந்த பூமியாகும், இந்த ஆத்மஞானத்தைப் பற்றி நம் முன்னோர் நூல்களில் விரிவாய்க் கூறியிருப்பது போல் உலகில் வேறெந்த நூலிலும் கூறப்படவில்லை.

ஆன்மஞானம் ஒன்றே நம்மைப் பிறப்பிறப்பற்ற நித்தியானந்தப்பதவியில் சேர்க்க வல்லது. ஆன்மாவை யறிவதே பரமான்மாவை யறிவதற்கு வழியாகும். ஆன்மாவை யறியும் மார்க்கம் ஞானகுருவைக்கொண்டு அறிந்து கொள்ளத் தக்கதாகும். அதையனுபவமா யறிந்தோரே யின்னொருவர்க்கு வழிக்காட்டக் கூடியவர்கள். இத்தகைய அதிசயப் பொருளாகிய ஆன்மா எங்கிருக்கிறது ?

சிலர் “மனிதனில் மட்டுமே ஆன்மா இருக்கிறது; மற்ற மிருக பட்சி ஊர்வன நீர்வாழ்வன முதலிய இவற்றில் கூட ஆன்மா இல்லை ” எனக் கருதியிருக்கின்றனர். அந்தோ ! இவ்வாறு கருதுவது ஆன்ம லட்சணமே யறியாத் தன்மையாகும் என்று எளிதில் உணரக்கிடக்கிறது. எவ்வாறெனின்,

இன்னார், பகுத்தறி வென்பதே ஆன்மாவெனத் தடுமாற்ற முறுகின்றனர். ஆழ்ந்து சிந்திக்கின், மிருக பட்சியாதிகளுக்கும் அவ்வவற்றிற்கு அவசியமான பகுத்தறிவு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது ‘என்றுணரலாகும். அதை நாம் இயற்கையறிவு என்கி

றோம். சிலர் அவற்றிற்குக் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்று தெரியாதாகையால், அவற்றிற்கு ஆன்மா இல்லை யென்று கருதுகின்றனர், 'அவற்றிற்குக் கடவுள் ஒருவர் உளர் என்பது தெரியாது' என்பது நமது உத்தேசமே யன்றி, எப்படி நிச்சயமாகக் கூறக்கூடும்? அவற்றின் பாஷை நமக்குத் தெரியாது. அப்படியே யிருந்தாலும், மனிதரில் எத்தனையோ பேர் கடவுளின் இருப்பை யுணராதவர்களாகவும், கடவுள் என்ற ஒன்று இல்லவே யில்லை யென்று கருதுகிறவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் ஆன்மா இல்லை யென்று யார் கூறுவார்கள்?

பகுத்தறிதல் என்றால் பிரித்தறிதல், அதாவது இது நல்லது இது கெட்டதென உணர்தல் என்பதே பொருள். ஒரு ஆடு, தான் ஒருபோதுங் காணாதிருந்தாலும், புலியைக் கண்டதே அது தன்னைக் கொன்றுவிடுமென் றுணர்ந்து அலறி யோடுகிறது. ஆனால் ஒரு குழந்தையோ, புலி அல்லது விட நாகம் தன் அருகில் வந்தால் அது தன்னைக் கொல்லும் என்பதை யறியாமல், அதைத் தாவிப் பிடிக்க முயலும். இதனால் குழந்தைகளுக்கு ஆன்மா இல்லை யெனலாமோ?

மனிதன் நித்திரை செய்யும்போது உஸ்வாச நிஸ்வாசத்தோடு மட்டும் இருக்கிறானே யன்றி, எவ்வித அறிவு மில்லாதவனா யிருக்கிறான். அதனால் அவனுக்கு ஆன்மா இல்லை யெனலாமோ? இன்னும் மனிதன் மூர்ச்சை யடைந்திருக்கையில் உஸ்வாச நிஸ்வாசங் கூட இன்றிச் சவம்போல் இருக்கிறான். அவனுக்கு ஆன்மா இல்லையோ?

இவர்களுக்கெல்லாம் ஆன்மா இருக்கவே யிருக்கிறது. ஆனால் அது பலவித நிலைகளிலிருக்கிறது. சிலவற்றில் நாம் நித்திரையி லிருப்பது போன்ற நிலையில், எவ்வித உணர்ச்சியுமின்றி யிருக்கிறது. சிலவற்றில் பரிச வுணர்ச்சியோடுமட்டு மிருக்கிறது. சிலவற்றில் பரிசம், சத்தம் ஆகிய இரண்டு உணர்ச்சிகளோடு மிருக்கிறது. இப்படிப் படிப் படியாய்க் கடைசியில் சாக்கிர நிலையிலுள்ள மனிதனில் முழு அறிவின் பிரகாசத்தோடும் விளங்கிக்கொண் டிருக்கிறது.

பரமான்மாவே கடவுள். உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் எங்கும் நிறைந்த பரமான்மாவின் ஓர் பாகமே. பரமான்மாவை அன்றி ஆன்மாக்கள் இல்லை. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறபடி



யால் ஆன்மா இல்லாத இடமே யில்லை. ஆன்மா இல்லாத இடம் ஒன்றுளதேல் அங்குக் கடவுள் இல்லையாகும். இது எவரும் மறுக்கொணா விஷயம்.

ஆகையால் ஆன்மா இந்த அண்டரண்ட சராசரங்களெங்கும் நீக்கமற மயிர் முனைக்கு மிடமற நிறைந்து ஏக சொரூபமாக விருக்கிறது. கல் முதலியவற்றில் சற்றும் உணர்ச்சியின்றி மனிதன் மூர்ச்சையில் இருப்பது போன்ற நிலையிலிருக்கிறது. மரம், செடி முதலிய தாவரங்களில் பரிச உணர்ச்சி மட்டும் பொருந்தி யிருக்கிறது. இவ்வாறே சிலவற்றில் ஈரறிவு, சிலவற்றில் மூன்றறிவு, சிலவற்றில் நான்கறிவு, சிலவற்றில் ஐந்தறிவு பொருந்தியதாகவும், மனிதனில் சகல அறிவுகளும் நிறைந்ததாகவும் பிரகாசிக்கிறது.

இந்த உண்மையை யறிந்தே நம் முன்னோர் "மரம் செடிகளைச் சேதிப்பதும் பாபம். ஆனால் பழுத்த இலை, காய்கனிகளைப் பறிக்கலாம், ஏனெனின் நமது உரோமம் நகம் இவற்றைச் சேதித்தால் நமக்கெப்படித் துன்புறுத்துவ தில்லையோ, அதுபோல அவற்றிற்குத் துன்ப முண்டாவதில்லை" என்று கூறியிருக்கின்றனர்.

இந்த ஆன்ம சொரூபத்தை யறிவதே மேலான ஞானமாகும். நாம் முன் கூறியதுபோல், முதலாவது, மனிதன் தனக்குள்ளிருக்கும் கண்டமாகிய ஆன்மாவை யறிந்து பிறகே அகண்டமாகிய பரமான்மாவை யறியவேண்டும். தனக்குள் இருக்கும் ஆன்மாவை யறிவதே தன்னை யறிவதென்பது. தன்னை யறிந்தபின் தலைவனாகிய பரமான்மாவை யறிந்து அதில் ஒன்றுபட்டு விடவேண்டும். இதுவே பிரம்மக்கியான மென்பதும் மோக்ஷ நிலை யென்பதும்.

இதை யடைவது சாத்தியமானதே. ஆனால் இதனினும் கஷ்டமானது வேறொன்று மில்லை. அதனால் யாவரும் இந்த நித்தியானந்த நிலையைப் படிப் படியாக வேணும் அடையும் வண்ணம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சோபானங்களும் எண்ணிறந்த நூல்களும் ஏற்பட்டிருக்கின்றன. உலகில் நமது முன்னோர்கள்தான் அநாதி காலத்திலேயே இம்மகத்தான ஞானத்தை யடைந்து அதை யடைய ஏனையோர்க்கும் வழி காட்டி யிருக்கிறார்கள். ஆகையால் இப்புண்ணிய பூமியாகிய பாரத நாடே ஞானம் பிறந்த நாடாகும். இந்த ஆன்ம ஞானத்தை அறிந்தோரே யாவு மறிந்தோர். இதைப் பெற்றோரே யாவும் பெற்றோர். இவர்கள் வேறொன்றையும் அடைய விரும்பார்கள்.

சகோதர சகோதரிகளே! இந்த ஞானத்தை யடைய முயற்சி செய்யாதவர் மானிட வர்க்கத்தைச் சேர்ந்தோராகார். அவர்கள் செய்யும் மற்ற தொழில்களெல்லாம் சேர்ந்து உணவிற்காக உழைப்பதும், உண்பதும், உறங்குவதுமாகவே முடியும். அத்தொழில்களை மிருகாதிகளும் செய்கின்றன. ஆகையால் நாம் நமது வினைப்பயன்படி எத்தொழிலைச் செய்யினும், எத்தகைய சுக துக்கங்களை யனுபவித்தாலும், "ஆன்ம ஞானத்தை யடையவேண்டும், ஆண்டவனருளைப் பெறவேண்டும்" என்ற இச்சை கொண்டு அதற்கு முயல்வதை விடலாகாது. பரப்பிரம்ம சொரூபியாம் பரமன் நம்மனைவர்க்கும் நல்லறி வளித்து அருள் புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

---

## அன்பு.

நண்பர்காள்! மூவிருவருஷங்களாக, நம்மவர்களுக்கு, நம் இள ஆனந்தன் உழைத்து வருகின்றானென்பது யாவரும் அறிந்த விஷயம். நான் "அன்பு" என்பதைப்பற்றி எழுதவேண்டிய காரணம் என்னவென்றால் எனக்குத் தெரிந்தவைகளை நமது நண்பர்களனைவர்க்கும் அறிவிக்கும் பொருட்டே அன்பே வடிவெடுத்து வந்த நம் ஆனந்தனில் ஓர் சிறு வியாசம் வரையலானேன்.

அன்பென்றது ஒருவரோடொருவரைச் சேர்க்கும் பிணைப்பு. இதுவே, உயிர்வர்க்கங்களை யெல்லாம் ஒற்றுமையோடு வாழச் செய்வது. "அன்பு" இதுதான் என்று கண்கூடாகக் காண முடியாது. இதனுடைய தன்மைகளை எவர்கள் உடைத்தாயிருக்கிறார்களோ அவர்களாலேயே அது அறியப்படும். அஃதல்லாது இக்குணம் இல்லாதவர்களாலே இதன் தன்மையும் பெருமையும் உணரப்படமாட்டாது. எம்பெருமானும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே அன்புமயமாக விளங்குகிறாரென்றால் இதன் பெருமையை நம்மால் வரையறுக்க முடியுமா? அன்பர்காள்!

நிடத நாட்டின் அரசனுடைய கதையை அறியாதார் ஒருவரும் இருக்கமாட்டார்களென நம்புகிறேன். ஊழ்வினை அவனை யடுக்க அவன் சூதாடி அரசிழந்து, காட்டில் தன் மனைவியாகிய தமயந்தியைப் பிரிந்து, கார்க்கோடகன் என்னும் பாம்பினால் கடியுண்டு, உடலழகு இழந்து, அயோத்திசென்று, அங்கே அவ்வரசனுக்குச் சாரதியாய் வாழும் பொழுது, தன் மனைவிக்கு இரண்டாம் சுயம்வரமென்று கேள்வியுற்று, அயோத்தி அரசனோடு பீமன் நகருக்குச் சென்றானல்லவா? அப்பொழுது பலவகைக் காரணங்களையும் கொண்டு, அயோத்தி மன்னனுக்குச் சாரதியாக வந்தவன் தன் கணவனாக இருக்குமென்று நிச்சயித்த தமயந்தி, தான் கொண்ட கருத்து சரியோ தப்போ என்பதை அறியஎண்ணித் தாதியர்லமூமாகத் தனது மக்களை அவனிடம் அனுப்ப, தன்னை ஒருவரும் அறியாதபடி மாறுவேடம் பூண்டிருந்த நளன் தன்மக்களைக் கண்டதும், வைரத்தைப் போன்ற அவனுடைய சித்தமாகிய கதவை, இடிவிழுந்து பிளந்தாற்போன்று, பிளந்துகொண்டு அன்பு வெளிக்கிளம்பி அவனுக்குக் கண்ணீர்வரச்செய்ததன்றோ?



நேயர்களே, இதனைக் கொண்டே நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்,

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்." என்று உரைத்தருளினார்.

இதைநாம் ஆராயுங்கால் அன்பு மனத்திலேயே விளைகிறதென்றும், அதனை அடைத்தற்கு ஒரு கருவியும் பயன்படாதென்றும், அன்பர்களின் இன்பத்தாலாவது துன்பத்தாலாவது உண்டாகும் கண்ணீரே உண்மை அன்பை அறிவுறுத்துமெனவும் அறியலாம்.

அன்பர்களே! ததீசி மகா முனிவருடைய வரலாற்றை அறியாதார் யாருளர்? முன்னொருகால் துவட்டாவால் அனுப்பப்பட்ட விருத்தாசுரன் இந்திரனைத் துன்புறுத்திய பொழுது பிரம்மாவின் ஏவுதலால் அவ்விந்திரன் நம் ததீசி முனிவரிடம் சென்று அவருடைய முதுகெலும்பைக் கேட்க, அப் பெரியவர் மனமகிழ்ந்து, சிவபெருமானுடைய அடிகளிலே அன்பைநாட்டி, அழியும் தன்மையை உடைய தம் நிலையற்ற உடம்பை உலகிற்குப் பயன்படும் படிக்கு விடுத்து, பேரின்பமடைந்தார். பின், இந்திரன் அவ்வெலும்பை வச்சிராயுதமாக்கி, அசுரனைக் கொன்று துன்பம் துடைத்தான். இது பற்றியே நமது திருவள்ளுவரும்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர், அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு." என்று கூறினார்.

அன்பில்லாதவர்கள் பெருமை, தன்னயம் கருதல் முதலிய தீக்குணங்கள் உடையராக இருப்பாராதலின், மற்றையோர் செல்வத்தைத் தாங்கள் கவர்ந்துகொள்ள எண்ணுவார்கள். கொலை, களவு முதலிய பாதகத்தொழில்களுக்கும் அஞ்சார்கள். இம்மையில் கெட்டபேரையும் வகுத்து மறுமையில் நரகமும் புகுவர். அன்புடையவர், தங்கள் உயிரைக் கொடுக்கவேண்டி வந்தாலும் அன்பு காரணமாகக் கொடுப்பர்.

அன்புடையீர், "அன்பில்லாத விடத்து இன்பமும் இல்லை?" என்றபடி நாம் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வாழவேண்டும். நம்மனமாரப் பிறருக்குத் தீமைசெய்தால் நம் மனமே நம்மைச் சுடும். இதுபற்றியே நமது பெரியோரும் "தன் னெஞ்சம் தன்னைச் சுடும்" என்று கூறியுளார்.

ஆகையால் நம்மனமார யாதொரு உயிர்ப் பிராணிக்கும் நாம் தீங்குசெய்யக் கூடாது.

ஆனால் நாம் ஒவ்வொருநாளும் கண்கூடாகக் காண்ப தென்னவெனின், நம்மவரில் சிலர், நாய்களின்மேலும் மற்றும் வாய்விடாப்பிராணிகளின் மேலும் கல் முதலியவற்றை எறிகிறதைப் பார்க்கிறோம். அந்தோ! அவர்களின்மேல் அக்கல் வந்துறுத்தினால் எவ்வாறிருக்குமோ? இதுபற்றியே நமது பெரியோரும் "தன் துடையை கிமிட்டினால் தெரியும்" எனக் கூறியிருக்கின்றனர். நிற்க, நம்மவரில் சிலர் குதிரைவண்டிகளின் மீது ஏறிக்கொண்டு குதிரைகளை அடித்து உதைத்து வேகமாக ஓடும்படி செய்து மகிழ்கின்றனர். பாபம்! பாபம்! பாபம்! பெரிதும் பாபம்! அது தங்களுக்கு இயற்றும் உதவியையும் மறந்தல்லவோ அப்படிச் செய்கின்றனர். இத்தகையோருக்கு இரக்க மென்னும் குணம் எங்கேதான் போயிற்றோ? என் வண்டியை நிதானமாக விடக்கூடாது. இவ்வாறு நாம் ஒழுகுவோமானால் நம்மிறைவன் நமக்கு எவ்வாறு அருள் புரிவான்? ஆகையால் நாம் நல்வழியில் ஒழுக வேண்டும்.

இதனால் முத்தியில் நம்மைச் சேர்க்கும்வழி அன்பேயென்றும் அன்பல்லா மூர்க்கரை நல்வழிப்படுத்த முயலவேண்டு மென்றும் அறிகிறோம். உண்மையான அன்பு நமக்கிருந்தால் ஆண், பெண், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பெரியவன், சிறியவன் என்ற வித்தியாசமே இல்லாதிருக்கும். மேலும் நம் மாணிக்கவாசகப் பெருமான்

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
என் அன்பினில் விளைந்த ஆரமுதே"

என அருளிச்செய்தார்.

நிற்க உயிர்களின் மீதிருந்த அன்பினாலல்லவா சிவபிரான் அன்று கடலிலிருந்து உண்டாகிய ஆலகால விஷத்தை உண்டருளினான்.
அன்புமிக்க அன்பர்காள்!

அன்பிற்கு அடைக்கும் தாள் இல்லையென்றும், அன்புடையவர்கள் தங்கள் உயிரையும் பெரிதாகக் கருதமாட்டா ரென்றும், அன்புமயமாய் விளங்குகின்ற சிவபெருமானை அடைதற்கும் அன்பையே பெருக்கவேண்டு மென்றும் அறிகிறோம். இது பற்றியே நமது ஆன்றோரும்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே." என்று கூறினார்.



அன்பாகிய ஏணியின் வழியாகவே அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், ஆழ்வார்கள் முதலியவர்கள் பரம்பொருளைக் கிட்டினர். இதுபோலவே நாமும் நம் இனை "ஆனந்தனை" ஆதரித்து, இதில் காண்கின்ற நல்லொழுக்கங்களைக் கைப்பிடித்து இம்மையில் சுகத்தையும் மறுமையில் இன்பத்தையும் அடைவோமாக,

இ. மு. அருணாசலம்
சங்கரனரும்சங்க மானேஜர், வாணிவீதி, நடுவை நகர், இளசை.

---

## பிரபஞ்ச அநுபவம்.

நாம் கூறுகிற ஒரு உண்மையான விஷயத்தைக் கண்டு சிலர் கோபத்தை யடைவார்கள். அவர்கள் கோபிப்பதினாலேயே "அவ்விஷயம் உண்மை" என்பதை விளக்கிக் காட்டுகிறார்கள். ஆதலால் நாம் அவர்கள் மீது துவேஷங் கொள்ளாமல், அவர்களுடைய அறியாமை நீங்குவதற்காகக் கடவுளினிடத்தில் மன்றாடவேண்டும்.

ஒவ்வொரு இரவிலும் நாம் நித்திரையை யடைய 15-நிமிஷத்திற்கு முன் "நாம் இன்று எவருக்குத் தீங்கு செய்தோம்" என்று சிந்தித்துப் பார்த்து, பிறகு கடவுளை வணங்கி, நித்திரை முடித்து, அதிகாலையில் எழுந்திருக்கும்பொழுதும் கடவுளை வணங்கியே எழுந்திருக்கவேண்டும்.

ஓயாது பேசிக்கொண்டிருப்பவன் தன்னிடத்தில் ஒன்று மில்லை யென்பதை வெளியிடுகிறான். ஆதலால், நாம் நம்மால் கூடிய வரையில் சும்மாவிருக்கப் பழகி வரவேண்டும். அவ்விதம் செய்வதால் அநேக நன்மைகள் நமக்கு உண்டாவதை அநுபவமாய்க் காணலாம்.

'பகை' யென்பது பெரும்பாலும் 'சிநேகம்' என்பதிலிருந்தே உண்டாகிறது. ஆதலால், "சேரிட மறிந்து சேர்" என்ற நம் ஞானத்தாயின் திருவாய் மொழியை நாம் என்றென்றைக்கும் ஹிருதயத்தில் கொண்டிருக்க வேண்டும்.

சந்தேகத்தை யடைந்த ஒருவன் தன்னைக் கெடுத்துக் கொள்வதற்கு இவ்வுலகத்தில் வேறு சத்துருவை யுண்டாக்க வேண்டியதில்லை. அது தன்னை யடைந்தவனை எவ்விஷயத்திலும் முன்னேற வொட்டாமல் தடுக்கும். சரியான காரணத்திற்காக உழைக்கு மொருவன் சந்தேகத்தோடு ஜெயத்தை யெதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

இல்லறத்தை ஒழுங்காய் நடத்தும் இயல்பையுடைய மனைவியை ஒருவ னடைந்திருந்தால், அவனுக்கு இல்லறமே பெரிய நல்லறமாம்; அல்லாதவரையில், துறவறமே சாலச் சிறந்ததாமென்று பிரபஞ்ச அநுபவமும் கூறுகிறது. ஆதலால், சகோதரிகள் இவ்விஷயத்தைச் சிந்தித்துத் தமது மனதில் பதித்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறோம்.

புதிதாக மாமி வீட்டை யடைகிற மணமகள், தன்னுடைய சுபாவ குணங்களை யெல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவ்வீட்டின் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வதற்காகச் சுத்தமான மனதோடேயே வந்து சேருகிறுளாதலால், அப் பெண்ணைச் சீர்திருத்த எண்ணுகிற மாமிமார்கள் முதலில் தம்மையும், தம் வீட்டாரையும் சீர்திருத்தம் பண்ணுவது சிறந்தவழி.

புதிதாக விவாஹம் செய்யக் கருதும் வாலிபனே! நீ ஒரு மாதகாலம் வரை சுகத்துடன் இருக்க விரும்பினுல், செல்வவந்தர் வீட்டுப் பெண்ணை நாடு; உன் ஆயுள் காலமெல்லாம் சுகத்துடனிருக்க விரும்பினுலோ, ஏழை வீட்டுப் பெண்ணையே தேடு. உனக்குச் சுகதுக்கங்களுண்டாவதற்குப் பெண்ணைப் பெற்ருேர்கள் காரணமன்றிப் பெண் காரணமல்ல.

வீட்டு வேலைகளைச் செய்ய ஆள் வைக்குமொருவன், தன் பெண்ஜாதியின் வைத்தியத்திற்கென்று முதலில் சிறிது பொருள் எடுத்து வைத்துவிட்டுப் பின்புதான் ஆள் வைக்க வேண்டுமென்று உலக அநுபவம் கூறுகிறது. ("வேலையாளிருப்பதாலேயே வீட்டிலுள்ள மனைவி ஒருவேலையும் செய்யாமல் சோம்பலுள்ளவளா யிருக்கலாகாது" என்பது கருத்து)

சமயல் பாத்திரங்கள், தண்ணீர்ப் பாண்டங்கள் முதலியவைகளைத் திறந்து வைத்திருப்பதினுல், சில விஷ ஜந்துக்கள் விழுந்து நம் உயிருக்கே கேட்டை விளைவிக்கும். ஆதலால், சகோதரிகள் இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை யடைய வேண்டுகிருேம்.

"கோவிந்தசாமி வருகிருன், பாக்கியைக் கொடுத்தனுப்பு" என்ற இம்மாதிரியான தந்திகளின் விஷயத்தில் வியாபாரிகள் மிகுந்த எச்சரிக்கையாக விருக்கவேண்டும். ஏனெனில் இவைகள் தபால்களைப் போன்ற அவ்வளவு பலமான ஆதாரவுகளல்ல.

நம் அறிவிற்குத் தோன்றுகிற ஒரு வித காரணத்தைக் கொண்டே நாம் எந்த விஷயத்தையும் முடிவு செய்துவிடலாகாது. அவ்விதம் செய்வதால், நம் அறிவை வளரவிடாமல் அணைபோட்டுக் கொண்டவர்களாகின்ருேம். சிலரால் சில காரணங்களைத் தெரிந்து செய்வதே யுசிதம். கட்சிப் பிரதிகட்சிகளின் வாதங்களைக் கேட்டும் நியாயாதிபதி ஜூரிகளின் அபிப்பிராயத்தைத் தெரிந்தே ஒருவித முடிவிற்குவருகிருர்.

தரும சிந்தையற்றவர்கள் செல்வத்தை யடைந்திருப்பதை விட வறுமையைக் கொண்டிருப்பது மிக்க நல்லது. ஏனெனில், வறுமையை யுடைய ஒருவன் தருமம் செய்யாதிருந்தால், "ஈவு, இரக்கமற்ற பாதகன்" என்று ஜனங்களிற் பெரும்பான்மையோரால் அவன் இகழப் படுவதில்லை.

ஜீவகாருண்யத்தை யடைய விரும்புகிறவர்கள், ஆரம்பத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிற ஈ; எறும்பு முதலிய ஜந்துக்கள் ஜலம் முதலியவற்றில் சிக்கிக்கொண்டால் அவற்றை மெதுவாய் எடுத்து, உலர்ந்த விடத்தில் விட்டு, அவைகள் உயிரோடு ஓடுவதைக் கண்டு ஆனந்தமடைய வேண்டும். இது நாளடைவிலேயே மாமிசம் புசித்தல், அன்னியருக்குத் தீங்குபுரிதல் ஆகிய துர்க்குணங்களை நம்மை விட்டு அகன்றுவிடச் செய்கிறது.



மதுபானம் பண்ணுவதில் பிரீதி கொண்டு தங்களுடைய ஆஸ்திகளை யெல்லா மிழந்து ஓட்டாண்டிகளான பெரும்பான்மை யோரைக் கண்டும் சிலர், "நமக்கு இவ்வறுமை ஏற்படாது" என்றெண்ணிக் கைப்பற்றி யிருப்பதும், முன்னோர்கள் தேடிய திரவியங்களை யெல்லாம் வேசிகளுக்குக் கொடுத்து, பலவித நோய்களைப் பெற்று, அந்நோய் தீர்க்கப் பொருளுமற்று வருந்துகின்ற பலரைப் பிரத்தியக்ஷமாகக் கண்டும், சிலர் "நமக்கு இத்துன்பம் வந்தணுகாது" என்றெண்ணி அவ்விஷயத்தில் பிரவேசிப்பதும், தினந்தோறும் ஆயிரக் கணக்கான மனிதர்கள் உயிர் துறப்பதை அறிந்தும், பலர் "நாம் எப்பொழுதும் ஜீவித்திருப்போம்" என்றெண்ணி நடப்பதும் இவ்வுலகத்தில் காணப்படுகிற முதன்மையான அதிசயங்கள்.

(தொடரும்.)

க. அ. பெ. விஸ்வநாதன்,
நெ. 54, தஞ்சாவூர் ரோட், திருச்சிராப்பள்ளி.

---

## மாணவர் பக்கம்.

## நாகரீகம் என்பது என்ன?

சுமார் ஒரு நூற்றுண்டாய் இந்தியாவில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாறுதல்களால் இந்நாட்டு ஜனங்களும் நூதன நடை உடை பாவனைகளைப் பின்பற்றித் தாங்கள் நாகரீகத்தைக் கைப்பற்றுவதாய்க் கருதிக்கொள்கின்றனர். ஐரோப்பாவிலிருந்து வந்திருக்கும், தந்தித்தபால், மின்சார இயந்திரங்கள், இருப்புப்பாதை முதலியன ஜனங்களுக்கு அதிசயத்தையும், சந்தோஷத்தையும் உண்டுபண்ணி, அவர்களை மதிமயங்கச் செய்து, மேல் நாட்டார் வாழ்வே வாழ்வு, இதர வாழ்வெல்லாம் தாழ்வெனப் பாவிக்கும்படி செய்துவிடவே, இந்தியர்களும் சகல விஷயங்களிலும் அவர்களைப் போல் தங்களைப் பாவித்துப் பெருமை பாராட்டிக் கொள்ளுகிருர்கள். அங்ஙனம் மேல்நாட்டார் நடை உடை பாவனைகளைக் கைக்கொள்வதே நாகரீகத்தின் நோக்கமாய்க் கருதிக்கொள்கின்றனர். அந்தோ! பரிதாபம்! இதுவோ நாகரீகம்! பல நூற்றுண்டுகளாய்ப் படிப் படியாய் முன்னேற்றமடைந்திருக்கும் மனிதன் நாகரீகம் இன்னதென்றறியாதிருப்பது மிகவும் பரிதாபமே.

மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்திருக்கும் மிருகாம்சம், ஈசுவராம்சம் என்னும் இருவித அம்சங்களில், மிருகாம்ச அபிவிருத்தியினுல்

ஏற்பட்டிருக்கும் தற்கால நூதன விஷயங்கள் மனிதனுக்குத் தேகாபிமானத்தைப் பெருக்கி, நிலை யில்லாததாயும் பல வியாதிகளுக் கிருப்பிடமாயும் இறந்தபின் இருந்த இடம்தெரியாது மறையப்போவதாயுமுள்ள தேகத்தை நானாவிதத்தில் சொகுசான நிலையிலே வைத்துக் கொள்ளும்படி செய்கிறது. தேகக்கூறின் சாஸ்திரத்தை நன்கு கற்று மதுபானம் தேகத்துக்கு அஹிதத்தை யுண்டுபண்ணி ஆயுளைக் குறைக்குமோர் சாதன மென்பதைத் தெரிந்தும், பல இந்தியர்கள் தங்கள் முன்னோர்களது புராதன வைதிக ஆகமங்களுக்குப் பதிலாய் இவ்வித தூர் அப்பியாசங்களுக் காளா யிருப்பது வெறுக்கத் தகுந்தது. நூதனச் சண்டைகளும், சண்டையில் எளிதில் ஒருவரை யொருவர் வெட்டவும், குத்தவும் பயின்று வருவோர் நடை உடை பாவனைகளைக் கைப்பற்றுவதுதானா நாகரீகம்? இப்போதுள்ள ஐரோப்பா யுத்தத்தினால் விளைந்திருக்கும் பற்பல நூதன இயந்திரங்களெல்லாம், மனிதன் தன் இனத்தானையே கொல்வதற்காகத் தானே! மனிதன் மனிதனுடன் ஒத்து வாழ்வதற்குரிய மார்க்கத்தைக் கண்டுபிடித்துச் சண்டை சச்சரவின்றி வாழ்ந்தால் அது நாகரீக மாகாதோ!

'மனிதன் எப்போது தனது மிருகத் தன்மை நீங்கப் பெற்று, மனிதத் தன்மையை விருத்தியடையப் பெறுகின்றானோ, அப்பொழுதுதான் மனிதன் நாகரீக முள்ளவனாவான். தனது தேசத்துக்கும், சமுதாயத்துக்கும், குலத்திற்கும், வெகுகாலம் நிலைத்து, திரிகரண சுத்தி யளிக்கத் தகுந்த வலிமையுடைய மதானுஷ்டானத்தை அனுஷ்டித்து, ஆடம்பரங்களை மறந்து, உண்மையான ஜீவியத்தைத் தெரிந்து, உடலபிமானம், உயிரபிமானம், உறவபிமானம் முதலியன விடுத்து, மதாபிமானம், மானாபிமானம், தேசாபிமானம் முதலியன அடுத்து, பரோபகாரமே ஜீவித நோக்கம், யாவரும் சேர்க்கவல்ல பரோபகாரமே ஓர் நாட்டின் பூஷணம் என்பதை யறிந்து ஒழுகும் நாடே மேன்மை பெறும்; அந்த நாட்டைத்தான் நாகரீக முள்ளதென்று சொல்லலாம். அந்நாடே யாவருக்கும் கற்பிக்கத் தகுந்ததோர் நன்னாடகமாகும்; எவரும் போற்றிப் புகழும் பொன்னாடகம். அங்ஙனமிருந்த இந்தியாவானது இப்போதடைந்திருக்கும் பரிதாப நிலையினின்றும் கரையேறுதற்பொருட்டு வேண்டிய முயற்சிகளைப் போதனாமுறையில் செய்யும் நம் "ஆனந்தபோதினி" என்னும் பத்திரிகைக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருப்பதுடன், அது போதிப்பது போல் ஒழுகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

**என். சுப்பிரமணிய அய்யர்,**
கிழக்கு ரதவீதி, நாகர் கோவில்.

---

## நீத்துப் பயிற்சி.

இந்தியாபோன்ற உஷ்ணப் பிரதேசங்களில் வருஷம் முழுவதும் வெளியில் சென்று ஸ்நானஞ்செய்வது சுலபமே. ஆனால் இங்கிலாந்து முத



லியதேசங்களிலோ ஜலம் வேனிற் காலத்தில் மாத்திரமே ஸ்நானம் பண்ணவேண்டு மளவு வெப்பமுள்ளதாக இருக்கிறது. ஆயின் இந்தியாவில் நீந்த விரும்புகிறவர்களுக்கு ஒரு பெருங்கஷ்டம் இருக்கின்றது. இந்தியாவைச் சுற்றிலுமுள்ள கடலில் நீராட நினைத்துச் செல்பவர்களுக்கு, அக்கடலில் இருக்கும் சுறாமீன் முதலியவைகளால் ஊறு உண்டாகிறது. கங்கை கோதாவரி முதலிய பெரிய நதிகளில் முதலை முதலிய பலவிதமான நீர்வாழ் ஜந்துக்கள் நிறைந்திருப்பதினால் அவைகளில் அச்சமின்றி ஸ்நானம் செய்வது ஆபத்துக்கிடமாக விருக்கிறது. சிற்சில சிறிய ஆறுகளிலும் குளங்களிலும் நீராடுங்கால் விஷசர்ப்பங்களால் தீண்டப்பெற்று இறப்பவர்களு முண்டு. இவ்வித கஷ்டங்கள் இருப்பதனால் இந்தியக்கடலிலும், மற்றுமுள்ள நீர் நிலைகளிலும் நீராடுதல் சில வேளைகளில் உயிருக்கு அபாயத்தை விளைவிப்பதாக விருக்கின்றது. ஆகையால் நீராடுவோர் உவர்நீரி லுள்ள சுறா முதலிய வற்றாலும், நன்னீரிலுள்ள சர்ப்பவகைகளாலும் யாதொரு அபாயமும் உண்டாகா வண்ணம் தங்களைக் காத்தல் இன்றியமையாததாக இருக்கிறது.

இவ்விதம் நீர் நிலைகளிலுள்ள பிராணிகளால் பிராணாபாயம் நேர்தலைக் கருதியும், மிதமிஞ்சி நீந்தினால் கைகால் ஓய்ந்து அதனாலும் மரணம் உண்டாதலைக் குறித்தும், பருகுதற்கான நன்னீர் நிலைகளில் நீந்தினால் அவை கலக்கமுற்றுப் பானத்துக்கு உபயோகப் படாமல் இருப்பது பற்றியும், "நீர் விளையாடேல்" என்று ஔவையார் தமது ஆத்திசூடியில் கூறினார்போலும்.

நீத்துப் பயிற்சி என்பது எல்லோரும் விரும்பத்தக்கதோர் அரியவித்தையானபடியால், ஒவ்வொரு ஊரிலும் எல்லாரும் அதனை நன்கறியும் வண்ணம் முயற்சி எடுத்துக் கொள்ளுதல் மிகவும் உசிதமானது. கஷ்டப்பட்டு வேலைசெய்து அயர்ச்சியுற்றவர்கள் நீரில் நன்றாக நீந்துவதனால் அச்சோர்வு நீங்கப் பெறுகின்றனர். அன்றியும் நரம்புப் பிறழ்ச்சி, இரத்தங் கட்டிக் கொள்ளுதல், கைகால் முதலிய உறுப்புக்களில் நோய் முதலியன நீங்கிவிடுகின்றன; நரம்புகள் தத்தம் நிலைமையை அடைகின்றன. நீந்துவதனால் தேகத்தில் இரத்தவோட்டம் செழிக்கின்றது. முக்கியமாக நீந்துதல் மனதில் உற்சாகத்தை உண்டாக்கக் கூடிய ஒரு சிறந்தபயிற்சி. வெயிற்காலத்தில், வெளியேபோய்த் தேகப்பயிற்சி செய்வதற்கு இயலாத காலத்தில் நீந்துவதே நல்லது. ஒருவன் உஷ்ணம் மிகுதியாக இருக்கும்படியான ஓர் நாளில் காலையிலாவது, தான் செய்யவேண்டிய வேலையைச் செய்தபின்னாகிலும் ஸ்நானம் செய்தால் மனதுக்கு எவ்வளவோ இரம்மியத்தையும், மகிழ்ச்சியையும் செய்கிறது. ஆனால் நீந்துவதைச் சந்தோஷம் தரத்தக்க பயிற்சி என்று மாத்திரம் கருதுதல் ஒண்ணாது. அது தேஹ ஆரோக்யத்திற்கும் சிறந்த அனுகூலத்தை யளிக்கத்தக்கது. சமுத்திர ஸ்நானஞ் செய்வதால் உண்டாகும் குணங்களை எல்லோரும் நன்கறிவார்கள். பல மில்லாதவர்

அல்லது துர்ப்பல முற்றவர் கடற்கரைக்குச் சென்றால் அதனால் உண்டாகும் குணங்களால் சுகம் பெறுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

நீந்தக் கற்றிருந்தால் சமயத்தில் பிராணாபாயத்தினின்றும் நாம் தப்புவதோடு பிறரையும் காப்பாற்றலாம். எப்படி எனில், ஒருவர் கால்வழுக்கிப் பூரணபிரவாகமாக இருக்கும் பொழுது ஆற்றில் விழுந்தால் நீந்தத் தெரிந்தவர் அருகில் இருந்தால் அவரைமீட்கலாம். உயிர்ப் பிட்சை தருவது சிறந்த தருமமல்லவோ. ஆங்கிலேயச் சிறுவர்கள் சிறுமிகளைக் காப்பாற்றியதற்காகப் பரிசுகள் பெற்றிருப்பதாகக் கேள்விப் படுகிறோம்.

நீத்துப் பயிற்சியின் குணங்களை ஆங்கிலேயர் நன்கறிந்தவ ராகையால் தங்கள் ஊரில் ஆங்காங்கு நீச்சுத்தொட்டிகள் அமைத்திருக் கின்றார்கள். நம் நாட்டுச் சிறுவர்கள் ஒவ்வொருவர்க்கும் நீந்தக் கற்பிப்பது அவசியமாகும்.

R. ராமனாதன், திருவாடி, தஞ்சாவூர்.

---

## தமிழர் புராதனம்.

(27-ம் பக்கத்தொடர்ச்சி)

எனினும் நச்சினார்க்கினிய ருரைப்படி தமிழ் என்ற சொற்கு இனிமையெனப் பெற்றாம். இப்பொருட்குத் 'தமி' என்பது பகுதி யென்பார் * ஸ்ரீமான் கனகசுந்தரம் பிள்ளை யவர்கள். (தமி - ஒப்பின்மை.)

இனிச் சிலர் தமிழென்பது திராவிட மென்னும் சமஸ்கிருதத்தின் பெயர்ப்பு என்ப. பாவை வழக்கில் தமிழும் திராவிடமும் ஒன்றுக்கொன்று பொருளதாக வழங்கப்படினும், எவ்வணம் திராவிடம் தமிழெனப் பட்டதோ அறிகிலோம். திராவிடம் என்னுஞ் சொல் தமிழெல்லைக்கும், பஞ்ச திராவிடருக்கும், திராவிட பூமியின் வாசிக்கும் பெயராக வழங்கப்படுகின்றது. பஞ்ச திராவிடர் என்பவர் வடநாட்டு அந்தணரினும் ஆசார வொழுக்க மிகுந்துள்ள தென்னாட்டுத் (திராவிட) அந்தணராவர். ஆனால் திராவிட பூமி என்பது எது? அதன் எல்லை யெதுவரை? இவைகளின் உத்தரமே நம் மொழியின் தொன்மைக் காதாரவாகும். மேலுந் தெலுங்கர், தமிழ்நாட்டு அந்தணரைத் "திராவிட்லு" என்றும், ஸ்ரீ சங்கராச்சாரியர் மறைநவில் சம்பந்தரைத் "திரவிட சிசு" என்றுங் † கூறுவதை யொப்ப நோக்கின் திராவிட மென்பது தென்னாட்டினரைக் குறிப்பதுடன் தமிழ் என்பதன் வடமொழிப் பிரதி பதம் ‡ என்ன வேண்டும். உற்றுநோக்கின் தமிழினின்றும் பிரிந்த மலையாள முதலிய பாகத பாஷைகளையே குறிக்கும்.

---

* 'Tamils Eighteen Hundred Years Ago.'

† "தயாவத்யா தந்த்தம் த்ரவிட சிசு"—சௌந்தரியலகரி—76

‡ இவ்விதமாக வடமொழியாளர் செய்வதற் குதாரணமாக ஆர்க்



காடு என்பதை அறுகாடு எனத் திரித்து ஷடாரண்யமென மொழி பெயர்த்து அந்த ஸ்தலத்துக்குப் புராணமெழுதி யுள்ளதைக் காட்டலாம்.

மொழி நூல்களிற் பஞ்ச திராவிடம் என்னுஞ் சொல் திராவிடம், கன்னடம், ஆந்தரம், மாராடம், கூர்ச்சரம் என்னும் பாஷைகளையே குறிக்கும். இவையிற்றில் திராவிடம் தமிழல்லவெனின் மலையாளத்தையே குறிக்கின்றது. இவ்வைந்து பாகதங்களும், துளுவு, காண்ட் என்னும் பாஷைகளும் தமிழினின்றும் பகுபட்டன. இதனையே யாசிரியர் சுந்தரம் பிள்ளை,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோ
ரெல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவு
முன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினு
மாரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

என்று குறித்தார்.

தொல் காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரங் கூறிய பனம் பாரனார்,

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து"

என்று கூறுதலானும், கீழ்மேற்றிசை யெல்லை கூறாமல் விடுத்தலானும், தமிழ் நாட்டெல்லை முப்புறமுங் கடல்வரை யென்று நன்கு புலப்படும். அங்ஙனமாயின் மலையாள பாஷையின் எல்லை இத்தமிழ் நாட்டிற்குள்ளே யடங்குவதுடன் அம்மொழியும் தமிழினின்றே யுதித்திருத்தல் வேண்டும்.

சோழனொருவன் கடற்போக்கு வியாபாரத்தி னிமித்தம், கீழ்க்கடலினுயர்ந்திருந்ததோர் பூசந்தியை வெட்டி யெடுப்ப, மேற்கடனீர் கீழ்க்கடனுக்க முழுகியிருந்த நிலம் மலையாளமென்னும் பெயர் பெற்றுப் பாசுராமர் காலத்தில் தமிழர் அங்குக் குடியேறின ரென்று கர்ண பரம்பரையாக வொரு வழக்குண்டு. அதற்கு மலையாளம், 'மலைக்கடற் பூமி, (ஆளம்-ஆலம்-கடல்) மேற்கடற்கரைச் சார்புள்ளது என்று பொருள்படும். இஃது அவ்வளவு பொருத்தமானதாகத் தோற்றவில்லை. ஆளம் என்பது ஆள் (உடைமை) என்னும் பகுதியினின்றும் கொண்டு, வெள்ளாளன், வெள்ளாண்மை போல மலையுடைமை என்று பொருள் கோடல் சிறப்பாகும். மலையை யுடைய பிரதேசம் என்று கொள்க.

மலையாளத்துத் தல, தா, 'இல, வல, பல்க முதலிய அகாவீற்றுச் சொற்கள், தமிழின் முற்பட்ட நிலைமையின் சொற்றிரிபுகளாம். பின்னர் நாவின் முதிர்ச்சியால் அவை ஐகார வீறு திரிந்தன; இதனானும் அனுபவத்

தானும் உணர்க. மலையாளம் ஆரியத்தைப்போன்று பால்வினை முடிபு பெறாமல் நின்றது. இதனையே போலும் நன்னூலார்,

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே"

எனப் புதியதாகப் புகுத்தனர். நிற்க, இதனானும், இன்னும் பிறவானும், மலையாளம் வேண்டியவரை தமிழினின்றும் மாறுபட்டு வடமொழியுடன் உறழ்ந்து தற்போழ்திய நிலைமைக்கு வந்துளது என வறியலாம்.

கிழக்கு மேற்கு என்னும் திசைப்பெயர்கள் தமிழிலும் மலையாளத்திலுங் காணப்படுகின்றன. தமிழ் நாட்டுக்குக் கிழக்கு கடற்றிசையாய் 'கீழ்த் திசையாம்'; மேற்கு, மலைப்பிரதேசமாய் மேல் திசையாம். அதனால் தமிழில் இப்பெயர்கள் நன்கு பொருள்படப் பொருந்தும். ஆனால் மலையாளத்தில் கடற்றிசை (கீழ்த்திசை) மேற்காகவும், மேல்திசை (மலைநாடு) கிழக்காகவும் வழங்கப்படுகின்றன. இதுவே தமிழின் முதன்மையும் மேன்மையும் நன்கு விளக்கும்.

மலையாளத்தின் முதற் காவியமாய ராமசரிதம் தமிழ்ப் போக்கே பற்றிச் செல்கின்றது! ஆனால் நாட்பட நாட்பட ஆரிய சம்பந்தப்பட்டு வடமொழி அதிகமாகப் பயின்று ஏறக்குறைய நானூறாண்டுகட்கு முன்னர் எழுத்தச்சன் என்பானால் மிக்க திருத்தப் பாடு அடைந்தது. அதன் பின்னர் இலக்கணம் வகுக்கப் புகுந்தார் வடமொழியையே பின்பற்றினர்.

இனி ஆந்திர மென்னுந் தெலுங்கு மொழியைச் சிறிது கவனிப்பாம். *. தர்க்க சாஸ்திரியாய, குமாரில பத்தர் திரவிடநாட்டை ஆந்த்ர-த்ராவிட பாஷாதேச:" என்பர். அதனால் அக்காலத்தவர், தெலுங்கும் தமிழும் ஒரு தன்மையதென்றோ, ஒற்றுமைப்பட்டதென்றோ கொண்டனர். தெலுங்கு என்னும் பதம் பொதுவாகத் 'திரிலிங்கம்' என்று கூறப்படும். அத்தேயத்தின் எல்லையில் மூன்று சிவலிங்க ஸ்தலங்கள் உள்ளதாகக் கூறுவர். எனினும், தமிழ் மக்கள் அவர்களை, 'வடுகர்' என்பது சிறப்பாகும் (வடக்கு தேசத்தவர்). ஆனால் ஆந்திரர் தெலுங்கு என்பதன் திரிபென்றும், தேனைப் போலினியதென்றும் கூறுவர். இவ்விதமாகத் திரித்துரைத்தது தமிழின் பொருளை யுன்னியே போலும். ஆயினும், தெலுங்கு மொழி பேசுவதற்கும் பாடுவதற்கும் மிகவும் இனிமைவாய்ந்ததென்று அனைவரும் ஒத்துக்கொள்வார்கள்.

எனினும், ஆந்திரமும் தமிழினின்றே பிரிந்தது. ஆரியத்துடன் மிகவும் பயின்று, அதன் இலக்கணத்தையும் பொருளையும் பெரும்பாலும் கொண்டு விளங்குவதால் அதற்குந் தமிழுக்குந் தோன்றும் ஒரு சிறிது ஒற்றுமையும் அறவே மறைகின்றது. தமிழ் மொழி வரிவடிவின் இளம் பிராயத்தேயே தெலுங்கு தனிமொழியாகப் பிரிந்திருத்தல் வேண்டும்.



தென்னாட்டு மொழிகளில் முதன் முதல் வடமொழியொடு மிகவும் கலந்தது தெலுங்கே; அஃதே வட நாட்டிற் கருகிலிருந்தது.

தமிழ்நாடு செந்தமிழ் கொடுந்தமிழ் நாடு என இருவகைப்படும். சேனாவரையர்,

"செந்தமிழ்ச் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

என்ற சொல்லதிகாரச் சூத்திரத்துக்குப் "† பன்னிரு நிலமாவன—பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சித நாடு, பூழி நாடு, ‡ மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை" என விசேஷ வுரை கூறியுள்ளார்.

எனவே, செந்தமிழ் நாட்டைச் சார்ந்த கொடுந்தமிழ் நாடுகளை யடுத்துத் தமிழ் மொழியின் பாகத மொழிகளினோடு பரவியிருந்தன. தெலுங்கு மொழியும், அருவா நாட்டை யடுத்திருந்ததுந் தெளிவுறும். இவ்வருவா நாட்டின் (கொடுந்) தமிழினின்றே தெலுங்கு பிறந்தது. இதுபற்றியும், வடுகமொழி (வடக்கர்மொழி - தெலுங்கு) பாஷா சம்பந்தத்தால் திருத்தப் பாடுற்றதைப் பற்றியும் போலும்,

"தெலுகு தேட்ட அரவம் அத்வானம்"

என்ற பழமொழி யுண்டாயது. அரவம் என்பது அருவாநாட்டுக் கொடுந் தமிழை.

இனித்தமிழ் மொழியிலும் ஆந்திர பாஷையிலும் உள்ள ஒற்றுமையும் அதனால் பின்னையது தமிழினின்றும் போந்த தென்பதற் காதாரமுங் காட்டுவாம்,

| தமிழ். | தெலுங்கு. |
| --- | --- |
| தலை | தல |
| கண் | கன்னு |
| மூக்கு | முக்கு |
| செவி | செவ்வு |
| நா | நாலுக |
| மருந்து | மந்து |
| செய் (வினை) | செய் (வினையின் ஆகு பெயராய்க் கரத்தைக் குறிக்கும்.) |

(தொடரும்)

து. தீனதயாளு.

---

56-வது பக்கம் * Caldwell's Philalogy P. 27.

† செந்தமிழ் நிலமாவன—வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும் உள்ளது.

‡ இதுவே மலையாளமென்னும் கோள நாடு.

[கொடுந்தமிழ் என்பது, மேற்கூறிய செந்தமிழைச் சூழ்ந்த. (வளைந்த) பன்னிரு நிலத்தில் வழங்கும் மொழி என்ப. கொடுமை—வளைவு, சூழ்தல். "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்' என்ற நாலடியாரும் அப்பொருளே. கம்பர் முதலிய செந்தமிழ் வாணர் பயிலும் இயலிசை நாடகமாய செந்தமிழ்க்கு மாறாய பாமரர் வழங்கும் மொழி என்றுங் கூறுவார்.]

## கைவல்லிய நவநீத வசனம்.

(22-ம் பக்கத்தொடர்ச்சி)

### (மாயையின் சொரூபத்தைப்பற்றிய வினுதல்)

**சீடன்:**—"மாயையென்ற கரிய மேகங்களை யோட்டவல்ல சண்ட மாருதம் போன்ற குருசுவாமிகளே! (1) மாயை யென்பது எப்படிப்பட்டது? (2) அதை யுடையோர் யார்? (3) அதன் உற்பத்தி எப்படி? (4) அது என்வந்தது? (5) மாயை யென்பது பிரம்மத்தினும் வேருகிய ஒரு பொருளெனின், ஏகம் என்பதின்றி இரண்டுபொருள்கள் உளவென்ருமே. (6) மாயையும் பிரம்மமும் ஒன்றெனின், பிரம்மமும் மாயையைப்போல் பொய்யாகுமே. இச்சந்தேகங்களை நிவர்த்தி செய்யப் பிரார்த்திக்கிறேன்" என்ருன்.

**ஆசான்:**— (1) மாயை யிப்படிப்பட்ட தென்று கூறமுடியாததால் அது அவாச்சிய வடிவாகும். அதாவது வார்த்தைகளால் விளக்கிக்காட்ட முடியாதது. அநிர்வசநீயம் எனினும் அதேபொருள்.

(2) யார், நான் எனது என்ற பற்றுடையோராய், தேகமே நாம் என்ற அபிமான முடையோராய், பிரபஞ்சம் மெய்யென்ற மயக்கமுடையோரா யிருக்கிருர்களோ அவர்களே மாயையை யுடையோர்.

(3) இத்தன்மையான தென்று வாக்கால் கூற முடியாத அம்மாயை இன்னவிதமாக உண்டாயிற் றென்று கண்டவர் ஒருவருமில்லை.

(4) விசனகரமான அம்மாயை என் வந்ததென்ருல், "நாமார்? இவ் வுலகம் யாது? இது வந்தவாறெங்கன்?" என்ற விசாரணை யில்லாததால்.

இந்தமாயை தோற்றப்படாதது. ஓர் இந்திரஜாலக்காரனுடைய மணி மந்திரரூபமான சத்தி அருவமானதால் தோற்றப் படுவதில்லை. அவன் விளையாடியபின் அச்சத்தியின் காரியமாகத் தோன்றும் நாமரூபமான நகரங்கள், ஜனங்கள், மிருகங்கள் முதலியவற்றைக் காண்பதாலேயே அவனுடைய மந்திரசத்தியை யுணர்கிருேம். அவன் விளையாடுவதற்குமுன்பு அது தோற்றப் படுவதில்லை. இவ்வாறே பிரம்மத்தின் கண் எண்ணிறந்த சத்திகளுள; அவற்றை யொருவரும் கண்டறியக் கூடாது. எங்கும் விரிந்துள்ள பிரபஞ்சத்தைக் கண்டே அநுமானத்தால் அச் சத்திகளை யுணர்கின்ருேம்.

(5) இந்திரஜாலங் காட்டும் மாந்திரீகனைத்தவிர அவன் சத்தி வேருனதல்ல. அது போல் மாயை பிரம்மத்திற்கு வேருயில்லை. மாயை பிரம்மத்தின் வேறெனின் வஸ்துவும் ஏகம் என்பதின்றி இரண்டாகுமே என்ற சந்தேகத்தை யொழிப்பாயாக.

(6) இந்திரஜாலக்காரனுடைய ஜாலவித்தை பொய்யாய்ப் போக அதைக்காட்டும் மாந்திரீகன் மட்டும் மெய்யாக விருப்பதுபோல, மாயையும்



மாயா காரியங்களும் பொய்யாய்ப்போகப் பிரம்மம் மட்டும் உண்மையாக வுள்ளதென் றறியவேண்டும். ஆகையால் மாயை பிரம்மத்தைவிட வேறல்ல வென்றும், ஒன்ரு யிருப்பினும் பிரம்மம் மாயையைப்போல் பொய்யாகாமல் மெய்யாகவே யுள்தென்று மறிந்து, பிரம்மமும் மாயையும் ஒன்றெனின் மாயையைப்போல் பிரம்மமும் பொய்யாகுமே என்ற ஐயத்தை யகற்றுவாயாக.

[மாயை, அவித்தை, ஆவரணம், விக்ஷேபம், அஞ்ஞானம், சத்தி, பிரகிருதி என்ற எல்லா வார்த்தைகளும் ஒன்றையே குறிக்கும். மாயையின் தொழிலினுள்ள பலவகைகளால் அதற்கு அவ்வாறு பல பெயர்கள் வந்தன. இதனுல்தான் எண்ணிறந்த சத்திகளென்றது. மாயை உற்பத்தியில்லாததால் அநாதியாகும். மாயை முக்கியமாக ஆவரணம் விக்ஷேபம் (மறைப்பு, தோற்றம்) என்ற இருபகுதியா யுள்ளது எனலாம். மாயா காரியமாகிய இப்பிரபஞ்சம் எப்போதுண்டாயிற்றென்று கூறமுடியா ததலின் அநாதி. இப்பிரபஞ்சமாகிய மாயையின் தோற்றம், கானல் நீர் பொய்யென் றுணர்ந்த பின்பும் தோன்றிக்கொண்டே யிருப்பதுபோல், இருந்துகொண்டே யிருக்கும். அதனுல் மாயையும் பிரம்மத்தைப்போல் நித்தியமே என்பர் ஓர் சாரார். ஆனுல் சீவன் சம்பந்தப்பட்ட வரையில் இம்மாயை யழிக்கக் கூடியதேயாகும். அனுபவமாக மாயையை வென்ருேரே ஞானத்தை யடைவார்கள். ஆகையால் அச்சந்தர்ப்பத்தில் மாயை அநித்தியமே. அதாவது என்று பிரம்மம் உண்டோ அன்றே மாயையுமுண்டு. பிரம்மம் உள்ள மட்டும் மாயைக்கு அழிவில்லை. அஞ்ஞான நிலையிலுள்ளோர்க்கு மாயை நித்தியமாகவே தோன்றும். தன்னை யறிந்த ஞானி மாயை பொய்யென் றுணர்வான்.

இன்ன விதமானதென்று அறியப்படாத இம்மாயை அனுபவத்தில் மனதை யன்றி யன்னியமாக இல்லை யெனலாம். உண்மையில் "யாதொன்றில்லாதது அது மாயை யாகும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

"மாயை யெனுமிவ் வுரைக்கருத்த மதிக்கின் யாதொன் றிலாததுவே
மாயை யெனவிப் படியிருக்க மதிப்ப ரதனை யிருவகையாய்
மாயை மெய்யென் றுரைத்திடுவர் மயக்கப் பட்டுத் தனைமறந்தோர்
மாயை பொய்யென் றுரைத்திடுவர் மயக்க நீங்கித் தனையறிந்தோர்"
(ஸ்ரீ குமாரதேவர் - அத்துவித உண்மை.)

நமது நிஜ சொரூபத்தை நாம் மறந்ததே மாயை யாகும். மறைப்பு என்ற ஒன்று இருக்கிற வரையில் நினைப்பு என்பதும் உண்டு. இந்த மறப்பு நினைப்பு என்ற இரண்டும் மனதின் தொழிலாக விருக்கின்றன. ஆதலின் மனமே மாயை யாகும்.

"மனமன மெங்குண்டு மாயையு மங்குண்டு
மனமன மெங்கில்லை மாயையு மங்கில்லை
மனமாயை யன்றி மற்றொன்று மில்லை
பினையாய வேண்டாம் பிதற்றவும் வேண்டாம்
தனையாய்ந் திருப்பது தத்துவந் தானே."

என்றனர் ஆன்றோர். (பாடுதுறை.)

"இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணிநான் பார்க்கில்
நினைப்பு மறப்புமாய் வந்த - வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி - சங்கர."

என்றனர் மெய்ஞ்ஞானச் செல்வராகிய நமது தாயுமான சுவாமிகள்.

இம்மனதின் உருவ நாசம் சீவன் முத்தியிலும், அருவ நாசம் விதேக முத்தியிலும் சித்திப்பதால் மாயை யழிக்கக் கூடியதே. இதனால் மாயை அநாதி, ஆனால் அநித்தியம் - பிரம்மம் அநாதி நித்தியம், என்பதே அனுபவம்.

இப்பிரபஞ்சம் முழுமையும் மாயா சொரூபமே. நாமரூபத்தை யன்றிப் பிரபஞ்சத் தோற்றமில்லை. நாமரூப நாட்டம் விடின் மாயை யொழிந்ததாகும். மனமும் மாயையே யாதலானும், மனதிற்கு நாமரூபத்திலேயே பற்றுதலானும் மனமும் ஒழிந்ததாகும். அப்போது ஆன்ம சொரூபம் தோன்றும்.

பிரபஞ்சத் தோற்றமாகிய மாயையால் நமக்கு ஒரு கெடுதியு மில்லை. அதை மெய்யென்று எண்ணும் அஞ்ஞானமாகிய மாயையே நமக்கு இப்பந்தத்தை யுண்டாக்கி யிருக்கின்றது. அதிட்டானமாகிய கயிறு தோன்று மட்டுமே ஆரோபமாகிய பாம்பு மெய்யாகத் தோன்றும். கயிறு தோன்றியதே ஆரோபமாகிய பாம்பு பொய்யென்று விளங்கிவிடும். அதுபோல், தன் நிஜ சொரூபத்தை யறிந்தபோது, இப்பொய்ம் மாயை யில்லை யென்று இயல்பாகவே தோன்றும். அப்போது பிரபஞ்சத் தோற்றமும் பொய்த் தோற்றமென்று விளங்கிவிடும். ஜக, ஜீவ, பரம் என்ற மூன்று பகுப்புகள் ஒழிந்து எல்லாம் ஏக சொரூபமாகவே விளங்கும்.]

(குரு இச்சத்தியின் இருப்பைப்பற்றி இன்னும் கூறுகிறார்.)

இத்தகைய அநிர்வசநீயப் பொருளாகிய இம்மாயை இருக்கிறதென்று எப்படிக்கூறுவது என்று கேட்பாயேல், அசேதனமாகிய புல், பூண்டு, செடி முதலியவை யனைத்தும் வளர்வதும், பூக்கும் காலத்தில் பூப்பதும், காய்க்கும் காலத்தில் காய்ப்பதும், பழுத்து உதிருங் காலத்தில் உதிர்வதும், முட்டைக்குள் இருந்து உற்பத்தியாகும் குஞ்சு பல நிறங்களை யுடைத்தா யிருப்



பதுமாகிய பெரிய அதிசயத்தைப் பார். இவற்றிற்குள் பிரம்மத்தின் சிற்சத்தி யில்லாவிடில் சராசரப் பொருள்களின் சுபாவங்க ளனைத்தும் தலை கீழாக மாறிவிடும்.

(சீடன் மாயையின் நிவர்த்தியைப்பற்றி வினவுதல்.)

சீடன்.—ஒருவராலும் அறியக் கூடாததும், இன்ன விதமானதென்று சொல்ல முடியாததும் நாமரூபப் பிரபஞ்சமாகிய இப்பயிருக்கு ஓர் வித்துப் போன்றதும் என்று தாங்கள் கூறிய இம்மாயையை நிவர்த்தி செய்யும் மார்க்கம் எது?

அது நிவர்த்திக்கக் கூடாதெனில் பிரம்மத்தை ஏக சொரூபமாகப் பாவிப்ப தெப்படி? முத்தி கூடுவ தெப்படி? இவற்றைக் கிருபையோ டருள் புரியப் பிரார்த்திக்கிறேன்.

குரு:—குழந்தாய்! மணிமந்திர ஔஷதங்களால் வாயுத் தம்பனம், ஜலத் தம்பனம், அக்கினித் தம்பனம் செய்யும்போது வாயு, ஜலம், அக்னி இவற்றிலுள்ள சலனம், திரவத்தன்மை, உஷ்ணம் ஆகிய இச்சத்திகள் மறைந்து போகின்றனவன்றோ. அது போலவே நீ ஏகாக்கிர சித்தத்தோடு பிரம்மம் மாத்திரமாக நின்று வேறொன்றையும் நினையாதிருப்பாயேல் அம்மாயையாகிய சத்தி மறுபடி தோன்றாது ஒழிந்து போம். இதைத் தவிர இதற்கு வேறே மந்திர மொன்றும் சுருதிகளில் கூறப்பட் டிருக்கவில்லை.

சாதாரணமான மண்ணில் குலாலன் தண்டச் சக்கரத்தைக் கொண்டு ஒரு குடத்தை யுண்டாக்குகிறான். அங்கிருப்பது மண்ணே யாயினும் அதற்குண்டாயிருக்கும் உருவத்தினாலேயே யதைக் குடம் என்கிறோம். குயவன் சக்கரத்தைக் கொண்டு தன் கிரியைச் செய்வதற்குமுன், அம்மண்ணில் மறைந்திருந்த சத்தியே, குயவன் செய்கைக்குப் பின் அந்த நாமரூபமாகிய காரியமாக வெளிப்பட்டது. மண்ணைத் தவிரக் குடமில்லை யாதலின் மண்ணையே குடம் என்கிறோம். அக்குடம் உடைந்துபோனால் (அதாவது நாமரூபம் நசித்தால்) மறுபடி மண் என்கிறோம். குடம் என்பது வாய்ச் சொல் மாத்திரமே.

குடம் உண்டாவதற்கு முன்னிருந்தது மண்ணே; உண்டானபோது குடமாகத் தோன்றுவதும் மண்ணே. குடம் அழிந்தபின் இருப்பதும் மண்ணே. இதனால் முக்காலத்தும் இருப்பது காரணமாகிய மண்ணே. காரியமாகிய குடம் என்பது நம் வாயால் கூறப்பட்டு மறுபடி மறைந்து போயிற்று. குலாலனுடைய தொழிலுக்கு முன் குடமில்லை. குடமுடைந்த பின்னும் குடமில்லை. குடம் என்பது இடையில் தோன்றி மறைந்தது. ஆகையால் காரணமாகிய மண்ணே சத்தியம். காரியமாகிய

குடம் நிலையற்ற பொய்யே. இடையில் தோன்றிய காரியமாகிய குடமாக அதைப் பார்ப்பதை விட்டு, முக்காலத்துமுள்ள மண்ணாகவே காண்பதுதான் சத்தியம். இவ்வாறே தாட்டாந்தத்தில்,

*மாயாகாரிய மாகிய நாமரூபப் பிரபஞ்சம்பொய்; வாக்குமாத்திரமே யாகும் மாயைக் காதாரமாகிய பிரம்ம சொரூபம் ஒன்றே சத்தியமாகவுள்ளது. ஆகையால் மாயா கற்பிதமாகிய நாமரூபத் தோற்றமனைத்தும் பொய்யே யென்று மறந்து, சின்மயவடிவான பிரம்மசொரூப மாத்திரமாய் இருப்பாயாயின் மாயை யொழிந்துபோம்.*

[மேலே குமாரதேவர் கூறியதாக நாம் கூறியுள்ள "நாமரூப நாட்டம் விடின் நமது சொரூபம் தோன்றியிடும்" என்ற வாக்கியம் ஈண்டு சிந்திக்கத்தக்கது. இருள் நீங்கினால் வெளிச்சம் தோன்றியதாகும்; வெளிச்சம் தோன்றியதெனின் இருள் நீங்கியதாகும். நாமரூபநாட்டம் விடின் சொரூபம் தோன்றும்; சொரூபமாத்திரமாக நிற்பின் நாமரூபத்தோற்ற மொழியும்.

இருப்பது மண்ணும் குடமும். ஆனால் உண்மையில் இரண்டு பொருளில்லை; மண்ணே குடமாகத் தோன்றுகிறது. 'குடம்' என்பது சொல் மாத்திரமேயாகும். நாம் "குடம் அழகாக விருக்கிறது, பெரிதாக விருக்கிறது, இலேசாக விருக்கிறது" என்று விவகரிக்கும் போது மண் என்பதை மறந்து பேசுகிறோம். மண் என்பதைப்பற்றியே கவனிக்கும்போது "இது நல்ல மெழுகுபோன்ற சிவப்பு மண், கற்கள் கலப்பில்லாதது" என்று கூறுகிறோம். அப்போது குடம் என்ற உணர்ச்சியே யில்லை. ஒன்றே மற்றொன்றாய்த் தோன்றுவதால் எதை நோக்குகிறோமோ அதுமட்டுமே தோன்ற மற்றொன்று மறையும்.

தாஷ்டாந்தத்திலும், உள்ளது நாமரூபமும், சச்சிதானந்த மயமாகிய பிரம்மமுமே. உண்மையில் இரண்டில்லை. பிரம்மசொரூபம் ஒன்றேயுள்ளது. அதுவே நாமரூபப் பிரபஞ்சமாகத் தோன்றுகிறது. பிரம்மமே மண்போல் முக்காலத்து முள்ள சத்தியப்பொருள், பிரபஞ்சம் குடம்போல் பொய். பிரம்மசொரூபமே நாமரூபமாகத் தோன்றுவதால் நாமரூப நாட்டத்தை விடின் பிரம்மசொரூபமே தோன்றும், அல்லது பிரம்மசொரூப நாட்டமாய் நின்றால், நாமரூபம் மறைந்துபோம். பிரபஞ்சத்தோற்றம் பொய்யாய்ப் பழங்கனவாய்ப் பறந்துபோம்.

மேற்கண்ட இரண்டு மார்க்கங்களில், அவரவர் அனுபவத்தின்படி எம்மார்க்கம் சுலபமாகத் தோன்றுகிறதோ அம் மார்க்கத்தைக்கைப்பற்றி அப்பியசிக்க வேண்டும். பிபீலிகாமார்க்கம் விகங்கமார்க்கம் என்ற இரண்டில் இது விகங்கமார்க்கமாகும். ஏககாலத்தில் மாயையை நீக்கிநிற்கும் இவ்வப்பியாசம் யாவராலும் செய்யக்கூடிய தல்ல. இது மனோலயம் வாய்ந்த அதி



தீவிரபக்குவிக்கே உரியது. மனதை வென்றாலன்றி மாயை யொழியாது. மனமே மாயையா யிருத்தலின்.

"பிறப்பிறப்பாம் பெயருடைய விந்தமாயைப்
பெருமையினை முடிவுபெறப் பேசவொண்ணா
வறப்பெரிய தன்மனத்தை வென்றான்மாறு
மல்லதொரு வகையாலு மகற்றலாகா (வாசிட்டம்)
* * * * *"

மண்ணையன்றிக் குடமில்லை, பொன்னையன்றிப் பணியில்லை. உள்ளது மண்ணும் பொன்னுமே. குடம் என்பதும் பணி என்பதும் வார்த்தைமட்டுமே அதுபோலவே மனதினின்று முதிக்கு மிப்பிரபஞ்சம் சொரூபத்தை யன்றி வேறில்லை. யாவும் சொரூபமேயாகும்.

"உன்னுறு மனத்தினாலே யுலகமா மிந்திர சாலந்
துன்னுறும் பணிக ளென்னுஞ் சொற்பொருட் பொன்னையன்றி
யன்னிய மில்லைப் பொன்னாற் பணியென வறைய வேண்டா
பன்னிய உலகாஞ் சொற்குப் பரமன்றிப் பொருள்வேறில்லை"
(வாசிட்டம்)

அதுவிதுநீ நான்முதலாய்க் காண்பதெல்லா
மணுவுமில்லை யணுவுமில்லை யணுவுமில்லை
யெதுவெதுதான் திரிசியமா யெங்கேயெங்கே
யெவ்விதமாய்த் தோற்றினுமத் தோற்றமெல்லாந்
திதமருவுந் திருக்கான பிரமமேயாந்
திலமளவு மையமிலைச் சத்தியந்தா
னிதமனைய பரப்பிரம நானேயென்று
நிகழ்பிரம நிச்சயமே தருப்பணங்காண். (ரிபுகீதை.)]

(தொடரும்.)

சீடன்.

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(33-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நரகங்கள்:—மூஷாவஸ்தை, வஸாகூபம், சுலபட்சம், மூத்திரபானம், சல்மல்லியா ரோகணம், இரக்தபோஜனம், கிருமிபோஜனம், சுவா மாம்சபோஜனம், அக்கினிஜ்வாலா பேசனம், சிலா விருஷ்டி, வன்னி விருஷ்டி, காலசூத்திரம், க்ஷாரோர்தம், உஷ்ணதோயம், அதச்சிரச்சோஷணம், க்ஷாரஸேவனம், பாஷாண யந்திரபீடை, மருப்பிரபதம், புரீஷலேபனம், கிருகசதாரணம், புரீஷபோஜனம், ரேதஸ்பானம், சந்திதாகனம், அங்ககாரசையாப் பிரமணம், முசலமர்த்தனம், பகுகாஷ்ட யந்திரகர்ஷணம், சஸ்திரபேதனம், பதனோத்பதனம், சதாதண்ட நிபீடனம்,

கஜகந்தஹனனம், நாஞபுஜகதம சனம், தூம்பானம், பாசபந்தம், நாஞசூலநிபீடனம், முகக்ஷாரோதசு நிஷேசனம், க்ஷாராம்புபானம், தப்தாயசூசிபட்சணம், க்ஷாராம்பு பூர்வாரந்திர பிரவேசனம், மேகபோஜனம், ஸ்நாயுச்சேதனம், ஸ்நாயுதாகனம், அஸ்திபேதனம், சிலேஷ்மாரனம், பித்தபானம், மஹாதிந்த நிஷேவணம், அத்யுஷ்ண தைலபானம், க்ஷாரோதகபானம், கஷாயோதகபானம், தப்தபாஷாண போஜனம், அத்யுஷ்ண வலிததாஸ்நானம், தசன்மாத்தனம், தபதாயசபனம், சந்தப்தாம்பு நிஷேவணம், சூசிபிரக்ஷேபணம், சிச்நாயோ பாரபந்தனம், விருஷ்ணயோ பாரபந்தனம், விருக்ஷாக்கிர பதனம், தீக்ஷ்ண தாரஸ்திரசையை எனநரகவேதங்கள் பலவாம். இவை ரௌரவம் கும்பீபாகம் முதலாகக் கூறப்பட்ட நரகங்களின் பிரிவுகளாம். நன்றிமறந்தவர்கள், தாய்தந்தையரை நிந்தித்தவர்கள், சகோதரதுரோகம் செய்தவர்கள், குருதுரோகம் குருநிந்தை செய்தவர்கள், அக்னி சாக்ஷியாகக் கைப்பிடித்த மனைவிக்கு இடுக்கண் விளைத்தவர்கள், கொண்ட புருஷனுக்குத் துரோகஞ் செய்தவர்கள், திருடினவர்கள், கொலை செய்தவர்கள், பெரியோரை அவமதித்தவர்கள், சுயமத விரோதிகள், தெய்வத்தை யிகழ்ந்தவர்கள், தர்மத்தைக் கெடுத்தவர்கள், தர்மசொத்தை யபகரித்தவர்கள், விசுவாசகாதகர்கள், வைதிக நிந்தனை செய்தவர்கள், இராஜதுரோகிகள், எஜமான துரோகர்கள், குடும்பங் கலைத்தவர்கள், பொய்ச்சாட்சி சொன்னவர்கள், பொய்ப் பத்திரம் பிறப்பித்தவர்கள், பிறரைப் பழித்தவர்கள், வாழுங்குடிக்குத் தீங்குசெய்தவர்கள், சிநேகதுரோகிகள், கொடுப்பதைத் தடுத்தவர்கள், ஜப ஆசாரஹீனர்கள், எப்பொழுதுங் கெட்ட சித்த முள்ளவர்கள், முதலான பாபிகள் இந்த நரகங்களை யடைந்து சதா துன்பத்தையே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள்.

இங்ஙனங் கூறிய நரகங்களிற் சென்று அங்கு துன்பத்தை யனுபவித்த பின்னர் அந்தப்பாப சேஷத்தினால் மீண்டும் புவியிற் பிறப்பார்கள் "வேதாகமங்களையோதி யந்நெறி தவறாம லனுட்டித்தவர் சொர்க்காதி போகபூமியிற் சென்று அங்குள்ள போகங்களை யனுபவித்து, முடிந்தபின் மீண்டும் பூலோகத்தில் உயர்ந்த குலத்திற் பிறந்து, வேதாகம விதிப்படி நடந்து பின் சாலோக சாமீப சாரூப பதவிகளைப் பெற்றுப் போகத்தில் வெறுப்புத்தோன்றியவுடன் சாயுஜ்ய மென்கிற மீளாக்கதியைப் பெறுவார்கள்." வேதாகம விதிகடந்து கொலை, களவு, வியபசாரம், பொய்கூறல், பிறர் பொருளை யபகரித்தல், பிறர் நிந்தை, குருநிந்தை, தெய்வநிந்தை, சிநேகதுரோகம், ஏழைகட்கிரங்காமை யாதி மஹா பாதகங்களைமகிழ்ந்து செய்தவர் நரகலோகங்களிற் சென்று அங்குள்ள துன்பங்களை யனுபவித்து முடிந்தபின் மீண்டும் பூலோகத்தில் புல், பூண்டு, செடி, கொடி மரங்களாகியதாவர ஜந்துக்களாகவும், நாய் பன்றி முதலிய ஈனஜனன ஜந்துக்களாகவும், மனிதரில்



இழிகுலத்தில் குட்டம், தொழுநோய், குருடு, செவிடு, கூன் முதலிய நோயாளராகவும் ஜனித்துப், பாபசேட மகிமையால் மீண்டும் பாபகன்மங்களையே செய்து நரகங்களிற் சென்று வருந்தி யங்குமிங்குமாக அலைந்து கொண்டே யிருப்பார்கள்" என்று சிவ தருமோத்தரங் கூறியது. இவ்வாறே உண்மைநூல்க ளெல்லாம் கூறுகின்றன. இவ்வகையான மறுபிறப் புண்மையைக் காரணமாகக் கொண்டே புண்ணியாபி விருத்திக்கும், பாபநாசத்துக்கும் ஏற்ற கருமங்களை நூல்கள் விதித்திருக்கின்றன. சகலாண்ட சராசரங்களையும் படைத்துக்காக்கு மொரு தெய்வ முண்டென்றும், சொர்க்க நரகங்களுண்டென்றும், பாபபுண்ணியங்க ளுண்டென்றும், அவற்றின் பயனைச் சொர்க்க நரகங்களில் அனுபவிக்கவேண்டு மென்றும், அதன் பின் மறுபிறப்புண் டென்றும், நம்புகிறவர்களே ஆஸ்திகரென்னப் படுவார்கள். அவர்களே நாம் கூறிவந்த விதிவிலக்குகளை யறிந்து நன்மார்க்கத்தில் நடந்து நற்பயன் பெறுகிறவர்கள். மறுபிறப்புண்டு என்கிற நிச்சயமான நம்பிக்கையிலேயே நமது மதம் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது. அப்பிறப்புகளை யடையாமல் தப்பித்துக்கொள்வதே முக்தி யென்னப்படும். இப்பிறப்புகள் கன்மகாரணமாக வருதலால் அக்கன்மங்களை யொழிக்க வேண்டுவது அவசியமாயிற்று. அதற்கேற்றவாறே விதிகளு மேற்பட்டுள்ளன. இவ்விதிகள் அநாதி, முத்தி, சித்துருவனான ஸ்ரீ பரமேசுவரனாலேயே வேதங்களில் விளக்கப்பட்டன வாதலால், அவற்றைக் கைக்கொண்டு ஒழுகி நற்கதி பெறுவதே நமக்குறுதியாம்.

இவ்விஷயத்தைக் குறித்துப் பலவகையான கேள்விகளை யெழுப்புவர் சிலர். இவர்களுக்கு ஆன்மப் பொருளுண்டென்பது தெரியாது. பூதக்கலப்பினாலாகிய சரீரமே பொருளெனக் கொண்டவர்கள். இவர்கள் ஸ்தூலப் பொருள்களைச் சோதித்து அம்மட்டில் திருப்தியடைந்து மறுபிறப்பில்லையென்பார்கள். அவருள் ஒருசாரார் உலகம் அநாதி, சிருஷ்டிப் பொருள்களுண்டாவது இயற்கையாலேயே. இச்சரீர மழிந்தால் அதுமறுபடியு முண்டாகுமென்பது நம்பத்தக்கதல்ல என்பர்; மற்றொருசாரார் உலகந் தற்செயலால் மாறிமாறி வருந்தன்மையுள்ளது. ஒருதர முண்டான சரீரவமைப்பு மறுதரமுண்டாவது சமுசயமே யென்பர். இவர்களுக்கும் ஆன்மப்பொருளிற் சந்தேகமே. ஆன்மாவென்ப தொன்று இல்லையெனக் கொண்டவர்களே. இனி அணுக்களால் உலகமுண்டா மென்பது ஆஸ்திக நாஸ்திகர் இருவருக்கும் ஒப்பமுடிந்தது. அணுக்கள் பரமாணுக்களாய் எவ்வித கருவிகளாலும் கண்டறிய முடியாதனவாம். இவைகளே பரமாணுக்கள் என்னப்படும். இவ்வாறு ஜடம், சித் என இருவகையாம். இவற்றுள் ஜடவணுக்கள் சரீராதி கருவி கரணங்களுக் காதாரமாய் நிற்பன. சித்து என்பதே ஆன்மாவாம். அணுவென்பன வெல்லாம் அநாதி நித்தியமாம். அநாதி நித்திய மென்பன வெல்லாம் அழிவற்றனவாம். இவற்றுள் சித்சொரூபமான ஆன்

மவனு தனித்து நிற்பதில்லை. எப்பொழுதும் ஒரு சரீரத்தை அவாவியே நிற்பதாம். அச்சரீரமும் ஸ்தூலம் சூட்சுமம் காரணமென மூவகைப்படும். இவற்றுள் ஸ்தூலம் எல்லாராலு மறியக்கூடியது; சூட்சுமம் யோகிகள் யோககாட்சியிற் காண்பது. சொர்ப்பனுவஸ்தையில் நடக்கும் விவகாரங்களெல்லாம் சூட்சும சரீரத்துக்கேயாம். காரணசரீரத்தைப் பற்றித் தெய்வம் என்னும் விஷயத்தில் விவகரிப்போம். காந்தத்துக்கும் இரும்புக்கு முள்ள திராவக சக்தியைப்போல ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் இயக்கச் சத்தியுண்டு. இவ்வான்ம வணுவின் சூட்சுமசரீரத்தில் பலவணுக்கள் வந்துகூட அது ஸ்தூல சரீரமாகப் பரிணமிக்கும்; பரிணமித்தபோது, அச்சரீரத்துக்கு அவயவப் பாகுபாடுகள் காணப்படும். அச்சரீரத்தில் ஆன்மா அணுரூபமாய் வசித்துக் கண் முதலிய ஞானேந்திரியங்களால் விஷயங்களை யறிந்து, கன்மேந்திரியங்களினால் கன்மங்களைச் செய்துகொண்டு சுகதுக்கங்களை யனுபவியாநிற்பன். காந்தமும் இரும்புங் கூடியகூட்டம் காலாந்தரத்தில் அவற்றின் சக்தி குன்றிவிடுவதுபோல ஆன்மாவும் சரீரமும் பிரியும். இதுவே மரணமெனப்படும். காந்தமும் இரும்புங்கூடிய கூட்டத்தை மற்றொருவன் பிரித்து வேறுபடுத்துவது போலக் கடவுள் கன்மகாரணமாகப் பிரிப்பர் என்று கூறுவர். எங்ஙனமாயினும் சரீரத்தை விடுவதேமரணமும் சரீரத்தை யடைவதே பிறப்பும் என்பதுமாம். இதனால் சரீரத்துக்கு வேறாக ஆன்மப்பொருளென்றொன் றுண்டென்பதும், அதுபரமாணுரூப மாதலால் எவ்வித சோதனையாலுங் கண்டறியமுடியா தென்பதும், அதனைக் கண்டறியும் சக்தியற்றபதார்த்த சோதகர்களே சரீரத்தையே பொருளெனக் கொண்டு, அது அழிந்தால் மீண்டு முற்பத்தியாவதில்லையென்றுங் கூறுவார்கள். யோக காட்சியால் ஆன்மப்பொருளைக் கண்டறிந்தவர்கள் ஆன்மா வேறு, சரீரம் வேறு, சரீரம் அழியுந்தன்மை யுள்ளது, ஆன்மா அழிவற்றது என்று கொள்வர். அழிவற்ற வான்மப் பொருள் எப்பொழுதும் ஒரு சரீரத்தையே அவாவிநிற்கு மியல்புள்ள தாதலால், தான் முன்கொண்ட சரீர மழியவே வேறொரு சரீரத்தை அவாவிச் செல்லும். அச்சரீரத்தைப் பெறுமளவும் சூட்சும சரீரத்துடன் அலையா நிற்கும். அப்பொழுது கருவி கரணங்களற்றுள்ள தாதலால் சுக துக்கங்களை யுணராது. தன் இயற்கையறிவு விளங்கும்படியான ஓர் சரீரத்தை யடைந்தே தீரும். அநாதி நித்தியமாகிய வான்மப் பொருளுக்கு அநாதியாகவே சரீர சம்பந்த முண்டு. அவ்வான்மா சரீரத்தை விட்டுத் தனித்து நில்லா வியற்கை யுடையது. கல் கட்டைகளைப் போன்ற சரீரத்தை நடத்து மியல்புள்ளது. ஆன்மாவின்றிச் சரீரந் தானே அசையாது. ஆன்மா சரீரத்திலுள்ள வுறுப்புகளில் ஒன்றாகாமல் தனித்து அச்சரீரத்தில் வசிக்கும் அணுப்பொருளே. அது சரீரத்தைப் பெறு மியல்புள்ளதாயினும் இதே சரீரத்தை மறுபடியும் பெறுமென்பது உசித மாகாதெனின், இதே சரீரத்தை மீண்டும் பெறுமென்று யாம் கூறவில்லை. மற்றோர் சரீரத்தைப்



பெறும். சரீரமின்றி யிராது என்பதேயாம். இனி யாம் கூறுவது ஆன்மா என்பது ஓர் அணுப்பொருள்; அது ஓர் சரீரத்தை யவாவியே நிற்குந் தனிப்பொருள். அது சித்துருவம். சரீர வுறுப்புகளில் ஒன்றாகாமல், வேறாய்ச் சரீரத்தில் நின்று அச்சரீரத்தை நடத்தும் வன்மையுள்ள பொருள். பிணி முதலியவற்றால் தான் கொண்ட சரீரம் மெலிந்து சக்தியற்றுப் போனால் அதைவிட்டு வேறொன்றை நாடிச்செல்லு மியல்புள்ளது. "கர்மேந்திரிய ஞானேந்திரியங்களைக் கொண்டு விஷயங்களை யுணர்ந்து கன்மங்களை யியற்றுந் தன்மை யுள்ளது, எவ்வித கருவிகளாலுஞ் சோதித்தறிய முடியாதது. நித்தியமானது" என்பதே நமது வேதங் கூறிய ஆன்ம விலக்கணமாம். இவ்வித இலக்கணங்களை யுணராதார் ஆன்மாவைச் சோதித்தறிந்து கூறுவது கூடாத விஷயமாதலால் அவர் கூற்றை யாம் கவனிக்க வேண்டியதில்லை யென்க.

இனி யொரு சாரார், ஆன்மா சரீரத்தின் பொருளல்ல. அறியுந்தன்மை மூளையினதே. சரீரத்துக்கு வேறாக ஆன்மாவென்று ஒரு பொருளிருப்பின் அதற்கு மறுபிறப்புண்டென்று கொள்ளக்கூடும். அஃதில்லை. அறிவைக் கொண்டு அவ்வறிவுள்ளதே யான்மா வென்போமானால் அது பொருந்தாது. அறியுந்தன்மை மூளைக்குரியதே யாதலால் ஆன்மா வுண்டென்பது நம்பத் தக்கதல்ல. சரீர மழிந்துபோவது பிரத்தியட்ச மாதலால் சரீரத்துக்கோ ஆன்மாவுக்கோ மறுபிறப்புண்டென்று ஒப்புக்கொள்வது உசிதமாகா தென்பர்.

மூளை யென்பது அறியுந்தன்மை யுள்ளதல்ல. கண், காது முதலிய வுறுப்புகளைப்போல் அதுவு மொரு ஞானேந்திரியமே. இதனையே துவாதசாந்தக் கருவி யென்றும், அறிவுக்குப் பிரதான ஸ்தானமென்றும், பரமான்மாவுக் கிருப்பிட மென்றும் நமது யோக நூல்கள் கூறுகின்றன. கண், காது, மூக்கு முதலிய கருவிகள் நோயால் மெலிந்துபோ யிருக்கும்போது அக்கருவிகளைக்கொண்டு ஆன்மா விஷயங்களை யுணரமுடியாம லிருப்பதுபோல மூளையும் வியாதியால் மெலிந்தபோது உணருந்தன்மை யங்குமில்லை; பூத பிசாசு பீடைகளாலும் ஆன்மா தன்னை மறந்திருக்கிறது. ஆழ்ந்த சிந்தனையி லிருக்கும்போதும் இம்மறதி யுண்டு. யோகிகள் நிஷ்டையி லிருக்கும்போதும் தம்மை மறந்து சீதோஷ்ண துன்பங்களை யுணராம லிருப்பது பிரத்தியட்சத்தில் காண்கிறோம். நல்ல தூக்கத்திலும் ஆன்மா தன்னை மறந்து ஒன்றையு முணராம லிருக்கிறது. சரீரமே யான்மாவாக விருந்தால் மறந்திருப்பதற்கு யாதுங் காரணமில்லை. ஏனெனில், அந்தச் சுழுத்தி காலத்திலும் சரீரமிருக்கின்றது. மூளையோ வெனின், மூளையு மிருக்கின்றது. சரீரமும், மூளையுங் கூடியிருக்கும்போது அறிவில்லாம லிருப்பதற்குக் காரணமில்லை. அங்ஙனமன்று உதய முதல் உழைத்து மூளை ஓய்ந்திருக்கிறது எனின், அது

பொருந்தாது. ஏனெனில், மூளையிற் சம்பந்தித்து நிற்கும் நாடிகள் வெளி விஷயப் பொருள்களால் அசைவதும், அவ்வசையு தாக்கியதும், மூளையிலுண்டாகும் ஒளியே அறிவு என்று கூறுவதா லென்க. இவ்வித வறிவு அந்தச் சுழுத்தி காலத்தில் இல்லையென்பதைச் சோதகர்கள் ஒவ்வார். இதனுண்மையைச் சோதித்தறிவதும் ஒருவராலு மாகாத விஷயமேயாம். ஏனெனில், மற்றோர் பொருள் நாடிகளில் தாக்கியவுடன் அசைவது நாடிகளின் இயற்கை. அந்நாடிகள் தாக்கின் பிரகாசிப்பது மூளையின் இயற்கை. நாடிகள் தாக்கினு மூளை பிரகாசியா தென்பது இயற்கைக்கு விரோத மாதலால் பொருந்தாமை யுணர்க. (வரும்.)

**சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.**

---

## " நல்லாயன் " தவறுதலும்
## D. G. A. பர்னாண்டஸ் என்பாரின் பொய்க்கூற்றும்.

இந்த ஆகஸ்ட்மீ வெளிவந்த "நல்லாயன்" சஞ்சிகையில் ம-ா-ா-ஸ்ரீ D. G. A. பர்னாண்டஸ் (வைகைவாசி) என்பவர் 'அறியாமைக்கோர் ஔஷதம்' என்ற தலையங்கத்தோடு ஒருகடிதம் வரைந்துளார். இவர் அதில், "ஆனந்தபோதினியில்" நாம் கிருஸ்துமதத் தூஷணையான விஷயங்களை வெளியிட்டிருப்பதாகக் கூறி, நமது சந்தா நேயர்களிலுள்ள கிருஸ்தவ சகோதரர்க ளெல்லாம் 'ஆனந்தனை' யாதரிக்காமல் பவிஷ்காரம் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறார்.

இவருடைய பொய்க்கூற்று துவேஷபுத்தியால் ஏற்பட்டதே யாகும். ஏனெனில், கிருஸ்தவப் பத்திரிகைகளில் "பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் கடவுளாகார்; இந்து மதத்தில் மோக்ஷமில்லை; இந்துக்கள் வணங்குங் கடவுள் மெய்க்கடவுளல்ல" என்பது முதலான கொடிய தூஷணைகள் வரையப்படுவது யாவருமறிந்த விஷயம். அந்தோ ! அவற்றைக் காணும் இந்துக்கள் மனம் எவ்வளவு வேதனைப்படும் என்பது மட்டும் இவர் புத்திக்குப் புலப்படவில்லை போலும். இதையும் நினையாது, ஒருவர் கூறுவது உண்மை தானா வென்பதையும் சிந்தியாமல், அவர்கள்மேல் இல்லாத குற்றத்தைக் கூறும், ஒருவர் துவேஷபுத்தியால்தான் அவ்வாறு கூறவேண்டும்.

நாம் கூறியுள்ளதும், கூறுவதும், " அவரவர்கள் தத்தம் மதத்தை விர்த்திசெய்ய முயல்வது இயற்கையே. ஆனால் கிருஸ்துமத போதகர்களில் சிலர், அன்னியர் தங்கள் மதத்தை விரும்பி அவர்களே வந்து சேரும்படி தங்கள் மதத்தின் விசேஷத்தைப் போதிப்பதை விட்டு, இந்து வாலிபர்களையும் பெண்களையும் தந்திரமாகவும் சூதாகவும் அவர்கள் சுற்றத்தாரை விட்டுப்பிரித்து, எங்கேனும் கொண்டுபோய் மறைத்துவைத்திருந்து அவர்களைக் கிருஸ்தவராக்குகிறார்கள். ஆகையால் அவர்கள் போதனைக்குச் செவிகொடாதீர்கள். அம்மத மாதர்கள் நமது வீட்டுக்குவந்து நம்பெண்களுக்குக் கல்விகற்பிக்கும்படி இடங்கொடாதீர்கள். அனேகர் அப்படிச் செய்து தம்மக்களை யுயிரோடிழந்தனர். இதற்குப்பல அத்தாட்சிகளுண்டு. நமது மதத்தில் உண்மையான மோக்ஷமார்க்கம் கூறப்பட்டிருக்கிறது. ஆன்ம பரமான்ம லட்சணமும், மோக்ஷலக்ஷணமும், ஞானமார்க்கமும் நமது சாத்திரங்களில் கூறப்பட் டிருப்பதுபோல் வேறெதிலும் கூறப்படவில்லை. ஆகையால் அன்னிய மதபோதகரின் மயக்கில் சிக்காதீர்கள்...... " என்று நம்மவருக்கு நாம் அறிவிக்கிறோம். நம்தாய் நாட்டிற்கும், நமது ஜாதிக்கும், மதத்திற்கும், கடவுளுக்கும் இத்தொண்டு புரியவேண்டுவது நமது கடமையாகும். இதைச் செய்வதில்,

" யாமார்க்கும் குடியல்லோம், யாது மஞ்சோம்...... "



தமது மதத்தவர் இந்து மதத்தை வெள்ளையாகத் தூஷிப்பது மட்டும் நமது பர்னாண்டஸ் நண்பர்க்குத் தித்திப்பாக விருக்கிறது. நாம் நமது மதத்தவரை அன்னிய மதத்தில் போய் விழுந்து பின்னால் தவிக்கவேண்டாம் என்று கூறுவது எட்டிக்காயாக விருக்கிறது. இவர் மதவொழுக்கம் இவ்வாறுதான் போதிக்கிறதாக்கும். இவர் நம்மேல் இல்லாக் குற்றத்தைக் கூறி 'ஆனந்தனை' அவதூறு செய்வதோடு, நமது 'ஆனந்தனது' நண்பர்களாகிய எல்லா கிருஸ்தவ சந்தாநேயர்களும் தம்மைப்போலவே குறுகியநோக்கமும் தவறான நியாயமு முடையவர்களெனக் கருதி யவர்களை யெல்லாம் 'ஆனந்தனைப்' பவிஷ்காரம் செய்யும்படி தூண்டுகிறார்.

இவர் கடிதத்தை வெளியிட்ட " நல்லாயன் " பத்திரிகாசிரியர், இவர் நாம் கிருஸ்துமதத்தைத் தூஷித்ததாகக் கூறுவது உண்மையா வென்பதை யறிந்தபின்பே யதை வெளியிட்டா ரென்றே நாம் கருதவேண்டும். ஏனெனில், அது அவருடைய கடமையும் நியாயமுமாகும். ஒருகால் " கடிதம் எழுதுவோரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பல்ல " வென்றாலோ, இது அபிப்பிராயமல்ல; தம் போன்ற ஒரு பத்திரிகாசிரியர் மேலும் ஒரு சஞ்சிகையின் மேலும் மதத்தூஷணை செய்வதாகக் குற்றமேற்றி, அப்பத்திரிகையைப் பவிஷ்காரம் செய்யும்படி கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய விஷயம் உண்மையாவென அறிந்தே அதைவெளியிட வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். ஆகையால்,

" கிருஸ்துமதம் பொய், அதில் கூறப்பட்டது மெய்யான் கடவுளல்ல, அல்லது அதில் மோக்ஷமில்லை, ஏசுகிருஸ்து கூறியது பொய்...... " என்பது போன்ற மததூஷணையான மொழிகள், இதுகாறும் வெளிவந்த 'ஆனந்தபோதினி' சஞ்சிகைகளில் எதில் எப்பக்கத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை நமது சகோதராகிய ' நல்லாயன் ' ஆசிரியர் அறிவிக்குமாறு கோருகிறோம். அல்லது தவறாக நேர்ந்திருந்தால் அதையேனும் கூறித் தமது கடமையை நிறைவேற்றுவாரென நம்புகிறோம்.

**பத்திரிகாசிரியர்.**

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(34-ம் பக்கத் தொடர்ச்சி.)

6. குரு பக்தி:—மாணவர்களே! நீங்கள் எப்போதும் குருவினிடம் பக்தி (அச்சமும் அன்பும்) வைக்கவேண்டும். இன்றேல் நீங்கள் மெய்யான கல்வி யறிவு பெறுவது கஷ்டமே. நம் முன்னோர்க ளெல்லாம் அவ்வாறு குருவுக்குத் தொண்டு புரிந்துகொண்டு கல்வி கற்றதனாலேயே இருமைக்கும் பயன்படத் தக்க கல்வியைக் கற்று, மேதாவிகளாய் விளங்கினதோடு க்ஷேமமாகவே தங்கள் வாழ்நாளைக் கழித்தார்கள். ஏறக்குறைய நாற்பது, ஐம்பது வருடங்களுக்குமுன் வரையிலுங்கூட நம் நாட்டில் குரு பக்தி குன்றாதிருந்து வந்தது. உபாத்திமார்களும் மாணவர்களைத் தங்கள் மக்கள் போல் மதித்து, அவர்களுடைய கல்வி மட்டுமல்ல, ஒழுக்கம், நடக்கை யாவற்றையும் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து ஒழுங்கு படுத்தி வந்தார்கள்.

இப்போதோ மாணவர்களுக்குக் குருவென்ற மதிப்பே யில்லை. உபாத்தியாயர்களும் தாங்கள் பெறும் சம்பளத்திற்கு ஒருமுறை பாடபுத்தகத்திலுள்ளவற்றை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதோடு தங்கள் கடமை கழிந்ததென்று கருதுகிறார்கள். ஆகவே கல்வியும் திருப்தியற்றதாகவும், வயிற்றுப் பிழைப்பு தவிர வேறொன்றுக்கும் பயனில்லாததாகவும் இருக்கிறது.

7. அதிலும் வயிறுவளர்க்க மட்டுமே உதவும் ஆங்கிலங்கற்பிக்கும் உபாத்திமாரிடமேனும் அச்சமட்டு மாவது காட்டுகிறீர்கள். நமது தாய்ப்பாஷையையும், நமது மதாசார ஒழுக்கங்களையும், அரிய முன்னோர் நீதிநூல்களையும் கற்பித்து உங்கள் ஜன்மம் நற்பயன் பெறுமாறு உதவிபுரியும் உபாத்திமார்களைக் கடவுளாகப் பாவிக்கவேண்டும். இதற்காகவே இவர்களுக்குச் சாதாரணமாய் உபாத்தியாயர் என்னாது குரு என்று பெயரிடப்பட்டது. இதைவிட்டு இவர்களைச் சுத்தமாக அலட்சியம் செய்கிறீர்கள். அந்தோ! இது கல்வியாலாய பயனை நீங்களடையா வண்ணம் செய்துவிடுமே யென்று மிகவும் விசனிக்கிறோம்.

நண்பர்களே! உங்கள் சுயநன்மையைக் கோரிக் கூறும் இதை யலட்சியம் செய்யாதீர்கள். இதைக் கவனத்தில் வைத்துக் குருவினிடமும் தாய்ப்பாஷையினிடமும் பூரணபக்தி வையுங்கள்.

கல்வி கற்பது வயிறு வளர்ப்பதற்கு மட்டும் என்று கருதாதீர்கள் என்று முன்னமே கூறினோம். உலக வாழ்க்கைக்குப் பொருளீட்டல் அவசியமே யெனினும், கல்வி கற்பது முக்கியமாக அறிவை விசாலப்படுத்தி ஆண்டவன் அருளைப் பெறுவதற்கே யாகும். ஆகையால் மறுமைப் பயனைப் பெறுதற்கு அவசியமான கல்வியைக் கற்காதவன் ஒருபோதும் கல்வி கற்றத



னாலாய பயனை யடையமாட்டான். அத்தகைய கல்வி நமது தாய்ப்பாஷையில்தா னிருக்கிறது என்பதை நன்குணருங்கள்.

8. நண்பர்களே! ஒரு மனிதனுக்குக் கல்வியினும் சிறந்தது ஒழுக்கம். கல்வியும், ஒழுக்கமும் வெவ்வேறானவை. கல்வி கற்பதனாலேயே நல்லொழுக்கம் படிந்துவிடாது. இப்போதுள்ள பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் நன்னடக்கை போதிக்கப்படுவதில்லை. பிள்ளைகளின் நடக்கை கவனிக்கப் படுவதே யில்லை. சுமார் நாற்பது வருடங்கட்கு முன் ஒரு சிறுவன் மூக்குத்தூள் போடுவதாய் உபாத்தியாய ரறிந்தால், அவன் அவ்வழக்கத்தை யொழிக்கு மட்டும் உபாத்தியாயர் தினம் அவனைக் கவனித்துத் தண்டித்துக்கொண்டே யிருப்பார். இப்போதோ 1, 2, 3, 4-வது வகுப்புகளில் வாசிக்கும் மாணவர்கள், எதிரில் பெரியோர் இருக்கிறார்கள் என்பதைக் கூடச் சற்றும் மதியாமல் புத்தகங்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு டிராம் வண்டியில் உட்கார்ந்தபடி ஸிகரெட் பிடித்துக்கொண்டு செல்வதைக் கண்ணால் காண்கிறோம். அந்தோ! இது கௌரவமான அல்லது யோக்கியமான நடக்கை யென்று ஒருபோதும் கருதாதீர்கள். மேலும் புகையிலையில் உண்டாகும் விஷம் சீக்கிரத்தில் கொடியவியாதிகளை யுண்டாக்குமென்பது நிச்சயம். இத்தகைய அநாசார வழக்கங்களை யெல்லாம் ன்பி பற்றிக்கொண்டு நாம் நாகரீகச் சீர்திருத்த மடைகிறோமென்று கருதுவது நரகலைப் பூசிக்கொண்டு, அத்தர் தடவிக் கொள்கிறேன் என்பது போலாகும்.

உங்களுக்கு ஆசார ஒழுக்கங்கள் போதிக்கப்படாத வரையில் நீங்களே அவற்றைக் கற்றுக் கற்றபடி நடக்க முயல வேண்டும். அப்போதுதான் நீங்கள் முன்னேற்ற மடைவீர்கள். நம் தாய் நாடும் சிறப்படையும். நற்போதனைகளைக் கதைபோல் வாசித்து விட்டு, "ஆம் இதில் கூறப்படுவதென்னமோ உண்மைதான்" என்று அச்சமயம் மட்டும் கூறிவிட்டு, உடனே மறப்பதில் ஒரு பயனுமில்லை. வாசிப்பதில் கூறி யுள்ளபடி நடக்க வேண்டும். அப்படி நடப்போர் சொல்ப காலம் வாசித்தாலும், ஏனையோர் ஆயுள் முழுமையும் படித்தாலும் அடையாத பலனை யடைவார்கள். படித்தபடி நடக்கப் படிக்க வேண்டும்.

"படிக்கும்படி நடக்கப் படிக்கா லோபிகள் மோக்ஷப் பதமற்றுப் போனாலும் போகட்டும்........" என்றார் ஒரு மகான்.

பொய்யா மொழியாராகிய நமது நாயனார் தமது தமிழ்மறையில் கல்வியைப்பற்றிக் கூறவந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலே முதலில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக" என்றருளினர்.

இதன் பொருள் "ஒருவன் கற்கவேண்டிய நூல்களைப் பழுதறக்கற்க வேண்டும். அப்படிக் கற்றபின் அந்நூற்களில் கூறியுள்ள நெறியில் நிற்க

வேண்டும்" என்பதே. அதாவது அவற்றில் கூறியுள்ளபடி நடக்கவேண்டும், அப்போதுதான் கற்றதனாலாய பயனையடைவான் என்பதாம். நண்பர்களே! இத்தகைய ஆன்றோர் வாக்குகளை அலட்சியம் செய்யாதீர்கள்.

9. சகவாசம்:—எப்போதும் கெட்ட நடக்கையுடைய பிள்ளைகளோடு சேராதீர்கள். பாலியவயதில் அதிசீக்கிரமாக ஒருவருக் கொருவர் நேசமுண்டாகி விடுவது சுபாவம். ஒருவருடைய குணங்களையும் நடக்கைகளையும் அறிந்தபின்பே அவர்களோடு சிநேகம் செய்யவேண்டும். சிநேகமுண்டானபின் அது மனமொத்த உண்மை நேசமாய் எப்போதும் பிரியாமலிருக்கவேண்டும். சிநேகருக்குள் பொறாமை, வஞ்சனை, கபடம் இவைகளிருக்கலாகாது.

சகவாசத்தால் ஒருவர் குணம் நடக்கைகள் இன்னொருவருக்குப் பற்றும். "தான் பத்தினியாயின் தாசி வீட்டில் குடியிருந்தால்தா னென்ன" என்ற ஒரு பழமொழியுண்டு. அது விதியில்லாமல் அத்தகைய சந்தர்ப்பம் நேர்ந்தால் ஒருவித சமாதானத்திற்குக் கூறிக்கொள்வதே யன்றி வேறல்ல. உலக அனுபவமறிந்து திடப்பட்ட மனவலிமை யுடையோரே சகவாசத்தால் மாறுதலடைந்து விடக்கூடும் என்றால், பாலியர் மனம் மிகச் சுலபத்தில் அந்நியர்குணம் நடக்கைகளைப் பற்றிக்கொள்ளும். சகவாசதோஷத்தால் நற்குணம் தீக்குணம் இரண்டும் உண்டாகிவிடும் என்று நமது சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. (தொடரும்)

சீடன்.

---

## நாட்டுக்கோட்டை வைசிய இரத்னங்களில் நமது சந்தா நேயராயுள்ள நண்பர்களுக்கு அறிவித்துக் கொள்வது:—

நண்பர்களே! நீங்கள் நமக்கு வரையும் நிருபங்களில் (சிலர்) சந்தா நம்பரை வரைவதில்லை. அது ஒரு பக்கமிருக்க, இப்போது யாவரும் கடிதத்தின் தலைப்பில் இடது பக்கம் ஊரின் பெயரையும், தங்கள் பெயரின் முதற்குறிப்பெழுத்துக்களையு மட்டும் (ரு. கா. மா.) எழுதிவிடுகிறீர்கள். முடிவில் "வேணும் இப்படிக்கு" என்பதன் கீழ் கை யொப்பத்திற்குப் பதிலாக "வலம்புரி விநாயகர் துணை", "வடிவேலர் துணை", "வேம்புலியம்மாள் துணை" என்று எழுதி விடுகிறீர்கள். இதனால் நாம், கடிதம் எழுதினவர்கள் யாரென்றே தெரியாததால், பதில் எழுதுவதற்கே யில்லை. பதில் வரவில்லையென்று நம்மேல் குறை கூறுகிறீர்கள்.

நண்பர்களே! முடிவில் போட்டிருக்கும் கடவுள் துணை தலைப்பில் போடப்படவேண்டும். கடைசியில் எப்போதும்விளங்கும்படி கையொப்பமிட வேண்டும். இதுவே கடிதம் எழுதுவதன் ஒழுங்கு. ஆகையால் இனியேனும் தயவுசெய்து ஒவ்வொரு கடிதத்திலும் தவறாமல் கையொப்பம், விலாசம், சந்தா நம்பர் இவற்றை மறவாது வரையும்படி யுங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறோம்.



# "ஆனந்தபோதினியின்" பவிஷ்காரமும், உண்ட சோற்றுக்கு இரண்டகமும்.

ஒருவன் இன்னொருவன் வீட்டில் வயிறாரப் புசித்து ஆனந்தித்து அருந்திய அவ்வன்ன மளித்தோற்கே தீங்கு எண்ணுவானாகில் அவன் உண்ட சோற்றுக்கு இரண்டகஞ் செய்தவனாகிறான். அவ்வண்ணமே ஓர் மூடனைக் கல்வி நாகரீக முதலிய சிறந்த வித்தையில் பழக்கி ஆளாக்கி சீர்தூக்கிவிட்ட குருவின் அறிவைக் கொண்டே குருவையே அவன் பழிப்பதென்றால் அத்தகையவனும் மேற்கூறிய முதுமொழிக்கிலக்காகிறான்.

'சட்டி சுட்டது, கைவிட்டது,' 'கு X X அடித்தான், பல்லுடைந்தது' என்றவாறு அறியாமைக்கோர் ஔஷதம் என்ற தலைப்பின்கீழ் வைகைவாசி டி. ஜி. எ. பர்னாந் தென்பவர் நானது ஆகஸ்ட் மாதம் வெளிவந்த "நல்ல ஆயன்" பத்திரிகையில், கிறிஸ்துமத தூஷணையே வியாசகமாகக் கொண்டுலவும் "ஆனந்தபோதினி" என்ற பத்திரிகையைக் கிறிஸ்துவர்களனைவரும் பவிஷ்கரிக்க வேணுமென்றும், கடந்த ஆறு வருடங்களாய் "ஆனந்தனின்" சந்தாநேயரா யிருந்து வந்தவர் "ஆனந்தனில்" பொதிந்து காணகிடைக்கும் கிறிஸ்துமத தூஷணையைப் பொறுக்கக் கூடாதவராய் இம்மாதத்தோடு பவிஷ்கரித்து விட்டதாகவும், ஆகவே கிறிஸ்து மதத்திலுள்ள ஆண், பெண், பாலர்கள் ஒவ்வொருவரும் மேற்படி பத்திரிகையைப் பவிஷ்கரிக்க வேண்டுமென்றும் வெகுவாய் வற்புறுத்தி எழுதி யிருப்பதைக் கண்ணுற்று கிறிஸ்துமத பரம்பரைக் குடும்பத்திலுள்ளவனும், கிறிஸ்து மதத்தையே உயிரினும் பெரிதாக மதிப்பவனுமாகிய நானே ஆட்சேபிக்க நேரிட்டால் மற்றவர்கள் எவ்வாறு இக்குருட்டுக் கொள்கையைக் கண்டிப்பார்க ளென்பது வெளிப்படை.

"ஏனெனில், 'எம்மதமும் சம்மதமே' என்ற சிறந்த மேதாவிகளின் கொள்கையையே அடிப்படையாகக்கொண்டும் தேசத்தில் நல்லொழுக்கமே நிறைந்துலவ வேண்டுமென்ற சிந்தையே தொழிலாகக் கொண்டு தொண்டு புரியும் நமது "ஆனந்தனை" பவிஷ்கரிக்கும்படி சொல்லுவதானது, பெற்று வளர்த்து, தாலாட்டி, பாலூட்டி, சீராட்டி வளர்த்த தாயைக் கொன்றுவிடு என்று சொல்வதற் கொப்பாகுமே தவிர, வேறென்ன? நிற்க, நமது நண்பர் எந்த ஆதாரத்தின் பேரில் "ஆனந்தனை" பவிஷ்கரிக்க வேணுமென்று எழுதினாரோ தெரியவில்லை. ஆகிலும் விஷயதானம் புரியும் சில மேதாவிகள் இந்துமத சிறப்பைப்பற்றி எழுதுவதனிடையே கிறிஸ்து மதத்தைப் பற்றிய விஷயங்களை நடுவில் புகுத்து விடுவது சகஜமே யாயினும், கிறிஸ்துவர்கள் வருத்தப்படக் கூடிய விஷயங்கள் காணமுடியாதென்பதே என் ஏழு வருட அநுபவம்.

உதாரணமாக—ஹிந்து சிறுவர், சிறுமிகளைக் கிறிஸ்துமதப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதால் கட்டாய பாடமாக அவர்கள் தம் மதத்தைப் போதிக்கும் காரணத்தால், இந்துக்களை மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது உசிதமல்ல வென்று, ஓர் இந்து தமது உரிமையைப்பற்றி, தம்மவர்களுக்கு எழுதுவதினால் என்ன குற்றம்? இவற்றில் காணும் கிறிஸ்துமத தூஷணை யாது? இவை போன்ற விஷயங்களை ஆதாரமாகக் கொண்டே நமது நண்பர் பவிஷ்கரிக்கும் பாரிய தொழிலில் இறங்கி விட்டார்; பேஷ்! இவரது சொல்ப அறிவை இன்னும் முன்னுக்குக் கொண்டுவர எண்ண மிருக்குமாகில் நமது மதி யூகியாகிய "ஆனந்தனை" வாங்கி வாசித்து அந்தகாரமெனும் அறியாமையை யகற்றி மேன்மை பெறவேண்டு மென்பதே எனது பிரார்த்தனை.

இங்ஙனம்,

YATYIONTOTA, Ceylon, 10-8-1921. — வைப்பார்புலி. S. S. PILLAI.

குறிப்பு:—நமது நண்பரின் கடிதம் சஞ்சிகை அச்சு முடியுந் தருவாயில் வந்தது. பாரபட்சமின்றி நடுநிலைமையில் நின்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காக அவருக்கு நாம் மிக்க வந்தனமளிக்கின்றோம். மற்றப்படி, அவர் கூறும் நியாயம் சத்தியமானதாதலின் அதைப்பற்றி நாம் விசேடமாகக் கூறுவது மிகையாகும். ஆயினும் ஒன்றுமட்டு மியம்ப விரும்புகிறோம். அதாவது மூடத்தனமான மதத்துவேஷம் முதலிய குணங்களின்றி இவ்வாறு விஷயத்தை வெளியிடுவோர் மிகச் சிலரே. பத்திரிகாசிரியர்.

---


# வீரநாதன்

அல்லது

## ஓர் மலைநாட்டுத் துப்பறிபவன்.

ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இந்நூலாசிரியரால் எழுதப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், வேறு பல துப்பறியும் நாவல்களையும் நண்பர்கள் வாசித்தே யிருப்பீர்கள். ஆனால் இந்த நாவலில் சம்பவிக்கும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், மிக்க அதிசயமும், தைரியமும், துணிகரமும் பொருந்தியவையுமான நடக்கைகளை வேறு நாவல்களில் வாசித்திருக்கமாட்டீர்கள். இதில் சம்பந்தப்படும் துப்பறியவன் செயல்களும், குற்றவாளிகள் செயல்களும், ஸ்திரீகளின் நடக்கைகளும் யாவுமே புதுவிதமான விசேஷம் பொருந்தியவைகளாகவே யிருக்கும். இது வாசிப்போர் மனதைக் கவரும் தன்மையும் அவ்வாறே யிருக்கும். வாசிப்போர்க்கு இதன் உண்மை வெளிதில் விளங்குமாதலால் நாம் அதிகமாய்க் கூறவேண்டியதில்லை. விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.




## முக்கிய அறிவிப்பு.

ஜீவிய சந்தா:—ஜீவிய சந்தாவைக் குறைத்தால் பலர் ஜீவிய சந்தாதாரராகச் சேர விரும்புவதாக அறிவிப்பதால் "ஆனந்தபோதினி" க்கு ஜீவிய சந்தா ரூபா **15/0** ஆக ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இப்போது ஜீவிய சந்ததாரராகச் சேர்ந்து ரூபா 25/0 கட்டி யிருப்போர் பதில் தெரிவித்தால் 10 ரூபாய் வாபீஸ் செய்யப்படும். இனி ஜீவிய சந்தாவில் சேர்வோர்கள் பெயர் சஞ்சிகையில் வெளியிடப்படும்.

பத்திராதிபர்.

---

## மாதர் நெறிகள்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஆடவர்களாகிய நமது சகோதரர்களும் இவற்றை உணருமாறு வேண்டுகிறோம்.)

7. உங்கள் ஆண்மக்கள் நம் தாய்ப் பாஷையை யலட்சியம் செய்யாமல், முதலில் அதைப் பக்தியோடு கற்கும்படிச் செய்யுங்கள். அப்போதுதான் அவர்களுக்கு நமது உத்தம மதத்தின் சத்தியமும், பெருமையும் புலப்படும். நம் முன்னோருடைய ஆசாரங்கள் சாத்திர யுக்தமும், மதச் சம்பந்தமு முடையனவென்று அவர்கள் அறிந்து நடப்பார்கள். பின்னால் அவர்கள் எக்கல்வி கற்றாலும் தங்கள் நெறியினின்றும் விலகார்கள்.

அப்படிக்கில்லா விட்டால் பிற்காலத்தில் அவர்கள் எம்மதத்திலும் பற்றில்லாதவர்களாய் ஏறக்குறைய நாஸ்திகர்கள் போலாகி, பணம் சம்பாதிப்பதும், உண்பதும், உறங்குவதுமாகிய தொழிலை மட்டும் செய்யும் மிருக சுபாவ முடையவர்க ளாகிறார்கள். கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவதுகூட அநாகரிகத் தொழிலென்று கருதி விடுகிறார்கள். விதியில்லை யென்று உங்களுக்காகப் பேருக்கு மட்டும் இந்துக்களாக விருக்கிறார்கள். ஆங்கிலங் கற்றவர்களில் எத்தனையோ பேர் இவ்வாறு நடக்கிறார்கள். ஆங்கில பாஷையை அரை குறையாகக் கற்கு முன்பே நமது முன்னோரது ஆசார ஒழுக்கங்களை யெல்லாம் "ஆல் தீஸ் ஆர் நான்ஸென்ஸ்" (இவை யெல்லாம் மூடத்தனம்) என்று அலட்சியமாகக் கூறிவிடுவதே தாங்கள் ஆங்கிலம் கற்பதனாலடைந்த நாகரீகச் சீர்திருத்தத்தின் முதற்படி யென்று கருதுகிறார்கள். சுயமத உணர்ச்சியும், தாய்ப் பாஷைக் கல்வியும் இல்லாமையே இதற்குக் காரணம்.

சகோதரிகளே! உங்கள் புத்திரர்களை யிவ்வித நிலைமை யடையும்படி நீங்கள் விட்டு விட்டால், பின்னால் அவர்கள் என்ன கெதி யாவார்கள் என்பதையும், உங்கள் பெருமையும், உலகப்புகழ்ச்சியும் என்னாகு மென்பதையும், புண்ணிய பூமியாகிய நமது தாய்நாடு எத்தகைய இழிவான நிலை

மையை யடையுமென்பதையும் சிந்தித்துப் பாருங்கள். அந்தோ இத்தோஷம் உங்களைச் சேராது விடுமோ? ஆகையால் உங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே நம் தாய்ப் பாஷையையும், தெய்வபத்தியையும், மதக் கல்வியையும், அவசியம் போதியுங்கள்.

8. இப்போது பெண்கல்வி விர்த்தியடையவேண்டுமென்ற கூக்குரல் நமது நாட்டில் எங்கும் கிளம்பி யிருப்பது யாவரும் அறிந்த விஷயமே. "பெண்கள் கல்விகற்றால் கெடுதி நேரிடும்; ஆகையால் அவர்களுக்குக் கல்வி கூடாது" என்று கூறுவோரும் இல்லாமலில்லை. அப்படிக் கூறுவோ ரெல்லாம் அறிவில்லாத மூடர்கள் என்பது சிலர் கருத்து. உண்மை யப்படி யில்லை. கல்விமான்களான அறிவாளிகளிலும் பலர் அப்படிக் கூறுகிறார்கள். ஏனெனில் அப்படிக்கூற அவர்களுக்குக் காரணங்கள் அத்தாட்சிகளோடுண்டு. இந்த இரண்டு கட்சிகளுக்கும் காரணமுண்டு. ஆனால் பெண்களுக்குக் கல்வி அடியோடு கூடாதென்பது ஒப்பத்தக்கதா யில்லை. இவ்வாற்றால் உண்மையான அபாயமற்றவழி இரண்டிற்கும் இடையில் இருக்கவேண்டுமென்று நன்குணரலாம்.

சிலர் எதற்கும் மேல்நாடுகளைத் திருட்டாந்தமாக வெடுத்துக்கொண்டு "மேல்நாடுகளில் மாதர்கள் நன்றாகக் கல்வி கற்றிருப்பதால்தான் அந்நாடுகள் மேலான நிலைமையி லிருக்கின்றன வென்கிறார்கள். நவீனநாகரீகமயக்கத்தா லுண்டான இது முற்றும் தவறான அபிப்பிராயம். மேல் நாடுகள் சென்றவழிகளைப் பின்பற்றி நடப்பதால் நம் தாய் நாடு மேலான நிலைமைக்கு வருமென்று கருதுவது கனவிலும் நடவாதகாரியம். இரண்டு நாடுகளுக்கு முள்ள பேதங்கள், இருளும் ஒளியும், கடினமும் மென்மையும், சூடும் குளிர்ச்சியும், சாந்தமும் மூர்க்கமும் என்றவற்றிற் குள்ளவை போன்ற கலக்கமுடியாத பேதங்களாகும். மேலும் மேல் நாட்டாரை நாம் முழுதும் பின்பற்றி நடக்கமுடியாது. இதுகாறும் மேல்நாட்டு நாகரீகத்தைப் புகழ்ந்துகொண்டு அதைப் பின்பற்றிச் செல்வதே நாகரீகச் சீர்திருத்தம் என்று கருதி அவ்வாறே பின்பற்றமுயலும் நம் நாட்டாரில் பலர், வெளிவேடமும், பழகிக்கொண்ட சில அனாசார வழக்கங்களும் தவிர வேறெந்தப் பயனுள்ள விஷயங்களில் மேல் நாட்டார் நெறிகளைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்? ஒன்றுமேயில்லை. இரண்டு நாட்டாரின் தற்கால நிலைமையிலேயே நேர்மாறான ஓர் முக்கிய பேதமிருக்கிறது. மரத்தின் மேலுள்ளவன்றான் பிரியமான கனியைப்பறித் துண்ணலாம்; கீழே தரையில் நிற்பவன் (மேலிருப்பவன் தயவாய் எறிந்தாலன்றி) எப்படிப் பறித்துண்ணலாம். மேலும் நாம் அப்படி முழுமையும் மேல் நாட்டாரைப் பின்பற்றி நடக்கமுயன்றாலும் அதற்கு ஓர் பெரிய தடையிருக்கிறது.

ஆகையால் மேற்கு மேற்கே, கிழக்கு கிழக்கே. அதன் நெறி நமக்குப் பயன்படாது. நமது சுபாவத்திற்கு அடியோடு பொருந்தாது. ஆகவே



அவர்களைப்போல் நமது பெண்கள் நடக்கமுயலலாகாது. நமது பெண்களுக்குக்கல்வி யளிப்பதில் நாம் மேலே கூறியபடி இடைவழி நடப்பதே உசிதம். எதுவும் அளவோடிருந்தாலே நன்மைபயக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும். ஆகையால் நமது பெண்மக்களுக்கு முதலாவது தாய்ப்பாஷைக் கல்வியொன்றே உலகவாழ்க்கைக்கும் மறுமைப்பயனுக்கும் அவசியமானது. மாதர்க்கு அத்தியாவசியமான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்பவற்றையும், குடும்பத்தில் பெற்றோர் உடன் பிறந்தார் சுற்றத்தார் இவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளையும், மணம் முடிந்தபின் புருடனிடம் மனைவி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், மாமியார் மாமனார் முதலியவர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதையும், ஈசுரபக்தியையும், நமது மதத்தையும், குடும்பத்தில் சுகாதாரத்தைக் கவனித்தல், மக்களை வளர்த்தல் முதலிய இத்தகைய விஷயங்களையும் போதிக்கும் நூல்களே அவர்களுக்குக் கற்பிக்கப் படவேண்டும். சாதாரண அளவு பூமிசாத்திரமும் கணிதமும் தையல் முதலியவேலைகளும் அவசியமே. கடவுள் தோத்திரமாகிய தேவாரம் திருவாசகம் முதலியவற்றை யோதுவதற்கு அவசியமான சங்கீதமும் கற்பிக்கலாகும். மதக்கல்வி எவ்வளவு அதிகமாகக் கற்றாலும், எவ்வளவு ஆன்மார்த்த சாத்திரங்களை ஆராய்ச்சி செய்வதாயினும் அவ்வளவும் நலமே. நம் நாட்டுமாதரில் எத்தனையோபேர் ஞானிகளாகவும், மெய்ப்பக்தி யுடையோராகவும் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். ஆண்டவன் அருளைப் பெற்றிருக்கிறார்கள். அதற்கு மேற்பட்ட அன்னிய பாஷைக் கல்வியும் உயர்தரக் கல்வியும் நமது பெண்களுக்கு அனாவசிய மென்பதோடு பெருங்கேட்டை விளைவிக்குமென்பதைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் பிரத்தியேகமாக நிரூபித்துக் காட்டுவாம். நமது பெண்மணிகளுக்குத் தீமை விளைவிக்கும் கல்வியை யளிப்பதிலும், அவர்கள் கல்வி யில்லாது நல்லொழுக்க மட்டும் பொருந்தி யிருக்கச் செய்வது பெரும் புண்ணியமாகும். (தொடரும்.)

சீடன்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்துஷ்டர்கள் அதனால் அடங்கவில்லை. ஏனெனில் அதற்குள் சாமிநாதன் அங்கு வந்துவிட்டான். அவன் அம்பலவாணனை நோக்கிக் கதவின் பூட்டுத் துவாரவழியாய்க் கூப்பிட்டான். அம்பலவாணன் ஏன் என்றபோது அவன்,

"நான் உன்னோடு பேசவேண்டிய திருக்கிறது, சற்று வெளியில் வா" என்றான்.

அம்பலவாணன்:—"இது அதற்குத்தக்க சமைய மல்லவென்று நினைக்கிறேன்" என்றான்.

சாமிநாதன்:—"நீ ஒருவரிடத்திலிருக்கும் கன்னிகையை அர்த்தராத்திரியில் களவாடிக்கொண்டு வந்திருக்கிறாய். அவளை என்வசம் ஒப்பித்துவிடு" என்றான்.

அம்ப:—"நான் ஒருவர் அக்கிரமமாய்க் களவாடிக் கொண்டுவந்து சிறைவைத்திருக்கும் ஆளை மீட்டுக்கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

சாமி:—இல்லை; அவளை நான் கொண்டுவந்து வைத்திருப்பதற்குத் தக்ககாரணம் இருக்கிறது. அவளுடைய தந்தையின் பிரியப்படி நான் செய்கிறேன். உனக்கு அதைப்பற்றி ஒரு சம்பந்தமு மில்லை.

அம்ப:—"சாமிநாதம் பிள்ளை! நீ கூறுவது முழுதும்பொய். அம்மனிதனாகிய இரங்கநாதன் அவள்தந்தையல்ல. நீங்கள் இருவரும் அக்கிரமமாய் அப்பெண்ணைக் கொண்டுவந்து சிறைவைத் திருக்கிறீர்கள். நீ பேசாமல் இதில் பிரவேசிக்காமல் இதோடு நின்று விட்டால் தப்பித்துக் கொள்வாய்" என்றான்.

சாமி:—"சரி; நீ என் விஷயத்திற்கு இடையூறு செய்வதாயின் நாளையிரவு சிறைச்சாலையில்தான் நித்திரை செய்வாய்" என்று கூறிவிட்டுத் தன் ஆட்களோடு சென்றான்.

அன்றிரவு முழுமையும் அம்பலவாணன் ஜாக்கிரதையோடு காவல் இருந்ததால் விடியற் காலத்தில் அயர்ந்து நித்திரை போய்விட்டான்.

பொழுது விடிந்ததே அம்பலவாணன் தாயார் சாளரத்தின் வழியாய்ப் பார்த்தபோது இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களும் அவர்கள் பின்னால் நாலைந்து மனிதர்களும் வருவதைக் கண்டாள். அவர்கள் வரும்வழியை நோக்க நேராய்த் தங்கள் வீட்டிற்கே வருவதாய்த் தெரிந்தது.

---

## 8—வது அத்தியாயம்

மேற் கூறப்பட்ட சம்பவத்தைக் கண்டதே அம்பலவாணன், அவன் தாய் கோமளவல்லி, வேலைக்காரி, யாவரும் மிக்க வியப்போடும் திகிலோடும் வாயிற்படியில் வந்து நின்றார்கள். ஏதோ ஆபத்து நெருங்கிவருகிறது என்று அவர்கள் மனதிற் பட்டுவிட்டதால் அவர்கள் முகம் சவம் போல் வெளுத்து விட்டது.

முன்னே வரும் போலீஸ்காரருக்குப் பின்னால் சாமிநாதன் இரங்கநாதன் ஆகிய இரண்டு துஷ்டர்களும் இருந்தார்கள். வீட்டின் சமீபத்தில் வந்ததே சாமிநாதன் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனோடு முன் அணியில் வந்து, "இந்த வீடுதான்" என்று அந்த உத்தியோகஸ்தனிடம் கூறினான்.



அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் அம்பலவாணன் தாயாருக்கு வந்தனமளித்து "அம்மா! தங்கள் வீட்டைச் சோதனை செய்யும்படி வாரண்ட் பிறந்திறக்கிறது" என்றான்.

அம்மாது:—"அப்படியா! எங்கள் வீட்டைச் சோதனை போடும்படி அத்தகைய சந்தேகம் உண்டாயிருக்கிறதோ" என்றாள்.

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"ஆம் அம்மா! சந்தேகம் உண்டாகி இருப்பதால்தான் வாரண்ட் பிறந்திருக்கிறது; அதோடு இப்போது, அம்பலவாணனை மறுபடி சிறைசெய்ய உத்தரவு பிறந்திருக்கிறது." என்றான்.

அம்பலவாணன்:—"நான் இப்போதே பிணையில் இருக்கிறேன்; அப்படியிருக்க என்னை மறுபடி கைது செய்வானேன். என் வீட்டைச் சோதனை செய்வானேன்?" என்றான்.

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"உத்தரவு அம்மாதிரி; இப்போது உன்னைக் கைது செய்கிறோம்; சோதனையில் உன்மேல் ஒரு குற்றமும் ஏற்படாவிட்டால் உன்னையுடனே விடுதலைசெய்து விடுவோம்" என்றான்.

அம்பலவாணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாம் ஒரு குற்றமும் செய்யாதிருக்க நமது வீட்டில் இவர்களுக்கு என்னசொத்து அகப்படும்; இவர்களுக்குள் சற்றாவது நம்பிக்கை யில்லாவிட்டால் இவ்வாறு துணிந்து வரமாட்டார்களே யென்று சிந்தித்துக் கொண்டே வந்தவர்கள் முகங்களை நோக்கினான். அப்போது தற்செயலாய்ச் சாமிநாதன் முகத்தை நோக்கினான். அவன் முகத்தில் ஒருவித சந்தோஷப் பிரகாசத்தைக் கண்டதும் அவனுக்கு யாவும் விளங்கிவிட்டது. கடந்த இரவு அவன் "நாளைய இரவு உன்னைச் சிறைச்சாலையில் சயனிக்கும்படி செய்கிறேன்" என்று கூறியது அம்பலவாணன் நினைவிற்கு வந்தது. "ஓகோ இவன் ஏதோ அக்கிரமவழியில் நம்மைச் சிக்கவைக்க ஏற்பாடு செய்திருக்கிறான்" என்று அவன்மனதிற் பட்டுவிட்டது. அவனுக்குப் பேரிடி விழுந்தமாதிரி யாயிற்று. அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது.

இதற்குள் போலீஸார் வீட்டைச் சோதனைசெய்யத் தொடங்கினார்கள். மிக்க ஜாக்கிரதையோடு மூலைமுடுக்கு எங்கும் தேடித்தடவிப் பார்த்தார்கள். ஒரு பொருளும் அகப்படவில்லை; கடைசியில் வீட்டோடு சம்பந்தப்பட்ட ஒரு சிறு அறையிருந்தது. அது வீட்டிற்குச் சற்றுதூரத்திலிருந்தபோதிலும் ஒரு சிறு சந்தால் வீட்டோடு சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தது. அதில் வறட்டி விறகு முதலியவை வைக்கப்பட்டிருந்தன. உத்தியோகஸ்தர்களில் ஒருவன் அங்குசென்று சில விறகுகளின் சந்திலிருந்து ஒரு பையையெடுத்து, "இதோ இதோ!" வென்றான்.

இன்னொருவன் அதை வாங்கிப் பார்த்து இதுதான் காணாமற் போன தபால் பை யென்றான். இதைக்கண்ட அம்பலவாணன் கருடனைக் கண்ட

நாகம்போல் ஆவி சோர்ந்தான். அவனுக்குப் பேசவும் நாவெழவில்லை. அவனருகிலிருந்த அவன்தாய் கோவென்றலறி யப்படியே மூர்ச்சையாய் வீழ்ந்து விட்டாள்.

அம்பலவாணன் போலீஸ் உத்தியோகஸ்தனை நோக்கி "அய்யா! இப்பை யிங்கு எப்படி வந்ததோ எனக்குச் சற்றும் தெரியவில்லை; இது யாரோ விரோதி செய்த வேலை யென்று கடவுளறியக் கூறுவேன். அவர் அந்த இழிகுலச் சண்டாளனைத் தண்டிக்காமல் விடமாட்டார். நீங்களே கண்ணுற் காணப்போகிறீர்கள். நான் கடவுளறிய நிரபராதி" என்றான்.)

போலீஸ் உத்தியோகஸ்தன்:—"இதை யாரோ அன்னியர் கொண்டு வந்து இங்கு வைத்தார்கள் என்பது நம்பிக்கொள்ளத் தக்கதல்ல. இதுவே களவுபோன பை யென்று ருசுவாகிறது. ஆகையால் சட்டப்படி நாங்கள் உன்னைக் கைது செய்துகொண்டு போகவேண்டியதே. பிறகு எப்படியும் விசாரணை நடக்கப் போகிறது. அப்போது உன் நிரபராதத் தன்மை ருசுப்படலாகும்" என்றான்.

அச்சமயம் இடிமேலிடி விழுந்த பாவனையாய் இரங்கநாதன் முன்னுக்கு வந்து, "அய்யா! இவன்மேல் இன்னொரு பெரிய குற்றமிருக்கிறது. அதாவது என் நண்பர் வீட்டிலிருந்த என்புத்திரியை இரவு இவன் களவாடிக்கொண்டு வந்து விட்டான்; அப்பெண் இப்போது இவ்வீட்டிலிருக்கிறது. அதை யென்வசம் ஒப்புவிக்கச் செய்யவேண்டும்" என்றான்.

உத்தியோகஸ்தன் அம்பலவாணனை நோக்கி "இதற்கென்ன மறுமொழி கூறுகிறாய்?" என்றான்.

அம்பலவாணன் கோபத்தோடு, "இந்த ஆள் கூறுவதெல்லாம் பொய்; அது இவன் குமாரத்தியல்ல; அனாதையான அப்பெண்ணை யிவர்கள் எந்தத் துஷ்டகாரியத்திற்கோ அதன் இரக்ஷகர்களிட மிருந்து களவாடிக்கொண்டு வந்து சிறையில் வைத்திருந்தார்கள். நான் அவளை விடுவித்துக்கொண்டு வந்து என்தாயார் வசம் விட்டிருக்கிறேன். இன்று அதன் இரக்ஷகர்களிடம் கொண்டுபோய் விடப்போகிறேன். அய்யா! உமக்குப் பெரும் புண்ணியம்; அப்பெண்ணை இம்மனிதன் வசம் ஒப்பிக்கவேண்டாம்" என்றான்.

உத்தியோகஸ்தன் முன்னமே அத்துஷ்டருக்கு உடந்தையாய்ச் சேர்ந்துகொண் டிருப்பவனாதலால், அப்பெண்ணே "அய்யா! இவன் என் தந்தையல்ல; என்னை யிவனிடம் ஒப்பிக்க வேண்டாம்" என்று அழுது கூறியும் அவன்,

உத்தியோகஸ்தன், "தந்தையின் அத்தாட்சிக்கு மீறி நடக்க எங்களுக்கு அதிகாரமில்லை; ஆதலால், நீ யுன் தந்தையோடு கூடவே செல்ல வேண்டும்" என்று அவ்வாறே அவளை அத்துஷ்டனிடம் ஒப்பித்து விட்டான்.

(தொடரும்.)

**ஆரணி குப்புசாமி முதலியார்.**



## பொது விஷயங்கள்.

**பஞ்சாங்கம்:**—7-வது வருட சந்தாவை 1921ஞு ஜூன்மீ 30உக்குள் அனுப்பியவர்களுக்கு அடுத்த துந்துபி ஞு பஞ்சாங்கம் அளிப்பதாகக் கூறப்பட்டது. அதை யறியாது சிலர் அதை யிப்போதே யேன் அனுப்பவில்லை யென்று எழுதுகிறார்கள். துந்துபி ஞு பிறக்க 3 மாதம் இருக்கும் போதே, அதாவது அடுத்த மாசிமீ அனுப்பப்படும் என்று மறுபடி யறிவிக்கின்றோம்.

**இளவரசர் வருகை.**—வேல்ஸ் இராஜ குமாரராகிய நமது இளவரசர் நமது நாட்டைப் பார்வையிட அடுத்த நவம்பர்மீ பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்குவா ரென்றும், ஜனவரிமீ சென்னைக்கு விஜயம் செய்வாரென்றும் தெரிகிறது. மற்ற விவரம் பின்னால் வெளியாகும்.

**சீனவர்த்தகம்:**—சீனதேசத்தில் அன்னியநாட்டு வர்த்தகக் கூட்டங்கள் அதிகமாக விர்த்தியாகிக்கொண் டிருக்கின்றன வெனத் தெரிகிறது. அங்கிருக்கும் அன்னிய நாடுகளின் வர்த்தகக் கூட்டங்கள் கீழ்க்கண்ட கணக்காக விருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஜபான் ... | ... 4,878 | பெல்ஜியம் ... | ... 20 |
| இரஷியா ... | ... 1786 | இடலி ... | ... 19 |
| இங்கிலாந்து | ... 644 | நார்வே ... | ... 12 |
| அமெரிகா ... | ... 413 | ஸ்பெயின் ... | ... 8 |
| பிரான்ஸ் ... | ... 171 | ஆஸ்ட்ரியா ... | ... 5 |
| போர்த்துகல் | ... 93 | ஸ்விட்ஸர்லாந்து | ... 4 |
| டென்மார்க் ... | ... 27 | ஜர்மெனி ... | ... 2 |
| ஹாலண்ட் ... | ... 25 | | |

நம் இராஜதானியிலுள்ள 2 ஜில்லா, 3 ஜில்லாக்களின் அளவுள்ள இராஜ்ஜியங்களி லுள்ளவர்கள் கூட அங்கு சென்று நிலையாக வர்த்தகம் செய்கின்றார். அந்தோ! நம் இந்தியா வர்த்தகத்தில் எந்நிலைமையி லிருக்கிறதென்பதைக் கவனிப்பவர்கள் யார்?

**உலகத்தில் உயரமான மலை:**—உலகிலுள்ள எல்லா மலைகளிலும் உயரமானது இமய மலையிலுள்ள எவரஸ்ட் என்ற ஒரு சிகரமே. இதன் உயரம் சுமார் 30 ஆயிரம் அடி (செங்குத்தாக). இதற்கிரண்டாவது கேஞ்சஞ்சிங்கா, மூன்றாவது தவளகிரி. இப்போது எவரஸ்ட் சிகரத்தின் உச்சியைக் காண்பதென்று எண்ணங்கொண்டு துரைத்தனத்தார் ஒரு சிறு கூட்டத்தை யனுப்பி யிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலியவற்றைக் கோவேறு கழுதைகள் முதலியவற்றின் மேல் ஏற்றிக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதி௵ புரட்டாசி௴—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921௵ செப்டம்பர்௴ அக்டோபர்௴

| புரட்டாசி | செப்டம்ப | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | வெ | சது12-1 | சதை-20-56 | சித்-60 | உமாமகேஸ்வர விரதம் |
| 2 | 17 | சனி | ○17-0 | பூரட்-27-12 | ம27-12சி | மாலையபட்சம் ஆரம்பம் |
| 3 | 18 | ஞா | பிர21-14 | உத்-32-47 | அமி60 | அசூன்யசயன விரதம் |
| 4 | 19 | திங் | து24-34 | ரேவ-37-22 | சித்-60 | கோடியுடுக்க, விதைவி |
| 5 | 20 | செ | திரி26-55 | அசு-41-0 | சித்-60 | பிரயத்யுமா விரதம் |
| 6 | 21 | புத | சது28-3 | பர-43-27 | சி43-27அ | வாகனம் வாங்க |
| 7 | 22 | வியா | பஞ்28-0 | கிரு-44-41 | மர-60 | கிருத்திகை |
| 8 | 23 | வெ | சஷ்26-34 | ரோ-44-38 | ம44-38சி | சந்திரசஷ்டி விரதம் |
| 9 | 24 | சனி | சப்23-46 | மிரு-43-13 | சித்-60 | மகாலட்சுமி விரதம் |
| 10 | 25 | ஞா | அ19-40 | திரு-40-30 | சித்-60 | துர்க்கை நவமி |
| 11 | 26 | திங் | நவ14-25 | புன-36-37 | அ36-37சி | உபநயனம் செய்ய |
| 12 | 27 | செ | தச7-55 | பூச-31-47 | சித்-60 | இந்திர ஏகாதசி |
| 13 | 28 | புத | ஏகா0-42 | ஆயி-26-10 | சித்-60 | மாடு வாங்க |
| | | | துவா53-1 | | | |
| 14 | 29 | வியா | திர45-4 | மக-20-13 | அ20-13சி | பிரதோஷம், |
| 15 | 30 | வெ | சது37-21 | பூர-14-11 | சித்-60 | ஆயுதம் பயிற்ற |
| | 1921௵ அக்டோபர்௴ | | | | | |
| 16 | 1 | சனி | ●29-46 | உத்-8-28 | மர-60 | மாளைய அமாவாசை |
| 17 | 2 | ஞா | பிர23-18 | அஸ்-3-30 | சித்-60 | நவராத்திரி ஆரம்பம் |
| 18 | 3 | திங் | து18-2 | சித்-59-38 | அ57-3மர | |
| 19 | 4 | செ | திரி14-15 | சுவா-57-3 | ம56-10சி | |
| 20 | 5 | புத | சது12-10 | விசா-56-10 | சித்-60 | |
| 21 | 6 | வியா | பஞ்11-27 | அனு-57-8 | பி59-52சி | |
| 22 | 7 | வெ | சஷ்13-42 | கேட்-59-52 | அமி60 | |
| 23 | 8 | சனி | சப்17-0 | மூல-60-0 | சித்-60 | |
| | | | | மூல-4-25 | | |
| 24 | 9 | ஞா | அஷ்21-46 | பூரா-10-20 | சி10-20அ | |
| 25 | 10 | திங் | நவ 27-28 | உத்-17-15 | ம17-15அ | |
| 26 | 11 | செ | தச 33-43 | திரு-24-44 | சித்-60 | விஜயதசமி |
| 27 | 12 | புத | ஏகா39-48 | அவி-32-3 | பிர32-3சி | பாசாங்குச ஏகாதசி |
| 28 | 13 | வியா | துவ45-22 | சதை-38-56 | ம38-56சி | வாமன ஜயந்தி |
| 29 | 14 | வெ | திர50-0 | பூரட்-45-3 | சித்60 | கரிநாள், பிரதோஷம் |
| 30 | 15 | சனி | சது53-35 | உத்-50-6 | சி50-6பிர | கோடியுடுக்க, யாத்திரை |

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 5உ ஜி-சு | | சுக் |
| | 9 ,, க-கு<br>29 ,, க-சு | | செ |
| | | | குரு<br>சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

21 OCT 1921

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

*(ALL RIGHTS RESERVED.)*

தொகுதி 7 } துன்மதி௵ புரட்டாசி௴ கஉ
1921௵ செப்டம்பர்௴ 16உ { பகுதி 3

## கடவுள் வணக்கம்.

போனக மிருக்கின்ற சாலையிடை வேண்டுவ
புசித்தற் கிருக்கு மதுபோல்
புருஷர்பெறு தர்மாதி வேதமுட னாகமம்
புகலுமதி னாலாம் பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுத
னனைவி தங்க டேர்ந்து
நானு னெனக்குழறு படைபுடை பெயர்ந்திடவு
நான்குசா தனமு மோர்ந்திட்
டானநெறி யாஞ்சரிகை யாதிசோ பானமுற்
றனுபக்ஷ சம்பு பக்ஷம்
ஆமிரு விகற்பமு மாயாதி சேவையு
மறிந்திரண் டொன்றென் னுமோர்
மானத விகற்பமற வென்றுநிற் பதுமது
மரபென்ற பரம குருவே
மந்தரகுரு வேயோக தந்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக்கறையை
யாற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

பொய்யா ருலக நிலையுல்ல கானற் புனலெனவே
மெய்யா வறிந்தென்ன வென்னு விதனை விடப்படுமோ
கையான் மௌனந் தெரிந்தே கல்லாணிழற் கண்ணிருந்த
வையா வப்பாவென் னரசேமுக் கண்ணுடை யாரமுதே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ புரட்டாசிமீ கவ

## நம் மாதர்க்கு உயர்தரக் கல்வி அவசியமோ?

ஈண்டு மாதர்க்கு உயர்தரக் கல்வியென்பது, ஆண்மக்கள் கற்பதுபோல் ஆங்கில பாஷையில் உயர்தரக் கலாசாலைகளில் (ஹைஸ்கூல் - கல்லூரிகளில்) கற்பிக்கப்படும் பாடங்களைப்படித்து பரீட்சைகளில் தேறுவதாகும். இத்தகைய கல்வி நமது மாதர்க்கு அவசியமா? அதனால் நன்மை யுண்டாகுமா? என்பதே நாமறியவேண்டிய விஷயம்.

கடந்த ஆவணிமாதச் சஞ்சிகையில் 74-ம் பக்கத்தில் 8-வது பத்தியில் சீடன் என்பவர் கூறியதுபோல், நமது நாட்டில் பெண் கல்வி நலமளிக்கு மென்பதும், தீமையளிக்கும் என்பதும் ஆகிய இருகட்சியுண்டு. இரண்டாவது கட்சியிலும் கல்விமான்களும் அறிவுடையோரு முண்டு. இரண்டிற்கும் காரணங்களு முண்டு. இப்போது நமது நாட்டில் பெண் கல்வியைப்பற்றி மிக்க கிளர்ச்சி யுண்டா யிருக்கிறது. சிலர் மேல்நாட்டாரைப் போல் நமது மாதரும் உயர்தரக் கல்வி கற்றால் நம் நாடு முன்னேற்ற படைந்து விடும் என்று கருதுகிறார்கள். இவர்கள் மாதரின் உயர்தரக் கல்வியால் தான் மேல் நாடுகள் முன்னேற்ற மடைந்தன வென்று தவறான அபிப்பிராயங்கொண் டிருக்கிறார்கள். ஆகையால் நமது மாதரும் உயர்தரக்கல்வி பெறவேண்டும் என்றும், அது பெருங்கௌரவ மென்றும் பலர் கருதுகிறார்கள், "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்—எண்ணுவ மென்ப திழுக்கு" ஆதலின் இவ்வுயர்தரக் கல்வி நமது பெண்மணிகளுக்கு அவசியமா என்று ஆராயவேண்டியது நம் கடமையாகும்.

1-வது. நமது ஆண்மக்கள் உயர்தரக் கல்வியால் அடைந்த நன்மையும் தீமையும் எவ்வளவென்று கவனிப்போம்.



இவர்கள் சீவனத்திற்காக இராஜபாஷையைக் கற்கவேண்டி நேர்ந்தது. இன்னும் பூகோளம், தேசசரித்திரம், கணிதம், இரசாயனம் முதலிய பல சாத்திரங்களையும், சட்டங்களையும் அப்பாஷையிலேயே கற்கிறார்கள். ஆனால் எவ்வளவு கற்றாலும், இவையாவும் இவர்கள் சீவனாதாரமாகமட்டுமே யுபயோக மாகின்றன வன்றி வேறில்லை. துரைத்தன முறைமைகளை யுணர்ந்ததும், பொதுவாய் அறிவைத் தீக்ஷணியமாக்கிக் கொண்டதும் நன்மையே யாகும். ஆயினும் அக்கல்வியால் இவர்களுக்குண்டாகிய தீமை இந்த நன்மையாலுண்டாக வேண்டிய பயனையடையாவண்ணம் தடுத்து விடுகிறது.

தீமைகள் எவையெனின்:—

இவர்கள் வாசிக்கும் நூல்களனைத்தும் தங்கள் சுயநலம் விர்த்தியடையும் நோக்கத்தோடு அன்னிய ஜாதிமதத்தைச் சேர்ந்த அன்னிய நாட்டாரால் நமது நாட்டார்க்கென்று எழுதப்பட்டவையாதலின், இவர்கள்,—

(1) தங்கள் தாய்ப்பாஷையை யலட்சியமாகக் கருத ஆரம்பித்து விடுகிறார்கள்.

(2) தாய்ப்பாஷைக்கல்வியில்லாததால், நமது மதாசார ஒழுக்கங்கள், நம் முன்னோரின் பெருமை, நம் நாடு பூர்வீகமுதல் நாகரீகம், செல்வம், ஞானம் யாவற்றிலும் முதன்மை பெற்றிருந்தது என்பனவாகிய உண்மைகளை யுணராதவர்களாய், இவற்றையெல்லாம் அலட்சியம் செய்யத் தொடங்குகிறார்கள்.

(3) நம்முன்னோர் நாகரீக மில்லா மூடர்களாக விருந்ததாகவும், நம்நாடு இப்போதுதான் நாகரீகமும் செல்வமும் அடைந்து வருவதாகவும் கருதுகிறார்கள். (உண்மையோ அநாகரீகமும், அநாசாரமும், வறுமையுமாக விருக்கின்றன)

(4) கௌரவ மல்லாததைக் கௌரவமாகவும், நாகரீகக்கேட்டை நாகரீகமாகவும் கருதி, நமக்கு அனுவசியமும் தீமையிழைக்கத்தக்கனவு மாகிய அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றத் தொடங்கி விடுகிறார்கள்.

(5) அன்னிய மதாசாரங்களைப் பற்றிய நூல்களை வாசிப்பதாலும், சுயமத ஆராய்ச்சி யின்மையாலும் எம்மதப்பற்று மின்றி நாஸ்திகத்திற்கு அடுத்தபடியில் சேர்கிறார்கள். பிற்காலத்தில்

அதாவது பாடசாலையை விட்டு உலகவாழ்க்கையில் பிரவேசித்ததும், எவ்வழியிலேனும் பொருளீட்டலும் உலகபோகங்களை யனுபவிப்பதுமே தாங்கள் எடுத்தஜன்மத்தில் செய்யவேண்டிய கடமைகள் என்று கருதுகிறார்கள்.

(6) தந்தி, நீராவியந்திரம், புகைவண்டி, புகைக்கப்பல், மோடார்வண்டி, ஆகாயவிமானம் இத்தகையவைகளெல்லாம் முதல்தர நாகரீக போகங்கள் என்ற ஒருபக்கத்தை மட்டும் காண்கிறார்களே யன்றி, இவற்றால் நாம் பெறும் அனுகூலங்கள் எவ்வளவு, இவற்றால் யார்செல்வமும் சுகமும் பெறுகிறார்கள், யார் வறுமையும் துன்பமு மடைகிறார்கள் என்பனவாதிய மற்றொரு பக்கத்தைக் காண முயல்வதேயில்லை. அந்தோ! நவீன நாகரீக மயக்கம் என்ற திரை அப் பக்கத்தைக் காணவொட்டாதபடி இவர்கள் அறிவாகிய கண்ணை மறைத்து விடுகிறது.

இவர்கள் மேல் நாட்டாரிட மிருந்து அறியவேண்டிய விஷயங்களை நமது தாய்பாஷையிலேயே கற்றும், நமது தாய்ப்பாஷையில் நம் மதம் ஆசாரம் முதலியவைகள் இவர்களுக்குக் கற்பிக்கப்பட்டும் இருந்தால் இத்தீங்குகள் நேரா.

இவர்கள் ஆண்மக்களாதலால் பொருள் தேடுவதற்காக இத்தகைய கல்வி கற்கவேண்டியது அவசியமாயிற்று. இனி நமது மாது சிரோமணிகளுக்கு உயர்தரக் கல்வியாலும் அன்னியபாஷா ஞானத்தாலும் ஆகவேண்டிய காரிய மேதேனு முண்டோ வென்று பார்ப்போம்.

மேல்நாட்டு மாதர் அத்தகைய கல்விகற்கிறார்கள் என்பதை நமது மாதரும் பின்பற்றத்தக்க ஒரு திருட்டாந்தமாகச் சிலர் கருதுகின்றனர். மேல் நாட்டு மாதரின் இலௌகிக ஆசாரம் குடும்பவாழ்க்கை முதலியவைகளுக்கும் நம் நாட்டுமாதர் ஆசாரம், வாழ்க்கை முதலியவற்றிற்கும், நேர்மாறான வித்தியாச முண்டு. மேல்நாட்டு மாதரில் அனேகர் மணம்புரியாமலே வாழ்நாட்களைக் கழிக்கின்றனர். அத்தகையோர் ஆண் பிள்ளைகளைப்போல் பலவிதத்தொழில்களைச் செய்கின்றனர். கல்வியிலாகா, தபால் இலாகா, தந்தியிலாகா, வர்த்தகசாலை, தொழிற்சாலைகள் முதலியவற்றில் பலவிதத் தொழில்கள் செய்து ஜீவிக்கிறார்கள். ஒரு ஸ்திரீ கலியாணம் செய்து கொள்ளாம லிருப்பதாவது, பல ஆடவர்களோடு கலந்து பேசுதல்,



ஆடவர் கூட்டத்தி லிருந்து தொழில் செய்தல், ஆடவர்கள் போலவே வெளியில் எங்கு வேண்டுமாயினும் செல்லல், ஆடவர் நிறைந்த சபையில் தங்கி இருத்தல் பேசுதல் முதலிய இத்தகைய நடக்கைகளாவது அவர்கள் ஆசாரப்படி கௌரவத் தாழ்வான அல்லது ஒழுங்கீனமான நடக்கைகளாகக் கருதப்படுவதில்லை.

இன்னும் புருடனும் மனைவியுமாகக் கூடிவாழும் இல்வாழ்க்கையில் அவர்கள் ஆசாரத்திற்கும் நமது ஆசாரத்திற்கும் மிக்க பேதமுண்டு. ஸ்திரீகளை அவர்கள் பிரியப்படி ஏறக்குறைய எல்லா விஷயங்களிலுமே நடக்க விடுவதுதான், ஸ்திரீகளை அன்பாகவும் மரியாதையாகவும், கௌரவமாகவும் நடத்துவதாகும் என்பது அவர்கள் அபிப்பிராயம். ஒருவன் வெளியிலிருந்து தன் வீட்டிற்கு வந்தபோது, தன் மனைவி அவளுடைய சினேகிதனாகிய ஒரு அன்னிய வாலிபனோடு அறையில் பேசிக்கொண் டிருப்பதாக வேலைக்காரி கூறினால், புருடன் அவள் அனுமதிபெறாமல் அந்த அறைக்குள் செல்லலாகாது. மனைவிக்கு ஒரு கடிதம் யாரிடமிருந்து வந்திருந்தாலும், கணவன் அதைப்பிரித்துப் பார்க்கலாகர்து. அப்படியே அவள் எழுதும் கடிதத்தையும் கணவன் பார்க்கலாகாது. அவர்கள் ஆசாரவிதிகள் இவ்வாறிருப்பினும் அந்த நாடுகளிலும் மனைவியை அலட்சியம் செய்வோரும், வைது, அடித்துக் கொடுமையாக நடத்துவோரும் அனேகருளர். அதோடு ஒரு புருடனைவிட்டு விலகி வேறொருவனை மணந்து கொள்ளலாமென்ற வழக்கத்தால் புருடன் மனைவிக்குள் வெறுப்பும், சச்சரவும், பிரிவினையும் சீக்கிரத்தில் உண்டாக அனுகூலம் ஏற்படுகிறது.

இப்போது மேற்குக்கும் கிழக்குக்குமுள்ள ஆசாரங்களின் பேதம் எத்தகையதென இதை வாசிப்போர்க்கு நன்கு விளங்கலாகும். நமது நாட்டு ஆசாரப்படி மாதர் எப்போதும் புருடர்களாலேயே ஆதரிக்கப் படவேண்டும். புருடர்களே வெளியில் சென்று உழைத்துப் பொருள் சம்பாதித்துக் கொண்டுவந்து மாதர்களிடம் கொடுக்க வேண்டும். புருடரே கடைவீதிக்குச் சென்று குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான சகல பொருள்களையும் வாங்கிவந்து வீட்டில் சேர்க்க வேண்டியவர்கள். மாதர் வீட்டிலிருந்து குடும்ப விவகாரங்களைக் கவனித்து, புருடன் வருமானத்திற்குத் தக்கபடி சிக்கனமாகப் பண்டங்களைச் செலவழித்து, புருடன், மக்கள் இன்னும்

குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஆகாரமளித்து, இல்லற தருமத்தைப் பாதுகாக்கவேண்டும். நமது நாட்டு மாதரில் ஆதரிப்பாரின்றிக் கஷ்ட நிலையிலிருப்போரும் வீட்டிலேயே ஏதேனும் கைத்தொழில் செய்தல், தின்பண்டங்கள் செய்து விற்றல் முதலிய வழிகளில் சீவனம் செய்வார்களே யன்றி ஆடவரைப்போல் வெளியில் சென்று தொழில் செய்யார்கள். ஒரு பெண் கலியாணமின்றி இருந்து விடுவது நமது நாட்டில் மிக்க அகௌரவமாகவே கருதப்படுகிறது. புருடனிடமிருந்து வாழாமல் சச்சரவுபட்டுத் தாய்வீட்டிலேயே வந்திருக்கும் பெண் வாழாவெட்டி யென்று இழிவாய்க் கூறப்படுவாள். பூர்வீகமுதலே நம்மாதர்கள் இவ்வாறு தங்கள் சீவனத்திற்காகத் தாங்களே உழைப்பதின்றிப் பெற்றோர், கணவன் அல்லது கணவன் சகோதரர் அல்லது தம் சகோதரர் முதலிய ஆடவராலேயே ஆதரிக்கப்பட்டு வருவது பிரசித்தம்.

ஆகையால் சீவனத்திற்காகவேண்டி உயர்தரக் கல்வி நமது பெண்மணிகளுக்கு அவசியமன்றாகும். மற்ற விஷயங்களில் ஆடவர்க்கே பல தீமைகளை விளைவிக்கும் அக்கல்வி பெண்மக்களுக்கு இன்னும் கொடிய தீங்கைவிளைவிக்கு மென்பதில் சற்றும் ஐயமின்றாம். பழக்கத்தால் இயற்கைக்குணங்களும் மாறிவிடலாகும். சுபாவமாக மாமிசம் புசியாத குரங்கு கிளி முதலியவைகூட பழக்கத்தால் அதைப் புசிக்கின்றன. நமது மாதர்க்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்ற குணங்கள் அவசியமானவை. இவை ஸ்திரீகளுக்கே இயற்கையா யமையத்தக்க குணங்களாகும்.

இக்குணங்களுக்கு இடையூறு நேரா திருப்பதற்கே நமது பெண்கள் புத்தியறிந்தது முதல் வீட்டைவிட்டு வெளிச்செல்லலாகா தென்றும், அன்னிய ஆடவர் எதிரில் செல்லக்கூடா தென்றும், வீட்டிலும் அடக்க ஒடுக்கத்தோடு ஒழுகவேண்டு மென்றும் நம்முன்னோர் தக்கவிதிகளை யேற்படுத்தி யுள்ளார்கள். நம்முன்னோர் ஏற்பாடுகளனைத்தும் நம்மாதர் இம்மையிற் சுகமும் புகழும் மறுமையில் உயர்பதவியு மடையவேண்டு மென்ற கருத்தோடு செய்யப்பட்டவை. இவற்றால் நம்மாதரில் பலர் இறந்தபின்னும் பத்தினித் தேவதைகளாய்ப் பூசிக்கப்படும் புண்ணியப் பேறடைகின்றார்கள் என்பது அனுபவமா யாவருமறிந்ததே. துரோபதை, கண்ணகி, அருந்ததிபோன்ற பலரை இதற்குத் திருட்டாந்தமாகக்கூறலாம். யாவர்க்கும் இவ்வுலகில் அழியும் பலவித (அற்பமான மிருக இச்சையைப் பூர்த்திசெய்யும்) போகங்களைவிட அழியாப் புகழே சிறந்ததாகும். அத்தகைய புகழையும், மறுமைப் பயனையுமே நம்மாதர் பெறவேண்டு மென்ற நோக்கங்கொண்டு நம் முன்னோர் தக்க இலௌகிக மதாசாரங்களை ஏற்பாடு செய்தார்கள். நம்முன்னோர்களைப்போல் மற்ற எந்தநாட்டாரும் தம்மாதர்களின் விஷயத்தில் அவ்வளவு அக்கரை யெடுத்துக் கொள்ளவேயில்லை.



உயர்தரக் கல்வியாலும், நமது பெண்கள் புத்தியறிந்த பின்னும் பாடசாலைக்குச் செல்லுதல், தாராளமாக ஆடவரைப்போல் எங்கும் நடமாடுதல், அந்நிய ஆடவர்களிடம் கூச்சம்விட்டுச் சம்பாஷித்தல் இத்தகைய நடக்கைகளாலும் அவர்களின் ஸ்த்ரீ இயல்பு மாறி ஆடவர் இயல்பு உண்டாகும். இதனால் அச்சம் மடம் நாணம் முதலிய குணங்கள் போய்விடும். கற்பென்னும் பயிருக்குக் காவல் வேலிபோன்ற அக்குணங்கள் குன்றினால் கற்பு எங்ஙனம் நிலைத்து நிற்கும்? கடவுள் இயற்கையிலேயே ஆடவன், ஸ்திரீ இவர்களின் சுபாவங்களில் ஒன்றுக் கொன்று நேர்மாறான பல வித்தியாசங்களை யமைத்திருக்கிறார். அவ்வாறிருக்க ஸ்திரீயின் சுபாவகுணங்களில் சில புருடசுபாவமாக மாறும்பட்சத்தில் இல்லறம் நம்முன்னோர் விதித்த அறநெறியில் ஒருபோதும் நடைபெறாதென்பது திண்ணம். அப்போது ஸ்திரீயும், புருடனும் கூடிவாழும் வாழ்க்கை கேவலம் மிருக சுபாவமான இவ்வுலக போகங்களை யனுபவிக்கவே பயன்படத் தக்கதாகும்.

அந்தோ! இத்தகைய மாறுதலால் தெய்வீகம் பொருந்தியதும், ஞானத்திற்குத் தாயகமானதுமாகிய நம் தாய்நாடு எத்தகைய கேடெய்து மென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நம் நாட்டிற்குப் பெருந் தீங்கை விளைவிக்கத்தக்க இக்கெடுதி உடனுக்குடன் உண்டாகாததாலேயே இதை அசட்டை செய்து விடாதீர்கள். ஓர் ஏரிக்கரையில் எலி வளைபோன்ற ஒரு சிறு துவாரத்தை யுண்டாக்கிவிட்டால், அச்சமயம் ஒரு ஆபத்தும் தோன்றாவிட்டாலும், நம் கண்களுக்குப் புலப்படாமலே அத்துவாரத்தின் வழியாக நீர் செல்வதால் துவாரம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிதாகிக் கொஞ்ச காலத்திற்குள் திடீலென்று கரை யுடைந்து வெள்ளம் ஊரை யழிக்கச் செய்யும். அதுபோலவே இக்கெடுதியால் இப்போதே ஒரு

தீமையும் விளையாவிடினும், கொஞ்ச காலத்தில் இதனால் நம் தாய் நாடு மிக்க துக்ககரமான நிலைமையை யடையுமென்று நாம் உணர வேண்டும். நமது பெண்மக்களுக்கு நமது தாய்ப்பாஷையில் அவர்களது இல்லறநெறிக்கு அவசியமான கல்வியைமட்டும் போதிப்பதே நன்மை பயக்கும். ஆன்மார்த்த நூல்களை யெவ்வளவு அதிகமாகக் கற்பினும் கெடுதியில்லை. சச்சிதானந்தப் பரம்பொருள் நாம் வீண் மயக்கில் சிக்கித் தகாத வழிகளில் சென்று இடருறு வண்ணம் நல்லறி வளித்துப் பாதுகாக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

---

## தமிழர் புராதனம்

(57-ம் பக்கத்தொடர்ச்சி)

இனிக் கன்னட பாஷை, கன்னரமென்றும், கன்னட மென்றும், கன்னடிய மென்றும், கர்நாடகமென்றும் வழங்கப்படும். அப்பாஷை மைசூ ரென்னும் எருமைநாட்டிலும், தென் மஹாராட்டிரப் பிரதேயத்திலும் அதனை யடுத்த நிஜாம் இராச்சியம் ஜில்லாக்களிலும் பயிலுகின்றது. இம் மொழியைக் கர்நாடகமென்பதே பொருத்தமானது.[தமிழ்-கருநாடு; கருப்பு மண்நாடு.] இப்பதப் பிரயோகம் வடமொழிப் பிரிஹத் ஸம்ஹிதையிற் காணப்படும் என்ப.

இக்கன்னட பாஷை தமிழுந் தெலுங்குங் கலந்ததோர் நடை. அஃதும் ஹள (பழைய) கன்னடமெனவும், ஹொச (புதிய) கன்னட மெனவும் இரு பாலாகி இயலும். தமிழ்மொழி கன்னடமாகத் திரியும்போது 'ப' காரங்களனைத்தும் 'ஹ' காரமாகத்திரிந்து பெரும்பாலும் 'உ' கரச் சாரியை பெற்று வழங்கும்:—

| தமிழ் | கன்னடம் |
|---|---|
| பால் | ஹாலு |
| பல் | ஹல்லு |
| பத்து | ஹத்து |
| பொன் | ஹொன்னு |
| பள்ளி | ஹள்ளி |

இப் பாஷைகளனைத்தும் தமிழினின்றே யாவது, தமிழ் சம்பந்தப் பட்ட பாஷைகளி னின்றாவது பிரிந்தனவென்பது தெற்றென விளங்கும். அதனானே மனோன்மணீய முடையாரும்.

" கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன் உதரத் துதித்தெழுந்தே.............." என்றார்.



இனி, இத்திராவிட மொழிகளுட் சிறந்த தமிழ்மொழி வடமொழிக்கு எவ்வாற்றானுந் தாழ்ந்த தன்று. சிவஞான முனிவர் காலத்தும் அவர்க்கு முன்பும் இந்தக் கொள்கையே பரவி, தமிழ்ப் புலவர்களும் சார்ந்திருந்தனர். அதனால் அவர்க்குத் தமிழ்பால் உண்டாம் ஊக்கம் குறையும் என்பது திண்ணம். அத்தகைய எண்ணத்துடன் இயற்றும் நூல்களும் அக்கொள்கைக்கே யீடுபட்டு நடக்கும். இலக்கணங் கூறவந்த ஈசானதேசிகரும் அதன் பாற் பட்டு,

" அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள்
ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ " என்று

தனித்தமிழின் சிறப்புணராது வடமொழியே யுயர்வெனக் கொண்டார்.

அதனால் சிவ ஞானமுனிவர் முதலாயினார் தமிழ் எவ்வகையானும் சமஸ்கிருதத்துக்குத் தாழ்ந்ததன்று என முறையிடலானார்.

" இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
இருமொழியு நிகரென்னும் இதற்கைய முளதேயோ" என்றும்

" வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்தக்
குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்திடுவார்." என்றும்

சிவஞானமுனிவர் மேற்கூறியதற்கு மாறாக வடமொழிக்குத் தமிழ் இணையேயாம் எனப் பௌராணிகமாக நிரூபித்தார். வடமொழியின் சிறப்பு நோக்கி அதற் கிணையாகத் தமிழும் சிறப்புற்றதே என்பது அவர் கூற்று. சங்கநூலின் இயல்பு விதந்து தெளிப்பின் அவர்கூற்றும் தமிழின் சிறப்பை நன்கோதவில்லை எனத்தோற்றும்.

வேறுவேறு காலங்களில் வேறுவேறு இடங்களில் முத்தமிழ்ச் சங்கங்கள் வீற்றிருந்து தமிழ்மொழியின் வரையறுத்துப் பலபுலவர் அருளிய நூற்களுள் கணக்கேற்பட்டன. நீங்க ஏனையநூல்கள் எங்குச் சென்றன. முத்தொள்ளாயிரம், என்னு மரும்பெரும் நூல் எங்கேனும் முழுவதூஉம் அகப்படுமோ? 'தகடூர் யாத்திரை' என்னு முதற் சங்கத்துநூல் ஒன்றிரண்டு பாட்டுக்கள்போக பிற அறிவாமோ? செயிற்றிய முதலிய ஏனைய நூற்களின் பெயர் மாத்திரமன்றி. அவற்றின் இயல்பு இத்துணை யென்றுணர்வேமோ? இவைகளே தமிழணங்குக் கணியாயமைந்தவை.

இனிக் கிடைத்துள்ள கீழ்க்கணக்கும் நெடுங்கணக்கும் தொகை நூற்களும் ஏனைய (பண்டைய) இலக்கண இலக்கியக் காப்பியங்களும் வரையறுத்துக் கூறினும் பாஷையின் சிறப்பு ஒருவாறு கூறியவாறாம்.

எனினுந் தமிழ் தெலுங்குக்கும் தாழ்ந்த தென்றே கருதப்படுகின்றது; வடமொழி யுண்டான காலத்திலேயோ, ஆந்திரம்போல தனிநின்றே தமிழ் உண்டாயதென்ற கொள்கையே பரவா நின்றது. இதற்குக் காரணம் தமிழிலும் அதைவிடத் தெலுங்கினும் வடமொழிப்பதங்கள் அமிதமாகக் காணப்படுவதே. இப்பதங்கள் தற்சமமாகவும் பெரும்பாலும் தற்பவமாகவும் பிரயோகிக்கப் பட்டுள்ளன. இதனானே அம்மொழிகள் வடமொழியினின்றும் உற்பவித்தன என்பது பெருமிதமாகும். [தமிழுக்குந் தெலுங்குக்குமுள்ள வொற்றுமையும், அநேகமாகத் தமிழினின்றே ஆந்திரம் பிரிந்திருக்கலாம் என்றற்கு ஏதுவும் மேலேகாட்டினும்] தமிழில் மிகுதியான சொற்களும் தொடர்களும் இலக்கண விசேடமும் சமஸ்கிருதத்துக்கு மாறுபட்டுப் பொதிந்து கிடக்கின்றன. இவையிற்றில் நம்பாஷையின் சிறப்பும் பொலிவும் மலருமன்றி ஏனைய தற்சம தற்பவ பதங்களிலன்று என்பது நன்கு கவனிக்கற்பாலது. இச்சொற்களே தமிழ்நாட்டில் செந்தமிழ்ப்பதமெனக் கொண்டாடப்படும்.

தமிழிலு மின்னுஞ் சில மொழிகளிலும் வடமொழிச் சொற்கள் அவசியத்தை முன்னிட்டு (அப்பொருளில் வேறு சுதேசப்பதங்களின்மையால்) பிரயோகிக்கப் படவில்லை. அழகையும், அர்த்த விசேஷத்தையும் சிங்காரத்தையும் உன்னியும், தர்க்க மத ஜோதிஷ சம்பந்தமான விசேஷார்த்தத்தை நோக்கியும் உரையாடுகின்றன. இன்னுந் தமிழில் வடமொழிச் சொற்களற்றுப் பயிலின் அந்நடை மிகவும் இனிப்பாகவும் ஊற்றெழுஞ் செம்பாகமாகவும் கிடக்கும். அச்சொற்களை யொழிப்பின் தமிழ் நடையே யினிது செல்லுமென்பது சிலர் கொள்கை. *

" ஏழ்புணா ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறக்கினும் யாழ்க்கவைதா னென்செய்யுஞ்
சூழுங்கா ணும்மக னினக்கு மாங் கனையளே "

[கலித்தொகை.]

நோயுங் கைமிகப் பெரிதே மெய்யுந்
தீயுமிழ் தெறலின் வெய்தா கின்றே
பொய் யெனச் சிறிதாங் குயிரிய பையென
முன்னிற் கொளினோ் நந்துவள் பெரிதென
நிரையே நெஞ்சத் தன்னைக் குய்த்தாண்
டுரையினி வாழி தோழி புரையி
னுண்ணே செல்வனை ஞெகிழ்த்தோன் குன்றத்
தண்ண னெடுவரை யாடித் தண்ணென

*" Tamil, however, the most highly cultivated *at intra* of all Dravidian idioms, can dispense with its sanskrit altogether, and not only stand alone, but flowrish without its aid".— Caldwell.



வியலறை மூழ்கிய வளியென்
பசலை யாகந் தீண்டிய சிறிதே " [அகநானூறு.]

இவற்றில் ஒரு பதமேனும் வேறாகக் காணுதலரிது. இவைபோல் பல பாக்கள் மலிந்துள்ளன. திருக்குறளில் சராசரியாகப் பார்க்கின் ஓரதிகாரத்தில் ஒன்றுக்குமேல் வடமொழிப் பதம் கிடைத்தலரிது. நாலடியுள் ஐந்து பாவுக்கொன்று காண்பதரிது. கலிப்பாட்டின் ஒவ்வொன்றில் ஒன்றின் மிக்கிலது. பத்துப்பாட்டு பலவடிகளானாயினும் ஒவ்வொன்றினும் நான்குக்குமேல் அகப்பட்டிலது. இவைகளும் தற்பவமாகப் புலப்படாவகை திரிந்து கிடக்கின்றன.

அதனால், வடமொழியினின்றே தமிழ் நூற்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டன வென்னுங் கூற்று சற்றேனும் ஒவ்வாது. குறளுஞ் சிந்தாமணியு மின்னுஞ் சில நூற்களும் வடமொழி நூற்களினும் மிக்கதே; அவை தமிழுக்கே யுரியவை. கம்பராமாயணமும், பாரதமும், வடமொழியின் வழிநூல்களாயினும், அவை முதனூல்களினும் மிகுந்த சந்தர்ப்பங்களில் மேம்பட்டதே. வான்மீகிராமாயணம் இல்லாவிடின் கம்பரிடமே யவர் கவிதை பெற்றனர் என்னலாம்.

இன்னும் இவ்விரு பாஷைகளின் இலக்கணங்களை யாய்ந்து பார்க்கினும் மேற்கூற்று வலியுறும்.

இனித் தமிழுக்கே யுரிய பதங்கள் வடமொழியிற் பல ஏறியுள்ளன. 'நீரும்' 'மீனமும்' வடமொழிப் பழைய நிகண்டுகளிற் புலப்படவில்லை யென்ப. ஆதலால் அதற்கு முன்பே அச்சொற்கள் தமிழ்நாட்டில் வழங்கியிருந்ததால் தமிழ்ச்சொற்களே வடதிசை சென்றதென் றுணரலாம். அக்க அடவி* ஆணி, குடி, கடுகு, வலை முதலியனவும் தமிழாய் வடமொழி யேறின வென்பர். கால்ட் வெல் அவர்கள், உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியரும் காலம், உலகம் என்பன வடசொல் அன்றென்றலின் அவைதமிழ்ப் பதங்களேயாம். என்றும் ஸ்ரீமான் தாமோதரம் பிள்ளை முகம், தாமரை என்பனவும் தமிழ்ச் சொற்களே என்றும் கூறுகின்றனர்.

விசேஷார்த்த நிமித்தம் சமஸ்கிருதத்தினின்றும் தென்மொழி யேறிய பதங்களும், அதற்குமுன் வழங்கின தமிழ்ச்சொற்களும் (சில) அடியில் குறித்துள்ளன:—

| வடமொழி | தமிழ் | வடமொழி | தமிழ் |
|---|---|---|---|
| பித்ரு | அப்பன் | மகிஷம் | எருமை |
| மாத்ரு | ஆய், தாய் | கபி | குரங்கு |
| அக்ஷி | கண் | சர்ப்பம் | பாம்பு |
| சூரியன் | ஞாயிறு | அக்நி | தீ |
| கிராமம் | ஊர் | கானனம் | அடவி *; காடு |

* அடவி என்பது அடு [அடர் - நெருக்கம்] என்னுந் தமிழ்ப் பகுதியினின்றும் உண்டாயசொல், தெலுங்கிலும் இச்சொல் வழக்குண்டு.

இஞ்சி என்னும் தமிழ்ச்சொல் சமஸ்கிருதத்திலும் கிரேக்க பாஷையிலும், ஏனைய ஆங்கில பாஷைகளினும் பரவி யுள்ளது.

| தமிழ் | சமஸ்கிருதம் | கிரேக்கு | ஆங்கிலம் |
|---|---|---|---|
| இஞ்சி<br>இஞ்சிவேர் | ஸ்ரிங்கவேரா | ஜிஞ்சிபெர் | ஜிஞ்சர் |

தமிழ் நாட்டில் சமஸ்கிருதத்தைப் பெரும்பாலும் கிரந்த எழுத்துகளிலேயே எழுதிவருகின்றனர்; தேவநாகர அக்ஷரங்கள் அதிகமாகப் பயிலுவதில்லை. இக்கிரந்தம் மணிப்பிரவாள நடையெனவும் படும். அது தமிழும் சமஸ்கிருதமும் கலந்து நடப்பதோர் பாஷை. பெரும்பாலும் வடமொழியுச்சரிப்பும் சிறுபான்மை தமிழும் பெற்றுச் சந்தவின்பமும் கர்ணாமிர்தமான இனிப்பும் பெறும். மணி (முத்து) தமிழையும், பிரவாளம் (பவளம்) வடமொழியையும் குறிக்கும். இப்பாஷை யக்ஷரங்கள் தெலுங்கும் தமிழுங் கலந்தெழுதுவதுபோ லிருக்கும்.

வைஷ்ணவ திவ்யப் பிரபந்தங்களின் பாஷியமும் [பாஷியம்—உரை] திராவிட மாபாஷியமும், ஸ்ரீபுராணம் அருங்கலச் செப்புரை முதலியனவும் இன்னும் பலவும் இந்நடையிலேயே* யுள்ளன.

ஆனால் இவ்வண்ணம் இரண்டு மொழிகளுங் கலந்து பயிலுவது அக்காலத்தினர்க்கு வெறுப்பாக இருந்ததாகவே தோற்றுகின்றது. தற்கால 'நாகரிக' முதிர்ச்சியில் ஆங்கிலம் உடன்பயிலுவது எத்துணை வெறுப்பு நம்மவருட் சிலருக்குப் படுகின்றதோ, அத்துணையே அக்காலத்தினும் என் தந்திருத்தலாகாது? வடமொழிக் கலப்பால், தமிழ்நடை தூய்மையடைந்ததென்னலாம். அஃதும் ஒருதலையே. ஆனால் ஆங்கிலக் கலப்பால் நிலைகுலைந்துள்ளது. விவரிப்பின் மற்றொன்று விரித்தலின்பாற் படுமென அஞ்சி இத்துடன் நிறுத்தப்பட்டது.

சிற்க இம்மணிப்பிரவாள நடையினின்றே தமிழ் எழுத்துகள் உண்டானதாகக் கூறுகின்றனர். இக்கூற்று பொருந்தாது. ஆரியர் தென்றிசை நோக்கும்போது, தமது நூற்களையுங் கொள்கைகளையும் எளிதில் தென்னாட்டினர்க்கு அறிவுறுத்தும் நிமித்தம் தமிழ் தெலுங்கு எழுத்துகளால் வடமொழி எழுத்துகளை எழுத இயைக்கி அவ்விதம் தமது கோட்பாடுகளைப் பரப்பினர். அப்பாஷை வடமொழி முடிபையே பெற்றிருத்தல் அதற்குச் சான்றாம். இதனாலும் தமிழ் ஆரியர் வருவதற்கு முன்பு பரவியிருந்ததென்பதை வலியுறுத்தும்.

---

* இன்னுங் கலித்தொகை முதலிய சங்கநூற்களின் உரைகளில் வடமொழிப் பதங்கள் வழங்குமிடத்து இந்நடையிலேயே (ஏட்டுப் பிரதிகளில்) உளதாகப் புலப்படுகின்றது.



"சதுர்மறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே"

(தொடரும்.)

து. தீனதயாளு.

---

## பெற்றோர்ப் பேணல்.

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

வியாசம் எழுதுதல் வெகு பிரயாசம். இலக்கண இலக்கியங்களில் மிக்க பயிற்சியும் அனுபவமுமிருத்த லத்தியாவசியம். ஒவ்வொரு மொழியும்-ஏன், எழுத்தும்-பொருத்தமானதே யெனத் தாபிக்கத் தக்க ஆதாரத்தை யுள்ளமைத்த பின்பே எழுதத் துணியவேண்டும். மௌனமா யிருந்தால் ஊமையன், ஊமைச் சடம். பேசினாலோ வாயாடி, அதிகப் பாசங்கி. சுருக்கமா யிருந்தால் குன்றக்கூறல்; சற்று விரியின் மிகைபடக் கூறலென்னுங் குற்றம்; சுருங்கச் சொல்லலாம், அழகில்லை. எளிய நடையில் எழுதினால் கல்வி போதாது; உயர் நடையானால் உலகானுபவ மில்லை; இவைக ளிருந்தாலும் சந்திகள் மாறுபாடு; பொருளாழ மில்லை; அது இல்லை; இது இல்லை முன்னே போனால் கடி; பின்னால் வந்தால் உதை. எல்லாவற்றிற்கும் தப்பி எண்ணிய லக்கை எய்த வேண்டியதாகிறது.

மலைகல்லி எலி பிடிப்பதுபோல, இத்யாதிகளின்படி எழுதத் துணியின் ஒரு வாக்கியம் வரையவும் அச்சமாகவே யிருக்கிறது. கற்றோரெல்லாம் கவீசுவரர்களா! பேசுவோர் யாவரும் பிரசங்கிகளாகார். வாசிக்கத் தெரிந்துகொண்டிருப்போ ரியாவரும் வாத்தியாராகத் தக்கோரன்று. ஆயினும் என் செய்வது? ஆசை கெட்டது. ஆசை வெட்கமறியாதே.

வியாசம் என்பதற்குச் சிதைந்து கிடப்பவைகளை ஒழுங்காக அமைத்தல் என்று பொருள். எனவே எடுத்துக்கொண்ட விஷயத்திற்கேற்ற நீதிகளைப் பலப்பல நூல்களினின் றெடுத்து இன் சொற்களாலமைத்து வாசிப்போர் மனதில் பசு மரத்தாணிபோற் பதியச் செய்வதேயாம். இன்றேல் அஃது உயிரில்லா உடம்பையே நிகர்க்கும் என்பது ஆன்றோர் துணிபு.

ஆகலின் இவ்வியாசம் அளவு கடந்து விரிந்து கிடப்பதாகக் காணப்படினும் கருத்தை வற்புறுத்தற் பொருட்டெனக் (Impressiveness) கருதி வெறுப்புக் கொள்ளாராக.

* * * * *

முற்கூறிய புண்டரீகன் சரிதை பெற்றோர்ப் பேணலி னவசியத்தை நன்கு வற்புறுத்தும். இத்தகைய எண்ணிறந்த உளவேனும் விரிவஞ்சி விடுத்து இவ்வுண்மையை யறிந்தொழுகிய புகழாளர் பெற்றிகளைச் சிறிது பேசுவாம்.

இந்துக்கள், சைவவைணவ பேதமின்றி, வணங்கும் சக்கரவர்த்தித் திருமகனார் பட்டாபிஷேகத்திற்குச் சர்வசித்தமா யிருக்கையில் சிற்றன்னை யாகிய கைகேயி அழைத்ததாகக் கேள்வியுற்றுச் சென்றார். சென்று, கைகேயியைக்கண்டு வணங்கி நின்றபோது, அவள் இராமபிரானைப்பார்த்து "அப்பா! இராமா! உன் தந்தை உன்னிடம் ஒருசேதி சொல்லச்சொன்னார். அதாவது, உன்தம்பி பரதன் மணிமுடிதரித்து நாடாளவும் நீ சடைமுடிதரித்துப் பதினான்காண்டு காடாளவும் கட்டளை யிட்டதாகச் சொல்லச் சொன்னார்" என்றாள். உடனே அன்றலர்ந்த செந்தாமரையென விகசித்தது இராமர்வதனம். அவர் தம் தாயைநோக்கி, "அம்மா! அப்படியா! ஆயின் அடியேன் தன்யனேயாயினேன். சாரமற்ற சமுசாரமாகிற சாகரத்தழுந்தி நலியவிடாது கானகஞ்சென்று கடுந்தவம் புரிந்து கதிபெற்றுய்யக் கட்டளை யிட்டனரா? என் பாக்யமே பாக்யம். தாதையாராஞ்ஞையு மிவ்வாறிருக்குமோ வென்னு மையுறவின்று. இஃது தங்களுடையதாயினும் சாலுமே." எனக்கழறிக் காடுபுக்கார்.

பின்னர் தன் தமயனார் அரணியம்போனதை யறிந்து சென்று, நாட்டிற்கு வரும்படி ப்ரதன் அழைத்தபோது அப்புருடோத்தமர், "அப்பா பரதா! மகிதலத்துதித்த மக்கட் பிறப்பினர்க்கு மிகுந்த கேள்வியும், குற்றமற்ற ஞானமும், சீலமும், வினையின் மேன்மையும், தொழத்தகு தெய்வமுமாகிய சகலமும் குரவரே யெனக் கொள்வாயாக. அக்குரவராவார் யாவரோ என்பையாயின் தந்தை தாயரென்னு மிவர்களேயன்றி வேறெவரு மல்லர்!

"பரவு கேள்வியும் பழுதில் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவரே யாமெனப் பெரிது கோடியால்.

அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்க டாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையே"

ஆகலின் தந்தையின் கட்டளைப்படி யொழுகுதல் நம் கடமை யென்றறி" எனத் தேற்றி யனுப்பினர்.

2. சந்திரகுலத்தில் யயாதி என்பா னொருவன் சுக்கிரன் மகளாகிய தேவயானை யென்னும் இல்லாளுடன் அத்தின நகரை அரசாண்டுகொண்டிருந்தான். அவன் ஓர்நாள் தன் பாரிக்குப் பணியாளா யிருந்த சன்மிட்டை யென்பாள் ஒரு காரியார்த்தமாய்த் தன்னெதிர் வரக்கண்டு, காதல்கொண்டு அவளைக் காந்தர்வ மணம் புரிந்தான். பின்பு சின்னாட்கழிய அவள் கருவுற்று அன்பே உருக்கொண்டதென்ன ஓராண்மகவைப் பயந்தனள். பூருவென்று



நாமமிடப் பெற்று அச்சிறுவன் செவ்வனே வளர்ந்து வந்தான். இச்செய்தி பட்டமகிஷியின் காதிற்பட்டது. படவே அவள் சீற்றங்கொண்டு துணிந்து தன் தாதைபாற் சென்று நடந்ததை நவிலலும் இத்தனைக்கும் காரணம் வாலிபமே யாகலின், அவ்யயாதி விருத்தனாகக்கடவனெனச் சபித்தான் சுக்கிரன். தக்ஷணமே யயாதி நரைதிரைகளோடுகூடிய மூப்பைப்பெற்று உடல் நிகழ்வதாகிய பிணிகளால் நலிவானான்.

இங்ஙனமாக, ஒருநாள் யயாதி தன்னிரு மனைவியரிடத்துந் தோன்றிய மூன்று புத்திரரையும் விளித்து, "மைந்தீர்! நும்மில் எவரேனும் நும்மிளமையை யெற்கீந்து எம்முதுமையை யேற்பீரோ" என்றனன். தேவயானையின் மைந்தரிருவரும் உடன்படா தொழிந்தாராகப் பூரு வென்போன் "எந்தாய்! மாதா பிதாக்களுக்கு எவ்வகையானாயினும் மகிழ்ச்சி பெறுவித்தலே மக்கள் கடன். அவ்வாறு புரியாதோர் மக்கட் பகுப்பில் வைத்தெண்ணப் படுவாரல்லர். ஆகலின் யான் தாம் விழைந்தவாறு செய்வேன்" என்று கடவுளைத் துதித்துத் தன்னிளமையைத் தந்தைக்கீந்து அவர் முதுமையை யேற்றனன். இளமைப் பருவம் படைத்த ஏந்தலும் பல இன்பங்களைத் துய்த்துப் பின் வெறுப்புக்கொண்டு பழையபடியே தன் முதுமையை யேற்றுப் பூருவுக்குப் பூர்வ மிருந்த பருவத்தை அகமகிழ்ந் தீந்து பல ஆசிகள் கூறி அரியாசனத்தேற்றி அரசனாக்கினான்.

இச்சரிதையை எழுதிய வில்லிபுத்தூரார், தந்தைக்குதவி செய்யாத காரணத்தால் தேவயானை 'இருவர் வெங்குமாரைப் பெற்றாள்' என்றும், அதைச் செய்த பூருவை, 'பூருவென்றொரு புண்ணியப் புதல்வனைப் பெற்றாள்' என்றும் இகழ்ந்தும், புகழ்ந்தும் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

3. ஐவர் தம் பிதாமகனாகிய பீஷ்மரின் பிள்ளைத் திருநாமம் தேவவிரதன். அவர் சிறுவரா யிருந்த ஞான்று ஒருநாள் அவர் தந்தை சந்தனு வேட்டையாடக் கருதிக் காட்டக மடைந்தனர். சென்றுழி ஆண்டோர் கன்னியைக் கண்டு காமுற்றுக் கடாவிய காலத்து, பரதவன் பாவையென்றறிந்து அவன்மாட் டணுகி, 'நின்மகளை எனக்கு மணமுடித்துத் தருவாயோ'? வென, அதற்கவன், 'ஐய! அவளகட்டுதிப்போனை அரயனாக்க வல்லிரேல் மகட்கொடை நேர்வேன்' என்றான். அம்மாற்றங்கேட்ட மகிபன் மனமாழ்கி மாநகர்ப்புக்கு மகிழ்ச்சியற் றிருந்தனன். மன்னன் முகம் மாறுபட்டிருப்பதைக் கண்ட மைந்தன் உற்றதுணர்ந்து பரதவன் பாலேகி, 'ஐயா! நீயே என் பாட்டன். என் தாய் பாகீரதி யல்லள்; நின்மகளே. அவள் வயிற்றுதிக்கும் என் தம்பியே இவ்வரசுக் குரியான். இது காரணமாக மக்கட்பேற்றை யளிக்கும் மன்றலை நான் விழையேன். தேவர் சான்றாக இது சத்திய வாசக்ம். தக்ஷணமே மணம் முடித்தி;' என்றுறுதி கூறி அவளை உடன் கூட்டிச் சென்று தாதைபால் விடுத்தனன்.

சந்திரவதனியைக் கண்ட சந்தனு, வந்தவாறறிந்து சிந்தை மகிழ்ந்து மைந்தனை இறுகத் தழுவி 'அப்பா! உலகத்தில் ஒருவரும் புரியத் துணியாத காரியத்தை என் பொருட்டுச் செய்தாய். தன்னிளமையைத் தந்தைக்கீந்தவனும் உனக்குச் சமமாகான். தாதையர்க்குச் செய்யவேண்டிய கடமையினும் சதமடங்குதவினை. பாவியாகிய நான் தந்தை மகற்காற்று நன்றியிற் சிறிதும் இயற்றும் பாக்கியம் பெற்றேனில்லை,' என, வருந்தி 'நீயாக மரணத்தை விழைந்தாலன்றி யமன் நின்னுயிரைக் கவராதிருக்கக் கடவன்' என ஓர் வர மீந்தனன். இமையோர் மலர் சொரிந்து மிக்க பயங்கரமான விரதத்தை யுடையவன் எனப் பொருள்படும் **வீடுமன்** எனப் பெயரிட்டழைத்தனர்.

இப்புருடோத்தமர்களின் சரிதைகள் நாம் பெற்றோர் மாட்டு எங்ஙனம் ஒழுகல் வேண்டு மென்பதை யுணர்த்தவில்லை கொல்? இவற்றை நாம் உணரோமோ? இவற்றை யாராய்ந்தறியும் அறிவு நமக்கின்றோ? இருந்தும்,

'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாமடங்காப்
பித்தரிற் பேதையா ரில்' என்பதற்கிலக்காகவோ?

நாம் நமது பெற்றோரை முதுமைப் பருவத்தில் பயபக்தியுடன் ஆதரிக்கினன்றோ நம் மக்கள் நம்மை யாதரிப்பர். நமக்கொன்று பிறர்க்கொன்றோ? முத்தனுக் கடுத்ததுதானே முருகனுக்கும். பிறரை மதியாமைக்குக் காரணமான பணக்கொழுப்பு வாலிபச் செருக்காதிகள் என்றும் நிலைத்திருப்பனவோ?

தன் தகப்பன் கையில் ஒரு சட்டியைக் கொடுத்துப் புறக்கடையில் வைத்து நாய்க் கூற்றுவதுபோல் சிறிதுகூழ் ஊற்றிவந்த ஒருவன் மகன், அக்கிழவன் தன் பாட்டனென்றறிந்து, பரிதபித்து 'தாதா! நாளைக்குத் தவறி விழும் பாவனையாக விழுந்து அச்சட்டியை உடைத்துவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன்' என்று உபாயம் சொல்லித் தந்தான். மறுநாள் கிழவன் சட்டியை யுடைத்தபோது, சிறுவன் ஓட்டமாய் ஓடி 'அடா பாவிக் கிழவா! என் குடியைக் கெடுத்தாயே. எங்கப்பனுக்குத் தரவேண்டுமென்றெண்ணியிருந்த சட்டியை யுடைத்து நஷ்ட முண்டாக்கி விட்டாயே. புதுச் சட்டி தானே எங்கப்பனுக்கு நான் வாங்கவேண்டும்' என வைதான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் தந்தை திடுக்கிட்டு, அதுமுதல் கிழவனை மிக மேன்மையாக நடத்திவந்தான். உண்மைதானே.

நண்பர்களே! இத்யாதிகளால் மாதா பிதாக்களுக்குச் செய்யவேண்டிய கடமை மகா கடினமானதோ வென்றைய முண்டாகும்; அஃதொன்றுமில்லை. மற்றென்னையோ வெனின், அவர்கள் உலகானுபவ முடையோரும் நமது நன்மையைக் கோருபவருமா யிருப்பதால் அவர்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்டு ஒழுகுதல் வேண்டும். நமக்காக எவ்வளவோ கஷ்டங்களை



யனுபவித்தவர்க ளாதலால் மனவருத்த முண்டாகா திருக்கவும், அன்ன வஸ்திராதிகளுக்கு முட்டுப்படா வண்ணமும் செய்தல் வேண்டும். வியாதி நேரிடின் தக்க வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்விக்க வேண்டும். மரண காலத்தில் அண்டையிலிருந்து உதவி புரிந்து மரண மடைந்தபின் ஈமக்கடன் முதலியவற்றைச் சிரத்தையோடு செய்து முடித்தல் வேண்டும்; இவ்வளவே. இவ்வாறாக, சிலர் உயிரோ டிருக்கையில் தடியடி கொடுத்து இறந்தபின் ஊரார் மெச்ச உத்தரகிரியைகளை ஆடம்பரமாகச் செய்கின்றனர். இது எவ்வளவோ அறியாமை!

எவ்வளவு செய்தாலும் அவர்களின் ஒரு நாள் கஷ்டத்திற்கு ஈடாகாது.

கடலைப் போல் மாதா சகாயம்—அதற்கு
உடலைச் செருப்பாய் உதவலும் நியாயம்.

ஒரு கிராமத்தில் குடியானவ னொருவனின் குழந்தை யொன்று வியாதியால் வருந்திக்கொண் டிருந்தது. கைவைத்தியங்கள் பல செய்தும் பயன்படாமையால் பத்து மைல் தூரத்திலுள்ள ஓர் மருத்துவனிடம் கொண்டு போக வேண்டியதாயிற்று. வண்டியிற் போக வசதியில்லை யாகையால், ஏழு எட்டுப் பிராயமுள்ள அக்குழந்தையைத் தோளிற்சுமந்து சென்றான் தந்தை. அதற்கு என்ன வியாதி யெனில், ஆசனத் துவாரா இரத்தம்போன்ற மலம் சதா ஒழுகிக்கொண்டே யிருக்கும். இத்தகைய குழந்தையைச் சுமந்து செல்லுங்கால், அவன் எவ்வித துன்ப மடைந்திருக்க வேண்டும் என்பதை நண்பர்களே யூகித்துக் கொள்ளவேண்டும். இதற்குக் கைம்மாறு யாது?

இவ்வள வில்லாமற் போனாலும் இதிற் பாதியாவது ஒவ்வொரு பெற்றோரும் அனுபவிக்க வேண்டியவர்களே. ஆகவே மேற்கூறியபடி நாமியற்றும் கடமைகள் சதாம்சத்தில் ஒரு அம்சத்திற்கு மீடாகாதெனத் தேர்ந்து, பெற்றோரைத் தெய்வமாகக் கருதி அவர்கள் மனங் கோணாதபடி அவர்களுக்கு வேண்டியவற்றை யளித்துவரின் பரம பிதாவின் கருணைக் குரித்தாவது திண்ணம்.

'வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து—வையமதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை.'

**பூ. ஸ்ரீநிவாசன்,**
தமிழ்ப் பண்டிதர், இராணிப்பேட்டை.

## நம் நாட்டுக் குறைகள்.

நண்பர்காள்! சென்றவருஷத்தில் எங்கள் நாட்டில் பெரும்பஞ்சம் வந்து, தாக்கியதற்குக் காரணமென்ன வென்று யோசித்த மாத்திரத்தில்

ஒரே யொருகாரணம் என்பதனில் புலப்பட்டது. அஃதாவது:—"மேழிச் செல்வம் கோழைபடாது" என்ற ஒளவைவாக்கு அவம்போகாது "குருவிக் குத்தக்க ராககூரம்" என்னும் பழமொழிப்படி தனக்குள்ள நிலத்தைப் பண் படுத்த, அதில் நெல், குரக்கன், சாமை, மரவள்ளி முதலியவைகளை உண்டாக்கி அந்த வரும்படியால் சீவிக்க முயலாது, இந்தியாவி லிருந்து, நெல், அரிசிவருகின்றதே, காசைக்கொடுத்துத் தேவையானதை வாங்கு வோம். தோட்டச் செய்கை, வயற்செய்கை முதலியவற்றில் காலம் கழிக் கிறதிலும் ஆங்கிலேய பாஷை கற்றுக்கொண்டால் உத்தியோகம் செய்து வேண்டிய பொருள் சம்பாதிக்கலாமே என்று தனது அறிவைவளர்ப்பதை விட்டு, வயிறுவளர்க்கவே இந்த ஆங்கிலேய பாஷையை நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான ஆட்கள் கற்றும் கற்கத்தொடங்கியும் தங்கள் வீட் டைச்சுற்றி அடைத்திருக்கும் வேலி அறுந்திருந்தாலும் கட்டத்தெரியாது, தெரிந்தாலும் வெட்கித்துக் கூலியாட் பிடித்துச் செய்விக்கிறார்கள். கூலி யாட்களைப் பிடிக்கிறதுதான் சுலபமா? இல்லை. ஒருகூலி வருப்பைச் சேர்ந்தவனும் தனதுமகனை ஆங்கிலேய பாஷை கற்கத்தான் அனுப்புகி றான். இப்படி யிருந்தால், கூலியும் கிடைக்கவில்லை, தானும் கட்ட வெட் கமாயிருக்கிறது. "வேலி அம்பலம்தான். படலை சங்கடம்தான்" எங்கள் முற் பிதாக்கள் கொடுத்தகூலியிலும் பார்க்கப் பத்துமடங்கு கூலிகூட இப்போ கொடுத்தும், உடனே செய்விக்கவேண்டிய வேலை செய்வித்து முடிக்கப் பத்துநாட்களுக்குமேல் செல்லுகிறது. "தன்தொழில் விட்டவன் சாதியிற் கெட்டவன்" என்ற முதியோர் மொழியை மறந்து கஞ்சிக்குப் பயறு போட்டதுபோல் கொஞ்ச ஆங்கிலத்தைப் படித்து மலாய் நாட்டில் உத்தி யோகம் பார்த்துத் தன் தாய்ப்பாஷையை மறந்து கீரைத் துரைக்கு விளை யாடும் நண்பரை நினைக்கும் பட்சத்தில், மிதித்த கிளையையும், பிடித்த கிளையையும் விட்டவன்போல், மலாய் நாடு இப்போ இடம் கொடாததால், அவஸ்தைப் படுகிறார்கள் என நினைக்கிறேன்.

இனியாவது தனக்குள்ள நிலத்தை, வெட்கத்தைக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு, பண்படுத்தி அதில் வரும் பிரயோசனத்தால், பிறர் தயவிற்கு எதிர்பாராது சீவிக்குமாறு, என் நாட்டுச் சகோதரர்களைக் கேட் டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

**அ. ந. இரத்தினசிங்கம்,**
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:**—நமது நாடு, எல்லாத்தொழில்களிலும் கௌரவமானவையும், உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவுமாகிய உழவு, வாணிபம் இவை யிரண்டிலும் பூர்வீக முதல் முதன்மை பெற்றதாக விருந்தது. பிற்காலத் தில் பல காரணங்களால் நம்மவர் அத்தொழில்களை அகௌரவத் தொழில்



களாக மதிக்கவும், யாவற்றிலும் அதமத் தொழிலாகிய சேவகா விர்த்தி யையே மிகக் கௌரவமான தொழிலாகக் கருதி மிக்க ஆவலோடு அதிற் போய் அபரிமிதமாகச் சேரவும் தொடங்கியதே நமது நாடு இத்தகைய சீர் கேடான நிலைமையை யடைந்ததன் முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

இக்காரணங்கள் நன்கறியப்பட்டு, நம் தாய் நாடு தன் பூர்வீக உன்னத நிலைமையை யடையும்படி செய்ய வேண்டுமென்று பெருமுயற்சி நடக்கும் இனியேனும் நமது நாட்டார் உழவு, வாணிபம், நெசவு முதலிய கைத் தொழில் ஆகிய கௌரவத் தொழில்களில் பிரவேசிக்கும்படி தம் மக்களுக்கு அறிவையும், ஆவலையு மூட்டவேண்டியது அவசியமாகும். பரம்பொருள் கிருபை பாலிப்பாராக.

**பத்திராசிரியர்.**

---

## ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

**சகோதர சகோதரிகாள்!**

குற்றத்தைக் குறிக்காது குணத்தையே மேற்கொண்டு இச்சிறுவனை ஆசீர்வதிப்பீர்க ளென்ற முழு நம்பிக்கையுடன் வரையத்துணிந்த விடயம் தலைப்பில் காட்டிய ஸ்ரீ பஞ்சாக்ஷரமே!

பஞ்சாக்ஷரம் என்பது ஐந்தெழுத்தாலாகிய திருமந்திரம். மந்திரம் என்றால்:—

மந்—நினைப்பவன்

திரம்—இரக்ஷித்தல், காத்தல். அதாவது, நினைப்பவனை இரட் சிப்பது, என்று பொருள்.

யாவனொருவன் யாதொரு மந்திரத்தை முறையாக நினைப்பானாயின், அம்மந்திரம் அவனைத் துன்பத்தினின்றுங் காப்பாற்றி நன்மையடையுமாறு அனுக்கிரகம் பண்ணா நிற்கும்.

"மகாரம் மநநஞ்சைவத் ரகாரம் த்ராணமுச்யதெ
மநநத்ராணமித்யா ஹுர் மந்ர மித்யபிதீயதே."

என்பது பிரமாணம்.

மேல்காட்டிய பஞ்சாக்ஷர மென்பது நமசிவாய, என்னும் ஐந்தெழு த்துக்களாம். இதனை உச்சரிக்குங்கால் 'சிவாயநம' என்றமையும். இதற்குச் சூக்கும பஞ்சாக்கரம் என்றும் பெயர். இதன்பொருள்:—

சி = சிவம்
வ = அருள்
ய = ஆன்மா
ந = திரோதம்
ம = மலம்

"சிவனரு ளாவி திரோதமல மைந்து மவனெழுத் தஞ்சி னடைவாம்"

என்பதறிக.

அவற்றில் முன் இரண்டெழுத்துக்களும் பதியும், பின் இரண்டெழுத்துக்களும் பாசமும், நடு எழுத்தொன்றும் பசுவுமாகும். பதிக்கும் பாசத்துக்கும் இடைப்பட்டதாய் பாசத்தோடு சேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும், பாசமும் பதியும் அல்லாமல் தயங்கும் தன்மையை யுடையது பசு என்னு முண்மை இதனுல் நிலைக்கும். பதியோடு கூடிய சம்பந்தத்தை ஞானநடனம் எனவும், பாசத்தோடு கூடிய சம்பந்தத்தை ஊனநடனமெனவும் பெரியோர் கூறுவர். ஊன நடனமொழிந்து ஞானநடனந் தானே ஆதரிக்கற்பால தென வேதாகமங்கள் முழங்கும். ஆகலால், நகார மகாரங்களாகிய மலங்களைப் பின்றள்ளி யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய அருள்கூட்டச் சிகாரமாகிய சிவத்தில் அதீதப்படும்.

இதற்குப் பிரமாணம்:—விருத்தாசல புராணம்.

"மகர வக்கரம் வல்லினந் துறந்திடை யினத்தில்
இகல றுத்தின மாக்கியே நகரம திருய்
வகர வக்கரத் தடங்கிட வொடுக்கிமற் றவைபோற்
றுகளி லாவினஞ் சேர்ந்துறுந் துறவர்பா னின்றுன்"

(பொருள்) மகார அக்ஷரமாகிய திரோதாயி யை வல்லினமாகிய சிகாரவக்ஷரத்தை விடுத்து இடையினமாகிய யகாரவக்ஷரம் என்னும் ஆன்மாவிற் பிரிவறவொடுக்கி, நகார அக்ஷரமாகிய மலத்தை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவைகளை ஒடுக்கினது போல, குற்றமற்ற இனங்களென்னும் யகார அக்ஷரமாகிய ஆன்மாவை வகார அக்ஷரமாகிய அருளிலொடுக்கி, அவ்வருளும் சிகார வக்ஷரமாகிய சிவமும் பேதமற்று அபேதமான அத்துவிதானந்த நிலையில் விளங்குகின்ற மூர்த்திகளான பெரியோர்களிடத்தில் அனுசரித் திருந்தான் சுவேதராசன்.

இதனைப் பிரகாராந்தமாகவும் காட்டி விவகரிப்பாம், எங்ஙனமெனின்,

நம — ஜீவான்மா
சிவ — பரமான்மா
ஆய — ஐக்கியம்.

(சிவ) பரமான்வாகிய பதிக்கும் (நம) ஜீவான்மாவாகிய பசுவுக்கும் (ஆய) அருட் பராசத்தி வாயிலாக ஐக்ய முண்டாமென்பது.

"நம: பதம்தத்கலு ஜீவவாசீ
சிவ: பதம்தத் பரமாத்ம வாசீ
ஆயே தி தாதாத்ம்ய மிதம் ப்ரசித்தம்
நமச் சிவாயேதி ஜகாத மந்த்ர:."

என்னும் வசனத்தினுல் பிரகாசிக்கின்றது. இந்த பஞ்சாக்ஷரம் பிரணவத்தின் பொருளா யிருப்பதாலும் அதைப்போன்ற பிரநக்மந்திரமாதலா



160929

லும், பரம பாவ நகரமான மோக்ஷமந்திரமாகும் ஐந்தெழுத்துங் கூடிய இம்மகாமந்திரத்தின் முதலில் பிரணவமில்லை.

"வித்யாஸு ச்ருதி ருத்க்ருஷ்டா ருத்ரைகாதசினி ச்ருதௌ
தத்ரபஞ்சாக்ஷரீ தஸ்யாம் சிவ இத்யக்ஷர த்வயம்"

என்பதனுல் வித்தைக ளெல்லாவற்றுள்ளும் சுருதியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும், உருத்திரை காதசினியே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் ஸ்ரீபஞ்சாக்ஷரமே உத்கிருஷ்டமானதென்றும், அதனுள்ளும் (சிவ) என்னும் த்வயாக்ஷரங்களே உத்கிருஷ்ட மானவையென்றும் தெரியவருகிறது. பிரணவம் வேறுதுணை வேண்டாது உச்சரிக்கப் படுவதேபோல், ஸ்ரீபஞ்சாக்ஷரமும் வேறொன்றின் ஆஸ்ரயமில்லாமல் ஜபிக்கப்படுதலால் இரண்டும் தம்மில் வேறுபடாத ஒரே மந்திரமாகும். இதன் மகிமையோ வெனின்:—

"ஐந்து பூதமைம் பொறிகளொ டைம்புல னமர்ந்த
வைந்தெ னுங்கரு மேந்திரி யமைவர்கா ரணரா
மைந்தெ னுந்தொழி லைம்பெரும் பிரமங்க ளனைத்து
மைந்தெ ழுத்தினி லுணர்த்துவ ரறிவறிந் தவரே"

"அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தன
னஞ்செழுத் தாற்பல யோனி படைத்தன
னஞ்செழுத் தாகிய வக்கர சக்கர
மஞ்செழுத் துள்ளே யமர்ந்திருந் தானே"

அதாவது பஞ்சாக்ஷரமாவது, நகார மகார சிகார வகார யகாரங்களாகிய ஐந்தெழுத்துக்களும் முறையே, பஞ்சபூதங்களையும், பஞ்சஞானேந்திரியங்களையும், பஞ்ச கன்மேந்திரியங்களையும், பஞ்சதன் மாத்திரைகளையும், பஞ்சகலைகளையும், பஞ்ச சாதாக்கியங்களையும், பஞ்ச சத்திகளையும், பஞ்சப் பிரமங்களையும், பஞ்சகர்த்தாக்களையும், பஞ்ச கிருத்தியங்களையும், பஞ்ச வர்ணங்களையும், பஞ்சபட்சிகளையும், தமதுள் அந்தர்ப்பவமாய்க் குறிப்பித்து விளக்கிக்கொண்டு சத்தார்த்தப் பிரபஞ்சங்களுக் கெல்லாம் பிரேரக நிலயாதாரமா யிருக்கிறது.

இம்மட்டோ ?

'சிவ' என்னும் ஆணெழுத்தும் 'நம' என்னும் பெண்ணெழுத்தும் 'ய' என்னும் அலி எழுத்துஞ் சேர்ந்து பதி பசு பாசத்தி லடங்கும். இது உச்சரிக்கப் படுகிற முறைமையினுலே ஸ்தூல பஞ்சாக்ஷரம், சூக்ஷ்மபஞ்சாக்ஷரம், காரணபஞ்சாக்ஷரம், மகாகாரணபஞ்சாக்ஷரம், அதிசூக்ஷும பஞ்சாக்ஷரம் அல்லது மநாமநு என்று ஐவகைப்படும். போகத்தைக் கொடுக்கக் கூடிய ஸ்தூல பஞ்சாக்ஷரம், "நமசிவாய" என்றும், மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம் "சிவாயநம" என்றும் சொல்லப்படும்,

சூக்கும பஞ்சாக்ஷரத்திலுள்ள சிகாரம் சிவம், வகாரம் அருள், யகாரம் ஆன்மா, நகாரம் திரோதை, மகாரம் மலம். ஆதலின் இந்த முறைமையை யுணர்ந்து ஊனநடனமாகிய நகார மகாரத்திலே சென்று ஜனனமரணப் பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார வகாரத்தைப் பொருந்திச், சிகார முதலாக உச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும் விட்டு வகாரமாகிய ஞானம் தானாய் நிற்கவே, சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்துவிக்கும். அது எப்படியெனில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலழுந்தவே அத்தன்மை யுண்டாக்கும். இந்த அநுபவ ரகசியத்தையும், பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமாமாறு வகாரத்தில் நகாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமும் ஒடுங்கு முறைமையினையும், காரண பஞ்சாக்ஷரம், மகாகாரண பஞ்சாக்ஷரம், மகாமநு இந்த மூன்றையும் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதுவே பிரம்மாநுபவம் என்னும் சுவாநுபவமாம். முடிவாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தால் ஒருவன் உணர்ந்து கொள்ள வேண்டியது யாதெனின் துக்கநிவர்த்தியும் சுகப்பேறுமேயாம்.

“பாசங்கழன்றால் பசுவுக்கிடம் பதியாம்” என்னும் அநுபவவாளர் உரையே சான்றாம். ஆதலாலே,

“மெய்த்த வொண்சிவ தத்துவ மதனினு மேலாந்
தத்து வாந்தர மின்மைபோன் மறைகளின் றலையாய்
வைத்த வைந்தெழுத் தாகிய மந்திர மதனி
லுத்த ரம்பெறு மந்திர மிலையென வுணர்வாய்.”

இதனால் மூலமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திற்கு மேற்பட்ட மந்திரங்கள் இல்லையென விளங்குகின்றது.

“ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களு
மைம்ப தெழுத்தே யனைத்தாக மங்களு
மைம்ப தெழுத்தி னடைவை யறிந்தபி
னைம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே.”

“நமச்சி வாயவே ஞானமுங் கல்வியு
நமச்சி வாயவே நானறி விச்சையு
நமச்சி வாயயே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.”

பிழையுளதேல் ஆன்றோர் பொறுக்க.

வா. ர. வேணுகோபால் பிள்ளை,
செங்கழணி மேடு, வாயலூர்.

---



## கைவல்ய நவநீத வசனம்.

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஆசான் பின்னும் கூறுகிறார்.)

மைந்தனே! காரணத்தாலுண்டாயது காரியம். யாவற்றையும் அறியும் அறிவின் சொரூபமே காரணமாம். அறியப்படும் பொருள்கள் யாவும் காரியமாம். காரியமாகிய இந்நாமரூபப் பேய்கள் உண்டான விதம் எப்படி? தோன்றாமலழிவதெப்படி? என்று அதைப்பற்றி விசாரித்தல் சற்றும் பயனில்லாக் காரியமாகும். ஆகையால் நீண்ட சொற்பனம் போன்ற இப்பிரபஞ்சம் உண்டான வழியையும், ஒழியும் வகையையும் பற்றி விசாரிப்பதை விட்டு, உன் ஆன்ம சொரூபமாகிய பரிபூரண அனுபவத்தில் நிலைத்து நிற்பாயாக.

[மாயை வந்த வழியையும், போம் வழியையும் அறிய முயல்வது பயனற்ற வேலை. மாயையை யொழிக்கும் வழி கூறப்பட்டிருக்கிறது. அவ்வழியில் முயன்று மாயையை யொழித்தால், பிறகு எல்லாம் தானே விளங்கும். மாயையின் வயப்பட்டிருக்கும் வரையில் அதன் இரகசியத்தை யறியவொண்ணாது என்பதாம்.

அறியப்படும் பொருள்களாகிய காரியத்தில் திருஷ்டியை விட்டால் மாயை யொழியும்.

“தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தசுக வறிவுமிகச் சிறந்த தாகும்
தெரிபொருளால் வளைப்புண்டாற் பந்த மாகும்
தெளிபொருளை விட்டகன்றால் திடங்கொள் வீடாந்
தெரிபொருளுந் தரிசனமுஞ் சேரும் போதிற்
சேர்ந்தவநு பூதியிடர் தீர்ந்த தாகுந்
தெரிவுறவாங் கதுபற்றி நிற்பாய் நீநின்
றிரநிலையாஞ் சுழுத்திதனைச் சேரு வாயே.”

(வாசிட்டம்.)]

(நாமரூப திருட்டி எவ்வளவு விடப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஆன்ம சொரூபம் தோன்றுமென்று ஆசான் கூறுகிறார்.)

மைந்தனே! அசத்தாகிய நாமரூபத்தில் உள்ள பற்று எவ்வளவுக் கெவ்வளவு விடப்படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்தர்முகத் திருஷ்டியுளதாகும். இவ்வாறு நீடித்துச் செய்யும் அப்பியாசத்தால் உன் மனம் உன் வசப்பட்டு ஆன்ம சொரூப மாத்திரமாகிய நிலைபெறும். அந்த நிலையை யடையின் துக்கமயமான இத்தூல தேகத்தி லிருப்பினும் ஆனந்தக் கடல் மயமாவாய்.

[நாமரூப நாட்டம் விடின் சச்சிதானந்த சொரூபந் தோன்றும். ஜீவன்முத்த நிலை யுண்டாகும். மேலே கூறியபடி காணப்படுபவை யனைத்தும் மாயையே. நம்மாற் காணப்படும் அவை யனைத்தும் நாமல்லவென்று நீக்கி, யாவற்றையுங் காணும் அறிவு சொரூபமாகிய நம்மையே நாம் காணவேண்டும். அந்தர்முக நாட்டத்தாலடையும் பயன் இதுவேயாம். இதுவே தன்னைத் தானறிதல் என்பதும்.

“ தானறியுந் தத்துவங்க ளெல்லாந் தனக்கனியந்
தானதுவே யன்றென்று தள்ளுங்கான்—ஞானமாய்த்
தள்ளுமவ னுயிருக்குந் தன்னுற்று னென்றுணர்ந்து
கொள்ளுமது வேசாந்த மாம்.” (சொரூ■சாரம்.)

நாமரூப நாட்டமே பகிர்முக நாட்டம் என்பது. அந்த நாட்டம் ஒழிந்தால் பிரபஞ்சத் தோற்ற வொழிந்து அந்தர்முக நாட்ட முதிக்கும்.

“ எதுபரி யந்தம் வெளிமுகப் பார்வை
யிருக்குமவ் வளவுமே விகற்பத்
திதியுறு பிரபஞ்ச பாவனை தோன்றுஞ்
செழுங்கட லலையசை வுளதே
லுதைந்திடுங் கரையை யொழிந்திடி னிலைத்த
வுதகமே போலுமெய்ப் பிரமஞ்
சுதந்தர வடிவாய் நிறைந்திடிற் சோகந்
தோன்றிடா தெனத்துணி மகனே ”
(வாசிட்ட வமல ராமாயணம்.)]

(ஆன்மா சச்சிதானந்த சொரூபமெனின், சத்தும் சித்தும்போல் ஆனந்தம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் என் விளங்கவில்லை எனச் சீடன் வினுதல்.)

**சீடன்:**—குருநாதனே! தன்னையன்றி அந்நிய மொன்று மில்லாத ஆன்மா பூரண சச்சிதானந்த சுபாவமாய் உயிரோடு ஒன்று யிருக்கிற தென்னின், அடியேனுக்கு அது விளங்கவில்லை. நான் கண்டேன், கேட்டேன் என்று விவகரிக்கும் இச்சீவன்கள் சத்தென்பது கூடும். அப்படியே, விஷயங்களை வேறு பிரித்தறியும் ஞானம் இருத்தலால் சித்தென்பதும் கூடும். இவற்றைப்போல் எல்லா விஷயங்களிலும் ஆனந்தம் தோன்றவில்லையே. அது ஏனோ அறிவிக்க விரும்புகிறேன்” என்றான்.

**குரு:**—குழந்தாய்! ஒரு மலரில் நிறம், இரசம், மணம் மூன்றும் ஒன்றாய்க் கூடியிருந்தாலும், ஒவ்வொரு இந்திரியத்தால் ஒவ்வொரு குணம் தோன்றுமன்றி ஒரே யிந்திரியத்தில் அம்மூன்றும் தோன்று. அவ்வாறே சத்து, சித்து, ஆனந்தமாகிய குணங்கள் ஆன்மாவின் சொரூபமேயாயினும், பிரபஞ்ச மயமான விர்த்திகளின் பேதத்தால் பேதங்களாக உணரப்படும்.



சத்துவம், இராசதம், தாமதம் எனக் குணங்கள் மூன்றாகும். இம்மூவித குணங்களால் உண்டாகா நின்ற விர்த்திகளும் மூன்று வகையாகும். இவற்றில் சத்துவ குணம் சாந்த விர்த்தியும், இராசத குணம் கோர விர்த்தியும், தாமத குணம் மூட விர்த்தியுமாகும். நாம் கூறும் சத்து, சித்து, ஆனந்தமாகிய குணங்கள் ஆன்மாவின் கண் ஏகரசமாகவே யிருப்பினும், இவ்விருத்தி பேதத்தால் பேதமாகத் தோன்றும்.

சடமாகிய மரம், கல், மண் முதலியவற்றில் சத்து ஒன்று மட்டுமே வெளியாகும். சித்தும், ஆனந்தமும் வெளியாகா. காமக் குரோதாதி குணங்களாகிய கோர விர்த்தியிலும், மயக்கம், பயம் முதலிய மூட விர்த்தியிலும் சத்து, சித்து இரண்டு குணங்களே வெளியாகும். பொறுமை, கருணை முதலிய சாந்த விர்த்தியில் சத்து சித்தோடு ஆனந்தமும் சேர்ந்து மூன்று குணங்களும் வெளியாகும். ஆதலின், அஞ்ஞானத்தா லுளவாகும் காமக் குரோதம், மோகம், பயம் முதலிய கோர மூட விர்த்திகளை விட்டு நீங்கி வைராக்கியமும், சாந்தமும் பொருந்திய மனதோடு அந்தர்முக விர்த்தி யுண்டாயின் ஆனந்தம் வெளிப்படும். இவ்வாற்றால் சத்தும், சித்தும்போல ஆனந்தமும் ஆன்மாவின் சொரூப மென்றே யுணர்வாயாக.

(சீடன் சச்சிதானந்த விலக்கணம் கேட்டல்)

**சீடன்:**—“ பரமாசாரியரே! இந்தச் சச்சிதானந்தம் என்பதன் இலக்கணம் அடியேற்கு விளங்கவில்லை. ஆதலின் சத்து என்பதென்ன? சித்து என்பதென்ன? ஆனந்தம் என்பதென்ன? என்று விளக்கிவைக்கப் பிரார்த்திக்கிறேன்” என்றான்.

**ஆசான்,** மைந்தனே!

**சத்து:**—முக்காலங்களிலும் கெடாமல் இருப்பதுவே சத்தின் இலக்கணமாம்.

**சித்து:**—விடயங்களில் வேறு பாடுகளை யறிதலே சித்தின் இலக்கணமாம். (சுயப்பிரகாச முடையதாய்த் தன் பிரகாசத்தாலேயே யாவற்றையும் பிரகாசிக்கச் செய்வதே சித்தின் இலக்கணம்)

**ஆனந்தம்:**—நாம் இஷ்டப்பட்ட வஸ்து கிடைத்து அதை யனுபவிக்கும் போதுண்டாகும் திருப்தியே ஆனந்த இலக்கணமாம்.

[இந்திரியங்கள் கரணங்கள் முதலிய யாவற்றையும் பிரகாசிப்பிப்பது ஆன்மாவே; ஆன்மா தவிர மற்றயாவையும் சடமாம். ஆன்மா ஞானசொரூபம். ஞானம் என்பதே பிரகாசம். ஞானம் ஆன்மாவைவிட்டுப் பிரிந்திருப்பதல்ல. நித்திரையின்போது இந்திரியாதிகள் இல்லாதிருந்தும் விழித்தபின், “ நான் சுகமாய் நித்திரை செய்தேன் ” என்று கூறுகிறான். “ ஆன்மாவை விட்டு ஞானம் பிரிந்தில்லை யெனின் என்யாவரும் ஞானிகளாயில்லை ?”

எனின், தீபம் பிரகாச முடையதாயினும் மூடுபனியில் அதன் பிரகாசம் புலப்படுவதில்லை. அதுபோல் அவித்தையில் மறைப்புண் டிருப்பதால் ஞானம் மங்கியிருக்கிறது. அவித்தை நீங்கின் அதன் பிரகாசம் வெளிப்படுகிறது. நாம் அதை ஞானம் உதித்தது என்கிறோம். உண்மையில் இருந்த ஞானமே பிரகாசிக்கத் தொடங்கிய தன்றிப் புதிதாய் ஞானம் உண்டாவதில்லை. அவ்வாறே ஆன்மா ஆனந்த சொரூபமாம். சடப்பொருள்கள் எதனிடத்திலும் ஆனந்தம் என்ற குணமில்லை. எப்படி யெனின், ஒருவனுக்கு ஒரு பொருளில் உதிக்கும் ஆனந்தம் அதே பொருளில் மற்றொருவனுக்கு உதிப்பதில்லை. அல்லது அதே பொருளில் மற்றவனுக்கு வெறுப்புண்டாகிறது. ஆனந்தம் அவ்வஸ்துவிலுள்ளது உண்மையாயின் மற்றவனுக்கும் அதில் ஆனந்தம் ஜனிக்கவேண்டும். ஆனந்தம் ஆன்மாவினிடத்தே யுள்ள தென்பது சுருதியுக்தி யனுபவ சம்மதம்.]

(சீடன் ஆன்மாவினிடத்தில் சச்சிதானந்த லட்சணம் உண்டென்று எந்த அநுபவத்தா லுணர்வதென வினவுதல்)

**சீடன்:**—“ குருநாதனே ! அழிந்து போகும் இச் சரீரத்திலுள்ள சீவனை நோக்கி நான்குவேத மகாவாக்கியங்களும் ‘நீ சச்சிதானந்தப் பிரம்மமாயிருக்கிறாய்’ என்று கூறினும், ‘நீயே அச்சச்சிதானந்த பிரம்மம்’ என்று ஆசிரியர் உபதேசிக்கினும், நம்மிடத்தே அச்சச்சிதானந்த லட்சணம் இருக்கிறதென்று ஆன்மா எந்த அநுபவத்தா லுணரலாகும் ? அடியேற் கருள்புரியப் பிரார்த்திக்கிறேன் ” என்றான்.

(ஆன்மாவினிடம் சச்சிதானந்த இலக்ஷணம் உண்டென்பதை ஆசான் நிரூபிக்கிறார்)

## ஆன்மா சத்து எனல்.

முன் ஜன்மத்தில் செய்த கர்மபலத்தினாலேயே நீ இச்சன்மமெடுத்து பூர்வஜன்மத்தில் செய்த பிராரப்த பலன்களை யனுபவிக்கிறா யெனில், சென்றகாலத்தில் நீயுண்டு என்று தெரிகிறதல்லவா. அவ்வாறே இச்சன்மத்தில் செய்யும் கன்மங்களுக்காக சொர்க்க நரகபோகங்களை யனுபவிக்க மேல் சன்மங்க ளெடுக்கப்போகிறாய் யாதலால் எதிர்காலத்திலும் நீயுண்டல்லவா. இவ்வாறு நீ, யாதனாசரீரம் தேவசரீரம் மானிடசரீரம் இவற்றை மாறிமாறி யெடுத்தாலும், அத்தேகங்க ளழிகின்றனவே யன்றி நீயாகிய ஆன்மா அழிவதில்லை யாதலால் நீ சத்தாகும்.

[இச்சன்மம் வந்ததற்குக் காரணம் முன்சன்மத்தில் செய்த கன்மங்களாகும். அவ்வாறே அச்சன்மம் வந்ததன் காரணம் அதற்கு முன்சன்மத்தில் செய்த கன்மங்களாகும். இவ்வாறே உத்தரோத்தரம் ஜன்மங்கள் அநாதி தொடங்கி யிருப்பதாலும், இனிமேலும் இச்சன்மத்தில் செய்யும் கன்மங்களால் இன்னொரு சன்மமும், அதிற்செய்யும் கன்மங்களால் மேலொரு சன்மமும் இவ்வாறே முடிவின்றி ஜன்மங்கள் வருமென்று தெரிவதாலும், அப்படிக்கின்றி ஜன்மம் ஒழிவதாயின் ஆன்மா அழியாத முத்திநிலையில் சேர்வதாலும், ஆன்மா என்று மழியாமல் இருக்கும் சத்தென்பது விளங்குகிறது.]



## ஆன்மா சித்து.

காடாந்த காரமான சுழுத்தியில் யாவும்தோன்றாமல் மறைந்திருக்கும் போது, மயங்காமல் அவித்தையாகிய இருளையும், ஆனந்தமாகிய பொருளையும் அறிவதாலும், சூரியசந்திராதி பிரகாசமில்லாத இராக்காலத்தில் இருளில் சாமான்ய ஸ்பரிசத்தால் பொருள்களை அறிந்து கொள்வதாலும், சொர்ப்பனத்திலும் ஆன்மா வேறு பிரகாசத்தை விரும்பாமல் திரிபுடிகளையும் பிரகாசிப்பிக்கின்றதாலும், ஆன்மா சித்தென்ப தனுபவமாம்.

## ஆன்மா ஆனந்தசொரூபம்.

யாவர்க்கும் மற்ற எல்லாப் பொருள்களைக் காட்டினும் தன்னிடத்தில் தான் அதிகப் பிரியமாதலானும், உலகத்தில் யாவர்க்கும் சுகத்தினிடத்தில் தான் பிரிய முண்டாவதன்றித் துக்கத்தினிடத்தி லுண்டாவதில்லை யென்பது பிரசித்தமாதலானும், ஆன்மா சுகசொரூபம், அதாவது ஆனந்தசொரூபம் என்பது அநுபவம்.

“ நானே யென்று மெவ்விடத்து நன்றா யுண்டா யிருக்குகேன்
நானே யென்று மெவ்விடத்து நன்றாய்த் தோன்றி விளங்குகேன்
நானே யென்று மெவ்விடத்து நன்றாயின்ப மாய் நிகழ்கேன்
நானே யென்று மெவ்விடத்து நன்றாய் விளையா டாநிற்கேன்.”
(விஞ்ஞானசாரம்)

இவ்வாற்றால் ஆன்மா சச்சிதானந்த இலட்சணமுடைய தென்பது அநுபவ சித்தம்.

(தொடரும்)
சீடன்.

---

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

1. ஏழாவது வருட முதல் மாதமாகிய ஆடிமாதம் யாவர்க்கும் வி-பி-க்கள் அனுப்பப்பட்டபோது தபால் ஆபீஸில், அவை யொவ்வொன்றும் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டியிருந்த படியால், தினம் 500—600 தான் எடுத்தார்கள். ஆதலால் வி-பி—க்கள் மிக்க ஆலசியமாகச் செல்ல நேர்ந்தது. அதனால் அவற்றிற்குப் பணம்வரவும் ஆலசியமானதால் ஆவணிமாத சஞ்சிகையனுப்ப ஆலசியம் நேர்ந்ததுபற்றி நேயர்கள் பொறுத்துக் கொள்ளக் கோருகிறோம்.

2. இப்போது வி-பி. யனுப்பினால் ரிஜிஸ்டர் செலவோடு தபால் கூலியும் இரண்டத்தனை யாதலால், இனி வி-பி-யில் அனுப்பும்படி எழுதுவோர்க்கு ஆடிமாத சஞ்சிகை ஒன்றுமட்டுமே முதலில் அனுப்பப்படும்.

பணம் வந்தபிறகு மற்றவை யனுப்பப்படும். முதலில் முன் சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பினால் வி-பி. வாபீஸாகிவரின் நமக்கு அதிக நஷ்டம் நேரிடும்.

முன்பணமனுப்பிப் பெற்றுக் கொண்டால் செலவு குறைவதோடு சஞ்சிகைகளும் ஆலசியமின்றி முதலிலேயே வந்துசேரும் என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

3. " ஆனந்தபோதினி " முதல்வருட சஞ்சிகைகள் சீக்கிரம் அச்சிலிருந்து புத்தகரூபமாக வெளியாகி விடும்; இப்போது கட்டளையனுப்பியிருக்கிறவர்களுக் கெல்லாம் உடனே யனுப்பப்படும்; பிரசுரமும் செய்யப்படும்.

பத்திராதிபர்.

---

## " நல்லாயன் " தவறுதலும்

### D. G. A. பர்ணாண்டஸ் என்பாரின் பொய்க்கூற்றும்.

நேயர்களே ! கடந்த ஆவணிமாதச் சஞ்சிகையின் 68-ம் பக்கத்தில் மேற்கண்ட தலைப்புள்ள ஒரு விஷயத்தை நாம் பிரசுரம் செய்திருந்ததையும், அதேவிஷயத்தைப்பற்றி, ம-ா-ா-ஸ்ரீ S. S. Pillay என்ற நண்பர் நடுநிலைமையில் நின்று " ஆனந்தபேதினியின் " பஹிஷ்காரமும், 'உண்டசோற்றுக்கு இரண்டகமும்' என்ற தலைப்பிட் டெழுதிய வியாசத்தையும் அனைவரும் வாசித்திருப்பீர்க ளென்று நம்புகிறோம். அதற்கு விடையாக நல்லாயன் ஆசிரியர் செப்டம்பர்மீ வெளிவந்த தமது சஞ்சிகையின் 200-ம் பக்கத்தில் " ஆனந்தபோதினியும் கிறிஸ்துவர்களும் " என்ற தலைப்பிட்டு அடியிற் கண்ட விஷயங்களை வரைந்துளார்:—

" ஆனந்தபோதினி " ஆசிரியர் தமது ஆகஸ்டு மாத சஞ்சிகையில், " நல்ல ஆயன் தவறுதல் " எனும் தலைப்பிட்டு ஒரு குறிப்பு எழுதியுள்ளதை நமது நண்பர்களிலொருவர், நாம் நமது பத்திரிகையை எழுதிமுடித்துக்கொண் டிருக்கையில் நமக்குக் காண்பித்தார். அதற்குத் தக்கபடி மறுப்பு எழுதக் காலமும், பத்திரிகையில் இடமும் போதாமையால், இவண் அதைப்பற்றி வெகு சுருக்கமாகவே எழுதவேண்டிய தாகிறது.

ஷை ஆசிரியர் நம்மீது கொண்டுவந்திருக்கும் குற்றமாவது, அவர் குறிப்பிட்ட ஒரு கடிதக்காரரின் கூற்று உண்மையா அல்லவா என்று ஆராய்ந்தறியாமல் நாம் அதை வெளியிட்டோம் என்பதே. உண்மையையும், இன்மையையும் ஆராய நமக்கு அவகாசமில்லை. அது எப்படியாயினு மாகுக. ஆனால் பொதுவாக ஒரு இந்து மதப் பத்திரிகையை நமது கத்தோலிக்குக் கிறிஸ்துவர்கள் படிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்துக்குப் பலவகையால் பங்கம் நேருமென்பது பற்றி, " ஆனந்தபோதினி " யின் பஹிஷ்காரத்தைப் போதித்த கடிதத்துக்கு நம் பத்திரிகையில் இடந்தாலானோம். இதுவே நமது நோக்கு. இதற்குமேல் இதைப்பற்றி எழுத எமக்கு இஷ்டமில்லை.



இது நிற்க, " ஆனந்தபோதினியின் பஹிஷ்காரமும், உண்ட சோற்றுக்கு இரண்டகமும் " என்னும் மகுடம் பூண்டதோர் கடிதமும் எமக்குக் காட்டப்பட்டது. இதைப்பற்றியும் இரண்டொருவார்த்தைசொல்ல விரும்புகிறோம். இதை எழுதியதாக கைச்சாத்திட் டிருக்கும் 'S. S. Pillai' என்பார் உண்மையான கத்தோலிக்குக் கிறிஸ்துவரோ அல்லரோ என்ற சந்தேகம் எமக்கு உதிக்கிறது. " எம்மதமும் சம்மதம் " என்கிற கொள்கையை அவர் ஆதரிக்கிறவரானால் அவர் அல்லரென்றே சொல்லவேண்டும். ஏனெனில் உண்மைக் கத்தோலிக்க ரெவரும் எம்மதமும் சம்மதமெனக் கொள்ளார். மெய்யான கடவுள் ஒருவரே, சத்திய வேதம் ஒன்றே, உண்மையொன்றே.

கத்தோலிக்கு வேதத்தையாவது, கத்தோலிக்குக் குருக்களையாவது, அவர்கள் தங்கள்வேதம் பரம்புதல் விஷயமாகச் செய்யும் ஏற்பாடு, நடவடிக்கைகளையாவது கண்டித்து, அல்லது அவமதித்துப் பேச அல்லது எழுதப்படுவதைக் கேட்க, பார்க்க எந்தக் கிறிஸ்துவனும் சகியான். அப்படிப் பேசும் நபரை, எழுதும் பத்திரிகையை பஹிஷ்காரம் செய்யாமலிரான். அப்படிச் செய்யாதவன் உண்மைக் கத்தோலிக்குக் கிறிஸ்துவனல்லன்.

பத்திராதிபர் "

நேயர்களே ! இதிலுள்ள நியாயத்தைப்பற்றி இதை வாசிப்போரே அறிந்து கொள்ளலாகும். ஆதலின் நாம் இரண்டொரு விஷயங்களைப்பற்றி மட்டும் கூறுகிறோம். அவ்வாசிரியர் தமது பத்திரிகை முடியும்சமயம் நமது வியாசத்தைக் கண்ணுற்றதாகக் கூறுகிறார். ஆனால் நமது சஞ்சிகையோ ஆகஸ்டுமீ 16-17உ களில் யாவர்க்கு மனுப்பப்பட்டபோதே எப்போதும் போல் மாற்றுப் பத்திரிகையாக அவருக்கும் அனுப்பப்பட்டது.

அவ்வாசிரியர் தம்மிடம் வந்த ம-ா-ா-ஸ்ரீ D. G. A. பர்ணாண்டஸ் என்பவருடைய கடிதத்தில் கூறப்பட்ட விஷயங்கள் உண்மையா வென்று ஆராயாமலே வெளியிட்டார் என்பது அவருடைய கடிதத்தின் இரண்டாம் பத்தியில் அவரே ஒப்புக் கொள்வதால் தெற்றென விளங்குகிறது. " அது எப்படியாயினுமாகுக " என்கிறார். இதனால் இவர் தமது ஆசிரியர் கடமையை யெவ்வளவு நெறியோடு நடத்துகிறா ரென்பதை இதை வாசிப்போரே தீர்மானித்துக் கொள்ளலாகும்.

மேலும் ஹிந்துமதப் பத்திரிகையைக் கத்தோலிக்கு கிறிஸ்துவர்கள் படிப்பதால் அவர்களுக்குள்ள வேத விசுவாசத்திற்குப் பலவகையால் பங்கம் நேருமென்பது பற்றி " ஆனந்தபோதினியின் " பஹிஷ்காரத்தைப் போதிக்கும் கடிதத்தைத் தாம் பிரசுரித்ததாக அவரே கூறுகிறார்.

காத்தோலிக்கு கிறிஸ்துவர் ஹிந்துமதப் பத்திரிகையை வாசித்தால் அவர்கள் வேதவிசுவாசத்திற்குப் பங்கம்வரும், அதாவது கிறிஸ்துமதத்திலுள்ள

அவர்கள் நம்பிக்கை யழிந்துபோம் என்று இவர் அஞ்சுகிறார் என்பதும், கிணற்றுத்தவளை கிணற்றைவிட்டு வெளிச்சென்றால் கிணற்றினும் பெரிய நீர் நிலைகளுண்டென்று தெரிந்துகொள்ளு மாதலால், அதை வெளியில் உள்ள நீர் நிலைகளைக் காணவிடா திருந்தால்தான், அத்தவளை தானிருக்கும் கிணற்றினும் பெரிய நீர் நிலை உலகிலில்லையென்ற குருட்டு நம்பிக்கை யோடிருக்கும் என்று இவர்கருதுவதும் நாம் கூறாமலே வெள்ளிடை மலை போல் நன்கு விளங்குகின்றன. அந்தோ! ஹிந்துமதப் பத்திரிகைகளை கிறிஸ்தவர் வாசிக்கலாகாதென்ற இவர், ஞானம், வேதம் என்பனவாகிய பதங்களை எம்மத நூலிலிருந்து எடுத்துக் கையாளுகிறாரோ? ஞானம் என்பது இன்னதென் றுணராதிருந்தும், அன்னிய மதத்தினரை யெல்லாம் அஞ்ஞானிகள் என்று எவ்வாறு தூஷிக்கிறாரோ? அதையவர் மனச்சாட்சியே யவருக்கு அறிவுறுத்த வேண்டும். ஒருவன் அன்னியமத நூல்களையும் ஆராய்ச்சி செய்வதால் அவன் அறிவு விசாலித்து, உண்மையெங் கிருப்பினும் அதைக் கிரகித்து, ஞானம் விர்த்தியடையும் என்ற உண்மையைப் பத்திரிகாசிரியராக விருக்கும் ஒருவர் உணராதிருத்தல் மிக்கபரிதாபமே.

கடைசியில் நடுநிலைமையில் நின்று உண்மை நீதியைக்கூறிய ம-ா-ா-ஸ்ரீ S. S. Pillay அவர்கள் (அவர் "எம்மதமும் சம்மதம்" என்ற கொள்கையை யுடையவரானால்) உண்மைக் கிறிஸ்தவரல்லரோ வென்று தமக்குத் தோன்றுவதாக வரைகிறார். உலகப்பிரசித்திபெற்ற ஆன்றோர்க ளனைவரும் ஒப்புக்கொள்ளும் "எம்மதமும் சம்மதமே" என்பதற்கு இவருடைய குறுகிய மனதில் என்ன அர்த்தம் கொண்டிருக்கிறாரோ நாம் அறியோம். அதோடு கத்தோலிக்கு குருமார் தங்கள் வேதம் பரவுவதற்கு எத்தகைய ஏற்பாடுகள் நடவடிக்கைகள் செய்தாலும் எந்தக் கத்தோலிக்கு கிறிஸ்தவரும் அதைக் கண்டித் தெழுதலாகா தென்றும், அப்படி யெழுதுவதைக் கண்டு மனம் சகிக்கலாகா தென்றும், ஜாடையாய்ப் போதிக்கிறார்; அதாவது இவர்கள் மதத்தைப் பரவச்செய்வதில் எத்தகைய நெறிதவறாக நடந்து கொண்டாலும் நமது கிறிஸ்தவ சகோதரர்கள் அதற்குச் சம்மதித்து நடக்கவேண்டும் என்கிறார். "மெய்யான கடவுள் ஒருவரே" என்கிறார். இதனால் மற்ற சமயங்களில் கூறப்படும் கடவுள்கள் வெவ்வேறான பொய்க் கடவுள்கள் என்று இவர் கருதுவதாகத் தெரிகிறது. இவர் தம் அறியாமை இருந்தவாறென்னே?

இதுவன்றோ. ஒரு குருவின் உயர்ந்த போதனை; அறிவாளிகளே இதைச் சிந்திக்கவேண்டும். நேயர்களே! ஈண்டொரு விஷயம் கூறுவது அவசியமாகிறது. அதாவது இத்தகைய போதனைக்கும், இவர்கள் அளிக்கும் பரிசு முதலியவைகளுக்கும் சிலர் உடன்பட்டு எத்தகைய சூதும் தந்திரமுமான வழிகளிலும் பிரவேசித்து நமது மதத்தவர்களைப் பல விதங்களில்



மயங்கச்செய்து தங்கள் மதத்திற்கு இழுத்துக் கொள்கிறார்கள் என்ற உண்மையனுபவத்தால்தான் நாம் நமது மதத்தவர்க்கு எச்சரிக்கை செய்ய வேண்டுவது அத்தியாவசியமாயிற்று.

நேயர்களே! இந்துசகோதரர்கள், கிறிஸ்து சகோதரர்கள் இருவர்களுக்கும் நாம் இப்போது முடிவாகக் கூறுவதாவது:—

"நல்லாயன்" பத்திரிகாசிரியராவது அவருக்குக் கடிதமெழுதியவராவது "ஆனந்தனில்" கிறிஸ்துமதத்தூஷணை யெங்கேனு மிருப்பதாக நிரூபிக்கவில்லை. இல்லாததை நிரூபிக்கவும் முடியாது. "நல்லாயன்" ஆசிரியர் தமக்கு வந்த கடிதத்தில் கூறப்பட்டது உண்மையா வென்பதை யறிய முயலாமலே மதத்துவேஷத்தால் அதைப் பிரசுரித்து விட்டார் என்பது வெளிப்படை.

தம்மதத்தில் உண்மையான பற்றுடையோர் அன்னியமதச்சம்பந்தமான விஷயங்களை வாசிப்பதால் இன்னும் அறிவு விசாலமும், உண்மைஞானமும் அடைவார்களேயன்றித் தம்மதத்தில் விசுவாசத்தை யிழக்கார்க ளென்பதற்கும், "ஆனந்தபோதினியில்" மத தூஷணை எள்ளளவு மில்லை யென்பதற்கும் அத்தாட்சியாக இதே விஷயத்தைப்பற்றி இன்னொரு கிறிஸ்தவ சகோதரர் நமக்கு வரைந்த கடிதத்தைமட்டும் இதனடியில் பிரசுரித்து இதை யித்தோடு முடித்து விடுகிறோம்.

பத்திரிகாசிரியர்

## "நல்லாயன்" நலமின்மையும், "ஆனந்தபோதினியின்" அருமையும்.

காலத்தின் சக்கரமோ நிமிஷ மென நல்லோர் பொல்லார் யாவருக்கும் ஒரே விதத்துடன் ஓடுகின்றது. நாட்கள் செல்லச் செல்ல மனிதனின் ஆயுள் குறுக இவன் மரணம் என்னும் ஓர் பந்தனத்தால் கட்டாயங் கட்டுப்படவேண்டியவ னாகின்றான். இவ்வளவு காலத்திற்குள் மனிதர்களின் அகங்காரந்தான் என்னே! ஜாதி மத துவேஷங்களைக் கொண்டு ஒருவரையொருவர் வெல்ல வேண்டுமென முயற்சி செய்து இகத்திற்கும், பரத்திற்கும் தூரவிலகி நிற்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஜன்மங்கள் மானிட வுருவந் தாங்கிப் புண்ணிய புருடர்க்குத் துன்பமா யிருப்பதைப்பார்க்கிலும் இவர்கள் பிறவாம லிருந்தால் வெகு நலமா யிருக்கும்.

இப்போது சென்ற ஆகஸ்டுமாதம் வெளிவந்த "நல்லாயன்" என்னும் மாதாந்தச் சஞ்சிகையில் ம-ா-ா-ஸ்ரீ D. A. G. பர்னாண்டஸ் (வைகைவாசி) என்பார் "ஆனந்தபோதினி" யில் கிறிஸ்துமத துவேஷங்கள் பொதியப் பெற்றிருப்பதால் அம்மதத்தினைச் சார்ந்த சந்தாநேயர்கள் யாவரும் "ஆனந்தபோதினி" யைப் பகிஷ்காரஞ் செய்ய வேண்டு மென்று வரைந்துள்

ளார். என்னே இவர் தம்புன்மதி யிருந்தவாறு! ஸபாஷ் மிகக் கெட்டிக்காரர்!! பிறரிடம் தப்பிதமே யிருந்தபோதிலும் இயேசுக் கிறிஸ்து நாதரின் உபதேசம் என்ன? "நீ உன்னைப்போல் பிறனையும் நேசி; உன் சகோதரனுக்கு ஏழுதரமல்ல ஏழெழுபது தரம் அவன் தப்பிதத்தை மன்னிப்பாயாக" என்று சொல்லுகிறார். தப்பித மிருந்தால்தான் இந்த ஒழுங்கு; கடுகளவேனுந் தப்பித மில்லாத இடத்தில் வீணே குற்றங் கண்டுபிடிக்க முயன்றும் ஒன்றும் அகப்படாது, எதையோ தாறுமாறாக வரைந்து எழுதுவது தானா புத்திசாலித்தனம்? இவர்தான் எழுதினாரென்றால், "நல்லாயன்" பத்திரிகையின் ஆசிரியாகிய குருவானவர் எவ்வண்ணம் இப் பொய்க்கூற்றைப் பிரசுரிக்கத் துணிந்தனரோ? தெரியவில்லை. எளிய தன்மையில், ஏழைப் பெற்றோரிடம் பிறந்து பிரம்மாச்சாரியாகத் திரிந்தலைந்து, உலக ஆடம்பரத்தை வெறுத்து அன்பொன்றையே அணிகலமாகக் கொண்ட இயேசுநாதரின் சிஷ்யர்களெனச் சொல்லி, வெளிவந்த இவர் அப்பொய்க் கூற்றினைப் பிரசுரித்தது மிக்க விசனிக்கத்தக்கது. இவர் "நல்லாயனில்" அப்பொய்க் கூற்றைப் பிரசுரிக்கத் துணிந்தாலும், அப்பேர்ப்பட்ட கிறிஸ்துமத தூஷணை எங்கு, எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்பதைக் கவனித்தாரா? ஆசிரியரின் கடமையை இவர் நன்குணர்ந் திருப்பாரென்றே நம்ப இடமில்லை. உலகிற்குப் பயன்தரக்கூடிய வியாசங்கள் அணுவேனுமின்றி, பைபில் போதனையை மட்டுமேவரைந்து, புத்திசாலிகளான இந்து மதத்தினரை, அஞ்ஞானிகளென்றும், புரோட்டஸ்டாண்டு கிறிஸ்துவரைப் பதிதர் என்றும் அஞ்ஞான தத்துவமாகப் பேசும் ஆசிரியரைக் கொண்ட, "நல்ல ஆயன்" சஞ்சிகையால் எங்கட்கு யாதொரு பிரயோஜனமுமே யில்லை. எனவே நான் இதை ஒரு வருடத்திற்கு முன்பே பவிஷ்கரித்து விட்டேன். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே, இந்து மார்க்காபிமான புண்ணிய சீலர்களால், உண்டாக்கப்பட்ட பகவத்கீதை என்ன! திருக்குறள், உபநிஷத்துக்கள், மற்றும் யோகாம்சங்களைப் பற்றிய இதிகாசங்கள் என்ன! சொல்லவும், எழுதவும், வர்ணிக்கவும் முடியாத அரும்பெருந் துணை யென ஆன்மாவிற்கு வாய்க்கப்பெற்ற புராணங்களையும் பாராயணம் செய்து தத்வார்த்தப் பிரகாரம் நடக்கும் புண்ணிய சீலர்களையும் அஞ்ஞானிகளெனப் பிதற்றும் இக் குருவானவர் இவ்வியாசத்தை ஏற்றதற்கு இயேசு பகவான் என்ன தண்டனை விதிப்பாரோ தெரியாது. நிற்க, பர்னாண்டஸ் "ஆனந்தபோதினியின்" எந்த சஞ்சிகையிலேனும் கிறிஸ்து மதத்தைத் தூஷித்து எழுதி யிருக்கிறதாகக் காண்பிப்பாரா? இயேசு ரக்ஷக்ர் பிறந்தது பொய்க்கதை, அவர் உபதேசம் பொய், கிறிஸ்துவர்க்கு மோக்ஷமில்லை, பைபில் சுத்த அபத்தம்" என்பன போன்ற வாக்கியங்கள், சென்ற ஏழு வருடங்களின் சஞ்சிகையில் காணவே யில்லை. நானும், சென்ற வருடங்கள் பூராவும் சந்தாதாரனாக இருந்து வருகிறேன். ஒவ்வொரு சஞ்சிகையும் கவனத்தோடு வாசித்து வரு



கிறேன். "தம்மத அபிமானக் கடமையால் பிறர்மதத்தில் பிரவேசியாதபடி சாக்கிரதையா யிருக்கும்படியான சொற்கள் சில சஞ்சிகைகளில் இருக்கின்றன. இது பொதுவாக எம்மதத்தினர்க்கும் சகஜமே. ஐரோப்பாவிலிருந்து மோக்ஷ வாசலின் திறவுகோலைக் கையிற்கொண்டு வருபவர்களெனப் பாவிக்கும் பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்ட பைபில் ஊமன் என்னப்பட்ட ஸ்திரீகளால் கெட்டுப்போன இந்து மடவார் எத்தனையோ பெயர் தம் குலத்துக் கீனமான பெயர் படைத்தனர். இன்னும் அருமையான கற்பின் மகளிர் பைபில் ஊமன்களின் பசப்பான வார்த்தைகட் குடன்பட்டு நிர்ப்பாக்கிய நிலைமைக்குள்ளாயினர். நானே எத்தனையோ காரியங்களை நிரூபிக்கக் கூடும். இன்னும் சிலர், தம் மேலதிகாரிகளாகிய ஐரோப்பிய மிஷனெரிகள் சன்மானம் கொடுப்பார்களென எண்ணி இந்துமத தூஷணையே ஆபரணமாகக் கொண்டு பிரதிகள் அச்சிட்டு வழங்குகிறார்கள். இஃதேன்? இயேசுக்கிறிஸ்து இப்பேர்ப்பட்ட குயுக்திகளெல்லாம் செய்தா பிற மதத்தினரை கிறிஸ்துவர்களாக்கும்படி சொன்னார். இல்லை; இல்லை. இப்படி இந்து மதத்தைத் துவேஷிப்பவர்களாவது, அம் மார்க்கத்திலுள்ள நன்மைகளை உணர்ந்தவர்களோ? பகவத் கீதையின் அருமை, மோக்ஷ நரக பலாபலன், இவைகளை நன்கு ஆராய்ந்தவர்களோ? இல்லை. சில தினங்கட்கு முன் தூத்துக்குடி ம-ா-ா-ஸ்ரீ மஸ்கறீனாஸ் அவர்களும், நெல்லூர் ரெவரண்ட் தேவதாஸ் அவர்களும் "ஆனந்தபோதினி" யில் கிறிஸ்துமத தூஷணையிருக்கிறது என எழுதியதற்கு நடுநிலைமை கொண்டு குன்றாப் புகழ் படைத்த ஆசிரியர் அவர்கள், தக்கபதில் எழுதி யுள்ளார். பிறர் மதத்தில் பிரவேசிப்பதை எச்சரித்து எழுதியதைப் பார்த்து நாம் இந்த மாதிரி ஆக்குரோஷங் கொண்டோமாயின், இந்து மத தூஷணையே முக்கிய லக்ஷணமெனக் கருதி உழைக்கும் நண்பர்கட்கு எத்தகைய அபராதம் விதிப்பாரோ இயேசு? ஜாக்கிரதை! இவ்விதமாக எழுதிவிட்டால் எல்லாரும் நம்மைப் புகழ்வார்களென்றா, அல்லது ஐரோப்பிய மிஷனெரிகள் ஏதாவது சன்மானம் செய்வார்களென்றா இங்ஙனம் இவர் வரையத் துணிந்தனர்? நான் "நல்ல ஆயனை" வாசிக்கும்போது ஒரு நன்மையையுங் கண்டிலேன். "ஆனந்தபோதினி" யிலோ அபரிமிதமான பொருட் சுவையும், ஆத்மலாபமுடைய பல வியாசங்களும், கற்றறிந்த வித்வ சிரோமணிகளால் எழுதப்படுவதால், என் பாமர இருள் நீக்கி பாரபக்ஷமற்ற நடுநிலைமைப் புத்தியை யருளி, ஆன்ம பிரகாசத்தையு மடையச் செய்ததெனத் தைரியமாய்க் கூறுவேன். மதத் துவேஷத்தை யகற்றித் தேசத்தொண்டே பெரிதெனக் கொண்டு அந்தகாரமாகிய சாகரத்தில் ஞான ஒளி கொடுக்கும் அருளாதித்தன் போலிருக்கும் "ஆனந்த போதினியை" எம் நண்பர்களே! எங்குல கிறீஸ்துவ சகோதரர்களே! முழு மனதுடன் ஆதரித்து அதன் பால் குன்றா அன்பு பாராட்டி அதன் நீடிய வாழ்வுக்

கென நமது ஆண்டவரைப் பிரார்த்திக்கவேண்டும். "ஆனந்தபோதினி" யொன்றே பொருளின் லாபத்தைக் கருதாது, பிறர் நன்மையைக் கருதிப் பரோபகார சிந்தையையும், மேதக்க குணத்தையும் தம் வாழ்நாளின் ஜீவ கிரீடமெனத் தாங்கி வாழும் ஆசிரியரைக் கொண்டு சென்னையில் பிரசுரிக்கப்படுகிறது. நான் பாரம்பரையாக கிறிஸ்து மதத்தினைச் சார்ந்தவனே. என் உயிரினும் மேம்பாடெனக் கருதிக் கிறிஸ்து மார்க்கத்தைக் கொண்டவனென்ற போதிலும் பிறர் மதத் துவேஷியே யன்று. எனவே நியர்யந் தவறி நடக்கும் செய்கைகளைக் கவனித்தும் மௌனஞ் சாதியாது மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி இவ்வியாசம் எழுதலானேன். "ஆனந்தனும்" அதன் ஆசிரியரும் நீடு வாழி.

குன்னூர், 25—8—21. பீ. தாமஸ் பாலையா பிள்ளை.

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்காலத்தில் மூளைக்கு இரத்த சம்பந்தமு மிருக்கின்றது. இல்லையென்பது சொல்லத்தக்கதல்ல. நித்திரை காலத்தில் பேசுதல், சிந்தித்தலாதி விரோதமான தொழில்கள் இன்மையால் சுவாசம் தடைபடாது வெளியில் வருகின்றது. அப்போது இருதயம் மலரவும் குவியவும் யாதொரு தடையுமில்லை. புறவஸ்துக்களும் நாடிகளுடன் சம்பந்திக்கின்றன. இயற்கையிற் பிரகாசமுள்ள மூளையும் தடையின்றிப் பிரகாசிக்கின்றது. இருதயம் மலர்ந்தும் குவிந்தும் வருகின்றது. இரத்தமும் தடைபடாமலோடுகின்றது. இங்ஙனமாகவும் சரீரமறிவின்றி யிருக்குமாயின் சரீரத்துக்கே யறிவில்லையென்று கொள்ளப்படுவ தன்றி வேறெவ்வாறு கொள்ளத்தகும். உதயகாலமுதல் இந்திரியங்களுடன் கூடி வேலைசெய்துவந்த ஆன்மாவென்னும் ஒருபொருள் நித்திரை காலத்தில் இந்திரியங்களுடன் சம்பந்தப்படாம லிருப்பதே அக்காலம் அறியுந் தன்மைக்குக் காரணமாமென்க. அவ்வான்மா கட்புலனுக்குப் புலப்படாத ஓர் அரும்பொருளா யிருத்தல் வேண்டும். அணுவென்று கூறப்படுவது எக்காலத்து மழிவற்றபொருளாம். அது ஒரு உடலைவிட்டுத் தனித்திராது. ஆயினும் மலினப்பட்ட வுடலைவிட்டு மற்றோருடலை யடையாநிற்கும்.

இனி தேசகால பாத்திராகாரங்களால் சரீரம் வேறுபடும்; அதனால் மறுபிறப் புண்டென்பது பொருத்த மின்றென்பர் ஒருசாரார். அதன் கருத்து யாதெனின், மேற்றிசையிற் பிறந்தோர் வெண்ணிறமும், வடதிசையிற் பிறந்தோர் சற்றுச் சிவந்தநிறமும், தென்னாட்டிற் பிறந்தோர் கருநிறமுமுடையவர்களா யிருக்கிறார்கள். தென்னாட்டிற் பிறந்தோர் அதிக உயரமும் குட்டையு மில்லாதவர்களாயும், அரபி துருக்கித் தேசங்களிற் பிறந்தவர்கள் உயரமானவர்களாயும், லாப்லாண்ட் தேசத்தவர்கள்



மிகக் குட்டையாயு மிருக்கிறார்கள். இது இடத்திலாய வேறுபாடு. மாரிகாலம் பனிக்காலங்களில் இரத்தங்குறைந்து வேகம் குன்றியும் சோம்பல் மிகுந்து மிருக்கின்றன; பின்பனிக் காலத்திலும் உஷ்ணகாலத்திலும் தேகத்திற்கு ஊக்கம் மிகுகின்றது. அதிக வெப்பகாலத்தில் சரீரத்தில் ஓய்வு காணப்படுகின்றது. இது காலத்தாலான வேறுபாடு. பெரும்பான்மையில், கருநிறமுள்ள தாய்தந்தையர்க்குக் கருநிறமுள்ள குழந்தையும், வெண்ணிறமுள்ளவர்களுக்கு வெண்ணிறமான குழந்தையும் பிறக்கின்றன. ரோக சம்பந்தமுள்ளவர்கள் அதேரோகமுள்ள புத்திரர்களையும் பெறுகிறார்கள். இது பாத்திரபேதம். மாமிசம் புசிப்பவர்களுக்குப் பிறக்கும் சிசுக்கள் பலமான சரீரமுள்ளனவாகவும், மற்றவர்க்குப் பிறப்பது பலவீன முள்ளதாகவு மிருக்கிறதைப் பிரத்தியட்சத்தில் காண்கிறோம். இது ஆகாரபேதம். ஆதலால் கால தேசபாத்திர ஆகார பேதங்களாலேயே வேறுபாடுகளுண்டாமென்பது.

கன்மத்தின் வேறுபாட்டால் பலவகைச் சிருஷ்டிகளுண்டாமென்று கூறும் ஆஸ்திகர்கள் நிறமுதலியவற்றையே காரணமாகக் கொள்ள வில்லை. ஒருவன் பிறக்கும்போதே குருடனாகவும், ஒருவன் முடவனாகவும், ஒருவன் சிறந்த புத்திமானாகவும், ஒருவன் மந்தனாகவும், பிறக்கிறான். ஒருவன் கற்பிக்கப்படாமலே யுணர்ந்து கொள்கிறான். ஒருவன் எவ்வாற்றானு முணர்வதில்லை. ஒருவன் செல்வத்திற் பிறந்து சிறந்திருக்கிறான். மற்றொருவன் தரித்திர குடும்பத்திற் பிறந்து செல்வத்தை யடைந்து சுகிக்கிறான். ஒருவன் அரசனாயிருக்கிறான். ஒருவன் ஏவலாளாயிருக்கிறான். இவையெல்லா மவனவன் புத்திக்கேற்றவாறு அமைகின்றன வென்று கூறமுடியாது. ஏனெனில், படித்த ஒருவன் எடுத்த முயற்சியிற் சித்தியடையாமல் சோர்வடைகிறான். படியாத ஒருவன் எடுத்த முயற்சி தடையின்றிக் கைகூடப் பெற்றுச் சிறப்படைகிறான். இதனால் புத்திக் குறைவினாலும் புத்திமிகுதியினாலுமே வாழ்வுந்தாழ்வு முண்டாகுமென்பது உசிதமல்ல. நொண்டியான் பெண் நொண்டியான பிள்ளையையே பெறவெண்டுமென்றும், குருடானபெண் குருடான பிள்ளையைப் பெறவேண்டும் என்றும் வரம்பு உலகத்திலில்லை. இலக்கணக் குறைவற்று அங்கப்பழுதின்றிச் சிறந்திருக்கும் பெண் குருடும் செவிடும் முடமுமான புத்திரர்களைப் பெறுவதும், இலக்கணக் குறையான பெண் அழகிற் சிறந்து அவயவப் பழுதற்ற புத்திரர்களைப் பெறுவதும் பிரத்தியட்சமல்லவா?

இது வாத பித்தங்களின் மாறுபாட்டால் கருப்பையிலுண்டாம் விகாரப்பாடென்று கூறலாமெனினும், அது ஏகதேசமேயன்றி நிச்சயமானதல்ல. கருப்பை என்பது கருமானது குகைபோல்வதல்ல. அப்படி யிருக்குமாயின் அதிற்பதிந்த கருவும் அவ்வுருவம் பெறுதலமையும். அங்ஙனமின்மையால் இவ்வேறுபாடுக ளெல்லாம் மறுபிறப் புண்டென்பதைக் குறிப்

பிக்கும் சூசனமாகவே கொள்ளப்படும். கருப்பத்தில் புசித்த ஆகாரத்தின்
வேறுபாட்டால் மந்தனுன புத்திரன் பிறப்பானென்ப துண்டெனினும்
அதுவே பிரமாணமாவதில்லை. • ஏனெனில், நல்லாகார முள்ளவர்களுக்கு
மந்தனுன புத்திரன் பிறப்பதும், கெட்ட ஆகாரமுள்ளவர்களுக்குப் புத்திமா
னுன புத்திரன் பிறப்பதும் பிரத்தியட்சமாதலால் அதுவு முசிதமன்று.
இதனுல் காலதேச பாத்திர ஆகாரவேறுபாடே உயர்வுந் தாழ்வுமான பிறப்
புக்குக் காரணமாவதில்லை யென்க. இவையெல்லாங் காரணமாவது கன்
மத்தை யனுசரித்தேயாம்.

மறுபிறப் புண்டென்ப துண்மையாயின் முற்பிறப்பிற் கண்டு கேட்ட
னுபவித்தவைகளி லொன்ருவது இப்பிறப்பில் நினைவிற்கு வருவதில்லை.
மறுபிறப் புண்டென்பதைப் பிரத்தியட்சத்தி லறிந்துவந்து கூறினவரொரு
வருமில்லை. உலகத்திற் பிறந்து அறிவு தோன்றிய நாள்முதல் நடந்த
வைகளெல்லாம் ஒன்றன்பி னென்ருக நினைத்துப் பார்த்தால் அவையறி
வில் தோற்றுகின்றன. முற்பிறப்பில் நெடுங்கால மனுபவித்தவைகளில்
ஒன்றேனு மிப்பிறப்பில் ஞாபகத்துக்கு வாராமலிருப்பது ஏனே? அப்பி
றப்பிற்கு மிப்பிறப்பிற்கு மிடையில் நெடுங்காலஞ் சென்றதனுலெனின் அது
ஒவ்வத்தகாத காரணமாம்; ஆதலால், மறுபிறப்புண் டென்பது கொள்ளத்
தகாததா மென்பர் ஒரு சாரார்.

இவ்வாறு இவர்கள் கூறுவது பெருந்தவறு. ஏனெனின், நாம் உலகத்
திற் பிறந்து அனுபவித்த ஒவ்வொரு விஷயமும் தவருமல் நினைவிற்குத்
தோன்றுவதில்லை. காலையில் அனுபவித்தது மாலையில் மறக்கப்படுகின்றது.
தனக்குத்தற்காலம் அவசியம் வேண்டிய ஒரு பொருளை எடுத்துவர உட்
சென்றவன் அப்பொருளை யுடனே மறந்து நெடுநேரம் சிந்தித்து உணராம
லிருக்கிருன். ஊருக்குப் பிரயாணமாயிருக்கிற ஒருவன், அவசியமான ஒரு
விஷயத்தைத் தனது அன்புள்ள மனைவியிடங் கூறச்சென்று, அப்போழுதே
யதனை மறந்து அஃது இன்னவிஷயமென்று புலப்படாமல் மயங்கிச் செல்
கிருன். சில நாட்களுக்குமுன் நடந்த ஒருவிஷயம் ஞாபகத்துக்கு வருவதே
யில்லை. பிறர்கூற வுணர்ந்து கொள்கிருன். பலதரங்கூறியும் உணராமலே
யிருக்கிருன். இளமையிற் பெருமுயற்சியுடன் பயின்ற புத்தகங்களும் சிறிது
காலத்தில் மறக்கப் படுகின்றன. இளமையிற் பயின்றவை முதுமையில்
மறக்கப்படுகின்றன. இளமைப் பருவத்தில் நாமின்னது செய்தோமென்று
கூட ஞாபகத்துக்கு வருவதில்லை. நாமிளமையா யிருந்தோ மென்பதேயுண
ரப்படுவதில்லை. தாய் தகப்பன் முதலிய பெரியோர் கூறக்கேட்டுத் தெரிந்து
கொள்கிறேம். இதனுல் முற்பிறப்பே யன்றி யிப்பிறப்பில் நடந்தவை
கூட நினைவிற்கு வருவதில்லை. அக்காலத்தில் நாமிருந்தோ மென்பதற்கும்,
நாம்செய்த அருஞ்செயல்களுக்கும் பெரியோருரையும் அநுமானமுமே பிர
மாணமாவதன்றி வேறில்லை. இதனைப்போல முற்பிறப்பிலும் மறந்திருக்கக்
கூடுமல்லவா?



இனி யிளமையில் இந்திரியங்கள் முதிர்ச்சிபெருமையால் அக்காலத்தி
யவை மறக்கப்பட்டன. இந்திரியங்கள் முதிர்ந்த காலத்தில் நடந்தவை மறக்
கத் தக்கனவல்ல வாகையால் ஞாபகத்தி லிருக்கவேண்டும்; இல்லாதிருக்க
காரணம் யாதெனின், அது கூறுதும். முற்பிறப்பில் இந்திரியங்கள் முதிர்
ச்சி பெற்றிருப்பினும், அப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருமளவும் அவ்விந்
திரியங்களில்லாமையால் உணர்வது யாங்ஙனம்? மறுபிறப்பிற் புதியகருவி
களைப்பெற்று வருவதால் அக்கருவிகள் முதிர்ச்சி பெறுமளவும் அவ்விந்திரி
யங்களுக்குச் சக்தி குன்றியே யிருக்கும். அப்பொழுது முற்பிறப்பை யுணர்
ந்துகொள்ளும் சக்தியிராது. அது முற்றும் மறக்கப்படும். இந்திரியங்கள்
முதிர்ச்சிபெற்ற பின்னர் நடப்பவைகளையே யுணரும். முன்ஜன்மத்தை
விடும்பொழுது இந்திரியங்களும் விடப்படுவதும், விட்டபின் மறுபிறப்பை
யடையுமளவும் இந்திரிய சம்பந்த மற்றிருப்பதும், மறுபிறப்படைந்த பின்
இந்திரிய முதிர்ச்சி பெறுமளவும் ஒன்றையு முணராம லிருப்பதுமே முற்
பிறப்பையுணராமைக்குக் காரணங்களா மென்க. அங்ஙனமாயினும் முற்
பிறப்பி லுணர்ந்த ஜீவான்மாவே யிப்பொழுது மிருத்தலால் அது ஏன் உண
ரக் கூடாதெனின், நெடுங்காலஞ் செல்லுமாயின் அறிவு குன்றுமென்பது
அனுபவமாதலாலென்க. செயற்கை யெல்லாம் கெடுமாதலால் இந்திரிய சம்
பந்தமான செயற்கையா லுண்டான செயற்கை யறிவு கால நீட்டிப்பினுல்
குன்றுவது இயல்பே யாமென்க. (வரும்.)

—— சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு அம்பலவாணனுடைய முயற்சிகளெல்லாம் வியர்த்தமாய்
விட்டன.

அன்றிரவு அவன் சிறைச்சாலையில் சயனித்துக் கொண்டபோது
அவன் மனம் பட்ட வேதனை கடவுளே யறிவார். 'நம் எதிரி மிக்க பல
முடையவன்; அவனைச்செயிக்க நம்மால் முடியாது. இனியென் செய்வது''
என்று பெருந் திகிலடைந்தான்; இரவு முழுதும் அவன்பட்ட மனத்துன்
பம் கடவுளுக்கே அற்பிதம்.

கடைசியில் காலை ஏழுமணிக்கு மிக்க வியாகூலத்தோடு தன் அறை
யில் உட்கார்ந்திருக்கும்போது சிறைச்சாலைக்காவலன் கதவைத்திறப்பதைக்
கண்டு வியப்படைந்தான். ஏனெனில் அது அவன் கதவைத் திறக்கவேண்
டிய காலமல்ல. கதவு திறக்கப்பட்டதும் காவலன் இன்னெருு மனிதனை
யழைத்துவந்து விட்டுவிட்டுக் கதவை மூடிக்கொண்டு சென்றுன்.

உள்ளேவந்த மனிதன் சற்று நடுத்தா உயரமுடையவன். நல்லதேக
பலமுடையவன். சுமார் 50-வய துடையவன்போல் காணப்பட்டான். அங்
கங்கு நரைத்த உரோமங்களை யுடைய தாடியும் சற்று தொங்கும் புருவங்க

ளையும் உடையவனு யிருந்தான். ஆனுல் அவன் கண்கள் கூர்மையான பிரகாசமுடையவைகளாய் எதிரிலுள்ளோர் இருதயத்தையே ஊடுருவிப் பார்ப்பவைகள்போல் தோன்றின.

அம்மனிதன் நமது நண்பனை நோக்கி "நீதானு அம்பலவாணன்?" என்றான். அம்பலவாணன் திடுக்கிட்டுக் கலவரத்தோடு ஆம் என்றான். அதன்பின் அம்மனிதன் தன் மேல் அங்கியை நீக்கி உட்சட்டையில் தொங்கும் பதக்கத்தை யவனுக்குக் காட்டினான். அதில் "துப்பறியும் உத்தியோகஸ்தன் ஆனந்தலிங்" என்று குறிக்கப்பட் டிருந்தது.

துஷ்டர்களான இரங்கநாதன் சாமிநாதன் இருவரும் கொஞ்சக்காலத்திற்குமுன் மேலையூரில் ஆனந்தலிங்கைத் தலைமேலடித்து பூமியின் கீழ்ச் செல்லும் ஒருபாழும் சாலகத்தில் போட்டு விட்டதையறிந்த நமது நண்பர்களுக்கு இது மிக்க ஆச்சரியமும் நம்பக்கூடாததுமான சங்கதியாயிருக்கும்.

ஆனுல் மனிதனுடைய துஷ்டச் செய்கைகள் எப்போதுமே யவன் எண்ணப்படி நடக்கு மென்று நம்பலாகுமோ. இவ்வுலக முழுமையும் ஒரு ஈ, எறும்பு, சிறுபுழு, இவற்றின் நன்மை தீமைகளைக் கூடச் சதா கவனித்துக்கொண் டிருக்கும் ஒருவன் இருக்கிறான். அவன் நிரபராதிகளுக்கு ஒரு போதும் துன்பம் நேரிட விடமாட்டான். அவனுடைய செயல்களின் உளவையறிய ஒருவராலும் முடியாது.

அந்த இரண்டு துஷ்டர்களும் ஆனந்தலிங்கின் தலைமேலடித்ததே அவன் ஸ்மரணையற்று விழுந்து விட்டான். அத்துஷ்டர்கள் அவன் பிராணன் இருக்கிறதா போய்விட்டதா வென்று சரியாய்க் கவனிக்கவில்லை. ஏனெனில் யாராவது வந்து விடுவார்களென்ற பயம் ஒருபக்கம், அதன்றி சாலகத்திலுள்ள சேறும் தண்ணீரும் மற்றவேலையை முடித்துவிடும் என்ற நம்பகம் ஒரு பக்கம், ஆதலால் அந்தச் சாலகத்தில் அவனைப்போட்டுவிட்டு உடனே ஓட்டம் பிடித்தார்கள்.

அவர்கள் அடித்த அடி யின்னும் கொஞ்சம் பலமாயிருந் திருக்குமேல் அவன் இறந்து போயேயிருப்பான்.

அவர்கள் அச்சாலகத்தில் அவனை யெறிந்துவிட்டதும் உடனே அதன் துவாரத்தை மூடிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். அவன் வெளியில் உஷ்ணத்திலிருந்து உடனே அதிக குளிர்ச்சியான சாலகத் தண்ணீரில் விழுந்ததால், சீதோஷ்ணம் நேர்மாறுகவே சட்டென்று ஸ்மரணைவந்து விட்டது.

சாலகத்தின் ஆழம் நாலரையடியே யிருந்தது. இவன் அக்குள் ஆழமே யிருந்தது. ஆதலால் அதில் ஆழ்ந்து போகாமல் தலையைமேலே வைத்துக் கொண்டான். பிறகு சாலகத்தின் இருபக்கங்களிலும் காலை உறுதியாய் வைத்துக் கொண்டு நிதானித்துப் பார்த்தான். சாலகத்தின் மேல்துவாரம் தலைக்குமேல் சுமார் ஐந்தடி யுயரத்தி லிருக்கிறது.



ஏறலாமென்றால் இருபக்கங்களிலும் சறுக்கலா யிருக்கிறது; மேலுள்ள துவாரத்தின் மூடியிலுள்ள சிறு துவாரத்தின் வழியாக ஆகாயம்தெரிகிறது.

ஆனுல் அந்த ஐந்தடி உயரத்தில் ஏற முடியவில்லை. மண்டையில் பட்ட அடி, இன்னும் மணியடிக்கும் ஓசைபோல் கேட்கத் தலைசுழற்றலாகவே யிருந்தது. தன்னுலானவரையில் பார்த்தான், முடியவில்லை. தலைசுற்றல் அதிகமாய்விட்டது; வரவரத் தேகபலம் குன்றி மேலிருக்கும் துவாரத்தைப்பார்த்தபடி யிருந்தான். ஆச்சுது மறுபடி கீழுள்ள சாலகச்சேற்றில் விழும்சமயமாய் விட்டது.

அத்தகைய ஆபத்து வேளையில் ஆ கடவுள் காப்பாற்றுவார் என்ற ஒரு உற்சாக முண்டாயிற்று. அதாவது தலைக்குமேல் மனிதர் பேசும்சத்தங்கேட்டது. ஆனந்தலிங் உற்றுக்கேட்டான். மனிதர் அரவம் என்று தெரிகிறதேயன்றி இன்னது பேசுகிறார்க ளென்று முதலில் தெரியவில்லை. உற்றுக் கேட்டபோது தெரியவந்தது. (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்.

### இம்மாதத்தில் ஜீவிய சந்தாவில் சேர்ந்தவர்கள்.

1. ம-ா-ா-ஸ்ரீ K. தங்கவேலு முதலியார்,
துபாஸ், மிஸர்ஸ் அப்பாஸ் உசேன் கம்பெனி, சென்னை.

2. ம-ா-ா-ஸ்ரீ பே. விஸ்வநாத முதலியார்,
ஜவுளி வியாபாரமும், கமிஷன் ஏஜெண்டும்,
2/68, திருப்பள்ளி தெருவு, சென்னை.

**தலைவாரிப் பின்னும் இயந்திரம்.**—அமெரிக்கா டாக்டர் ஜேமஸ் தாம்ஸன் என்பார் பெண்கள் தலைமயிரை வாரிப் பின்னக்கூடிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம்.

**அந்தமான் தீவு.**—தீவாந்தரசிட்சை இனிக் கூடாது என்று சட்ட நிருபண சபையாரால் தீர்மானிக்கப் பட்டுவிட்டதால் அதை யநுசரித்து, அந்தமான் தீவிலிருந்து சில கைதிகளைச் சமீபத்தில் சென்னைக்குக் கொணர்ந்து உள்ளூர் சிறைச்சாலையில் வைத்திருக்கிறார்கள்.

**ஓர் அதிசயம்.**—கண் தெரியாத குருடர் காதினுல் எழுத்தை வாசிக்கக் கூடிய ஆச்சரியத்துக்குரிய வோர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறதென்று "ஈஸ்டர்ன் மெயில்" பத்திரிகை எழுதுகிறது. இந்த இயந்திரம், "ஆடோபோன்" எனப்படுகிறது. இதன்மேல், எழுத்தை வைத்துவிட்டால் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பிரத்தியேகமான தொனி உண்டாக, அதன்மூலமாய் ஒரு அந்தகன் யாதோர் புத்தகத்தையாவது பத்திரிகையையாவது எளிதில் படிக்கக் கூடுமென்றும், ஒரு நிமிஷத்திற்கு 25 வார்த்தைகள் வாசிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதிஹு ஐப்பசிமீ —சாலிவாகனம் 1844—கலி 5023 .
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921ஹு அக்டோபர்மீ நவம்பர்மீ

| ஐப்பசிமீ | அக்டோபர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞா | ◯56-0 | ரேவ-54-0. | அமி54சித் | தனபால விரத ஆரம்பம் |
| 2 | 17 | திங் | பிர57-8 | அசு-56-33 | சித்-60 | குடிபுக,தானியம் வாங்க |
| 3 | 18 | செ | து57-5 | பர-58-15 | சித்-60 | மாடு கொள்ள |
| 4 | 19 | புத | திரி55-57 | கிரு-58-42 | அ58-42சி | சந்திரோதயமாசவிரதம் |
| 5 | 20 | வியா | சது53-50 | ரோ-57-4 | மர-60 | மரணயோகம் |
| 6 | 21 | வெ | பஞ்50-48 | மிரு-56-42 | சித்-60 | கரிநாள் |
| 7 | 22 | சனி | சஷ்46-52 | திரு- 54-28 | சித்-60 | யாத்திரைசெய்ய, கோடி |
| 8 | 23 | ஞா | சப்42-22 | புன-51-34 | சித்-60 | உபநயனம் செய்ய |
| 9 | 24 | திங் | அ37-12 | பூச-48-7 | சித்-60 | நாமகரணம், காதுகுத்த |
| 10 | 25 | செ | நவ31-38 | ஆயி-44-12 | சித்-60 | யாத்திரைக்காகாது |
| 11 | 26 | புத | தச26-20 | மக-40-0 | சித்40அமி | இராம ஏகாதசி |
| 12 | 27 | வியா | ஏக19-12 | பூர-35-37 | சி35-37ம | கோவஸ்த துவாதசி |
| 13 | 28 | வெ | துவ13-21 | உத்-31-26 | சி31-26அ | தனதிரயோதசி, பிரதோ |
| 14 | 29 | சனி | திர7-35 | அஸ்-27-32 | மர-60 | நாகசதுர்த்தசி, தீபாவளி |
| 15 | 30 | ஞா | சது2-15 | சித்-24-16 | சித்-60 | அமாவா-கேதாரிவிரதம் |
|  |  |  | ●57-10 |  | அமி22மர |  |
| 16 | 31 | திங் | பிர45-17 | சுவா-22-0 |  |  |
| 17 | 1 | செ | து52-12 | விசா-20-37 | ம20-37சி |  |
| 18 | 2 | புத | திரி51-32 | அனு-20-50 | சித்-60 |  |
| 19 | 3 | வியா | சது52-5 | கேட்-22-31 | ம22-31சி |  |
| 20 | 4 | வெ | பஞ்55-32 | மூல-25-55 | அ25-35பி |  |
| 21 | 5 | சனி | சஷ்59-40 | பூரா-30-54 | சித்-60 |  |
| 22 | 6 | ஞா | சப் 60-0 | உத்-37-13 | அமி60 |  |
| 23 | 7 | திங் | சப் 5-7 | திரு-44-17 | அ44-17சி |  |
| 24 | 8 | செ | அஷ்11-25 | அவி-51-46 | சி51-46ம | கோவாஷ்டமி |
| 25 | 9 | புத | நவ 17-40 | சதை-59-1 | சி 59-1அ | கிரேதாயுகாதி |
| 26 | 10 | வியா | தச 23-8 | பூரட்-60-0 | சித்-60 | மந்திரம் ஜெபிக்க |
| 27 | 11 | வெ | ஏகா28-17 | பூரட்-5-26 | சித்-60 | போதன ஏகாதசி |
| 28 | 12 | சனி | துவ31-40 | உத்-10-40 | சி10-40பி | யோகீஸ்வர துவாதசி |
| 29 | 13 | ஞா | திர33-33 | ரேவ-14-23 | அ14-23சி | வைகுந்த சதுர்த்தசி |
| 30 | 14 | திங் | சது33-45 | அசு-16-31 | சித்60 | யாத்திரை செய்ய |

1921ஹு நவம்பர்மீ

| | | | |
|---|---|---|---|
| கே |  |  |  |
|  | 10உ க-செ<br>24,, து-சு |  |  |
|  |  |  | செ |
|  |  | சூ-பு | ரா-க<br>ச-கு |

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம

OFFICE OF THE ...
14 NOV 1921

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதிஹு ஐப்பசிமீ கஉ
1921ஹு அக்டோபர்மீ 16உ { பகுதி 4

## கடவுள் வணக்கம்.

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
வறிவேயெ னறிவி லூறு
மானந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடி நாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியா
னிரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்ற துண்டோ
வென்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியா வெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவா ரியே.

அத்தனைச் சிற்றம் பலவனை யென்னுயி ராகிநின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவா
நித்தனை நித்த நிராதார மாகிய நின்மலனை
எத்தனை நாட்செல்லு மோமன மேகண் டிறைஞ்சுதற்கே.

கண்டா ருளத்தினிற் காலூன்றிப் பெய்யுங் கருணைமுகி
லண்டார் புரத்துக்கு மன்பர் வினைக்கு மசனிதன்னைக்
கொண்டாடி னார்முனங் கூத்தாடு மத்தன்றன் கோலமெல்லாம்
விண்டாலம் மாவொன் றுங் காணாது வெட்ட வெறுவெளியே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ ஐப்பசி௴ ௧௨

## வர்த்தகம்.

உலகில் மானிடர் செய்யும் தொழில்களில் வர்த்தகம் ஓர் முக்கியமான தொழிலாகும். பாபமற்ற வழியில் திரண்ட பொருள் சம்பாதிப்பதற்கு இது சிறந்த தொழிலாகும். மேலும் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத அவசியமான தொழில்களில் இதுவுமொன்று. ஒரு பொருளைக் கொடுத்து வேண்டிய மற்றொரு பொருளைவாங்கிப் பிறகுகொஞ்சம் இலாபத்திற்கு அதை யின்னொருவருக்கு அளிப்பதே வர்த்தகமாகும். ஆதியில் ஒரு பண்டத்தைக் கொடுத்தே இன்னொரு பண்டத்தை வாங்கிக்கொண் டிருந்தார்கள். இன்றும் தானியம் கொடுத்து பழம், காய் கறி முதலியவற்றை வாங்கும் பண்டமாற்று வழக்கம் நம் நாட்டில் நடைபெறக் காணலாம். பிறகு பொதுவாக வழங்கும் பொருளாக நாணயத்தை வைத்துக் கொண்டார்கள்.

ஆதியில் நமது நாட்டில் வர்த்தகம் மிக்க விர்த்தி யடைந்திருந்தது யாவரும் அறிந்த விஷயம். நம் நாட்டார் கப்பல்களின் மூலமாக சீனா, ஜப்பான், சுமத்ரா, ஜாவா, ஈஜிப்ட், அரேபியா முதலிய விடங்களோடு வர்த்தகம் செய்திருந்தார்களென்று தெரிகிறது. ஆனால் நம்மவரில் பலர் கூட்டாகச் சேர்ந்து பிரபல வர்த்தகம் செய்ததாகத் தெரியவில்லை. மேல் நாடுகள் வர்த்தகத்தாலேயே பெரும்பாலும் செல்வநிலை யடைந்து பிறகு செல்வத்தால் எல்லா மேம்பாடுகளையு மடைந்தன.

அந்தோ! நமது நாட்டாரோ மற்ற விஷயங்களில் அடைந்ததுபோல் வர்த்தகத்திலும் ஈன தசையே யடைந்தார்கள். வர்த்தகத் தொழில் சுயாதீனமான தொழில். ஆனால் இலாபம் வருவதுபோல்



சில சமயங்களில் நஷ்டமும் கிடைக்கும். ஆகையால் வர்த்தகனுக்குக் கூரிய புத்தியும், ஆழ்ந்த முன்யோசனையும், உலக அனுபவமும் வேண்டும். வர்த்தகர்கள் முக்கியமாகக் கீழ்க்காணும் விஷயங்களை மட்டுமாவது கவனிக்க வேண்டும்:—

1. வர்த்தகன் எக்காலத்தில் எப்பொருள் அதிகமாகச் செலவாகுமோ, அப்பொருளை வாங்கி விற்கவேண்டும். தன்னிடம் விலையாகும் பொருள் எங்கு, எச்சமயத்தில், நயமாகக்கிடைக்குமோ அச்சமயம் சென்று அங்கிருந்து அதை வாங்கி வரவேண்டும். அத்தகைய சரக்கை யதன் உற்பத்தித் தானத்திலிருந்து வாங்கி வந்து வைத்துக்கொண்டு பிரியமான காலத்தில் விற்கவேண்டும்.

2. சரக்குகளை யப்பட்டமாகவே விற்கவேண்டும். சரக்குகளில் அவைபோல் வெளிக்குத் தோற்றும் வேறு வஸ்துக்களைக் கலந்து விற்போர் இம்மையில் மரியாதையை யிழந்து ஒவ்வொரு சமயம் அரசர் தண்டனைக்குள்ளாவதோடு மறுமையில் நரக தண்டனையுமடைவார்கள். இக்காலத்தில் நம்நாட்டில் இந்த அக்கிரமச்செய்கை அதிகமாகப் பரவுகிறது. முக்கியமாக உணவுக்குதவும் பொருள்களிலெல்லாம் தேகசுகத்தைக் கெடுக்கத்தக்க வேறு பொருள்கள் கலக்கப்படுகின்றன. அந்தோ இத்தகைய முக்கிய விஷயத்தை யதிகாரிகள் கவனிக்கிறார்க ளில்லை.

3. வர்த்தகருக்கு விளம்பரம் முக்கிய அவசியமாகும். மேல் நாட்டார் விளம்பரம் செய்வது, எப்படி யென்பதைப்பற்றி யொரு நூலே வரைந்திருக்கின்றனர். விளம்பரம் செய்வ தென்பது நாம் ஒவ்வொருவரிடமும் சென்று என்னிடம் இன்னின்ன பொருள்கள் முதல்தரமானவை, சுத்தமானவை, குறைந்த விலைக்குக் கிடைக்கும்; தாங்கள் என்னிடம் பேரம் செய்து பாருங்கள் என்று அழைப்பது போலாகும்.

4. வர்த்தகன் கட்டாயம் வரவு, செலவு கணக்கு வைத்து அப்போதைக் கப்போது தனக்கு எவ்வளவு இலாபம் அல்லது எவ்வளவு நஷ்டம் என்றறிய வேண்டும்.

5. வாங்குவோர் மனம் திடுக்கிடத்தக்க அதிக இலாபத்திற்கு எதிர்பார்த்தல், முகத்தலளவை, நிறுத்தலளவைகளில் மோசம் செய்தல், ஒன்றைமாதிரிகாட்டிப் பிறகு அதனினும் தாழ்ந்த பொருளைக் கொடுத்தல், இத்தகைய காரியங்கள் மோசச் செயல்களேயாகும்.

6. வர்த்தகனுக்கு எப்போதும் பூரணசாந்த குணம் இருக்க வேண்டும். ஒருவன் பேரம்செய்ய வந்தால் அவன் தன் கடையை விட்டு மறுபடி வேறு கடைக்குச்சென்று கோரிவந்த 'பொருளை வாங்காமல், தன்னிடமே வாங்கிச்செல்லும் வண்ணமாகவும், மறுபடியவன் எதற்கும் தன் கடைக்கேவரப் பிரியப் படும்படியாகவும் நடந்து கொள்ள வேண்டும். தான் ஒரு பொருளின் விலை ஒரு ரூபாய் என்றதற்கு வாங்கவந்தவன் அரை ரூபாய்க்குத் தருகிறாயா என்று கேட்டால், உடனே "உன் மூஞ்சைப் பார்க்கும்போதே நீ வாங்குகிற மூஞ்சிதான் என்று தெரிகிறது; போவே நாட்டுப்புறம்" என்று கடுகடுத்து வந்தவர்களோடு சண்டையிட்டுக் கொள்ளும் சுபாவமுடையவனும், உயர்ந்தஜாதி தாழ்ந்தஜாதி, ஏழை செல்வந்தன், பெரியவன் சின்னவன் யாவரிடமும் மரியாதையாகவும், தாழ்மையோடும் இனிய மொழியாய்ப் பேச வியலாதவனும் வர்த்தகத்திற்குத் தகுதியானவர்களாகார்கள்.

7. தாழ்ந்த சரக்கை உயர்ந்த சரக்கென்று சொல்லி விற்றல், சாயம்போகும் துணியைக் கெட்டிச்சாயம் என்று கூறுதல், கலப்புள்ளதைக் கலப்பில்லாத தென்று கூறுதல், சரக்குக்கு இல்லாத குணத்தையும் யோக்கியதையையும் கற்பித்துப் பொய்கூறுதல் இச்செய்கைகள் வர்த்தகனுக்குத் தீங்கையே விளைவிக்கும். அவனிடம் பிறர்க்கு நம்பிக்கை யிராது. இவற்றால் பாபமும் விளையும்.

நண்பர்களே! இனி நம் நாட்டுவர்த்தகர்களிடமுள்ள குறைகள் என்ன வென்று கவனிப்போம். சாதாரணமாக யாருக்கும் பிறரிடமுள்ள குற்றங்களைப்பற்றிப் பேசுவதே மிகப்பிரியம். ஆனால் அது அறிவாளிகள் செய்கையல்ல வென்றே கருதப் படுகிறது. நமது குறைகளையும் குற்றங்களையுமே நாம் அடிக்கடி சிந்தித்து அவற்றை நீக்கிக்கொள்ள முயலவேண்டும்; அதுவே நாம்முன்னேற்ற மடையும் மார்க்கமாகும். ஆகையால் நம் நாட்டு வர்த்தகர்களிட மிருக்கும் குற்றங் குறைகளைக் கவனிப்போம்:—

1. நம் நாட்டு வர்த்தகர்கள் கல்வியை யலட்சியம் செய்வது ஒரு பெருங்குற்றம். தமது புத்திரனுக்குக் கணக்கெழுதவும், கடிதம் சுமாராக வெழுதவும் தெரிந்து விட்டால், 'போதும் போதும்; இன்னம் என்னத்திற்குப் படிப்பது; கடையைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்; கடையில் நம்ப ஆளென்று ஒருவன் இருக்க



வேண்டும்' என்று கூறிப் பதினாறுவயது ஆகுமுன்னமே அவனைக் கடையில் குந்தவைத்து விடுகிறார்கள். இதனால் எத்தனை சந்ததிகளாயினும் அவர்கள் கடையும் வர்த்தகமும் எள்ளளவு விர்த்தியுமின்றி அதே நிலையிலிருக்கின்றன, அல்லது க்ஷீணித்துப் போகின்றன.

2. அப்படிக்கின்றி யாராவது ஒருவர்த்தகர் தமது புத்திரரில் ஒருவரைக் கல்விகற்க விட்டாலோ, தாய்ப்பாஷையை யலட்சியம் செய்து அந்நியபாஷையை மட்டுமே சிரத்தையோடு கற்கும் வழியிலேயே விடுகிறார்கள். அப்பிள்ளைகள் கொஞ்சம் ஆங்கிலம் கற்றதும், வர்த்தகம், கைத்தொழில் முதலிய கௌரமும் சுயாதீனமுமுடைய தொழில்களை இழிதொழில்களாகவும், அதமமாகிய சேவகா விர்த்தியையே கௌரவமான தொழிலாகவும் கருதப் பழகி விடுகிறார்கள். அதோடு ஆங்கிலம் கற்காத தம் தந்தையாகிய வர்த்தகர் கேவலத்தொழில் புரியும் முட்டாளென்றும், தாங்கள் நாகரீகம் பெற்ற கல்விமான்களென்றும் கருதி அழியும் பாதையில் செல்லத் தொடங்கி விடுகிறார்கள். இவ்விஷயத்தை மட்டும் நோக்கினால் இவர்கள் கல்வியில்லாமல் இப்போதிருக்கும் நிலைமையிலேயே யிருப்பதே மிக்க நலமென்று கருதவேண்டி யிருக்கிறது.

ஆயினும் நம் நாட்டு வர்த்தகர்களாகிய சீமான்கள் தக்கமுயற்சி யெடுத்துக் கொண்டால் இத்தகைய கெடுதியில் தம்மக்கள் சிக்காமலே கல்விகற்று வர்த்தகத்தில் மிக்க விர்த்தியடையுமாறு செய்யலாகும். வர்த்தகத்தில் அந்நியநாட்டுச் சம்பந்தம் அவசியமாதலால், ஆங்கிலமும் கற்கவேண்டியதே. தங்கள் மக்களுக்கு ஆரம்பத்தில் தாய்ப்பாஷையைச் சரியாகக் கற்பித்து அவர்கள் நமது ஆசாரம், ஒழுக்கம், மதம், குலதர்மம் முதலிய வற்றைச் சரியாயுணர்ந்தபின் ஆங்கிலத்தில் சரியாக எழுதப் படிக்கக் கற்கும்வரை அக்கல்வியைக் கற்பிக்கவேண்டும்; அல்லது இன்னும் அதிகமாகக் கற்றாலும் குற்றமில்லை. ஆனால் அதோடு வர்த்தகத்திற்குவேண்டிய பிரத்தியேகக் கல்வியை யவசியம் கற்பிக்க வேண்டும். இவ்வாறு கல்வி கற்றவர்களை வர்த்தகத்துறையில் விட்டால் வர்த்தகம் எவ்வளவோ விர்த்தியடையும். இவர்கள், பலபேர் ஒன்றுசேர்ந்து, மேல்நாட்டில் பிரபலவர்த்தக சங்கங்களை யேற்படுத்தித் திரண்ட செல்வம் சம்பாதிப்பதுபோல், நம் நாட்டிலும் வர்த்தகம் செய்வார்கள்.

3. இப்போது நம் நாட்டார் தனியாகவே (இன்றேல் எங்கோ ஒவ்வொரு விடத்தில் இருவர் மூவர் சேர்ந்து—அதுவும் நீடித்திருப்பது அரிதே...) பெரியவர்த்தக மாயினும் செய்வார்கள். "கொள்ளைக்குப் போனாலும் கூட்டு ஆகாது" என்ற ஒரு பழமொழி மிக்க தவறான கருத்தை நம்மவர்க்கு உண்டுபண்ணுகிறது. அந்தோ! மேல்நாட்டார் நூற்றுக் கணக்கானபேர் ஒன்று சேர்ந்து முதல்வைத்து வர்த்தகம் செய்வதாலன்றோ ஆச்சரியமானவிதமாய்ப் பொருள்களை யுற்பத்தி செய்வதோடு ஏராளமான செல்வம் சம்பாதிக்கிறார்கள் என்பதைப் பிரத்தியட்சமாக நாம் பார்க்கிறோமல்லவோ. இப்போது நம் நாட்டுவர்த்தகர் அப்படிச் செய்யக்கூடாமலிருப்பதன் காரணம் போதிய கல்வி யின்மையே. மேல்கண்டவாறு தம்மக்களுக்கு இனியேனும் கல்வி கற்பித்தால் நம்நாட்டில் வர்த்தகம் மிக்க விர்த்தியாகு மென்பதில் ஐயமே யில்லை.

அந்தோ! நம்நாட்டார் இதைக்கவனிப்பார்களோ? "ஆ! இதில் கூறியிருப்ப தெல்லாம் சரிதான், உண்மையே" என்று வழக்கம் போல் கூறிவிட்டு உடனே மறந்து விடுவார்களோ? இன்னமும் அசட்டையா யிருந்தால் நம் தாய்நாடு முன்னேற்ற மடைவது ஆகாதகாரியமே.

4. அந்தோ! மேனாட்டு நாகரீக மயக்கத்தில் நம் நாட்டு வர்த்தகரும் சிக்கிக்கொண்டு சில தவறான காரியங்களைச் செய்கிறார்கள். அது நாகரீகமான சீர்திருத்த மென்று கருதுகிறார்கள் போலும். அதிலுள்ள அகௌரவம் இவர்கள் கண்களுக்குப் புலப்படவில்லை.

(1) ஒருவருக்கு மேல்பட்ட ஆட்கள் கூட்டாகச் சேர்ந்து தொழில் செய்வதற்கே சங்கம் என்று பெயர்; அதற்கு ஆங்கிலத்தில் "கம்பெனி" என்று பெயர். அதை Co. (கோ) என்று குறிப்பாக இரண்டெழுத்துக்களால் வரைவதும், கூறுவதும் வழக்கம்.

அந்தோ! நம்மவர்களோ ஒருவன் ஒரே யொரு பொருளில் மட்டும் வர்த்தகம் செய்வதாயினும் "இராமன் அண்டு கோ," "கந்தன் அண்டு கோ" என்று பெயர் வைத்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் இதில் இன்னொரு பெரிய அவலட்சணம் உண்டு. அதாவது, 'கிருஷ்ணசாமி' என்பது தன் பெயராயின், "கெ. ஸாமி அண்டு கோ" என்றும், 'கோபாலு' என்பது பெயராயின் "கெ. பாலு அண்டு கோ" என்றும், 'லோகநாதம் பிள்ளை' என்றால் "லோகன் அண்டு கோ" என்றும் வைத்துக் கொள்ளுகிறார்கள். சிலர் தங்கள் தாய்நாட்டு முன்னோர், பெரியோர், மகான்கள், கடவுள் திருநாமங்கள் இவை யாவும் அகௌரவ மென்று கருதி அலட்சியம் செய்து, மேல்நாட்டு வமிசத்தவர்கள் என்று மதிக்கப்படுவது கௌரவம் என்று எண்ணி, மேல்நாட்டுக்குரிய பெயர்களையே வைத்துக் கொள்ளுகிறார்கள்.



அந்தோ! உண்மையில் இவற்றைக் காணும் அன்னிய நாட்டார் நம்மைக் கேலி செய்து மிக்க அகௌரவமாகவும், இழிவாகவும் கருதுகிறார்கள் என்பதையும், நம் நாட்டு அறிவாளிகள் கண்டு அந்தோ! நம் தாய்நாட்டார் இப்படி அன்னியர் அவமதிப்பிற்கு இடங் கொடுக்கிறார்களே யென்று மனம் வருந்துகிறார்க ளென்பதையும் இவர்கள் அறியார்கள் போலும்.

(2) அன்னிய நாட்டாரைப் பார்த்து படாடோபமாக விளம்பரங்கள் பிரசுரிக்க நம்மவர் தொடங்கி விட்டனர். இந்த விளம்பரங்களில் எத்தகைய பொய்களைச் சேர்க்கவும் சிலர் பின்னிடைவதில்லை. அன்னிய நாட்டிலிருந்து வரும் ஒரு ஔஷதத்தை "எங்கள் முன்னோர்கள், அல்லது ஒரு பெரிய மகான் இரகசியமாகக் கூறிய முறைப்படி அனேக வனமூலிகைகளால் தயாரிக்கப்பட்டது" என்று கூறுகிறார்கள். அந்தோ! "கடவுள் ஒருவருளர். இத்தகைய அசத்தியத்திற்குக் கட்டாயம் தண்டிப்பர்" என்ற நினைவே யித்தகையோர்க்கு இல்லை போலும். இதனால் யாவர்க்கும் நம்மேல் அவநம்பகம் ஏற்படும் என்பதையும் இவர்கள் கருதுவதில்லை. இப்படிச் சிலர் செய்வதால் உண்மையாய் உள்ளதை யுள்ளபடி கூறும் விளம்பரங்களுக்கு மதிப்பில்லாமற் போகிறது பிரத்தியட்ச அனுபவம். ஜனங்கள் "இந்த விளம்பரங்களில் கூறியுள்ளவற்றை எள்ளளவும் நம்பலாகாது. இதெல்லாம் பெருமோசம்" என்று தங்களுக்குள் பேசிக்கொள்வதைச் சாதாரணமாகக் கேட்கலாம்.

எழுதும் கடிதங்களில் விலாசங்களைப் படாடோபமாக இல்லாதவற்றையும் சேர்த்து அச்சடித்து வைத்துக் கொள்வது முதலிய இத்தகைய வெளி யாடம்பரங்களை மட்டும் மேல் நாட்டாரைப் போல் செய்கிறார்களே யன்றி, மேல் நாட்டாரின் வர்த்தக ஒழுங்கைப் பின்பற்றமட்டும் முயல்வதே யில்லை.

இத்தகைய செய்கைகள் விசேஷமாகப் புதிதாய் வர்த்தகம் செய்யத் தொடங்குவோரிடமே காணலாம்.

(3) நம் நாட்டில் ஒருவர் எவ்வளவோ ஆழ்ந்த யோசனை செய்து ஒரு புது வழியில் வியாபாரம் செய்யத் தொடங்கினால், பக்கத்தி லிருப்பவன், தான் யோசித்துப் புதிதாக வேறொரு வழி கண்டுபிடிப்பதை விட்டு, அவனுக்குப் போட்டியாக அதேமாதிரி செய்து அவனிலுங் குறைந்த விலைக்குச் சரக்கை விற்கத் தொடங்கி அவனையுங் கெடுத்துத் தானும் நஷ்டமடைந்து "சந்தடி யடங்கிக் குந்தினையா குரங்கே" என்பதற்கிணங்க அடங்கிவிடுவான்.

அந்தோ! இத்தகைய செய்கைகள் நம்மவரிட மிருந்தால் வர்த்தகம் எப்படிச் செழித்தோங்கும்.

(4) வர்த்தகத்திற்குக் கைத்தொழில் நெருங்கிய சம்பந்த முள்ளது. இரண்டிலும் முயற்சியுடைய நாடே செல்வமும், சீரும், பெறும். முதலாளிகளாகிய வர்த்தகர் கைத்தொழிலை வளர்க்க வேண்டும். நம் நாட்டில் உற்பத்தியாகும் மூலப்பொருள்களைக் கொண்டு கைத்தொழிலால் சாமான்களை யுற்பத்தி செய்து அவற்றைக் கொண்டு வர்த்தகம் செய்தால் நல்ல இலாபம் பெறலாமன்றோ. இச்சமயம் அவ்வாறு செய்ய நல்ல சௌகரிய மிருக்கிறதை நம் வர்த்தகச் சகோதரர்களாகிய கனவான்கள் சிந்திக்கக் கோருகிறோம்.

(5) மிளகாய்க் கடை வைத்திருப்பவன் தலை முறை தலை முறைக்கு மிளகாயேதான் விற்பது நம் நாட்டு வழக்கம்; இது சுய ஆலோசனைப் புத்தியின்மையைக் காட்டுகிறது. எச்சமயம் எப் பொருள் அதிகமாகத் தேசத்தில் வேண்டியிருக்கிறதோ அப் பொருளை யுற்பத்தி செய்து அதில் வர்த்தகம் செய்யவேண்டும்.

கனவான்களாகிய சகோதரர்காள்! "ஆனந்தன்" நம் தாய்நாட்டின் நன்மையைக் கருதியே நமது குற்றங் குறைகளை வெளியிடுவதால் அதற்காக மனவருத்த மடையாமல், கூறிய விஷயங்களை நன்றாய்க் கவனிக்க உங்களை மிகவும் வேண்டிக்கொள்கிறோம். சச்சிதானந்தப் பரம்பொருள் இக்கோரிக்கையை நிறைவேற்றப் பிரார்த்திக்கிறோம். ஓம் தத் ஸத்.

---



## அவாவும், அவா வறுத்தலும்.

ஒரு பொருளை இச்சிப்பதும், அதை யடையப் பிறக்கும் உணர்ச்சியும் அவாவாகும். இதுவே ஆசை யென்பதும். ஆசையை அழித்தல் அவா வறுத்தலாம்.

உலகில் உய்யும் எவ்வுயிர்க்கும் அவா உண்டாவது இயற்கை. கண் ஒன்றைக் கண்டவுடன் அதை யடைய மனம் இச்சிக்குமே யொழிய, அதைப் பெற வெறுக்காது. ஆகவே, ஆசை எவ்வுயிரையும் எளிதில் கைக்கொள்ளும். இது பிரபஞ்ச வியற்கை.

மாந்தருக்குப் பலவித காரணங்களால் அவா விளைகின்றது. அது, கடைசியாக, உலகில் மாயையாற் றோற்றும் மூன்று பொருள்களிடத்துச் சேர்கிறது. அவைகள் மண், பெண், பொன் என்பனவாம். இம்மூன்றையும் கூற்றெனக் கூறுவர் ஞானிகள்.

'பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருளென் றெண்ணுமொரு பாவி'

எனத் தாயுமானவர் கூறியுள்ளார். அதாவது பொருளையும், மண்ணையும், பெண்ணையும் ஒரு பொருளாகக் கொள்பவர் பாவி யென்றார்.

இது நிற்க, மண், பொன், பெண் இவற்றினிடத்து நம்மவர் செலுத்தும் அவாவை ஒவ்வொன்றினோடும் தனித் தனியாக ஆராய்வாம்.

மண்ணாசை அரசரிடத்தும், பெரும்பான்மை விவசாயம் செய்யும் சம்சாரிகளிடத்தும் நன்கு காணப்படும். சில அரசர் பிற நாட்டரசரோடு போர்புரிந்து அந்நாடுகளையும் தங்கள் நாடுகளோடு சேர்த்துப் பெரியதாக்க விரும்புகின்றனர். இதென்ன கொடுமை! அதர்ம யுத்தம் புரிந்தாவது தன்னாட்டைப் பெருக்கவேண்டுமோ? இவரினும் வலியான் இவர் நாட்டைக் கொள்ளானோ? அந்தோ! பூமி ஒருவர் கையிலேயே என்றும் நிலைத்து நிற்கக்கூடியதோ? நிற்க, சம்சாரிகளோ வெனின், தன்னிலத்திலோர் பாகத்தைப் பக்கத்து நிலத்துக்காரன் சேர்த்துக்கொண்டா னென்று ஒவ்வொருவரும் பெரும்பாலும் வாதுபுரிகிறார்கள். அந்தோ! அற்ப நிலத்தின் சுதந்தரத்திற்காக ஆசை கொண்டு ஒருவரோ டொருவர் வாதுசெய்ய, மத்தியஸ்தரான நியாயஸ்தல உத்தியோகஸ்தர்களுக்கு இவர்களால் நல்ல வூதியம் கிடைக்கின்றது. என்னே இவர்கள் மதி!

பொன்னாசையை ஆராயுங்கால், இக்காலத்தில் சிறியோர் முதல் பெரியோர் வரை பொருளை இச்சிக்கின்றனர். பொருளின் முக்கிய குணம், ஒருவனுக்குச் சிறிது செல்வங் கூடிவரின், அவனுக்கு மென்மேலும் பெரும் பண வெறியை உண்டாக்குவதே. கிடைத்தது கொண்டு திருப்தி யடைவோர் மிகச் சிலரே.

ஆசைக்கோ ரளவில்லை யகில்மெல் லாங்கட்டி
யாளினுங் கடன் மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்த பேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
* * * *'

என்ற தாயுமான சுவாமிகளின் உரைப்படி, உலகமே தனதாயினும், எவ்வளவு பெரும்பொரு ளிருப்பினும் திருப்தி யடையாது ரசவாத வித்தை வேண்டுமென அலைவர் அறிவிலா மாந்தர். பொன்னாசை கொண்டோர், நாயினுங் கேடாக ஓடி ஓடித் தேடுவர்; பெட்டியினுள் மூடிவைத்துக் காவல் புரிவர்; மற்றுத் தாமும் அனுபவியார்; பிறர்க்கு மீயார். 'ஆறிடு மேடும் மடுவும் போலாம் செல்வம்' என்பதை யறியா விவரது மதி என்னே மதி! தாம் இறந்தபின் அதுகூட வரும் என்பதை உணர்ந்தாரோ இவர்? அந்தோ! கடவுள் கொடுத்த அறிவும் இத்தன்மை யடையுமோ!

பெண்ணாசையோ மற்றிரண்டினும் கொடியது. இவ்வவா சிற்றின்ப மயக்கினால் விளைவது. இதுவே மனிதனை முற்றும் அழிக்கின்றது. காம வெறி கொண்டோன் பல ஸ்திரீகளை பலவந்தத்தால் கற்பழித்துப் பாபம் சேர்ப்பதோடு, பலவிதமான ரோகங்களுக்கும் இரையாகிறான். பெண்ணினால் கெட்டவர் பலர். சிவபக்தனாகிய இராவணன் எப்பெரும்பதவியி லிருந்தான்? இந்திரன் எப்பெரும்பதவியி லிருந்தவன்? பின் காமவெறியால் இருவரும் எவ்வளவு கீழ் நிலையை யடைந்தனர். இவை யாவும் நமக்குத் தெரிகின்றன. அந்தோ! தெரிந்திருந்தும் நாம் இச்சேற்றில் வீழ்ந்திறக்கின்றனமே யன்றி மீள்கின்றனமோ!

ஆசையின் தன்மையை தாயுமான சுவாமிகள் ஓரிடத்தில் பின் வருமாறு கூறுகின்றார்:—

'ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்
செனவுமன தலையுங் காலம்
மோசம்வரு மிதனாலே கற்றதுங்கேட்
டதுந்தூர்ந்து முத்திக் கான
நேசமுநல் வாசமும்போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்ப ரந்தோ
தேசபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசை யின்றேற் றெய்வமுண்டோ'

மிகுந்த ஆசையால் மனம் மோதுண்டு அலையுமாயின், கற்ற கல்வியும், கேட்ட கேள்வியும், நல்ல விசுவாசமும் ஒழியும். முத்தி யடையக்கொண்டிருந்த நெறியை வீணாக்கி இச்சையும், ஐம்புலன்களும் கொடிய தன்மை பெறும். நிர் ஆசை யின்றேல் தெய்வம் விளங்குமோ? விளங்காது இன்



னும், ஆசை அவர் மனதி லுதிக்கும் பொழுதே துன்பமும் தொடர்கின்றது. அதுவே மனச் சஞ்சலம், மனக் குழப்பம்.

உள்ளதே போதுமென உய்வர் சிலரே; மற்றெல்லாரும், பெரும்பாலும், எத்தகைய பெருஞ் செல்வ மிருப்பினும் திருப்தி யடையாது மனம் புண்ணுவர். தாயுமானவர்,

'யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாக முடியு
முள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்'

எனக் கூறினர். எதற்கும், 'நான், நான்,' என உளறிக்கொண்டும், 'இது என்னுடையது, அது என்னுடையது', எனப் பிதற்றியும் திரிவர் மாந்தர். மனமில்லாத ஓர் பரிசுத்த நிலையை மாந்தர் அடைய நினைக்கின்றாரில்லை. ஆதலின், ஆராய்ந்து நோக்கின், வயிறார உண்பதும் உறங்குவதுமே மாந்தர் தொழிலாக முடிகின்றது. ஆதலால், என தென்பதும் பொய்; யானெனலும் பொய் என்றனர் அம்மகான்.

இன்பம் பயப்பதுபோல் முதலில் தோற்றினும், ஆசை இறுதியில் துன்பத்தையே விளைவிக்கின்றது. உலகில் நாம் பற்றும் பொருள்கள் புலன்களுக்கு அற்ப சுகத்தைக் கொடுக்கின்றனவே தவிர பெரும் பான்மை கெடுதியையே விளைவிக்கின்றன.

'அவாவென்ப தெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து'

என்பது தெய்வப் புலவர் திருவாக்கு. எல்லாவுயிர்களுக்கும் சகடக்கால்போல் சுழன்று கொண்டேவரும் பிறவித் துன்பத்தை விளைவிப்பது ஆசையே. இவ்வுலகில் ஒருவன் முதன்மையாக ஒன்றை இச்சித்துக் குறுகிய தன் வாழ்நாளில் அதை யடையாது இறப்பானாகில், அவ்விச்சையை யடைந்து அனுபவிக்க மறுபிறவி யெடுக்க வேண்டியது இன்றியமையாததாக முடிகின்றது. ஆதலால், அழியுந் தன்மையையுடைய பொருள்களின் மீது ஒருவன் பாசம்வைத்தால், அவன் பிறப் பிறப்பெனும் பெஞ்சாகரத்தில் வீழ்ந்து, மெய்ப்பொருளாகிய பரம்பொருளின் அருளெனும் தோணியைக் காணாகித் தத்தளிக்க வேண்டியதே. முத்தி யடைவதற்குரிய எல்லா நெறிகளு மிருப்பினும், ஆசையென்ப தொன்றுமட்டும் அவை ஊடே தோன்றின், பிறப்பிறப் பெனும் கொடிய நோய் நீங்குவதில்லை.

ஆதலால், ஒருவன் பிறவாமையை இச்சிக்க வேண்டும். அதனால் கெடாமைக் கேதுவுண்டு. அவாவறுத்தால் மனம் வேறொன்றினும் செல்

லாது ஓர் நிலையடைகின்றது. ஆகவே, அது இடையறா இன்பம் நுகர்கின்றது. எப்பொழுது பிறவாமையை இச்சித்து மனம் இடையறா இன்பம் அனுபவிக்கின்றதோ, அப்பொழுது அவ்வுயிர் பேரின்பத்தை யனுபவிக்கின்றது: இத்தகையவரே ஜீவன் முத்தர், பிறவியற்றவர் எனப்படுவர். இதனால், அவாவறுத்தோர் பெருமையும், இச்சியாமையின் மேன்மையும் நன்கு விளங்குகின்றன.

என் சகோதர சகோதரிகளே! இவ்வியாசத்தால், அவாவினால் இருமையிலும் நேரிடும் கெடுதிகளும், அவாவறுத்தலினால் உண்டாகும் நன்மைகளும் விளங்குகின்றன. அவா எவர்க்கு முண்டு; ஆனால் அதைச் சிறிது சிறிதாக அறுக்க முயலவேண்டும். அதனால் நீங்காவின்பம் அடையலாம். எவற்றினும் வல்ல இறைவன் அருள் புரிவாராக. நமது "ஆனந்தன்" இனிது வாழ்வானாக.

வ. வேலாயுதன், இளசை.

குறிப்பு:—அவாவென்ற இச்சையே மனதின் சொரூபம். இச்சையின்றி மனம் முளைப்பதின்றாம். மனம் முளைப்பதற்குப் பகிர்முகத்தில் காரணம் எதுவாகத் தோன்றினும் மூலகாரணம் 'இச்சை' என்பதாகவே விளங்கும். மன அசைவிற்கே இச்சைதான் காரணம். ஆதலின், இச்சையொழியின் மனச்சலனமே யொழியும். மனிதனுக்கு இவ்வுலகிலுள்ள மூன்று வஸ்துக்களிடத்திலேதான் பிரேமையதிகம்; அவற்றிற்கு மூவாசையென்றும், மூவேடனை யென்றும் பெயர். அவை மேலே கூறப்பட்ட மண், பெண், பொன் என்பவைகளே.

"மூவேடனை யென்று முடிந்திடுமோ"

என்றார் அருணகிரிநாதர். இவை மூன்றாயினும், மூன்றிலும் பெண்ணாசையே கொடிதினும் மகாகொடிது; மற்றவிரண்டையும் அதில் அடக்கிக் கூறலாம். மனைவிக்காகவும், அவளிடம் உற்பத்தியாகும் மக்களுக்காகவுமே ஒருவன் மண்ணையும், பொன்னையும் தேட அவாக்கொண்டு எத்தகைய பாபங்களையும் செய்ய உடன்படுகிறான். அந்த ஒரு ஆசையை விடுவதே யாவர்க்கும் மிக்க கஷ்டமானதாகும். ஆனால் அதைவிட்டால் உலக விச்சையே யடியோடொழியு மென்பது திண்ணம். ஆனால் அந்த ஆசையை விடுவது மகா கஷ்டமாயினும் அது சாத்தியமானதே.

உலகில் ஒரு பத்தினியோடு வாழும் மனிதன்கூட தான் காணும் அன்னிய மாதரை இச்சிக்காம லிருப்பது மிக்க அருமையே. செய்கையில் பரஸ்திரீ கமனம் செய்யா திருப்பதால் மட்டும் பாபம் சேராமற் போகாது. மனதால் நினையா திருக்கவேண்டும். மனநினைவே செயலை யுண்டாக்குவது. ஆன்ம சொரூபத்தைக் கண்டு அதுவா யிருப்பவன் மட்டுமே ஒரு முயற்சியுமின்றியே எந்த இச்சையு மற்றிருப்பான். எத்தகைய ரூபலாவண்யமுடைய



மாதைக் காணினும் நாமரூபத்தில் அவன் மனம் நாடாது. ஏனையோர் பெருமுயற்சியாலேயே இச்சையை யொழிக்கவேண்டும். 'சே! அன்னிய மாதரை யிச்சிக்கலாகாது' என்ற தீர்மானத்தால் மட்டுமே இச்சை யெழாதிராது. பல ஜன்மப் பழக்கத்தால் நம்மை யறியாமலே அது முளைத்துவிடும். அதை யடக்க முயல்பவன், இச்சை முளைக்கும் ஒவ்வொரு முறையும், எல்லா மாதரும் சாட்சாத் அம்பாளாகிய பரமேசுவரியே என்ற திடபாவனையால் உடனே இச்சையைக் கண்டித்து அறவே வெட்டவேண்டும். இவ்வாறு பல நாட்கள் செய்யும் பழக்கத்தால் இச்சை யெழாதொழியும். அதன் பிறகு எந்த ஸ்திரீயைக் காணினும் அம்பாளின் பாவனையே மனதில் உதிக்கும். மோக்ஷவிச்சை யுடையோர் அதை யொழிக்க வைராக்கியத்தோடு முயற்சியெடுத்துக் கொள்ளாதிரார். ஆசை நீங்கின் நாமரூப நாட்டம் ஒழியும். நாமரூப நாட்டம் விடினும் ஆசையொழியும். காண்பன வெல்லாம் அழியும் என்ற சிந்தனையாலும், மேலே கூறியபடி தந்திரமான பாவனையாலும் கொஞ்சங் கொஞ்சமாக அதை யொழிக்க முயல்வதே அறிவாளிகளின் இலக்ஷணமாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்."

தென்சேரிவேலன் திருவடியை யன்புடனே
நின்னெஞ்சி லின்றே நினை.

தலைப்பில் உள்ள வாக்கியம் புவிச்சக்ரவர்த்தியும், கவிச்சக்ரவர்த்தியும் ஆகிய அதிவீராம பாண்டியனார் இயற்றியருளிய வெற்றிவேற்கை என்னும் நீதி நூலின் முதற்கண் உள்ளது.

இதன்பொருள் "எழுத்துக்களை அல்லது எழுத்துக்களாலாய இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்பித்தவ ராகிய நல்லாசிரியர் கடவுளாகக் கருதப்படுவார்" என்பதே.

இனி அவ்வாசிரியரும் நம்போற் சாதாரண மனிதர் தாமே, அவரை ஏன் கடவுளாகக் கருதவேண்டும்? எனின், சகோதரர்களே! எண்ணுமெழுத்து மாகிய இருகண்களைத் திறந்து நம்மைக் காப்பாற்றியவரைக் கடவுள் என்னாது வேறு என்னென்போம்?

மேலும், அவர் அறம்பொரு ளின்பமும் வீடும் பயந்து, புறங்கடை நல்லிசையும் நாட்டி, உறுங்கவல் ஒன்றுற்றுழியின் கைகொடுத்துச் சிற்றுயிர்க்கு உற்றதுணையாய் விளங்கும் கல்வியைக் கற்பித்தவரன்றோ? இம்மட்டோ.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. (திருவள்ளுவர்)

மேலும் பகவானுடைய அநந்த கல்யாண குணங்களில் சில ஆசிரியர்க்கும் உள்ளனவாம். அவையாவன:— 1. கடவுள் உயிர்களிடம் (உபாத்யாயர் மாணவர்களிடம்) நீங்காத கருணையுடைமை, 2. பக்ஷபாதமின்மை. 3. சுயநலம் நாடாமை. 4. நல்வழிவிட்டு அல்வழியிற் செல்வோரைத் தண்டித்துத் திருத்துதல். 5, கடவுள் தாமே உலகத்தில் அவதரித்தோ, அவர்தம் அடியார்களை அவதரிக்கச் செய்தோ தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டுதல். உபாத்தியாயர், தம் நடத்தையைப் பின்பற்றி மாணவர்கள் நடந்து கொள்ளுமாறு செய்தல், இவைபோன்ற குணவிசேஷங்கள் இருப்பதால் ஒவ்வொருவரும் தத்தம் ஆசிரியர்களை ஈஸ்வராம்சமாய் பாவித்து, அவரிடம் நீங்காத மெய்யன்பு கொள்ளவேண்டும். அவர் நமது நிலைமையறிந்து நிர்ப்பக்ஷபாதமாய் நன்மை செய்கிறார் என்றும், அவருக்கு நம்மாலான நன்மையை உள்ளன்போடு செய்யவேண்டுமென்றும், அவர் நம்மைக்கோபிப்பதும் தண்டிப்பதும் நமது நன்மையைக் கருதியே என்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஆசிரியருடைய நடக்கையை உதாரணமாய்க்கொண்டு அதன்படி நாம் நடந்து கொள்ளல் வேண்டும்.

அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர்—இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி.

என்னும் முதியோர் மொழியின் பொருள் ஈண்டு அறியத்தக்கது.

உலகத்தின் கண்ணே அறத்தை நிலைநிறுத்தக் கருதி அவதாரம்செய்த ஸ்ரீராமச்சந்திரர் தம்முடைய ஆசிரியராகிய கோசிகமுனியுடன் ஆரணியத்தின் வழியாய்ச் செல்லும்போது ராக்ஷசியாகிய தாடகை எதிர்ப்பட்டாள். கோசிகர் ஸ்ரீ ராமரைப்பார்த்து "தாசரதீ ! இதோபார் இவள்தான் தாடகை என்னும் மஹாபாதகி; இவள் செய்யும் கொடுஞ் செய்கைகள் அளவிலடங்கா. இவளை இன்னே கொல்லுதி. ஈறில் நல்லறம் பார்த்து இசைத்தேன், இவட்சீறி நின்றிது செப்புகின்றே னலேன். காலந்தாழ்க்காமல் இவளைக் கொல்லுதி" என்றனர்.

"அய்ய னங்கது கேட்டற னல்லவும்
எய்தி னலது செய்கவென் றேவினால்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றோவறஞ் செய்யு மாறது" என்றார்.
(கம்பராமாயணம்)

அதாவது:—சத்தி மூர்த்தியாகிய ஆசாரியரே ! தேவரீர் தர்ம விரோதமாகிய காரியத்தைச் செய்யுமாறு அடியேனுக்கு ஆணையிடினும், அவ்வாணையை வேத மொழியாக மதித்து நடத்தலன்றோ அடிமையின் கடமை ?" என்று கூறினார்.



இன்னும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் தம்முடைய ஆசிரியரான சாந்தீப முனிவரிடம் குருகுலவாசம் செய்யும்போது, பனி, மழை, வெயில், முதலியவற்றையும் கருதாது குருபத்னியின் ஆணையைச் சிரமேற் கொண்டு கானகஞ்சென்று விறகொடித்துத் திரிந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

துரோணரிடம் அத்தியந்த பக்திபூண்டு அவரைப்போல் ஓர் சிலை செய்வித்து அதனைப்பூசித்துத் தனுர்வேதம் கற்று ஏகலவன் பெருமைபெற்றது குருபக்தியா லன்றோ ?

பூர்வகாலத்தில் தத்தாத்ரேய மகரிஷியிடம் குருகுலவாசம் செய்து வந்த கார்த்தவீரியன் என்னும் அரசகுமாரன் தன் ஆசிரியருக்குச் சந்தோஷம் உண்டாகும்படி அவருடைய பாதங்களை வருடிக்கொண்டிருந்தான். அப்போது அவரது உள்ளங்காலில் உள்ள சூக்ஷ்மாக்னியானது அரச குமாரனுடைய கைகளை எரித்துவிட்டது. என்றாலும் அவன் தன் துன்பத்தைப் பொருட் படுத்தாது குருவைத் திருப்தி செய்வதிலேயே கவனம் செலுத்தி எரிந்துபோன தன் கைகளினால் தடவிக்கொண்டே இருந்தான். அதை அறிந்த முனிவர் அவ்விளவலின் பக்தி சிரத்தையை வியந்து திருவுளமிரங்கி அவனுடைய எரிந்துபோன இரண்டு கைகளுக்குப் பதிலாக ஆயிரம் கைகள் முளைக்கும்படி அநுக்ரஹித்தார். பாருங்கள் ! குருபக்தியின் மேன்மையை.

குருகுலவாசம் செய்யும்போது மாத்திரம் அன்று, ஆயுள் உள்ளளவும் ஆசிரியரைத் தெய்வமாகக் கருதி நடந்துகொள்ள வேண்டுமென்பார் "எழுத்தறிவிக்கிறவன்" என்னாது "எழுத்தறிவித்தவன்" என்றார்.

இனி எழுத் தென்றதும் பிரண வாக்கரத்தை யென்றலு மொன்று. பிரணவப் பொருளை உபதேசித்த சத்குருவைப் பகவானுக்கு அந்நியமென்று கருதலாகாது; பகவானே சத்குரு ரூபமாய் எழுந்தருளி உபதேசித்து ஆட்கொள்ளுகின்றார் என்பது மேலோர்களின் கொள்கையாகும்.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வம் அனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை. (நீதிநெறி விளக்கம்.)

ஆசிரியரைத் தெய்வமாய் பாவிக்கும் தன்மை நவீன நாகரிகத்திற்கேற்ப மிகவும் மாறுபட் டிருக்கிறது. தற்காலத்தில் கலாசாலைகளில் ஆங்கிலம் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையோர் தம தாசிரியர் மாட்டு, பக்தியும், விசுவாசமும் கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. கல்வி ஏதோ விலைச் சாக்காக விற்கப்படுகிறதேயொழிய குரு சிஷ்ய பாவமாய்க் கற்பிக்கப்

படுவதில்லை. ஆதலாற்றான் தற்காலத்திய கல்வி மதப்பற்றையும், ஆன்ம ஞானத்தையும் அளிக்காமல் கண்டதே காக்ஷி கொண்டதே கோலம் என்னும் கொள்கையையே மேலோங்கச் செய்கின்றது போலும். கேவலம் வயிற்று வளர்ப்புக்கு ஆதாரமான ஆங்கிலம், ரசாயனம், கணிதம் முதலியவைகளை அக்கரையோடு கற்றும், அவைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பால் குரு சிஷ்ய பாவம் இல்லாவிடினும் அலக்ஷியம் செய்யாமலாவது நடந்தும் வருகின்றார்கள். ஆனால் ஆன்ம ஞானமும், மதப்பற்றும் தாவல்ல நந்தம் தமிழ் மொழியையும், அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அடியோடு அலக்ஷியம் செய்கின்றார்கள். அந்தோ! என்ன கொடுமை? மாணவ சகோதரர்களே! அன்னிய நாட்டார்க்கும், நமது பழக்க வழக்கங்களுக்கு நேர்மாறான பழக்க வழக்கங்களை யுடையவர்களுக்கும், உரித்தான ஒரு பாஷையைக் கற்பிக்கிறவர்கள் மதிக்கப்படுவதும், நம் தாய்மொழியும், சமயாசாரியர், ஆழ்வாராதியர், சங்கப் புலவர்கள் முதலான எண்ணிறந்த பேறிவாளரால் இயற்றப்பெற்று அறம், பொருள், இன்பம், வீடாகிய நாற்பொருட் பயனையும் தாவல்ல அளவிலடங்கா வரும் பெரு நூல்கள் நிறைந்து கிடப்பதுமாகிய தமிழ் மொழியும், அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், அவமதிக்கப்படுவதும், நியாயந்தானா? நன்றாய்ச் சிந்தித்துப் பாருங்கள்.

ஆதலால் மாணவர்களே! "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்னும் அமுத மொழியைக் கடைப்பிடித்து, ஒழுகுங்கள். உங்கள் வாழ் நாட்களை வீணாக்காதேயுங்கள். உங்களின் முன்னோர்கள் சாபம் உங்களைச் சாரவிடாதீர்கள். உங்கள் ஒப்புயர்வற்ற மதத்துக்கும், தேசத்துக்கும், பாஷைக்கும் தீராத கேட்டை விளைக்காதீர்கள்.

எல்லாம் வல்ல இறைவன் உங்களைச் சூழ்ந்திருக்கும் நவீன நாகரீகமான இருளை நீக்கி, உங்கள் மனத்தகத்தே ஆரியமத சித்தாந்தத்தை ஸ்தாபிப்பாராக.

நிற்க. சகோதரர்களே! நமது அன்பார்ந்த "ஆனந்தனும்" அதன் ஆசிரியரும், நம்மெல்லோருக்கும் ஆசிரியராக அமர்ந்துள்ளாரன்றோ? "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்பதை முன்னிட்டு நாம் அவர்கள் பால் மெய்யன்புடன் நடந்து கொள்வோமாக. சுபம்.

S. கோவிந்தசாமி,
போர்டு பாடசாலை, சுல்தான்பேட்டை.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(72-ம் பக்கத் தொடர்ச்சி.)

10. தொழில். நண்பர்களே! ஆடவனாய்ப் பிறந்த எவனும் ஒரு தொழிலைச் செய்யவேண்டியது கடமையாக விருக்கிறது. ஆனால் எத்



தொழில் சிறந்தது? எத்தொழிலில் பாபமில்லாமலும், சுயாதீனத்தை யிழந்து பிறர்க்கு அடிமை யாகாமலும், அதிக பொருளீட்டலாமோ அதுவே சிறந்த தொழிலாகும். சுருக்கமாய்க் கூறுமிடத்து விவசாயம், வர்த்தகம் இவை யிரண்டுமே மேற்கண்ட குணங்களை யுடைய தொழில்களாக விருப்பதோடு உலகில் என்றும் அழியாத் தொழில்களாகவு மிருக்கின்றன. வர்த்தகத்தோடு கைத்தொழிலும் சம்பந்தப்பட்டதே யாதலின் அதை வர்த்தகத்தோடேயே சேர்த்துக் கூறலாம். ஒன்று, அன்னியரிடமுள்ள பொருளை வாங்கி வந்து இலாபத்திற்கு விற்பதாகும். மற்றொன்று நாமே ஒரு பொருளை யுற்பத்தி செய்து விற்பதாகும். கைத்தொழிலில், நெசவுத் தொழில் யாவற்றிலும் மிகச் சிறந்த பாபமற்ற தொழிலென்று பொய்யா மொழியாராகிய நாயனார் அத்தொழிலையே யேற்றுக்கொண்டார். "மேழிச் செல்வங் கோழைபடாது" என்பனவாதிய வாக்கியங்களால் ஔவை பிராட்டியார் விவசாயத்தைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

மனிதர்கள் அனைவர்க்கும் உணவும் உடையும் இன்றியமையாத அத்தியாவசியமானவைகள். உணவுக்குப் பலவகைப் பண்டங்கள் தேவை யாதலின் பண்ட மாற்றலாகும் வர்த்தகமும் அவசியமானதே. ஆதலின், இந்த மூன்றும் என்றும் அழியாத் தொழில்கள் ஆகும். உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதன வாகும்.

விவசாயத்திலும், நெசவிலும் அநாதி காலந் தொடங்கி நம் தாய்நாடு பிரசித்தி பெற்றதாக விருந்தது. ஒரு காலத்தில் நம் நாட்டுத் துணிகளை மேல்நாடுகளி லெல்லாம் மிக்க ஆவலோடு வாங்கிக்கொண் டிருந்தார்கள். பிற்காலத்தில் பல காரணங்களால், பெரும்பாலும் முக்கியமாகப் பாவிச்சாப் பிராரப்தத்தாலும், நமது மனத் தளர்ச்சியாலும், நெசவுத் தொழில் அடியோடு குன்றிவிட்டது. இப்போது நாம் மானத்தை மறைக்க அந்நிய நாடுகளின் தயவை யெதிர் பார்த்தவர்களா யிருக்கிறோம். ஒரு சமயம் எதிர்பார்த்துத் தடுக்க முடியாத ஏதேனு மொரு காரணத்தால் அந்நாடுகளிலிருந்து துணிகள் கொஞ்சக்காலம் வாராது நின்றுவிட்டால், நமது கதி கடவுளே யறியவேண்டும்.

நம் நாட்டார் வீண் மயக்கால் இத்தகைய கௌரவமும், அவசியமுமான தொழில்களை இழி தொழில்களெனக் கருதி, அதமத் தொழிலாகிய சேவகா விர்த்தியையே கௌரவத் தொழிலென எண்ணி இத்தகைய பரிதாப நிலைமையை யடைந்தார்கள். நண்பர்களே! நீங்கள் கல்வி கற்கும் போதே சுயாதீனமும், கௌரவமுமுடைய இத்தொழில்களில் ஒன்றையே செய்யவேண்டு மென்ற ஆவலை மனதில் நிலை நாட்டுங்கள். ஒருவரிடம் சேவகா விர்த்தியில் அமர்ந்தால் எஜமானனுடைய நிபந்தனைகளுக் கெல்லாம் உட்பட்டு நடக்கவேண்டும். எஜமான் போகவேண்டா மென்கிற

விடத்திற்குப் போகக்கூடாது, பேசவேண்டா மென்கிறவர்க ளிடத்தில் பேசக்கூடாது. இன்னும் எத்தகைய நிபந்தனைக ளாயினும் அவற்றிற் கெல்லாம் கீழ்ப்படிய வேண்டியதே. அடிமைத்தன மென்பது இதனினும் வேறோ? அந்தோ! இதுவோ கௌரவமான தொழில்? சற்று சிந்தித்துப் பார்த்தால் இதன் உண்மை யுங்களுக்கு விளங்காமற் போகாது.

ஆகையால் சகோதரர்களே! "உழவு, வாணிபம், நெசவு இவற்றின் அபிவிர்த்தியால்தான் நம் நாடு சீர்ப்பட்டுப் பழைய உன்னத நிலை யடையும். நமது சந்ததியார் கௌரவத்தோடும் சுகமாக வாழ்வார்கள்" என்பதை மறவாமல் மனதில் வைத்து இவற்றில் ஒரு தொழிலையே கைக்கொள்ளுங்கள்.

11. **பத்திரிகைகள்.** முற்காலத்தில்—சுமார் முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பு வரையில்கூட—மாணவர்கள் தங்கள் பாட புத்தகங்களை மட்டும் வாசிப்பார்களே யன்றிப் பத்திரிகைகள், நாவல்கள் முதலியவற்றை வாசிப்பது மிக்க அரிது. இப்போதோ மாணவர்கள் பத்திரிகைகளை வாசிப்பதில் மிக்க ஆவலுடையவர்களாக விருக்கிறார்கள். பத்திரிகைகளை வாசிப்பதால் அறிவு விசாலமடையும். விஷய ஞானங்களுண்டாகும். ஆகையால் பாடங்களை வாசிக்கும் காலம் போக, அவகாசமுள்ள வேளைகளில் பத்திரிகைகளை வாசிப்பது நலமே. ஆனால் அதைப்பற்றி நாம் இரண்டு விஷயங்கள் கூற விரும்புகிறோம். அவற்றை யலட்சியம் செய்யாமல் கவனத்தில் வைத்து நடந்துகொண்டால் உங்களுக்கு நன்மை யுண்டாமென்பது திண்ணம்.

(1) உங்களில் சிலர் தாய்ப் பாஷையிலுள்ள பத்திரிகைகளை வாசிப்பது அகௌரவமென்று கருதி, ஆங்கிலப் பத்திரிகைகளிலுள்ள விஷயங்களைப் பூரணமாக அறிந்துகொள்ளும் ஆற்றலில்லை யெனினும், ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிப்பதே கௌரவமென்று கருதி அவற்றைக் கையிலேனும் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அந்தோ! இது மிக்க விசனிக்கத்தக்க விஷயம். தாய்ப்பாஷைப் பத்திரிகைகளில் தகுதியானவற்றை வாசிப்பதால், முதலாவது, அவற்றை யாதரிப்பதால், நமது தாய்ப்பாஷாபிவிர்த்திக்கு உதவி புரிகிறவர்க ளாகிறீர்கள். இரண்டாவது, நமது இலௌகீக ஆசார ஒழுக்கங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், நம் முன்னோர் அருளியுள்ள பக்தி, ஞானம் முதலிய அரிய விஷயங்கள், நமது முன்னோர்களின் நாகரீகம், ஞானம், தாய்நாட்டின் பெருமை முதலிய பல அவசியமான முக்கிய விஷயங்கள் ஆகியவற்றை யுணர்ந்து, அவற்றின் குறைவால் உங்களுக்கு நேரிடும் தீங்குகளினின்றும் விலகிக்கொண்டு உண்மையான முன்னேற்றமும் க்ஷேமமு மடைவீர்கள். இதை யலட்சியம் செய்யாமல் நடந்து கொள்வீர்களாகில், சீக்கிரத்திலேயே இதன் உண்மையை யுணர்ந்து மிக்க சந்தோஷ மடைவீர்கள் என்பது சத்தியம். இதனால் நீங்களடையும் பலன் மரண பரியந்தமும், அதற்குப் பின்னும்கூட உங்களுக்கு உதவியாக நிற்கும்.



(2) நண்பர்களே! நமது நாட்டாரில் பெரும்பாலார் பத்திரிகைகளாலடையக்கூடிய பயன்கள் இன்னவை யென்பதை யின்னும் சரியாக உணராதவர்களாகவே யிருக்கிறார்கள். காலப் போக்குக்காகப் பத்திரிகைகளை வாசித்து அப்போதே வாசித்த விஷயங்களை மறந்துவிடுகிறார்கள். நாம் ஒரு மனிதனிடம் ஒரு வேண்டுகோளைக் கூறுகிறோம் என்று எண்ணிக்கொள்ளுங்கள். அம்மனிதன் நாம் கூறியதைச் செவியேற்று, அது செய்யத்தக்கதும், பயனுடையதுமான காரியமா யிருக்கிறதாவென்று சிந்தித்து, அப்படி யிருப்பின் அதன்படி செய்தால்தானே அவன் சரியான மனிதன் என்று மதிப்போம். அப்படிக்கின்றி நாம் கூறியவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து, கடைசியில் பேசாமல் போய்விட்டால் அத்தகைய மனிதனை யென்னென்று கருதுவோம்? மனித வர்க்கத்தில் சேர்ந்தவனாகவே கருதோமல்லவா?

இப்போது பத்திரிகை யென்பது, நமது க்ஷேமத்தையும், நம் தாய்நாட்டின் முன்னேற்றத்தையும் கருதி அறிவாளிகளாகிய சிலர் நம்மில் ஒவ்வொருவருக்கும் கூறும் விஷயங்களே யாகும். அதில் அவர்கள் நம்மைச் செய்யும்படி கோருவதை நாம் செய்யாமல் அவற்றை வாசித்து உடனே மறந்துவிட்டால், அவர்கள் கூறுவதாலும், அவற்றை நாம் வாசிப்பதாலும் ஒரு பயனுமில்லை. நண்பர்களே! நாம் இவ்வாறு நடந்துகொள்ளும் வரை பத்திரிகைகளாலடையவேண்டிய பலனை நாம் ஒருபோது மடைய மாட்டோம்.

நாம் நமது சஞ்சிகையில் நம்மவர் தங்கள் பெயர்களின் முதலிலுள்ள குறிப்பெழுத்துக்களை அன்னிய பாஷையிலும், பெயரைத் தாய்ப்பாஷையிலும் (ஆ. கா. கோவிந்தசாமி என்பதற்கு—A. K. கோவிந்தசாமி அல்லது ஏ. கே. கோவிந்தசாமி என்பதுபோல்) எழுதுவது மிக்க வெட்கக்கேடான அநாகரீகச் செயல் என்றும், தாய்ப்பாஷைக்கு இழிவையும், அகௌரவத்தையும் தருவதென்றும், உலகில் வேறெச் சாதியாரும் - எந்த நாட்டாரும் - இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யார்கள் என்றும் கூறியுள்ளோம். அந்தோ! நம்மவர் இன்னும் அதுவும் ஒரு நாகரீகச் சீர்திருத்தம் என்றே கருதுகிறார்களன்றி, அதன் இழிந்த தன்மையைச் சற்றும் உணராமல் இப்போதும் பலர் அவ்வாறே கையொப்பமிட் டனுப்புவதையும் அறிவாளிகளாகிய சிலர் அவற்றைக் கண்டித் தெழுதும்படி நமக்கு வரையும் நிருபங்களையும் காண நம் மனம் மிக்க வேதனை யடைகிறது.

மாணவ சகோதரர்களே! இதெல்லாம் ஒரு பிரமாதமா? இதற்கு இவ்வளவு எழுத வேண்டுமா வென்று கருதாதீர்கள். சிறிய விஷயத்தில் நேரும் நெறி கேடே பெரிய விஷயத்திலும் நேரிடும். ஆகையால் பத்திரிகைகளை வாசித்து அவற்றில் கூறியுள்ளவற்றில் தகுதியானவை யென்று உங்கள் மன

சாக்ஷிக்கு எவை தோன்றுகின்றனவோ அவைகளின்படி நடக்க உடனே முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். அப்போதுதான் நாம் க்ஷேமமடைவோம். நம் தாய்நாடும் பூர்வீக கௌரவ நிலைமையை மீண்டும் அடையும்.

(தொடரும்.]

சீடன்.

---

## சில ஆக்ஷேபணைகள்.

நமது அன்பார்ந்த சந்தா நேயர்களுக்கு,

இச் சென்னையி லுள்ளவரும், நமது "ஆனந்தனது" சந்தா நேயரில் ஒருவரும், "ஆனந்தனிடம்" மிக்க அன்பும், அவனது அபிவிர்த்தியில் சிரத்தையும், தமது நாமதேயத்துக்குப் பொருத்தமான குணமுமுடைய, ம-ா-ா-ஸ்ரீ அமிர்தலிங்கம் என்ற நண்பர் நமக்கு வரைந்த நிருபத்தில், தாம் ஒரு விருந்தில் சில நண்பர்களைச் சந்தித்தபோது "ஆனந்தனை"ப்பற்றிப் பிரஸ்தாபம் வந்ததாகவும், அப்போது அவர் தம் நண்பர்களை "ஆனந்த போதினியில்" சந்தாதாரராகச் சேரும்படி கோரியதாகவும், அப்போது அவர்கள் அவ்வாறு சேர விரும்பாததற்குச் சில குறைகளைக் காரணமாகக் கூறியதாகவும் அறிவித்து, அக்குறைகளை நீக்கும்படி கேட்கிறார்.

இன்னும் சிலருக்கும் அத்தகைய விஷயங்கள் மனதிலுதிக்கலாம். தாய்ப்பாஷையை யலட்சியஞ்செய்து ஆங்கில பாஷையே நாகரீகமும் கௌரவமு மளிப்பதென்ற மயக்கம்கொண் டிருப்போர்க்கு அவைதோன்றுவது இயல்பே யாதலின், நமது நண்பர் வரைந்த ஆங்கிலக் கடிதத்தில் குறிக்கப்பட்ட ஆக்ஷேபணைகளையும் குறைகளையும் மட்டும் மொழிபெயர்த்து ஈண்டுக் கூறுகிறோம்:—

1. 'ஆனந்தபோதினியில்' வெளிவரும் எல்லா விஷயங்களையும் இரண்டுமணி நேரத்தில் வாசித்து விடலாம். அதற்காக ஒருமாத முழுதும் காத்துக்கொண்டிருப்பது நீடித்தகாலம்.

(இதற்கு நமது நண்பர் "அதை மாதமிருமுறை வெளிவரச் செய்யலாம்" என்றனர்.)

2. (க) இது விசேஷமாகச் சிறுவர்க்குத்தான் பயன்படுமே யன்றி வயது வந்தவர்களுக்கு உதவாது.

(நண்பர்:—நல்ல திருஷ்டாந்தங்களோடுங் கூடிய தத்துவஞானத்தைப் பற்றிய ஒரு வியாசம் வயது முதிர்ந்தோர்க்கு அத்தியாவசிய மானதே யாகும்.)

(ங) தத்துவஞானத்தைப்பற்றி ஒரு வியாசம், தொடரும் என்றிராமல் ஒரு அத்தியாயத்திலேயே முடிவதா யிருக்கவேண்டும்.

3. முடிவில் இருக்கும் நாவல் ஒரு அத்தியாயம் பூராவாக விருக்க வேண்டும்.



4. இந்தியாவிற்குச் சம்பந்தமான வர்த்தக விஷயங்கள் பிரசுரிக்கப் படவேண்டும்.

இதை ஆங்கில பத்திரிகைகளினின்றும் எடுத்துப்பிரசுரிக்கலாம்.

5. சட்ட சம்பந்தமான விஷயங்கள், அபூர்வமான வழக்குகள், நீதித் தலங்களில் விசாரிக்கப்படும் ஆச்சரிய சம்பவங்கள் ஆகியவற்றில், ஒன்றேனு மிருக்கவேண்டும்.

இதையும் அன்னிய பத்திரிகைளி லிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

6. எல்லாவற்றிலும் முக்கியமான ஒரு விஷயமுளது: அதாவது, துரைத்தன விஷயம்.

நாம் அறிந்திருக்கிறபடி இந்தியா முழுமையும் சீர்திருத்தங்களைப்பற்றி உணர்ந்திருக்கிறது. நமதுமாதர் எவ்வாறதை யறிவது? ஆகையால் அவ்விஷயம் பூரணமாகக் கையாளப்பட வேண்டும். இராஜாங்க விஷயத்தைப் பற்றிக் கூறாத எப்பத்திரிகையும் ஈடேறாது.

'ஆனந்தபோதினி' "மேற்கண்ட விஷயங்களில் எதை விடவும் தமிழ்ப் பாஷையின் முன்னேற்றத்திற்கே அதிகமாக முறையிடுகிறது."

முடிவில் நமது நண்பர் மேற்கண்டவற்றை யெல்லாம் தாமும் ஒப்புக் கொள்வதாகக்கூறி "ஆனந்தனை" விர்த்திக்குக் கொண்டுவரும்படி நமக்குக் கூறுகிறார்.

இப்போது மேற்கண்ட ஆக்ஷேபணைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சற்று சிந்திப்போம்:—

1. "ஆனந்தனில்" வெளிவரும் விஷயங்கள் முழுமையும், இரண்டு மணி நேரத்தில் வாசித்து விடலாம் என்பது உண்மையே. ஆனால், அந்தோ! பத்திரிகையிலுள்ள விஷயங்களைக் கதைபோல் காலம்போக்குவதற்கு வாசித்து அந்த நிமிடமே மறந்துவிடுவோர் அவ்வாறு கருதலாகும்; ஒன்றை வாசிப்பது அதற்காகவல்ல; அவ்வாறு வாசிப்போர் பத்திரிகைகளால் ஒருபயனும் பெறார். தினசரி பத்திரிகைகளிலுள்ள விஷயங்களும் அவ்வாறு இரண்டு மணி நேரத்தில் வாசித்துவிடக் கூடியவையே யாகும். ஆனால் அவற்றிலுள்ள பெரும்பாலான விஷயங்கள் காலப்போக்குக்காக வாசித்து உடனே மறக்கத்தக்கவையாகும்.

ஆனால் "ஆனந்தனிலுள்ள" விஷயங்களில் பல, ஒருவன் சரியாக உணர்ந்து அநுபவத்திற்குக் கொண்டு வந்து, அவற்றால் பலனடைய வேண்டுமாயின், ஒருமாதமல்ல, ஒரு வருடங்கூடப் போதாது என்று எண்ணத்தக்கவையாகும். எல்லா விஷயங்களையுமே ஒருமுறை வாசித்தால் போதுமென்று எண்ணி விடலாகாது. சின்னாட்கள் வரை பன்முறை வாசித்துணரத்தக்க விஷயங்கள் எவ்வளவோ வுள.

2. (க) இந்த ஆக்ஷேபனைக்கு நமது நண்பரே விடையளித்துள்ளார். அதோடு இந்த ஆக்ஷேபனையைக் கூறிய நண்பர்கள், "ஆனந்தனில்" வரும் விஷயங்களை யெல்லாம் முன்பே யுணர்ந்திருக்கிறார்களா வென்பதையும், இப்போது "ஆனந்தனை" வாசிக்கும் பல்லாயிரக் கணக்கான, உபாத்திமார்கள், பாடசாலைச் சோதனை யதிகாரிகள் (இன்ஸ்பெக்டர்), வக்கீல்கள், லிகிதர்கள் முதலிய உத்தியோகஸ்தர்கள், வர்த்தகர்கள், மிட்டாதார்கள் முதலியவர்க ளெல்லாம் சிறு பிள்ளைகள் தானோ வென்பதையும் தயவு செய்து தாங்களே சிந்திக்கும்படி கோருகிறோம்.

உலகில் தமிழ்ப்பாஷை யறிந்த ஒவ்வொருவரும், எச்சாதியா ராயினும் எம்மதத்தினராயினும் சரி, ஆண், பெண், சிறுவர், வயது முதிர்ந்தோர் இவர்களில் ஒவ்வொருவரும் உணரவேண்டிய விஷயங்கள் "ஆனந்தனில்" இருக்கின்றன வென்பது அனுபவமாக யாவரு மறிந்தவிஷயம். "பிரபஞ்சத் தோற்றம் பொய்; எல்லாம் பரப்பிரம்ம சொரூபமே" என்று அனுபவமா யுணர்ந்த ஆத்மஞானி ஒருவனே "ஆனந்தனி" லுள்ள விஷயங்களை வாசிக்க வேண்டிய அவசியமில்லை எனக்கூறலாகும்.

(ங) தத்துவஞானத்தைப் பற்றிய விஷயங்களை ஒரேசஞ்சிகையில் அதிகமாக வரையின் வாசித் துணர்வோர்க்கும் கஷ்டம்; சிறு சஞ்சிகையில் இடமும் போதாது.

3. மற்ற விஷயங்களுக்கு இடமமைத்துக்கொண்டு சமயப்படி மிச்சமாகுமிடமே நாவலுக் களிக்கப்படுகிறது. ஆயினும் ஏறக்குறைய நான்கு பக்கங்களேனும் நாவலுக்கு விடுமாறு கவனிக்கப்படும்.

4, 5. வர்த்தகம், நீதிஸ்தல விஷயங்கள், விவசாயம், சிற்பம் முதலிய இவற்றைப்பற்றி எழுதத்தொடங்கின், அவற்றால் பயனுண்டாகும் வண்ணம் பிரதிமாதமும் ஒவ்வொன்றிலும் போதுமான அளவு விஷயங்கள் பிரசுரிக்கப் படவேண்டும். சஞ்சிகையிலுள்ள 40 பக்கங்களில் அவற்றிற்கு இடம் போதாது. சந்தாவோ, இந்த அளவு சஞ்சிகைக்கு மிக்குறைந்ததேயாகும். சஞ்சிகையை யின்னும் பெரிதாக்கிச் சந்தாவை உயர்த்தலாமெனின் பெரும்பாலார் பிரியப்பட மாட்டார்கள். நம்மவர்களுக்கு இன்னும் பத்திரிகைகளின் அவசியமும் அருமையும் சரியாக விளங்காததே அதற்குக்காரணம். மாதம் பத்து முறையேனும் பயாஸ்கோப், நாடகம் இவற்றிற்காக தினம் 4 அணா 8 அணா வேனும் செலவு செய்வார்கள். அதில் பாதி வருட மொருமுறை சஞ்சிகைக்குக் கொடுத்து நற்பயனடைய நம்மவர்க்கு மனம் வரவில்லை.

6. மேற்கண்ட காரணத்திற்காகவே துரைத்தன விஷயங்களையும் பிரசுரிக்க அனுகூலப்பட வில்லை. அடிக்கடி மாறுதல்களும் விசேஷ சம்பவங்களும் நேரிடும் அந்த விஷயங்களுக்குத் தினசரி அல்லது வாரப் பத்



திரிகைகளே தகுதியானவை. அதைப் பற்றி விவரிக்கத் தகுதியான பத்திரிகைகள் அதற்கென்றே யேற்பட்டிருக்கின்றன. பல விஷயங்களிலும் தலையிட்டுக்கொண்டு ஒரு விஷயத்தையும் பூரணமாக நிறைவேற்றாமல் விடுவதைக் காட்டிலும், நம் அளவுக்குத் தக்க பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொண்டு அதைச் சரிவர நடத்துவதே பயன் றருவதாகும்.

அந்தோ! நம் நாட்டில் மாதர்கள் இராஜாங்க விஷயங்களை யறிந்து கொள்ள வேண்டியது அவசியமா வென்பது ஒரு பக்கமிருக்க, முன்னே நம் நாட்டு ஆடவர்கள் அதை யறிந்து கொள்வார்களாயின் ஒரு பெருங் குறை நீங்கும்.

இராஜங்கவிஷம் ஒன்றே ஒரு பத்திரிகைக்கு வேண்டிய அவசியமான விஷயம் என்று கருதலாகாது. நம்மிடம் இருக்கும் பல குறைகளை நீக்க முயலவேண்டியதே அவசியமான முதல் விஷயம், அதைச் செய்தாலன்றி இராஜாங்க விஷயத்தில் நமது கோரிக்கை நிறைவேறாது.

கடைசியில் "ஆனந்தபோதினி" மற்றெல்லாவற்றையும் விடத் தமிழின் அபிவிர்த்திக்கே அதிகமாக முறையிடுகிறது என்று கூறப்பட்டதற்கு நாம் மிக்க விசனிக்கிறோம். அந்தோ! நம் தாய்ப் பாஷையை இவர்கள் அலக்ஷியமாய்க் கருதி யிருப்பதும், அதனால் நாம் அடையத் தக்கப் பயன் இன்னதென்று இவர்கள் உணரவில்லை யென்பதும் இதனால் நன்கு விளங்குகிறது. அந்தோ! வயிற்றுப் படிப்பாகிய ஆங்கில பாஷையைக் கற்பதே கௌரவமான கல்வி யென்று இவர்கள் கொண்டிருக்கும் மயக்கமே அதற்குக் காரணம். தாய்ப் பாஷையின் பெருமை யிவர்களுக்கு உணர்த்தப்பட்டிருந்தால், இவர்கள் இத்தகைய சஞ்சிகையை யவசியம் ஆதரிக்க வேண்டுமென்று கருதி யிருப்பார்கள். அது கற்பிக்கப் படாததால் அதை யலக்ஷியமாகக் கருதி மனம் போனபடி வீண் சாக்கான ஆக்ஷேபனைகளைக் கூற வேண்டியதாயிற்று. இது அவர்கள் குற்றமாகாது.

நியாயமோ, அநியாயமோ, பாபமோ, புண்ணியமோ எதையுங் கவனியாமல் பொருள் சம்பாதிப்பதற்கும், நமது முன்னோருடைய ஆசார ஒழுக்கங்களையும், தாய்ப் பாஷையையும் அலக்ஷியம் செய்து கண் மூடித்தனமாய் அன்னிய ஆசாரங்களைப் பின்பற்றுவதற்கும் மட்டுமே அக்கல்வி இவர்களுக்கு உதவுகிறதன்றி வேறெதற்கேனும் பயன் படுமோ வென்பதை நண்பர்கள் சிந்திக்கக் கோருகிறோம். அந்தோ! தெய்வீகம் விளங்கும் புண்ணிய பூமியில், மெய்ஞ் ஞானிகளாகிய முன்னோர் வமிசத்திற் பிறந்த நாம் கடைசியில் மிருக சுபாவமான வாழ்க்கையில் பிரியம் வைத்து அவ்வழி யொழுகுவது தானோ நாம் அடையவேண்டிய நாகரீகச் சீர்த்திருத்தம். அந்தோ! கற்றோர்களென்று கருதப்படுவோரே இத்தகைய அபிப்பிராய முடையோராயின் பாமரர்கள் எவ்வாறிருப்பார்கள்?

பெற்றோர்கள் இனியேனும் தம் மக்களுக்குத் தாய்ப் பாஷையை முன்பு கற்பிக்கவும், அக்கல்வியால் அடையக்கூடிய பயன்களை அவர்கள் உணரும்படி செய்யவும் சிரத்தை யெடுத்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறோம். இன்றேல் சீக்கிரத்தில் நம் நாட்டில் மனித சுபாவம், தெய்வ சுபாவம் இரண்டும் அடியோடு மறைந்து அதமமாகிய மிருக சுபாவமே மேலோங்கி விடும். அது எத்தகைய கோரமான முடிவை யளிக்கும் என்பதை நாம் கூறவேண்டுவதில்லை.

கருணாநிதியாகிய பரம்பொருள் இந்த ஆபத்தினின்று நம்மவரையும், நம் தாய் நாட்டையும் பாதுகாத்து இரக்ஷிக்கும்படி பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத். **பத்திரிகாசிரியர்.**

---

## கைவல்ய நவநீத வசனம்.

(107-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்னபானாதிகள் சுகத்தை யளிக்கும் சாதனங்களாதலின் யாவர்க்கும் அவற்றில் மிக்க பிரிய முண்டாகிறது. இவ்வாறே ஆன்மா சுகத்தை யளிக்கும் சாதனமாதலின் அதன்மேல் விருப்ப முண்டாகிறதென்று கருதலாகாது. ஆன்மாவை சுகசாதனம் அதாவது சுகத்தை யளிப்பது என்று கருதினால் சுகமாகிய ஆனந்தம் வேறும் அதை யனுபவிக்கும் ஆன்மா வேறுமாக விருக்கவேண்டும். அப்போது சுகத்தை யளிக்கும் ஆன்மா வொன்று; அதை யனுபவிப்பதாகிய ஆன்மா ஒன்று ஆக இரண்டான்மா இருக்கவேண்டும். ஆனால் அப்படி யில்லை. ஒரு ஆன்மாவே யுள்ளது. ஆதலால் ஆன்மா சுகசாதனமல்ல. ஆனந்தத்தை யளிப்பதல்ல. ஆனந்தமே சொரூபமாக வுடையது.

மேலும் விஷய சுகத்தில் உண்டாவது திருப்தி மட்டுமே. ஆன்மாவினுள்ளதோ நிரதிசயப்பிரீதி. விஷய சுகத்தில் உண்டாகும் விருப்பம் ஒரு விஷயத்தை விட்டு வேறொரு விஷயத்திற்கு மாறும். ஆன்மாவின் கண்ணுள்ள பிரீதி நிலையானது. இன்னும், விஷய சுகத்திலுள்ள பிரீதியை பிரியப்படி விடவும் கொள்ளவுங்கூடும். ஆன்மாவிலுள்ள பிரியத்தை விடவும் கொள்ளவும் யாரால் கூடும்? விடய சுகங்களை விடும் அவனாகிய ஆன்மாவை அவனால் ஒருபோதும் விடமுடியாது.

(“சிலர் வெறுப்பினால் ஆன்மாவை விட்டுவிடுகிறேனென்று பிராணத்தியாகம் செய்து கொள்கிறார்களே” என்று சீடன் வினவுகிறான்.)

**சீடன்:**—சுவாமி! கொடிய வியாதி, அல்லது மனோசஞ்சலம் முதலியவை யுண்டாகுங்கால், சிலர் பெருங் கோபத்தால் மனம் வெந்து பிராணனை விட்டுவிடுகிறேன் என்று தம்மைத்தாமே கொலை செய்துகொள்கிறார்களே, அப்போது ஆன்மாவை விட முடியாதென்று எப்படி கூறுவது?



**குரு:**—நீ கேட்பது சரியான கேள்வியல்ல; தனக்குத் துன்பத்தை யுண்டாக்கும் தேகத்தின்மேல் வெறுப்படைந்து அத்தேகத்தை விட்டுவிடுகிறானேயன்றி வேறில்லை. அவனால் விடப்பட்ட தேகம் அவனல்ல. தேகத்தை விட்டு அவன் நீங்கிவிடுகிறான். ஆன்மாவே தானாகி யிருக்கிற வரையில் ஆன்மாவை எவனும் விடுவதுமில்லை; கொள்வது மில்லை; எவனும் ஆன்மாவை வெறுப்பதில்லை.

**சீடன்:**—சுவாமி! ஆன்மாவே பிரியவஸ்து வெனின் தனம் புத்திரன் முதலியவற்றின் மேலும் பிரியம் இருக்கின்றதே.

**குரு:**—சாதாரணமாக யாவரும் பிரியப்படுகின்ற தனத்தைக் காட்டினும் ஒருவனுக்குத் தன் புத்திரன்மேல் அதிகப் பிரியமாகும். புத்திரனைக் காட்டிலும் தன் தேகத்தின்மேல் அதிகப் பிரியமாகும். தேகத்தினும் இந்திரியங்கள் பிரியமாம். இந்திரியங்களினும் கரணம் பிரியமாம். கரணத்தினும் பிராணன் பிரியமாம். பிராணனைக் காட்டிலும் ஆன்மாவில் வெகு பிரியமாம்.

இவ்வாறு ஒன்றை நோக்க மற்றொன்றின்மேல் அதிகப் பிரியமாயினும் முடிவில் எல்லாவற்றையும் விட ஆன்மாவினிடமே மிக்க பிரியம்; அதனினும் அதிகப் பிரியமானது வேறொன்றுமில்லை. ஏனெனில், ஆன்மா ஆனந்த சொரூபம்.

(விஷயங்களில் உள்ள விருப்பு, வெறுப்பு, உதாசீனம் முதலியவை மாறி மாறி வருவதுபோல் ஆன்மாவின் கண்ணுள்ள விருப்பு மாறாததால் ஆன்மாவே ஆனந்த ரூபம் என்று ஆசாரியர் நிரூபிக்கிறார்.)

யாவரும் அஞ்சி வெறுக்கும் புலியேயாயினும், அதனாலநுகூலம் நேர்வதாயின் அதன்மேல் விருப்பமே. தனக்குப் பிரதிகூலமான காரியத்தைச் செய்யின் தனது புத்திரனாயினும் அவன்மேல் வெறுப்பே. உலகில் விருப்புமின்றி வெறுப்புமின்றி உதாசீனமாகக் கருதப்படும் புல், பூண்டு முதலியவற்றில் ஒருசமயம் விருப்பும், ஒருசமயம் வெறுப்புமாம். புல், பூண்டு முதலியவை தீயெரித்தல் முதலியவைகளுக்கு அநுகூலப் படும்போது அவற்றின்மேல் விருப்பும், பாதையில் நடந்து செல்கையில் அவை யிடையூறாக விருக்கும்போது அவற்றின்மேல் வெறுப்பும் உண்டாகின்றன. பரிசுத்த சின்மய சொரூபனாகிய ஆன்மா தன் ஆனந்தத்தில் ஒருபோதும் மேற்கண்டபடி மாறுதலின்றி நிலையான விருப்ப முடையவனாகவே யிருக்கிறான். ஆதலின் மைந்தனே நீங்காத ஆனந்த ரூபியான உன் ஆன்மாவை ஆராய்ந்து அநுபவித்தறிவாயாக.

**சீடன்:**—குருநாதனே! ஆனந்தத்தின் கூறுபாடுகள் எத்தனை யென்பதைத் தயைபுரிந் தருளப் பிரார்த்திக்கிறேன்.

ஆசர்ன்:—மைந்தனே! (1) பிரம்மானந்தம், (2) வாசனானந்தம், (3) விடயானந்தம், என்று மூன்று வகையாகும். சிலர் எட்டுவித மென்றுங் கூறுவர். ஆனால் மற்ற ஐந்தும் இந்த மூன்றில் அடக்கமே. அவை (4) ஆன்மானந்தம், (5) முக்கியானந்தம், (6) நிசானந்தம், (7) அத்துவிதானந்தம், (8) ஞானானந்தம்.

(1) பிரம்மானந்தம்:—கருவிகாரணாதிகள் யாவும் ஒடுங்கிய நித்திரையில் அனுபவிக்கும் சுகம்.

(2) வாசனானந்தம்:—சுழுத்தியின் கண்ணிருந்து எழுந்தபோது சொல்ப காலம் சுழுத்தியி லனுபவித்த வாசனையுளது. அப்போது நித்திரையின் சுகத்தை மறவாமலும், பாகியத்தில் செல்லாமலும் உதாசீனனாக விருப்பான். அது வாசனானந்தம் எனப்பட்டது.

(3) விடயானந்தம்:—உலக போகங்களில் இச்சித்த போகம் கிடைத்து அதை யனுபவிக்கும்போ துண்டாகும் சுகம்.

(4) ஆன்மானந்தம்:—எல்லாவற்றிலும் நாமே நமக்கு மிக்க பிரியமான வஸ்து வென்னும் உணர்ச்சியா லுண்டாகும் சந்தோஷம்.

(5) முக்கியானந்தம்:—யோகத்தில், அதாவது சமாதியின் கண் உண்டாகும் சுகம்.

(6) நிசானந்தம்:—உதாசீனகாலத்தில் அதாவது எதையும் கவனியாது சிந்தனையற்று இருக்கும் காலத்தில் தோன்றும் சுகம்.

(7) அத்துவிதானந்தம்:—துவித பாவனைவிட்டுத் தன்னை யத்துவிதமாக நோக்கும் விவேகத்தாற் றோன்றும் ஆனந்தம்.

(8) ஞானானந்தம்:—ஆன்ம பரமான்ம ஐக்கிய ஞானத்தா லுண்டாகும் ஆனந்தம்.

(நித்திரைச் சுகம் பிரம சுகமெனல்.)

அநித்தியமான விஷயங்களில் போகம் ஒன்று, போகத்தைப் புசிப்பவன் ஒன்று, போகியம் (போகசுகம்) ஒன்று ஆகிய திரிபுடியுள வாதலின் அவை துக்கமாம் என்றுணர்ந்து, ஆகாயத்தில் பறந்தலையும் கருடன் களைப்படைந்தபோது சுக மனுபவிக்கக் கருதி இறகுகளை யொடுக்கிக்கொண்டு தன் கூண்டில் போய் வீழ்வதுபோல், திரிபுடியா லுண்டான சிரமம் நீங்கும் பொருட்டு மனதை யொடுக்கி நித்திரை செய்யும் சீவன், ஒரு அவஸ்தையுமின்றித் தானே தானாகவிருந்து ஆனந்தமய னாகிறான். இதுவே உயர்ந்த பிரம்மாநனந்தமாம்.

சுழுத்தியில் சீவன் சுகரூபமான பிரம்மானந்த நிலையை யடைகிறான் பது வேத சம்மதம். அங்கு ஆனந்த மிருப்பதாலேயே அந்த நித் குப் பங்கம் வாராதபடி மிருதுவான படுக்கை தலையணை முதலியவற்



றைத் தேடிக்கொள்கிறான். அனுபவத்தில் அச்சுழுத்தியில் இராகத் துவேஷாதிகள், காலம், இடம் முதலிய பேதங்கள் ஒன்றுமின்றி இரண்டற்ற ஆனந்தத்தையே யனுபவிக்கிறான். இதனால் நித்திரைச் சுகம், பிரம்ம சுகம் என்பது சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு ஒத்ததாம்.

[இங்கு பிரம்மானந்த மெனின், ஆன்மா பிரம்மத்தோடு ஐக்கிய மடைந்தபோ துண்டாகும் ஆனந்தமென்று கருதலாகாது. பிரம்மானந்தத்திற்குச் சமதையான ஆனந்த மெனக்கூறலாம். பிரம்மான்ம ஐக்கியம் அடைந்த ஆன்மா மறுபடி அஞ்ஞானத்தில் அழுந்தாது. பிறவியும் அதற்கில்லை. நித்திரையில் ஆன்மா கருவிகாரணாதிகள் யாவும் கழன்று அவித்தையில் அமிழ்ந்திருக்கிறது. அதாவது, மாயையோடு சம்பந்தப்பட்டே யிருக்கிறது. அதனால் கருமபலன் தூண்டச் சாக்கிரத்திற்கு வந்தபோதும் அஞ்ஞானத்தோடு பொருந்தியே யிருக்கிறது. பிரம்மான்ம ஐக்கிய அனுபவமாகிய நிட்டையிலிருந்து பகிர்முகப்பட்ட ஆன்மா அஞ்ஞான சம்பந்தமுடையதா யிராமல் ஜீவன் முத்த நிலையில் இருக்கும். இரண்டிலுமுள்ள வித்தியாசம், நித்திரானந்தத்தில் மாயாசம்பந்த மிருக்கிறது. பிரம்மான்மவைக்ய ஆனந்தத்தில் மாயா சம்பந்தமில்லை.]

சீடன்:—சுவாமி! உலக அனுபவத்தில் ஒருவனுடைய அனுபவம் மற்றொருவனுடைய மனதில் உதிப்பதில்லையே. அப்படி யிருக்க மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம் முதலிய யாவும் நாசமாகின்ற சுழுத்தியி லிருக்கும் ஆனந்தமயன் அல்லவா அச்சுகத்தை யனுபவிக்கிறான். அவ்வாறிருக்க நித்திரை யொழிந்தபின் மனம் முதலியவற்றோடு சம்பந்தப்பட் டிருக்கும் விஞ்ஞான மயனாகிய சீவன் மனதில் அந்த அனுபவம் எப்படி யுதிக்கிறதென்பது எனக்கு விளங்கவில்லை. சகல சந்தேகங்களையும் அகற்றவல்ல தாங்கள் இதையும் விளக்கி யருளவேண்டும்.

ஆசாரியர்:—மைந்தனே! வெண்ணெய், நெய் என்ற இரண்டும் பெயர் உருவில் வேறாகத் தோன்றினும் சுவையில் ஒன்றேபோல், விஞ்ஞானமயன், ஆனந்தமயன் இருவரும் அந்தக்கரண விர்த்தி அவித்தை இவற்றால் பிரிவேயன்றி சேதனத்தால் பிரிவில்லை. சாக்கிரத்தில் மனம் முதலியவற்றோடு கூடியிருக்கும் விஞ்ஞானமயனாகிய ஆன்மாவே, மன முதலிய யாவும் ஒடுங்கிய சுழுத்தியில் பிரம்மானந்தத்தை யனுபவிக்கும் ஆனந்தமயன் என்றழைக்கப்படுகிறான். பெய்யும் மழைத் துளிகளும் குளங்களில் சேர்ந்திருக்கும் நீரும் வேறாகாது ஒன்றேயாவது போல் விஞ்ஞானமய்னும், ஆனந்தமயனும் ஒரே ஆன்மாவாகும்; வேறு வேறல்லர்.

(நித்திரையில் பிரம்மானந்தத்தை யனுபவிக்கும் சீவன், நித்திரை யொழிந்தபின் சாக்கிரத்தில் துக்கத்தை யனுபவிக்கிறதேன் என்று சீடன் சங்கித்தல்.)

சீடன்:—“நித்திரையில் பிரம்மானந்தத்தை யனுபவிக்கும் சீவன் அதை விட்டுவிட்டு சாக்கிரத்திற்கு வந்து துன்பத்தை யனுபவிக்க வேண்டிய தென்ன?” என்றான்.

குரு:—சீவன், பூர்வம் செய்துள்ள புண்ணிய பாபகர்மங்கள் அவனைச் சுழுத்தியினின்றும் பிரித்துச் சாக்கிரத்தில் கரணாதிகளோடு சேரும்படி செய்கின்றன. அப்படிச் சுழுத்திவிட் டகன்றேனும் கொஞ்ச நேரம் தான் அனுபவித்த சுகத்தை விடாதிருப்பான். அதுவே வாசனானந்தம் என்றது.

அந்த வாசனானந்த முள்ள சொற்ப காலத்தில் கர்மபலத்தால் தேகமே தான் என்ற நினைவு தோன்ற அப்பிரம்மானந்தம் அடியோடு மறக்கப்படுகிறது. புண்ணிய பாபகர்மங்களே சுக துக்கங்களுக்குக் காரணமாம். சுக துக்கம் இரண்டிற்கு மிடையிலுள்ள அவஸ்தையே உதாசீனம் என்னப்படும். “நான் ஒரு சிந்தனையுமின்றிச் சுகமாக விருந்தேன்” என்று சொல்லும் காலமே உதாசீனகாலம். இதற்குத் தூஷ்ணீம் ஸ்திதி என்றும் பெயர். இதையே நிசானந்த மென்றது.

நித்திரையிலுள்ள பிரம்மானந்தம் (நான் இன்ன மனிதன் என்ற விவரம் ஒன்றும் தோன்றாமல்) நான் என்ற சாமான்ய அகங்காரம் தோன்றியதே மறைகின்றது. மறைந்தும் அதன் நினை விருப்பதே வாசனானந்தம். இந்தச் சாமானிய அகங்காரமும் மறைந்து, ஒரு சிந்தனையுமின்றி, நாமரூபம் யாவும் மறந்து, நித்திரையுமின்றி, தேகம் தம்பம்போல் அசையாமல் நிற்க ஆன்மா சூக்குமத்தன்மை யடைந்துள்ள பிரம்மாகார நிலையே முக்கியானந்தம் என்று கூறப்பட்டது.

## முக்கியானந்தத்தின் மகிமைகூறல்.

(1) மனிதரில் சிறந்தவனான ஏகசக்ராதிபதி சார்வபௌமன் எனப்படுவான். (2) அவனுக்கு மேலானவன் (இக்கற்பத்திலேயே மனிதனாகவிருந்து புண்ணிய விசேஷத்தால் கந்தருவ பதத்தை யடைந்தவன்) மநுடகந்தர்வன். (3) அவனிலும் மேலானவன் (பூர்வகற்பத்திற் செய்த புண்ணியத்தால் இக்கற்பத்திலேயே கந்தருவனானவன்) தேவகந்தருவன். (4) பிதிரர். (5) (கற்பாதியிலேயே தேவத்துவத்தை யடைந்தவர்) ஆஜானதேவர். (6) (வர்த்தமான கற்பத்தில் அசுவமேதாதி கருமங்கள் செய்து உயர்பத மடைந்து ஆஜானதேவர்களாலும் வணங்கப்படுவோர்) கருமதேவர். (7) (அஷ்டவசு, துவாதசாதித்தர், ஏகாதச ருத்திரர் ஆகிய முப்பத் தொருவரும்) முக்கியதேவர். (8) இந்திரன். (9) பிரகஸ்பதி. (10) (பிரஜாபதி) விராட். (11) (பிரமன்) இரணியகருப்பன், ஆகிய இவர்கள் ஒருவருக் கொருவர் பதவியிலுயர்ந்தோர். இவர்கள் அனுபவிக்கும் ஆனந்தம் ஒருவருக்கொருவர் ஆனந்தம் உத்தரோத்தரம் நூறுமடங்கு அதிகமானது. அதாவது சார்வ



பௌமன் ஆனந்தத்திற்கு நூறுமடங்குகொண்டது மநுடகந்தர்வன் ஆனந்தம்; மநுடகந்தர்வன் ஆனந்தத்திற்குநூறுமடங்கு ஆனந்தம் தேவகந்தர்வன் ஆனந்தம்; இவ்வாறே.

இவர்கள் ஆனந்தங்கள் நீர்த்துளி போன்றவை யெனின், பிரம்மானந்தம் பிரளயகாலப் பெருங்கடல் போன்றதாம். (தொடரும்)

சீடன்.

---

## ஓர் நற்செய்தி.

அன்பார்ந்த சகோதர சகோதரிகாள்!

1. நீர் சூழ்ந்த வையத்துத் திலகம்போன்ற நம்நாட்டுத் தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியின் அமுதவாக்கு “நன்மை கடைப்பிடி” அதைக்காட்டி நாம் இவ்விஷயத்தை வரைய நேர்ந்ததின் காரணம் பின் வருமாறு:—

2. இப்பூவுலகின்கண் மக்களாய்ப் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் பகுத்தறியும் சக்தியை ஏற்கனவே கடவுள் அளித்திருக்கின்றனர். நாம் பகுத்தறிவைக்கொண்டு எது நன்மையோ அதைச் செய்யவும், எது தீமையோ அதை ஒழிக்கவும் முயலவேண்டும். அங்ஙனம் முயல்வதோடு நாம் ஓர் காரியத்தைச் செய்ய ஆசைப்படும்போது சுய நலம் கருதாது தேசநன்மையைக் குறித்ததாகிய பொதுநலத்தைக் கருதியே பாடுபடவேண்டும்.

சென்ற மாதம் பைபில் உமன்களைக்கொண்டு பிரசங்கம் செய்யவந்த சில பாதிரிகள் மதசம்பந்தமான வியாசங்களை அளவின்றி மணிக் கொருவராக ஓய்வில்லாமலும், மூச்சு விடாமலும், முற்றுப் புள்ளிவைக்காமலும் வாரி வாரிக் கோடைகால மாரியைப்போல் சொரிய, அதனை வேடிக்கையார்த்தமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த ஏனைய ஜனங்களில் சில பஞ்சமர்கள் கிறிஸ்து மதத்தில் தந்திரமாய் வற்புறுத்திச் சேர்க்கப்பட்டார்கள் என்பதைக் கேட்ட எவ்விந்தியன் மனந்தான் அனலிடுமெழுகுபோல் உருகாதென்பது நண்பர்கள் அறிந்ததே. நிற்க,

சுய நலம் கருதாது. தேசநன்மைக்கே பாடுபட முயற்சி எடுத்துக் கொள்பவரும் தனக்கென வாழாது பிறர்க்குரிய நன்மையைச் செய்வதற்கே பிறந்ததாய் நினைத்து ஏழைகளை அன்போடு ஆதரிப்பவருமாகிய கனம், ம-௱-௱-ஸ்ரீ ராவத்த நல்லூர் மணியம் P. V. ராஜகோபால் நாயுடு அவர்கள் மேல்நடந்த விஷயங்களைக் கேட்டவுடன், அதன் பலனாக அவரது நன் முயற்சியால் அடியில் கண்ட சம்பவம் நிகழ்ந்தது:—

1921ஆடு ஜூலைமீ 16உயில் மாலை சுமார் 3-மணிக்கு அடியில் கையொப்பமிட்டவரை அக்கிராசனாதிபதியாக நியமித்து கனம் P. V. ராஜகோபால்நாயுடு அவர்களைக் காரியதரிசியாக நியமித்து ஊரிலுள்ள (உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்க ளென்ற வேறுபாடின்றி) எல்லாவித ஜனங்களையும்

வருவித்து நம் மிந்திய மதம் உற்பத்தியானது முதல் தற்கால நிலைமை வரை உபன்யாசித்து, நம் தாய் மதத்தின் மகிமையை எடுத்துக் காட்டி அதனால் அடைந்த பெருமையையும் விளக்கி காண்பித்து, மாதா மாதம் ஒவ்வொருவர்களும் அதே இடத்தில் ஷையூர் உபாத்தியாயர் R. சதாசிவம் பிள்ளை அவர்களால் குறிக்கப்படும் தினத்தில் நம் மதம், தாய்நாடு இவற்றின் அபிவிர்த்திக்காக ஷை சங்கத்தின் அங்கத்தினர்களால் சொல்லப்படும் விஷயங்களைக் கேட்டு அதற்கேற்ப நடந்துகொள்வதே நாம் எடுத்த ஜனனத்திற் குரித்தாகிய கைங்கரிய மென்று அங்குக் கூயடிவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கம் குன்றாது என்றும் நடைபெற வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப்பட்டது.

அன்று முதல் நடக்கும் ஷை சங்கத்திற்கு **ஆனந்த தமிழ்ச் சங்கம்** என்று பெயர் கொடுக்கப்பட்டது. இனி இச்சங்கத்திற்கு "ஆனந்தனை" வரவழைத்து அதிலுள்ள அரும் விஷயங்களின் ரசத்தை மாந்தர்களுக்கு ஊட்டி அறிவை விர்த்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொருமுறை சபை கூடும்போதும் அடியேன் தமிழின் சிறப்பு, ஒற்றுமை, முயற்சி, பெண் கல்வி, "ஆனந்தபோதினியின்" நன்மை இவைகளைப்பற்றி உபன்யாசிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளேன். இதைக் கேட்ட நம் தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரும் நம் தமிழ் மக்கள் நன்மையைக் குறித்தும், நமது அனாதியான உத்தம மதம் குன்றாது விர்த்தியடைய வேண்டியதைக் குறித்தும் இத்துணைக் கருவி ஏற்பட்டதைக் கருதி இவ்விதமே ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய சங்கம் நடைபெறப் பிரயத்தனப்படுவார்களென்று நம்புகிறேன்.

நண்பர்களே! இனிமேல் இவ்விதச் சங்கங்கள் ஏற்பட்டு நம் தாய்நாடும், மதமும் முன்னிருந்த க்ஷேமத்தை அடையுமாறு எல்லாம் வல்ல இறைவனாகிய சச்சிதாநந்தப் பரம்பொருள் கருணை புரியுமாறு பிரார்த்திக்கின்றோம். சுபம்! சுபம்!!

இவ்விஷயம் நம் தமிழ் நண்பர்கள் அறியவேண்டியே நம் "ஆனந்தனுக்கு" அனுப்பப்பட்டது. நம் குற்றமற்ற "ஆனந்தன்" இதிலுள்ள பிழைகளை நீக்கி ஏற்று இதனை நண்பர்களுக்குத் தெரிவிக்குமாறு கோருகிறோம்.

R. சதாசிவம்,
தலைமை உபாத்தியாயர், ஹிந்து எலிமெண்டரி பாடசாலை,
ராவத்த நல்லூர்.

**குறிப்பு**:—ஞானம் நிறைந்துள்ள நமது மதத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகள் புறமத மயக்கில் வீழாது தடுக்க ஆங்காங்கு மதாபிமானிகள் இத்தகைய சங்கங்களை யேற்படுத்தி மதபோதனை செய்வது இக்காலத்தில் கட்டாயம் செய்யவேண்டிய முக்கியமானதொரு புண்ணியத் தொண்டாகும். நண்பர்கள் அவசியம் இதைக் கவனிக்கக் கோருகிறோம்.

**பத்திராசிரியர்.**

---



## தமிழர் புராதனம் தமிழின் தொன்மை.

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

செந்தமிழ் நடையையும் கொடுந் தமிழ்ப் போக்கையும் உற்றுநோக்கின் இரண்டும் வேறுவேறு பாஷைகளென்று கூறலாம்படி வேறுபடும். இராமகதை, பஞ்சகாவியங்கள், ஏனைய திருக்குறள் முதலிய சங்கநூற்கள் தமிழில் சொற்ப பயிற்சியுடையோர்க்குச் 'சமஸ்கிருதம்' போலவே தோற்றும். ஆனால் மேற் கூறியபடி அவற்றில் வடமொழிப் பதங்கள் அதிகமாகப் பயிலவில்லை; ஒன்றிரண் டெஞ்சிய மற்றைச் சொற்களனைத்தும் தமிழே. செந்தமிழ் இலக்கணத்தில் ஆளப்பட்டுள்ள விதிகளுஞ் சொற்களும் பெரும்பாலும் தற்போது வழங்குவதில்லை. தமிழ்ப் பதங்கள் மட்டும் ஒரு லக்ஷத்துக்குக் குறையாமலுள்ளனதாக ஏற்படுகின்றது. இல், வீடு, மனை முதலிய பஞ்சதிரவிட மொழிகளுங் கலந்துளவாதலால் அப்பாஷைகள் வேறுபடுவதற்கு முன்பே தமிழ்மொழி திருத்தமடைந்த தென்னலாம்.

தமிழ்மக்கள் முதற்கொண்டே வேற்றுச் சொற்களை ஏற்றுக்கொள்ளாமலே யிருந்தனர். அப்படி யேற்பினும் தமது மொழிக்கிழுக்கு நேரிடாவண்ணம் அவைகளை யேற்கும் விதிமுறைகள் அமைத்தனர்.

"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே.
இணைந்தியல் காலை யரலக் கிகரமு
மவ்வக் குகரமும் நகரக் ககரமு
மிசைவரும் ரவ்வழி யவ்வு மாம்பிற"

என்ற நன்னூற் சூத்திரங்கள் ஆரியமே யன்றி ஆங்கிலப் பதங்கட்கும் பொருந்தும். ரவி என்னும் ஆரியம் இரவி என்றும், ரயில், ரப்பர் என்னும் ஆங்கிலச்சொற்கள் இரயில் [இருப்புப்பாதை] என்றும் இரப்பர் [துடைப்பான்] என்றுந் திரிந்துள்ளன கவனிக்கலாம்.

நிற்க, சமீப காலங்களில் செய்யப்பட்ட சிலாசாசன ஆராய்ச்சிகளால் தமிழர் நாகரீகமும், அவர்கள் புராதனமும், பாஷையின் செழுமையும் நன்கு புலப்படுகின்றன.

சுமார் 1000 கி-மு. ஆண்டில் எகிப்து தேயத்திற்கு இந்தியாவினின்றுங் கொண்டுபோன பொருள்களுள் 'துகி' அல்லது 'தூகி' என்னும் மயிலும் ஒன்று என எபிரேய விவிலியநூலில் (Hebrew Bible) காணப்படுகின்றது. துகி என்பது தோகை (கலாபம்) என்னுஞ் செந்தமிழ்ச் சொல்லின் திரிபு என்று கூறாமலே விளங்கும் சுமார் 3000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ்மக்கள் வேற்று நாட்டாருடன் பயின்றும் வர்த்தகஞ்செய்

தும் சிறப்புப் பெற்றனர். அக்காலத்திலும் தமிழ் சாலப் பயின்றிருந்ததனால் அச்சொல்லே அன்னியர்களும் பயிலலானார் என்பதும் புலப்படும். உணவுக்கு இன்றியமையாத அரிசியும் இன்பமூட்டும் நறைப்பொருள்களும் இந்நாட்டிலிருந்தே கிரேக்கு முதலிய புறநாடுகட்கு நம்மவர்கள் அனுப்பினார்கள். கிரேக்கர் 'அருஸர்' என்றும் ஆங்கிலர் 'ரைஸ்' என்றும் மொழிவது தென்னாட்டில் அமிதமாக விளையும் அரிசியையே. அக்காலத்தில் இங்கு உற்பவித்த கர்ப்பூரத்தைக் கிரேக்கர்கள் 'கார்ப்பியன்' என்றனர்.

இத்தகைய மொழியைப் பயிலும் தமிழர் எந்நாட்டினர்? எக்காலத்தில் இவண் வந்தனர் என ஆராய்வாம்.

## IV—தமிழர் வருகை.

தென்னாட்டில் இருந்துவருந் தமிழர்களின் முன்னோர்கள் ஆரியர் வருவதற்கு முன் தத்தம் வாழ்க்கைக் கின்றி யமையாத இயற்கைப்பொருட்களையே கடவுளாக வணங்கிவந்தனர். நாகரிக நிலைமையி லிருந்தவர்களை வெகு சுலபத்தில் ஆரியர் தமது கோட்பாடுகளுக்கு உட்படுத்திக் கொண்டனர். இவற்றின் விவ்ரம் பிறகு கவனிப்பாம். இத்தத்துவம் உணராத தமிழரும் ஆரியவமிசத்தைச் சார்ந்தவரென்று கூறலாயினர். நமது மதத்துக்கும் வேதசாஸ்திர தத்துவங்களுக்கும் சமஸ்கிருதமும் அதனைப்பயிலும் மக்களும் அடிப்படையாக இருப்பதால், அவர்களுடன் இரத்த சம்பந்தம் பிணைப்பது விசேஷமெனப் பாராட்டப் படுகின்றது. இக்கொள்கையும் அதன் சான்றுகளுமே கொண்டு தமிழரும் ஆரியரும் ஒன்று என நிச்சயித்தல் கூடாது. *

மேனாட்டினின்றும் வந்த விற்பன்னர் மேற்றிசையி னின்றும் தமிழர் குடிபுகுந்தனர் என்று சாதிக்கின்றனர். தமிழர் நாவாய் செலுத்திய ஒன்றுமே யவர் சான்றாகக் கூறுவர். ஆனால் வியாபார நிமித்தம் திரைகடலோடி யிருத்தல் கூடுமாதலானும், இந்தியமக்கள் என்னிமித்தத்தினும் வேற்றுப் புலஞ்சென்றதாக உணர்தற் கேதுவின்மையானும் அக்கொள்கை சார்பின்றியுளது.

இனித் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய இந்துமகா சமுத்திரத்துக் கண்டங்களிலுள்ள மலைத்தொடர், நிலப்பரப்பு, இயற்கை யமைப்பு, மிருகாசியின் குணன் முதலியன தென்னாட்டில் ஒற்றுமை காணப்படுவதால், கன்னியா முனைக்குத் தென்றிசையில் ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்ததாக யூகிக்கின்றனர். நமது நாட்டிலும் தெற்கில் வெகு தொலைவில் நாடுகள் இருந்து அழிந்துபட்டதாக வரலாறு வழங்கிவருகின்றது. இன்றைக்கும் பஞ்சாங்க கணிதத்தில் இலங்கைக் கடிகையையே ஆதாரமாகக்கொண்டுள்ளதும் இதனை வலியுறுத்தும். (தொடரும்.)

---

* தமிழர்க்கும் ஆரியருக்கும் இரத்த சம்பந்தம் ஏற்பட்டது ஆரியர் இந்திய தேசம் புகுந்த பின்னரே எனத்துணியப் படுகின்றது.



# இல்லறம்—மறுபிறப்பு

(118-ம் பக்கத் தொடர்ச்சி.)

அதிககாலம் அறிவைக் குறைக்கும் என்று கூறினும் அதிக பழக்கமுள்ள சில மட்டும் மறவாமல் நினைக்கப்படும். அவையு மின்னதென்று தானறிந்து கொள்ளாமலே நினைக்கப்படுகின்றன. ஜீவான்மாக்களுக்கு முக்கிய குணம் மூன்று: அவை ஆகாரம், நித்திரை, புணர்ச்சி என்பன. இவை அநாதிசிருஷ்டி காலந் தொடங்கி ஆன்மா எவ்வகைச் சரீரத்தை யடையினும் அதைக் கொண்டே இம்மூன்றையும் அனுபவிக்கும். அநாதி தொடங்கி யிடைவிடாமலே அனுபவித்து வருவதால் இவை மறக்கப்படுவனவல்ல. உண்ணல், தூங்கல், புணர்தல் இவை தொழில்களே யாயினும், அநாதிதொடங்கிப் பழகிவருதலால் சூட்சும சரீராம்சமாகிய மனத்தோடு கலந்து ஆன்மாவோடு சம்பந்தித்து நிற்கும். அதுபற்றி இவற்றைத் தொழிற் குணமென்று கூறுவர். பிறந்தவுடன் குழந்தைப் பருவமாயுள்ள மிருக ஜந்துவும் தன் தாயை நோக்கிச் செல்கின்றது. அது தன் தாயையாவது, இவ்வுலகத்தையாவது முன்னொருபோதும் அறிந்ததில்லை. பின் என்னெனின் பசிநோயுண்டாக அதை நிவர்த்தித்துக்கொள்ளும் நிமித்தம் அதன் தாயின் ஸ்தன்னியத்தை நோக்கிச் சென்று பாலுண்ணும். இதற்குக் காரணம் யாது? காந்தத்துக்கும், இரும்புக்குமுள்ள ஆகர்ஷண சக்தியி னியற்கையாலென்னின், தாயின் ஸ்தன்னியம் கன்றின் நாவை யாகர்ஷித்ததென்றாவது, கன்றின் நாவே தாயை நோக்கிச்செல்லு மென்றாவது கூறமுடியாது. கன்றே பசிப்பிணியின் கொடுமையால் தாயை நோக்கிச் செல்வது பிரத்தியட்சம். அக்கன்றோ முன் உலக இயல்பை யறிந்ததல்ல. பிறந்தவப்பொழுதே தாயை யறிந்துகொண்டு பாலுண்ணுமாறு அதனை நோக்கிச் செல்கின்து. இதேயன்றி மந்தையிற் பிறந்த சில கன்றுகள் சிலையாலமைக்கப்பட்ட பசுவுருவத்தினிடம் சென்று அதனை முகர்ந்து பாலுண்ண முயல்வதையும் யாம் பார்க்கலாம். ஆதலால் ஒன்றையொன்று ஆகர்ஷிக்குமென்பதும் இயற்கையென்பதும் பொருந்தாது. முற்பிறப்புகளில் முதிர்ச்சிபெற்றிருந்த இந்திரியங்களைக் கொண்டு இடைவிடாமல் அனுபவித்த உணவாதிகளை ஜீவன் நினைத்துக்கொண்டு அனுபவிக்கின்றது என்பதே பொருத்தமுடையது. வனாந்திரங்களில் பிறந்த நாற்கால் ஜீவன்களும் ஒருவர் உதவியுமின்றித் தாமே சென்று தாய் முலைப்பாலை யுண்பதும் முற் பிறப்புகளின் பழக்கமே யாமென்க. துரோணாசாரியார் பரிசாரகனை நோக்கி அர்ஜுனனுக்கு வெளிச்சமுள்ள இடத்திலேயே அன்னம் படைக்கும்படி கட்டளை யிட்டனர். ஒருநாள் அர்ஜுனன் உண்ணும்போது தந்திரமாய் விளக்கை அணைத்து விடும்படி பரிசாரகனுக்குக் கூறினர். அவன் அவ்வாறே செய்தான். அப்பொழுது இருள் கண்ணை மறைத்துக்கொண்டது. அங்ஙனமாகவும் கைபழக்கத்தின் மிகுதியால் அன்னாதிகளை யெடுத்துத் தவறாமல் வாயிலூட்டிற்று. அதனால் பழக்க மிகுதியால் எத்தொழிலையும் செய்யலாமென அர்ஜுனன் உணர்ந்துகொண்டான். அன்று முதலாக எல்லாருந் தூங்கினபின் நல்ல இருளிலும் அம்பெய்து பழகினான். ஒருநாள் துரோணர் விழித்துக்கொண்டார். அப்போது நடுஇரவு. சாலையில் சப்த முண்டாவதைக் கேட்டு அதென்னவென்று பார்க்கச் சென்று யாரங்கே யென்று வினவினார். அர்ஜுனன் அடியேன் உமது சீடன் என்றான். நீ யிங்கே யென்ன செய்கிறா யென்று துரோணர் கேட்

டார். அர்ஜுனன் நான் இருட்டிலும் குறியடிக்கப் பழகுகிறேன் என்றான். அதெப்படி முடியுமென்று கேட்டார். வெளிச்சத்தில் அன்னத்தை வாயிலூட்டப் பழகின கை யிருளிலும் தவறாமல் ஊட்டவில்லையா? அதுபோலவே யிருளிலும் பழக்கத்தாற் செய்யலாமென்று கூறினான். துரோணர் ஆனந்த பரவசராய் அர்ஜுனனைத் தழுவி யாலிங்கனஞ் செய்துகொண்டு நீயுலகத்தில் ஒப்புயர்வற்ற வில் வீரன். நீ ஒருவனே என் கீர்த்தியை உலகத்தில் விளங்கச் செய்கிறவன். திரிலோகங்களிலும் ஒப்பற்ற வில் வீரனாக விளங்கக் கடவாய் என்று ஆசீர்வதித்துத் தனுர்வேத இரகசியங்களை யெல்லாம் அவனுக் குபதேசித்தார் என்று பாரதங் கூறுகின்றது. நாம் நினைப்பதற்கு முன்னாலேயே யெழுந்து ஓடுங் கால்களும், உடை யவிழ்ந்த வக்காலத்திலேயே அதனை விழ வொட்டாது தடுத்து மானத்தைக் காப்பாற்றும் கைகளும் இதற்குச் சான்றாம். இதனால் மிகுந்த பழக்க மெதுவோ அது தன்னை யறியாமலே நடைபெறு மென்பது கொள்க.

இனி, சிலர் ஒவ்வொரு விஷயத்தையும் சொல்வதற்கு முன்னரே தெரிந்து கொள்கிறார்கள். சிலர் அநேக தட்வை கூறியு முணராமலே யிருக்கிறார்கள். சிலர் ஒரு தடவைக்குப் பத்துத் தடவை சொன்னால் சிறிது சிறிதாக வுணர்ந்து கொள்கிறார்கள். இதனை உய்த்து நோக்குங்கால் ஜீவன் சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தைப் பெறுவதற்கு இடையில் காலங் குறுகி யிருத்தலும், நீடித்து இருத்தலுமே யிதற்குக் காரணமா மென்றே கொள்ளப்படும். சீக்கிரத்தில் மறு சரீரத்தைப் பெற்ற ஆன்மா முன் சரீரத்தில் அனுபவித்தவற்றை யெளிதி லுணர்ந்துகொள்கிறா னென்பதும் காலம் நீடித்துச் சரீரத்தைப் பெற்ற ஆன்மா உணர்ந்துகொள்ளச் சக்தியற் றிருக்கிறானென்று முணர்ந்து கொள்ளலாம். முற்பிறப்பில் அனுபவித்தவைகளை யிப்பிறப்பிலும் ஒருவரும் கூறாமலே ஒருவன் உணர்ந்துகொள்வது முண்டு. இதனையே ஐரோபியர் கிப்ட் (Gift) என்பர். பிறந்து அறிவிற் சிறக்கு முன்னரே உலகத்திலே பயிற்சி யதிகமில்லாத கவன சக்தி (செய்யுள் செய்யும் சக்தி) ஒருவனுக் குண்டாவதைப் பார்க்கிறோம். இன்னு மளவிலாதனவுள. இவற்றை முற்பிறப்பில் விட்டகுறை தொட்டதென்று நமது உண்மை நூல்கள் கூறுகின்றன. இதுகாறும் நாம் கூறியது இயற்கையறி வென்பதொன்று கிடையாது. எல்லாம் செயற்கையறிவே. அது முற்பிறப்பில் பழகின பழக்கத்தின் காரணமாக வுண்டாகு மென்பதாம்.

ஆன்மாவுக்கும், சரீரத்துக்கும் ஒருவிதமான கிராகிய சக்தி யுண்டு. ஆன்மா சரீரமின்றி யொன்றையு மறியாது. ஆன்மாவின்றிச் சரீரம் யாதொரு பயனையுந் தராது. ஆதலால் இவ்விரண்டிற்கும் இரும்புக்கும், காந்தத்துக்கு முள்ளது போன்ற ஒருவித சக்தி யுண்டு. காந்தம் அயத்தை யிழுக்கும். அயம் அதனை நோக்கிச் செல்லும். இதனால் அவ்விரண்டுக்கும் கிராகிய சக்தி யுண்டென்றே யூகிக்கலாம். காந்தத்தைக் காணாத விடத்தில் அயத்தில் அசைவு தோன்றுவதில்லை. அதுபோல் ஆன்மா சரீரத்தை விட்டிருக்கையில் ஒன்றையும் உணராம லிருக்கின்றது. அயமானது காந்தத்தினெதிரி லசைவதுபோல ஆன்மா சரீர சம்பந்தத்தால் சுக துக்கங்களை யுணர்கின்றது. காந்தத்தையும், இரும்பையும் அறிவுள்ள ஒருவன் சேர்த்து வைத்தால் அவை யொன்றோடொன்று கூடுவதுபோலப் பேரறிவும், பெருஞ் சக்தியுமுடைய ஒருவன் அவற்றின் கன்மத்துக் கேற்றவாறு சீவனையும் சரீரத்தையுங் கூட்டுகிறா னென்பது திண்ணம். அப்பேரறிவுடையவனே பரமான்



மாவாம். ஜீவான்மாவும், சரீரமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிதலுக்கும் கன்ம சக்தியின் குறைவும் பரமான்மாவுமே காரணமாம். மரண மடையு மக்கணத்தில் ஆன்மாவுக்கு எது ஞாபகத்தில் இருக்கிறதோ அது மறுபிறப்புக்குச் சரீரமாம். அநாதி தொடங்கி யளவிலாத சரீரங்களை யடைந்து பழகிய ஆன்மா தன் கன்மத்துக்கேற்ப ஏதாவது ஒரு சரீரத்தைக் கருதியே வெளிப்படும். அச்சரீரம் சீக்கிரத்தில் கிடைத்தால் அதிற் பிரவேசிக்கும். அன்றிக் கிடைப்பதற்குக் காலம் நீடித்தால் அதுவரை சூட்சும சரீரத்துடன் அலைந்து கொண்டிருக்கும். புண்ணிய வசத்தில் மரணத் தறுவாயில் தெய்வ ஞாபக முண்டாயின் அவன் பிறப்பு என்பதைக் காணவே மாட்டான். தான் ஆராதித்து வரும் விக்கிரக சொரூபம் அக்காலத்தில் ஞாபகத்தில் வருமாயின் அவனும் சாரூப மென்னும் பதவியை யடைந்து திவ்ய சொரூபத்துடன் விளங்குவான். இவ்விரண்டு மில்லாத ஆன்மா தனக்கு அதிக பழக்கமான வொன்றையே நினைத்து வெளிப்பட்டுக் கன்ம வசத்தால் அச்சரீரத்தை யடைந்து இன்ப, துன்பங்களை நுகரா நிற்கும். இதனை யுத்தேசித்தே தெய்வாராதனை, தெய்வநாம உச்சாரணம் முதலியவற்றை யிடைவிடாது செய்ய வேண்டுமென்று நூல்கள் விதித்தன. மரண துன்பத்தில் ஆன்மா தெய்வ சிந்தனை யடைவது கஷ்டமாதலால், அறிவு தோன்றிய காலமுதல் தெய்வ சிந்தனை, தெய்வ தரிசனம், தெய்வ மகிமையைக் கேட்டல் முதலியவற்றைச் செய்யவேண்டுமென்று நூல்கள் விதித்தன. நெடுங் காலத்துப் பழக்கம் மறக்கப்படுவதன்றென்றும் தன்னை யறியாமலே யது ஞாபகத்துக்கு வருமென்றும் முன்னர்க் கூறினோம். ஆதலால் நெடுநாட் பழகிய தெய்வ சிந்தனை மரண காலத்திலும் ஞாபகத்தில் வரும். நெடுங்காலப் பழக்கத்தால் நாவும் தெய்வ நாமத்தை மறவாம லுச்சரிக்கும். ஜீவன் மறு சரீரம் பெறுவதற் கிடையில் சரீரமின்றி யிருப்பானாயின் எக்காலமும் சரீரத்துட னிருப்பானென்பது யாங்ஙன மமையுமெனின், அது கூறுதும். (வரும்.)

சிவானந்த ஸாகரயோகீஸ்வரர்.

## மாதர் நெறிகள்.

(75-ம் பக்கத் தொடர்ச்சி.)

9. சகோதரிகளே! நாம் கடந்த சஞ்சிகையின் முடிவில் உங்களுக்குக் கூறியதுபோல் உயர்தரக் கல்வி நம் பெண்மக்களுக்கு அவசியமா, நன்மை யளிக்குமா என்பதைப்பற்றிப் புரட்டாசிமீ சஞ்சிகையின் ஆரம்பத்தில் "ஆனந்தன்" பத்திரிகாசிரியர் வரைந்துள்ளதை வாசித்துக் கவனிக்கும் படிக்கு உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

**நாகரீகம்.**—சகோதரிகளே; உங்களில் அனேகர் நம் முன்னோரது பூர்வீக ஆசாரங்களை யலட்சியம் செய்து, மேல்நாட்டு ஆசாரங்களில் உங்கள் பெண்மக்களைப் பழக்குகிறீர்கள். இதனால் எத்தகைய கெடுதி விளையு மென்பதை நீங்கள் எள்ளளவும் சிந்திக்காமலே, அப்படிச் செய்வதுதான் நாகரீகத்தில் சீர்திருத்தம் என்று கருதுகிறீர்கள். மேல்நாட்டாரிடமுள்ள குணங்களில் மேலானவைகளையும், நமக்கு நன்மை யளிக்கத் தக்கவைகளையும் அடியோடு விட்டுவிட்டு, கண் மூடித்தனமாக வெளி வேடங்களில் அவர்களுடைய ஆசாரங்களைப் பின்பற்றுவதால் ஒருபோதும் நாம் நன்மையடைய மாட்டோம் என்று நம் க்ஷேமத்தைக் கருதும் மேதாவிகளாகிய அனேகம் பெரியோர் கூறுகிறார்கள்.

நமது பெண்மக்களுக்கு நமது ஜாதி ஆசாரப்படி அலங்காரம் செய்வதையும், ஆடை யணிவதையும் விட்டு மேல்நாட்டாரைப்போல் செய்வது மிக்க கௌரவமென்று கருதி மயங்காதீர்கள். அறிவாளிகள் அதை வெறுத்து அப்படி நடப்போரை "அந்தோ! இத்தகைய அறிவிலிகளால்தான் நம் நாடு கெட்டுப்போகிறது. இவர்கள் செல்வப் பெருமையால் எதையும் மதியாமல் இப்படிச் செய்கிறார்கள். இவர்களைப் பார்த்துப் பாமரராகிய ஏழைகளும் அவ்வழியே நடக்க முயல்கிறார்கள்" என்று மனவருத்த மடைகிறார்கள். முதலாவது, நம் நாட்டில் நம் முன்னோர் ஏற்படுத்திய ஆசார மனைத்தும், (மஞ்சள் பூசுவது, குங்கும மணிவது முதல்) தேக சுகத்திற்கு அவசியமான சுகாதாரத்தையும், இகலோக பரலோக நன்மைகளையும் அனுசரித்து ஏற்படுத்தப் பட்டவையாகும். அவற்றை யலட்சியம் செய்வதால் அவற்றால் அடையக்கூடிய நன்மைகளை யிழந்து விடுகிறீர்கள். மேல்நாட்டு நாகரீகம் நமக்கு முற்றும் அனாவசியமானது. முதலாவது, அதனால் வீண் செலவு நேரிடுகிறது. அதைப் பின்பற்றுவதால் உடனே கெடுதி புலப்படாவிடினும் வரவர அதனால் நம் சந்ததியாருக்குப் பெருந் தீங்கே விளையு மென்பது உண்மை. மேல்நாட்டார் பாதம் முழுமையும் (இன்னும் முழங்கால் வரையிலுங்கூட) மூடப்படும் வண்ணம் பாதரட்சை யணிந்து கொள்கிறார்கள். அவர்களது பனி பூமிக்கு அவ்வாறணிய வேண்டிய தவசியம். இன்றேல் பாதங்கள் வெடித்து, மறத்து ஆபத்தை யுண்டாக்கும். ஆகையால், அங்கு யாவருமே பூட்ஸ் என்ற பாதரட்சையைச் சதா அணிந்துகொண் டிருக்கிறார்கள். அந்த அவசியத்தால் ஆடையைப்போல் அதுவும் அவசியமாகி கோயில் முதலிய விடங்களிலுங்கூட பாதரட்சையோடு செல்வது ஆசாரமாய் விட்டது. அவர்கள் தேக முழுமையும் மறைக்கும்படி யுடை யணிவதும் சீதோஷ்ணத்தைப் பற்றியே. நமது நாடு குளிர், பனி மிகுந்த நாடல்லவாதலின் அத்தகைய ஆடையாவது, பாதரட்சையாவது வேண்டியதில்லை. நமது நாட்டிற்குத் தக்கபடி நமது உடை முதலியன அமைந்திருக்கின்றன.

இப்போது நம் நாட்டில் சிலர் பெண்பிள்ளைகளுக்கு மேஜோடு, பூட்ஸ் அணிவித்துப் பாடசாலைக் கனுப்புகிறார்கள். இது பெரிய நாகரீக மென்றும், கௌரவ மென்றுங் கருதியே இவர்கள் அப்படிச் செய்கிறார்கள். சில ஆடவர் கல்வி கற்று ஜன சமூகத்திற்கு ஊழியம் செய்ய முன்வரும் யோக்கியதை யுடையோராக விருந்தும் வயது வந்த தம் பெண்மக்களை ஆடவர் சபையில் அன்னிய புருடர்களோடு தாராளமாகப் பேசும்படி விடுகிறார்கள். அந்தோ! இது எவ்வளவு மதியீனமான செய்கை. அச்சம், மடம், நாணம் ஒழிந்தால் பிறகு மாதர்க்குரிய விசேஷ மதிப்பு எங்ஙனம் நிலைத்திருக்கும். இத்தகைய விஷயங்களில் தாய்மார்களாகிய நீங்களே கவனம் வைத்து, இவ்வழக்கங்களைக் கண்டித்து ஒழிக்கவேண்டும். இக்காலத்தில் நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்களில் இதுவே முக்கியமானது என்பதை மறவாதீர்கள். நீங்கள் இதை யலட்சியம் செய்யமாட்டீர்க ளென்று நம்புகிறேன்.

(தொடரும்.)

சீடன்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(120-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருவன்: "இந்த இடந்தானுங்கோ. நான் 3-வது மாடிமேலிருக்கும் சாளரத்தினருகில் நின்று பார்த்துக் கொண்டே யிருந்தேன். இங்கேயொருவன் பதுங்கிப் பதுங்கிச் செல்லவே என்னவென்று கவனித்தேன். சற்றுநேரத்திற்குள் வேறொரு மனிதன் கையில் சிறு பிரயாணப்பையோடு முன்னே ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டே வந்தான். இங்கேவரும்போது, முன்கூறிய மனிதன் எங்கோ பதுங்கிக்கொண்டிருந்து பூனைபோல் வந்து அவன் தலைமேல் கழியால்மோதி யடிக்கவே அவன் விழுந்துவிட்டான். அதற்குள் இன்னொருதுஷ்டன் இங்குவந்தான். இருவரும் அம்மனிதனைத் தூக்கிவந்து இச் சாலகக்கல்லைத்தூக்கி அம்மனிதனை யிதில் போட்டு மூடிவிட்டுப் போய்விட்டார்கள்." என்றான்.



அச்சமயம் ஆனந்தஸிங் நிற்க முடியாத நிலைமையி லிருக்கிறான். கால் மடிந்து போகும்போ லிருக்கிறது. கூச்சலிடலா மென்றால் சுத்தமாய் முடியவே யில்லை. அச்சமயம் சாலகத்தின் வாயில் மூடப்பட்ட கற்களின் சந்தில் ஒரு மனிதன் வந்து முகத்தை வைத்துப் பார்ப்பதுபோல் தெரிந்தது. உடனே அக்கற்கள் எடுக்கப்பட்டதும் மறுநிமிடம் ஆனந்தஸிங் வெளியில் எடுக்கப்பட்டான்.

ஆனால் உடனே மூர்ச்சை யடைந்துவிட்டான். சற்று நேரத்திற்குள் அவர்கள் செய்த உபசாரத்தால் ஸ்மரணை வந்து அவர்களுக்கு வந்தன மளித்தான். நடந்த விஷயங்களைப் பார்த்துக்கொண் டிருந்தவன் அந்தப் பாழடைந்த வீட்டின் சொந்தக்காரருடைய வேலைக்காரன். அவ்வீடு கிலமாய்க்கிடந்தமையால் நகர சங்கத்தார் அதில் யாரும் வாசம்செய்யலாகாதெனக் கட்டளையிட்டுவிட்டார்கள். எஜமானன் அதன் பின்பக்கம் இருந்த சில மரத்துண்டுகளைக் கொண்டுவரும்படி ஆளை யனுப்பினான்.

அந்த ஆள் மேல்கண்டபடி நடந்த சங்கதிகளைக் கண்டதே ஓட்டமாயோடித் தன் எஜமானிடம் கூறி அவர் கட்டளை யிட்டபடி துரிதமாய்ச் சென்று ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனை யழைத்துக்கொண்டு அங்கு வந்தான்.

ஆனந்தஸிங் சேற்றில் முழுகி யெழுந்தபடியால் அவன் உடைகளும் அவனும் மிக்க அலங்கோலமான ஸ்திதியி லிருந்தார்கள். அத்துஷ்டன் அவனை யடித்தபோது அவன் கையிலிருந்த பை கீழே விழுந்துவிட்டது. அத்துஷ்டர்கள் ஓடிப்போகும் அவசரத்தில் அதைப் பார்க்கக்கூடவில்லை. அதில் அவனுடைய மாறுவேட உடை யிருந்தது. வேலைக்காரன் உதவியால் ஆனந்தஸிங் தேகத்தைச் சுத்தி செய்துகொண்டு வேறு உடை யணிந்துகொண்டான்.

போலீஸ் உத்தியோகஸ்தன், உன்னைக் கொல்ல முயன்ற அத்துஷ்டர் யார் என்று விசாரித்தபோது ஆனந்தஸிங் தன் துப்பறியும் குறியாகிய பதக்கத்தை யெடுத்துக் காட்டியதே அவன் இவனுக்கு மரியாதை செய்து வணக்கத்தோடு நின்றான்.

ஆனந்தஸிங் அவனுக்குக் கூறவேண்டியவற்றை மட்டும் கூறி இந்தச் சங்கதி நடந்தபடி உண்மை வெளிவரலாகாது. ஆகையால் இச்சங்கதி ஒருவருக்கும் கூறப்படலாகாதென்று கூறிவிட்டு, அந்த ஆளுக்கும் திட்டம் செய்து அவனுக்குத் தக்க பரிசு மளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு ஜாக்கிரதையாய் ஒரு ஹோட்டலுக்குச் சென்று நவீனபுரிக்கு இரயில் எப்போது புறப்படுகிறதென்று பார்த்தான். அன்று ஒரே வண்டி மெயில் வண்டி அமலாபுரத்திலிருந்து புறப்பட்டு மேலையூரில் மட்டுமே நின்று நேராய்

நவீனபுரம் செல்வது மாலை ஐந்து மணிக்கு வருகிறதென்று தெரிந்தது. அதுவரையில் தங்கியிருக்க வேண்டுமென்று கொஞ்சம் ஆகாரம் எடுத்துக் கொண்டு சயனித்துக் கொண்டான்.

ஆனந்தலிங் நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டபோது மணி பிற்பகல் மூன்றிருக்கும். படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை. காலையில் பட்ட அடியாலும், கஷ்டத்தாலும் அவன் தேகம் வியாதியுற்றுச் சுரம் கண்டுவிட்டது. சுமார் இரண்டு வாரம் அவன் படுக்கையிலேயே கிடக்க நேர்ந்தது. சற்று சௌக்கியமான பின்பு ஒருநாள் காலை தினசரி பத்திரிகையை வாசிக்கக் கையிலெடுத்தான். அதில் முதல் பக்கத்தில் காணப்பட்ட ஒரு விஷயம் அவனைத் திடுக்கிட்டுத் துள்ளி யெழுந்திருக்கச் செய்தது. அதன் தலைப்பில் பெரிய எழுத்தில் "இன்னொரு அதிசயமான இரயில் பாதை தபால் களவு" என்று இருந்தது. பின்னால் அடியிற் கண்ட விஷயம் இருந்தது:—

"மிக்க மர்மமா யிருந்த தபால் கொள்ளை கண்டு பிடிக்கப்பட்டது. தபால் இலிகிதர்களில் இதுகாறும் கௌரவமாய்க் கருதப்பட்ட அம்பலவாணன் என்னும் இலிகிதன் கைது செய்யப்பட் டிருக்கிறான். தபால் ஏஜெண்ட் சாமிநாதம் பிள்ளையின் உளவால் மேற்படி இலிகிதன்வீடு சோதனை செய்யப்பட்டபோது அவன் வீட்டில் களவுபோன தபால்பை அகப்பட்டது. அவன் சிறை செய்யப்பட் டிருக்கிறான்."

இதைக் கண்டு, ஆனந்தலிங் அதை உன்னிப்பாய் நாலைந்து தரம் வாசித்துப் பார்த்துச் சற்றுநேரம் யோசனை செய்தான். அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது.

"ஹா! கடவுள் மிக்க தயவோடு உதவி செய்கிறார். இந்த மூலகாரணமான உளவைக் காட்டியது அவருடைய அன்பான கருணையே. இப்போது யாவும் கண்ணாடிபோல் வெளிச்சமாய்த் தெரிகிறது. இது சாமிநாதன் செய்கையே. அந்தத் தபால் இலிகிதனாகிய அம்பலவாணன் பாபம் சுத்த நிரபராதியே, நான் அவனை யெப்படியேனும் காப்பாற்றுவேன்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

ஆனந்தலிங் உடனே அடுத்த வண்டியில் புறப்பட்டு மேலையூர் போய்ச் சேர்ந்தான். அங்கு இருக்கும் பிரதானமான ஹோட்டலில் போய் இறங்கியதே முதல் முதல் அவன் கண்ட ஆள் இரங்கநாதனே. ஆனந்தலிங் அணிந்திருந்த மாறு உடையால் இரங்கநாதன் அவனை யறிந்து கொள்ளவில்லை. சற்றுநேரம் கழிந்து ஆனந்தலிங்கை யுராய்ந்துகொண்டு வெளியிற் சென்றான். அவன் செல்லும்போது அவனிடமிருந்து ஒரு துண்டுக் கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. ஆனந்தலிங் அதைப் பார்த்திருந்து யாரும் காணாத சமயம் பார்த்து அதை யெடுத்துக்கொண்டு தீபத்தினருகிற் சென்று பார்த்தான். அதிற் கீழ்க் கண்டபடி எழுதி யிருந்தது:—

"இரங்கநாதம் பிள்ளைக்கு;—அரசஞ்சோலை திருப்பம் - வெள்ளி இரவு 11 மணி - கைகள் அங்கிருக்கும்"

இதைக் கண்டதே ஆனந்தலிங்குக்கு யாவும் நன்றாய் விளங்கிவிட்டது. அதாவது, "இந்த மெயில் தபால் கொள்ளை யடிக்கிற கூட்டம் ஒன்றிருக்கிறது, பெரும்பாலும் இந்த இரங்கநாதன் அதன் தலைவனா யிருக்க வேண்டும். அல்லது அதிற் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான ஆசாமியா யிருக்க வேண்டும். வெள்ளிக்கிழமை யிரவு ஏதுவோ விசேடம் நடக்கப்போகிறது" என்று தெரிந்து கொண்டான்.



இதற்கென்ன செய்வது? அரசஞ்சோலை திருப்பம் என்பது எங்கிருக்கிறது? அது தனக்குத் தெரியவில்லை. ஆகையால் "அன்றைய தினம் இரங்கநாதனை ஒரு வினாடிகூட நமது கண் பார்வையிலிருந்து தப்ப விடலாகாது. அவன் எப்படியாயினும் அன்று குறித்த வேளைக்கு அத்திருப்பத்திற்குச் செல்வான்" என்று தீர்மானித்துக் கொண்டான். ஆயினும் அதற்கிடையில் சிறையிலிருக்கும் அந்தத் தபாலாபீஸ் இலிகிதனைக் காணவேண்டுமென்றும் அவன் மூலமாய் நமக்கு அனுகூலமான உளவுகள் ஏதேனும் கிடைக்கும் என்றும் சிந்தித்துக் கொண்டான். (தொடரும்.)

—— ஆரணி-குப்புசாமி முதலியார்.

## பொது விஷயங்கள்.

**ஹிமாலயத்தில் மஹான்கள்.**—எவரஸ்டு சிகரத்தைக் கண்டு பிடிக்கச் சென்ற கூட்டத் தலைவராகிய வீரர் ஹோவார்டு ப்யூரி என்பவர் ஹிமய மலையின் சுற்றுப் பிரதேசங்களைப் பற்றி தன்னுடைய தபாலில் எழுதுகிறார். அங்கே தங்களில் தொத்தி ஏறின ஒரு கூட்டத்தார்கள் ஒரு மடத்தைக் கண்டார்களாம். மலைப் புறங்களில் விரவிக் காணப் பெறும் சில பொந்துகளிலும், குகைகளிலும், உலகத்திலேயே சம்பந்தப் படாத சில துறவிகளும், சந்நியாசிகளும் வசிக்கிறார்களாம். அதில் உண்மையாய் வர்ணித்திருக்கிற பிரகாரம் அவர்கள் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும் அதன் வாசனை அறியார்கள். ரஸமாயும் அதியாச்சரியமாயு மிருக்கும் ஒரு பாகத்தில் வீரர் ப்யூரி எவரஸ்டு சிகரத்தின் பக்கத்திலுள்ள பிரதேசங்களின் கம்பீரத் தோற்றத்தையும் அங்கு செல்லும் கஷ்டங்களையும் விவரிக்கிறார். 16,500 அடிக்குமேல் உயரமுள்ள ரங்பக் என்னும் பள்ளத்தாக்கில் அதைச் சுற்றிலுமுள்ள மலைகளின் குகைகளில் தனித் தனியாய் வாசம் செய்யும்படியான சுமார் 400 சந்நியாசி ஸ்திரீகளையும் புருஷர்களையும் கண்டாராம். இவ்விடத்தில் உலக சமாச்சாரங்கள் அணுகுவதே கிடையாது. உன்னதமான எவரஸ்டு சிகரத்தின் நிழலில் ஆனந்தமான ஏகாந்த வாசம் செய்கிறார்கள். காட்டுப் பறவைகள் எல்லாம் மனிதர்களைக் கண்டால் பயப்படுவதாய்க் காணோம்.

**பழச் செடிகள்.**—நம் நாட்டினர் பழச் செடிகளைப் பயிர் செய்கையில் ஒவ்வொரு செடிக்கும் இடையில் போதுமான இடம் விட்டு நடுவதில்லை. ஆதலால், அவை சரியான பலனளிப்பதில்லை. புதிதாக வெளியான ஒரு தோட்டப் பயிரிடும் சாத்திரத்தில் இன்னின்ன செடிகளுக்கு இடையில் இவ்வளவு இவ்வளவு இடம் விடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு:—

| மரம். | | அடிகள். |
|---|---|---|
| மா | ... | 30 |
| பப்பிளி | ... | 10 |
| வாழை | ... | 12 |
| கொய்யா | ... | 20 |
| மாதுளை | ... | 15 |
| தென்னை | ... | 25 |
| பலா | ... | 30 |
| கிச்சிலி | ... | 30 |

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதி௵ கார்த்திகை௴—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921௵ நவம்பர்௴ டிசம்பர்௴

| கார்த்திகை | நவம்பர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | செ | ○32-25 | பர-17-6 | சித்-60 | கரிநாள், கிரேதாயுகாந்த |
| 2 | 16 | புத | பிர29-42 | கிரு-16-22 | அ16-22சி | பிரயாணம் ஆகாது |
| 3 | 17 | வியா | து25-55 | ரோ-14-34 | மர-60 | சாதுர்மாஸ்யதுவிதியா |
| 4 | 18 | வெ | திரி21-18 | மிரு-11-46 | சித்-60 | குடிபுக, காதுகுத்த |
| 5 | 19 | சனி | சது16-15 | திரு-8-28 | சித்-60 | ஆயுதம் பயிற்ற |
| 6 | 20 | ஞா | பஞ்10-48 | புன-4-51 | சித்-60 | கிரகப்பிரவேசம் |
| 7 | 21 | திங் | சஷ்5-23 | பூச-1-5<br>ஆயி-57-20 | சித்-60 | நவக்கிரகசாந்தி செய்ய |
| 8 | 22 | செ | சப்0-3<br>அ54-50 | மக-54-0 | சித்-60 | காலபைரவஜயந்தி |
| 9 | 23 | புத | நவ49-50 | பூர-51-3 | அமி-60 | ஆயுதப்பிரயோகம் செய் |
| 10 | 24 | வியா | தச45-30 | உத்-48-5 | மர48-5சி | கரிநாள் [ய |
| 11 | 25 | வெ | ஏக41-22 | அஸ்-45-44 | அ45-44சி | விதைவிதைக்க [பட்டது |
| 12 | 26 | சனி | துவ37-53 | சித்-43-52 | ம43-52சி | பிரயாணத்திற்கு விலக்க |
| 13 | 27 | ஞா | திர34-55 | சுவா-42-40 | சி42-40ம | கிரகபிரவேசம் [பட்டது |
| 14 | 28 | திங் | சது32-53 | விசா-42-15 | ம42-15ம | பிரயாணத்திற்கு விலக்க |
| 15 | 29 | செ | ●31-35 | அனு-42-48 | சி42-48ம | அமாவாசை தர்ப்பணம் |
| 16 | 30 | புத | பிர31-35 | கேட்44-33 | சி44-33ம | குளேபோட |
| 17 | 1 | வியா | து32-45 | மூல-47-33 | சித்-60 | |
| 18 | 2 | வெ | திரி35-37 | பூரா-51-52 | பி51-52சி | |
| 19 | 3 | சனி | சது39-47 | உத்-57-30 | சித்-60 | |
| 20 | 4 | ஞா | பஞ்45-7 | திரு-60-0 | அமி-60 | |
| 21 | 5 | திங் | சஷ்51-18 | திரு-4-18 | அ4-18சி | |
| 22 | 6 | செ | சப்57-53 | அவி-11-45 | சி11-45ம | |
| 23 | 7 | புத | அஷ்60-0 | சதை-19-16 | சி19-16அ | |
| 24 | 8 | வியா | அஷ்4-8 | பூரட்-26-33 | சித்-60 | |
| 25 | 9 | வெ | நவ9-25 | உத்-32-34 | சித்-60 | |
| 26 | 10 | சனி | தச13-18 | ரேவ-37-3 | பிர37-3சி | மோக்ஷதா ஏகாதசி |
| 27 | 11 | ஞா | ஏக15-23 | அசு-39-42 | சி39-24பி | மச்சதுவாதசி |
| 28 | 12 | திங் | து15-25 | பர-40-25 | சி40-25ம | பிரதோஷம், அநுமத் விரதம் |
| 29 | 13 | செ | திர13-25 | கிரு-39-18 | சி39-18அ | அண்ணுமலையார் தீபம் |
| 30 | 14 | புத | சது9-45 | ரோ-36-31 | சித்-60 | உபநயனம் செய்ய |

(நவம்பர் column, rows 17–30: 1921௵ டிசம்பர்)

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 17௳ வி-பு<br>17, விரு-சு<br>30,, து-செ | | |
| | | | |
| | சூரி | சுக்<br>புத | ரா-ச<br>குரு<br>செ |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

10 JAN 1922

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதி௵ கார்த்திகை௴ கட
1921௵ நவம்பர்௴ 15௳ { பகுதி 5

## கடவுள் வணக்கம்.

ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி
யாங்கார முளையை யெற்றி
அத்துவித மதமாகி மதமாறு மாறாக
வங்கையின் விலாழி யாக்கிப்
பாசவிரு டன்னிழ லெனச்சுளித் தார்த்துமேற்
பார்த்துப் பரந்த மனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயை நூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக்கு ளேய டங்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
றிருவருட் பூர்த்தி யான
வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகஜ மென வளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

வொளியான நீயென் மனவெளி யூடு விரவினையா
வெளியாருங் கண்ணு மிரவியும் போனின் றுலாவுவன்கா
ணளியாருங் கொன்றைச் சடையாட வம்புலி யாடக்கங்கைத்
துளியாட மன்று ணடமாடு முக்கட் சுடர்க்கொழுந்தே.

கொழுந்தா துறைமலர்க் கோதையர் மோகக் குரைகடலி
லழுந்தாத வண்ணநின் பாதப் புணைதந் தருள்வதென்றோ
வெழுந்தா தரவுசெ யெம்பெருமானென் றிறைஞ்சி விண்ணோர்
தொழுந்தாதை யேவெண் பொடிபூத்த மேனிச் சுகப்பொருளே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ கார்த்திகைமீ கஉ

## ஓர் அதிசய நாடு.

சச்சிதானந்தப் பரம்பொருளாகிய பகவானால் படைக்கப்பட்ட இப்பூமண்டலத்தில் அனேக நாடுகளுள வென்பது யாவரு மறிந்த விஷயமே. அந்த நாடுகளி லெல்லாவற்றிலும் ஒரு நாட்டில்தான் இப்போது நாம் கூறப்போகும் அனேக அதிசயங்க ளிருக்கின்றன.

இவ்வுலகிலுள்ள எல்லா வஸ்துக்களும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களி லடங்கியிருக்கின்றன. இந்த ஐந்திலும் முதன்மையானவைகளும், விசேஷமானவைகளும் இந்த நாட்டிலேதா னிருக்கின்றன. இவற்றில் முதலாவது பிருதிவியை யெடுத்துக் கொள்வோம்.

பூமியில் சத்துவ பதார்த்தங்களாகிய சம்பாநெல், வாழை, கமுகு, தென்னை இவைகளும், மா, பலா, மல்லிகை, முல்லை முதலியவைகளும் உற்பத்தியாகிற பூமியே உத்தமமான சத்துவ பூமி யெனப்படும். இவை யாவும் இந்த நாட்டில் விளைகின்றன. மேலும் மருதம், முல்லை, குறிஞ்சி நெய்தல் முதலிய நால்வகை நிலங்களும் இந்நாட்டிலுள்ளன. நிலவள நீர்வளத்தில், காலால் மடைதள்ளி நீர் பாய்ச்சக்கூடிய வளப்பமுடையது இந்நாடு. பஞ்சலோகங்களும், நவரத்தினங்களும் உற்பத்தியாவது. உலகத்திலுள்ள எல்லா மலைகளிலும் பிரம்மாண்டமானதும், உலகில் வேறெங்குமில்லாத அதிசயக் காட்சிகளை யுடையதும், இதுகாறும் மனிதர் சிகரமட்டும் ஏற முடியாததுமான மலை இந்நாட்டில்தா னிருக்கிறது. சுருக்கமாகக் கூறுமிடத்து மனித வர்க்கம் நாகரீகத்தோடும், சுகத்தோடும் வாழ்வதற்கு அவசியமான பொருள்கள் யாவும் இந்நாட்டில் உண்டாகின்றன. இந்த விஷயங்களில் இதற்குச் சமானமானதும், உயர்வானதுமான நாடு உலகில் வேறொன்றுமில்லை யென்பது உண்மை.



2. அப்பு.—அதாவது ஜலம். இந்நாட்டில் மிக்க பரிசுத்தமானதும், தெய்வீகம் பொருந்தினதும், உலோகச்சத்து சேர்வதால் பெருவியாதி முதலிய கொடிய வியாதிகளையும் நீக்கக் கூடியதுமான ஜீவநதிகளும், ஆறுகளும் பல விருக்கின்றன.

3. தேயு.—(அக்னி) இந்த நாட்டில் அக்னியினுடைய விசேஷ குணங்கள் யாவும் உணரப்பட்டுப் பூசிக்கப்படுவதோடு, கடற்கரையில் தீபஸ்தம்பத்தின் உச்சியில் வைக்கப்பட்ட தீபம் கடலில் வரும் கப்பல்களுக்கு எப்படி க்ஷேமமாக இறங்கத்தக்க கரையைக் காட்டுகிறதோ அதுபோல், இந்நாட்டில் ஒரு புண்ணிய க்ஷேத்திரத்திலுள்ள குன்றின்மேல் ஏற்றப்படும் தீபம் ஆன்மாக்கள் பிறப்பிறப்பாகிய கடலிலிருந்து முத்தியாகிய கரையைச்சேர வழிகாட்டியா யிருக்கிறது.

4. வாயு.—இந்நாட்டில் தக்ஷிணத்திலுள்ள ஒரு மலையிலிருந்து வீசும் காற்று, அம்மலையிலுள்ள அரிய சஞ்சீவி மூலிகைகளினின்றும் வருவதால் மனிதர்களுக்குத் தேகாரோக்கியத்தை யளிப்பதோடு அனேக வியாதிகளை நீக்கும் குணமுடையதாகவு மிருக்கிறது. மனிதர் பொறுக்கமுடியாத குளிர்காற்றாவது, மனிதரைக் கொல்லும் தீக்காற்றாவது, மனிதரைப் பூமியில் மோதியடித்துக் கொல்லும் கொடுங்காற்றாவது இங்கில்லை.

5. ஆகாயம்.—மேல்நாட்டார் நான்கு பூதங்களே யுண்டு; ஆகாய மென்பது ஒரு பூதமல்ல என்ற கொள்கையுடையோர். ஆயினும் நான்கு பூதங்களுக்கும் காரண பூதமாயுள்ள அதிசூக்குமப் பொருள் ஒன்று உண்டென்று இப்போது மேல்நாட்டுச் சாத்திர நிபுணர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் இந்த நாட்டாரின் முன்னோர் அனாதிகாலந் தொட்டே யிதை யறிந்திருக்கிறார்கள். இதற்கே ஆகாயமெனப் பெயர்.

ஆகாயம் எங்கும் ஒரேவிதமாக இருக்க இந்த நாட்டில் அதற்கென்ன விசேஷ முண்டென்று கருதலாகும். மனிதனுடைய அந்தக்கரணங்களில் ஒன்றாகிய உள்ளம் என்பது சத்துவகுணம் வாய்ந்த பரிசுத்த ஆகாயம் போன்றது. இதில்தான் ஆண்டவன் நடனம் புரிகிறார் என்று நூல்களிற் கூறப்பட்டிருக்கிறது. இதற்குச் சிதாகாசம் (சித்+ஆகாசம்) என்று பெயர். இந்நாட்டிலுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தில் இச்சிதாகாயத்தின் அறிகுறியாகப் பூதாகாயம்

காட்டப்பட்டு ஜனங்களால் அதில் நடிக்கும் பகவானுக்காகப் பூசிக்கப்படுகிறது. இது வெளியில் நீ காண்கிறபடி உன் உள்ளமாகிய ஆகாயத்தில் பகவான் நடனத்தைக் காண் என்று உயர்வான தனது ஞானமார்க்கத்தை அறிவுறுத்துகிறது. இது மதாதீனமான கொள்கை யாகையால் எச்சமயத்திற்கும் ஒத்ததாகும். இவ்வாறு பஞ்ச பூதங்களினும் விசேஷமுடையது இந்நாடு.

சீதோஷ்ணம்:—சீதோஷ்ணத்திலும் இந்நாடு சிறந்ததே. கால் தரையில் பட்டால் வெளுத்து மரத்துப்போகச் செய்து ஜனங்களைக் கொல்லத்தக்க குளிரும், வெளுத்த தேகமும், செம்பட்ட உரோமமும், பூனைக்கண்ணுமுடைய ஜனங்கள் ஜனிப்பனவும், உறை பனியுடையனவுமான மேல்நாடுகளைப் போன்றதுமல்ல. நெருப்பினால் தீய்க்கப்பட்டதுபோன்ற சிறிய சுருண்ட உரோமமும், பயங்கரமான கரியதேகமும் உடைய ஜனங்கள் உற்பத்தியாவதும், தேகத்தில் உடையணிய விரும்பக்கூடாத அவ்வளவு உஷ்ணமுடையதுமான ஆப்ரிகா முதலிய நாடுகளைப் போன்றதுமல்ல. சமமான சீதோஷ்ண முடையது; உஷ்ணதேசம், குளிர்தேசம் இரண்டிலும் உற்பத்தியாகும் பதார்த்தங்களும், தானியங்களும் உண்டாகக் கூடியது.

நாகரீகமாக வாழும் ஜனங்களுக்கு அவசியமாக வேண்டிய பொருள் என்னென்ன வுண்டோ அவை யாவும் உற்பத்தியாவது. இத்தேசத்தார் எதிலும் அன்னிய நாட்டாரிடமிருந்து எப்பொருளையும் எதிர்பாராமலே சுகமாய் வாழலாகும். மனித வாழ்க்கைக்கு அவசியமான மிருகங்களனைத்தும், பட்சிகளனைத்தும் இந்த நாட்டிலுண்டு. உலகில் நாகரீகம் ஜனித்தது இந்நாட்டிலேயே. அநாதிமுதல் மெய்ஞ்ஞானம் பிரகாசித்துக்கொண் டிருப்பது இந்நாட்டிலேயே. உலகத்திற்குச் சகல கலைக்கியானங்களையும் போதித்தது இந்நாடே. உலகை வசப்படுத்தி உலகோர்க்குத் தெய்வ பக்தியையும், மெய்ஞ்ஞானத்தையும் போதிக்க எண்ணிறந்த மகாத்மாக்கள் அவதாரம் செய்ததும், செய்துகொண் டிருப்பதுமாகிய புண்ணியபூமி யிதுவே. உலகிலுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும் தெய்வ சிந்தனையும், தெய்வ பக்தியும், சீவகாருண்யம், தருமம் முதலியவைகளும் மலிந்துள்ளது இப்பூமியே. உலகபோகங்க ளெல்லாம் அநித்தியமெனக் கண்டு வெறுத்து ஆண்டவன் ஒருவனிடம் மட்டுமே பற்றுடையவர்களாய், மற்ற யாவற்றையும் தம் தேகத்தைக்கூட மறந்து, இந்த அழி



யும் தேகத்திலிருக்கும்போதே மோக்ஷமென்னும் பேரின்ப நிலையை அனுபவிக்கும் மகான்களை இந்நாட்டில் மட்டுமே எப்போதும் காணலாம். இந்நாட்டின் வட எல்லையாகவும், ஒருவரும் ஜெயிக்கமுடியாத காவலனாகவும் ஓர் ஒப்புயர்வற்ற மலை யிருக்கிறது. அம்மலையில் உலகில் மற்ற எங்குமில்லாத பல அதிசயங்களைக் காணலாம். முக்கியமாய்ப் பேரின்பத்தை யனுபவித்துக்கொண் டிருப்போரும், அஷ்டமாசித்திகள் கைவந்தோருமாகிய மகான்களின் கூட்டங்களைக் காணலாம். இவர்கள் கால அமைப்பிற்குத் தக்கபடி அந்நாட்டின் க்ஷேமத்திற்கும், தெய்வீகம் பொருந்திய மெய்ஞ்ஞான மதத்திற்கும் காவலாளிகளாக விருக்கின்றனர். இவர்களில் நீண்ட ஆயுள் உடையோர்களு முளர். இவர்கள் யாவரும் ஆத்ம சக்தியில் முதன்மை பெற்றோர்.

மதம்:—உலகில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஜனங்களில் அந்தஸ்து, செல்வம், தொழில் முதலியவற்றால் பல பிரிவுகளிருப்பினும் ஒரே ஜாதி, ஒரே மதம் (மதத்திலும் உட்பிரிவுகளில்லாமலில்லை) என்றுவது கூறிக்கொள்ளுகிறார்கள். இந்நாட்டிலோ பொதுவாக நான்கு ஜாதிகளாயினும் உட்பிரிவுகளால் பல ஜாதிகளாக விருக்கிறார்கள். இங்கு மதங்களும் பலவே ஆயினும், இந்த நாட்டு மக்களின் மதம் பலவகைகளில் சிறப்புடையது.

1-வது—இம்மதம் அநாதியானது.

2-வது—உலகில் இப்போதுள்ளனவும், இனி உண்டாகக் கூடியனவுமாகிய எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரத்தை யிம்மதத்தில் காணலாம்.

3-வது—எல்லா மதங்களின் சாராம்சங்களும் இதில் இருக்கின்றன.

4-வது—"எல்லா சீவராசிகளும் ஒரே யிடத்திலிருந்து வந்தன. மறுபடி அந்த ஒரே யிடத்தில் போய்த்தான் சேரவேண்டும். எல்லா மதங்களும் அந்த இடத்திற்குப் போய்ச் சேரவே வழி காட்டுகின்றன. ஒவ்வொரு மதமும் அந்த ஒரே யேணியின் ஒவ்வொரு படிபோன்றதே. எந்த மதத்தில் பிறந்தாலும் அம்மதத்தின் நெறிப்படி நடப்பவன் படிப்படியாய் மேலேறிச் சென்று முடிவில் அந்த விடத்தைச் சேர்வான்" என்ற பெரிய உண்மையையும், இவற்றாலும், ஒவ்வொரு மதமும் கடவுள் அருள் பெற்றவர்களாலேயே

அந்தந்தக் காலத்திற்கும், இடத்திற்கும் தக்கபடி ஸ்தாபிக்கப்பட்டதாலும், எல்லா மதங்களாலும் பாதிக்கப்படுகிற கடவுள் ஒருவரேயாதலாலும், எந்த மதத்தையும் துவேஷிக்கலாகாதென்ற பெரிய நீதியையும் இம்மதம் போதிக்கிறது.

5-வது—நாமரூபமற்ற கடவுள்மேல் மனதை நாட்டி அவரையடையும் நெறியிற் செல்வது எல்லாருக்கும் சுலபமாக ஆகக் கூடிய காரியமல்ல. ஏனெனில், மனிதரின் அறிவு விளக்கத்தில் பலதாரதம்மியங்க ளிருக்கின்றன. ஒவ்வொருவரும் படிப்படியாய் மேலேறும்படி அவரவர்கள் அறிவின் நிலைமைக்குத்தக்க மார்க்கங்கள் இம்மதத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

6-வது—இம்மதத்தில் கூறப்பட்டுள்ள முத்தி நிலை இச்சன்மத்திலேயே இத்தேகத்தி லிருக்கும்போதே பிரத்தியட்சமாக வடைந்தனுபவிக்கக் கூடியது.

இவை யாவும் சற்றேறக்குறைய இந்நாட்டில் இயற்கையாக அமைந்துள்ள விசேஷங்களாகும். இனி கால வித்தியாசத்தால் இங்கு நிகழும் அதிசயங்கள் பல.

1. எல்லா நாடுகளும் பூர்வீகத்தில் அநாகரிகமான நிலைமையிலிருந்து வர வர நாகரீகம், செல்வம், கீர்த்தி, செல்வாக்கு யாவற்றிலும் மேலோங்கிக்கொண்டு வருகின்றன.

இந்நாடோ அநாதி முதல் நாகரீகம், செல்வம், கல்வி யாவற்றிலும் எல்லா நாடுகளை விடவும் உன்னத நிலையிலிருந்து வர வரச் சிரத்தையற்று, அந்நிய நாட்டார் மயக்கில் சிக்கி, வெளியாடம்பரங்களுக்கும், பகட்டுக்கும் ஆசை வைத்துச் சுயமதிப்பையும், கௌரவத்தையும் இழந்து தன் காலுக்குத் தானே தளைபூண்டு துன்பத்திலும், இக்கட்டுகளிலும், தரித்திரத்திலும் தலைமை பெற்றதாகி இப்போதுதான் மயக்கம் சற்று தெளிந்து கண்களைத் துடைத்துக் கொண்டிருக்கிறது. உலகில் எல்லா நாட்டாரும் தங்கள் முன்னோர்களின் ஆசாரங்களைக் கௌரவத்தோடு போற்றிக் கைவிடாதிருக்கிறார்கள். அப்படி அன்னியர் ஆசாரங்களில் எதையேனும் பின்பற்றுவதாயின் அதைத் தீர ஆலோசித்துத் தங்களுக்கு அது அவசியமானதாகவும் பயனளிக்கத்தக்கதாகவு மிருந்தால்தான் அதைப் பின்பற்றுவார்கள்.



2. இந்த நாட்டாரோ அன்னியர் ஆசாரங்களால் தங்களுக்குண்டாகத்தக்க தீங்கையும், நஷ்டத்தையும், அதன் அனாவசியத்தையும், நம் தேச மதாசாரங்களை நாம் அலட்சியம் செய்வதால் அன்னியர் நம்மை இகழ்ந்து அகௌரவமாகக் கருதுகிறார்களே யென்பதையும், ஒன்றையுமே கருதாமல், கண்மூடித்தனமாய் அன்னியர் ஆசாரங்களைப் பின்பற்றி இதுவே மிக்க நாகரீக சீர்திருத்தம் என்று கருதுகிறார்கள். மேல்நாட்டான் ஒருவன் சிரசின் ஒருபக்க மீசையை யெடுத்துவிட்டு வருவதைக் கண்டால் ஓகோ இது புதுச் சீர்திருத்தம் என்று உடனே க்ஷவரகனைத் தேடுவார்கள்; அல்லது தாங்களேகூட கத்திகொண்டு ஒரு பக்க மீசையை யெடுத்துவிடுவார்கள். அத்தகைய நாகரீக மயக்கம் இந்நாட்டாரில் அநேகர் மண்டைவரையில் ஏறியிருப்பது இவர்கள் நாடு செய்த பாபமோ, முன்னோர்செய்த பாபமோ, தெரியவில்லை.

எவ்வளவோ அநுகூலங்களை யுத்தேசித்து ஏற்படுத்தியிருக்கும் உடைகளை யலட்சியம் செய்து அனாவசியமானவையும், அதிகச் செலவுடையவையுமான மேல்நாட்டார் உடைகளை யணிவார்கள்.

3. உலகில் எந்த நாட்டாரும் தங்கள் தாய்ப்பாஷையையே சிறந்ததாக மதித்து விசுவாசித்துத் தங்கள் இலௌகிக வைதீக விஷயங்களிலெல்லாம் அதையேயுபயோகிப்பார்கள்.

இவர்களோ தங்கள் தாய்ப்பாஷையை யலட்சியம் செய்து அன்னிய பாஷையைச் சிலாகித்து அப்பாஷையில் பேசுவதே கௌரவம் என்று கருதுவதில் சிங்கக்குட்டிகள். சுற்றத்தார்க்குக் கடிதம் எழுத ஆங்கிலக் கல்வி போதுமானவரை தெரியாவிட்டால் கையொப்பமாவது ஆங்கிலத்தில் போடுவதுதான் கௌரவமென்று கருதி அதைமட்டுமாவது கோணல்மாணலாக வெழுதக் கற்றுக் கொள்ளும் புத்திமான்கள் பலர் இந்நாட்டிலுளர்.

4. உலகிலுள்ள மற்ற நாட்டாரெல்லாம் சுயாதீனமான வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவற்றையே கௌரவத்தொழில்களென மதித்து அவற்றால் செல்வவந்தர்களாகிச் சிறப்புற்றால், இந்த அதிசய நாட்டார் அத்தொழில்களை அகௌரவத் தொழில்களென்று அவமதித்து அதமமாகிய சேவகாவிர்த்தியையே மிக்க கௌரவமென்று கருதி அல்லற்படுவார்கள்.

5. உலகில் எல்லா நாட்டாரும் தங்களுக்குள் அந்தஸ்து, தொழில் முதலிய வற்றில் எவ்வளவு பேதங்களிருப்பினும் தாய்நாட்டின் க்ஷேமத்தைப்பற்றிய விஷயங்களில் ஒற்றுமை பலம் என்ற உண்மையையறிந்து, தங்களுக்குள் இருக்கும் சில்லரைச் சச்சரவுகளையும், கட்சிபேதங்களையும் ஒழித்துவிட்டு ஒருமனதாய் ஒற்றுமையோடு வேலை செய்வார்கள். எதிரிகள் நம்மை வெல்ல வேண்டுமாயின் நமக்குள் கட்சிகளையுண்டாக்கி நம்மைப் பிரித்துப் பிறகு சுலபமாக அடக்கிவிடுவார்கள் என்ற உண்மையை யறிந்து ஒற்றுமையோடு வேலைசெய்கிறார்கள்.

ஆனால் நமது அதிசய நாட்டாரோ, எல்லாக் கலைக்கியானங்களும் பேசத் தெரிந்திருந்தும், ஒற்றுமையாய் ஒரு காரியத்தைச் செய்யக் கூட்டம் கூடியதே அக்கிராசனாதிபதிப் பட்டம் எனக்கு வேண்டும், அவனென்ன என்னிலும் பெரியமனிதனா என்று சச்சரவு விளைவித்து ஆரம்பத்திலேயே இரண்டு கட்சிகளாகப் புண்டு கொள்வார்கள். தாங்கள் ஒற்றுமையாக ஒரு கட்டாக விருக்க வேண்டுமென்பதை விட்டுவிட்டுத் தங்களுக்குள், கட்சிபேதங்களையுண்டாக்கிக்கொண்டு, ஒருவருக்கொருவர் தீங்குசெய்யத்தொடங்கி எதிரியின் வேலையைச் சுலபமாக்கித் தங்களுக்கும் தங்கள் இனத்தார்க்கும் அழிவைத் தேடிக்கொள்வார்கள். இவ்வாறு எதிரிகளுக்கு உதவிசெய்யும் ஜாதியாராவது தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொள்கிறவர்களாவது உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லையென்பது உண்மை

6. உலகில் எல்லா நாட்டாரும் தங்கள் தாய்நாட்டின் க்ஷேமத்தையும், தங்கள் நாட்டாரின் கஷ்டத்தையும் முதலாவதாகக் கவனித்து அந்த விஷயங்களுக்குத் தாராளமாகப் பொருளுதவியும் மற்ற உதவிகளும் செய்கிறார்கள்.

அந்தோ! இந்த நாட்டாரோ செல்வமுள்ளவர்கள், தாய்நாட்டைப் பொறுத்த விஷயங்களுக்கு ஒரு காலணா கொடுக்கவும் பிரியப்படமாட்டார்கள். அதிகார வர்க்கத்தினர்களுடைய மதிப்பைப் பெறவும், அர்த்தமில்லாத காலணா உப்பிற்கும் உதவாத, பட்டங்களைப் பெறவும் அவற்றையே பெரியகௌரவமாகக் கருதித் தாராளமாய் நூறுநூறாக அள்ளிப் போட்டி போட்டுக்கொண்டு கொடுப்பார்கள்.



7. குலத்திற்குக் கேடுவிளைவிக்கும் கோடரிக்காம்புகள் இந்நாட்டில் மிக்க மலினம்.

இப்போது நாம் கூறிய இத்தீயகுணங்களெல்லாம் பிற்காலத்தில் இந்நாட்டாரிடம் தோன்றியுள்ளவை. இவற்றால் தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் முதலியவை குறைந்துகொண்டே வந்தன. ஆயினும் தருமம், சீவகாருண்யம், உண்ட உப்பிற்கு இரண்டகம் செய்யாமை, கடவுள் பக்தி, இராஜபக்தி, ஞானம், அழியும் உலக போகங்களின் அநித்திய உணர்ச்சி முதலிய உத்தம குணங்கள் மட்டும் இன்னும் இந்நாட்டில் அழியாமலே மிகக் கஷ்டத்தோடு பதுங்கிக்கொண்டேனும் சிரஞ்சீவிகளாக விருக்கின்றன. இதுவே இந்நாட்டின் தெய்வீகத் தன்மைக்குப் பேரறிகுறியாக விருக்கிறது. இதனாலும், இம்மையிலேயே பரமாத்மாவின் அருளைப்பெற்றுச் சதா அவனோடு கலந்து பேரானந்தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும் மகான்கள் அனேகர் இந்நாட்டிலிருப்பதாலும், அத்தகையோர் இன்னும் அவதரித்துக் கொண்டேயிருப்பதாலும் இந்த நாட்டார் இனியேனும் வீண்மயக்கம் தெளிந்து ஒற்றுமையின் தன்மையை யுணர்ந்து தங்கள் தாய்நாடு தன் பூர்வீக உன்னத நிலையை யடையும் வண்ணம் தக்க முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

நேயர்களே! இவ்வளவு கூறியும் கடைசியில் நாட்டின் பெயரைக், கூறவில்லையே என்று கருதுவீர்கள். இதை வாசிப்போர்களே சுலபமாக அறிந்துகொள்வீர்களென்று நம்பியே நாம் அதைக் கூறாது விடுக்கிறோம்.

ஓம் தத் ஸத்

## தாய்ப்பாஷையி னவசியம்.

நண்பர்களே! நமது தாய்ப்பாஷை நமது இகபர சுகங்களிரண்டிற்கும் அத்தியாவசிய மென்பதைப் பற்றியும், அதைக் கட்டாய பாடமாக்காமல் இருப்பதால் நமது சந்ததியார் பெருந் தீங்கிற்குள்ளாவார்களென்றும் பன்முறை பத்திரிகைகளில் முறையிடப்பட்டும், தாய்நாட்டின் நன்மைக் குழைக்கிறோமென்று முன் வந்திருக்கும் நம்மவர்கள் அதைப்பற்றிச் சற்றும் கவலையெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஒருகால் அதன் அவசியம் அவர்களுக்குப் புலப்படவில்லையோ, அல்லது அவர்களும் சிலர் போல் தமிழைப் பற்றி அவசியமே யில்லை, ஆங்கிலந்தான் நாகரீகமும் கௌரவமுமான பாஷை யென்று கருதி யிருக்கிறார்களோ என்ற சந்தேகத்தால் மறுபடி பின் வரும் விஷயங்களை யறிவிக்க விரும்புகிறோம்.

1921ஸு ஏப்ரல்மீ 23உ வெளியான ஹிந்து பத்திரிகையில் ஸ்ரீமான் C. P. வெங்கட்டராம அய்யர், M.A., L.T., அவர்களால் வரையப்பட்ட வியாசத்தில் இருந்து கீழ்க்கண்டவற்றை வெளியிடுகிறோம்:—

## தமிழ்க் கல்வியின் பிரயோசனம்.

"தாய்ப்பாஷையின் முக்கிய பிரயோசனம் எதுவெனின், அன்னிய பாஷா ஞானம் பெறுவதற்கு ஒரு பலம் பொருந்திய அஸ்திவாரமாக உபயோகப்படுவதேயாகும். தன் தாய்ப்பாஷையில் போதுமான விற்பத்தியின்றி, ஒரு கல்விமான் தன் குழந்தைப் பருவமுதல் தன் வாழ்நாட்களில் நெருக்கமாகச் சம்பந்தப்பட்ட அனேக வஸ்துக்களைப்பற்றித் தெளிவாகச் சம்பாஷிப்பதில், தன் பாஷையை யுபயோகிக்கச் சக்தியுடையவனாக விருக்கமாட்டான். காவியங்களுக் கெல்லாம் இதுவே யுடலும், உயிரும் போன்றது. இந்த ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி யடையாதவன் உண்மையான கல்வி கற்றவனாகக் கருதப்படமாட்டான். ஆங்கில பாஷா ஞானத்தைச் சரிவரப் பெறுவதற்குத் தாய்ப்பாஷை ஒரு அஸ்திவாரம்போல் உபயோகப்பட வேண்டுமாயின், தாய்ப்பாஷையின் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் கற்கவேண்டியது கட்டாயம் என்று கூறலாம். ஆங்கிலம் கற்கும் இந்தியன் தன் தாய்ப்பாஷை யிலக்கணத்திலும், வார்த்தைகளின் உபயோகத்திலும் பயிற்சியடைந்திருக்க வேண்டியது இன்றியமையாத அவசியமாகும். மனப்பயிற்சி யடைவதற்குத் தாய்ப்பாஷையே மிக்கசுலபமான கருவியாகும். எந்தப் பாஷையிலும் விற்பத்தி யடைவதற்கு அப்பாஷையிலுள்ள வார்த்தைகளைத் திருத்தமாக உச்சரிக்கவும், அப்பாஷையிலுள்ள இலக்கணவேறுபாடுகளையும், வார்த்தைகளின் சூசனைகளையும் கற்கவேண்டியது முக்கிய அம்சங்களாகும். முதலாவது, வார்த்தைகளை யுச்சரிப்பதில், உதடு, பல், நாக்கு, சுவாசக்குழல் முதலிய அங்கங்கள் உபயோகமாகின்றன. ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளைக் கற்பதாயின் புதுமாதிரியான உச்சரிப்புகளில் பழகவேண்டும். இதில் ஒரு பாஷைக்கும், மற்றொரு பாஷைக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. அன்னிய பாஷையைக் கற்கும்போது மாணவன் தன் தாய்ப்பாஷையில் கற்ற உச்சரிப்புகளைவிட வேறு நூதனவிதமான உச்சரிப்புகளில் பழகவேண்டியதாகும். பிள்ளைகள் சுலபமாக உச்சரிப்பில் பழகவேண்டுமாயின் உபாத்தியாயர் தாய்ப்பாஷையின் உச்சரிப்பிற்கும், ஆங்கிலத்தின் உச்சரிப்பிற்கும் இருக்கும் வித்தியாசங்களைப் பிள்ளைகளுக்கு நன்றாய் எடுத்துக் காட்டிப் போதிக்கவேண்டும். ஆகையால் உபாத்தியாயர் மாணவனுடைய தாய்ப்பாஷையில் பயிற்சி யுடையவராக விருந்தால்தான் பிள்ளைகளுக்கு இரண்டு பாஷைகளின் உச்சரிப்புகளையும் ஒத்திட்டுக் காட்டிக் கற்பிக்கமுடியும். ஒரே மாதிரியான எழுத்துகளுக்கு இரண்டு பாஷைகளிலும் உச்சரிப்பில் மிக்க பேதமிருக்கும். அத்தகையவைகளுக்கு உபாத்தியாயர் அந்தந்தப் பாஷையின் உச்சரிப்பை யுண்டாக்க இன்னின்ன கருவி இன்னின்ன நிலையில் நிற்க



வேண்டும், இன்னின்ன விதமா யசையவேண்டும் என்று பிள்ளைகளுக்குத் தமது யூகத்தால் பிரத்தியட்சமாகக் காட்டிப் போதிக்கவேண்டும். திருட்டாந்தமாக ஆங்கிலத்திலுள்ள N. என்ற எழுத்திற்கும் தமிழிலுள்ள ன, ந, ண என்ற எழுத்துகளுக்கும் உச்சரிப்பில் பேதமுண்டு. இப்போது தாய்ப்பாஷையில் இலக்கணமே பாடசாலைகளில் கற்பிப்பதைக் காணோம். தாய்ப்பாஷை பழக்கத்தால் தானே வந்துவிடுமென்று கருதுகிறார்கள் போலும். தாய்ப்பாஷையில் வாசகமாக ஒன்றை எழுதவேண்டியதற்கு இலக்கணம் அவசியம் வேண்டுமென்பதை இவர்கள் கவனிக்கவில்லை. அன்னிய பாஷையின் இலக்கணத்தைச் சரியாகக் கற்கவேண்டுமாயின் தாய்ப்பாஷை யிலக்கணத்தைக் கற்றிருப்பது பெரிய உதவியாகும். ஆங்கில போதனுமுறையில் தேர்ந்தவராகிய எட்ஸ் (Mr. Yates ஆங்கில இலக்கணம் எழுதியவர்) என்பவர் தாய்ப்பாஷையிலுள்ள இலக்கணத்தை யொட்டியே ஆங்கில இலக்கணம் கற்பிக்கப்படவேண்டும் என்கிறார். இந்தியமாணவர்களுக்குச் சாதாரண இங்கிலீஷ் இலக்கணங்கூட பாடசாலைகளில் கற்பிக்கப்படாமலிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கிறதென்று அவர் கூறுகிறார். ஓர் பாஷையைச் சரியாகக் கற்பதற்கும், பாஷா ஞானம் பெறுவதற்கும் இலக்கணம் முக்கியமான உதவியாகும். தாய்ப்பாஷையிலாயினும் சரி, இங்கிலீஷிலாயினும் சரி, வாசகம் (Composition) எழுதவேண்டுமாயின், போதுமான இலக்கணப் பயிற்சியின்றிச் சரியாக எழுதவே முடியாது. ஒருவன் உடையைத் தைக்கக் கற்குமுன் ஊசியை யெப்படிப் பிடிப்பதென்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இங்கிலீஷ் பாஷையைச் சீர்திருத்தமான முறையில் கற்பிக்கவேண்டுமாயின் தாய்ப்பாஷையும் சமமான சீர்திருத்த முறையில் கற்பிக்கப்படவேண்டும். இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் உபாத்தியாயன் இங்கிலீஷ்காரனாயினும் சரி, இந்தியனாயினும் சரி, தாய்ப்பாஷையின் அமைப்பை இங்கிலீஷ் பாஷையின் அமைப்போடு ஒத்திட்டுக் காட்டிப் போதிக்கக்கூடிய அளவாவது தாய்ப்பாஷையை அவன் கற்றிருக்க வேண்டுவது அவசியம். (என்று ஸாட்லர் கமிஷன் ரிபோர்ட் பாகம் 2, வாலியும் 5, சாப்டர் 41, பாரா 29-ல் கூறப்பட்டிருக்கிறது.)

ஆங்கிலம் கற்பிக்கும் ஒரு உபாத்தியாயன் ஒரேவார்த்தைக்குள்ள பல பிரதி பதங்களில் ஒன்றுக்கொன்று உபயோகத்திலுள்ள வித்தியாசத்தைக் கற்பிக்கும்போது, தாய்ப்பாஷையில் அத்தகைய 'கல்விப்பயிற்சி யில்லாத இந்திய மாணவர்களுக்கு அது சற்றும் விளங்குவதே யில்லை."

நேயர்களே! இதனால் கல்வியிற்சிறந்த அறிவாளிகளெல்லாம் (ஆங்கிலர், இந்தியர் இருவரும்) தாய்ப்பாஷைக் கல்வி இவ்வாறு அலட்சியம் செய்யப்படுவது பலதீங்குகளுக்குக் காரணமாகிறதென்றே கருதுகிறார்களென்பது நன்குவிளங்குகிறது. முக்கியமாக, நம்மவர் அவசியமென்று மதித்துக் கற்கும் ஆங்கிலபாஷா ஞானமே நமது மாணவர்க்குச் சரியாய்க் கிடைக்கிறதில்லை

யென்று நிச்சயமாகத்தெரிகிறது. பிரத்யக்ஷ அனுபவத்தாலும் இது உண்மையென்றே தெரிகிறது. பொதுவாய் இப்போது நமது மக்களுக்குப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி சோற்றுப் படிப்பே யன்றி உயிர்வாழ்க்கைக்கு உதவக்கூடியதல்ல. ஆன்மாவிற்குப் பயனளிக்கத் தக்கதல்ல. மிருகம்போல் தேகத்தை வளர்க்க மட்டுமே யுபயோகமாகத்தக்கது. வயிற்றிற்காகக் கற்கும் கல்வி அல்லது பணம்சம்பாதிக்க வென்று கற்கும்கல்வி ஒருபோதும் கல்வியாகாது. இப்படி யிருப்பதால், தாய்ப் பாஷாஞானமும் இல்லாவிடின் மேற்கண்டபடி தீங்குநேரிடுவதில் ஐயமேயில்லை என்பது நிச்சயம்.

இதோடு வேறுவிஷயத்தில் இதனாலுண்டாகக் கூடிய பெருங்கேடு அம்மம்ம! பயங்கரமானது. அதென்ன வெனில், நமது மதக்கல்வி நமது பாஷையில்தான் இருக்கிறது. நம் மக்களுக்குப் போதுமான தாய்ப்பாஷைக் கல்வி கற்பிக்கப்படாததால் சுயமத ஆராய்ச்சியே யவர்களுக்குச் சற்றுமில்லாது போகிறது. இக்குறையோடு அன்னியமதம் ஆசாரம் முதலியவைகளையே போதிக்கும் அன்னியபாஷைப் பாடபுத்தகங்களை இவர்கள் வாசிப்பதால் உண்மையறியாத சுயமதத்தில் அலட்சியம் தோன்றிவிடுகிறது. கடைசியில் இவர்கள் எம்மதப்பற்றுமின்றி நாஸ்திகர்கள் போலாகி, தெய்வசிந்தனை யற்றவர்களாகிறார்கள். பாடசாலைகளில் வாசிக்கும் நமது மாணவர்களில் பெரும்பாலர் தெய்வசிந்தனை சற்றுமில்லாதிருப்பதையும் நமது மத சம்பந்தமான ஆசாரஒழுக்கங்களை யலட்சியமாக்க் கருதுவதையும் பிரதியட்சமாகக்காணலாம்.

அந்தோ! இன்னும் நம்மவர் தாய்ப்பாஷையைப் பாடசாலைகளில் கட்டாய பாடமாக்கத் தீவிரமுயற்சி யெடுத்துக் கொள்ளாமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. நமது மதத்திற்கும் நம்சந்ததியாருடைய பிற்கால க்ஷேமத்திற்கும் பெருந்தீங்கை விளைவிக்கக்கூடிய இத்தகைய குறையை நீக்குவதில் அசிரத்தை காட்டினால், நம்நாடு முன்னுக்கு வரவேண்டுமென்று நாம்வாய்ப்பறை யறைவதால் என்னபயனுண்டாகும்? மதாபிமான மில்லாமல் தேசாபிமானம் எப்படி வரும்? நம்மவர் இனியேனும் இதில் கவனத்தைச் செலுத்தவேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியைப் பிரார்த்திப்போமாக. ஓம் தத் ஸத். தமிழன்.

---

## தமிழர் புராதனம் தமிழின் தொன்மை.

(153-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சிலப் பதிகாரம் வேனிற் காதையுள்

"நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமும்"

என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். "அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும்



7. குலத்திற்குக் கேடுவிளைவிக்கும் கோடரிக்காம்புகள் இந்நாட்டில் மிக்க மலினம்.

இப்போது நாம் கூறிய இத்தீயகுணங்களெல்லாம் பிற்காலத்தில் இந்நாட்டாரிடம் தோன்றியுள்ளவை. இவற்றால் தேசாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் முதலியவை குறைந்துகொண்டே வந்தன. ஆயினும் தருமம், சீவகாருண்யம், உண்ட உப்பிற்கு இரண்டகம் செய்யாமை, கடவுள் பக்தி, இராஜபக்தி, ஞானம், அழியும் உலக போகங்களின் அநித்திய உணர்ச்சி முதலிய உத்தம குணங்கள் மட்டும் இன்னும் இந்நாட்டில் அழியாமலே மிகக் கஷ்டத்தோடு பதுங்கிக்கொண்டேனும் சிரஞ்சீவிகளாக விருக்கின்றன. இதுவே இந்நாட்டின் தெய்வீகத் தன்மைக்குப் பேரறிகுறியாக விருக்கிறது. இதனாலும், இம்மையிலேயே பரமாத்மாவின் அருளைப்பெற்றுச் சதா அவனோடு கலந்து பேரானந்தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும் மகான்கள் அனேகர் இந்நாட்டிலிருப்பதாலும், அத்தகையோர் இன்னும் அவதரித்துக் கொண்டேயிருப்பதாலும் இந்த நாட்டார் இனியேனும் வீண்மயக்கம் தெளிந்து ஒற்றுமையின் தன்மையை யுணர்ந்து தங்கள் தாய்நாடு தன் பூர்வீக உன்னத நிலையை யடையும் வண்ணம் தக்க முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

நேயர்களே! இவ்வளவு கூறியும் கடைசியில் நாட்டின் பெயரைக் கூறவில்லையே என்று கருதுவீர்கள். இதை வாசிப்போர்களே சுலபமாக அறிந்துகொள்வீர்க ளென்று நம்பியே நாம் அதைக் கூறாது விடுக்கிறோம். ஓம் தத் ஸத்

---

## தாய்ப்பாஷையி னவசியம்.

நண்பர்களே! நமது தாய்ப்பாஷை நமது இகபர சுகங்களிரண்டிற்கும் அத்தியாவசிய மென்பதைப் பற்றியும், அதைக் கட்டாய பாடமாக்காமல் இருப்பதால் நமது சந்ததியார் பெருந் தீங்கிற்குள்ளாவார்க ளென்றும் பன்முறை பத்திரிகைகளில் முறையிடப்பட்டும், தாய்நாட்டின் நன்மைக் குழைக்கிறோமென்று முன் வந்திருக்கும் நம்மவர்கள் அதைப்பற்றிச் சற்றும் கவலை யெடுத்துக்கொள்வதாகத் தெரியவில்லை. ஒருகால் அதன் அவசியம் அவர்களுக்குப் புலப்படவில்லையோ, அல்லது அவர்களும் சிலர் போல் தமிழைப் பற்றி அவசியமே யில்லை, ஆங்கிலந்தான் நாகரீகமும் கௌரவமுமான பாஷை யென்று கருதி யிருக்கிறார்களோ என்ற சந்தேகத்தால் மறுபடி பின் வரும் விஷயங்களை யறிவிக்க விரும்புகிறோம்.

1921வரு ஏப்ரல்மீ 23உ வெளியான ஹிந்து பத்திரிகையில் ஸ்ரீமான் C. P. வெங்கட்டராம அய்யர், M.A., L.T., அவர்களால் வரையப்பட்ட வியாசத்தில் இருந்து கீழ்க்கண்டவற்றை வெளியிடுகிறோம்:—

## தமிழ்க் கல்வியின் பிரயோசனம்.

"தாய்ப்பாஷையின் முக்கிய பிரயோசனம் எதுவெனின், அன்னிய பாஷா ஞானம் பெறுவதற்கு ஒரு பலம் பொருந்திய அஸ்திவாரமாக உபயோகப்படுவதேயாகும். தன் தாய்ப்பாஷையில் போதுமான விற்பத்தியின்றி, ஒரு கல்விமான் தன் குழந்தைப் பருவமுதல் தன் வாழ்நாட்களில் நெருக்கமாகச் சம்பந்தப்பட்ட அனேக வஸ்துக்களைப்பற்றித் தெளிவாகச் சம்பாஷிப்பதில், தன் பாஷையை யுபயோகிக்கச் சக்தியுடையவனாக விருக்கமாட்டான். காவியங்களுக் கெல்லாம் இதுவே யுடலும், உயிரும் போன்றது. இந்த ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி யடையாதவன் உண்மையான கல்வி கற்றவனாகக் கருதப்படமாட்டான். ஆங்கில பாஷா ஞானத்தைச் சரிவரப் பெறுவதற்குத் தாய்ப்பாஷை ஒரு அஸ்திவாரம்போல் உபயோகப்பட வேண்டுமாயின், **தாய்ப்பாஷையின் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் கற்கவேண்டியது கட்டாயம்** என்று கூறலாம். ஆங்கிலம் கற்கும் இந்தியன் தன் தாய்ப்பாஷை யிலக்கணத்திலும், வார்த்தைகளின் உபயோகத்திலும் பயிற்சியடைந்திருக்க வேண்டியது இன்றியமையாத அவசியமாகும். மனப்பயிற்சி யடைவதற்குத் தாய்ப்பாஷையே மிக்கசுலபமான கருவியாகும். எந்தப் பாஷையிலும் விற்பத்தி யடைவதற்கு அப்பாஷையிலுள்ள வார்த்தைகளைத் திருத்தமாக உச்சரிக்கவும், அப்பாஷையிலுள்ள இலக்கணவேறுபாடுகளையும், வார்த்தைகளின் சூசனைகளையும் கற்கவேண்டியது முக்கிய அம்சங்களாகும். முதலாவது, வார்த்தைகளை யுச்சரிப்பதில், உதடு, பல், நாக்கு, சுவாசக்குழல் முதலிய அங்கங்கள் உபயோகமாகின்றன. ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளைக் கற்பதாயின் புதுமாதிரியான உச்சரிப்புகளில் பழகவேண்டும். இதில் ஒரு பாஷைக்கும், மற்றொரு பாஷைக்கும் எவ்வளவோ வித்தியாச முண்டு. அன்னிய பாஷையைக் கற்கும்போது மாணவன் தன் தாய்ப்பாஷையில் கற்ற உச்சரிப்புகளைவிட வேறு நூதனவிதமான உச்சரிப்புகளில் பழகவேண்டியதாகும். பிள்ளைகள் சுலபமாக உச்சரிப்பில் பழகவேண்டுமாயின் உபாத்தியாயர் தாய்ப்பாஷையின் உச்சரிப்பிற்கும், ஆங்கிலத்தின் உச்சரிப்பிற்கும் இருக்கும் வித்தியாசங்களைப் பிள்ளைகளுக்கு நன்றாய் எடுத்துக் காட்டிப் போதிக்கவேண்டும். ஆகையால் உபாத்தியாயர் மாணவனுடைய தாய்ப்பாஷையில் பயிற்சி யுடையவராக விருந்தால்தான் பிள்ளைகளுக்கு இரண்டு பாஷைகளின் உச்சரிப்புகளையும் ஒத்திட்டுக் காட்டிக் கற்பிக்கமுடியும். ஒரே மாதிரியான எழுத்துகளுக்கு இரண்டு பாஷைகளிலும் உச்சரிப்பில் மிக்க பேதமிருக்கும். அத்தகையவைகளுக்கு உபாத்தியாயர் அந்தந்தப் பாஷையின் உச்சரிப்பை யுண்டாக்க இன்னின்ன கருவி இன்னின்ன நிலையில் நிற்க



வேண்டும், இன்னின்ன விதமா யசையவேண்டும் என்று பிள்ளைகளுக்குத் தமது யூகத்தால் பிரத்தியட்சமாகக் காட்டிப் போதிக்கவேண்டும். திருட்டாந்தமாக ஆங்கில்த்திலுள்ள N. என்ற எழுத்திற்கும் தமிழிலுள்ள ன, ந, ண என்ற எழுத்துகளுக்கும் உச்சரிப்பில் பேதமுண்டு. இப்போது தாய்ப்பாஷையில் இலக்கணமே பாடசாலைகளில் கற்பிப்பதைக் காணோம். தாய்ப்பாஷை பழக்கத்தால் தானே வந்துவிடுமென்று கருதுகிறார்கள் போலும். தாய்ப்பாஷையில் வாசகமாக ஒன்றை எழுதவேண்டியதற்கு இலக்கணம் அவசியம் வேண்டுமென்பதை இவர்கள் கவனிக்கவில்லை. அன்னிய பாஷையின் இலக்கணத்தைச் சரியாகக் கற்கவேண்டுமாயின் தாய்ப்பாஷை யிலக்கணத்தைக் கற்றிருப்பது பெரிய உதவியாகும். ஆங்கில போதனாமுறையில் தேர்ந்தவராகிய எட்ஸ் (Mr. Yates ஆங்கில இலக்கணம் எழுதியவர்) என்பவர் **தாய்ப்பாஷையிலுள்ள இலக்கணத்தை யொட்டியே ஆங்கில இலக்கணம் கற்பிக்கப்படவேண்டும்** என்கிறார். இந்தியமாணவர்களுக்குச் சாதாரண இங்கிலீஷ் இலக்கணங்கூட பாடசாலைகளில் கற்பிக்கப்படாமலிருப்பது விசனிக்கத்தக்கதா யிருக்கிறதென்று அவர் கூறுகிறார். ஓர் பாஷையைச் சரியாகக் கற்பதற்கும், பாஷா ஞானம் பெறுவதற்கும் இலக்கணம் முக்கியமான உதவியாகும். தாய்ப்பாஷையிலாயினும் சரி, இங்கிலீஷிலாயினும் சரி, வாசகம் (Composition) எழுதவேண்டுமாயின், போதுமான இலக்கணப் பயிற்சியின்றிச் சரியாக எழுதவே முடியாது. ஒருவன் உடையைத் தைக்கக் கற்குமுன் ஊசியை யெப்படிப் பிடிப்பதென்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். **இங்கிலீஷ் பாஷையைச் சீர்திருத்தமான முறையில் கற்பிக்கவேண்டுமாயின் தாய்ப்பாஷையும் சமமான சீர்திருத்த முறையில் கற்பிக்கப்படவேண்டும்.** இந்திய மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் உபாத்தியாயன் இங்கிலீஷ்காரனாயினும் சரி, இந்தியனாயினும் சரி, தாய்ப்பாஷையின் அமைப்பை இங்கிலீஷ் பாஷையின் அமைப்போடு ஒத்திட்டுக் காட்டிப் போதிக்கக்கூடிய அளவாவது தாய்ப்பாஷையை அவன் கற்றிருக்க வேண்டுவது அவசியம். (என்று ஸாட்லர் கமிஷன் ரிபோர்ட் பாகம் 2, வாலியும் 5, சாப்டர் 41, பாரா 29-ல் கூறப்பட்டிருக்கிறது.)

ஆங்கிலம் கற்பிக்கும் ஒரு உபாத்தியாயன் ஒரேவார்த்தைக்குள்ள பல பிரதி பதங்களில் ஒன்றுக்கொன்று உபயோகத்திலுள்ள வித்தியாசத்தைக் கற்பிக்கும்போது, தாய்ப்பாஷையில் அத்தகைய கல்விப்பயிற்சி யில்லாத இந்திய மாணவர்களுக்கு அது சற்றும் விளங்குவதே யில்லை."

நேயர்களே! இதனால் கல்வியிற்சிறந்த அறிவாளிகளெல்லாம் (ஆங்கிலர், இந்தியர் இருவரும்) தாய்ப்பாஷைக் கல்வி இவ்வாறு அலட்சியம் செய்யப்படுவது பலதீங்குகளுக்குக் காரணமாகிறதென்றே கருதுகிறார்களென்பது நன்குவிளங்குகிறது. முக்கியமாக, நம்மவர் அவசியமென்று மதித்துக் கற்கும் ஆங்கிலபாஷா ஞானமே நமது மாணவர்க்குச் சரியாய்க் கிடைக்கிறதில்லை

யென்று நிச்சயமாகத்தெரிகிறது. பிரத்யக்ஷ அனுபவத்தாலும் இது உண்மை யென்றே தெரிகிறது. பொதுவாய்* இப்போது நமது மக்களுக்குப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் கல்வி சோற்றுப் படிப்பே யன்றி உயிர்வாழ்க்கைக்கு உதவக்கூடியதல்ல. ஆன்மாவிற்குப் பயனளிக்கத் தக்கதல்ல. மிருகம் போல் தேகத்தை வளர்க்க மட்டுமே யுபயோகமாகத்தக்கது. வயிற்றிற்காகக் கற்கும் கல்வி அல்லது பணம்சம்பாதிக்க வென்று கற்கும்கல்வி ஒருபோதும் கல்வியாகாது. இப்படி யிருப்பதால், தாய்ப் பாஷாஞானமும் இல்லாவிடின் மேற்கண்டபடி தீங்குநேரிடுவதில் ஐயமேயில்லை என்பது நிச்சயம்.

இதோடு வேறுவிஷயத்தில் இதனாலுண்டாகக் கூடிய பெருங்கேடு அம்மம்ம! பயங்கரமானது. அதென்ன வெனில், நமது மதக்கல்வி நமது பாஷையில்தான் இருக்கிறது. நம் மக்களுக்குப் போதுமான தாய்ப்பாஷைக் கல்வி கற்பிக்கப்படாததால் சுயமத ஆராய்ச்சியே யவர்களுக்குச் சற்றுமில்லாது போகிறது. இக்குறையோடு அன்னியமதம் ஆசாரம் முதலியவைகளையே போதிக்கும் அன்னியபாஷைப் பாடபுத்தகங்களை இவர்கள் வாசிப்பதால் உண்மையறியாத சுயமதத்தில் அலட்சியம் தோன்றிவிடுகிறது. கடைசியில் இவர்கள் எம்மதப்பற்றுமின்றி நாஸ்திகர்கள் போலாகி, தெய்வசிந்தனை யற்றவர்களாகிறார்கள். பாடசாலைகளில் வாசிக்கும் நமது மாணவர்களில் பெரும்பாலர் தெய்வசிந்தனை சற்றுமில்லாதிருப்பதையும் நமது மத சம்பந்தமான ஆசாரஒழுக்கங்களை யலட்சியமாகக் கருதுவதையும் பிரதியட்சமாகக்காணலாம்.

அந்தோ! இன்னும் நம்மவர் தாய்ப்பாஷையைப் பாடசாலைகளில் கட்டாய பாடமாக்கத் தீவிரமுயற்சி யெடுத்துக் கொள்ளாமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. நமது மதத்திற்கும் நம்சந்ததியாருடைய பிற்கால க்ஷேமத்திற்கும் பெருந்தீங்கை விளைவிக்கக்கூடிய இத்தகைய குறையை நீக்குவதில் அசிரத்தை காட்டினால், நம்நாடு முன்னுக்கு வரவேண்டுமென்று நாம்வாய்ப்பறை யறைவதால் என்னபயனுண்டாகும்? மதாபிமான மில்லாமல் தேசாபிமானம் எப்படி வரும்? நம்மவர் இனியேனும் இதில் கவனத்தைச் செலுத்தவேண்டுமாய் எல்லாம் வல்ல கருணாநிதியைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத். தமிழன்.

---

## தமிழர் புராதனம் தமிழின் தொன்மை.

(153-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனிச் சிலப் பதிகாரம் வேனிற் காதையுள்

"நெடியோன் குன்றமுந் தொடியோன் பௌவமும்"

என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். "அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும்



ற்றுக்கும் குமரியென்னும் யாற்றுக்கும் இடையே நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்லமுதலிய பன்மலைநாடும்........கடல்கொண் டொழிதலால் குமரிப்பௌவ மென்றார்" என்ற கூற்றையும், காடுகாண் காதையில் ஆசிரியர் இளங்கோ வடிகள்,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்ற கூற்றையும், வான்மீகி யிராமாயணத்தில் அநுமான் குமரிக் கோட்டினின்றும் நூறுயோசனை தூரங்கடந்து இலங்கையைக் கண்டான் என்ற கூற்றையும் ஆதாரமாகக் கொண்டு தற்போழ்து இந்துமகா சமுத்திரமென்ற பெருங்கடலகத்தில் 'இலெமூரியா' என்ற ஒரு நிலப்பரப் பிருந்ததாகவும், அவணின்றும் தமிழர் இந்நாட்டுக்கு வந்தாரென்றுங் கூறுப. அவ்வணமாயின் அந்நிலப்பரப்பு குமரி முதல் ஆஸ்திரேலியா, ஆப்ரிகா தேயங்கள் வரை பரந்திருத்தல் வேண்டும். அந்நாடு இருந்தது சங்கநூற்களினும் தேற்றமாம். மேலும் 1841-ம் ஆண்டில் ஸின்ஸினாட்டி என்னும் (வட அமெரிக்கா) நகரத்திற் கண்டதொரு சிலாசாசனத்தால் இந்தியர் முன்பு அங்கேயிருந்தார்கள் எனப் புலப்படும். இதனாலேயே தமிழர் இலெமூரிய தேயத்தினர் என்று கூறுதலியலாது.

இனித் தமிழர்க்கும் சீனர் (Chinese) க்கும் சம்பந்தம் காட்டுவர். இக்கொள்கைக்குக் காரணம் அவ்விருதிறத்தார் பாஷைகளில் தோற்றும் ஒரு சிறிது ஒற்றுமையே:—

| தமிழ். | சீனம். |
|---|---|
| நீ | நீ |
| நான் | ஞான் |
| யாம் | யாம் |
| பெண் | பெண் |
| கண் (இடம்; 7-ம் வேற்றுமையுருபு) | கண் (இடம்) |
| ஈர் (இரண்டு) | ஈர் |
| மை | மை |

அதனால் தமிழரும் சீனரும் பண்டைக்காலத்தில் ஒரே குலத்தினரென்றும், ஒரே நாட்டில் இருந்தவரென்றுங் கூறுவதற்கு இடனுண்டாகின்றது. மேலும், சீனர்கள் இன்றும் தம்மை வானவரென்றும் மற்றையோரினும் குலத்திலுயர்ந்தவ ரென்றும் கொண்டாடுவார்கள். இஃதனுசரித்தே போலும் தமிழ் மூவேந்தருள் ஒருவனாகிய சேரன்வானவன், வானவரம்பன், இமயவரப்பன் எனப்பெயர் பூண்டான்.

சந்திரகுலத்தரசருள் இருபத்தைந்தாவது வமிசத்தானாகிய உதயணன் கதையில், மகதநாட்டு இராஜதானியாகிய இராசக்கிரக மென்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்து ஆசிரியர்,

" விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்து பிழைத் தொழுகினும் காய்ந்து கலக்கறாஅ
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும்
எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும்
மன்பெருஞ் சிறப்பி னுயிரமாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேனையும்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியும்
மிலேச்சச் சேரியும் தலைத்தலை சிறந்து "

என்பதனால் அக்காலத்திலே மற்றைச் சாதியாரைப் பார்க்கிலும் தமிழரே மிக்க போர்வீரராகவும் அரசனுடைய பரிவாரங்களில் முதன்மை யானவராகவும் இருந்தனர் என்பது தேற்றமாம்.

இதனால் தமிழர் முதல் முதல் வட இந்தியாவாகிய இந்துஸ்தானத்திலேயே குடியிருந்தனர் என்பது புலப்படும். அவர்களின் பின்பு ஆரியர் இத்தேயத்திற் பெயர்ந்து தமிழரைத் தென்திசையிற் செலுத்தினர். மேனாட்டாருடன் கலன்கொண்டு கடன்மீது வர்த்தகஞ் செய்திருக்கலாம். அதனாலேயே யவர்கள் அத்திசையினின்றும் வந்தனர் என்று கூறலாகாது. கப்பற்கருவிகளுக்குத் தக்க தமிழ்ப் † பதங்களின்மையும், தமிழர் மேற்றேயம் சென்றதற்குச் சான்றின்மையும் வற்புறுத்தும்.

ஆரியர் வருவதற்கு முந்தியே திராவிடரென்று இதுகாறும் வழங்கப்பட்ட தமிழர் இந்நாட்டின்கண் இருந்தபடியால் அவர்கள் வழங்கிய தமிழும் ஆரியத்திற்கு முற்பட்டதாகும்.

வான்மீகி முனிவருளிய இராமாயணத்தின்கண் கிஷ்கிந்தையில் சுக்கிரீவன், சீதாதேவியை நாடிச்செல்லும் வானர வீரர்களுக்கு அவர்ச் செல்லும் நெறியின் திறன் கூறும்போது,

" தேவரம்பையர்கள் வந்து நீராடுகின்ற திவ்வியமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள்......பின்பு, முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபானி நதியைத் தாண்டுங்கள்...அதைவிட்டு அப்பாற் சென்றால் முத்தாலும், மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டினது கபாடமும் (கதவையும்) காண்பீர்

† கலன், நாவாய் முதலிய சொற்கள் கிரேக்க பதங்களின்றும் பெயர்ந்தன. நேவி (Navy) என ஆங்கிலர் மொழிவதுங் காண்க.



கள் " என்று கூறுவான் எனவே, வான்மீகிமுனிவர் காலத்திலேயே தமிழ் நாடாகிய பாண்டியநாடு பீடினும் வளப்பத்தினுஞ் சிறப்புள்ளது; வட நாட்டிலும் பரவி யிருந்தது.

இனி யிக் கபாடபுரம் எவண்இருந்தது? அதன் முறைமை இறையனாரகப் பொருளுரையின்கணல்லது வேறெங்கும் விரிவாகக் கூறப்பட்டிலது. " தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇனார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்க மிருந்தார்......ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப......அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு சங்க மிருந்தா ரென்ப......அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கோள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

" இனி இடைச்சங்க மிருந்தார்......ஐம்பத்தொன்பதின்ம ரென்ப... அவர் மூவாயிரத் தெழுநூற்றி யாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது."

எனவே, பாண்டியர்கள் முதலின் மதுரையிலும், அது கடல்கொண்ட பின்னர் கபாடபுரத்திலும் சங்கம் இரீஇனார் என்றது தேற்றம். வான்மீகியார் பாண்டிய நாட்டைக் குறிப்பித்திருப்பின், இவ்விடைச் சங்கத்தினரையே குறிக்கவேண்டும். அச்சமயத்திலேயே ஸ்ரீராமனும் அகத்தியனாரைக் கண்டுத் திருத்தல் வேண்டும்.

ஆகவே, வான்மீகியார் தமது காவியத்தைப் பண்ணும்பொழுது, தமிழ் நாட்டில் இரண்டு சங்கங்கள் எற்படுத்தப் பெற்றன. முதற் சங்க காலத்தில் உண்டான அகத்தியம் இடைச் சங்கத்தில் அருமையாக உபயோகப்படுத்தியதால் இவ்விரு சங்கங்கட் கிடையே மிக்க காலம் படர்ந்திருத்தல் வேண்டும். ஏனையவும் இதுபோன்றே யுய்த்துணரலாம்.

## VI—முடிவுரை.

' வடிவு பெயர் தன்மை முடிவு நான்கெழுத்தே '

என்ற பிங்கலந்தையின்படி, வடிவெழுத்தும் (Hieroglyphies) பெயரெழுத்தும் (சீனர்களைப்போன்று ஒவ்வொன்றுக்கும் சந்தேகங்கொண்டு குறிப்பிடுதல்) தன்மை யெழுத்தும் (பண்பைக் குறிக்குமியல்பு) முடிவெழுத்தும் (வினைநிகழ்ச்சி) முறையே தமிழ் பயின்று வந்தது; பெரும்பாலும் ஒவ்வொரு மொழியும் அவ்வணமே யுற்பத்தியாயிற்று. தமது கருத்தைப் பிறர்க்கறிவிக்க முதலில் அப்பொருளின் வடிவை வரைந்து காட்டுதல் மரபு. பின்பு, ஒவ்வொரு வர்க்கத்திற்கும் தனித்தனி குறிப்பிட்டு வழங்குவர். அதன் பின்பே காலக் கிரமத்தில் அதன் பண்பையும், வினையையும் குறிப்பிப்பர் * அதன்பின்பே தமது உணர்ச்சியையும், மனப்பாங்கையும் உணர்த்த முயல்

* தமிழ்ச் சொற்களின் பகுதிகள் பெரும்பாலும் வினையாகவும் பண்பாகவு மிருத்தல் காண்க.

வர். அம்முயற்சியில் பல வேறு சின்னங்களும், பின்னங்களும் உறுதல் இயல்பாதலின், கற்றுணர்ந்தோர் பரவை வழக்கையும், நூல் வழக்கையும் வகுத்துக் காட்ட முயல்வர். இவ்வணமே யிலக்கணமும் எழுந்தது. "இலக்கியமின்றே லிலக்கணமின்று" என்பதும் அதுவே.

பின்னர் நூல்களுள்ளும் வேறுபாடு கண்டு களைவதற்கும் மேலும் அதனைப் பூரண கும்பம் பெறச் செய்வதற்கும் மூதறிவாளர் ஒருங்கு குழீஇ, நல்லனவற்றைக் கொண்டும், அல்லனவற்றை யொழித்தும் வழிபடுத்துவர். அதன் பொருட்டே தமிழ் நாட்டினும் சங்கங்கள் இரீஇயினர். அவர்கள் தமது காலத்தில் இயற்றப்பெற்ற நூல்களில் பெருந்தன்மையும், கண்ணியமும் உடையனவற்றை யாதரித்தனர். அவ்விதம் ஏற்பட்ட நூல்களே சங்க நூல்கள் எனப்படும்.

தலைச்சங்கம் குழீஇப் பல்லாண்டுகள் கழிந்த பின்னர் மொழியும் ஈனதிசையிற் சேர்ந்தது. கடலரையன் நிலமகண்மேற் போர் தொடுத்தனன்; பாண்டியன் முதுநகராய மதுரையும் நீர் நிலை கண்டது; நூல்களும் உடன் அழிந்தன. முதற் சங்கத்தில் ஏற்பட்ட நூல்களில் ஒன்றேனும் இப்பொழுது அகப்பட்டிலது *

பின்னர் ஆண்டுகள் பல செல்லத் தமிழ் மொழியும் (தற்போதிய போல்) காலக்கிரமத்தில் ஈனதிசையுற மீண்டும் அதனை மேம்படுத்த இடைச்சங்கம் குழீஇனர். அவ்வண்ணமே கடைச்சங்கமும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இனி யிடைச்சங்கத்து நூல்களுள் தொல்காப்பியந் தவிர ஏனையவொன்றும் முற்றிக் கிடைத்திலது. இவ்விடைச் சங்கமும் முன்னையது போன்று மறையத் தமிழும் முன்போல் இழிவுற்றது. இவ்வண்ணமே பல்வேறு காலத்தில் பல் வேறு சங்கங்கள் குழுவுதலாயின.' தற்போதும் மதுரைமா நகரின்கண் ஒன்று பொலிவது காணலாம்.

'சங்கநூற்கள்' என இப்போது போற்றப்படுபவை யனைத்தும் கடைச் சங்கத்தவையேயாம். அவைகளிற் சிறப்புற்றவையும், பல்லோரானும் போற்றத்தக்கவையும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்குகள் வரையுமன்றிக் களவியல் ‡ "கூத்து, வரியும், பேரிசையும், சிற்றிசையு மென்றித் தொடக்கத்தன" வுமாம்.

ஒரு தேயத்தின் அறிவும் ஆற்றலும் வன்மையுந் திறனும் அதன் கண வழங்கு மிலக்கியத்தா லுணரலாம். ஒருவன் மனத்தால் உணர்வதை யல்லால் அதன்மேல் அவன் நினைத்தலருமை யென்பது தத்துவ உண்மை

* தலைச்சங்கத்து நூற்களுள் ஒன்றாகிய '.செங்கோன்றரைச் செலவு' என்னும் நூலின் சிலபாக்கள் வெளிவந்துள்ளன.

‡ இறையனாரகப் பொருளுரை முதற் சூத்திரம்.



யாற்றுக்கும் குமரியென்னும் யாற்றுக்கும் இடையே நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்லமுதலிய பன்மலைநாடும்........கடல்கொண் டொழிதலால் குமரிப்பௌவ மென்றார்" என்ற கூற்றையும், காடுகாண் காதையில் ஆசிரியர் இளங்கோ வடிகள்,

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள."

என்ற கூற்றையும், வான்மீகி யிராமாயணத்தில் அநுமான் குமரிக் கோட்டினின்றும் நூறுயோசனை தூரங்கடந்து இலங்கையைக் கண்டான் என்ற கூற்றையும் ஆதாரமாகக் கொண்டு தற்போழ்து இந்துமகா சமுத்திரமென்ற பெருங்கடலகத்தில் 'இலெமூரியா' என்ற ஒரு நிலப்பரப் பிருந்ததாகவும், அவணின்றும் தமிழர் இந்நாட்டுக்கு வந்தாரென்றுங் கூறுப. அவ்வணமாயின் அந்நிலப்பரப்பு குமரி முதல் ஆஸ்திரேலியா, ஆப்ரிகா தேயங்கள் வரை பரந்திருத்தல் வேண்டும். அந்நாடு இருந்தது சங்கநூற்களினும் தேற்றமாம். மேலும் 1841-ம் ஆண்டில் வின்வினாட்டி என்னும் (வட அமெரிக்கா) நகரத்திற் கண்டதொரு சிலாசாசனத்தால் இந்தியர் முன்பு அங்கேயிருந்தார்கள் எனப் புலப்படும். இதனாலேயே தமிழர் இலெமூரிய தேயத்தினர் என்று கூறுதலியலாது.

இனித் தமிழர்க்கும் சீனர் (Chinese) க்கும் சம்பந்தம் காட்டுவர். இக்கொள்கைக்குக் காரணம் அவ்விருதிறத்தார் பாஷைகளில் தோற்றும் ஒரு சிறிது ஒற்றுமையே:—

| தமிழ். | சீனம். |
|---|---|
| நீ | நீ |
| நான் | ஞான் |
| யாம் | யாம் |
| பெண் | பெண் |
| கண் (இடம்; 7-ம் வேற்றுமையுருபு) | கண் (இடம்) |
| ஈர் (இரண்டு) | ஈர் |
| மை | மை |

அதனால் தமிழரும் சீனரும் பண்டைக்காலத்தில் ஒரே குலத்தினரென்றும், ஒரே நாட்டில் இருந்தவரென்றுங் கூறுவதற்கு இடனுண்டாகின்றது. மேலும், சீனர்கள் இன்றும் தம்மை வானவரென்றும் மற்றையோரினும் குலத்திலுயர்ந்தவ ரென்றும் கொண்டாடுவார்கள். இஃதனுசரித்தே போலும் தமிழ் மூவேந்தருள் ஒருவனாகிய சோன்வானவன், வானவரம்பன், இமயவரப்பன் எனப்பெயர் பூண்டான்.

சந்திரகுலத்தரசருள் இருபத்தைந்தாவது வமிசத்தானாகிய உதயணன் கதையில், மகதநாட்டு இராஜதானியாகிய இராசக்கிரக மென்னும் பட்டணத்தின் சிறப்பை உரைக்குமிடத்து ஆசிரியர்,

“ விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கினுங் காவல் கண்ணி
வேந்து பிழைத் தொழுகினும் காய்ந்து கலக்கறாஅ
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும்
எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும்
மன்பெருஞ் சிறப்பி னுயிராகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேனையும்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியும்
மிலேச்சச் சேரியும் தலைத்தலை சிறந்து ”

என்பதனால் அக்காலத்திலே மற்றைச் சாதியாரைப் பார்க்கினும் தமிழரே மிக்க போர்வீரராகவும் அரசனுடைய பரிவாரங்களில் முதன்மையானவராகவும் இருந்தனர் என்பது தேற்றமாம்.

இதனால் தமிழர் முதல் முதல் வட இந்தியாவாகிய இந்துஸ்தானத்திலேயே குடியிருந்தனர் என்பது புலப்படும். அவர்களின் பின்பு ஆரியர் இத்தேயத்திற் பெயர்ந்து தமிழரைத் தென்திசையிற் செலுத்தினர். மேனாட்டாருடன் கலன்கொண்டு கடன்மீது வர்த்தகஞ் செய்திருக்கலாம். அதனாலேயே யவர்கள் அத்திசையினின்றும் வந்தனர் என்று கூறலாகாது. கப்பற்கருவிகளுக்குத் தக்க தமிழ்ப் † பதங்களின்மையும், தமிழர் மேற்றேயம் சென்றதற்குச் சான்றின்மையும் வற்புறுத்தும்.

ஆரியர் வருவதற்கு முந்தியே திராவிடரென்று இதுகாறும் வழங்கப்பட்ட தமிழர் இந்நாட்டின்கண் இருந்தபடியால் அவர்கள் வழங்கிய தமிழும் ஆரியத்திற்கு முற்பட்டதாகும்.

வான்மீகி முனிவருளிய இராமாயணத்தின்கண் கிஷ்கிந்தையில் சுக்கிரீவன், சீதாதேவியை நாடிச்செல்லும் வானர வீரர்களுக்கு அவர்ச் செல்லும் நெறியின் திறன் கூறும்போது,

“ தேவரம்பையர்கள் வந்து நீராடுகின்ற திவ்வியமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள்......பின்பு, முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபரனி நதியைத் தாண்டுங்கள்...அதைவிட்டு அப்பாற் சென்றால் முத்தாலும், மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டிய நாட்டினது கபாடமும் (கதவையும்) காண்பீர்

† கலன், நாவாய் முதலிய சொற்கள் கிரேக்க பதங்களின்றும் பெயர்ந்தன. நேவி (Navy) என ஆங்கிலர் மொழிவதுங் காண்க.



கள் ” என்று கூறுவான் எனவே, வான்மீகிமுனிவர் காலத்திலேயே தமிழ் நாடாகிய பாண்டியநாடு பீடினும் வளப்பத்தினுஞ் சிறப்புள்ளது; வட நாட்டிலும் பரவி யிருந்தது.

இனி யிக் கபாடபுரம் எவண்இருந்தது? அதன் முறைமை இறையனாரகப் பொருளுரையின்கணல்லது வேறெங்கும் விரிவாகக் கூறப்பட்டிலது. “ தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூவகைப்பட்ட சங்கம் இரீஇனார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்க மிருந்தார்......ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப......அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டு சங்க மிருந்தா ரென்ப......அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

“ இனி இடைச்சங்க மிருந்தார்......ஐம்பத்தொன்பதின்ம ரென்ப... அவர் மூவாயிரத் தெழுநூற்றி யாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.”

எனவே, பாண்டியர்கள் முதலின் மதுரையிலும், அது கடல்கொண்ட பின்னர் கபாடபுரத்திலும் சங்கம் இரீஇனார் என்றது தேற்றம். வான்மீகியார் பாண்டிய நாட்டைக் குறிப்பித்திருப்பின், இவ்விடைச் சங்கத்தினரையே குறிக்கவேண்டும். அச்சமயத்திலேயே ஸ்ரீராமனும் அகத்தியனாரைக் கண்படுத் திருத்தல் வேண்டும்.

ஆகவே, வான்மீகியார் தமது காவியத்தைப் பண்ணும்பொழுது, தமிழ் நாட்டில் இரண்டு சங்கங்கள் ஏற்படுத்தப் பெற்றன. முதற் சங்க காலத்தில் உண்டான அகத்தியம் இடைச் சங்கத்தில் அருமையாக உபயோகப்படுத்தியதால் இவ்விரு சங்கங்கட் கிடையே மிக்க காலம் படர்ந்திருத்தல் வேண்டும். ஏனையவும் இதுபோன்றே யுய்த்துணரலாம்.

## VI—முடிவுரை.

‘ வடிவு பெயர் தன்மை முடிவு நான்கெழுத்தே ’

என்ற பிங்கலந்தையின்படி, வடிவெழுத்தும் (Hieroglyphies) பெயர் எழுத்தும் (சீனர்களைப்போன்று ஒவ்வொன்றுக்கும் சந்தேகங்கொண்டு குறிப்பிடுதல்) தன்மை யெழுத்தும் (பண்பைக் குறிக்குமியல்பு) முடிவெழுத்தும் (வினைநிகழ்ச்சி) முறையே தமிழ் பயின்று வந்தது; பெரும்பாலும் ஒவ்வொரு மொழியும் அவ்வணமே யுற்பத்தியாயிற்று. தமது கருத்தைப் பிறர்க்கறிவிக்க முதலில் அப்பொருளின் வடிவை வரைந்து காட்டுதல் மரபு. பின்பு, ஒவ்வொரு வர்க்கத்திற்கும் தனித்தனி குறிப்பிட்டு வழங்குவர். அதன் பின்பே காலக் கிரமத்தில் அதன் பண்பையும், வினையையும் குறிப்பிப்பர் * அதன்பின்பே தமது உணர்ச்சியையும், மனப்பாங்கையும் உணர்த்த முயல்

* தமிழ்ச் சொற்களின் பகுதிகள் பெரும்பாலும் வினையாகவும் பண்பாகவு மிருத்தல் காண்க.

வர். அம்முயற்சியில் பல வேறு சின்னங்களும், பின்னங்களும் உறுதல் இயல்பாதலின், கற்றுணர்ந்தோர் பரவை வழக்கையும், நூல் வழக்கையும் வகுத்துக் காட்ட முயல்வர். இவ்வணமே யிலக்கணமும் எழுந்தது. "இலக்கியமின்றே யிலக்கணமின்று" என்பதும் அதுவே.

பின்னர் நூல்களுள்ளும் வேறுபாடு கண்டு களைவதற்கும் மேலும் அதனைப் பூரண கும்பம் பெறச் செய்வதற்கும் மூதறிவாளர் ஒருங்கு குழீஇ, நல்லனவற்றைக் கொண்டும், அல்லனவற்றை யொழித்தும் வழி படுத்துவர். அதன் பொருட்டே தமிழ் நாட்டினும் சங்கங்கள் இரீஇயினர். அவர்கள் தமது காலத்தில் இயற்றப்பெற்ற நூல்களில் பெருந்தன்மையும், கண்ணியமும் உடையனவற்றை யாதரித்தனர். அவ்விதம் ஏற்பட்ட நூல்களே சங்க நூல்கள் எனப்படும்.

தலைச்சங்கம் குழீஇப் பல்லாண்டுகள் கழிந்த பின்னர் மொழியும் ஈனதிசையிற் சேர்ந்தது. கடலரையன் நிலமகண்மேற் போர் தொடுத்தனன்; பாண்டியன் முதுநகராய மதுரையும் நீர் நிலை கண்டது; நூல்களும் உடன் அழிந்தன. முதற் சங்கத்தில் ஏற்பட்ட நூல்களில் ஒன்றேனும் இப்பொழுது அகப்பட்டிலது *

பின்னர் ஆண்டுகள் பல செல்லத் தமிழ் மொழியும் (தற்போதிய போல்) காலக்கிரமத்தில் ஈனதிசையுற மீண்டும் அதனை மேம்படுத்த இடைச்சங்கம் குழீஇனர். அவ்வண்ணமே கடைச்சங்கமும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

இனி யிடைச்சங்கத்து நூல்களுள் தொல்காப்பியந் தவிர ஏனைய வொன்றும் முற்றிக் கிடைத்திலது. இவ்விடைச் சங்கமும் முன்னையது போன்று மறையத் தமிழும் முன்போல் இழிவுற்றது. இவ்வண்ணமே பல்வேறு காலத்தில் பல் வேறு சங்கங்கள் குழுவுதலாயின. தற்போதும் மதுரைமா நகரின்கண் ஒன்று பொலிவது காணலாம்.

'சங்கநூற்கள்' என இப்போது போற்றப்படுபவை யனைத்தும் கடைச் சங்கத்தவையேயாம். அவைகளிற் சிறப்புற்றவையும், பல்லோராலும் போற்றத்தக்கவையும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க் கணக்குகள் வரையுமன்றிக் களவியல் ‡ "கூத்து, வரியும், பேரிசையும், சிற்றிசையு மென்றித் தொடக்கத்தன" வுமாம்.

ஒரு தேயத்தின் அறிவும் ஆற்றலும் வன்மையுந் திறனும் அதன் கணவழங்கு மிலக்கியத்தா லுணரலாம். ஒருவன் மனத்தால் உணர்வதை யல்லால் அதன்மேல் அவன் நினைத்தலருமை யென்பது தத்துவ உண்மை

* தலைச்சங்கத்து நூற்களுள் ஒன்றாகிய 'சேங்கோன்றரைச் செலவு' என்னும் நூலின் சிலபாகங்கள் வெளிவந்துள்ளன.

‡ இறையனாரகப் பொருளுரை முதற் சூத்திரம்.



யன்றே? அதனால் ஒரு நாட்டினர் நினைப்பதுஞ் செய்வதுமே யவர்களியற்றும் நூல்களிற் பிரதிபலிக்கும்.

தமிழ் நூற்களில் ஆராயப்புகின் இதன் உண்மை தேற்றமாகும்; ஆரியர் வருவதற்கு முன்பே, தமிழகத்தில் தமிழ்நர் தமது வழக்க வொழுக்கங்களுடன் அன்புடையா ரென்பும் பிறர்க்குரியா ராதலின்,

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினு மீதலே நன்று"

எனவுணர்ந்து பெண்ணிற் பெருந்தக்கவளுடன் அமிழ்தினு மாற்றவினிய மக்கட்பேறுற்று அடக்கமும், ஒழுக்கமுங் கூடி, பிறர்பொருள் வெஃகாது, கட்புலான் மறுத்து, இல்லறத்தையோம்பி யிருந்தனர். பிற்றை நிலைமுனியாது கற்று, கேள்விப்புலனும் பெரியார் துணையுங்கொண்டு, குற்றஞ் சிற்றினங் கடிந்து தீவினைவிட்டுப் பொருளீட்டிப் 'பெருமிதமில்லா' 'அற்றமறைக்கும் பெருமை' யுடன் வாழ்ந்தனர். போரின்கண் மன்னர் 'அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சாது' அறநெறியே வெற்றித்திறனைப் பூண்டனர். 'மார்பின் எஃகுறு விழுப்புண் பல'* ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். போர்க்களத்தில் இறந்தார்க்கு நன்மதிகாட்டினர்; நடுகல் நட்டுத் தருசிறப் போம்பினர். பெண்மக்களும், மனைத்தக்க மாண்புடையராகிக் குலமகளிர்க்குத் தெய்வம் கொழுநரே எனத் தேர்ந்து மங்கல மென்னும் மனைமாட்சி யோம்பி, உடன் 'வருவிருந்து வைகலுமோம்பி' வாழ்ந்தனர். அவர்களும் வீரத்தின் ஆண்மக்கட்குத் தாழ்ந்தவரல்லர்; காதலர் போர்க்களத்தில் இறந்துழித் தாமும் உயிர்துறக்கும் நீர்மையவர்; அவர் வெந் புறங் கண்டு இல்லம் நாடின் 'புகழின்றான் புத்தேளுட்டில்லாதால்' அவரை வாயின் மறுக்குந் தன்மையவர். தவப்பயனுற்றேன்றிய புதல்வனே யாயினும் 'போரிற் பகைவர்க்குடைந்தான்' என்று கேள்வியுறின் அவனை மகனெனவும் பாரார் கொல்லவுந்துணியும் மறகையுடையவர். பிறவும் விதந் தோதுவது மற்றொன்று விரித்தலாகுமென்று அஞ்சி விடுக்கப்பட்டது.

இவ்வாற்றான் சிறப்புற்றிருந்தார் தமிழர். இப்போதோ! ... தமிழ் மொழி பயிலுவரே நன்குணர்வர் அவர்தம்நிலைமை. முந்திய சிறப்பினையெடுத்தோதுவதே நம்மையும் அந்நிலைக்குய்க்குமென் றெண்ணிப் பலரும் தமிழ்மகளை யேத்துவார்களாக. அவ்வணம் நமது சகோதர சகோதரிகள் பலகாலும் அதனைச் சிந்தித்து வழிபடின் நாம் வரைந்ததன் பயனடைந்தோ மாவோம்.

"பாலும் வாய்வழி வழிதா மரிப்பவர் பலர்போன்
மாலுஞ் சோகமு மலிய நான் வருந்திடத் தகுமோ
வாலும் வாரியுந் துயில்பவன் போய்வரு வந்நா
ளோலு மெய்ப்புக ழொடுமிகப் படருமொண் டமிழே"

துடீனதயாளு.

* புறநானூறு - 233. விழுப்புண் - மார்பில் பகைவர் வேலால் உண்டாகும் புண்.

# இந்திய கைத்தொழில்.

கைத்தொழில் என்பது, ஜனங்கள் தாங்கள் உபயோகிக்க வேண்டுங் காரணத்தால் தங்களுக்குத் தேவையானவைகளைத் தங்கள் கைகளால் நிர்மாணிக்கும் தொழிலாம். கடினமானவற்றைச் செய்வதற்கும், கைகளால் காலதாமதத்தில் செய்யக் கூடியவைகளைக் குறைந்த காலத்தில் செய்வதற்கும், அதிகப் பணம் விலையுள்ள பல இயந்திரங்களைக் கொண்டு வேலை செய்தும், தொழிலபிவிருத்தி செய்தும் வருகின்றனர். நம் சௌகர்யத்திற்கு இன்றியமையாதன வாகிய வஸ்துக்களும், நாம் உபயோகிக்கும் பெட்டி, துணி, மணி, காகிதம், பேனா, பென்சல், தீக்குச்சி முதலியயாவும் கைத்தொழில் வல்லுநர் உதவியேயாம். அவரவர் திறமைக்கேற்ப அவை நேர்த்தியாயும், நேர்த்தி யின்றியுமிருக்கும். கைத்தொழில் வல்லுநர் குறைந்திருக்கும் பிரதேசங்களில் உள்ளவர்கள், நிறைந்திருக்கும் தேசத்தவர்களிடமிருந்தே அவற்றை வருவித்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. நம் தாய்நாடு விளக்கேற்றத் தீக்குச்சி, எண்ணெய் முதல், உடுக்கத் துணி வரை அன்னிய நாட்டை எதிர் பார்த்துக்கொண் டிருக்கிறது. பருத்தி நம்தேயத்திலிருந்து ஏராளமாய் ஏற்றுமதியான போதிலும், நாம் அதிக விலை கொடுத்தே சீமையிலிருந்து வரவழைக்கப்படும் ஆடைகளை உடுத்துகிறோம். ஏதாவது ஒரு காரணம் பற்றி, அந்நாடுகளிலிருந்து நாம் கோரும் பொருள்கள் வரத்தடைப்படுமாயின் நம்பாடு அம்பல மாகும். நடந்த யுத்தத்தால் ஏறிய விலையும், நிகழ்ந்த பஞ்சமும் நீங்கினபாடில்லை என்பது வெள்ளிடை மலையாய்த் தெரிவதே.

ஒருதேசம் முன்னேற்றமடைய வேண்டின் அஃது கைத்தொழிலில் மேம்பட்டதாயிருக்க வேண்டுவது அத்யாவசியம். இங்கிலாந்தின் செல்வத்தையும், இதர மேல்நாடுகளின் நிலைமைகளையும் கவனிக்கின் அவைகளின் கைத்தொழிலே அதற்கு ஆதாரவாய் நிற்கின்றது. ஜப்பான், ஐக்யநாடு முதலியவைகளின் பிரதாபமும் கைத்தொழிலாலே யன்றோ? ஜப்பான் நமக்கு யுத்தகால்த்தில் நெருப்புதவாவிடில் நாம் கஷ்டத்திலன்றோ இருந்திருப்போம். நமது தேசம் கைத்தொழில் குன்றியதற்குக் காரணம் நம் நாட்டு லக்ஷாதிகார பிரபுக்களின் கவனக் குறைவேதான். ஏனெனில், இவர்கள், மேல்நாட்டுப் பிரபுக்களுக்குள்ள ஐக்யம், உழைப்பு, துணிவு, முதலியவைகளைப் பின்பற்றாது, அவர்கள் உடை, நடை, பாஷை, பாவனைகளில் மயங்கி அவற்றைப் பின்பற்றுதலே நாகரீகமென மதித்துத் தங்கள் செல்வத்தை நிதி (பாங்கி)களில் விட்டு அல்லது வட்டிக்குவிட்டு, அல்லது பெரியபங்களா அல்லது நிலங்களிற்காகப்போட்டுச் சேமித்து வருகின்றனர். சிலர் இன்னும் பூமியில்புதைப்பதையும் ஆண்டு வருவார்கள். இவர்கள் மேல்நாட்டு வியாபாரிகளைப்போல் துணிந்து ஒரு பெரும் வியாபாரத்தின்மேல் போட்டால்



ஒருவேளை நஷ்டம் வந்தாலும், வந்துவிடுமென ஊமைக்கனவு கண்டு, "மருண்டவன் கண்ணிற்கு இரண்டதுவே" யெனப் பயந்து கைத்தொழிலபிவிருத்தியைக் குறைத்தனர்.

நம் நாட்டில் வேலை கிடைக்காமல், கூலியின்றி ஏழ்மைத்தனத்தால் ஜாண் வயிற்றிற்காக நம் சகோதரர்கள் பிஜுங், நேடால் முதலிய அயல்நாடுகளில் அடிமைகளாக விருந்து உழைக்கின்றனர். மின்சார வண்டி அபாதசாலை நீராவியந்திரம் (Railway)போக்குவரவு காரியநிர்வாகங்கள் முதலியவை நம் நாட்டில் இந்திய ஊழியரே செய்தபோதிலும் ஒன்றுக்காவது இந்திய முதலாளி யிருக்கவில்லை. ஏன் துணிந்து அவைகளைத் தாங்கள் எடுக்கலாகாது? ஊதியம் வருமோ, வாராதோ என அஞ்சாமல் துணிந்து முன் வைத்தகாலைப் பின்வாங்காது ஒன்றில் கருத்துடன் உழைக்கின் பலன் அவசியம் வந்தேதீரும். முதல் வைக்கலாகாதெனினும் "முயற்சி தான் மெய்வருந்தக் கூலி தரும்" என்ற தமிழ் வேதாசிரியர் உரையும் "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்" என்ற அனுபவ முதுமொழியையும் ஈசன் பொய்ப்பிக்காது துணை யிருந்து ரக்ஷிப்பார்.

மேல்நாடுகள் சுத்த அநாகரீகமான நிலைமையிலிருந்தபோது நம் நாடு நில்வளம் நீர்வளம் பொலிந்து சகல பாதார்த்தங்களும் மலிந்து செல்வர்கள் செழித்து, சத்வ குணச்சாதுக்கள் சூழ்ந்து பொன்பவமுதுண்ண கைத்தொழில், நாகரீகம் முதலியவைகளில் மேம்பட்டிருந்தது உலகமே அறியும். நம் புராணசரிதமும் தென்னாட்டு ஆலயங்களும் நம் பூர்வபெருமையை விளக்கி நிற்கின்றன. ஆனதுபற்றி அங்கங்கே பலவித கைத்தொழில் சாலைகள் சுதேச முதலாளிகளின் ஐக்யபாவத்தால் ஏற்பட்டு நமக்கு வேண்டிய சகல பொருள்களும் இங்கேயே செய்யும்படியான தீவிர ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். அஃதின்றி நமது பணம் வீண் பகல் கொள்ளையாகிறதே யென்று கூக்குரலிட்டு, "விதேச சாமான் வாங்காது சுதேச சாமன்களை வாங்குக" என்று வாய்ப்பறைமட்டு மடிப்பதில் பயனடையோம்.

பரிட்சையில் தவறிய மாணவர், பலர் தங்களை இகழுகிறார்களென்று அறியாமையால் தற்கொலை முதலிய செய்ததைக் கேட்டுள்ளா மன்றோ? படிப்பில் மட்டுமே நல்வாழ்வும் ஏராளமான பொருளீட்டமும் கூடுமென்ற நோக்கம் முற்றிலும் தவறு. நாடு முன்னேறக் கைத்தொழில் வளுக்கவும், தாங்கள் நல் ஊதியம் பெறவும், அடிமையாகாது சுயேச்சையாயிருக்கவும், என் அச்சகோதரர்கள் வீணில் மனமழுங்கி மாளாது, கைத்தொழில் அல்லது வியாபாரத்துறையில் இறங்கி நல்வழி யடையலாகாது? இனியாகினும் பரமன் நற்புத்தி அவர்களுக்குக் கொடுக்கலாகாதா! கைத்தொழில் சாலைகள் அளவற்று நியமிக்கப்படின் அயல் நாட்டிலிருந்து துரத்தப்படும் நம் ஏழைச் சகோதரர்கள் உழைத்து நாழியரிசிகொண்டு வயிறு வளர்க்கப் புகலிட மாகுமல்லவா! கைத்தொழில் சாலைவைக்க மூலதனம்

தேவையாகையால் ஏழைக் குடும்பிகள் எக்கைத்தொழில் செய்வது என்று யோசிக்கவேண்டியதில்லை. நம் பூர்வீகர் கையாண்ட "சுதர்சனம்" என்ற சக்கிரத்திற் கொப்பாகிய இராட்டினத்தில் ஊக்கமுடன் வீட்டுவேலைகளைச் செய்து ஒழிந்த நேரத்தில் நூல் நூற்றுத் தினத்திற்குக் குறைந்தது எட்டணா சம்பாதிக்கலாம். கிராமாந்திரங்களில் ஏழைச்சிறுமிகள் நள்ளிருளிலும், விடியற்காலத்திலும், நடுப்பகலிலும், இலுப்பை முதலியமரங்களிடம் சென்று ஒவ்வொன்றாய்க் கொட்டைகளைப்பொறுக்கிச் சிலமணி நாவகாசத்திற்குப் பிறகு ஒருபடி அல்லதுழக்குச் சேர்த்துக் கடையில் போட்டு பணம் சம்பாதிக்க முயலுவதைக் காணலாம். தயவான தர்மவான்கள் அவர்களுக்கு இராட்டினமில்லாவிடில் செய்து கொடுத்தால் அல்லது அதன் தத்துவத்தைக் கற்பித்துக் கொடுத்தால் அவர்கள் வறுமையும் நீங்கும்; கைத்தொழில் மிகின் வியாபாரம் வலுக்கும்; வியாபார வலுவால் செல்வமும் கீர்த்தியும் சேரும். ஆகையால் நம் "ஆனந்தனின்" சந்தாநேய சகோதர சகோதரிகளே!

நம் தாய்நாட்டின் அபிவிருத்தியைக்கோரிச் சதா ஈசனை வேண்டி முயலுங்கள். இந்திய விவசாயம், கைத்தொழில், வியாபாரங்களை அபிவிருத்தி செய்யுங்கள். சர்வாந்தர்யாமியாகிய பரம் பொருள் நல்லருள் பாலிக்க வேண்டுவது நமது பிரார்த்தனை. ஓம் தத் ஸத்.

நா. கிருஷ்ணசாமி ஐயர்,
தலைமை ஆசிரியன், போர்டு பாடசாலை,
குரும்பேரி, திருப்பத்தூர், (வட ஆற்காடு.)

குறிப்பு:—சகோதர சகோதரிகளே! இவ்விஷயத்தை யொவ்வொருவரும் சிரத்தையோடு வாசித்துணர உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். மனிதருக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்கள் இரண்டே. உணவும், ஆடையும். அவற்றிற்கு வேண்டியவைகள் ஏராளமாக நம் நாட்டில் உற்பத்தியாகின்றன. அவ்வாறிருக்க நாம் உணவுக்கு அன்னிய நாட்டை யெதிர்பார்ப்பதும், உடைக்கு மூலவஸ்துவாகிய பஞ்சை நாம் உற்பத்தி செய்து சொல்ப விலைக்கு அந்நிய நாட்டாருக்குக் கொடுத்துவிட்டு, பிறகு அவர்களிடமிருந்து எவ்வளவோ அதிக விலை கொடுத்து உடை வாங்குவதும் எத்தகைய மதிகேடான விஷயம் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். எதிர்பாராத காரணத்தால் அந்நிய நாட்டிலிருந்து துணிகள் இங்கு வாராவிட்டால் நம் நிலைமை யெவ்வாறாகும் என்பதையும், கடந்த யுத்தத்தால் துணி விஷயத்தில் ஏற்பட்ட கஷ்டத்தையும், விலை யதிகத்தையும் சிந்தித்துப் பாருங்கள். இனியேனும் நமது நாட்டுத் துணிகளை யதிகமாக உற்பத்திசெய்ய முயன்றால் அதனால் அடையத்தக்க பலன் மிக்க அதிகமென்று நம்புங்கள். தமிழ் வேதத்தை யருளியவரும், பிரம்மாவின் அவதாரமெனக் கருதப்பட்டவருமாகிய நாயனார் எல்லாத் தொழில்களிலும் பாபமற்றதென் றெண்ணித் தாமே செய்துவந்த நெசவுத் தொழிலை இழிவென்று கருதுவோர் அம்மகானைப் பழிக்கும் அறிவிலிகளே யாவர். இத்தொழில் என்றும் நிலையா யிருக்கத்தக்கது; ஆண், பெண் அனைவரும் கஷ்டமின்றி வீட்டில் உட்கார்ந்தபடி செய்யக்கூடியது. தென்னாட்டில் சிலவிடங்களில் இத்தொழிலைச் சிரத்தையோடு ஆரம்பித்திருப்பதாகத் தெரிகிறது. இது புகழ்ச்சிக் குரியதாகும். நம் நாட்டில் மற்ற விடங்களிலு முள்ளோர் இதில் சிரத்தை யெடுத்துக் கொண்டால்தான் நம் நாடு இனியேனும் முன்னுக்கு வந்து தரித்திரமும், கஷ்டமும் குறையும். ஆண்டவனருள் புரிவாராக.

பத்திரிகாசிரியர்.



---

## கைவல்ய நவநீத வசனம்.

(149-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (குரு முக்கியானந்தத்தின் பெருமை கூறல்.)

"இரண்டற்றதும் சுழுத்தி யல்லாததுமாகிய முக்கிய நிஜானந்தத்தி னனுபவமே துரியாதீதம் என்ற ஏழாம் பூமியாம். எவன் இந்த ஏழாம் பூமியில் இருக்கிறானோ அவன் நாரதன், சிவன், விஷ்ணு, பிரமன் முதலியோருடைய அனுபவமான ஆனந்த நிலையி லிருப்பவனாவன். அவர்களை யவனுக்கு உவமானமாகக் கூறலாம். அத்தகைய மகாபுருடனது பாததூளிகள் என் சிரசில் தரிக்கத் தக்கனவாம்.

இவ்வாறு ஆனந்தங்களின் வகைகளைக் கூறினோம். இன்னும் வித்தியானந்தம் என்ற ஒன்றுண்டு; அதை முடிவிற் கூறுவோம். சுகதுக்காதி தொந்தங்களைப் போக்கிய மைந்தனே! இன்னும் சந்தேகங்க ளுளவேல் கேட்பாயாக.

சீடன்:—குருநாதனே! ஆன்மா சச்சிதானந்த ஸொரூபமென்று முன்னம் கூறி யருளினீர்களே. சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று பதங்களும் தனித்தனி வெவ்வேறு பொருளுடையனவாக விருக்கின்றனவே. (அஸ்தம், கரம், பாணி என்பவைபோல்) ஒரே வஸ்துவின் பரியாய நாமங்களாக விருக்கவில்லையே. அப்படி யிருக்க சஞ்சலப்படும் மனமானது ஏகசொரூபமான அநுபவத்தில் எவ்வாறு நிலைத்து நிற்கும்? ஆகையால், தேனீக்கள் பல மலர்களினின்றெடுத்த தேன் (ஏகரசமாக விருப்பது) போல், அதை அடியேனுக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

ஆசான்:—மைந்தனே! ஜலத்தினிடத்தில் குளிர்ச்சி, நெகிழ்ச்சி, வெண்மை என்ற மூன்று குணங்க ளிருக்கின்றன வென்பதனாலேயே ஜலம் மூன்று பொருள்களாயினதோ? இல்லை. உஷ்ணம், பிரகாசம், சிவப்பு என்ற மூன்று குணங்களுள வென்பதனால் அக்கினியும் மூன்று பொருள்களாய் விட்டதோ? இல்லை. பிரபஞ்சம், அசத்து, சடம், துக்கம் என்று நன்கறியும் பொருட்டு பிரம்மத்தினிடத்தில் அவற்

றிற்கு மாறான சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று குணங்களுண்டென்று வேதம் அறிவித்ததே யன்றி, சச்சிதானந்த சொரூபமாகிய பிரம்மம் ஒன்றே யாகும்.

பிரம்மத்திற்கு நித்தியம், பூரணம், ஏகம், பரமார்த்தம், பரப்பிரம்மம், நிதானம், சாந்தம், சத்தியம், கேவலம், துரியம், சமம், திருக்கு, கூடஸ்தன், சாக்ஷி, போதம், சுத்தம், இலக்கியம், சநாதனம், சீவன், தத்துவம், விண், சோதி, ஆன்மா, முத்தம், விபு, சூக்குமம் என்ற அனேகம் விதி நாமங்களையும், அசலம், நிரஞ்சனம், அமிர்தம், அப்பிரமேயம், விமலம், வசனாதீதம், அசடம், அநாமயம், அசங்கம், அதுலம், நிரந்தரம், அகோசரம், அகண்டம், அசம், அநந்தம், அவிநாசி, நிர்க்குணம், நிட்களம், நிரவயவம், அநாதி, அசரீரம், அவிகாரம், அத்துவிதம் என்ற அனேகம் நிஷேத நாமங்களையும் வேதம் கூறா நிற்கும்.

இவ்வாறு அனேக விதி நிடேத குணங்கள் யாவும் சேர்ந்து ஒருமித்து வேதம் சொன்ன பொருள் ஒன்றேயன்றி இரண்டல்ல. அகண்டைகாசமான பிரம்மத்தைப் பிரதிபாதியா நின்ற பதங்கள் பின்னமான சத்தங்களாயினும், சத்து, சித்து, ஆனந்த மென்னும் விசேடணங்களை யுடைய பிரம்மம் ஏகசொரூபமே என்ற உண்மையை யுணர்ந்து அகண்ட பரிபூரண சொரூபமாக விருப்பாய், மைந்தனே.

### (சீடனுக் குதிக்கக்கூடிய சங்கையைக் குரு தாமே கூறி அதற்குச் சமாதான முறைக்கிறார்.)

மைந்தனே! நிர்க்குணம் என்று கூறிய பிரம்மத்திற்கு வேதம் குணங்களைக் கூறுவது 'என் தாய் மலடி' என்பதுபோல் வியாகாதம் (முன்னுக்குப் பின் விரோதமான வார்த்தை) ஆகாதோ என்று சங்கிக்காதே. பிரம்மத்தினுடைய குணங்களைக் கற்பித்துக் கூறாமல் அதை யறியத்தக்க சாமார்த்தியமுடைய அறிவாளிகள் யாரிருக்கிறார்கள்? ஒருவருமில்லை. சீவன்கள் முத்திசுக மடையும்பொருட்டு அவர்களுக்குப் பிரம்ம ஞானம் உதிப்பதற்காகக் கற்பிக்கப்பட்ட குணங்கள் பிரம்மத்தின் குணங்களல்ல; பிரம்மமாகிய சொரூபமே யாகும்.

### (சீடன் சந்தேகம் பூரணமாய் நிவர்த்தி யாவதற்காகப் பின்னும் வினாதல்.)

**சீடன்:**—அஞ்ஞான இருள் நீங்கக் கோடி சூரியர்கள் உதித்ததுபோல் எழுந்தருளிய ஆசாரியரே! ஏக பரிபூரணமாகிய எனது சொரூபவநுபூதி என் உள்ளத்தில் அழுந்தும்படியாகச் சுருதிகள் கூறியவாறு என்னை யகண்டாகார சொரூபமாகக் கண்டேன். உத்தியும் எனக்குப் பொருந்தும்படியாக வருளிச் செய்தால் பசுமரத் தாணிபோல் என் நெஞ்சில் அழுந்து மல்லவோ.



ஆசான்:—மைந்தனே! சத்தாக எப்பொருள் உளதோ அதுவே சித்தாகப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. அப்படிக்கின்றி சத்தினின்றும் அது வேறெனில், அச்சித்தாகிய பொருள் சடமாகும். அப்படி அசத்தாயின் அது எவ்வாறு சாட்சியாக விருக்கலாகும்? ஆகையால் சத்தே சித்தென் றறியவேண்டும்.

பிரகாசித்துக்கொண் டிருக்கிற சித்தே சத்தாக இருந்துகொண் டிருக்கிறது. அச்சித்திற்குப் பிரகாசிக்கும் தன்மை யின்றேல் அது சடமாகும்; சடபதார்த்தங்களுக்கு இருப்பே யில்லை. ஆதலின், சித்தே சத்தென் றறிய வேண்டும். இவ்வாறு சத்தும், சித்தும் ஏகமாய்த் தோன்றுவ தெதுவோ அதுவே ஆனந்தமாம். அப்படிக்கின்றி சத்தாகிய சித்துக்கு ஆனந்தமாகிய அது அன்னியமாயின், அது அசத்தும் ஜடமுமாகும். அப்போது ஆனந்தானுபவம் உதியாது. ஆகையால் சத்தும், சித்துமே ஆனந்தமென அறிய வேண்டும். இதனால் சத்து, சித்து, ஆனந்தமே சொரூபமாகிய பிரம்மம் ஏகமே என்று யூகிப்பதற்கு இவ்வுத்தியே தலைமையானதாகும்.

மேலும் சத்து தன்னாலேயே பிரகாசிக்கிறதன்றி வேறொன்றா லல்ல. வேறொன்றா லெனின், அந்த வேறொன்று சத்தா அசத்தா வென்றும் கேள்வி வரும். அசத்தென்றால், அசத்து சத்தை விளங்கச் செய்யாது. அப்படிக்கின்றி அதுவும் சத்தெனில் மறபடி யது தன்னால் பிரகாசிக்கின்றதோ வேறொன்றாலோ வென்று கேள்வி தோன்றி வேறொன்றன்றனில் இவ்வாறே முடிவில்லாது போய்க்கொண்டே யிருக்கும். ஆதலின் சத்தே சித்து, சத்து சித்தே ஆனந்தம். இப்படி சச்சிதானந்த சொரூபமாய் விளங்காநின்ற பிரம்மம் ஏகவஸ்துவே.

இவ்வாறு சச்சிதானந்தங்கள் வேறுபடாமல் ஏகமாக விருக்கிற தன்மை சுருதி யுக்திகளுக்கு ஒத்திருப்பதுபோல், அநுபவமும் ஒத்திருப்பதைக் கூறுதும் கேட்பாயாக. உனது சுழுத்தியின்கண் அனுபவித்த ஆனந்தமானது (அங்கே அஞ்ஞானத்தைப் பிரகாசிப்பித்துக் கொண்டிருந்து) விழித்தபின் (நான் ஒன்று மறியாமல் சுகமாக நித்திரை செய்தேன் என்று) ஸ்மிருதிரூபமாக உதித்தலால் அவ்வானந்தமே அறிவாம். (ஸ்மிருதி ரூபமாக உதித்தது எனின், அநுபவிக்கும்போது தோன்றாமல் பிறகு நினைவு வந்து அறியப்படுவது)அதாவது சித்தாம். அச்சுழுத்தியின்கண் அந்த ஆனந்தத்தைத் தவிர விளக்கிவைக்க வேறு பிரகாசமில்லை. சுழுத்தி, பிரளயம் இரண்டிலும் சிதானந்தனாகிய நீ யிருந்தே அஞ்ஞானமாகிய இருளைக் காண்கிறாய். ஆதலின் நீ சச்சிதானந்த சொரூபனே. சச்சிதானந்த சொரூபமே பிரம்மம் என்று சுருதி கூறுவதால் நீ பிரம்ம சொரூபமே. பிரம்மம் என்றால் எங்கும் வியாபகமானது என்று பொருள்.

சுழுத்தியில் எவ்வாறு காண்கிருயோ அவ்வாறே விழிப்பி லிருக்கும் போதும், எப்போதும், உன் உள்ளத்தில் அவ்வாறே நோக்கி அகண்ட பரிபூரண அனுபவத்தி லிருப்பாயாக.

சகல ஞானநூல்களையு முணர்ந்த அனுபவியாகிய ஆசான் சச்சிதானந்தங்கள் ஒன்ருகிய பரமார்த்த நிலையை மொழிந்தபடி சீடன் தன் அநுபவத்தை விடாமல் பலகாலும் நிஷ்டைகூடிச் சமாதியிலிருந்தான். பிறகு சமாதியினின்றும் விழித்தபோது, அநேகவித ரூபங்களான சராசரங்களாகிய சித்திரங்களனைத்தும் தோன்றும் அகண்ட சச்சிதானந்தப் பிரம்மமாகிய ஒருபடம்போ லாஞன்.

கடலில் அலை திவலை நுரையாதிகள் தோன்றிக் காணப்படுவது போல அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரம்மத்தின்கண் இச்சராசரப் பிரபஞ்சங்களெல்லாம் ஆரோபமாய்த் தோன்றி யிருப்பதால் பிரபஞ்சங்களைச் சித்திரங்களாகவும், ஆதார மாகிய பிரம்மத்தைப் படம் என்றும் கூறினர்; இதையே அகண்டாகார அனுபவமென்பர். இதுவே சீவன் முக்தனது அனுபவ நிலை.

சுழுத்தியில் அறிவு அவித்தையாகிய அஞ்ஞான இருளை யெதிரிட்டறிகிறது. நித்திரையற்ற சாக்கிர நிலையில் மனதை யொடுக்கி அவ்வாறு அறிவு மயமாய் விளங்குவதே சீவன் முக்தி நிலையாம்.

"கண்ட அறிவுதனைக் கொண்டுன்னைக் கண்மறைத்த
பண்டை யிருளைநீ பார்த்துக்கா ணென்ருனே."
(தத்துவராயர் தாலாட்டு.)

இதற்கே நினைவிற் சுழுத்தி என்றும் பெயர். தன் அனுபவநிலையாகிய இந்நிலையில் நின்ருல் எல்லாம் அகண்ட பிரம்ம சொரூபமாய் விளங்கும்.

"தன் மயமாய் நின்றநிலை தானேதா ஞகிநின்ருல்
நின்மயமா யாவும் நிகழும் பராபரமே." (தாயுமானவர்.)

"மேனியிற் புறத்தி னுள்ளின் மேலொடு கீழிற் றிக்கில்
வானில்வை யகத்தி லெங்கும் யானன்றி மற்ருென் றில்லை
யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாது மில்லை
தானிகழ் பொருள்வே றில்லை சச்சிதா நந்த மென்ருன்."
(வாசிட்டம் - கசன் கதை.)

உயிரசைவாலே தான் மனமசைகிறது. ஆன்மாவையன்றி மனம் அசையமுடியாது. மனம்ஜடம். ஆன்மா உற்று நோக்கிஞல் அந்த உண்மை வெளிப்படும். ஆன்மா தன்னை மறவாது தன் நிலையில் நின்று மனம் எங்கே யென்று நோக்கிஞல் மனதிற்குத் தன்னையன்றி வேறு இருப்பிட மில்லை யென்பதும், இதையே மாயை யென்பது உண்மையென்றும் அநுபவமாக விளங்கும். இம்மனதின் அசைவை வளர விடாதடக்கிச் சுழுத்தியில் அது எப்



படி ஒடுங்கிச் சாட்டை யற்ற பம்பரம்போலும், கயிறற்றக் காற்ருடிபோலும் கிடந்ததோ, அவ்வாறு நிலையில் சுழுத்தியற்ற சாக்கிரத்திலேயே அதை யிருக்கும்படி செய்யின் ஆன்மப்பிரகாசம் தோன்றும். ஞானேதயமுண்டாம்.

"உண்டாகி யெவ்விடத்து முற்ற போத
முயிரசைவா லுணர்வுறுமப் போதந் தன்னை
மண்டாமற் றடுக்கைபெரு நன்மை யாகும்
வளர்போதங் காண்பவற்றை மருவு மாலாற்
றண்டாத காண்பவையே மனத்திற் கென்றுந்
தவிராத துயராமத் தனிப்போ தந்தான்
மிண்டாத சுழுத்தியிற்போ தம்போ னிற்கில்
வீடதுபே றதுவிமல பதம்வே றில்லை" (வாசிட்டம்)

(தொடரும்.)

சீடன்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்

(140-ம் பக்கத் தொடர்ச்சி.)

12. சுயமுயற்சி.—சகோதரர்களே! கல்வி கற்கும்போது சாதாரணமாக உபாத்தியாயரே நமக்குக் கல்வியை யளிக்கிருர் என்று கருதுகிறேம். உபாத்தியாயர் தாம் கற்றகல்வியில் நமக்குக் கொஞ்சம் பகிர்ந்து கொடுப்பதில்லை. கல்வியாலுண்டாகும் அறிவின் வல்லமை வெளியிலிருந்து வருவதில்லை. அது நமக் குள்ளிருந்தே வெளிப்படுகிறது. உபாத்தியாயர் வழிகாட்டி யாகமட்டுமே யிருக்கிருர். ஆகையால் நமது முயற்சியாலேயே நாம் விசேஷ ஞானத்தையடைய வேண்டும். சிலபிள்ளைகள் தாங்கள் பரீட்சையில் தேருவிட்டால் உபாத்தியாயர் சரியாய்க் கற்றுக்கொடுக்கவில்லை யென்கிருர்கள். இதைப்பலர் நம்பிக்கொள்கின்றனர். அதே யுபாத்தியாயரிடம் வாசித்த மற்றபிள்ளைகள் தேறியிருப்பதே அப்படிக் கூறுவது தவறு என்பதைக் காட்டுகிறது. ஆன்ம ஞானமே நமக்குள்ளிருந்து முடிவில் நமக்கு நாமே யதை யடைகிறேமே யன்றி ஞானகுருவினிட மிருந்து அதைப் பெறுவதில்லை. அவர் சீடர்களில் அவனவன் தரத்திற்குத் தக்கபடி வழிகாட்டுகிருரே யன்றி வேறில்லை. ஆகையால், அபாரமான சக்திகளைப் பெறுவது நமது மனே முயற்சியைப் பொறுத்ததாகவே யிருக்கிறது. உபாத்தியாயர் பத்து நிமிடம் வழிகாட்டிஞல் நாம் நூறு நிமிடம் அவ்வழியில் உழைக்க வேண்டும். மனேவல்லமையோடு உழைப்பவன் உபாத்தியாயரின் உதவியை மிகச் சொல்பமாகவே எதிர் பார்ப்பான். இதை நிரூபிக்க ஒரு சிறு சங்கதி பாரதத்தி லுள்ளதைக் கூறுகிறேம்:—

"ஏகலவன் என்ற ஒரு வேடன் பாண்டவாதியருடைய தநுர் ஆசாரியராகிய துரோணரை வணங்கித் தனக்கு வில்வித்தை கற்பிக்கும்படி வேண்டிஞன். துரோணர் அரசகுமாரர்களுக்கன்றி வேடஞகிய உனக்குக் கற்பியோம் என்றனர். ஏகலவன் அவரையே தன் குருவாக எண்ணிவிட்டாஞதலின் "இது தமது கட்டளையாயின் குரு வாக்குக்கு மறுவாக்கில்லை. அவ்வாறே யாகுக" என்று சென்றனன்.

பிறகு துரோணசாரியர் தமது சீடர்களில் அர்ச்சுனனே மிக்க புத்திசாலித் தனமாகத் தாம் கற்பிக்கும் வித்தைகளைக் கிரகித்துக் கொள்வதன்றி

தானே விர்த்தியும் செய்துகொள்வதைக் கண்டு அவன்மேல் சந்தோஷங் கொண்டு, ஒரு மிருகத்தின் தலைப்புறம் அல்லது வாற்புறம், ஒருபுறம் அம்பெய்தால் மறுபுறம் வரை அம்மிருகம் இரண்டாகப் பிளந்து போகத்தக்க ஒரு அரியவித்தையை யர்ச்சுனனுக்குக் கற்பித்துக் கொடுத்து, "இதை யுனக்கே போதித்திருக்கிறேன், வேறெவருக்கும் கற்பித்திலன்" என்று கூறினார்.

இவ்வாறிருக்க, ஒருநாள் வனவேட்டைக்குச் சென்ற பார்க்குனன் ஒருவேடன் ஒரு காட்டுப்பன்றியின் நெற்றியில் அம்பெய்து அப்பன்றிவால் வரை இரண்டாகப் பிளவுபட்டு விழுமாறு செய்ததைக் கண்டு அவ்வேடனை நோக்கி "ஏ புளிஞனே! நின்பெயர்யாது? பெறற்கரிய இப்பெரியவித்தையைப் புகன்ற நின்குரு யார்? புகலுதி" எனலும், வேடன், "அய்ய! அடியேன் பெயர் ஏகலவன் என்ப; என் வில்லாசிரியர் துரோணாசாரிய ராகும்" என்றனன்.

இம்மொழிகளைக் கேட்ட கிரீடி, "ஏ! நமது விப்பிர ஆசிரியரின் செய்கை நன்று நன்று; நினக்கன்றி மற்றியாருக்கும் இவ்வரிய வித்தையைக் கற்பித்திலன் என்று நம்பாற் புகன்று இவ்வெகினனுக்கும் அவ்வித்தையைக் கற்பித்திருக்கின்றனரே" என்று உளம்பொருனாய்த் தன் ஆசாரியரைக் கண்டு வினவினன். ஆசாரியர் வியப்புற்று "உண்மையில் நான் அவனுக்கு வில்வித்தை கற்பித்ததே யில்லை. இதில் ஏதோ விசேட மிருத்தல் வேண்டும். வா, நேரில் அவனைக் கண்டு கேட்போம்" என்றியம்பிக் கொண்டே காண்டீபனை யழைத்துக்கொண்டு ஏகலவனிடம் சென்று விசாரித்தார். ஏகலவன் குருவுக்குத் தக்கபடி பூசைசெய்து தன் குடிசையில் ஒரு மூலையிலுள்ள மரப்பதுமையைக் காட்டி,

"சுவாமி! தாங்கள் எனக்கு வில்வித்தை கற்பிக்க மறுத்து விட்டபின், அடியேன் தங்களுக்குப் பதில் இவ்வுருவை யமைத்து இதையே தாங்களாகப் பாவித்து வித்தையைக் கற்றுக்கொண்டேன். தங்கள் கருணையால் அடியேன் அந்த அரியவித்தையையும் அடைந்தேன்" என்றான்.

பிறகு துரோணாசாரியர் விஜயனை நோக்கி "அர்ச்சுனா! இவன் குருபக்தியாலும் மனோவல்லமையாலும் வில்வித்தையைக் கற்றுக்கொண்டான்; இந்த இரண்டு குணங்களுமுடையோர்க்கு எதுதான் கைக்கூடாது?" என்றார்.

அதிசயிக்கத்தக்க அரிய விஷயங்களைக் கண்டு பிடித்தோர்க்கெல்லாம் அவ்வல்லமை யவர்கள் மனதினின்றும் உதித்ததேயன்றி வேறில்லை. சுய முயற்சியால் தமக்குள் இருக்கும் அபாரசக்தியை யவர்கள் கைக்கொண்டார்கள்.

ஜேம்ஸ் வாட்ஸன், தேயிலை நீர் அடுப்பில் கொதிக்கிறதைப் பார்த்தார். அத்தகைய சம்பவத்தை எத்தனைபேர் எண்ணிறந்த முறை கண்ணுற்றிருந்தனர்; அவர்கள் மனதில் ஏன் அதைப்பற்றி ஒரு விசேடமு முதிக்கவில்லை? வாட்ஸனுக்கு நீராவியின் வல்லமையைப் பற்றி யாரேனும் போதித்திருந்தார்களா? இல்லை. அவர், அறிவாகிய பாதாள கொலுசை ஊக்கமாகிய கரத்தில் பற்றி அசைவற்று நிற்கும் தமது மனமாகிய கிணற்றில் விட்டுத் துழவிப்பார்த்தார். அந்த ஆழத்திலிருந்தே நீராவிக்கு வல்லமையிருக்கிற



தென்பதும், அதைக்கொண்டு அனேக அரியகாரியங்களைச் செய்யலாம் என்பதுமாகிய ஞானம் அவருக்குக் கிடைத்தது. பிரசித்திபெற்ற ஒவ்வொருவரிடம் காணப்பட்ட ஒவ்வொருவித அபாரச்க்தியும், அவரவர் மனமாகிய பொக்கிஷத்திலிருந்து அவரவர்களுக்கு அகப்பட்டதே யன்றி வெளியிலிருந்து வருவது ஒன்றுமேயில்லை. [இன்னும் இதிலுள்ள உண்மை என்னவெனில் மனம் பிறந்தவிடத்திலிருந்தே இவை யாவும் உண்டாயின; அதாவது, ஆன்மாவினிடத்திலிருந்தே எல்லாச்சக்திகளும் உண்டாகின்றன. அது தவிர மற்றயாவும் சடமே. வேறு எதற்கும் ஒரு சக்தியுமில்லை. ஆன்ம சக்தியே யாவற்றையும் இயக்குகிறது. நாம் அதைக் கவனித் துணராதிருப்பதால் மனம் செய்கிறதென்கிறோம். இருக்கட்டும், உங்களுக்கு இதைப்பற்றி விவரிக்கக் காலமும் இடமும் இதுவல்ல; ஆகையால் இப்போது நாம் மனம் வரையிலேயே நிற்போம்.]

நண்பர்களே! இதற்கு மனோசக்தி யென்று பெயர்; இம்மனோசக்தியை எந்த அளவு ஒருவன் அடைகிறானோ அந்த அளவிற்கு அவனுக்கு அபார சக்திகளும் விளங்கும்.

13. மனோசக்தி என்றால் நமது மனதிலுள்ள சக்தியென்றுபொருள் என்பது மேலே விவரித்தவற்றால் நன்குவிளங்கும். இம்மனோசக்தி அபாரமானது; அளவற்றது. நமது முன்னோர் இதை யனுபவமாயுணர்ந்து இதைப்பற்றி அனேக நூல்களை வரைந்திருக்கிறார்கள். இதன் சக்தியை உத்தமம், மத்திமம், அதமம்என்ற மூன்றுநிலைகளாகப் பிரிக்கலாம். அதமநிலை:—மனம் நித்திரையிலிருப்பது போல் மனச்சாட்சிகூட தோன்றாமல் சுத்தமூடமான மந்தநிலையி லிருத்தல். மத்திமநிலை:—மனச்சாட்சியோடு சாக்கிரத்தி லிருக்கும் நிலை; இதில்தான் அதன் அலையும் தொழில் நடப்பது; இதில் அதன் சக்தி பலவிதங்களில் சிதறுண்டு தொழில் செய்கிறது; இதில் இந்திரியங்களோடு கலந்து தொழில் செய்கிறது. இதற்கு மேலுள்ளதுதான் உத்தம நிலை: அது மனச்சாட்சிக்கு மேற்பட்டநிலை; (Super-Conscious State) ஆனால் அங்குதான் மனதின் பூரணவல்லமை பிரகாசிக்கிறது; இதுவே யோகிகளின்நிலை. நமது முன்னோர் இதையடைந்தே திரிகால வர்த்தமானங்களையு முணர்ந்து, அரிய அட்டமாசித்திகளைப் பெற்று அபாரமான காரியங்களைச் செய்தார்கள். உலகில் வேறெந்த நாட்டாரும் இத்தகைய சாத்திரங்களை வெளியிடவில்லை. சகோதரர்களே! இத்தகைய முன்னோரின் ஆசாரங்களைப் பின்பற்றுவதில் அன்பும் சிரத்தையும் கொள்ளுங்கள். வெளிப்பகட்டுக்கு மயங்கி அன்னிய ஆசாரங்களைக் கைக்கொள்ளாதீர்கள்.

மனிதனுக்குள் இருக்கும் மனோ சக்தியை யொருவாறு நீங்கள் உணர்வதன் பொருட்டே மிக்க சுருக்கமாக மேற்கண்ட விஷயத்தை விவரித்தோம். இனி இப்போது நீங்கள் கவனிக்க வேண்டியது மனதின் மத்திய நிலையே.

இந்த மனோ சக்தியை நீங்கள் பெறுவதற்கு எவ்வளவு முயற்சி யெடுத்துக் கொள்கிறீர்களோ அதற்குத் தக்க பலனை யடைவீர்க ளென்பது சத்தியம். மாணவர்களாகிய உங்களுக்கு இரண்டு சக்தி அவசியம் வேண்டும். அவை போதுமான அளவில்லா விட்டால் கல்வியில் நீங்கள் சித்திபெற மாட்டீர்கள். அச்சக்திகள் எவை யெனின்,

(1) கிராக்கியசக்தி.—அதாவது, உபாத்தியாயர் ஒருமுறை கூறியதை யுடனே யப்படியே மனதில் பதிய வைத்துக் கொள்ளுதல். (Power of Understanding or Absorption.)

(2) கியாபகசக்தி.—கேட்டதை அல்லது வாசித்ததை மறவாதிருந்து விரும்பியபோது வெளிக்குக்கொண்டு வருதல். மனப்பாடம் செய்தலுக்கு இது அவசியம் வேண்டும். (Power of Remembrance.)

இந்த இரண்டு சக்திகளே உங்கள் கல்விக்கு அத்தியாவசியம் வேண்டும். நீங்கள் மனோசக்தியை யடைய முயன்றால் முதலாவது, இச்சக்திகளைச் சுலபமாக விர்த்திசெய்து கொள்ளலாம். அதற்குமேல் மனோசக்தியை யெவ்வளவு அதிகமாக அடைகிறீர்களோ அதற்குத் தக்கபடி அரிய சக்திகள் உங்களிடம் விளங்கும். நீங்கள் வாசிக்கும் நூல்களில் மற்ற பேர்களுக்கு விளங்காத விசேஷ பொருள்கள் உங்களுக்கு விளங்கத் தொடங்கும்.

ஒரு கவி அல்லது இலக்கணச் சூத்திரம் முதலியவற்றை மனப்பாடம் செய்ய மற்றபேர் பத்துமுறை வாசித்தால் நீங்கள் இரண்டொரு முறைகளில் மனதில் பதியச் செய்துகொள்ளச் சக்தி யுடையவர்களாவீர்கள். ஒரு பாவை ஒருமுறை வாசித்த மட்டில் அப்படியே மனதில் பதியச் செய்து கொள்ளும் சக்தியுடையோர் நம் நாட்டி லிருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இவர்கள் எந்த நூலையாயினும் சரி ஒருமுறை வாசித்த மட்டில் மனப்பாடமாக்கிக் கொள்வார்கள். இவர்களுக்கு ஏக சந்தக் கிராகிகள் என்று பெயர். இரண்டு முறைகளில் மனப்பாடம் செய்ய வல்லோர்க்கு துவி சந்தக் கிராகிகளென்றும், மூன்று முறைகளில் பாடம் செய்ய வல்லோர்க்குத் திரி சந்தக் கிராகிக ளென்றும் பெயர். இதைப்பற்றி கர்ண பரம்பரையான ஒரு சரித்திர முண்டு. அதாவது, "முன்பு மதுரையிலிருந்த கடைச்சங்கத்தில் ஏகசந்தக் கிராகி, துவிசந்தக் கிராகி, திரிசந்தக் கிராகி ஆகிய மூவர் இருந்தார்கள். புதிதாக ஒரு வித்வான் வந்து கவி பாடி இவர்களை வென்று விடுவதாயின், ஏகசந்தக்கிராகி அவன்கூறிய கவிகளை யுடனே யெழுதி அந்த ஏடுகளை மக்கின பழைய ஓலைகள்போல் செய்துவிடச் சங்க வித்வான்கள் 'ஓகோ இக்கவிகள் சங்கத்திலிருந்த பழைய கவிகளே' என்று கூறி எழுதியதை யத்தாட்சி காட்டி வந்த வித்வான் வெட்கி மனம் நொந்து செல்லும்படி செய்துகொண் டிருந்தார்கள். இந்த அக்கிரமத்தைக் கேள்வியுற்ற ஔவை சங்கப் புலவரின் செருக்கை யடக்கச்சென்று, தாம் கூறுவதை யவர்கள் வரி வடிவாகிய எழுத்துக்களால் எழுத முடியாதவாறு தமது கவிகளில் சில மிருக பட்சிகளின் சத்தம் முதலிய ஒலிகளைக் கலந்து பாடியதால் அதை யெழுத முடியாத சங்கப் புலவர் தோல்வி யடைந்தனர்" என்று கூறப்படுகிறது.

இனி இம்மனோ சக்தியை யுங்களுக்கு வேண்டியமட்டில் நீங்கள் பெற என்ன முயற்சி செய்யவேண்டு மென்பதைக் கூறுகிறோம். (தொடரும்.)

சீடன்.

---

## மாதர் நெறிகள்.

(156-ம் பக்கத் தொடர்ச்சி.)

10. பொறுமை.—சகோதரிகளே! மாதர்களுக்குப் பொறுமை மிக்க அவசியமானது. கோபம் தன்னை உடையவர்களுக்கு எப்போதும் தீங்கு



செய்யத்தக்கது. ஆடவரைக் காட்டிலும் ஸ்திரீகளுக்குக் கோபம் அதிக தீங்கு விளைவிக்கும். சில மாதர் கோபத்தாலும், அடத்தாலும் குடும்பத்திற்கு மிக்க துக்கத்தை யுண்டாக்குகின்றனர். கணவன் கோபிக்கும்போது, அது சரியாயினும் தவறாயினும், மனைவி பதிலுக்குக் கோபிப்பது மிகக் கெட்ட குணமாகும். அத்தகைய மனைவி கணவனுக்கு மிக்க வியாகூலமும், தொந்திரவும் கொடுக்கிறவளாவாள். அவள் சுலபத்தில் கணவன் அன்பை யிழந்து விடுகிறாள். காண்போரும் இவள் கணவனை மதிப்பதில்லை யென்று இழிவுபடுத்திக் கூறுவார்கள். கணவன் கோபிக்கும்போது சாந்தமாய்த் தன் குற்றத்தை யொப்புக்கொண்டு இனிய மொழிகளால் அவனுடைய கோபத்தைத் தணிக்க முயல்பவளே உத்தம மனைவியாகும். அவள் கணவன், பிறகு தான் தன் மனைவியின்மேல் கோபித்தது தவறென்றுணர்ந்து அவளுக்கு வருத்த முண்டாக்கியதற்கு மனம் வருந்தி, அவள் பொறுமையோடிருந்ததற்காக அவள்மேல் அதிக அன்பு காட்டுவான்.

11. அடம்.—சில மாதர் மிக்க அடங்கொண்டு தங்கள் பிரியப்படி நடக்க வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறார்கள். இதுவும் மிக்க கெட்ட நடக்கையாகும். புருடன் பிரியத்திற்கு மாறாக நடப்பது பதிவிரதையின் செயலாகாது. அப்படிப்பட்ட மனைவி தன் கணவனுக்கு மிக்க வெறுப்பை யுண்டாக்குவாள். புருடன் வேண்டாமென்கிற காரியத்தைச் சந்தோஷத்தோடு விட்டுவிடுபவளே உத்தமமான மனைவியாவாள்.

12 தனியே வெளியிற் செல்லுதல், ஆடவர் கூட்டத்தில் நாணமின்றிப் பிரவேசித்தல், பேசுதல், அன்னிய ஆடவரோடு அநாவசியமாய் வார்த்தையாடுதல், கேலி பேசுதல், நகைத்தல், உரத்துப் பேசுதல், கடவுள் சந்நிதிக்குச் செல்லும்போது சுத்தத்தை மட்டும் கவனிப்பதை விட்டுத் தேகத்தை யலங்கரித்துக் கொள்ளுதல், ஆடவர் பார்வையைக் கவரும் வண்ணம் அலங்காரம் செய்துகொள்ளுதல், இத்தகைய நடக்கைகள் மாதர்க்குத் தகாத நடக்கைகளாகும்.

13. கணவன் தொழிலை விட்டு வீடு வந்தவுடனே அவன் மனதிற்குத் துயரத்தையாவது, கோபத்தையாவது உண்டாக்கும் எந்தச் சமாசாரத்தையும் கூறலாகாது; அவ்வாறே கணவனுக்கு அன்னமளிக்கும்போதும் அத்தகைய சங்கதிகளைப் பிரஸ்தாபிக்கலாகாது. அனேகம் மாதர் இவ்விஷயத்தைக் கவனிப்பதில்லை.

14. கணவன் வியாகூலத்தோ டிருக்கையில் தேறுதல் கூறி அவன் துயரம் நீங்கித் தைரியமும், சந்தோஷமு மடையும்படி செய்யவேண்டியது மனைவியின் கடமையாகும். கணவன் தான்செய்த ஒரு முயற்சியில் தவறிப் போய் அல்லது காரியத்தில் அபஜெயமடைந்து விசனத்தோடு மனைக்கு வந்தால் அச்சமையத்தில்தான் அவனுக்குத் தேறுதல் கூறித் துயரத்தை யொழிக்க வேண்டும். சில மாதர், அவன் ஜெயத்தோடு வந்தால் சந்தோஷமாகக் கொஞ்சிக்குலாவுவதும், அபஜெயப்பட்டு முகவாட்டத்தோடும், துயரத்தோடும் வந்தால் தாங்களும் முகத்தைச் சுளித்துக்கொண்டு "வெடிஞ்சி போச்சி, நீ போனவேலை எதுதான் கைகூடுது. வெடியாமூஞ்சி வேலைக்குப் போனால் வேலை யாப்டாலும் கூலி யாப்படலே என்ற கதைதானே. எண்ணைக்குத்தா உனக்கு வெடியுது. கட்டின நாளா இந்த அலைச்சலும் அவதியுந்தான் * * *" என்று கடுகடுப்போடு பாரதம் படிக்கத்

தொடங்கி விடுகிறார்கள். அவனுக்குப் பசி அகோரமாக எரித்தாலும் "அந்தோ! இங்கேன் வந்தோம்" என்று இடி விழுந்தவனாக உட்கார்ந்து விடுகிறான். இத்தகைய மனைவியர் பேய்களுக் கொப்பானவர்க ளென்றே கூறலாம்.

புருடனுக்குத் துரோகம் செய்து விபசாரம் செய்யாம லிருப்பதாலேயே ஒரு ஸ்திரீ கற்புடையவளாகி விடமாட்டாள். அதனாற்றான் ஔவை பிராட்டியார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை", அதாவது கணவன் வாக்குக்கு மீறி நடவாமையே கற்பு என்றார். கணவன் கட்டளைப்படி, அக்கட்டளை நீதியா, அநீதியா என்று சிந்திக்காமலே மனப்பூர்வமாய் அது கடவுள் வாக்கே யெனக் கருதி நடப்பதே கற்பிலட்சணம். அத்தகைய கற்பரசியிடந்தான் சாபானுக்கிரகம் முதலிய தெய்வீக சக்திகளுண்டாகும். கணவனுக்கு எவ்வகையாலும் எள்ளளவு மனவருத்தமேனும் உண்டாகாதபடி நடந்துகொள்ள வேண்டும். சில மாதர்கள், இக்காலத்திய தலை கீழ் நாகரீக வயப்பட்டோர், இது மூடத்தனமான விதி யென்று கருதுவார்கள். "என்ன அநியாயம் இது! கணவன் விபசாரம் செய்யச் சொன்னாலும் செய்வதோ?" என்பார்கள். அந்தோ! அந்தோ சகோதரிகளே! கணவனைக் கடவுளாகவே மதித்து தனக்குப் பிரியமில்லாத காரியத்தையும், தன் கணவன் கட்டளைக்காகச் சந்தோஷமாகச் செய்யும் கற்பரசி ஒருபோதும் பாபத்தை யடையாள். அதற்குமாறாக மகிமை யடைவாள். இயற்பகை நாயனாரின் மனைவி தன் கணவன் பிரியப்படி மாறுவேட மணிந்து ஒரு சிவனடியார்போல் வந்த பரமசிவன் பின்னால் சென்றதால் கணவன், மனைவி யிருவரும் பரமனருள் பெற்றார்களன்றோ. கபீர்தாஸின் மனைவி தன் கணவர் கட்டளைப்படி அடியார்களுக்கு அன்னமிடப்பண்டங்களளித்த வர்த்தகனிடம் சென்றாளன்றோ. அதனால் பரந்தாமனைத் தரிசிக்கும் பெரும் பேறு பெற்றாளன்றோ. நளாயினி தன் கணவர் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற ஒரு தாசியின் வீட்டு முற்றத்தைக் கூட்டிச் சாணமிட்டுக் கோலந்தீட்டிப் பணி செய்தாளல்லவா. அவள் பொழுதுவிடியவொட்டாமற் செய்யும்சக்தி பெற்றாளென்பது யாவருமறிந்த விஷயமன்றோ? ஆகையால், சகோதரிகளே! கணவன் சொல தவறாது நடப்பதே கற்பு என்றுணர வேண்டும்.

**மருமகள், மாமியார்.**—ஒரு பெண் தான் இதுகாறும் கண்டிராத ஒருவனை மணம் புரிந்து கொள்கிறாள். அப்படி யிருந்தும் அவன் அழகனாயினும், அழகற்றவனாயினும், புத்திமானாயினும், மூடனாயினும், அவனுக்குத் தன்மேல் அன்பிருப்பினும், வைப்பாட்டியின்மேல் அன்பு வைத்துத் தன்னைக் குரூரமாக நடத்தினாலும் அக்கணவனிடம் அன்புடையவளாகவே ஒழுகுகிறாள். உலகில் பெரும்பான்மை யிவ்வாறே. ஆனால், ஆதிமுதலே மாமியார் என்ற பெயரே அவளுக்கு வெறுப்பா யிருக்கிறது.

அவ்வாறே ஒவ்வொரு மாதும் தான் மருமகளாகவிருந்து தன் மாமியாரிடம் வாழ்ந்த அனுபவமுடையவளா யிருந்தும், தன் உயிரினும் தான் அருமையாகக் கருதும் தன் புத்திரனுக்கு மனைவியாக வந்தவளும், இனித் தன குடும்பத்திற்கே தலைமை வகிக்க வேண்டியவளும், குடும்ப கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டியவளுமாகிய மருமகள் வந்தவுடனே, அவளைத் தனக்குப் போட்டிக்காரியாகக் கருதுகிறவள்போல் அவள்மேல் வெறுப்பு கொண்டு அவள் சுயாதீனமாய் ஒன்றும் செய்யலாகாதென்று கருதுகிறாள்.



இதுகாறும் தான் செட்டா யிராமல் வீட்டுப் பண்டங்களைத் தாறுமாறாகச் செலவழித்துக்கொண் டிருந்தும், மருமகள் வந்ததே உப்புச்சட்டி முதல் யாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டு வேளை வேளைக்கு அளந்து படி யளிக்கத் தொடங்குகிறாள். இதுகாறும் தன் பெற்றோரகத்தில் செல்வாக்கோடும், சுயாதீனத்தோடும் வாழ்ந்துவந்த பெண் மாமியார் நடக்கையைக் கண்டதும் தான் அடிமைபோல் அவநம்பகமாய் நடத்தப்படுவதையுணர்ந்து மனம் நொந்து மாமியார்மேல் வெறுப்படைகிறாள். பிறகு சுலபமாகச் சச்சரவு ஏற்பட்டு இருவராலும் கலியாணம் செய்துகொண்டவன்பாடு பெருந் திண்டாட்டத்தில் வந்து விடுகிறது. அவன் தொழில் செய்து மாலை வீடுவந்ததும் இவர்கள் சச்சரவுகளுக்குத் தீர்ப்பு கூறுவதே முதல் வேலையாகிறது. அத்தகைய புருடன் மனோவேதனை பரிதாபம்! பரிதாபம்!!

விஷயம் இவ்வாறிருப்பதால் "மாமியாரை மெச்சின மருமகளில்லை, மருமகளை மெச்சின மாமியாரில்லை" என்ற வாக்கியம் ஓர் பழமொழியாக வுலகில் வழங்குவதைக் காண்கிறோம்.

சகோதரிகளே! உண்மையிவ்வாறே யிருக்கிறதன்றி மாமி மருமகள் இருவரில் ஒருவர்மேல் மட்டுமே குற்ற மிருக்கிறதென் றுரைக்கலாகாது. ஆயினும் மாமியார் சரியாய் நடந்துகொண்டால் அக்குடும்பத்தில் சச்சரவேயிராது. மருமகளும் தன் மாமியாரிடம், அன்போடேயே நடந்து கொள்வாள். ஆகையால் மாமியார்,

(1) தன் மருமகள் தாய் தந்தையர், உடன்பிறந்தார் அனைவரையும் விட்டுத் தமது குடும்பத்தில் வந்திருக்கிறாள்.

(2) இனித் தன் பொறுப்பை யேற்றுக்கொண்டு தனக்கும் தன் மக்களுக்கும் வேண்டியவைகளைச் செய்து குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டியவள் அவளே.

(3) அவள் சந்தோஷமாக விருந்தால்தான் குடும்பகாரியங்கள் ஒழுங்காக நடைபெறக் கூடும்.

(4) அவள் நந்தோஷமாக விராவிடின் நமது புத்திரன் சந்தோஷம் குன்றும்.

(5) நாம் அவளைப் பட்சமாக நடத்தாவிடின் நமது புத்திரனுக்கு நம்மேல் வெறுப்பு தோன்றும்.

(6) நாம் இன்னும் கிழவயதடைந்து தேகபலம் குன்றிய காலத்தில் அவள்தான் நமக்குச் சகல பணிவிடைகளையும் செய்து நம்மை யாதரிக்க வேண்டியவள். நாம் நலியுற்றுப் பாயும் படுக்கையுமாக விருந்தால் மருமகள்தான் நம்மருகிலிருந்து நமக்குத்தக்க உபசாரம் செய்து, வேளைக்கு ஔடத ஆகாராதிகளை யளித்துப் பாதுகாக்க வேண்டியவள். நாம் மரணமடைந்த பின்னும் சவத்திற்கு வேண்டிய சடங்குகளையும், பிறகு நடக்கவேண்டிய விஷயங்களையும் செய்ய வேண்டியவள் அவளே.

என்பனவாதிய விஷயங்களை மனதில் வைத்து, மருமகளைத்தன் புத்திரியாகவே கருதி அன்போடு நடத்திவரவேண்டும். குடும்ப விவகாரத்தில் ஏதோ குற்றங்கள் செய்யினும் அன்போடு புத்திகூறிச் சீர்திருத்த வேண்

டும். ஒவ்வொருசமயம் கோபங் காட்டினாலுங்கூட மனதில்மட்டும் நிலையான அன்புவைத்து நடத்தினால் மருமகள் அதை யுணர்வாளாதலால், மாமியார் ஒவ்வோர் சமயம் கோபித்தாலும் அது தன் நன்மைக்கும் தன் குடும்ப க்ஷேமத்திற்குமே யென்று கருதி மாமியார்மேல் வைத்த அன்புமாறாமலே நடந்து கொள்வாள்.

இனி மருமகள் நடந்துகொள்ள வேண்டிய முறைமையைப் பற்றிக் கூறுவாம். (தொடரும்)

சீடன்.

---

## நல்லாயனும் நம் சம்பந்தமும்

முதலில் நல்லாயன் "ஆனந்தனைப்" பவிஷ்காரம் செய்யவேண்டுமென்று எழுதியதும் அதைப்பற்றி நாமும் நமது சந்தாநேயர்களில் இரண்டொருவரும் எழுதிய விடைகளும் நேயர்கள் அறிந்த விஷயங்களே.

அக்டோபர்மீ வெளிவந்த நல்லாயனில் அதன் ஆசிரியர் பின்னும் அவ்விஷயங்களைப்பற்றி மூன்றரைப் பக்கங்கள் வரைந்திருக்கிறார். ஒருவிஷயத்திற்கு அதை முழுமையும் நண்பர்கள் வாசித்தால் அவ்வாசிரியர் தன்மையும் குருத்தன்மையும் எவ்வளவினதென உங்களுக்கு நன்குவிளங்குமென்ற விருப்பமே; ஆனால் மொத்தத்தில் அது சாரமற்ற பதரையொத்ததாக உங்களால் மதிக்கப்படுமாதலின், அதனால் ஆனந்தனது 4-5-பக்கங்களை நிரப்ப நமக்குப் பிரியமில்லை. ஆனதுபற்றி அவருடைய கருத்தை மட்டும் அவரது இரண்டொரு குறிப்புகளால் விளக்கி நமது முடிவைக் கூறிவிடுகிறோம்.—

எல்லா மதங்களாலும் பிரதிபாதிக்கப்படுவது ஒரே கடவுளே யென்பதையும் எல்லா மதங்களிலும் பயனுண்டென்பதையும் அடியோடு மறுத்துத் தமது மதம் ஒன்றே கடவுளா லுண்டாக்கப் பட்டதென்றும் அதில் கூறப்படுவதே மெய்க்கடவுள் என்றும் கூறுகிறார்.

(2) தமது மதம்தவிர மற்ற மதங்களைத் தாம் துவேஷிப்பதாகவே வெளிப்படையாய்க் கூறுவதோடு "நமது ஆசிரியர் இந்து மதத்தினராக விருப்பாரானால் இதரமதங்களை, அவர் அலட்சியம் செய்யாதிரார். இல்லையேல் அவர் மெய்யான இந்துவல்லர்" என்று நம்மைக் கூறுகிறார். "நாம் இந்து மதத்தைமட்டுமல்ல, ஆனால் நமது காத்தோலிக் வேதத்தைத் தவிர வேறு எம்மதத்தையும் துவேஷியாம லிருக்கமுடியா தென்பது உண்மை." என்கிறார்.

(3) பிறகு "நாம் அன்னியமதத்தினரைத், துவேஷிக்கிறோமென்று அவர்களுடைய பொய்க் கொள்கைகளையும் அனுச்சார ஆசாரங்களையுமே துவேஷிக்கிறோ மென்றறிக" என்கிறார்.

(4) நாம் "ஆனந்தபோதினி"யை இங்கிலீஷ் மாதம் 15 அல்லது 16-ம் தேதியில் இவருக்கு அனுப்புகிறோம் என்று குறிப்பிட்டிருப்பதற்கு விடையாக அவர் "எத்தேதியில் அப்பத்திரிகை யனுப்பப்பட்டால்தானென்ன? அதையெடுத்து வாசித்தாலன்றோ, அதில் உள்ளவை இன்னவை என்றறியலாகும். நாம் வாஸ்தவத்தில் அப்பத்திரிகையை விரும்பியெடுத்து வாசிப்பதே கிடையாது; ஆனதினால் அதை இனி மாற்றுப் பத்திரிகையாகவாவது, வேற்றுப் பத்திரிகையாகவாவது அவ்வாசிரியர் எமக்கு அனுப்பாதிருப்பாராக" என்று கூறுகிறார்.



(5) முடிவில் "அந்நியமத நூல்களையும் பத்திரிகைகளையும் வாசியாமல் இருப்பீர்களாக" என்று தம்மதத்தினர்க்குக் கட்டளையிடுகிறார்.

(" " இக்குறிகளுக் கிடையிலுள்ளவை நல்லாயனில் கூறப்பட்டிருப்பவைகளே.)

நேயர்களே ! இந்த ஆசிரியராகிய குரு மகானாகிய ஏசுக்கிருஸ்துவின் போதனைகளை யறிந்துள்ள விதத்தையும், இவர் அறிவின் நிலைமையையும் பற்றி மனப்பூர்வமாக விசனிக்கிறோமன்றி மற்றப்படி ஒன்றும்கூற நமக்குப் பிரியமில்லை. இவர் வாக்கியங்களைக் கொண்டு நீங்களே யாவும் அறிந்துகொள்ள விட்டுவிடுகிறோம். இத்தகையார் மொழிகளைக் கவனிப்பதே பயனற்றவேலையாகு மென்பதே நமது துணிபு.

ஒருவிஷயம் நாம் இங்குவெளியிட வேண்டியதவசியம். நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ, S. S. Pillay என்பவர் கடிதத்தை நாம் வெளியிட்டபோது, அவர் நல்லாயனிலுள்ள வியாசத்தை எழுதியவர் "வைப்பார்புலி" என்று குறிப்பிட்டிருக்க, "வைப்பார்புலி" என்ற வார்த்தை தவறாக S. S. Pillay என்ற பெயரோடு சேர்க்கப்பட்டதைப்பற்றி விசனிக்கிறோம்.

இனி இத்தகைய ஆசிரியராகிய குருவின் கூற்றுகளுக்கு விடையேனும் கண்டன மேனும் எழுதுவது வீணான பயனற்ற வேலையாகும். இவர்கள் கூலிக்காக மதத்தைப் பரவச்செய்யும் தொழில் புரிவோர்களாதலின், எவ்வளவு உண்மையைக் கூறினும், இவர்கள் மனச்சாட்சிக்கு அவை சம்மதப்படினும், இவர்கள் "நான் பிடித்தமுயலுக்கு மூன்றுகால்களே" என்று ஒரேபிடியா யிருக்கப் பட்டவர்கள். இவர்கள் நமது மதத்தைப்பற்றி எவ்வளவு தூஷித்தாலும், ஞானம் என்பது என்னவென் றறியாமலே நம்மையெல்லாம்—எல்லா பிறமதத்தினரையும்—அஞ்ஞானிகளென்று தூஷித்தாலும் அவற்றை நாம் கவனிக்கவேண்டியதே யில்லை. குருடர்களெல்லாம் "சூரியன் இருள்மயம்" என்பதால் ஒரு குறைவுமில்லை. சூரியன் பிரகாசமுடையவன் என்பது கண்பார்வையுடையோர்க்கெல்லாம் விளங்கியேதீரும்.

இதை யெழுதியபின் நவம்பர்மீ வெளியான "நல்லாயனை" யொரு நண்பர் கொணர்ந்து நம்மிடம் காட்டினார். அதில், ம-ா-ா-ஸ்ரீ D. G. A. பர்னான்டோ, வைகைவாசி, T. பொன்னுசாமி என்ற இருவரும் "ஆனந்தபோதினி"க்கு விரோதமாக எழுதிய கடிதங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. எப்போதும் நியாயத்தை யொட்டி விஷயத்தைக் கூறுவது கஷ்டம்; மனம் போனபடி முன்பின் கருதாது வரைவது மிக்க சுலபம். அந்தோ! வாத்தியார் நின்றுகொண்டு பெய்......சீடர் ஓடிக்கொண்டே......வார்கள். இவர்கள் வரையும் நியாயங்களும், "ஆனந்தன்" மேல் கூறும் அவதூறுகளும் இவர்கள் குருவின் கூற்றிற் கொக்கவே யிருப்பதால், அவரும் சந்தோஷத்தோடு அவற்றை வெளியிட்டனர் போலும். உள்ள நியாயம் பகல்வத்திபோல் தானே பிரகாசிக்கிறது. ஆதலின், நாம் மேலே கூறியவாறு அறிவாளிகள் கண்டு எள்ளி நகைத்து ஒதுக்கத்தக்க நியாயமற்ற கூற்றுகளுக்கு நாம் கண்டனம் எழுதுவது வீண் வேலையாகும். நமது நண்பர்களும் பயனற்ற இவற்றைக் கவனித்து இவற்றிற்கு ஒரு மறுப்பு வரையாதிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

ஆனால் அன்னியமதத்தவர் நமது அநாதிமதத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளிடம் வலியவந்து அவர்கள் மனதைத் துர்ப்போதனைகளாலும் தந்திரங்களாலும் மயங்கச்செய்து, அவர்களைத் தங்கள் மதத்திற்கு வந்து சேரும்படி தூண்டுகிறவரையில், நம்மவர்கள் அம்மயக்கில் சிக்கியழியா வண்ணம் அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகையால், அதைச் செய்வதில் நாம் பூரணமுயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டு மென்பதைமட்டும் உங்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறோம். அதைப்பற்றிய அவசியமான விஷயங்களை நாம் அப்போதைக்கப்போது வெளியிடத்தவறோம்.

பத்திரிகாசிரியர்

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(155-ம் பக்கத் தொடர்ச்சி.)

உலகத்திலுள்ள மட்டும் ஆன்மா ஒரு சரீரத்துடன் கூடியே யிருப்பன். மோட்சத்தில் சரீரமில்லை யென்பது சாஸ்திரங்களி னுண்மையான கருத்து. ஆன்மாவுக்கு மூவகையான சரீரங்களுண்டு: அவை ஸ்தூலம், சூக்குமம், காரணமென்பனவாம். சூக்குமசரீர மெப்போதுமுண்டு. ஸ்தூலசரீரம் அழிந்தாலும் சூட்சுமம் அழிவதில்லை; இச்சூக்கும சரீரம் யோகக்காட்சியா லறியத்தக்கது; சொப்பனாவஸ்தை யிந்தச் சூக்கும சரீரத்துக்கே யென்பர் பெரியோர். சொப்பனம் தெய்வாநுக்கிரகத்தால் நன்மை தீமைகளை யறிவிக்கும் பொருட்டுண்டாகும். இச்சரீரமெடுத்து அறிவுதோன்றிய பின் கண்டதும் கேட்டதும் நித்திரையில் காணப்படுகின்றன. இவ்விரண்டு மல்லாத ஓர் வகைச் சொப்பனமுண்டு. அதாவது, பிறந்தநாள் முதல் கேளாததும் காணாததுமான விஷயங்களைக் காண்பது; இதனையே பூர்வஜன்மவாசனை யென்பர். முற்சனனங்களில் நடந்த விஷயங்கள் ஓரொரு காலத்தில் சூக்கும சரீரத்துடன் கூடிய ஆன்ம அறிவில் புலப்படுவது; இதுவும் ஆன்மாவுக்குப் பூர்வ ஜன்ம முண்டென்பதை ஸ்திரப்படுத்தும்; இச்சொப்பனம் கன்மங் காரணமாகவே யுண்டாவது.

இனி, "புண்ணியம் பாவம் என்பன உலகத்தார் செய்துகொண்டதோர் கட்டுப்பாடு; இயற்கையிலில்லை; ஆதலால் அவைகாரணமாக மறுபிறப்புண்டாகாது" என ஒரு சாரார் வாதிப்பார்கள். இன்னும் அவர்கள் "பாபம் புண்ணிய மென்பன ஒரு பொருளல்ல. ஆறிந்திரியங்களாலு மறியப்படாதவை. ஒன்றாலுமறியப் படாதவையும் பொருளல்லாத வையுமான, புண்ணிய பாவங்கள் பிறப்புக்குக் காரணமா மென்பது பொருந்தாது. ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு கூட்டத்தார் தங்கள் தேசத்துச் சுகதுக்கங்களுக்காகச் செய்துகொண்ட ஏற்பாடுகளேயாம். நன்மையானதைப் புண்ணிய மென்றும், தீமையைப் பாப மென்றுங் கூறினர். இது தேசநன்மைக்காக ஏற்படுத்தின கட்டுப்பாடேயாம். இத்தேசத்தில் மட்டும் சிலர் தமதினத்தார் பிழைக்க வேண்டிப் பயனற்ற கட்டுப்பாடுக ளடங்கிய சில புத்தகங்களை யெழுதிவிடுத்தனர். அது கொண்டு மறுபிறப்புண் டென்பது பொருந்தாது" என்றுங்கூறுவர்.

புண்ணிய பாவங்கள் ஜனங்களின் சுகதுக்கங் களுக்காகவே யேற்படுத்தினது திண்ணம். புண்ணிய பாவங்க ளுண்டென்பதிற் றடையேயில்லை. ஆயினு மிவர்கள் கூறுகிறபடி நமது தேசத்துப் பெரியோர் எழுதி



வைத்தது காரணமில்லாத கட்டுப்பாடல்ல. சிருட்டிகால முதல் கன்மம் தொடர்ந்து வருமென்பதை யிவர்க ளொப்பார். நாமவ்வாறு கூறுவதில்லை. ஏனெனில் அது உண்மையல்ல; எப்பொழுது சிருட்டி யேற்பட்டதோ அதுமுதலாகச் சீவான்மாக்கள் செய்த கன்மங்களுக் கேற்பவே கூன், குருடு, செவிடு முதலான சரீரங்களும், குற்ற மற்ற அழகிற் சிறந்த சரீரங்களும் ஜீவான்மாக்களுக் குண்டாகின்றன வென்பதை முன்னரே கூறினோம். இதனையொப்பாவிட்டால் இதற்குத் தகுந்த வேறு காரணங் கூறவேண்டும். அவ்வாறு சரியான காரணங் கூற எவராலு மாகாது. ஆதலால் புண்ணிய பாவங்களைக்கொண்டே ஜீவான்மாக்கள் மறுபிறப்பையும் அப்பிறப்புக்கேற்ற சரீரங்களையு மடைகின்றன வென்பதே துணிபு. இப்புண்ணிய பாவங்கள் உலகத்தார் செய்த கட்டுப் பாடுகளாயின் சகல ஜனங்களும் அதற்கிசைந்து நடத்தல் கூடாத தேயாம். ஆஸ்திகராயுள்ளவர்கள் எல்லாரும் புண்ணிய பாவங்களுண்டென்றே யொப்புக்கொள் கின்றார்கள். அவற்றுட் சில வேறுபாடுகளிருந்தாலும் பாவபுண்ணியங்க ளில்லை யென்று ஆஸ்திகர் மறுக்கத் துணியார்; அது கடவுள் செய்த ஏற்பாடு என்பதே ஆஸ்திக ரெல்லாருக்கு மொப்ப முடிந்தது. கொள்கை வேறு பாட்டினால் ஒருவரையொருவர் விரோதிக்கும் ஆஸ்திகரும் பாவபுண்ணியங்களில் மாத்திரம் விரோதப்படுவதில்லை; ஏனெனில், அது கடவுளாலே யநாதியிலேயே விதித்தவரம்பு; அவ்வரம்பு கடக்க எந்த ஆஸ்திகனுந் துணியான். ஆதலால் அநாதியிலேயே கடவுள் ஏற்படுத்திய விதிவிலக்குகளே புண்ணிய பாவங்களாமென்க.

மனிதர்கள் உண்ணல், உடுத்தல், உல்லாசமாயிருத்தலாதிகளைத் தேசகாலங்களைக் கவனித்தே செய்வர். மிருகங்களோ தேசகாலங்களையும் எவ்விதமான வேறு சௌகரியங்களையும் நோக்காது மனங்கொண்டவாறே நடத்தும். ஒருசமையம் மனிதரும் அவற்றைப்போலவே நடக்கமுயன்றால் அதுவும் பாவபுண்ணியங்களின்பாற் படுமென்று அவர்கள் ஒப்புவார்போலும். எந்தத் தேசத்திலும் சிலராயினும் தமது மனம் போனவழி நடப்பவரில்லை. அப்படியானால் மானுஷீகத்திற்கும் மிருகங்களுக்கும் வேற்றுமையில்லாமற் போம். ஆதலால் புண்ணிய பாவமென்பன எல்லாருள்ளத்திலு மெழுந்தருளியிருக்கும் பரம்பொருளே அவ்வத் தேசத்தின் இயற்கைக் கேற்ப ஏற்படுத்தியவைகள். ஆதலால் எல்லாத் தேசத்திலுள்ள ஆஸ்திகரும் புண்ணிய பாவங்களுண்டென்பதிற் சந்தேகப்படுவதில்லை. ஈசனருளாலேற்பட்டதனாலேயே அது அழியாமல் எங்கும் நிலைபெற்றிருக்கின்றது. மனிதரா லேற்படுத்தப் பட்டதாயின் நாளடைவிற் சொரூபமாறி யழிந்து போயிருக்கும்.

இனி "ஈசுவரனே புண்ணிய பாவங்களை யேற்படுத்தினாரெனின், அது தேச காலங்களால் வேறுபாடடைவதேன்? ஈசுவரன் ஒரு தேசத்தில் பிரியமும், மற்றொரு தேசத்திற் பிரியமில்லாமலு மிருப்பதேன்?" என்பர். புண்ணிய மென்பது மனிதர்கள் கடவுளுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளிலொன்றே. ஆயினும், கடவுளாராதனையே புண்ணிய மென்று நமது நூல்கள் கூறவில்லை. பற்பல புண்ணியங்கள் தேகத்தையும், ஜீவனையும், சரீரத்தையும் சுத்திசெய்யுங் கருவிகளாம். ஜீவனும், சரீரமும் தேசகாலங்களால் வேற்றுமை யுடைவனவல்லவா? ஆதலால், சர்வ ஞானமுள்ள கடவுள் அவ்வத் தேசங்களுக்கும், அங்குள்ளவர்களுக்கும் தக்கபடி யேற்படுத்தினார் என்பதே துணிபு. ஏனென்றால், தேசகாலங்களால் ஜீவான்மாக்களின் சக்தி

ஏறியுங் குறைந்து மிருக்குமல்லவா? சக்தி யுள்ளவர்களும், சக்தி குன்றினவர்களும் ஒரே தர்மத்தை யனுஷ்டிக்க வியலுமா? இயலாதன்றோ? அது கொண்டே தேசவியல்பிற்கும், அங்குள்ள ஜீவான்மாக்களின் சக்திக்கு மேற்பச் சர்வ சக்தியுள்ள கடவுள் அத்தகைய வித்தியாசங்களை ஏற்படுத்தினார். இப்படிச் செய்ததினால் கடவுள் விருப்பு வெறுப்பற்றுக் கருணை காரணமாகவே செய்தாரென்பது விளங்கும். இப்புண்ணிய பாவங்க ளநாதியாதலால், அவற்றின் வேறுபாடுகொண்டே மறுபிறப்புண் டென்பதும் சாதிக்கப்படும்.

இனி, பிறப்பிறப்பு இரண்டு மிச்சரீரத்திற்கே யாதலால், இச்சரீரம் இறந்தபின் எக்காலத்தும், எவ்வாற்றானும் இவ்விதமே சரீர மமையப் பெறாது என்பர் ஒரு சாரார். அதாவது, ஆத்திகர் கொள்கைப்படி சரீரமே பிறக்கும், சரீரமே யிறக்கும். ஆன்மா அழிவற்ற வநாதிப் பொருளாதலால், இறப்பதும், பிறப்பதுமில்லை; ஆதலால், மறுபிறப் பென்பது ஜீவனுக்கமையாது; சரீரத்துக்கும் பொருந்தாது. ஏனெனில், சரீரம் நாம் காணும் பொழுதே நசித்தொழிதலால், அது மறுபடி யிவ்விதமே யமையு மென்பது ஒப்பத்தகாது. உலகத்தில் ஒருதா மழிந்த சரீரம் மீண்டு மவ்வாறுண்டானதை ஒருவருங் கண்டதில்லை; அடைந்தனுபவித்தது மில்லை. அப்படி யுண்டானால் இது அந்தச் சரீரமே என்று நினைத்தற்கு ஆதாரம் உண்டு. சுடப்பட்டாவது, பூமியிற் புதைக்கப்பட்டாவது, மிருகாதிகளாற் புசிக்கப்பட்டாவது ஒழிந்து போன சரீரம் மறுபடி வந்ததாய்க் கண்டதுமில்லை; கதைகளாலும் கேட்டதில்லை. ஆராய்ந்து பார்க்குங்கால் ஆத்திகர் நாத்திகரெல்லாரும் பிறப் பிறப்புச் சரீரத்துக்கே யென ஒப்பவேண்டும். அவ்வாறாப்பின் மறுபிறப் புண்டென்பது வீண் வழக்கா மென்பதே யிக்கேள்வியின் கருத்தாம். இதனைச் சிறிதாராய்வோம்.

அவர் கூற்றின்படி சரீரத்துக்கே ஜனனமும், மரணமும் என்பது உண்மையே. அது கொண்டே யாம் மறுபிறப் புண்டென்று கூறவந்தோமில்லை. ஜீவனுக்கோ அஃதுண் டென்றோம். நித்தியனான ஜீவனுக்குப் பிறப்புண்டாயின் அவனழிவதும் உண்மையாமே; அங்ஙனமாயின், அவன் நித்தியனாவ தெவ்வாறெனில், மறுபிறப் பென்பது ஜீவனுச்குமில்லை, சரீரத்துக்கு மில்லை. ஜீவன் சரீரமின்றி யிராதென்றும், ஸ்தூல சூட்சும காரண சரீரங்களி லொன்றைப் பற்றியே நிற்குமென்றும் முன்னர் கூறினோம். அவ்வாறே ஜீவன் ஒரு சரீரத்தை விட்டபின், செய்த கருமத்தின்படி வேறொரு சரீரத்தைப் பெறுவதே மறுபிறப்பென்று நமது நூல்கள் கூறுகின்றன; நமது பெரியோரும் அவ்வாறே கூறுகின்றனர். அவ்வளவேயன்றி இதே தேகம் மறுபடி யுண்டாவதில்லை. (தொடரும்.)

**சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.**

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனால் தான், ஆபத்தான சமயத்தில் நமது அம்பலவாணன் அவனைச் சந்திக்க நேர்ந்தது.

அவன் ஆனந்தஸிங்கின் பெயரையும் அவனுடைய அபூர்வ சாமர்த்தியச் செயல்களையும், நேர்மையான நடக்கைகளையும் கேள்விப்பட் டிருக்கிறான். சிறைச்சாலையில் இருவரும் சந்தித்தபோது நெடுநேரம் சம்பாஷித்துக் கொண் டிருந்தார்கள். அம்பலவாணன் தனக்குத் தெரிந்த எல்லா விஷயங்களையும் சற்றேனும் களங்கமின்றி ஆனந்தஸிங்கிடம் கூறினான். ஆனந்தஸிங் அப்போதுதான் கோமளவல்லி மறுபடி அத்துஷ்டர்களிடம் சிக்கிக்கொண்ட சங்கதியை யறிந்தான்.



ஆனந்தஸிங் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டபின் அம்பலவாணனை நோக்கி,

“ நீ யிதற்கெல்லாம் சற்றும் அஞ்சவேண்டாம். நீ அக்கன்னிகையைச் சிறையினின்றும் மீட்டது மிக்க பெருந்தன்மையான செய்கை. ஆனால் அதனால் உனக்குப்பெரிய இக்கட்டு நேர்ந்தது. ஆயினும் பாவாயில்லை. ஆனந்தஸிங் செத்தவர்களி லிருந்து பிழைத்துக்கொண்டு வந்துவிட்டான். அந்தப் பெண்ணைக் களவாடிக்கொண்டு வந்தவர்களும், தபால் வண்டியைக் கொள்ளையடிக்கும் பரம துஷ்டர்களும் இன்னம் பெருங் குற்றங்களைச் செய்தவர்களும் சாமிநாதன் இரங்கநாதன் என்ற இந்த இரண்டு சண்டாளர்களே. கடவுள் தயவாய் அத்துஷ்டர்களின் குற்றங்களை ருசுப்படுத்தி நிரபராதிகளைக் காப்பாற்ற எனக்குச் சக்தியளிப்பார் என்பது உண்மை யாகையால் நீ இதற்குச் சற்றும் பயப்படாமல் பூரண தைரியத்தோடிரு ” என்றான்.

இம் மொழிகளைக்கேட்ட அம்பலவாணன் மிக்க நம்பிக்கையும் தைரியமும் சந்தோஷமு மடைந்தான்.

---

## 9-வது அத்தியாயம்.

இப்போது அரசஞ்சாலைத் திருப்பம் என்று ஆனந்தஸிங்கிடம் அகப்பட்ட உளவு முதல் தரமானது. இதைவிட மேலான உளவு அகப்படாது; ஆகையால் ஆனந்தஸிங் மிக்கஜாக்கிரதையோடு இரங்கநாதனுடைய நிழலை விடாமல் பின்பற்றிக் கொண்டே யிருந்தான்.

இரங்கநாதன் அவ்வளவு காலமும் அந்த ஒரே ஹோட்டலிலேயே தங்கியிருந்தான். தன் பிரதான விரோதியாகிய ஆனந்தஸிங் மடிந்துபோன வரையில் தன்னைப் பிடிப்பவன் வேறு யாருமில்லை யென்ற நிம்மதி அவனுக்குப் பூரணமா யிருந்தது.

கடைசியில் அரசஞ்சாலை திருப்பத்திற்கு இரங்கநாதன் போகவேண்டிய வெள்ளிக்கிழமை வந்தது. ஆனந்தஸிங் மிக்கஜாக்கிரதையோடு அவனைப் பார்த்துக்கொண்டே யிருந்தும் எப்படியோ அன்றையதினம் அவன் மாயமாய் மறைந்து விட்டான். ஆனந்தஸிங் என்ன சாமார்த்தியத்தோடு தேடிப்பார்த்தும் அவன் அகப்படவில்லை.

ஆனந்தஸிங் இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று தந்திரமாய் விசாரித்தான். இரங்கநாதன் அமலாபுரம் செல்வதாகத் தன் பெட்டிக்குச் சீட்டொட்டி ஸ்டேஷனில் ஒப்புவித்திருக்கிறான் என்று தெரிந்தது.

ஆனால், அந்த வண்டியோ முன்னமே போய்விட்டது. ஆனந்தஸிங் சிந்தித்தான். முன் வண்டி சென்றபோது தான் ஸ்டேஷனில் இருந்தான். அப்போது அமலாபுரம் செல்லும் வண்டியில் இரங்கநாதன் செல்லவில்லை. சற்றுநேரம் ஆழ்ந்து சிந்தித்தான். அட்டா! அவன் மாறுவேட மணிந்து

சென்றிருப்பான் என்று மனதிற்பட்டது. எப்படியோ மறுபடி ஏமாற்றி விட்டான். தான் ஏமாந்து போனது ஆனந்தஸிங்கிற்குத் தன்மீதே மிக்க கோபமா யிருந்தது.

அரைமணிக்குள் அமலாபுரம் போகும் இன்னொரு வண்டி வந்தது. அதில் ஏறி அமலாபுரத்தி லிறங்கி மெயில் வண்டிக்காக எதிர்பார்த்திருந் தான். சுமார் எழு மணிக்கு மெயில் வண்டி வந்தது. அதிலிருக்கும் தபால் வண்டியில் சாமிநாதன் இருப்பதைக் கண்டான். உடனே ஆனந்தஸிங்குக்கு மனதில் ஒருவித உற்சாக முண்டாயிற்று. மிக்க ஜாக்கிரதையோடு அவ்வண் டியையே கவனித்துக்கொண் டிருந்தான்.

ஆச்சு வண்டி புறப்பட்டும் வேளையும் நெருங்கிவிட்டது. அப்போது நரைத்த நீண்ட தாடியும், மீசையுமுடைய ஒரு கிழவன் வந்து சாமிநாத னிடம் பேசிக்கொண் டிருந்தான். கடைசியில் வண்டி மெதுவாய்ப் புறப் பட்டது. அப்போது அக்கிழவன் சாமிநாதன் கரத்தைப் பற்றிக்கொண்டு தபால் வண்டியில் ஏறிக்கொண்டான். அதைக் கண்டதே ஆனந்தஸிங் முகத்தில் சந்தோஷக் குறி யுண்டாயிற்று. உடனே அவன் தபால் வண்டிக் குப் பின்னுலிருக்கும் மூன்ருவது வண்டியில் போய் ஏறிக்கொண்டான். அக்கிழவன் எவ்வளவு சாமார்த்தியமாய் மாறுவேட மணிந்திருந்தாலும் அவன் இரங்கநாதனே யென்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டான்.

வண்டி வேகமாய்ப் போய்க்கொண் டிருக்கிறது. ஆனந்தஸிங்கு ஒரு மூலையில் நித்திரை செய்பவன்போல் படுத்துத் தன் முகத்தைப் பாதி மூடிக் கொண்டான். இரவு சுமார் பதினோரு மணி யிருக்கும்; வண்டியிலுள்ள ஜனங்க ளெல்லாம் நித்திரை போகிருர்கள்.

அச்சமயம் மெயில் வண்டியிலிருந்து ஒரு மனிதன் அந்த வண்டிக்குள் வந்து நித்திரை செய்யும் யாவரும் நன்ருய்த் தூங்குகிருர்களா வென்று பார்ப்பதற்காக நிதானமாய் ஒவ்வொருவரையும் குனிந்து குனிந்து பார்த் துக்கொண்டே சென்ருன். கடைசியாக நமது ஆனந்தஸிங்கையும் பார்த் தான். பார்த்துவிட்டுக் கடைசியில் வண்டியின் கோடியில் சென்று அங் கிருந்த கண்ணுடிச் சாளரத்தின் வழியாக வெளிப்பக்கத்தைச் சற்றுநேரம் பார்த்துவிட்டுத் திரும்பி வண்டியின் உட்பக்கம் அறைகளின் ஓரமே செல் லும் நேர்வழியே சென்ருன்; அம்மனிதன் இரங்கநாதனே.

ஆனந்தஸிங் அவன் நடக்கைகள் யாவும் மிக்க ஜாக்கிரதையோடு கவனித்துக்கொண்டே யிருந்து அவன் வண்டியின் கதவை மூடிக்கொண்டு சென்றதே மிக்க சுறு சுறுப்போடு துள்ளி யெழுந்தான். தன் வேலை தொடங்கவேண்டிய வேளை வந்துவிட்டதால் அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று.

ஆனந்தஸிங் பூனைபோல் நடந்து வெளியிலுள்ள கால் படி வழியாய் பக்கத்து வண்டிக்குச் சென்ருன். அங்கு சாமான் வண்டியின் பின்பக்கக் கதவு இருக்கிறது. அவன் கவனிக்கவேண்டிய மெயில் வண்டி, அந்த வண் டிக்கும், முன்னே யிருக்கும் சாமான் வண்டிக்கு மிடையிலிருக்கிறது.

அவ்வண்டியின் கோடியில் கண்ணுடிக் கதவாவது, சாளரமாவது இல்லை. கதவை யசக்கிப்பார்த்தான்; அது திறக்கக் கூடியதாயில்லை. எட்டிப் பூட்டுத் துவாரத்தின் வழியாய்ப் பார்த்தான். உள்ளே மூட்டைகளின் பேரிலும், பெட்டிகளின் பேரிலும் வேலை செய்யும் ஆட்களில் சிலர் உட் கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண் டிருந்தார்கள்.



காலம் கழிந்துகொண்டே யிருக்கிறது; தன் கெடியாரத்தை யெடுத் துப் பார்த்தான். பதினென்றடித்துப் பத்து நிமிடங்களாயிற்று. அவன் மனம் பதைத்தது; ஒவ்வொரு விநாடியும் வீணே கழிவது அவன் மனதிற் குப் புண்ணுயிருந்தது. கால் படியிலிருந்தே எட்டிப் பார்த்தான்? கார்ட் வண்டியிலிருக்கும் விளக்கின் வெளிச்சத்தால் மெயில் வண்டியின் கதவு திறந்திருந்தது என்று அறிந்துகொண்டான்.

அச்சமயம் வண்டி மிக்க வேகமாய்ச் சென்றுகொண் டிருந்தது. கொஞ் சம் நிதானமாய்ச் செல்ல ஆரம்பித்தது. ஆனந்தஸிங் ஏன் என்று கவனித் தான். அங்கு வண்டி ஒரு பெரிய வளைவைத் தாண்டத் தொடர்கிறது. ஓரத்திலுள்ள பிரம்மாண்டமான மரங்களின் உச்சிமேல் இரயிலில் இருக் கும் வெளிச்சம் தாக்குகிறது. (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## பொது விஷயங்கள்

ஜலமண்டலி விஷம்.—ஜலமண்டலியானது ஒரு மனிதனைக் கடித்த மாத்திரத்தில் அவனுக்குக் குளிர் கண்டு தேகம் வியர்க்க ஆரம்பிக்கிறதை யாவரும் பார்க்கலாம். அவனுடைய உடம்பு பனிக்கட்டியைப்போல் அவ் வளவு குளுமையாகி விடுகிறது. விஷம் ஏற ஏற அவனுக்குப் பலம் குன்றித் தாதுக்களெல்லாம் நின்று அவன் இறந்து விடுகிருன். எந்த மருந்தும் ஜலமண்டலி விஷத்தை நிறுத்துமென்று தைரியமாகச் சொல்லமுடியாது. ஆனல் சில சமயங்களில், ஜலமண்டலி கடித்தவுடன் அவனுக்கு ஒரு அவுன்ஸ் வாழைச்சாறை இரண்டு அல்லது மூன்று மணிக்கொருதரம் கொடுத்து வந்தால் ஜலமண்டலி விஷம் நீங்கி அவன் சொஸ்தப்படுவா னென்று ஸ்ரீமான் பி. வி. கோபாலகிருஷ்ணராவ் இந்து பத்திரிகையில் எழுதியுள்ளார்.

ஹிந்து மதத்துக்குத் திரும்பினர்.—சுமார் ஐந்து வருஷங்களுக்கு முன் கிறிஸ்தவ மதத்தில் போய்ச் சேர்ந்துகொண்ட ஸ்ரீமான் முகுந்த ராவ், ஸ்ரீபதி ராவ் ஹண்டதேஷ்முக் என்றவர் இம்மாதம் 20-ந் தேதி பம்பாய் ஹிந்து மதபிரசார சங்கத்தின் உதவியால் மீண்டும் ஹிந்து மதத்தில் சேர்த் துக் கொள்ளப்பட்டார். ஸ்ரீமான் ஸுந்தர ராவ், பி. வைத்தியா அச்சமயம் ஆசார்யராக இருந்து சடங்குகளை நடத்தினர் என்று மேற்படி சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

குறிப்பு:—புத்தி மயக்கால் அன்னியமதத்தில் சேர்ந்து பிறகு உண்மை யறிந்து வருந்தும் நம்மவர், எண்ணிறந்தோர் உளர். நாம் மறுபடி அவர் களைச் சேர்த்துக் கொள்ளாததாலேதான் அவர்கள் பிறக்கும் வழி யில்லை யென்று மனவெறுப்போடு அம்மதத்திலிருந்து விடுகிருர்கள். அன்னிய மதஸ்தர்களும் நம்மவர்களை யொருதரம் எப்படியாவது ஆசைகாட்டி மயக் கித் தந்திரமாய்த் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டால் பிறகு இவர்கட்கு மீட்சியில்லை யென்றபடி செய்கிருர்கள்.

இனியும் சும்மா விராமல் சுலபமான பிராயச் சித்தத்தால் அத்தகை யோரை மறுபடி நமது மதத்தில் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வதை நம்மவர் கவனிக்க வேண்டும். பத்திரிகாசிரியர்.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதி௵ மார்கழி௴—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1921௵ டிசம்பர்௴ 1922௵ ஜனவரி௴

| மார்கழி௴ | டிசம்பர்௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வியா | ○ 4-43<br>பிர58-25 | மிரு-32-28 | மர-60 | தனுரவி நா-3-45 |
| 2 | 16 | வெ | து51-35 | திரு-27-42 | சித்-60 | மந்திரம் ஜெபிக்க |
| 3 | 17 | சனி | திரி41-27 | புன-22-20 | சித்-60 | கோடியுடுக்க |
| 4 | 18 | ஞா | சது37-22 | பூச-17-0 | சித்-60 | வித்தியாரம்பம் ஸ்ரீமந்த |
| 5 | 19 | திங் | பஞ்30-40 | ஆயி-11-55 | சி11-55ம | பிரயாணத்திற்கு விலக் |
| 6 | 20 | செ | சஷ்24-40 | மக-7-28 | சித்-60 | கரிநாள் |
| 7 | 21 | புத | சப்19-35 | பூர-3-40 | அமி-60 | ஆயுதம் பயிற்ற |
| 8 | 22 | வியா | அ15-17 | உத்-0-50<br>அஸ்-58-58 | மர0-50சி | குளம் கிணறுவெட்ட |
| 9 | 23 | வெ | நவ12-3 | சித்-58-2 | சித்-60 | கரிநாள் |
| 10 | 24 | சனி | தச9-42 | சுவா-58-0 | சித்-60 | சபல ஏகாதசி |
| 11 | 25 | ஞா | ஏக8-15 | விசா-58-45 | மர-60 | கரிநாள் |
| 12 | 26 | திங் | துவ7-45 | அனு-60-0 | சித்-60 | பிரதோஷம் |
| 13 | 27 | செ | திர7-46 | அனு-0-22 | சித்0-22ம | பிரயாணத்திற்கு |
| 14 | 28 | புத | சது9-20 | கேட்-2-55 | சித்2-55ம | அமாவாசை |
| 15 | 29 | வியா | ● 11-35 | மூல-6-25 | சித்-60 | |
| 16 | 30 | வெ | பிர14-52 | பூரா-10-55 | பி10-55சி | |
| 17 | 31 | சனி | து19-17 | உத்-16-30 | சித்-60 | |
| 18 | 1 | ஞா | திரி25-35 | திரு-23-2 | அ28-2மர | |
| 19 | 2 | திங் | சது31-5 | அவி-30-10 | சித்-60 | |
| 20 | 3 | செ | பஞ்37-50 | சதை-38-1 | மர60 | |
| 21 | 4 | புத | சஷ்44-33 | பூரட்-48-18 | அ48-18சி | |
| 22 | 5 | வியா | சப்50-30 | உத்-52-5 | சித்-60 | |
| 23 | 6 | வெ | அ55-37 | ரேவ-58-45 | சி58-45அ | |
| 24 | 7 | சனி | நவ58-2 | அசு-60-0 | சித்60 | குதிரைவாங்க |
| 25 | 8 | ஞா | தச58-50 | அசு-2-50 | சித்2-50பி | அடுப்புவைக்க |
| 26 | 9 | திங் | ஏக57-29 | பர-4-55 | சித்4-55ம | கிருத்திகை-தீபம் |
| 27 | 10 | செ | து53-50 | கிரு-4-48 | சித்4-42அ | கூர்ம துவாதசி |
| 28 | 11 | புத | திர48-27 | ரோ-2-30 | சித்60 | பிரதோஷம் |
| 29 | 12 | வியா | சது41-32 | மிரு-2-40<br>திரு-53-5 | மர60 | ஆருத்திராதரிசனம் |
| 30 | 13 | வெ | ○33-37 | புன-46-43 | சி46-43ம | போகிபண்டிகை |

1922௵ ஜனவரி௴

| | | | |
|---|---|---|---|
| சே | | | |
| | 6உ தனு-பு<br>11,, தனு-சு<br>23,, து-செ | | |
| சூரி | சுக்<br>புத | செ | ராகு<br>சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

23 DEC 1921

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதி௵ மார்கழி௴ கஉ { பகுதி 6
1921௵ டிசம்பர்௴ 15உ

## கடவுள் வணக்கம்.

இன்னம் பிறப்பதற் கிடமென்னி னிவ்வுடல
　　மிறவா திருப்ப மூலத்
தெழுமங்கி யமிர்தொழுகு மதிமண்ட லத்திலுற
　　வென்னம்மை குண்ட லினிபாற்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
　　பேயேனை நல்க வேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டென்னி னிம்மையே
　　பேசுகற் பூர தீபம்
மின்னும் படிக்ககண் டாகார வன்னைபால்
　　வினையேனை யொப்பு வித்து
வீட்டுநெறி கூட்டிடுதன் மிகவுநன் றிவையன்றி
　　விவகார முண்டென் னிலோ
தன்னந் தனிச்சிறிய னாற்றிலேன் போற்றிவளர்
　　சன்மார்க்க முத்தி முதலே
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
　　சச்சிதா நந்த சிவமே.

ஆக்குவை மாயை யாவு மொடியினி லவற்றை மாள
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளா னந்தந்
தாக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே.

கற்புறு சிந்தை மாதர் கணவரை யன்றி வேறோ
ரிற்புறத் தவரை நாடார் யாங்களு மின்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே.

## கைத்தொழிலும், தாய் நாடும்.

ஒரு தேசத்தில் ஜனங்கள் தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவான பொருள்களைத் தங்கள் நாட்டில் உற்பத்தியாக்கப்பட்ட இயற்கைப்பொருள்களைக்கொண்டு தங்கள் கரங்களாலேயே செய்து கொள்வதற்குத்தான் கைத்தொழில் என்று பெயர்.

இப்போது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை உணவு, உடை, வாசஸ்தலம் இவை மூன்றுமே யாகும். குறைந்தது, இந்த மூன்றுக்கும் அன்னியநாட்டை யெதிர்பாராது தாங்களே செய்து கொள்வோர்கள்தான் நாகரீகமான மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள். இவற்றிற்கு மேல் உயர்வான விசேஷபோகங்களை யனுபவிப்பதற்கு வேண்டிய நகைகள், உயர்ந்த சாமான்கள் முதலியவற்றைச் செய்வது அவரவர்கள் புத்தி சாமார்த்தியம், ஊக்கம் முதலியவற்றைப் பொருந்தியது.

நமது தாய்நாடு பூர்வீகத்தில் இவற்றி லெல்லாம் சிறந்து விளங்கியது. சுருங்கச் சொல்லுமிடத்து நம் நாடு தனக்கு வேண்டியவற்றிற்கு மேல் அதிகமாக உற்பத்தி செய்து, தானியம், ஆடைகள், கால் நடைகள் முதற்கொண்டு நெடுந் தூரமுள்ள அன்னிய நாடுகளுக்கு அனுப்பி அவற்றோடு வர்த்தகம் செய்து திரண்ட செல்வம் பொருந்திய நாடாக விருந்தது. அக்காலங்களில் இப்போதிருக்கும் புகைக் கப்பல், இருப்புப்பாதை, செப்பனிட்ட பாதைகள், தந்தி, முதலிய ஒரு வசதியுமில்லாதிருந்தும் நமது நாடு பாரசீகம், துருக்கிஸ்தானம், ஈஜிப்ட், ஐரோபா, சைனா, ஜபான், கிழக்கேயுள்ள தீவுகள் முதலியவற்றோடு வர்த்தகம் செய்து வந்தது. அக்காலத்திலிருந்த நம் முன்னோர் எவ்வளவு ஊக்கமும், புத்தியும், உழைப்புமுடையவர்களாக விருந்தார்களென்பது இதனால் நன்கு விளங்கு



கிறதன்றோ? அந்த நிலைமையோடு நமது தற்கால நிலைமையை யொப்பிட்டுப் பார்த்தால், "அந்தோ! நாமேன் இக்காலத்தில் பிறந்திருக்கிறோம்" என்று பெருமூச்செறிந்து தலை நாணவேண்டியிருக்கிறது.

நமது நாட்டில் இயற்கைப் பொருள்கள் ஏராளம். நிலவளம், நீர்வளத்தில் நமது தெய்வீகம் பொருந்திய நாட்டிற்கு உலகில் வேறெந்த நாடும் இணையல்லவென்று திட்டமாகக் கூறலாம். அந்தோ! தெய்வம் கொடுக்கும், அள்ளி வாயில் ஊட்டுமோ? எல்லா வளங்களும், கூடியவரையில் அறிவும் பரம்பொருளால் நமக்களிக்கப்பட்டிருந்தும் மேற்கண்ட மூன்று பொருள்களையு மட்டுமாவது நாம் செய்து கொள்கிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

1. **ஆகாரம்.**—இது மற்ற இரண்டையும்விட முக்கியமானது. இத்தகைய உணவுப் பொருள்களில்கூட, பர்மாவிலிருந்து அரிசியும், ஆஸ்ட்ரேலியாவிலிருந்து கோதுமையும், எவ்வளவோ தூரதேசங்களிலிருந்து சர்க்கரை முதலியனவும் நம் நாட்டிற்கு வரவேண்டியது அவசியமாக விருக்கிறது. நமது நாடோ விவசாய பூமி யென்று பிரசித்தி பெற்றது.

2. **வீடு.**—சாதாரணமாக ஒரு வீட்டைக் கட்டவேண்டியதற்கு அவசியமான சகல சாமான்களும் நமது நாட்டில் சுலபமாகக்கிடைக்கும். சில விடங்களில் பனைவிருட்சம் ஒன்றிலிருந்தே வீடு கட்டப்பட்டிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். வீடென்றால் மாடிவீடல்ல; சாதாரணமாக ஒரு குடும்பம் கோடைகாலத்திலும், மாரிகாலத்திலும் சுகமாக வாழக்கூடிய மனை. கல்லாலோ, மண்ணாலோ சுவர்கள், வயிரம்பெற்ற பனைமரத்தில் தூண்கள், கழிகள், உத்தரங்கள், மேல்பரப்புக்குக் காட்டிலுள்ள மூங்கில்கள், மூடப் பனையோலைகள், ஒன்றோடொன்று பொருத்திக்கட்டப் பனைநாரில்திரித்த கயிறுகள். ஆணி வைக்கவேண்டிய அவசியமிருப்பின் பனைமர வயிரத்திலேயே ஆணி சீவிக்கொள்ளலாம்.

ஆனால், சாதாரணமாக எங்கும் உள்ள மற்ற வீடுகளிலோ சுவர் ஒன்று மட்டுமே நம் நாட்டுப் பொருளால் செய்யப்பட்டது. தூண்களும், மூங்கில்களும் நமது நாட்டுக் காடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவையே. இவ்வளவே; மற்ற மரச் சாமான்கள், ஆணி, சாளரக் கம்பிகள், தாழ்ப்பாள், பூண், சட்டம் முதலிய இரும்புச்

சாமான்கள், சாயம், மெழுகெண்ணெய், கண்ணாடி முதலிய யாவும் அந்நிய நாட்டினின்று வந்தவைகளே.

இதனால் நம் நாட்டுக் கொல்லர்களுக்கு முன்போல், பிழைப்பில்லாமற் போய்விட்டது.

3. உடை.—இது யாவற்றிலும் பெரிய வெட்கக்கேடான நிலைமையி லிருக்கிறது. அந்தோ ! பூர்விகத்தில் நமது நாட்டில் இந்நெசவுத் தொழிலால் எண்ணிறந்தோர் ஜீவனம் செய்து நல்ல க்ஷேமத்தி லிருந்தார்கள். மேல்நாடுகளில் நமது நாட்டுத் துணிகள் ஆவலாக வாங்கப்பட்டு வந்தன.

நமது நாட்டில் பருத்தி ஏராளமாகப் பயிரிடப் படுகிறது. பருத்தி விளைவிற்கேற்ற கருப்புக் களிமண் பூமிகளென்ற பிரதேசங்கள் (Black Cotton Grounds) நம் நாட்டி லிருக்கின்றன. நம் நாட்டில் நெசவுத் தொழில் குன்றிவிட இப்பருத்திகளில் பெரும்பாலானவை மேல்நாடுகளுக்கு விற்கப்பட்டு அங்கிருந்து துணிகளாகி இங்கு வந்து, வருடா வருடம் சராசரி அறுபது கோடி ரூபாய் கொடுத்து நம்மால் வாங்கப்படுகிறது.

அந்நிய நாட்டார் தங்களுக்கு வேண்டிய துணிகளை உற்பத்தி செய்து கொள்வதோடு, நமது நாட்டார் எத்தகைய துணிகளைக் கட்டுகிறார்கள் என்பதை யறிந்து, நமக்கு உபயோகமாகக்கூடிய விதமாக உற்பத்திசெய்து நமக்கு விற்றுப் பெருத்தஇலாபம் சம்பாதிக்கிறார்கள்.

நண்பர்களே ! சற்று சிந்தித்துப் பார்ப்போமாயின் இவ்விஷயங்களில் நமது நிலைமை எத்தகைய வெட்கக்கேடான நிலைமையாக விருக்கிறதென்பது நன்கு விளங்கும். இந்த நிலைமையே நமது நாட்டின் தரித்திரத்திற்குக் காரணமாகும். உலகில் தேசபக்தி, மதபக்தி முதலியவை யில்லாதவன் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவனல்ல என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தோ ! நாமோ சுயபக்தி. அதாவது சுயமதிப்பையே கவனிக்காதவர்களாக விருக்கிறோம். அப்படியாயின் தேசபக்திக்கும் நமக்கும் வெகு தூரமன்றோ? இன்னமும் நாம் இத்தகைய மானக்கேட்டை யுணராதிருக்கத் தகுமோ? நமது மானத்தை மறைக்கக்கூட நாம் அன்னிய நாட்டாரை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தால் நம்மை மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்றுகூட யாரேனும் மதிப்பரோ? நாம் எவ்வாறு அவமதிக்கப்படுகிறோம், எவ்வாறு அலட்சியமாக அன்னியரால் மதிக்கப்படுகிறோம் என்பதைக்கூட உணராம லிருக்கலாமோ?



நமது நாட்டில் சிலர் ஏதோ ஒரு கைத்தொழிலைக் குலத் தொழிலாகச் செய்கிறார்கள். தச்சு வேலை, கொல்லன் வேலை, தட்டார வேலை, நெசவு வேலை இவை யாவும் மானிட வாழ்க்கைக்கு வேண்டிய தொழில்களே. இவர்கள் போக மீதியிருக்கும் எண்ணிறந்த பேர் வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு தொழிலையும் செய்வதே யில்லை.

எல்லாத் தொழில்களிலும் நெசவுத்தொழில் சிரேஷ்டத் தொழிலென்பது பிரசித்தம். பாபமற்ற தொழில். வீட்டில் நிழலில் உட்கார்ந்தபடி ஆண், பெண், சிறியோர், பெரியோர் யாவரும் செய்யக் கூடிய தொழில். எப்போதும் நிலைத்து நிற்கும் தொழில். இப்போது நம் நாட்டுப் புராதனத் தொழிலாகிய இத்தொழிலை விர்த்தி செய்ய நாட்டில் பெருமுயற்சி செய்யப்படுவது யாவருமறிந்த விஷயம். இத்தொழிலைப்பருத்திப் பயிர் செய்வோர், நூல் நூற்போர், நெய்வோர், வர்த்தகர் இவர்கள் ஒருமித்து நடத்த முயன்றால் நம் தாய்நாடு மிக்க மேலான நிலைமையை யடையும் என்பதில் ஐயமில்லை.

இத்தொழிலைப்பற்றி இன்னமும் நமது தென்னாட்டில் ஆங்காங்கு ஒரு சிலரே சிரத்தை பாராட்டுகிறார்கள். மற்ற பெரும் பாகத்துள்ளோர் இதுவும் கேட்டவுடன் மறக்கவேண்டிய ஒரு பிரசங்கம் என்று பராமுகமாகவே யிருக்கின்றார்கள். அந்தோ ! இன்னும் பழைய நித்திரை மயக்கம் ஒழியவில்லை போலும். திருட்டாந்தமாய்த் திருவண்ணாமலையில் பங்குக்கு 10 ரூபாய் விகிதம் 500 பங்காளிகள் சேர்ந்து ஒரு **கைராட்டினச் சாலையை** ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கும்பகோணத்தில், ம-ா-ா-ஸ்ரீ வைத்தியநாதசர்மா, தாவுத்கான் சாயிபு, சு. வீரப்பசேர்வை என்ற தேசபக்தர்கள் மூன் றின்று பங்கொன்றுக்கு 5 ரூபாய் விகிதம் 10 ஆயிரம் பங்குகள் சேர்த்து **பாரதக்கைத்தறி** நெசவுச்சாலை யொன்று ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் ஐந்நூறு, ஆயிரம், இரண்டாயிரம்கூட பங்கு வைக்கும்படியான தனவான்கள் நம் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இராஜதானி நகரமாகிய இச்சென்னையில், சொந்தத்தில் தறிகளை வைத்து வேலை நடத்தக்கூடிய கனவான்கள் எத்தனை

யோபேரிருந்தும், இங்கு ஒருசாலையையேனும் யேற்படுத்தி நடத்த முயற்சி நடப்பதாகத் தோன்றவில்லை யென்பது மிக்க விசனிக்கத் தக்க விஷயமே. செல்வவந்தர்கள் தங்கள் பணத்திற்குச் சற்றும் போக்கில்லாமலே தாய்நாட்டின் க்ஷேமத்திற்கு உதவிசெய்துபெரும் புண்ணியந் தேடிக்கொள்ள இதுவே தக்கசமயம் என்றறியவேண்டும். முதலில் தறிவைக்க ஏற்பாடுசெய்து பிறகு தறி ஓயாமல் வேலை செய்வதற்காக நூல்நூற்கும் தொழிலைப் பரவச் செய்தால் நம் நாட்டில் தரித்திரம் தலைகாட்டாது பறக்கும் என்பதிற்றடை யென்ன?

வட இந்தியாவில் சீமான்கள் தறிகளை ஸ்தாபித்துவிட்டு அவர்களே பிரசாரகர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக இராட்டினங்களை ஜனங்களுக்குக் கொடுத்து, நூற்கவும் கற்பித்து, பிறகு அன்னூடம் சென்று அவர்கள் நூற்ற நூலைவாங்கிக்கொண்டு காசும், மறுபடி நூற்கப் பஞ்சும் கொடுத்துவிட்டு வருகிறார்கள். சில தேசாபிமானமுள்ள புண்ணிய சீலர்கள் பல்லாயிரக் கணக்கான இராட்டினங்களை யேழைகளுக்குத் தானஞ்செய்து அவர்களை நூல் நூற்றுச் சீவிக்க தூண்டுகிறார்கள்.

நமது மாகாணவாசிகள் இன்னமும் அட்டைபோல் நகராமல் ஜனத்தொகைக்குத் தக்க பிரசாரகர்களை ஏற்படுத்தி நூற்குந்தொழிலை எங்கணும் பரவச்செய்ய முயல்வார்களென்று நம்புகிறோம். எல்லாம் வல்லகருணாநிதி அருள் புரியப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

---

## பிரபஞ்ச அநுபவம்.

(51-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடந்துபோன விஷயங்களைக் குறித்துத்துக்கத்தை யடைந்துகொண்டு நொந்துபோன நெஞ்சினனாக விருப்பவன், எதிர்காலத்தி லடையவேண்டிய பல நன்மைகளையு மிழந்து இரண்டுவித நஷ்டத்திற்குள்ளாக வேண்டியதா யிருக்கிறது.

சாந்தம் துஷ்டனை ஜெயிக்கிறது; கோபம் பெரியோரைப் பகைக்கிறது; வணக்கம் நன்மையைத் தருகிறது; வணங்காமை துன்பத்தைக் கொடுக்கிறது; பொறுமை பெருமையைத் தருகிறது; பொறாமை வறுமையைக் கொடுக்கிறது. இதனால், சாந்தம், வணக்கம், பொறுமை என்ற சக்திகளைப்பெற்ற ஆத்துமாக்களே பூர்வத்திற் புண்ணியஞ் செய்தவை



யென்றும், கோபம், மமதை, பொறாமை என்ற குணங்களைப்பெற்ற ஆத்துமாக்களே பாவத்தைச் செய்தவை என்றும் வெளிப்படையாய்த் தெரிகிறது.

ஒரு புருடன், தன் மனைவியினிடத்து வைக்கு மன்பிற்குக் 'காதல்' என்றும், தாய் தன் குழவியினிடத்து வைக்கு மன்பிற்குப் 'அன்பு' என்றும், உறவினர்களிடத்து வைக்கு மன்பிற்குப் 'பக்ஷம்' என்றும், ஏழைகளிடத்து வைக்கு மன்பிற்கு 'இரக்கம்' என்றும், ஜீவஜந்துக்களிடத்தில் வைக்கு மன்பிற்குக் 'காருண்யம்' என்றும், கடவுளிடத்து வைக்கு மன்பிற்குப் 'பக்தி' யென்றும் பெயர். ஆகவே மனிதனுக்கு அன்பு இன்றியமையாததேனத் தெற்றென விளங்குகிறது. அன்பினா லடையமுடியாத பாக்கியம் இவ்வுலகத்தி லொன்றுமில்லை. ஏனெனில் அன்பே சிவம்.

"பிறனுக்கு நன்மை செய்வதைப் போன்ற புண்ணியமும், தீமை செய்வதைப் போன்ற பாவமும் இவ்வுலகத்திலில்லை" யென்பதை யறியாதவர்க ளெம்மதத்திலுமில்லை. ஆனால், அதன்படி நடந்தொழுகுபவரைக் காண்பதுதான் மிக்க அரிதா யிருக்கிறது.

'அருமைநாதன்' என்பவர் செல்வவந்தரா யிருந்தால், அவருடைய பந்துக்கள் அவரைத் தம் வீட்டில் பத்துநாள் வரை வற்புறுத்தி யிருக்கச்செய்து விருந்தளிக்கின்றனர்; அவரே பிறகு காலக்கொடுமையினால் 'வறுமைநாத' னாகிவந்தால், பத்தி லொருபங்குகூட உபசரிப்பதில்லை. நியாயம் அறிந்த பலரிடத்திற்கூட இக்குணங்கள் குடிகொண்டிருக்கின்றன. ஏனெனில், அவர்களிடம் ஞானமில்லை. என்னே மாய்கையின் கூற்று! பெற்றோர்களான பெரும்பாக்கிய வந்தர்கள் தம்மிடத்திலுள்ள பொறாமை, வஞ்சனை, பொய், சோம்பல், கோபம் முதலியவைகளைத் தம் குழந்தைகள் பழகிக்கொள்ள முடியாதபடி மறைத்து, பொறுமை, நல்லொழுக்கம், உண்மை, ஊக்கம், அமைதி முதலியவைகளையே அவர்களுக்குக் காண்பித்து, ஊட்டி வளர்க்க வேண்டும். சிறு குழந்தைகளுக்குத் தம் வீடே இவ்வுலகத்தின் பாடசாலையாய் விளங்குகிறது.

நாலடியார் மொழி, தாயுமானவர் பாடல், திருவள்ளுவர் குறள், கைவல்ய நவநீதம், பகவத்கீதை முதலிய அருமையான நூல்களை, அன்னிய தேசத்திலுள்ள அன்னிய மதத்தினர்கள் தங்கள் தங்கள் தாய்ப்பாஷைகளில் மொழிபெயர்த்துத் தம்மவர்களின் அறிவை பிரகாசிக்கச் செய்துகொள்ளுகிறார்கள். ஆனால், நம்மவர்களோ அவற்றைக் கவனியாது அன்னிய பாஷை நூல்களைப் படிப்பதே கௌரவமென மதித்துக் காலத்தை வீணே கழிக்கின்றனர். இதுவும் கலிக்கூத்தே.

இரு பெண்களை மணந்துகொண்டு இல்வாழ்க்கை நடத்துவதைவிட, ஜீவியகால முழுமையுமே தீராப் பிணிகளுடன் ஜீவித்து வருவது நிம்மதியாகும். இரு பெண் மணந்த ஒருவன், மரண தண்டனை விதிக்கப்பெற்ற

தன் சுற்றத்தா னொருவனைக் காணச் சென்றபொழுது "நீ என்னிலும் பாக்கியவான்" என்று அவனுக்குத் தேறுதல் புகன்றானாம். "இருதாரம் புனைந்துகொள்வது மரண தண்டனைக்கு மீறிய தண்டனைதான்" என்பதை யறிந்திருந்தும், நம் நாட்டில் இப்பேதைமைச் செய்கை ஒழியும் வகையைத் தான் காணோமென்று பட்டு அனுபவித்தவர்கள் கூறுகிறார்கள்.

"என் பங்காளியின்மீது எனக் கேற்பட்ட மனஸ்தாபத்தை முன்னிட்டு, என்னிலத்தை எனக்கு மிகவும் வேண்டியவரா யிருந்த ஒருவர் பெயருக்கு ரூ. 500-க்கு பந்தகமாக ஒத்திக் கெழுதி வைத்திருந்தேன். "இப்பொழுது நிலத்தைக் கொடு" என்று கேட்டால் "பணத்தைக் கொடுத்துப் பெற்றுக்கொள்" என்று தைரியமாகப் பேசுகிறார். ஐயா! இதற்கொன்றும் விமோசன மில்லையா?" என்று வக்கீல்களைக் கேட்கும் நிலைமையி லிருக்கிறது கலிகால சக்தி நடந்தேறி வருகிற விதம்.

"தலை போகிற காரிய மென்ன" வென்பதற்கு "What is the head going business" என்று ஆங்கிலம் பேசிக்கொண்டு, கால்சட்டை, மயிர் வெட்டு, கழுத்துச் சுருக்கு முதலியவைகளுடன் நம்மவர்களிற் சிலர் உலவுகிறார்கள். அந்தோ! இத்தகைய நம் நாட்டினர், மேல்நாட்டாரும் கண்டு நகைக்கும்படி 'நடு ஆற்றிற் பருசு' போல. தங்கள் ஜீவிய காலத்தையும் கழித்து விடுகிறார்கள்.

ஒருவன் பாதையின்மீது கிடக்கின்ற பழுதையைப் பார்த்துப் பாம்பெனப்பயந்து, பாதையை விட்டிறங்கிச் சோலையோரமாகச் செல்லுகையில், அவ்விடத்திற் படுத்திருந்த சர்ப்பத்தை மிதிக்க, உடனே அது தீண்டிவிட்டதாம். 'விநாசகாலே விபரீத புத்தி' என்பதும், 'வரும் விதி வழியில் தங்காது' என்பதும், 'உபாயம் தேடுகிற வழியிலேயே அபாயம் வந்து சம்பவிக்கு' மென்பதும் உண்மையான அநுபவமல்லவா? இவற்றைப் 'பிராரப்த' மென்பதைத் தவிர வேறென்னவென்று சொல்லுவது?

"மாப்பிள்ளைக்குச் சம்பளந்தான் ஐம்பது ரூபா யென்று சொல்லுகிறீர்கள்; மேல்வரும்படி எவ்வளவு கிடைக்கும்" என்று பெண்ணைப் பெற்ற தாயார் மாப்பிள்ளை வீட்டாரைக் கேட்கிறாள். அந்தோ! நம் நாட்டில் 'மேல்வரும்படி' என்ற விஷயம் சர்வ சாதாரணமாய் அடுப்பங் கரையிற்கூட அதிலும், பெண் கொடுக்கும் விஷயத்தில் முதன்மை பெற்றிருப்பது மிக்க பரிதபிக்கத் தக்கதா யிருக்கிறது. நமது நண்பர் ஒருவர் சீடர்களுக்குத் தீக்ஷை செய்யவந்த ஒரு ஆசாரியரைத் தரிசிக்கச் சென்றபோது ஆசாரியர், "உமக்கென்ன உத்தியோகம்?" என்று முன்னே கேட்டனர். அதற்கு நண்பர் 'உப்பிலாகாவில் இன்ஸ்பெக்டர் வேலை' என்றதே, ஆசாரிய சுவாமிகள் "சந்தோஷம், அது நல்ல மேல்வரும்படி வாக்கூடிய வேலை" என்றனர். காரிய குருமார் இக்காலத்தில் இக்கெதியி லிருக்கிறார்கள்.



மழை பெய்யுஞ் சமயத்தில் மரத்தடியிற் பதுங்கிய குரங்கொன்றை நோக்கிக் குடிசை ஒன்றமைத்துக்கொண்டு சுகமா யிருக்கக் கூடாதா? வென்று கேட்ட குருவியினுடைய கூட்டைக் குரங்கு சின்னா பின்னமாகப் பிய்த்தெறிந்ததாம். மறுநாள் குருவி நியாயாதிபதி யிடஞ் சென்று பிரியாது கொடுக்க, அவர் குரங்கை வரவழைத்தனராம். அது கேட்டக் குரங்கு, பெரிய பலாப்பழம் ஒன்றைப் பறித்து, தலையில் சுமந்துகொண்டு, நீதிஸ்தலம் சென்று, நியாயாதிபதி யறியாமல் அவருக்குப் பின்புறத்தில்வைத்துவிட்டு, எதிரில் வந்து மிகப் பயந்து நடந்த விஷயத்தைக் கூறிற்றாம். "உனக்கென்ன அவ்வளவு சேஷ்டை? அது மிகச் சிறிய பறவையாயினும் எத்தகைய நீதியைச் சொல்லிற்று. சிறிதேனு மறியாமல் நீ செய்த முரட்டுச் செய்கைக்கு இப்பொழுது என்ன செய்யலாம்" என்றனராம் நீதிபதி. அதற்குக் குரங்கு வெகு மரியாதையுடன் "மகாராஜாவே! அடியேன்மீது கிருபை கூர்ந்து முன்பின் பார்த்துத் தீர்ப்பளிக்க வேண்டும்" என்று வணக்க ஒடுக்கத்தோடு கூறிற்றாம். உடனே நீதிவான் பின்புறம் பார்த்து, பலாப்பழ மிருப்பதை யறிந்து திரும்பிக் குருவியை நோக்கி, "குருவியே! குற்றமெல்லாம் உன் பேரிலேயே இருக்கிறது. கலகம் உன்னாலேயே நடைபெற்றிருக்கிறது. நீ எவ்வளவு அற்பப் பறவை? குரங்கு எவ்வளவு பெரிய மிருகம்? அதற்குப் புத்தி கூற உனக்கு யோக்கியதை யுண்டா? நீ அந்தக் கர்வம் படைத்ததற்கும், குரங்கு உனக்குப் புத்தி கொடுத்ததற்கும் சரியாய் விட்டது. இனி இத்தகைய கர்வம் படைக்காதே ஓடிவிடு" என்று அனுப்பி விட்டனராம். சகோதர சகோதரிகளே! இத்தகைய நியாயாதிபதிகளுள்ள நாடு கடும்புலி வாழும் காட்டினும் கெட்டதாம்.

கி. ஆ. பெ. விஸ்வநாதன்,
நெ. 53, தஞ்சாவூர் ரோட், திருச்சிராப்பள்ளி.

---

## "மோன மென்பது ஞானவரம்பு"

"மோன மென்பது ஞானவரம்பு" என்ற வாக்கியம் ஔவை பிராட்டியாரருளியது. அதாவது "மௌனம் என்பது ஞானத்தின் எல்லை அல்லது மௌன மென்பது ஞானத்தை யடையும்வழி" என்று பொருள். மௌனம் அல்லது மோனம் என்றால் சும்மா இருப்பது என்று பொருள். சத்துவம், இராஜசு, தமசு ஆகிய முக்குணங்களில் இது சத்துவ குணத்தைச் சேர்ந்தது. சாதாரணமாக ஒருவன் வாய் பேசாமலிருந்தால் அவன் மௌனமா யிருக்கிறானென்று கூறுவது உலக வழக்கம். ஆனால், பேசாமல் மட்டும் இருந்தால் ஞானம் கிட்டிவிடுமா? அப்படியாயின் ஊமைகளெல்லாம் ஞானிகளாகவேண்டுமன்றோ? சன்னியாசிகள், துறவிகள் இவர்களிற் சிலர் வாயால் பேசாமல் அவசியமாக வெளியிடவேண்டிய எண்ணங்களை எழுதிக்காட்டுவதுண்டு. இத்தகையோர் ஒரு காரிய சித்திக்காகக் குறித்த காலம் வரையில்

மௌன விரதத்தை யனுஷ்டிப்பவர்கள். அதனால், பிறர் அவர்களிடம் அதிகமாகப் பேசுவதற்கு இடமில்லாமற் போகிறபடியால், அவர்களது மனம் நாட்டப்பட்ட நிலையினின்று சலிக்காமலிருக்க அனுகூலமாகிறது. ஆயினும் இவைகள் பூரண மௌனமாகா. கீழ்க்கண்ட மூன்றுவித மௌனங்களடங்கியதே பூரண மௌனம். அதுவே ஞானிகளுடையும் மௌனம்.

(1) வாக்கு மௌனம்:—வாய் திறந்து எதையும் பேசாதிருத்தல்.
(2) காஷ்ட மௌனம்:—அவயவங்களால் ஒரு வேலையும் செய்யாதிருத்தல்.
(3) மனோ மௌனம்:—மனதால் எதையும் சிந்திக்காதிருத்தல்.

ஒரு காரியம் நடக்கவேண்டுமாயின், மனம், இந்திரியம், புலன் மூன்றும் சேர்ந்தே அது நடக்கவேண்டும். இந்த மூன்றில் மனமே முதலில் ஒன்றை நினைக்கவேண்டும். பிறகு அது இந்திரியத்தின் உதவிகொண்டுபுலன் வழியாய் வெளி விஷயங்களை யுணர்ந்து கருமேந்திரியங்களால் செய்கிறது. மனம் நினைக்காவிட்டால் ஒரு காரியமும் நடவாது. ஆகையால், மனோ மௌனமே ஞானத்திற்கு முக்கிய சாதனமாகும். மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் நாம் கருமங்களைச் செய்கிறோம். மனதால் நினைப்பதாலும், வாக்கால் வசனிப்பதாலும், காயத்தால் ஒன்றைச் செய்வதாலும் பாபபுண்ணியங்களைச் செய்கிறோம். மனமடங்கிவிட்டால் கன்மமே யொழிந்துவிடும். மனம் சலனமற்றபோது சத்துவகுண மாத்திரமாகச் சேடிக்கிறது. மனதின் உருவ நிலையே அதன் இராஜோதமோ குணங்களாம். அருவ நிலையே அதன் சத்துவ குணமாம். மனோலயமடைந்த ஞானிகள் ஈசுரார்ப்பணமாகக் கனவுபோல் காரியங்களைச் செய்தாலும் அவர்களுக்குக் கர்மம் உண்டாகாது.

மனமொடுங்கினால், ஆன்மா அந்தச் சுத்த சத்துவவிர்த்தியால் தன்னைத் தானறிகிறது. அதாவது ஞானத்தை யடைகிறது. அதனாலே "மோன மென்பது ஞானவரம்பு" என்று கூறப்பட்டது. மனம் உள்ளும் வெளியுமாகிய இரண்டு வழிகளில் தொழில் செய்கிறது. வெளியில் இந்திரிய வாயிலாகப் புறம்போந்து விஷயங்களில் பிரவேசிக்கிறது. உள்ளே மனோராச்சியம் செய்கிறது. ஒவ்வொரு சமயம் நாம் வெளிவிஷயங்களைக் கவனிப்பதை விட்டு மனோராஜ்ஜியமும் செய்யாமல் (அதாவது மனதில் ஒன்றும் சிந்தியாமல்) சற்றுநேரம் சும்மா இருக்கிறோம். அப்போது அருகிலுள்ளோர் பேசுவதும் நமக்குக் கேட்காது. எதிரில் ஒருவர் செல்வதும் நமக்குத் தெரியாது. ஏனெனில், மனம் எந்த இந்திரியத்தோடும் சம்பந்தப்படாமலும், எதையும் சிந்திக்காமலு மிருக்கிறது. அதுவே மௌனமாகிய நிலைமை.

ஒரு தடாகத்தில் நீர் கலங்கி அலைகள் வீசிக்கொண் டிருக்கையில் அத்தடாகத்தின் அடியில் என்ன இருக்கிறதென்று தெரியாது. அத்தகைய தடாகத்தைப் போன்றது சலனத்தோடு கூடிய மனம். அலைகளின்றி அசை



வற்ற தெளிவான நீரையுடைய தடாகத்தில் அடியிலிருக்கும் வஸ்துக்கள் புலப்படும். சலனமற்று ஒரே நிலையில் நிற்கும் மனம், அதாவது சத்துவ குண மாத்திரமாகச் சேடித்து நின்ற மனம் அலையற்ற தடாகம் போன்றது. அப்போது அதன் அடியிலுள்ளது தோன்றும். மனதின் அடிப்பாகமே அது உதிக்குமிடம். ஆகையால் அங்கு நோக்க, அதாவது, மனம் எங்கிருந்து உதிக்கிறதென்று நோக்க, ஆன்ம தரிசனம் உதயமாகும். ஏனெனில், ஆன்மாவினின்றே மனம் உதிக்கிறது.

தாயுமானவர் மனதை நோக்கி "நின்சன்ம தேயத்தில் நீ செல்லல் வேண்டும்" என்றார். அதாவது, "மனமே நீ எங்கிருந்து முளைத்தாயோ அங்கு போய்ச்சேர்" என்றார். இன்னும் அம்மகானே,

"சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
யிம்மாயா மோகமினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ" என்றும்,

"சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தே னந்தோவென் விதிவசமே"

என்றும்,

"சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே" என்றும் அருளியதும்,

குமரக் கடவுளின் திருவருள் பெற்றுத் திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில்,

"*. * * * *,
சும்மா விருசொல் லறவென் றலுமே
யம்மா பொருளொன் றுமறிந் திலனே" என்றருளி யுள்ளதும் ஈண்டு சிந்தித்தற்பாலன.

இந்த மூவிதங்களும் சேர்ந்த மௌனம் சுத்த மௌன மெனப்படும்.

"சித்தமவுனஞ் செயல்வாக் கெலா மவுனஞ்
சுத்தமவுன மென்பாற் றோன்றிற் பராபரமே" தாயுமானவர்.

"என்னிடம் சுத்த மவுனம் உதித்தால் என் சித்தம், செய்கை, வாக்கு யாவும் மௌனமாகும். அதாவது, மனம், வாக்கு, காயம் மூன்றும் மௌனமாம்" என்பது பொருள்.

இந்த மோனநிலையை யடைதற்கு ஆசை யொழியவேண்டும். எல்லாரும் ஏககாலத்தில் இதை யடையமுடியாது. மனம் ஒரே சிந்தனையில் நிற்பதே கஷ்டம். சதா ஒருசிந்தனைவிட் டொருசிந்தனையில் குதித்தலைந்து

கொண்டே யிருப்பதுதான் அதன் சுபாவம். வேதத்தில் மனதைக் குரங்கிற்கே யொப்பிட்டிருக்கிறது. எத்தகைய குரங்கெனின்:—குரங்கு கள்ளைக் குடித்துவிட்டால் அதிகசேட்டை செய்யுமன்றோ? அதோடு அது காரமாகிய இஞ்சியை மென்றுவிட்டால் இன்னும் அதிக சேட்டை; அதோடு அதைத் தேளும் கொட்டிவிட்டாலோ பின்னும் சொல்லவேண்டியதில்லை. அதுவும் போதாதென்று ஒரு பேயும் அதைப் பிடித்துக்கொண்டால் அக்குரங்கு எப்படி யிருக்கும். அத்தகைய குரங்கிற்குச் சமதையாக மனதை யொப்பிட்டிருக்கிறது.

ஆகையால், முதலாவது ஆசையைக் கொஞ்சம் கொஞ்சமாக அடக்க வேண்டும்; மனம் இச்சாசொரூபம். இச்சையை யொழித்தால் மனமடங்கும்; அதோடு மனதை முதலில் குறித்த ஒரு சிந்தனையிலேயே நிறுத்தப் பழக வேண்டும். அதற்கே சகுணோபாசனை வைக்கப்பட் டிருக்கிறது. உலக போகத்திலிருக்கும் இச்சையை உபாசனு மூர்த்தியினிடம் செலுத்தி (அதுவே பக்தி யென்பது) மனதை அங்கு நிறுத்திப் பழகவேண்டும்; அதில் திடப்பட்டு அநுபவம் முதிர முதிர, மனவொடுக்கம் சித்திக்கும். இது மிக்க கஷ்டமானதே யாயினும் சாத்தியமானதே; சும்மா விருப்பதுவே மிக்க கஷ்டம். இது சோம்பலல்ல. இதில்தான் மனம் தன் பூரண சுறு சுறுப்போடு வேலை செய்கிறது. மனதை யதன் இச்சைப்படி விட்டுவிட்டு அதன்பின் அலைவது கஷ்டமல்ல. ஒரு குதிரையை அதன் மனம் போனபடி முரட்டுத்தனமாய் மேடு பள்ளம் பாராது பாய்ந்தோடும்படி விட்டு விடுவது கெட்டிக்காரத்தனமல்ல; கஷ்டமுமல்ல; அதன் கடிவாள வாரை யிழுத்துப்பிடித்து அதை அடக்கி நிறுத்துகிறதே கஷ்டம். அப்படிச் செய்பவனே சாமார்த்தியவான். மனதை யடக்கி யாளக்கற்றவனே உண்மையான வீரன். அவனே புருடன் எனப்படுவான். நம் முன்னோர் அச்சக்தியாலேயே திரிகால ஞானிகளாய் அபூர்வ காரியங்களைச் செய்தார்கள். இத்தெய்வீக சாத்திரம் நம் புண்ணிய பூமியிலேயே அநாதியா யுள்ளது. ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இதற்கு முயற்சி செய்யவேண்டும். ஏனெனில், மனிதன் அடையத்தக்க பேரின்பப்பேற்றை யளிக்க வல்லது இம்மார்க்க மொன்றே.

ஓம் தத் ஸத். சீடன்.

---

## பிரகலாதன்.

### சச்சிதானந்த நீதிமன்றத்தார் அவர்கள் நீதிஸ்தலம்.

1921ளு வியாச்சிய நெ. 1.

இரணியன்......................வாதி.

1. பிரகலாதன்................ } பிரதிவாதிகள்.
2. நரசிம்மன்.................. }

மேற்படி வாதி வணக்கமாய் நீதி விவகாரச்சட்டம், 7-வது அதிகாரம், 1-வது பிரிவுப்படி எழுதிக்கொண்ட பிராது.



1. வாதி.—வைகுந்தமா நகரம், வைகுந்தத்திலிருக்கும் துவார பாலகன் இரணியன்.

மேற்படி வாதிக்குக் கட்டளை வகையரு சார்வு செய்ய விலாசம் மேல் கண்டதுவே.

பிரதிவாதிகள்—மேற்படி யூரிலிருக்கும் வாதியின் குமாரன் பிரகலாதன் ... ... ...1.

மேற்படி யூரிலிருக்கும் வைகுந்தநாதன், என்ற அச்சுதன்...2.

3. தாவா.—தயித்தியாபுரியும், மூவுலகமும் இந்த நீதி மன்றத்தார் அவர்கள் எல்லைக்குள் ளிருக்கின்றன.

4. வாதி கொடுந்தவம்செய்து எப்போதும் சாகாத வரத்தைப்பெற்றுத் தயித்தியபுரியைத் தலை நகராக்கி, மூவுலகிற்கும் சக்கிராதிபதியாகவும், தேவர் முதல் சகல ஜீவராசிகளும் வணங்கத்தக்க கடவுளாகவும் வாழ்ந்து வருங்கால், 2-ம் பிரதிவாதிக்கு வாதியின் சுகவாழ்க்கையின்மீது பொறாமை ஏற்பட்டு, வாதியைக்கெடுப்பதற்கு வாதியின் குமாரனுகிய 1-ம் பிரதிவாதியைத் துணைக் கொண்டார். இதனை அறிந்த வாதி, 1-ம் பிரதிவாதியை, 2-ம் பிரதிவாதியுடன் சேரவாவது, அவர் பேச்சிற்குச் செவி சாய்க்கவாவது கூடாதென்று புத்திமதி சொல்லி வந்தார்.

5. 1-ம் பிரதிவாதி "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற முதுமொழிகளுக்கு மாருக 2-ம் பிரதிவாதியின் பிரதாபங்களைப் பேசுவதும், அவர் நாமத்தையே பஜிப்பதுமாய், அல்லும்பகலும் அறுபதுநாழிகையும் அவரையே துணையாகக்கொண்டு வாதியைத் தந்தையென்று மதியாது நடந்து வருங்கால்,இது விஷயங்களை அறிந்த வாதி தனயனுக்கும் தந்தைக்குமுள்ள சம்பந்தங்களைப்பொறுத்து, 2-ம் பிரதிவாதி, வாதியின் எதிரி யென்றும், அவரைத் துதித்தல், போற்றல், அவர் சேர்க்கையாவும் வாதிக்குக் கெடுதலைத்தருமென்றும்,2-ம்பிரதிவாதி நாமமே வாதி காதில் விழக்கூடா தென்றும், வாதிதான் கடவுளென்றும், 1-ம் பிரதிவாதி வணங்கவேண்டிய கடவுள் வாதியேயன்றி வேறில்லை என்றும், புத்தி புகட்டியும் 1-ம் பிரதிவாதி கேளாது, திரும்பத்திரும்ப 2-ம் பிரதிவாதியைப் பின்பற்றியவனுக இருந்தமையால், தந்தைக்குள்ள கடமைப்படி வாதி 1-ம் பிரதிவாதியைப் பலவித கண்டனை, தண்டனைகள்மூலம் அடக்கிவருங் காலத்தில், ஒருநாள் 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியைத் துணைக்குஅழைத்தான். முன் யோசனையின்மீது 2-ம் பிரதிவாதி நரசிங்க வேடந் தரித்துத் தூணில் மறைந்திருந்து திடீலென்று வாதியைத்தாக்கி வாதியின் மார்பைப் பிளந்து, வாதியின் குடல்களை மாலையாக அணிந்து கூத்தாடியதுமல்லாமல், வாதியை 2-ம் பிரதிவாதியின் வாசல் காப்போனுகவும் செய்திருக்கிறார்.

6. பிரதிவாதிகளின் செய்கையால் வாதியின் சரீரத்திற்குப் பங்கம் ஏற்பட்டமையால், வாதி சகல போகபாக்கியங்களையும் இழந்து, 2-ம் பிரதி

வாதியின் ஊழியக்காரனாக நேர்ந்தது. வாதியின் சரீரத்திற்குப் பங்கம் நேரிடா திருந்தால் வாதி லோகேஸ்வரனாய், நிராக்ஷேபனையாய் மூவுலகையும் ஆண்டு அனுபவித்துச் சுகத்திலிருந்துகொண் டிருப்பார்.

7. வாதி தன் சரீரத்தைத் திரும்பப்பெறவும், தான் ஆண்ட லோகேஸ்வர பட்டத்தையும், ராஜ்ஜியங்களையும் பெறவும் வாதியால் இந்தத் தாவாக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

8. வாதியின் சரீரத்தையும், வாதி பெற்ற பட்டங்களையும், அரசாக்ஷியையும் திரும்பக் கொடுக்கும்படி வாதி 2-ம் பிரதிவாதியைத் தொடர்ந்து கேட்பதில் தருவதாகச் சொல்லி வீண்காலம் கடத்தி வருகிறார்.

9. **வியாச்சிய மூலம்:**—2-ம் பிரதிவாதி, வாதியின் அரசாக்ஷியையும், சரீரத்தையும் கொடாதது. அது கடைசியாக வாதியின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதற்காக 2-ம் பிரதிவாதி சொன்ன துன்மதி௵ சித்திரை௴ 1௳ முதல்-இந்த நீதி மன்றத்தார் அவர்கள் ஸாஹத்திற்குள்பட்ட தயித்திய புரியிலும், வைகுந்தத்திலும் உற்பத்தி.

10. வாதியின் தாவா நீதி மன்றத்திற்கும், அதிகாரத்திற்கும் வாதியால் ஏற்படுத்திக்கொண்ட மதிப்பு ரூ. 10—0—0.

## தொகை விவரம்.

நீதி மன்றத்திற்கு விசாரணைக்காகவும் வாதியால் கட்டபட்ட கட்டணம் ரூ. 10—0—0.

11. ஆகையால், நீதிமன்றத்தார் கிருபை செய்து,

(1) வாதிக்கு, வாதியின் இழந்த சரீரத்தையும், ராஜ்ஜியத்தையும், பட்டங்களையும் 2-ம் பிரதி வாதி, கொடுக்கும்படிக்கும்,

(2) வாதியின் செலவுதொகையைப் பிரதிவாதிகள் கொடுக்கும்படிக்கும்,

(3) சங்கதிக்கும், சமயத்திற்கும் தகுந்த இதர பரிகாரங்கள் கிடைக்கும்படிக்கும் தீர்ப்புச் செய்யப் பிரார்த்திக்கப் படுகிறது.

வைகுந்தம்<br>
துன்மதி௵ சித்திரை௴ 30௳

இரணியன்,<br>
வாதி.

மேல்கண்ட சங்கதிகள் நேரில் தெரியுமென்றும், அவைகள் எதார்த்தமானவைகளென்றும் மேற்படி வாதியாகிய நான், துன்மதி௵ புரட்டாசி௴ 15௳ வைகுந்தத்திலிருந்து உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

இரணியன்,<br>
வாதி.

இந்தப் பிராதை நீதி மன்றத்தார் வாதியிடம் பெற்றுக்கொண்டு பிரதிவாதிகளுக்கு அறிக்கை செய்ததில் பிரதிவாதிகள் அடியிற்கண்ட விவரப்படி தாவா விவரப் பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள்:—



மேற்படி பிரதிவாதிகள் வணக்கமாய் நீதி விவகார சட்டம், 8-வது அதிகாரம், 1-வது பிரிவுப்படி எழுதிக்கொண்ட விவரப் பத்திரிகை:

1. வாதியின் தாவா சுத்தப் புரட்டும், மோசடியுமானது; வாதிக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை.

2. எந்த அரசாங்கமா யிருந்தாலும் சரியே. அரசனா யிருப்பவன் தன்னுயிர்போன்று மன்னுயிரையும் நினைத்துச் சகல ஜீவர்களுக்கும் யாதாமொரு தீங்கு ஏற்படா வண்ணம் அவர்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. எந்த அரசாங்கம் தான் நித்திய சிரஞ்சீவி என்று கருதி எவர் குறைகளையும் பொருட்படுத்தாது தன் மனம் போன போக்கெல்லாம் போகிறதோ அப்படிப்பட்ட அரசாங்கத்தைச் சமயோசிதம்போல் அழிக்க 2-ம் பிரதிவாதிக்கு அதிகார முண்டு.

3. வாதி கொடுங்கோன் மன்னன்; தனக்கு மேற்பட்டவர் எவருமில்லை யென்றும், தான் வைத்ததே சட்டமென்றும், தன் குடிகளையும், தேவர்களையும், தபசி, சந்நியாசிகளையும், பசுக்களையும் கொடூரமாய் நடாத்தி வந்தமையால், 2-ம் பிரதிவாதி தமக்குள்ள அதிகாரப்படி வாதியின் தேகத்தை யழித்தது உண்மை.

4. பிராதின் 8-வது பாராவில் கண்ட விவரப்படி வாதி எக்காலத்திலும் தொடர்ந்து வந்ததில்லை. வாதியின் தாவா காலாவதியாகி விட்டது.

5. வாதியின் தாவா ஒருகால் மெய்யென்று ஏற்பட்டாலும் வாதி கோரும் பரிகாரங்கள் சட்டப்படி கிடைக்கத் தக்கவை யல்ல.

6. இதில் 1-ம் பிரதிவாதியை அனாவசியமாகக் கக்ஷிக்காரராகச் சேர்க்கப்பட் டிருக்கிறது.

7. ஆகையால், நீதிபதி யவர்கள் கிருபை செய்து வாதியின் தாவாவை இந்தப் பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளும்படி செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கப்படுகிறது.

பிரகலாதன்,<br>
நரசிம்மன்,<br>
பிரதிவாதிகள்.

மேல்கண்ட சங்கதிகள் நேரில் தெரியுமென்றும், எதார்த்தமானவைகளென்றும் மேற்படி பிரதிவாதிகளாகிய நாங்கள் துன்மதி௵ ஐப்பசி௴ 1௳ பரமானந்த புரியிலிருந்து உறுதியாய்ச் சொல்லுகிறோம்.

பிரகலாதன்,<br>
நரசிம்மன்,<br>
பிரதிவாதிகள்.

மேல்கண்டபடி பிரதிவாதிகளின் விவரப் பத்திரிகையைப் பெற்று நீதி மன்றத்தார், அடியிற்கண்ட கேள்விகளை நிரூபிக்க உபயவாதிகளும் தயாரா

யிருக்க வேண்டுமென்று மேற்படி வியாஜ்ஜியத்தின் விசாரணையைக் கார்த்திகைமீ 1உக்குத் தள்ளிவைத்திருக்கிறார்கள். நிரூபிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(1) வாதி கடவுளா லோகேஸ்வரனா; வாதிக்குத் தான் ஆண்ட ராஜ்ஜியங்களும், பட்டங்களும் கிடைக்க வேண்டியவைதாமா?

(2) வாதியின் தாவா காலாவதியாகி விட்டதா?

(3) வாதி ஜீவர்களைக் கொடுங்கோன்மையாய்ப் பிராதில் கூறப்பட்டபடி ஆண்டது மெய்யா?

(4) அவ்வாறு ஆண்டிருந்தால் வாதியைத் தண்டிக்க 2-ம் பிரதிவாதிக்கு அதிகார முண்டா?

(5) வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு எம்மாத்திரம் கிடைக்க வேண்டியது?

இதன் விசாரணை கார்த்திகைமீ 1உக்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

அகண்ட பரிபூரண சச்சிதானந்தன்,
பிரதம நீதியதிபர்.

உபயவாதிகளின் நியாயவாதமும், தீர்மானமும் அடுத்தாப்போல் தொடர்ந்து வரும்.

எஸ். அயோத்திராம்,
திண்டுக்கல்.

---

## திருப்பதி மலையின் அக்கிரமங்கள்.

தென் நாட்டின் முக்கிய ஸ்தலங்களுள் திருப்பதி ஒன்று என்பது நம் நாட்டில் எல்லோருக்கும் தெரியும். இம்மலையில் ஒவ்வொரு நாளும் உற்சவ கால தினமே. எப்போதும் ஜனத்திரள் அதிகமாகவே யிருந்துகொண்டிருக்கிறது. நூற்றுக் கணக்கான மைல் தூரத்திலிருந்து, அதிக பொருளைச் செலவழித்துக்கொண்டு ஜனங்கள்—பக்தகோடிகள்—அம்மலைக்குப் போவது சுவாமி தரிசனத்திற்கே. இவ்வளவு செலவு, கஷ்டம் முதலியவைகளையும் பாராது, அம்மலைக்குப் போய் இரண்டொரு நாட்களிருந்தும், சுவாமி தரிசனமே கிடைக்காது திரும்ப நேரிடுமே யானால் பக்தர்களின் மனது எவ்வாறு துன்புறும் என்பதை எல்லோரும் கவனியுங்கள். இத்துன்பத்திற்கு ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் காரணரல்லர்; ஆனால், அவருடைய பணியாளரே யாவர்.

“சுவாமி வரங் கொடுத்தும், பூசாரி இடங் கொடுக்கவில்லை” என்றாற்போல், அக்கோயிலில் வேலை பார்க்கும் சிப்பந்திகளின் கொடுமை அதிகமாயிருக்கிறது. ஒரு நாளைக்கு இரண்டுமுறை, காலை 12-மணிக்கும், மாலை 7-மணிக்கும் மட்டும்தான் சுவாமியைத் தரிசிக்கலாமாம். மற்ற நேரங்களில் கோயில் சாத்தப்படுகின்றது. ஆகையினால், அக்காலங்களில் ஜனங்கள் கூட்டம் அதிகமாய்ச் சேர்ந்து விடுகிறார்கள். பூசை முடிந்ததும் பரிசாரர்களும், மற்றவர்களும் பிரசாத அண்டாக்களை உருட்டுவதும், பங்கிடுவதுமேபெரிய



கலாட்டாவா யிருக்கிறது. பின் கோயில் வாசலில் சேவகர்கள் நின்றுவிடுகிறார்கள். போதாக் குறைக்குக் கையில் தோல் பட்டைகளை வைத்துக்கொண்டு, தரிசனத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும் ஜனங்களின்மேல் அடிக்க ஆரம்பிக்கிறார்கள். அந்தோ, பரிதாபம்! பக்தி மேலிட்ட ஜனங்களுக்கு அத்தோலடியும், நெருக்கமும் சிறிதும் தெரிவதில்லை. இவ்வித கஷ்டத்தில் இவர்கள் இரண்டு, மூன்று மணிநேரம் நிற்கவேண்டியதா யிருக்கிறது.

ஆனால், வாசலில் நிற்கும் சேவகர்களுக்கு லஞ்சம் கொடுக்கிறவர்கள் முன் பின் பாராவுடன் சுவாமி அருகில் சென்று சாவகாசமாய்த் தரிசனம் செய்கிறார்கள். ஒன்று இரண்டணாவா யிருந்தால் கொடுத்துவிடுவோம். (கஷ்டம் பொறுக்க முடியாததால்) என்று நானும் சேவகனை விசாரித்தேன். ஆனால், ரூபாய்க் கணக்கி லிருந்ததினால் முடியவில்லை. நோக்குமிடத்து இச்சேவகர்களுக்குத் தினம் 50 ரூபாய்களேனும் கிடைக்கும்போல் தோன்றுகிறது. ஜனங்களிடத்திலிருந்து இப்பொருள் பறிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே, இவர்கள் தரிசனத்திற்கு வரும் ஜனங்களைத் தடுத்து, அதிக காலம் வெளியே நின்று தவிக்கும்படி செய்கிறார்கள். இதனால் எல்லோரும் முக்கியமாய் ஏழைகள் கொடிய துன்பத்திற் காளாகிறார்கள்.

இவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு நான்பிழைத்தேன், நீ பிழைத்தாய் என்று கோயிலுட் சென்றால் அவ்விடமும் இக்கொடுமைகள் இருக்கின்றன. உள்ளே சென்றதும் தரிசனம் செய்யா முன்னரே, அக்கொடியர்கள் திரும்புங்கள், திரும்புங்கள் என்று தோல்பட்டையால் தலை வீங்கும்படி அடிக்க ஆரம்பிக்கிறார்கள். இதன்றி அர்ச்சகர்கள் தண்ணீர்ப் போகணிகளைத் தலைமேல் தூக்கிக்கொண்டு எல்லோரும் நனையும்படி மேலே கொட்டுகிறார்கள். முடிவில் உள்ளே போய் வெளியே வருவதற்குள், “தான் தப்பினது தம்பிரான் புண்ணியம்” என்பதைப்போல் முடிகிறது. கோயில்களில் இத்தகைய அக்கிரமம் நடப்பது மிகவும் மோசமா யிருக்கிறது.

ஆகையினால், தேவஸ்தான கமிட்டி உத்தியோகஸ்தர்கள் இதைக்கவனித்து, சேவகர்களைக் கண்டித்து, பக்தர்கள் கொடுமையும், கஷ்டமும் இல்லாது தரிசனம் செய்யும்படியான சவுகர்யங்களைச் செய்வார்கள் என நம்புகிறேன்.

வை. நடேசன்,
செவ்வாய்ப் பேட்டை.

குறிப்பு:—திருப்பதி ஸ்ரீயப்பதியாகிய வைகுண்ட வாசியின் திவ்ய க்ஷேத்திரங்களாகிய 108 திருப்பதிகளுள் முதன்மை பெற்றதாகும். இத்திவ்விய க்ஷேத்திரத்தில் எம்பெருமான் சேவைக்குச் செல்லும் பக்தர்கள் படும் மேற்படி கஷ்டங்களைப்பற்றி முன்னமே சிலர் நம்மிடம் கூறியுள்ளார்கள். மேற்கண்ட அக்கிரமச் செய்கைகளைக் கேட்கும் எத்தகைய ஆஸ்திகன் மனமும் வேதனைப்படும் என்பதில் ஐயமில்லை.

இக்காலத்தில் உயர்ந்த அந்தஸ்தும், அதிகாரமும், செல்வமுமுடைய உத்தியோகஸ்தர் வீடுகளி லெல்லாம் யாசகர்வரின் வெருட்டி யோட்டுவதற்காக வாயிற்படியில் ஒரு சேவகனைக் காணலாம். சிலர் வீட்டில் நாய்களுமுண்டு. ஜகத்ரக்ஷகனது ஆலயத்தையும் அவ்வாறு செய்யும் புண்ணிய புருடர்களை யென்னென்று நினைப்பது? அந்தோ! இவர்கள் மறுபடி எந்த கல்பத்திற்கு இந்த அரிய மானிட ஜன்மத்தைப் பெறுவார்களோ, அதுபரியந்தம் எத்தகைய தீவாய் நரகில் வருந்த நேரிடுமோ என்று இவர்களைப் பற்றி இரக்கங்கொள்ள வேண்டியதாகவு மிருக்கிறது. அந்தோ! சுவாமி தரிசனத்திற்கு வருபவர்களை யிவ்வாறு குரூரமாக நடத்தச் சேவகர்களை வைப்பதைவிடச் சோணங்கி நாய்களை வைத்துவிட்டால் அவைகளேனும் (தின்பொருளாகிய) இலஞ்சம் வாங்கிக்கொண்டு பாரபட்சமாக நடத்தாமல் யாவரையும் ஒரே மாதிரி நடத்தும்.

கோயில் பூசாரிகள் மனம் பிரசாதத்திலும், பக்ஷணங்களிலும் பூரணமாக அழுந்திக் கிடக்கிறது. "கோயிற் பூனை தேவர்க்கஞ்சாது" என்பது போல், அவர்கள் கோயிலிலுள்ள சுவாமியின் சொரூபத்தை மலைமேலுள்ள கற்களில் இதுவும் ஒரு கல்லென்றே கருதுகிறார்கள் போலும். இன்றேல், அச்சேவகருடைய அக்கிரமச் செயல்களைக் கண்டு சகித்துக்கொண் டிருப்பார்களோ. பெரும்பாலும் சேவகர்கள் வாங்கும் இலஞ்சப் பணத்தில் இவர்களுக்கும் ஒரு பங்கிருக்கும் போலும். அந்தோ! இலஞ்சப் பேய் வடவேங்கடமுடையான் சந்நிதிக்குள்ளுமா நுழையவேண்டும். அந்தோ! அச்சந்நிதியில் பகவானைத் தரிசிக்கவரும் பக்தர்களுக்கு அத்தகைய அபசாரம் செய்வோர் அவனது கொடிய தண்டனைக்குத் தப்பமுடியுமோ? ஜகந்நாதன் தண்டனை இச்சன்மத்திலேயே தொடருமன்றோ.

இத்தகைய விஷயத்தைக் கோயிலதிகாரிகள் இனியேனும் கவனித்து இக்கொடுமைகள் நடக்காவண்ணம் அவசியம் தக்க ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம். இன்றேல் அதனாலுண்டாகும் கொடிய பாபம் அவர்களையும் சாரும். அவர்களும் கவனிக்காவிட்டால் கடைசியில், துரைத்தன அதிகாரிகளிடமே இதைப்பற்றி முறையிட்டுக் கொள்ளவேண்டும்.

பத்திரிகாசிரியர்.

---

## கைவல்ய நவநீத வசனம்.

(185-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (சீடன் சத்தபூமிகளைப்பற்றி விசாரித்தல்)

**சீடன்:**—"அடியேன் மனதிற் குகந்த தேசிகமூர்த்தியே! நமக்குப் பிரம்ம சிந்தனையாகிய இத்தொழிலே உரியதன்றி வேறு தொழிலில்லையன்றோ? பிரம்மத்தைப்பற்றி உபதேசித்தும் அதையே சிந்தித்தும் இருப்பதன்றோ ஞானிகளுக்குரிய தொழில்? ஆதலின் தாங்கள் முன்னே



கூறிய 'துரியாதீதமும் ஏழாம் பூமியும் முக்கியமாம்' என்றதையும் அதைப்பற்றிய விவரங்களையும் எளிதாக அடியேன் உணரும் வண்ணம் கூறி அருளப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

**ஆசான்:**—புத்திரனே! இப்பூமிகளில் ஞானபூமிகள் ஏழென்றும், அஞ்ஞான பூமிகள் ஏழென்றும் கூறப்படும். இவற்றில் முதலாவதாக அஞ்ஞான பூமிகளைப்பற்றிக் கூறுகிறோம், கேட்பாயாக.

### அஞ்ஞான பூமிகள் 7.

(1) பீஜசாக்கிரம், (2) சாக்கிரம், (3) மகாசாக்கிரம், (4) சாக்கிர சொப்பனம், (5) சொப்பனம், (6) சொப்பன சாக்கிரம், (7) சுழுத்தி.

இவற்றில், .

1. **பீஜசாக்கிரம்:**—நித்திரையினின்று விழிப்புக்கு வருமுன் மாயையோடு சம்பந்தப்பட்டிருந்த ஆத்ம சைதன்னியத்தி னின்றும் எழும் சிதாபாசத்தோடு கூடின அறிவுமாத்திரமான நிலையே பீஜசாக்கிரம் எனப்படும்.
2. **சாக்கிரம்:**—மேற்கண்ட பீஜம்போன்ற அறிவினிடத்தில் முன்னில்லாத அகமமதைகள் சூட்சுமமாக உண்டாகும் நிலையே சாக்கிரம் எனப்படும்.
3. **மகாசாக்கிரம்:**—பிறகு யான் எனது என்ற அகமமதைகள் திடமாகவும் விரிவாகவும் உதிப்பது மகாசாக்கிரமாம்.
4. **சாக்கிரசொப்பனம்:**—சாக்கிரத்தில் தான் அறிந்தவைகளையும் அறியாதவைகளையும் கொண்டு மனோராச்சியம் செய்தல் சாக்கிரசொப்பனம் எனப்படும்.
5. **சொப்பனம்:**—சாக்கிரத்தில் அனுபவித்த வைகளையும், அனுபவியாதவைகளையும் நித்திரையில் காண்பதாகிய கனவே சொப்பனம் என்பதாம்.
6. **சொப்பனசாக்கிரம்:**—முன்பு கண்டு மறந்த சொப்பனத்தை மறுபடி சாக்கிரத்தில் காண்பது சொப்பனசாக்கிரம் அல்லது சொப்பன நனவு எனப்படும்.
7. **சுழுத்தி:**—மேற்கண்ட ஆறு அவஸ்தைகளு மின்றிக் கருவிகரணங்கள் யாவும் ஒடுங்கி அஞ்ஞான விருள்மூடி யிருக்கும் நித்திராவஸ்தையே சுழுத்தி என்பதாம்.

[**பீஜசாக்கிரம்:**—சாக்கிரமே பீஜசாக்கிரம், சாச்கிரம், மகாசாக்கிரம் என்ற மூன்று நிலைகளாகப் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது..

நாம் நித்திரையினின்று விழிப்படையும்போது இந்த மூன்றுபடிகளையும் கடந்தே வெளிவருகிறோம். திடீலென்று ஏககாலத்தில் பூரணவிழிப்பி

லுள்ள சகல உணர்ச்சிகளையு மடைவதில்லை. நாம் நித்திரைக்குச் செல்லும் போதும் இவ்வாறே சில படிகளைக்கடந்தே செல்கிறோமன்றி ஏககாலத்தில் நித்திரைவந்து மூடிக்கொள்வதில்லை. நாம் அவற்றைக் கவனிக்காமல் அத்தொழில்கள் தாமே நடைபெற விட்டிருப்பதால் அவை நமக்குப் புலப்படவில்லை.

நித்திரையில் படிப்படியாகக் கருவிகரணங்கள் எல்லாம் ஒடுங்கி நாம் என்பதும் மறந்து ஆன்மா அஞ்ஞானமான இருளில் இளைப்பாறுகிறது. அங்கிருந்து சாக்கிரத்திற்கு வரும்போது முதலில் நமது தேகம் என்ற நினைவுகூட வாராமல் நாம் என்ற ஒரு அற்ப வுணர்ச்சிமட்டுமே யுண்டாகிறது. இது வித்திலிருந்து ஊசிமுனைபோல் கிளம்பும் முளை போன்றது. சாக்கிரத்திற்கு இது வித்துப் போன்றதாதலால் இதற்குப் பீஜசாக்கிரம் என்னப்பட்டது. இந்த நிலையில் நான் என்ற அகங்காரமாவது, எனது என்ற மமகாரமாவது ஒன்றுமில்லை; இது காலதேச வஸ்து பரிச்சேதமற்ற நிலை. இங்கு மனமுமில்லை; மனம் பிறகே கிளம்புகிறது. ஆகையால் இது பரிசுத்தமான நிலை. ஒருவன் இந்த நிலையினின்றும் சகலாவஸ்தைக்கு வாராமல், மறுபடி கேவலத்திற்கு மிடங்கொடாம லிருந்தால் இதுவே ஆத்மானுபவமான நிலையாகும்.

இதன் பின் தேகத்தின் உணர்ச்சியும், இடவுணர்ச்சியும், காலவுணர்ச்சியுமட்டும் தோன்றும். இதுவே சாக்கிரம் என்பது. கடைசியில் விஷயாதிகள் எல்லாம் ஜனிக்கின்றன. அதாவது, இன்று சனிக்கிழமை, நான் துரிதமாக எழுந்து இன்னின்ன காரியத்தைச் செய்யவேண்டும் என்பது முதலான பூரணமனச் சலனம் உண்டாகி விடுவது. இதுவே மகாசாக்கிரம் என்பதாம்.

சொற்பனத்தில் கண்டவிஷயங்களைக் கண்டது கண்டவாறே சாக்கிரத்தில் சிந்தித்தல் சொப்பன சாக்கிரம். சாக்கிரத்தி லிருக்கும்போது பிரத்தியட்ச நிகழ்கால விஷயங்களை விட்டுவிட்டு மனப்போக்கின்படி மனோராஜ்ஜியம் செய்தலாகிய பகற்கனவே சாக்கிர சொப்பனம் என்பதாம்.]

(இனி ஆசான் ஞானசத்த பூமிகளைக் கூறுகிறார்).

## ஞான சத்த பூமிகள்.

(1) சுபேச்சை, (2) விசாரணை, (3) தநுமானசி, (4) சத்துவாபத்தி, (5) அசம்சத்தி, (6) பதார்த்தபாவனை, (7) துரியம் என்று ஞானபூமிகள் ஏழாம். இவற்றுள்,

1. **சுபேச்சை.**—'சுபம்' என்பது பிரம்ம ஞானத்தா லடையும் மோக்ஷம். இச்சை என்றால் அதை விரும்புவது. அதாவது, மோக்ஷஇச்சை. "அடடா! நாம் மூடத்தனமாக இந்த அநித்தியமான உலகத்தையும், இதிலுள்ள போகபாக்கியங்களையும் நம்பிப் பிறப்பிறப்பாகிய பெருந் துன்பத்தில் உழன்றுகொண் டிருக்கிறோம்" என்ற உணர்வு பிறந்து, சே! இனி எல்லாக் கருமங்களையும் நிவர்த்திசெய்து, எப்படியாவது மோக்ஷமடைய வேண்டும் என்று திடவைராக்கியம் கொள்ளலே சுபேச்சையாகிய முதற் பூமியாகும்.



2. **விசாரணை.**—மோக்ஷமடைய வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டவன் குரு, பெரியோர் இவர்களை யடைந்து சாத்திர விசாரணை செய்து ஞானத்தையடைய அப்பியசித்தல் விசாரணையாம்.

3. **தநுமானசி:**—சாத்திர ஆராய்ச்சியாலும், குருவினிடம் கேள்வி கேட்டதாலும் உண்டான பலத்தால் பிரபஞ்சம், அநித்தியம் என்ற உண்மை தோன்றி மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றிலுள்ள ஆசையை யறவே விடல் தநுமானசியாம்.

4. **சத்துவாபத்தி.**—மேற் கண்ட மூன்று பூமிகளின் அப்பியாச வலியால் சத்துவாசனை யுடைய மனதினிடத்தில் உண்மையறிவுதித்தல். அதாவது, பிரபஞ்சமனைத்தும் சொப்பனம் போன்றதெனவுணர்ந்து சத்ரூபப் பிரம்மமே தானென வறிந்து, பிரம்ம சாக்ஷாத்காரத்தை யடைய அப்பியசித்தல் சத்துவா பத்தியாம்.

5. **அசம்சத்தி.**—'சம் சத்தி' என்றால் விஷயங்களில் சம்பந்தமுடைமை; 'அசம்சத்தி' என்பது அதற்கு எதிர்மறை; விஷயசம்பந்த மின்மை. நான்காம் பூமியின் அப்பியாசவலியால் பிரபஞ்ச முதல் யாவும் அகண்டப்பிரம்ம சொரூபமாய்க்காணும் அபரோக்ஷ அநுபவமடைந்து சாக்ஷாத்காரமன்றி மற்ற மாயாகாரியமான எல்லா விஷயங்களின் சம்பந்தமும் உணர்வினின்று நீக்கிவிடல் அசம்சத்தியாம்.

6. **பதார்த்தபாவனை.**—வெளியிலும் உள்ளும் எவ்விதப் பொருள்களின் தோற்றரவு மில்லாதிருத்தல் என்பதாம். அதாவது, சமாதி அப்பியாச வலியால் பிரம்மான்ம ஐக்கியம் பூரணமா யடைந்து திரிபுடி (காண்பான், காக்ஷி, காக்ஷிப்பொருள் என்பவை) யற்று இரண்டற்ற ஆனந்த நிலையடைதல் பதார்த்தபாவனையாம்.

7. **துரியம்.**—இது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்றவஸ்தைகளுக்கு மப்பாற்பட்டது; திரிபுடி ஒழிந்த சாக்ஷாத்கார நிலையிலழுந்திப் பூரண மௌனமாய்த் தன்னாலும் பிறராலும் பகிர்முகப்படாமல் நிர்விகல்ப சமாதி நிலையை யடைவதே துரியம் எனப்படும்.

இந்த ஆறும் பூமியாகிய துரிய பூமியையே முன்பு துரியாதீதம் என்றோம்; அதன் காரணத்தைக் கூறுகிறோம் கேட்பாயாக. முதல் மூன்று பூமிகளிலும் உலகத் தோற்றரவுண்டு; ஆகையால் அவை சாக்கிரமாகும். நான்காம் பூமியாகிய சத்துவாபத்தியில் பிரபஞ்சம் கனவுபோற் றோன்றுமாதலால் அது சொப்பனமாகும். ஐந்தாம் பூமியின் அப்பியாசத்தில் யாவும்

பிரம்மசொரூபமாகத் தோன்ற உலகம் நழுவுமாதலால், அது சுழுத்தியாம்; ஆனந்தானுபவம் உதிக்கும் ஆறும் பூமி துரியமாகும். அதற்கப்பால் ஆனந்தாதீதமாய் ஒன்றும் தோன்றாத நிலையாகிய ஏழாம்பூமி துரியாதீதம் என்று கூறப்பட்டது; துரியாதீதம் எனின் துரியத்திற்கு அப்பாற்பட்டது என்பது பொருள்.

தேகத்தோடு கூடியிருக்கும் சீவன் முத்தர் அடைந்திருக்கும் துரியம் என்னும் பெயரையுடைய ஏழாம் பூமியைத் துரியாதீதமெனின் தூலதிருஷ்டியுடையோர்க்கு மயக்க முண்டாகுமென்று கருதி மேலோர், முதல் மூன்றையும் சாக்கிர மென்றும், நான்காவதைச் சொப்பன மென்றும், சுழுத்தியாகிய அசம் சத்தி என்னும் ஐந்தாம் பூமியோடு பதார்த்தபாவனை என்ற ஆறாவது பூமியைச்சேர்த்து அதைக்காட சுழுத்தி யென்றும் கூறி, ஏழாவதைத் துரியம் என்றனர். இந்த ஞானபூமிகளின் வேறுபாடுகளைச் சேர்ந்த விசேடம் இன்னுமுண்டு, அவற்றைக் கூறக்கேட்பாய்.

(தொடரும்)

சீடன்.

---

## மேற்குநாட்டார்களும் கிழக்குநாட்டார்களும்.

### இந்தியரும் புகைப் பிடித்தலும்.

மேற்குநாட்டார்களில் பெரும்பாலார் வெள்ளையர்கள் என்பது யாவருக்கும் தெரிந்ததே. நமக்கு மேற்கே உள்ள ஐரோப்பா முதலிய இடங்களிலுள்ள வெள்ளை மனிதர்களே மேல்நாட்டார்க ளென்று கூறப்படுகின்றார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் புகை பிடிக்கின்றார்கள். சற்றேறக்குறைய எல்லோரும் வெள்ளையாக இருக்கின்றார்கள். இவர்களை நான் அதிஷ்டசாலிக ளென்று சொன்னாலது தப்பல்ல என்றெனக்குத் தோன்றுகின்றது. ஏனென்றால் அவர்கள், பாபம், வருஷத்தின் பெரும்பாகத்தில் பனியினாலும், சகிக்கொணாக் குளிரினாலும் படாதபாடுபட்டு வருந்துகின்றார்கள். அங்கே பலபாகங்களில் உள்ளவர்கள், எப்படி இங்குள்ள சில பாலைவனவாசிகள் "வருணபகவான் வருஷத்தில் சில தடவையாவது நம்மேல் கருணைகூர மாட்டாரோ" "சூரியபகவான் தயவுசெய்து கொஞ்சமாவது மறைந்து நிற்கமாட்டாரோ," என்று தபம் செய்து கொண்டு இருக்கின்றார்களோ அப்படியே இதற்குமாறாக, "சூரியபகவானைக் காண்பதரிதா யிருக்கின்றதே, இறைவனே" என்று சொல்லி ஏக்கங்கொண் டிருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் உடலைச்சூடாகவே வைத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானது அல்லவா? இதுகாரணங் கொண்டே வெள்ளையர்களில் பெரும்பாலார் (பலர் புகைபிடிக்காமலும் குளிர் தேசத்தில் இருக்கின்றார்கள்- இது உண்மை) முக்கியமாய்ச் சுருட்டுப் பிடிக்கின்றார்கள். அவர்கள் செய்வது சரியென்பதே என் கருத்து. சரியல்ல என்றுமறுக்கவும் சில காரணங்களும் உள. அதை நான் இங்கே இப்பொழுது பேசவேண்டாம்.



ஆனால் நாம் கிழக்கத்தியர்கள், முக்கியமாய் இந்தியர்கள் அப்படிச்செய்வது சரியா? வெகு சில முதியோர்கள் வியாதியை முன்னிட்டு அவசியமானால் சுருட்டுப் பிடிக்கின்றார்கள். ஆனால், பரிதாபம்! "அவர்களே (வெள்ளையர்கள்) நாகரீகத்திற்குத் தாயும், தகப்பனும், குருவும் போன்றவர்கள்; நாமெல்லாம் அவர்களால் போதிக்கப் படுகின்ற நாகரீகத்தில் வளருகின்றோம்; நம்மை மேல்ஸ்திதிக்கு வழிகாட்டும் நாகரீகம் மேற்கத்தியர்களுடைய தல்லவா; அவர் செய்வதுபோல் நாம் செய்வதில் என்னதப்பு? ஏன் செய்யக்கூடாது? அப்படிச் செய்யக்கூடா தென்றால் நம்மை மேற்கத்தியர்கள் சம அந்தஸ்துப் படைத்தவர்கள் என்று எப்பொழுது கூப்பிடுவது. அவர்களால் சமமரியாதை பெறுவது எந்தயுகத்தில்? ———" என்று கருதக்கூடிய பகுத்தறிவு மழுங்கித் தான்தோன்றிகளாய்த் திரியும் நமது சகோதரர்களும், பெரியவர்களும், சிநேகிதர்களும் பலர் இருக்கின்றார்களல்லவா? அந்தோ! இவர்கள் அறியாமையைப் பற்றி என்னென்று கூறுவது.

பகுத்தறிவு முதிர்ந்த சுயநலங்கருதாது பிறர் நலம் விரும்பும் பெரியார்கள் இவற்றைக் கவனிக்க மாட்டார்களா? புகைபிடிப்பது நாகரிகத்தைக் காண்பிப்பது என்று சொல்லித்திரியும், நாகரீகமற்ற நம்மவர்களை நல்வழிப்படுத்த ஏற்பாடுகள் செய்யமாட்டார்களா? சில கிராமவாசிகள் இதையறிந்து இங்கேசெய்யும் ஏற்பாடுகள்போல என்ன செய்கிறார்க ளென்பதைப்பின்னர் சொல்லுவாம். எல்லோரும் அவ்வாறு செய்வார்களானால் நம்மவர்கள் கட்டாயங்கூடிய சீக்கிரம் நல்வழிப்படுவார்கள் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை.

நமது "ஆனந்தன்" பகுத்தறிவு விளங்கும் கிராமவாசிகளைக் கண் விழிக்கும்படி செய்துவருகின்றான். சளையாமல் இதுவிஷயமாய்ப் போதிக்க வேண்டு மென்பது என்கோரிக்கை.

நான் சொல்ல உத்தேசித்தது முடிவு பெறாததினால் மறுபடியும் எனக்கு "ஆனந்தன்" இடந்தருவானென்ற தைரியத்தால் இதை இங்கேயே வந்தனத்துடன் நிறுத்துகின்றேன்.

முக்கியமாய்ச் சிறுவர்கள் பீடி ஸிகாரெட்டுகளைப் பிடித்துத் தங்கள் தேகசுகத்தை யடியோடழித்துக் கொள்வது மிக்க துக்ககரமான விஷயமன்றோ?

உண்மை நாகரிகம் விரும்பும்

தி. சு. பா. கு. மோ.,

கோயமுத்தூர்.

---

## இல்லறம்—மறுபிறப்பு.

(196-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதலால் ஒரு சரீரம்நாசமுறுதலை நாம் காண்பினும் மறுபிறப்புண்டென்பதில் ஆக்ஷேபனையில்லை. ஆன்மா பிறக்கிறதென்பதும் சரீரம் பிறக்கிறதென்பதும் எமது கொள்கையன்று. ஆன்மா வேறு சரீரத்தை யடைவதே மறுபிறப்பென்பதாதலால் இவைகளினால் மறுபிறப் புண்டென்பதைப் பாதிக்காதென்க. ஆயினும் சரீரமே மறுபிறப்பை யடையும். பலவகையாய் வேறுபட்ட சரீரங்களை யடையுமென்பது மிழுக்காகாது. இது சாஸ்திரக்கருத்தல்லவாதலால் நாமதைக் கொள்ளவில்லை. யுக்திவாதத்தாலும் பிரத்தியட்சத்தாலும், கொள்ளக்கூடுமாதலால் அதையும் ஒருவாறு இங்கெடுத்துக் கூறுகின்றோம்.

சுக்கில சுரோணிதங்களே சரீரோற்பத்திக்குக் காரணமென்பது யாவருக்கு மொப்ப முடிந்ததொன்று. ஆஸ்திகராவது நாஸ்திகராவது இதனை மறுக்கமாட்டார்கள். சுக்கில சுரோணிதங்களுக்கு ஆகாரமே காரணமென்பதும் மறுக்கப்படாத வுண்மையாம். இக்காரணத்தையிட்டு ஒரு சரீரமே பலவகைச் சரீரங்களாக மாறுதல் கூடுமென்று அறிந்துகொள்ளலாம். அன்றியும் எண்பத்து நான்கு வகையென்று கூறப்பட்டவைகளும், அசரப்பொருள்களும் வெவ்வேறு வகையான சரீரங்களைப் பெறுமென்பதும் கொள்ளலாம். இது சரீரமாறுதலேயாம்.

ஜீவசக்தியுள்ள அணுக்களும் ஜடசக்தியுள்ள அணுக்களுமென வணுக்களிருவகை. இவ்விருவகை யணுக்களுங் கூடியே சரீரம் உற்பவிக்கின்றது. இது தானிய முதலிய அசரதேகிகளுக்கும் சரதேகிகளுக்கும் பொதுவாம். அரிசியாகிய ஒரு தானியத்தை யொருமனிதன் புசித்தால் அதிலுள்ள ஜடஜீவ அணுக்கள் மனிதசரீமாகவே மாறுகின்றன. காக்கை, நாய், பூனை முதலிய ஜந்துக்களாற் புசிக்கப்பட அந்த அரிசியே காக்கை நாய் பூனைகளாக மாறுகின்றது. ஒருமனிதன் வேறொன்றையும் புசியாமல் ஆட்டையே கொன்று புசிக்கின்றான். அவன் சரீரத்தில் பரிபாகப்பட்ட அவ்வாட்டின் சரீரம் மனிதசரீரமாகவே பரிணமிக்கின்றது. வேறு ஜந்துகளுண்டால் அவ்வச் செந்துவின் சரீரமாகவே மாறித் தோன்றுகின்றது. ஒரு மனிதனைக் கொன்று மனிதனே புசித்தால் அச்சரீரம் மனிதசரீரமாகவே பிறக்கின்றது. புலிதின்றால் புலியினுருவத்தை யடைகின்றது. நாய் நரிகள் தின்றால் அவ்வச்சரீரமாகவே பிறக்கின்றது. பூமியிற் புதைத்துவிட்டால் புழு முதலிய ஜந்துக்களாகப் பரிணமிக்கின்றது. எல்லா அணுக்களும் ஒரே சரீரத்தில் முற்றும் பரிபாகமடைவதில்லை. ஒரு ஆட்டை மனிதன்தின்றாலும் தானியங்களைப் புசித்தாலும் அவன் சரீரத்தில் எவ்வளவு பரிபாகப்படக் கூடுமே அவ்வளவு அணுக்களே பரிபாகப்படும், மற்றவை மலசலத்தாலும் வெயர்வையாலும் கழிந்துவிடும். அம்மலாதிகள் வேறு ஜந்துக்களின்



சரீரத்திற் பிரவேசித்தால் அவ்வச் செந்துக்களாகவே மாறுதலடையும். இது பதார்த்தகுண வுண்மையாதலாலும், பிரத்தியட்ச மாதலாலும், ஒரு சரீரம் பலவகையான சரீரங்களாகும் என்ற நூல்களிலுண்மை நாட்டப்படும். இதனாலும் மறுபிறப் புண்டென்பது தடையின்றிக் கொள்ளப்படும். ஆன்மாவைப்பற்றி வேறிடத்தில் கூறுவோம். ஆன்மாவும் சரீரமும் என்று ஒரு விஷயத்தை மறு சஞ்சிகையில் வெளியிடுவோம். அதில் ஆன்மாவே வேறு சரீரத்தைப் பெறுவதன்றிச் சரீரம் பிறப்பதில்லை யென்று விளங்கும். இதுகாறும் சரீரத்தையே பொருள் என்று கொண்ட வொரு சாராரை நோக்கிக் கூறியதேயன்றி எமதுடன்பாடன்றா மென்க.

ஆயினும் இதுகாறும் யாம் கூறியதும் எமது யுக்தியாலன்று. வைத்திய சாஸ்திரப் பிரமாணங்கொண்டே யாதலால், இது பிரத்தியட்சப் பிரமாணமேயாம். வைத்திய சாஸ்திரத்தில் எல்லா ஜந்துக்களிலும் ஆண் பெண் என்கிற பேதமுண்டு. ஆண்வயிற்றிற் சென்ற தானியங்கள் பரிபாகப்பட்டு இரத்தமாய்ப் பரிமுதிர்ச்சியாற் பிந்து (விந்து) என்ற ஒருவகைப் புழுவாய் மாறும். இது சரீரோற்பத்தி காரணமாகிய விதையாம். இதனால் சுக்கிலமென்பது வித்தாகும் என்றுணரத்தக்கது. பெண்சரீரத்திற் சென்றது பரிபாக்கப்பட்டு சோணிதமென்ற ஒருவகைச் சுனையுள புழுவாம். அதுவாய் திறந்திருக்கும். ஆண் பெண் சம்பந்தத்தால் விந்துபுழு சோணிதமென்னும் புழுவின் திறந்தவாயிற் பிரவேசித்துச் சோணிதத்தில் முழுகிக்கிடந்து சரீரமாகி யுதிக்குமென்றும், வித்து எவ்விதமான இனமோ அவ்வினத்தின் சரீர்த்தை யடையுமென்றும் கூறியது. பெண் நிலமும் ஆண் வித்துமாமென்றுங் கூறியது. வித்து எச்சரீரமுடையதோ அச்சரீரமே பெறுமென்பது திண்ணம். நிலத்தில் நெல்லைவிதைத்தால் அது நெல்லாக முளைப்பதேயன்றி வேறாக முளைப்பதில்லை. மிருகங்களாற் புசிக்கப்பட்டவை மிருகமாகவும், மனிதராற் புசிக்கப்பட்டவை மனிதராகவும் உருக்கொள்ளும் என்று திருஷ்டாந்தத்துடன் விரித்துரைத்தது. அவ்வாறு ஒரு ஜீவஜந்துவின் சரீரத்தை யடையாத விருக்ஷாதிகளின் விதைகள் நிலத்தில் விழுந்து அவ்விருட்சாதிகளின் உருவத்தையே பெறும். தண்ணீரில் விழுந்தால் மீன் முதலிய ஜலஜந்துக்களாற் புசிக்கப்பட்டு மீனாதி ஜந்துக்களாகவே தோன்றுமென்றுணர்க. ஆதலால் ஒரு வித்தே காலம், இடம் முதலிய வேற்றுமைகளாற் பற்பல சரீரங்களைப் பெறுமென்பது கொள்க. இவ்விஷயம் நமது வைத்திய சாஸ்திரங்களிலும் சில புராணங்களிலும், கர்ப்போப நிஷத்திலும், இவைகளை யோதியுணர்ந்த சில பெரியோர்கள் எழுதிய புஸ்தகங்களிலுங் கூறப்பட்டுள்ளது. அதனையே யாமீண்டுச் சிறிது சுருக்கி யுரைத்தோமென்று கொள்க.

இந்த வித்துக்கு ளடங்கி நிற்கும் சூக்குமவணுவாகிய பொருளே யான்மாவாம். ஆயின் அவ்வான்மா வித்துக்குள்ளிருந்தபோது என் ஒன்றையு

முணராம லிருந்தானெனில் அச்சூக்குமசரீரத்தில் இந்திரியாதிகளின்மை யாலென்க. அங்ஙனமாயின் அவன் வேறு சரீரத்தைச்சேரல் தன் இச்சையினாலா, அல்லது தற்செயலாகவோ எனின், இரண்டுமில்லை. அவன்தான் பெற்றிருந்த சரீரத்தை விட்டுப் போகும்போது உண்டான விஷயவாசனையே வேறு சரீரம் பெறுவதற்குக் காரணமாமென்று முன்னரே கூறினோம். அதனையே காரணமாகக் கொள்க.

ஆன்மா சரீரத்தைப்பற்றியே நிற்பதாயின் ஞானிகளுக்குச் சரீரமில்லாமற் போவதற்குக் காரணம்யாது ? ஜீவான்மா அநாதியென்றும் அது எக்காலத்தும் ஒரு சரீரத்தைப்பற்றியே நிற்பதென்றும் கூறுவதாயின் அது சரீரத்துடனே கூடித்தானே நிற்கவேண்டும்? அப்படியாயின் ஞானிகளுக்குச் சரீர சம்பந்த மறுமென்பது எவ்வாறு பொருந்து மென்பர் ஒருசாரார். ஜீவனுக்கு மறுபிறப்புண்டு என்றால் முத்தியடைந்த ஞானிகளுக்கு யாதும் குற்றமில்லை. முத்தன்தவிர மற்றையவர்கட்கே மறுபிறப் புண்டென்று கூறுகின்றோமே யன்றி வேறில்லை. சரீரத்தை விடும்பொழு துண்டான விஷய வாசனையே மறுபிறப்புக்குக் காரணமென்று கூறினோம். இரும்பிற்கும் காந்தத்திற்கு முள்ள சக்தியைப்போல ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் இயக்கும் சக்தியுண்டென்று கூறினோம். ஆன்மா ஒரு சரீரத்தைவிட்டால், அப்போதுண்டான விஷயவாசனைக் கேற்ற சரீரத்தை நாடியேதிரியும். அச்சரீரமும் இவ்வான்மாவுமே காந்தமு மிரும்பும் போல்வனவாம். அதையடைந்தால் கன்மவசத்தால் நேரிடும் வியாதியாதிகளால் அதையும்விட்டு வேறுசரீரத்தை விஷயவாசனை காரணமாக அவாவும். இங்ஙனம் சுழன்றுகொண் டிருக்கும் ஆன்மாவுக்கு ஒருகாலத்தில் விஷயவாசனை யற்றால் அது காரணமாகவரும் மறுபிறப்பு மறும். அதுவே முக்தி யென்னப்படும். வாசனையுள்ள ஆன்மாவுக்கு ஒருகாலம்மும் சரீரமொழியாது. வாசனையே ஜீவனுக்கு அநாதியாயின் அவ்வாசனை ஜீவனைவிட்டொழிவ தெப்படிப் பொருந்து மெனின், வித்தில் முளையும் முளையில் வித்தும், சுழன்று தொடர்ந்து அநாதி முதல் வருவதாயினும், அந்தவித்தை அக்கினியில் வறுத்துவிட்டால் அது முளையாது என்பது பிரத்தியட்ச மல்லவா? அதுபோல் ஜீவனிடம் வாசனையால் சரீரமும், சரீரத்தால் வாசனையும் மாறிமாறிவந்து மறுபிறப்புக்குக் காரணமாகவிருப்பினும், ஏதாவது ஒரு சரீரம் ஞானாக்கினியினால் வெதுப்பப்படுமாயின் அப்பொழுதே வாசனையும் ஒழியும். ஒழியவே வேறுசரீரம் பெறுவதில்லை. அவ்வான்மா பரமான்மாவினிடத்தி லொடுங்கி நிற்கும். பரமான்மா சுத்த ஞானசொரூபியாதலால் அவ்விடத்தில் மாயா சம்பந்தமான விஷயவாசனைகள் கிடையா. பந்தமோட்ச மிரண்டிலும் ஆன்மா ஒன்றைப்பற்றியே நிற்குமாதலால், பந்தத்தில் சரீரத்தையும் மோட்சத்தில் பரம்பொருளையும்பற்றி நிற்கு மென்று கொள்க.

ஜீவன் வாசனையற்றிருந்து முத்தி பெறுவானென்பது உண்மையாயின் அநாதி தொடங்கி அவனுக்கு இயற்கையாய் வந்த வாசனை யெவ்விதமொழியுமெனின், முத்தியைவிரும்பும் ஜீவான்மா நாம் இந்திரியங்களாற் காணக் கூடிய மாயாகாரிய ரகிதமான சச்சிதானந்த சொரூபியான பரமான்மாவைச் சிந்திக்கும். சிந்திக்கவே யுலகப் பொருள்களா லுண்டாகும் வாசனை யொழியும். அவ்வான்மா உத்தமாதி காரியாயின் உருவமற்ற பொருளாகவே பரம்பொருளைச் சிந்திக்கும். அப்படிச் சிந்தித்தால் வேறு சரீரத்துக்குக் காரணமான விஷயவாசனை முற்றுமொழியும். அச்சீவன் அப்பொழுதே பரம்பொருளோடு கலந்துவிடும். அப்புறமவன் மீண்டும் சரீரத்தையடையானென்பது ஆரிய சித்தாந்தமாம்.



நாம் இதுவரைக்கும் தெய்வமில்லை பாபபுண்ணியங்களில்லை, சொர்க்க நரக மோட்சங்களில்லை யென்று கூறுபவர் ஆட்சேபனைகளை யெடுத்துக் காட்டி விடையளித்தோமே யன்றி ஆரிய சித்தாந்திகளை நோக்கியன்று. ஆரிய சித்தாந்திகளுக்கு ஏராளமான நூல்க ளிருக்கின்றன. அவைகளைக் கொண்டே யவர்களுக்கு விளக்கலாம். மறுபிறப்பு என்னும் விஷயத்தைத் தொடங்கி நெடுங்காலமாய்ப் பல பத்திரிகைகளி லெழுதிவந்தோம். ஒரு விஷயத்தையே படிப்பதென்றால் பத்திரிகா நண்பர்களுக்கும் சற்று மனச்சோர்வுண்டாகும். ஆயினும் இது அரிய விஷயம். அவசியம் வெளியிட வேண்டுமென்கிற அவாவின் தூண்டுதலால் நெடுங்கால மெழுதவேண்டியதாயிற்று. இனிவேறொரு பெரிய விஷயத்தை வெளியிடுவோம். இதுகாறும் பெரும் சிரமங்கொடுத்ததற்குப் பத்திரிகா நண்பர்கள் களிகூர்ந்து மன்னிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

மறுபிறப்பு முற்றிற்று.

(தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(188-ம் பக்கத் தொடர்ச்சி.)

14. மனோசக்தி.—நண்பர்களே! மாணவர்களாகிய உங்களுக்கு மனோசலனத்தை யதிகமாக உண்டாக்கக் கூடிய உலகவிவகாரங்களின் சம்பந்தமில்லையாதலின், நீங்கள் சுலபமாகவே மனோசக்தியை விருத்திசெய்து கொள்ளலாம். மனதின் வல்லமை அளவுகடந்தது. இப்பிரபஞ்சத்தை யாட்டிவைக்கும் மாயையையே மனம் வெல்லக்கக்கூடிய சக்தியுடையதெனின் அதன் வல்லமை யெத்தகைய தென்பதை நீங்களே உய்த்துணரலாகும்; ஆனால் நாம் அதை நம் வழிப்படுத்தி யாள முயலாது, அதன்போக்கே நாம் போய்க்கொண் டிருப்பதால் பலவித இடையூறுகளுக் காளாகிறோம்.

பலம்பொருந்திய ஒரு குதிரைக்குச் சரியான கடிவாளம்போட்டு அதை இழுத்துப்பிடித்து நடுப்பாதையிலேயே செல்லும்படி கொஞ்சக்காலம்பழக்கி

விட்டால் பிறகு நாம் குறித்த எந்தவிடத்திற்கும் க்ஷேமமாகச் சென்று வரலாம். அதைவிட்டுக் கடிவாளமே போடாத குதிரையை வண்டியிற் கட்டி அவ்வண்டியில் ஏறிச்சென்றால் குதிரை காடுமேடெல்லாம் இழுத்துப்போய் நம்மைக்கீழே தள்ளிக் கைகால்கள் முறியச்செய்யத் தடையென்ன?

அதைப்போலவே மனதை யடக்கியாள முயன்றால் அதனால் பெரும்பேறு பெறலாம். மனதிலுள்ள பொறாமை, கோபம், அகங்காரம், கபடு,சூது இத்தகைய கெட்டகுணங்களை நீக்கிவிட்டு மனதை வசப்படுத்த வேண்டும். ஒரு சிந்தனையிலிருந்து மற்றொரு சிந்தனைக்குச் சாதாரணமாய்க்குதித் தோடிக் கொண்டிருப்பதே மனதின் தொழிலாகும்; அத்தகைய மனதையடக்க வேண்டியதாயின் வைராக்கியத்தோடு கொஞ்சங் கொஞ்சமாகவே யடக்க வேண்டும். ஒருதொழில் செய்யும்போது மனம் வேறொரு விஷயத்தில் செல்லவொட்டாதபடி தடுத்து, அந்த ஒரு விஷயத்திலேயே நிற்கும்படிப் பழகவேண்டும். உபாத்தியாயர் ஒன்றைப் போதிக்கும்போது, மாணவன் முழுமனமும் அவர் போதனையிலேயே நாட்டப்பட் டிருக்கவேண்டும். மனதை யொரே இடத்தில் நிறுத்திவைக்கப் பழகுவதற்காக நமது மாணவர்கள் நாம் கூறும் அப்பியாசத்தைச் செய்வார்களாயின் மனச்சக்தியைப் பெறுவதோடு இன்னும் பல அரிய நன்மைகளைப் பெறுவார்கள் என்பது திண்ணம். அதாவது, பிரதிதினமும் குறித்த ஒருகாலத்தில் சந்தடியில்லாத ஒரு தனியிடத்தில் உட்கார்ந்து தமக்குப் பிரியமான தேவதாசொரூபத்தை நினைத்து அதனிடத்தில் பக்தி செலுத்தலேயாகும். மனம், நாமரூபத்தில்தான் பற்றும். எந்தச் சொரூபத்தை நாம் கடவுளாகப் பாவித்து பக்திசெய்தாலும் கோரிய பலனையடையச் சந்தேகமேயில்லை. மனதால் நினைக்கவும் வாக்கால் இத்தகையதெனக் கூறவும் முடியாத ஒப்புயர்வற்ற பகவானை நாம் மறவாதிருக்க அச்சொரூபம் நமக்கோர் உதவியேயன்றி வேறில்லை.

காசிக்குச் செல்லக்கருதி ஒருவன் மாட்டுவண்டியிலும், ஒருவன் குதிரைவண்டியிலும், ஒருவன் 1-வது வகுப்பு இருப்புப்பாதை வண்டியிலும், ஒருவன் மூன்றாவது வகுப்பு வண்டியிலும், ஒருவன் பல்லக்கிலும், ஒருவன் கால் நடையாகவும் செல்கிறார்கள். எல்லார் நாட்டமும் காசியே; ஆகையால் முன்பின்னாக எல்லாரும் காசிக்கேபோய்ச் சேர்வார்கள். வாகனங்களில் பல பேதங்களிருப்பினும் இவர்கள் காசிசேர்வது உண்மை. இதைப்போலவே எந்தச்சொரூபத்தைக் கடவுளாகப் பாவித்தாலும் பயனடையத்தடையில்லை; அதனால் குற்றமுமில்லை.

அவ்வாறு அப்பியாசம் செய்யக் காலை 5-மணி முதல் 6-மணிக்குள்ளும், மாலை 6-மணி முதல் 7, 8-மணிக்குள்ளும் உள்ளகாலமே சிறந்ததாகும். இடம் கோயில், சுத்தமான பூந்தோட்டம், அல்லது சுத்தமான அறை முதலியன. உட்காரும்போது சமமான இடத்தில் இடுப்பு, மார்பு, கழுத்து, சிரம் இவை ஒரே நேர்கோட்டில் (Perpendicular) இருக்கும் வண்ணம் நிமிர்ந்து



உட்காரவேண்டும். மனம் சற்றும் சலனமின்றி உபாசனா மூர்த்தியிடமே நிலைத்து நிற்பதற்கு இன்னும் உதவி வேண்டுமாயின், பஞ்சாட்சரம், சடாட்சரம், தாரகம் முதலிய மகாமந்திரங்களில் தன் மதத்திற்குரிய ஒன்றைச் செபிக்கலாம். இந்த அப்பியாசத்தைத் தினந்தோறும் தவிராது சில நாட்கள் செய்யும்போதே அதனாலுண்டாகும் பலன் புலப்படத் தொடங்கும். ஆனால் நமது மாணவ சகோதரர்கள் இதை யலட்சியம் செய்யாமல் இதன்படி நடக்கவேண்டும்; நடப்பவர் புண்ணியசாலிகளே யென்பது சத்தியம்.

15. நண்பர்களே! நம் நாட்டில் இன்னொரு பெருங்குறையுளது. நாம் அனாவசியமான விஷயங்களில் மேல்நாட்டாரைப் பின்பற்றுகிறோமேயன்றி இத்தகைய அவசியமான விஷயங்களைக் கருதுவதேயில்லை. அதாவது, நம் நாட்டில் கல்வியறிவுடையோரிடம் சற்றும் தேகபலம் பொருந்தியிருப்பதேயில்லை யென்பதாம். நம்நாட்டில் கிராமங்களில் நல்ல காற்றுள்ள வெளியான விடங்களில் கஷ்டப்பட்டுத் தொழில் செய்வோரும், நகரங்களில் தேக உழைப்பால் ஜீவனம் செய்வோரும் மட்டுமே கொஞ்சம் தேகபலமுடையவர்களாக விருக்கிறார்கள். மற்ற யாவரும் பலனற்றவர்களே. அதிலும் கல்வி கற்றோர் பல ஹீனத்தில் முதல் தரம் எனலாம், ஏன்?

மாணவர்கள் தேகப்பயிற்சி செய்வதில்லை. தேகப்பலனையும் பெறவேண்டுமென்ற முயற்சியே எடுத்துக்கொள்வதில்லை. இப்போது பாடசாலைகளில் செய்யும் பந்தாடல் முதலிய விஷயங்களெல்லாம் படாடோபமானவைகளே யன்றி உண்மையான தேகபலத்தை யளிக்கத்தக்கவை யல்ல; நாம் கூறுவது உண்மை. உண்மையானதேகபல மடைவதென்றால், நீடித்த காலம் சில மணிகள் நேரமாயினும் தேகபலத்தால் செய்யத்தக்க ஒருவேலையைச் செய்யவும், சில மைல்கள் தூரம் களைப்படையாமல் நடத்தல், சற்று பாரமானதைத் தூக்குதல்இத்தகைய காரியங்களைச் செய்யவும் சத்தியுடையவர்களாக விருக்கவேண்டும். அதற்குத் தேகத்தின் அவயவங்கள், தசைக் கட்டுகள், நரம்புகள் முதலியவை பலனடைய வேண்டும். இப்போது பாடசாலையில் நடக்கும் பயிற்சியால், பந்துகளும், பந்தடிக்கும் துடுப்புகளும், வீணாக அதிக பணச்செலவில் வாங்கப்படுவதோடு, மாணவர்கள் கூட்டமாகக் கூடிக்கொண்டு ஒரு இடத்திற்குச் சென்று இப்பந்தடிக்கும் வேலையில் இரண்டு மூன்றுமணி நேரத்தைச் செலவழிக்கிறார்கள். அந்தோ! இது பயனற்ற செய்கையே. இதில் செலவிடப்படும் பணமும், காலமும் வீண்செலவேயாகும். நாம் இவ்வாறு கூறுவது சிலருக்கு வெறுப்பையோ, கோபத்தையோ அளிக்கலாகும். ஆயினும் உங்கள் நன்மையையும் தாய் நாட்டின் க்ஷேமத்தையும் கருதி நாம் அதை யேற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம். ஆனால் மேல் நாட்டு நாகரீகப்படி இது கௌரவமும் நாகரீகமும் பொருந்தியது என்று கருதும் மயக்கில் சிக்காதிருப்போர் இதைச் சற்று சிந்திப்பார்களாயின், அவர்களுக்கு உண்மை விளங்கும் என்பது திண்ணம். பந்தடிப்பது மாதர்க்குரிய விளையாட்டென்பதே நமது தேசக்கொள்கை.

நமது நாட்டு வழக்கப்படி தேகப்பயிற்சி செய்வதே (தண்டால், பஸ்கி, தண்டாயுதம், முதலியவற்றில் பழகல்) தேகத்திற்கு உண்மையான பலத்தை யளிக்கும். "இந்தியர்களில் கல்விகற்றவர்கள் தேகபலனுடையவர்களல்ல. அவர்கள் சைனியத்தில் நேரிடும் கஷ்டமான வேலைகளைச் செய்யவாவது, பிரயாணம் முதலியவற்றின் கஷ்டங்களைச் சகிக்கவாவது சக்தியுடையவர்களல்ல" என்பது இந்தியர்க்குச் சைனியத்தில் உயர்ந்த உத்தியோகம் கொடுப்பதைத் தடுக்கும் காரணங்களில் முக்கியமான ஒன்றாகக் கூறப்படுகிறது. மாணவ சகோதரர்களே! நீங்கள் சைனியத்தில உத்தியோகம் பெறவிரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பலமுள்ள ஆண்பிள்ளைகளாக வேண்டுமாயின், இப்போதிருக்கும் வீண்கௌரவமான விளையாட்டை விட்டுவிட்டு நமது நாட்டு வழக்கப்படி தேகப்பயிற்சி செய்யுங்கள்; மூன்று மாதங்களில் அதன்பயன் உங்களுக்குத் தானே விளங்கும்.

(தொடரும்)

சீடன்.

---

## மாதர் நெறிகள்.

(192-ம் பக்கத் தொடர்ச்சி.)

15. மருமகள்:—மருமக்களில் சிலர் மாமியார், நாத்திமார் முதலியவர்களை மிகவு மலட்சியமாக நடத்துகிறார்கள்; கொடுமையாகவும் நடத்துகிறார்கள்.

பெண்களுக்கு இரண்டு பிறப்பென்று கூறலாம். பிறந்தவீட்டில் அவள் இருப்பது கொஞ்சக்காலமே. தான் பிறந்த குடும்பத்தின் நிலைமை செல்வம் பொருந்தியதாயினும் ஏழ்மையான தாயினும், அவள் கொஞ்சக்காலத்திற்குப் பின் அதை விட்டு நீங்கிவிட வேண்டியதே. அவள் தாய் தந்தையர்களால் தாரைவார்க்கப்பட்டு, சூரியசந்திரர், அஷ்டதிக்குப் பாலகர்கள், தேவர்கள், சுற்றத்தார் முதலிய அனைவர் முன்னிலையினும் ஒருவனுக்குத் தத்தம்செய்யப்படுகிறாள்—தானமாக அளிக்கப்படுகிறாள். அன்று முதல் அவளுடைய இரண்டாவது ஜன்மம் தொடர்கிறது. அதற்குப்பின் ஏற்படும் குடும்பமே அவள் மரணபரியந்தம் அவளைப் பற்றி நிற்கிறது. தான் மணம்புரிந்த புருடனுடைய அந்தஸ்து, ஆஸ்தி, சுகம், துக்கம் யாவற்றிற்கும் கூட்டு அனுபவியாகிறாள். இக்குடும்பத்தில் அவள் அடையும் நிலைமை செல்வம் பொருந்திய தாயினும் சரி, வறுமை யுடையதாயினும் சரி, அதுவே அவளுடைய பிராரப்தப்பயன்படி கிடைத்த பலனாகும். மிக்க ஏழைக்குடியில் பிறந்த பெண் திருமணத்தால் மிக்க செல்வம் பொருந்திய சீமாட்டியாய் வடுவதையும், மிக்க செல்வம் பொருந்திய குடும்பத்தில் பிறந்த பெண் கலியாணத்தால் சுத்த ஏழையின் மனைவியாகித் தானும் ஜீவனத்திற்குத் தொழில்செய்வதையும் உலகில் சாதாரணமாய்க் காண்கிறோம்.



ஆகையால் கலியாண மானது முதல் ஒரு பெண் தன் கணவனுடைய தாயைத் தன்தாய்போலவும், அவன் சகோதர சகோதரிகளைத் தன் சகோதர சகோதரிகளாகவும், அவன் சுற்றத்தாரைத் தன் சுற்றத்தாராகவும் மனப்பூர்வமாகக் கருதி நடக்கவேண்டும். அவர்க ளனைவரும் தன்மேல் அன்பு காட்டும் விதமாகவும், தன்னைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளும் விதமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்துகொண்டால் தன் கணவனுக்குக் கௌரவ முண்டாவதோடு, தன்மேல் அன்பு அதிகரிக்கும் என்றுணரவேண்டும்.

மாமியார், ஆரம்பத்தில் தன்னிடம் அன்பு காட்டாவிடினும், தான்மட்டும் அவளிடம் மரியாதையோடும் அன்போடும் நடந்து வந்தால் மாமியாரின் மனம் தானே இரங்கிவிடும். இன்றேல் பலரும் அவளைத் தூஷிக்கத் தொடங்குவார்கள். மாமியார் மாமனாருக்குப் பணிவிடை செய்வதைத் தெய்வ கைங்கரியமாகவே கருதவேண்டும்; கற்புடைய மாதர்கள் எல்லாம் அவ்வாறே நடந்து மகிமை பெற்றார்கள். மாமியார் மாமனாரை அலட்சியம் செய்வோர் நரகவேதனை யடைவார்க ளென்பதில் தடையேயில்லை. மிருது வார்த்தையாலும் அன்பாலும் ஆகாத காரியமில்லை; ஆகையால் மருமகள் மட்டும் பொறுமையோடு அன்பும் மரியாதையும் காட்டி நடந்து கொண்டால், மாமியார் எத்தகைய கடுமையானவளாக விருந்தாலும், அவளுக்குத் தன்மேல் இரக்கமும் அன்பும் உண்டாகும்படிச் செய்து கொள்ளலாம்.

16. ஒருபெண் புருடன் வீட்டில் வந்து வாழ்க்கைப்பட்டபின் அநாவசியமாகத் தன் தாய்வீட்டிற்கு அடிக்கடி செல்ல விரும்பலாகாது. புருடன் அல்லது மாமனார் மாமியார் அனுமதி யன்றித் தாயார் வீட்டிற்குக்கூடச் செல்லலாகாது.

17. பெண்களில் நகைகள், பணம் இவற்றில் ஆசைவையாமல் இவற்றால், கௌரவமாவது பெருமையாவது இல்லை என்று இவற்றை அலட்சியமாகக் கருதுகிறவளே உத்தமியாவள்; அவள் கல்வியில்லாதவ ளாயினும் ஞானிக்குச் சமானமாவள்.

சாதாரணமாக மாதர்க்குத் தங்களிட மிருக்கும் நகைகள் முதலியவற்றோடு திருப்தி யிருப்பதில்லை. இன்னொருமாது அணிந்திருக்கும் உயர்ந்த நகைகள் நம்மிடத்தி லில்லையே யென்று ஏக்கங்கொள்வதே அவர்கள் சுபாவம். எவ்வளவு நகைகளிருந்தாலும் விசேஷகாலங்களில் பின்னும் உயர்ந்த நகைகளுடையவர்களிடம் சென்று இரவல்வாங்குவதே இதற்குத் திருட்டாந்தம். நாம் இரவல்நகைக ளணிந்து சென்றால் பிறர் அவை இரவல்வாங்கியவை யென்று எப்படியு மறிந்து கொள்வார்கள் என்பதை யிவர்கள்கருதிப் பாராதது வியப்பே.

இந்த அதிருப்தியால் சில மாதர்கள் தங்கணவர்களுக்கு மிக்க மனவருத்தத்தை யளிக்கிறார்கள். தன் கணவனுடைய செல்வ நிலைமைக்குத்

தக்கபடி தனக்குக் கிடைத்திருக்கும் ஆடையாபரணங்களில் பூரணதிருப்தி யடைந்திருப்பவளே உத்தம ஸ்திரீயாகும்.

வரவேற்பு.—தங்கள் வீட்டிற்கு ஒரு விசேஷகாலத்தில் பலமாதர்கள் வந்தபோது, அவர்களில் நல்ல விலையுயர்ந்த காசிப்புடவையும், மோராமாலை தங்கக்காப்பு கொலுசு, இரவைகம்மல் முதலிய விலையுயர்ந்த நகைகளையு மணிந்திருப்பவர்கள் தூரபந்துவாயினும் அவர்களுக்கு மிக்க உபசாரம்செய்வதும், நெருங்கிய பந்துக்களாயினும் சாதாரண உடையும், சொல்ப நகையும் அணிந்துகொண் டிருப்போரை ஏறெடுத்துப் பாராமலே யிருப்பதும் சில மாதர்களுக்கு வழக்கம். யாவர்க்கும் சம உபசாரம்செய்து அன்போடு நடத்துகிறவளே யாவராலும் புகழ்ந்து கொண்டாடப் படுவாள்.

ஆடவரிலேயே சிலர் ஒருவன் குடும்பத்திலுள்ள நகைகள் முதலிய செல்வத்தைக் கண்டு அவனை மதித்து மரியாதை செய்கிறார்க ளென்றால் ஸ்திரீகள் அவ்வாறு நடப்பது ஒரு வியப்பாகாது. ஆனால் இத்தகையோர் பிறரால் இகழப்படுவார்கள் என்பது உண்மை.

**குழந்தைகளைப் பழக்கல்.**—இவ்விஷயத்தில் பெரும்பாலான மாதர் மிக்க தவறாக நடந்து கொள்கிறார்கள். சிறுவர்கள் மனம் பரிசுத்தமான வெள்ளைக்கடிதம் போன்றது. ஆகையால் அவர்கள் எதைக்கண்டாலும் கேட்டாலும் அது உடனே மனதில் பதிந்துவிடும். ஆதலின் அவர்கள் எதிரில் கெட்டசெயல்களைச் செய்வதும், கெட்ட வார்த்தைகளைக் கூறுவதும் நமது மக்களைக் கெட்டவழியில் பழக்குவதாகும். குழந்தைகளோடு கொஞ்சி விளையாடும் போது காறியுமிழவும், உதைக்கவும், தூர்ப்பாஷையால் வையவும் கற்றுக்கொடுப்பது மிக்க அறியாமையாகும்.

இதற்கு மாறாகச் சிறுவர்களுடைய பரிசுத்த மனதில் கடவுள் நாமங்களும் அவர் பக்தியும் பதியும்படி செய்யவேண்டும். இதனால் பிற்காலத்தில் உலகத் தொல்லைகளும் விவகாரங்களும் அவர்கள் மனதில் பிரவேசித்துத் துன்புறுத்தும் போதும், கடவுள் பக்தி அவர்கள் மனத்தில் நிலைத்து நின்று அவர்களுக்குத் தேறுதலையளிக்கும்.

மேலே கூறியவாறு குழந்தைகளுக்குத் தூர்ப்பழக்கங்களைப் போதிப்போர் விசேஷமாகக் கல்வியில்லா மாதர்களே யாகும். இதனாலும் நமது பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டியது அத்தியாவசிய மென்று தெரிகிறது. (தொடரும்)

சீடன்.

---

## புதியதாய் சந்தாவில் சேருவோருக்கு அறிவிப்பு.

இப்போது வி-பி. யனுப்பினால் ரிஜிஸ்டர் செலவோடு தபால் கூலியும் இரண்டத்தனை யாதலால், இனி வி-பி-யில் அனுப்பும்படி எழுதுவோர்க்கு ஆடிமாத சஞ்சிகை ஒன்றுமட்டுமே முதலில் அனுப்பப்படும். பணம் வந்த பிறகு மற்றவை யனுப்பப்படும். முதலில் மூன் சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பினால் வி-பி. வாபீஸாகிவிடின் நமக்கு அதிக கஷ்டம் நேரிடும்.

**முன்பணமனுப்பிப் பெற்றுக் கொண்டால் செலவு குறைவதோடு சென்ற சஞ்சிகைகள் பூராவும் ஆலசியமின்றி முதலிலேயே வந்து சேரும் என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.** **பத்திராதிபர்.**



## ஹிந்து மதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை.

18-11-1921 - இல் வெளியான மேற்கண்ட தலைப்பெயரையுடைய ஒரு அறிக்கைப்பத்திரம் நமக்கு அனுப்பப்பட்டது. அதில் குறித்த விஷயம் "நவசக்தி" ப்பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட் டிருந்ததால் பெரும்பாலோர் இதையறிந்தே யிருக்கலாகும். இந்த அறிக்கை மெய்ஞ்ஞானச் செல்வரும், துறவியுமாகிய மகான் ஸ்ரீமத் விலக்ஷணானந்த சுவாமிகளால் வெளியிடப் பட்டது.

பெரும்பாலான துறவிகள் தம்மையடுத்துள்ள சீடன் எவனுக்கேனும் பக்குவமறிந்து ஞானோபதேசம் மட்டும் செய்தால் செய்வார்களே யன்றிப் பொதுவாக உலகினருக்கு எவ்வித நன்மை செய்யவும் உடன்படுவதில்லை. அதனால் தங்கள் சுபானுபவத்துக்கு இடையூறு நேருமென்பது அவர்கள் கருத்து. நமது ஸ்ரீமத் விலக்ஷணானந்தரைப்போல் உலகோபகாரத்திற்கு இடந்தரும் துறவியைக் காண்பது மிக்க அரிதாகும். சுவாமிகளுக்கு நாம் செய்யும் கைம்மாறு அவர் கட்டளைப்படி நடப்பதேயாகும். அவர் அறிக்கையின் சாரக்கருத்து இப்போது அமெரிக்காவினின்றும் இலக்ஷக்கணக்கான கிருஸ்துமத போதகர்கள் 63 கோடி டாலர் செலவிட்டு இந்தியரை வரையும் கிருஸ்துமதத்தில் சேர்க்கக்கருதி வருகிறார்க ளென்பதும் அது விஷயத்தில் நாம் சாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதுமே.

நேயர்களே! இது விஷயத்தைப் பற்றி நமது ஆனந்தபோதினி (6-வது ஷ) இரௌத்ரிஷ வெளியான தொகுதி 74-110-ம் பக்கங்களில் நாம் விவரமாகக்கூறியிருப்பதையும் இச்சமயம் வாசித்துப்பார்க்க உங்களை வேண்டிக்கொள்கிறேன். இன்னொருவிஷயமும் அறிவிக்க விரும்புகிறோம். ஆண் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளை யேற்படுத்தித் தங்கள் மதத்தைப் போதித்தாலும் அவர்கள் பாடசாலையை விட்டு இலௌகீகத்தில் பிரவேசிக்கும் போது தங்கள் மதாசாரங்களிலேயே பற்றுடையவர்களாகி விடுகிறார்களாதலின் பெண் பிள்ளைகளுக்கு நமது மதத்தைப் போதித்தால் சுலபமாக ஆடவரையும் திருப்பலா மென்றே அவர்கள் பெண் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளை யேற்படுத்தி நடத்துகிறார்கள்.

ஆண் பிள்ளைகளுக்காக வாலிப கிருஸ்துவர் சங்கத்தை (Y. M. C. A.) ஸ்தாபித்தார்கள். அதனால் அவ்வளவாகப் பயனுண்டாகவில்லை யென்று கண்டு இப்போது வாலிபப் பெண்கள் கிருஸ்தவசங்கம் என்ற ஒன்றை ஸ்தாபித்து அவர்கள் மூலமாக நமது பெண் பிள்ளைகளைத் தங்கள் மதத்திற்கு இழுக்க முயற்சி செய்யக்கருதி யிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

அவர்கள் பாடசாலைகளை ஏற்படுத்தியதால் கல்வி யபிவிர்த்தியடைகிறதென்று வெளிக்குத் தோன்றினும், அவர்கள் ஏராளமான பணத்தைச்

செவவுசெய்து இவ்வளவு காரியங்களைச்செய்வது நம்மவரையும் மற்ற மதத்தினரையும் கிருஸ்துவர்க ளாக்கவேண்டு மென்ற ஒரு கருத்துக்கொண்டேயன்றி வேறில்லை.

நேயர்களே! வெள்ளம் வருமட்டும் காத்திருந்து பிறகு அதைத் தடுக்க முயல்வது அறிவீனமாகும். வெள்ளம் வருமுன்னே யணைபோடவேண்டும். இப்போது நாம் செய்யவேண்டிய வேலையை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம்.

1. ஆங்காங்கு மதச்சங்கங்கள் ஏற்படுத்தி நமது மதத்தின் முக்கிய கொள்கைகளைப் பற்றியும், நமதுமதம் அநாதி, நித்தியம், பூரணம், எல்லா மதங்களுக்கும் அஸ்திவாரம் போன்றது, என்று மழியாத இயற்கைச் சத்தியங்களை யாதாரமாகக் கொண்டுள்ளது, எத்தகைய மனோநிலையினர்க்கும் அவரவர்களுக்குத் தக்கவழிகாட்டி முடிவில் முத்தியடையச் செய்யக்கூடியது என்றவைகளைப் பற்றியும், அன்னியமத போதனைகளுக்கு மயங்காமலும் அவற்றிற்குச் செவிகொடாமலும், இருக்கவேண்டு மென்பதைப் பற்றியும் பிரசங்கமூலமாகவும் துண்டுப் பிரசுரங்களின் மூலமாகவும் நம்மவர்க்குப் போதித்தல்.

2. அந்நிய மதஸ்தர்களுடைய போதனைகளிலும் தந்திரங்களிலும் சிக்கி மயங்கி, அந்நியமதத்தில் விழுந்து பிறகு தாங்கள் அறிவீனத்தால் மோசம்போனதை யுணர்ந்து, மறுபடி நமது மதத்திற்கே திரும்பிவிட விரும்பும் நமது சகோதர சகோதரிகளை சொல்ப சடங்கால் பிராயச்சித்தஞ் செய்து மறுபடி சேர்த்துக்கொள்ளச் சீக்கிரத்தில் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஹிந்துக்களாகிய நமக்கு மதமே யாவற்றிலும் சிறந்ததாகையால் இவ் விஷயத்தில் இன்னும் பாராமுகமாக இராமல் உடனே ஆங்காங்கு தக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். நம்மவர்களுக்குப் பொதுவான மதபோதனை செய்வதற்காக மேலே கூறப்பட்ட விஷயங்களடங்கிய ஒரு சிறுநூல் சீக்கிரத்தில் வெளியிடப்படும்.

இதைப்பற்றி அபிப்பிராயங்கள் அறிவிக்க விரும்புவோரும், விவரமறிய விரும்புவோரும் தெரிவித்துக் கொள்ளலாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே ஒரு மின்னல் மின்னியதுபோல் அவன் மனதில் உண்மை யுதித்துவிட்டது. அதாவது, அதுதான் அரசஞ்சாலைத்திருப்பம். என்பதே அதேசமயம் அவன் மனதில் ஒரு யோசனையுதித்தது. உடனே அப்படியே செய்வதென்று தீர்மானித்து தபால் வண்டியின் ஓரத்தில் அமைக்கப்பட்



டிருக்கும் இரும்பு ஏணி வழியாகத் தபால் வண்டியின் மேல்தட்டிற்குத் தபால் ஏறினன்.

அதே சமயம் பக்கத்து வண்டியின் ஒரு அறை வழியாய் ஒரு கறுத்த உருவம் வெளியில் வந்து பதுங்கிக்கொண்டே அவனைத் தொடர்ந்தது. ஆனந்தலிங் அவசரத்தில் அதைப் பார்க்காமல் போய்விட்டான்.

ஆனந்தலிங் வண்டியின் மேல்பரப்பில் ஏறியதும் நேராய்க் கவிழ்ந்து படுத்துக்கொண்டு, அங்கிருந்த ஒரு சிறு கதவைத் திறந்து உள்ளே முழுமையும் பார்க்கத் தொடங்கினன். அதற்குள் அவன் பின்னால் சந்தேகமான ஒருவிதச் சத்தம் கேட்டது. அதை யென்னவென்று திரும்பிப் பார்ப்பதற்குள் இரங்கநாதன் புலிபோல் அவன்மேற் பாய்ந்து அவன் தொண்டையைக் கெட்டியாய் இறுக்கிப் பிடித்துக்கொண்டான்.

* * * * *
* * * * *

இதற்கிடையில் நமது கதையில் முக்கிய ஆசாமியாகிய கோமளவல்லிக் கென்ன நேர்ந்ததென்பதைக் கவனிப்போம். தன்னைக் காப்பாற்றிய நண்பனாகிய அம்பலவாணனை யத்துஷ்டர்கள் பிடித்துக்கொண்டு சென்றதே அவள் ஆவி சோர்ந்துவிட்டது. இரங்கநாதன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. அவன் அவளை நோக்கி,

“பேசாமல் என் கூடவா, வீண்சேஷ்டைகளில் ஒருபயனு மில்லை. உனக்கு இன்னும் வயது வரவில்லை; நீ என் கட்டளைப்படியே நடக்க வேண்டும். இன்றேல் உன் தந்தையாகிய எனக்கு உன்னைத் தண்டிக்கப் பூரண அதிகாரம் உண்டு; இனி யிப்படி முரட்டுத்தனம் செய்தால் நான் மெய்யாகவே உன்னைத் தண்டிப்பேன் என்றான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதே கோமளவல்லியின் கண்கள் சிவந்து கோபத்தோடும் துயரத்தோடும் கண்களில் நீர் விட்டுக்கொண்டு, இரங்கநாதனை நோக்கி “அட பரமதுஷ்டனே! நீயார்? உன்னிடமிருக்க எனக்குச் சற்றும் பிரியமில்லை யென்றும், உன்னைக் காணவே வெறுப்பாயிருக்கிறதென்றும் நான் பலதரம் கூறியும், நீயேன் என்னை யிவ்வாறு இம்சைசெய்கிறாய்” என்றாள்.

**இரங்கநாதன்:**—ஏனெனில் நான் உன் தந்தையாதலால் உனக்கு நல்ல உணவு உடையளித்து, கல்வி ஸங்கீதம் முதலியயாவும் கற்பித்து உன்னை நல்ல நாகரீகமான சீமாட்டியாய் ஆக்க வெண்ணியே. உன்தாய் இறந்துபோ யிருக்கிறாள். நான் அவளை எவ்வளவோ அன்போடு நேசித்தேன். ஆதலால் உனக்காகச் செய்யாவிடினும் அவளுக்காகச் செய்யவேண்டி நான் கடமைப்பட்டவனா யிருக்கிறேன். உன் தாயையும் தந்தையையும் நீ சந்தோஷிப்பிக்க வேண்டியது உன் கடமையாகும்.

**கன்னிகை:**—என் தந்தையைப்பற்றிப் பேசவேண்டாம்; அவர் இறந்துவிட்டார்.

**இரங்:**—ஆகா நீ மிக்க கவனசுத்தி யுடையவளே.

**கன்.**—சந்தேக மென்ன? என் தாயார் இறந்துபோனது எனக்கு நன்றாய்க் கவன மிருக்கிறது. அப்போது என் தந்தை யிருக்கிறார். என் ஆயுள்வரையில் நான் அவரைமறவேன்.

இரங்கநாதன் கேலிசெய்பவன்போல் புன்னகை புரிந்து கொண்டே "ஓ-ஓ! நீ மிக்க கவனசுத்தி யுடையவளே. உன் தந்தையையே மறந்துவிட்டு எதிரி லிருக்கும்போதே நீயல்ல வென்கிறாயே" என்கிறான்.

அதற்குள் அக்கன்னிகை "ஆ ஆ! இன்னொரு விஷயம், அப்படியொருசமயம் நான் என் தந்தையை மறந்துவிட்டே யிருந்தாலும், நீயென் தந்தை யென்பது உண்மையாயின் என்மனதில் எப்படியாவது ஒரு விதப் பாச உணர்ச்சி யுண்டாகாமற் போகாது" என்றாள்.

**இரங்கநாதன்:**—"பேஷ்! நீ மிக்க புத்திசாலியான பெண்தான்; நல்ல புத்திசாலியான பெண்ணாயிருந்தால் அன்னியனா யிருந்தாலும் செல்வவந்தனாகிய ஒருவனைத் தகப்பனாய் ஏற்றுக்கொள்ளவும், செல்வந்தனாகிய யௌவன புருஷனாகிய ஒருவனைப் புருடனாய் ஏற்றுக்கொள்ளவும் எவ்வளவோ சந்தோஷமடைவாய்" என்றான்.

அச்சமயம் அருகிலிருந்த சாமிநாதன் அக்கன்னிகையை நோக்கி,

"உனக்குப் பிரியமாயின் என்சொத்து முழுமையும் என்பூரண அன்பையும் உன் பாதகாணிக்கையாக வைக்க ஆயத்தமா யிருக்கிறேன்" என்றான்.

அக்கன்னிகை யவனை நோக்கி "நான் மணம் புரியவேண்டிய காலம் வந்து மணம்புரிந்து கொண்டாலும் உன்னை மணப்பதைவிட என் பிராணனைத் தியாகம் செய்து கொள்வேன். இதை முன்னமே கூறி யிருக்கிறேன்" என்றாள்.

இதைக்கேட்ட சாமிநாதன் வெட்கமும் கோபமுமடைந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு அப்புறம் சென்றான்.

இரங்கநாதன் "போதும் போதும், இதைப்பற்றி இனி யொருகதையும் நடக்கவேண்டாம்" என்றான். அதன் பிறகு அத்துஷ்டர்கள் அக்கன்னியை யழைத்துப்போய்ப் பழையபடி சாமிநாதன் வீட்டில் முன் இருந்த விடத்திலேயே சிறைவைத்தார்கள். அந்த அறையைவிட்டு வெளியில் செல்லும்படி அவள் விடப்படுவதில்லை.

அவள் மனதிற்கு அந்த விடம் மெய்யான சிறைச் சாலையினும் கொடிதாகவே யிருந்தது. அவளுடைய துயரம் அவள் விடும் கண்ணீரால் அச்சமயம் சற்று தணிந்தபோதிலும் சற்றேனும் தணிந்ததாயில்லை.



இரண்டு வாரம் அத்துஷ்டர்கள் அவளிடம் நெருங்கவில்லை; பிறகு ஒரு நாள் இரங்கநாதனும், சாமிநாதனும், அங்கு வந்தார்கள். இரங்கநாதன் அவளை நோக்கி,

"நீ மிக்க செல்வம் பொருந்திய எனது நண்பனாகிய சாமிநாதனை மணம் புரிந்து கொள்ளவேண்டு மென்பது என் பிரியம். இன்னும் இதற்கு இரண்டுவாரம் தவணை தருகிறேன். அதற்குள் நீ மனதைத் தேற்றிக்கொண்டு இவனைப் பிரியத்தோடு மணம் செய்துகொள்ள வேண்டும்; இன்றேல் பலவந்தத்தின்மேல் நீ யிவனை மணம்புரியும்படி நேரிடும். நானே கிட்டவிருந்து வலிகட்டாயத்தின்மேல் இக் கலியாணத்தை முடித்து வைப்பேன் என்பது உண்மை" என்றான்.

இதைக்கேட்ட அக்கன்னிகை பேரிடி விழுந்தவள்போலானாள். அன்று முதல் இப்படி யவனை மணம்புரிவதைவிட நான் மரண மடையும்படிச் செய்யவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்பதையே தன் வேலையாய் வைத்துக் கொண்டாள்.

எப்போது தீபம் அதிகப் பிரகாசத்தோடு ஜொலிக்கிறதோ அப்போதேயது அணைந்துபோகும் சமயம் நெருங்கியதென அறியலாம்; அதுபோலவே எப்போது நிரபராதி யானவர்களுக்குப் பொறுக்க முடியாத ஆபத்து நேரிடுகிறதோ அப்போதே அந்த ஆபத்து நீங்கும் வேளை நெருங்கியதென்று நினைக்க வேண்டும். அவளை இம்சை செய்யும் பரமதுஷ்டர்களுக்கு அழிந்து போகும் காலம் நெருங்கிவிட்டது.

## 10-வது அத்தியாயம்.

ஆனந்தலிங் தபால் வண்டியின் உள்ளே பார்த்ததே அங்கு இருக்கும் காட்சியானது அவன் மனதைத் திடுக்கிடச் செய்தது. அவன் தேகத்தில் இரத்தம் குதித்தேறியது. அவன் தேகமுழுமையும் ஒருவித மின்சாரம் பாய்ந்ததுபோல் தோன்றியது. அக்காட்சியானது அவன் முழுமனதையும் அடியோடு கவர்ந்து கொண்டது.

அவன் பார்வைக்கு வண்டியிலுள்ள யாவும் நன்றாய்த் தெரிந்தது. சாமிநாதன், திறக்கப்பட்டிருக்கும் தபால் வண்டியின் கதவருகில் நின்றுகொண்டு தீபவொளி கண்களில் படாவண்ணம் கைகளால் கண்களை மறைத்துக்கொண்டு வெளியி லிருக்கும் இருளில் எதையோ உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனந்தலிங்கின் கண்கள் மனத்துடிப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தன. இப்போது நமது ஆனந்தலிங்கின் நிலைமை மிக்க அபாயகரமானது. அவன் வண்டியின் மேல்பரப்பில் கவிழ்ந்து படுத்துக் கொண் டிருக்கிறான். வண்டியோ ஊர்க்குருவிபோல் பறக்கிறது; சற்று நழுவினால் உருண்டு விழுந்து விடுவான். எங்காவது தாழ்ந்த பாலத்தில் நுழைந்து செல்லும்போது அடியோடு தள்ளிவிட்டாலும் தள்ளிவிடும்,

ஆனந்தவின் கோழையல்ல; எதற்கும் அஞ்சாததீரன். அதோடு இத்தகைய முக்கியமான விஷயத்திற்குச் சற்றும் அவன் அஞ்சவில்லை; ஒருவிஷயம் அவனுக்கு மிக்க ஆச்சரியமாயிருந்தது. அதாவது, இரங்காநாதன் அந்தத் தபால் வண்டியில் இல்லை. ஆனந்தவின் பார்த்துக் கொண்டே யிருக்கையில் அவன் மனம் படபடக்கும் படியான ஒரு விஷயம் நடந்தது. அதனால் அவன்மனம் அச்சமயம் வேறெந்தச்சிந்தனையிலும் பிரவேசிக்கக் கூடாததாயிருந்தது. அதாவது வெளியிலுள்ள இருண்ட தோட்டத்தை யுன்னிப் பாய்ப் பார்த்துக்கொண்டு வந்த சாமிநாதன் சட்டென்று வேகத்தோடு பின்பக்கம் வண்டிக்குள் பாய்ந்து, அங்குள்ள ஒரு அலமாரியின்மே லிருந்த ஒரு தபால்பையை வேகத்தோடு எடுத்துப்போய் வெளியிலிருந்த காட்டை நோக்கித் தன் பலங்கொண்ட மட்டும், வேகமாய் அந்தரத்தில் விட்டெறிந்தான்.

(தொடரும்)

## பொது விஷயங்கள்

செல்வப்பெருக்கு:—நியூயார்க் செல்வத்திலும், ஜனத்தொகையிலும், விஸ்தீரணத்திலும். உலகத்திலுள்ள நகரங்க ளெல்லாவற்றிலும் மிகப் பெரிதென்று சொல்லலாம். வியாபார விஷயத்தில் இவ்வுலகத்தின் இராஜதானி யென்று இதைச் சொல்லலாம்.

இங்கு பூமண்டலத்திலுள்ள வீடுகளெல்லா வற்றிலும் உயரமாயும், அறுபது அடுக்குகளோடு கூடினவாயு முள்ள பல வீடுக ளிருக்கின்றன. இதன் ஜனத்தொகை ஐம்பத்தெட்டுலட்சம்; இதில் ஐர்லாந்தின் ராஜதானியாகிய டப்லின் நகரிலிருப்பதைக் காட்டிலும், அதிகமான ஐரிஷ்காரர் வசிக்கின்றனர். இதாலி தேசத்தின் இராஜதானியாகிய ரோமாபுரியிலிருப்பவர்களைப் பார்க்கிலும் அதிக இத்தாலிய ரிருக்கின்றனர். இங்கு வருஷம் இரண்டரைலட்சம் மனிதர் புதிதாக வருகின்றனர். இதன் முப்பதுமையில் சுற்றளவுக்குள், எட்டுக்கோடி மனிதர் வசிக்கின்றனர். இங்கு போலீஸ் இலாகாவில் பன்னிரண்டாயிரம் மனிதர் வேலைசெய்கின்றனர். இங்கு கலாசாலைகளில், பதினெண்ணாயிரத்து இருநூறு உபாத்தியாயர்களும் ஒன்பது இலட்சம் வித்தியார்த்திகளு மிருக்கின்றனர். இங்கு ஒவ்வொரு ஐம்பத்திரண்டு செகண்டு களுக்கும், ஒரு ரயில் வண்டி வருகிறது; ஒவ்வொரு பதின்மூன்று நிமிஷங்களுக்கும் ஒரு விவாகம் நடைபெறுகின்றது; ஒவ்வொரு மணிநேரத்திலும் ஒரு புதுக்கட்டிடம் கட்ட ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு பத்து நிமிஷத்திலும் ஒரு புதுகம்பெனி திறக்கப்படுகிறது; ஒவ்வொரு செகண்டிலும் நான்கு புதுமனிதர்கள் வருகிறார்கள்; ஒவ்வொரு ஆறு நிமிஷத்திற்கும், ஒரு குழந்தை பிறக்கிறது; ஒவ்வொரு நாற்பத்தெட்டு நிமிஷத்திற்கும் ஒரு கப்பல் வெளியிலிருந்து வருகிறது; ஒருகப்பல் வெளியே போகிறது. இங்கு ஹோடல்களிலும் சாப்பாட்டு விடுதிகளிலும் ஒவ்வொரு இரவும் உணவின் பொருட்டு ஐம்பது இலட்சம் ரூபாய் செலவாகிறது. பிரதிதினமும் மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமான ஐஸ்க்ரீம் விற்பனையாகிறது. இதன் பாதாள டிராம்வண்டிகளில் ஒவ்வொரு வருஷமும் முப்பத்து நாலுகோடி மனிதர் யாத்திரை செய்கின்றனர்.

நியூயார்க் உயரமான வீடுகளுக்குப் பேர்போனது. எல்லாவற்றிலும் உயரமான வீடு 'உல்வொர்த் பில்டிங்' என்ற பெயருடையது; அதில் அறு



பது அடுக்குமாடிக ளிருக்கின்றன; இதன் உயரம் 792 அடி ஒரு அங்குலம். இதில் ஒரு பாகமாவது மரத்தால் செய்யப்பட்டதல்ல. சுவர்கள், கதவுகள், தவிர எல்லாம் இரும்பால் செய்யப்பட்டவை. இதில் எண்பதினாயிரம் மின்சார விளக்குகள் மாட்டப்பட் டிருக்கின்றன. உயரப்போகும் பொருட்டு இதில் இருபத்தெட்டு மின்சாரத் தொட்டில்கள் இருக்கின்றன; இவற்றின் மூலமாய் நாள்தோறும் முப்பதினாயிரம் மனிதர் ஏறி யிறங்குகின்றனர். எல்லாத்தேச வியாபாரிகளின் காரியஸ்தலங்களும் இங்கே யிருக்கின்றன. இங்கு பன்னிரண்டாயிரம் மனிதர் வசிக்கின்றனர். இவ்வீட்டிற்கு நாள்தோறும் எழுபதினாயிரம் கடிதங்கள் வருகின்றன. அவற்றைப் பட்டுவாடா செய்யும் பொருட்டுப் பத்துத்தபாற் சேவகரிருக்கின்றனர். இவர்கள் இங்கு இராப்பகல் வேலை செய்கின்றனர். வசிப்பவர்களின் சவுகரியத்தின் பொருட்டு அம்பட்டன் கடை முதலானவைகளும், நீந்தும் பொருட்டு இரும்பால் செய்யப்பட்ட தொரு குளமும், ஔஷதாலயமும், தபாலாபீசு முதலானவைகளு மிருக்கின்றன. இதன் சொந்தக்காரரான உல்வொர்த் என்பவர் இரண்டரை அணுவுக்கும், ஐந்தணுவுக்கும் வஸ்துக்களை விற்றுப் பெரும் பணம் சேகரித்து இப் பெரியவீட்டைக் கட்டியிருக்கிறார். ஒவ்வொரு ஹோட்டலிலும் ஆயிரக்கணக்கான மனிதர் வேலைசெய்வார்கள். சுவர்கள் வெள்ளைச் சலவைக்கற்களா லாக்கப்பட்டு அழகான படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கும்.

நா. ராமலிங்கமய்யர்.
கல்லிடைக் குறிச்சி.

## வீடெல்லாம் வெள்ளியும் நோட்டும், விநோத சம்பவம்

மலாக்காவைச் சேர்ந்த சேற்கம் 11-வது மைலில் வசிக்கும் ஓர் மலாய ஸ்திரீயானவள் தனது வீட்டின் தாழ்வாரத்தில் இரண்டு சர்ப்பங்கள் புணர்ச்சியிலிருப்பதைப் பார்த்து ஓர் கழியினால் அந்தச் சர்ப்பங்களைக் குத்தவும், சர்ப்பம் தன் வாயிலிருந்து ஓர் விதமான நுரையைக் கீழேகக்கினதால் அந்த நுரையை அம் மலாய் மாதானவள் பஞ்சினால் துடைத்து பெட்டியில் பதனம் செய்து மறு நாள் பார்க்கையில் அது ஓர் அழகிய கல்போல இருக்க அதை அவள் எடுத்துக்கொண்டு ஓர் பெரிய வயித்தியக்காரனிடம் காட்ட, அவன் இந்தக் கல்லை வைத்துக்கொண்டு, சிம்மாயம் பண்ணினால் உனக்கு பலன் உண்டு எனவும், அம்மாது அவ்விதமே செய்து வர, ககன மார்க்கமாய் வெள்ளிகளும், நோட்டுகளும் வந்துகொண் டிருக்கின்றன. ஓர் பெரியபெட்டி நிறைந்து பார்க்கின்ற விடமெல்லாம் பணமயமாகவே இருக்கின்றது. இதன் உண்மையைச் சோதிக்க கனம் ரெசிடெண்டு துரையவர்களும், மற்றப்பெரிய உத்தியோகஸ்தர்களும் சென்று பார்வையிட்டதில் மெய்யாகவே காண்கிறது. பொய் நாணயமல்ல, தற்காலம் வழங்கும் நாணயங்களே. அந்த நாணயத்தை எடுத்துக்கொண்டு சோதிக்கக் கீழே இறங்கினதும் மாயமாய்ப்போய்விடுகிறது. கலியுகத்தில் ஆகாயமார்க்கமாகப் பணம் வருவதும், இத்தகையசம்பவங்களும் கடவுள் திருவிளையாட்டல்லவா? இந்த அபூர்வமான விநோத சம்பவங்களைத் "தமிழகம்" மூலமாய் எழுதுகிறோம். விருப்பமுள்ளவர்கள் நேரில் போய்க் கண்காக்ஷியாகவும் காணலாம்.

தமிழகம்.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதி௵ தை௴—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1922௵ ஜனவரி௴ பிப்ரவரி௴

| தை௴ | ஜனவரி௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | சனி | பிர 25-0 | பூச-39-53 | சி39-53ம | சங்காந்தி பண்டிகை |
| 2 | 15 | ஞா | து16-22 | ஆயி-33-0 | சி33மர | மாட்டுப் பொங்கல் |
| 3 | 16 | திங் | திரி7-47 | மக-26-32 | ம26-32சி | கரிநாள் |
| 4 | 17 | செ | சது 0-7 பஞ்53-25 | பூர-20-50 | சி20-50அ | பிரயாணத்திற்கு விலக்கப்பட்டது |
| 5 | 18 | புத | சஷ்47-50 | உத்-16-27 | அ16-27ம | விதைவிதைக்க |
| 6 | 19 | வியா | சப்43-45 | அஸ்-13-7 | சித்-60 | காதுகுத்த |
| 7 | 20 | வெ | அ41-5 | சித்-9-35 | சித்-60 | நாமகரணம் செய்ய |
| 8 | 21 | சனி | நவ39-52 | சுவா-9-17 | சித்-60 | கோடியுடுக்க |
| 9 | 22 | ஞா | தச40-0 | விசா-12-7 | மர-60 | பிரயாணம்விலக்க |
| 10 | 23 | திங் | ஏக4-22 | அனு-14-3 | சித்-60 | வித்தியாரம்பம் |
| 11 | 24 | செ | துவ43-47 | கேட்-17-37 | ம17-37அ | கரிநாள் |
| 12 | 25 | புத | திர47-15 | மூல-22-0 | மர22-0அ | பிரதோஷம் |
| 13 | 26 | வியா | சது51-32 | பூரா-27-10 | சித்-60 | வித்தியாதீச தீர்த்தம் |
| 14 | 27 | வெ | ●56-35 | உத்-32-20 | சி32-20 ம | தை அமாவாசை |
| 15 | 28 | சனி | பிர59-35 | திரு-39-55 | சித்-60 | |
| 16 | 29 | ஞா | து60-0 | அவி-47-17 | ம47-17சி | |
| 17 | 30 | திங் | து8-57 | சதை-55-53 | சித்-60 | |
| 18 | 31 | செ | திரி15-45 | பூரட்-60-0 | மர-60 | |
| 19 | 1 | புத | சது22-32 | பூரட்-2-55 | அ2-55சி | |
| 20 | 2 | வியா | பஞ்28-52 | உத்-10-28 | சித்-60 | |
| 21 | 3 | வெ | சஷ்34-10 | ரேவ-17-15 | சி17-15அ | |
| 22 | 4 | சனி | சப்37-57 | அசு-22-45 | சித்-60 | |
| 23 | 5 | ஞா | அ39-55 | பர-26-32 | பி26-32சி | |
| 24 | 6 | திங் | நவ39-40 | கிரு-28-15 | ம28-15அ | புண்ய தினம் |
| 25 | 7 | செ | தச37-15 | ரோ-27-50 | அ27-50சி | ஆயுதம் பயிற்ற |
| 26 | 8 | புத | ஏக32-47 | மிரு-25-17 | சித்-60 | உபநயனம் செய்ய |
| 27 | 9 | வியா | து26-32 | திரு-20-52 | ம20-52அ | வராக துவாதசி |
| 28 | 10 | வெ | திர18-45 | புன-15-2 | சி15-2மர | தைப்பூசம் |
| 29 | 11 | சனி | சது9-50 | பூச-8-7 | சித்8-7மர | பௌர்ணமி |

(1922௵ பிப்ரவரி௴ — Feb. 1–11)

| | | | |
|---|---|---|---|
| கே | | | |
| | 6உ மக-சுக் 14, கும்-பு 23,, வி-செ 29,, கும்-சு | | |
| கு-பு | | | |
| சுக் | | செ | ரா-கு சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRA.

16 FEB 1922

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதி௵ தை௴ க௨ / 1922௵ ஜனவரி௴ 14௳ { பகுதி 7

## கடவுள் வணக்கம்.

*கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத*
*கள்ளனே னானு மோ*
*கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே*
*கண்பனித் தாரை காட்டி*
*அண்ணா பரஞ்சோதி யப்பா வுனக்கடிமை*
*யானெனவு மேலெ ழுந்த*
*அன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை*
*யகிலமுஞ் சிறிதறி யுமேல்*
*தண்ணாரு நின்னரு ளறியாத தல்லவே*
*சற்றேனு மினிதி ரங்கிச்*
*சாசுவத முத்திநிலை யீதென் றுணர்த்தியே*
*சகசநிலை தந்து வேறொன்*
*றெண்ணாம லுள்ளபடி சுகமா விருக்கவே*
*யேழையேற் கருள்செய் கண்டாய்*
*இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி*
*யெங்குநிறை கின்ற பொருளே.*

---

*பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்*
*சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார் மோன*
*முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான*
*புத்திநீ யெனக்கொன் றுண்டோ பூரணா நந்தவாழ்வே.*

*தாயினு மினிய நின்னைச் சரணென வடைந்த நாயேன்*
*பேயினுங் கடைய னாகிப் பிதற்றுதல் செய்த னன்றோ*
*தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணே காலம்*
*போயின தாற்று கில்லேன் பூரணா னந்த வாழ்வே.*

# ஆனந்தபோதினி

துன்மதி௵ தைமீ ௳

## பக்தி.

பக்தி என்றால் அன்பு என்றே பொருள். பக்தி, விருப்பம், வாஞ்சை, ஆசை, பிரியம், இச்சை, அன்பு, விசுவாசம் யாவும் ஒரே பொருளையுடைய மொழிகளே. குருவிடத்திலும், கடவுளிடத்திலும், மாதாபிதாக்களிடத்திலும் வைக்கும் அன்பிற்கே பக்தியென்று பெயர். இவற்றில் கடவுள் பக்தியே ஈண்டு நாம் கூறப் புகுவது.

கடவுளிடத்துச் சுயநலமாக ஒன்றையும் எதிர்பாராது அவரிடம் அத்தியந்த அன்பு வைத்தற்கே பக்தியெனக் கூறத்தகும். "ஆண்டவனே! எனக்கு உத்தியோகம் உயர்ந்தால் தங்களுக்கு அபிஷேகம் செய்கிறேன்; லாட்டரியில் எனக்குப் பணங்கிடைத்தால் அம்மனுக்கு ஒருதங்க ஒட்டியாணம் செய்து சமர்ப்பிக்கிறேன்; இவ்வருடம் வர்த்தகத்தில் எனக்கு நல்ல இலாபம் கிடைத்தால் உன் சந்நிதிதானத்திற்கு வந்து விருஷபவாகன உத்ஸவத்தை யென் செலவில் நடத்திவைக்கிறேன்........." என்று இத்தகைய பிரார்த்தனைகளைச் செய்துகொண்டு காரியம் கைகூடினால், அப்பிரார்த்தனைகளைச் செலுத்துவது ஒருபோதும் பக்தியாகாது. நான் உன்னை யடையவேண்டும் என்ற ஒரு கோரிக்கை மட்டும் இருக்கலாம். மற்றபடி பக்திக்காகவே பக்திசெய்ய வேண்டும்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா நின்னடி என் மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டு மிவ்வையகத்தே:
*   *   *   *   *   *"

என்றனர் அப்பர் சுவாமிகள்.

பக்தியின் பெருமை யளவு கடந்தது. மோக்ஷ மடைவதற்கு பக்தியும் சாதனையும் வேண்டும். பக்தியால் அவனது அருட்சக்தி



16 FEB 1922

ஆன்மாவில் பதிகிறது. கண்ணப்ப ரொப்ப அத்தியந்த பக்தி எல்லாருக்கு முண்டாவது அரிது. ஆதலின் நமமுயற்சியாகிய சாதனையும் வேண்டும். பக்தி யெவ்வளவுக்கெவ்வள வதிகமோ அவ்வளவுக்கவ்வளவு குறைவான சாதனையேபோதும். பக்தியாலேயே ஒருவன் ஈசுவரனுடைய அருளைப் பெறலாகும்; பக்தி ஒன்றிற்கே ஈசுவரன் வயப்படுகிறார். பக்தி யுடையோனுக்கு அடைய அரிதானது ஒன்றுமே யில்லை.

கடவுள் அன்புருவமானவர். நாம் அவரிடத்து வைத்த அன்பு மயமாய்விட்டால், ஈசுவரன் அங்கை நெல்லிபோல் விளங்கக்காணலாம். பத்தியில்லாச் சாதனையால் பயனுண்டாகாது. பக்தியின்றேல் பிரம்மானந்தம் உதியாது; ஈசுவரனுடைய அருளாகிய சக்தியே ஜீவர்களிடத்தில் கருணைவைத்துத் தநுகரணபுவனபோகங்களைத் தந்து இரட்சித்து, முடிவில் அவர்கள் தன்னிடத்தில் வந்து சேரும்படி செய்வது. இச்சக்தி பெண் சொரூபமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனானே ஈசுவரன் இடப்பாகத்தில் உமையம்மையைவைத்துக்கொண் டிருக்கிறார் என்று கூறப்பட்டது. இச்சக்தி அக்னியில் சூடு இருப்பதுபோல் பரமசிவத்தி னிடத்தில் பிரிபடாமலிருக்கும் சத்தியாதலால் அவ்வாறு கூறப்பட்டது. இதுவே அபின்னசத்தி என்பது. இதுவே உமை, பார்வதி, சத்தி, மாகாளி முதலிய எல்லாத் தேவதைகளுமாகும். இச்சத்தியின் அருள் பெற்றார்க்கு யாவும் எளிதில் கிடைக்கும். இதற்காகவே அப்பர் சுந்தரர் ஆழ்வாராதியர் ஆகிய சமயாசாரியர்களனைவரும், சுவாமியைத் துதிக்கும்போதெல்லாம் அம்மனைச் சேர்த்தே துதித்திருக்கிறார்கள். எல்லா ஜீவராசிகளுக்கும், பரப்பிரம்ம சொரூபியாகிய சிவம் தந்தையும் பராசத்தியாகிய அம்மன் தாயுமாகும். நம்தேகத்தினுள்ள எலும்பு முதலியவையும் உஷ்ணமும் தந்தையின் பாகமாகும்; இரத்தம் மாமிசமாகிய ஜலபாகம் முதலியவை தாயின் பாகமாகும். பக்தியால் மோக்ஷமடைந்தோர் எண்ணிறந்தோர். கண்ணப்ப நாயனார் பக்தி வலிமையால் ஆறேதினங்களில் முத்தியடைந்தார்.

உலகில் மனைவி, புத்திரர் முதலிய மிக்க அருமையாகக் கருதப்பட்டவர்கள்மேல் வைக்கும் அன்பையெல்லாம் சேர்த்துக் கடவுளிடத்தில் வைத்து அதே பிரேமையாகிவிட்டால் அது முதிர்ந்த பக்தியாகும். எப்போதோ ஒருவேளை மட்டும் சற்றுநேரம் கடவுளைச்

சிந்திப்பது பக்தியாகாது. ஒருவன் ஒரு யௌவன கன்னிகையைக் கண்டு அவள் அழகில் மயங்கி அவள்மேல் அடங்காக்காதல் கொண்டுவிட்டால், பிறகு எத்தகைய வேலை செய்துகொண்டிருந்தாலும், கோயிலுக்குள் சென்று சுவாமிசேவை செய்துகொண்டிருந்தாலும், அவன்மனம் அக் கன்னிகையையே சிந்தித்துக்கொண்டிருக்குமன்றோ; அது போன்றே தைலதாரை போலும் கடிகாரம் விநாடியைச் சத்தித்துக் கொண்டே யிருப்பதுபோலும் எத்தகைய தொழிலி லிருந்தாலும் மனம் ஈசுவர சிந்தனையிலேயே யிருத்தல் வேண்டும்.

வள்ளலார்,

“ மங்கையர்தம் மேல்வைத்த மையல் தனை நூறு
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கையணி
வேணியன்றன் பாதார விந்தத்தில் வைத்தக்காற்
காணலாம் காணாக் கதி ” என்று அருளினார்.

ஈசுவரன்மேல் பக்தி செலுத்தும்போது மனம் வேறு விஷயங்களில் அலையலாகாது. ஈசுவரனை உபாசிப்பதில் இரண்டுவிதமுண்டு. (1)சகுணஉபாசனை, (2) நிர்க்குணஉபாசனை. 1-வது—கடவுளை உருவ்மாகப் பாவிப்பது, 2-வது—அருவமாகப் பாவிப்பது. கடவுளை யருவமாக உபாசிப்பது யாவருக்கும் சாத்தியமல்ல; பக்தியில் முதிர்ந்தோருக்கும் தன்னை யறியும் பக்குவ முடையோர்க்குமே அது சாத்தியமாகும்; ஆதலின் யாவரும் சகுண உபாசனையே ஆரம்பத்தில் செய்யவேண்டும். உபாசனா மூர்த்தியிடம் மனம் அழுத்தமாகப் பதியவேண்டும். சாதாரணமாகச் சாக்கிரத்தில் எதை மனம் அதிக சிந்தனை செய்கிறதோ, எதை வேறெதையும் கருதாது ஆழ்ந்து சிந்திக்கிறதோ, அதையே கனவில் காண்கிறோமென்பது யாவர்க்கும் அனுபவமான விஷயமே.

அவ்வாறு சாக்கிரத்தில் நாம் உபாசனா மூர்த்தியைச் சிந்திக்கும் பலத்தால் சொப்பனத்திலும் அதைக் காண்போமாயின், அதுவே நமக்குச் சரியான பக்தி ஜனித்திருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும். ஈசுவரனை யெப்போது தரிசிப்போம் என்ற ஏக்கம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் ஈசுவரதரிசனம் கிடைக்கும்; இதுவே பக்திமார்க்கம்.

சாதாரணமாகப் பக்தியிலும் மற்றவற்றி லிருப்பதுபோல் சத்துவம் இரஜசு, தமசு என்ற மூன்று குணங்களுண்டு:



1. **சத்துவகுண பக்தி.**—இது நாம் ஈசுவரனைப் பக்தி செய்கிறோம், என்ற சங்கதி பிறர் அறியவேண்டுமென்ற எண்ணம் சற்றுமின்றி இரகசியமாகவே செய்தல். இத்தகையோர் ஆடம்பரமாக மதச்சின்னங்களை யணியார்கள். தாம் பூஜைசெய்கிறதற்கு இடம், ஆசனம், முதலியவற்றைப் பகிரங்கமாக ஏற்படுத்திக்கொள்ள மாட்டார்கள்; அவர்கள் சோய்பேறிபோல் பேசாமல் உட்கார்ந்திருப்பார்களாயினும், அந்தரங்கத்தில் அவர்கள் மனமாகிய கோயிலில் இருக்கும் ஈசுவரசொரூபத்தின் சந்நிதியிலே யழுந்தி நிற்பார்கள்.

2. **இரஜோகுணபக்தி.**—ஆடம்பரமாக மதச்சின்னங்களை யணிதல்; உருத்திராக்கம் முதலிய வற்றிற்குப் பொற்கட்டுகள், நவரத்தினங்கள் முதலிய பதித்தணிதல்; உபாசனா மூர்த்தத்திற்கு அலங்காரம், தூபதீப நிவேதனம், சங்கு மணி ஒலித்தல் முதலிய செய்தல் ஆகிய இப்படிப்பட்ட பக்தியாகும். சந்நியாசிகள் பொன் வெள்ளி நவரத்தினங்களாலாகிய எத்தகைய ஆபரணத்தையும் அணியலாகாது. பொன்னையும் அது உற்பத்தியாகும் இடமாகிய மண்ணையும் சமமாகப் பார்ப்பவனே உலகை வெறுத்தவனாகும்; அதுவே சரியான சந்நியாசம் என்று நூல்கள் கூறுகின்றன.

3. **தமோகுண பக்தி.**—ஈசுவரனுக்கு மதுமாமிசபட்சணங்களை நிவேதித்தல், பலிசெலுத்துதல் முதலிய மூர்க்க விஷயங்களடங்கிய பக்தியாம்.

ஈசுவரன் வேண்டுவது வேண்டாமை கடந்தவர்; விருப்பு வெறுப்பற்றவர்; நம்மால் அவருக் காகவேண்டியது ஒன்றுமில்லை; ஆயினும் நாம் கடையினின்றும் வாங்கிவந்து நம்குழந்தையினிடம் கொடுக்கும் தின்பண்டத்தில் கொஞ்சம் அது எடுத்து நமக்கேயளித்தால், நாம் அதை ஆனந்தத்தோடு வாங்கி யுண்பதுபோலவே ஈசுவரனும் நாம் பக்தியோடு செய்யும் உபசாரங்கள் முதலியவற்றை யேற்றுக்கொள்கிறார். அவருக்கு வேண்டியது அன்பே: அன்பின்றி எதைச் செய்யினும் பயனில்லை.

ஈசுவரனிடம் மெய்யான தைலதாரை போன்ற பக்தியும், யாவும் அவனுடையவையே; எல்லாம் அவன்செயலே என்று நம்பகமான உண்மையும் பொருந்தி யுள்ளவன் எங்கிருப்பினும்,

என்ன நிலையிலிருப்பினும், எத்தகைய உணவை யருந்தினும் அவனே ஈசுவரனுடைய அருளுக்குப் பாத்திரவானாவான்.

சமயம் வரும்போது மேலுக்கு எல்லாம் அவன்செயல் என்று கூறிவிட்டு, பிறகு தன்னால் ஒருவருக்கு ஒருகாரியம் நிறைவேறியபோது "நானில்லாவிட்டால் அவன் தப்பிவருவதுகூட உண்டா! நான் எவ்வளவோ சாமார்த்தியமாக வேலைசெய்தல்லவோ அவனை மீட்டுவந்தேன்" என்று பெருமை பாராட்டிக் கொள்வதில் ஒரு பயனுமில்லை.

பத்திமார்க்கத்தை யனுஷ்டிக்கிறவரையில் தன்மை முன்னிலை யிரண்டு முண்டு. ஈசுவரன் உபாசிக்கப் படுகிறவராகவும், சீவன் உபாசிக்கிறவனாகவும் இருக்கிறார்கள். இதுவே துவைதநிலை; பிறகே முடிவான அத்துவித ஞானத்தை யடையவேண்டும்.

பக்தி முதிர்ந்தபோது உபாசிப்பவன் சொரூபமே அன்புருவமடைகிறது; அப்போது நான் என்ற உணர்ச்சியே அடியோடு நழுவ, முன்னிலையாயிருந்த சொரூபமும் நழுவிவிடும். பிறகு தன்மை முன்னிலையற்ற ஆனந்தமயமான ஓரே அகண்ட சொரூபமாக யாவும் விளங்கும்; இத்தகைய பக்தி யாவர்க்கும் எளிதல்லவாதலின் பக்தியோடு ஆன்மஞானம் பெறச் சாதனமும் வேண்டும். முத்தியடைதற்கு பக்தியோடு கூடியஞானம் அவசியமாதலின் மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமானவர், "ஓதரிய துவைதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும்" என்றருளினார். மாணிக்கவாசக சுவாமிகள், "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்றார். பக்தியின்றி யவனருள் கிட்டாது.

யாவரும் ஈசுரபக்தியை மறவாது அவனருள் பெற்றுய்வோமாக.

ஓம் தத் ஸத்.

---

## கல்வி, கேள்வி

இப்போது நாம் கல்வி செல்வத்தில் சிறந்ததென்பதைப் பற்றியும், அது இம்மை, மறுமைப் பயன்களை யளிக்கு மென்பதைப் பற்றியும் கூற முயலவில்லை. கல்வி என்பதுதா னென்ன? எதனால் அது அத்துணைச் சிறப்புடையதாயிற்று, அதற்கும், கேள்விக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? என் கல்வியினும் கேட்டல் சிறந்ததாகக் கருதப்படுகிறது? என்பனவற்றை யாராயவே யிதை வரைகிறோம். கல்வியைப் பாஷைக் கல்வி என்றும், சாத்திரக் கல்வி யென்றும் இருவகுப்புகளாகப் பிரிக்கலாம்.



மனிதர் தம்மனதிலுள்ள எண்ணங்களை யொருவர்க்கொருவர் வெளியிட்டுக் கொள்வதற்காகப் பாஷை வேண்டியதாயிருக்கிறது. பாஷையென்பது சத்தமேயன்றி வேறில்லை. உச்சரிக்கும் பலவித சத்தங்கள் சேர்ந்தே ஒரு வார்த்தை யுண்டாயிருக்கிறது. பல வார்த்தைகள் சேர்ந்து ஒரு வாக்கிய முண்டாகிறது. ஒருவன் ஒரு வாக்கியத்தைக் கேட்டால், அதை மறவாமல் மனதில்வைத்திருந்து பின்னால் இன்னொருவனுக்குத் தெரிவிக்க வேண்டுமாயின், அது கஷ்டமான வேலையே. அவன் அதை மறந்தால் அதோடு அது போயிற்று. அதை யப்படிப் போக விடாதபடி பத்திரப் படுத்திவைக்கவே எழுத்துக்கள் உண்டாக்கப்பட்டன. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சத்தத்தையே குறிக்கிறது. அதாவது, ஒவ்வொரு சத்தத்திற்கும் ஒவ்வொரு வரி வடிவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ஏற்படுத்தப்பட்ட சில ஒலிகளைக்காட்டும் சில எழுத்துக்கள் சேர்ந்து ஒரு வார்த்தை யாகிறது. அவ்வார்த்தை ஒரு பொருளையோ, இடத்தையோ, காலத்தையோ, குணத்தையோ, உறுப்பையோ, தொழிலையோ குறிக்கிறது.

இவ்வார்த்தைகள் சமயோசிதப்படி அடையும் மாறுதல்களையும், ஒரு வாக்கியத்தில் இவை அமையவேண்டிய முறைமைகளையும், ஒன்றோடொன்று சேரும்போதடையும் விகாரங்களையும் பற்றிக் கூறுவதே இலக்கண நூலாம். அவை யியற்கையாக எவ்வாறு அமைகின்றனவோ அதற்குப் பொருத்தமாகவே இலக்கணத்தில் விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையும், வார்த்தைகளுக்குள்ளே பொருள்கள் முதலியவற்றையும் கற்பதே பாஷைக் கல்வி யென்னப்படும்.

அறிவாளிகள் அனுபவமாக அறிந்த அரிய விஷயங்களைப் பாஷையில் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளே சாத்திரங்கள் என்னப்படுகின்றன. எல்லாச் சாத்திரங்களும் மனிதனுடைய அறிவினின்றும் அவன் வாக்கு வழியாக வெளிவந்தவைகளேயாகும். ஒரு சாத்திரத்தை யொருவர் கூற மற்றொருவன் கேட்டால், அவன் அதை மனதில் தரித்துக்கொள்ள வேண்டுமாயின் பன்முறை கேட்கவேண்டும். சொல்பவர் ஒவ்வொருவருக்கும் பன்முறை கூறவேண்டும். அவ்வாறு தம் மனதிலுதிப்பதை யொருவர் கூறிக்கொண்டிருக்க முடியாது. அவர் மனதிலேயே ஒரு சமயம் உதித்தது இன்னொரு சமயம் உதியாது. அப்படி நேராமல் மனதிலுதித்ததை யுடனே என்றும் பத்திரமாக இருக்கும்படி காப்பாற்றிக்கொள்ளவே பாஷை பயன்படுகிறது. இப்போது ஒருவர் கூறிய விஷயங்களை யவர் வாக்கினின்றும் கேட்பதற்குப் பதிலாக அவர் நூலை வாசிக்கிறோம். இதனால் கேள்வியே மூலகாரண மென்றும், கல்வியும் ஒருவிதக் கேள்வியே யென்றும் தெரிகிறது. ஆனால், இரண்டிற்கும் பேதமுளது. கல்வியை வாசிக்கும்போது அதன் பொருளை நூலாசிரியரின் கருத்துப்படி யுணர

வேண்டும். அதில் ஒரு சந்தேக முண்டானால் பிறரைக் கேட்டே அதைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். நூலில் கூறப்பட்டிருப்பது எல்லாத் தரத்தவர்க்கும் (சூக்கும புத்தி யுடையோர், மந்தர் யாவர்க்கும்) ஒரேமாதிரி தான். இக்காலத்தில் சிலர் ஆன்றோர் நூல்களுக்கு உரை கூறுவோர் நூலாசிரியர் கருத்தை யுணரமுயலாமல் தமது மதச் சித்தாந்தப்படி வியாக்கியானம் செய்கின்றனர்.

கற்ற ஒருவரிடம் கேட்பதாயின், அவர் கேட்பவன் புத்தித் தரத்தின்படி போதிப்பதோடு, அப்போதைக் கப்போதெழும் ஐயங்களை யுடனுக்குடன் களைந்து அறிவு விளங்கச் செய்வார். கல்வியில் ஆன்றோர் வெளியிட்டுள்ள அரிய விஷயங்களை யெல்லாம் உணர்ந்து இருமைப் பயனையு மடைகின்றோ மாதலின் கல்வி அத்துணைச் சிறப்புடையதாயிற்று. ஆனால் கேள்வி அதனினும் சிறப்புடைத் தென்பது மேல் கூறியவாற்றால் விளங்குகிறது. அதனானே பொய்யா மொழியாரும்,

> " செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
> செல்வத்து ளெல்லாந் தலை "

" ஒருவருக்குச் செவியால் வரும் செல்வமே சிறப்புடைய செல்வம்; அச்செல்வம், பிறசெல்வம் எல்லாவற்றினும் தலையானது. ஏனெனின் கேள்வியில் எல்லாப் பொருள்களையு மறிகின்றோம். பொருளால் வரும் மற்ற செல்வங்களனைத்தும் நிலையானவை யல்ல; அதோடு துன்பம் விளைவிப்பனவாம். ஆதலின் செவியால் வரும் கேள்விச் செல்வமே எல்லாச் செல்வங்களிலும் சிறந்ததாம் " என்று கூறி யருளினர்.

ஒரு காலத்தில் அநாதியான நமது வேதம் எழுதப்பட்டிராமல் சத்தம் [சுரம்]மாத்திரமாகவே யிருந்தது. அதனானே வேதத்திற்கு " எழுதாக் கிளவி " யென்ற ஒரு நாமமுமுண்டு. நமது மதம் என்றும் அழியாத இயற்கை யுண்மையையே அஸ்திவாரமாகக் கொண்டது. அவ்வாறே நம் முன்னோர் ஏற்படுத்திய ஆசாரங்களைப் பற்றிய விதிகள், அவர்கள் உதவிய அரிய சாத்திரங்கள் யாவும் இயற்கை யுண்மையின் அநுபவத்திலிருந்தே வெளிவந்தன.

நமது தெய்வீகம் பொருந்திய அமுத மொழியாகிய தமிழ்ப் பாஷையின் எழுத்துக்கள் அமைக்கப்பட்டதும் அவ்வாறே. நாம் வாயைத் திறந்ததும் இயற்கையாக உண்டாகும் சத்தம் " அ " என்பதேயாகும். அதுவே எல்லாச் சத்தங்களுக்கும் ஆதியாகும். " அகரமுதல வெழுத்தெல்லா மாதி-பகவன் முதற்றே யுலகு " என்றனர் பொய்யா மொழியார். 'அ' கரமே பிரணவத்தின் முதலெழுத்தாகவிருந்து பரம்பொருளைக் குறிக்கிறது. மந்திரங்களுக்கெல்லாம் இதுவே யாதி எனலாம். பிரணவாக்ஷரமே இவ்வாறு அமைந்துள்ளது. ஆங்கில பாஷையில் எழுத்தொன்றா யிருப்பின் உச்சரிப்



பொன்றா யிருக்கும். தமிழ்ப் பாஷையிலோ எல்லா உச்சரிப்புக்களுக்கும் தக்கபடி எழுத்துக்கள் அமைந்திருப்பதால் எழுத்துக்களின்படியே உச்சரிப்பும் இருக்கிறது. இதில் வார்த்தைகள் ஒன்றோடொன்று சேரும்போது, தோன்றல், திரிதல், கெடுதல் முதலிய விகாரங்களை யடைந்து செவிக்கினிமை பயக்கும் வண்ணம் ஒன்றோடொன்று இயைந்துகொள்ளும். இலக்கணத்தில் இவற்றிற்கு விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் வார்த்தையோடு வார்த்தை சேர்வதில்லை. மேலும் மனிதருடைய மனோ நிகழ்ச்சிகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும் காலத்திற்கும், இடத்திற்கும் தக்கபடி வெளியிடும் அரிய நூல்கள் (புறநானூறு முதலியவை) வேறெந்தப் பாஷைகளிலும் இருப்பதாகக் காணப்படவில்லை.

ஆயினும், இத்தகைய இலக்கிய இலக்கணக் கல்வி மட்டும் ஒருவனுக்கிருப்பின் அது அவனுக்கு அகங்காரத்தை யுண்டாக்குகிறதன்றி அவன் நடக்கைகளையும், குணங்களையும் சீர்திருத்துவதில்லை. "கற்றதும், கேள்வி கேட்டதும், நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோ காணே " என்று தாயுமான சுவாமிகள் அருளியபடி ஆண்டவனருள் பெறும் நோக்கத்தோடு அதற்குரிய நூற்களைக் கற்கும் கல்வியே ஆணவமாகிய இருளை நீக்கி அகங்காரத்தை யழித்து மெய்ஞ்ஞானத்திற்கு வழி காட்டியாகும். அக்கல்வியே அடக்கம், சாந்தம், பக்தி முதலியவற்றை யளிக்கவல்லது. இதற்குக் கேள்வி யவசியம் வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் அஞ்ஞானத்தை யொழித்து ஞானத்தை நல்கும் இக்கல்வியைக் கற்க முற்படவேண்டும். இதுவே மானிடஜன்ம மெடுத்ததனா லடையவேண்டிய பயனாகும்.

ஓம் தத் ஸத். சீடன்.

---

## ஒப்புரவொழுகு.

'ஒப்புரவொழுகு' என்று இப்பூவுலகில் மானிடராய்ப் பிறந்த நாமெல்லாரும் உலக நடையினை அறிந்தொழுகிப் பொதுவாக எல்லார்க்கும் பயனளித்து அதனால் பெறற்குரிய புகழை யடையுமாற்றை நல்லிசைப் புலவராகிய ஔவையார் சுருங்கவைத்து விளங்கக் காட்டியுள்ளார். இவ்வாறு ஔவையார் கூறியவாறே, தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், தம் அருமைத் திருக்குறளில் ஜன சமூக வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொதுநன்மைக்கு 'ஒப்புரவறிதல்' என்னும் பெயரிட்டு, அதனைப் பத்துக் குறள்களால் ஓரதிகாரமாக வைத்து விளக்கியருளினர். வள்ளுவனார் உலகத்தார்க்கு இன்றியமையாது அறிவுறுத்தற்குரிய விஷயங்களை முப்பாலாகத் தொகுத்து, அம்மூன்றனுள் ஒவ்வொன்றையும் பற்பல அதிகாரங்களாக விரித்துரைத்தா ரென்பது யாவரும் அறிந்த விஷயம். அம்மூன்று பகுதியுள் முதலதாகிய அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இரு பான்மைப்படும். இல்லறவியல் இல்வாழ்க்கை முதலாகப் புகழீறாகப் பத்

தொன்பது அதிகாரங்களை யுடையது. இப்பத்தொன்பதனுள் 'ஒப்புர வறிதல்' என்பது மொன்று. ஒப்புர வென்னுஞ் சொல் உபகாரம், ஒற்றுமை, சமாதானம் ஆகிய பொருளை யுணர்த்தும். ஆனால் தெய்வப்புலவர் திருக்குறளில் எக்கருத்தில் அதை யுபயோகித்துள்ளார் என்பது நாம் இங்கு ஆராயவேண்டிய தவசியம். ஒப்புரவறிதல் என்னு மதிகாரத்துக்கு உரையாசிரியராகிய பரிமேலழகர் முகவுரை கூறவந்தவிடத்து ஒப்புரவறிதல் என்பதற்கு "உலக நடையினை யறிந்துசெய்தல்; உலகநடை வேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்துசெய்யுந் தன்மைத் தாகலின் ஒப்புரவறிதல் என்றார்" என வுரைத்துள்ளார்.

இவ்வாறு 'உலக நடையினை யறிந்து செய்தல்' என்று அவ்வுரையாசிரியர் பொருள் கூறுதலால் ஆன்றோர் ஒழுகியவாறு ஒழுகல் என்பதை அவ்வுலக நடையென்று நாம் கருதுவோமானால் ஒப்புரவறிதலென்ற அதிகாரத்துவரும் எக்குறளேனும் அவ்வொழுக்கத்தைப்பற்றிக் கூறாமையாலும், உயர்ந்தோ ரொழுக்கத்தை மேல்வரிச் சட்டமாக வைத்து ஒழுகுதலை 'ஒழுக்கமுடைமை' யென்னும் அதிகாரத்துள் "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்—கல்லா ரறிவிலா தார்" என்ற குறளில் விளங்குதலானும், உரையாசிரியரும் அதற்கு விசேடவுரை கூறவந்தவிடத்து "உலகத்தோடு பொருந்த வொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல்— ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்" எனக் கூறுதலானும் அது கருத்தாகாதென்பது பெறப்படும்.

இனி 'ஒப்புரவறிதல்' என்ற சொற்றொடருக்குப் பொருள் யாது? ஆசிரியர் கூறிய 'உலக நடையை யறிந்துசெய்தல், என்பதில் உலக நடையென்னுந் தொடர்க்கு ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாத உதவிகளை யறிந்துசெய்தலென்று ஒவ்வொரு திருக்குறளும் விளக்கிநிற்றலால் கருதலாகும். ஜனசமூக வாழ்க்கையாவது தோட்டிமுதல் தொண்டைமானீறாகவும், துறவிமுதல் பற்றே மிக்கவ னீறாகவும், வீரன் முதல் பேடி யீறாகவு முள்ள மானிடரெல்லாம் பரஸ்பர வுதவியானேவாழும் நிலை.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை" என்பதனால் துறவிக்கும் இல்வாழ்வானது துணை இன்றியமையாதென்று பெறப்படும். அவ்வாழ்க்கையின் வளர்ச்சிக்குரிய உபகாரங்களாவன: குளங்கட்டுவித்தல், கல்லூரி யேற்படுத்தல், வைத்தியசாலை செய்வித்தல், ஒழிக்கத்தக்கன ஒழித்தல் முதலியனவும் பிறவுமாம்.

'கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை' என்னுங் குறளில் 'உலகியல்' என்பதற்கு உலகநடை யெனப் பொருள்கூறி, விசேட வுரையில் உலகநடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தலெனப் பரிமேலகழகர் கூறிப் போந்தமையால் உலகநடை யென்பது உயர்ந்தோர் ஒழுக்கம் என்னும் பொருளில் வழங்கவில்லை யென்பது புலப்படும்.



இவ்வுலக நடைக்குரிய உதவி ஒருவாறு முறையாக நடைபெறுவதாயினும், மக்களிற் சிறந்தவன் தன் அரிய பெரிய ஆற்றலால் பிறர்க்குப் புரியுஞ் சிறப்பையே கூறிப் பொருளால் மட்டுமன்றி மனமொழி மெய்களால் செய்யப்படும் எல்லா உதவிகளையு மடக்கிக் கூறியுள்ளார் நம் நாயனார். தவிர பரிமேலழகர் 'ஒப்புரவு இம்மையில் பயனளிப்பதாகலின்' என்று கூறியவாற்றானே இன்றியமையாதது என்று கவனிக்கத் தக்கது. ஒப்புரவின் பெருமை:—

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்' எனச் சான்றாண்மைக்கு ஆதாரமானவைகளில் ஒன்றாக வைத்துக் கூறுதலால் ஒப்புரவின் பெருமை விளங்கும்.

"மக்களாலாய பெரும் பயனும் ஆயுங்கால்
எத்துணையும் ஆற்றப் பலவாறால்—தொக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்" என்ற நாலடியின் கருத்தொத்து நன்மைகள் உடல் வளர்ப்பது அறப்பகுதியன்று. தன்னுடைய நன்மையைக் கருதாது பிறர் மேம்படுத்தற் கானவைகளைச் செய்வது ஒப்புரவு என்பதாம். ஒப்புரவொழுகும் விழுமியோர்.

"தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் * *"

அவர் 'உளவரையால் செய்வர் செயற்பாலவை' என்னில்,

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்" என்றாலும் அவர்கள் "செல்வம் பலர்க் காற்றிக் கெட்டுவந்தக் கண்ணும், சிலர்க் காற்றிச் செய்வர் செயற்பாலவை"

"அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னாய் சான்றோர்
கடங்கொண்டுஞ் செய்வார் கடன்."

இக்கடப்பாடு கைம்மாறு நோக்குவதல்ல; தவிருந் தன்மையதல்ல; ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின், அக்கேட்டைத் தன்னை விற்றாயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து. வறுமையால் இது ஒழிதற்பாற்றன்று.

வேதநடை வழுப்போன்று இவ்வுலகநடை வழு தீர்திற னுடைத்தன்று. பிறர்க் குதவாதார் போலத் தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத்தற்பொருட்டு மல்லாமல் பொருள் முழுதும் ஒப்புரவு செய்தற் பயத்தது.

இக்கடப்பாடு தன்னைப் பற்றியதும், தன் குடியைப் பற்றியதும், நாட்டைப் பற்றியதும், மன்பதைகளைப் பற்றியதும் எனப் பல திறத்தது. இது நாட்டுக்கு நாடு வேறுபடுதலும், காலத்துக்குக் காலம் வேறுபடுதலும் கூடும். அதனால் அறநூல்கள் இதைக் குறிப்பிட்டுக் கூறுவதில்லை. அவ்வந்நாட்டில் அவ்வக்காலத்தில் உள்ள மேலோர் மேற்கொள்ளும் முறைகளைக் கண்டறிந்து ஏனையோர் கொள்ளத்தக்க கடப்பாடாதலின் திருவள்ளுவரும் இதைப் பொதுப்படக் கூறிப் போந்தார். இனி ஒருவன் எத்தகைய செல்வத்தை உடையனாயினும் ஒப்புரவைக் கடைப்பிடியாம லிருப்பனேல் அவன் உலகிற் செத்தவனே யாவனென்றுங் கருத்து.

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" என்னுங் குறளால் அறியலாகும்.

இனி இவ்வொப்புரவு ஈகைபோல வறியார்க்கு மட்டுமன்றி, ஜனசமூகத்திற்கே பெரும்பய னளிப்பதாதலாலும், அவன் பெற்ற செல்வம் பாழ் போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுதலாலும் அது "ஊருணி நீர் நிறைந்தற்று." எல்லார்க்கும் எளிதிற் பயன் கொடுத்தலால் அது 'பயன் மரமுள்ளூர்ப் பழுத்தற்று' தன் குறை நோக்காது எல்லார் வருத்தமுந் தீர்த்தலால் அது "மருந்தாகித் தப்பாமரத்தற்று" இன்னோரன்னோரே கடப்பாட்டாள ராவர்.

இனி இவ்வொப்புரவு செல்வத்தான் மட்டுமாவதன்று; மனமொழி மெய்களாற் செய்யப்படும் எல்லா உதவிகளையும் குறிப்பதென்னுங் கருத்து.

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

"நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு" என்னுங் குறள்களில் அமைக்கப்பட்டது.

ஆகவே இதுகாறுங் கூறியவாற்றால், ஜனசமூக வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொது நன்மைக்கு ஒப்புரவென்றும், வேளாண்மைக்கு ஒப்புரவென்றொரு பெயரென்றும், ஒப்புரவு கடப்பாடு என வழங்கப்பெறுவதென்றும், ஒப்புரவறிதல் என்பது உலகநடை யறித லென்பதென்றும், ஒப்புரவொழுகென்றால் உலக நடையை யறிந்து உலகத்துக்கு வேண்டிய உபகாரத்தைக் கருதிச்செய்து ஒழுகவேண்டு மென்றும், ஒப்புரவின் பெருமை யின்னதென்றும், ஒப்புரவு இம்மையில் பெரும் பயனையும் புகழையும் பயப்பதென்றும், பொருளானேயன்றி மனமொழி மெய்களாலும் ஒப்புரவு செய்யத்தகு மென்றும் அறியப்படும்.

M. E. வீரபாத் பிள்ளை.
இராயபுரம், சென்னை.

---

# தமிழின் பெருமையும், தற்கால நிலைமையும்.

நம் தாய்நாடு நீர்வள நிலவளம் பொருந்திச் சதாகாலமும் ஜீவநதிகளால் பாயப்பெற்று உலகத்திலுள்ள மற்றெல்லாப் பாகத்தைக் காட்டிலும் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும் ராஜரீக விஷயங்களிலும், முதன்மைபெற்று விளங்கின தென்பது மிகைபடாது. இந்நாடு தேசபத்தி, சமயபத்தி, பாஷாஞானமுள்ள அநேக புண்ணியவான்களுக்கு உறைவிடமாயு மிருந்தது.

நம் நாட்டில் அநேக பாஷைகள் பேசப்படுவதும் ஓர் பெருஞ்சிறப்பேயாகும். ஏனெனில், புதிது புதிதாய் மாறி மாறி இன்பம் அனுபவிக்க எண்ணுவது மனிதர் இயல்பு. பக்தர்கள் பலர் ஒன்றுசேர்ந்து கூடித் தோத்தரிக்கும்போது ஒரேபண்ணையேகொண்டு துதித்தால் அது அவ்வளவு ஆனந்தம் தரத்தக்கதல்ல வென்று பல பண்களைக்கொண்டு தங்கள் மனமுருகிக் கேட்போர் மனம் ஓர் நிலையில்நின்று கடவுளின்உருவத்தை அம்மனமெனும் கோவிலில் நாட்டத் தியானிக்கும்போது உண்டாகும் களிப்பு அளவிடத்தரமல்ல. இக்காரணத்தாலேயே நம் நாட்டில் நம் இந்துமாதாவைப் பல பாஷைகளில் துதிக்கிறோம். சிலர் இங்கு பல பாஷைகள் வழங்குவதை அறியாமையால் அது ஓர்குற்றமெனக் கருதுகிறார்கள். நம் இந்தியமாதாவின் உதரத்தில் உதித்த நம்சகோதரர்கள் எப்பாஷையைப் பேசினும் தேசபத்தியிலும், அன்பிலும் இவர்கள் அயல்நாட்டாரைப் பின்னிட்டவரல்லர். ஆகையால் நாட்டில் பல பாஷைகள் ஆங்காங்கு காணப்படுவது அத் தேசத்திற்கு ஓர் பெருமையெனவே மதிக்கவேண்டும். ஏனெனில் ஒரே பாஷையில் வல்லவனை உலக மதிப்பதைவிடப் பல பாஷைகளில் தேர்ந்த மற்றொருவனை உலகம் மிகவும் மதிக்கிறதே இதற்குத் திருட்டாந்தம்.

பல இடங்களிலுமுள்ள அனுபவங்களையும் அறிவையும் விர்த்திசெய்யக்கூடிய கண்காக்ஷி சாலையிலுள்ள பொருள்கள் மனதிற்கு எவ்வளவு ஆனந்தம்கொடுக்குமோ அதைவிடப் பன்மடங்கு ஆனந்தத்தை நம் நாடுகொடுத்து உலகத்தில் சிரேஷ்டமாம், எல்லாச் செல்வத்தையும் தன்னிடத்தே அடக்கி இவ்வுலகத்தோர் மனதை ரமிக்கச்செய்கிறது. நம் தேயத்தின் புராதனசரித்திரங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து நாம் பொதுவாய் ஆராயுமிடத்து தமிழ் ஒரு தனிப்பாஷையெனவும், தமிழ் நாட்டரசர்கள் சேர, சோழ, பாண்டியரெனும் மூவரெனவும், இவ்வரசர்களின் இராஜ்யம் வடக்கே கங்காநதிக்கப்பாலும், தெற்கே கன்னியாகுமரி வரையிலும், இலங்கைத்தீவிலும் பரவி இருந்ததாகவும் தெரிகிறது. பாண்டிய அரசர்கள் ஆதிகாலத்திலே "க்ரீஸ், ரோம்" முதலிய தேசத்தரசர்களை அறிந்திருந்தார்கள். தமிழ்ப் புலவர்கள் நன்கு சன்மானிக்கப்பட்டு மதபேத மின்றி எல்லா மதத்தாரும் பழகித் தமிழையாவரும் பரிபாலித்தார்கள். அரிய, பெரிய

மகான்களால் சமய சித்தாந்த சாஸ்திரங்களும், கிரியை, யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களைக் காட்டும் நூல்களும், இன்னும் வானசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், கணிதசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், கிருஷிசாஸ்திரம், முதலிய அரிய பெரிய நூல்களும் நம் தாய்ப்பாஷையில் எழுதப்பட்டன. இப்பாஷை நம் மிந்தியாமட்டிலுமல்லாமல் அதை அடுத்த லங்கை, சுமத்திரா, ஜாவா, முதலிய தீவுகளிலும் தழைத்தோங்கியது. இப்பாஷையில் எவ்வபிப்பிராயத்தையும், எத்தோற்றத்தையும், எவ்வித தாத்பரியங்களையும் வெளியிடக்கூடிய சொற்கள் சிறந்துள்ளனவெனச் சொல்வதில் ஐயமில்லை. இப்படி இருக்க நாகரீகமிகுத்து நவிலும் நம் நாட்களில் அனேக அன்னிய பதங்களுக்குத் தகுந்த பொருளைக் கொடுக்கும் பதங்கள் நம் தாய்ப்பாஷையில் காணப்படுவதில்லை யென்று ஆங்கிலேயர்களால் எழுதப்பட்ட பல சாஸ்திரங்களை அப்பாஷையிலேயே படிக்கவேண்டுமென்பது எவ்விதம் பொருந்தும்? மனமுண்டானால் வழியும் தோன்றும்.

தொன்று தொட்டு மேன்மையுடன் விளங்கிய நம் தாய்ப்பாஷையை விசுவசித்து அதை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது நமது கடமையல்லவா? தேசாபிமானம் எப்படி முக்கியமோ, அப்படியே பாஷாபிமானமும் முக்கியமாகும்.

நமது சுயபாஷையில் பயிற்சி இல்லாவிடில் நமது தேச சரித்திரங்களையும் நமது பெரியோர்களின் பெருமையையும் நாம் எப்படி உள்ளவாறு அறியக்கூடும். நாம் அன்னிய பாஷைகளைப் பயின்று நம் தாய்ப்பாஷையை விட்டு விடுவது நியாயமா? நமது அழகிய இல்லத்தை அலங்கரித்து அதன் அழகைப் பாராமல் அன்னியர் குடிசையை அரண்மனையென மதித்தல் என்ன பலன் விளைக்கும்?

சுயபாஷாபிமானிகளே! நம் தாய்ப்பாஷையைக் கற்றுக்கொண்டு நம் முன்னோர்களின் நாகரீகங்களை நன்குணர்ந்து அப்பாஷைகளின் சாதனங்களோடு பிறர் பாஷைகளைக் கற்றுக்கொள்வது மேன்மையென நன்குணர்ந்து தமிழ்கற்றோரும் ஆங்கிலம் கற்றோரைப் போலவே ஒத்துழைத்து நம் தேயத்தைச் சிறப்பிக்க வேண்டியது நமது கடமையாகும்.

நம் கவிகளை நாம் தவிக்கவிடுவது நமது கௌரவத்திற்குச் சற்றும் பொருந்தாது. அந்தோ! நம் மூதாதையர் எழுதிய நூல்களெல்லாம் இருட்டறையில்இடந்தெரியாது சிறையிடப்பெற்றுக் கறையானால் சிதைக்கப்பெற்றுக் கசிந்து பொடியாய் மண்ணுடன் சேரவிடுவது விலைமதிக்கத் தகாத மாணிக்கத்தைச் சமுத்திரத்தில் எறிவதற்கு ஒப்பாகுமன்றோ? தமிழை ஆதாரமாகக்கொண்டு அநேக பாஷைகள், உற்பத்தியாயிருக்கின்றன வென்பதை விளக்க "மனோன்மணியின்" ஆசிரியர் பின்வரும் மொழிகளைப் பாடி யிருக்கிறார்:—



"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திரம்வியந்தே செயல்மறந்து வாழ்த்துவமே."

இவ்வளவு மகிமையுடன் விளங்கிய நம் தாய்ப்பாஷை மிகவும் க்ஷீணித்திருப்பதற்குக் காரணம் என்ன? நமக்கிப்போது கொடுக்கும் தாய்ப்பாஷையின்அறிவு நமக்குப்போதுமானதாயில்லை. தலைக்குத்தகுந்த தலைப்பாகையை நாம் தேடுவோமே யொழியத் தலைப்பாகைக்குத் தகுந்தமாதிரி நம் தலையைச் செய்துகொள்ள விரும்புவதில்லை; அம்மாதிரியே நமக்கு அத்தியாவசியம் வேண்டுவதும் அனுகூலத்தைத் தாத்தக்கதுமான கல்வியையே நாம் பெறவேண்டும். நாம் படிக்கும் படிப்பெல்லாம் வாய்ப்படிப்பாய்விட்டது. அந்தரத்தே வளரும் செடிகளுக்கு எம்மாதிரி வேரூன்றி வளரும் சக்தி இல்லையோ அம்மாதிரியே நம் தாய்ப்பாஷை செழித்துவளர முடியாத ஸ்திதியில் இருப்பதற்குக் காரணம் நாமே. நம் தாய்ப்பாஷையின் பேரில் நமக்கு அபிமானமிருக்கும் பக்ஷத்தில் அது கீர்த்தியுடன் விளங்கத் தக்க வழியை நாமே தேடிக்கொள்ள வேண்டும். நாம் தாய்ப்பாஷையை மறந்து ஹிந்துஎன்று சொல்லிக்கொள்ளவும், ஆங்கிலேயரெனச் சொல்லவும் முடியாது. பிறருடைய கொள்கைகளைத் தழுவி நடுக்காட்டில் அகப்பட்ட வழிப்போக்கன்போல் விழிக்கவேண்டி யிருக்கிறது. நமது பின்னிலையில் பலர் நம்மைப்பேசினும் ஏசினும், நாம் நமது கடமையை நம் நண்பர்களுக்கு எடுத்துரைப்பதே நன்னிலையாகக் கொண்டு அவர் முன்னிலையில் எடுத்துரைக்க முன்வரவேண்டும்.

நாம் நாட்டிலுள்ள சண்பகம், பகுளம், பாரிஜாதம் முதலிய புஷ்பச் செடிகளையும், மாஞ்சோலைகளில் மனதிற்கு இன்பத்தைத்தந்து பாடும் பக்ஷிகளையும், அசோகம், முதலிய செடிகளையும்பற்றி நாம் கேட்டதுமில்லை; பார்த்ததுமில்லை. கமுகு, மா, பலா, முதலிய விருக்ஷ வரிசைகளை யுடையதாய் மனதைக்களிப்பிக்கும் மாஞ்சோலைகளும், கண்களைக் கவரவல்ல கனிவர்க்கங்களுடன் காண்போர் விரும்பும்படியுள்ள தோப்புகளும், விசித்திரமண்டபங்களுடைய அநேக பட்டணங்களும், வில்வித்தை, வாள்வித்தையில் தேர்ந்தவரும், கண்ணிமைப் பொழுதையும் விடாது கணித்துப் பலனைக் கூறும் ஜோதிடர்களும், நம் முன்னோருடைய மாக்ஷிமையும் ஆகிய இத்தகையவற்றை எடுத்துக் கூறும் புத்தகங்கள் அரிதாயின. நாம் பள்ளிக்கூடங்களின் வாசிக்கும் புத்தகங்களில், பெரும்பாலும், ஆங்கில நாட்டில் நடந்த விசேஷ சம்பவங்களைப் படிக்கிறோமே யல்லாது, நம் நாட்டில் கீர்த்திபொருந்திய சீதை, சகுந்தலா எனும் ஆயிரக்கணக்கான ஸ்திரீரத்தி

னங்களின் சரிதையையும், வீரமுள்ள போர் வீரர்களின் செயல்களையும் காணோம். நன்றியறிவுள்ள உண்மையான தேசநட்புள்ள தேசாபிமானிகள் சரிதையும் நம்மால் காணப்படுவதில்லை.

இப்போதைய படிப்பில் நாம் சில வருஷங்கள் பாடசாலைகளில் நம் வாலிபத்தைக் கழித்துக் குறுகிய அறிவைப்பெற்று, எவ்வித்தையிலும் பரிபூரணமான ஞானமில்லாது நுனிப்புல்லை மேய்வதுபோல் பல சாஸ்திரங்களையும் ருசிபார்த்துவிட்டுப் பேனா ஓட்டும் திறமையை அடைகிறோம். பிள்ளைகள் பாடசாலையில் சில வருஷங்கள் படித்தபின்னர், ஸ்திரமான ஓர் கைத்தொழிலைச் செய்யப் பழகிக்கொண்டாலொழிய அவர்களுக்கு அவ்வித்தையினால் பலப்பிரயோஜனம் ஒன்றுமில்லை; அல்லது ஒவ்வொரு மாணவனும் தன் பாடசாலையில் படிக்கும்போது தன் தாய்ப்பாஷையில் விசாலமான அறிவைப்பெற்று அப்பாஷையிலுள்ள பல நூல்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிய ஞானத்தையாவது பெருக்கிக்கொள்ள வேண்டும். தாய்ப்பாஷையில் அபிமானமுள்ள ஒவ்வொருவனும் மற்றபாஷைகளில் ஏதாவது ஓர் துறையில் அறிவைப் பெறுமுன்னமே, தன் தாய்ப்பாஷையில் ஒரு நூலையேனும் பூரணமாகக் கற்கவேண்டும்.

மகாத்மா காந்தி தேசபாஷாபிவிர்த்தியே தேசாபிவிர்த்தியென்கிறார். திலகர் பெருமானுக்கும் இந்திய கவிச்சக்கிரவர்த்தியாகிய இரவிந்தநாதடாகூருக்கும் தாய்ப்பாஷையிலுள்ள அன்பு அளவிடமுடியாதது. அவர்கள்சென்ற இடங்களிலெல்லாம் தம் தாய்ப்பாஷையே பேசுவதேயல்லாது அன்னிய பாஷையே உபயோகிப்பதில்லை. பிந்திச்சொன்னகவி வங்காளத்தில் ஆழ்ந்த கருத்துள்ள புஸ்தகங்களை வெளியிட்டிருக்கிறார்; தென்னாட்டில் பாஷாபிமானம் குன்றி இருப்பது விசனிக்கத்தக்கது; தமிழ்நாட்டுக் கல்வியென்றால் ஆங்கிலக்கல்வி யென்று பொருள் கொள்பவர் அனேகர். தமிழ்வல்லவரைப் போற்றுவர் அரிதாயினர்.பலர் முன்னிலையில்தமிழ்பேசுதல் அகௌரவமென எண்ணுவாரு முளர்; எனக்குத் தமிழ்பேச வராதெனப் பெருமைபேசுவார் சிலர்; கற்றோரென்றால் ஆங்கிலம் கற்றோரெனப் பொருள்கொள்வாருமுளர்.

சென்னைச் சர்வகலாசாலையில் நமது தமிழைக் கட்டாயப்பாடங்களிலொன்றாக வைக்காமல் இஷ்டபாடமாக வைத்ததும் நமது அதிஷ்டமே. ஆரம்பவகுப்புக்களில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலியவை பாடமாயிருந்தன. லோயர்சகண்டரி வகுப்புக்களில் இன்னா நாற்பது, நீதிவிளக்கம் முதலியவை பாடமாயிருந்தன; மெட்ரிகுலேஷன்வகுப்புக்குப் பெருந்தேவனார் பாரதம்,கம்பராமாயணம் முதலிய அரியநூல்களும், நன்னூலும் போதிக்கப்பட்டன. இக்காலத்து மாணவர்களுக்குக் கொன்றைவேந்தன், ஆத்திசூடி என்ற பெயரே தெரியாது. “கைவீசம்மா கைவீசு” “நிலாநிலா ஓடிவா” “பனைமரமே பனைமரமே,



ஏன் வளர்ந்தாய்” என்னும் போலிப்பாட்டுகள் காலியாயுள்ள சிறுவர்கள் மனதில்நுழைந்து அவர் அவர் மனதைக்கலக்குகின்றன. பாட்டுகள் போலிப்பாட்டாக மாறப் போலிப் புலவர்களும், புஸ்தகங்களும் அபிவிர்த்தியாய் அவைகள் பாடப்புத்தகங்களாய் அமைக்கப்பட்டன.

மனிதனுக்கு இருக்கவேண்டிய பொதுக்குணங்களில் முக்கியமானவை மூன்று. அவை பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம். எவரிடத்துப் பாஷாபிமானம் உளதோ அவரிடத்தே மற்ற இரண்டுங் குடிகொள்ளும். பாஷாவளர்ச்சி தேசவளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும் காரணமாயிருக்கிறது. ஆங்கிலம் இங்கிலாந்திற் குரியது. அங்கு அந்நாட்டிலன்றி ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட தேசங்களிலும் பாவியிருக்கிறது. அம்மொழி எங்கெங்கு பாவியிருக்கிறதோ அங்கங்கே ஆங்கிலேயர் தம் வழக்க ஒழுக்கங்களை நழுவவிடுவதில்லை. பொதுவாக இந்தியர்களில் சிலர் உபன்யசிக்கும்போது மேல்நாட்டுக் கவிவாணர் உரைகளை மேற்கோளாக எடுத்துக்காட்டுகிறார்கள். அவர் தம் உள்ளம் ஆங்கிலமாக மாறியிருக்கிறது. நடை, உடை, பாவனையும் அவ்வாறே. ஆங்கிலேயர் முறைப்படி எவ்வளவு பேர் உணவுகொள்ள எத்தனிக்கின்றனர். மனைவியையும், குழந்தைகளையும் ஆங்கில வழக்கப்படி அலங்கரித்து ஆனந்தம் கொள்பவர் எத்தனைபேர்? பிறருக்குப்போதித்து அதற்கு மாறாக நடப்பவர் எத்தனைபேர்? கிராப் குடுமிவைத்துக் கண்ணாடி போட்டு நாகரீக மடைந்தோம் நாம் என்போர் எத்தனை? குளிர் நாடுகளில் வசிக்கும் ஆங்கிலேயருக்குக் குடுமி அவ்வளவு அவசியமில்லை. உஷ்ணபூமியாகிய நம் நாட்டில் மிகவும் சிரேஷ்டமான மூளையைக்காப்பாற்றக்கூடிய குடுமியைக்கத்தரித்து மூளையைக் காயவிடுவது மதியீனமே. வாலில்லா நரியின் கதைபோல் நாம் பிறரைப் பார்த்து நடத்தல் மதியீனமே யொழிய வேறில்லை. நம் சௌகர்யத்திற் கேற்றவாறு நடந்துகொள்வதே சிரேஷ்டம்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நாகரீகமுற்ற பெரியோர்களால் பேசப்பெற்றுப் பண்பட்ட ஒரு மொழியின் வளம் குன்றியதற்குக் காரணம் யாது? அம்மொழியில் பலருக்கும் பற்றின்மையேயாகும். சில வருஷங்களுக்குமுன் தோன்றி இன்னும் பண்படாத ஆங்கிலம் செழித்தோங்குவதற்குக் காரணம் யாது? அம்மொழியாளற்குரிய பக்தியே. தேசாபிமானிகளுக்கும், பாஷாபிமானிகளுக்கும் தம் நாட்டை விர்த்திக்குக் கொண்டுவர வேண்டுமென விருப்பமிருந்தால் நம் நாட்டை, பாஷைக்குத் தக்கவாறு அநேக பிரிவுகளாக்கி அவ்வெல்லைக்குற்ற தாய்ப்பாஷையைக் கட்டாயபாடமாக்கி ராஜ பாஷையோடு வழங்கும் பாஷையாக ஏற்படுத்தினால் நம்நாடு பாஷாபிமானத்திலும், தேசாபிமானத்திலும் சிறந்துவிடும்.

இப்பூர்வீக பரதகண்டம் கீர்த்தியுடன் விளங்கவேண்டுமாயின் முதற்படியாகத் தாய்ப்பாஷையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுவதுதான். ஒற்றுமை பாராட்டிச் சென்ற விடமெல்லாம் சங்கங்களை ஏற்படுத்திச் சுயபாஷாபிமானத்தையும், தேசாபிமானத்தையும், சமயாபிமானத்தையும் பரவச்செய்ய முன்வரும் புண்ணியவான்களை எல்லாம் வல்ல ஈசன் கருணையுடன் இரக்ஷிப்பாராக.

K. வரதராஜன்.

## கடவுள் உருவமா அருவமா?

சகோதரர்களே! கடவுள் உருவமா அருவமா? என்றால் உருவம், அருவம், உருவாருவம், அதீதம் என்ற வடிவங்களெல்லாம் ஒரேபடித் தென்பதேயாம். அதனைக் கூறுதும்: கடவுள் உருவம் எனச் சிலரும், அருவம் எனச் சிலரும், உருவாருவம் எனச் சிலருமாகவே உலகில் தெய்வ முண்டென்றெண்ணும் பல மதவாதிகள் கருதுகின்றார்கள். இதில் கடவுளை அருவம் என்பது உயர்ந்த கொள்கை யென்றும், உருவம் என்பது தாழ்ந்த கொள்கை யென்றும் தற்கால நாகரீகர்களெனத் தங்களை யெண்ணிக்கொண் டிருக்கிற சிலரும், சில சாஸ்திரவாதிகளுஞ் சொல்கிறார்கள். இக்கொள்கையானது ஆன்றோர்களால் பண்டைக் காலந் தொடங்கி உயர்ந்த நிலையாக ஆளப்பெற்று வருஞ் சைவசமயக் கொள்கைக்கு எது வரை பொருத்த மென்பதைக் கொஞ்சம் ஆராய்வோம். நமது சமயத்தின் முழுமுதற் கடவுளின் சொரூபத்தைத் திருவருட்டுணை கொண்டு ஆராயப் புகுவோமேல் உருவம், அருவம், உருவாருவம் என்ற வடிவங்கள், உயிர்கள் எளிதி னறிந்துய்யுமாறு பெருமான் கொண்ட அருள்மேனியே யென்பது வெளியாம். இங்ஙனமின்றி "மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றும், குறையிலா அளவினாலுங் கூறொணா தாகிநின்ற, இறைவனார்" எத்தன்மையினாரென ஆராயப் புகுவார்க்கு "இன்னதன்மையனென் றறியாச் சிவன்", "ஆட்பாலவர்க்கருளும் ஆதிமாண்பும் கேட்பான்புகின் அளவில்லை கிளக்கவேண்டா" என்பதே முடிந்த முடிவாம். இம்மட்டோ! 'மைப்படியு' மென்று தொடங்கி, "அவனருளே கண்ணாகக் காணினல்லால்—இப்படியன் இவ்வுருவன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்ற தமிழ்வேத வசனத்தாலும் நன்கு விளங்கும். இன்னதன்மையனென் றறிய முடியாத சிவமே நாமெல்லாம் எளிதினறிந் துய்யும்பொருட்டுக் குருலிங்க சங்கமங்களாகத் திருமேனிகொண்டு வீற்றிருந்து நம்மையுய்வித்துக்கொண்டிருக்கின்றதென்பதே நமது சமயத்துணிவாம். இவற்றில் குரு ஆசிரியரும், லிங்கம் திருக்கோவில்களில் திருமேனி கொண்டிருக்கின்ற வடிவங்களும், சங்கமம் அவ்விறைவனை மனமொழி மெய்களால் இடைவிடாது வழிபடு மெய்யடியார்களென்பதுமாம். இம்மூன்று வடிவங்களையுந் தாரதம்மியமின்றிப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுகின்றவர்களே நம் சைவசமயிகள் என்பது நம் சமயத்தார்க்கு நன்றாய்த்தெரிந்ததே. இங்ஙனமாகக் கடவுள் உருவம் என்று சொன்ன மாத்திரையானே கடவுளை உண்மை இலக்கணத்திற் குறைத்துக் கூறிவிட்டதாகப் பிணங்குகின்றவர்கள் தெரிந்திணங்குமாறு நம் பெருமான் மண் சுமந்த திருமேனியின் மாண்பைக் கொஞ்சம் விசாரித் தவ்வுண்மையைக் காண்போம். பரமாசார்ய மூர்த்திகள் நால்வரில் ஸ்ரீ மணிவாசகப் பெருமான் பொருட்டாய் மதுரை வைகை பெருகிவர அதனாற் சேதமுறா



வண்ணம் அணைபோடு மாறு பணித்த பாண்டியர் பெருமான் கட்டளையை யேற்ற குடிகளில் அன்பே சொரூபமாய் அமைந்த வந்தியார் ஆளாய் வந்த நம்பெருமான் கொண்ட கோலம் மண்சுமப்பவர்களின் வடிவம்போன்றதேயாம். இவ்வடிவில் பாண்டியர் பெருமான் அடித்தஅடி பாண்டியன் முதுகிற் பட்டதென்று தொடங்கி அண்டபிண்ட சராசரங்கட் கெல்லாம் பட்டதாய்ப் புராணம் பகர்கின்றது. இதனால் நாம் உணரவேண்டியது, ஊனக்கண்ணால் காணப்பெறுகின்ற ஓர் வடிவத்தில் பட்ட அடி எவ்வண்டங்களினுமுள்ள எவ்வுயிருக்கும் பட்டதென்பதை ஆராயுங்கால் இறைவன் வடிவமானது நமக்குக் கிடைத்துள்ள மாயா வுருவம் போன்றதல்ல வென்பதும், 'குறித்த தொன்றாகமாட்டாக் குறைவிலான்' என்ற வசனத்தால், கருணையினால் சுதந்தரமாய்க் கொள்ளும் திருமேனியே யென்பதும், 'காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால், 'சத்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்' என்ற வுண்மைநூல் பிரமாணங்களால் ஞானமே திருமேனியாகக்கொண்ட கோலமேயன்றி வேறல்ல வென்பதுமாம். இங்ஙனங் கொள்வதும், உலகுயிர்களுய்யுமா றென்பதும், உய்வான் கொண்ட கோலத்திலும் அவ்விறைவன் சொரூபம் உண்மை இலக்கணங்களில் யாதும் குறைவுபடா தென்பதும், இதனால் அவ்விறைவன் கொள்ளும் உருவம், அருவம், உருவாருவம் என்னுந் திருமேனியும் இன்னதன்மையனென் றறியமுடியாத அதீதத் திருமேனியும் ஒரே படித்தன்றி வித்தியாசம் இல்லை யென்பதும் வெளியாகின்றனவன்றோ?

"அருவமோ ரூபா ரூப மானதோ வன்றிநின்ற—உருவமோ உரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னில்—அருவமும் ரூபாரூப மானதும் அன்றிநின்ற—உருவமும் மூன்றுஞ் சொன்ன வொருவனுக் குள்ளதாமே" என்ற பிரமாணத்தாலும் நன்கு விளங்கும்.

"பூதங்க ளல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின்
பேதங்க ளல்ல இவையன்றி நின்ற பிறிதல்ல வென்றுபெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும்வஞ்ச வெளியென்ப கூடன் மறுகிற்
பாதங்க ணோவ வளைஇந்தனாதி பகர்வாரை யாயு மவரே" என்பது

முதலிய செய்யுள்களால் அன்பிற் கெளியரான பெருமான் கருணையே வடிவமாய்த் தோன்றுதலன்றிப் பிறிதில்லை யென்பது நன்கு விளங்கும். அருளால் உயிர்கள் யாவும் இருமை இன்பமும் எய்திச் சுகிக்குமாறு செய்ய வல்ல கருணாநிதியாகிய அவ்விறைவன் பாதாம்புயங்களை மனமொழி மெய்களால் அனவரதமும் வணங்கி யுய்வோமாக.

ம. ச. அருணாசலம் பிள்ளை,
ஸ்டாம்பு வெண்டர், கந்தபுரம் தெரு, விருதுபட்டி.

## கைவல்ய நவநீத வசனம்

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

### (குரு ஞானபூமிகளின் விசேடணங்களைப் பின்னும் கூறுகிறார்)

சுபேச்சை, விசாரணை, தநுமானசி என்ற முதல் மூன்று பூமிகளையு மடைந்தோர் அப்பியாசிகளாகும். அவர்கள் ஜீவன் முத்தர்களல்லர். அசம் சத்தி, பதார்த்தபாவனை, துரியம் என்ற பின்மூன்று பூமிகளில் ஏறினோர், வரன், வரியான், வரிட்டன் என்றஜீவன்முத்தர் பேதங்களாவர். சத்துவாபத்தி யென்னும் நடுப்பூமியிலுள்ளோர் பிரம வித்துக்களாகிய முத்தர்களாவர்.

முதல் மூன்று பூமிகளைமட்டும் அடைந்து நான்காவது பூமியின் அப்பி யாசமின்றியே மரணமடைந்தோர், மேலான சுவர்க்க முதலிய பதவிகளை யடைந்து பிறகு நல்ல வமிசத்தில் பூமியிற்சனித்துக் கிரமமாக நான்காம் பூமி முதலியவற்றை யடைந்து மோக்ஷம் பெறுவார்கள்; அவர்கள் மயக்கத் திற்குக் காரணமான ஜன்மமடையார்கள். சுபேச்சையாகிய முதற் பூமி கை வருவதே பிரயாசை; மற்றவற்றிற்கு வழியாகிய அம்முதற் பூமி கைவந்து விட்டால் முத்தியும் கிடைத்ததாகும்.

இவ்வுலகில் எவரேனும் இஞ்ஞான பூமிகளில் முதற் பூமியிலாவது, இரண்டாம் பூமியிலாவது அப்பியாச முடையோரா யிருந்தால், அப்புருடர் மிலேச்சரா யிருந்தாலும் சரி, முத்தரே யாவர். சற்குரு பாதத்தின்மீ தாணை இது சத்தியமே. இது தவறென்று கூறுவோர் நாசமடைவார்கள். பார பட்சமற்ற சுருதி வாக்கியங்களில் சந்தேகங் கொள்ளாதே. சுருதியுபதே சிக்கும் வாக்கியத்தில் உறுதியுடையவனாய், அகம் பிரம்மம் (சிவோகம்) என்று அநுசந்தானித்து பிரம்மமாகவே யிருந்து சந்தேக மொழிந்திடு வாயாக.

### (சீடன் வருணாச்சிரம விஷயமாக வெழுந்த ஐயத்தைப்பற்றி வினவுதல்.)

சீடன்:—"நெல்லிலிருந்த உமியை வேறுபிரித்து அதை அரிசியாக்கியது போல், அவத்தையாகிய அஞ்ஞானத்தால் மூடப்பட்டிருந்த அடியேனை அஞ்ஞானம் நீங்கிப் பிரம்மசொரூபமாகும்படி அருள்செய்த பரமாசாரி யரே! இந்த ஞானபூமிகளில் ஒன்றிரண்டை யடைந்தோரும், மிலேச்ச ராயினும், முத்தராவார் என்றருளினீர்களே; மனைவியையும் குடும்பத்தையும் விட்டுச் சன்னியாசியானா லொழிய முத்திகிடைக்கா தென்று சிலர் கூறுகிறார்களே, அச்சந்தேகத்தை யகற்றிவைக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

குரு:—புத்திரனே! நீ கேட்ட சங்கை நல்லதே; சந்நியாசம் நால்வகைப்படும்: 1. குடீசகம், 2. பகூதகம், 3. அம்சம், 4. பரம அம்சம், என்பவை யாம். குடும்பத்தை விட்டு நீங்கும் சந்நியாசத்திற்கு மனதில் உண்டா



கும் விராகம் காரணமன்றிக் காஷாய வஸ்திரம் முதலான வேடம் காரணமல்ல.

### (விராகம் மூன்று வகையெனக்கூறல்.)

புத்திரனே! நாம் கூறிய விராகம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என மூன்று வகையாகும்.

1. மந்தவிராகம்.—தாரம், புத்திரர் முதலியவர்கள் நசித்துப்போனதாலோ, குடும்பத்தில் நேர்ந்த சச்சரவு முதலிய வற்றாலோ, குடும்பத்தை வெறுப்பதால் உண்டாகும் விராகம் மந்த வைராக்கியமாம்.
2. தீவிரவிராகம்.—இந்த உடல் உள்ளளவும், நமக்கு மனைவி முதலிய சம் சாரம் வேண்டுவதில்லை யென்று வெறுத்து விடுவது, தீவிர வைராக் கியம்.
3. தீவிரதர விராகம்.—இவ்வுலக போகங்களும் தேவலோகாதி போகங்க ளும் அநித்தியம், துக்கம், மித்தையாதலின் நமக்கு அவைவேண்டா மென்று வெறுத்து விடுதல் தீவிரதர வைராக்கியமாம்.

இவற்றுள் மந்த வைராக்கியத்தில் எவ்விதச் சந்நியாசமும் சித்திக்க மாட்டாது. ஏனெனில், இதில் இல்லச் சுகத்தை இவன் வெறுக்கவில்லை. குடும்பத்திலுண்டான துயரம் தொல்லை முதலியவற்றைச் சகிக்காது குடும் பத்தைவிடுகிறான்; ஆகையால் குடும்ப இச்சை யிவனைவிட்டொழியவில்லை.

தீவிர வைராக்கியத்தில் குடீசகம், பகூதகம் என்று இரண்டு விதங்க ளுண்டு. எங்கும் யாத்திரை செய்யத் தேகதிடமில்லாதவர்க்குக் குடீசகமும், யாத்திரைசெய்யச் சக்தியுடையோர்க்குப் பகூதகமும் ஆன்றோர் விதித் திருக்கின்றனர்.

தீவிரதர வைராக்கியத்தில் ஹம்சன் என்றும், பரமஹம்சன் என்றும் இருவித சந்நியாச அதிகாரமுண்டு. ஹம்சசந்நியாசிக்கு முத்தி பிரம்மலோ கத்தில் கிட்டுமேயன்றி இந்த உலகில் கிட்டாது. பரமஹம்ச சந்நியாசிக்குத் தத்துவ ஞானத்தால் இவ்வுலகிலேயே மோக்ஷம் கிடைக்கும். பரமஹம்ச சந்நியாசிகளிலும் சிஞ்ஞாசு, ஞானவான் என்ற இருவிதமுண்டு; இவர்களில் சிஞ்ஞாசு என்பவன் ஞானபூமிகளில் சுபேச்சை, விசாரணை, தநுபமானசி என்ற முதல் மூன்று பூமிகளின் அப்பியாச முடையோன். ஞானவான் என்போன் மேல் பூமிகளில் சென்று ஜீவன் முத்தியடைந்துள்ள மேலோ னாகும்.

சிஞ்ஞாசுவிலும் இருவிதம் உண்டு: அதாவது, சிலர் மனைவிமக்கள் முதலிய வெல்லாப்புறப் பற்றுக்களையும் துறந்து, அதிதிகளாக விருந்து பிரம்மஞானமடைவர். யாதாயினுமோர் காரணத்தால் புறச்சந்நியாசம் கொள்ள முடியாத சிலர், பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்

என்ற வருணாசிரம விதிப்படி இல்லறத்தி லிருந்துகொண்டே, அகத்துறவு பூண்டு, குருவையடைந்து அப்பியாசத்தால் ஞானமடைவர்.

இவ்வாறு சாத்திரங்களில் கூறப்பட் டிருப்பதோடு, உலகில் பிரத்தியட்ச அனுபவமாகவும் கண்டிருந்தும், உன்மனதின்கண் ஐயமுண்டாவதென்ன? சுருதியுத்தி யனுபவங்களால் சந்தேகத்தை யொழித்து ஆனந்த நிலையை யடைவாயாக.

[இதனால், மோக்ஷத்தை யடைதற்கு ஆசிரமம் காரணமல்ல; இல்லறத்தி லிருப்பினும் சந்நியாசி யாயினும், உலகில் எத்தொழில் செய்யினும் மனதில் தீவிர வைராக்கிய மடைந்து, அகத்துறவு பூண்டு, ஞானபூமிகளின் அப்பியாசத்தால் ஞானத்தைப்பெற்றால் எவரும் மோக்ஷமடையலாம் என்று விளங்குவதுணர்க.]

கடலில் அலைநுரையாதிகள் உண்டாகி அதன் கண்ணே நிலைத்திருப்பதுபோல், பிரம்மத்தின் கண்ணே இப்பிரபஞ்சம் தோன்றி நிலைத்திருக்கிறது. இப்பிரபஞ்சம் மனத்தால் பாவனைசெய்தே யுண்டானதாகும். ஆராய்ந்து பார்க்கின், இப்பிரபஞ்ச மனைத்தும் நிலைத்து நிற்பது அறிவின் கண்ணேயாகும். அறிவே பிரம சொரூபம். எங்கும் நிறைந்து நிற்கும் அறிவு சொரூபமாக விருந்து, ஆனந்தத்தை யனுபவிப்பாயாக.

சீடன்:—எந்தையே! எவ்வாறு நிலையிலிருந்தால் அத்தகைய ஆனந்த அனுபவம் அடியேற்குப் புலப்படும் என்பதை விளக்கியருளப் பிரார்த்திக்கிறேன்.

ஆசான்:—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தியாகிய இம்மூன்று அவஸ்தைகளிலுமுண்டாகும் விர்த்தியை யொழித்து, அறிவுசொரூபமாக விருப்பாயாயின் ஆனந்தம் பெறலாம்.

சீடன்:—சமஸ்கார வசத்தால் அந்தக்கரணத்தினின் றெழும் விருத்திகளை யெல்லாம் அடக்குவதற்கு அடியேற் கோருபாயம் அருளல்வேண்டும்.

ஆசான்:—ஞானேந்திரிய கன்மேந்திரியங்களை யடக்கி நீ அவற்றிற்காசனாகி அவையுனக்கு அடங்கி ஆட்களாக இருக்கப் பெற்றால் சகல வாசனைகளும் தானேயடங்கும்.

அதுவுமன்றி (அகந்தை, மமதை, காமக்குரோதாதிகள் முதலிய) விருத்திகளை யடக்க வேறு உபாயங்களுமுண்டு.

அவற்றில் இரேசக பூரக கும்பகங்களால், துருத்திபோல் வீசிக்கொண் டிருக்கும் பிராண வாயுவை யடக்கினால் மனோவிர்த்திகள் அடங்கும். இது ஒருவித யோகமார்க்கமாகும். இப்படிச் செய்யப் பிரியமில்லையேல், காரண சரீரமாகிய அவித்தையை நாசஞ்செய்யின் மனோவிர்த்திகள் யாவும் தானே யடங்கும்.



இக்காரண சரீரத்தை யெவ்வாறு நீக்குவதென்னில், வேதம் பொய் கூறாதாகையால் அதன் வாக்கியங்களை மனதில் தரிக்கச்செய்து, "பரிபூரண சொரூபமாகிய என்னிடத்தில் இப்பிரபஞ்சங்கள் யாவும் ஆரோபமாகத் தோற்றிக்கொண்டிருக்கின்றன" என்ற நிச்சயம் வந்துவிட்டால், அவித்தை எங்குமில்லாது ஒழிந்துபோம்.

[விர்த்திகளடங்கல் என்பது அலையுமனம் அகத்தடங்குதலேயாகும். அதாவது, மனநாசமே வேண்டுவது - மனம், வாயு, அம்சமானதால் அதற்கு அலையும் சுபாவமே அதிகமாக வுள்ளது. வாயுவடங்கின் மனமடங்கும் என்பது ஒரு கொள்கை. ஆனால் அது யாவர்க்கும் ஒவ்வாது. . வாயுவடங்கியிருக்கிற மட்டுமே மனம் அடங்கியிருக்கும். அது ஒரு குதிரையை யோடாதபடிக் கடிவாளவாரை யிழுத்துப் பிடித்துக்கொண் டிருப்பதுபோலாகும். நாம் மறுபடி வாரைத் தளர்த்திவிட்டதே குதிரை ஓட ஆரம்பிக்கும். அதுபோல் மறுபடி சுவாசம் இயங்கத் தொடங்கியதே மனம் பழையபடி அலையத் தொடங்கும். வாயுவைப்பற்றிக் கவனிக்காமலே மனதை யடக்கலாகும். மனம் சூக்கும பஞ்சபூதங்களின் சத்துவகுணத்தி லுற்பத்தியானது. பிராண வாயு இராஜோகுணத்தி லுண்டாயது. அவித்தையை யழித்து ஞானம் பெறுவதற்கு மனோலயமே அவசியம் வேண்டுவதன்றி, வாயுவடக்கம் அல்ல. மனோலயத்திற்குப் பின்பே அவித்தையுள்ளது. அவித்தையே அஞ்ஞானமென்பதும். அவித்தை நீங்கியதே ஆன்மதரிசன முண்டாகும்; அதாவது, ஞானோதயமாகும்; ஆனால், மனம் சதா அலைந்துகொண்டே யிருப்பதால் அதை யுபாயத்தால் அடக்கவேண்டும்; ஈசுவர அருளின்றி அவித்தையை யழிக்கமுடியாது. பக்தியால் மனமும் சீக்கிரம் ஒரு நிலையில் நிற்கும்; ஈசுர அருளும் கிட்டி, அவித்தையை எளிதிலழிக்க அனுகூலமுண்டாகும். ஆகையால் பக்தியோடு கூடிய அப்பியாசமே ஞானமடைய இன்றியமையாத சாதனமாகும்.]

### (சீடன் மனம் அலைவதால் எவ்வாறு மேற்கூறியபடி தாரணை செய்தல் என வினவுதல்.)

சீடன்:—தேசிகமூர்த்தியே! 'பரிபூரணமான என்மேல் ஆகாசாதிப் பிரபஞ்சம் யாவும் தோற்றரவு மாத்திரமே' என்ற நிச்சயத்தோடு நிற்கவேண்டுமென வருளினீர்கள். உலக விவகாரங்களால் மனம் சதா அலைந்துகொண்டே யிருக்கும்போது தாங்க ளருளியபடி எவ்வாறு நிற்கமுடியும்?

ஆசான்:—"என்னையன்றி யன்னியமாய் ஈண்டொன்றுமே யில்லை. இங்கு நாமரூபமாகத் தோற்றிக்கொண் டிருக்கும் பிரபஞ்ச மனைத்தும் உண்மையில் என் மயமே. அலைதிவலையாதிகள் நீரையன்றி வேறுயில்லை; ஆபரணாதிகளனைத்தும் பொன்னையன்றி வேறாக இல்லை. அதுபோல்

இவை யனைத்தும் என்னையன்றி யில்லை, நானே. இத்தோற்றமனைத்தும் ககனாரவிந்தம் போலும், கானல் நீர்போலும், கனாப்போலும் கற்பிதமே யாகும்" என்று நிச்சயித்து, நான் சித்சொரூபமே என்று திடத்தோடிருந்தால் அவித்தை யழிந்துபோம்.

"தோன்றிடும் பொருள்க ளுண்டாய்த் தோன்றியே யின்ப மாகித்
தோன்றிடு மதனா லந்தச் சொரூபமே யென்று கண்டு
தோன்றிடுஞ் சொரூபந் தன்னிற் றோன்றுமீ தசத்தே யென்று
தோன்றிடுஞ் சொரூபந் தானாய்த் துளக்கமற் றிருந்தான் வேந்தன்"

(குமாரதேவர்.

"உலகமே பரப்பிரம முரைக்கு மந்தப் பிரமனா
அலகில்கலை யுணர்ந்தாலு மருத்த மிதே யறிகண்டாய்
*        *        *        *        *"

வள்ளலார்.

(தொடரும்)

சீடன்.

---

## இரணியன் (வாதி) மன்றாட்டம்

(216-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேன்மை தங்கிய நீதிபதியவர்களே! இரண்டாம் பிரதி வாதியவர்கள் சட்டப்படி அக்கிரமம் செய்வோர்களை அழிக்க அதிகாரமுண்டு என்று சொல்லுவது விந்தையா யிருக்கிறது. 2-ம் பிரதிவாதி கூறுவது முழுமையும்பொய். உலகத்தைப் படைக்கவும், இரக்ஷிக்கவும், அழிக்கவும் இவர் தமக்கு அதிகாரமுண் டென்பது, இவர் சமயத்திற்குத் தக்கபடி கூறும் கூற்றேயன்றி யுண்மையல்ல. உண்மையில் இவர்கள் மூவர்சேர்ந்த ஒரு கள்ளக்கூட்டம். இவர்களால் எல்லாச் சீவர்களுக்கும் அம்மம்ம! உண்டாகும் துன்பத்திற்களவே யில்லை. அவற்றை விவரித்துக் கூறவேண்டியது நான் நீதிபெற அவசியமான தாகையால், கோர்ட்டார் அதைப் பூராவும் கேட்கப் பிரார்த்திக்கிறேன்.

2 ம் பிரதிவாதிக்குப் பிரம்மன் என்ற ஒருபுதல்வர் உண்டு; அவர்தான் சிருட்டிக்கும் தொழில் செய்பவர். 2-ம் பிரதிவாதியின் மைத்துனர் உருத்திரன், அல்லது சிவன் என்பவர் அழிக்கும் தொழில் செய்பவர். 2-ம் பிரதிவாதி இரக்ஷிக்கும் தொழில் செய்பவர்; ஆனால் இவர்களுக்குள் ஒரு வரம்பு கிடையாது. இரக்ஷிக்கும் தொழிலுடைய இவ்விரண்டாம் பிரதிவாதி சங்காரத்தொழிலைச் செய்தது பெரிய அக்கிரமம். இவர் மைத்துனரோ யாவற்றையும் அழிக்க எமன் என்ற ஒரு உத்தியோகஸ்தனை யேற்படுத்திக் கடைசியில் அவனையே யழிக்கும் புண்ணிய புருடர். இவர்கள் சமயத்திற்குத் தக்கபடி ஒருவருக் கொருவர் மிகத் தந்திரமாக உதவிசெய்து கொள்வார்கள். கேள்வி வந்தால் நானும், என்மைத்துனரும் ஒன்றுதான்; நாங்கள்



மூவரும் ஒன்றே என்று நிரூபிப்பார்கள். இவர்கள் ஒன்றுசேர்ந்து சீவர்களுக்குச் செய்யுந் தீங்கென்னவெனில், நிம்மதியாய்ச் சுகமாக விருந்த சீவர்களுக்குத் தேகம், அந்தக்கரணம் முதலியவற்றை யளித்து அவர்களைப் பலவித சிருட்டிகள் நிறைந்த இவ்வுலகிற் பிறப்பித்து, இரக்ஷித்து, மறுபடியழித்து, இப்படியே மாறிமாறி நால்வகையோனி எழுவகைத் தோற்றமாகிய பிறவிகளில் சதாபிறந்து படாதபாடும் படும்படிச் செய்கிறார்கள்.

அந்தோ! ஏன் இப்படி எங்களை யலக்கழிக்கிறீர்களென்று கேட்டால், "எங்களால் ஒரு குற்றமுமில்லை; நீங்கள் செய்த கர்மத்தின்படி உங்களுக்குச் சென்மமளிக்கப் படுகிறது; அதன்படி நன்மைதீமைகளும், சுகதுக்கங்களும் உண்டாகின்றன" வென்று கூறிவிடுகிறார்கள். இங்கு கோர்ட்டாரவர்கள் தயைபுரிந்து கவனிக்கக் கோருகிறேன்.

சீவர்கள் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலேயே கருமங்களைச் செய்கிறார்கள். அந்தோ! சும்மாவிருந்த சீவர்களுக்கு அந்தத்திரிகரணங்களையும் வலியக் கொடுத்தவர்கள் இவர்களே. இவைமட்டுமல்ல; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், டம்பம், ஆசுயை முதலிய கொடிய குணங்களையும் சீவர்களுக்குக் கொடுத்து அவர்களைப் பாபகருமங்கள் செய்யத் தூண்டுகிறவர்கள் இவர்களே.

இவர்களில் இரண்டாம் பிரதிவாதி மிக்க சுயகாரிய துரந்தரர்; இவர் தமக்கு அவசியமானபோது பூலோகத்தில் ஒருசாதாரண மனிதனைப்போல் அவதரிப்பதுண்டு; அப்போது இவர்செய்யும் அக்கிரமங்களுக்கு அளவில்லை. திருட்டாந்தமாக, இவர் கிருஷ்ணனாக அவதரித்தபோது செய்த காரியங்களில் சிலவற்றைக் கூறுகிறேன்:—

(1) துரியோதனாதியருக்கும் பாண்டவர் களுக்கும் சச்சரவுநேர்ந்து யுத்தம்செய்யத் தீர்மானித்த போது, துரியோதனன், அர்ச்சுனன் புத்திரனாகிய அரவான் என்பவனைக் காளிக்குக் களப்பலியாக வரும்படி கேட்க, அரவான் விரோதிக்கு உதவிசெய்கிறோமே என்பதை யெண்ணாமல் பெருந்தன்மையோடு "முன்னாடிப் பலி செலுத்துகிறவர்களுக்கு உதவுகிறேன்" எனறான். துரியோதனன் அமாவாசை தினத்தன்று பலிசெலுத்த ஏற்பாடு செய்தான். அவன் அரவானைப் பலி செலுத்தினால் ஜெயமடைவானென்று எண்ணிய, 2-ம் பிரதிவாதி, துரியோதனன் குறித்த நாளுக்கு முன்னாளே அமாவாசையென்று புரட்டிக்கூறி அன்று அரவான் பாண்டவர் பட்சத்தில் பலியாகும்படி செய்து விட்டார்.

(2) பிறகு யுத்தம் ஆரம்பித்ததினம், இரு கட்சியாருடைய சேனைகளும் குருக்ஷேத்திரத்தில் அணிவகுத்து நின்றபோது, 2-வது பிரதிவாதி அர்ச்சுனனுக்கு இரதசாரதியாக விருந்தார். அர்ச்சுனன் தன் முன் தங்கள் உயிர்களைத் தத்தம்செய்ய ஆயத்தமாக நிற்கும், துரியோதனாதியாகிய தன் சகோதரர்களையும், மற்றும் தகப்பன்மார், பாட்டன்மார், ஆசாரியர்கள்

முதலியவர்களையும் கண்டு மிக்க இரக்கங் கொண்டவனாய், 2-ம் பிரதிவாதியை நோக்கி “அந்தோ! இத்தகைய சுற்றத்தாரை யெல்லாம் கொன்று அநித்தியமான உலகபோகத்திற் காசைவைத்து இப்பூமியை யெவ்வளவு காலம் நாம் ஆளப்போவது. இது தகுதியாக எனக்குத்தோன்றவில்லை. நான் கானகம் சென்று தவம்புரிந்து நித்தியமான பதவியை யடைவேன்” என்றான்.

2-ம் பிரதிவாதி அர்ச்சுனனை நோக்கி “எல்லாம் நானே செய்கிறவன்; நீ செய்கிறாயென்ற எண்ணத்தை விட்டுவிட்டு, உன் க்ஷத்திரிய தருமத்திற்கேற்றபடி முன்வைத்த காலைப் பின்வைக்காது எதிரிகளைச் சங்கரித்து ஜெயம்பெறு; இன்றி யுத்தத்தில் மடிந்தால் வீரசொர்க்கம் அடைவாய்” என்று தந்திரவார்த்தைகள் கூறி அவனை மயக்கி எண்ணிறந்த பேரைக் கொல்லும்படி செய்தார்.

(3) யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் சைந்தவன், அர்ச்சுனன் புத்திரனாகிய அபிமன்னியுவென்ற வாலிபனோடுபோர் புரியும்போது, அபிமன்னியு தனியாய் அனேகம் சூரரோடு யுத்தம்செய்ய முடியாமல் தன் ஆபத்தைத் தன் தந்தை முதலியவர்களுக் கறிவிக்கச் சங்கத்தொனி செய்தகாலையில், 2-ம் பிரதிவாதி அத்தொனி அர்ச்சுனன் வீமன் முதலியவர்கள் செவியில் வீழாவண்ணம் தன் சங்கத்தைக் கெட்டியாகத்தொனிக்க, அபிமன்னியு உதவிகிடைக்காமல் போரில் மரித்தான். 2-ம் பிரதிவாதி தன் சுயகாரியம் சித்திக்க வெண்ணித் தன் பக்தனும் தோழனும் சுற்றத்தானுமாகிய அர்ச்சுனன் புத்திரன் என்றுங் கருதாமல் அவ்வாலிபனைக் கொல்வித்தார்.

(4) “என் புத்திரனைக்கொன்ற சயிந்தவனை மறுநாள் சூரியன் அத்தமனமாகுமுன் நான் கொல்லாவிட்டால் அக்கினிப்பிரவேசமாவேன்” என்று அர்ச்சுனன் சபதம்செய்து கொண்டான். மறுநாள் யுத்தத்தில் சூரியாத்தமனத்திற்குள் சயிந்தவனைக் கொல்ல முடியாதென்பதை யுணர்ந்த 2-ம் பிரதிவாதி, சில நாழிகைகள் பொழுதிருக்கும் போதே தன் சக்கரத்தால் சூரியனை மறைத்துப் பொழுதமர்ந்ததாகக்காட்ட, அர்ச்சுனன் அக்கினிப்பிரவேசத்திற்கு ஆயத்தமாகி அக்கினிக் குழியைச்சுற்றி வரும்போது, இரண்டாம் பிரதிவாதி திடீலென்று சக்கரத்தை யெடுத்து விட்டு, சூரியன் தெரியும்படிசெய்து “ஓ பொழுதிருக்கிறது! அர்ச்சுனா அதோ! சயிந்தவன் கொல்” என்றுகூறி மற்றபேரைப்போல், அர்ச்சுனனது அக்கினிப்பிரவேசத்தைக்காண அங்குவந்திருந்த சயிந்தவனைக் கொல்லச்செய்தார். இச்சூட்சி தவறுவதாயின், பாரதயுத்தத்தில் ஆயுதத்தைக் கரத்தி லெடுப்பதில்லை யென்று சத்தியவாக்களித்த இவர், அப்போதே தன் சக்கரத்தால் துரியோதனாதியரைக்கொன்று அன்றே தருமருக்குப்பட்டங்கட்டக் கருதித் தமது இரதம், ஆயுதங்கள்யாவும் ஆயத்தமாக வைத்திருக்கும்படி தமது தேர்ப்பாகனாகிய மாதலிக்குக் கட்டளையிட்டிருந்தார்.



(5) துரோணரைக் கொல்ல “அசுவத்தாமா அதோகுஞ்சரம்” என்று தருமரைக்கூறச் செய்து, குஞ்சர என்ற சத்தம் துரோணர் செவியில்விழாதபடி இவர் சங்கூத, துரோணர் தன் மைந்தனிறந்தானென்று கருதி ஆவியை விட்டார்.

(6) கர்ணனைக்கொல்ல இந்திரனைக் கொண்டும், ஒரு பிராம்மணன் போலத் தாம் வேடம்பூண்டு சென்றும் கர்ணனுக்கு உயிர்க்காப்பாக விருந்த அவன் குண்டலங்களையும், அவன்செய்ததரும பலனையும் அவனிடமிருந்து வாங்கிக்கொண்டார். இவ்வாறு இவர்செய்யும் அக்கிரமங்களுக் களவேயில்லை. (இன்னும் தொடரும்).

---

## ஜீவகதி.

ஜீவகதி யென்பது ஜீவன் சரீரத்தை விட்டபின் எவ்வாறு செல்கின்றது, எவ்விடத்தை யடைகின்றது, என்ன செய்கின்றது, மீண்டும் எவ்வாறு வருகின்றது என்பனவற்றைக் கூறுகின்றதாம். இவ்விஷயம் புராணங்களில் இறைந்துகிடக்கின்றது. கருட புராணத்திற் சற்று விளக்கமாய்க் கூறப்பட்டுள்ளது. பிரமசூத்திர பாஷியக்காரர்கள் தமது பாஷியத்தில் விளக்கமாய்க் கூறியிருக்கிறார்கள். பாரதம் முதலியவற்றிலுங் காணலாம். ஆகவே ஜீவகதி யென்பது சரீரத்தைவிட்ட ஜீவனுடைய நிலைமையென்று கொள்க.

இதனை விரிப்பதற்கு முன்னால் முன்னே கூறிய சில விஷயங்களை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவை ஜீவனுடைய ஸ்தூல சூட்சும சரீரங்கள், ஸ்தூல சரீரத்தின் அந்தக்கரண புறக்கரணங்களாற் செய்யப்படும் பாவ புண்ணிய கன்மங்கள், அக்கன்மங்கள் வாசனாரூபமாகச் சூட்சும சரீரத்தைப் பற்றி நிற்குமென்பது, இந்த வாசனை காரணமாகவே ஜீவன் ஜனன மரணங்களை யடைந்து சொர்க்க நரகாதி போகங்களையும் நுகருமென்பது, அவ்வப் போகங்களை நுகர்ந்தொழிந்த வனந்தரம் அவ்வவ்வுலகங்களை விட்டொழிந்து வேறுலகத்தில் வேறு சரீரத்தைப் பெறுமென்பது, பாவவாசனைகனதியும் இருணிறமும் கொண்டு மனமாதியந்தக் கரணங்களை மலினப்படுத்திச் சூட்சும சரீரத்தையும்பற்றி ஆன்ம அறிவை மறைத்துக்கொண்டு நிற்குமென்பது, புண்ணிய கன்ம வாசனை வெகு லேசாய் ஒளிமயமாய் ஆன்ம வறிவைப் பிரகாசிப்பித்து நிற்குமென்பது, பாவகன்மத்தாற் கெட்ட சிந்தனை, செய்கை முதலியனவும், புண்ணிய கன்மத்தால் நற்சிந்தை, நற்செய்கை முதலியனவும் ஆன்மாவுக்குண்டாகு மென்பது முதலியனவாம். புண்ணியான்மாக்கள் ஒளிமார்க்கத்தில் நடந்து ஒளிமயமான புண்ணிய வுலகங்களையும், பாவான்மாக்கள் இருள் மார்க்கமாய் இருளடைந்தனவும், துன்ப நிறைந்தனவுமான வுலகங்களையும் அடையுமென்பதையும் நினைக்கவேண்டும்.

உலகங்களாவன: நட்சத்திர வடிவமாக வானத்தில் காணப்படும் அண்டங்களேயாம். அவற்றைக் கணக்கிட்டறிய எந்தப் புத்திமானாலு மியலாது.

யோகவலிமையால் மலத்தைத் தகித்து எங்குந் தானாய் நிற்கும் யோகிகளை யுணரத்தக்கவர்கள். ஆயினும், இவ்வளவினவென்று பிறருக்குத் தெரிவிக்க முடியாது. இவ்வண்டங்க ளெல்லாம் பஞ்சபூதங்களா லுண்டாக்கப்பட்டனவே. பிருதிவியண்டம், அப்பு அண்டம், தேயு அண்டம், வாயுவண்டம், ஆகாயவண்டம் என நிற்கும். பூமி, சந்திரன், சொர்க்க முதலியன பிருதிவியண்டத்திற் சேர்ந்தனவேயாம். சூரியன், கிருத்திகை, செவ்வாய் பிரகஸ்பதி, திருவாதிரை முதலியன அக்கினியண்டமாம். சந்திரன், பூமியும், நீரு நிறைந்த வண்டமாம். இவற்றிற்கு மேலாக மற்றைய வண்டங்களுள்ளன. இவற்றுள் நாம் கவனிக்கவேண்டிய அவசியமுள்ளவை சூரிய சந்திர வண்டங்களேயாம். நமக்கு ஒரு சூரியன் காணப்பட்டாலும் பல்லாயிரங் கோடி சூரியர்களுண்டென்பது சாத்திரக் கருத்து. அச்சூரியர்களாலேயே வான விரிவில் காணப்படும் அண்டங்க ளெல்லாம் நமக்கு ஒளி வடிவமாகக் காணப்படுகின்றன. சந்திரன்களு மவ்வாறே யளவுகடந்தனவாம். இவ்வண்டங்களெல்லாம் ஜீவான்மாக்களுக் கிடமாய்ப் போக போக்கியங்களைக் கொடுத்துக்கொண் டிருக்கின்றன. ஒன்றும் வெறுமையாய்ப் பயனற்றிருப்பதல்ல வென்பது நூல்களின் கருத்து. இவ்வுலகின் கண்ணுள்ள ஜீவான்மாக்களுக்கும் நமது சரீரம் போலவே யிருக்கவேண்டு மென்கிற நியதியில்லை. அவ்வவ் வுலகங்களுக் கேற்றவாறே மாறுபட்டிருக்கலாம். தேவர் தானவர், பைசாசர், கருடர், காந்தர்வர் முதலாயினோருக்கு நமது சரீரத்துக்கு மாறுபட்ட சரீரமுள்ளதாகப் புராணாதிகளாற் காண்கின்றோமல்லவா? ஆயினு மின்ப துன்பங்கள் ஒரே விதமாகத்தா னிருக்கவேண்டும். ஜீவான்மா பிராரப்த கன்மமுடிவில் தன் சரீரத்தை விட்டபின் இவ்வுலகங்களி லேதேனு மொன்றை யடையும். தானுள்ள உலகத்துக்குச் சம்பந்தப்பட்டுள்ள சூரிய சத்திக்கு உட்பட்ட வுலகத்தையே யடையும். அதாவது, நமது பூலோகத்திலுள்ள ஜீவான்மா நமக்குக் காணப்படுகிற சூரியனுடைய சக்தியிற் சுழன்றுகொண் டிருக்கிற அண்டங்களையே சென்றடையும். மஹாபுண்ணியங்களைச் செய்தவர்கள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரக்கர்த்தர்களான பிரம, விஷ்ணு, ருத்திரர்களுடைய உலகங்களையு மடைவார்கள். இதற்குமேல் மோட்ச வுலகமேயாம். அதனைச் சமையம் வந்தபோது சிறிது கூறுவோம்.

இந்த ஆன்மா சரீரத்தில் மூளை, லலாடம், இருதயம், நாபி இவற்றையே இடமாகக்கொண்டு வசிக்கின்றது. மூளையே பிரதானம்; அதனாலேதான் அதனை அறிவுக்கிருப்பிடமென்று வேதாதிகலைகள் கூறுகின்றன. இவ்வான்மா லலாட ஸ்தானத்தைப்பற்றி நிற்பதே ஜாக்கிரமென்றும், கண்டத்தை யடைவதே சொற்பனமென்றும், இருதயத்திற் சேருவதே சுழுத்தியென்றும், அதற்குக் கீழுள்ள நாபியிலடைவதே துரியமென்றும், மூலாதாரத்தி லடங்கிநிற்பதே துரியாதீதமென்றும் நூல்கள்கூறுகின்றன. சொற்



பனாவஸ்தையில் மனமொன்றையே பிரதானமாய்ப்பற்றி நிற்பதினால் அம்மனத்தினுள் ளடங்கிக்கிடக்கும் பூர்வஜன்ம வாசனைகளும், இச்சனனத்தில் ஜாக்கிராவஸ்தையிற் கண்டவை கேட்டவைகளும் அம்மனதிற்குத் தோற்றும்; அதுவே சொற்பனமாம். சுழுத்தி அவஸ்தையில் ஆன்மாவுக்கு மனச்சம்பந்தமின்மையால் ஒன்றையும் உணராமல் ஓய்ந்திருக்கும்; அதையே நல்ல நித்திரை யென்று கூறுவார்கள். இங்ஙனம் அறிவே சொரூபமாகிய ஆன்மா சரீரத்தி லிருந்துகொண்டு, மனதையும் புலன்களையும் துணையாகக் கொண்டு அகவிஷயங்களையும், புறவிஷயங்களையும் அறிந்து, சரீரத்தையும் நடத்தும்.

இவ்விஷயத்திற் சிலர் சில ஆக்ஷேபனைகளை யெழுப்புவர். அவையாவன—“ஆன்மா அணுவா யிருந்தால் இவ்வளவு பெரிய சரீரத்தை யெப்படி நடத்தும் சக்தியைப் பெறும்? ஆன்மா ரூபமுள்ளதாயிற் கட்புலனுக்குப் புலப்படவேண்டும்; புலப்படாமையால் அருவமேயாம். அருவப் பொருள் பெரிய உடலை நடத்துவதென்றால் ஒவ்வத் தகாததே” என்பன. இவற்றை யிவ்வாறு கூறிமறுக்க:—சிறிய பொருள் பொருளை நடத்தக்கூடாதென்று நியதியில்லை. ஆன்மா அணுவாயினும் அறிவே யுருவமாக வுடையதாதலால் அவ்வறிவின் வலிகொண்டே நடத்த யாதுந் தடையில்லை. ஒரு மாலுமியானவன் மிகச் சிறிய சொரூபத்தை யுடையவனா யிருந்தும் தன்னிலும் எத்தனையோ மடங்கு பெரிதாயுள்ள கப்பலைத் தன்னிஷ்டம்போலத் திருப்புதல் முதலியவற்றால் நடத்துவதைப் பிரத்தியட்சமா யறியலாம். சிறிய ஆகிருதியுள்ள ஒரு மனிதன் பெரிய கப்பலை யெப்படி நடத்தக்கூடு மென்பது புத்திசாலித்தனமான கேள்வியாகாது. மின்சாரம் நீராவி இவைகள் அரூபப் பொருளா யிருந்தும் எவ்வளவோ பெரிய வேலைகளைச் செய்வதும் பிரத்தியட்சமாதலால் அவைபோலவே யரூபமான ஆன்மாவும் சரீரத்தை நடத்தத் தடையிராதென்க. அறிவினாலாகாத காரியம் ஒன்றுமில்லையென்க.

ஜீவன் கன்மவசத்தினால், வியாதியினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ கெட்டுப்போன சரீரத்தைவிட்டு வேறு புதிய சரீரத்தையடைய வெளிப்படும். ஜீவன் உச்சியின் வழியாக உட்சென்றதாதலால் அவ்வழியாக வெளிப்படுவதே யுசிதம். போனவழியே திரும்புதலே யுசிதமல்லவா? அவ்வழியாக வெளிப்படுவதே சரியான மரணமென்றும், அவ்வான்மா மோட்சத்தையேனும் பிரம, விஷ்ணு, ருத்திரேந்திராதி, தேவர்கள் பதவியையேனும் ஒன்றடையும். இது புண்ணியாத்மாக்களுக்கே யுரியது. தபசினால் மலத்தைத் தகித்துத் துவாதசாந்த ஸ்தலத்தைச் சுத்தப்படுத்தி யிருக்கும் ஆன்மா கபாலத்தைக்கீண்டு செல்லும். அவ்வாறு சுத்தப்படுத்தாத சரீரத்திலுள்ள ஆன்மா கண், காது, வாய் முதலிய வழிகளால் வெளிப்படும். இது பாமான்மாக்களுக் குரியதாதலால் அவ்வான்மாக்கள் நெடுங்காலம் சுழன்று திரிந்து கடைசியில் தம் சரீர வாசனைக்கேற்ற குணமுள்ள அண்டத்தை

யடையும். இவ்வாறு வெளிப்பட்ட ஆன்மா செல்லு மார்க்க மெதுவென்னிற் கூறுதும்.

ஊர்த்துவகதி, தூயகதி, அதோ கதியென மூவகை மார்க்கங்கள் ஆகாயத்திலுண்டு. தேவயானமென்று ஒரு மார்க்கமுண்டென்றும், அது தேவர்கள் சஞ்சரிக்கும் மார்க்கமென்றும் கூறுவர். ஊர்த்துவகதி அர்ச்சிராமார்க்கம் என்றும், சூரியமார்க்கமென்றும் கூறப்படும். அதோகதி சந்திரமார்க்கமென்றும் பெயர்பெறும். தூமகதி யென்பது புகைமார்க்கம். அது யாக எக்ஞங்களைச்செய்து தமது சூட்சும சரீரத்தைப் புகை மயமாக்கிக் கொண்டிருக்கும் கர்மானுஷ்டாதாக்கள் செல்லும் மார்க்கமாம். இது துவிஜர்களுக்கே யுரியதாதலால் ஏனையர்க்கு அவ்வளவு சிறந்ததன்று. தேவயான மென்பது அர்ஜுனன், தசரதன் முதலிய அரசர்களும், ரிஷிகளும் தேவலோகஞ் சென்ற மார்க்கமாகும்; இம்மார்க்கமும் புண்ணியாத்மாக்கள் செல்லுதற் குரியதேயாம். ஊர்த்துவ மார்க்கமென்பது சூரியகிரண மார்க்கமாம். அதோகதியென்பது சந்திர கிரகணத்தைப்பற்றி நிற்கும் மார்க்கமாம். சூரியகிரணம் தன் சக்தியிற் சிக்கிய பொருள்களை மேலே யிழுக்கும் சக்தியை யுடையது. அது நீரை ஆவியாகச் செய்து மேலெ யிழுப்பதினாற் காணலாம். அதனாலது ஊர்த்துவகதி (மேல்நோக்கும் கதி) என்று கூறப்படும்.

(வரும்.)

சிவானந்த ஸாகர யோகீஸ்வரர்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்

(230-ம் பக்கத் தொடர்ச்சி.)

16. மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்.—நண்பர்களே! இவ்வுபதேச மொழியை நாம் சிறுவயதிலேயே வாசித்திருக்கிறோம்; பெரும்பாலார் வாசித்தே யிருப்பார்கள். ஆனால் ஆன்றோர் கூறிய மொழிகளின் கருத்தையும் அதனாலடையத்தக்க பயனையுமறிந்து அப்புத்திமதியைக் கடைப்பிடித் தொழுகுவோர் மிகச் சிலரே யென்று கருதலாம்.

மூத்தோர் என்று இங்கு கூறப்பட்டது யாரை? வயதில் அதிகமுடையோர்களையா வெனில், அதுமட்டு மல்ல; வயதில் முதிர்ந்தோரா யிருப்பதோடு அறிவு, கல்வி, கேள்விகளிலும் முதிர்ந்தோர்களா யிருப்போரையே அவ்வார்த்தை குறிக்கிறது. கல்விமட்டு மிருப்பது போதாது. உலக அநுபவமும் வேண்டும். வயதில் முதிர்ந்தோரிடம் உலக அநுபவம் இருக்கும்.

ஆனால் இக்காலத்தில் விசேஷமாகச் செல்வமும் செல்வாக்கு முடையோரையே உலகத்தோர் மதித்து மரியாதை செய்து, நியாயமாயினும் அநியாயமாயினும் மனமொப்பினும் ஒப்பாவிடினும், அவர்கள் கட்டளைப்



படிநடக்கச் சித்தமாக விருக்கின்றனர்: உண்மையான பெரியோர் வார்த்தைகளோ அலட்சியம் செய்யப்படுகின்றன. சாதாரணமாய் வயதில் முதிர்ந்தோர் வார்த்தைகளைக் கேட்டால் "ஏ! கிழவன் பேச்சு" என்று அலட்சியமாகக் கூறிவிடுகிறார்கள்.

ஆனால் நேயர்களே! கொஞ்சம் அறிவுடையோர் அவ்வாறு செய்யமாட்டார்கள். முதியோர் எதையும் அநுபவத்தால் அறிந்து கூறுகிறார்கள். வாலிபகாலத்தில் அவர்கள் பல தவறுகளைச் செய்து அவற்றால் நேர்ந்த இடையூறுகளை யுணர்ந்திருக்கும் அநுபவத்தால் அத்தகைய நெறிகளில் செல்ல வேண்டாமென்று நமக்குக் கூறுகிறார்கள். அவர்கள் சுய நலம் ஒன்றையும் எதிர்பாராமல் நமது நன்மையைக் கோரியே நமக்குப்புத்தி கூறுகிறார்கள். ஆதலின் அத்தகைய மூத்தோர் வார்த்தைகளை அமுதவாக்கியமாக மதித்து நாம் அதன்படி நடந்தொழுக வேண்டும்.

இக்காலத்தில் ஆங்கிலங் கற்றவர்களிற் சிலர் வெறுந்தமிழ் முதலிய தாய்ப்பாஷையை மட்டும் கற்றவர்கள் எவ்வளவு கல்வியாளரா யிருப்பினும் அவர்களை யலட்சியமாகவே மதிக்கிறார்கள். ஆங்கிலங் கற்பதுதான் கல்வி; மற்றபாஷை நூல்களைக் கற்பது கல்வியல்ல என்று இவர்கள் கருதுகிறார்கள். இவர்கள் கற்கும் அப்பாஷை நூல்களின் தன்மையும், இப்போதிருக்கும் கல்வி முறையுமே யிவர்களுக்கு இந்த மதியீனத்தை யுண்டாக்குகின்றன. அவை இவர்கள் புத்தியைக் கூர்மையாக்குகின்றனவே யன்றி அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறதில்லை. அந்தோ! இவர்களது அறியாமைக்கு மிக்க வருந்துகிறோம்.

பெரியோர்களிடம் எப்போதும் பக்தியோடு நடந்து வந்தால் இவ்வுலகில் நல்ல பெயரும் அவர்கள் ஆசீர்வாதமும் பெறுவோம். அவர்கள் புத்திமதிப்படி நடந்தால் இம்மை மறுமைப் பலன்களையடைவோம்.

17. பெற்றோர்:—நமது தாய் தந்தையர்கள் நம்மால் பெரியோராகக்கருதப் படவேண்டியவர்கள் என்பதோடு அவர்கள் நமக்குத் தெய்வம்போன்றவர்கள்; தாய் தந்தையர் நமக்குச் செய்த நன்மைகளை மீண்டு கூற இடமில்லை. மேலும் அவை நாம் அறிந்தவைகளே. அவர்கள் செய்ததற்கு நாம் ஈடுசெய்வது ஆகாதகாரியம். "திரிலோகங்களையும் ஜெயித்து அவர்கள் பாதங்களில் காணிக்கையாக வைப்பினும் அவர்கள் ஒரு நாள் நமக்குப் பட்டபாடுகளுக்கு ஈடாகாதென்று ஆன்றோர் அருளிப் போந்தனர்.

நாம் எத்தகைய துன்பங்களை யிழைத்தாலும் உடனே மறந்து விட்டு நமதுக்ஷேமத்தையே யெப்போதும் கோரக் கூடியவர்கள் தாய்தந்தையரை யன்றி உலகில் வேறு யாருமில்லை. அதிலும் தந்தையெனினும் நாம் நல்வழியில் நடக்காததற்கு ஒரு சமயம் நம்மேல் வெறுப்படையலாகும்; தாயோ ஒருபோதும் வெறுப்படையாள்.

அந்தோ! அத்தகைய தாய்தந்தையரையே யிக்காலத்தில் அனேகர் அலட்சியம் செய்கிறார்கள். அவர்கள் மனம் நோகச்செய்து பெரும்பாதகத்திற் காளாகிறார்கள். அவர்கள் மனதைச் சந்தோஷப் படுத்தாமல் ஒருவன் எத்தகைய தானதருமங்களைச் செய்தாலும், புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்தாலும் ஒருபயனுமில்லை. அவன் செய்யும் புண்ணியங்க ளனைத்தும் அடியில் துவாரங்களை யுடைய குடத்தில் பாலையூற்றிவிட்டு அது பசிவேளைக்குதவு மென்று கருதுவதுபோ லாகும். ஒருவன் தன் பெற்றோரிருந்ததைவிடத் தான் அதிக மேலான செல்வம் பொருந்திய நிலையை யடைந்தாலும், மேலான கல்வியைப் பெற்றிருந்தாலும், பெற்றோரை மட்டும் எள்ளளவும் அலட்சியம் செய்யாமல் சிறப்பாகவே நடத்தி அவர்கள் மனம் எள்ளளவு வருத்தமு மடையாவண்ணம் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

"தாய் தந்தையரிடம் பக்தியோடு நடந்துகொண்டு அவர்களைச் சந்தோஷிப்பிப்பவன் எனக்கு மிக்க அன்பனாகிறான்" என்று பகவான் கூறியிருக்கிறார். "தாய் தந்தையருக்கு வெறுப் புண்டாகும்படி நடந்து கொள்கிறவனை நானும் வெறுத்து விடுகிறேன்; என்னைப் பூசிக்காவிடினும் தாய்தந்தையர்களைப் பூசிக்கிறவன் எனக்குகந்தவ னாகிறான்" என்று குர் ஆனில் ஆண்டவன் கூறியிருக்கிறார். ஏசுக்கிருஸ்து "உன் பெற்றோரைக் கன்னியப்படுத்து" என்று கூறியிருக்கிறார்.

ஆகையால் நண்பர்களே! ஈசுவரனுக்குப் பயந்தேனும், உங்கள் தாய் தந்தையரை மரியாதையோடும் விசுவாசத்தோடும் நடத்துங்கள். அவர்கள் மனம் நோகாமல், அவர்களுக்கு உங்கள்மேல் சந்தோஷ முண்டாகும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள். (தொடரும்)

சீடன்.

---

## புதிதாய்ச் சந்தாவில் சேருவோருக்கு அறிவிப்பு.

இப்போது வி-பி. யனுப்பினால் ரிஜிஸ்டர் செலவோடு தபால் கூலியும் இரண்டத்தனை யாதலால், இனி வி-பி-யில் அனுப்பும்படி எழுதுவோர்க்கு ஆடிமாத சஞ்சிகை ஒன்றுமட்டுமே முதலில் அனுப்பப்படும். பணம் வந்த பிறகு மற்றவை யனுப்பப்படும். முதலில் முன் சஞ்சிகைகளைச் சேர்த்தனுப்பினால் வி-பி. வாபீஸாகிவரின் நமக்கு அதிக கஷ்டம் நேரிடும்.

முன்பணமனுப்பிப் பெற்றுக் கொண்டால் செலவு குறைவதோடு சென்ற சஞ்சிகைகள் பூராவும் ஆலசியமின்றி முதலிலேயே வந்து சேரும் என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

அச்சியற்றிய மேல்விலாசத்தில் பெயரின் முன்னிருக்கும் நம்பரே காயமான சந்தா நம்பர் என்பதையும், கையெழுத்தால் எழுதி வருமட்டும் காயமான நம்பரல்ல வென்றும் சந்தாதாரர் அறியவேண்டும்.

பத்திராதிபர்.

---

## மாதர் நெறிகள்.

(232-ம் பக்கத்தொடர்ச்சி)

18. **உலோபம்.**—பெரும்பாலும் மாதர்களிடம் இந்த உலோபம் என்ற இழிகுணம் இருப்பது யாவருமறிந்ததே; சாதாரணமாய் மாதர்கள் குடும்ப விவகாரங்களில் சிக்கனத்தோடு நடந்துகொள்ள வேண்டியது அவசியம். சிக்கனத்திற்கும், உலோப குணத்திற்கும் மிக்க வித்தியாசமிருக்கிறது.

**சிக்கனம்.**—என்பது நாம் செய்யவேண்டிய செலவுகளை யளவோடு செய்வதும், வீணான செலவுகளையும் அளவுமீறிய செலவுகளையும், வருமானத்திற்கு மிஞ்சிய செலவுகளையும் நிவர்த்தி செய்வதும், வீட்டிலுள்ள பண்டங்களை வீணாகச் சேதாரமடைய வொட்டாது எதிர் காலத்திற்கு வேண்டுமென்ற நோக்கத்தோடு சாக்கிரதையாகச் செலவழிப்பது மாகிய நடக்கையாகும்.

**உலோபகுணம்.**—என்பது நம்மிட முள்ள பொருளை யொருவருக்குக் கொடுக்கவும், தருமம் செய்யவும், அன்னியருக்கு உணவு முதலியவற்றை யளிக்கவும் மனம் பிடிக்காத குணமாம்.

சிக்கனம் நல்ல பெயரையும் நல்லபயனையும் அளிக்கத்தக்கது; உலோபம் கெட்டபெயரையும், கெட்ட பலனையும் அளிக்க வல்லது. உலோபகுணம் பாவத்தையும் உண்டாக்குகிறது. எவ்வாறெனில் சிலமாதர்கள் தங்கள் கணவர்கள் ஒருவனுக்குக் காசிக்குப்போக வழிச்செலவுக்குப் பணம் அளிக்கக்கருதினால், "அவனுக் கென்னகேடு; அவனுக்கேன் பத்துரூபாய்கொடுக்க வேண்டும். அந்தப் பத்துரூபாய்க்கு நான் கேட்டேனே அந்தப் பட்டுப் புடவையை வாங்கித்தாரும்" என்று அத்தருமத்தைத் தடுத்து விடுகிறார்கள். "ஒரு பரதேசி வந்திருக்கிறார், அவருக்கு நாளைக்கு நமது வீட்டில் அன்னமளிக்க எண்ணி யிருக்கிறேன்" என்று கணவன் கூறினால், "சரிசரி, சாமியார் என்று வருகிறவனுக் கெல்லாம் இது மடம்போ லிருக்கிறது. வருகிறவனுக் கெல்லாம் வடிச்சிக்கொட்ட இங்கு ஆள்காரியல்ல நான். என்னாலாகாது; யாரையாவது வைத்து ஆக்கிப்போடச் சொல்லு" என்று கடுகடுப்பாய்க் கூறிவிடுகிறார்கள். அந்தோ! இத்தகைய காரியங்கள் அம்மாதர்களுக்குப் பெரும் பாபத்தை விளைவிக்கத் தடையில்லை. ஈவோரைத் தடுப்பதே பாதகம். தம் கணவரைப் புண்ணியம் செய்யவொட்டாமலும் இவர்கள் தடுத்து விடுகிறார்கள்.

"கணவன் ஏன் மனைவியின் வார்த்தையை இலட்சியம் செய்யாமல் தான் கருதிய புண்ணியகிருத்தியங்களைச் செய்யலாகாது?" என்றகேள்வி யுண்டாகலாம். உலகில் பெரும்பாலோர் தங்கள் பிரியப்படி மனச்சாட்சிக்குச் சரியான காரியங்களைச் செய்வதை விட்டுக் கண்மூடித்தனமாய் மாதரின்

வார்த்தையையே வேதவாக்காய் மதித்துத் தங்கள் மனதிற் கொவ்வாவிடினும் அவர்கள் வாக்கின்படியே நடக்கிறார்கள் என்பது அனுபவம்.

பெண்வழி யொழுகுவதே பெரும்பாலார் இயற்கையாக விருக்கிறது. ஆயினும் இத்தகைய விஷயங்களி லெல்லாம், மாதரின் அபிப்பிராயத்தைச் சற்றும் எதிர்பாராமல், தமது புத்திக்குத் தோன்றுகிறபடியே நடக்கும் அறிவாளிகளும் அனேகர் உளர்; அத்தகைய கணவன் மனைவி இருவருக்கும் நல்லபெயரும் புண்ணியமும் கிடைக்கின்றன. உலோபகுணமுள்ளமாதர் அன்னியர் தமது குணத்தை யெப்படியும் உணர்ந்து தங்களை யிகழ்ந்தே கூறுகிறார்கள் என்பதை யுணர்வதில்லை. புகழும் புண்ணியமும் பெறவிரும்பும் மாதர் இத்தகைய குணத்தை யடியோடு விட்டொழிக்க வேண்டும்.

பந்தியில் பரிமாறும்போது தமது சுற்றத்தார்க்கு ஒரு விதமாகவும், அன்னியர்க் கொருவிதமாகவும் பங்கிடுகிற குணமும் சில மாதர்களிடம் காணலாம். இதுவும் ஒரு பெரும்பாதக நடக்கையேயாகும்.

19. ஒய்வுகாலம்.—குடும்ப வேலைகளைச் செய்தபின் பகற்காலங்களில் ஒய்வாயிருக்கும் போது அண்டை அயலிலுள்ள மாதர்களைக் கூட்டிக்கொண்டு ஊர்ச் சங்கதிகளைப் பேசுதல், தாயம், சொக்கட்டான் முதலிய ஆடுதல் ஆகிய இத்தகைய வழக்கம் அனேக மாதர்களிட முண்டு; இவர்கள் வீண்பேச்சுகளைப் பேசும்போது இவர்களருகில் உட்கார்ந்து இவர்கள் சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண் டிருக்கும் சிறு பெண்கள் வயது வருமுன்பே தங்கள் வயதிற்குத்தகாத அனேக விஷயங்களை யுணர்ந்து கொண்டு அளவு கடந்துபேசக் கற்றுக்கொண்டு சீக்கிரத்தில் "அப்பா! அந்தப்பெண்ணு, பெரியவாய்ப்பட்டி" என்று பெயரெடுக்கின்றனர்.

அந்தோ! இவர்களுக்குத் தகுதியான கல்வி கற்பித்து ஒய்வுகாலங்களில் தேவார திருவாசகம், ஆண்டவனது பிரபாவங்களையும், நல்லொழுக்கம், நீதிகள் முதலியவைகளையும் போதிக்கும் நூல்களை வாசித்தல், தம் மக்களுக்குத் தாய்ப்பாஷையைக் கற்பித்தல், தையல் முதலிய வேலைகளைக் கற்பித்தல், ஆகிய இத்தகையவேலைகளில் அக்காலங்களைச் செலவழிக்கும் படிச் செய்ய வேண்டும். (தொடரும்)

சீடன்.

---

## தபால் கொள்ளைக் காரர்கள்.

(159-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவ்விநாடியே இதுகாறும் நடந்த தபால் களவுகளனைத்தும் ஏககாலத்தில் ஆனந்தஸிங்கின் மனதில் பகல் வெளிச்சம்போல் தெரிந்து விட்டன. இத்தகைய சில்லரைக் களவுகள் அனேகம் நடந்திருக்கின்றன. நவீனபுரியி லிருந்து அமலாபுரம் வரையிலுள்ள தபால் ஆபீஸ்களில் ஒன்



றிற்றவிராமல் களவு நடந்திருக்கிறது. ஒவ்வொரு தபாலாபீஸிலும் நான்கு முறை ஐந்துமுறை களவுபோ யிருக்கிறது.

கடந்த ஒருவருடமாய்த் துரைத்தனத்தார் ஒவ்வொரு தபாலாபீஸிலுங் கெட்டிக்காரரான துப்பறிபவர்களை மிக்க ஜாக்கிரதையோடு காவல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களால் கூடிய சாமார்த்திய மெல்லாம் உபயோகப் படுத்திப்பார்த்தும் சற்றாவது உளவு கண்டு பிடிக்க முடியவில்லை. ஏனெனில் கடைசியில் ஆனந்தஸிங் இந்த எல்லாத்தபால் களவுகளையும் கண்டு பிடிக்கவேண்டு மென்று கடவுள் அமைப்பிருக்கிறது.

நமது அம்பலவாணன் இத்துஷ்டர்களுடைய விரோதத்தை யெவ்வாறோ சம்பாதித்துக் கொண்டான்; ஆகையால் தபால்பையை யவன் வீட்டில்வைத்து அவன்மேல் இந்த அபாண்டமான குற்றத்தைச் சுமத்தினார்களென்று ஆனந்தஸிங் தெரிந்து கொண்டான். இதுமட்டுமல்ல. இத் தபால் கொள்ளையடிப்போர் இவர்கள் மட்டுமல்ல. ஒரு கூட்டமே யிருக்கிறதென்றும், இந்த இரண்டு துஷ்டர்களும் அக்கூட்டத்தின் தலைவர்களென்றும், இவர்கள் குறிக்கும் காலத்தில் அக்கூட்டத்தார் இந்த விடத்தில் வந்து ஆயத்தமா யிருக்கிறார்கள் என்றும், இவர்கள் பணம் கிடைக்கக் கூடிய தபாற்பையை யெடுத்து எறிந்து விடுகிறார்களென்றும், யாவும், அவன் மனதில் தெளிவாய் ஒரு அய்யமுமின்றி விளங்கிவிட்டன.

இவையாவும் ஏககாலத்தில் மனதில் பட்டதே நாம் யாவும் கண்டு பிடித்துவிட்டோம் என்று அவன்மனதில் சந்தோஷ முண்டாயிற்று. அந்தோ! அச்சமயத்தில் தான் நாம் முன்கூறிய ஆபத்து நேர்ந்தது. தன் எதிரி யாரென்று அவனுக்குச் சரியாய்ப் புலப்படவில்லை. ஆனால் அவன் தன் கால்களைப் பிடித்துப் புரட்டிய மாதிரியால் தன்னை வண்டியின் மேற்பரப்பிலிருந்து புரட்டி வெளியில் தள்ளிவிடப் போகிறான் என்று தெரிந்து கொண்டான். ஆகையால் மிக்க சாமார்த்தியத்தோடு பக்குவமாய்த் திரும்பி, இரங்காதனுடைய இடுப்பைக் கெட்டியாய்ப் பற்றினான். இரண்டொரு நிமிடங்களில் மிக்க தந்திரமான மல்யுத்த சாமார்த்தியத்தால் ஆனந்தஸிங் தன் எதிரியை மல்லாக்கப் புரட்டி யழுத்திக் கொண்டான்.

இப்போது இவர்கள் இருவர் நிலைமையும் அபாயகாமானதே— சற்று தவறினால் இருவரும் வண்டிக்கப்புறம்போய் விழுந்து மடிவார்கள். ஆயினும் இருவரும் ஒருவரை யொருவர் தளாவிடாது பிடித்துக்கொண்டிருந்ததால், இருவரும் வண்டியைக் கடந்து செல்லாமல், வண்டிக்குள்ளேயே யிருக்கும் தாழ்வாரம் போன்ற விடத்தில் விழுந்தார்கள். அதில் தெய்வசங்கல்பத்தால் ஆனந்தஸிங் கீழே யகப்பட்டுக் கொண்டதால் சற்று பிரமித்து விட்டான். மேலே விழுந்த இரங்காதன் சற்றாவது அசுகமின்றித் தப்பித்துக் கொண்டான்.

இவர்கள் இருவரும் விழுந்த அதேநிமிடம் சாமிநாதன் அங்கு வந்தான். வண்டியின் மேல்பரப்பில் நடந்த சச்சரவு அவன் செவியில் விழுந்தது. இருவரும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண் டிருந்ததைக் கண்டதே இரங்கநாதனைச் சுலபமாய் விடுவித்து விட்டு, "என்ன சங்கதி? சச்சரவு நடந்ததோ?" என்றான்.

இரங்கநாதன்:—"ஆம் ஆபத்தான சண்டை; இவன் மேல் தட்டி லேறி வண்டிக்குள் பார்த்துக்கொண் டிருந்தான். இவன் மேலேறியதை நான் தற்செயலாய்க் கண்டேன். இவன் கெட்ட எண்ணத்தோடேயே மேலேறிப் பார்த்திருக்கிறான்" என்றான்.

**சாமிநாதன்:**—"இவன் யாராயிருக்கும்? ஒருபக்கம் பிடி; இவனை வண்டிக்குள் இழுத்துக் கொண்டு போவோம்" என்றான்.

அவ்வாறே யிருவரும் சேர்ந்து ஆனந்தலிங்கை வண்டிக்குள் கொண்டு போனார்கள்.

ஆனந்தலிங்கோ சாமிநாதன், இரங்கநாதனுக்குத் துணையாய் வந்ததைக் கண்டதே, இருவரோடு நாம் போராடமுடியாது. தந்திரம் செய்வதே உத்தமமென்று கருதி மூர்ச்சை யடைந்தவன் போல் பாசாங்குசெய்தான். அவர்கள் பேசிய வார்த்தைகளியாவும் அவன் கேட்டான்.

ஆனந்தலிங்கை யுள்ளே கொண்டுபோனதே தீபவெளிச்சத்தில் இருவரும் அவன் முகத்தைக் கண்டமாத்திரத்தில் கோவென்றலறிப் பின்னிடைந்தார்கள். பிறகு விழித்தகண் சிமிட்டாமல் சற்றுநேரம் பார்த்தும் சாமிநாதன் பிரமித்து விட்டான். இரங்கநாதன் மட்டும் மெதுவாய் "தபாலிலாகாத் துப்பறிபவன்" என்றான்.

சாமிநாதன் "செத்தவன் எப்படிப் பிழைத்து வந்துவிட்டான்?" என்றான்.

**இரங்:**—இவனுக்கு இரண்டு மூன்று உயிர்கள் இருக்கின்றனபோலும்.

**சாமி:**—அப்படித்தானிருக்கவேண்டும்; இன்றேல் அந்தச் சாலகத்திலிருந்து எப்படி வெளிவந்தான்?

அதன் பிறகு இரங்கநாதன் குனிந்து சற்றுநேரம் நன்றாய் உற்றுப் பார்த்து "ஆம் ஆம், அவனே; ஒரு சந்தேகமுமில்லை. இவன் மடிய வேண்டியதே; நாங்கள் சண்டையிட்டதை வேறுயாரேனும் கண்டார்களோ?" என்றான்.

**சாமி:**—இல்லை இல்லை; யாரும் பார்க்கவில்லை.

**இரங்:**—"மிக்க நல்லதாயிற்று; இந்தத்தாம் இவன் தப்பாமல் மடியவேண்டும். தெரிகிறதா சாமிநாதா," என்று தன் கண்களில் ஒருவிதப் பிரகாசத்தோடு கூறினான்.

**சாமி:**—ஆம் ஆம்.



**இரங்:**—"ஐந்து மைல்களுக்கப்பால் வழியில் ஒரு பெரும் பள்ளத்தின் மேல் வண்டி போகிறதல்லவா? அந்த இடம் வரும்போது எனக்குக் கூறு; அதில் தள்ளிவிடுகிறேன். நமது இரகசியம் அப்பாதாளத்தில் பத்திரமா யிருக்கும்" என்றான்.

இத்துஷ்டர் பேசிக்கொண்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் நமது ஆனந்தலிங்கின் செவிகளில் விழுந்தன. அவன் உளம் நடுங்கியது; ஆனால் கடவுளின் அமைப்பு அவ்வாறில்லை. அவனைத் தனியே விட்டுவிட்டு இரண்டொரு நிமிடங்கள் கழித்துப் பாதாளம் நெருங்கிய சமயம், அவனைத் தூக்கிக்கொண்டுபோக வந்தார்கள். அதற்குள் ஆனந்தலிங் மாயமாய்ப் போய் விட்டான்.

அதைக் கண்ட அத்துஷ்டக் கள்ளருடைய மனம் எம்மாதிரி யிருந்திருக்கு மென்பதை யிதை வாசிப்போரே அறிந்து கொள்ளலாகும். முன்பு அவன் சாமிநாதன் வீட்டில் வந்து பதுங்கியிருந்ததை யறிந்தபோதே அவன் தங்கள் குற்றத்தைக் கண்டறியவே வந்தான் என்று நடுக்கங்கொண்டு விட்டார்கள். இப்போதோ அவன் தங்கள் குற்றத்தைப் பிரத்தியட்சமாய்க் கண்டு விட்டான் என்று நினைக்கப் பூரணமான காரணமிருக்கிறது; ஏனெனில் சாமிநாதன் பையையெடுத்து வெளியி லெறியும்போது அவன் மேலிருந்து பார்த்துக்கொண் டிருந்தான், என்பது கள்ளர் இருவர்க்கும் புத்தியிற் பட்டு விட்டது.

இனி யவர்கள் தப்பவேண்டியதற்கு ஒரேவழிதா னிருக்கிறது. அதாவது தபாலாபீஸ் துப்பறிபவன் மடியவேண்டும்; வேறுவழியில்லை. விடியற்காலம் வண்டி மேலையூர் ஸ்டேஷன் சேர்ந்தது. அங்கு வேறொருமெயில் ஏஜென்ட்வந்து சாமிநாதனை விடுவித்துவிட அவனும் இரங்கநாதனும், வண்டியிலிருந்து இறங்கி விட்டார்கள். இரங்கநாதன் ஸ்டேஷனில் இறங்கியதும் மிக்க ஜாக்கிரதையோடு ஆனந்தலிங்கிற்காக எதிர்பார்த்திருந்தான். ஆனால் ஆனந்தலிங் அங்கு இறங்கவில்லை. கடைசியில் வண்டி புறப்பட்டுப் போய்விட்டது. இனி அவ்வண்டி எங்கும் நிற்காமல் நவீனபுரி போய்ச் சேர வேண்டியதே.

அப்படி யிருந்தும் ஆனந்தலிங்கினுடைய அதிகாரத்தால் பக்கத்திலுள்ள ஸ்டேஷனிலேயே வண்டி நிறுத்தப்பட்டு ஆனந்தலிங்கு இறங்கி விட்டான். பிறகு ஒருமணிக்குள் வந்த எதிர்வண்டியிலேறி அவன் மேலையூர் வந்து சேர்ந்தான்.

அங்கு வந்தவுடனே ஆனந்தலிங் ஒரு விநாடிகூட ஆலசியம் செய்யாமல் அவ்வூர் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் சென்று சாமிநாதன் வீட்டை இரவும் பகலும் ஒரு விநாடிதப்பாமல் பார்வையில் வைக்கும்படி ஏற்பாடு செய்து விட்டு அங்கிருந்து இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் ஆபீஸுக்குச் சென்றான்.

அவன் ஸ்டேஷன் மாஸ்டரை நோக்கி, “இங்கிருந்து அரசஞ்சாலைத் திருப்பம் வரையில் பாதை யெப்போது காலியாயிருக்கும்?” என்றான்.

ஸ்டேஷன் மாஸ்டர் வியப்படைந்து “மூன்று மணிக்குமேல் ஐந்து மணிவரையில். ஒரு வண்டி எதிர்ப்பக்கமிருந்து ஐந்து மணிக்கு இங்குவருகிறது” என்றான்.

ஆனந்தஸிங்:—அப்படியானால் அந்த விடம் இங்கிருந்து ஒருமணி ஓட்டத்திலிருக்கிறது.

ஸ்டேஷன் மாஸ்டர்:—ஆம்.

ஆனந்தஸிங்:—இங்கிருந்து ஒரு வண்டியும் ஒரு எஞ்சினும் அவ்விடத்திற்குப்போய் வர என்ன செலவு பிடிக்கும். (தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்.

**சிரங்கிற்கு மருந்து.**—சிரங்கிற்குக் கீழ்க்கண்ட மருந்தை உபயோகித்தால், வெகு சீக்கிரத்தில் குணமாகின்றதென்று ஓர் வைத்தியர் கூறுகிறார்.

தேங்காய் எண்ணெயை நெருப்பனலில் நன்றாய்க் காயவைத்து, அதில் கொஞ்சம் கருப்பு பிளாஸ்திரி மருந்தைப் போட்டால், அது உருகி எண்ணெயோடு சேர்ந்துவிடும். பிறகு அதை அடிக்கடி உபயோகித்து வந்தால், மூன்று நான்கு தினங்களுக்குள் சிரங்கு ஒழிந்துவிடும்.

**பழைய கார்க்குகளைப் புதிதாகச் செய்தல்.**—கார்க்குகள் பழையனவாகிவிட்டால், அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அதற்கு, அவற்றை அரைமணிநேரம் தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைக்கவேண்டும்.

**தூக்கம் வருவதற்கு.**—அநேகர் சரியானபடி தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் முகம் கை கால்களை ஜலத்தால் சுத்தம் செய்துகொண்டு, வெந்நீராவது பாலாவது குடித்துப் படுத்துக்கொண்டால், உடனே தூக்கம்வருமென்று சொல்லப்படுகிறது. (ஜ-ரி)

**இளவரசர் வருகை.**—நமது கருணை பொருந்திய சக்கிரவர்த்தியவர்களின் மூத்தபுத்திரராகிய இளவரசர் 1922ஆம் ஜனவரி மாதம் 13ஆம் தேதி காலை சென்னைத் துறை முகத்தில் வந்திறங்குவார். அவர் ஜனவரி மாதம் 17ஆம் தேதி வரையில் இங்கு தங்கியிருந்து 17ஆம் தேதி இரவு பெங்களூருக்குப் பிரயாணமாவார்.

**போகிப் பண்டிகை பொங்கற் பண்டிகைகளின் விவரம்.**—ஒரு வருஷத்தில் உத்தராயணமென்றும், தக்ஷிணாயனமென்றும் இரண்டு அயனமுண்டல்லவா? அவற்றுள் உத்தராயணமாவது சூரியன் வடபாதிக் கோளத்தைச் சார்ந்த மகரமுதல் மீனமீறாகிய ஆறு ராசிகளில் சஞ்சரிக்குங்காலம்; தக்ஷிணாயனமாவது தென்பாதிக் கோளத்தைச்சார்ந்த கர்க்கடக முதல் தனுசு



ஈறாகிய ஆறுராசிகளில் சஞ்சரிக்குங்காலம். அயனம்=சஞ்சாரம்; உத்தரம்=வடக்கு; தக்ஷிணம்=தெற்கு. நம்முடைய ஒருவருஷம் தேவதைகளுக்கு ஒருநாள்; ஆகையால், உத்தராயனம் பகலும், தக்ஷிணாயனம் இரவுமாகும். இராக்காலத்தின் கடைசிமுகூர்த்தம் பகற்காலத்துக்கு விடியற்காலமானது போல், சூரியன் தனுசில் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழிமாதம் உத்தராயனமாகிய பகலுக்கு விடியற்காலமாகின்றது; ஆனதனால், இந்தமாத முழுதும் விடியற் காலத்தில் நீராடிக் கடவுளைப் பூசித்துத் தோத்திரஞ் செய்வது விசேஷமென்று சாஸ்திரம் சொல்லியபடி, இத்தேசத்தில் தேவாலயங்களிலும், கிருகங்களிலும், பூசைகளும், உச்சவங்களும் நடந்துவரும். இந்தமாத முழுதும் விரதமிருந்தவர்களுக்கு இஷ்டம் நிறைவேறி யிருப்பதாகப் புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட விசேஷ மாதத்தின் கடைசியாய், இஷ்டசித்தி பெற்ற நாளாயிருப்பதனால், இந்த நாளுக்குப் போகி என்று பெயர் உண்டாயிற்று. போகத்திற்கு இடமான காலம் போகி. போக மென்பது சுகத்தை அனுபவித்தல்; அன்றைக்கு விடியற் காலத்தில் பெருந்தீக் கொளுத்திக் குளிர்காய்வதும், தப்பட்டைகளைக் கொட்டுவதும் இழிந்தவர்களுடைய வழக்கம். இது ஆதாரமற்றது. இந்த நாளில் ஆலயங்களில் சிறப்பான திருவிழா நடக்கும். மாளிகைகளிலும் உணவு வகைகள் பணியார வகைகளோடு இஷ்டரும் தாமும் விருந்து கொண்டாடுவார்கள்.

பொங்கற் பண்டிகை என்பது உத்தராயனத்தின் முதனாள். அன்றைக்குத்தான் சூரியன் வடபுறம் திரும்புகிறான். இத்தேசத்தில் இதற்கு முந்திய காலமெல்லாம் விளைவுகாலமா யிருந்து, இக்காலமே தானியங்களை அறுத்துச் சேர்க்கிற காலமா யிருப்பதனால் சூரியன் முகாந்தரமாய் விளைவுக்கு வேண்டிய மழை முதலானதைப் பெய்வித்து க்ஷேமத்தை உண்டாக்கின கடவுளுக்கு உபசாரமாய் முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பாலும் வெல்லமும் சேர்த்துச் சமைத்துப் பழ முதலிய சிறப்போடு சூரியனுக்கு அல்லது சூரியமண்டலத்தில் எழுந்தருளி யிருக்கிற கடவுளுக்குப் படைத்துப் பந்துக்கள் முதலானோரோடு பெருநாள் கொண்டாடுவார்கள். ஞானிகளோ, இந்நாளை நினைத்துப் பரமாத்துமாவைத் தியானிப்பார்கள். இதற்கு முன்பே வீடுகளைப் பழுதுபார்த்துச் செப்பஞ் செய்து வைப்பார்கள். தை மாதம் இரண்டாந் தேதியாகிய இப் பொங்கலின் மறுநாள் உழவு முதலான சகலத்துக்கும் இந்நாட்டாருக்கு மாடுகளே விசேஷ உதவி யானதைப்பற்றி, அந்த மாடுகள் விர்த்தியடைய வேண்டுமென்னுங் கோரிக்கையினால் பகலின் மேல் பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்துத் துதித்து மாடுகளை அலங்கரித்துக் கீத வாத்தியங்களோடு ஊர்கோலமாக வருவார்கள். பொங்கல் இடுவதினால் இந்நாட்களுக்குப் பொங்கல் என்று பெயர் வந்தது. பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கலிடு முதனாளைப் பெரும் பொங்கலென்றும், மாடுகளின் வளத்துக்காகப் பொங்கலிடு மறுநாளை மாட்டுப் பொங்கலென்றும் சொல்வார்கள். செல்வமுள்ளவர்கள் மருமகன் முதலானோர்க்கும், சிநேகிதர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் கோடி வஸ்திரங்கள் கொடுப்பார்கள். இந்த இரண்டாநாளிரவிலும் அடுத்த நாட்களிலும் ஒருவரை யொருவர் கண்டு, “பால் பொங்கிற்றா” என்று க்ஷேமம் விசாரித்து, தாம்பூல முதலிய உபசாரங்களைப் பெறுவார்கள். இவ்வழக்கம் பெரும்பாலும் பிராமணர்களல்லாதாரிடத்திலேயே உண்டு. இது ஒரு முக்கியநாள்.—க. வ.

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துன்மதிஸ்ரீ மாசிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1922ஸ்ரீ பிப்ரவரிமீ மார்ச்சுமீ

| மாசிமீ | பிப்ரவரி | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | ஞா | ○0-25 பிர 50-58 | ஆயி-0-35 மக-53-2 | சித்0-35ம | கும்பரவி நா 2-33 [கப்பட்டது |
| 2 | 13 | திங் | து41-50 | பூர-45-42 | சித்-60 | பிரயாணத்திற்கு விலக் |
| 8 | 14 | செ | திரி33-35 | உத்-39-15 | அ39-15சி | விதைவிதைக்க |
| 4 | 15 | புத | சது 26-0 | அஸ்-33-57 | ம33-57சி | மரணயோகம் |
| 5 | 16 | வியா | பஞ்20-12 | சித்-30-7 | சி30-7அ | விவாகம்செய்ய |
| 6 | 17 | வெ | சஷ்16-52 | சுவா-27-57 | சித்-60 | வித்தியாரம்பம் செய்ய |
| 7 | 18 | சனி | சப்13-45 | விசா-27-37 | சித்-60 | |
| 8 | 19 | ஞா | அ13-10 | அனு-28-57 | மர-60 | |
| 9 | 20 | திங் | நவ13-40 | கேட்-32-0 | சித்-60 | |
| 10 | 21 | செ | தச16-57 | மூல-36-25 | அ36-25சி | |
| 11 | 22 | புத | ஏக20-50 | பூரா-41-57 | அமி60 | |
| 12 | 23 | வியா | துவ25-45 | உத்-48-20 | சித்-60 | |
| 18 | 24 | வெ | திர31-35 | திரு-55-28 | ம55-28சி | |
| 14 | 25 | சனி | சது37-53 | அவி-60-0 | சித்-60 | |
| 15 | 26 | ஞா | ● 44-27 | அவி-3-5 | மர3-5சித் | |
| 16 | 27 | திங் | பிர51-5 | சத-10-50 | சித்-60 | |
| 17 | 28 | செ | து57-32 | பூரட்-18-35 | ம18-35அ | சரிநாள் |
| 18 | 1 | புத | திரி58-5 | உத்,26-5 | சித்26-5 ம | புண்ய தினம் |
| 19 | 2 | வியா | சது60-0 | ரேவ-32-55 | சி33-55அ | சாந்தசதுர்த்தி |
| 20 | 3 | வெ | சது8-47 | அசு-38-55 | அ38-55சி | நாமகரணம் செய்ய |
| 21 | 4 | சனி | பஞ்12-45 | பர-43-37 | சி43-37அ | சஷ்டிவிரதம் |
| 22 | 5 | ஞா | சஷ்15-28 | கிரு-46-47 | சித்-60 | கிருத்திகை |
| 28 | 6 | திங் | சப்-1615 | ரோ-48-10 | அ48-10சி | வித்தியாப்பியாசம் |
| 24 | 7 | செ | அ15-10 | மிரு-47-42 | சி-47-42ம | பிரயாணம்விலக்க |
| 25 | 8 | புத | நவ12-5 | திரு-45-20 | சித்-60 | மந்திரம்ஜெபிக்க |
| 26 | 9 | வியா | தச7-15 | புன-41-22 | அ41-22சி | நாமகரணம் செய்ய |
| 27 | 10 | வெ | ஏகா0-48 து51-5 | பூச-35-53 | மர-60 | நரசிம்ம துவாதசி |
| 28 | 11 | சனி | திர44-30 | ஆயி-29-22 | ம29-22அ | சனிபிரதோஷம் |
| 29 | 12 | ஞா | சது35-20 | மக-22-12 | ம22-12சி | ஓலிபண்டிகை,மாசிமகம் |
| 30 | 13 | திங் | ○25-55 | பூர-14-45 | சித்-60 | மீனரவி நா 55-23 |

1922ஸ்ரீ மார்ச்சுமீ

| | | | |
|---|---|---|---|
| சே | | | |
| பு-சு கு | 10உ மகர வக்புத 24உ மீ-சுக் 28உ கு-புத | | |
| | செ | | ரா-ச குரு |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

23 MAR 1922

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதிஸ்ரீ மாசிமீ கஉ
1922ஸ்ரீ பிப்ரவரிமீ 12உ { பகுதி 8

## கடவுள் வணக்கம்.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணு
மிவ்வுலக மெவ்வுல கமோ
என்றெண்ணம் வருவிக்கு மாதர்சிற் றின்பமோ
வென்னின்மக மேரு வாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கி நாளும்
துற்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்தர ஜாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
யம்மம்ம வெல்ல லெளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று நிற்குமீ
தருளோ வலாது மருளோ
சமயநெறி காணாத சாக்ஷிநீ சூக்ஷமமாத்
தமியனேற் குளவு புகலாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

சொல்லற் கரிய பரம்பொருளே சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலிலெனை விட்டெங் கொளித்தா யாகெட்டேன்
கல்லிற் பசிய நாருரித்துக் கடுகிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய வந்தகனுர்க் காளாக் கினையோ வறியேனே.

அறிவுக் கறிவு தாரகமென் றறிந்தே யறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய் நின்ற நிலையுந் தெரியாது
குறியற் றகண்டா ரீதமயக் கோதி லமுதே நினைக்குறுகிப்
பிறிவற் றிருக்க வேண்டாவோ பேயேற் கினிநீ பேசாயே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ மாசி௴ கௌ

## மதபக்தி.

பக்தியில் கடவுள் பக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, தேசபக்தி, இராஜபக்தி எனப் பலவிதமுண்டு. இவற்றில் கடவுள் பக்தியே யாவற்றினும் சிறந்தது. மதபக்தியில்லை யெனின் கடவுள் பக்தி யில்லையாகும்; மதம் என்றால் அறிவு என்றும் ஒரு அர்த்தம் உண்டு. மதி என்பதற்கும் அறிவு என்று அர்த்தமுண்டு; "அறிவை யறிவது பொருளாமே" என்று அருணகிரிநாதர் கூறியுளார். ஈஸ்வரன் அறிவுக்கறிவா யிருப்பவன் என்று வேதங் கூறுவதால் ஈசுவரனை யறிவதே மதம் என்றாகிறது. மதம் என்றால் சேர்த்தல் என்று பொருள் என்றும், ஆதலால் ஆத்மாவைப் பரமாத்மாவோடு சேர்ப்பதற்கே மதம் என்று பெயர் எனவும் வேறொரு அர்த்தமும் கூறப்படுகிறது. எவ்வாற்றானும் ஈசுவரனை யறியும் மார்க்கத்திற்கே மதம் என்பது பொருள் என்று விளங்குகிறது. இதனால் மார்க்கம் என்றாலும் மதம் என்றே பொருள் படுகின்றது.

இவ்வுலகுக் கெல்லாம் கடவுள் ஒருவரே யென்பதும், ஆயினும் அவரையறிய ஏற்பட்டிருக்கும் மதங்கள் என்ற மார்க்கங்கள் பல வென்பதும் யாவருமுணர்ந்த விஷயங்களே. எல்லா மதங்களாலும் பாதிக்கப் படுபவர் அந்த ஒரு கடவுளே; அந்தந்த மதங்களைத் தாபித்த மகான்களும் அந்த ஒருகடவுளின் அருள்பெற்றவர்களே. ஆயினும், அவர்கள் ஏற்படுத்திய மார்க்கங்களின் கொள்கைகளில் பேதங்க ளிருக்கின்றன. ஆனால் எல்லா மதங்களின் மூலநோக்கமும் கருத்தும் மட்டும் ஒன்றே; மற்றபடி வெளி விஷயங்களில் வேறுபாடுக ளிருப்பானேனெனில், காலத்தையும் இடத்தையும் கருதியே அந்த வேறுபாடுகள் உண்டாயின. சில கொள்கைகள் நேர்மாறாகத் தோன்றுவதும் அதனாலேயே; அதற்கு ஒரேயொரு திருட்டாந்தம் மட்டும் கூறுகிறோம்.

மேல் நாடுகளிலுண்டான கிருஸ்துமதம், இஸ்லாம் மதங்களில் விக்கிரகாராதனை கண்டிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் அங்கு நடந்துகொண்டிருந்தது விக்கிரகாராதனை யன்று. அது பதுமையாராதனையாகும். அக்காலத்தில் அங்கிருந்த ஜனங்கள் கடவுள் எங்கும் நிறைந்த சர்வவியாபியாகிய ஏகன் என்ற உணர்ச்சியின்றி அவரவர்கள் பிரியப்படி பதுமைகளைச் செய்து அவைகளே கடவுளென மதித்து வந்தார்கள். ஆகையால் எங்கும் நிறைந்த ஒரேகடவுள் இருக்கிறார்; இவைகள் கடவுளல்ல என்ற உணர்வை யவர்களுக்குண்டாக்குவதற்காக அப்பதுமை யாராதனையை யடியோடொழிக்க வேண்டியது அவசியமாக விருந்தது. கடவுளின் சொரூபமே யின்னதென்று அறியாமல் சடப்பொருளையே கடவுளென எண்ணியிருந்தவர்களுக்கு, கடவுள் அழியாத சித்சொரூபம், அகண்டம் என்ற உணர்வை யுண்டாக்க வேண்டிய தற்காகக் கண்டமான எதையும் உருவமுள்ளதையும் கடவுளெனக் கருதுவதே பாபம் என்று கூறினால்தான் அவர்கள் அதை யடியோடு விட்டு விடுவார்கள். அதற்காகவே அவர்கள் அவ்வாறு கூறினார்கள்.

நமது நாட்டிலே அநாதிகாலந் தொடங்கியே, ஆரம்பத்திலேயே கடவுளின் இலக்கணம் பூரணமாகக் கூறப்பட் டிருக்கிறது. அதாவது கடவுள் ஏகம், நித்தியம், நிர்ம்மலம், சச்சிதானந்தம், சர்வவியாபி, அந்தரியாமி என்றும், உருவம், அருவம், உருவாருவம் ஆகிய யாவற்றையும் கடந்தவரென்றும், மனவாக்குக் கெட்டாதவரென்றும் தெளிவாய்க் கூறப்பட் டிருக்கிறது.

அத்தகைய கடவுளைத் தியானிப்பதும், பாவனை செய்வதும், அவரிடம் மனதை நிலைக்கச்செய்வதும் எல்லாராலும் ஆகக்கூடிய கரியமல்ல; மனம் நாமரூபத்திலேயே பழகியுள்ள தாதலால் ஆரம்பத்தில் கடவுளை உருவமுடையதாகப் பாவித்து அவரிடம் மனதை நிலைக்கச் செய்யப்பழகினால் அன்பு முதிர்ந்தபின், மனம் அருவத்தில் நிலைக்கும் என்பதற்காக, சொரூப ஆராதனை விதிக்கப்பட்டது.

அவ்வாறு கூறப்படும் திரிமூர்த்திகள் முதலியவர்களின் உருவம், நிறம், அங்க இலட்சணங்கள், சின்னங்கள் யாவும் அகண்ட பரிபூரண சொரூபமாகிய கடவுளின் இலட்சணங்களைக் குறிப்பிடும் வண்ணம் அமைக்கப்பட் டிருக்கின்றன. மந்திரத்தால் கடவுளின் அருள் விலாசம் விக்கிரகங்களில் உண்டாகச்செய்து அவ் விக்கிரகங்களை பூசிக்கப் படுகின்றன. அவையும் அகண்டமாகிய கடவுளின்

நினைவுமனதில் நிலைப்பதற்கு ஓர் குறியாகக் கருதப் பட்டவையேயாகும். அவற்றை முன்னிலையாக வைத்துக்கொண்டு அகண்ட பரிபூரண சொரூபியாகிய ஆண்டவனே யென்று தியானிக்கிறோமேயன்றி அந்த விக்கிரகமே கடவுள், வேறு கடவுளில்லையென்று நாம் கருதுவதில்லை. 'எங்கும் நிறைந்தகடவுள் அவற்றிலும் விளங்குகிறார்' என்ற ஒருவரும் மறுக்கொணா உண்மையை நம்புகிறோம். இது ஒரு படியேயன்றி முடிவான நிலையல்ல. ஞானநிலையாகிய மேல்படியில் செல்லக்கூடிய பக்குவம் வந்தவர்கள் இந்த உருவ உபாசனையை விட்டுவிடவேண்டு மென்றே திட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் நமது மதத்தில் விக்கிரகாராதனை விலக்கப்படவில்லை. அதற்குமாறாக அது அவசியமானதாகவும் மிக்க பயனளிக்கத் தக்கதாகவும், மந்த மதியினர்க்கும் ஈஸ்வரபக்தியையுண்டாக்கி அவர்களைப் படிப்படியாய் மேலேற்றக் கூடியதாகவும் இருக்கிறது. இவ்வாறு கடவுள் ஒருவராயினும் மதங்கள் பலவாகவிருப்பது இயற்கையே, உலக சிருஷ்டியின் இயற்கையே. வேறுபாடன்றி ஒரேவிதமல்ல; இவ்வாறு பலவேறு சமயங்கள் உலகிலிருந்துகொண்டேதா னிருக்கும். உலகம் முழுமையும் ஒரேமதமாகவேண்டும் என்று கருதுவோர் ஒருபோதும் ஆகாத காரியத்தைச் சிந்திப்போராகவும், உண்மை யறியாதோ ராகவுமே கருதப்படுவார்கள்.

உலகில் பலமதங்கள் இருந்தும் இவற்றில் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகளும், துவேஷங்களும், சச்சரவுகளும் இல்லாமலில்லை. அப்படியிருக்க உலகமுழுதும் ஒரே மதமாவது நடக்கக்கூடிய காரியமோ? ஒருபோது மில்லை.

இவ்வாறிருப்பதால் அவனவன் எச்சமையத்தில் பிறந்தானோ அச்சமயத்தின் இயற்கையை விடாமல், அதில் நம்பிக்கையும் பக்தியும் வைத்து அதில் கூறியபடி கடவுள் பக்தியோடு நடந்துகொண்டால் முடிவான அழியாநிலைக்குச் செல்லும் பாதையில் முன்னேறுவான் என்பதில் ஐயமில்லை. ஆனால் பிறமதத்தை நிந்தித்தல்கூடாது. எல்லாமதங்களால் கொண்டாடப் படுவதும் ஒரே கடவுளாதலால் எம்மதக்கடவுளைத் தூஷித்தாலும் தன் சொந்தமதத்தில் கூறப்பட்ட கடவுளைத் தூஷித்தபலனையே யடைவான். குமரகுருபரர் முதலிய நமது பூர்வீக மகான்கள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலிய எல்லா ஆன்றோர்களின் கொள்கையும் இதுவேயாகும்.



ஒருவன் தன் மதத்தில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து அதன் க்ஷேமத்தைக்கருதி ஒழுகுவதே மதபக்தி என்பதாம். இது ஒன்றினால்தான் மனிதன் மற்ற எல்லாப்பிராணிகளிலும் சிரேஷ்டமானவனாகிறான். மதபக்தி யில்லாதவன் மனிதப் பதவிக்கு அருகனாகமாட்டான்.

இனி நமது மதத்தைப் பற்றியும், நமது மதபக்தியைப் பற்றியும் சிந்திப்போம்:

நமது மதம் கடல்போன்றது. கடல் எல்லா நதிகளையும் தன்னுள் ஏற்று அடக்கிக் கொள்வது போல், நமதுமதம் மற்றெல்லா மதங்களையும் ஏற்றுக்கொள்ளும். எல்லாமதங்களின் கருத்துகளும் இதில் அடங்கி யிருக்கக் காணலாம்.

கடவுள், ஆன்மா, மோட்சம் என்பவைகளின் இலட்சணங்களைப்பற்றியும், ஞானத்தை யடையும் மார்க்கத்தைப் பற்றியும், நமது மதநூல்களில் பூரணமாகக் கூறப்பட்டிருக்கிறது; அதாவது, இவற்றைப்பற்றி அதிகமாக இன்னும் ஒரு வார்த்தையேனும்கூற இடமில்லை. அதோடு கூறப்பட்டவையாவும் மகான்களாகிய ரிஷிகள் தங்கள் ஞானநேத்திரத்தால் பிரத்தியட்ச அனுபவமாகக்கண்டபின் கூறப்பட்டவை. ஆத்மா, கடவுள், என்ற பதங்கள் எல்லா மதநூல்களிலுமுண்டு; யாவரும் அவற்றைக் கூறுகிறார்கள்; அவையுண்டென்றும் நம்புகிறார்கள். அப்படியுண்டெனில் அவற்றைப் பிரத்தியட்சமாக அறியவேண்டு மன்றோ. இன்றேல் நம்பி என்னபயன்?

கற்கண்டு இருக்கிற தென்று நம்பி, வாயால் ‘‘கற்கண்டு கற்கண்டு’’ என்று கூறுவதால் மட்டுமே கற்கண்டின் சுவையை யனுபவித்ததாகுமே? கற்கண்டிருக்கு மிடமறிந்து அதை யெடுத்து வாயிற் போட்டுக் கொண்டாலன்றோ ருசிதெரியும். அதுபோல ஆன்மாவையும் பரமான்மாவையு மறிந்தாலன்றோ மோட்சம் சித்திக்கும். அவை யிரண்டையும் நமது முன்னோர் பிரத்தியட்சமாகக் கண்டே அவற்றை யறியும் மார்க்கங்களைக் கூறியிருக்கிறார்கள். இத்தேகத்தி லிருக்கும்போதே மோக்ஷ நிலையைக் காணத்தக்க மார்க்கங்களை யருளி யிருக்கிறார்கள். மனிதனுக்குள் மறைந்திருக்கும் அளவுகடந்த ஆன்மசக்தியை யவர்கள் அறிந்து அதனால் அபூர்வ காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அம்மார்க்கங்களை யெல்லாம் நமக்குக் கூறியிருக்கிறார்கள். ஆன்மா அழிவதில்லை, ஆன்மா நித்தியானந்தன் என்ற உண்மையைப் பிரத்தியக்ஷத்தி லறிந்து

மரணபயமற்று அந்த அழியா ஆனந்தத்தை யனுபவிக்கும் மார்கங்களை நமக்குக் காட்டி யிருக்கிறார்கள்.

அந்தோ ! இத்தகைய அரியமதத்தைப் பெற்றிருந்தும் நாம் அதில் எத்தகைய பக்தி வைத்திருக்கிறோம் ? அநாதிகாலந் தொடங்கி மதமே நமக்கு யாவற்றிலும் பிரதானம். நமது இலௌகிக நடக்கைகள் யாவும் மதசம்பந்த முடையவைகளே. எந்த விஷயத்தில்பிரவேசிப்ப தாயினும் அதில் மதத்தின் மணம்வீசும். நமதுநாடு தெய்வசிந்தனை குடிகொண்டது. ஞானத்தின் பிறப்பிடமானது. ஒரு சிறுபிள்ளையைப் பள்ளியில் விட்டு அது முதல் முதல் 'அ' என்ற அக்ஷரத்தைக் கற்குமுன்பே, "ஹரி ஓம்" என்று கூறி, குருவின் பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கொள்ளும் முறைமையே நம்முன்னோர் ஏற்படுத்திய மார்க்கம்.

இதனால் ஈசுவர சிந்தனையும் குருபக்தியுமே முதலில் கற்பிக்கப்படுகிறது. பிறகுதான் பாஷைக் கல்வி. அந்தோ ! இப்போதோ, கழுதையின் உருவத்தை முதலில் காட்டி இதென்ன வென்று உபாத்தியாயர் சிறுவனைக்கேட்டு அவன் முன்னே 'கழுதை' என்று கூறினால் பிறகு "இது க" என்று கற்பிக்கப் படுகிறது. அந்தோ ! என்ன தான் கலிகால மெனினும் நம்மவர்க்கு இத்தகைய மதிமயக்கம்கூட உண்டாகுமோ. நமது நாட்டில், அதிலும் நம்மக்களுக்கு, மதபக்தியும் தெய்வ சிந்தனையும் வரவரக் குறைந்துகொண்டே போகிறது. தெய்வ சிந்தனை குறைந்தால் நாம் மற்ற விஷயங்களில் எவ்வளவு முயற்சி செய்தாலும், நம் தாய்நாடு ஓர் போதும் முன்னேற்றமடையாது. உலகில் பல மதஸ்தர்களும் அவரவர்கள் மதத்தை விர்த்திசெய்யச் சதா முயன்ற வண்ணமாக விருக்கிறார்கள்.

நமது நாட்டிலோ மதத்தைக் காப்பாற்று வதிலேயே சிரத்தையின்றி யிருக்கிறோம். அதிலும் அந்நிய மதத்தினர் நம்மவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுக்கத் தந்திரமான பெருமுயற்சிகள் செய்யும் போது, நாம் இவ்வாறு அசிரத்தையாக விருப்பது மதத்துரோகமாக வல்லவோமுடியும். மதத்தைக் காப்பாற்றுவதற்கும் பரவச்செய்வதற்கு மென்றுமே பூர்வத்தில் மடாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. அந்தோ! அத்தகைய மடாதிபதிகளே இவ்விஷயத்தில் சற்றும் கவலையின்றி யிருந்தால் என்னென் றுரைப்பது. அந்தோ ! நம்மவர்களில் பெரும்பாலர் புறச்சமயத்திற்குப் பலிகொடுக்கப்பட்டால் பிறகு இம் மடாலயங்களின் கதியென்னாகும் என்பதை இவர்கள் சிந்திக்கவில்லை போலும். சீடர்களின்றேல் குரு ஏது ? குடிகளில்லாவிட்டால் அரசன் ஏது ?



பெற்றோர்களேனும் தம் மக்களுக்கு மதக்கல்வி அவசியம் என்பதை யினியாவ துணர்ந்து, தம் மக்களுக்கு மதக்கல்விபயிற்றுவிக்கத்தக்க முயற்சி யெடுத்துக் கொள்ளும் வண்ணம் எல்லாம் வல்ல கருணாநிதியாகிய பரம்பொருள் அருள் புரியப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

---

## வீட்டு நெறி.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்றுவி டற்கு"

பொய்யா மொழியாராகிய நாயனாருளிய மேற்படி குறட்பா பெரும் பாலோரறிந்ததே. இது மிகச் சிறியவாக்கிய மெனினும், இதில் அம்மகான் அடக்கியுள்ள பொருள் சொல்லொணாப் பெருமையுடையது. நாயனார் குறளில் முப்பாலே கூறினார் என்று கூறப்படினும், இதில் மோக்ஷமார்க்கத்தைச் சுருக்கியருளினா ரெனலாம். அதை நம் சிற்றறிவிற் கெட்டிய அளவு சுருக்கமாய்க் கூறுவாம்.

"பற்றற்றான் பற்றினைப் பற்றுக, அப்பற்றைப் பற்று விடற்குப் பற்றுக" என்பது அநுவயம்.

**பற்றற்றான் பற்றினை** :—எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை.

**பற்றுக**:—இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க.

**அப்பற்றை**:—(அவ்வாறு மனத்துட் கொண்ட) அதன்க ணுபாயத்தை.

**பற்றுக**:—மனத்தாற் செய்க.

**பற்று விடற்கு**:—அநாதியாய் வந்த உடம்பிற் பற்றினை விடுதற்கு.

அதாவது.—"எல்லா வஸ்துக்களையும் பற்றி நின்றும் ஒரு பற்றுமில்லாத இறைவனருளிய வீட்டு நெறியை இதுவே நன்னெறியென்று மனத்துட்கொண்டு, அதன்கண் கூறியுள்ள தியானாதி யுபாயங்களை மனத்தால் செய்க—இப்படிச் செய்வது அநாதியாக உன்னைப்பற்றியுள்ள உடம்பின் பற்று விடுதற்காக." என்று பரிமேலழகர் உரையருளியுள்ளார். இக்குறள் நமது பற்றை யொழித்து நாம் வீடடையும் நெறியைக் கூறுகிறது.

### இதனால் நாம் அறியக்கிடப்பது.

பகவான் ஆகாயம்போல் எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறம்புமாக நிறைந்து நின்றாலும் எதிலும் தாக்கற்றவர். நாம் நம்மைப்பற்றியுள்ள பற்

றுக்க வொழிவதற்காக அத்தகைய இறைவனைப் பற்றிக்கொள்ளவேண்டும். இதற்கு மர்க்கட நியாயம் என்று கூறுவர். மர்க்கடம் என்றால் வானரம். வானரம் தன் தாயைப்பற்றிக்கொண்டு தாய் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அந்தரத்தில் தாண்டும் போதும், மரத்தி லேறும்போதும், பாய்ந் தோடும்போதும் விடாமல் பற்றிக்கொண்டே யிருக்கும். நாம் பகவானை யவ்வாறு பற்றுவது எவ்விதம் ? பகவான் பக்திவலையிற் படுவோன் என்று மணிவாசகப் பெருமானுதிய பல ஆன்றோர் கூறியுளர். ஆதலின் பக்தியாலேயே அவனைப்பற்ற வேண்டும். ஒரு பொருளை நாம் பற்றிக்கொண்டோ மென்றால் அப்பொருளும் நாமும் இரண்டு பொருள்களாகப் பிரியப்பட்டு நிற்காமல் ஏகமாய் ஒரே பொருளாக ஆகிவிட்டிருக்கவேண்டும். வேறு வேறாயிருக்கிற வரையில் நாம் ஆண்டவனைப் பற்றியவர்களல்ல. அவரைப் பற்றுவதற்கு முன்னே அவர் இருக்குமிடம் தெரியவேண்டும். ஆண்டவன் எங்கிருக்கிறார் எனின், அவர் எங்கும் சர்வவியாபியாயுள்ளவர். ஆகையால் நமது உள்ளத்திலேயே யுளர். அவரையன்றி நாமில்லை. நாம் கடவுள் நமக்கன்னியம் என்று கருதும்வரையில் கடவுள் நமக்கு வெகுதூரத்தி லிருக்கிறார். ஆகையால் அவரையெங்கும் தேடிச்செல்ல வேண்டிய கஷ்டமில்லை. அவ்வாறு உள்ளத்திலுள்ளவரை யெவ்வாறு பற்றலாம் ?

முதலாவது அவரை யறிந்தாலன்றிப் பற்ற முடியாது. ஏனெனில் அவர் சடப்பொருளல்ல, சித்சொரூபி யாதலின் அறிவாலேயே யவரைப் பற்றவேண்டும். இதனால் அவரை யறிவதே பற்றுதலாகும். எப்படி ஆண்டவனையறிவது ? ஆண்டவனை யுள்ளபடி யறியவேண்டு மாயின், ஆரம்பத்தில் எந்தவழி சென்றாலும், கடைசியில் ஒருவழியிருக்கிறது. அவ்வழியாய் அவரை எவரும், யாராயினும் சரி, அறியலாகும். அதாவது தன்னை யறிந்தால் தலைவனை யறியலாம். தன்னை யறிந்தவனுக்கு ஆண்டவன் பற்றுதவிர வேறு பற்றிராது. ஏனெனின் தன் உண்மையை யறிந்ததும் தேகமுதல் நாமரூபத் தோற்றமாகிய யாவும் அநார்த சடதுக்க மென்றும் யாவும், பரமானசொரூபமே யென்றும் தெரிந்துவிட, ஆன்மா பரமான்மாவோடு ஐக்கியத்தை யடையும்.

> " தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
> பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே "

என்று தாயுமானவர் கூறியருளினர்.

தன்னையறிய மனம் ஒடுங்கவேண்டும்; சகுண உபாசனையால் மனதை யடக்கவேண்டும்.

இவ்வாறு ஆண்டவனை யேன்பற்ற வேண்டு மெனின், நமது அநாதிப் பற்று ஒழிவதற்காக. நமக்கென்ன பற்றிருக்கிறது ? நமக்குள்ளபற்று அகப்பற்று புறப்பற்று என்று இருவிதமுண்டு. " நான், எனது " என்றும் அவற்றைக் கூறலாம்.



1. அகப்பற்று:—நான் என்னும் ஆகங்காரமே அகப்பற்று; அது தேகத்தையே தான் என்றபிமானிப்பது.

2. புறப்பற்று:—தேகத்திற்குப் புறம்பாகிய தாரம், புத்திரர், மனை, பொன், மாடு முதலியவைகள் என்னுடையவை என்று அபிமானித்தல்.

இவற்றில் அகப்பற்றே புறப்பற்றிற்குக் காரணம். அகப்பற்று அஞ்ஞானத்தாலுண்டாயிற்று. தன் சுயசொரூபத்தை மறந்ததே அஞ்ஞானம். ஆதலின் ஆன்மாவாகிய தன் சுயசொரூபத்தைத் தரிசித்தாலே அகப்பற்று ஒழியும். அப்போது ஆன்மாவை யன்றி மற்ற நாமரூபத் தோற்ற மனைத்தும் சடமாகிய அநித்தியப் பொருள்களே யென் றுணர்வதால் இச்சை யொழியப் புறப்பற்றும் ஒழியும். இக்குறட்பா வால் இன்னொரு விசேஷம் நாம் அறியவேண்டி யிருக்கிறது. " உன்பற்றொழிய ஈசனைப்பற்று " என்று கூறியிருக்கிறதே யன்றி—" ஈசனைப்பற்ற உன்பற்றைவிடு " என்று கூறியிருக்க வில்லையென்பது கவனிக்கத்தக்கது.

சிலர் "இல்லறத்தில் பெண்சாதி பிள்ளைகளோடு கூடவிருந்தால் ஞானத்திற்கு எங்கே முயல்வது. யாவும் விட்டுவிட்டுச் சந்நியாசம்பெற்றாலன்றோ ஞானம்வரும்" என்று கூறிக்கொண்டு ஒன்றையும் விடமுடியாமலும் ஜன்ம சாபல்யத்திற்குச் சற்றும் முயலாமலும், அரிதிற்கிடைத்த இவ்வுத்தமஜன்மத்தை வீணாக்கி விடுகிறார்கள். மனம் ஒருபற்றைச் சுலபத்தில் விடாது. வெளிப்பற்றாகிய பெண்டு பிள்ளையாதிகளை விட்டுவிட்டுக் கானகஞ்சென்றிருந்தாலும் மனதின்கண்ணுள்ள பற்று ஒழியாதவரையில் அவன் சந்நியாசம் ஒருபயனும் அளிக்காது. ஞானம் உதயமாயின் அந்த அனுபவம் முதிரமுதிர எல்லாப் பற்றுகளும் தன்னையறியாமலே (நித்திரை வந்தவன் கையிலுள்ள பொருள் அவனையறியாது தானே நழுவி விடுவதுபோல்) ஒழிந்துபோம்.

அகப்பற்றொழிந்தவன் இல்லறத்தி லிருந்தபோதினும் அவன் ஞானியாவன். கர்மம் அவனையணுகாது. ஒரு செடியை வேரோடு பிடுங்கிவிட்டுப் பிறகு அதை மண்ணில் சொருகிவைத்தால், அது கொஞ்சக்காலம் வரை பார்ப்பவர்க்குப் பச்சைச் செடிபோல் காணப்படினும் சீக்கிரத்தில் உலர்ந்தழியும். இதைப்போலவே அகப்பற் றொழிந்தோன் பார்வைக்கு வெளிப் பற்றுகளை யுடையான்போல் காணப்படினும் சொல்பகாலத்தில் அவனது சகல பற்றுகளும் ஒழிந்துபோம்.

புறப்பற்றை மட்டும் விட்டுவிட்டு ஒருவன் அடவியிற் சென்றிருந்தாலும் அகப்பற் றொழியாதவரையில் அவன் பற்றற்றவனாகான். அவன் மனம், இல்லறத்தில் உலகபோகங்களை யனுபவித்துக்கொண் டிருக்கிறவனுடைய மனதைவிட அதிகமாக உலக போகங்களை நாடும். ஒரு மரத்தின் கிளைகளை மட்டும் வெட்டிவிட்டால் அது பட்டமரம்போல் தோன்றினும்

கொஞ்சக்காலத்திற்குள் துளிர்த்துத்தழைத்து முன்னிருந்தபடியே அகன்ற விருக்ஷமாய்விடும். அதைப்போலவே புறப்பற்றைமட்டும் விட்டவன் சற்று தவறின் இல்லறத்தானினும் மிக்கத் தாழ்ந்த நிலையடைவான்.

"மனத்தகத் தழுக்கறாத மௌனயோக ஞானிகள்
வனத்தகத் திருப்பினும் மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுந்த மௌனயோக ஞானிகள்
மூலைத்தடத் திருப்பினும் மனத்தகத் தழுக்கறார்."

ஆதலின் ஞானமடைய முயல்வோன் ஆரம்பத்திலேயே இதை விட வேண்டும் அதை விடவேண்டும் என்னும் கவலைகொள்ளவே வேண்டாம். அடையவேண்டியதை யடைய முயற்சித்தால் விடவேண்டியது தானே விட்டுப்போம். அதற்காகவே பற்றுவிடற்கு; பற்றற்றவனைப் பற்றிக்கொள் என்றுரைக்கப்பட்டது.

நாம் அப்பரம்பொருளை யறியவே முயலவேண்டும்; அதை யறிந்து பற்றின், அதாவது அந்த நிலையி னிற்பின் வினையொழியும்; வினை யொழியச் சகல பற்றுக்களும் தாமே நீங்கும்.

"ஒருவ வேண்டு மனைத்துமென வுன்ன வேண்டா வினைநீங்கில்
ஒருவு மனைத்தும் வினையுளதே லொன்றி மேவு மற்றவையை
ஒருவல் பற்ற லவையைவிடுத் துள்ள படியே முடியுமெனச்
சொரூப னாமே யெனத்திடமாய்த் தோற்று மதற்கே முயன்றிடுக"
(குமாரதேவர் சாத்திரம்)

மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஈசுவரனிடம் பக்திசெலுத்தி யவனருளைப்பெற முயல வேண்டும். இன்றேல் மாயையாகிய அஞ்ஞானமென்னும் திரையை நீக்கி ஆன்மாவை யறிய முடியாது. பூரணமான பக்தி செலுத்துவது அரிதாதலின் நமது முயற்சியும் வேண்டும். அதாவது பக்தியும் சாதனையும் வேண்டும். இதுவே மனிதஜன்மம் பெற்றதா லடைய வேண்டிய பலனையடையும் மார்க்கமாகும்.

ஓம் தத் ஸத்.

பக்தர்க்கடியன்.

---

## ஓர் கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ, ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர் அவர்கட்கு.

துன்மதி௵ மார்கழி௴ தங்களால் பிரசுரம் செய்யப்பட்ட "ஆனந்தபோதினி" 233-வது பக்கம் "ஹிந்து மதத்தினருக்கு ஓர் எச்சரிக்கை" என்னும் தலைப்பின் கீழ்க்கண்டிருக்கும் விஷயத்தைக் கவனிக்க அடியில்கண்ட விஷயத்தைத் தங்கட்கு தெரிவிக்காமலிருக்க என்மனம் துணியவில்லை. மேலும் ஷை விஷயத்தின் கடைசியில் விஷயத்தைக்குறித்துப் பின்னுமுள்ள அபிப்பிராயங்களைத் தெரிவிக்க இடங்கொடுத் திருப்பதால், அடியிற் கண்ட விஷயத்தைத் தங்களுக்கெழுத என்மனம் துணிவுற்றது.



சுமார் 4, 5 வாரங்கட்கு முன் காஞ்சீபுரம் U. F. C.M. High School நடந்த "ஸண்டேகிளாசில்" 8-வது வகுப்புப் பிள்ளைகட்கு Mr. G. பிரகாசம் B. A. L. T. என்னுமோர் கிறிஸ்துவ உபாத்தியாயர், கிறிஸ்துமத விஷயமாகப் பாடம் போதித்தார். அதில். 'சாது சுந்தர்ஸிங்' என்பவரின் ஜீவிய சரித்திரம், விவரமாகச் சொல்லப்பட்டது. வட இந்தியாவில் "சாது சுந்தர்ஸிங்" என்னுமோர் ஹிந்து, ஹிந்து மதத்தில் முழுநம்பிக்கை யுள்ளவரா யிருந்து கிறிஸ்துமதத்தைப் பின்பற்றினவரை, மிகக்கொடுமையாக நடத்திவந்தார் என்றும் ஓர் நாள் அவர் கிறிஸ்துமதத்தி னுண்மையை அறிய "பைபில்" என்னும் சத்திய வேதத்தை வாசித்ததாகவும், அதனால் கிறிஸ்துமதத்தி னுண்மை அவருக்கு வெளிப்பட்டதாகவும், அதின் பேரில் தனக்கு "இயேசு கிறிஸ்து" பிரத்தியக்ஷம் ஆகும் பக்ஷத்தில் தான் கிறிஸ்து மதத்தை அனுசரிப்பதாக விரதம் பூண்டு ஜெபம்செய்யுங் காலத்தில் கடைசியில் கருத்த, இருண்ட மேகம்போல் இயேசு கிறிஸ்து பிரத்தியக்ஷமானதாகவும், அது முதல் கிறிஸ்துமதத்திற்கு அடியாராகிவிட்டதாகவும் கூறினார். "அவர் ஹிந்துவாயிருந்த காலத்தில் கிறிஸ்துமதத்தினரை இம்சை செய்தது எண்ணுதற்கு அரிதானது. கொளுத்திய பைபிலுக்குக் கணக்கே இல்லை. அத்தகைய "சாது சுந்தர் சிங்கே" கிறிஸ்து மதத்தின் அருமையைத் தெரிந்து ஷை கிறிஸ்துவுக்குத் திருத்தொண்டு புரியலானார்" என்றும் தான் அவரை நேரில் பார்த்ததாகவும் கூறி அடியிற்காணும் விசனகரமான விஷயத்தையும் சொல்லிவிட்டார். அதாவது, "ஆகையால் இக்கிளாசில் யாராவது இந்தக் கிறிஸ்துமதத்தை அனுசரிக்க விரும்புகிறவர்கள் எழுந்து நிற்கலாம்" என்று சொன்னார். எந்தப் பிள்ளைக்கும் ஹிந்துமதத்திற்குத் துரோகஞ்செய்ய மனந்துணியாததால், தங்களை இப்பள்ளியில் சேர்த்ததற்காகத்தங்கள் பெற்றோர்களை நிந்தித்துக் கொண்டு, எழுந்து நிற்கவில்லை. ஆனால் இமை கொட்டியவரும் யாரும் இல்லை.

1921௵ டிசம்பர்மாதத்திலுங்கூட இத்தகைய அக்கிரமங்கள் நடந்து வருவதால் பிள்ளைகளின் பெற்றோர்கள் மிக்க எச்சரிக்கையாகச் சரியான பள்ளிகளில் தங்கள் மக்களைக் கற்பிக்கவேண்டும். அந்த வகுப்பிலுள்ள யாராவ தொருவன் புத்தியின்மையினாலாவது, புத்தி யீனத்தினாலாவது, புத்தி ஸ்வாதீன மின்மையினாலாவது, எழுந்து நின்று இருப்பானாயின் அவன் எவ்வளவு சீக்கிரத்தில் கிறிஸ்துவனாக்கப்பட்டு அவன் அடையப்போகும் கதிகளை இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் தாங்களே நினைத்துப் பார்க்கின் தெரியவரும்.

ஷை சண்டேகிளாசைக் கவனித்த 8-வது வகுப்புப் பிள்ளைகளைக் கேட்கின் இன்னும் விவரமாகத் தெரியவரும்.

☞ குறிப்பு.—நமது ஹிந்து சகோதர சகோதரிகளும், பெற்றோரும் மேற்கண்ட விஷயத்தை வாசித்துக் கவனிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

'சாது சுந்தர்ஸிங்' என்பவர் ஹிந்துமதத்தில் நம்பிக்கைவைத்து விட்டிருந்து பிறகு அதைவிட்டு விட்டார் என்பதும், பிறகு பைபிலைப்பார்த்ததே அவருக்கு கிருஸ்துமதத்தில் உண்மை வெளிப்பட்டு விட்டிருந்ததால், பிறகு இன்னும் ஏசுகிருஸ்து பிரத்தியக்ஷமாக வேண்டுமென்று ஏன் பிரார்த்தித்தா ரென்பதும், அப்போது கருத்த இருண்ட மேகம்போல் தோன்றியதை ஏசுவாக நம்பிக்கொண்டா ரென்பதும், ஒரு பக்கமிருக்கட்டும். கிருஸ்துமத உபாத்தியாயர் தம் வேலையைத் தர்ம்செய்கிறார். நம்மவர் நடக்கையைப்பற்றியே நம்மனம் மிக வருந்துகிறது.

அந்தோ! இதை வாசிக்கும்போது நம்மவர் மனம்பதைக்கு மென்பதில் சந்தேகமோ. ஆனால் இது யார்குற்றம்? நாமே வலிய நம் மக்களுக்கு மரணத்தினும் கொடிய ஆபத்தை யுண்டாக்குகிறோம். இதுவோ பெற்றோர் தம்மக்களைப் பாதுகாக்கும் முறை? அந்தோ! பன்முறை இவ்வாறு கிருஸ்துவர்கள் நம்மவர்களை மயக்கித் தங்கள் மதத்திற்கு இழுக்கும் சம்பவங்களைக்கேட்டும் கண்டு மிருந்தும், நம்மவர்க்கு இன்னும் அறிவுவிளங்காமலிருப்பது மிக்க விசனிக்கத்தக்க காரியமேயாகும். இது பட்டப்பகலில் கையில் தீபத்தை வைத்துக்கொண்டுநமது மக்களைக் கிணற்றில் தள்ளுவதுபோ லிருக்கிறதே யன்றி வேறில்லை. அந்நியமதம் போதிக்கப்படுவதை யறிந்திருந்தும், அத்தகைய பாடசாலைகளுக்கு நமது மக்களையனுப்பிப்பிறகு பறிகொடுத்துப் பாதவிப்பதால் என்னபயன்? நம்மக்களுக்குக் கல்வி கற்பிக்க வேறு பாடசாலைகளில்லையா?

சகோதர சகோதரிகளே! இனியேனும் உங்கள் மக்களைப் பாதுகாப்பதில் எச்சரிக்கையா யிருங்கள். "பிள்ளை வரத்திற்குப் போய்ப் புருடனைப் பறிகொடுத்தாள்" என்பதுபோல் கல்வி கற்பிக்க எண்ணி மக்களைப் பறிகொடுத்துக் கொடிய பாதகத்திற்கு ஆளாகாதீர்கள். மதவிஷயத்தில் நாம் அசிரத்தையா யிருந்தால் பெருங்கேட்டுக் குள்ளாவோம் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆங்காங்குள்ள அறிவாளிகள் நம்மவர் புறச்சமயத்தாருடைய மாய போதனைக் குள்படாவண்ணம் தடுக்கச் சங்கங்களை யேற்படுத்த முயற்சி யெடுத்துக் கொள்வார்க ளென்று நம்புகிறோம். இன்னும் இவ்விஷயத்தில் அசட்டை செய்தால் ஹிந்துக்கள் என்ற பெயருக்கு அருகராகமாட்டோம். நம் முன்னோர் சாபத்திற் குள்ளாவோம். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

பத்திரிகாசிரியர்.

---

## ஹிந்துமத ஆசாரமும் நூதன இயந்திரமும்.

### வர்ணாஸ்ரமம் கிரமமா?

1. பிராமண குலத்தில் உதித்தவன் அநுஷ்டானக் குறைவினால் இழிகுலத்தில் சேர்க்கப்படுவனா?



2. இழிகுலத்தில் பிறந்தவன் அநுஷ்டானத்தால் மட்டும் பிராமணனாவனா?

இந்த வியாஸம் இலேசாய் வரையப்படுவதல்ல. எனினும் யான் எடுத்துக் கொண்டதின் காரணம் முக்கியமாய், நூதனமாய், மேற்குறித்த விஷயத்தைப் பொறுத்து, கண்டுபிடிக்கப் பட்ட இயந்திர மொன்று நமது கண் கூடாய் ஏற்பட்டதால்தான்.

நமது மத ஆசாரங்களும், வர்ணாஸ்ரம தர்மங்களும், வேதம் உண்டாயது முதல் கையாடப் பட்டு வருகின்றன. நமது முன்னோர், சுருக்கத்தில் நமது பாட்டனார்காலம்வரைகூட, அவைகள், அநேகமாய் அநுஷ்டிக்கப் பட்டு வந்தன. ஆங்கிலக்கல்வி நம் நாட்டில் ஏற்பட்ட தினமுதல், நம் நாட்டுப்பழக்கம் க்ஷீணமடையத்தொடங்கித் தற்காலம், மேல்நாட்டார் வழக்கம் அதிகமாய்ப் பிடிபட்டு வருகிறது. விவரிக்கில் மிக விரியும். ஆகையால், சுருங்க உரைக்கில், நாம் 'சுகத்தை விடுத்து வியாதியைத் தேடிக்கொண்டோம்' இது உலகறிந்த விஷயம். நமது நாட்டில் பிரத்தியக்ஷம்; எவரும் மறுக்கார். தற்கால வாலிபர்களும், யௌவனப் பருவத்தாரும், எவ்வளவு வளர்கிறார்க ளென்பதும், எவ்வளவு பராக்கிரமம், தைரியம், வீரியம், தேஜஸ் முதலியவை உடையவர்களென்றும், நமது தகப்பனார், பாட்டனார்களின் அவ்வவ்வயதுகளில் இருந்த ஸ்திதியுடன் இவர்கள் ஸ்திதியை ஒப்பிட்டுப் பார்க்கில் விளங்கும். அவ்வளவுதூரம் போவானேன். தற்காலம் ஜீவித்திருக்கும்; 60-70-வயதுக் கிழவர் என்ற பெயருற்றவர்களின் பராக்கிரமமும், மனோதைரியமும், இவர்களுக்கு உண்டா? ஏன் இவ்வளவு வித்தியாசம்? ஒரே வீட்டில், உண்டு, உடுத்து, சுகித்துவரும் இருவருக்குள் இத்தனைபேதம் என்னை? நமது வாலிபர்கள் படிப்பில் அதிக புத்தி செலுத்தியதால் இளைத்ததாக அநேகர் கொள்கை. நான்கு சாஸ்திரம், பதினெண் புராணம், தர்க்கம், மீமாம்சை, நிகண்டு, முதலியவைகளை மனப்பாடமாகப் படித்து உணர்ந்தவர்களைக் காட்டிலுமா இவர்கள் அதிகம் படித்து விட்டார்கள்? ஒருகாலும் இல்லை. முன்னோர்களுடைய திடகாத்திரமும், புத்தி தீக்ஷண்யமும், எள்ளளவும் தோற்கடிக்கப் படமாட்டா. பின்னை யாது காரணத்தால் அவர்கள் சந்ததியார் இத்தனை கேடுற்றார்கள். முக்கியமாய் அவர்களின் அநுட்டானங்களை அங்கீகரியாமல் நிராகரித்து விட்டதுதான் அதற்குக் காரணம். இனியாவது தவறுதலை உணர்ந்து தங்களால் கூடியவளவு ஒழிந்தபொழுதில் ஆசாரங்களை அநுஷ்டிப்பாராக.

எனது முகப்பில் குறிக்கப்பட்ட நூதன இயந்திரம் யாது? இதுவரை அதைப்பற்றிப் பேசவில்லையேயென்று வினவ வேண்டாம். அதைச் சுருக்கமாய் விவரிப்பேன்.

அமெரிக்கா கண்டத்தில் தியோபால்ட் ஆப்ரஹாம்ஸ் (Theobald Abrahams) என்பவர் அந்த இயந்திரத்தைக் கண்டுபிடித்தவராவர். கண்டு

பிடித்தவர் இந்தியரல்லவாதலால், ஒருமதத்தைச் சிறப்பித்தற் பொருட்டாவது, ஒரு கூட்டத்தைத் தாழ்த்தற் பொருட்டாவது கூறப்பட்டதெனக் குறைகூற இடமில்லை. மேலும் அந்த இயந்திரத்தால் அநேக விதமான சோதனைகள் செய்ததில் எல்லாப் பரீக்ஷையிலும் உண்மை வெளிப்பட்டு இருக்கிறதென்றும் கூறப்படுகிறது. இந்த இயந்திரம் மனிதனுடைய பரம்பரையைக் காண்பிக்குங்கருவி. எத்தனையுகமாயினும், அவர் சொல்லுகிறபடி ஒருவனுடைய சந்ததியாரை, எவ்விடத்தி விருப்பினும், இந்தயந்திரத்தால் பரீக்ஷித்துக் கண்டுபிடிக்கலாம். மேலும் ஒருவனுடைய வயதை அநேக வருஷங்களுக்கு முன் நிர்ணயிக்கமுடியும். வயது, ஜாதி, வகுப்பு (ஆண், பெண்) முதலியவையும் கூறற்பாலன என்று அவர்வரைகிறார். ஒருஜாதிக்குப் பிறந்தவன் அநுஷ்டான யோக்கியதா முறையால் மட்டும் மற்றொரு சாதிக்குரியவனாக முடியாதென்று இதனால் கண்டிப்பாகருசுப்படுத்துகிறார். மேற்படி அநுஷ்டானத்தாலும் குணத்தாலும் தங்குலத்தில் மேம்பாடுடையவனேயன்றிப் பிறிதுகூற இடமில்லை. ஓர் தகப்பனுக்குப் பிறந்த சந்ததி மற்றொருவனுக்குரியதென்று கூறிய ஒரு வியாச்சியத்தில் ஆப்ரஹாம், தம் இயந்திரத்தால், யாருக்குரிய சந்ததி யென்பதையும் தெரியப்படுத்தி யிருக்கிறார். ஆகையால் பிராமணருக்குப் பிறந்த சந்ததி எந்த அநுஷ்டானக் குறைவாலும், எவ்விதக்கிரியையாலும், குலத்தில் தாழ்ந்தவனாகான். மேலும், ஆத்திரேய கோத்திர சந்ததியார், அத்திரிமகரிஷியின் சந்ததியார் என்பதைத்தற்காலம் ரூபிக்கலாகும். ஒரேகோத்திரத்தாரின் இரத்தத்திலிருந்து, இவ்விதம் கண்டு பிடிக்கப்படுகிறது. சகோத்திர விவாகமும், மற்றும் பலவித கட்டுப்பாடுகளும் தற்காலம் புராதன அநாகரீகமென ஒருங்கே தள்ளப்படுகின்றன. மேற்படி வர்ணாஸ்ரம தர்மங்களும் நிலைகுலைந்த தன்மையவாயின.

'Down with the Caste System', Be away with stupid marriage customs' 'வர்ணாஸ்ரம தர்மங்களை விட்டுவிடுங்கள்' 'கலியாண ஒழுங்குகளை விட்டுத்தொலையுங்கள்' என்றும், இவைகள் நசித்துப்போகும் வரை நமது இந்தியா விருத்தியடையாதென்றும் கூறிக் குடி கெடுக்கும் அநேகர் இரவல்பேச்சைக் கேட்டவர்களேயன்றித்தங்கள் புத்தியால் ஆராய்ந்தறிந்தவராகார். "சுடச்சுட உரைப்பார் தம்மவர், இனிய இனிய உரைப்பார் ஊரார்" என்ற பழமொழிக் கேற்ப, நமது முன்னோர்கள் நமக்குக் கெடுதி செய்ததாகவும், தாங்கள் அவைகளை நிவர்த்தித்து, நன்மை பயக்கவந்தவர்களாகவும் நினைத்து இவ்விதக்கொள்கையை, பிறரிடம் கடன்வாங்கி, தாங்கள் கெட்டது போதாது, எல்லாரையும் கெடுக்க முயலுகிறார்கள். தற்காலம் பெண் கல்வியைப்பற்றிய பேச்சும், பெண்களுக்கு ராச்சியபாரத்தில் சம அதிகாரமும், விதவா விவாகமும் இன்றியமையாதனவென உரைப்பவரும், இவர்கள் எல்லாரும் நம்தேச சத்துருக்களாவரே யன்றி, நம்தேச நன்மைக்கு உழைப்பவராகார். இனியாகிலும், அவ்விதப் பேச்சைவிட்டு, நமது புராதன வழக்கத்தைக் கைக்கொண்டுய்வார்களா.



நாளுக்குநாள் விருத்தியடைந்து, உலகம் நம்மைப்பார்த்து, அநுஷ்டித்தகாலம் போய், நம்மைநாமே தாழ்த்திக்கொண்டு, பிறர் உதவியை, அனாவசியமாய் நாடி, துர்ச்சன சகவாஸத்தால் கெட்டோம். பன்றியுடன் சேர்ந்தகன்றும் மலமுண்ணும் என்பதுபோல் சற்சங்கத்தில் வாழ்ந்து வந்த நாம் அதைவிட்டு, "விளக்கை நோக்கிச்செல்லும் விட்டில் பூச்சிபோல்" மதிமயங்கி, துர்ச்சனரோடு நாளுக்குநாள் சிநேகம் அதிகரித்துத் தற்கால நிலைமைக்கு வந்திருக்கிறோம். இன்னும், அச்சகவாஸம் வேண்டுமென்பாரை யான் என்கூறுவது. "உடம்புக்கு பால்குடிக்காமல், ஊருக்குப் பால்குடிக்கும்" தன்மை இனி யொவ்வாது. கூடியசீக்கிரம், நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ளாவிட்டால், வீணாக விரும்பாத அதிக கஷ்டத்திற்கு இரையாவோம்.

நான் இயந்திரத்தின்குணத்தை மட்டும் கூறினேனன்றி, அதின் சூக்ஷ்மத்தைப்பற்றி இதுகாறும் வாளாவிருந்ததைப்பற்றி மன்னிக்கவும். எவரும் அவ்வகை 'இயந்திரம் யாதென விரும்புவர். ஆகையால் அதைமட்டும் சுருக்மாய் அடுத்த வியாசத்தில் விவரித்து விடுப்பாம். தொடரும்.

Dr. S. Ramakrishna,
M. D. (A) G. B; V. C., Jalgaon.
(East Kandsh Berar.)

## கைவல்ய நவநீத வசனம்

(264-ம் பக்கத் தொடர்ச்சி.)

[ ஊன்றிப்பார்க்கின் யாவும் ஆன்மசொரூபமே யென விளங்கும். இப்பிரபஞ்சம் மனத்தால் சிந்தித்துண்டானதே. அதாவது மனதினின்றே பிரபஞ்சம் உதித்தது. மனமின்றேல் பிரபஞ்சமின்றாகும். உண்மையில் மனம் ஜடம். அப்படி யிருக்க அது எப்படி சலிக்கிறதெனின், அது ஆன்மாவின் சக்தியாலேயே அசைகிறது. ஏககாலத்தில் 'நான்' என்பதையும் மனம் என்பதையும் காணமுடியாது. 'நான்' என்பது தன்னை மறந்தாலே, மனம் என்பது முளைக்கிறது. மனதின் சலனத்தைநிறுத்தி அதன் அங்குரமாகிய நினைப்பு என்பது, எங்கிருந்து முளைக்கிறதென்று ஆழ்ந்து நோக்கின், அதன் பிறப்பிடம் 'நான்' என்ற ஆன்மாவே யென்று விளங்கும். தாயுமானவர் மனதை நோக்கி "நின் ஜன்மதேயத்தில் நீ செல்லல்வேண்டும்" என்றார். அவரே,

"விரிந்த மனமொடுங்கும் வேளையி னாகப்
பாந்த வருள்வாழி பதியே பராபரமே" (அதாவது மனம் ஒடுங்கிய விடத்தில் ஆன்மதரிசனம் தோன்றும்) என்றும் அருளினர். ஆகையால் யாவும் ஆன்மாவையன்றி யில்லை. எல்லாம் ஆன்மசொரூபமே.

அலை திவலை நுரையனைத்தும் நீரேயாகும். சட்டி, குடம், என்ற மண்பாண்டங்கள் பல உருவங்களையும் பல பெயர்களையும் உடைத்தா யிருந்தாலும் யாவும் மண்ணேயாகும். இவ்வாறு யாவும் ஆன்ம சொரூபமேயென அனுபவமா யறிந்தவனே ஞானியாகும்.]

எங்கும் நிறைந்த பரிபூரண சொரூபமாகிய சித்தே நான் என்ற உறுதியை மறவாதிருந்தால், என்ன எண்ணினாலும் என்னசெய்தாலும் அவற்றால் ஒரு கெடுதியும் உண்டாகாது. நித்திரையி னின்றும் விழித்தபின், கண்ட கனவு பொய்யென்று தானே தோன்றி விடுவதுபோல் யாவும் மித்தையாகும். "பரமானந்த பரிபூரணனே ஆன்மாவாகிய நான்" என்பதே சத்தியம்.

[ஆத்ம தரிசனத்தால், தான் ஒரு கிரியையும் செய்பவனல்ல, ஒன்றோடும் சம்பந்தப்பட்டவனல்ல, என்று உணர்ந்து அத்திட அனுபவத்தோடு இருப்பவனுக்கு 'நான்' என்ற அகங்காரமே யில்லையாதலின், கனவுபோல் உலக விவகாரங்களைச் செய்யினும் அவற்றால் ஒரு பாதகமு முண்டாகாது. ஆனால் வாயால் மட்டும் நான் பிரம்மம் என்று சொல்லிக்கொண்டால் போதாது. மருந்து மருந்து என்று கூறிவிட்டால் வியாதி நீங்கிவிடாது, மருந்தை யருந்தினாற்றான் நீங்கும்.

"சத்து மசத்துஞ் சதசத்து நீயல்ல
சுத்தசிவ நீ யென்று சொல்லினான்-மொய்த்தெழுந்த
கல்லாலின் கீழிருந்து கதிகாண நால்வர்க்குஞ்
சொல்லாமற் சொன்ன துரை" (வள்ளலார்)

சிலர் நாம்பிரம்மம் என்று தெரிந்து கொண்டால் அவ்வளவேபோதும், பிறகு என்ன செய்தாலும் பாபமில்லை என்று எண்ணிக் கொள்கிறார்கள். இத்தகையோரால்தான் சிலர், வேதாந்தம் "நாமே கடவுள், நம்மையன்றி வேறுகடவுளில்லை" என்று கூறுகிறதெனத் தவறெண்ணம் கொண்டிருக்கிறார்கள். வேதாந்தம் அவ்வாறு கூறவில்லை. முதலில் ஈசுவரனிடம் பக்தி நிலைத்து அவனை யடைவதாகிய ஒரு பாக்கியமே வேண்டுமென்ற அடங்கா ஆவல்கொண்டு, இவ்வுலக போகங்களும், இந்திரன் பதவி முதலிய விண்ணுலக போகங்களுமாகிய யாவும் அநித்தியம், ஜடம், துக்கம் என்று வெறுத்து, ஆசை ஒழிவால் மனவொடுக்கம் வந்து, ஈசுவரனை யெப்படியடைவதென்ற ஏக்கங்கொண் டிருக்கும் ஒருவனுக்கே வேதாந்தம் "கடவுள் எங்கோ தூரத்திலில்லை. எங்கும் நிறைந்த அவர் உன்னுள்ளேயே யிருக்கிறார்; நீ அவரிலேயே யிருக்கிறாய். நீ அவர் அம்சமே. நீயுன் ஆன்மாவைக் கண்டால் ஈசுவரனுடைய உண்மைச் சொரூபத்தைக் காண்பாய். ஏனெனில் இரண்டும் இனத்தில் ஒன்றே. நீயவனில் ஒரு பாகமே; நீ யந்தச் சச்சிதானந்தப் பிரம்மமே" என்று கூறியதேயன்றி வேறில்லை. அகம் பிரம்மாஸ்மி - அதாவது "ஆன்மாவே பிரம்மமா யிருக்கிறது" என்ற



வேதவாக்கியப்படி "நாம் பிரம்மசொரூபமே" என்ற திடம்வராமல், நாம் வேறு பிரம்மம் வேறு என்ற பேதபுத்தி யிருக்குமட்டும் ஒருபோதும் முத்தி கூடாது.

"மாசறப் படித்தா னேனு மயலறத் தெளிந்தா னேனு
மாசறத் துறந்தா னேனு மஞ்செழுத் துணர்ந்தா னேனு
மீசன்வே றியான்வே றென்னு மிருமையுங் கழலா னாகிற்
பாசமுங் கழல்வ தின்றாம் பதித்துவந் தானு மின்றே"
(வள்ளலார்)

கடலோடு சேர்ந்த குடநீர் கடலேயாவதன்றிக் குடநீராய்ப் பிரிந்து நிற்பதில்லை. பாலோடு சேர்ந்த நீர் பாலேயாகும். அதுபோல் பிரம்மத்தோடு சேர்ந்த ஆன்மா பிரம்மமேயாகும்.

"பாலோடு சேர்ந்தநீர் பாலாகு மாங்கதுபோல்
வாலறிவ னைச்சேர்ந்த மன்னுயிர்கள்-வாலறிவன்
றானாகி நிற்பதல்லாற் றண்டாத வைம்பாச
வானாகி நில்லா வுவந்து"

"அரசன் மகனரச னாகிநின்றாற் போலப்
பரமசிவ னிற்றோன்றும் பல்லுயிரும்-பரம
சிவனாகி நிற்பதலாற் சீவனாய் நில்லா
சிவனாணை யுள்ளே தெளி" (வள்ளலார்)

அந்த நிலையை யொருவன் அடைந்தபின் "நான் பிரம்மமா யிருக்கிறேன்." என்று கூறத்தக்க நிலையல்ல அது. அப்படிக் கூறுகிறவன் கண்டிப்பாய் அந்த நிலையிலில்லை. அங்கு 'நான்' என்பதே யில்லை யெனில், "நான் பிரம்மமா யிருக்கிறேன்" என்பது எங்குளது. சிரச்சேதம் செய்யப்பட்டவன் தலை "என் தலையை வெட்டி விட்டார்கள்" என்று கூறுமோ. அதுபோல பிரம்மத்தோடு கலந்தநிலை ஒருவரும் இன்னவிதமானதென்று கூறொணாதது. ஒன்றோ இரண்டோ என்று கூற வழியில்லாதது. மனதிற்கெட்டாத தெனின் வாக்கால் கூறுவ தெங்ஙனம்.

குருவும் அதையடைய வழிகாட்டுகிறாரே யன்றி நேரில் அந்த நிலையைக்காட்ட முடியாது. குரு ஆன்மாவை யறியும் வழியைக்காட்டுகிறார். எவனும் தனக்குள் இருப்பதைத் தானே யறியவேண்டும். ஆன்மாவை யறிந்தபின் பரமான்மாவை யவனவனே யறிந்துகொண்டு அந்த ஆனந்தக்கடலில் முழுகித் 'தான்' என்ற போதம் அற்று ஐக்கியநிலைபெற வேண்டியதே.

"நீயற்ற அந்நிலையே நிட்டை * * *."
"நானெனவும் நீயெனவும் இருதன்மை நாடாமல் நடுவேசும்மா
தானமரும் நிலையதுவே சத்தியம் சத்தியம் * * *"
(தாயுமானவர்)

சாத்திர ஆராய்ச்சிசெய்து ஞானத்தை யடைவது விசேஷமே யெனினும், சாத்திரங்களை வாசிப்பதால் மட்டுமே ஞானம் கிட்டிவிடாது. சாத்திர ஆராய்ச்சி செய்தாலும் செய்யாவிடினும் தனியே உட்கார்ந்து அப்பியாசம் செய்யவேண்டும். ஜடத்தின் மூலமாகவே சித்தையறிய வேண்டும்; மாயையையறிந்த பின்பே பிரம்மத்தை யல்லது ஆன்மாவை யறியலாகும். மாயையென்பது மனதையன்றி வேறில்லை யாகையால், மனதை யெதிரிட்டறிந்தால் மனம் மறைந்துவிடும். ஒரு செடியின் வேரைப் பிடுங்கிவிட்டால் அச்செடி யெவ்வாறு அழிந்துபோமோ அவ்வாறே, மனம்முளைக்குமிடத்தை யறிந்தால் மனதின் உருவம் நாசமடையும்; ஆன்மதரிசனம் கிடைக்கும்; அதாவது நமது உண்மைச் சொரூபம் விளங்கும். அந்தச் சிற்சொரூபமே நாம் என்ற உறுதி மறவாதிருந்தால், அங்கு நான் எனதென்ற பற்றும், நாம் ஒன்றைச் செய்கிறோம் என்ற உணர்ச்சியும் இல்லையாதலால், வினைவழியே எக்கிரியை நிகழினும் அது ஆன்மாவைப் பாதிக்கா தென்பதாம். அந்த நிலையில் உலகத்தோற்றரவு கனவுபோற் றோன்றும்.

“ காண்பதுங் கேட்பதுங் கருத்துஞ் சொப்பனம்
பூண்பதும் புனைவதும் புசிப்புஞ் சொப்பனஞ்
சேண்படு நாகமுஞ் செகமுஞ் சொப்பனம்
வீண்படு மிவைக்கெலாம் விசுத்த ஞானரோ” (வள்ளலார்) ]

### (சீடன் தனது திருப்தியைவெளியிடல்)

நான் கடந்த பல ஜன்மங்களில் உடலையே நானென்று நம்பியிருந்தேன். இழிந்த பிறவிகளாயும் உயர்ந்த பிறவிகளாயும் இருந்த அவையனைத்தும் இப்போது சற்குருவினருளால் கானலிற்றோன்றும் சலம்போல் மித்தையெனக்கண்டு ஆன்மாவே நானென நம்பி விசுவாசித்து ஈடேறினேன்.

[பல ஜன்மங்களில் என் நிஜசொரூபத்தை நானறியாமல் தேகமே நானென்ற அஞ்ஞானத்தில் அழுந்திக்கிடந்து, பிறப்பதும் இறப்பதுமாகிய பவசாகரத்தில் அல்லற் பட்டுக்கொண் டிருந்தேன். இப்போது குரு வழிகாட்ட, தேகாதிப் பிரபஞ்சமனைத்தும் கானல் நீர்போல் ஆரோபமாகிய மித்தையென்றுணர்ந்து, என் நிஜசொரூபத்தை நான் அறிந்து, ஜனனமரண மற்ற பேரின்ப நிலையடைந் துய்ந்தேன் என்பதாம்.] (தொடரும்)

சீடன்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(272-ம் பக்கத் தொடர்ச்சி)

**பக்தி.**—பக்தியில் கடவுள்பக்தி, குருபக்தி, பெற்றோர் பக்தி, இராஜபக்தி, தேசபக்தி என்பவை முக்கியமானவைகள்.

(1) **கடவுள் பக்தி.**—புண்ணிய பூமியெனப் புகழ்பெற்ற நம் தாய்நாடு தெய்வபக்தியில் எப்போதும் குன்றாதது; அறிவாளி, மூடன், மந்தன் அயோக்கியன் யாவரிடத்தும் தெய்வபக்தியுண்டு. கள்ளன்கூட ஒரு கோயிலுக்குச் சென்று, அங்குள்ள சொரூபத்தை நோக்கி “சுவாமி! இந்த இரவு நான் களவாடச் செல்லுமிடத்தில் நல்ல பொருள்களகப்பட்டால் காலையில் தங்களுக்கு நூறு தேங்காய்கள் உடைக்கிறேன்” என்று பிரார்த்தனை செய்துகொண்டுதான் செல்கிறான். இவ்வாறு நம் நாட்டில் வித்வான்முதல் மூடன் வரையில் இப்பக்தியும், அடிக்கடி கடவுளைச் சிந்திக்கும் வழக்கமும் நிலைத்திருப்பதன் காரணம் இயற்கையான எப்போதும் அழியாத சத்தியத்தையே யாதாரமாக உடைய நமது அனாதிமதத்திலுள்ள கொள்கைகளே யாகும்.



மாணவ நண்பர்களே! உங்களில் பலர் அன்னியமதம் போதிக்கப்படும் பாடசாலைகளில் வாசிக்கிறீர்கள். கலிகாலக் கொடுமையால், பெற்றோர்கள் உங்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற ஒன்றைமட்டும் கருதி, நமது செய்கை “கோபுரங்கட்டக் கோயிலையிடிப்பதுபோ லிருக்கிறது” என்பதைக் கருதாமல், உங்களை யப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அந்தோ! உங்களுக்கு நமது மதத்தைப்பற்றிய கல்வியே போதிக்கப்படாததால் அப்பாடசாலைகளிலுள்ள அந்நியமத போதகர்கள் உங்களை நோக்கி, “உங்கள் இந்துமதம் அநாகரீகமான மதம்; நீங்கள் கல், மண், உலோகங்களால் செய்யப்பட்ட உருவங்களைத் தெய்வமென்று வணங்குகிறீர்கள்” என்பது முதலான துர்ப்போதனைகளைச் செய்தால், நீங்கள் மதிமயக்க மடைகிறீர்கள். ஏனெனில் நமது மதத்தில் ஏற்படுத்தப்பட் டிருக்கும் இவ்விஷயங்களின் உண்மை யென்ன என்பது உங்களுக்குத் தெரியாது. இந்த ஏற்பாடுகளால்தான் நமது நாட்டில்தெய்வபக்தி நிலைத்திருக்கிறது. அவற்றை யீண்டு சுருக்கமாக விவரிக்கிறோம். ஆதலின் அன்பார்ந்த ஹிந்துவாலிப சகோதரர்களே!

### கீழ்க்கண்டவற்றைக் கவனமாய் வாசியுங்கள்.

கடவுள் இலட்சணம் நமது மதத்தில் பூரணமாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நமக்கு அன்னியமதத்தினர் போதிக்கத்தக்கது ஒன்றுமேயில்லை. கடவுள் ஒருவரே; அவர் அருவம், உருவம், உருவாருவம் என்றவைகளுக்கு அப்பாற்பட்டவர் என்றே நமதுவேதம் கூறுகிறது. ஆனால் இன்னவிதமானது இப்படிப்பட்டது என்று கூற வொண்ணாததை யொருவன் எப்படிச் சிந்திக்கலாகும். மனமோ ஒரு உருவமும் ஒரு பெயரும் உடைய பொருள்களையே சிந்திக்கவும் விசுவசிக்கவும் கூடியது. ஆரம்பத்திலேயே கடவுளை யருவமாகச் சிந்தித்து அவரிடம் பக்திசெலுத்தக்கூடிய அதிசூக்கும அறிவுடையோர் மிக்க அரிது. ஆதலின் சாதாரணமான எல்லாரும் எவ்வாறு ஈசுவரனிடம் அன்புசெலுத்தி யவனருள் பெறுவது?

அதனாலே கடவுள் செய்யும் சிருட்டி, திதி, சங்காரம் என்ற மூன்று தொழில்களுக்கும் தக்க மூன்று பெயர்களும் மூன்று உருவங்களும் கற்பிக்

கப்பட்டிருக்கின்றன. அந்த உருவங்களில் ஒன்றை மனதில் சிந்தித்து, அதையே எங்கும் நிறைந்த பரம்பொருளெனக் கருதி அதனிடம் பக்தி செலுத்தினால், ஈசுவரன் அருள்பெற்று அதன் மூலமாய்ப் பரம்பொருளின் உண்மைச் சொரூபத்தைத்தரிசித்து அவரோடு இரண்டறக்கலந்து விடுவதாகிய நித்தியானந்த பதவியை யடையலாகும். கடவுள் சர்வசக்தியுடையவராதலால் நாம் அவரை யெந்தச்சொரூபமாகச் சிந்தித்துப் பக்திசெலுத்துகிறோமோ அந்த உருவமாய் நமக்கு அவர்தரிசன மளிக்கிறார். அவர் சர்வவல்லவர். அதைத்தான் அனேகம் பக்தர்கள் மகான்களின் சரித்திரங்களில் பரமசிவன் இடபவாகனத்தின்மேல் பார்வதி சமேதராய்த் தரிசனமளித்தாரென்றும், மகாவிஷ்ணு கருடவாகனத்தின்மேல் இலக்குமி சமேதராய்த் தரிசனமளித்தாரென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

பகவான் நமது அன்பையும் எண்ணத்தையும் கருதிப் பலன் அளிக்கிறாரேயன்றி மற்றபடி நமது வெளிச்செய்கையைமட்டும் கருதியல்ல. நமது நிஜசொரூபத்தையறிய விரும்பி அதன் பொருட்டு நமது அருள்பெற நம்மையொரு உருவமாகப் பாவித்து அன்புசெலுத்துகிறார்கள் என்று அவர் அறிவார். அவர் சர்வக்ஞர். ஆகையால் உருவமாகப் பாவித்தல் பாபம் என்றும் அதற்குக் கடவுள் கோபிப்பார் என்றும் கருதுவது பெருந்தவறு. இது விஷயமாக இதே சஞ்சிகையில் வெளிவந்திருக்கும், 'மதபக்தி' என்ற முதல் வியாசத்தில் பத்திராசிரியர் கூறியிருப்பதை வாசித்துணர்ந்தால் நன்கு விளங்கும். முதலாவது அவ்வாறு கருதுவது யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தாததாகும். அரசருடைய உருவத்தை வெண்கலத்தால் செய்து வெட்டவெளியில் வைத்து அதற்கு மரியாதை செய்கிறோம். அதற்காக அரசர் "நாம் எதிரிலில்லாததால் நம்மேலுள்ள அன்பால் நமது பிரஜைகள் நம்போன்ற ஒரு உருவத்தைச் செய்துவைத்து, அதற்கு மரியாதை செலுத்துகிறார்கள்" என்று சந்தோஷ மடைகிறாரேயன்றிக் கோபிப்பதில்லை. மனிதன் அறிவிலும் சர்வக்ஞரும் கருணையே யுருவாகியவருமான ஈவரன் குறைந்த அறிவும் நீதியு முடையவர் என்று எங்கேனும் கருதலாகுமோ? இந்தச் சொரூபவணக்கத்தாலும், ஆங்காங்கு கோயில்கள் அமைத்து அவற்றில் ஈசுவர சொரூபத்தைப் பிரதிஷ்டைசெய் திருப்பதோடு அவற்றிற்குத் தக்ககாலங்களில் பூஜைகளும் உத்சவங்களும் நடந்தேறி வருவதாலும், நம் நாட்டிலுள்ள சுத்தமூடர்கள் கூட அடிக்கடி கடவுளைச் சிந்திக்கவும், பூஜிக்கவும் வழியேற்பட்டிருக்கிறது. இந்த எற்பாடுகளால் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களும் ஈசுவரன் விஷயத்தில் ஈடுபடுகின்றன. கோயிலைக் காண்பது, பிரதட்சணம் செய்வது, உத்சவங்களைப்போய்ப்பார்ப்பது, அவை நடைபெறுவதற்கு அவசியமான வேலைகளைச்செய்தல் இவையாவும் அனேக ஜனங்கள் கடவுளைச் சிந்திக்கும்படி செய்வதற்கே பெருந் தூண்டுதல்களாகவிருக்கின்றன. இதனால் சொரூப ஆராதனை யெவ்வளவு அவசியமான தென்பது உங்களுக்கு விளங்கும்.



ஆகையால் கண்மூடித்தனமாய் அன்னிய மதஸ்தர்களின் போதனையால் மயங்கிவிடாதீர்கள். நமதுமதத்தில் எள்ளளவு குற்றங்கூறவும் இடமில்லையென்பதைப் பூரணமாய் நம்புங்கள். உங்களை மயக்கித் தம்மதத்திற்கு இழுக்கமுயல்வோர் குற்றமல்லாததைக் குற்றமென்று நீங்கள் நினைக்கும்படிசெய்ய அப்படிக் கூறுவார்கள். அதனால் மயங்கிவிடாதீர்கள். அப்படியும் உங்கள் மனம் எதிலேனும் கலக்கமடைவதாயின், உடனே அதைப்பற்றி மத ஆராய்ச்சியுடைய நம்மவர்களிடம் வினவினால் கட்டாயம் உங்கள் சந்தேகம் நீங்கிவிடும்.

நண்பர்களே! இப்போதிருந்தே தினந்தோறும் கொஞ்சக்காலத்தைக் கடவுள் பக்தியில் செலுத்துங்கள்.. அதனால் உங்களுக்குப் பலவித நன்மைகள் உண்டாகும். அவரவர்களுக்கு எந்தெந்தச் சொரூபத்தில் விருப்பமோ அததை யுபாசியுங்கள்.

குருபக்தி.—சுமார் நாற்பதைம்பது வருடங்களுக்கு முன்வரையில் நசநாட்டு மாணவர்களிடம் ஆரம்பத்தி லிருந்தே குருபக்தி யிருந்துவந்தது. அந்தோ! இப்போதோ மாணவர்களிடத்தில் குரு என்ற எண்ணமேயில்லை. சல்வியும் அதற்குத்தக்க மாதிரியாகத்தான் ஆய்விட்டது. உபாத்தியாயர் கடவுள் பக்தி என்ற விஷயங்களைப்பற்றி, அதாவது மதபோதனை கொஞ்சமேனும் செய்யாவிட்டால் அவரிடம் குருபக்தி ஜனிப்பது அரிதாகும். நண்பர்களே! அத்தகைய விஷயங்களைப் போதிக்கும் உங்கள் தாய்ப்பாஷையுபாத்தியாயரிடமேனும் நீங்கள் குருபக்தி வைக்கவேண்டியது அவசியமாகும். "எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற ஔவைப் பிராட்டியார் திருவாக்கின்படி உபாத்திமாரைக் கடவுள்போல் மதித்து பக்தியோடொழுகுவதே நலமாகும். பெற்றோர் பக்தியைப்பற்றி முன்னமே கூறினோம்.

160929

இராஜபக்தி.—குடிகளின் க்ஷேமாபிவிர்த்தியில் கருத்துவைத்துத் தன்னுயிர்போலத் தரணியிலுள்ள மன்னுயிர்களைப் பாதுகாக்கும் அரசரிடம் கடவுளுக் கிரண்டாவதான பக்திசெலுத்த வேண்டும்.

தேசபக்தி.—கடவுள்பக்தி வேண்டு மென்பது உலகமுழுமையும் ஒப்புக்கொண்டு ஒழுகுவதாகும். பெற்றோர் பக்தியும், ஏறக்குறைய அவ்வாறே. குருபக்தி நமது நாட்டிலேயே விசேஷமாயுண்டு; மற்ற நாட்டார் உபாத்தியாயரை மரியாதையோடு நடத்துவதாக விருந்தாலும், நமது நாட்டிலுள்ளதுபோல் தெய்வமாகக் கருதவேண்டும் என்று நினைப்பதில்லை. ஆனால் தேசபக்தியோ தற்காலம் மற்ற எல்லாநாடுகளைக் காட்டிலும் நம் நாட்டிலேயே மிகக் குறைவாயிருக்கிற தெனலாம். நம்தேசம் க்ஷேமமடைய வேண்டும் என்ற எண்ணம் வைத்துத் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான காரியங்களை நம்மாற்கூடியவரை செய்வதே தேசபக்தியாகும். சுயநலங்கருதாது பொது

நலமாகிய காரியத்தைச் செய்யவேண்டும். தேசபக்தி யில்லாதவன் பெற்றதாய்க்குத் துரோகம் செய்யும் சண்டாளன் போன்றவன்.

நம் தாய்நாட்டிற் பிறந்தவர்களிடம் (ஜாதிமதபேதம் பாராமல்) அன்பு வைத்தல், நம் தாய் நாட்டுப்பாஷையில் அன்புவைத்தல், நம் தாய்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களிடம் விருப்பமும் அபிமானமும் வைத்தல் இவையாவும் தேசபக்தியுடையோர் கடமைகளாகும். இவர்களே தேசாபிமானிகள். நம் நாட்டில் இப்போது இவற்றிற்கு நேர் மாறாய் நடப்போர் பலர் இருக்கின்றனர். இவர்கள் தாய் நாட்டிற்குத் தீங்கிழைக்கும் துரோகிகளே யாவார்கள். இத்தகையோர் போதனைகளைக் கொடிய விஷம்போல் வெறுத்துத் தள்ளவேண்டும்.

ஒற்றுமை.—நண்பர்களே ! ஒற்றுமையைப் பற்றிப் பாடபுத்தகங்களில் வாசித்தே யிருப்பீர்கள். ஆனால் அதன் அருமை அப்போதுங்களுக்குப் பெரும்பாலும் புலப்படுவதில்லை. நாம் முன்னேற்ற மடைவதற்கு ஒற்றுமையே மிக்க பிரதானமானது. ஒற்றுமையே ஜெயம், பிரிவினையே அபஜயம், அழிவு. எவரும் தம் எதிரிகளின் கூட்டத்தை யழிக்கவேண்டுமாயின் அந்த எதிரிகளுக்குள் பிரிவினை யுண்டாகும்படிச் செய்வதையே முக்கிய ஆயுதமாகக் கருதுகிறார்கள். பிரிவினை யுண்டானால் அவர்களுக்குள் துவேஷம், பொறாமை, அதன்மேல் சச்சரவுகள் தாமே ஏற்பட்டுவிட, அவர்கள் சுலபமாய் அழிக்கப்படுகிறார்கள்.

ஆகையால் ஜாதிபேதம், மதபேதம், முதலிய எவற்றாலும் பிரிவினையை யுண்டாக்கிக் கொள்ளாதீர்கள். பிரிவினையை யுண்டாக்குவோர் எவராயினும் சரி, அவர்கள் நம்மைக்கெடுக்க எண்ணங் கொண்ட விரோதிகளென்றே கருதுங்கள். அவர்கள் கெட்ட எண்ணம் கொள்ளாமல் அறிவீனத்தால் அப்படிச் செய்தாலும், அதனால் தீங்கேநேரிடு மென்பது சத்திய அனுபவமாதலால், அவர்கள் நமக்குத் தீங்குசெய்தவர்களே யாவார்கள். ஆதலின் நண்பர்களே ! ஒவ்வொருவரும் தாம் தாம் மேலோங்கிவர முயற்சி செய்யவேண்டியது அவசியமே யாயினும், ஒரு வகுப்பார்மேல் ஒருவகுப்பார் துவேஷம் கொள்ளாது பரஸ்பர விசுவாசம் வைத்துப் பிரிவினைக்கு இடம்கொடாமல் ஒற்றுமையைக் கைவிடாதிருங்கள்.

(தொடரும்)

சீடன்.

---

## மாதர் நெறிகள்

(274-ம் பக்கத்தொடர்ச்சி)

20. கற்பு.—சகோதரிகளே ! கற்பென்றால் என்ன என்பது அனேகம் மாதர்களுக்குச் சரியாக விளங்கவில்லை யெனலாம். புருடனுக்கு நடக்கையால் துரோகம் (அதாவது விபசாரம்) செய்யாம லிருப்பதுதான் கற்பு என்று எண்ணுகிறார்கள். அது ஒரு ஸ்திரீசெய்யக்கூடிய எல்லா



வித பாபங்களிலும் முதன்மையான பாபச் செயலாகும். ஒருத்தி அதைமட்டும் செய்யாம லிருந்துவிட்டால் கற்புடைய மாதாய் விடமாட்டாள்.

இந்த ஒரு நடக்கையில் மட்டும் நெறிதவறாதிருக்கும் மாதரில் சிலர் கணவர் தங்கள் விருப்பத்திற்கு மாறான ஒரு காரியத்தைச் செய்தால், அல்லது தாங்கள் விரும்பியதை யளிக்காவிட்டால் மனம் போனபடி பின்னால் அவர்களை வைகிறார்கள். அண்டை யயலிலுள்ளாரிடம் "இந்தச் சாவான் அழிந்து போவான், அவனைப் பாடையில்வைக்க...," என்று தங்கள் கோபம் அடங்குமட்டும் சபிக்கிறார்கள். இத்தகையோர் ஒரு விஷயத்தைப்பற்றிச் சபதம் செய்யவோ, அல்லது எதிர்காலத்தில் இன்ன சங்கதி நிகழப்போகிற தென்று தீர்க்கதரிசனம்போல் கூறவோ, ஒருவரைச் சபிக்கவோ சந்தர்ப்பம் நேரும்போது தம் முன்தானையைப் பிடித்துக்கொண்டு "இந்த முன்தானை ஒருவனுக்கே போட்டதாயின்......" என்று சபதம்செய்கிறார்கள். இது கற்பாய்விடாது.

ஔவைப் பிராட்டியார் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று அருளி யிருக்கிறார்கள். அதாவது கணவனது வார்த்தைக்கு மாறு கூறாமல் நடப்பதே கற்பாகும் என்பதாம். நாயனார்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை,"

என்று அருளியுள்ளார். கணவனையே கடவுளாக எண்ணித் தொழுபவள் பெய் என்றால் மழை பெய்யும் என்பதாம். அதாவது கணவனைத் தெய்வமாகக்கருதி நடப்பவளே கற்புடையவள் என்பதாம். இதில் கற்புடையஸ்திரீ தன் கணவனிடம் எம்மாதிரி நடந்துகொள்ள வேண்டுமென்பது பூரணமாய் விளங்கும். புருடனைக் கடவுளாய் நம்பி ஒழுகியதால் தான் நளாயினி சூரியன் உதயமாகாது செய்யவும், தமயந்தி வேடனை யெரிக்கவும், ஓர் இருடிபத்தினி திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கி விடவும், வாசுகி காட்டில் கொங்கணர் கொக்கை யெரித்ததை யறிந்து கொள்ளவும் தெய்வீக சக்தி பெற்றார்கள்.

(1) ஆதலின் கற்புடையமாது, கணவன் வார்த்தைக்கு ஒருபோதும் மாறு கூறலாகாது. இந்த ஒன்றை மட்டும் மந்திரம்போல் கருதி நடந்தால் மற்ற எல்லாக்கற்பிலட்சணங்களும் இதில் அமைந்திருக்கக் காணலாம்.

(2) கணவன் இல்லாத வேளையில் ஒருகாரியத்தைச் செய்யநேரின், அதைச் செய்வது தன் கணவனுக்குத் திருப்தியளிக்குமா என்று சிந்தித்து அளிக்கும் என்று மனச்சாட்சி கூறினால் மட்டுமே அதைச் செய்ய வேண்டும்.

21. தருமம்:—மாதர்க ளிடத்தில்தான் ஜீவகாருண்யமும் தருமசிந்தனையும் முக்கியமாக இருக்கவேண்டும். தருமம் பிறந்ததே சத்தியினிடம்.

ஈசுவருடைய இடப்பால் அமர்ந்த பார்வதி தேவியாரே காஞ்சீபுரத்தில் முப்பத்திரண்டு அறங்களையும் நடத்திக்காட்டினார்களென்றும் அதனால் அவ்வம்மைக்கு அறம்வளர்த்ததாயார் என்று ஒரு நாமதேயமும் உண்டென்றும் நூற்கள் கூறுகின்றன.

அந்தோ! அனேக மாதர்களிடம் இந்த முக்கிய குணம் மிக்ககுறைவென்று கூறலாம். வீட்டிலிருப்பதை யன்னியர்க்குக் கொடுக்க மனம் வராத உலோபகுணமே இக்குறைக்குக் காரணம். அன்னதானமே எல்லாத் தானங்களிலும் விசேடமான தருமம். அதற்குவேண்டிய உணவுப்பொருள்கள் இவர்கள் கையிலேயே யிருக்கின்றன. ஆடவர் பொருளை யீட்டினாலும் வேளைக்குப் பசியைத்தணிக்க உணவளிப்பவர்கள் இவர்களே. இவர்களே எந்நேரமும் வீட்டிலிருக்கிறார்கள். வீதியில் வந்து பிச்சைகேட்போர் "அம்மா! கொஞ்சம் சாதம் போடம்மணீ!" என்கிறார்களே யன்றி அய்யா என்று கேட்பதில்லை. காரைக்காலம்மையார் ஒரு அடியார் தம்மகத்தில் வந்து பசி என்றபோது, அச்சமயம் சாதம்மட்டும் சமைக்கப்பட்டுப் பதார்த்தம், குழம்பு முதலிய ஒன்றுமே ஆயத்தமாகாம லிருந்தது. அம்மையார் அந்த அதிதியைச் சற்றுநேரம் பொறுக்கும்படிகூடக் கேட்டுக்கொள்ளாமல், அவர் பசிப்பிணியைச் சகிக்காததைக்கண்டு இரக்கமுற்று, உடனே அதைத் தணிக்கவெண்ணி அன்னமும் பாலும் வட்டித்துக் கணவன்கொடுத்திருந்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றைப் பதார்த்தத்திற்குப் பதிலாகவைத்து அன்ன மளித்ததாலன்றோ பரமசிவத்தின் பேரருளைப் பெற்றார்.

ஆகையால் சகோதரிகளே! தருமத்தை, அதிலும் முக்கியமாக அன்னதானத்தைப் பிரியத்தோடு செய்ய மறவாதீர்கள். (தொடரும்)

சீடன்.

## இல்லறம்—ஜீவகதி.

(272-வது பக்கத் தொடர்ச்சி)

அதோகதி அல்லது சந்திர மார்க்கமென்பது கீழ்நோக்கு மார்க்கமாம். அதனாலேதான் சந்திர கதியானது, அதோகதியென்று கூறப்பட்டது. சந்திரகிரணம் குளிர்ச்சியுள்ளதும் நீர்ப்பசை யுள்ளது மாதலால் தனது கவர்ச்சியிலகப்பட்ட பொருள்களை நனைத்துக் கனதியாக்கிக் கீழே யிறங்கும்படிசெய்யும். இதனாலேதான் இம்மார்க்கத்தை நரகமார்க்கம் என்பர் பெரியோர். நரகமார்க்க மாதலால் இகழப்படுவது. கோபத்தினால் ஒருவனை நிந்திக்கும்போது "உன்கதி அதோபார்" என்றும், "உன்னை அதோகதி சேர்க்கிறேன்" என்றம் இகழ்ந்து கூறுவது சாதாரணமாய் வழங்குகின்றது. ஈண்டு ஞாபகத்தில் வைக்கத்தக்க குறியாவது சூரியகிரணம் தன் கவர்ச்சியில் அகப்பட்ட பொருள்களைத் தன்னிடத்தில் சேரும்படி மேலே இழுக்கு மென்பதும், சந்திரன் கவர்ச்சியி லகப்பட்ட பொருள்களைக் கீழே யழுத்து மென்பதும், சூரியகிரணம் பொருள்களி னிடத்திலுள்ள ஈரத்தை



யுலர்த்தி வற்றச்செய்து அதிகலேசாகச் செய்யும் இயல்புள்ள தென்பதும், சந்திரகிரணம் பொருள்களை நனைத்துக் கனதியாகச் செய்யுமென்பதுமேயாம். சமையம் நேர்ந்தமையாற் சில விஷயங்கூறி முடித்து மேலே செல்வாம்.

உலகத்தில் உற்பத்தியாகின்ற சராசரப் பொருள்களெல்லாம் சூரிய சந்திரர்களாலேயே விருத்தியாகின்றன. ஒரு வித்துப் பூமியில் விழுந்தால் சந்திரகிரணம் அதை நனைத்துக் கனதியாக்கிப் பூமியின் சத்துடன் கலக்கச் செய்யும். அவ்விரண்டு சக்திகளாலும் அவ்வித்தினின்றும் வேர் தோன்றிப் பூமியைத் துளைத்துக்கொண்டு கீழே செல்லும். சந்திரகிரணம் அவ்வித்துக்குத் தன் கிரணத்தினால் புஷ்டியையுண்டாக்கி விருத்தியாக்கும். இதனாலே வேர்வளர்ந்து பூமியிலூன்றி நிலைபெறும். இச்சந்திரன் குழந்தைகளுக்குத் தாய்போல் எல்லாப் பொருள்களுக்கும் புஷ்டியைக் கொடுத்து அவற்றை வளர்த்தலால் சராசரங்களுக்குத் தாயென்று கூறப்படும். சூரியகிரணம் அவ்வித்துக்குள் சூட்சுமமாக அடங்கியிருக்கும் ஜீவசத்தியை மேலேயிழுக்கும். அப்போது முளை தோன்றும். அந்தமுளை சூரிய கிரணத்தால் இலேசாகிக் கொழுந்துகளாகவும் கிளைகளாகவும் விருத்தியாகும். இவ்வாறு ஒருசிறிய வித்தைப் பெரிதாகச்செய்து பிரசித்தியடையச் செய்வதில், தமது குழந்தைகளைக் கல்வி, கேள்வி, ஐஸ்வரியங்களால், கீர்த்தியடையச் செய்யும் பிதாவைப்போல் இருப்பதால் சூரியனைப் பிதாவென்பர் பெரியோர். இதனாலேதான் ஜோதிஷ சாஸ்திரங்களும் சூரியனைப் பிதுர்க்கிரக மென்றும் பிதுர்க்காரகனென்றும், சந்திரனை மாதுர்க்கிரக மென்றும், மாதுர்க்காரகனென்றும் கூறுகின்றன. இவ்வாறே! சராயுஜம், அண்டஜம், உற்பீஜம், சுவேதஜம் என்கிற நால்வகைத் தோற்றங்களாகிய சராசர பேதங்களெல்லாவற்றிற்கும், சூரிய சந்திரர்களாலே யுற்பத்திகொள்க. சூரியகிரணத்துக்குச் சக்தி யதிகமாதலால் நாளடைவில் பதார்த்தங்களிலுள்ள சக்தியைச் சுண்டச்செய்து முதிரச்செய்து விடும். பூரணமாய் முற்றிவிட்டால் அப்பதார்த்தத்திலுள்ள சக்தியெல்லாங் குன்றிப்போகும்; அதுவே மரணமென்பது. இவ்வாறு பூமியிலுண்டாகிற சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் காரணம் சந்திர சூரியர்களே யாமென்பது சாஸ்திரங்களின் கருத்து. இதைப்பற்றி யெழுதத் தொடங்கினால் மிகவும் விரியுமாதலால் இம்மட்டில் நிறுத்தி மேலே செல்வோம்.

நமக்குக் குறிப்பிடப்பட்ட ஒரு வருஷகால அளவை தேவர்களுக்கு ஒருநாளாம். தைமாதமுதல் ஆனிமாத இறுதியாகிய ஆறுமாத காலமும் தேவர்களுக்குப் பகற்காலமாம். ஆடிமுதல் மார்கழி யிறுதியாகிய ஆறுமாதமும் இரவாம். பகற்காலம் உத்தராயண மெனவும், இராக்காலம் தட்சிணாயண மெனவுங் கூறப்படும். உத்தராயண மாகிய பகற்காலம் சூரியனுக்குரியது. ஆதலால் அக்காலத்தில் சூரியன் தன் பூரணகிரணங்களுடன் பிரகாசிக்

கும். அப்போது உஷ்ண மதிகமா யிருக்குமென்பது சொல்லவேண்டுவ தில்லை. தட்சிணாயணம் சந்திரனுக்குரியது. அக்காலத்தில் சந்திரனது இயற்கைக் குணமாகிய குளிர்ச்சி மிகுதியாம். மழையும், பனியும் மிகுந்திருக்கும் என்பதும் பிரத்தியட்சம். இனி பூலோகத்தாருக்கு ஒரு மாதமாகிய காலவளவை பிதிர்த்தேவதைக்கு ஒருநாளாம். சுக்கிலபட்சமாகிய பதினைந்து நாட்களும் பிதிர்க்களுக்குப் பகலாம். கிருஷ்ணபட்சம் இரவாம். நம்மவர்க்குரிய பகற்காலமும், உத்தராயணமும், சுக்கிலபட்சமும் ஒரு தன்மையன. இரவும், தட்சிணாயணமும், அமரபட்சமும் ஒரு தன்மையன. ஆதலால் பகற்காலம், உத்தராயணம் சுக்கிலபட்சம் இம்மூன்றும் சூரியனுக்குரியன. இரவு, தட்சிணாயணம், கிருஷ்ணபட்சம் இவைமூன்றும் சந்திரனுக்குரியன. சூரிய காலமென்பது ஊர்த்துவகதிக் குரியகாலம். சந்திரனுக்குரியகாலமெல்லாம் அதோகதிக் குரியகாலமாம். இதுகாறுங் கூறியதனாற் பயன்யாதோ வெனின், நமது பூர்வபிதாக்களாகிய ரிஷீசுவரர்களின் பேரறிவையும் அதுகொண்டு அவர்கள் ஜகத்தவர்க் குபகரித்திருக்கும் பெரும் பயனையும் விளக்கி மகிழ்வதற்கேயாம். அது பின்வருமாறு:—

பூர்வகன்மங் காரணமாக மாதாபிதாக்களின் சுக்கில சுரோணித சம்பந்தத்தினால் வெளிப்பட்டுச் சூரியர்களால் விருத்தியடைந்து பால, யௌவன, விருத்தாப்பிய பருவங்களை யடைந்த ஜீவாத்மாக்கள் அந்தப் பிராரப்த கன்ம முடிவிலே வியாதியினாலோ மற்றெந்தக் காரணத்தினாலோ ஸ்தூலத்தைவிட்டு வெளிக்கிளம்பும்; இதனையே மரணம் என்று கூறுவது. மரணத்தை யடைந்த ஆன்மா வேறு சரீரத்தை நாடியலையும் என்பதை முன்னரே கூறினோம். அது எவ்வாறு செல்லும், எவ்விடத்தையடையும், எச்சரீரத்தைப் பெறும் என்பது இப்போது விசாரிக்கத்தக்கது. புண்ணியகன்மங்களையே செய்து சித்தசுத்தி பெற்றுத் தவத்தான் மலங்களைத்தகித்துத் தெய்வ சிந்தனையின் ஞானம் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள் உத்தராயணத்தில், சுக்கிலபட்சத்தில், பகற்காலத்திற் சரீரத்தை விட்ட ஆன்மாக்கள் ஊர்த்துவகதியாகிய சூரியமார்க்கத்தை யடைந்து வேகமாய் மேலே செல்லும். சந்நியாசத்தை யடைந்து முற்றத்துறந்து யாதினும் பற்றற்றிருக்கும் ஜீவான்மாக்கள் ஊர்த்துவ கதியடைந்து வெகுவேகமாய் மேனோக்கிச் சென்று சூரியனையடையும். சூரியமண்டலத்தில் அநந்தமான துவாரங்களுள்ளன. அந்தத் துவாரத்தின் மார்க்கமாய்ச் சென்று சூரியனைக்கடந்து மோட்சவுலகமாகிய மீளாக்கதியை அடைந்து நித்தியானந்த சுகம்பெறும். பீரங்கியினின்றும் வெளிப்பட்ட குண்டு வெகு வேகமாய்ச் செல்வதுபோலக் கபாலத்தைக் கீண்டுகொண்டு மேல் நோக்கிச் செல்லும் ஆன்மாவைச் சூரியனும் ஆக்ரஷண சக்தியால் அதிக சீக்கிரத்தில் இழுத்துக்கொள்வன். இருவகை வேகத்தைப் பெற்றுச் செல்லும் ஆன்மா அப்பொழுதே சூரிய மண்டல ரந்திரமார்க்கமாய் மோட்சவுலகத்தை யடைந்துவிடும். யுத்தகளத்



தில் முகந்திரும்பாமற் சண்டைசெய்து உடலைவிட்ட ஆன்மாவும் அப்பொழுதே சூரியகிரணத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு வீரசொர்க்கத்தையடையும்.

அநேக பாதகங்களைச் செய்திருப்பது மன்றி யுத்தத்தில் அநேக ஜீவர்களை வதைத்த கொலையாகிய மஹாபாதகத்தையும் செய்த ஆன்மா உடனே சொர்க்கத்தை யடைவதற்குக் காரணம் யாதெனின், கூறுவோம். முன்னர் மரணத்தறுவாயில் எந்த எண்ணத்துடன் சரீரத்தை விடுகிறதோ அதற்கேற்ற சரீரத்தையே ஆன்மா அடையும் என்ற நூல்களின் கருத்தை வெளியிட்டோம். யாதொரு எண்ணமு மில்லாத ஆன்மா மோட்சத்தை யடையுமென்பதுங் கூறினோம். ஆதலாற் பற்றற்ற சந்நியாசிகள் மோட்சத்தை யடைகின்றார்கள். யுத்தகாலத்தில் மனைவி, மக்கள், பொருள், ஒன்றிலும், எண்ணமில்லாமல் ஜயம் ஒன்றையே கருதிப் போர்புரியும் யுத்தவீரனது மனதி லாசையொன்று மில்லாமையால் அத்தருணத்தில் சரீரத்தைவிட்ட ஆன்மா சந்நியாசியோ டொக்கும். ஜயமென்ப தொன்றுமட்டும் அவன் மனதில் நின்றமையால் அதன் பயனாகத் துன்பங்களை ஜயித்து வீரசொர்க்கத்தில் பெரும் போகத்தை அனுபவிக்க நேர்ந்தது. அந்த யுத்தவீரனது ஆசையாகிய பசை யற்றமையால் அவனது சூட்சும சரீரமாகிய அணு வெகு லேசாய் நிற்கச் சூரியன் அதிக சீக்கிரமாய் மேனோக்கி யிழுத்துக்கொள்வன். இது காரணமாகவே யுத்தவீரர் பாபிகளாயிருந்தாலும் சொர்க்கத்தையடைகிறார்கள். இக்கருத்தினாலேயே, "சகல பாதகங்களையும் செய்த ஒருவன் மரணத்தறுவாயில் நாராயணா வென்று வைகுண்டத்தை யடைந்தான். சிவ என்று கைலாயத்தை யடைந்தான்" என்று இதிகாச புராணங்கள் கூறின. ஒருவன் பாபியாயிருந்தாலும் மரணவேதனை பொறுக்க முடியாமல் தன் குலப்பெரியார் வழிப்பட்ட தெய்வத்தைச் சிந்தித்து வருந்துவானானால் அவன் அந்தத் தெய்வவுலகத்தை யடைவான் என்பது சித்தம். இது புராணங்களின் கருத்து. சிலர் இவ்வாறு புராணங்கள் கூறியதுபொய் யென்று கூறிப் பரிச்சிப்பார்கள். அவர்கள் அறியாமையே யதற்குக்காரணம். ஒருவன் மரணகாலத்தி லாசையற்றுத் தெய்வச்சிந்தனையோ டிருப்பானானால் அதன் பயனாகிய போகசரீரத்தை யடைவது சித்தமே.

(இன்னும்வரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## ஓர் விடை

கடந்த (தைமாத) சஞ்சிகையில் பக்தியைப் பற்றி நாம் வரைந்திருந்ததில் " இராஜோகுண பக்தி என்பது ஆடம்பரமாய் மதச் சின்னங்களை யணிதல்......" என்று கூறியிருப்பதைப்பற்றி ஒரு நண்பர் விபூதி உருத்திராக்கம் முதலிய சின்னங்களைப் பற்றிச் சமயாசாரியர் முதலியோர்கள் எவ்வளவோ சிறப்பித்துக் கூறியிருக்க அவற்றை யணிவது சத்துவ பக்தியல்ல என்றால்

"அநாகரீகம் பரவிவரும் இக்காலத்தில் அனேகர் அவற்றை யணியப்படாதென அர்த்தம் செய்து கொள்வார்கள்" என்று வரைந்துளார்.

விபூதி உருத்திராக்கம் முதலியவற்றைப் பற்றி ஆகமங்களில் எவ்வளவோ சிறப்பாய்க் கூறப்பட் டிருப்பதும், சம்பந்தர், அப்பர்முதலிய மகான்கள் விபூதியின் மகிமையையும் பெருமையையும் புகழ்ந்து கூறியிருப்பதும் சைவசமயிகள் யாவரும் அறிந்தவிஷயங்களே. இங்கு பக்தியைச்சத்துவம், இராஜசு, தமசு என்று மூன்றாகப் பாகுபாடுசெய்து கூறியது ஆன்றோ ரருளியதேயன்றி நாமே பிரித்ததன்று. மனோநிலைமையைக் கருதியே இப்பிரிவினை கூறப்பட்டது.

விபூதிருத்திராக்கம் முதலிய சின்னங்களை யணிவதே இராஜோகுண பக்தி என்று கூறப்படவில்லை. அவற்றை ஆடம்பரமாக அணிதல், அதாவது அழகு, அல்லது புகழ்ச்சியைக் கருதி, 'ஆ! இவர் மிகப் பக்திமான்' என்று பலரும் வியக்கும்படி ஆடம்பரமாகக் கிரியையாதிகளைச் செய்தலே, இராஜோகுணபக்தி என்று கூறப்பட்டது.

பக்தி மனதைப் பொறுத்த தன்றி வெளி விவகாரங்களைப் பொறுத்த தன்று. அப்படியாயின் அசேதகமான எச்சிற்பட்ட மாமிசத்தைப் பரமசிவத்துக்கு நிவேதனம் செய்தவரும், எச்சில் நீரைச் சிவலிங்கத்தின்மேல் பெய்தவருமாகிய திண்ணனாரும், செங்கற்களைச் சிவலிங்கத்தின்மே லெறிந்த சாக்கியரும், பரமனருட்குப் பாத்திரராகி யிருக்கமாட்டார்கள். விபூதிக்கிருக்கும் மகிமையும், அதை யணிவோரின் திடபக்தியைப் பொறுத்ததேயாகும். சம்பந்தர் திருநீற்றைத் தடவிப் பாண்டியன் சுரநோயை நீக்கினார். சாதாரணமான ஒருவர் அவ்வாறுசெய்ய முடியுமோ? முடியாது. ஆகையால் ஈண்டு மனநிலைமையைக் கருதி இராஜோகுண பக்தி என்றதேயன்றி விபூதிருத்திராக்கமணிவது இராஜோகுண பக்தி என்று பொருள் கொள்வது தவறாகும்.

பத்திரிகாசிரியர்.

---

## கம்பன்.

இராமாயணத்தைத் தமிழில் அருமையான செய்யுள்ரூபமாக அமைத்து என்றும் அழியாப்புகழை யடைந்த கவிச்சக்ரவர்த்தியான கம்பநாட்டாழ்வாருக்குக் கம்பனென்னும் பெயர் வருவதற்குப் பலர் பலகாரணம் கூறுகின்றனர். கம்பங்கொல்லையில் காவல் காத்தமையால் கம்பனென்று நாமம் உண்டாயிற்றென்பார் சிலர். வேறு சிலர், அவர் அரசன் முன்பு கையில் கம்பெடுத்தவண்ணம் நின்றபோது இக் 'கம்பனை' என்று அரசன் விளித்தமையால் கம்பனென்னும் திருநாமம் உண்டாயிற்றென்பார். தமிழ்ப்பாஷையில் தேர்ந்த அனைவரும் இவ்விரு காரணத்தையே பெரும்பாலுங் கூறுகிறார்கள். தமிழில் புலமைவாய்ந்து அருமையான உதவிகள் செய்து சிறுகாலம்



முன்பே விண்ணுல கடைந்த ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் அவர்கள் "கம்பநாட்டாழ்வார் திருவுருவப்படத்தில் அவர் ஒரு கம்பத்தின் கீழ் நிற்பதுபோல் காட்டியிருப்பது, கம்பன் என்ற பெயருக்கும் 'கம்பம்' என்ற சொல்லுக்கும் பொருத்தத்தை யுணர்த்தும் என்று கூறினார்கள். சில தினங்களுக்குமுன் எமது பாடசாலையில் நடந்த கம்பராமாயணப் பிரசங்க காலத்தில் எங்கள் முதலுதவி உபாத்தியாயர். ம-அ-அ-ஸ்ரீ, பஞ்சாபகேச சர்மா அவர்கள். பி. ஏ. எல்-டி. கம்பனுடைய திருநாமத்தின் காரணங்களை விளக்கிக் காட்டியது வெகு அழகாக இருந்தமையால் அதைப் பலர் அறியும்படி ஆனந்தனில் வெளியிட வேண்டி எழுதுகிறேன்.

கம்பம் என்றால் தூண் என்று சாதாரணமாகப் பொருள்படும். கம்பன் என்றால் தூணிலிருந்து உண்டானவர். அல்லது தூணில் இருப்பவர், தூணுக்கு உரியவர் என்று பொருள். உலகத்திற் கெல்லாம் க்ஷேமத்தைக் கொடுத்தற் பொருட்டும், உலகத்தை ஹிரண்யனுடைய வன்மையினின்று நீக்குதற் பொருட்டும், குழந்தை பிரஹலாதனைத் துன்பத்தினின்று காப்பாற்றவும் ஓர் கம்பத்தினின்று உற்பவித்த ஸ்ரீமன் நரஸிம்ஹமூர்த்திக்குக் கம்பன் என்று ஒருவாறு பெயர் கூறலாம். இப்பொழுதும் கம்பத்தின் மேல் காலை உதைத்துப் படுத்துக்கொண்டால் பெரியோர் கூடாது என்று சொல்வதற்குக் காரணம், பிரஹ்லாதன் 'அந்த நாராயணன் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார்' என்றவுடன், எந்தத்தூணைக் காட்டி 'இங்கும் அந்த நாரணயணன் இருக்கிறானா காட்டு' என்று அவ்விரணியன் கேட்பானோ என்று எதிர் பார்த்து ஒவ்வொரு ஸ்தம்பத்திலேயும் நாராயணன் ஆயத்தமாக இருந்தமையால், கம்பத்தை ஈசுவரன் இருப்பிடமாகக் கொள்வார் என்பதே. கம்பன் என்று நரஸிம்மமூர்த்திக்குச் சாதாரணப் பெயர் ஒன்று. சாதாரணமாக வைத்தீஸ்வர ஸ்வாமியின் 'வினைதீர்த்தான்,' என்ற பெயரை 'தீத்தான்' என்றும் மஹாவிஷ்ணுவைக் 'காத்தான்' என்றும் கிராம்யப் பெயர்களால் வழங்குவதையும், இப்பொழுதும் பலர் வாசிப்பதையும் காண்கிறோம். அம்மாதிரியே கம்பன் என்னும் நரஸிம்மனின் திருநாமத்தை கவிச் சக்கரவர்த்தியான கம்பன் மாத்திரமேயல்லாமல், அவர் பெரியோரும் வகித்துவந்தார்கள். இதனால் இவர்கள் யாவரும் நரஸிம்மாவதாரத்தை உபாஸிக்கும் சிறந்த பக்தர்கள் ஆவார்கள். கம்பநாட்டாழ்வாரும் "இராமாயணம் பாடிய விஷ்ணுபக்தரே யானாலும், அதிலும் சிறந்த நரஸிம்ம உபாஸனையுள்ளவர் என்பது அறிய வேண்டியது. ஏனென்றால் இராமாயணத்தைத் தமிழில் பாடும் முன், ஆதியில் வால்மீகி ரிஷி வடமொழியில் பாடிய இராமாயணத்தை ஒட்டி ஆராய்ந்து தமிழில் நான் பாடுகிறேன் என்று பீடிகையில் சொல்லிப் பாடிய கம்பநாட்டாழ்வார், வால்மீகி ராமாயணத்தில் காணாத 'ஹிரண்யவதைப் படலம்' என்ற விஷயத்தை விரிவாக எடுத்துரைத் திருப்பது என்ன காரணம்? மேலும் நரஸிம்மாவதாரத்தின் மகிமையை விளக்கச் சில செய்யுள்கள் உபமான

மாகவும் காணலாம். இது காரணங்களால் கம்பநாட்டாழ்வார் நரஸிம்மமூர்த்தியின் சாதாரணப் பெயராகிய கம்பன் என்பதைக் கொண்டாரென்றும், அவரிடத்தில் விசேஷ பக்தியும் அபிமானமும் உள்ளவரென்பதும் விளங்கவில்லையா? ஆகையால் கம்பு வைத்திருந்ததினாலும், கம்பங்கொல்லை காத்திருந்ததினாலும், கம்பத்தோரமாய் நின்றமையாலும், அல்லது சபையினிடத்துள்ளவரை இனிமையாகப்பாடி சிரக்கம்பம் செய்வித்தலாலும் கம்பனென்று திருநாமம் உண்டாயிற்றென்பதைப் பார்க்கிலும், ஸ்ரீமந்நாராயணன் சிறந்த அவதாரமாகிய நரஸிம்ம மூர்த்தியின் சிறந்த பக்தனானதால் கம்பன் என்றபெயர் உண்டாயிற் றென்பது, இராமாயணத்தி லிருந்து மேற்காட்டிய காரணங்களால் பொருந்துகின்ற தென்று உரைத்தார்.

மஹாதேவன்,
திண்டுக்கல்.

---

## அம்மை-பிள்ளை.

### சிறப்புப்பெயர் ஈறு.

பெயர் இருவகைப் படும். பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என. மக்கள், பெண்கள், சிறுவர் இவைபோன்றன பொதுப்பெயர்; இராமன், கோமதி, கந்தன் இவைபோன்றன சிறப்புப்பெயர்.

இந்தியாவில் மக்கள் பல இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர். சிலர் சமயம் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர்; வேறு சிலர் தொழில் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர்; இன்னும் சிலர் ஒழுக்கம் பற்றிய இனக்கட்டு உடையவர்களாக இருக்கின்றனர். மகமதியர் சமயம் பற்றிய இனக்கட்டு உடையர்; கம்மாளர் தொழில் பற்றிய இனக்கட்டு உடையர்; வேளாளர் ஒழுக்கம்பற்றிய இனக்கட்டு உடையர்.

இவ்வாறு பல வேறுபட்ட இனத்தாருள் கார்காத்தார், வேளாளர் முதலிய சில இனத்தார். 'அம்மை' என்னும் சொல்லை, பெண்பாற் சிறப்புப் பெயரீறாகவும், 'பிள்ளை' என்னும் சொல்லை ஆண்பால் சிறப்புப்பெயர் ஈறாகவும் கொள்கின்றனர். இத்தகைய சொற்களை நமது முன்னோர் எடுத்தாண்டு கொண்டதன் கருத்தையே இப்பொழுது நாம் ஆராய்ச்சிசெய்தல் வேண்டும்.

நம்முன்னோர் தாங்கள் நிற்கின்ற உயர்ந்த நிலையில் வழங்கத்தக்கசொற்களையும், சொற்றொடர்களையும், அந்நிலையில் நிற்காதவர்கள் இடையிலும் வழங்குதல் உண்டு. எடுத்துக் காட்டாக, 'சிவனே யென்றிரு' என்னும் சொற்றொடரைக் கூறலாம். சிவனைப்பற்றியும், சிவனே யென்றிருத்தலைப் பற்றியும் ஒரு சிறிதும் அறியாத சிறுமகாரிடத்தும் இச் சொற்றொடரை வழங்கி விடுகின்றனர். இதனை எவ்விடத்தில் வழங்குகின்றனர்? 'ஒன்றும் செய்யாதிரு' என்று சொல்லவேண்டிய இடத்தில் வழங்குகின்றனர். ஆகவே சிறுவர்களும் 'ஒன்றும் செய்யாது வாளா இருந்தேன்' என்று



சொல்லவேண்டிய இடத்தில், 'சிவனேயென் றிருந்தேன்' என்னும் சொற்றொடரை வழங்குகின்றனர். இப்பயிற்சி சைவசமயத்தை விட்டு விட்டு வேறு சமயத்துள் நுழைந்த பின்னரும் அவர்களை விடுவதில்லை. ஒருவேளாளர் தம்மனைவி மக்களோடும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். அவருடைய மக்களுள் ஒரு சிறுவன் ஒருநாள் இரவில் உடல் நலமில்லாமையை முன்னிட்டு ஒன்றும் சாப்பிடாது படுத்துக் கொண்டான். மறுநாட்காலையில் அவனைப்பார்த்து, 'நீ நேற்றிரவு என்ன சாப்பிட்டாய்?' என்று கேட்டபோது, 'ஒன்றும் சாப்பிடவில்லை; சிவனே யென்று படுத்துக்கொண்டேன்' என்று சொன்னான்.

இவ்வழக்கத்தால் நன்மை விளைகின்றதா? அன்றித் தீமை விளைகின்றதா? என்று ஆராய்ந்தால், நன்மை விளைகின்ற தென்றே அறிகின்றோம். எப்படி? அறிவுடையான் ஒருவன் தனியே இருக்கும்போது, "நம்மைப் பெரியோர் 'ஒன்றும் செய்யாது வாளாவிரு' என்று சொல்லவேண்டிய இடங்களில் எல்லாம் 'சிவனே யென்றிரு' என்கின்றார்களே! அது ஏன்? வேலையற்ற நேரங்களில் எல்லாம் 'சிவனே என்றிருக்க வேண்டும்' என்பது அப்பெரியோர் கருத்தா? அப்படியாயின் 'சிவன்' என்பது என்ன? சிவனே யென்றிருக்குமாறு எப்படி? இவற்றை எப்பெரியாரிடம் கேட்டறியலாம்? என் றித்தகைய ஆராய்ச்சிகளை யெல்லாம் அச்சொற்றொடர் அவனுக்கு உண்டாக்கி, அவ்வழியால் அவன் உயர் நிலை அடைய உதவிசெய்கிறது. இங்ஙனம் இவ்வழக்கத்தால் நன்மைவிளைகிறது என்று அறிகிறோம்.

இனி இவ்வாறே மெய்ப்புலவர்கள் நிற்கவேண்டிய உயர்ந்த நிலையை விளக்கவே 'அம்மை' 'பிள்ளை' என்கிற சொற்களைச் சிறப்புப் பெயரீறாக, நம்முன்னோர் கொண்டு வழங்கியுள்ளார்கள். அதுபற்றியே உண்மை அறிஞராம் பட்டினத் தடிகளைப், பட்டினத்துப் பிள்ளையென்றும் (வழங்குகின்றார்கள், அழைக்கின்றார்கள்; உண்மை அறிவாளர் நிலையாவது, நன்மங்கையரைத் தாய்போலக் கருதித், தாம் சேய்போல் இருப்பதுவே, தாய் = அம்மை; சேய் = பிள்ளை. இவ்வுண்மையை,

" பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சை யெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கை யரைத்
தாய்போற் கருதித் தமர்போ லனைவர்க்குந் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர் கண்டீர் உண்மை ஞானந் தெரிந்தவரே "

என்ற பட்டினத்துப் பிள்ளையார் அருண்மொழியாலும் அறியலாம்.

வீ. குமாரவேலுப்பிள்ளை.

## ஓர் கடிதம்

அன்பார்ந்த ஐயா,

நம் அருமை "ஆனந்தன்" நானது தைமீ 4உல் என்னிடம் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்துச் சுமார் ஒருமாதகால மானதாலும் சங்கராந்திப்பண்டிகை சமயமானதாலும், வெகுபிரியத்தோடு வரவேற்று அவனி

டத்திலுள்ள விஷயங்களை வாசிக்க விரும்பினேன். வாசித்துக்கொண்டு வரும்போது 258-வது பக்கத்தில் "கடவுள் உருவமா அருவமா," என்ற விஷயத்தைப் பார்த்து வாசித்துக்கொண் டிருக்கும் போது அவ்விஷயம் முன் ஒரு காலத்தில் நான் வாசித்த ஞாபகம் வந்தது.

ஆச்சரியத்துடன் யோசிக்க, அவ்விஷயம் முன்பு, அதாவது சென்ற ரௌத்திரி௵ ஐப்பசி௴ 2உல் விருதுப்பட்டி "சைவப்பிரகாசசபை"யிலிருந்து இலக்கம் 4 இட்ட துண்டுப் பத்திரிக்கையிலுள்ள விஷயமென அறிந்தேன்.

இவ்விஷயம் இவ்வூர் வாசியான மேற் சொல்லிய சபையின் அங்கத்தினரும் தற்சமயம் திருவாலவாயில் வசிக்கின்ற சைவசித்தாந்த தமிழ்த்திலகம் திருமறைவன் சீனியா பிள்ளையவர்களால் யெழுதி வெளியிடப்பட்டது.

அப்படியிருக்க நம் ஆனந்தன் 259-வது பக்கத்தில் கையொப்பமிட்டவர், தாமே அவ்விஷயத்தை யெழுதியதாகப் பாவனை காட்டி அவருடைய திருநாமத்தையும் அவ்விஷயத்தின் கீழ் நாட்டி யிருக்கின்றார். அவருடைய புத்திசாலித்தனம் இம்மட்டோ டன்றோ !

நம் அருமைச் சகோதரனாகிய ஆனந்தன், என்னைப்போலொத்த அறிவிலிகளுக்கும் நாம்பேசும் விஷயத்தை வெளியிட்ட நம் அருமைச் சகோதரருக்கும் எத்தனையோ தடவை இம்மாதிரி அற்ப விஷயத்தில் தலையிடக் கூடாதென்று புத்திசொல்லி யிருக்கின்றதை அதன்படி நடக்கத்தெரியாத நாம் என்ன விஷயங்களை நம் ஆனந்தனுக்கு எழுதப் போகின்றோம் என்பதை நம், 259-வது பக்கத்தில் கையொப்ப மிட்டிருக்கிற திருநாமத்தையுடைய சகோதரர் அறியவில்லைப் போலும்.

இவ்விஷயமாக, நான் அதிகம் வரைய அஞ்சியும் நம் ஆனந்தனே இதற்குப் பரிகாரம் நடத்திக்கொள்வா னென்று நினைத்தும் இம்மட்டோடு நிறுத்துகின்றேன்.

நான், நம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால்:—

நாம், நம் ஆனந்தனுக்கு உண்மையான முன்னேற்றத்தைக் கருதிய சகோதரர்களாக——புத்தியில் சிறந்த ஆனந்தனின் வார்த்தைகளைக் கடவாத சகோதரர்களாக——நாம் ஆனந்தனுக்குத்துரோகம் நினைக்காத சகோதரர்களாக, உண்மையாக இருக்கும் பக்ஷத்தில் 259-வது பக்கத்தில் கையொப்பமிட்ட நம் சகோதரர் நடத்தையை மேற்கொள்ளாமல் நம் ஆனந்தன் இது விஷயமாக நமக்குச்சொல்லிவந்ததையும் இனிச் சொல்லப்போவதையும் அறிந்து அதன்படி நடப்பதே நம் ஆனந்தனுக்குச் செய்யும் நன்றியென்று அறிய விரும்புகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
S. சுந்தரராஜ பிள்ளை,
விருதுப்பட்டி.



குறிப்பு:—இதில் குறித்துள்ள வியாசத்தை நாம் தெய்வசங்கல்பமாகச் சுமார் மூன்றுமாதகாலம் வெளியிடாமலே யிருந்தோம். அதன்பிறகு அவர் எமக்கு 3, 4 கடிதங்கள் வரைந்து தொந்திரவு செய்தபிறகே அதைப் பிரசுரிக்க நேர்ந்தது. இல்லாத கௌரவத்திற்கு ஆசைப்படுதல் உள்ள கொஞ்சம் கௌரவத்தையும் போக்குவதோடு அவமானத்தை யுண்டாக்குமென்று நாம் பன்முறை வரைந்திருந்தும், இத்தகைய இழிவான நடக்கையுடையோர் இன்னும் நமது ஆனந்தனுக்குத் தீங்கிழைக்க முற்படுவதை யறிய மிக்க விசனிக்கிறோம். இதைப்பற்றி வரைய நேர்வதே நமக்கு மிக்க மன வருத்தத்தை யுண்டாக்குகிறது.

பத்திரிகாசிரியர்.

---

## பசு.

சகோதர சகோதரிகாள் !

பசுவிற்குப் பல நாமதேயங்க ளிருப்பினும், அவைகளில் முக்கியமானது, ஆனினம்.

"அமரர்கண்முடியு மறுவகையானும்" என்ற சூத்திரவாயிலாய் வாழ்த்தப்படும் பொருள் அறுவகையென விளக்கி அவற்றுள் பசுவை ஒன்றென எடுத்து வாழ்த்தியிருக்கிறார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'ஆனினம் வாழ்க,' என்றது என் ?

"தங்குமகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன
பொங்குபுனித தீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன
துங்கவமரர் திருமுனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
வங்கமனைத்துந் தாமுடைய வல்ல வோநல் லானினங்கள்.
(சண்டேசுர நாயனார் புராணம்)

1. வேதாவுங் கரியவனு மாவினது கோட்டடியின் விளங்கி வாழ்வர்
கோதாவி முதற்றீர்த்தங் கோட்டினுதிச் சராசரமுங் கூடி நிற்கு
மீதான சிரத்தமலன் விமலையத னடுநெற்றி விசாக னுசி
மீதானந் தனிலதனுண் ணாசிதனி னுகேசர் விளங்கு வாரே.

2. ஆசகல விருகன்ன நாப்பணச்சு வினிதேவ ரமர்ந்து வாழ்வர்
தேசுடைய பரிதிமதி நயனத்திற் றந்தத்திற் செறியும் வாயு
வோசையுறு நாவதனில் வருணனுமை மகளோங்கூங் கார நெஞ்சி
னேசமுற யமனியக்கர் கண்டதலத் தெந்நாளு நிலவு வாரே.

3. ஒட்டத்தி லுதயாத்த மனசந்தி யிவையுறையு முறைவன் கண்டத்
தீட்டுடைய விந்திரனே யிமிலிருப்ப ரருகரென வியம்புந் தேவர்
வாட்டமிலாச் சாத்தியரே வாழ்வார்க ளுரமதனி லனில வாயு
நீட்டியதா ளொருநான்கின் மருத்தென்பர் முழந்தாளி னிலவு வாரே.

4. குரத்தினுதி பன்னகரே குடிகொள்வர் காந்தருவர் குதத்தி னுப்ப
ணிருப்பார மகளிர்கண மிவரெல்லா மேற்குரத்தின் முதுகி னெல்லை
யுருத்திரரே சந்துதொறு முறைவார்கள் வசுதேவர் பிதிர்க்க ளோங்கிப்
பகுத்தவரைப் பலகைதனிற் பகத்துறைவ ரெழுமாதர் பரிவு கூர்ந்தே.
5. திருமகளே யபானத்தி னுகேச ரடிவாலிற் சிறந்து வாழ்வ
ரிரவியொளி வாலின்மயி ரிலங்கியிடுஞ் சுரந்திதா னேயு நீரின்
வாமுடைய யமுனைமய மதுதன்னின் மாதவர்க ளுரோமம் வாழ்வ
ருரமுடைய பூதேவி யுதரத்திற் பயோதரத்தி னுததி யெல்லாம்.
5. துடரத்தி னிதையத்திற் றழைத்தமுக மதுதன்னிற் றவரு மங்கி
கடனுடனே காருகபத் தியமெழுவா யொருமூன்றுங் கடின வென்பி
னுடலுறுசுக் கிலந்தனினு முறையுமக வினையனைத்து முறுப்புத்
திடமுறுகற் புடைமடவார் செறிந்திருப்பா ரிம்முறையைச் [தோறுஞ்
[சிந்தை செய்தே.

இதனால் பசுவின் கொம்பினடியில் பிரமவிஷ்ணு வசிக்கிறார்கள். கொம்பினுனியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சகல சராசரங்களும் பொருந்தியிருக்கும். சிரசில் பரமசிவனும், நடுநெற்றியில் பார்வதியாரும், நாசியில் முருகவேளும், உண்ணாசியில் திக்குப்பாலகர்களும், காதுகளில் அச்சுவினி தேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில்வாயுவும், நாவில் வருணனும், ஊங்காரத்திற் கிடமாகிய நெஞ்சில் சரஸ்வதியும், இருதயத்தில் யமனும், மார்பில் காந்தருவரும், உதட்டில் காலைசந்தி மாலைசந்தி தேவதையும், கழுத்தில் இந்திரனும், இமிலில் சூரியனும், மார்பில் சாத்தியரும், கால்களில் வாயுவும், முழந்தாளில் மருத்துக்களும், அசுவினிதேவர்களும், குரத்து நுனியில் நாகலோகத்தாரும், குரத்து நடுவில் காந்தருவரும், மேற்குரத்தில் தேவமாதர்களும், முதுகில் உருத்திரரும், சந்துகளில் வசுக்களும், அரைப் பலகையில் பிதிர் தேவர்களும், பக்கத்தில் சத்த மாதர்களும், குதத்தில் இலக்ஷ்மியும், அடிவாலில் தேவர்களும், வால்மயிரில் சூரியனொளியும், கோசலத்தில் கங்கையும், கோமயத்தில் யமுனையும், உரோமத்தில் யாதவர்களும், வயிற்றில் பூதேவியும், முலையில் சமுத்திரமும், வயிற்றில் கார்கபத்தியமும், இருதயத்தில் தக்கணாக்கினியமும், முகத்தில் ஆகவனீயமும், எலும்பிலும் சுக்கிலத்திலும் யாகாதிகளும், ஏனைய அவயவங்களில் கற்புடை மகளிரும் வாழ்வார்கள். இவ்வானினங்களின் அவயவங்களெல்லாவற்றிலும் சகல தீர்த்தங்களும், தேவர்களும் முனிவர்களும், இருத்தலால் எல்லாயோனிகளிலும் இவை சிறந்தனவெனக் கொள்ளப்பட்டன. பசுக்கள் இம்மைமறுமை இரண்டிலும் பயனைத்தரும். இப்பசுக்கள்-நந்தை-பத்திரை - சுரபி-சுசீலை - சுமனை—என ஐந்து வகைப்படும். அவைகளில் நந்தை கருமை கலந்த பொன்னிறமும், பத்திரை கருநிறமும், சுரபி வெண்ணிறமும், சுசீலை புகைநிறமும், சுமனை செந்நிறமும் உடையன.



இப்பசுக்கள் சிவபெருமானது சந்நிதிக்கணுள்ள இடபதேவரின் பக்கத்தி லிருந்தன. ஆகவே ஆனினம் என்பது ஆணும் அதனது இனமாகிய விடையும் என்பது பொருள் பயக்கும். பயக்கவே பரமசிவமும் பார்ப்பதி தேவியாரும் ஆரோகணித் தருளப் பெறுதற் குறியனவாயும் தருமசொரூபமாகவு மிருக்கின்றன. இதனை

உள்ளுந் தகைமை யினிப்பிறவே றுளவே யுழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தா ரணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேவிச் சுரபிகுலம்.

என்பதாலறிக.

இவற்றைச் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டுப் பூமியிற் பிறக்கச் செய்தலால் அவை ஆதியிலே பாற்கடலின் வழியாய்த் தோன்றிப் பின் பூமியில் விளங்கின. இப்பசுக்களின் மகிமை சர்வோத்தமம் என்னும் சிவாகமத்தின் உபதேசம் ஐந்தனுள் ஒன்றாகிய சிவதருமோத்தரத்தில் கோபுரவியலில் விஸ்தரிக்கப் பட்டது.

லௌகீக வைதீக கருமங்களுக்கு இன்றியமையாப் பொருள்களாகக் கொள்ளப்பட் டிருக்கின்றவை எவை? பசுக்கள் தரும்படியான பால்தயிர் நெய் கோசலம் கோமயம் என்பவைகளே.

ஔஷதங்களுக்குள் லேகியம் கிருதம் முதலானவைகள், பசுக்கள் தரும் பால் நெய் முதலியவை இன்றி முடியுமா? முடியாவே! நோவானத்தைச் சுத்திசெய்யவும், பாஷாணாதி விஷங்களைப் போக்கவும், விஷபேதிக் காதாரமாயுள்ள விஷக்காற்றினை யொழிக்கவும், விஷஜந்துக்கள் அணுகாதிருக்கவும் பிரதான கருவியா யிருப்பதெது? கோமயம். இன்றைக்கும் ஸ்மார்த்தர் வைணவர் முதலிய சமயிகள் பலராலும், சுத்தமுடைப் பொருளாகவும் பிறவற்றைச் சுத்தமாக்கும் பொருளாகவும் மதிக்கப்பட்டு வருகின்றது எது? கோமயம் என்னும் பசுஞ்சாணமே. புறத்திலுள்ள எவ்வித துர்க்கந்தங்களையும் எவ்வித அசுசிகளையும் நீக்குகின்றது எது? கோமயம் என்னும் பசுஞ்சாணமே.

மகோதர முதலிய நோய்களை நீக்கவும் பூச்சிபுழு முதலியவை அணுகாதிருக்கவும் உபயோகப் படுவதா யிருப்பது எது? கோசலமே. சில ஔஷதங்களுக்கு அநுபானமாக அப்பசுக்கள் தரும் பால் தயிர் வெண்ணெய் இவை அவசியம் வேண்டி யிருத்தலோடு, அவ்வச் சமயத்தாரும் சாதியாரும் தத்தம் தேகபோஷணைக்கு ஆவின்பால், தயிர் வெண்ணெயையே மிகச்சிறந்தனவாகக் கொள்கின்றனர். ஆயுள்வேதக்காரரும் பற்பல மருந்துகளைப் பசுஞ்சாணவறட்டிகொண்டு புடமிடுவதோடு, அவ்வறட்டிகொண்டு சமைத்தவுணவு மகா புனிதமாயும், நோய்தீர்க்கு மருந்தாகவும் இருக்குமென்பர்.

(இன்னும் வரும்)

வா. ந. வேணுகோபால் பிள்ளை.
செங்கழுநீர்மேடு, வாயலூர்.

## கடிதம் வரைவோர்க்கு ஓர் அறிவிப்பு.

1. அனுப்பும் வியாசத்தின் அடியில் தங்கள் பெயரை வெளியிடாது புனைப்பெயர் கூறுவோரும், பத்திரிகாசிரியருக்குத் தங்கள் பெயர் விலாசம் யாவும் தெரிவித்தாலன்றி அந்த விஷயம் பிரசுரிக்கப் படமாட்டாது.

2. சந்தேகங்களைத் தெளிவித்துக் கொள்ள விரும்புவோரும் அவ்வாறே பெயர் விலாசம் இவற்றை யறிவிக்க வேண்டும். பலபேருக்கு ஏற்படக்கூடிய சந்தேகத்திற்கு மட்டுமே சஞ்சிகையில் விடையளிக்கப்படும், மற்றவற்றிற்குக் கேட்போர்க்கு மட்டுமே நேரே பதில்அளித்து விடப்படும்.

பத்திரிகாசிரியர்.

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(278-ம் பக்கத் தொடர்ச்சி.)

**ஸ்டேஷன் மாஸ்டர்:**—முன்னூற் றைம்பது ரூபா யாகும். ஆனால் எந்தச் சமயத்திலும் எதிரில் ஸ்பெஷல் வண்டி வந்தாலும் வந்துவிடும்.

**ஆனந்தஸிங்:**—நான் இராஜாங்கத் துப்பறிபவன். ஒரு மிக்க முக்கியமான குற்றத்தை நான் கண்டுபிடிக்கவேண்டும். இதோபார் என் முத்திரை. இதில் என்ன ஆபத்து நேர்ந்தாலும், நான் அதற்கு முழுதும் ஜவாப்தாரி. நான் மூன்றுமணிக்குப் புறப்பட்டு அந்த அரசஞ்சாலைத் திருப்பத்திற்குச் செல்லவேண்டும். நீ கேட்கும் தொகைக்கு இரண்டத்தனை யளிக்கிறேன். மற்ற எல்லாவற்றிற்கும் நான் ஜவாப்தாரி.

**ஸ்டேஷன் மாஸ்டர்:**—"அப்படியாயின் தங்கள் பிரியப்படி ஒப்புக்கொள்கிறேன்" என்றான்.

அந்த ஏற்பாட்டின்படி ஆனந்தஸிங் மூன்று மணிக்குப் புறப்பட்டுச் சாமிநாதன் பையை யெறிந்தவிடத்திற்குச் சென்று திரும்பி வந்தான். அங்கு அவன் கண்டகாட்சியால் இத்தபால் களவின் விஷயம் பூரணமாய் ருசுவாய் விட்டது. கள்ளரை யுடனே கைதுசெய்யப் போதுமான ருசு அகப்பட்டு விட்டது.

## 11-வது அத்தியாயம்.

இதற்கிடையில் நமது அம்பலவாணன் நிரபராதியா யிருந்தும் சிறைவாசத்தி லிருக்கிறான். ஆனந்தஸிங் கூறிய உறுதி மொழிகளால் அவன் மனத்தேறுதல் உடையவனா யிருந்தான். ஆனால் அவன் கூறிச்சென்றது முதல் அவனிடமிருந்து ஒரு சங்கதியும் வரவில்லை. அவன் இக்குற்றத்தைக்



கண்டு பிடிக்கிறான். ஆதலால் அவனுடைய செயல்களெல்லாம் முடிவுவரையில் இரகசியமாகவே யிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். ஆயினும் இஷ்டப்படி உலாவுவதை விட்டுச் சிறையிலடைபட் டிருப்பது அவனுக்குச் சகிக்க முடியாத கஷ்டமாயிருந்தது. எப்போது சுயாதீனமாய் வெட்ட வெளியில் திரிவோமோ வென்று மிக்க ஆவலாயிருந்தது.

ஆயினும் இப்போது நாம் இங்கிருந்து ஓடி விட்டால் நமது செய்கை நாம் நிரபராதி யென்பதற்கு நேர்விரோதமா யல்லவோ இருக்கும் என்று சிந்தித்தான். சிறைச்சாலையில் அவன் இருக்கு மிடம் ஜனசஞ்சார மில்லாத பக்கத்தி லிருந்தது. அவன் அறை இரண்டாவது மாடியி லிருந்தது. அதன் எதிரில் ஒரு பெரிய முற்றமிருந்தது. அதில் சிறையாளிகள் ஜல்லிகள் உடைத்துக்கொண் டிருந்தார்கள். அம்பலவாணன் சாளரத் தருகில் நின்றுகொண்டு அதைப் பார்த்துக்கொண் டிருப்பான். இடையிடையில் இதை விட்டுப் போய்விடவேண்டு மென்று எண்ணம் வருவதுண்டு, ஆனால் நாம் ஓடிவிட்டால் நிரபராதி யென்று நம்பமாட்டார்களே யென்ற எண்ணம் தடை செய்துகொண்டே யிருந்தது.

ஒருநாள் அவன் அவ்வாறு சாளரத்தில் நின்று பார்த்துக்கொண் டிருக்கையில் சாளரத்தி லிருந்த ஒரு கம்பியைத் தற்செயலாய்ப் பிடித் தசைத்தான். அது போடப்பட்டு நெடுங்காலமானதோடு வெயில், காற்று, மழையிவை தாக்கக்கூடிய விடத்திலிருந்த தாதலால், இரும்புக்கம்பி துருப்பிடித்திருந்ததோடு மரச்சட்டமும் உள்ளே உளுத்துப் பலம்போ யிருந்தது. மற்றக் கம்பிகளையும் அசக்கிப் பார்த்தான். மையத்தி லிருந்த மூன்றுகம்பிகள் அவ்வாறே யிருந்தன. அவை மூன்றையு மெடுத்து விட்டால் ஒரு ஆள் தாராளமாய் நுழைந்து போகக்கூடிய வழியுண்டாய் விடும்.

இதையறிந்தது முதல் இதைவிட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விடவேண்டு மென்ற எண்ணம் அவன் மனதில் நிலைத்து விட்டது. பிறகு ஆலசியம் செய்யப் பிரியமில்லை. மறு நாள் இரவு மிக்க இருளாயிருந்தது. இதுதான் தக்க காலமென் றெண்ணி நடு இரவில் கம்பிகளைப் பெயர்த்து விட்டான். தன் படுக்கையிலிருந்த துப்பட்டியை இரண்டாகக் கிழித்து 10 அடி 12 அடி நீளமுள்ள இரண்டு கயிறுகள்திரித்துக் கொண்டான். ஒன்றை யிடுப்பில் சுற்றிக்கொண்டான். மற்றொன்றின் ஒரு முனையைச் சாளரத்திலுள்ள இரண்டு கம்பிகளில் கட்டிவிட்டு அதன் வழியாய் வெளியில் இறங்கி விட்டான்.

எதிரில் இருக்கும் முற்றத்திற் கப்பால் ஒரு மதில்சுவர் இருக்கிறது. அதை யெப்படித் தாண்டுவது? பகலில் கல் உடைப்பவர்கள் தங்கள் சுத்திகள் முதலிய கருவிகளை வைப்பதற்காக ஒரு குடிசைபோட் டிருந்தார்கள். அது சற்று ஏட்ட மதில் ஓரத்தில் போடப்பட்டிருந்தது. அதை அம்பல

வாணன் பார்த்திருக்கிறான். ஆதலால் அக்குடிசைமேலேறி மதில் சுவரின் மேலேறி விட்டான். தன்னிடமிருந்த இன்னொரு கயிற்றைக் குடிசையில் உள்ள நெட்டாங்குக் கழியின் கோணையில் கட்டிச் சுவரின் வெளிப்பக்கம் அதைப்பிடித்து இறங்கிக் கீழே குதித்து விட்டான்.

இனி எங்கு செல்வது? எந்த விடமாயினும் சரி. சிறைச்சாலையை விட்டு எவ்வளவுதூரம் போய்விடுகிறோமோ அவ்வளவும் நலமே யென்று கருதிச் சென்றான். மிக்க துரிதமாய் நடந்து நகர எல்லையைக் கடந்துவிட்டான். இனி எங்கு செல்வதென்று சிந்தித்தான். " இப்படிப்பட்ட சமயத்திலும் வயோதிகரான நமது தாய் தந்தையர் நம்மைப்பற்றி மிக்க துயரம் அனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களைத் தரிசித்துவிட்டு எந்தத் திக்கேனும் செல்லலாம் " என்று தீர்மானித்துக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பினான்.

அவன் திரும்பிய இடத்திலிருந்து வீட்டிற்குச் செல்லவேண்டு மாயின் கழனிகளையும், தோட்டங்களையும் கடந்து செல்ல வேண்டும். வீடிருக்குமிடத்திற்குச் சமீபத்தி லிருக்கும், ஒரு தோட்டத்தில் பிரவேசித்தான். அச்சமயம் பின்னும் முன்னும், ஆட்கள் வரும் காலடிச்சத்தம் கேட்டது. அவன் நிதானித்துப் பார்ப்பதற்குள் ஐந்தாறுபேர் வந்து சூழ்ந்துகொண்டார்கள். அதில் ஒருவன் ஒரு இராந்தல் வெளிச்சத்தைத் திருப்பினான்.

உடனே அவர்கள் போலீஸார் என்று தெரிந்ததே அம்பலவாணன் ஆவி சோர்ந்துவிட்டது. இவ்வளவு கஷ்டப்பட்டுச் சிறைச்சாலையி லிருந்து தப்பித்துக்கொண்டு வந்த பிறகு கடைசியில் இவர்களைக் காணவே அவனுக்குத் தலைமேல் பேரிடி விழுந்ததுபோல் இருந்தது. என்ன செய்வதென்றும் ஒன்றும் தோன்றாது பிரம்மத்தி பிடித்தவன்போ லாய்விடடான்.

அச்சமயம் சற்றுதூரத்தி லிருந்து "நில்லுங்கள்" என்று ஒரு அதிகாரத்தொனி கிளம்பியது. மறுநிமிடம் நடுத்தர உயரமான ஒரு மனிதன் அக்கூட்டத்தின் மத்தியில்வந்து நின்றதும் தன் முகமூடியைக் கழற்றினான். அவனைக் கண்டதே அம்பலவாணன் அபபோதிருந்த பயம் திகில் பிரமை யாவையும் விட்டு மிக்க ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தான். ஏனெனில் அந்த ஆள் நமது ஆனந்தவிங்கே.

*      *      *      *      *      *      *      *

*      *      *      *      *      *      *      *

இச்சம்பவங்கள் நடக்கும் அதே இரவு சுமார் 12 மணிக்குச் சாமிநாதனுடைய மாளிகைக்குள் கருத்த உடையும் முகப்போர்வையும் அணிந்த நான்குபேர் ஒவ் வொருவராய்ப் பதுங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

(தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்.



## ஓர் எச்சரிக்கை

### துந்துபிவரு பஞ்சாங்கம்.

நமது ஆனந்தபோதினி சுத்த திருக்கணிதப் பஞ்சாங்கத்தைப் போல், பார்ப்போர் ஏமாந்து போகத்தக்க விதமாய் வேறு பஞ்சாங்கங்கள் வெளிவந்திருப்பதாகத் தெரிவதால், நமது பஞ்சாங்கத்தை வாங்க விரும்புவோர், பஞ்சாங்கத்தின் தலைப்பக்கம் அடியில்,

" ஆனந்தபோதினி " பவர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. என்று அச்சிட்டிருக்கிறதைக் கவனமாகப் பார்த்து வாங்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படவேண்டிய பஞ்சாங்கம் மாசிமாத சஞ்சிகையனுப்பிய இரண்டு வாரத்திற்குள் அனுப்பப்படும்.

கா. முனிசாமி முதலியார்.

---

## ஒரு அற்புதக்கெடிகாரம்—சிற்பசாமர்த்தியம்.

உலகத்தில் இதுவரையில் கண்டிருக்காத, ஒரு அத் யாச்சர்யமான சிற்ப வேலையாகிய 1-80 - மீட்டர் உயரமுள்ள ஒரு கெடிகாரத்தை ஒரு செய்ன்ட் ஆள்டர் கெடிகாரக்காரர் செய்திருக்கிறார். அவருடைய பெயர், ஸ்ரீ பிரிக்லெண்ட். அவர் சென்ற பனிரெண்டு வருஷங்களாக அந்தக் கெடிகாரத்தைச் செய்தார். அதினுடைய அடிவாரத்தில், முச்யமான நக்ஷத்திரங்களுடன்கூட ஒரு ஆகாயவட்டமானது அமைக்கப் பெற்றிருக்கின்றது. சூரியனைச் சுற்றிப் பூமி சுழல்வதையும், மாதங்களைக் காட்டுவதையும், ராசி வீடுகளில் கிரஹங்கள் இடம் பெயர்தலையும், சந்திரன் 28 நாளில் மண்டலம் மாறுவதையும், அதில் அமைக்கப்பட் டிருப்பதைக் காணலாம்.

மேலே ஒரு சிறு ரதத்தில் ஒவ்வொரு நாளும் வாரத்தின் நாட்களை ரூபகப் படுத்தும் ஒவ்வொரு தேவதை தோன்றுகிறது.

முள் காட்டும் முற்புறத்தில் ஒரு சிறு அறையில் இரண்டு மணிகளைப் பிடித்துக்கொண்டு மரணதேவதை நிற்கின்றது. அது உச்சிகாலம் தவிர மற்ற ஒவ்வொரு மணிக்கும் அது ஒரு அடி அடிக்கின்றது. வாழ்க்கையின் நான்கு பருவத்தைக் காட்டும் நான்கு ரூபங்கள் நான்கு பாதங்களை அடிக்கின்றன. காலை 7-மணியிலும் மாலை 7-மணியிலும் மட்டும் அவைகள்காணப்படுகின்றன. இன்னொரு மாடத்தில் தனது 13 சிஷ்யர்களுடன் கூட கிருஸ்து தேவர் காணப்படுகின்றார். அவர் உச்சிக்கால நேரத்தின் நான்கு பாதங்களையும் அடித்த பிறகு சிஷ்யர்களில் பன்னிருவர் அவர் முன்வந்து வணங்கி மணியை ஒருதரம் அடிக்கிறார்கள். ஜூடாஸ் என்ற பதின்மூன்றாவது சிஷ்யன் அவருக்கு வணங்காமலும், மணியை அடிக்காமலும், தலையைத் திருப்பிக் கொள்ளுகிறான். மற்ற சிஷியர்களைப் போல் அவன் ஆசீர்வாதம் பெறுகிறதில்லை.

**கடையிசில் எல்லாவற்றிற்கும் மேலே உட்கார்ந்துகொண்டு இருக்கும்படியான ஒரு சேவற் கோழி மூன்றுதரம் சிறகடித்துக் கூவுகிறது.**

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்

துன்மதிஸு பங்குனிமீ—சாலிவாகனம் 1844—கலி 5023.
பசலி 1330-31—கோல்லம் 1096-97—ஹிஜரி 1339-40
இங்கிலீஷ் 1922ஞ மார்ச்சுமீ-ஏப்ரல்மீ

| பங்குனி | மார்ச்சு | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | செ | பிர16-57 | உத்-7-31 | அ7-31சி | வசந்தோத்ஸவ, |
| 2 | 15 | புத | துதி8-43 | அஸ்-0-57<br>சித்-55-25 | ம0-57சி | சாதுர்மாஸ்ய துதியை கல்பாதி |
| 3 | 16 | வியா | திரி1-31<br>சது55-47 | சுவா-51-18 | அ51-18சி | நாமகரணம், வித்தியாரம் விவாகம் செய்ய |
| 4 | 17 | வெ | பஞ்51-40 | விசா-48-57 | சித்-60 | கோடியுடுக்க |
| 5 | 18 | சனி | சஷ்49-33 | அனு-48-30 | சித்-60 | யாத்திரைசெய்ய |
| 6 | 19 | ஞா | சப்49-22 | கேட்-49-53 | ம49-53அ | |
| 7 | 20 | திங் | அஷ்51-8 | மூல-53-7 | சி53-7ம | |
| 8 | 21 | செ | நவ54-37 | பூரா-58-5 | சி58-5பி | |
| 9 | 22 | புத | தச59-28 | உத்-60-0 | அமி60 | |
| 10 | 23 | வியா | ஏகா60-0 | உத்-4-20 | சித்-60 | |
| 11 | 24 | வெ | ஏகா5-20 | திரு-11-10 | ம11-10சி | |
| 12 | 25 | சனி | துவ11-45 | அவி-19-15 | சி19-15அ | |
| 13 | 26 | ஞா | திர18-25 | சத-27-5 | சித்-60 | |
| 14 | 27 | திங் | சது24-52 | பூரட்-34-45 | சித்-60 | |
| 15 | 28 | செ | ● 30-52 | உத்-41-52 | அ41-52சி | |
| 16 | 29 | புத | பிர36-10 | ரேவ-48-20 | மர-60 | யுகாதி |
| 17 | 30 | வியா | துதி40-32 | அசு-53-57 | அ53-57சி | வேதவியாசதீர்த்தம் |
| 18 | 31 | வெ | திரி43-52 | பர-58-27 | சித்-60 | ஆண்டோளன் திரிதியை |
| 19 | 1 | சனி | சது46-2 | கிரு-60-0 | அமி-60 | கரிநாள், கிருத்திகை |
| 20 | 2 | ஞா | பஞ்46-52 | கிரு-1-45 | சித்-60 | லட்சுமி பஞ்சமி |
| 21 | 3 | திங் | சஷ்46-16 | ரோ-3-52 | அ3-52சி | ருதுசாந்தி, சீமந்தம் |
| 22 | 4 | செ | சப்44-16 | மிரு-4-30 | சித்4-30ம | பிரயாணம்விலக்க |
| 23 | 1922ஞ ஏப்ரல்மீ 5 | புத | அ40-51 | திரு-3-48 | சித்-60 | பவானி யுற்பத்தி |
| 24 | 6 | வியா | நவ36-2 | புன-1-40<br>பூச-58-8 | அ1-40சி | ஸ்ரீராமநவமி, ஸ்ரீராமஜயந்தி, வாராகஜயந்தி |
| 25 | 7 | வெ | தச28-50 | ஆயி-53-35 | மர-60 | தர்மராஜா தசமி |
| 26 | 8 | சனி | ஏகா23-1 | மக-48-5 | அ48-5சி | திதிதுவயம் |
| 27 | 9 | ஞா | து15-10 | பூர-41-57 | சி41-57அ | பிரதோஷம், மதன திரயோதசி |
| 28 | 10 | திங் | திர6-57<br>சது58-37 | உத்35-35 | சித்-60 | பங்குனி உத்திரம், தமன சதுர்த்தசி |
| 29 | 11 | செ | ○50-30 | அஸ்-29-17 | சித்-60 | சாந்திசைத்ர ○ பௌர |
| 30 | 12 | புத | பிர43-6 | சித்-23-27 | சித்-60 | பிரயாணத்திற்கு விலக் |
| * | 13 | வியா | து56-38 | சுவா-18-32 | அ18-32சி | துந்துபி வருஷப்பிறப்பு |

| | | | |
|---|---|---|---|
| ரு-சு கே | | | ● |
| புத | 18உ மே-சு<br>20உ மீ-புத | | |
| | | | |
| | செ | | ராகு கு-ச |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதிஸு பங்குனிமீ கஉ
1922ஞ மார்ச்சுமீ 14உ { பகுதி 9

20 APR 1922

## கடவுள் வணக்கம்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினுங்
குளிர்தீம் புனற்கை யள்ளிக்
கொள்ளுகினு மந்நீ ரிடைத்திளைத் தாடினுங்
குளிர்சந்த வாடை மடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும் வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலை யமுதம்
விந்தைபெற வறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
வேளையிலு மாலை கந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயி லினும்
சந்ததமு நினதருளை மறவா வரந்தந்து
தமியேனை ரக்ஷை புரிவாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

பேசா வனுபூ தியையடியேன் பெற்றுப் பிழைக்கப் பொருளால்
தேசோ மயந்தந் தினியொருகால் சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்தவன்பர் பற்று மகண்டப் பரப்பான
ஈசா பொதுவி னடமாடு மிறைவா குறையா வின்னமுதே.

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலும் தோற்றுமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணு வாசே யெனக்கூவிப்
பின்புற் றழுசே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ பங்குனிமீ ௯

## சுயநலம்.

ஒருவன் தனக்கு அனுகூலத்தையோ இலாபத்தையோ பெற விரும்புவதற்குச் சுயநலம் கருதல் என்று பெயர். உலகத்தில் சுயநலங் கருதாதவன் ஒருவனுமில்லை. ஒன்றும் வேண்டாதவன் எவன்? வேண்டுவதும் வேண்டாமையும் இல்லாதவன் ஆண்டவன் ஒருவனே. மக்களில் ஞானி யொருவனே. தான் நலம் பெறவேண்டும், ஜயம்பெறவேண்டும், செல்வம் பெறவேண்டும், புகழ்பெற வேண்டும் என்று கருதாதவர் ஒருவரு மிரார். அந்த நாட்டமின்றேல் உலகம் எப்படி நடைபெறும்? ஜனசமூகம் எப்படி மேலோங்கி வரும்?

அப்படியிருக்க "அப்பா! அவன் சுயநலம் துறந்தவன்" என்று சுயநலநோக்கத்தை இழிவாய்க் கூறுவதேன்? இச்சுயநல நோக்கம் இயற்கையிலேயே அமைந்துள்ளது. எல்லாம் கடவுளின் சிருட்டிப்பே. இந்தச் சுயநல எண்ணமும் கடவுள் சிருட்டிப்பே. கடவுள் சிருட்டியில் கெட்டது எதுவுமே யில்லை. கடவுள் நமது நன்மைக்கென்றே எதையும் செய்கிறார். ஆனால் நமது நன்மைக்கென்று அவர் நமக்கு அளித்தவைகளை நாம் எப்படி யுபயோகிக்கிறோமோ அதன்படி அவை நல்லவையாகவோ தீயவையாகவோ ஆகின்றன.

கடவுள் ஒருவனுக்குச் செல்வமும் அதிகாரபலமும் அளிக்கிறார். அவன் அவற்றைக்கொண்டு பிறருக்கு நன்மையும் செய்யலாம் தீமையும் செய்யலாம். செல்வமும் அதிகாரமுமாகிய அவை என் செய்யும்? இவன் அவற்றை நல்வழியில் உபயோகித்தால் நன்மையும், தீயவழிகளில் உபயோகித்தால் தீமையும் அடைகிறான். உலகில் எப்போதும் நன்மை தீமை, நல்லது கெட்டது, என்ற மாறான இரண்டுமே யிருக்கும். அமைப்பே அத்தன்மைத்து ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று பிரகாசியாது. ஆகையால் நல்லது என்றால் கெட்டது அடியோ டில்லாமற் போவதல்ல. ஆனால் கெட்டதை யடக்கி யாள்வதே நல்லது.

ஆகையால் சுயநலம் இருக்கவே வேண்டும். மனிதன் சுயநலம் கருதாது எதையும் செய்வதில்லை. பொதுநலத்திற்காகச் சுயநலத்தைத் தியாகம் செய்பவனும் தன் தாய்நாடு க்ஷேமமடைய வேண்டும், அதனால் தான் சந்தோஷ மடையவேண்டும் என்ற ஒரு நலத்தைக் கோரியே செய்கிறான். இகலோக பரலோக பாக்கியங்களையும் தன் தேகத்தையும் கூட வெறுத்துவிடுவதாகிய சகல சங்க பரித்தியாகம் செய்பவன்கூட என்றுமழியாத பேரின்ப வாழ்வு கிடைக்குமென்ற நோக்கத்தோடுதான் அவ்வாறு செய்கிறான். இதுவும் சுயநல நோக்கந்தானே. அப்படி யிருக்க யிகழ்வதேனெனில்,

சுயநலத்தையும் அளவோடு அடக்கி யாளவேண்டும். நமது சுயநலத்தைத் தியாகம் செய்வதால் பிறருக்கு நன்மை விளைவிக்கக் கூடியதாக விருக்கும் சமயங்களிலும், நமது சுயநல நோக்கத்தால் பிறர் நலத்திற்கு இடையூறு நேரிடுவதா யிருக்கும் சமயங்களிலும் நமது சுயநலத்தைத் தியாகம் செய்ய ஆயத்தமா யிருக்க வேண்டும். இத்தகைய குணமுடையோர்களே பொதுநல ஊழியம் செய்யத்தக்க புண்ணிய புருடர்க ளாவார்கள். இத்தகையோரால்தான் தாய் நாடு க்ஷேமமடைந்து மேலோங்கும். இவர்கள் தங்களுக்குக் கௌரவம் வேண்டும், செல்வம் அதிகமாக வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று கருதமாட்டார்கள். தாங்கள் கருதும் பொது நலம் கைவர வேண்டுமென்ற ஒன்றே அவர்கள் நாட்டம். அதனால் வரும் கௌரவம் யாருக்குக் கிடைப்பதாயினும் அதைப்பற்றி அவர்கள் கருத மாட்டார்கள்.

அப்படிக்கின்றி பிறர் நலத்திற்கோ பொது நலத்திற்கோ இடையூறுண்டாக்கத்தக்க விதமாய்ச் சுயநலத்தை நோக்குவதே மிக்க இழிவாகும். அத்தகைய மனிதன் ஒருபோதும் பொது நல ஊழியத்திற்கு அருகனாகமாட்டான். அவனால் பொது நலத்திற்கு இடையூறே நேரிடும்.

ஒரு ஊரில் தாய்ப்பாஷைக் கல்வியை யபிவிருத்தி செய்ய ஒரு சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று சபை கூடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சபையிலுள்ள அறிவாளிகளில் சிலர்

கல்வி, கேள்விகளிற் சிறந்தவரும் உலக அனுபவமுடையவருமாகிய ஒரு பெரிய மனிதரை அச்சபையின் அக்கிராசனராக ஏற்படுத்தக் கருதுகிறார்கள். அச்சமயம் அங்குள்ள இன்னொருவர் அக்கிராசனாதிபதி என்ற கௌரவத்தைத் தாம் அடையவேண்டும் என்ற ஆசைகொண்டு, தமக்குச் சிநேகரான சிலரைத் தூண்டுகிறார். அவர்கள் இவரே அக்கிராசனாதிபதியாக வேண்டுமென்கிறார்கள். இதனால் உடனே கட்சி இரண்டாகிக் கடைசியில் எடுத்த காரியம் கலைந்துவிடுகிறது. இத்தகைய சுயநலமே இகழத்தக்கது. அதைக் கைகூடாமல் செய்யும் சபையுடையோரும் இகழத்தக்கவர்களே. இவர்கள் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கே இடையூறு செய்பவர்கள்.

மற்ற நாடுகளைக் காட்டிலும் நமது நாட்டில் தாய் நாட்டின் க்ஷேமத்திற்காக உழைக்க முன்வருவோரில் பலர் மேற்கண்ட இழிவான சுயநல நாட்ட முடையோராக விருக்கின்றனர். சாதாரணமாக நகர சங்கத்தில் (முனிஸிபாலிடி) ஒரு அவயவியாகத் தெரிந்தெடுக்கப்பட விரும்புவோர் அப்பதவியைப்பெற எவ்வளவோ பெரும் பிரயத்தனங்கள் செய்வதோடு அதிகப்பண விரயமும் செய்கிறார்கள். வாக்குக் கொடுப்போரிடம் (ஓட்டர்கள்) நேரில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று தாங்கள் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்யக் கருதியே அப்பதவியைப் பெற விரும்புவதாய்க் கூறித் தங்களுக்கே வாக்களிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறார்கள். வாக்களித்து இவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டிய காலம் நெருங்கும் சமயம் இந்த அபேக்ஷகர்களும் இவர்களுக்காக வேலை செய்யும் ஆட்களும் வீதிகளில் பன்முறை வீடு வீடாக வரக்காணலாம். அப்போதிவர்கள் ஜனங்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்யவும் நகர சுத்தியையும் ஜனங்களின் சுகம் முதலிய சௌகரியங்களையும் அபிவிருத்தி செய்வதற்காகவுமே நகரசபையின் ஒரு அங்கத்தினராய்ச் சேர விரும்புகிறதாகப் பறை சாற்றுகிறார்கள். ஆனால் பெரும்பாலார் அப்பதவியை யடைந்தபின் முற்றும் மாறாக நடந்து கொள்ளுகிறார்கள். பிறகு இவர்களை வீதியில் காண்பதெனில் குதிரைக் கொம்பே. வீடு தேடி யிவர்களை யாரேனும் காணச்சென்றாலும் பேட்டி கிடைப்பது அரிதே.

இத்தகையோர் அப்பதவியை யடைந்ததே, அதிகார வர்க்கத்தினர் மனப்போக்கின்படி தாளம் போடத் தீர்மானித்து விடுகிறார்கள். பிறகு ஏழை ஜனங்களைப்பற்றி இவர்களுக்கு அக்கறையே



யில்லை. தங்களை யார் அப்பதவியில் ஏற்றினார்களோ அவர்களை அடியோடு அலட்சியம் செய்துவிடுகிறார்கள். மாதம் 1500 சம்பளம் பெறும் உத்தியோகஸ்தருக்குத் தினப்படி 5 ரூபாயாக விருப்பதை 10 ரூபாயாக்க வேண்டுமென்று ஒரு பிரேரபணை கொண்டுவரப்பட்டால், அதற்கு ஆம் ஆம் என்று தலையாட்டி விடுகிறார்கள். ஏழை உபாத்தியாயர்களுக்கு 12 ரூபா சம்பளம் போதாது, 20 ரூபாயாக்க வேண்டுமென்றால் அதை மிக்க அனாவசியமான யோசனையென்றும், இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலா மென்றும் கூறிவிடுகிறார்கள். தங்களுக்கு அதிகார வர்க்கத்தினர் தயவு இருந்தால் பின்னாலாவது ஒரு பட்டம் கிடைக்கும் என்று பகற்கனாக் காண்கிறார்கள். இதனால் இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சில சௌகரியங்களையும் அனுகூலங்களையும் கருதியே அப்பதவியை யடையப் பாடுபடுகிறார்கள் என்று வெளிப்படையாய் யாவருக்கும் புலப்படும்படி நடந்து கொள்ளுகிறார்கள்.

இன்னும் சிலர் பெரிய தேச சேவை செய்பவர்களாக ஆரம்பித்துப் பெரிய அதிகாரம் உள்ள உத்தியோகமோ, பட்டமோ கிடைக்கத் தக்க சந்தர்ப்பம் நேர்ந்தால் உடனே தங்கள் தாய் நாட்டிற்கு எத்தகைய தீங்கு விளைவிக்கும் காரியங்களையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். தாய் நாட்டிற்குத் துரோகிகளாய்த் திரும்பி விடுகிறார்கள்.

நேயர்களே! இவர்களெல்லாம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகளாவர். இத்தகைய சுயநலப் பிரியமே நஞ்சினும் கொடிது. ஏனெனில் நஞ்சு, உண்டவனை மட்டும் கொல்லும். இச்சுயநல நோக்கம் இதை யுடையவனையும் அவன் ஊரிலுள்ளாரையும் அழித்து விடும். சாதாரணமாகக் கற்றோரென்றும், மிக்க விவகாரம் தெரிந்தவர்களென்றும் கருதப்படுவோர்களில் சிலரிடங் கூட இத்தகைய சுயநலப் பேய் இருக்கிறதென்றால் மற்றையரிடம் கேட்கவும் வேண்டுமோ. சுயநலத்தைத் தியாகம் செய்யும் குணமில்லாதவன் ஒருபோதும் பொது நலம் செய்யக் கூடியவனாக மாட்டான். அவன் எவ்வளவு சாதாரணக் கல்வி யுடையவனாயினும், எவ்வளவு செல்வமுடையவனாயினும், செல்வாக்குடையவனாயினும் மிக்க இழிவானவனே யாகும். இத்தகைய சுயநல எண்ணம் நம் தாய் நாட்டாரிடமிருந்து ஒழியும் வண்ணம் சர்வ வல்லமையுள்ள பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

# உபவாசம்.

உபவாசம் என்பதற்குப் பட்டினி யென்று பொருள். யாராவது சாப்பிடாமலிருந்தால் உபவாசமிருக்கிறா னென்று கூறலாம். இது தற்போது விரததினங்களில் பட்டினியிருத்த லென்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

விரதநாட்களில் உபவாசமிருத்தல் பெரும்பாலும் எல்லா மதத்திலும் உண்டு. இந்துக்களுக்கு கிருத்திகை, அமாவாஸ்யை, ஏகாதசி, சிவராத்திரி முதலியன விரதநாட்களாகும். ஒவ்வொரு விரதத்திற்கும் உபவாசம் விதிக்கப்பட்டிருக்கிறது. உபவாசமில்லா நோன்பேஇல்லை யெனலாம். விரதங்களை விதிப்படி யனுட்டிப்போ ரடையும் பலாபலன்க ளின்னின்ன வென்று அவற்றின் மகிமைகளை யுணர்த்தும் நூல்களும் எண்ணிறந்தவுள. உபவாசத்தையே முக்கியமாகக் கொண்டுள்ளதாகலின் விரத மிருப்போர் உபவாசத்தைக் கைக்கொள்ள லவசியம். நோன்பு என்னும் பதத்திற்கு உபவாசமென்றொரு பொருளு முண்மை அதன் அவசியத்தை உறுதிப்படுத்தும். உதாரணமாக,

கிருத்திகைவிரத மனுட்டிக்கவேண்டின், அதற்கு முந்தின தினமாகிய பரணியன்று, பகற்பொழுது மாத்திர முண்டு கிருத்திகை யன்றும் பகல் ஒருபோ துணவுகொண் டிருத்தல் வேண்டும். தேவையானால் இராக்காலங்களில் சிறிது பலகாரம் பண்ணலாம். இவ்வாறு உபவாசமிருந்துகொண்டு தீயசெயல்களை விட்டுப் பரிசுத்தராய் பகவத் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கவேண்டும். இதுவே உபவாச க்ரமம். இவ்வாறே மற்றவைகளுக்கும் அனுட்டானவிதிக ளேற்பட்டுள்ளன.

தற்காலம் விரதானுட்டானிகள், அந்தோ! மிக்க விபரீத ஞானமுடையவர்களா யிருக்கின்றனர். பரணியன்றிரவு சாப்பிடப் புகும்பொழுதே, 'நாளையதினம் கிருத்திகை உபவாச மிருக்கவேண்டுமே' யென்ற கவற்சி யுடையோராய்க் காலையில் பசியுண்டாகாதிருக்க விலாப்புடைக்க அடைக்கின்றனர். காலையில் கொஞ்சமாகவே ஐந்தாறு வாழைப்பழம் அல்லது இரண்டுகோப்பை உப்புமாவும், ஒருசொம்பு காபியும் அருந்துவது. பகல் சாப்பாடானதும் 'இராத்திரிக்கு என்ன பலகாரம் செய்வது' என்றும் எண்ணம் வந்துவிடுகிறது. உடனே தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பலகாரம் சித்தமாகும். (பலாகாரம் என்பதைப் பலகாரம் என மாற்றிக் கொண்டனர். பல+ஆகாரம்=பலாகாரம்=அது பழவுணவு. பலகாரம்= வீட்டில் செய்யப்படும் அப்பம் முதலியவை.) எப்போது இருட்டும் என்றெதிர்பார்த்திருந்து இரா வந்ததும் வயிறாரப் புசிக்கிறது. இதுவோ உபவாசம். இதை விட்டு ஏன் சோறு தின்னலாகாது? பலகாரங்களுக்காசைப்பட்டு விரதமிருப்போருமுண்டு. 'பருகப் பசியில்லாதபோ துபவாசம், பசித்தால் ஒரு பானை பருக்கையும் நாசம்' என நன்றாய்ச் சொன்னார் வேதநாயகம் பிள்ளையவர்கள்.



பட்டினி கிடப்பதால் வரும் பயன் யாதெனச் சிலர் கருதலாம். நம் பெரியோர்கள் எதையும் ஆலோசியாமல் கண்மூடித்தனமாய் ஏற்படுத்தவில்லை. உபவாசம் என்பதில் எத்தனையோ 'தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை ஈண்டு கூறுவாம்.

சிறிது நேரம் தாங்கள் பட்டினி யிருப்பதால் பசியின் கொடுமை இத்தன்மைத் தென்றுணர்கிறார்களாகையால், அப்பசியால் வருந்துவோரைக் காணின் கன்னெஞ்சராயினும் மனமிரங்கி அன்னதானஞ் செய்வார்கள். அதனால் மிக்க புண்யமுண்டாம். இன்றேல், எலுமிச்சம்பழ அளவுள்ள பொன்னை வைத்திருந்த சவரகன் ஊரிலுள்ள யாவரும் செல்வர்களே யென்று அரசனிடம் கூறிய கதையையும், 'பசியின் கொடுமை புளியேப்பக்காரனறிவானோ' என்னும் பழமொழியையும் போல, பிறர் துன்பமறியாமலிருக்க ஏதுவாகும்.

சுகாதார விதிக்கும் இது இன்றியமையாதது. யாவருக்கும் எப்போதும் பசியின் உணர்ச்சி யிருந்துகொண்டே யிருக்க வேண்டும். சரீரத்தோடு சம்பந்தப்பட்டே யிருக்கும் வாதபித்த சிலேஷ்மங்களால் ஊறுபாடுண்டாவதற்குக் காரணம் உணவே யாகும். உண்ட உணவு ஜீர்ணமாகி நன்றாகப் பசி யுண்டான பின்பே புசிக்கவேண்டும். பசி யெடுக்கும்போது சீர்ணித்து விட்டதெனல் கூடாது. உணவு சீர்ணிக்குமே யன்றி அதன் சத்தாகிய இரத்தம் அற்றிராதாதலால் மிகப் பசித்து உண்ணவேண்டும். தெய்வப் புலவர் திருக்குறளில் 'மருந்து' என்னும் அதிகாரத்தில், 'நன்றாகப் பசிகொண்ட பிறகே சாப்பிடவேண்டும், சரீரம் அழியாமலிருப்பதற்கு இதுவே ஏற்றமருந்து, மற்ற மருந்துகள் வேண்டியதில்லை,' யென்று வற்புறுத்திக் கூறியிருத்தலையும்; அதன் உரையில் ஆசிரியர் பரிமேலழகர், 'உடம்பு சிறுகியிருத்தல், நோக்கம் பரிசுத்தமா யிருத்தல், கரசரணாதி கரணங்கள் தொழிற்குரிய வாதல், பசி மிகுதல் முதலாயின உண்ட உணவு ஜீர்ணித்ததை யறிதற்குக் குறிகள்; இக்குறிகளுண்டான பின்பே புசிக்க வேண்டும்.' எனக் கழறியிருத்தலையுங் காண்க. அன்றாடம் அகப்பட்டதையெல்லாம் தின்று திரிவோர்க்கு இத்தகைய உபவாசம் எத்தனை நன்மை பயக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இதை யறியாது "உபவாசம்." "உபவாசம்." என்று சொல்லிக்கொண்டு, கிண்டின அரிசிமா, உப்புமா, கொழுக்கட்டை முதலிய சரீர சுபாவத்தோடு மாறுபட்டவைகளைப் புசித்தல் 'அவிழ்க்கப்போயும் முடிபோட்டுக் கொண்ட' கதைபோலன்றோ முடியும்.

உணவு மிகுதலாற் றுன்ப முண்டாதல் போலவே குறைதலானும் துன்ப முண்டாகுமே யெனின், அதன் பொருட்டே சிறிது பலகாரம் விதிக்கப்பட்டதென்க. பழமே சாப்பிட வேண்டுமென்பதென்ன? மற்றப் பலகாரங்கள் ஏன் கூடா? அவ்விரண்டிற்கும் தாரதம்மிய முள்ளவா

றெங்஡னே யெனின்: மனிதர்க்குள்ள குணங்கள்: சத்துவம் இராசதம் தாமதம் என மூன்று. இம் மூன்றனுள் சத்துவகுணமே இயற்கை யான தும் கொள்ளத் தக்கதுமாம். ஏனையிரண்டும் நீக்கத் தக்கவை. நாம் அருந் தும் பதார்த்தங்களிலும் இக்குணங்களுண்டு. பாலும், பலமும் சத்துவகுண பதார்த்தங்களாகலின் அவற்றை யுட்கொள்வதால் ஞானம், அருள், தவம், வாய்மை முதலிய குணங்கள் தலைப்படும். புளிப்பு, கார்ப்பு முதலியவை தாமதகுணப் பொருள்களாதலின் அக்கலப்புள்ள பலகாரங்கள் விலக் கப்படும்.

உபவாசமூலம் கொடுந் துன்பமாகிய பசியைச் சகித்துக்கொண் டிருக்கப் பழகுவதால் வேறெவ்வித துன்பங்கள் நேரிடினும் பொறுத்துக் கொள்ளும் பொறுமை யுண்டாகும்.

எல்லாத் துன்பங்கட்கும் உற்பத்தி ஸ்தானம் பிறவியே. பிறவி யறுதலே பேரின்பமாகிய வீடு. அப்பிறவிக்குக் காரணம் வினை. "வினைப் போகமே யொரு தேகங்கண்டாய் வினைதா னொழிந்தால் தினைப்போ தளவும் நில்லாது கண்டாய்" என்பது ஆப்தர் வாக்கியம். அவ்வினை, இச்சை, அதாவது பற்று காரணமாயுண்டாவது. அப்பற்று, புறமாகிய செல்வத்தையும், அகமாகிய உடம்பையும் பற்றியது. ஆகையால் இச்சை யொழித்து நிராசையுற்றால் பிறவி நீங்கும். இது பற்றியே 'நிராசை யின்றேல் தெய்வமுண்டோ' என்றார் தாயுமானார். மனம் பொறிகளின் வழியாகச் செல்வதினாலேயே இச்சையுண்டாகின்றது. அது நின்றால் இச்சையறும். அஃதறவே பிறவியற்று மோக்ஷ பிராப்தியுண்டாகும் எனக் கூறவேண்டுவதில்லை. உண்டி சுருக்குதலே ஐம்பொறி யடக்கும் மார்க்கம். அன்னமொடுங்கினால் ஐந்து மொடுங்குமன்றோ? தவமெனப்படுவதும் இதுவே. செல்வாபேட்சை முதலிய புறப்பற்றுகளுண்டாவது சரீராபிமான மாகிய அகப்பற்றினிமித்தமே யாகலின் அவ்வகப்பற்றை விட்டுப் பிறவியை விரும்பாமைக்கு அறிகுறியே சரீரத்தை வாட்டுதலாம். முள்ளைக் கொண்டே முள்ளை வாங்க வேண்டியதுபோல் சரீரத்தைக் கொண்டே பிறவி போக்க வேண்டி யிருத்தலின் அச்சரீரம் அழியாதிருக்கவே சிறிது ஆகாரம் கொள்ள வேண்டுமென்பது நூற்றுணிபு.

'கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்து' என

நமது சுவாமிகள் திருவாய் மலர்ந்ததும் இது கருதியே.

அப்போதைக்கப்போது சிறிது சிறிதாக இயற்றிவரும் இவ்வுபவாச அப்யாச முதிர்ச்சியால் காலக்ரமத்தில் நன்னிலை வந்தெய்துதல் எளி தாகுமன்றோ?

இனி, கடைசியாக உபவாச மென்பதன் இரகசியார்த்தத்தைக் கூறி இவ்வியாசத்தை இனிது முடிப்பாம்.



உபவாசம் என்பதற்கு, இரண்டு பொருள்கள் ஒன்றாக வசிப்பது என் பது பொருள். இதன் பரியாய நாமங்களாகிய 'ஒரு சந்தி' 'ஒரு பொழுது' என்பவைகளும் இப்பொருள் படுதலை யுணர்க. ஜீவாத்ம பரமாத்துமாக் களுடைய சமீப வாசமே உபவாசம். இதுவே வேதாந்தமாகிய உப நிஷத்துக்களின் கொள்கை. 'பார்க்கு மிடமெங்குமொரு நீக்கமற நிறை கின்ற' பரமாத்வாகிய பகவானை 'மலர்மிசை யேகினான்' எனச் செந்நாப் போதார் கூறியவாறு அமைந்த-ஹ்ருதயகமல வாசனை-மனத்தைப் பொறிக ளின் வழியாகப் போகவொட்டாது அடக்கி, நமக்குள்ளே யாராய்ந்து கண்டு தெரிசித்து ஜீவாத்மாவை ஒன்றுபட்டிருக்கச் செய்தலே உபவாசமா கும். இதுவே சிறப்புடைத்து; ஜீவன் முக்த பதவியை யளிப்பது; பிர்ம்ம வித்தையும் இதுவே. இதை ஆசிரியன் துவாரா அறிந்து அப்பியசித்த லவசியம். ஆனால் இதுவும் முற்கூறிய விரதங்களை யனுஷ்டித்துப் பிர்ம்ம ஞானம் கைவந்தவர்களுக்கே எளிதா மாகலின் அவ்விரதங்கள் இதற்கு ஓர் சோபானமாகும்.

அறிந்தோ அறியாமலோ இவ்வுபவாசத்தின் முதற்படியைக் கடைப் பிடிப்போர் எப்படியும் மேற்படியை அடைவது திண்ணம். இவ்வித இரகசி யத்தை உள்ளமைத்தே நமது ஆன்றோர் இவ்வுபவாசங்களை நியமித்தனர். இவ்வுண்மையை யுய்த்துணர்ந்து தேகத்தை வாட்டுதலால் பயன் யாது எனப் போலி வேதாந்தம் பேசிக்கொண்டு திரிவோர் திரிசங்கு ஸ்வர்க்க வாசிகளே யாவர். தற்கால நாகரிகத்தால் மறைக்கப்பட்டு, உண்மை யறி யாது, நம்மவர் கொள்கைகளைப் புறக்கணித்துத் திரியும் சகோதரர்களுக்குச் சச்சிதானந்தப் பரம்பொருள் மெய்ஞ்ஞான மருளுவாராக.

பூ. ஸ்ரீநிவாசன்.
தமிழ்ப் பண்டிதர், இராணிப்பேட்டை.

---

## குரு வணக்கம்.

கு+ரு=குரு. கு=இருள். ரு=நீக்கம் அல்லது ஒளி. ஆதலால் அஞ் ஞானமாகிய இருளை நீக்கி ஞானமாகிய ஒளியைத் தருபவரே "குரு" ஆவர்.

குருவகை:—மூவகைப்படும். "வித்தியா குரு" "கிரியா குரு," "ஞான குரு" என்பவர்: 'அரசன், வாத்தியான்,' தாய், தந்தை, தம்மேம் பட்டவர், இவ்வைவரும் வித்தியாகுருவைச்சேர்ந்தவர்.

வித்தியாகுரு:—இவர் மூவகைப்படுவர் (1) நூலாசிரியர், (2) உரையா சிரியர், (3) போதகாசிரியர்.

(1) நூலாசிரியர்:—இவர் நூல்களை இயற்றுபவர்.
(2) உரையாசிரியர்:—அந்நூல்களுக்கு உரை எழுதுபவர்.
(3) போதகாசிரியர்:—அந்நூல்களையும், உரைகளையும் ஐயமின்றி மாணா க்கர்களுக்குப் போதிப்பவர்.

கிரியாகுரு:—குலகுருவெனினும் கிரியாகுருவெனினும் இவ்விரண்டும் ஒன்றே. இவர் சபாசபக்ரியைகளையும் தீக்ஷா கிரமத்தால் சமயப் பிரவேசமுஞ் செய்விப்பவர். கர்மாநுஷ்டானங்களால் ஒருவனுக்குப் பற்றுவிடலும் பற்றுவிடலால் ஞானமும் கைகூடுகின்றன. ஆதலால் ஞானத்தையடைய, கருமத்தைச் செய்தற்கு அதிகாரியாகச் செய்வதே சமயப்பிரவேசஞ் செய்விப்பது. இங்ஙனம் செய்பவர்தாம் குலகுருவாவர். இவர்களுள் அந்தணர் எல்லா வர்ணத்தார்களுக்கும், அரசர் அந்தணரற்ற மற்றைய ஏனையவர்க்கும், வணிகர், அரசர், அந்தணரற்ற எல்லா வர்ணத்தார்களுக்கும், சூத்திரர்—சூத்திரர் சங்கரஜாதியார்களுக்கும் குலகுருவாவர்.

ஞானகுரு:—இவர் இருவகைப்படுவர் (1) அதிட்டிதகுரு, (2) ஆவேச குரு. இவர்களுக்கு மேற்கூறிய ஜாதிவரம்பு கிடையாது.

(1) அதிட்டிதகுரு:—இவரும் இருவகைப்படுவர்:(1)சமயகுரு,(2)சந்தானகுரு.

(1) சமயகுரு:—உலகத்தில் மதத்துக்கு ஆபத்துவருங் காலத்தில் அதனைக் கடவுளருளால் ஆதரித்துப் பல அற்புதங்களைச் செய்துகாட்டிப் பொய்ச்சமயத்தை விலக்கி மெய்ச்சமயத்தை யெடுத்துக் காட்டி உலகத்தை உய்விப்பவர். இவ்வகுப்பினரே ஸ்ரீ ஞானசம்பந்தர், ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீசுந்தரமூர்த்தி, ஸ்ரீமாணிக்கவாசகர் என்பவர்கள்.

சந்தானகுரு:—இறைவனருளால் உலகத்தில் ஞானோபதேசம் செய்து மனிதரை உய்விப்பதற்காகப் பரம்பரையாக வருபவர்.

வரலாறு:—ஆதியில் அருள் வடிவமாய்த் திருக்கைலாய மலையி லெழுந்தருளிய பரமசிவன்பால் ஞானோபதேசம் பெற்றவர் "திருநந்தித்தேவர்"; அவர்பால் சனற்குமாரமுனிவரும், அவர்பால் சத்தியஞானதரிசிகளும், அவர்பால் பரஞ்சோதி முனிவரும் முறையே சித்தாந்த ஞானோபதேசம் பெற்றனர். இவர்கள் அகச்சந்தான குருக்களெனப்படுவர். பரஞ்சோதி முனிவர் தமிழுலகஞ்செய்த மாதவப் பேற்றால் திருவெண்ணெய் நல்லூரையடைந்து மெய்கண்ட தேவருக்கு உபதேசிக்க அவர் அருணந்தி சிவாசாரியார்க்கும், அவர் மறைஞான சம்பந்தருக்கும், அவர் உமாபதி சிவாசாரியாருக்கும் உபதேசித்தருளினர். இவர்கள் புறச்சந்தான குருக்கள் எனப்படுவர். முறையே சந்தானகுரு பரம்பரையாகும். நவகோடி சித்தபுரம் என்னும் திருவாவடுதுறை ஆதீன முதலியன சந்தான குருபரம்பரையாம். இவ்வாறு வழி வழியாகவரும் ஆசிரியர்களிடம் ஞானோபதேசம் பெற்று மோக்ஷமடைந்தவர் பலர்.

ஆவேசகுரு:—பக்குவான்மாக்களை ஆட்கொள்ளவேண்டிக் கடவுளே ஆசிரியராக வந்து மெய்ப்பொருளை விளக்கி ஆட்கொள்ளும் அருள் வடிவ மூர்த்தியே. ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகளை ஆட்கொள்ளக் கருதித் திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தின் அடியிலே எழுந்தருளியவர் ஆவேச குருவேயாவர்.



அடையும்முறை:—அதிகநாளாய்ச் சாப்பிடாத ஒருவன் எங்ஙனம் "பசி" "பசி" என்று பறந்துகொண்டு ஆஹாரத்தைத் தேடுவானோ அங்ஙனமே ஞானம் என்னும் ஆஹாரத்தைத் தேடக் குரு என்னும் சத்திரம் எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டே செல்லவேண்டும். அங்ஙனமே "கன்றைத் தேடிக் கசிந்துவரும் கற்றாவைப்" போல குருவும் வந்து சேர்வார்.

"கள்ளக் காதலனிடத்தன்பு கலந்துரைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோல"

என்றபடி உண்மைச் சீடர்கள் குருநாட்டங் கொண்டு எக்கஷ்டம் அடைந்தாலும் அல்லது எத்தொழில் செய்தாலும் குருவை அடையும் நாள் எப்பொழுதுவருமோ, நேருமோ என்று ஏக்கங்கொண்டவர்களாகவே யிருப்பார்கள். உள்ளவாறு மெய்யன்புடன் தேடுகின்ற நன் மாணக்கர்களைத் தேடிவந்து அருள் செய்து ஆட்கொள்வது இப்பரமகுருவின் தன்மையாம்.

தக்ஷிணையும்செயலும்:—இங்ஙனம் உய்யக்கொள்ளும் குருவிற்குத் தக்ஷிணை உடல், பொருள். ஆவி என்பவைகளாம்; இவற்றை,

"அன்றே யென்றன் ஆவியுமுடலு முடைமை யெல்லாம்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ"

"தந்ததுன் றன்னைக்கொண்ட தென்றன்னைச்
சங்கராயார் கொலோ சதுரர்"

"வஞ்சவினைக் கொள்கலமா முடலைத்தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லேன்
நாதனேயிதுவு னதுடைமை யென்றே அஞ்சினேன்"

என்பதால் காண்க.

ஞானகுரு நினைத்தலாலும், பரிசித்தலாலும், பார்வையாலும் ஆன்மாக்களை சிவமாகச் செய்வது அவர் தன்மை யென்பர்.

அஃதாவது:—நினைத்தலால் பக்குவான்மாக்கள் சிவமாகும்; பரிசித்துப் பக்குவான்மாக்களைத் தம்மைப் போலாக்குவர்; அருட்பார்வையால் பக்குவான் மாக்கள் சிவமாந்தன்மை யெய்தச்செய்வர்.

பெருமையும் முடிவும்:—"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று நாம் நம் சிறுவயதிலேயே கற்றிருக்கிறோம். குருவேறு கடவுள் வேறு எனக் கருதலாகாது. "குருவே சிவம்" கடவுளுக்கு நாம் ஒரு அபராதஞ் செய்துவிட்டால் அதைத்தீர்க்கப் பரிகாரஞ்செய்வார் குரு. குருவுக்கு அபராதஞ் செய்தால் குருவே அதைத் தீர்க்கவேண்டும். குருவில்லாத வித்தைபயனற்றதென்பது நம்மவர்கொள்கை. இந்திரன் தன் குலகுருவாகிய "வியாழபகவானை" க்கண்டு வணங்காது பராமுகமாக இருந்ததால் என்ன என்ன

துன்பங்களையெல்லாம் அடைந்தான். ஆனால் மேல்நாட்டுநாகரீகம் அதிகரிக்கவே நம்மவர் (Modern Civilization Spectacles, Western Civilization Loosing Education) "குரு என்னடா, இரண்டுலெட்டர் குவாம் ருவாம், ஏதோ சம்பளத்தை வாங்கிக் குரான் ரெண்டு கடமுடானு சொல்லிட்டு பேட்டான், அவனும் சம்பளம் வாங்காப்பயல்தானே " என்கிறார்கள். அந்தோ! என்ன கொடுமையிது தம்மனம் சகிக்கிறதா.

"எழுத்தறி வித்தவன் இறைவனாகும்" என்றதை இனிமேலாவது நம் சகோதரர்கள் அறிந்துகொண்டு குருவை வையாமலும், அலக்ஷியஞ் செய்யாமலு மிருந்து சுகமாக வாழ்வார்களாக. இறைவன் அருள்புரிக.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகல்வி
வல்லார்க ளால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை
வெல்வாம்."

"அருட்குழக னெழிற்கயிலை முழுக்காவ னந்திபிரா னடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சநற்குமர முனிவனிரு திருத்தாள்போற்றி
இருட்மலத் தகல்சத்ய ஞானதரி சனிசாண விளைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருள்சிவ குருபரன்காண் மலர்கள் போற்றி.
சுபம்! சுபம்!! சுபம்!!!"

பா. பஞ்சாபகேசன், மாயவரம்.

---

## கைவல்ய நவநீத வசனம்

(298-ம் பக்கத் தொடர்ச்சி.)

### மனச்சாட்சி.

மனம் என்ற வார்த்தை யாவர்க்கும் தெரிந்ததே யெனினும், அதனுடைய சொரூபத்தை யாவரும் அறிந்திருக்கிறார்களென்று கூறுவதற்கில்லை. சாதாரணமாக மனம் என்பது வேறு நாம் என்பது வேறு என்பதை யறிவது யாவராலும் சுலபமாக ஆகிற காரிய மல்ல.

ஒன்றை நினைக்கிறது மறக்கிறதுமே மனதின் முக்கியமான தொழில். அந்த இரண்டு தொழில்களில் மனதின் சொரூபம் முழுமையும் அடங்கியிருக்கின்றது. காமக்குரோதாதி குணங்கள் அனைத்தும் இடையில் வந்து சேர்ந்தனவே. இந்த மனதின் காரியங்க ளனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிற சாட்சி யொன்றிருக்கிறது. அதற்கே மனச்சாட்சியென்று பெயர். ஆகையால் மனச்சாட்சி யென்றால் மனமாகிய சாட்சி யென்று அல்வழிச் சந்திப் பண்புத்தொகையில் பொருள் கொள்ளாமல் மனத்தின் சாட்சி அல்லது மனதிற்குச் சாட்சி யென்று வேற்றுமைச்சந்தி 6-ம் வேற்றுமை அல்லது 4-ம் வேற்றுமைத் தொகையில் பொருள் கொள்ளல் வேண்டும்.



ஒருவன் காரியத்தைச் செய்யும்போது உள்ளுக்குள்ளே யிருந்து கொண்டு "அந்தோ இது பாபம்" என்று ஒரு சிந்தனை கிளம்புகிறது. இதுதான் மனச்சாட்சி. தவறான ஒரு காரியத்தைச்செய்யக் கருதும்போது அல்லது செய்யும்போது "இது கெட்ட செய்கை" என்று உள்ளிருந்து ஒருவர் சொல்வதுபோல் தோன்றுகின்றது. இதுவே மனச்சாட்சி. இந்த மனச்சாட்சிக்கு நல்லது கெட்டது, பாபம் புண்ணியம் இவற்றைப் பகுத்தறியும் சக்தியுண்டு. மனதில் வேலைகளனைத்தையும் இதுபார்த்துக் கொண்டிருக்கும். ஆனால் இது சாட்சிமாத்திரமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பதேயன்றி ஒரு தொழிலையும் செய்வதன்று.

இதுவே அறிவு என்பதும். இச்சாட்சியை யறியாமல் மனம் ஒன்றையும் செய்யமுடியாது. மனம் தன்னிடமுள்ள பொறாமை, வஞ்சனை, சூது, துரோகம் எதையும் இச்சாட்சியினிடமிருந்து மறைத்து வைக்க முடியாது.

இச்சாட்சியே மனதிற்கு உயிர் என்றும் கூறலாம். அதாவது இதன் பிரகாசம் மனதில் தாக்கினால் மட்டுமே மனம் தொழில் செய்ய வல்லது. இன்றேல் மனம் ஜடமாதலின் தொழில் செய்யாது. மனம் சத்துவம், இராஜசம், தமசு என்ற முக்குணங்கள் பொருந்தியது. ஆனால் சத்துவமே அதன் இயற்கைக்குணம். அதாவது மனம் சத்துவசொரூபம்; மற்ற குணங்கள் வந்து கலந்தன. அச்சத்துவகுணம் தன்வரையில் பிரிந்து நின்று விட்டால் மற்ற இரண்டு குணங்களும் நில்லா. இச்சத்துவபாகமே சாட்சியாகும்.

சாட்சியைக்கொண்டு மனதைத்தேடினால் மனம் இராது. சாட்சி மறைந்தால்தான் மனம் முளைக்கும். இதனால் மனதின் சத்துவபாகமே சாட்சியென்று தெளிவாக அறியலாம். ஒருவன் தான் செய்யும் ஒவ்வொரு வேலையையும் இச்சாட்சியின் சம்மதத்தைக் கேட்டுச் செய்வானாயின் ஒருபோதும் தவறான காரியத்தையாவது பாபத்தையாவது செய்யமாட்டான். இச்சாட்சியே அறிவின் சொரூபம். இது பரிசுத்தமானது. இதன் உண்மைச் சொரூபத்தை யறிவதே தன்னை யறிவதாகும். எப்படி யெனில் இதுவே ஆன்மாவாகிய தான்.

சாட்சியாகிய இந்நிலையை யொவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தில் காண்பதுண்டு. ஆனால் அது மின்னல்போல் ஒருகணம் தோன்றி மறுகணம் மறையக் காண்கிறார்கள். சமயம் வரும்போது "என் மனச்சாட்சிக்கு இந்த விவகாரம் ஒப்பவில்லை" என்றும், "என் மனச்சாட்சியாய்க் கூறுகிறேன்" என்றும் வாயால் மொழிகிறார்களே யன்றி நிலைத்திருக்கக் காண்பதில்லை. ஆகையால் மனச்சாட்சியைக் கவனிக்காமலே மனம்போனபடி யெதையும் செய்துவிட்டுக் கெட்டகர்மங்களுக் காளாகிறார்கள். அப்படி யொருசமயம் கவனிப்பதாயினும் ஒரு காரியத்தைச் செய்துவிட்டபின் கவனித்து மனத்தாபப் படுகிறார்கள்.

முமுட்சு ஒருவன்மட்டும் அம்மனச்சாட்சியின் சொரூபத்தை யறிய முயன்று, அதுவே தான் என்றறிந்து அதேநிலையில் சாட்சிமாத்திரமாக நின்று விடுகிறான். அந்த நிலையில் மனதின் உருவமில்லை. சத்துவகுண மாத்திரமாய்ச் சேதித்துள்ள அருவமனமே கனவுபோல விவகாராதிகளைச் செய்யும் சாட்சிமாத்திரமா யிருப்பதால் கருமங்கள் பற்றாது. சாட்சிபோல் எனில் தான் இருக்கும் தேகத்தின் செயல்கள் முதல் யாவும் தனக்கன்னியமாகவும், நடக்கும் எல்லா விவகாரங்களுக்கும்தான் சாட்சிமாத்திரமாய் இருப்பதன்றித் தனக்கு எவற்றிலும் ஒரு சம்பந்தமு மில்லையென்றும் தான் ஒரு தொழிலையும் செய்யாமல் யாவற்றையும் நோக்கிக்கொண்டுமட்டும் இருப்பதாகவும் இதே தனது இயற்கைச் சுபாவமாகிய நிலைமையென்றும் பிரத்யக்ஷானுபவமாகப் புலப்படும்.

இந்த நிலையில் திரிபுடியுண்டு. அதாவது காண்பான், காட்சி, காட்சிப் பொருள் (The Knower, The Known and the Knowledge) என்ற மூன்று முண்டு. இதற்குமேலான நிலைமையே அத்துவிதானந்தத்தை யளிக்கும் இரண்டற்ற பரிபூரண சாக்ஷாத்காரமாகிய நிலையாம். நாம் இங்கு சாட்சியாகிய நிலையைப் பற்றிமட்டுமே கூறமுயன்றதால் அம்மட்டோடு நிறுத்துகிறோம்.

ஒவ்வொருவரும் நம்மால் கூடியவரையில் இம்மனச்சாட்சியின் சொரூபத்தை யறிய முயல்வதோடு நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் மனச்சாட்சியின் சம்மதம் பெற்றுச் செய்யப் பழகவேண்டும். இப்பழக்கத்தால் படிப்படியாய் மனச்சாட்சி யுண்டாவதை யனுபவத்தில் காணலாம். எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

சீடன்.

---

## காலப் பிரமாணம்.

உலகின்கணுள்ள சகல சாதியார்களும், தங்கள் தங்கள் மார்க்க கருமங்களையும் லௌகிக கருமங்களையும் ஒழுங்கே கொள்ளும் பொருட்டு, காலத்தைப் பலவிதமாகப் பாகித்துக் கொண்டார்கள். சௌரமான நாளும் வருடமும், சாந்திரமான மாதமும் வருடமும் ஆகிய இவைகளே இயற்கையாற் பெறப்படுங் (அதாவது எங்கட்குக் கடவுளா லளிக்கப்பட்ட) காலப் பகுதிகளாம். மற்றைய மணித்தியாலம், நாழிகை முதலியனவும், நாட்களின் தொகுதிகளாகிய வாரங்களும் மாதங்களும், வருடங்களின் தொகுதிகளாகிய வட்டங்களும், பிறவும் செயற்கையி லுண்டாகிய (அதாவது மனிதர்களாற் பாகிக்கப்பட்ட) பகுதிகளென்றே யூகிக்க வேண்டி யிருக்கிறது. இக்காலப் பகுதிகளை ஊன்றி யாலோசிக்கு மிடத்து, வானசாஸ்திர அறிவென்பது கிஞ்சித்து மில்லாத அதி பூர்வகாலத்தில், மனிதர்கள் இராப்பகல் என்னும் இருபகுதிகளையு முடைய நாள் ஒன்றைக் கொண்டே 1-ம் நாள், 2-ம் நாள், 50-ம் நாள், 100-ம் நாள் என எண்ணிக் கணக்கிட்டிருப்பார்களென்றும், பின்பு அறிவு விரிய விரிய நேரத்தையும், வாரத்தையும், மாதத்தையும், தேதியையும், பக்ஷத்தையும், திதியையும், நக்ஷத்திரத்தையும், ருதுவையும், வருடத்தையும், வட்டம் முதலியன வற்றையும் பிறப்பித்துக் கொண்டார்களென்றும் விளங்கக் கிடக்கின்றது.



பூர்வத்தில் சூரியமானத்தைக் கணக்கிடுத லரிதாயிருந்தமையினாலும், சந்திரன் நாள்வீதம் பிறைவடிவாய் வளர்ந்து பூரணையாகியும், பின் பிறைவடிவாய்த் தேய்ந்து அமாவாசியாகியும் வரும் சம்பவத்தை) (உத்தேசப்படி கணக்கிடுத லெளிதா யிருந்தமையினாலும், அப்பிறைவடிவங்களையே தேதிகளாகவும், பெரும்பாலும் அமாவாசியையே மாசாந்தமாகவுங் கொண்டு சாந்திரமான மாதம் வருடங்களையே கணக்கிடுவாராயினர்.

இந்தியர், மகமதியர், சீனர், யூதர் முதலிய சாதியார்கள் இக்காலத்திலும் சாந்திரமானத்தைக் கொள்கின்றார்களாதலினாலும், ஆங்கிலத்தில் Month மாசம் என்பது Moon சந்திரன் என்னும் பதத்திலிருந்தே பிறந்தமையாலும், சந்திரனுக்கும், மாசத்துக்கும் தமிழில் திங்களெனவும், சீனத்தில் ரீவி எனவும் பொதுப் பெயரிருத்தலினாலும், தற்காலத்தில் தமிழில் வழங்கப்படும் மாசப்பெயர்களெல்லாம் பௌரணைக்குப் பௌரணைசந்திரன் எந்த நக்ஷத்திரத்தோடு கூடுகின்றானோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரால் அழைக்கப்படும் பெயர்களா யிருத்தலினாலும், உலகின்கணுள்ள பூர்வீக சாதியார் சகலராலும் அன்று தொட்டுச் சாந்திரமானமே கொள்ளப்படுகின்றதென்பது நன்கு புலப்படுகின்றது.

இனி, இக்காலத்தில் சாந்திரமானம் சௌரமானம் என்னு மிரண்டினையும் பலருங் கொள்கின்றார்கள். லௌகிக விஷயத்துக்குச் சௌரமானத்தையும், வைதிக விஷயத்துக்குச் சாந்திரமானத்தையும் பெரும்பான்மை கொள்வாராயினர்.

சூரியன் 12 இராசிகளையும் (360 பாகையையும்) சுற்றிவருங் காலம் சௌரமான வருடமெனவும், சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் அமாவாசியந்தம் வரையுள்ள காலம் சாந்திரமானமாசம் எனவும், இப்படி 12 அமாவாசி கொண்டகாலம் சாந்திரமான வருடம் எனவும் பெயர்பெறும். சுமார் 365 நாளும் 6 மணித்தியாலமும் 9 மினிட்டும் 9 செக்கனும் கொண்டது ஓர் சௌரமான வருடம்; சுமார் 29 நாளும் 12 மணித்தியாலமும் 44 மினிட்டுங் கொண்டது ஓர் சாந்திரமான மாசம்; சில வருஷங்களில் 13 சாந்திரமான மாசங்களும் வரும். இரண்டு அமாவாசைவரும் சௌரமான மாசத்தில், சாந்திரமான அதிகமாசங் கொள்ளப்படும்.

நாள். நாட்பிறப்பு, மாசப் பிறப்பு, வருடப்பிறப்பு முதலியனவற்றைக் கொள்ளு முறையிற் பலசாதியாரும் பலவிதமா யிருப்பினும், நாளை 24 பாகமாகப் (ஏறக்குறையச் சகலசாதியாரும்) பிரித்துக்கொண்ட சூட்சுமாத்

திரம் வியக்கத் தக்கதே. ஒரு நாளின் (24 மணித்தியாலத்தின்) ஒரு பங்காகியஒருமணித்தியாலம், ஆங்கிலத்தில் ஔவர்எனவும்,லத்தீனிலில் ஹௌரா எனவும், வடமொழியில் ஹோரா எனவும், தமிழில் ஓரை எனவும் வழங்கப் படுகின்றது. (ஒரு ஓரை 2½ நாழிகை)

ஆங்கிலேயர் முதலிய மேலைத்தேசத்தார் 60 செக்கன் கொண்டது ஒரு மினிட்டாகவும், 60 மினிட் கொண்டது ஒரு மணித்தியால மாகவும், 24 மணித்தியாலங் கொண்டது ஒரு நாளாகவும் வகுப்பர். சீனர் முதலிய மங்கோலியர் 100 செக்கன் கொண்டது ஒரு மினிட்டாகவும், 100 மினிட் கொண்டது ஒரு கீயாகவும், 100 கீ கொண்டது ஒருநாளாகவும் வகுப்பர். (ஐரோப்பிய கணக்குப் பிரகாரம் ஒரு மினிட்டுக்கு 0.0695 கீயாகும்) மங்கோலியரின் இவ்வித வகுப்பானது 17-ம் நூற்றாண்டு வரையுமே நிலை பெற்றது. பின்பு கணிதவல்லரும் கணிதசாஸ்திர சபையின் அத்தியட்சருமாகிய "செஸ்யூட்ஜால்" என்பவரின் சொற்படி ஐரோப்பியரின் வகுப்பே (அத்தேசங்களில்) கொள்ளப் படலாயிற்று.

இந்தியர் $^{2}/_{5}$=0.4 செக்கனுக்குச் சரியான 60 விதற்பரை கொண்டது ஒரு தற்பரையாகவும், 60 தற்பரை கொண்டது ஒரு விநாடியாகவும், 60 விநாடி கொண்டது ஒரு நாடியாகவும், 60 நாடிகொண்டது ஒரு நாளாகவும் வகுப்பர். இன்னும் நிமிஷம் 15 கொண்டது ஒரு காஷ்டை எனவும், காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை எனவும், கலைமுப்பது கொண்டது ஒரு முகூர்த்தம் எனவும், முகூர்த்தம் 30 கொண்டது ஒரு நாள் எனவும் ஒரு வாய்பாடும், 6 பிராணன் கொண்டது ஓர் பலை எனவும் 60 பலை கொண்டது ஓர் கடிகை எனவும் கடிகை 2½ கொண்டது ஓர் ஓரை எனவும், ஓரை 24 கொண்டது ஓர் நாள் எனவும் மற்றோர் வாய்பாடும் இந்துக்களுள் (பெரும்பான்மை தமிழர்களுள்) வழங்கப்படுகின்றது.

இந்துக்களால் நாளுக்குமேலே கொள்ளப்படும் பிரிவுகளான:—7நாட் கொண்டது ஒரு வாரம்; 15 நாட்கொண்டது ஒரு பக்ஷம்; பக்ஷமிரண்டு கொண்டது ஒரு மாசம்; 365¼ நாட்கொண்டது ஓர் சௌரமான வருடம்; சௌரமான மாசம் 2 கொண்டது ஓர் ருது; ருது 3 கொண்டது ஓர் அயனம்; ருது 6 கொண்டது ஓர் வருடமுமாம். இவற்றுள் ருதுக்களாவன:— சித்திரை வைகாசி வசந்தருது=இளவேனில்; ஆனி ஆடி கிருஷ்மருது— முதுவேனில்; ஆவணி புரட்டாசி வருஷருது=கார்; ஐப்பசி கார்த்திகை சருது—கூதிர்; மார்கழி தை ஹேமந்த ருது—முன்பனி; மாசி பங்குனி சிசிருது—பின்பனி முதலியவைகளாம். ஐரோப்பியரின் கொள்கைப்படி ருது நான்காகும். அவையாவன:—வசந்த காலம், கோடைகாலம், கார்காலம், மழைக்காலம் என்பவைகளாம்.

அயனம் உத்தராயணம் தெக்ஷிணாயனம் என இருவகைத்து. சூரியன் மகராயனத்திற் * பிரவேச முதல் கடகாயனப் பிரவேசம் வரையுமுள்ள



காலம் உத்தராயணம் என்வும், கடகாயனப் பிரவேசம் முதல் மகராயனப் பிரவேசம் வரையுமுள்ள காலம் தெக்ஷிணாயனமெனவும் பெயர் பெறும். தேவர்கட்கு உத்தராயணம் பகலும் தெக்ஷிணாயனம் இர்வுமாம். மனுஷ வருடம் 360 கொண்டது ஓர் தேவ வருடம். தேவ வருடம் [illegible]000 கொண்டது ஓர் சதுர்யுகம்.

சதுர் யுகங்களாவன:—

| யுகம். | தேவவருஷம் | மனுஷவருஷம் |
|---|---|---|
| கிருதயுகம். | 4800 | 1,728000 |
| திரேதாயுகம். | 3600 | 1,296000 |
| துவாபரயுகம். | 2400 | 864000 |
| கலியுகம். | 1200 | 432000 |
| சதுர்யுகம். | 12000 | 4,320,000 |

இங்கு ஒவ்வொரு யுகத்துக்கும் தேவவருடமாகக் காட்டிய தொகைகளின் 4-ம் தானத்தி லிருப்பனவாகிய 4. 3. 2. 1 என்னும் எண்களையே பௌராணிகர் அவ்வவ்யுகங்களில் நடைபெறும் தர்மத்தின் கால்களென்பர்.

இனி, ஒரு சதுர்யுகம் ஒரு தேவயுகமாம். 71 தேவயுகம் அதாவது 306, 720, 000 சௌரமான் வருஷம் ஒரு மன்வந்தரமாம். இந்திராயுக் காலமும் அவ்வளவினதே. ஆயிரந் தேவயுகம் அதாவது 4,320, 000,000 சௌரமான வருஷம் கொண்டது ஒரு கல்பமாம். இது ஓர் பிரமப்பகலாம். ஒரு பிரமப்பகலிலே பதினாலு மன்வந்தரங்களுள. ஆறு தேவயுகஞ் சேடமாம். பின்னும் ஆயிரந்தேவயுகந்திரும்பினாற், பிரமனுக்கு ஒரு இராத்திரியாம். ஆகவே இரண்டாயிரந் தேவயுகம் ஒரு பிரமதினமாம். முந்நூற்றறுபது பிரமதினம் ஒரு பிரமவருடமாம். நூறு பிரமவருடம் பிரமாயுக் காலமாம். பிரமாயுக்காலம் இரண்டுகூடினால், விட்டுணு தினமாம். விட்டுணு தினம் முந்நூற்றறுபது கூடினால் விட்டுணு வருஷமாம். விட்டுணுவருஷம் நூறுகூடின், விட்டுணு வாயுக்காலமாம். விட்டுணு வாயுக்காலம் இரண்டு கூடின், உருத்திர தினமாம். உருத்திரதினம் முந்நூற்றறுபது கூடின், உருத்திர வருஷமாம். உருத்திர வருஷம் பரார்த்தங் கூடின், உருத்திராயுக்காலமாம். உருத்திராயுக்காலம் இரண்டு கூடின் ஈசுவரதினமாம். ஈசுவரதினம் முந்நூற்றறுபது கூடின், ஈசுவர வருஷமாம். ஈசுவரவருஷம் பரார்த்தங் கூடின், ஈசுவராயுக் காலமாம். ஈசுவராயுக்காலம் இரண்டு கூடிற் சதாசிவதினமாம். சதாசிவதினம் முந்நூற்றறுபது கூடிச் சதாசிவவருஷமாம்.

* தைமுதல் 6 மாசம் உத்தராயணம் என்னுங் கொள்கை முன்னோர் காலத்துச் சரியாம்? தற்காலத்தில் இக்கொள்கை ஆட்சேபமுடைத்து.

‘இற்றைக்கு 5000 வருடங்கட்கு முன் பூமி சிருட்டிக்கப்பட்டது’ எனக்கூறும் மேலைத் தேயத்தாரின் கொள்கையை அனுசரிப்போர் இக்கொள்கையை (Miths) கட்டுக்கதைக் கொள்கை எனக் கூறுவர். புரோபெசர் பிக்கறிங்லாட் கெல்வின் சேர் நோமன் லொக்கிர் முதலிய மேலைத்தேய சாஸ்திர விற்பன்னர்கள் பூமியின் உற்பத்திக் காலத்தையும் நாசகாலத்தையும் பற்றிக்கூறப்புகுந்து ஈற்றில் முடிவுரை கூறாது தியக்கமுற்றனர்.

எத்தனையோ ஐயாயிரம் வருடங்கட்கு முன் பூமி உற்பத்தியானது என்பது இவர்களின் கொள்கை. சூரிய சித்தாந்தப்படி சிருஷ்டியாதிமுதல் 1955885023 அபிஜித்து நக்ஷத்திரத்துக் கடுக்க இருப்பதும் க்ஷயமடைந்து ஒளிகுன்றி வருவதுமான ஓர் பிரமாண்ட வஸ்துவானது, ரவிசமஸ்தானத்தை (Solar system) நோக்கி வருகின்றது. இது பூமியைத்தாக்கச் சுமார் 430000 வருடங்கள் செல்லும் எனவுங் கூறுகின்றார்கள். இக்கால முடிவானது இக் கலியுகாந்த சந்தியா யிருப்பதாலும், யுக சந்திகளிற் பிரளயம் முதலியன வுண்டாகும் என இந்தியர்களின் சாஸ்திர சம்மதமாயிருத்தலினாலும் மேற்கண்ட கூற்று உண்மையா யிருப்பினு மிருக்கும்.

இனி, இந்தியரும், கிரேக்கரும், வேறுஞ் சிலரும் சூரியோதயத்தையும்; இத்தாலியரும், பொகீமியரும், வேறுஞ்சிலரும் சூரியாஸ்தமனத்தையும், ஆங்கிலேயர் அர்த்தராத்திரியையும் நாட்பிறப்பாகக் கொள்ளுவர். ஆங்கிலேயர் இரவு பன்னிரண்டு மணிமுதல் பகல் பன்னிரண்டு மணி வரையுமுள்ள காலத்தை அந்த நாளின் (A. M.) முற்பாக நேரமாகவும், பகல் பன்னிரண்டு மணி முதல் இரவு 12 மணி வரையுமுள்ள காலத்தை (P. M.) பிற்பாக நேரமாகவும் கொள்ளுவர். அவர்களுள் வானசாஸ்திரிகள் பகல் 12 மணியையே நாளின் அந்தமும் ஆதியுமாகவைத்து 1 மணி, 2 மணி, 10 மணி, 13 மணி, 19 மணி, 24 மணி என எண்ணி நாளைக் கணக்கிடுவார்கள். ஆனால் இவ்விதக் கொள்கையானது வானசாஸ்திர விஷயத்துக்கு மாத்திரமேயாம். லௌகிக விஷயத்துக்காயின் முற்காட்டிய விதமே கொள்ளுவர். நாளை முற்பாகம் பிற்பாகமாக ஆங்கிலேயர் பிரித்துக் கொண்டவாறே இந்தியரும் சாமமாயும் அன்னமாயும் பிரித்துக் கொண்டார்கள். (தொடரும்)

வே. பொன்னையா பிள்ளை,
Port Dickson.

---

## விவசாய முன்னேற்றமும் தனவைசிய சமூகமும்

திருமகட்கு உறைவிடமா யிருப்பது தனவைசிய சமூகமே! பம்பாய்க்குபாரசீகர்களும் பாட்டியாக்களும், வங்காளத்திற்கு மாறுவாரி மரபினர்களும் திருமகளின் கடாக்ஷம் பெற்று வர்த்தக அரசு புரிவதைப் போன்று நம்மரபினர் தென்னாட்டு வைசிய ரத்தினங்களாய் விளங்கி வருவது ஒருவாறு பேரானந்தத்தை உண்டாக்கினும் இதர மாகாணங்களில் நம்மைப்



போன்று இச்செல்வப் பேர் பெற்றவர்கள் எடுத்திருக்கும் முயற்சியில் ஒரு பகுதிக்காவது நம் குலத்தவர்கள் ஈடுபடாதிருப்பது, பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, சாக்கி முதலிய நகரங்களில் உள்ளவர்களின் ஆதரவாலும் பெரு முயற்சியாலும் ஆயிரக்கணக்கான குதிரை சக்தியைக் கொண்ட இஞ்சின்களால் நடத்திவரும் தொழிற்சாலைகளையும், ஆயிரக்கணக்கான கூலியாட்களுக்கு விடாது வேலையைக் கொடுத்து ரக்ஷிக்கும் பல காப்பித் தோட்டங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் பார்க்கப்புலனாகும். அநேக சமுத்திரங்களைத் தாண்டி, கொண்டு விலை செய்து லாபகரத்துடன் திரும்பி வருகிற நமக்கு தைரியமும், ஊக்கமும், விடாமுயற்சியும் போதிய அளவுக்கு மேல் எஞ்சியே நிற்கிறதென்று சாதிக்கவும் தகும். செல்வம், ஊக்கம், தைரியம் முதலிய இன்றியமையாதவைகளையுமுடைத்தா யிருக்கும் பாக்கியத்தைப் பெற்ற நாம், நம்மைப் போன்றுள்ள மற்ற மாகாணத்திய தனவைசியரடையும் லாபம் மதிப்பு பேர் முதலியவைகளை அடையாதிருப்பதின் காரணந்தா னென்ன? நம் மிடத்திலிருக்கும் உறுதியும் பிடிவாதமும் அநேக விதங்களில் நமக்கு நன்மையே பயக்கினும், ஒரு தொழிலிலேயே பெரும்பான்மையாக, நாம் தலையிட்டுக் கொண்டு அதைமாத்திரம் நடத்துவதே நம் மரபினர் எல்லாவழிகளிலும் முன்னேற்ற மடைந்து மேற்கே பாரசீகர்கள் விளங்குவதைப்போல் இத் தென்னிந்தியாவிற்கு குன்றின் மேல் வைத்த ஒரு பெருவிளக்கைப்போல் பிரகாசிக்கா திருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

'எல்லோரும் ஒரேவகைத் தொழிலி லீடுபட்டு நடந்து வருவதால் வரவேண்டியலாபம் குறைந்து போட்டி அதிக மேற்படுவது ஒருபுறமிருக்க, இத்தகைய சந்தர்ப்பத்தில் எத்தகைய லாபமுள்ள தொழிலின் நற்குணங்களும் நலிவு கொள்ளும். இதிலிருந்து நான் வட்டித்தொழிலைக் குறைகூறுகின்றே னென்று நினைவுகொள்ளா திருக்குமாறு எனது சமூகத்தாரைத் தாழ்வுடன் வேண்டுகின்றேன். எத்தகைய மகத்தான தொழிலா யிருப்பினும் அநேகர் அளவுக்கு மிஞ்சி ஒரேதுறையில் இறங்குங்கால் அத்தொழில் ஒரு சவுதக்குறியையே காண்பிக்கும் என்பது எனது துணிவு. இதிலும் இச்சந்தர்ப்பத்தில் இத்தொழிலி லடைந்துவரும் சீர்கேட்டை ஆயிரம் நாப் படைத்த ஆதிசேடனாலும் விரித்துரைக்க முடியாது.

இனி நம்மில் பெரும்பான்மையோர் வேறு லாபமுள்ள தொழில் ஆரம்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. நம்முன்னே பல நூறு தொழில்கள் காணப்படினும் இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் சீர்தூக்கிப் பார்க்கப் புகின் விவசாயமே முக்கியமாக ஆதரிக்கப்பட வேண்டிய முழுமுதல் தொழிலாக முன்னிற்கிறது. ஜீவகாருண்யத்திற் காகட்டும் லாபகரத்திற் காகட்டும் கமகத்தொழிலே முதன்மையாக வீற்றிருக்கின்றது. நூற்றுக்கு எழுபத்தாறு நபர்கள் செய்யும் தொழில் விவசாயமே! இத்தேசத்து

ஜனங்களில் பெரும்பான்மையோர் பல ஆயிரம் வருடங்களாக ஆண்டு அநுபவித்து வரும் ஒருதொழில் லாபத்தைக் கொடுக்காத தொழிலென்று கருதமுடியுமா? அல்லது இத்தொழிலைக் கைக்கொள்ளுவதனால் கௌரவக் குறைவு ஏற்படக் காரண முண்டா? அல்லது நாம் தொன்று தொட்டு நடத்திவரும் தொழிலைக் காட்டிலும் சிரமமும் உழைப்பும், இதற்கு அதிகம் வேண்டுமா? அல்லது வட்டித் தொழிலைவிடப் பணம் அதிகமாய்த் தேவையுண்டா?

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர்" என்றும் "தொழுதுண் சுவையின் உழுதுண் இனிது" என்றும் வழங்கும் பெரியார் பொன்வாக்குப் பொய்யாகுமோ. இதனாலே மதிப்பும் கௌரவமும் விவசாயத்தையே தழுவிநிற்கின்றனவென்பது புலப்படவில்லையா? "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்று வழங்கும் மூதுரையினால் விவசாயம் சரியான நல்ல தொழிலென்று கொள்ளவேண்டு மல்லவா? இத்தொழிலினால் நஷ்டம் வாராதென்பதும் "மேழிச்செல்வம் கோழைபடாது" என்ற தனிமொழியால் பொலிகின்றது. ரசவாதத்தைப்போல் பெருலாபத்தைக் கொண்டுவரும் ஒரு தொழிலாக இதைக் கருதவேண்டுமென்றே "விவசாயமோ ரசவாதமோ" என்கிற பாமரப் பழமொழி இந்நாளும் வழங்கிவருகிறது.

விவசாயத்தால் லாபம் உண்டு, பேர் உண்டு, பூமாதேவியின் கடாக்ஷம் உண்டு, ஜீவகாருண்யம் சம்பூர்ணமாய் உண்டு. இத்தகைய காமதேனுவாகிய இச்சிறந்த தொழிலிலேயே நம் கவனத்தைச் செலுத்துவதற்காகவே, தனவைசிய சகோதரர்களே! தங்கள் முன்னிலையில் விவசாயத் தொழிலை நிறுத்தி யிருக்கின்றேன். நாம் இதனை ஆதரிக்க இதுவே சமயம். இத்தொழிலை ஆரம்பிக்கும் பக்ஷத்தில் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜீவிக்கும். லெக்ஷக்கணக்கான கால் நடைகள் நன்மையடையும். ஜீவராசிகளுக்கு ஒரு பெரு நன்மையுண்டாகும். இதோடு நாம் ஏராளமான லாபத்தை யடையவும் மார்க்கம் உண்டு. இத்தகைய நல்ல தொழிலின் மேல் நம் நாட்டம் உடனே செல்லல் வேண்டும். இப்பெரும் பரோபகாரமான வேளாண்மைத் தொழிலைக் கொண்டு நாம் விருத்தியடைவதுடன் தேசத்தையே முன்னேற்ற மடையுமாறு செய்யும்படி எனது சகோதரர்களை இன்னும் ஒருமுறை வேண்டிக் கொள்ளுகிறேன். "வரப்புயர" என்று ஆசீர்வதித்த ஔவையினது திருவாக்குப்படி நம்முடைய செல்வத்தினாலும் விடா முயற்சியாலும் வரப்பு உயரச்செய்ய வேண்டியது நமது முதற்கடமையாகும். "வரப்பு உயர நீர்உயரும், நீர் உயரநெல் உயரும், நெல் உயரக் குடி உயரும்," இதை அநுசரித்தே நமது கவித்திலகமாகிய கம்பரும் "வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும் ஓதுவா ரெல்லாம் உழுவார்தம் தலைக்கடைக்கே, கோதைவேன் மன்னர் குடைவளமும் கொழுவளமே, ஆதலால் இவர் பெருமை யாருரைக்க வல்லார்" என்று கூறி இத்தொழிலை யாவருக்கும் சிபார்சுசெய்திருக்கிறார். சகோதரர்களே! உடனே இவ்வளவு லாபகரமாயுள்ள பரோபகாரம் நிறைந்த இத்தொழிலைத் தேசத்தின் நன்மையை நாடியும் நம்லாபத்தை உத்தேசித்தும் யாவரும் கைக்கொள்ளுமாறு ஸ்ரீ சண்முகநாதனைப் பிரார்த்திக்கிறேன்.

யெ-பெரி-கரு-மு. சின்னையா செட்டி,
திருக்கோவிலூர்.

---



## தமிழ் நாடு

அமிழ்தினுமினிய தமிழ்மொழி நுவலும் அன்பர்காள்,

1. திராவிடம் எனும் தமிழ்முறை அருந்தி அன்னதை யாவரும் பருகிவரத்தக்க ஞானச்சுடராய் விளங்கி வருகின்ற நம் ஆனந்தன் வாயிலாக நம் தமிழன்னை பரவியிருந்த நாட்டையும், இருக்கிற நாட்டையும் பற்றிச் சிறிது உரைக்க விரும்பினேன். ஆனந்தன் இடந்தருவானாக.

2. ஓர்கால் நம் தமிழ்நாடானது வடக்கே ஹிமயம்தொடுத்து தெற்கே குமரிமுனை வரை (அதாவது பாரததேசமாய் இந்தியா முழுதும்) பரவியிருந்ததென்று தெரிகிறது. ஆனால் அதற்குரிய அத்தாட்சிகள் சிற்சில விடங்களிலேயே காணக் கிடைக்கின்றன வாதலால் நிச்சயிப்பதற் கேதுவில்லை. என்றாலும்.

"தென்குமரி வடபெருவகள்
குணகுட கடலாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிது கடிந்து கோளிருத்தி
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல்
* * * * *
விடியென முழங்கும் முரசின்
வரையா வீகைக் குடவர்கோவே" (புறநானூறு)

என்னும் பாட்டால் வடக்கே ஹிமயமலையும் தெற்கே குமரிமுனையும் கிழக்கும், மேற்கும், கடலாற்சூழப்பட்ட இவ்விந்தியா தேசத்திலுள்ள சிற்றரசர்களை யெல்லாம் குடவர்கோ என்னும் தமிழரசன் வென்று தனதுவிற் கொடியை ஹிமயமலையில் நாட்டினான், என்றும் அவன் காலத்தே தமிழகமானது பரதகண்ட முழுவதும் பரவியிருந்த தென்றும் தெரிகிறது. இன்னும், ஓர் சோழ அரசன் ஒருவன் இந்தியச் சிற்றரசர்களையெல்லாம் வென்று தனது புலிக்கொடியை மகாமேருவாய ஹிமயமலையில் நாட்டினான் என்றும்

பெரியபுராணச் செய்யுளில் காணக் கிடைக்கின்றது. அதனால் தமிழ்நாடு ஹிமயம்வரை பரவியிருந்ததென்று, தெள்ளிதில் அறியலாம்.

3. ஆனால் இதற்குப் பிந்தியவர்களான தொல்காப்பியர் முதலியோர் காலத்தில் வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரிமுனையும் கிழக்கும் மேற்கும் கடலாற் சூழப்பட்ட பிரதேசமே தமிழ் நாடென்று பிரசித்தம். அதற்குரியவும், மருத்தற்கரியவுமான அத்தாட்சிகள் பலவிடங்களிலும் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக, அகஸ்தியரின் சீடரான தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில்,

“வடவேங்கடம் தென்குமரியாயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்” என்றும்,

மற்றொரு சீடரான சிகண்டியாரது சிகண்டியில்,

“வேங்கடம் குமரி தீம்புனர் பௌவம் என்று
இந்நான் கெல்லை தமிழது வழக்கே” என்றும்,

இராச ரிஷியாகிய இளங்கோவடிகளது சிலப்பதி காரத்தில்,

“நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
தமிழ் வரம் பருத்த தன் புனநாடு” என்றும்,

இன்னும் பவணந்தி முனிவரது நன்னூலில்,

“குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்” என்றும்,

கூறி யிருக்கிறது.

இனி தென்குமரி நாடானது தெற்கே வெகுதூரம் பரவி யிருந்து பின்னால் கடல் கொள்ளப்பட்டதென்றும் இளங்கோ வடிகளது சிலப்பதிகாரத்தில்,

“பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள” என்று

கூறப்பட்டுள்ளது. இதனாலேயே அப்பொழுது தென்குமரி நாட்டிலுள்ள ஏழ் தெங்கு ஏழ் மதுரை ஏழ் குன்றம் முதலிய நாடுகள் தமிழ் நாடே எனச் சாற்றுதற் கிடந் தருகின்றது.

இன்னும் தமிழ் நாட்டை,

“தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண்பூழி,
பன்றியருவா யதன் வடக்கு—நன்றாய
சீதம்மலாடு, புனநாடு, செந்தமிழ்சே
ரேதமில் பன்னிருநாட் டெண்”

“சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுக், குடகம்
கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம்



கங்கம், அகதகம், கடாரம், கவடம், கடுங்குசலம்
சங்கும் புகத்தமிழ் சூழ் பதி னேழ் புவீதா மிவையே.”

என்று கூறுவதால், தற்காலத்திய இலங்கை, அரேபியா, பெங்காளம், பர்மா, சீனு, ஜாவா, ஒரிஸ்ஸா முதலிய நாடுகள் எல்லாம் தமிழ் நாடே யென்பதை ஒருவாறு நிச்சயிக்கலாம்.

4. இன்னும் இதற்குப் பிற்பட்ட கம்பர், புகழேந்தி முதலிய புலவர்கள் காலத்தில் தமிழ் நாடானது சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, நடுநாடு, தொண்டை நாடுகளிலேயே பரவியிருந்தது. இதற்கு மேற்கூறிய புலவர்கள் ஆங்காங்கு பாடிய பாட்டால் அறியலாம்.

5. ஆ! இவ்வளவு தூரம் பரவியிருந்த தமிழ்நாடு தற்காலம் எந்நாட்டில் பரவியிருக்கிறதென்பதை நாம் அறிய முடியவில்லை. இருந்தாலல்லவோ அறியலாம். தற்காலம் தமிழ் நாடடைந்திருக்கும் சீர்கேட்டை நண்பர்கள் அறிந்திருப்பார்கள். ஆ! இவ்வளவு குறைந்த பரப்பையும் சீர்கேட்டையும் நம் தமிழ் அன்னை யடைந்ததற்குக் காரணம் யாதெனில் மாணாக்கரின் அக்கரைக் குறைவே. தற்காலத்திய மாணாக்கர் ஒவ்வொருவரும் இரவும் பகலும் ஆங்கிலேய புத்தகத்தைத்தவிர வேறு புஸ்தகத்தைத் தொடுவதேயில்லை. தமிழ் தாய்ப்பாஷைதானே, எளிதில்வந்துவிடும் என்றுவரிதே யிருக்கின்றனர். ஒருகால் இந்தியா முழுதும் ஏகச்சக்ராதிபத்யம் செலுத்தி வந்த தமிழரசி தற்காலத்தில் இவ்வாறு க்ஷீணதசை யடைந்ததற்குக்காரணம் என்னையோ அறியோம். தமிழைப்போன்ற அழகும், தெய்வத்தன்மையும் பொருந்திய பாஷையும் உளதோ. தமிழ் நூல்களாய,

“சிந்தாமணியின் நந்தாப் பொருண்மையும்
மணிமேகலையின் அணிகெழு போக்கும்
சிலப்பதிகாரத் திலக்கியச் செலவும்
கம்பன் கவியின் செம்பொரு ளின்பமும்
பத்துப்பாட்டின் வித்தக நடையும்
கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும்
வருமோ மற்றோர் வாக்கின் வழித்தாய்
வாராது என்பது உண்மையே யன்றோ.”

6. நம் தமிழ் அன்னை தற்காலத்தில் அடைந்திருக்கும் க்ஷீணதசையைப்பற்றி ஆனந்தனில் பலரும் பலவிடத்தும் கூறியுள்ளார்கள். ஆதலால் ஒவ்வொரு மாணவரும், நண்பரும் நம் தமிழை விருத்திசெய்ய வேண்டு முயற்சி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன். எல்லாம் வல்ல பரமன் அருள் புரிவாராக.

தி. மு. பாஸ்கரன்,
திருநெல்வேலி.

## இல்லறம்—ஜீவகதி.

(307-வது பக்கத் தொடர்ச்சி)

மறு சரீரத்துக்குக் காரணம் அவ்வான்மாவின் ஆசையே ஆகையால், அவ்வாசையற்ற வான்மா சுத்தமேயாம். அவன் செய்த பாபகன்மங்களுக்கு யாது கதியெனின், மரண வேதனையாகிய மஹா துன்பகாலத்தில் எல்லாவற்றையும் வெறுத்து ஞானசொரூபியாகிய கடவுளைச் சிந்தித்தானாகையால் அந்த ஞானாக்கினியா லது தகிக்கப்பட்டொழியும். தெய்வ சிந்தனையாகிய புண்ணிய மேலிட்டிருக்கும். அப்புண்ணிய பலனை யனுபவிக்கத்தக்க உலகமெதுவோ அவ்வுலகத்தில் அதனை யனுபவிப்பதற்குரிய சரீரத்தையே அவ்வான்மா அடையுமென்க. உத்தராயணம் கிருஷ்ண பட்சத்திரவில் உடலை விட்ட ஆன்மாவும் புண்ணியான்மாவே .யாயினும் பாப சம்பந்தமுள்ளதாகவே கருதப்படும். குறித்த வுலகத்தை யடைய நாட் செல்லும். பகலில் மரணமடைந்தது கொஞ்சம் சீக்கிரமாகச் செல்லும். சுக்கில பட்சத்திரவும் கிருஷ்ண பட்சத்துப் பகலும் ஒரு தன்மையனவாம். எவ்வாறாயினும் உத்தராயணத்தில் உடலை விட்ட ஆன்மா புண்ணிய முள்ளதாகவே கருதப்படும். யாது காரணத்தால் எனின் போய்ச்சேரவேண்டிய இடத்தைச் சீக்கிரத்தில் அடைவதினாலே யென்க. சுத்த வீரர்களும் முற்றத் துறந்த சந்நியாசிகளுந் தவிர அதிக புண்ணியமுடைய ஆன்மா பன்னிரண்டு நாட்களுக்குள் குறித்த விடம் போய்ச்சேரும். குறைந்த புண்ணியமுடைய ஆன்மாக்கள் ஒருமாதம் மூன்றுமாத காலவளவைக்குள் போய்ச் சேரலாம். எவ்வாறாயினும் எல்லா ஆன்மாக்களும் ஒரு வருஷத்துக்குள் 'புண்ணிய வுலகத்தையோ நரக வுலகத்தையோ போய்ச் சேர்ந்துவிடும்.

தட்சிணாயனத்தில் மரணமடைந்த வான்மா பாபான்மா வென்றே கருதப்படும். புண்ணியமுடையதாக விருந்தால் சூரிய கிரணங்களால் இலேசாகும்வரை அலைந்து பின்பு கருதப்படும் புண்ணிய போகத்தை யடையும். பாபாத்மாவாகவிருந்தால் சந்திர மார்க்கத்தில் நெடுங்காலம் சுழன்று திரிந்துகொண்டிருந்து பின்பு நரகத்தை யடையும். மஹா பாபாத்மாக்களா யிருந்தால் சந்திர கிரணத்தால் அதிகமாய் நனைந்து கனதியாய்ப் பூமியிலேயே விழும். பூமியிலே மண்ணொடு கலந்து புழு பூச்சிகள் கொசுகு ஈக்கள் ஆகிய ஜன்மத்தை யடையும். இன்ன மதிக பாபமுள்ளவை பூமிக்குளிறங்கும். அதல, விதல, சுதல, ரஸாதலம் வரையும் சென்று அவ்வவ் நரக வுலகத்துக்குத்தக்க சரீரத்தைப் பெறும். அங்கே முழுவதும் துன்பமே. ரசாதலம் அக்கினி யெரிந்துகொண்டிருக்கு மிடமாதலா லதைக்கடந்து செல்லா. ரஸதலத்தை யடையுமான்மா அக்கினியால் வெந்துகொண்டு மஹா துன்பத்தை யடையும். அக்கினியால் தகிக்கப்படுவதினால் சூட்சும சரீரத்தி லடங்கிக் கிடக்கும் பாபம் சிறிது சிறிதாகக் குறையும். குறையவே மேலே கிளம்பிச் சுதல விதல அதலங்களை முறையே யடைந்து பின் பூலோகத்தை



யடையும். அனுபவத்தினால் பாபகர்மம் முற்றுந் தொலைந்திருந்தால் மனிதசரீரத்தை யடையும். அன்றேல் பசு பட்சிகளாதி ஜந்துக்களாக உருவெடுக்கும்.

இனி பாபத்திற் குறைந்த சில ஆன்மாக்கள் சந்திரகிரண மார்க்கத்திலகப்பட்டுக்கொண்டு உழலும். பகற்காலத்தில் சூரிய கிரணங்களால் மேலே யிழுக்கப்படும். இரவில் சந்திரகிரணங்களால் பூமியிலிருத்தப்படும். எந்தப் பதார்த்தமும் மேலே யேறுவது கடினமாய்ச் சற்று மெதுவாகவே செல்லும். கீழே யிறங்கும்போது வெகு வேகமா யிறங்கும். இதைத்தான் "சாணேற முழம் சறுக்கிற்று" என்ற பழமொழி விளக்கும். உத்தராயணத்தில் வேகமாய்ச் செல்லுதலால் நெடுந்தூரம் சென்றால் இராக்காலத்தில் அதைவிடப் பல மடங்கு அதிகமாய்க் கீழே யிறங்கிவிடும். இப்படியே சூரிய கிரணத்தால் ஏறுவதும் சந்திர கிரணத்தா லிறங்குவதுமாக வலைந்து திரிந்துகொண்டிருந்து கடைசியில் அதன் பாபத்துக்கேற்ற பாபவுலகத்தை யடையும். எப்படியானாலும் முந்நூற்றறுபத்தைந்து நாட்களுக்குள் குறித்த விடம் போய்ச்சேரும். அவ்வுலகானுபவ முடிந்ததும் மறுபடி யவ்வுலகத்தை விட்டுப் பாப சேஷத்துக்காகவோ புண்ணியத்துக்காகவோ நியமிக்கப்பட்ட வுலகத்தில் சேர்ந்து அவ்வுலகத்துக்குரிய தனு கரண புவன போகங்களை யனுபவிக்கும்.புண்ணியமும் பாபமுமாகியவிருகன்மங்களும் ஜனனத்துக்கே காரணமாகும். ஆதலாற் புண்ணிய கர்மத்தையே விரும்பிச் செய்யவேண்டும். அத்துடன் பக்தி உண்மையாகச் செய்யவேண்டும். தெய்வபக்தியுடன் கலவாத புண்ணியம் பெரும்பயன் அளியாது. தெய்வம் என்பது சிற்கனநந்த சொரூப முடையதாதலால் அதைச் சிந்திக்கச் சிந்திக்க மனம் பாவனமாய் ஞானமயமாகும். ஞானாக்கினியால் பாபகர்மந் தகிக்கப்படும். தகிக்கப்பட்டுச் சாலோக, சாமீப சாரூபமாகிய பத முத்திகளை யடைந்து புண்ணிய பலனை யனுபவித் தொழித்த வனந்தரம் சாயுஜ்யம் என்கிற ஐக்கியமுத்தியை யடையும். இதுவே கிரம முத்தியென்பது. ஐக்கிய முத்தியடைந்த வான்மா மீண்டும் பிறவாது. இதனை விம்முத்தியை மீளாக்கதியென்று பெரியோர் கூறுவார்கள். இவை யொரு சமையம் பின்னால் எழுதப்படும்.

இனி யிவ்வான்மாவின் கதி யிவ்வாறாயின் அவ் வான்மாவின் சரீரம் யாதாகுமோ வெனின் அது கூறுதும். ஜீவவியக்க நீங்கியசரீரம் பிரேதமென்னப்படும. அணுக்கள் ஜீவ அணு, ஜட அணு என விருவகையாம். சித்தணுவென ஒன்றுண்டென்றும் ஒரு சாரார் கூறுவார்கள். ஜீவவணுவிலதனையடக்கி அணுக்களிரண்டென்பதே பெருவழக்கும் பெரியோர் கொள்கையுமாம். இவ்விருவகை யணுக்களும் சேர்ந்தே சரீரமாகின்றது. இச்சரீரத்தில் தலைவனாகிய ஆன்மாவுள்ள வரைக்கும் சரீரமியங்கும். ஆன்மா நீங்கினால் இயங்காது. ஜீவசக்தியை விருத்தியாக்கி யியங்கச்செய்யும் பிராணவாயு சரீரத்தை விட்டொழிதலால் சரீரமியங்குத லரிது. அக்கினியின்

தன்மையுள்ள பிராணவாயு நீங்கச் சரீரம் குளிர்ச்சியடைந்து, இரண்டொரு தினங்களுக்குள் அழுகத் தொடங்கும். அதற்கு முன்னால் அது அவ்வாறு அழுகிக்கெடாதபடி பிரேத ஸம்ஸ்காரகிரியை செய்யப் படுகின்றது. அது இருவகையாகச் செய்யப் படுகின்றன. அவற்றுள் பெரும்பாலார் கொள்கை புதைத்தலாம். மற்றொன்று அக்கினியால் தகிக்கப்படுவது. இவ்விரண்டினுள்ளும் தகனஞ்செய்வதே தகுதியுடைய தென்பது நமது நாட்டுப் பேரறிவுள்ள பெரியோர் கொள்கையாம்.

பூமிக்குட் புதைத்தலால் தீமையுண்டா மென்பது வைத்தியநூல்கள் பதார்த்தகுண சாஸ்திரங்களின் கருத்து. சரீரத்துக்கு அழுகும் தன்மையுண்டென்பதை யெவரும் மறுக்கத் துணியமாட்டார்கள். யாவருக்கு மொப்ப முடிந்ததே. அழுகினால் அதில் புழுப்பூச்சிகளுண்டாவதும் பிரத்தியட்சம். அக்கிருமிகளெல்லாம் ஷை தன்மை யுடையன. பூமிக்குள் புதைத்து விட்டால் அச்சரீரம் மண்ணோடு கலந்து பலவகைப்பட்ட கொடிய விஷக்கிருமிகளாய்ப் பரிணமிக்கும். அவை யொன்றை யொன்று தின்று ஜீவிக்கும். பூமியிலுள்ள கெட்ட வாசனையையும் ரஸத்தையும் உட்கொள்ளும். பூமிக்குள் வெய்யில் இல்லாமையால் அழுகினசரீரம் சீக்கிரம்காயாது. ஊனீரும் வடியும், இதனிலும் கிருமிகளுண்டாகும். இவ்வாறு ஒருசரீரம் அநந்தமான சரீரங்களாகப் பரிணமிக்கும். அதல முதலிய கீழுலகங்கள் துன்பத்துக்கிடமான நரகலோகமா மென்று முன்னரே கூறப்பட்டது. ஆதலால் ஒரு சரீரமாய்ப் பாபபலனாகிய துன்பத்தையே நுகரும்.

ஆயின் ஆன்மாவே சிற்சொரூபி யென்றும் இன்பதுன்பங்களை நுகர்வதும் ஆன்மாவே யென்றும், நூல்கள் கூற நிற்க, ஆன்மாவற்ற சரீரம் துன்ப நுகர்வ தெவ்வாறெனின், சரீர ஜடஜீவ சக்திகளுடன் கூடிய தென்று கூறினோம். ஜீவசக்திக்குச் சிற்சத்தியின் சம்பந்த முண்டென்றுங் கூறினோம். ஜடசக்தி மிகுந்தும் மற்றைய குறைந்து மிருப்பதே சரீரவியல்பு. ஜடசக்தியின் மறைப்பினால் ஜீவசக்தி யுணர்வும் இயக்கமுமற்றிருக்கின்றது. புழுவாயினும் பூச்சியாயினும் சிற்சீவ ஜடசக்திகளுடன் கூடியிருத்தலாலும சரீர மெடுக்கும்போதே பிராணவாயுவாகிய ஜீவன் சம்பந்தப்படுதலாலும் உணர்ச்சி யுண்டாம். பூமிக்குள் அனந்தமான சிற்சொரூபான்மசத்தி பாபத்தால் புகுமென்று கூறினோமாதலால் அவ்வான்ம சத்தியையும் பெற்று இன்பதுன்பங்களை நுகருமென்க. சரீரத்தில் ஜீவனுமான்மாவும் இல்லாவிட்டாலும், ஜீவனிருந்ததனாலுண்டான ஜீவவாசனை நெடுங்கால மொழியாம லிருக்கும். இதனால்தான் ஒருவரு மறியாமல் இரகசியத்தில் கொலைசெய்து, புதைக்கப்பட்ட விடத்தில் பயங்கரமான தோற்ற முண்டாவது இயல்பு. இச்சமாசாரத்தை முன்புகண்டும் கேட்டும் அறியாத புதியமனிதன் அவ்விடத்தில் ஏதோ சொரூபங் காணப்படுவது போலவும், யாரோ பேசுவதுபோலவும் அறிவான். அறிகிறதாக அநேகர்



சொல்லவும் கேள்வியுண்டு. சுயமாக அறிந்துகொண்டது முண்டு. இந்தப் பதார்த்தகுண சாஸ்திரத்தைப் பரிக்ஷித்து அறிவதற்காக முயன்று பலவிடங்களில் இரவிலும் பகலிலு முலாவித்திரிந்து தொனி கேட்கப்படுவதையும், ஏதோ நாம் முன்பின் அறிந்திராத ஒரு சொரூபம் நடமாடுவதாகவும் நேரில் பார்த்தறிந்தவர்கள் அநேகர். எமக்கும் இவ்விஷயத்தில் அதிக அனுபவமுண்டு. இவ்வகையான பதார்த்தகுண நூல்களை யெய்தப்பெறாத அந்நிய நாட்டாரிந்த வுண்மையை யுணரமாட்டார்கள். இந்தச் சீவசக்தி சரீரமுற்றும் அழுகி மண்ணொடு மண்ணாய் மடிந்துபோனாலும் கபாலம் வெடிக்கும் வரைக்கும் நீங்காது. ஏனெனில் பிராணவாயுவின் பேதங்களின் ஒன்றான தனஞ்செயன் என்னும் வரயு கபாலத்தில் வசிக்கும். கபாலம் வெடித்தாலன்றி யது வெளிப்படாது. அந்தத் தனஞ்செயன் என்னும் வாயுவுள்ளவரைக்கும் ஜீவசக்தி யந்தச் சரீரத்திற்குண்டு. அதுவரையும் துர்மரணமடைந்த ஆன்மாக்களின் சரீரம் புதைக்கப்பட்ட விடங்களில் மேற்குறித்த காட்சிகள் நிகழும். இதனால் ஜீவான்மாவிட்டு நீங்கின சரீரத்திற்கு ஜீவசக்தியுண்டென்றும், அது பஞ்சபூதங்களுடன் சம்பந்தப் படும்போது ஜீவசக்தியைப் பெற்று இன்பதுன்பங்களை நுகருமென்பதுங் கொள்ளப்படும்.

(இன்னும் வரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## கடுஞ்சினம்.

பரந்தது இப்புவனம். மேன்மை யுற்றதுதான் மானிடஜன்மம். குறுகியதான நஞ்சீவியகாலத்துள் நாம் கொள்ளுங் குணங்கள் பலவுள. அவற்றுள் கொடிதினுங் கொடியதாகிய கடுஞ்சினம் தீவினைகளெனு மறுகுணங்களுக்கும் அடிப்படியாகி நிற்கின்றது. மானிடவாழ்வான பயிரில் பாழ்விளைவிக்கும் கோபத்தை யறவே ஒழித்துவிட வேண்டுமென்பது குறித்தே “ஆறுவது சினம்” என்று ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளார்.

ஏனெனில் கோபம் விளைத்திடுங் கூற்றுகளாகும், வஞ்சகமும், பொறாமையும், இகழ்தலும், தூற்றுதலும் பழிபாவங்களில் முடிகின்றன. சினமனமுடையவன் தூயமனத்தா னல்லன். சஞ்சல சித்த முடையவனாகிறான். கோபமிருக்க வேண்டியதுதான். ஆயினளவுக்கு மிஞ்சியது நஞ்சாகும். அவன் கடுந்தொழிற் புரியவும் பின் வாங்கின்றானில்லை. கோபம் படைத்தாரை அனைவரும் எள்ளுவபோல் நாமும் சினத்தைப் புறக்கணிக்க வேண்டும். ஏனெனில், இச்சினம்,

“மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முடிக்குமா போல
தாங்கரு சினத்தீ தன்னுள்ளே பிறந்து
தன்னுறு கிளையெலாந் தவிர்க்கும்

ஆங்கதன் வெம்மை அறிந்தவர் சமையால்
அதனையுள் ளடக்கவு மடங்காது
ஓங்கிய கோபத் தீயினை யொக்கும்
உட்பகை யுலகில்வே றுண்டோ ? "

என்னும் குணங்களை யுடையது. நல்லவனொருவன் விட்டுவிடக் கூடிய குணங்களுள் இது முதன்மை பெறுகின்றது என்பதுவும்,

" உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குஞ் சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க, "

என்பதனால் அங்கையங்கனியாகிறது. அனைவர்க்கும் கோபத்தீயுண்டு. கோபத்தனல் கொட்டி எரிக்கும் வன்னெஞ்சன் தன்னிலக்குத் தப்பித் தானே கெட்டழிகிறான். மேலும்,

" நெடுங்கால மோடினும் நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப்பாக்கும்—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம் "

என்னும் பிரிவினைகளையு மது உடையது. அதுபோன்ற கோபப் பொறியினை அடக்க வியலாதவன்,

" யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு "

என்றபடி அவதியுறுவான். ஏனெனில்,

" செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென் "

அதுபோல இல்லை யெனின்,

" தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம் "

என ஆகும். உதாரணமாக,

" கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுஷனும் கோல மாறினான்
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே "

ஆதலால் சினம் விடுத்துச் சிறப்புறக் கமலவண்ணனைப் போற்றுமின் !

நா. கு. கோபாலய்யங்கார்,
புங்கனூர்.

———

குறிப்பு:—நண்பர்களே ! மேற்கண்ட வியாசத்தின் தலைப்பில் சினம் என்றது கடுஞ் சினம் என்பதில் ஓர் விசேடம் அறியக்கிடக்கிறது. என்னெனில் "கோபம் கெட்டது அதை நீக்கிவிடவேண்டும்" என்பது, சொன் மாத்திரத்தில்கூறக்கூடியதேயன்றிச் செய்கையால் நடத்திக்காட்டுவது சுலப மன்று. சினம் தமோகுணத்தைச் சேர்ந்தது. இதைத்தீ என்றும், பேய் என்றும், செந்நாய் என்றும், ஆன்றோர் கூறியுள்ளார். மேலே கூறப்பட்ட " நெடுங்கால மோடினும் நீசர்வெகுளி * * * சீர்கொண்ட சான்றோர் சினம் " என்றதாலும், " நீரில் எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம் " என்பதனாலும் சான்றோரிடத்தும் சினம் என்பதுண்டு என்று விளங்குகிறது. ஆனால் அது முளைத்தவுடனே அதைக்கொழுந்துவிட் டெரியும்படியாவது நிலைத்து நிற்கும்படியாவது விடாமல் உடனே அறிவைக்கொண்டு அகற்றிவிடுவதே மேலோர் செய்கையாகும். கோபத்திற்கு மூலம் நான், எனது என்பதே. நான் என்ற அகங்காரம் அடியோடு நசிந்தாலன்றிக் கோபம் அடியோ டொழியாது. நான் என்பதற்றால் எனது என்பதும் ஒழியும். " நான் எனது " அற்றோன் தன்னை யறிந்தவனாவான். ஆகவே ஞானியொருவனே கோபத்தை யடியோடு விட்டொழித்த சாந்த மூர்த்தியாவான்.

பத்திரிகாசிரியர்.

———



## இந்தியா.

எந்த நாடு விவஸாயம், கைத்தொழில், வியாபாரம், கல்வி ஆகிய இந்நான்கு அம்சங்களிலும், இதர நாடுகளைவிட மிகுந்த மேன்மைபெற்று விளங்குகிறதோ, அந்த நாடே நாகரீக முள்ளதாயும் எவரும் மெச்சத்தகுந்ததாயும் விளங்குகிறது. இந்த அம்சங்களில் இங்கிலாந்து தேசமானது கழிந்த பல நூற்றாண்டுகளாய் படிப்படியாய் முன்னேற்றம் அடைந்து கொண்டே வந்ததினால் உலகத்தில் மிகப் பெரிய தேசமாய், எல்லா நாட்டிற்கும் பல அரிய விஷயங்களைப் போதித்துக் கொண்டு, செல்வத்தில் கொழுத்த தேசமா யிருக்கின்றது. செல்வாக்குப் பெற்றும் விளங்குகின்றது. இந்த விதமான உன்னதபதவியை இங்கிலாந்து அடைந்தது இருபதாவது நூற்றாண்டில். ஆனால் நமது ஆரிய வர்த்தமானது பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இதரநாடுகள் நாகரீகம் என்பது இன்னதென்றே அறியாத காலத்து, மேற் சொன்ன அம்சங்களில் இப்போது இங்கிலாந்து அடைந்திருக்கும் பக்குவத்திலும் பதின்மடங்கு அதிகமாய்ப் பக்குவம் பெற்று இருந்தது. எந்நாட்டினும் ஓர் நன்னாடாய் எவரும் போற்றத்தகுந்ததும் புகழத்தகுந்ததுமா யிருந்தது.

இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களைப்போல் ஒரு சிறு இராஜ்யமன்று. ஜனத்தொகையிலும் வடிவிலும் அவைகளைவிடப் பன்மடங்கு பெரிது. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களில் பாதியும், ருஷியாவின் இருமடங்கு ஜனத்தொகையும் அடங்கிய ஒரு பெரியதேசம். இந்தியாவைத் தனியான ஒரு கண்டமாகவே கருதலாம். உலகஜனத்

தொகையில், ஐந்தி லொருபாகம் இந்தியாவின் ஜனத்தொகையாம். இந்தியாவிலுள்ள மனிதர்கள் சில ஆங்கிலேயர்கள் கருதுவதுபோல் கருப்புமனிதரன்று. நாமும் இந்தியாவுக்கு வரும்போது வெள்ளையாகவே யிருந்தோம். ஆனால் சீதோஷ்ண ஸ்திதியினால் நமது நிறம் மாறிவிட்டது. பூமியின் வளப்பத்தினாலும், பருவத்திற்கேற்ற மழையினாலும் ஏராளமான உணவுப் பொருள்கள் விளைவதனால் இதர ஐரோப்பிய நாடுகளைப்போல் இந்நாடு தனது உணவு உடைச் சாதனங்களுக்கு அந்நிய நாட்டின் உதவியை எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஜனங்களின் முயற்சியும், இயந்திரங்களின் சவுகரியமும் ஏற்படும் விஷயத்தில் அநேக காடுகளும் மலை உச்சிகளும் சீர்திருத்தப் பெற்று விளைவுகள் ஏராளமாகி இப்போது ஏற்றுமதி செய்வதைவிடப் பன்மடங்கு அதிகமாய் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மிகுந்த லாபத்தை யடையலாம். உலகம் முழுதுக்கும் எல்லாச் சாதனங்களையும் பயிர் செய்வதற்குரிய சவுகரியங்கள் இந்தியாவி லிருப்பதால், ஜனங்கள் மிகுந்த ஊக்கத்துடனும், சிரத்தையுடனும் உண்மையுடனும் உழைக்கும் பட்சத்தில், விவஸாய விஷயத்தில் மற்ற நாடுகள் கற்கத்தகுந்த விதத்தில் சீரும் சிறப்பும் வாய்ந்து பிரகாசிக்கும்.

கைத்தொழில், வியாபாரம் இவ்விரண்டிலும் இந்தியா கி. மு. விலேயே மேன்மையடைந் திருந்தது. வஸ்திரங்கள் நெய்வதில் மிகுந்த சாமர்த்திய முள்ளதா யிருந்தது. இப்போது இயந்திரங்களின் உதவியால் செய்யும் துணிகளைவிட நேர்த்தியான துணிகள் நெய்ததற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போதும் பட்டுவஸ்திரங்களில் காசிப்பட்டு, காஞ்சீபுரம் பட்டுக்களைப்போல் நேர்த்தியாயும், ஈடுதாங்கக்கூடியதாயும், சைனா, ஜப்பான் முதலிய தேசப்பட்டுகள் இருப்பதில்லை என்பது நம்மவர்களின் பிரத்தியட்ச அநுபவம். ஒரு காலத்தில், இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய தேசங்களுடன் வியாபாரம் செய்துகொண்டிருந்தது. தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்கள் வெட்டி யெடுக்கப்பட்டும், அவ்வுலோகங்களில் பல வேலைகள் அற்புதமாய்ச் செய்ததாகத் தெரிகிறது. இப்போதும் வெண்கல வேலையிலும், நகைகள் செய்வதிலும் நமது ராஜ்யத்திற்கு வேறொரு இராஜ்யமும் சமமாகாது என்று துணிந்து கூறலாம். அவைகளைச் சீர்திருத்த மஹான்கள் முயற்சிசெய்யும் விஷயத்தில் எவ்வளவு நன்மையை நமது தேசம் அடையும்.

நாகரீகத்தைப் போலவே கல்வியிலும் மேன்மைபெற்று விளங்கிற்று. பல அரிய கிரந்தங்களின் உற்பத்தி இந்தியாவிலே தான். நமது முன்னோர்கள் தியாகம், யோகம், தானம் முதலியவற்றால் மனோவிசாலம், புத்திவிசாலம் ஆகிய இவ்விரண்டையும் அடைந்து, அதனாலுள்ள இன்பத்தை மற்றவர்களும் பங்குகொள்ளுமாறு, தங்கள் அனுபவ முதிர்ச்சியினால் பல பிரபந்தங்களை உண்டுபண்ணி யிருப்பதனால், நாம் இப்போது சிற்சில சங்கதி



களை அறியும் சக்தியை அடைந்திருக்கிறோம். எல்லா நாட்டுப் பிரபந்தங்களுக்கும் தாய்ப்பிரபந்த மென்று சொல்லக்கூடிய அளவு எழில், நலன், சுவை, இனிமை, ரஸம், அலங்காரம் முதலிய அம்சங்களெல்லாம் நன்கமையப் பெற்ற, இராமயணம், மஹாபாரதம், சுருதி, ஸ்மிருதி, பகவத்கீதை, முதலிய பிரபந்தங்கள் மேற்சொன்ன அம்சங்கள் பரிபூர்ணமாய் அமைந்திருக்கின்றன் என்பது உலகறிந்த விஷயமன்றோ! இந்நூல்களுக் கிணையான நூல்களும் உண்டோ? சங்கீத சாஸ்திரம், சிற்பசாஸ்திரம், நடனசாஸ்திரம் முதலியவை உற்பத்தியானது இந்தியாவிலல்லவா? கணிதசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலிய தத்துவங்களை இந்தியாவன்றோ கிரீஸ் தேசத்திற்குக் கற்பித்தது. ஐரோப்பிய நாகரீகத்துக்கு அடிஸ்தானமாய் விளங்கின கிரீஸ் தேசத்துக்குக் குரு நம்மிந்தியா வல்லவா? அவ்வித பெருமை வாய்ந்த இந்தியாவின் தற்கால நிலைமையைப்பார்க்கும் பொழுது, நமக்கு நம்மைப் பெருமை பாராட்டிக்கொள்ள யாதொரு பாத்தியதையும் கிடையாது.

அரசாட்சி விஷயமாய் ஆராயப் புகில் இந்தியாவில் அரசர்கள் ஆண்டு வரும்போது, ஜனங்களாற் கூடிய சபையொன் றிருந்த தென்றும், தங்களிஷ்டம் போல் நடவாது எல்லாவிஷயங்களிலும், ஜனங்களது அபிப்பிராயத்தை அனுசரித்தே ராஜ்யபாரம் நடத்தப்பட்டதென்பதும் விளங்குகின்றன. நியாய பரிபாலனார்த்தம் சட்டங்கள் ஏற்படுத்திக் கொண்டு ஆண்டி முதல் அரசன்வரை சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். இதர ராஜ்யங்களைப்போல் இராஜத்துரோஹக் குற்றத்துக் கானவர்கள் மிகவும் சொற்பமே. இந்த இராஜ்ய சரித்திரத்தில் கலகங்களும் குழப்பங்களும் இருந்ததாகத் தெரியவில்லை. அநேக மதங்கள் பரவியும், அதனால் குத்துக்களும் கொலைகளும் நிகழ்ந்ததில்லை. நிகழாதென்றே நம்புகிறோம். (மஹம்மதியர் படையெடுப்புக் காலத்தில் தவிர) சரித்திரங்கள், இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றைப் பார்வையிடும் பொழுது, இந்தியாவானது 'இராஜபக்தி' 'தேசாபிமானம்' இவ்விரண்டையும் பரம்பரையாகப் பூஷணமாகக் கொண்டதென்றும், அரசர்கள் தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காத்துக் "குடியோம்பிக் கொள்ளுமா கொள்ளுவோர்க்குக் காண்டுமே மாநிதியம்பல" என்னும் மெய்ம் மொழியை வேத மொழியாகக் கொண்டு, ஆறிலொரு பங்கு இறை வாங்கி, சுயலாபத்தைச் சிறிதும் கருதாது லோகோபகாரத்திற்குச் செலவழித்து வந்தனர் என்பதும் புலனாகின்றன. தேசத்தின் க்ஷேமத்திற்காக உடல் பொருள் ஆவியைத் தியாகம் செய்வதற்கும் ஆயத்தமா யிருந்த அரசர்கள் பலர் இருந்ததாகத் தெரிகிறது. சிலர் தியாகஞ்செய்து மிருக்கின்றனர். ஆகையால் நாட்டில் சமாதானமும் சந்தோஷமும் குடிகொண் டிருந்ததனால் ஜனங்களெல்லாம் இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆகவே கவிசிரோன்மணிகளின் அதிசயோக்திகளின் உண்மை சிறிது ஆராயின் ஒவ்வொருவருக்கும் விளங்கும்.

இவ்விதம் மேன்மையுள்ள நமது தேசம் தாழ்ந்ததின் காரணம் என்ன? இத்தாழ்வினின்றும் விடுபட்டு மேன்மையான வாழ்வை யடைவதெப்படி? நம் தேகத்தில் நமது முன்னோர்களின் இரத்தம் இன்னமும் ஓடிக்கொண்டு தானிருக்கிறதென்பதை எவ்விதம் மற்றவருக்கு அறிவிக்கலாம்? நாம் நமது செல்வப்பெருக்கையும் கல்விப்பெருக்கையும் திரும்பவும் எப்படி யடையலாம்? எங்ஙனம் எவரும் மெச்சத் தகுந்த விதத்தில் நாம் வாழலாம்? எவ்விதம் நாம் உலகத்தாருக்குப் பழைய குருவாய் விளங்கலாம்? நமது ஆரியர்களின் பெருமையைத் திரும்பவும் பெருமைப் படுத்துவதெப்படி? நமது பெருந்தன்மையை உபயோகிக்கக் கூடிய மார்க்கம் யாது? எப்பொழுது நமது பழய ஆனந்தத்தை யடையப்போகிறோம்.?

இப்போது நமக்கிடையில் ஏற்பட்டிருக்கும் ஊக்கக்குறைவும், சுயபாஷை, சுயதேசம் முதலிய விஷயங்களைக் குறித்து அறியும் அவாவின்மையும், அவ்விஷயங்களை நன்கு போதிக்கும் 'ஆனந்தபோதினி' போன்ற ஆனந்தம் விளைக்கும் பத்திரிகைகளை வாங்கி வாசியாது, வீண் பொழுது போக்குவதுமே, நமது தாழ்வுக்குக் காரணம். கல்வியின் நோக்கம் இன்னதென்றும், ஜீவியத்தின் உத்தேசம் எது வென்றும், மனம் வாக்குக் காயம் முதலிய கருவிகள். சுத்தமாயிருப்பதாலுள்ள பயன் இன்னதென்றும் அறிந்து, காமம், குரோதம், மோஹம், லோபம், மதம், மாத்ஸரியம் ஆகிய இவ்வாறு தீக்குணங்களையும் அறவே யகற்றி, ஒற்றுமையுடன் நேசமாய் வாழ்ந்தால், நம் இந்தியாவானது பழய பொன்னாடாய் விளங்குமென்பது திண்ணம். அங்ஙனம் ஒவ்வொருவரும் வாழ்வதே சிறந்ததோர் பாக்கியம். இல்லாவிட்டால் நம் வாழ்வால் யாது யோக்கியம்?

என். சுப்பிரமணிய அய்யர்,
கிழக்குரத வீதி, நாகர் கோவில்.

---

## பள்ளிக்கூடம் போய்க் கெட்டுப்போனான்.

சித்திரை மாதம் ஆரம்பித்து 10-12. நாட்களிருக்கும். இது வரையில் பலமாக அடித்துவந்த ஓர் முரட்டு வாடை எங்கேயோ போய்விட்டது. இரண்டு மூன்று மாதங்களாக கடற்கரைப் பக்கமே போகாமலிருந்த ஜனங்கள் அப்பக்கம் திரும்பலானார்கள். தொந்தரவான மழை நின்றுவிட்டது. சரீரத்து பாதையான வாடை சாந்த மடைந்து தென்றலாக மாறிவிட்டது.

நானும் மற்றவர்களைப்போல அக்காற்றைச் சுவாசிக்கக் கடற் கரைக்குப் போகலானேன். அடடா! கடற்கரையில் காற்று மாத்திரமா உண்டு! என்னென்ன சுகங்கள்! என்ன வேடிக்கை! அஸ்தமிக்கும் சூரியனுடைய சாயல் வானமுழுதும் பரவி நீல நிறத்தைச் செந்நிறமாக்கி, மேகங்களைப் பல பல வர்ணங்களாகச் செய்து மனதை ஓர் புறம் கவரும். நானா ரூபங்



களைத் தரித்த மேகங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அவ்வவ் வுருவ மழிந்து புதிய புதிய உருவங்களாக மாறுவதைப் பார்க்க, நம் கண்ணுக்குப் புலப்படாத ஓர் அற்புத மாயாவியின் ஜால வித்தைகளாகத் தோன்றும். சில சமயங்களில் வானத்தின் ஓர் மூலையில் இருண்ட கார் மேகங்கள் மத்தியிலே க்ஷணத்துக்கு க்ஷணம் பல நிறங்களையுடைய மின்னற் கொடிகள் நா நா பக்கமும் கிளையோடிப்பாயும் அருமையான வாண வேடிக்கையு முண்டு.

நம் எதிரே தோன்றும் காக்ஷிகளுக்குப் பின்னால் ஒரு சூத்திரதாரி இருந்து தான் ஆநந்திக்கவோ அல்லது நாம் ஆநந்திக்கவோ விளையாடுவதாகவும். மனதுக்குப்படும்.

ஆ! எனது நண்பர்களே! சாந்திமயமான அவ்வேளையில் அலையோரமாக ஒருவித கவலையு மில்லாமல் ஆநந்தமாய் நடந்து போகும் பாக்கியத்தைப் பெற்றிருப்பீர்களாகில், ஒருகாலும் சாக்கடைத் துர் நாற்றத்தைச் சகித்துக்கொண்டு தெருத்திண்ணை மீது கும்பலாகக் கூடி வம்பளக்க நேரவே நேராது.

பிரகிருதியின் இவ்விதமான சௌந்தர்யங்களைக் கண்டானந்தித்துக் கொண்டே கரையோரமாய் மணலில் ஓர் மாலை நான் சாவகாசமாகப் போய்க்கொண்டிருந்தேன்.

அப்போது வெளியே ஸ்வேச்சையாக விளையாடிக்கொண்டிருந்த நண்டுகளெல்லாம் பயந்து ஓடிப்போய் வளைகளில் ஒளிந்துகொண்டன. ஆஹா! அவற்றுக்கு மனிதர்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை! மனிதர்களோ ஒருவரையொருவர் நம்புவதில்லை. நண்டுகளுக்குள்ளே அங்ஙனமன்று அவற்றுக்கு மனிதனிடத்தில் நம்பிக்கைக் குறைவு.

அலைகள் ஓடோடியும் வந்து என் காலில்பாயும் விசித்திரத்தையும் கவனியாமல் அற்ப நண்டு கூட நம்பாத கூட்டத்திற் பிறந்தோமே என்ற சிந்தனையில் ஆழ்ந்தவனாகி மெதுவாகப் போய்க்கொண்டிருந்தேன். கொஞ்ச நாழிகை ஆன உடனே என் நண்பர் சிவா ஓர் புறமிருந்து காற்றைச் சுவாசித்துக்கொண்டே வந்து என்னைச் சந்தித்தார். இருவரும் உல்லாசமாக வேடிக்கைப் பேச்சுகள் பேசிக்கொண்டே சோலைத்தாண்டான் குப்பம் நோக்கிச்சென்றோம்.

சிறிது நேரத்திற்குள் அங்கே போய்ச் சேர்ந்தோம். சோலைத்தாண்டான் குப்பமென்பது, கடற்கரையோரமா யுள்ள நீண்டதொரு தென்னஞ் சோலை. அதனுள் எண்ணிறந்த குடிசைகள் உண்டு. அவற்றுள் செம்படவர்கள் குடிசை அநேகம். நாங்கள் போனபோது சில செம்படவர்கள் காயப்போட்ட வலையைச் சுருட்டிக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் மீன் பிடிக்கப் போவதற்குக் கட்டுமரத்தைத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். குடிசைகளுக்குள்ளே ஒருவருமில்லை. ஆண் பெண் அனைவரும் கடற்கரையிலே இருந்தார்கள். நாங்கள் நேரே ஒரு கட்டு மரத்தண்டை சென்றோம். அஃதப்போது புறப்படவேண்டிய கட்டுமரம். அதனில், செல்பவர்கள் சுகமே, போய்த் திரும்புவதற்காகச் சமுத்திர தேவதைக்குப் பூசை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் கிழவனாகக் காணப்பட்ட ஒருவனை நான் சில கேள்விகள் கேட்டேன். எங்களுக்குள் பின் வரும் சம்பாஷணை நடந்தது.

நான்:—அதென்ன ! நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?

கிழவன்:—நாங்கள் பூசைபோட்டுப் படைக்கிறோம்.

நான்:—யாருக்கு ?

கிழவன்:—சமுத்திர தெய்வத்துக்கு.

நான்:—எதற்காக ?

கிழவன்:—நாங்கள் மீன் பிடித்துக்கொண்டு சுகமாகத் திரும்புவதற்கு.

நான்:—ஆகையால் பூசைபோடாவிட்டால் ஆபத்து நேரிடுமோ?

கிழவன்:—ஆம்.

நான்:—பூசை போட்டால் ஆபத்து வரவே வாராதோ ?

கிழவன்:—வாராது. ஆனால் அவனவன் விதி யிருக்கிறதே. அவனவன் தலை யெழுத்தின்படி நடக்கும்.

இருந்தாலும் அங்கே ஆச்சரியந்தான் ஐயா, அந்தத் தேவதை நிசி 12 மணிக்கு உல்லாசமாகப் பவனிவரும் போது, என்ன வாண வேடிக்கை! என்ன வெளிச்சம்! அந்த மாதிரி மத்தாப்பு நான் தரையில் பார்த்ததே இல்லை. கேளுங்க சாமி! ஒருநாள் அதாவது ஓரிரவு திரும்பிவருவதற்கு அநுகூலமான காற்றில்லை. அதனால் நடுச் சமுத்திரத்தில் நாங்கள் தங்கி விட்டோம். நடு ஜாமத்துக்குச் சரியாய் எதிரே ஒரு வெளிச்சம் தோன்றிற்று. மத்தியிலே தேவதை ஒரு பெரிய சுறுமீன் மேலே ஏறிக்கொண்டு வாண வேடிக்கையோடு புறப்பட்டது தான் தெரிந்தது. உடனே நாங்கள் கவிழ்ந்து குப்புறப் படுத்துக்கொண்டோம். நான் மாத்திரம் இலேசாகக் கடைக் கண்ணால் பார்த்தபோது பல நிறமான வெளிச்சங்கள் தெரிந்தன. ஆஹா! என்ன அற்புதம்! தேவ லோகத்து வாணவேடிக்கை! சிறிது நேரத்தில் மறைந்துவிட்டது. அதனைச் சந்திக்கிறவர்களுக்கு ஆபத்து.

சரி பூசையாய் படைத்தாச்சு. இந்தாங்கோ தாம்பூலம் என்று சொல்லி என்னிடத்தில் நாலுவெற்றிலை இரண்டு பாக்கு இரண்டு வாழைப்பழம் ஓர் தட்டில்வைத்து நீட்டினான். நான் அதைப் பெற்றுக்கொண்டேன். என் நண்பருக்கும் ஒரு தாம்பூலம் கிடைத்தது.

பூசை முடிந்ததும் கட்டுமரம் புறப்பட்டுவிட்டது. அதை அனுப்பி விட்டு வந்த மற்றொரு கிழவன் எங்களிடம் வந்து "ஐயா! இருட்டிப் போச்சு. இராத்திரி என் குடிசையில் தங்கிச் சாப்பிட்டுவிட்டுக் காலை நீங்கள் போகலாம்! நல்ல மீன் கொழும்பு இருக்குதுங்கோ" என்று சொன்னான்.

நான் பிராமணனாதலால் என் நண்பர் அந்த வார்த்தையைக் கேட்டுச் சிரித்தார். நான் அதற்கு "அவனுடைய அன்பைக் கவனியப்பா. எவ்வளவு பிரியத்தோடு 'அதிதிதேவோ பவ' என்கிற உபநிஷத் வாக்கியத்தை அநுசரித்து நடக்கிறான் பார்." என்றேன்.

இது பட்டிக்காட்டுச் சம்பிரதாயம்.

உடனே நான் கிழவனை நோக்கி "உன் அன்புக்கு மெச்சினோம். நீ போய்ச் சுகமாக உன் பெண்டு பிள்ளைகளோடு சாப்பிடு. நாங்கள் அசலூரன்று; இதோ வீட்டுக்குப் போகிறோம்" என்று சொல்லிவிட்டுக் கரை



யோரமாய்ச் சல சல வென்று சத்தம் போட்டு விளையாடிக்கொண்டிருந்த பசங்களிடம் வந்தோம்.

அக்குழந்தைகள் முன் சென்ற கட்டுமரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே "உனக்கு நீயத் தெரியுமா? உனக்கு நீயத் தெரியுமா?" என்று ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். "எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்" என்ற பதங்களே எல்லாருடைய வாயிலிருந்தும் வந்தன. அதிக பல ஹீனமாகக் காணப்பட்ட ஒருவன் மாத்திரம், அவனுடைய முறையில் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்தான். அவனுக்கு நீயத் தெரியாதென் றேற்பட்டது. உடனே எல்லோரும் சேர்ந்து அவனைக் கேலி பண்ண ஆரம்பித்தார்கள். அந்தக் கேலிகளெல்லாம் என் ஞாபகத்திலில்லை. அவர்களில் துருதுருத்தவனாகக் காணப்பட்ட 10 வயதுள்ள ஓர் பையனின் கேலி வார்த்தை மாத்திரம் இன்னும் என் புத்தியை விட்டகலவில்லை. அதாவது:

"அடே! நம்ப செவுத்தானுக்கா! அவனுக்கு என்ன மாடா நீயத் தெரியும். அவன்தான் பள்ளிக்கூடம் போய்க் கெட்டுப்போனானே."

இந்த வார்த்தைகள் நான் ஒரு உபாத்தியாயரானதால் என் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டன. ஆஹா! செம்படவனுக்கு நீஞ்சக் கற்றுக் கொடுக்காமல் அ, ஆ கற்றுக்கொடுப்பதால் பிரயோஜனமில்லை யென்பதை அப்பையன் நன்கு உணர்த்தினான்.

அதிலிருந்து இப்போது உலகத்தில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களை யெல்லாம் உண்மையில் ஜனங்களுக்குப் பயன் படச் செய்யவேண்டியதென்ற எண்ணம் உண்டாகிறது.

எந்த ஜாதிப்பையன் வந்தாலும், சிறைச்சாலைகளில் எல்லாருக்கும் ஒரே அளவு சாப்பாட்டுத் திட்டம்போல, ஒரே படிப்பா! ஆஹா நல்ல கல்வி! ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவன் தொழிலோடு சிறிது கல்வியும் புகட்டி வந்தால் கல்விக்கும் பயனுண்டு, தொழிலுக்கும் பயனுண்டு. அஃ தங்ஙனமிராததால் தான் இப்போது நமது தேசத்தில் கைத்தொழிலே மறைந்து போயிற்று; சில கைத் தொழில்கள் மறந்தேபோயின. எல்லாரும் பி.எ. தொழிலா பி.எ.? இல்லை. இல்லை. இங்கிலீஷ் பிரான்ஸ், லதீன் முதலிய பாஷைகளில். இருக்கட்டும் அதோடு தொழிலிலும் பி.எ. வானால் எவ்வளவு க்ஷேமம். தொழில் விருத்தியானாலே போதும். பி.எ. வேண்டியதேயில்லை, அதற்கு நேர் விரோதம் நடந்து வருகிறது. நாம் என்ன செய்வது! அதிகாரம் நம்மிடத்தில் இல்லையே. ஆயினும் அந்தச் சிறிய செம்படவ பையன் சொன்ன வார்த்தை என் மனதை இன்னும் உறுத்துகிறபடியால், அந்தந்த ஜாதி ஜனங்களைக் கொண்டு அவர்களுக் குள்ளே ஒற்றுமையாகப் பணம் சேகரித்து, ஒவ்வொரு ஜாதிக்கும் ஓர் பாடசாலை ஸ்தாபிக்கச் செய்து அதில் முதலாவது கைத்தொழில் இரண்டாவது பாஷை இவ்விதமான கல்வி ஏற்பாடு செய்யலாமென்ற எண்ணத்தோடு நான் 7 மணிக்கு வீட்டுக்குத் திரும்பினேன்.

சுப்பிரமண்யம்.

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

நால்வரும் உள் நுழைந்து தோட்டத்தைக் கடந்து முதல் வாசற்படியருகிற்சென்று ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் முன்னே சென்று கதவைத்தட்டினான். உடனே கறுத்தநிறமுடைய ஒரு நீக்ரோமாது வந்து கதவைத் திறந்தாள். அம்மனிதன் உன் எஜமானன் வீட்டிலிருக்கிறாரா என்றான். அவள் ஆம் புத்தகசாலையறையில் இருக்கிறார் என்றாள். அம்மனிதன் நாங்கள் அவரைக்கண்டு பேசவேண்டும். இதோ இச்சீட்டைக் கொண்டுபோய் அவரிடம் கொடு என்று ஒரு சிறு துண்டுக் கடிதத்தை யெடுத்து அதில் ஏதோ மூன்று நான்குவரிகள் எழுதிக் கொடுத்தான்.

அம்மாது அதை யெடுத்துக்கொண்டு போய்ச் சீக்கிரமாகவே திரும்பி வந்து "வாருங்கள், உள்ளே யுடனே அழைத்து வரச்சொன்னார்" என்றாள். நால்வரும் அவள் பின்னால் உள்ளே பிரவேசித்தார்கள். அம்மாது அவர்களை யழைத்துப்போய் மேல் மாடியிலிருக்கும் புத்தக சாலைக்குள் கொண்டுபோய் விட்டுச்சென்றாள்.

அங்கு அச்சமயம் இரண்டுபேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எதிரிலிருக்கும் மேஜைமேல் சாராய புட்டிகளும் சிற்றுண்டி பழவர்க்கங்கள் முதலியவைகளும் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு ஆட்களும் குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நமது சாமிநாதனும் இரங்கநாதனுமே. சாமிநாதன் அப்போதே நன்றாய் வெறி யேறக் குடித்து விட்டுத் தடமாடும் நிலைமையிலிருக்கிறான்.

உள்ளே வந்த நால்வர் முகங்களும் தீப வொளியில் நன்றாய் விளங்கின. தந்திரம், சூது, களவு, கன்மனம் முதலிய துர்க்குணங்கள் யாவும் பிரகாசித்தன. சாமிநாதன் வந்தவர்களை நோக்கி "ஆ ஜக்கா நீயா! க்ஷேமந்தானே. ஆ, வரதா! குள்ளா! யாவரும் க்ஷேமந்தானா? உங்களைப்பார்க்க மிக்க சந்தோஷம். ஏ—சாராயம். இதில் யாவரும் குடித்துப் பாருங்கள். ஏ. ஆ. சாராயம். நீங்கள் நல்ல......குடித்துப் பாருங்கள்" என்று தடுமாற்றத்தோடு கூறினான்.

வந்தவர்களின் மேற்கூறப்பட்ட மூன்று கள்ளர்களுமே தபால் கொள்ளையில் சேர்ந்தவர்கள். முதல் கூறப்பட்ட ஜக்கன் என்பவனே அக்கள்ளக் கூட்டத்தின் தலைவன். சாமிநாதன் கூறியபடியே கள்ளர் தாராளமாய்க் குடிக்க ஆரம்பித்தார்கள்.

சாமிநாதன் ஜக்கனை நோக்கி "அங்கே கீழே யெல்லாம் சரிப்படுத்தி விட்டாயா?" என்றான்.

**ஜக்கன்.**—எங்கே அரசமரத் திருப்பத்தில் தானே? ஆகா. எல்லாம் சுத்தமாக்கிவிட்டேன்.

**சாமி.**—பையை யெடுத்துக்கொண்டா யல்லவா?

**ஜக்கன்.**—ஆகா.

**சாமி.**—பேஷ். இந்தத்தரம் குற்றத்தைக்கண்டு பிடிப்பவர்களுக்கு நல்ல திண்டாட்டம். ஒவ்வொரு தபாலாபீசைச் சேர்ந்த பணம் இருக்கும்



கடிதங்கள் அகப்பட்டிருக்கின்றன. தபால் இலிகிதனைச் சிறை செய்வதாயின் எல்லாத் தபால்ஆபீஸ் இலிகிதர்களையும் சிறைசெய்யவேண்டும்.

**ஜக்கன்.**—அது சரிதான். நீ யுன் வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்திருக்கிறாயா? உன் மேல் சந்தேகமுண்டாகாதல்லவா? ஏனெனில் அகப்பட்டுக்கொண்டால் நாங்கள் யாவரும் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம்.

**சாமி:**—நானா அகப்படுவேன்! என் மேல் ஒருபோதும் சந்தேகப்படமாட்டார்கள். நான் மூன்று நான்கு வருடங்களாய் நம்பகத்தோடு தபால் இலாகாவில் உழைத்திருக்கிறேன். என் மேல் அவர்களுக்குச் சந்தேகமுண்டாகாது. நான் அகப்படமாட்டேன். ஆ. ஒன்று கூற மறந்து விட்டேன். நமது இரகசியம் ஒருவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவனோ நம்மை முடிவாய் அமிழ்த்துகிற வரையில் கண் மூடமாட்டான்.

ஜக்கன் இதைக்கேட்டதே துள்ளியெழுந்து "யாரவன்? அவனை யொழித்துவிட வேண்டும்" என்று மிக்க ஆத்திரத்தோடு கேட்டான்.

**சாமிநாதன்:**—"அவன் தாபாலிலாகாத் துப்பறிபவனாகிய ஆனந்தலிங்" என்றான்.

இதைக்கேட்ட ஜக்கன் பேரிடி விழுந்தவன் போல் ஆய்விட்டான். "அய்யோ ஆனந்தலிங்கா? அப்பா அவன் கையில் அகப்படலாகாது; முன் ஒரு தரம் அவன் வழிப் பறிகொள்ளைக்காக எனக்கு மூன்று வருடம் தண்டனை கிடைக்கச் செய்தான். நான் போன வருடந்தான் சிறைச்சாலையினின்று தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன். நமது இரகசியம் அவனுக்குத் தெரிந்து விட்டிருந்தால் அடியோடு மோசம் நேர்ந்த மாதிரியேதான். அவனை யொழித்தாலன்றி நாம் பிழைக்கமாட்டோம்" என்றான்.

இது வரையில் மௌனமாயிருந்த இரங்கநாதன் அப்போதுதான் வாய் திறந்து, "ஆம்; நாமெல்லோரும் உடனே யிதே வேலையாய்ப் புறப்பட்டு அவனை யொழிக்கும் வரையில் நிற்கலாகாது. அந்தப்படி யாவரும் பிரமாணம் செய்யுங்கள்" என்றான்.

உடனே யாவரும் அப்படியே சத்தியம் செய்தார்கள்.

**சாமிநாதன்:**—"இதற்காகவே நான் உங்களை யின்று இங்கு வரவழைத்தேன்; நாம் உடனே அவ்வேலையைத் தொடங்கவேண்டும்" என்றான்.

**ஜக்கன்:**—"இந்த இரவே இப்போதே யவனைக் கண்டு பிடிக்கப் புறப்படவேண்டும்" என்றான்.

**சாமிநாதன்:**—இல்லை யில்லை. இன்றிரவு நமக்குப் பிரத்தியேகமான விசேஷ வேலை யொன்றிருக்கிறது.

**இரங்க:**—"ஆம் ஆம். நான் கூறிய அந்த மற்றொரு ஆசாமியை யழைத்து வந்தாயா?" என்றான்.

**ஜக்கன்:**—ஆகா இதோ நமது கருணானந்த சுவாமிகள். இவர் நெடு நாட்களாய் வெளி நாடுகளில் குருத்தொழில் செய்து வந்தார். பிறகு மனஸ்தாபத்தால் விட்டுவிட்டார். ஆயினும் நமக்காக இச்சடங்கைச்

செய்யச் சம்மதித்திருக்கிறார்." என்று தங்களோடு கூட வந்த நானாவது மனிதனைக் காட்டினான். சற்று குள்ளமாய்க் குழிந்து ஆழ்ந்த கீழ்ப்பார்வையையுடைய ஒரு மனிதன் கறுத்த நெடுஞ்சட்டையணிந்துகொண்டு இதுகாறும் மௌனமாயிருந்தவன் இப்போதெழுந்து நின்று வீட்டெஜமானனுக்கு வந்தன மளிக்க முயன்றான்.

அதற்குள் வெறியேறக் குடித்திருக்கும் யாவரும் எழுந்து குருவுக்கு வந்தன மளித்தார்கள். அதற்குள் சாமிநாதன் தள்ளாடிக்கொண்டே நடந்து வந்து குருவின் தோளைப்பற்றிக்கொண்டு,

"ஆகா! ஆ! தாங்கள் வந்தது எனக்கு மிக்க சந்தோஷம். தங்கள் சகாயத்திற்காகத் தங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கப் போகிறேன்" என்றான்.

**குரு.**—மிக்க சந்தோஷம். எனக்குப் பணத்தைப்பற்றி அவ்வளவு அக்கறையில்லை. தங்கள் கௌரவம் பொருந்திய அறிமுகம் கிடைத்ததே போதும். இக்கௌரவமே எனக்குப் போதுமானது.

**சாமிநாதன்:**—ஆகா! ஒரு அற்ப சங்கதி மறந்து விட்டேன். ஒரு சமயம் அந்தப்பெண் என்னை மணம் புரிந்துகொள்ளத் தனக்குப் பிரியமில்லையென்றாலோ?

**குரு:**—அதைப்பற்றி யெல்லாம் தாங்கள் சற்றும் யோசனை செய்யவேண்டாம். அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். இதைப்பற்றி முன்னமே எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**சாமி.**—"சரி. சரி. தாங்கள் திருப்தி யளிப்பீர்கள் என்று தெரிகிறது" என்று கூறிவிட்டு இரங்கநாதனை நோக்கி, "சரி அப்பெண்ணை யழைத்து வருகிறதுதானே." என்றான்.

இரங்கநாதன் பார்த்தான். சாமிநாதன் நன்றாய் வெறி யேறக்குடித்து விட்டிருக்கிறான். எல்லாம் தன் கருத்தின்படி நிறைவேறி வருகிறது. அவன் இன்னும் கொஞ்சம் அதிகமாய்க் குடித்துவிட்டால் தன் எண்ணப்படி விவகாரம் நடவாது. எல்லாம் அடியோடு கெட்டுவிடும்.

சாமிநாதன் என்ன தந்திரம் அறிந்தவனாயினும் இரங்கநாதன் தனக்கு நன்மையே செய்கிறதாய் எண்ணியிருக்கிறானே யன்றி அவன் மனதிலிருக்கும் உள் கருத்துகளையும், சுய அனுகூலமான எண்ணங்களையும் அவன் சற்றேனும் உணரான்.

சாமிநாதன் பெண்ணை யழைத்து வரும்படி கூறியதே இரங்கநாதன் தன் கருத்து முடிய இதுவே சமயமென்று கருதித் துரிதமாய் எழுந்து வீட்டிற்குள் சென்றான்.

சாமிநாதன் இதற்கிடையில் குருவுக்கு மிக்க அன்பான மொழிகளைக் கூறிச் சாராயம் அருந்தும்படி வற்புறுத்தவே, குருவும் சற்று நேரத்திற்குள் மற்றவர்களைப் போலவே தாராளமாய் அருந்தினார். அதனால் அவரும் மற்ற பேர் நிலைமைக்கு வந்து விட்டார். (தொடரும்.)

**ஆரணி-குப்புசாமி முதலியார்.**

---

## ஓர் அறிக்கை.

1921-ஆம் ஜூன்மீ 30 உக்குள் நம்மிடம் வந்து சேரும்படி முன்னடிச் சந்தாத் தொகையை யனுப்பினவர்களுக்கு ஏற்கனவே யாங்கள் செய்திருந்த விளம்பரப்படி "துந்துபி வருடத்திய ஆனந்தபோதினி திருக்கணித பஞ்சாங்கம்" இனமாக இன்று (9—3—1922) அனுப்பப்பட்டிருக்கிறது.

## பொது விஷயங்கள்

### அமெரிக்காவில் ஸ்திரீ நாயகம்.

வாஷிங்டன், பிப்ரவரி 27—அமெரிக்காவில் புருஷர்களைப் போல் ஸ்திரீகளும் சட்டப்படி ஓட்டுக் கொடுக்கப் பாத்திய முள்ளவர்களென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய சட்டம் 1919-ம் வருஷத்திலேயே நிறைவேற்றப்பட் டிருக்கிறது. ஆனால் ராஜ்ய சாஸ்திர முறைப்படி அதைப்பற்றிய விவாதம் இதுகாறும் நடந்து வந்தது. உயர்தர கோர்ட்டில், சட்டப்படி அது சரியான தென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

### சர்வ தேச வர்த்தகம்.

லண்டன், பிப்ரவரி 27—சர்வதேசக் கார்பொரேஷனின் நிர்மாணக் கமிட்டியார் 200-லக்ஷம் பவுன் முதலுடன் சர்வ தேச கார்பொரேஷன் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இடாலி, பெல்ஜியம் சமமாகப் பங்கு கொடுக்கவேண்டுமென்றும், ஜப்பான் அமெரிக்கா முதலிய மற்ற தேசங்கள் விரும்பினால் அவர்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கின்றனர்.

திறப்பு விழா:—நேப்பியர் பார்க்கில் சாக்கடை நீர் இறைக்கும் தொழிற்சாலைக் கட்டிட வேலை முடிவடைந்து வருகின்றது. இதை ஏப்ரல் மாதம் 8-ந் தேதி லேடி வில்லிங்டன் திறந்து வைப்பார்.

### ஒரு விநோத சம்பாஷணை.

கான்பூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஐந்து பேர் கைதி செய்யப்பட்டுச் சிறைச்சாலையில் விசாரிக்க பட்டார்கள். விசாரணையின் பயனாய் மேற்கூறப்பட்ட ஐவரில் நான்கு பேருக்கு ஒவ்வொரு மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஐந்தாவது நபரில் வழக்கு நடைபெறும்போது கீழ்வரும் சம்பாஷணை கைதிக்கும் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் நடந்தேறியது. இறுதியில் கைதி புத்திஸ்வாதீன மற்றவர் என்று கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். சம்பாஷணை வருமாறு:—

மாஜிஸ்ட்ரேட்:—(கைதியைப் பார்த்து) உன் பெயர் என்ன?

கைதி:—என் பெயர் காங்கிரஸ்.

மா:—உன் தகப்பனார் பெயர் என்ன?

கை:—கிலாபத்.

மா:—உன் பாட்டனார் யார்?

கை:—சுயராஜியம்.

மா:—உன் வீடெது?

கை:—ஜெயில்.

மா:—விட்டு விட்டால் எங்கே செல்வாய்?

கை:—ஜெயிலுக்கு.

மாஜிஸ்ட்ரேட் கைதி பைத்தியம் பிடித்தவர் என்று கருதி விடுதலை செய்துவிட்டார். "ஜமீன்தார்"

## "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துந்துபி௟ சித்திரைமீ—சாலிவாகனம் 1845—கலி 5024
பசலி 1331—கோல்லம் 1097-98—ஹிஜரி 1340
இங்கிலீஷ் 1922ௌ ஏப்ரல்மீ-மேமீ

| சித்திரை | ஏப்ரல் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | வியா | து36-38 | சுவா-18-32 | அ18-32சி | வருஷப்பிறப்பு |
| 2 | 14 | வெ | திரி31-25 | விசா-14-50 | சித்-60 | தானியம் செலவிட |
| 3 | 15 | சனி | சது27-58 | அனு-12-45 | சித்-60 | பிரயாணம் செய்ய |
| 4 | 16 | ஞா | பஞ்26-28 | கேட்-12-27 | ம12-27அ | வராஹ ஜயந்தி |
| 5 | 17 | திங் | சஷ்26-50 | மூல-14-3 | சி14-3ம | இரவில் தனியநாள் |
| 6 | 18 | செ | சப்3 -20 | பூரா-17-38 | சி17-38பி | கரிநாள் பகலில் தனிய |
| 7 | 19 | புத | அ33-0 | உத்-22-50 | அ22-50சி | பிரயாணம் விலக்கப்பட் |
| 8 | 20 | வியா | நவ38-5 | திரு-29-30 | சித்-60 | ரிஷபாயணம் நா-52-38 |
| 9 | 21 | வெ | தச-45-3 | அவி-36-58 | சித்-60 | தானியம் வாங்க |
| 10 | 22 | சனி | ஏக51-35 | சத-44-48 | அ44-48ம | சர்வ ஏகாதசி |
| 11 | 23 | ஞா | துவ57-50 | பூரட்-52-25 | சி52-25அ | மந்திரம் ஜெபிக்க |
| 12 | 24 | திங் | திர60 | உத்-59-30 | சித்-60 | மச்சஜயந்தி |
| 13 | 25 | செ | திர3-33 | ரேவ-60 | சித்-60 | |
| 14 | 26 | புத | சது8-5 | ரேவ-5-35 | ம5-35அ | |
| 15 | 27 | வியா | ● 11-43 | அசு-10-35 | அ10-35சி | |
| 16 | 28 | வெ | பிர13-50 | பர-14-20 | சித்-60 | |
| 17 | 29 | சனி | துதி14-48 | கிரு-16-58 | அ16-58சி | |
| 18 | 30 | ஞா | திரி14-38 | ரோ-18-23 | சித்-60 | |
| 19 | 1 | திங் | சது13-15 | மிரு-18-45 | சித்-60 | |
| 20 | 2 | செ | பஞ்11-3 | திரு-18-10 | ம18-10சி | |
| 21 | 3 | புத | சஷ்7-48 | புன-16-40 | சித்-60 | |
| 22 | 4 | வியா | சப்3-38<br>அ58-48 | பூச-14-18 | சித்60 | இரவில் தனியாநாள் |
| 23 | 5 | வெ | நவ53-18 | ஆயி-11-10 | மா-60 | பகலில் தனியாநாள் |
| 24 | 6 | சனி | தச47-8 | மக-7-23 | அ7-23சி | பிரயாணம் விலக்க |
| 25 | 7 | ஞா | ஏக40-48 | பூர-3-5<br>உத்-58-23 | சித்3-5அ | சர்வ ஏகாதசி |
| 26 | 8 | திங் | து33-50 | அஸ்-53-28 | சித்3-28பி | நரசிம்ம ஜயந்தி |
| 27 | 9 | செ | திர27-0 | சித்-48-43 | சித்5-60 | சித்ரகுப்த பூஜை |
| 28 | 10 | புத | சது20-30 | சுவா-44-20 | சித்60 | கூர்மஜயந்தி |
| 29 | 11 | வியா | ○14-30 | விசா-40-43 | சித்-60 | சித்திரா பௌர்ணமி |
| 30 | 12 | வெ | பிர9-38 | அனு-38-10 | சி-38-10ம | வைசாக பகுளம் |
| 31 | 13 | சனி | துதி5-50 | கேட்-36-58 | சித்-60 | ஆயுதம் பயிற்ற |

1922ௌ மே

| | | | |
|---|---|---|---|
| புகே | | | |
| புத | 4-தனு செ<br>7-மே புத<br>12-ரிஷ சு<br>21-ரிஷபுத | | |
| | | | |
| | செ | | ராகு<br>சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

12 MAY 1922

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி 7 | துந்துபி௟ சித்திரைமீ கஉ<br>1922ௌ ஏப்பிரல்மீ 13உ | பகுதி 10 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்.

மருமலர்ச் சோலைசெறி நன்னீழன் மலையாதி
மன்னுமுனி வர்க்கே வலாய்
மந்த்ரமா விகைசொல்லு மியமநிய மாதியா
மார்க்கத்தி னின்று கொண்டு
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலாச நாதி சேர்த்துக்
காலைப் பிடித்தனலை யம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடு தாக்கி
உருகிவரு மமிர்தத்தை யுண்டுண் டுறங்காம
லுணர்வான விழியை நாடி
ஒன்றோ டிரண்டெனுச் சமரச சொரூபசுக
முற்றிடவென் மனதின் வண்ணம்
திருவருண் முடிக்கவித் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோம யானந் தமே.

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலுந் தோற்றுமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணா வாசே யெனக்கூவிப்
பின்புற் றழுசே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே.
கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக் கோவே மன்றிற் கூத்தாடு
கெழுந்த சுடரோ யிமயவரை யென்றாய்க் கண்ணுக் கினியானே
தொழுந்தெய் வமுநீ குருவுநீ துணைநீ தந்தை தாயுநீ
யழுந்தும் பவநீ நன்மையுநீ யாவி யாக்கை நீதானே,

## அரும் பொருள் விளக்கம்.

(1) மலையாதி மன்னும்=மலை முதலியவற்றில் வசிக்கும்.

மந்த்ர மாலிகை=யோக விதிகளைப்பற்றிக் கூறும் நூல்-திருமூலர் திருமந்திரம் எனலும் பொருந்தும்.

இயமநியமாதி=இயமம், நியம முதலிய அஷ்டாங்கங்கள்.

கமலாசனம்=ஆசன வகைகளி லொன்றாகிய பத்மாசனம்—காலைப் பிடித்து=பிராணவாயுவை யடக்கி—அனலை=மூலாக்னியை.

குண்டலியம்மை=குண்டலிசத்தி—கலைமதி=சுழி முனையிலுள்ள சந்திர மண்டலம் என்ற இடம்—ஒன்றோடிரண்டெனுஞ் சமரச சுபாவ நிலை=ஒன்றென்றும் இரண்டென்றும் கூற வொண்ணாத அத்வைதநிலை. இதுவே இம்மகான் "வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே" என்று அருளிய நிலை.

சுழிமுனையைத் திறப்பதற்குச்செய்யும் யோகசாதனை யிதில் கூறப்பட்டிருக்கிறது. பிராணாயாமத்தால் மூலாதாரத்திலுள்ள குண்டலி சத்தியை மேல் எழுப்பி, பிரமரந்திரம் என்ற சுழிமுனையைத் தாக்கச் செய்வதால் அங்குள்ள துவாரம் திறக்கப்படுகிறது. யோக நூலில் விரிவாகக் காண்க.

'இத்தேகமொடு காண்பனோ?' என்பதால் நமது மதத்தில் கூறப்பட்டுள்ள முத்திநிலை இத்தேகத்தி லிருக்கும்போதே பிரத்தியட்ச அனுபவமாக அடையத்தக்க தென்பது நன்கு விளங்குவது காண்க.

(3) வெண்பிறைச் சடிலம்=வெண்மையான சந்திரனை யணிந்த சடாபாரம்.

மன்றில்=சிற்சபையில்—இமயவரை யென்றாய்=இமவான் மகளாகிய பார்ப்பதி தேவி.

பொது நடஞ் செய்வானே=பஞ்ச கிருத்தியத் தாண்டவம் புரிபவனே.

---

## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிக்கை.

அடுத்த ஆடி௴ 8-ம் ஆண்டு பிறக்கிறது. இதுகாறும் அனுப்பியது போல் ஆடிமாத சஞ்சிகையை-வி பி யிலனுப்புவதற்குப் பதிலாக 7-ம்வருட 12-ம் மாதமாகிய ஆனி௴ சஞ்சிகையையே வி. பி யிலனுப்பி 8-ம் வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித் திருக்கிறோம். முன்பண மனுப்பாமல் வி. பி யில் சஞ்சிகை பெறுவதால் 3 அணா அதிகச் செலவும் வீண் ஆலசியம் முதலியவைகளும் நேர்வது யாவருமறிந்ததே.

ஆதலின் மே௴ 30உக்குள் சந்தாத்தொகைநம்மிடம் சேரும்படியனுப்புவோர்க்கே உருத்ரோத்காரி௵ பஞ்சாங்கம் இனாமாக அனுப்பப்படும். மே௴ 30உக்குள் பணமனுப்பாதவர்களுக் கெல்லாம் ஆனி௴ சஞ்சிகை வி. பியி லனுப்பப்படும்.

8-வது வருடம் சஞ்சிகை வேண்டாதார் மே௴ 31உக்குள் தெரிவித்து விட்டால் அவர்களுக்கெல்லாம் ஆனி௴ சஞ்சிகை சாதாரணமாக அனுப்பி விடப்படும்.

சஞ்சிகையை நிறுத்தும்படி வரைவோரும், மணியார்டர் அனுப்புவோரும் சந்தா நம்பரைத் தெரிவிக்காவிட்டால் பின்னால் வி. பி. வரும். ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரும் தயவுசெய்து இம்மாதம் அல்லது அடுத்தமாதம் வரும் சஞ்சிகையின் மேல்விலாசத்தைப் பார்த்து நம்பரை யவசியம் குறித்து வைத்துக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறோம். பத்திரிகாசிரியர்.

12 MAY 1922

# ஆனந்தபோதினி

துந்துபி௵ சித்திரை௴ கஉ

## கிராம வாழ்க்கை.

இப்பூவுலகில் கிராமங்களே ஆதியில் உண்டாயின. கிராமவாழ்க்கையே மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத வாழ்க்கையாகும். கிராமத்தில் நடக்கும் தொழில்களே மனிதரின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழிலாகும். "கிராமங்கள் கடவுளாலுண்டாக்கப் பட்டவை, நகரங்கள் மனிதனால் உண்டாக்கப் பட்டன" என்ற ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. (God made Villages and man made Towns.) ஒரு இராஜ்ஜியத்திற்குக் கிராமங்களே மூலாதாரமானவை. கிராமங்களே இராஜாங்கத்திற்கு ஆதாரம். கிராமங்களே அரசனுடைய செங்கோலுக்குயிர். கிராமங்களில் உற்பத்தியாகிறவைகளே மனிதனுடைய ஜீவாதாரத்திற்கு இன்றியமையாதவை. ஒரு தேசத்தில் கிராமங்கள் எத்தகைய நிலைமையில் இருக்கின்றனவோ, அதற்குத் தக்கபடி தான் அத்தேசத்தின் நிலைமையுமிருக்கும்.

ஒரு தேசம் க்ஷேமமும் மேன்மையும் பெற்று முன்னேற்றமடைந்து விளங்க வேண்டுமாயின், முதலில் அத்தேசத்திலுள்ள கிராமங்கள் அதற்கு வேண்டிய சாதனங்களைப் பெற்றிருக்க வேண்டியது அவசியம். பரமாத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் எப்படி சமஷ்டி வியஷ்டி பேதமே யுள்ளதோ அவ்வாறே தேசத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள பேதமும். பல கிராமங்களே ஒரு தேசம். கிராமமின்றேல் தேசமில்லை. ஆகையால் கிராம வாழ்க்கையில் தக்க சீர்திருத்தமும் முன்னேற்றமும் ஏற்பட்டாலன்றித் தேசம் ஒருபோதும் முன்னேற்ற மடையாது.

நம் தாய்நாடாகிய இப்பாரத பூமியில் பூர்வீகத்தில் கிராம வாழ்க்கை மிக்க சிறப்புற்று விளங்கியதென்பது யாவரும் அறிந்

துள்ள விஷயமே. ஒவ்வொரு கிராமமும் மனித வாழ்க்கைக்கு வேண்டிய இலௌகிக வைதிகசம்பந்தமான எல்லா விஷயங்களிலும் பூர்த்திபெற்று விளங்கியது. ஒவ்வொரு கிராமத்திலும் அரசனே நேரில் இருந்தால் எப்படித் தவறின்றி நீதி நடக்குமோ அவ்வாறே நடந்து வந்தது. கிராம வாசிகள் திருப்தியோடும், சந்தோஷத்தோடும், சுகத்தோடும், நீடித்த ஆயுளோடும், பொய், சூது, வஞ்சம், புரட்டு இல்லாமல் ஒற்றுமை, தெய்வபக்தி, பெற்றோர் பக்தி, குரு பக்தி, இராஜபக்தி, பரஸ்பர அன்பு, தரும சிந்தனை இவைகள் நிரம்பியவர்களாய் வாழ்ந்து வந்தார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோயிலாவது இருக்கும் ; அக்கோயிலிலாவது வேறிடத்திலாவது ஒரு பாடசாலை யிருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் மிகக் கட்டுப்பாடான ஒற்றுமையுண்டு. உபாத்தியாயர்களிடம் பிள்ளைகளுக்குத் தெய்வபக்தி யுண்டு. உபாத்தியாயருக்கு யாவரும் மரியாதையும் கௌரவமும் பாராட்டுவதோடு அவருடைய சௌகரியங்க ளனைத்தும் அவர்களால் கவனிக்கப்படும். அவருக்கு எவ்விதக் கவலையுமிராது. பூர்வீகத்திலிருந்து இணையற்ற பிரசித்திபெற்ற வித்வான்களாகிய கம்பன், காளமேகன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, முதலியவர்க ளெல்லாம் கிராமங்களில் வாசித்தவர்களே. ஒரு புத்தகம் வேண்டு மாயின் ஏட்டில் எழுதியே யாகவேண்டும். தமிழ்க்கல்வி அப்படிப்பட்ட காலத்தில் இருந்த உன்னத நிலைமையில் இப்போதில்லை யென்பதும் யாவருமறிந்த விஷயமே.

அக் காலத்தில் கிராமந்தோறும் பஞ்சாயத்துசபைகள் இருந்தன. அக்கிராமத்தில் நேரிடும் எத்தகைய வியாஜ்ஜியமும் அப்பஞ்சாயத்தார்களால் தீர்ப்பு செய்யப்படும். அவர்கள் அக் கிராமத்திலேயே யிருப்பவர்க ளானதால் வாதி பிரதிவாதிகள் இருவரைப் பற்றிய சகல உண்மைகளும் அவர்களுக்குத் தெரியும். கட்சிக்காரர்கள் பொய்ச்சாட்சிகளைக்கொண்டு ஒருவரை யொருவர் மோசம்செய்ய வழியில்லை. உண்மையை யெடுத்துக் கூறி அவர்களுக்காக வாதிக்க நியாயவாதி யவசியமில்லை. வேறெவ்விதச் செலவுமில்லை. நியாயஸ்தலத்திற்கு மூட்டை கட்டிக்கொண்டு பன்முறை, ஒவ்வொரு வியாச்சியங்களில் 6 மாதங்கள் வரை, போய்வர வேண்டிய செலவும் அலைச்சலும், சாட்சிகளுக்காக நேரிடும் செலவும், ஆகிய இந்தத் தொல்லைக ளெல்லாமின்றி, வியாஜ்ஜியம் இருதரத்தார்க்கும் திருப்தியாகப் பாரபட்சமின்றித் தீர்மானிக்கப்படும்.



ஒரு குற்றம் நடந்தாலோ குற்றவாளி யுடனே காவலனால் பிடித்துக்கொண்டு வரப்படுவான். குற்றம் நடந்தபோது கண்கூடாய்ப் பார்த்த சாட்சிகளும் அழைத்து வரப்படுவார்கள். உடனே யாவும் விசாரிக்கப்பட்டுக் குற்றவாளிக்குத் தக்க தண்டனை விதிக்கப்படும் அவன் தப்புச் சாட்சிகளைத் தயார்செய்தும், இலஞ்சம் கொடுத்தும் தப்பித்துக்கொள்ள அவனுக்கு அவகாசமே யிராது. இவ்வாறு நடக்குமென்று தெரியுமாதலால் குற்றம் நடப்பது அரிதாகவே யிருக்கும். ஒற்றுமையால் கிராமத்தில் பொதுவான விவகாரம்—ஒரு திருவிழாவோ, அல்லது ஒரு வித்வானுக்குப் பரிசளிக்க வேண்டியதோ--இத்தகையவை நேர்ந்தால் கிராமத்தலைவன் குடும்பத்திற்கு இவ்வளவு தரவேண்டு மென்று பிரிவு ஏற்படுத்தினால் யாவரும் அவ்வாறே கொடுத்துவிடுவார்கள். அக்காலத்தில் இருந்த விளைவும் இக்காலத்தில் இல்லை யென்று தெரிகிறது. நமது நாட்டில் முன்பு-சுமார் 60-70 வருடங்களுக்கு முன்வரை-முதல்தர நஞ்சையில் காணி 1-க்கு 60 கலம்நெல் (1-கலம் 30-படி) விளைந்ததாகத் தெரிகிறது. வரவர விளைவு குறைந்து கொண்டே வருகிறது.

இங்கிலாந்தில் எலிஸபெத் இராணி இருந்தகாலத்தில் அங்கு விளைந்த விளைச்சலுக்கு இப்போது நான்கத்தனை அதிகமாக விளைகிறது. இவ்வளவுக்கும் மேல்நாட்டுப்பூமி கல்லும் கரடுமுரடுமானது. நமது நாடு எல்லா பூமிகளைவிடச் செழிப்பானது. சம்பா நெல், கமுகு, தெங்கு, மா, பலா, முதலியவை விளையும் பூமியே செழிப்பான பூமியாகும். அப்படி யிருக்க ஏன் வரவர விளைச்சல் குறைகிறதெனில், நமது நாட்டில் ஆதிமுதல் விவசாய முறை யொரே மாதிரியி லிருக்கிறது. விவசாயத்தில் சீர்திருத்தம் உண்டாவதில்லை. சாஸ்திரப்படி நடத்துவதாவது, எரு முதலியவைகளைப் பற்றி விசேஷ சிரத்தை யெடுத்துக்கொள்வதாவது கிடையாது. விவசாயிகளுக்கு விவசாயக் கல்வியேயில்லை.

மேல் நாட்டாரோ சாஸ்திர யுக்தப்படி பயிர் செய்ய மிக்க சிரத்தை யெடுத்துக் கொள்கிறார்கள். புதிதுபுதிதாக இரசாயன எருக்களை யுற்பத்திசெய்து உபயோகிக்கிறார்கள். பயிருக்குத்தக்க சீதோஷ்ணத்தை யளிக்க எவ்வளவோ பாடுபடுகிறார்கள். அவர்கள் எடுத்துக்கொள்ளும் கஷ்டத்தில் அரைக்கால் பங்கு நம் நாட்டார் எடுத்துக் கொள்வார்களாயின் நம் பூமி கற்பகவிருட்சமாக மாறிவிடும். அக்காலத்தி லிருந்த இராஜபக்தியும், அரச நீதியும், ஒருவன் தனக்

குக்குற்றம் செய்தவனை நோக்கி "அரசன் ஆணை; நீ என்னுடன் அரசனிடம் வரவேண்டும்" எனின், குற்றவாளி பேசாமல் வரும் நிலைமையிலிருந்தன.

இன்னொரு முக்கியவிஷயம் ஈண்டு கூறி இதைமுடிக்கிறோம். சில கிராமங்கள், தனியாகவோ, இரண்டு மூன்று சேர்ந்தோ ஒருவர்க்குச் சொந்தமாக விருக்கின்றன. மிட்டாக்கள், ஜமீன்கள் முதலியவை. மிட்டாதாரர்கள் முதலிய இத்தகையோர்களில் சிலர் தங்கள் கிராமங்களின் க்ஷேமாபி விர்த்தியில் எள்ளளவு கவலையுமில்லாதவர்களா யிருக்கிறார்கள். தாங்கள் இராஜதானி நகரிலிருந்துகொண்டு மேல்நாட்டு நாகரீக ரீதியாக நல்ல கேளியுல்லாசமாகக் காலத்தைக் கழிப்பதே தங்கள் வேலையென்றும், கிராமத்திலுள்ள தங்கள் குமாஸ்தாக்கள் அப்போதைக் கப்போது பணம் அனுப்பிக் கொண்டிருந்தால் போது மென்றும் கருதிக்கொண் டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்கள் கிராமங்களிலுள்ள ஜனங்களின் க்ஷேமாபி விர்த்தியைப்பற்றி, பொதுவாய் நமதுகிராமம் சீர்திருத்த மடைந்து முன்னேற்ற மடைய வேண்டு மென்பதைப்பற்றி, நினைவேயில்லை. தங்கள் கிராமங்களிலுள்ள பகவான் சந்நதிகளையே யிவர்கள் கவனிப்பதில்லை யெனின் வேறெதைக் கவனிக்கப் போகிறார்கள். கிராமத்திற்கே இவர்கள் முகதரிசனம் குதிரைக்கொம்பாக விருக்கிறது.

இத்தகையோர் தங்கள் கிராமவாசிகள் படிப்பு, நாகரீகம் முதலிய ஒன்று மில்லாமல் மூடர்களாக விருப்பதே நலமென்றும், அப்படிக்கின்றி கல்விகற்றுப் புத்திமான்களாய்விட்டால் நம்மை மதிக்க மாட்டார்க ளென்றும் கருதுகிறார்கள். அந்தோ ! இத்தகையோர் தாய் நாட்டின் துரோகிக ளாவார்கள். இச்சன்மத்தில் பகவான் இவர்களுக் களித்த செல்வம் பொருந்திய உயர்பதவியில் இவர்கள் தங்கள் கடமையைச் செய்யாத வரையில், மறுபிறப்பில் பகவான் இவர்களுக்குக் கஷ்டம் பொருந்திய தாழ்ந்த பிறவியே யளிப்பார் என்பதிற் சந்தேக முளதோ.

அந்தோ ! இப்போது நமது நாட்டிலுள்ள கிராமவாழ்க்கையின் கேவல நிலைமையைக் கருதும்போது யார் மனந்தான் வியாகுலப்படாது.

நம் தாய்நாடு முன்னேற்ற மடைய வேண்டுமாயின் முதலாவதாகக் கிராமவாழ்வில் பூரணமான சீர் திருத்த முண்டாக்க வேண்டும். கிராமத்தில் ஒற்றுமை யேற்பட்டாலன்றித் தேசத்தில் ஒற்று



மை யெங்ஙன முண்டாகும் ? யுக்திக்கும் இது பொருத்தமானதாக விருக்கக் காணலாம். பத்து லட்சம் ஜனங்களுக்குள் ஒற்றுமையை நிலைக்கச்செய்வது சுலபத்தில் நடக்கக்கூடிய காரியமல்ல. ஆனால் அவர்களை ஆயிரம் ஆயிரமாகப்பிரித்து, ஆயிரம்பேர் அடங்கிய ஒவ்வொரு கூட்டத்திலும் ஒற்றுமையை யுண்டாக்குவது சுலபம். பிறகு பத்துலட்சம் பேருக்குள்ளும் ஒற்றுமை சுலபத்தில் ஏற்படும்.

இப்போது நம் நாட்டுக் கிராமங்கள் பெரும்பாலானவற்றில் இரண்டு கட்சிகள் ஏற்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்தில் இரண்டு கட்சிகளுக்குமுள்ள சச்சரவால் கிராமத்திலுள்ள பாடல் பெற்ற ஸ்தலத்தில்கூட பூசையும் உத்ஸவாதிகளும் நடைபெறாமல் தடைபட்டு விடுகின்றன. அந்தோ ! இது எத்தகைய சீர் கேடான நிலைமை. நகரங்களில் நடக்கும் தேசசம்பந்தமான பொது விஷயங்கள் சற்று தூரத்திலுள்ள கிராமவாசிகளுக்குத் தெரிவதில்லை. கிராமவாசிகளில் பெரும்பாலாருக்கு இராஜாங்க முறைமை யின்னதென்றும், இராஜாங்கத்துக்கும் தங்களுக்கு முள்ள சம்பந்த மித்தகையதெனவும், தாம்கொடுக்கும் வரிப்பணம் எங்குசெல்கிறது, எப்படிச் செலவழிக்கப்படுகிற தென்றும் ஒன்றுமே தெரியாது. எங்கும் வியாஜ்ஜியங்களும், வக்கீல்களும், வியாஜ்ஜியங்கள் பிடித்து வக்கீல்களுக்குக் கொடுக்கும் தரகர்களும் புற்றீசல்போல் மலிந்திருக்கக் காணலாம். உண்மையில் தரித்திரம்வளர்ந்துகொண்டும் யாவர்க்கும் கடன் ஏறிக்கொண்டும போக, அனாவசிய மானவையும் கெடுதி விளைவிக்கக் கூடியவையுமான விசேஷ போகங்களுக்காக வீண் செலவு அதிகமாக நிகழ்கிறது. நாகரீகச் சீர்திருத்தம் என்றமயக்கிற் சிக்கி, விட்டிற் பூச்சி விளக்கைப்பார்த்து செல்வதுபோலும், நாகம் தன்னைப் பிடிக்க வருபவனுடைய நாகசுர சத்தத்தைக் கேட்டு நல்ல கீதம் என்று ஆசையோடு புற்றுக்குள்ளிருந்து வெளிக்கிளம்பி வருவது போலும், நம்மவர் இவ்வழிகளில் சந்தோஷத்தோடு செல்கிறார்கள்.

அந்தோ ! இக்குறைகளெல்லாம் ஒழிந்து கிராமங்களில் ஒற்றுமையும், தக்கவழியில் சீர் திருத்தமும், தகுதியான கல்வி விர்த்தியும் உண்டாகாமல் நம் தாய்நாடு எவ்வாறு முன்னேற்ற மடையும் ? இந்தியர்கள் என்றால் அந்நியர் அலட்சியமாய்க் கருதுவது எப்போது நீங்கும் ? இப்போது நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக நகரங்களில் பிரசங்க வாயில்களாகவும் பத்திரிகைகளின்

வாயில்களாகவும் உழைக்கும் அறிவாளிகளாகிய தேசாபிமானிகள் கிராமங்களுக்குச் சென்று அங்கு அவசியமான சீர் திருத்தங்கள் உண்டாகுமாறு போதனை செய்ய வேண்டும். அவ்வாறு முயற்சியெடுத்துக் கொண்டு கிராமங்களில் சீர் திருத்தம் உண்டாயின் நம் தாய்நாடு முன்னேற்ற மடையத் தடையேயில்லை. திருட்டாந்தமாய் முன்னேற்ற மடைந்து நல்ல உன்னத நிலைமையி லிருக்கும் மேல் நாடுகளி லெல்லாம் கிராமங்கள் நல்ல சீர்திருத்த நிலையிலேயே யிருப்பது பிரத்யட்சம். இதை விரிக்கிற்பெருகும்.

1. வது-கிராமங்களில் கட்சிபேத மென்பதின்றி ஒற்றுமையுண்டாக வேண்டும்.
2. ஒவ்வொரு கிராமத்திலும் அக் கிராமக் குடிகளால் தெரிந்தெடுக்கப்பட்ட அவயவிகளடங்கிய ஒரு பஞ்சாயத்துச் சபை யேற்படுத்தப்பட வேண்டும்.
3. அக்கிராமக் குடிகள் தங்களுக்குள் நேரிடும் எல்லா விவாதங்களையும், அப்பஞ்சாயத்தார் மூலமாகவே தீர்த்துக் கொள்ளவேண்டும். அதனால் ஜனங்களுக்குச்செலவும் அலைச்சலும் இல்லாமற் போவதோடு சீக்கிரம் சரியான நியாயமும் கிடைக்கும்.
4. ஒவ்வொரு கிராமத்திலும் தேசீயப் பாடசாலை யேற்படுத்தப்பட வேண்டும். அதில் கிராமத்திலுள்ள ஒவ்வொரு பிள்ளைகளும் கட்டாயம் வாசித்தே தீரவேண்டும் என்ற விதி யிருக்கவேண்டும். தாய்ப் பாஷையில் பாஷைக்கல்வியோடு, மதபோதனை, கணக்கு, பூகோளம், நம்தேச சரித்திரம், இவற்றோடு விவசாய சாத்திரமும், அந்தந்தத் தொழிலாளருக் குரிய கைத்தொழிலும் கட்டாய பாடங்களாக வைக்கப்பட வேண்டும். பிள்ளைகள் வாசிக்கும் பாட புத்தகங்கள் நமது மதாசாரங்களைச் சேர்ந்த நம் நாட்டு அறிவாளிகளால் எழுதப் பட்டவைகளா யிருக்கவேண்டும். அவற்றில் விஷயங்கள் முக்கியமாக நமது நாட்டுச்சம்பந்த முடையவைக ளாகவும், பிற்காலத்தில் பிள்ளைகள் தங்கள் உலக வாழ்க்கையில் அனுபவமாகக் காணத் தக்கவையாகவும், நமது மதாசாரங்களைப் பற்றியவைகளாகவும், சத்தியம், தெய்வபக்தி தேசபக்தி, வீரம் முதலிய சற்குணங்களைப் போதிப்பவைக ளாகவும் இருத்தல் வேண்டும்.



மதக்கல்வி எப்படிக் கட்டாயபாடங்களி லொன்றோ அவ்வாறே தேகப்பயிற்சியும் நமது நாட்டு முறைமைப்படி கட்டாயமாகப் போதிக்கப்படல் வேண்டும். தேகம் சுகமும் பலமும் பொருந்தியிருக்க வேண்டியது மற்ற நன்மைகளைப் பெறுவதற்கு இன்றியமையாத முக்கிய சாதனமாகும்.

5. கிராமக்குடிகள் தங்களுக்குள் பணம்சேர்த்துக் கிராமத்தில் ஒரு பொதுச்சாலை கிராமத்தின் நிலைமைக்குத் தக்கபடி கட்டவேண்டும். அதில் ஒருபாகத்தில் ஒரு வாசிக சாலை தாபிக்கப் படவேண்டும். இடம் போதுமானதாக விருந்தால் பாடசாலையும் அதிலேயே யமைக்கப்படலாம்.
6. வாசிக சாலையில் பேதமின்றி யாவரும் அவயவிகளாகச் சேர்க்கப்பட வேண்டும். முக்கியமான தேசீய பத்திரிகைகளும், தக்கபுத்தகங்களும் அங்குதருவிக்கப்பட வேண்டும்.

வாரத்திற்கு இருமுறை மும்முறை பிரசங்கங்களின் வாயிலாகவும், சாதாரணமாகப் புத்தகங்கள் பத்திரிகைகளின் வாயிலாகவும் ஜனங்களுக்குத் தேசபக்தியையும், இராஜாங்க முறைமைகள் முதலிய முக்கிய விஷயங்களைப் பற்றியும் போதிக்கவேண்டும்.

நகரசாலையைப் பற்றிய விஷயங்கள் ஒரு சங்கத்தாரின் ஆதரணையில் கவனிக்கப்பட வேண்டும். அச்சங்கத்தில் பஞ்சாயத்தார்களும் அவயவிகளாகச் சேரவேண்டும். அச்சங்கத்திற்கு ஒருவர் அக்ராசனாதிபதியாய் நியமிக்கப்படவேண்டும். அவர் அவயவிகளால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். பஞ்சாயத்தார்களில் தலைவராகவிருப்பவர் நீங்கலாக மற்ற நால்வரில் ஒருவரை யிச்சங்கத்திற்கு அக்ராசனாதிபதியாய் நியமிப்பது நலம்.

தலைவரை நியமிப்பதற்கு வாக்கு (ஓட்டு) அளிப்பதில் அவயவிகள் பகிரங்கமாகத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட அஞ்சலாகும். ஆகையால் ஒருவர் அபிப்பிராயம் இன்னொருவர் அறியா வண்ணம் இது இரகசியமாக நடைபெற வேண்டும். அதற்குப் பல வழிகளுண்டு. சுலபமான ஒன்று; அப்பதவிக்குரிய நால்வர் பெயர்களும் எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட சீட்டுகளில் அவயவிகளில் ஒவ்வொருவருக் கொவ்வொன்று கொடுத்து, அவரவர் மறைவாகச்சென்று, அதிலுள்ள நான்கு பெயர்களில் யார் தலைவர் பதவிக்கு வரவேண்டுமென்று தமக்கு விருப்பமோ அவர் பெயரை மட்டும் குறிப்பிட்டு விட்டு, அச்சீட்டைப் பெட்டியில் போட்டு

விடச் செய்யவேண்டும். இவ்வாறு யாவரும் செய்த பின் அதிகம் பெயரால் குறிப்பிடப்பட்டவரை அக்ராசனாதிபதியாய் நியமிப்பது என்று கட்டாயமானவிதி சங்கவிதிகளில் ஒன்றாகவிருக்கவேண்டும்.

நேயர்களே! நமதுநாடு முன்னேற்ற மடையவேண்டு மென்று எண்ண முடையவர்கள் இத்தகைய காரியங்களைச் செய்ய முற்பட வேண்டும். அனேக கிராமங்களில் நல்ல அறிவாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் முன்வந்து இம் முயற்சி யெடுத்துக்கொண்டால் பெரும் புண்ணியமும் புகழும் பெறுவார்கள் என்பதில் ஐயமேயில்லை. ஏககாலத்தில் எல்லாவற்றையும் அமைப்பது மிக்க பிரயாசை யெனினும், முக்கியமான இரண் டொன்றைச் செய்யத் தொடங்கலாம். முன்னாடிப் பஞ்சாயத்துகூடி யொற்றுமை யுண்டாக்கிக் கிராமத்தில் ஒரு வாசிகசாலையைத் தாபிக்கலாம். பிறகு அப் பஞ்சாயத்திலுள்ள அவயவிகளும், வாசிகசாலை யவயவிகளும் ஒன்று சேர்ந்து மற்ற காரியங்களை ஒவ்வொன்றாய் நிறைவேற்றலாம். உண்மையாய்த் தேசாபிமான முடைய புண்ணியவான்கள் ஊக்கத்துடன் முயன்றால் இது ஆகாதகாரிய மல்ல.

நேயர்களே! இவ்விஷயமாக நமது துரைத்தனத்தார் மனது வைத்தால் பூரணமாக உதவி செய்யலாகும். அல்லது நம்மையே கட்டாயப்படுத்தி செய்விக்கலாம். அந்தோ! நமக்கு அவ்வளவு புண்ணியமில்லை யென்றே தெரிகிறது. அதோடு மனித இயற்கையையும், தன்னைப்பற்றி தருமம் என்ற பழமொழியையும் நோக்க அதற்காக அவர்கள்மேல் குறைகூற விடமில்லை. ஆகையால் நமது நன்மைக்காக நாமே இதைச் செய்துகொள்ள வேண்டுமே யன்றி பிறர் உதவியை யெதிர் பார்த்தால் ஒரு போதும் நாம் முன்னேற்ற மடையோம் என்பது உண்மை. இது விஷயத்தில் நம்மவர் உடனே முயற்சியெடுத்துக் கொள்ளாமல் இன்னமும் ஆலசியம் செய்வது தகுதியன்று.

கிராமத்திலுள்ள பிரபல விவசாயிகள், வர்த்தகர், உபாத்தியாயர்கள், இவர்கள் இதற்கு முற்படவேண்டும். முயற்சி செய்யாதார்க்கு ஒரு பயனுமில்லை. அத்தகையோர் என்றும் மிருகத்தின் நிலைமையிலேயே யிருக்க வேண்டியதே.

தேசாபிமானிகளாகிய அறிவாளிகள் தங்கள் தங்களுக்கு அருகிலுள்ள கிராமவாசிகளுக்கு இவ் விஷயங்களைப் போதிக்கவேண்டு மென்றும், கிராமங்களிலுள்ள அறிவாளிகள் இவ்விஷயத்தில்



சிரத்தை யெடுத்துக் கொண்டு நம்தாய்நாட்டின் முன்னேற்றத்தை யுன்னிக் கிராமங்களில் சீர் திருத்தத்தை நிலைநாட்டுவார்க ளென்றும் எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

## தன்னடக்கம்.

ஒருவன் தன்னைத் தீநெறியிற் புகவிடாது அடக்கியாளல் தன்னடக்கமாகும். மாநுடர் நன்மையோ தீமையோ அடைவதற்குக் கருவிகளாக விருப்பன காயம், மனம், வாக்கு எனும் மூன்றுமே. ஆகவே, தன்னை யடக்குதலாவது காயம், மனம், வாக்கு எனு மிம்மூன்றையும் அடக்கியாளல் என்பதாம்.

காயம், மனம், வாக்கு எனு மிம்மூன்றையும் ஒவ்வொன்றாகத் தனித் தனி ஆராய்வாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் இவ்வைம்பொறிகளையும் அடக்கி ஆளுதலே காயத்தை யடக்குவது. இவ்வைந்தையும், முறையே, நற்கருமங்களைச் செய்தற்கும், சத்விஷயங்களை யுரைத்தற்கும், நற்பொருட்களைக் காணுதற்கும், அவைகளை முகத்தற்கும், சத்விஷயங்களைக் கேட்பதற்கும் ஈசன் மாந்தர்க்கு அளித்துள்ளான். மனம் நினைத்தவாறு இவ்வைந்தும் நடக்கின்றன. ஆனால், மனம் தீயநெறிச்செல்ல எளிதில் வயப்படுமாதலின், அதையடக்குத லன்றியும் இவ்வைந்தையும் அடக்கவேண்டும். சிற்றின்பம் முதலிய தீய நெறிகளில் இவ்வைந்தையும் உருகச்செய்தல் துன்பமிழைக்கு மாதலின், அவைகளை யடக்கி முற்கூறிய தன்தன் வேலையைச்செய்ய அவைகளை அப்பியாசப் படுத்த வேண்டும்.

மனம் எளிதில் அடங்காது; அதையே நாம் அடக்கவேண்டும். மனமும், வாக்கும், அடங்கப் பெற்றான் தானடங்குவன். மனம் சதா அலைந்து கொண்டே இருக்கின்றது. மறப்பும் நினைப்பும் இதன் தொழில். இப்பொழுதொன்று, மறுவினாடியில் அதையே மறுத்து மற்றொன்று நினைக்குந் தன்மையது. அது நினைத்தவாறு மாந்தர் நடப்பது அறியாத்தன்மையாலும், அடக்கும் வலியின்மையாலுமே.

மனத்தினிடத்திருந்தே காமக் குரோத லோப மோக மத மாச்சர்யம் ஆகிய ஆறு குணங்களும் எழுகின்றன. இவையும் இதர துர்குணங்களும் ஓர் வினாடியிற் பூப்பூத்துக் காய்த்துப் பழுத்து முதிருந் தன்மையன. எனவே, இத்துர்குணங்களுக்கு இம்மியு மிடங்கொடுக்காது, அவை யரும்பாக விருக்கும் பொழுதே அடக்கமெனுங் கருவிகொண்டு களைந்து, மனத்தை நிஷ்களங்கமாக வைத்திருக்க வேண்டும். இம் மனக்குரங்கெனும் மாயக்குரங்கு வாதுக்கு வந்தெதிர்க்கும் மல்லர் போன்று, தீநெறிக்கண் நம்மைப் புகுவித்தற்கே வீண் வாது புரியுந்தன்மையது.

“ குணமிலா மனமெனும் பேய்க்குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழலவென்னை
வைத்தனையே ... ... ... ...”

என, மெய்ஞ்ஞான குருவாய தாயுமான சுவாமிகள் கூறி யாங்கு, நற்குணமிலா மனக்குரங்கு—அதிலும் பேய்க்குரங்கு—எப்பொழுதும் கவலையையே உண்டுபண்ணி உழலவைக்கின்றது. ஆதலின், நீர்ச்சுழியன்ன, மறுகிச் சுழலும் மனக்குரங்கை யடக்கியாள வேண்டாவோ ?

அஞ்ஞானம் அல்லது மாயையென்பதற்கு மேலாக நிற்க வேண்டுமாயின், மனதை யடக்கவேண்டும். மனதில் ஒன்றழியவும் ஒன்று பிறக்கவுமா யிருத்தலால், அது அஞ்ஞானம் அல்லது மாயையாகின்றது. எனவே மனத்தை யடக்கி வென்றோனே மாயையை வென்றோனாவன். பின்னும், பிறப்பிறப் பென்பதும் மனத்தாலேயே யுண்டாகிறது. இஃது,

இறப்பும் பிறப்பும் பொருந்த - எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் நின்ற—வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி—சங்கா.

என்ற தாயுமானவர் வாக்கினால் விளங்குகின்றது. எனவே, இம்மனக்குரங்கை உறுதியுள்ள இருப்புச் சங்கிலியால் கட்டிப் பிடிக்கவேண்டும். இல்லாவிடின், இது எண்ணமுடியா மரக்கிளைகள் தோறுந் தாவி, கணக்கிடமுடியாத் துன்பங்களை இழைக்குமென்பதில் ஐயமில்லை.

நாவினால் விளையுங்கேடே பெருங்கேடாம். மனதிலுதித்ததை நாவுரைக்குமாதலின், அம்மனம் அடங்காவிடத்தில், நாவையடக்கிப் பேசுதல் வேண்டும். சில வமயங்களில் மனம் நினையாதபொழுதும் நாவு எதையாவதுரைக்கின்றது. அதனால், ஒருவன் தான் சொல்லிய சொற்களாலேயே குற்றத்தைச் சுமக்கிறான்:

“ யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு ”

என்று திருவள்ளுவர் கூறியாங்கு, எதைக்காக்க முடியாவிடினும், ஒருவன் தன் நாவைக்காக்க வேண்டும். அவரே . ,

‘ ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும் ’

என்று கூறியபடி, பொய், குறளை, கடுஞ்சொல் முதலிய தீச்சொற்களினாலாய ஒருவார்த்தை வெளிவரினும் அது பெருந்துன்பத்தை ஈயவல்லது. மற்றும், நாவினால் எழும்பிய ஓர் வசைமொழி என்றும் மறையாது துன்பத்தையே கொடுத்துவரும். ஆதலால், நாவை யொருவன் முக்கியமாக அடக்கவேண்டும்.

காயம், மனம், வாக்கு ஆகிய இம்மூன்றையும் தன் வசப்படுத்தி இல்லறம் நடத்துவோன் இல்வாழ்க்கையே மாண்புடைத்தாம். ஆகவே, அடக்க



முடையாரை யாரும் விரும்புவர்; அவருக்குப் பயந்து நடப்பர்; அவரைப் பெரியோரென மதிப்பர். ‘ நிறைகுடம் நீர் தளும்பாது ’ என்ற வண்ணம் அடக்கமுடையானை யாவரும் நிறைகுடமென நினைந்து வணங்குவர். தனையடக்குவான் உலகத்தையே யடக்குந்தன்மை வாய்ந்தவனாவான். மேலும், ஒருவன் தன்னை நல்வழிகளிலேயே நடத்திக்கொண்டு, தீயநெறிக்கண் போகவிடாது அடக்கி வாழ்வனேல், அவனது குலத்திற்கு நற்பெயர் வழங்கும். அவன் மூதாதையர் கெட்டவரா யிருந்திருப்பினும் இவனால் நற்பெயர் வழங்கும். இதை நோக்கியே, ‘தானடங்கக் குலமடங்கும்’ எனும் பழமொழி யொன்று வழங்குகின்றது.

தன்னை யொருவன் அடக்கிக் கொள்ளுதலால், இப்பிரபஞ்சத்தில் நன்மையடைவது மன்றி மறுமையினும் நன்மை யடைகிறான்.

‘ அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும் ’

எனும் செந்நாப்புலவர் பொய்யா மொழிப்படி அடக்கமுடையான் தேவருலகத்தையும், அடக்கமிலான் பொறுக்கமுடியாத நரகத்தையும் அடைகிறானென்பது நன்கு தெரிகின்றது.

முற்கூறியவைகளெல்லாம், இல் வாழ்க்கையில் மனவாக்குக் காயங்களை நல்வழியில் அனுபவித்துக் கொண்டே அடக்க முடையா யிருத்தலாம். இனி, துறவறம் பூண்டாரை நோக்குவாமாயின், அவர் யாவற்றையும் அடக்கியாளக் கடமைப் பட்டுள்ளார்: இப்பேர்ப்பட்டோர் இல்லறத்தில் முற்கூறியபடி அடக்கமுடையா யிருந்தாலொழிய, இப்பொழுது ஐம்பொறிகளையும் அடக்கியாள முடியாது. எனவே அடக்கம் துறவறத்தினும் நன்மை பயக்கின்றது.

இந்திரன், இராவணன் முதலியோர் தமக்குள்ள பலத்தின் பெருமையைக்கொண்டாடி மகிழ்ந்து, தங்களையடக்க வகைதெரியாது, அடாது செய்து படாதுபட்டு, எத்தன்மை யடைந்தன ரென்பதே, அடங்காமைக்கு ஓர் தனிச்சான்றன்றோ. துரியோதனாதியர் அடக்கமின்மையால், பொறாமை, சூது, கொலை முதலிய துற்குணங்களுக் கிரையாயினர். தருமர் அடக்கமுடையவராக விளங்கினதால், பரமாத்மாவான கிருஷ்ணாருள் பெற்று மேன்மை யடைந்தனர். எனவே, இவ்வாற்றால் அடக்கத்தின் மேன்மையும், அஃதின்றேல் விளையும் பல்வேறு வாதனைகளும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன.

என் சகோதர சகோதரிகளே ! எத்தனைபேர் தாம் இருக்கும் இடம் தெரியாது வாழ்ந்தாலும் இறுதியில் நீங்காப்புகழை இவ்வுலகில் நிலைநாட்டிப் பரம்பொருளைக் கிட்டுகின்றனர். அடக்கம் என்பதை நம்மவர் ஒவ்வொருவரும் ஆதரித்து மேற்கொண் டொழுகுவாராயின், அது அளவிலா இன்பத்தையும், நீங்காப்புகழையும், மோக்ஷ லோகத்தையும் கொடுக்கும்.

ஆதலின், நம்மவர் அனைவரும் அடக்கமுடையராய் விளங்கமுயலுவோமாக. எல்லாம்வல்ல பராசக்தி அருள் பாலிப்பதாக. இதையும், இதுபோன்ற பலபோதனை முறைகளையும், தாய் தன் குழவிக்குப் பாலூட்டி வளர்ப்ப தன்ன, நமக்கு ஊட்டி நல்வழிப்படுத்தும் 'ஆனந்தன்' நீடூழிவாழ்வானாக.

**வ. வேலாயுதன்,**
இளசை.

---

## "தென்மொழியுள் வடமொழிக்கலப்பு"

முற்காலத்தில் தென்மொழியாகிய நந்தமிழ் மொழியுள் வடசொற்கள் அருகிக்கிடந்தன. இக்காலத்திற் பெருகிக் கிடக்கின்றன. நாள் வழி ஏடு (தினசரிப் பத்திரிகை), கிழமை மும்முறை ஏடு (வாரம் மும்முறைப் பத்திரிகை), கிழமைவழி ஏடு (வாரப் பத்திரிகை), திங்கள்வழி ஏடு (மாதப் பத்திரிகை) ஆகிய இவற்றை ஆக்குவோர்களெல்லாமே இன்னும் வடசொற் கலப்பைப் பெருக்கிக்கொண்டு வருகின்றனர். எவ்வாற்றாலெனில், ஒரு பொருளைக் குறிக்கும் தமிழ்ச்சொல் உள்ளவிடத்தும் அப்பொருளைக் குறிக்கும் வட சொல்லைக் கையாண்டும், ஆங்கிலமொழியில் உள்ளவற்றைத் தமிழில் மொழிபெயர்க்குங் காற் புதுச்சொற்கள் ஆக்கவேண்டிய விடத்து வடமொழியில் ஆக்கி அவற்றைப் பயன்படுத்தியும் வரும் இவ்வாற்றால் என்க.

இவ்வாறு நம் தமிழ்மொழி இன்னுஞ் சில காலம் நடைபெற்று வருமாயின், அஃதென்னும் என்பதைச் சிறிது ஆராய்வார்களாயின், அங்ஙனஞ் செய்யத்துணியார்; முற்றுந் தமிழ்ச் சொற்களையே கையாளுவர். சொற்கள் கிடைக்காவிடிற் புதுத்தமிழ்ச் சொற்களை ஆக்குவர். இங்ஙனம் இக்காலத்தில் அருட்டிருவாளர் மறைமலையடிகள் தாம் எழுதிவரும் திருவாசக விரிவுரையிற் கூடியவரை வடசொற்களை ஒழித்து எழுதுகின்றார்கள்; முற்றும் ஒழிக்கவில்லை. ஒழிக்க முயல்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

இனி மற்றைய ஏடாக்குவோர்களும் (பத்திரிகாசிரியர்களும்) தமிழ்மொழியிடத்து அன்புள்ளவர்களானால் அவ்வாறே, இனிமேல் செய்யத் தொடங்குவர். அங்ஙனஞ் செய்யத் தொடங்காதவர் அம்மொழியிடத்து அன்பிலாரவர். அன்பிலார் ஆமாறு எவ்வாற்றால் எனில், அம்மொழியினது அழகும் பெருமையுங் கெடுமாறு செய்யுமாற்றாலென்க. என்னை? அன்புடையார் அழகும் பெருமையும் உற்று விளங்குமாறு செய்வர். அஃதிலாரன்றே அவை கெடுமாறு செய்வர்; ஆகலான்.

இனி வடசொற்கலப்பைப் பெருக்குதல் தமிழ்மொழியின் அழகைக் கெடுக்குமாறு யாங்ஙனம்? எனில், அழகு என்பது "கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம்." மொழிக்கு அழகாவது கேட்டாரால் விரும்பப்படும் தன்மை: அத்தன்மை தமிழ்மொழி ஒன்றினுக்கே இயற்கையாய்



அமைந்துள்ளது என்பதையும், ஏனைய மொழிகளுக்கு அங்ஙனம் இல்லை என்பதையும் "மொழியினது உண்மைக்கூறு பாட்டு நூல்" வல்லாராகிய திருவாளர் மாணிக்கநாயகர் முதலியோர்பாற் கேட்டறிகின்றோம். இங்ஙனமாகலின், வடமொழிக் கலப்பின் பெருக்கால் தமிழ் மொழி தன் இயற்கை அழகை இழக்கும் என்பது பெறப்படுகின்றது.

இனிப் பெருமையைக் கெடுக்குமாற்றை ஆராய்வாம். பெருமை என்பது குறைவில்லாமை. மொழிக்குப் பெருமையாவது தனித்தியங்கவல்லதாய் ஒன்றானுங் குறையின்றி எல்லாவாற்றானும் நிறைந்திருத்தல். தமிழ்மொழியுள் வடசொற்கலப்பைப் பெருக்கின், தமிழ்நூல் செய்யப்புகுவோர் இருமொழிகளிலும் வல்லராய் இருத்தல் வேண்டும். இல்லையேல், சொற்களைப் பிழைப்பொருள் படும்படி பயன்படுத்தி விடுவர். உரை எழுதப் புகுவோரும் அங்ஙனமே இருமொழிகளிலும் வல்லராய் இருத்தல்வேண்டும். இல்லையேற் பிழைப் பொருட்பட வுணர்ந்து உரைப்பர்.

இனி நூற்பொருளையும் உரைப்பொருளையும் கற்கப் புகுவோரும் அந்நூலையும் உரையையும் ஆக்கியவர்களின் உண்மைக் கருத்தை யுணர இருமொழிகளிலும் வல்லராதல் வேண்டும். இங்ஙனம் தமிழ் மொழியில் நூலியற்றவும் உரையியற்றவும், நூலுரைகளின் பொருளைக் கற்கவும் புகுவோர் வேற்று மொழியாகிய வடமொழியிலும் வல்லராதல் வேண்டும் என்றிருத்தல் தமிழ்மொழிக்குக் குறையன்றோ? குறையுடைய மொழி பெருமை அடையுமா? அடையாது. இங்ஙனம் தமிழ்மொழி பெருமையை இழக்கும்.

மேலும், தமிழ்மொழியிலே அறிவு நூற்களைக்கற்றுப் புலவராதற்கு இருமொழிகளிலும் வல்லராதல் வேண்டும். சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மனோர்க்கு இருமொழிகளிலும் வல்லராதல் அரிது. ஆகவே எளிதிற் புலவராதற்கு ஏற்றவழியையே நாடுவர். அதற்கேற்ற ஒருமொழியையே தேர்வர். அம்மொழியையே பயில்வர். அம்மொழியிலேயே நூல் செய்வர். அம்மொழியிலேயே உரை எழுதுவர். ஆகலின் அம்மொழியே சிறப்புறும். நம் தமிழ்மொழியின் சிறப்பு குன்றும்.

இங்ஙனம் வடசொற் கலப்பின் பெருக்கால் நம் இனிமையும் பெருமையும் வாய்ந்த தமிழ்மொழி தன் அழகையும் பெருமையையும் இழக்கநேரிடும். ஆகவே அம்மொழியிடத்து அன்புடையராவார் அனைவரும் இது முதல் வடசொற்கலப்பை முழுதும் ஒழிக்க வழி தேடுவார்களாக. அங்ஙனமாக இறைவன் அருள்புரிவாராக. இஃதெமது பேரன்பும் பேரருளும் வாய்ந்த ஆசிரியரால் எழுதி நன்குணர்த்தப் பட்டது.

**விநாயகரடிமை.**

---

## பிள்ளையார் சுழி.

பூமண்டலத்திலே புண்ணிய பூமியாகிய இந்நாவலந்தீவிலுள்ள ஆஸ்திக சம்பந்த சுபஹிருதய சன்மார்க்க மாந்தர்கள் தங்களால் நிகழ்ப்பெறும் ஆரண உபநிடதபுராண முதலிய சகல ஞான லௌகிக நூல்களிலும், நிருபங்களிலும், முதன் முதல் "பிள்ளையார் சுழி" யென்ற 'உ' இக்குறியை எண்ணி நாட்டிய பின்னரே எழுதத் தொடங்குவதும் செய்யத் தொடங்குவதும் பூர்வீகம் தொட்டு வழக்கமா யிருந்துவருகிறது.

2. இச்சுழி நாட்டுவதின் காரணம் என்னவென்று நிதானித்து ஆழ்ந்த கருத்தோடு ஆராயப் புகுங்கால் பின்கண்ட இரகசியங்கள் வெளியாகின்றன. முதன் முதல் மாந்தர்களால் நினைக்கப்பெறும் விஷயாதிகளின் மூலமானது, இருதயத்தி லிருக்கும் "அனாகதம்" என்ற ஆதாரசக்தியின் வட்டமலரிதழ்களில் உலவாநிற்கும் பிராணவாயுக்கள் ஒன்றுக்கொன்று வட்டமிட்டு உராய்ந்துகொள்ளுவதினால் உண்டாகும் சத்தமாகிய நாதத்தொனியோடு ஐம்புலன்களிலும் சென்று பழகிய மனமானது கலப்பதினால் உண்டாகும் உணர்ச்சியால் நேர்வதாம்.

3. மேற்கண்ட ஆதாரசக்தியானது தங்கப்பெறும் இடத்திற்கு பிந்துவென்று பெயர். இச்சக்தியானது சில இதழ்கள்கொண்ட வட்டவடிவமான ஓர் மலரென்றே தத்துவநூல்கள் கூறுவதால், இது தங்கப்பெறும் மூலமான பிந்துவென்ற வஸ்துவும் வட்டவடிவமானதே. ஆகவே, இப்பிந்துவின் அடையாளம் ο இதுவாகும். இவ்வடையாளமே சகலத்திற்கும் காரணமாயிற்று. "பிரதமம் பிந்துலம் யுக்தம்—த்விதீயம் தண்டமுச்சதே" என்ற பிரமாணப்படி முதலிலே பிந்துவின் வடிவமும் இரண்டாவது தண்டம் என்ற [தடி] வடிவமும் குறிக்கவேண்டி இருத்தலால், அவ்விரண்டும்—ெ—இவ்வடிவம் பெற்று நிற்கின்றன. இதனை வரிவடிவமாய் எழுதுங்காலத்தில் இவ்வுருவம் அந்தரமாய் நிற்குமாதலால், அதற்கு பீடம் ஒன்று அவசியம் வேண்டும். ஆகவே, அதன் கீழ் ஓர் ஆசனம் தந்து எழுதுவதே முறையென முற்காலத்தார் கொண்டெழுதி வந்தனராகையால் முடிவில் உ இத்தக்குறி ஏற்பட்டு நிற்கிறது.

4. இது "பிள்ளையார் சுழி" தா னென்பதற் குரியமார்க்கம் என்னவென்று பார்க்கும்போது பின் கண்டவாறு புலப்படுகிறது:-அதாவது எவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் மாயை யற்ற ஆதி மூர்த்தமாகிய நிர்மலவிந்துரூப சக்தியே துஷ்ட நிக்கிரக இஷ்ட பரிபாலனார்த்தம், சிவபிரானுக்குப் பிள்ளையாய்த் தோன்றித் தன் பூர்வவடிவைப் புலப்படுத்தின தாகையால், அவ்வாறுதித்தவரைப் பிள்ளையாரென்றும், அவர் செயலாகிய செங்கோலும் அவர் வடிவமாகிய பிந்துவும் ஆகிய இரண்டுங்கூடியதைப் "பிள்ளையார் சுழி" என்றும் கூறும் வழக்கமாயிற்று என்பது விளங்கும். இப்பிள்ளையார்



சக்தியின் பிரதாப வடிவமாறுதல்களைப் "பார்க்கவபுராணம்" என்ற விநாயக புராணத்தில் பரக்கக்காணலாம்.

"சுக்கிலாம்பரதரம் விஷ்ணும்-சசிவர்ணம் சதுர்புஜம்-பிரசன்ன வதனம் தியாயே-சர்வவிக்னோபசாந்தயே" என்று வாக்கால் தொழுதுசெய்வதும், எழுதத் தொடங்கு முன்னர் "பிள்ளையார் சுழி" யிட்டு எழுதுவதும் ஆகிய இவைகள் எடுத்துக்கொண்ட காரியங்கள் விக்கின மின்றி முடியும் பொருட்டேயா மென்பது விளக்கமாம்.

5. பரமசிவன் திரிபுரதகனம் செய்தகாலத்தே புனைந்த தேரின் உருளையச்சு முறிந்துவிட்ட தானது, சிவன் தன் காரியத்தை ஆரம்பிக்கு முன் பிள்ளையாரைத் தியானிக்காத தப்பிதமே யாமென்பது இங்கு குறிப்பு: ஆகவே, எல்லா ஆஸ்திகர்களும், ஆஸ்திகர்களில் ஆங்கிலங்கற்று விபரீதஞானம் பெற்று அரற்றுவோரும், இதன் உண்மையை யின்மேலும் உணர்ந்து எடுத்துக்கொண்ட நற்காரியம் இனிது முடியுமாறு முதலிலே தங்கள் மனத்தும், வாக்கினும், காயத்தினும் இத்தெய்வக் குறியைப் பதிவுசெய்து எக்காலமும் வாழ்ந்து வருவார்களென்று எல்லாம்வல்ல இறைவனருளைச் சிந்திக்கின்றனம். சுபம்.

வி. பி. பாலகிருஷ்ண நாயுடு,
ஸ்ரீமத். உரோமரிஷீஸ்வரர் ஆஸ்ரமம், சென்னை.

குறிப்பு:—ஹிந்துக்களுக்கு இத்தகைய முக்கியமான பிள்ளையார் சுழியைத் தபால் கார்டின் மேல்விலாசத்தின் தலைப்பில் குறிப்பதற்காக இப்போது தபால் இலாகாவில் பேரிங் (bearing) சார்ஜ் 6 பை வாங்குகிறார்கள். அந்தோ இது எத்தகைய அநீதம். ஹிந்துக்களின் மதச்சுதந்தரத்தைப் பொறுத்த இவ்விஷயத்தில் இடையூறு செய்வதைப்பற்றி இனியேனும் அரசாங்கத்தார் கவனித்து இந்த நீதிக்குறைவான வழக்கத்தை யொழிப்பார்க ளென்று பிரார்த்திக்கிறோம். அனாதி காலந்தொட்டு நடைபெறும் மத சம்பந்தமான வழக்கத்தை யிப்போது நீக்க முடியுமோ? மந்திராலோசனை சபையிலிருக்கும் M L C க்களென்ற அவயவிகளாகிய நம்மவர்களே இதைப்பற்றிக் கவனிக்க வேண்டியவர்க ளாதலால் இனியேனும் அவர்கள் இதில் சற்று மனம்செலுத்து மாறு வேண்டிக் கொள்கிறோம்.

பத்திராசிரியர்,

---

## கைவல்ய நவநீத வசனம்

(298-ம் பக்கத் தொடர்ச்சி.)

(பிழைதிருத்தம்:—கடந்த சஞ்சிகை 332-ம் பக்கத்தில் "கைவல்ய நவநீதவசனம் (298-ம் பக்கத்தொடர்ச்சி)" என்ற தலையங்கம் தவறாக அங்கு சேர்க்கப்பட்டதால் அதை நீக்கிவிடுக)

[நாம் என்பது உண்மையில் பரிசுத்தமாய்ச் சலனமின்றி எதிலும் தாக்கற்று சாக்ஷிமாத்திரமாக விருக்கும் கூடஸ்தனாகிய ஆன்மாவாம். இந்த ஆன்மா மூலாஞ்ஞானமாகிய அவித்தையால் தன் நிஜவடிவை மறந்துவிட்டது. "பிரமமாந் தனைமறந்த பேதைமையே யஞ்ஞானம்" என்று இந்நூலாசிரியரே முன்படலத்தில் சீவருக்குரிய அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், துக்கநிவர்த்தி, தடையற்ற ஆனந்தம் என்ற சத்தாவஸ்தைகளை விவரிக்கு மிடத்தில் கூறியுளர். இவ்வாறு தன் உண்மையை மறந்த ஆன்மா, பிறகு தேகான்மப்பிராந்தி யடைகிறது. அதாவது கொஞ்சகால மிருப்பதும் பிறகு அழிவதுமாகிய சுபாவமுடைய தேகமே தானென மயங்கிவிடுகிறது. நான் சீவித்திருக்கிறேன், இறந்து போகிறேன் என்ற விவகாரங்கள் தனக்குரிய சுபாவமென்று கொள்கிறது. இதனால் இப்போது இதற்குச் சீவன் என்று பெயர்வந்தது. பரிசுத்தமான சாக்ஷிமாத்திரமாக விருக்கும் ஆன்மாவே கூடஸ்தன். அவித்தையோடு சம்பந்தப்பட்ட ஆன்மாவே சீவன். ஆகையால் இச்சீவனே அஞ்ஞானம் நீங்கியபோது கூடஸ்தனாகிறது. வெல்லம், கற்கண்டாவதுபோல்.

அனுபவமாகவே, உலகில் பெரும்பாலார் நான் என்பது தேகம் என்றே அல்லது தேகத்தோடு சேர்ந்த ஒன்றென்றே கருதி யிருக்கக் காணலாம். இம்மந்த அதிகாரிகள் அறிவிற்கு, தேகத்திற்கு அன்னியமாய் ஒரு பொருளிருப்பதாக உணரும் ஆற்றலில்லை. இந்த அஞ்ஞானத் தடிப்பு அவரவர்கள் கர்மத்தினளவாக விருக்கும். தேகமே நாமென்னும் அஞ்ஞானமே பிறவிப்பிணிக்குக் காரணமாதலால் உடலை நானென்று நம்பி அனேக ஜனனங்களில் உழன்றேன், என்றார்.

குரு உபதேசத்தால் அஞ்ஞானம் நீங்கி ஆன்மதரிசனம் உண்டாகும் போது, இதுகாறும் ஆவரண மறைப்பால் சத்தியமாகத்தோன்றிய தேகாதிப் பிரபஞ்சமனைத்தும் கானல் நீர் போலும், கனவுபோலும், பொய்யாய்ப் போய்விடும். அஞ்ஞான நீக்கம்பெற்ற ஆன்மாவிற்கு மட்டுமே மாயையொழிவதால் உலகம் வெந்துபோன கயிறுபோல் தன்னை மயக்கச் சக்தியற்றதாகவும், சித்திரப் படத்திலுள்ள உருவங்கள்போல் தோற்ற மாத்திரமாகவும், சொல்மாத்திர மாகவும், அதனிடத்திருந்த அனுபவங்களனைத்தும் கனவுபோலவும் தோன்றும். மற்றையர்க்கெல்லாம் உலகம் இருந்துகொண்டேதா னிருக்கும்.

"தோன்றி விளங்கும் பொருளெல்லாம் தொல்வே தாந்த விசாரணையில்
ஊன்றி நோக்கி யனுதினமும் யூகமதனிற் பரிசயித்தால்
தோன்றி விளங்கு மறிவொன்றே சொன்மாத் திரமாய் விடுமுலகம்
ஊன்றி நோக்கா தவர்கட்கே யுளது போலத் தோன்றியிடும்."
(குமாரதேவர்)

பொய்யென் றறிந்தபின்னும் தோற்றிக்கொண் டிருப்பதற்கே கானல் நீர்



திருட்டாந்தம். கானல் நீராகிய பேய்த்தேரைக் கண்ட ஒருவன் தன் தாகத்தைத் தணித்துக்கொள்ளப் பெரிய நீர் நிலையிருக்கிறதென் றெண்ணி ஓடிப்போய்ப்பார்த்து அது பொய்த்தோற்றம் என்று கண்டபின்னும், மறுபடி பார்த்தால் அது நீர் போன்றே தோற்றும். ஆனால் அவன் முன்போல் மறுபடி மயங்கான்.

கானல் நீரில் அனுபவமில்லை. உலகில் அனுபவமிருக்கிறதே யெனில் அதற்கே கனவுபோல் என்ற திருட்டாந்தம் கூறப்பட்டது. கனவு பொய்யாயினும் அனுபவமிருக்கிற தன்றோ! அதுபோலவே உலகு பொய்யெனினும் இதில் அனுபவமு மிருக்கின்றது. தாயுமானவர் மாயையைப் பற்றி,

"தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னா னாட்டிய வகில மாயை
கான்முயற் கொம்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்."
(என்றார்)

"இதன் கருத்து:—— "ஓ! நான்முகக் கடவுளே! உம்மால் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகமாயை முயற்கொம்போ? கானல் நீரோ? ஆகாயத் தாமரையோ? வேறே எதுவோ? என்னென்று தான் இதைக்கூறலாம்? இதைத் தாமே கூறியருள வேண்டும்" என்பதாம்.

குருவருளால் தன் ஆன்மசொருபத்தைக் கண்டு அதுவே தானென்ற நம்பிக்கை வந்தபின்பே, நாம் பிரம்மசொரூபமே யென்று தெரியும். அப்போதுதான் உலகத்தோற்றம் பொய்யென விளங்கும். நானென என்னையே நம்பி ஈடேறினேன் என்றது இதுவே. முன்பு தேகத்தை நாமென நம்பிப் பிறப்பிறப்பில் அழுந்தி வருந்தினோம்; இப்போது குருவருளால் ஆன்ம சொரூபமாகிய நம்மையே கண்டு நாமென்று நம்பி ஈடேறினோம் என்பதாம்.

"நானென் றிருந்தானின் னானென் றறிந்தபின்
றானென்று கண்டாரென் றுந்தீபற
சந்தேகந் தீர்ந்தாரென் றுந்தீபற" [சொரூபவுந்தியார்]

"நம்மையறி வேவடிவா நாங்கண்டோ நம்மையன்றிச்
செம்மை யுலகத் திரள்காணோ—நம்மைநா
முற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருகாலு
மிற்றுப்போ னோமோ வியாம்" [சொரூபசாரம்]

தன் நிஜவடிவைக் கண்டபின் ஆரோபம் ஒழிதலின் உலகம் கானல் நீர் போலும் கனவுபோலும் தோன்றும். அப்போதும் உலகைத் தனக் கன்னியமாகக் காணும் வரை முத்திகூடாது. யாவும் தானாகக்காணுவதும், தன்னையன்றி ஒன்று மில்லாததும், ஒன்றிரண்டென்று கூறவொண்ணாததுமாகிய அகண்டாகார நிலையே முடிவான பிரம்மானந்த நிலையாம்.

" உலகினை வேற தாக வுணர்ந்திடிற் பந்த மாகும்
உலகினைத் தானே யாக வுணர்ந்திடின் முத்தி யாகு
மிலகிடத் தோன்ற லெல்லா மென்னினை வேயென் றெண்ணி
யிலகிடக் கண்டு வேறற் றிருந்தன னிளமை வேந்தன் "
(குமாரதேவர்)

(குருவருளால் தன் நிஜசொரூபத்தைக் கண்டு சோகம் நீங்கி விசிராந்திபெற்ற சீடன் சற்குருவை வியந்து துதித்தல்.)

"நான் எத்தகைய புண்ணியங்களைச் செய்தேனோ! என் அதிஷ்டந்தான் என்னையோ! நன்னிலம் என்ற விடத்தில் அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளின நாராயண தேசிகருடைய கடாட்சத்தால் நான் கிருதார்த்தனானேன். எனக்குக் கிடைத்த திருப்தியால் ஆனந்தத் தாண்டவம் புரியா நின்றேன்.

தத்துவஞானம் பெற்றதா லுண்டான ஆனந்தமேலீட்டால் நாடோறும் இவ்வாறு ஆனந்தத்தாண்டவம் புரிவேன் என்பதைத் தமது திருவுளத்தின் கண்ணே முன்னமே யுணர்ந்த ஞானதிருஷ்டியா லல்லவா என்னைத் தாண்டவா என்ற நாமத்தா லழைத்தனர். அத்தகைய மகிமையையுடைய எனது ஞானசற்குருவே எனக்குத் தாயுந்தந்தையு மாவர்.

[ இந்நூ லாசிரியருக்கு இவருடைய குருவால் இடப்பட்ட காரணப் பெயர் 'தாண்டவராயர்.' ஆதலின், நான் தத்துவஞானத்தா லுண்டான ஆனந்தத்தால் சதா தாண்டவம் புரிவேன் என்பதை முன்னாடியுணர்ந்தே எனது ஆசான் எனக்குத் தாண்டவராயன் என்ற நாமத்தைச் சூட்டினார் என்று புகழ்ந்து கூறினபடி.]

இந்தப் பிரம்மானந்தத்தா லுண்டான இம்மகிழ்ச்சியை யான் யாருடன் கூறுவேன். அது என்னுள்ளத்தின் கண் ,உதயமாகிப் பூரித்து ஜகமெங்கும் வியாபித்துப் பரிபூரணமாகிக் கங்குகரையற்று விளங்குகிறது. அத்தகைய ஒப்புயர்வற்ற ஆனந்தப்பேற்றை அருளவல்ல ஞானதேசிகரையும் வேதாந்த வாக்கியங்களையும் அளித்தருளிய பரமேசுவரனுடைய மலரடிகளைப் பணிகின்றேன்."

தத்துவஞானத்தால் உண்டாகா நின்ற ஆனந்தானுபவம் இத்தகையதென மொழிந்தோம். இந்நூலைப் பக்தியோடு குருமுகத்தில் ஆராய்ச்சி செய்து இதிற் கூறியபடி அப்பியசித்தோர் நித்தியமும் விசேடமும் பொருந்திய சமாதிநிலையை யனுபவமாக வுணர்ந்து அநுபவித்து ஜீவன் முத்தியடைந்து முனிசிரேஷ்டருக்குச் சமதையாவர்.

வேதத்தில் கூறியுள்ளனவாகிய சாதன சதுஷ்டய முதல் தத்துவ ஞானத்தா லுண்டாகும் ஆனந்தம்வரையில் நன்கு விளங்கவேண்டியதற்காகக்கூறவேண்டிய யாவும் குறைவின்றிப் பூரணமாகும்படி நன்னிலம் என்னும் பதியிலெழுந்தருளிய நாராயண தேசிகரெனும் குருபரன் நமதுயோக காலத்தில் தோன்றிக் கட்டளை யிட்டருளினர்.



[நாம் தியானம் செய்யுங்காலையில் நமது ஞானாசிரியர் உள்ளுக்குள்ளே தோன்றி நமக்குக் கட்டளை யிட்டபடியே நாம் இந்நூலைக் கூறினோமன்றி நமது வல்லமையால் கூறியதல்ல என்பதாம்]

சற்குருவின் பாதகமலங்களில் அபிஷேகம் செய்யப்பட்ட தீர்த்தத்தைச் சிரசின்மேல் புரோக்ஷித்துக் கொண்டால், கங்கைமுதலிய சகல புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்ததா லடையும் பலனனைத்தும் எப்படி யடையலாமோ அதுபோலவே, 'கைவல்லிய நவநீதம்' என்ற இந்நூலைக் கற்றோர்கள் சகல ஞானசாத்திரங்களையும் கற்றுணர்ந்த மெய்ஞ்ஞானிகட்கொப்பாய் ஆனந்த வாழ்வுறுவார்கள்.

ஓம் தத் ஸத்

## கைவல்ய நவநீத வசனம்

முற்றிற்று.

---

## பசு.

(315-ம் பக்கத்தொடர்ச்சி.)

பசுவின் சாணத்தைப் போலப் பயிர்களுக்கு நேரிடும் ரோகங்களை மாற்றவும் அந்தப்பயிரை விளைக்கவுங் கூடியவஸ்து வேறொன்றில்லை. சிவாலய விஷ்ணுவாலயங்களிலும் மனிதர்கள் குடியிருக்கும் கிருகங்களிலும் எது கொண்டு மெழுகி எதுகொண்டு புரோக்ஷித்துச் சுத்திசெய்கின்றார்கள்? கோமயங்கொண்டு மெழுகிக் கோசலத்தைப் புரோக்ஷித்தல்லவா சுத்தி செய்கின்றார்கள். இத்துணைக் கோமயம் என்னும் பசுஞ்சாணம் மந்திரபலத்தால் யாகாக்கினியிற் பட்டு நீறாகி உட்கொண்ட காலத்து அகத்திலுள்ள துர்க்கந்த துர்மலங்களை யெல்லாம் போக்கு மென்பதற்கும் ஐயுறவுண்டோ? இது பற்றியன்றே " உண்மாசு கழுவுவது நீறென்றே யுபநிடத முரைப்ப " என்றார்.

சகலபுவன கர்த்தாவாயுள்ள ஸ்ரீ கண்ட பரமேஸ்வரர் தமது செம்பவளத் திருமேனியில் உத்தூளித்தற் குரிய திருநீற்றிற்கும் காரணபூதமாயுள்ளவை பசுக்கள் அல்லவா. இதனைச் சண்டேசுர நாயனார் புராணத்தில்,

" சீல முடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்
கால முழுது முலகனைத்துங் காக்கு முதற்கா ரணராகு
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரு
மூல மவதா ரஞ்செய்யு மூர்த்த மென்றால் முடிவென்னோ. "
என்பதாலறிக.

இத்துணைப் பெருமைவாய்ந்த பசுக்கள் தரும் சாணத்தைத் தூஷிப்பதும் அச்சாணத்தாற் றோன்றிய அருமருந்தாகிய விபூதியை நிந்திப்பதும் கூடாது. வைணவர் சைவர் என்னும் இருபகுதியாரும், விவாகம் விரதம் பிதிர் காரியம் தருப்பணம் தீக்ஷை யாகம் முதலிய காலங்களில் அந்தந்தச் சடங்குகளுக்கு இன்றியமையாப் பொருள்களாக எந்த மிருகத்தின் பொருளைக் கொண்டு நடத்துகின்றனர். பசுக்கள் தரும் பால் முதலிய பொருள்களாலல்லவா ? கிருகசுத்தியே யன்றி ஆத்ம சுத்திக்காக வைதீக கிரியைகளில் உட்கொள்வன எவை ?

## பஞ்ச கௌவியம்.

வைணவராலும் சைவர்களாலும் தானஞ் செய்யப்படும், தருமசொரூபப் பொருளாயிருப்பதும் பசு. இயமபுரத்து ஆறுகிய வைதரணியைக் கடப்பிப்பதும் பசு. ஒவ்வொரு சீவராலும் தானம் செய்யப்படும் பொருளாகச் சிதர மூர்த்தியால் கருடர்க்குக் கட்டுரைக்கப்பட்டதும் பசு. கண்ணபிரான் இடைக்குலத்திற் சேர்ந்து பசுக்களின் பின்னர்த்திரிந்து பசுக்களை மேய்த்தது எதுபற்றி ? பசுக்களின் மகிமைகண்டே யல்லவா ? கண்ண மூர்த்திக்குக் கோவிந்தன், கோபாலன் என்ற நாமங்கள் எவற்றாற் கிடைத்தன ? பசுக்களா லல்லவா ? உலகத்தார் சாதுவாயுள்ள ஒருவனைநோக்கி " இவன் பசு " என்று கூறுவது எதனாலே ? பசுவினிடத்துள்ள சத்துவ குணத்தாலல்லவா? கருடன் சிங்கம் பன்றி முதலியவைபோல அசுத்த பதார்த்தங்களை உண்ணுமற் சுத்தமாகிய தாவர பதார்த்தங்களை யுண்ணும் பெரும் புண்ணியமுள்ளவை எவை? பசுக்களே! ஆனாயநாயனார்,விசாரசருமர் முதலாயினோர் மேலாய பதவியை அடைந்ததும் எவற்றாலே ? பசுக்களாலே யல்லவா ? புறத்தே திருக்கோயில் கொண்டிருக்கும் சிவலிங்கப் பெருமானது அபிஷேகத்திற் கென் ஏற்பட்டுள்ள திரவியங்களுக்குள் எல்லாம் சிறந்தனவாகக் கொள்ளப் பட்டவை எவை ? பசுக்கள் தரும் பஞ்சகௌவியங்களே!

பால் தயிர் முதலிய ஐம்பெரும் பொருளை ஆனினங்கள் அந்தணராதி மக்கள் தேவர் அனைவர்க்கும் உபகரித்தலால் அன்றோ உயர்வுடையவாயின.

" ஆய சிறப்பி னாற்பெற்ற வன்றே மன்று ணடம்புரியு
நாய னார்க்கு வளர்மதியு நதியு நகுவெண் டலைத்தொடையு
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி யாடி யருளுதற்குத்
தூய திருமஞ் சனமைந்தீ மளிக்கு முரிமைச் சுரபிகடாம் ".

இவ்வுண்மை பற்றி யல்லவா,

" பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. " என்றார் ஆன்றோர்.



உலக மாதாவாகிய உமாதேவியார் வளர்க்கும்படி கட்டளையிட்டருளிய அறங்கள் முப்பத்திரண்டனுள் பசுக்களுக் குணவிட்டுப் பாதுகாத்தலை ஓர் தருமமாக விதித்தது என்னை ?

பசுக்களைக் காத்தலால் அவ்வினம் பெருகும். பெருகவே உழவுத் தொழில் இடையூறின்றி நடைபெற்றோங்கும். அவ்வுழவுத் தொழில் நடைபெற்றோங்கவே உலகின்கண் பற்பல வறங்களும் தடைபடாது நடைபெற்றுறிவரும் என்னும் கருத்தானல்லவா? இக்கருத்தை விளக்கவே கல்வியில் வல்ல கம்பர் திருக்கை வழக்கத்துள்,

" ஊன்காக்குமாவிக் குறுதியுழ வாமதற்கா
ஆன்காப்பே காப்பாக வாளுங்கை " என்றார்.

தவிர, உலகத்தில் ஒவ்வொரு சுபகாரியங்களிலும் சாதாரண மாகச் சகல ஜாதியாரையும் அந்தணர்கள் ஆசீர்வதிக்கும் போது,

" ஸ்ரீயாம் வர்த்திஷ்ய ஆயுஷ்யமாயுதா
ஸோபமானம் மஹீயது
தான்யந் தனம் பசுபுத்திர லாபம்
சதசம் வச்சரம் தீர்க்கமாயு: " என்று

ஆசீர்வதிக்கின்றார்கள். அவ்வா றாசீர்வதிப்பதில் ஒன்றாயுள்ளது பசு. அந்தப் பசு அதற்கு முந்தியுள்ள தான்யத்துக்கும் தன சித்திக்கும் காரணம். ஆகவே பசுக்கள் ஒருவிதத்தாலல்ல, பல ஹேதுக்களாலும் விசேட முடையன. ஆதலால் சகோதர சகோதரிகளே !

ஆனினங்காத்தல், ஆவுரிஞ்சுகல் நாட்டல், ஆசாரியர்க்குப் பசுவைத் தானஞ்செய்தல், குற்றமற்ற இலக்கணங்களையுடைய இடபத்தைத் தேவாலயத் திருப்பணியின் பொருட்டுக் கொடுத்தல், இளைத்த பசுவைக்கண்டு இரங்கித் தாம் வாங்கிவளர்த்தல், இவைகளெல்லாம் பெரும் புண்ணியங்கள் எனச்சிவாகமஞ் செப்பாநிற்கின்ற தாகையால், பசுவை அடிக்காமல் அன்புடனாதரித்து வளர்க்க நம்புகின்றனம். பிழையுளதேல் ஆன்றோர் பொறுக்க.

வா. ர. வேணுகோபால்,
செங்கழனிமேடு, வாயலூர்.

---

## சந்தாதாரர்களுக்கு.

1921ஞு-ம் ஜூன்மீ 30உக்குள் சந்தாத் தொகையை யனுப்புவோர்களுக்கு மட்டுமே பஞ்சாங்கம் இனாமாயனுப்பப் படுமென்று விளம்பரம் செய்திருந்தபடி கடந்தமாதம் அவ்வா றனுப்பியவர்களுக்குமட்டும் பஞ்சாங்கம் அனுப்பினோம்.

சிலர் " அவர்கள்மட்டுந்தானா பணம் கட்டினார்கள்? மற்றபேர் கட்டவில்லையா? ஆகையால் எங்களுக்கு ஏன் பஞ்சாங்கம் அனுப்பவில்லை" என்று மனஸ்தாபமாக எழுதுகிறார்கள். இவர்கள் அறியாமைக்காகவிசனிக்கிறோம்.

ஜூன்மீ 30வுக்குள் பணம் அனுப்புவதால் நமக்கு முன்னடிப் பணம் வந்துசேருவதோடு வி. பியில் சஞ்சிகை யனுப்புவதால் நேரிடும் தொழிற் கஷ்டமும் மற்றப் பிரதிகூலமும் இல்லாமலொழிகின்றன. அவர்களால் நேரிடும் இந்த அநுகூலத்திற்காக அவர்களுக்குப் பஞ்சாங்கம் இனமா யனுப்புகிறோம். ஆதலின் இதில் பாரபட்சமாவது நியாயக் குறைவாவது இல்லையென்று அறியுடையோர்க்கு நன்கு விளங்குமென நம்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## பிரகலாதன்.

(267-ம் பக்கத் தொடர்ச்சி)

பகவான் அருள்மொழிகளை அடியிற்காண்க:—

1. மேன்மை தங்கிய நீதியதிபரவர்களே! வாதியின் வாதத்தைச் செவியுற்றுச் சந்தோஷிக்கிறேன். வாதி உலகேஸ்வரனென்றும், ரக்ஷகனென்றும் சொல்லுவதற்கே அருகரல்லர். ஏழு உலகத்தில் இவர் மூன்றுலகிற்கே அரசனாக இருந்துவந்தார். மற்ற நான்குலகிற்கு இவர் எக்காலத்தும் ராஜாவாக இருந்ததில்லை. இக்காரணத்தால் இவரை உலகேஸ்வரனெனச் சாற்ற வழி யில்லை.

இங்கு நம்முன் தோற்றும் அகண்ட வெட்டாரவெளியி லிருந்து, எத் தோற்றப்பொருளையேனும் இவர் சிருஷ்டிப்பாரேயானால் வாதியை சிருஷ்டி கர்த்தா எனச் செப்பலாம். இவர் சில்லரை யதிபர்களாகிய இந்திரன், ஆதித்தன், சந்திரன், வாயு, அக்னி, வருணன், யமன் முதலானோர் செய்தொழிலை, தன் பராக்கிரமத்தால் அவர்களைத் தன்னிருப்பிடம் சேர்த்து அவர்களைக் கொண்டே தம் இஷ்டம்போல் நடப்பிவித்து வந்திருக்கிறார். இச் செய்கையானது பேராசை பெரு நஷ்டம் என்ற வாக்கை ஒத்திருக்கிறது. அழிந்துபோகும் சரீரத்தை வாதிக்குக் கொடுத்திருந்தும், தான் என்றும் நிலையுடனிருக்கும் சரீரியெனக் கருதியல்லவா தேவர்களை யெல்லாம் பிடித்து தும்சம்செய்து, மூவுலகிற்கு சக்கிரவர்த்தியாக இருந்து வந்திருக்கிறார். ஜீவர்களுக்கும் ஸ்திரமான சரீரத்தைக் கொடுத்தால் பலத்த தேகிகளே உலகில் மீந்து, அற்பஜீவர்களைத் தங்கள் பராக்கிரமத்தால் நசுக்கி வருவார்கள். உலகிலே ஒருவன் ஒரு தேசத்திற்கு அரசனாயிருந்தால் அதோடு திருப்தி அடைகிறானில்லை. பல ராஜாக்களையும் தன்னடிமையாக்கித்தான் ஒரு கடவுளென்ற உன்னத நிலையையடைய யோசிக்கிறான். இத்தகைய ஆளும்ஜாதியாரை ராக்ஷசரென்றே சொல்லவேண்டும். ஏனெனில் அவர்களிடம் நல்ல சித்தம் சற்றேனுமிராது. எப்போதும் வஞ்சகபுத்தியே குடிகொண்டிருக்கும். வாதி மேற்சொன்ன விஷயங்களுக் கெல்லாம் ஈசுவரரென்றே சொல்லலாம்.

நாம் உலகத்தை உற்பத்திசெய்கிறோம்; ரக்ஷிக்கிறோம்; அழிக்கிறோம். எமக்குத்தான் இவ்வதிகாரம் உண்டென்பது உலகமே அறியும். சகல சருதியும் எம்மகிமையைப் பற்றிப் பேசும்; இப்படி யிருக்க ராக்ஷஸகுணத்தை யுடையாரும், நம்மால் சிருஷ்டிக்கப் பட்டவருமாகிய இவ்வாதி தன்னை ரக்ஷகனென்று சொல்லுதல் பொருந்தாது.



எம்மால் உற்பத்திசெய்யப்பட்ட ஜீவன்களில் ஏதாவதொன்று தன் புய பல பராக்கிரமத்தால் பல ஜீவர்களையும் இம்சிக்கும் துஷ்டாத்மா வாகலாம். அக்கொடியோன் இம்சை சகியாத பலஹீனர்கள், தங்களை உபத்திரவிக்காது ரக்ஷிக்கக் கேட்டுக் கொண்டு அவனைத் தங்களுக்குக் காவலனாய் நியமித்துக் கொண்டு அவனுக்கு வரிகொடுக்கலாம். அவர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகள் முதலிய விவகாரங்களைத் தீர்த்துவைக்கும்படி அவனை வேண்டிக் கொள்ளலாம். அவனைக்கடவு ளாகவும் அவர்கள் வணங்கலாம். இக்காரணங்களால் வாதி ஈசுவரனாகமுடியுமா?

இந்தவாதி சுருதி யுக்தி அநுபோகத்திற் கொப்பத் தன்னை உலகேஸ்வரனென்றாவது, ரக்ஷகனென்றாவது ரூபிக்கவில்லை. வாதி ஈசுவரனா யிருந்தால் ரக்ஷகத்தொழிலையும், உலகேஸ்வர பட்டத்தையும், அரசாட்சியையும் பெற தாவாசெய்ய வேண்டிய அவசியமில்லை. வாதி தாமே தம் கோரிக்கையை எவர் தயவுமின்றி நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனதால் முதலாவது நிரூபணம் நமது பக்கம் சாதகமா யிருக்கிறது.

2. நாம் உலகத்தை மிகு ரம்மியமாகவும் ஆச்சரியகரமாகவும் நிர்மாணித்திருக்கிறோம். ஒவ்வொரு தோற்றப்பொருளும் இத்தனை நாள் தான் தோற்ற ரூபமாய் நிகழவேண்டு மென்பது உலகத்தினமைப்பு; எதுவானாலும் அழியும் தன்மையாகவே உற்பத்தி செய்யபடுகிறதேயல்லாமல் என்றும் ஸ்திரமான தோற்றங்களை ஸ்தாபிப்பதில்லை. எந்த ரூபப்பொருளும் அழிந்து பின் வேறு தோற்றப் பொருளாக இயங்குமே யல்லாது ஒரே விதத் தோற்றத்துடன் என்றும் நிலை நிற்க இவ்வுலகம் சிருஷ்டிக்கப்படவில்லை. என்றும் சாசுவதமான ரூபப்பொருள்களாக உற்பத்திசெய்தால் இவ்வுலகம் இரமிக்காது.

மனிதர்களில் இராமனைப்போன்றே கண், காது, மூக்கு முதலிய சகல அவயவங்களுடனும், பால்யம், வாலிபம், வயோதிக மின்றி என்றும் பதினாறு வயதுடனும், குபேரனைப் போலவும், எல்லோரையும் குணத்திலும், செய்கையிலும் ஒரே விதமாகவும், ஸ்தாவரங்களில் எல்லா மரங்களையும் வேம்பாகவும், மிருகங்களில் எல்லாவற்றையும் சிங்கமாகவும் சிருஷ்டித்தால் உலகம் நன்றாயிருக்குமா? உலகம் நவீனத்திற்கு ஆசைப்படுகிறதா? பழைமைக்குக் காதல் கொள்ளுகிறதா? பழையனகழியாவிட்டால் புதியன எங்கு உற்பத்திசெய்து நிற்கச்செய்வது. பழையவைகளை அழித்தல்லவா புதியவைகளைச் சிருஷ்டிக்க வேண்டும்.

வாதி தன் வாதத்தில் நம்மிடத்தில் ஈசுவரத்தன்மை இல்லையென்று சொன்னார். இவரைப்போன்ற அறிவுடையாருக்கு நம் சிருஷ்டியையும்,

நம்மையும் நினைத்தால் கசப்பாகத்தானிருக்கும். மனிதர்களுக்கு ஆயுசு 120 தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நூற்றிருபதாண்டிற்குள் என்றைக்கும் இச்சரீரங்கள் அழியலாம். அததன் கர்மத்திற்கீடாகவே தேகம் ஆயுள் க்ஷேமம் முதலிய யாவும் அமைக்கப்படுகின்றன. வாதி தன் தேகத்தைத் திரும்பக் கேட்பது நடவாததும் சிருஷ்டிக்கிரமத்திற்கு ஒவ்வாததுமான விஷயம். வாதியின் தேகம் கால அளவின்படி அழிவுற்றது.

3, 4. வாதி ஜீவர்களைக்கொடுமையாய் நடத்தவில்லையெனச் சொல்லுகிறார். வாதி திரிலோகங்களையும் தன் சுவாதீனம் செய்து கொண்டு, இந்திரன், ஆதித்தன், சந்திரன், வாயு, அக்கினி, வருணன், யமன் முதலானோர் செய்கிற அதிகாரங்களைத் தானே செய்துகொண்டு, யக்கியங்களிலே அவர்களுக்கான அவிர்ப்பாகங்களைத் தானே கைக்கொண்டும், திரிலோக ராஜ்ஜியாதி பத்தியத்தினாலே அதிக கர்வமுற்றவராய்ப் பொங்கி, கந்தருவர் கீதங்கள் பாட சித்த சாரண பன்னகாதிகள் மிருதங்க கோமுகாதி முதலிய வாத்தியங்களை வாசிக்க, வித்யாதரர் ஜெய ஜெய சத்தங்களினால் துதிக்க, அப்ஸரஸ்திரீகள் நாட்டியங்கள்செய்ய மனதிற்கினிமையான போகங்களை அனுபவித்தும் கொடிய பாதகமாகிய மதுவைக் குடித்தும், தன்னைக் கடவுளாக வணங்கவேண்டு மென்றும் அட்டகாசத்துடன் ராஜ்ஜியபாரம் செய்து வந்தார். இவ்வித அரசனை நாம் அழித்தது நீதியா, அநீதியா?

அகங்காரத்தாலல்லவா, கடவுள் ஒருவர் தனியே இருக்கிறார் என்ற எண்ணமும் இல்லாது போயிற்று. இந்த அயோக்கியர்களாலல்லவா? என்னுமும் கெடுகிறது. "கடவுள் இல்லை. நான் தான் கடவுள்" என்று சொல்லும் மூடனிடம் "நான்" என்ற மமதை எவ்வளவுதூரம் வயிரமேறியிருக்கும். இவ்வாதி சுத்தாத்மாவாய் இருந்தால் தன்னைக் கடவுளென எல்லோரும் வணங்கக் குடிகளை இம்சிப்பானா?

மேலே கண்ட காரணங்களால் வாதி ஒரு கொடுங்கோன் மன்னன் ஆகவே இந்தப் பிரதிவாதிக்குள்ள அதிகாரப்படி வாதியைக் கொன்றிருக்கிறேன். வாதிக்கு எம்மாத்திர பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை.

நீதியதிபரவர்களே நன்றாய் யோசித்துத் தீர்ப்புச் செய்வீர்களென்று என் வாதத்தை இத்தோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

(குறிப்பு.—1-ம் பிரதிவாதியின் நியாயவாதமும், நியாயமுடிவும் அடுத்தாப்போல் தொடர்ந்து வரும்)

எஸ். அயோத்திராம்,
திண்டுக்கல்.

---



## ஓர் மூடபோதனை.

நம் மித்ரு சகோதர சகோதரிகளே!

நேற்று (24-3-22) நாம் சென்னையில் நமது காரியாலயத்தினின்றும் வாசஸ்தலத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில், ஸ்காட்லண்ட் மிஷனைச்சேர்ந்த சுமார் 60 வயதுடைய ஒரு கிருஸ்தவ உபதேசி கையில் ஒரு அடுக்குச் சிறு புத்தகங்களை வைத்துக்கொண்டு புரசபாக்கம் கடைவீதியில் நின்று பிரசங்கமாரி பொழிந்துகொண்டிருந்தார். அவர் பிரசங்கம் செய்துகொண்டே இடையிடையில்,

"அய்யோ! உலகம் தலைகீழாக அடியோடு கவிழ்ந்துவிடப் போகிறது. அப்போது தப்பித்துக் கொள்ள வேண்டுவோர் இப்புத்தகத்திலுள்ள மார்க்கத்தை வாசித்துப் பாருங்கள். இதன் விலை காலணாவே, முந்திக்கொள்ளுங்கள்," என்று சத்தமிட்டுக்கொண்டிருந்தார். அங்குநின்ற ஒருவன் அவரிடம் ஒரு புத்தகம் வாங்கினான். அதை நமக்கறிமுகமான ஒருவன் வாங்கிவந்து நம்மிடம் காட்டி "இது நமக்கு உதவுமா? நான்கூட வாங்கலாமா?" என்று நம்மைக் கேட்டான். அதன்மேல் "இது நம்மவர்க்கு ஒரு இம்மியும் பயனளிக்காது, இதற்களிக்கும் காலணாவை அதோ அந்த முடவனாகிய யாசகனுக்கு அளிப்பாயேல் மிக்க நலம்" என்று கூறிவிட்டு, நாம் சற்று அங்குநிற்க நேர்ந்தது.

அந்த உபதேசி இன்னும் எத்தகைய பெரும் பொய்யைக்கூறித் தம் புத்தகங்களை விற்றாலும் விற்கட்டும். அது அவர் வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் தொழில். ஆனால் அவர் செய்யும் ஆபாசப் பிரசங்கத்தை நம்மவர் செவிகொடுத்துக் கேட்பதே நம்மனதிற்கு வருத்தத்தை யளித்தது. அவர் பிரசங்கத்தின் சாரமாவது:—

"ஆடு, மாடு, கோழி இவற்றைப்புசிப்பது பாபமென்று கூறல் மூடத்தனம். மாட்டில் பாலையும், அதிலிருந் துண்டாகும் தயிர் நெய் முதலியவற்றையும் மட்டும் உண்ணவில்லையா? பால் மாட்டின் இரத்தத்தி லிருந்து தானே உண்டானது. இவற்றை யருந்தும்போது அதே இரத்தத்தாலுண்டான அவற்றின் மாமிசத்தைப் புசித்தால் மட்டும் பாபம் எங்கிருந்து வரும்? ஆண்டவன் இவ்வுலகிலுள்ள யாவற்றையும் மனிதனது சௌகரியங்களுக்காகவே படைத்தார். மநுவைப்படைத்தார் தம்மை வணங்க. மனிதன் தவிர மற்ற செந்துக்களுக்குப் பகுத்தறிவில்லாததால் ஆன்மாவென்பதில்லை........" என்பதே.

இவ்வாறு கூறிக்கொண்டே அப்பிரசங்கி நாம் "புத்தகம் வாங்குவதிற் பயனில்லை" என்று கூறியதைக் கவனித்தார். உடனே நம்மைச் சுட்டிக்காட்டி "அவர் ரொம்பபுத்திசாலி, அவர்மேல் தப்பில்லை. படிப்பில்லாததால் அறிவு விளங்கவில்லை" என்றார். நாம் அவரைநோக்கி "நான் படிக்

காதவனானதால் தாங்கள் ஒரு விஷயம்மட்டும் எனக்கு அறிவிக்கலாம். இப்போது மற்ற செந்துக்களுக்கு ஆன்மா இல்லையென்றீரே, ஆன்மா என்பது என்ன? அது எங்கேயிருக்கிறது? அதின் இலட்சணமென்ன? உமக்குக்கூற அவகாசமின்றேல் உமது பைபில் என்ற புத்தகத்தில் எப்பாகத்திலவ்விஷயம் இருக்கிறது? அதையாவது கூறும்!" என்று வினவினோம்.

பிரசங்கி "உமது கேள்விக்கு நாம் பதில்கூற இங்குவரவில்லை. நான் கூறுவதைக்கேட்கப் பிரியமில்லாவிட்டால் உமது வழிபார்த்துக்கொண்டு போம்" என்றார்.

நேயர்களே! கேள்விகேட்டால் இவர்கள் இப்பாடமே ஒப்பிப்பது வழக்கம். ஆன்ம இலட்சணம் இன்னதென்று அனுபவமாக அறியும் மார்க்கம் இவரிட மிருந்தாலன்றோ இவருக்கது தெரியும். இவர் குருவுக்கே தெரியாதெனின் இவருக் கெப்படித் தெரியும்? ஒன்றைத் தின்பதனால் பாபமுண்டாவதில்லை யென்பதும், ஒரு சீவனுக்கு இம்சையை யுண்டு பண்ணுவதே பாபம் என்பதும், பால் தயிர் நெய்யை நாம் உண்பதால் அவற்றையளிக்கும் சீவன்களுக்கு ஒரு வருத்தமும் உண்டாவதில்லை யென்பதும், ஆகிய இவற்றையறியும் ஆற்றலில்லாத இவர் ஆன்மலட்சணத்தை யெப்படி யறியப்போகிறார்?

நாம் முன் கூறியதுபோல் அவர் ஜீவியத்தொழிலை அவர் வேறுவிதியில்லை யென்று செய்கிறார். இப்போது நாம் கவனிக்க வேண்டியது நம்மவரையே. நம்மவர்கள் இத்தகைய அன்னியமதப் பிரசங்கிகளின் பேச்சைச் செவியேற்கலாகாது. இத்தேகத்தி லிருக்கும்போதே மோக்ஷானந்தத்தை அங்கை நெல்லிபோல் காணக்கூடிய மார்க்கத்தையுடைய நாம், அத்தகைய நமது மதத்தைத் தூஷிக்கும் அன்னியமதப் பிரசங்கங்களைக் கேட்பதே பெரும்பாதகமாகும்; நமது மதத்தையேனும் குருவையேனும், பெற்றோரையேனும், கற்புடையமாது தன் கணவனை யேனும் பிறர் தூஷிப்பதைச் செவியால் கேட்பதே பாதகமென நூல்கள் முறையிடுகின்றன. ஆகையால் சகோதர சகோதரிகளே, அத்தகைய பிரசங்கிகள் பிரசங்கிப்பதைக் கண்டால் எட்டப்போய் விடுங்கள். அவர்கள் பேச்சைச் செவியில் போட்டுக்கொள்ளாதீர்கள். அங்கு நின்று அவர்கள் கூறுவதைக் கேட்டுக்கொண்டு, பிறகு அவர்களைக் கேலி செய்துகொண்டு செல்வதால் உங்கள்காலம் வியர்த்தமாகக் கழிகிறதன்றி வேறில்லை.

ஓம் தத் ஸத்  சீடன்.

---

## இல்லறம்—ஜீவகதி.

(347-வது பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பூமிக்குட் புதைக்கப்பட்ட சரீரம் பலவகையான துன்பங்களை யடையுமென்பது கொண்டு பூமிக்குட் பிரேத சரீரத்தைப் புதைக்கப்படாதென்பது முற்குறித்த நூல்களின் கருத்து. அன்றியும் பூமிக்குட் புதைப்பதனால் உலகத்தில் வசிக்கும் ஜீவவர்க்கங்களுக்கு மிகுந்த துன்பம் நேரிடும். எவ்வாறென்னில், பூமிக்குட் புதைக்கப்பட்ட பிரேத சரீரம் நாளடைவிலழுகி அதிலிருந்து துர்க்கந்த முண்டாகும். பிணநாற்ற மெத்தகைத்தென்பது யாவரு முணர்ந்ததே. அந் நாற்றத்தைச் சுவாசித்த ஜீவர்கள் பலவகையான கொடிய நோய்களாற் பீடிக்கப்படுவார்கள். சில சமயம் மரணாபாயமான நோயுண்டாவதும் உண்டு. பூமிக்குள் அழுகுவதினால் உண்டாகும் நாற்றம் ஒரு சமயம் அறியப்படாம லிருந்தாலும் மழைபெய்தால் அப்பொழுது அவசியம் வெளிப்படும். பூமிக்குள் ஊறின தண்ணீரைச் சூரியகிரணங்கள் மேலிழுத்துப் பரவச்செய்யும். வாயுமுற்றும் விஷவாயுவாய் விடும். இதனாலுண்டாகும் விஷநோய் பிராணபத்தை யுண்டாக்குந் தன்மையுடையதே. இக்காலத்தில் சர்வ சாதாரணமா யுண்டாகிற விஷபேதி முதலிய பல கொடிய வியாதிகளுக்கு இதுவே காரணமென்பது இந்துவைத்திய மஹான்களுடைய அபிப்பிராயம். ஐம்பது வருஷங்களுக்கு முன் இந்த விஷபேதி யென்பது அதிகமில்லை. மார்கழி முதலிய பனி மாதங்களில் சில இடங்களில் அரிதா யுண்டாகும். அப்படி யுண்டானாலும், அற்ப ஔஷதங்களால் நிவிர்த்தியாகும். மரணாபாயம் நேரிடுவது வெகு சொற்பம். அதன்பின் நாள் அடைவில் அது விருத்தியாய் இப்பொழுது சாதாரண வியாதியாய்க் கருதப்பட்டுப் போயிற்று. இப்பொழுது பிரேதங்களதிகமாய்ப் புதைக்கப்படுகின்றன வாதலால் அது விருத்தியாய் விட்டதென்றே பெரியோர் கருதுகிறார்கள். ஆதலாற் புதைப்பதனால் தீமையே ஒழிய நன்மையில்லை யென்பதாம்.



அக்கினியால் தகனம் செய்வதில் தீமைகள் நேரிடா. பிரேத சரீரம் சாம்பலாய் விடுவதனால், அசுத்த முண்டாவதற்கு இடமில்லை. இனிவிஷயத்தைச் சிறிது கவனிப்போம். சரீரம் தகிக்கப்படுவதனால் சரீரோற்பத்திக்குக் காரணமாயுள்ள ஜீவஜடசக்தி யணுக்கள் களங்கமற்று மேலேகிளம்பும். அவை பரமாணுக்களாய் ஆகாயத்தில் பாவிச் சந்திரமண்டலத்தை யடையும். அர்த்தச்சந்திரமண்டலம் உப்புமண்ணும் நீரும் கலந்த அண்டமாமென்பது வேதத்தின் கருத்து. சூரியவெப்பமும் அதில் தாக்கும். உப்பு, நீர், வெப்பம், இம்மூன்றிலும் அவ்வணுக்கள் பரிபாகப்பட்டு மறுபிறவி யெடுக்கும் ஆன்மாக்களின் சரீரகாரண பரமாணுக்களா யிருக்கும். இந்தப் பிரேதத்தின் அணுக்கள்போ யடைவதினாலே சந்திரமண்டலத்துக்குப் பிதிர்லோக மென்று பெயர்கூறும் உண்மைநூல்கள். பிருதிவி சம்பந்தமான அண்டங்களில் அளவில்லாத சந்திரர்களுண் டென்பதும் அவ்வாறே யளவற்ற சூரியர்களுண் டென்பதும் நூல் கருத்தென்பதை யீண்டு ஊகித்துணர்க. இந்தப் பூவுலகத்தி லிருந்து எட்டுச் சூரியர்களைக் காணலாமென்பது வேதத்தின் சம்மதம். யோக சாட்சியால் அதனுண்மையை

உணர்ந்த நமது முன்னோர்களும் வெளியிட் டிருக்கிறார்கள். ஆதலால் அளவற்ற வான்மாக்கள் மறுபிறப்பை யடைவதற்குத் தடையேது மிராது என்று கொள்க.

இதுகாறுங் கூறியது நமது முன்னோர்கள் ஏற்படுத்தி யிருக்கும் சில கன்மங்களின் உண்மையை விளக்குதற்கேயாம். அதுதான் பிதிர் கிருத்தியம் என்னப்படும் சிறந்த கிரியையாம். இதரத் தேசத்தாரால் ஒருபோதுங் கண்டறியப்பட் டிராததும் கண்டறியக் கூடாததுமாகிய சிறந்த கிரியையாம். இதனையே பிதிர் யக்ஞமென்று நூல்கள் புகழ்ந்துகூறும். இந்தப் பிதிர்யக்ஞத்தை உத்தேசித்தே சற்புத்திரர்களைப் பெறவேண்டுமென்று நூல்கள் விதித்தன. இதனாலேயே "புத்" என்னும் நரகத்தினின்றும் காப்பாற்றுவதற்காகச் சற்புத்திரனை யடையவேண்டு மென்றும், புத்திரனில்லாதவர்க்குச் சொர்க்காதி புவனங்கள் கிடையா வென்றும் கூறின. நரகத்தில் வீழாதபடி காப்பாற்றக்கூடிய சற்புத்திரனைப் பெறுவதற்காகவே தாய்தகப்பனாகிய இருவம்சத்திலும் பழிபாவ மின்றிக் குற்றமற்று விளங்கும் சந்ததியிற் பிறந்த பெண்ணை முயற்சித்துத் தேடி விவாகம் செய்து கொள்ளவேண்டு மென்றும், அவ்விதமான வரனைத்தேடிப் பெண்ணுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்றும் விதித்தன. பிதிர்யக்ஞம் செய்வதற்குச் சொந்தப் புத்திரனே யுரியவன். புத்திரனில்லாத பட்சத்தில் பேரன், அண்ணன், தம்பியிவர்களும் உரியவராவார்கள். அவர்களுமில்லாத பட்சத்தில் நெருங்கின தாயாதிகளில் யாராவது செய்தற் குரியராவார். மற்றையரெல்லாம் அதமாதம பட்சமேயாம். பிதிர்யக்ஞமாவது மாதா பிதாக்களுடைய பிரேத சரீரத்தைத் தகித்து அதிலுள்ள ஜீவசக்தியையும், மரணத்தறுவாயில் சிதறுண்டிருக்கும் ஜீவசக்தியையும் ஒன்றுசேர்த்து அது செல்லுதற்குரிய இடத்துக்குச் செலுத்துவதும், கெட்டுப்போன சரீரத்தை விட்டுச் சூட்சும சரீரத்தோடு வெளிப்பட்ட ஆன்மாவை யது செல்லுதற்குரிய இடத்துக்குச் செல்லச் செய்வதுமாகிய ஓர் கிரியையாம். ஜீவான்மா செல்லவேண்டிய இடத்துக்குச் சென்ற பின்னும் அது நரகமுதலிய இழிந்த இடங்களாயின் அதினின்றும் விடுவிப்பதுமாம். இதனைச் சிறிதாராய்வோம்.

சூட்சுமத்தோடு செல்லும் ஜீவான்மா பாபமற்ற நிர்மலமான தாயின் உடனே சொர்க்காதி புண்ணிய பதவிகளை யடைந்துவிடும் என்றும் பாபாத்மாக்களாயின் அதோகதியாகிய சந்திரமார்க்கத்தில் சிக்குண்டு ஏறுவது மிறங்குவதுமாக உழன்று பாமாவதியாகிய ஒரு வருடத்துக்குள் குறித்த விடம் போய்ச் சேருமென்றும் முன்னரே கூறினோம். இவற்றுள் இரண்டாவது கூறப்பட்டதற்கும், பூமியிற் சிதறுண்ட ஜீவசக்திக்கும் இக்கிரியை மிகச் சிறந்ததாம். பூமியிற் சிதறுண்டது எங்ஙனம் நிற்குமெனில் இறந்தவன் வியாதியாய்ப் படுத்துக்கொண் டிருந்த விடத்திலும், இறந்த விடத்திலும், பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போனவிடத்திலும், அதைக் கீழே யிறக்கிவைத்த விடங்களிலும், தகனஞ்செய்த இடத்திலும் சிதறிக் கிடக்கும். இவற்றையெல்லாம் ஒன்று சேர்ப்பதற்குத்தான் தகனநாள் முதல் பனிரண்டுநாள் கர்மம் செய்யப் படுகின்றது.



இனத்தையினம் பற்றும் என்பது இயல்பு. ஆதலால் வீட்டிலும் தண்ணீர்க்கரையிலும் ஒரு கல்லைப் புதைத்து அதில் தர்ப்பணம் செய்யப்படும். சொந்தப் புத்திரர்களுடைய சரீர சம்பந்தமாகிய நீரில் சரீரசக்தி கலந்திருக்கும். சரீரசக்தி வெளிப்படுதற்காகவே தர்ப்பையால் செய்த பவித்திரமும், எள்ளும் கலக்கித் தர்ப்பணம் செய்யப்படுகின்றது. எள்ளும் தர்ப்பையும் சரீரத்திலுள்ள அசுத்த அணுக்களை யுடனே வெளிப்படுத்தும் வலிமையுடையன. இதனாலேதான் கட்டி முதலானவற்றுக்கு எள்ளை வதக்கிவைத்துக் கட்டவும் கர்ப்பசூதகம் சரியாய் வெளிப்படுவதற்குத் தருப்பையைக் கஷாயம்வைத்துக் கொடுக்கவும் வைத்தியநூல்கள் விதித்தன. தர்ப்பை அதிகமான கடுங்காரமுடையது ஆதலால் கன்றையீன்ற எருமை முதலியவற்றுக்கு நாணற்புல்லைப் போட விதித்திருக்கின்றது வைத்தியநூல். இவ்விரண்டும் கூடிக் கையில்சேர்ந்து தண்ணீருடன் கலக்கச் சரீரத்திலுள்ள பழைய அணுக்கள் அவற்றுடன் கூடி வெளிப்படும். அந்த நீரைப் புதைத்திருக்கும் கல்லில் விடுதலால் அவ்வணுக்கள் அதனுடன் கலந்து கூடி நிற்கும். இங்ஙனம் புத்திரனுடைய அம்சமாகிய அணுக்கள் கூடின அவ்விடத்தில் இறந்தவன் சரீரத்தினின்றும் சிதறுண்டிருக்கும் அணுக்கள் வந்துகூடும். நாளடைவில் எல்லாங் கூடிவிடும். பன்னிரண்டு நாட்களுக்குள் கூடிவிடும். அதனாலே தான் இறந்தவனைப் பிதிர்க்களுடன் கூட்டுவதாகிய சபிண்டீகரணம் என்னும் கிரியை செய்யப்படுகின்றது. ஒன்றாய்ச்சேரவே பிதிர்லோகம்போய்ச் சேர்ந்துவிடும். பிதிர்லோகமாவது சந்திரலோகமேயாம். இங்ஙனம் கூறியது சரீரத்துக்குக் காரணமாயிருந்த சிற்சடசக்திக ளடங்கிய அணுக்களுக்கேயாம். ஆன்மாவுக்கல்ல. சந்திரலோகத்தில் இவை பரிபாகப்பட்டு மறுபிறப்புக்குக் காரணமாய்நிற்கும். பூலோகத்தில் மரித்தவன் சந்ததியாரால் செய்யப்படும் பிதிர்க்கிருத்தியங்களில் நீர் முதலிய பிதிர்லோகத்தை யடையும். ஆவியாய்ச் சென்றடையும். இனத்தோடு இனம்கூடும் இயற்கையால் பிதிர்க்களுடைய சரீரத்தையே சென்று பற்றும். அதுவும் இதனை யெளிதிற் கிரகித்துக் கொள்ளும். இந்தத்தர்ப்பணாதிகளும் சிராத்தமும் நித்தியமும் செய்யவேண்டியதே. அது முடியாமைபற்றி வருஷத்துக் கொருதரம் வரும் அந்தத் திதியிலும், அமாவாசையிலும் அவசியம் செய்து தீரவேண்டும். அமாவாசையிலும் சிராத்தம் செய்வது முடியாத விஷயமாதலால் அமாவாசையில் தர்ப்பணமே விதிக்கப்பட்டது. அமாவாசை வெகு சிறந்தநாள். ஏனெனில் சூரியனுக்கும் பூமிக்கும் நடுமத்தியில் சந்திரமண்டலம் நிற்கும். அவ்வாறு

சூரியனும் சந்திரனும் கூடுவதனையே அமாவாசை யென்பர். பூமிக்கும் சந்திரமண்டலத்துக்கு மிடையில் யாதொரு தடையு மில்லாமையால் நாம் செய்யும் தர்ப்பண நீர் ஆவியாய்ச் சூரியனால் மேலே யிழுக்கப்பட்டுச் சந்திர மண்டலத்தை யுடனே அடையும். அந்நீரோடுகலந்து வெளிப்படும் அணுக்களைப் பிதிர் சரீரம் உடனே கிராகியம் பண்ணிக் கொள்ளும்.

(இன்னும் வரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## இந்தியாவில் பிறமதப் பிரசாரம்.

24-3-22. சுதேசமித்திரன் பத்திரிகையில் ராய்ட்டர் தந்திப்பத்தியில் "இந்தியாவில் கிறிஸ்துவப் பிரசாரம்" என்ற சங்கதியை நேயர்கள் வாசித்திருக்கலாம். மாஜி கவர்னர்ஜெனரலாயுள்ள லார்டு கர்ஸன் செம்ஸ்போர்டு பிரபுக்கள் முதலாயினோர் கிறிஸ்தவ மதவிஷயமாக அக்கரை மேலிட்டு 6—ஸ்திரீகள் உள்பட 25—கிறிஸ்தவ பாதிரிகளை இந்தியாவுக்கு அனுப்பி நம் ஹிந்துக்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்துக் கொள்வதற்கு பிரசாரம் செய்ய அனுப்பப் போகிறார்கள். ஆறாயிரம் மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள அவர்கள் தங்கள் மதத்தை இந்தியாவில் பரவச்செய்ய வேண்டுமென்று பெரும் முயற்சிகள் செய்யும் போது, நாம் கண்மூடித்தனமாயிருக்கலாமா? நாம் இதுவரையில் நம்மத விஷயத்தில் மிகவும் அசிரத்தையாகவும் ஊக்கமில்லாமலும் இருந்ததின் பயனாக நம்சகோதரர்களில் அநேகம் பெயர்கள் நம்மத உண்மையை அறியாமல் இதர மதத்தில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். ஆனால் இந்தியாவின் மற்ற பாகங்களாகிய பம்பாய் பஞ்சாப் முதலான விடங்களில் ஹிந்து மிஷனரிசொஸைடி என்றும் ஆரிய சமாஜம் என்றும் சங்கங்கள் ஸ்தாபித்து தெரியாமல்போன நம் சகோதரர்களை பிராயச்சித்தம் செய்து திரும்பவும் நம் மதத்தில் சேர்த்து விடுகிறார்கள். இதன் காரணமாக அவ்விடம் அதிகமாக நம் சகோதரர்கள் இதர மதங்களில் சேருவதில்லை. நம் தென் இந்தியாவில் நம் மதத்திலிருந்து அறியாமையால் போனவர்களைத் திருப்பிச் சேர்த்துக்கொள்ளும் படியான ஏற்பாடு ஒன்றையும் நாம் செய்யவில்லை. அதனால்தான் நம்முடைய தென் இந்தியாவில் நம் சகோதரர்களில் பலர் இதரமதத்தில் சேர்ந்து விட்டார்கள். இவர்கள் அனைவரும் நம்முடைய மதத்தின் உண்மையை தெரியாமலே கிறிஸ்தவமத பாதிரிகளின் பிரசங்கமாகிய வலையில் சிக்குண்டு அகப்பட்டுப்போனார்கள். நம்முடைய மதத்திற்கு அதிபதியாக உள்ளவர்கள், கிறிஸ்துவ பாதிரிகள் செய்வதுபோல் பல இடங்களில் பள்ளிக்கூடங்களும் காலேஜுகளும் ஏற்பாடு செய்யவேண்டும், நம்மதத்தின் உண்மையை பாமரஜனங்கள் அறியும் பொருட்டு ஊர் ஊராய்ச்சென்று பிரசங்கம் செய்வதற்கு பிரசாரகர்களை ஏற்பாடுசெய்யவேண்டும். மதவிஷயமாகப் போதனை



செய்யும்படி கிராமப்பள்ளிகளுக்கும் நகரப் பள்ளிக்கூடங்களுக்கும் மடத்தின் ஐவேஜிலிருந்து கிரான்டு கொடுக்க வேண்டும். அறியாமையினால் இதர மதத்தில் சேர்ந்தவர்களை, பிராயச்சித்தம் செய்து திரும்ப நம் மதத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இப்படி நம்முன்னோர்கள், தவறிப்போய் மற்ற மதங்களில் சேர்ந்து இருந்தவர்களை மீண்டும் சுயமதத்தில் சேர்த்திருக்கிறார்கள். அப்படி நாம் ஏன் செய்யக்கூடாது?

முன்னோர்களால் தருமத்திற்கு என்றும் மடத்துக்கென்றும் வைக்கப்பட்ட சொத்துக்கள் அவைகளின் பொருட்டுச் செலவு செய்யப்படாமல் வீண் விவகாரங்களிலும் வாண வேடிக்கை சதிர்க்கச்சேரியிலும் செலவழிக்கப்படுகின்றன. இது வரையிலும் போனது போகட்டும். இனிமேலாவது மடாதிபதிகள் விழித்துக்கொண்டு தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்வார்களென்று நம்புகிறேன் என்று ஸ்ரீமான் ரகுபதி எழுதுகிறார்.

(சு—மி.)

குறிப்பு:—ஹிந்து பத்திரிகையில் வெளிவந்த மேற்படி விஷய மன்னியில் கடந்த மார்ச்சு மாதம் 31உ வெளிவந்த "நவசக்தி" பத்திரிகையில் "கிருஸ்துவுக்கா" என்ற தலையங்கத்தின்கீழ் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"இந்திய விரோதிகளாகிய லார்ட் கர்சன், லார்ட் செம்ஸ்பர்ட், லார்ட்க்ருவர் ஆர்தர்லாலி முதலியோர் கைச்சாத்திட்டு ஒரு விண்ணப்பப் பத்திரம் வெளியிட்டுள்ளார். அதில் அவர்கள் இந்தியாவில் கிறிஸ்துவ மதப்பிரசாரஞ் செய்யும் ஆங்கிலப் பாதிரிமார்களுக்குத் துணைசெய்யும் பொருட்டு ஐந்து பெண்மணிகளும், 25 பாதிரிமார்களும் அனுப்பப்பட வேண்டுமென்றும், அவர்கள் செலவுக்கு ஐயாயிரம் பவுன் தேவையென்றும், அத்தொகையைப் பொது ஜனங்கள் உதவவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். * * *"

ஹிந்து நேயர்களே! இதனால் அன்னிய மதத்தவர்களாகிய கிருஸ்துவர் நமது மதத்தையழித்து நம்மை யெல்லாம் கிருஸ்துவராக்கப் பெரிய பிரயத்தனம் செய்கிறார்களென்பது நன்கு விளங்கும். என்று மழியாத சத்தியத்தையே அஸ்திவாரமாகவுடைய நமது மதத்தில் கூறப்பட்ட மோக்ஷ நிலை சரியான தல்லவென்று நிரூபிக்கவாவது, நமது மதநூல்களில் கூறியுள்ளது போல் இத்தேகத்தி லிருக்கும்போதே மோக்ஷானந்த நிலையைப் பிரத்தியட்சமாய் அனுபவிக்கத்தக்க மார்க்கம் தங்கள் மதநூலில் கூறியிருப்பதாகக் காட்டவாவது இவர்களால் முடியாதென்பது தெரிந்த விஷயம்.

அவ்வாறு இவர்கள் நிரூபித்து நம்மவரைத் தங்கள் மதத்திற்கு வரும்படி செய்வதாயின் நாம் அதற்காக அஞ்சவேண்டிய அவசியமில்லை. இவர்கள் பண விரையம்செய்து, தந்திரம், நயவஞ்சகம், சூது முதலியவைகளால் நம்மவர்களில் பாமரர்களாக உள்ளவர்களை மயக்கித் தங்கள் மதத்திற்கு

இழுத்துக் கொள்கிறார்கள். இது சத்தியம். மதத்தின் பூரணத்வமும் சத்தியமும் ஒரு விஷயம், மனிதருடைய மன சுபாவம் வேறொரு விஷயம். உலக சம்பந்தமான ஆசைகளால் மயக்கப்பட்ட ஒருவன் தன் ஜாதி உயர்வானதென் றறிந்திருந்தும் அந்த ஆசையால் தூண்டப்பட்டு அதற்காக மிகத் தாழ்ந்த ஜாதியில் போய் விழுந்து விடுகிறான்.

அதுபோன்றே நம்மவரில் பாமரராயுள்ளோர் வெளிப்பகட்டான விஷயங்களாலும், ஆசை வார்த்தைகளாலும் மயக்கப்பட்டுத் தங்கள் முன்னோரது உத்தம மார்க்கத்தைக் கைவிட்டுப் பெரும்பாதகத்துக் குள்ளாகிறார்கள்.

இதோடு இவ்விஷயத்தில் நாம் இன்னும் கவலையற்றிருப்போமாயின் இதனால் பெருங் கெடுதிக்குள்ளாவோம். நாம் ஒரு ஜாதியா ரென்பதும், ஒரு மதத்தினர் என்பதும், ஒரு தேசத்தவர் என்பதும் அடியோடு போய் விடும். அந்தோ! அத்தகைய நிலைமையை யடைந்து நாங்களும் மனிதரென்று உயிர்வாழ்வதிலும், மிருக ஜன்மம் எத்துணையோ உயர்ந்ததன்றோ! ஒரு திருட்டாந்தம் மட்டும் கூறி, விரிவஞ்சி இச்சமயம் இதோடு இதை நிறுத்துவாம்.

இப்போது இதுகாறும் நமது மதத்தைவிட்டுக் கிருஸ்து மதம் புகுந்த நமது சகோதர சகோதரிகள் நம்மோடு எத்தகைய சம்பந்தமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதைச் சிந்திப்போம். சுதேசக் கிருஸ்தவர்களில் அநேகர் வெள்ளாழர் முதலிய ஜாதி ஹிந்துக்களாக விருந்து கிருஸ்தவர்களானவர்களே. ஆயினும் முதலில் தீண்டாதவர்களாகக் கருதப்பட்ட தாழ்ந்த ஜாதியாரே கிருஸ்தவ மதத்தில் போய்ச் சேர்ந்தவர்களாதலாலும், இப்போதும் சுதேச கிருஸ்தவர்களில் பெரும்பாலார் அவர்களே யாதலாலும், அம்மதத்தில் ஜாதிபேதமில்லை யென்ற கொள்கையாலும், ஹிந்துக்கள் சாதாரணமாய் கிருஸ்தவர்கள் என்றால் தாழ்ந்த ஜாதியார் என்று கருதுகிறார்கள்.

இதோடு கிருஸ்தவப் பாதிரிமார் மதவிஷயத்தில் மட்டும் இவர்களை யடிமைகளாக்கிக்கொண் டிருக்கவில்லை; இலௌகிக விஷயங்களிலும் அடிமைகளாகவே யாக்கி வைத்திருக்கிறார்கள். அப்பாதிரிமார்கள் வாயால் மட்டும் "உங்களிடம் வித்தியாசம் பாராட்டமாட்டோம்" என்று கூறுகிறார்களே யன்றி வித்தியாச மென்னமோ அனுபவத்தில் பூரணமாக விருக்கிறது. சமத்துவம் ஒருகாலு மில்லை. ஆன்மார்த்த விஷயத்திலேயே வித்தியாச மிருக்கிறதெனின் மற்றவற்றில் கூறவும் வேண்டுமோ? எப்படியெனின், உயர்ந்த வகுப்புக் குருப்பட்டம் இந்தியர்க் களிக்கப்படுவதில்லை.

இது போகட்டும், இதனால் இன்னொரு பெருந் தீங்குளது. அதாவது, இவர்கள் தங்கள் தாய் நாட்டிற்கே விரோதிகளாகக்கூடிய நிலைமையி லிருக்கிறார்கள். இவர்கள் அன்னியமதத்தில் புகுந்தாலும் இந்தியர்களே யன்றோ? தாய்நாட்டின் க்ஷேமம் உயர்வடையினும் தாழ்வடையினும் அது இவர்களையும் பாதிக்குமன்றோ? அப்படி யிருக்கத் தாய் நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமான எந்த விஷயத்திலும் இவர்களைத் தலையிட வொட்டாமல் பாதிரிமார்கள் தடுத்து அடக்கி வைத்திருக்கிறார்கள். அந்தோ! இவர்களெல்லாம் தங்களுக்குத் தாய் நாடென்ற ஒன்று இருக்கிறதென்ற உணர்ச்சியையே யிழந்தவர்க ளாகிறார்கள்.



இதனால் நண்பர்களே! எவ்வளவு பேர் இந்த அன்னிய மதத்தில் போய்ச் சேருகிறார்களோ அவ்வளவு பேரும் தாய் நாட்டிற்கு அன்னியரே ஆகிறார்கள். அவ்வளவுக்கவ்வளவு தாய்நாட்டின் முன்னேற்றத்திற் குழைப்போர்தொகை குறைந்துகொண்டே போம். இந்த உண்மையான அனுபவத்தோடு, இராஜ தந்திரிகளும், நம் தாய்நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்க ஆவல் கொண்டுள்ளோருமாகிய மேற்கண்ட லார்ட் கர்ஸன் முதலியவர்கள் இந்தியாவில் கிருஸ்து மதத்தைப் பரவச்செய்ய எடுத்துக்கொள்ளும் முயற்சியை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்கள் ஏன் அப்படிச் செய்ய முயல்கிறார்கள் என்பது நன்கு விளங்கும். இந்த உளவே யுண்மை. அதாவது "ஹிந்துக்களில் பெரும்பாலாரை யெந்த விதத்திலாவது கிருஸ்தவ ராக்கிவிட்டால் இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோர் அவ்வளவுக் கவ்வளவு குறைந்துவிடுவார்கள்" என்பதே.

அவ்வளவேயன்றி 'ஆடு நனைகிறதென்று ஓநாய் அழாது'. மேலும் "ஹிந்துக்களுக்கு ஆன்மார்த்த விஷயம் அந்நியரால் போதிக்கப்பட வேண்டியது அவசியம், அவர்களிடம் மோக்ஷமார்க்க மில்லை" என்று கருத அப்பிரபுக்கள் மூடர்களல்ல.

நண்பர்களே! நம்மவர்கள் கிருஸ்துமத போதகர்களின் மயக்கில் சிக்காவண்ணம் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து தடுக்கவேண்டியது எவ்வளவு அவசியமான காரியமென்ற உண்மை யிப்போது யாவர்க்கும் நன்கு விளங்கும் என்று நம்புகிறோம். இப்போது மலையாளக் குழப்பத்தில் பலவந்தமாக மகம்மதிய மதத்தில் சேர்க்கப்பட்ட ஹிந்துக்களை யெல்லாம் சுலபமான வழியில் பிராயச் சித்தம் செய்து மறுபடி நமது மதத்தில் சேர்த்துகொள்ளலாமென்று மதாசாரியர்கள் தீர்மானித்து அப்படியே யிப்போது சேர்த்து வருகிறார்கள். இவ்வாறே கிருஸ்து மதத்தில் சேர்ந்த நம்மவரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மதத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமையோடு தாய்நாட்டின் க்ஷேமத்தைப் பாதுகாக்கவேண்டிய கடமையும் இதில் ஒன்று சேர்ந்திருப்பதால் மதபக்தியும் தேசபக்தியுமுடைய அறிவாளிகள் இதைப்பற்றிச் சிரத்தை யெடுத்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறோம். பரம்பொருள் அருள் புரிவதாக.

பத்திரிகாசிரியர்.

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(358-ம் பக்கத் தொடர்ச்சி.)

சாமிநாதன் செய்யும் உபசாரத்தால் யாவரும் இஷ்டப்படி குடிக்கத் துணிந்தார்கள். குரு உறங்கும் நிலைமைக்கு வந்துவிட்டார். அச்சமயம் மற்ற பேரைவிடச் சற்று நிதானத்திலிருந்த கள்ளத் தலைவனாகிய ஜக்கன் சாமிநாதனை நோக்கி,

"என் நேரமாகிறதே; விவகாரத்தை முடித்துவிடுவதுதானே? என் ஆலசியம்?" என்றான்.

இதைக் கேட்டதே சாமிநாதனுக்குச் சற்று உணர்வுவந்து இரங்கநாதன் பெண்ணை யழைத்துவரப் போன சங்கதி நினைவிற்கு வந்தது. அதன்மேல் அவன் ஆத்திரத்தோடு "இரங்கநாதன் பெண்ணை யழைத்துவரப் போய் இந்நேரமாயிற்றே. இன்னும் என்ன செய்கிறான்? யாராவது ஒருவர் போய் என்ன சங்கதி யென்று பார்த்து வருவது நலமல்லவா? ஜக்கா! நீ தயவுசெய்து போய் இரங்கநாதன் இந்நேரம் என்ன செய்கிறானென்று பார்த்துவரக் கூடாதா?" என்றான்.

ஜக்கன் "ஆம் இந்நேரம் ஆலசியமேன்? இதோ பார்த்து வருகிறேன்" என்று போகப் புறப்பட்டான்.

அச்சமயம் கோபமான சத்தத்தோடு இரங்கநாதனே அறைக்குள் வந்தான். அவனுடைய ஆத்திரத்தையும் கோபத்தையும் கலவரத்தையும் கண்டதே யாவரும் கலவரமும் பிரமையும் அடைந்து ஒருவரைப் பார்த்து ஒருவர் பேயைக் கண்டவர்கள்போல் மிரள மிரள விழித்தார்கள். அதற்குள் இரங்கநாதன் மிக்க மிரட்சியும், திகிலும், கோபமும், துயரமும் நிறைந்த முகத்தோடு,

"அய்யோ! மறுபடி அப்பெண்ணை யாரோ கொண்டுபோய் விட்டார்கள். எப்படியோ கொண்டுபோய் விட்டார்கள்" என்றான்.

## 12-வது அத்தியாயம்.

பெண்ணைக் காணோமென்றதே அக்கள்ளர் முகமும் மனமும் மாறிய விதம் இத்தகையதெனக் கூறமுடியாது. அதிலும் சாமிநாதனுக்கோ வெறிமயமாய்ப் போய்விட்டது. பற்களைக் கடித்துக்கொண்டு,பேசவும் நாவெழாது நாற்காலிமேல் சாய்ந்துவிட்டான். இவர்கள் இந்த நிலைமையிலேயே யிருக்கட்டும். நமது அம்பலவாணனும் ஆனந்தஸிங்கும் சந்தித்தது எப்படி முடிந்தது பார்ப்போம்.

ஆனந்தஸிங்கைக் கண்டதே அம்பலவாணனுக் குண்டான ஆச்சரியம் சொல்லமுடியாது. அதோடு சந்தோஷமும் உண்டாயிற்று. ஆனந்தஸிங்



குக்கோ, அவனுக்கும் அப்படியே மிக்க வியப்பாயிற்று. அம்பலவாணன் சிறைச்சாலையி லிருக்கிறான் என்று அவனுக்குத் தெரியும். இப்போது அவனை அந்த அர்த்த இராத்திரியில் அங்கு சந்திக்கவே அவன் எப்படிச் சிறைச்சாலையை விட்டு வெளிவந்தா னென்பதும் அதிலும் அந்நேரத்தில் அங்கேனிருக்கிறா னென்பதும் சற்றேனும் விளங்கவில்லை.

ஆனந்தஸிங் ஸ்பெஷல் வண்டியிலேறி அரசஞ்சாலைத் திருப்பத்திற்குச் சென்று சாமிநாதன் வண்டியி லிருந்தபடி விட்டெறிந்த தபால்பை யெங்கு விழுந்திருக்குமோ அந்த விடத்தைப் பார்வையிட்டபோது எல்லா விஷயமும் பிரத்தியட்சமாய் விளங்கிவிட்டது. அதாவது, சாமிநாதன் இரங்கநாதன் இருவரும் தவிர தபால் கொள்ளையில் வேறு மூன்று கள்ளர் இவர்களோடு கூட்டாளிகளா யிருக்கிறார்க ளென்றும் தெரிந்துகொண்டான். அதன்பின் ஆனந்தஸிங் உடனே போலீஸ் அதிகாரியிடம் சென்று இராத்திரிக்கு எனக்குச் சில ஆட்கள் வேண்டும் என்று கேட்டு அனுமதி பெற்றுக் கொண்டான்.

இப்போது தன்னிடம் அகப்பட்டிருக்கும் போதுமான உளவுகளுக்கு உடனே வாரன்ட் பெற்றுக்கொண்டு சாமிநாதன் இரங்கநாதன் இருவர்களையும் அவன் தட்சணம் கைதுசெய்துவிடலாம். அந்த யோசனை யவனுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் அரசஞ்சாலையில் பார்த்தவரையில், அவர்களோடு வேறு ஆசாமிகளும் சேர்ந்து இருக்கிறார்கள் என்று ஆனந்தஸிங் மனதிற்குச் சந்தேகமறத் தெரிந்துவிட்டது. ஆகையால் அவர்களையும் சேர்த்து அக்கூட்டம் முழுமையும் ஒரே மொத்தமாக ஏககாலத்தில் பிடித்துவிடவேண்டும். இன்றேல் இருவரை மட்டும் பிடித்ததே மற்ற பட்சிகள் கைக்குச் சிக்காமல் பறந்து போய்விடும் என்பது அவன் யோசனை.

மேலும் கள்ளர் பழக்க வழக்கங்கள் யாவும் அவன் நன்றா யறிவான். ஆகையால் நேற்றிரவு கொள்ளை யடித்தவர்கள் அக்கொள்ளைப் பொருளை இவ்வளவென்று கணக்கிடவும் அதைப் பொதுவிடத்தில் சேர்க்கவும் பிறகு நடக்கவேண்டிய யோசனையைப்பற்றிப் பேசவும் இன்றிரவு எங்காவது யாவரும் கூடுவார்கள். இச்சமயம் வரையில் தன் ஒற்றரால் இரங்கநாதனும் மற்றவர்களும் சாமிநாதன் வீட்டிலேயே இருக்கிறார்கள் என்று தனக்குத் தெரியும். அதோடு காலமும் இருட்டு காலமா யிருக்கிறது. ஆகையால் இன்றிரவு சாமிநாதன் வீட்டில்தான் இவர்கள் கும்பு கூடுவார்கள்; ஆதலால் அங்கு ஆட்களோடு போய்த் தோட்டத்தில் பதுங்கியிருந்து வெளியிலிருக்கும் மற்றக் கள்ளர், மூவரோ நால்வரோ அவர்கள் வந்து வீட்டிற்குள் நுழைந்ததே பாய்ந்துசென்று யாவரையும், ஏககாலத்தில் யாவரையும் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

அந்தப்படியே ஆனந்தஸிங் இரவு முன்னேரத்திலேயே தன் ஆட்களை யழைத்துக்கொண்டு சாமிநாதன் வீட்டைச் சூழ்ந்துள்ள தோட்டத்தில்

ஆட்களைத் தக்க விடங்களில் பதுங்கி யிருக்கச் செய்து தானும் எச்சரிக்கையோடு கவனித்துக்கொண் டிருந்தான். ஆனால் காலவித்தியாசப்படி யவர்கள் எவ்வளவோ எச்சரிக்கையா யிருந்தபோதிலும் எவ்வித அஜாக்கிரதையாலோ நாம் முன் கூறியபடி நால்வர் பதுங்கி வந்து வீட்டிற்குள் நுழைந்ததைக் கவனிக்காமல் போய்விட்டார்கள்.

அவ்வாறிருக்க அம்பலவாணன் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு வெளி வந்ததே தன் வீட்டிற்குச் சென்று தாய் தந்தையரைக் கண்டுகொண்டு செல்ல நினைத்து வீட்டை நோக்கி வரும்போது சீக்கிரம் செல்லக் குறுக்குவழிப் போகவேண்டுமாயின் சாமிநாதன் வீட்டுத் தோட்டத்தில் நுழைந்தே செல்லவேண்டும். அவ்வாறு பதுங்கிக்கொண்டே செல்லும்போது முன்னுடியே யங்கு கள்ளர் வரவை யெதிர்பார்த்துப் பதுங்கிக் கொண்டிருக்கும் போலீஸ்காரரில் ஒருவன் யாரோ ஆள் பதுங்கிச் செல்வதைக்கண்டதே தங்களுக்குள் இருக்கும் இரகசிய ஏற்பாட்டின்படி அதைச் சமிக்கையால் வெளியிட்டான். உடனே யாவரும் சூழ்ந்து வந்து அவனைப் பிடித்துக்கொண்டு இராந்தல்களைத் திருப்பி அவன் முகத்தைப் பார்த்ததே பிரமித்தார்கள். அதற்குள் ஆனந்தஸிங் வந்து பார்த்ததே மிக்க வியப்படைந்து "நீ எப்படி யிங்கு வந்திருக்கிறாய்? நீ இருக்கவேண்டிய விடம்..." என்றதே,

அம்பலவாணன் அவனை நோக்கிச் சமிக்கை செய்துகொண்டே "இங்கு வா! நான் உன்னிடம் அனேக இரகசிய சமாசாரம் கூறவேண்டும்" என்றான்.

ஆனந்தஸிங் தன் ஆட்களை நோக்கி "யாவரும் சற்று எட்டப்போங்கள்" என்று கூறிவிட்டு அம்பலவாணனை நோக்கி "நீ சிறைச்சாலையிலிருந்து எப்படி வந்தாய்?" என்றான்.

அம்ப :—"நீ யென்னை முதலிற் கண்டது சிறைச்சாலையில். நான் சத்தியமாய்க் கடவுளறியக் கூறுகிறேன். நான் நிரபராதி" என்றான்.

ஆனந்த :—"நீ யதைப்பற்றிக் கூறவே வேண்டியதில்லை. முதலிலிருந்தே நீ நிரபராதி யென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும்" என்றான்.

இதைக் கேட்டதே அம்பலவாணன் மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து "எப்படித் தெரியும்? ருசுப்படுத்த வேண்டுமே. உண்மையாய்த் தெரியுமா?" என்றான்.

ஆனந்த :—என்றால் ருசுப்படுத்த முடியும். நீ யதைப்பற்றிச் சந்தேகிக்க வேண்டாம். நீ யெப்படி வெளியில் வந்தாய்?

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## பொது விஷயங்கள்

**தேனீக்களின் தேசபக்தி.**—கல்கத்தாவில் பிரசுரமாகும் "சுவந்திரா" ஹிந்துப் பத்திரிகைக்கு ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார் :—

தேனீக்களுடைய அபூர்வச் செயல்களைப் பற்றிப் பல கிரந்தங்களிருக்கின்றன. ஆனால் கீழ்க்கண்டது போன்ற அதிசயத்தை இதுவரையில் ஒருவரும் கேட்டிருக்க மாட்டார்கள்.

சீதாமாரி புல்லிவாசியான ராம்ரிசன் தாகூர் என்பவர் சில தினங்கள் முன் நேபாள சந்தையில் விற்பனை செய்வதற்காக ஒரு வண்டி நிறைய அந்நியநாட்டு ஆடைகளைக் கொண்டுபோனார். வழியிலிருந்த ஒரு ஆலமரத்தில் தேனீக்களின் கூடு இருந்தது. வண்டி அங்குச் சென்றதும் தேனீக்கள் அவரைக் கொட்ட ஆரம்பித்துவிட்டன. அவர் வண்டியைவிட் டிறங்கி உயிர் தப்பினால் போதுமென்று வெகு துரிதமாக ஓடினார். ஆயினும் தேனீக்களும் அவரைத் தொடர்ந்து சென்றன. அவர் இந்தச் சங்கடத்தைச் சகிக்க முடியாமல் இனி நான் அன்னியநாட்டு ஆடைகளை விற்பனை செய்வதில்லையென்று கதறினார். அவர் அவ்விதம் சொன்னதும் தேனீக்கள் திரும்பிவிட்டன. வண்டியிலிருந்த வேறெவரையும் தேனீக்கள் இம்சிக்கவில்லை.

**பெண்கள் தற்கொலை செய்துகொள்ளுதல்.**—சென்ற வருடத்தில் இங்கிலாந்து தேசத்தில் 1,116 பெண்கள் தற்கொலை செய்துகொண்டனர். அவர்கள் தற்கொலை செய்துகொண்டதற்கு குடித்தல், குடும்ப உபத்திரவம், பணம் ஆகிய இம்மூன்று விஷயங்கள் காரணமாயிருந்தனவென்றும், செல்வந்தர்களின் குடும்பங்களில் நல்லொழுக்க மில்லாவிட்டால் அக்குடும்பத்தினருக்கு நிம்மதி யில்லையென்றும் தற்கொலை செய்துகொள்ளப் படுவதற்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதில் அதிக திறமை வாய்ந்தவர் ஒருவர் கூறுகிறார் :—

'அந்தோ! அந்நாட்டில் ஸ்திரீகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அளவுகடந்த சுயாதீனமும், சுயேச்சைப்படி நடக்கும் வண்ணம் விடப்பட்டிருத்தலுமே இக்கோர சம்பவங்களுக்குக் காரணமாகும். வெறும் பாஷைக் கல்வியும், சடசாத்திரக் கல்வியும் வாலிபர்களுக்கு நன்னடக்கையை யுண்டாக்கா. உயர்தரக் கல்வியாயினுங்கூட அவற்றால் பெண்களுக்கு அவசியமான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்களை நிலைக்கச்செய்ய அவை சக்தியுடையவை யல்ல.

## ஓர் வேண்டுகோள்.

சந்தாநேயர்களேனும், பத்திரிகாபிமானிகளேனும் கீழ்க்கண்ட விஷயங்களைப்பற்றி நமக்கு அறிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம் :—

1. கம்மவார் என்ற ஜாதியாரின் உற்பத்தி முதலியவைகளைப்பற்றி நூல் ஏதேனு மிருக்கிறதா என்ற விவரம்.

2. முக்கியமான ஸ்தலங்களில் நடக்கும் உத்ஸவாதிகளின் காலங்கள். அதாவது அவரவர் தாம் இருக்கும் ஊரிலுள்ள ஸ்தலத்தில் வருடா வருடம், இன்ன மாதம் இன்ன நக்ஷத்திரம் அல்லது இன்ன பட்சம் இன்ன திதியில் இன்னின்ன உத்சவம் நடைபெறுகிறது என்று விவரமாகத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறோம். இது நமது பஞ்சாங்கங்களில் பிரசுரிக்க வேண்டியதற்காக.

3. 'நீதிவெண்பா' என்ற நூலின் ஆசிரியர் யார்?

## “ஆனந்த போதினி” பஞ்சாங்கம்.

துந்துபிஸு வைகாசிமீ—சாலிவாகனம் 1845—கலி 5024
பசலி 1331—கோல்லம் 1097-98—ஹிஜரி 1340
இங்கிலீஷ் 1922ஸு மேமீ-ஜூன்மீ

| வைகாசி | மேமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | ஞா | திரி3-40 | மூல-37-30 | அ37-30சி | ரிஷபரவி நா-10-52 வி |
| 2 | 15 | திங் | சது3-10 | பூரா-40-3 | மர-60 | பிரயாணம் விலக்க |
| 3 | 16 | செ | பஞ்4-30 | உத்-44-10 | பி44-10சி | |
| 4 | 17 | புத | சஷ்7-38 | திரு-49-30 | சி49-30பி | நாமகரணம் செய்ய |
| 5 | 18 | வியா | சப்12-20 | அவி-56-30 | சி-56-30ம | சர்வமுகூர்த்தம் |
| 6 | 19 | வெ | அ18-8 | சதை-60 | சித்-60 | பிரயாணம் விலக்க |
| 7 | 20 | சனி | நவ24-25 | சதை-4-8 | அமி4-8ம | கரிநாள் |
| 8 | 21 | ஞா | தச-30-38 | பூரட்-11-45 | சி11-45அ | மிதுனயனம் நா-52-15 |
| 9 | 22 | திங் | ஏகா36-5 | உத்-18-55 | சித்-60 | சர்வ ஏகாதசி |
| 10 | 23 | செ | துவ40-25 | ரேவ-25-5 | சித்-60 | பிரதோஷம் |
| 11 | 24 | புத | திர43-15 | அசு-29-55 | ம29-55சி | |
| 12 | 25 | வியா | சது44-35 | பர-33-10 | சி33-10ம | கிருத்திகை |
| 13 | 26 | வெ | ● 44-33 | கிரு-34-55 | சி34-55ம | சர்வத்திர அமாவாசை |
| 14 | 27 | சனி | பிர42-55 | ரோ-35-25 | சித்-60 | ஜேஷ்ட சுத்தம் |
| 15 | 28 | ஞா | துதி40-15 | மிரு-34-43 | சித்-60 | அக்கினிநாள் முடிவு |
| 16 | 29 | திங் | திரி36-33 | திரு-33-8 | சி33-8அ | கல்கிஜயந்தி, கரிநாள் |
| 17 | 30 | செ | சது32-30 | புன-30-48 | சித்-60 | |
| 18 | 31 | புத | பஞ்27-45 | பூச-23 | சித்-60 | |
| 19 | 1 | வியா | சஷ்22-43 | ஆயி-24-53 | சி24-53அ | |
| 20 | 2 | வெ | சப்17-28 | மக-21-35 | ம21-35சி | |
| 21 | 3 | சனி | அ12-5 | பூர-18-10 | சி18-10ம | |
| 22 | 4 | ஞா | நவ6-40 | உத்-14-43 | அ14-43சி | |
| 23 | 5 | திங் | தச1-20<br>ஏக56-18 | அஸ்-11-18 | சி-11-18பி | |
| 24 | 6 | செ | து51-3 | சித்-8-0 | சித்-60 | |
| 25 | 7 | புத | திர46-28 | சுவா-5-0 | சித்-60 | பிரதோஷம் |
| 26 | 8 | வியா | சது42-28 | விசா-2-28 | சித்60 | நிஷேகம், பும்சவனம் |
| 27 | 9 | வெ | ○39-18 | அனு-0-40<br>கேட்-59-48 | சி0-40ம | வடசாவித்திரி விரதம் |
| 28 | 10 | சனி | பிர37-25 | மூல-60 | சித்-60 | ஜேஷ்டபகுளம் |
| 29 | 11 | ஞா | துதி36-55 | மூல-50 | அ0-50சி | ஆயுதம் பயிற்ற |
| 30 | 12 | திங் | திரி37-43 | பூரா-1-58 | மர-60 | பிரயாணம் விலக்கப்பட்[டது |
| 31 | 13 | செ | சது40-38 | உத்-5-25 | பி5-25சித் | |
| 32 | 14 | புதன் | பஞ்44-50 | திரு-10-20 | சி10-20பி | மிதுனரவி நா 27-37 |

(மேமீ column, rows 22–28: 1922ஸு ஜூன்மீ)

| | | | |
|---|---|---|---|
| கே | | கு-பு<br>சு | |
| | 6உ மிது-சு<br>9-மிது-பு<br>16மிரு-செ<br>31-கட-சுக் | | |
| செ | | | ராகு<br>சனி |

Printed & published by N. Munisawmi Mudaliar at the
“Ananda Bodhini” Power Press, 15, Venkatesa Maistry Street, Madras,

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

No.—
26 JUN 922

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி | துந்துபிஸு வைகாசிமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 7 | 1922ஸு மேமீ 14உ | 11 |

### கடவுள் வணக்கம்.

கருமருவு குகையனைய காயத்தி னடுவுட்
களிம்புதோய் செம்பனைய யான்
காண்டக விருக்கநீ ஞானவனன் மூட்டியே
கனிவுபெற வுள்ளு ருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதி செய்த
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை யென்சொல் லுகேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியா மந்த மீதும்
அத்துவித நிலையாா யென்னையாண் டுன்னடிமை
யானவர்க ளறிவி னூடும்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

தானே யகண்டா காரமயந் தன்னி லெழுந்து பொதுநடஞ்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான் வந்துன் னடிக்கே காங்கூப்பித்
தேனே யென்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே யெனுஞ்சொன் னினதுசெவி கொள்ளா தென்னோ கூறுயே.

கூறு நின்ற விடர்க்கவலைக் குடும்பக் கூத்துட் டுளைந்ததடு
மாறு நின்ற பாவியைநீ வாவென் றழைத்தா லாகாதோ
நீறூர் மேனி முக்கணுடை நிமலா வடியார் நினைவினிடை
யாறுய்ப் பெருகும் பெருங்கருணை யரசே யென்னை யாள்வானே.

## அரும் பொருள் விளக்கம்.

1. கரும்ருவு=கருப்பையிற் பொருந்தி, காயம்=தேகம், கனிவு பெற உள்ளுருக்கி=உள்ளே யிளகியுருகச்செய்து, அத்துவித நிலையராய்= இரண்டற்ற ஐக்கியநிலை யடைந்தோராகி,

தேகத்தை ஒரு மூசிக்கும், ஆணவமலம் பொருந்திய ஆன்மாவைக் களிம்புள்ள செம்பிற்கும், ஈசுவரனுடைய அருட்சத்தியை குளிகையென்ற பரிசன வேதிக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

சிடனுடைய இருவினையொப்பு மலபரிபாகமறிந்து ஆசான் ஞானோபதேசம் செய்தலைப் 'பருவமதறிந்து நின்னருளான.........வேதிசெய்து' என்றார். மலம் நீங்கப்பெற்ற ஆன்மா சிவத்தோடு இரண்டற்ற ஐக்கிய நிலையடைதலைப் 'பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட பட்சம்' என்றார்.

"தேகமாகிய குகையில் களிம்புள்ள செம்புபோன்றிருந்த என்னை ஞானமாகிய அக்கினியினால் உள்ளுள்ளே யிளகி யுருகச்செய்து பக்குவமறிந்து உன் அருட்சத்தியால் என் மலத்தை நீக்கித் தானாக்கிக்கொண்ட கருணையை யென்னென்று கூறுவேன்" என்றதாம்.

"கல்லாலடிக்கீழும்...முத்திமுதலே" என்றது, ஜனக ஜனாதிகளுக்குக் கல்லாலின் கீழமர்ந்து சின்முத்திரைக்குறியால் ஜகஜீவபர ஐக்கிய நிலையைக் காட்டியருளிய தக்ஷிணாமூர்த்த சொரூபத்தை.

"சிரகிரி.........குருவே" என்றது, சுவாமிகள் சிரகிரி என்ற திரிசிரபுரத்தில் (திருச்சினாப்பள்ளி) உள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையப்பியாசித்தபடியால் அந்த மூர்த்தத்தைக் குருமுகமாகத் தோத்தரித்ததாம்.

2. அகண்டாகாரமயம்=சர்வவியாபகமான நிலைமை, பொதுநடம்= பஞ்சகிருத்தியத்தாண்டவம், மாயப்பிறப்பு=மாயாசம்பந்தத்தாலுண்டான பிறவி, நினது செவிகொள்ளா தென்னோ?=உனது செவியில் ஏற்றுக் கொள்ளாதிருப்பது என்னகாரணமோ ?

3. நீறார்மேனி=விபூதிபொருந்திய திருமேனி. வெண்மை நிறமுடைய திருநீறு சுத்தசத்துவத்தையும், ஆனந்த நிலையாகிய மோக்ஷம் அல்லது ஞானத்தையும் குறிக்கிறது. பரமசிவம் நீறு பூசி யிருப்பது அவர் ஞானமே திருமேனியாக வுடையவர் என்பதைக் குறிக்கின்றது.

முக்கண்=மூன்றாவது கண்ணாகிய நுதற்கண். திரிமூர்த்தி சொரூபங்களும் ஒன்று சேர்ந்த துரிய பரம் பொருளாகிய பரப்பிரம்மம் ஞான சொரூபமாதலால் அதற்கு ஞானமாகிய மூன்றாவது கண் உண்டென்று வேதங் கூறுகிறது.

---

# ஆனந்தபோதினி

துந்துபிஸ்ரீ வைகாசிமீ கஉ

## கைத்தொழிலும், கல்வியும்.

உலகில் செல்வமும் சிறப்பும் பெற்றிருக்கும் ஒவ்வொரு நாடும் கைத்தொழில், வர்த்தகம் இவைகளாலேயே அத்தகைய மேலான நிலைமையை யடைந்திருக்கிறது. கைத்தொழில் வர்த்தகத்தை வளர்க்கிறது. புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தில் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்திற்கும் அவசியமான இயற்கைப் பொருள்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவ்வாறு உலகில் வேறெந்த நாட்டிலுமில்லை. விவசாயத்திற்கும் இங்குள்ள செழிப்பான பூமியைப்போல் வேறெங்கும் கிடையாது.

இதனால் பூர்வீக முதல் இரண்டொரு நூற்றாண்டுகளுக்குமுன் வரையில் நமது நாடு வர்த்தகத்தில் முதன்மை பெற்று விளங்கியது. அநாகரீக நிலைமையிலிருந்து நாகரீகமடைந்த ஒவ்வொரு தேசமும் அவ்வாறு நாகரீக மடைந்ததற்குக் காரணமா யிருந்தவற்றில் மிக முக்கியமானது இந்தியாவின் வர்த்தகமே. இந்தியா, ஆப்கானஸ்தானம், பாரசீகம் இவற்றின் வழியாகவும், செங்கடல் வழியாகவும் மேல் நாடுகளோடு வர்த்தகம் செய்துகொண் டிருந்தது.

இவ்வாறு கைத்தொழிலும், வர்த்தகமும் மலிந்த நம் தாய்நாடு, உலகிலுள்ள நாடுகளுக்கெல்லாம் பஞ்சு, பருத்தித்துணி, சணல், பட்டு, நீலம், கெம்பு, வைரம், முத்து, ஏலம், இலவங்கம், ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் யாவும் உதவிக்கொண்டிருந்த நம் நாடு, இப்போது கட்டத் துணிக்குக்கூட அன்னிய நாட்டை எதிர்பார்க்கும் நிலைமைக்கு வந்துவிட் டிருக்கிறது. இதற்குக் காரணம் கைத்தொழில் நசித்துப்போனதே யாகும். கிழக்கு இந்திய (வர்த்தக) சங்கத்தார் (ஈஸ்ட் இண்டியா கம்பெனி) இத்தேசத்தில் வந்து நிலைத்தபோது நெசவு முதலிய கைத்தொழில்கள் இங்கு

மலிந்திருந்தன. அந்தோ! அண்டை வீட்டுக்காரனை யழித்தேனும் தான் வாழவேண்டுமென்ற எண்ணம் மனிதரில் பெரும்பாலார்க்கு இயற்கையா யமைந்த குணமன்றோ! ஆகவே அவர்கள் தங்கள் நாட்டுப் பொருள்கள் இங்கு அதிகமாகச் செலவாக வேண்டும், தங்கள் ஜாதியார் நல்ல பொருள் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு பல வழிகளாலும் இந்நாட்டுக் கைத்தொழில் நசித்துப்போகச் செய்தார்கள்.

நமது நாட்டாரில் கைத்தொழில் செய்வோரும் வர்த்தகம் செய்வோரும் கல்வியை யலட்சியம் செய்வது இயற்கையா யிருந்து வருகிறது. வர்த்தகர் தம் பிள்ளைகளுக்குச் சாதாரணமாகக் கணக்கெழுதும் வரையாவது கல்வி கற்பித்துப் பிறகு "இன்னம் ஏன் பள்ளிக்குச் செல்வது? இவ்வளவே போதும்; இனி கடையில் வந்து பழகட்டும்" என்கிறார்கள். ஆனால் கைத்தொழில் செய்வோரோ, சிறு வயதிலிருந்தே "நமக்குப் படிப்பேன் வேலையைக் கற்றுக்கொண்டால் போதும்" என்கிறார்கள். இவர்களுக்குக் கல்வியில்லாததே இத்தொழில்கள் தலையெடுக்காமற் போவதற்குக் காரணம். இதனால் வேறு பல கெடுதிகளும் நேர்கின்றன.

கைத்தொழில் நசிந்தபோது மேற்கண்ட கம்பெனியாராகிய துரைத்தனத்தாரிடம் சேவகா விர்த்தியில் சீவனத்திற்கு வழி யுண்டாயிற்று. ஆரம்பத்தில் ஆங்கிலபாஷை கொஞ்சம் எழுதப் பேசத் தெரிந்துகொண்டால் ஒரு உத்தியோகம் கிடைக்கும். ஜனங்களுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆதலால் புது துரைத்தனத்தின் முறைமையும், அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தின் மாதிரியும் ஒன்றும் தெரியாது. துரைத்தன விஷயமான எதை யறியவேண்டுமாயினும், ஆங்கிலம் கற்று துரைத்தனத்தாரிடம் உத்தியோகம் செய்வோர் மூலமாகவே அறியவேண்டும். இதனால் உத்தியோகம் செய்பவர்கள் மிக்க கௌரவ முடையவர்களாகக் கருதப்பட்டனர். கடைசியில் ஆங்கிலம் கற்பதும், துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்வதும் யாவற்றினும் கௌரவமானவைகளாகக் கருதப்பட்டன. "ஐந்து ரூபா சேவகமானாலும் கும்பினி சேவகத்துக்குச் சமானம் வராது" என்று பழமொழியே வழங்கத் தலைப்பட்டது. "அதமம் சேவகாவிர்த்தி" என்ற முன்னோர் நீதி மறக்கப்பட்டது.

துரைத்தன விஷயமே யொன்றும் தெரியாத ஜனங்கள் "நாம் கொடுக்கிற வரிப் பணத்தில் சம்பளம் பெற்றே இராஜாங்கம் நடை



பெற இவர்கள் வேலை செய்கிறார்கள்" என்பதை யுணராமல், குறைந்த உத்தியோகஸ்தனாயினும் அவனைப் பெரிய அதிகாரியாக மதித்து அவனுக்கு அஞ்சி நடக்கத் தொடங்கினார்கள். அதன்மேல் சேவகா விர்த்தியிலுள்ளோர் மற்றவர்களை - மிக்க பூஸ்திதியுடைய சீமானாயினும், பெரிய செல்வவந்தனாகிய வர்த்தகனாயினும் - சிறந்த கைத்தொழில் செய்பவனாயினும் - மிக்க தாழ்ந்தவராகக் கருதி நடத்தத் தொடங்கினார்கள். ஆகவே வரவர துரைத்தனத்தில் சேவகம் செய்வதையன்றி மற்ற கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் யாவும் இழிவான தொழில்களாகக் கருதப்பட்டன. இவர்களுடைய மக்களில் யாரேனும் ஆங்கிலம் கற்றால், அவர்கள் உடனே அத்தொழில்கள் இழிவானவை யென்று கருதத் தொடங்கி விடுகிறார்கள். அதோடு ஆங்கிலங் கற்காத தம் பெற்றோரையும் தங்களைக் காட்டிலும் அறிவிலும் நாகரீகத்திலும் தாழ்ந்தவர்களாகக் கருதி, அவர்களை யலட்சியமாய் நடத்தத் தொடங்கி விடுகிறார்கள். கைத்தொழிலாவது, வர்த்தகமாவது கல்வியின் உதவியைக்கொண்டு அபிவிர்த்தியும் சீர்திருத்தமு மடைவதற்குப் பதிலாக க்ஷீணதசை யடையத் தொடங்கியது.

கல்வி அறிவைக் கூர்மைப் படுத்துகிறது. விவசாயம் செய்வோர் கல்வி கற்று அத்தொழிலைச் செய்தால் இன்ன விதமான மண் இன்ன விதமான சாரமுடையது, இன்ன பூமியில் இன்ன பயிர் விளையும், இன்ன பயிருக்கு இன்னவித எரு போடவேண்டும் என்பன முதலிய விஷயங்களையும், இரசாயன முறைகளால் எருக்கள் உற்பத்தி செய்யும் மார்க்கங்களையும் அறிந்து செய்வார்கள். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைக் காலத்தையும், கஷ்டத்தையும் குறைக்கும் விதமாகப் புது மாதிரியாய்த் தங்கள் புத்தியைக் கொண்டு அமைத்துக் கொள்வார்கள்.

நெசவுத் தொழில் செய்வோர் கல்வி கற்று அத்தொழிலைச் செய்தால் முதலாவது, தங்களுக்கு வேண்டிய இயற்கைப் பொருளாகிய பஞ்சில் எத்தனை விதங்கள் இருக்கின்றனவென்றும், அவற்றின் தாரதன்மியத்தையும், எங்கெந்த விடத்தில் என்னென்ன விதமான பருத்தி யுற்பத்தியாகிறதென்றும், எங்கே குறைந்த விலைக்குப் பஞ்சு கிடைக்குமென்றும், துணி நெய்தானபின் அதையெங்கே அதிக இலாபத்திற்கு விற்கலாமென்றும் இன்னும் இது சம்பந்தமான பல விஷயங்களையு மறிந்துகொள்வார்கள். இன்னும்

தரி முதலியவற்றில் சீர்திருத்த முண்டாக்கி குறைந்த காலத்தில் அதிக துணி உற்பத்தி செய்வார்கள்.

அந்தோ! கல்வியில்லாக் குறையால் நமது நாட்டில் கைத்தொழில் செய்வோர் தங்கள் முன்னோர் எத்தகைய ஆயுதங்களைக் கொண்டு எம்மாதிரி வேலை செய்துவந்தார்களோ அதே மாதிரியே யின்னும் செய்துகொண் டிருக்கிறார்கள்.

நம் தாய்நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின் கைத்தொழில் வர்த்தகம் விவசாயம் இவை விர்த்தியடைய வேண்டும். இவை விர்த்தியடைய வேண்டுமாயின் இத்தொழில் செய்வோர்க்குக் கல்வி யளிக்கப்படவேண்டும். தாய்நாட்டின் க்ஷேமாபி விர்த்தியைக் கோரும் தேசாபிமானிகளாகிய சீமான்கள் இத்தகைய விஷயத்தில் சிரத்தை யெடுத்துக் கொண்டால் நமது நாடு முன்னேற்ற மடையும்.

அந்தோ! இன்னும் நம் நாட்டில் அனேகர் தேசமுன்னேற்றத்திற்கு அவசியம் செய்யவேண்டியது எது என்பதைக் கவனிக்காமலே பொருளைப் பலவழிகளில் செலவழிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வது அறியாமையால் அல்ல. கௌரவம் என்னும் மயக்கில் சிக்கித் திரண்டபொருளைச் செலவழிக்கிறார்கள். ஒரு காரியத்தில் பொது நலம் என்ற மேல்பூச்சுமட்டு மிருந்து, அது தேசமுன்னேற்றத்திற்குத் தற்சமயம் அவசியமானதாக விராவிடின், அதனால் கௌரவம் வேண்டுமாயின் எதிர்பார்க்கலாமே யன்றி மற்றபடி தாய் நாட்டிற்கு நன்மை யொன்றுமே கிடைக்காதென்பது திண்ணம்.

சமீபகாலத்தில் கூட நம் நாட்டுச்சீமான்களில் ஒருவர் ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவிட்டு நம் நாட்டிற்கு பயனளிக்காததும், ஆனால் அதற்குமாறாக வீண் செலவை யுண்டாக்கக்கூடியதுமான ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். அந்தோ அப்பெருந்தொகையை வைத்து ஒரு தேசியப்பாடசாலை தாபித்திருந்தால் எவ்வளவோ நலமுண்டாகும். இது நம் தாய் நாட்டாரின் ஆசீர்வாதத்தை யளிக்கும். ஆனால் சிலர் இதை அலட்சியம் செய்துவிட்டு அதிகார வர்க்கத்தினரின் நன்மதிப்பையே பெரும் புண்ணியப் பேறெனக்கருதி அத்தகைய காரியங்களுக்கே பணத்தைச் செலவழிக்கிறார்கள்.



அந்தோ எப்போதுதான் நம்நாட்டாரனைவர்க்கும் உண்மையான தேசபக்தி ஜனிக்குமோ, அதிகார வர்க்கத்தினர்க்குத் தாளந் தட்டிக்கொண்டு அவர்கள் நன்மதிப்பையே பெரிதாகக் கருதி தாய் நாட்டிற்கே தீங்கிழைக்கும் அற்ப குணம் எப்போது நம்மை விட்டொழியுமோ, நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறு செய்வோர்களுக்கு உதவிசெய்ய நமக்குள்ளாகவே கட்சி பேதங்களை யுண்டாக்கும் கோடரிக் காம்புகளின் செய்கைகள் எப்போது அடங்கிவிடுமோ அன்றன்றோ நம் குறைகள் நீங்குங் காலம்; அன்றன்றோ பாரத மாதா தன் மக்களைக் கண்டு மகிழும் நாள்; அன்றன்றோ நம் தாய்நாடு தன் பூர்வீகப் பெருமையை யடையும் நாள்.

அந்த நாள் சீக்கிரம் வரவேண்டுமாய் நம் பாரத மாதாவாகிய பராசத்தியையும், பரம்பொருளையும் இடைவிடாது பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

---

## ஜீவகாருண்யம்.

எனது தமிழ் நாட்டுச் சகோதரிகளே!

முற்காலத்தில் ஜீவகாருணியமே உருக்கொண்ட நம் நாட்டில் தற்கால நாகரீக மேலீட்டால் ஜீவகாருணிய மென்பது என்னவென்று தெரியாது, வீட்டு வாயிலுக்கு வரும் பசித்த பிச்சைக்காரருக்கும்கூட அன்னமிடாது வேலையாய் இருக்கிறேன் போ என்றுவது, ஏன் வேலை செய்து சாப்பிடக் கூடாது என்றுவது சொல்லுவது வழக்கமாய்ப் போய்விட்டது. இவ்வழக்கம் அடியோடு நம் சகோதரிகளைவிட்டு அகல இறைவன் அருள் புரிவாராக. பெண்பாலாகிய யான் ஸ்ரீமத், இராமலிங்க சுவாமிகள் அருளிய ஜீவகாருணியத்தைப் படித்து என் சிற்றறிவுக்கு எட்டிய இச்சிறு வியாசத்தை வரைந்துள்ளேன். குற்றமிருப்பின் பொறுத்தருள்க.

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. (குறள்)

உலகில் மானிடராய்ப் பிறந்த நம் எல்லோருக்கும் தவம், தருமம், செல்வம், கல்வி முதலிய எல்லாவற்றிலும் மேலானது ஜீவகாருணியமே. ஜீவகாருணிய மென்பது சீவர்களிடத்தில் தயவு. ஜீவகாருணியம் ஒருவரிடத்தில் விளங்கும்போது அறிவு, அன்பு, பொறுமை, தெய்வபக்தி முதலியவைகளும் விளங்கும். ஜீவகாருணியம் மறையும்போது இவைகளெல்லாம் மறைந்துவிடும். இவ்விஷயங்கள் மறையவே எல்லாத் தீமைகளும் வந்துசேரும். ஆதலால் புண்ணிய மென்பது ஜீவகாருணிய மொன்றே யென்றும், பாவ மென்பது ஜீவகாருணிய மில்லாமை யென்றும் அறியப்

படும். ஜீவர்கள் பசி, தாகம், கொலை, பிணி, எளிமை இவைகளால் துன்பப்படும்போதாயினும், துன்பப்படுமென் றறிந்தபோதாயினும், கேட்டபோதாயினும், கண்டபோதாயினும் மனமிரங்கி உதவி புரிவதே ஜீவகாருணியமாகும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அநேகர் பசியாலும், துக்கத்தாலும், பிணியாலும், தாகத்தாலும், உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி மிகவும் துன்புருவது எதனாலென்றால், முன் ஜனனத்தில் ஜீவகாருணிய மென்பதைக் கனவிலுங் கருதாது கடின நெஞ்சராகித் துன்மார்க்கத்தில் நடந்ததனாலேயே இந்தச் சன்மத்தில் கடவுள் விதித்த ஆக்கினைப்படி துன்புறுகிறார்களென அறியப்படுகிறது. முற்பிறப்பில் ஜீவகாருணியத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்கள் இப்பிறப்பில் கடவுள் அருளாக்கினையால் துன்பப்படுகிறபோது அவர்களுக்கு உபகாரம் செய்வது கடவுளுக்கு விரோதமாகாதோவென ஒரு கேள்வி வரக்கூடும். ஆனால் அது கடவுளுக்கு விரோதமாகாது. எப்படியெனில், கடவுள் தன் கட்டளைப்படி நடவாது குற்றம் செய்ததற்காகத் தமது சத்தியால் அவர்கள் பெறக்கூடிய நல்ல சுகபோகங்களைப் பெறவிடாது தாம் கொடுத்த செல்வங்களை யெல்லாம் விடுத்து அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வரும் பொருட்டே அந்தத் தேகத்திலிருந்து நீக்கி வேறொரு தேகத்தில் விடுவிக்கின்றார். ஆதலால் அந்தச் சீவர்கள் சௌக்கிய போகங்களையிழந்து உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி வருந்தும்போது இரக்கமுள்ளவர்கள் அவர்கள் படுகிற வருத்தத்தைப் பார்த்து மனமிரங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிசெய்தால், அப்படிச் செய்தவர்களை நல்ல இரக்க மனமுடையவர்களென் றுணர்ந்து மேன்மேலும் செல்வத்தைப் பெறக்கடவார்க ளென்று சந்தோஷத்தோடு வரங் கொடுப்பாரேயன்றி கோபிக்கமாட்டார். கல்வி, அறிவு, செல்வம் முதலியவைகளைக் குறித்து வருத்தப்படுகிறவர்கள் தங்கள் தரத்துக்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை நிவர்த்திப்பதையே ஒரு விரதமாகக்கொண்டு அனுசரிப்பார்களானால் அந்த ஜீவகாருணிய அனுசரிப்பு, கல்வி, அறிவு, செல்வம் முதலியவைகளை உண்டுபண்ணு மென்பது நிச்சயம். பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே ஒரு விரதமாகக்கொண்ட ஜீவர்களுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது, மண்ணும் சூடுசெய்யாது, பெருமழை, பெருங்காற்று பெரும்பனி, பேரிடி முதலியவைகளினாலும் துன்பமடைய மாட்டார்கள். பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் யார்யாரைத் தடுத்தாலும் அந்தத் தடைகளால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமே யல்லாது வேறிடத்தில் போகாதென்பதை உண்மையாக நம்பி ஜீவர்கட்கு உதவிசெய்ய வேண்டியது அவசியம். ஜீவகாருணிய முள்ளவர்கள், சீவர்களைப் பசி யென்கிற ஆபத்தினின்றும் நீங்கச் செய்கிற உத்தமர்கள், எந்தச் சாதியாராயினும், எந்தச் சமயத்தவராயினும், எந்தச் செய்கை யுடையவராயினும், தேவர், முனிவர், யோகர் முதலிய



யாவராலும் வணங்கத்தக்கவர்களாவர் என்பதை நிச்சயமாய் அறியும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாம் வல்ல பரம்பொருள் அருள் புரிவதாக.

ஓர் சகோதரி.

---

## "திருநீறு"

"நீறில்லா நெற்றி பாழ்."—ஔவை.

திரு=அழகிய, நீறு=சங்காரப் பொருள் அல்லது சாம்பல். இவ்வகைய திருநீற்றைப் பல்லாயிரக் கணக்கான சைவசமயிகள் தரிக்கின்றனர். அவர்களைப் போய் "திருநீறு" என்றால் என்னவென்று வினவினால், அவர்கள் "இது தெரியாதாக்கும் மாட்டுச் சாணியைச் சுட்டு எடுத்தால் விபூதி" என்கின்றனர். ஆனால் அது எங்ஙனம் உண்டாயிற்று? அதன் வகை யென்ன? பெருமை யென்ன? சக்தி யாது? அதன் பயன் யாது? என்ற கேள்விகளைக் கேட்டால் சிலரே தெளிவாய் உண்மை கூறுவர். ஆனால் இங்கு நாம் நமது நண்பர்களுக்காக நமக்குத் தெரிந்தவரையில் எடுத்துக் கூறத் துணிந்தோம். "ஆனந்தன்" இடந் தருவான் என்று கருதுகிறோம்.

ஏற்பட்டவிதம்.

### "கடம்பவனப் புராணம்"

"சான்ற நூல்புகல் சர்வசங் காரகா லத்திற்
றோன்றும் யாவுந்தன் னுதல்விழி யங்கியாற் றொலைத்து
கான்ற வார்குழை பாகனம் மயானத்து நடித்தா
னூன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியி லவற்றை"

"திருக்க ரத்தினால் வழித்தெறிந் தனன்றிகழ் விடைமுன்
விருப்பி னலவை யயின்றந்த விடைதன்வீ ரியத்தை
யருப்ப மீக்கொளப் பசுக்கள்பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம்பே சினவால்"

அதாவது சங்கார காலத்திலே சிவபெருமான் தமது நெற்றிக்கண் நெருப்பினால் சகல பொருளையும் சாம்பலாக்கி அச்சாம்பலைத் தமது திருமேனியிலிட்டு, பின் மகத்துள்ள யாவற்றையும் தோற்றுவித்து, தம் திருக்கரத்தால் திருமேனியிலுள்ள சாம்பலாகிய விபூதியை வழித்தெறிந்தார். அது தன் ரிஷபத்தின்மேல் விழ அது மகிழ்ச்சியோடதை யுண்டு தன் வீரியத்தைப் பசுக்களிடம் விட்டது. ஆகையால் அப்பசுக்களின் கோமயம் திருநீற்றுக்கு மூலமாகிச் சிறந்து விளங்கிற்று.

நீற்றின் பெயர்கள்: பூதி, பசிதம், சாரம், காப்பு, நீறு என்று பற்பலவாம். பூதி—ஐசுவரியத்தைத் தருவது. பசிதம்—சிவத்துவத்தை விளக்கிக் காட்டுவது. சாரம்—உயிர்களின் மலத்தைக் கழுவுவது [அதாவது ஆன்மாவைச் சுத்தம் செய்வது.] காப்பு—பேய் பிசாசு, பிணி முதலியவைகளையும் அதன்

மூலமாய் வருந் துன்பங்களையும் நீக்குவது. நீறு—பாவங்களை தகிப்பது. இங்ஙனம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் உளது.

இதன் வகை : இது "வைதிகம், லௌகிகம்" என இருவகைப்படும். வைதிக நீறு இருவகைப்படும் (1) "புராதனி," (2) "சத்தியோசாதை."

புராதனி—பிரம்மன்யாக குண்டத்தில் உண்டாகும் விபூதியின் பெயர்.

சத்தியோசாதை—அந்தணர்கள் யாககுண்டத்தில் உண்டாவதன் பெயர்.

லௌகிக நீறு : சைவம் அசைவமென இருவகைப்படும். சைவநீறு—சிவதீக்கை யுடைவர்கள் தரித்துக்கொள்வது. அசைவ நீறு—தீக்கையற்றவர்கள் அணிந்துகொள்வது.

"பேரூர்ப் புராணம்"

"இலௌகிக பூதி தானு மிருதிற னுகும் பாவ
மூலவுற வாற்றுந் தீக்கை யுற்றவர்க் குரிய தாக
நிலைபெற நிறுவுஞ் சைவ நீறென்றுந் தீக்கை யின்றி
யலைவுறு மாந்தர் தங்கட் கடுத்திடு மசைவ மென்றும்."

சைவநீறு மூவகைப்படும் (நால்வகையு முண்டாம்) (1) கற்பம் (2) அநுகற்பம் (3) உபகற்பகம் (4) அகற்பம் என்பனவாம்.

கற்பம் :— "பேரூர்ப் புராணம்."

"கன்றுபய வாதகளி நாகுபுனிற் றுக்கோ
கன்றிறுதி யுற்றகபி லைக்குலம லட்டான்
கன்றுதுணை யீன்றகா வைத்திரண் முதிர்ந்த
கன்றுறு பசுக்கரு வயிற்றுவனர் பெற்றம்"

"வார்ந்தசெவி கோடுநெடு வாலிவைக டம்மிற்
றீர்ந்தசுர பித்தொகுதி தீதுவனர் பவ்வீ
யார்ந்துவரு காலிபிணி யான்றகுடஞ் சுட்டென்
றோர்ந்தவிவை நீங்கவெழி லோங்கிவனர் கற்றுன்."

என்ற குற்றங் குறைகளில்லாமல் நல்ல பங்குனி மாதத்தில், அட்டமி, சதுர்த்தி, பௌர்ணமி யன்றையதினத்தில், வயலில் நெல்லந்தாள் மேய்ந்து வரும் பசுக்களின் சாணத்தை சத்தியோசாத மந்திரமோதித் தாமரையிலையில் ஏற்றி வாமமந்திரமோதிக் கௌவியம் வார்த்து, அகோரமந்திரமோதிப் பிசைந்து, தற்புருட மந்திரமோதி யுருட்டி, ஓமத் தீ யெனும் சிவாக்னியி லிட்டுச்சுட்டு ஆறியபின் ஈசான மந்திரமோதி யெடுத்துப் புது வஸ்திரத்தில் வடிக்கட்டி புதுப் பாண்டத்தில் போட்டுச் சுத்தமான இடத்தில் வைத்துக் காயத்திரி மந்திரம் ஜெபித்து முல்லை, மல்லி, முதலிய வாசனைப் புஷ்பங்களால் அர்ச்சித்து ஒரு புதிய வஸ்திரத்தில் எடுத்துக் கட்டிவைக்கவேண்டும்.



அநுகற்பம்:—வனம், பசு மந்தை முதலியவைகளில் தானே விழுந்து உலர்ந்து கிடக்கும் சாணத்தைச் சித்திரை மாதத்தில் எடுத்து முன்போல் சிவாக்னியிலிட் டெடுத்து வைத்துக்கொள்வதாம்.

உபகற்பம்:—காட்டுத் தீயால் இயல்பாய் வனத்தில் வெந்து கிடக்கும் சாம்பலைப் பஞ்ச கௌவியம் விட்டு எடுத்துவந்து பிசைந்துருட்டி முன்போல் சிவாக்னியிலிட்டு விளைவித்து எடுத்து வைத்துக்கொள்வதாம்.

அகற்பம்:—சிவதீக்ஷை யற்றவர்க்கு யாதேனுமோர் வழிமுறையாற் செய்யப்படாது தானே வெந்து கிடந்திருப்பதாம்.

அசைவநீறு:—இது இருவகைப்படும். (1) சிவாலயம் சிவனடியார் மடைப்பள்ளிகளில் வெந்து கிடக்கும் சாம்பல். சிவதீக்ஷை யில்லாதவர்க்கு இது உரியது. (2) சங்கர ஜாதியார்க்கு இது உரியது—காடுகளில் தானே வெந்து கிடக்கும் சாம்பல்.

"பேரூர்ப் புராணம்."

"தீக்கை புரியாச் சூத்திரர்க்குச் சிறப்ப தாகு மடைப்பள்ளி
யாக்கும் பொடிகான் வெந்தபொடி யடுப்ப தாகுஞ் சங்கரர்க்கு."

நிறபேதவகை :—கருநிறம் - பிணிதரும், செந்நிறம் - கீர்த்தியைப் போக்கும், புகைநிறம் - வாழ்நாளைக் குறைக்கும், பொன்னிறம் - சம்பத்தை நீக்கும், வெண்ணிற விபூதி - சொல்லொணுப் புண்ணியத்தையும், சித்த சுத்தியையும், மோக்ஷத்தையும் கொடுக்கும்.

"பேரூர்ப் புராணம்."

"அளவாப் பிணியைத் தருநீல மாயு ணீக்குந் தாமிரஞ்சீர்
பிளவா விசையைத் தருஞ் செம்மை பீதமளிக்கு நல்குரவே"

"வெண்மை யளவில் புண்ணியத்தை விளக்கு மதனு—"

—எது தரிக்கும் வண்மை யுடையது.

தரிக்கும் வகை இரண்டு விதம். உத்தூளனம், திரிபுண்டரம்,

உத்தூளனம் :—கிழக்கல்லது வடக்கு முகமாக விருந்துகொண்டு விபூதியைக் கீழே சிந்தாமல் வலக் கரத்தில் வைத்துக்கொண்டு, நீர் விட்டுக் குழையாமல், சிவ சிவ சிவ என ஜெபித்துக்கொண்டு நடு மூன்று விரல்களால் (விரல்களை நீக்காமல்) நெற்றி முதலிய தானங்களில் (அழுகு நோக்காமல்) தரித்துக்கொள்ளல்.

திரிபுண்டரம் :—சரீர சுத்தி செய்துகொண்டு சுத்தமான விடத்தி லிருந்துகொண்டு சிவத்தியானத்துடன் விபூதியை வலக் கரத்தாலேந்தி இடக் கரத்தில் வைத்து சுத்திசெய்து சம்ஹிதா மந்திரத்தால் அபி மந்திரித்து நீரிற் குழைத்து நடு மூன்று விரலினுலும் சிரஸ், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள், மணிக்கட்டுகள், விலாப்பக்கம், முதுகு, காதுகள்,

கண்டம் ஆகிய விடங்களிலும், (நெற்றியில் புருவங்களின் கடைவரையிலும் மார்பிலும் புயங்களிலும் தனியாக ஆறு அங்குல நீளமும், கண்டத்தில் அதன் சுற்றளவு முழுவதும், மற்றைய விடங்களில் ஒவ்வோரங்குலமும்) நன்றாய் உத்தூளனமாகத் தரித்துக்கொண்டு, பிறகு திரிபுண்டாம் (மூன்று கீற்ருக) தரிக்கவேண்டும்.

தரிக்கும்பொழுது, சிரித்துக்கொண்டாவது, நடந்துகொண்டாவது, பேசிக்கொண்டாவது, அசுத்தமான இடத்தில் நின்றுகொண்டாவது சண்டாளர்களுக்கு எதிரேயாவது தரிக்கக்கூடாது.

சூர்யோத யஸ்தமன காலத்திலும், * சர்யசௌசம் பண்ணி ஆசமித்த பின்னும், ஸ்நானம் செய்தவுடனும், அசுத்த மிருகங்கள் தீண்டின காலத்தும் அவசியம் விபூதி தரித்துக்கொள்ளல் வேண்டும்.

குருவாவது, சிவனடியாராவது அல்லது தம்மிற் பெரியோராவது விபூதி கொடுத்தால், அவர்களைச் சுற்றிவந்து மும்முறை நமஸ்கரித்து இரு கரத்தாலும் அதைப் பெற்றுக்கொண்டு தரித்துக்கொள்ளல் வேண்டும். இவர்கள் முன்னும், சுவாமி, சிவாக்னி முன்னும் விபூதி பெற்றுக்கொண்டால் அவ்விடத்தை விட்டுச் சற்று பின்னிடைந்து முகத்தைச் சற்று திருப்பிக்கொண்டு தரித்தல் அவசியம். தம்மினும் மேம்பட்டவர் சிவப்ரசாதமாகிய விபூதியைக் கொண்டுவந்தால் நாம் அன்புடனும், பயபத்தியுடனும் அவர்களைப் பன்முறை நமஸ்கரித்துப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிவதீக்ஷையுடையவர் முக்காலத்திலும், மற்றையர் மத்தியானத்திற்குமுன் குழைத்தும் மற்ற காலங்களில் குழையாமலும் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

பயனும் பெருமையும்: வைதிக நீறு இகபோகத்தை மட்டும் கொடுக்கும். சைவநீறு, மாசகற்றி, மயக்கங்களை நீக்கி, சிவத்துவத்தை விளக்கி இக போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கும். இதனை:

"தணிகைப் புராணம்."

"முத்தியே யன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற்
சைவவான் பூதி"

"திருமந்திரம்."

"கங்காளன் † பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே" எனக் காண்க.

---

* மலஜல விசர்ச்சனம்.

† என்பு மாலை யணிந்த சிவபிரான்



பெருமை:—மெய்ப்பொருணாயனார் தம் முயிர் விடுங்கால் தம்மவரை நோக்கி, "பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர்" எனக் கூறி யருளியதும் இத்திருநீற்றின் மகிமையே. கூன் பாண்டியனுடைய கூனையும், சுரத்தையும் நீக்கியதும் இத்திருநீற்றின் பெறற்கரிய மகிமையே.

இனி "வேதத்திலுள்ளது நீறு" மந்திரமாவது, தந்திரமாவது, துதிக்கப்படுவது, தக்கோர் புகழ்வது, எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்துந் தகையது, பரவ இனியது, உண்மையிலுள்ளது, சத்தியமாவது, அருத்தமதாவது, தத்துவமாவது, சுந்தரமாவது, காணவினியது, பூசவினியது, புண்ணியமாவது, முனிவரணிவது, வானவர் மேலது, இராவணன் மேலது, வருத்தந் தணிப்பது, உடம்பிடர் தீர்ப்பது, அவலமறுப்பது, பத்திதருவது, இருமைக்குமுள்ளது, வானமளிப்பது, முத்தி தருவதானது இத்திருநீறு என்று ஸ்ரீ ஞானசம்பந்த ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்து கூறவில்லையா? என்? அதன் மகிமையே. சங்காதோஷம், பயந்துவிடல், ராக்ஷஸ் பிடித்தல், மந்திரித்தல் முதலியவைகளுக்கும் இதை உபயோகப் படுத்துகிறார்கள். (நாம் அதற்கு "காப்பு" எனப் பெயரொன்று கூறியுளோம்.)

"ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்."

"பகைபிணி மண்ணை பன்மந் திரத்திறு
மிகையறன் கடையுளா வருட்சி பித்திடர்
வகையனைத் தையுமற மாற்றி யாவர்க்குந்
தகைநல மளிப்பது தவள நீறரோ"

"அலகை பூதம் வேதாள மடர்மந் திரத்தா னலைப்புறுத்தும்
பலதெய் வதங்க ளிடாச்சம் பழிபா வங்கண் மடமென்னுஞ்
சலதி முழுது மெளிதகற்றிக் காப்புக் கொளலாற் காப்புமா
நிலவைப் பிடத்தி னதன்பெருமை நிகழ்த்த வரிதா மடமாதே."

சக்தி:—வைத்ய சாஸ்திரப்படி, விஷச் சத்துக்களை நீக்கி விஷக்கிருமிகளைப் போக்கி, ரோகங்களை விலக்கி மனிதனைக் காக்கின்றது. அவரைச் செடிகளில் புழுபூச்சி முதலியவைகள் அணுகாமல் சாம்பல் போடுகிறார்கள். நீர்ப்பிணியைத் தீர்க்கின்றது. துவரை முதலியவைகளில் புழு பூச்சி விழாமல் சாம்பலை மேலே தூவுகிறார்கள். நமது சகோதரிகளுக்கு இவைகள் நன்றாய்த் தெரியுமென்று கருதுகிறேன்.

பிறமதஸ்தர் அணிதல்:—புறமதத்தினரும் (தம் மதப்படி எத்தகைய கொள்கைகொண்டோர்) இதைப் போற்றுகின்றனர். மகம்மதிய சகோதரர்கள் தங்கள் பள்ளிவாசலில் சர்க்கரை கொண்டுவந்து பாத்திஹா செய்கிறவர்கட்கு குருக்கள் "நாறுஷா" என்னும் விபூதியைத் தருகின்றனர். அவர்கள் அதை நெற்றியி லிட்டுக்கொண்டு வாயில் போட்டுக் கொள்ளுகின்றனர்.

இன்றைக்கும் எல்லாப்பள்ளிவாசல்களிலும் இது நடைபெறுகின்றது. கிறிஸ்தவ சகோதரர்களும் விபூதித் திருவிழா என்று ஒரு காலத்தை யேற்படுத்திக் கொண்டாடுகின்றனர். அது புதவாரம் (ஆஷ் வெட்னஸ்டே என்று) நடைபெறுகிறது.

"ஆனந்தன்" சகோதர சகோதரி சந்தா நண்பர்களே! நமக்கு யாராவது விபூதி கொடுத்தால் "என்னன்று ஏதோ துண்ணூத்தைக் கொடுத்தான் ரெண்டு இட்டுண்டேன்" என்று அலக்ஷியஞ்செய்து சும்மா விருக்க வேண்டாம். நாம் அதை பயபக்தியுடன் பெற்றுக்கொண்டு நாம் சொன்னபடி பெரியோராயின் தக்க மரியாதையோடு பெற்றுக்கொண்டு சிறியோராயின் ஒரு ஆசனத்தில் அதை வைக்கச்சொல்லி, சரீர சுத்தம் செய்து கொண்டு அதைப் புஷ்பங்களால் அர்ச்சித்து பயபக்தியுடன்பெற்று இட்டுக் கொண்டால் சத்தியமாக அதனால் நற்பயன் பெறுவோம்.

கடவுள் நமக்கும், "ஆனந்தனுக்கும்" பூரண அருள் புரிவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பா. பஞ்சாபகேசன்,
13, கச்சேரிரோட், மாயவரம்.

---

## பிரகலாதன்.

(386-ம் பக்கத் தொடர்ச்சி)

### சச்சிதாநந்த நீதி ஸ்தலம்.

நீதியதிபர், அகண்ட பரிபூரணர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டது. துந்துபி வரு சித்திரைமீ 30உ 1922ஆம் வியாஜ்ஜிய நெ. 1-ல் இரணியன்-வாதி————(1) பிரகலாதன், (2) நரசிம்மன், 2-பிரதிவாதிகள்.

### நீதியும் முடிவும்.

1. பிராதின் சுருக்கம்;—பிரதிவாதிகள் வாதியை மோசமாகக் கொன்றுவிட்டதாகவும், இக்காரணத்தால் வாதி தான் ஆண்ட இராஜ்ஜியத்தையும் பட்டத்தையும், இழக்க நேரிட்டதென்றும், வாதியைப் பிரதிவாதிகள் அழிக்காதிருந்தால், இன்றைக்கும் நிராக்ஷேபனையாய் மூவுலகையும் ஆண்டுகொண் டிருப்பாரென்றும், ஆகையால் வாதி ஆண்ட மூவுலகமும், அவர் பெற்ற பட்டங்களும், அவர் இரணியனா யிருக்கும்போது பெற்றிருந்த சரீரமும் வரவேணுமென்றும் வாதியால் இந்தப் பிராது கொடுக்கப்பட்டது.

2. பிரதிவாதிகள் விவரப் பத்திரிகை:—வாதி கொடுங்கோன் மன்னனென்றும், தன் குடிகளைக் கொடுமையாய் நடத்தினாரென்றும், அக்கிரம அரசாங்கத்தை 2-ம் பிரதிவாதிக்கு அழிக்க அதிகார முண்டென்றும், 1-ம் பிரதிவாதி அனாவசியமாய்க் கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்பட் டிருக்கிறாரென்றும், வாதியின் தாவா காலாவதியாகி விட்டதென்றும், வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்க தில்லை யென்றும் பிரதிவாதிகளின் எதிர் வாதம்.



3 நிரூபணங்கள்:—(1) வாதி லோகேஸ்வரனா? வாதி ஆண்ட ராஜ்ஜியங்களும் பட்டங்களும் கிடைக்க வேண்டியவைதானா? (2) வாதியின் தாவா காலாவதியாகி விட்டதா? (3) வாதி ஜீவர்களைக் கொடுமையாய் நடத்தியதுண்டா? (4) வாதியைத் தண்டிக்க 2-ம் பிரதிவாதிக்கு அதிகாரமுண்டா? (5) வாதிக்கு எம்மாத்திரப் பரிகாரம் கிடைக்கவேண்டியது?

4. வாதி கோரமான தவங்கள் செய்த பலத்தால் பிரம்மா அநேக வரங்களைக் கொடுத்தார். வாதி வரங்கள் பெற்ற கெர்வத்தினால் திரிலோகங்களையும் தன் சுவாதீனம் செய்துகொண்டு, இந்திரன், ஆதித்தன், வாயு, அக்னி, வருணன், சந்திரன், யமன் முதலானோருக்கு ஏற்பட்ட தொழில்களை வாதியே நடத்திக்கொண்டு, வருங் காலத்தில் தேவர்களெல்லாம் வாதியின் இம்சை சகியாதவர்களாய் பூலோகத்தில் மாறு வேடத்தோடு வசித்து வந்தார்கள்.

வாதிக்கு நியாய வழியில் மூவ்வுலக அரசாக்ஷி கிடைக்கவில்லை; அக்கிரமமாகவே கைப்பற்றி யிருக்கிறார். மூவுலகிற்கு அரசனான கெர்வத்தால் தன்னைத் தவிர வேறு கடவுள் ஏது? என்ற கேள்வி அவரிடத்திலே உதயமாயிற்று. தன்னைத் தவிர வேறு ஈசுவரன் இந்த மூன்று உலகிற்கும் இல்லையெனத் தீர்மானித்தவராய், பஞ்ச மகா பாதகங்களை முதன்மையாய்க் கைகொண்டு அரசாக்ஷி செய்து வருங்காலத்தில் 1-ம் பிரதிவாதி என்ற தன் மகனை நோக்கி, 1-ம் பிரதிவாதியை ஆசாரியனிடத்தில் கற்ற பாடல்களைச் சொல்லக்கேட்டார். "படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையுடையவரும் சகல சிருஷ்டியாதிகளிலும் அந்தராத்மாவாய் எங்கும் ஏகமாய் நிறைவுற்று விளங்குபவருமாகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு தண்டன் சமர்ப்பிக்கிறேன்" என்று 1-ம் பிரதிவாதி சொன்னார். இதனைக்கேட்ட வாதி கோபாவேசனாய், லோகேஸ்வரனாய் நானிருக்கப் பரமேஸ்வரனென்கிறவர் வேறொருவருண்டோ? என் முன் அன்னியனைத் துதிசெய்யாதே என்று சொல்ல 1-ம் பிரதிவாதி, விஷ்ணுவாகிய 2-ம் பிரதிவாதி எனக்கொருவனுக்கன்று, உமக்கும் சகலமான ஜனங்களுக்கும் ரக்ஷகரா யிருக்கிறார்; அவர் உன்னிலுமிருக்கிறார் என்னிலு மிருக்கிறார் என்று சொன்னார். வாதி அவரைப் பலவிதத் தொந்தரவுகளால் கொன்றுவிட முயற்சித்திருக்கிறார். 2-ம் பிரதிவாதியின் உதவியில்லாவிட்டால் வாதியின் கொடும் இம்சையால் 1-ம் பிரதிவாதி மாண்டே யிருப்பார்.

மேலே கண்ட காரணங்களால் வாதி தானே லோகேஸ்வர பட்டத்தை ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார். தானே ஏற்படுத்திக்கொண்ட பட்டத்தையும், அக்கிரம வழியில் சம்பாதித்த அரசாங்கத்தையும் நியாயஸ்தல மூலம் பரிகாரம் கேட்பது விந்தையானது. ஒருவன் தன் புஜபல பராக்கிரமத்தால்

ஒரு தேசத்தைக் கைப்பற்றி அரசாட்சி செய்யலாம். அவன் ராக்ஷதம்சை யுடையவனா யிருந்ததால் 2-ம் பிரதிவாதி சூட்சிசெய்து அவனை அழித்து வேறு அரசாங்கத்தை நிலை நிறுத்தினார். அக்கிரமஸ்தர்களை ஒழிக்கவும் வன் நெஞ்சர்களை அழிக்கவும் 2-ம் பிரதிவாதி தச அவதாரம் எடுத்திருக்கிறார். காரணமில்லாமல் ஒரு வஸ்துவை அவர் ஒழிக்கமாட்டார்.

ஒருவன் தன் சரீரத்தின்மீது மிகு பற்று வைத்தவனாய் இப்பூவுலகிலே நீண்ட காலம் வசிக்க ஆசை கொண்டால், 2-ம் பிரதிவாதியின் அன்பிற்குப் பாத்திரனாகவேண்டும். தங்கள் சரீரம் அழிக்கப்பட்டபின் பழைய சரீரத்திற்கு ஆசைப்படுவது வீண் ஆசையாகும். ஆகையால் வாதி கேட்கும் பரிகாரங்கள் செல்லத்தக்கதில்லை.

வாதி, 2-ம் பிரதிவாதி சிருட்டித்துக் காத்து அழித்தலைப்பற்றி மிகு பரிதாபப்பட்டுப் பேசுகிறார். இது அஞ்ஞான நிலையிலிருக்கும்போது துக்கத்தையும், ஞானநிலையி லிருக்கும்போது சந்தோஷத்தையும் கொடுக்கும். வாதியின் அறியாமையால் பிறப்பு இறப்பைப்பற்றி வருத்தப் படுகிறார். இறப்பும் பிறப்பும் உலக சகஜம். உலகிற்கு இன்றியமையாதது.

வாதி இந்தப் பிராதை அனாவசியமாய்க் கொண்டுவந் திருக்கிறார். இந்நீதிச் சபையில் நீதி யளிக்கக் கூலி வாங்கப்படுவதில்லை யாதலால், உபய வாதிகளுக்கும் செலவு நேர்ந்ததென்று பிரஸ்தாபிக்கக் காரணமில்லை. ஆயினும் வாதி 2-ம் பிரதிவாதிக்கு வீண் சிரமமளித்ததற்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமெனத் தீர்ப்பளிக்கிறோம்.

நாளது துந்துபி௵ சித்திரை௴ 30௳ நம்முடைய கையெழுத்தும். நியாயஸ்தல முத்திரையும் போடப்பட்டது.

அகண்ட பரிபூரணர்]
நீதிபதிபர்.''

எஸ். அயோத்திராம், திண்டுக்கல்.

---

## மாதர் நெறிகள்.

(304-ம் பக்கத் தொடர்ச்சி.)

22. முன்னோர் ஆசாரம்.—சகோதரிகளே! இக்காலத்தில் நமது ஆடவரில் பலர் நம் முன்னோர் ஆசாரங்களை யலட்சியம் செய்வதோடு தாங்கள் நம் முன்னோரினும் அறிவில் சிறந்தவர்களெனக் கருதுகிறார்கள். இவர்கள் அன்னிய பாஷைக் கல்வி கற்ற கோணல் வழியும், அன்னிய நாகரீக மயக்கமுமே இதற்குக் காரணம். நம் முன்னோர்கள் ஸ்திரீகள் விஷயமாக ஏற்படுத்தியிருக்கும் ஆசாரங்களனைத்தும் உங்களுடைய இம்மை நலத்தோடு மறுமை நலத்தை விசேஷமாகக் கருதியே யேற்படுத்தப்பட்டவை. அதனாற்றான் உங்கள் முன்னோர்களில் பலர் கற்பரசிகளென உலகத்தால் என்றும் போற்றப்படுவதோடு பத்தினித் தெய்வங்களாகவும் துதிக்கப்படும் அழியாப்



புகழ்பெற்று விளங்குகிறார்கள். ஆகையால் சகோதரிகளே! முன்னோர் ஆசாரங்களை யலட்சியமாகக் கருதி நவீன நாகரீக மயக்கில் சிக்கி இடருறா வண்ணம் எச்சரிக்கையா யிருங்கள். முக்கியமாக, உங்கள் பெண்மக்கள் இப் புதிய நாகரீகத்தைப் பின்பற்றும்படி விடாதீர்கள். அந்தோ நமது உத்தம மதாசாரத்திற்குக் காவலாளிகளாகப் புகழப்படும் நீங்களே நமது பெண்களுக்கு அந்நிய ஆசாரங்களைக் கற்பிப்பது உங்களுக்குப் பெரும் பாதகத்தை யுண்டாக்கும்." (தொடரும்.)

சீடன்.

---

## பெண்மக்கள் வேட்கை.

ஒழுக்கம் பற்றி மனிதர்கள் வகுத்துக்கொண்ட பிரிவுகள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், என நால்வகையேயன்றி, கடவுளால் பகுக்கப்பட்ட பிரிவுகள் ஆண் பெண் என இரண்டாகும். அவற்றுள், ஆண் மக்களின் தேகம் வெயிலிற் சென்று உழைத்துப் பொருளீட்டுவதற் கேற்றவாறு அமைக்கப்பட் டிருக்கின்றது. பெண் மக்களின் தேகமோ அவ்வாறின்றி நிழலிலேயே யிருந்து குடும்ப காரியங்களைக் கவனிக்கும் வண்ணம் மிக மென்மையுடையதாக அமைக்கப்பெற்றிருக்கிறது. அபலைகள், வஞ்சியர், மெல்லியர், என அவர்கட்கு வழங்கப்பெறும் பெயர்களும் அவர்களின் தேக நிலையைக் குறித்தே யென்ப.

இது காலைப் பெண்மணிகள், கற்பரசிகளாய் நம் நாட்டியற்படி குடும்ப காரியங்களைக் கவனித்தல் பெருமை யன்றென்றும், மேல் நாட்டாரைப் போல் வெளியிற் சென்று பிற ஆடவருடன் உலவவும், பர புருஷர்களுடன் கை குலுக்கவும், பொது மன்றங்களில் அங்கம் பெறவும் விழைகின்றனர். அது நமது நாட்டிற்குத் தீமை பயக்கத் தக்கதென்பதே எமது கோட்பாடு.

எங்ஙனமெனின், அருந்ததி, அநசூயா, சீதா, தமயந்தி, நளாயினி, சாவித்திரி முதலாய கற்பரசிகளின் வழி வந்தவர்களாய நம் பெண்மணிகள், மேல்நாட்டுப் பெண்மக்கள்போல வெளிக்கிளம்பல், பிற ஆடவரோடூடாடல் இவை தீமைபயக்காவா?

வில் வேடனை எரித்தல், இரவி எழாமற் செய்தல், இயமனிடமிருந்து தனது கணவனுயிரை மீட்டல் ஆகிய அரிய செயல்களைப் புரிந்த கற்பரசிகள் போல் மேல்நாட்டில் மருந்துக்காவது ஒருவர் இருந்தாரெனக் கட்டுக் கதையேனுங் கூறக் கேட்டதுண்டா?

மேல் நாட்டுப் பெண்கள் சுவதந்தரம் பெற்ற காரணத்தால் அங்கு நடக்கும் வரம்பற்ற செயல்கள் செப்புந்தரத்தனவோ? புருடனுக் கடங்காப் பூவையர் பலர் நியாயமன்றங்களிலேறி வழக்கிட்டு, கொண்ட கணவனை விட்டு வேறு கணவனை மணந்து தமதிஷ்டம்போல் இன்பம் நுகர்தல் பலரும் நன்கறிவர்.

தன் புருடன் நீராடுவதில்லை யென வொரு பெண்ணும், தனது சகோதரியை இழித்துரைத்தனனென வோரிளங் கொடியும், தனக்கு தலைநோயுண்டாகும் வண்ணம் புகை யருந்துகின்றனனென வொரு தையலும், தன் கணவன் தனது கால் நகங்களை வாங்காமலிருக்கின்றன னென வொரு காரிகையுமாகப் பலர் பல அற்ப காரணங்களைக்காட்டி வழக்காடி ஜயம் பெறுகின்றனர். அந்நகர் நியாயமன்றக் கணக்குப்படி 1889 ஆண்டில் 522 வழக்குகளும், 1890 ஆண்டில் 541 வழக்குகளும், 1891 ஆண்டில் 526 வழக்குகளும், 1892 ஆண்டில் 536 வழக்குகளும் பெண்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புச் செய்யப் பெற்றதாக அறிகிறோம்.

இத்தகைய செயல்கள் கற்புடைய உத்தமிகளின் செயலாகுமா? அன்றியும் தமது தீயவொழுக்கங்களை மறைக்கும் பொருட்டுப் பெற்ற குழந்தையைப் பெட்டியில் மூடி உயிர் பிரித்த பெண்கள் எத்துணைபேர், கழுத்தை முறித்துக் கடைப்புறமெறிந்த கன்னிய ரெத்துணை பேர், தொட்டி நீரினில் துணிவுடனமுத்திய தோகைய ரெத்துணை பேர், மேல் நிலை மாடத்திருந்து கீழெறியும் மெல்லியரெத்துணை பேர், இத்துணைத் தீச்செயல்களை இந்தியர் குழுவிற் புகவிடுதல் நலமோ?

அறம் வளர்க்கும் அன்னையரே! சற்புத்திரரைப் பெறும் சகோதரிகளே! கற்புநிலை பிறழாத தெய்வீகவழி வந்த காரிகைகளே! ஆங்கில பாஷா பண்டிதர் பலரும் வெறுக்கத் தக்கவாறு பிற புருஷர்களுடன் வார்த்தையாடுதல் கை குலுக்குதல் முதலிவைகளை அறவே ஒழியுங்கள். உங்கள் நாயகர்களுக்கு அரிய விஷயங்கள் ஞாபகப்படுத்துங்கள். உங்கள் சிறுவர்களை வீர சிங்கங்களாகவும், ஞானப்பொக்கிஷங்களாகவும் விளங்கும்படி பழக்குங்கள். அப்பொழுதுதான் நீங்கள் நம் நாட்டின் வழி வந்தவர்களாகக் காணப்படுவீர்கள். மேல் நாட்டார் போல் நடந்து கற்புடைய மாதரசிகளிருந்த பரிசுத்த இந்திய நாட்டை அசுத்தப்படுத்தி விடாதீர்கள். உலகைக் கற்பின் மகிமையால் பெருமையுற நடத்திய சுவதந்தா தெய்வங்களாகிய நீங்கள் சுதந்தரம்வேண்டுமெனப் பிறர்பால் வேண்டுவது இழிதகையன்றோ!

கற்புடைய உத்தமிகளாகிய உங்களின் பெருங் கருணையாலன்றோ இந்நாடு ஞானபூமியாக விளங்குகிறது; நீங்களிரா விடில் நாயகர்கள் விரதங்களை ஒழுங்கு பெற அனுஷ்டித்தலும் அருமையன்றோ? அத்தகைய பெருமையை என்றும் நிறை வேற்றுங்கள்! நீங்கள் கனம் பெறுவீர்கள்! உலகமும் சுகம் பெறும்!

தி. வடிவேலு முதலியார்,
தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல், திருக்கோவிலூர்.
(இந்தியத்தாய்.)

---

## சந்தாநேயர்களுக்கு ஓர் அறிக்கை.

அடுத்த ஆடிமீ 8-ம் ஆண்டு பிறக்கிறது. இதுகாறும் அனுப்பியது போல் ஆடிமாத சஞ்சிகையை-வி பி யிலனுப்புவதற்குப் பதிலாக 7-ம்வருட



12-ம் மாதமாகிய ஆனிமீ சஞ்சிகையையே வி. பி யிலனுப்பி 8-ம் வருட சந்தாவை வசூலிக்கத் தீர்மானித் திருக்கிறோம். முன்பண மனுப்பாமல் வி. பி யில் சஞ்சிகை பெறுவதால் 3 அணா அதிகச் செலவும் வீண் ஆலசியம் முதலியவைகளும் நேர்வது யாவருமறிந்ததே.

ஆதலின் மேமீ 30உக்குள் சந்தாத்தொகை நம்மிடம் சேரும்படியனுப்புவோர்க்கே உருத்ரோத்காரி௵ பஞ்சாங்கம் இனாமாக அனுப்பப்படும். மேமீ 30உக்குள் பணமனுப்பாதவர்களுக் கெல்லாம் ஆனிமீ சஞ்சிகை வி. பி. யிலனுப்பப்படும்.

☞ 8-வது வருடம் சஞ்சிகை வேண்டாதார் மேமீ 31உக்குள் தெரிவித்து விட்டால் அவர்களுக்கெல்லாம் ஆனிமீ சஞ்சிகை சாதாரணமாக அனுப்பிவிடப்படும்.

சஞ்சிகையை நிறுத்தும்படி வரைவோரும், மணியார்டர் அனுப்புவோரும் சந்தா நம்பரைத் தெரிவிக்காவிட்டால் பின்னால் வி. பி. வரும். ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரும் தயவுசெய்து இம்மாதம் வரும் சஞ்சிகையின் மேல்விலாசத்தைப் பார்த்தாவது நம்பரை யவசியம் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## மாணவர்களுக்குச் சில போதனைகள்.

(302-ம் பக்கத் தொடர்ச்சி)

20. குற்றம்:—நண்பர்களே! குற்றம் செய்வது மனிதர் அனைவர்க்கும் இயற்கையே. அறிவாளிக ளனைவரும் தம்மாலான வரையில் குற்றமான காரியத்தைச் செய்யாம லிருக்கவே முயலுவார்கள். ஆயினும் அறிந்தோ அறியாமலோ குற்றத்தைச் செய்துவிடல் யாவர்க்கும் இயற்கையே.

ஆனால் சிலர் தாம்செய்த குற்றத்தை இன்னொருவர் மேல் சுமத்திவிடுகிறார்கள். சிலர் குற்றம்செய்ததை மறுத்து விடுகிறார்கள். சிலர் ஒரு காரியத்தை யன்னியர் செய்தால் குற்றம் என்கிறார்கள். ஆனால் அதேகாரியத்தைத் தாங்கள் செய்தபோது அது குற்றமல்ல வென்று வாதிக்கிறார்கள். ஒருவன் தான்செய்த குற்றத்தை மறுப்பது கோழைத்தனமாகும்; அதை மறைக்கப் பொய் கூறுதல் மூடன் செயலாகும்; அதை யின்னொருவன்மேல் சுமத்தல் அக்கிரமமும் பாவமுமான செயலாகும். தான் செய்த குற்றத்தை யொப்புக்கொள்பவனே பெருந் தன்மையுடைய உத்தமனாகும். தான் செய்யுங் காரியமாயினும் குற்றமானதைக் குற்றமென்றே கூறுகிறவனே மேலோனாவான். அத்தகையோனே அன்னியர்க்குப் போதிக்க வல்லவன். அத்தகையோனிடம் பாரபட்சமாவது அநீதியாவது இராது.

எப்போதும் தாம் செய்த குற்றத்தை யொப்புக் கொள்வதிலேயே சிறுவர்கள் பழகவேண்டும். அத்தகையோர் பிற்காலத்தில் பொய்பேசாத சத்தியவான்களாகப் பிரகாசிப்பார்க ளென்பது நிச்சயம்.

21. முன்யோசனை.—ஒரு காரியத்தைச் செய்ய உத்தேசிக்கும்போது, அப்படிச்செய்தால் அதனால் நமக்குப் பின்னால் நன்மையுண்டாகுமா தீமை யுண்டாகுமா என்று தீர்க்காலோசனை செய்வதற்கே முன்யோசனை என்று பெயர். அனேகருக்கு இக்குணம் குறைவே. அதிலும் வாலிபரிடம் அது மிக அரிது. பெரும்பாலான சிறுவர்கள் பெற்றோர்க்கும் உபாத்தியாயருக்கும் பயந்து, விதியில்லை யென்று பாடசாலைக்குச் செல்கிறார்களே யன்றி, கல்வியின் பயனையறிந்து கட்டாயம் நாம் கல்வி கற்கவேண்டுமென்ற ஊக்கத்தோடு கற்பவர் மிகச் சிலரே. மாணவர்கள் சிறுவயதி லிருந்தே எதையும் யோசித்து ஆராய்ச்சி செய்யப் பழகுவது, பிற்காலத்தில் உலக விஷயங்களில் ஈடுபடும் போது அவர்களுக்கு மிக்க பயனையளிக்கும்.

22. மூத்தோரையிகழ்தல்.—அனேகம் வாலிபர்களிடத்தில் இப்பழக்கம் இருக்கிறது. அதாவது வயது முதிர்ந்தவர்களாயின் அவர்கள் பேச்சையே யலட்சியமாகக் கருதல். அதிலும் ஆங்கிலங்கற்கும் மாணவர்கள் ஆங்கிலங் கல்லாத ஒருவன், அவன் எவ்வளவு வயது முதிர்ந்தவனாகவும், தாய்ப் பாஷையில் எவ்வளவு உயர்ந்த கல்வியும் முதிர்ந்த உலக அனுபவமும் உடையவனாகவும் இருப்பினும், அவனை மிக்க அலட்சியமாகவே மதிக்கிறார்கள். சிறுவயதிலிருந்தே நம் நாட்டு முதியோரைப் பற்றியும், பழைமையான ஆசாரங்கள் ஒழுக்கங்களைப் பற்றியும் மிக்க தாழ்வானமதிப்பு இவர்கள் மனதில் உண்டாய் விடுகிறது.

இவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படும் போதனா முறையே யிதற்குக் காரணம். இவர்கள் வாசிக்கும் புத்தகங்களில் "நம் நாடு பூர்வீகத்தில் மிக்க அநாகரீகமும், தரித்திரமும், அநீதியும், மடமையும், மலிந்த நாடாக விருந்தது. இப்போது தான் நாம் நாகரீகம் பெற்று செல்வமோங்கி உன்னத நிலைமைக்கு வந்துகொண் டிருக்கிறோம். நமக்குமுன் இருந்த சந்ததியார் சுத்த அநாகரீக மூடர்கள், மூடக் கொள்கையை யுடைத்தாயிருந்தவர்கள்" என்பது முதலான அபிப்பிராயங்களை யிவர்கள் மனதில் உண்டாக்கக் கூடிய படிப்பினைகளே யடங்கி யிருக்கின்றன. அதோடு அவற்றில் கூறப்படுவன யாவும் இவர்கள் இதுகாறும் காணாதனவும், இனியும் காணக்கூடாதனவுமாகிய தேசங்கள், பொருள்கள், ஆசார ஒழுக்கங்கள் முதலியவற்றைப் பற்றியனவே. நமது நாட்டின் பூர்வ நிலைமை, பெருமை, முன்னோர்களின் அரிய குணங்கள், பூர்வ நாகரீகம் முதலியவைகளைப்பற்றி இவர்கள் வாசிக்கும் புத்தகங்களில் பெரும்பாலும் கூறப்படுவதில்லை. அதாவது இப்புத்தகங்கள் அன்னிய மதம் அன்னிய ஆசாரங்களையுடைய மேல்நாட்டு மாணவர்களுக்கென்று எழுதப்பட்டவைகளே யாகும்.

அந்தோ வெள்ளைக்கடிதம்போல் ஒரு விஷயமும் பதியப்பெறாமல் களங்கமற்றிருக்கும் சிறுவர் மனதில் முதலில் எழுதப்படும் இந்த அபிப்பிராயங்கள்



நன்றாய்ப் பதிந்து விடுகின்றன. "நாம் வாசிப்பது உண்மைக்கு முற்றும் மாறானது அல்லது அனேகம் உண்மைகள் இவற்றில் மறைக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலை எழுதியவர்கள் தங்கள் சுயநலங்கருதியே வெள்ளையைக் கறுப்பென்று நாம் கருதும் வண்ணம் செய்கிறார்கள்" என்று இப்பாலியருக்கு அறியும் ஆற்றல் இல்லை. நம் நாட்டு அறிவாளிகளாகிய முதியோரே சமீபகாலம் வரையில் இத்தகைய வற்றை யுணராது மயங்கியிருந்தார்களென்றால், பாலியர்கள் எங்ஙனம் அறிவார்கள் ?

மாணவ சகோதரர்களே ! உண்மையறிந்து மயக்கமொழிந்து தெளிவு பிறந்திருக்கும் இக்காலத்திலேனும் உங்களிடமுள்ள கெட்ட அபிப்பிராயத்தை யடியோடு விட்டொழியுங்கள். ஆங்கிலங்கற்றதனாலேயே நாம் மூத்தோரினும் நம் முன்னோரினும் அறிவிலும் நாகரீகத்திலும் மேம்பாடுடையோம் என்று சிலர் கருதுவதை விடப் பெருந்தவறு வேறொன்று மில்லை.

நண்பர்களே! ஆங்கிலக்கல்வி, கொஞ்சநாட்களில் அழிவதும், பிறவிப் பெரும்பிணியை வளர்ப்பது மாகிய இவ் வுலகபோகத்தைப் பெறுவதற்கு மட்டுமே வழிகாட்டியாயுள்ளது. அந்தோ ஹிந்துக்களாகிய நமக்கு என்று மழியாத மறுமை யின்பமே அவசியமானது. நம் முன்னோர் கல்வி முறைப்படி சிறுவயதில், ஆரம்பத்திலிருந்தே, ஆன்மார்த்தத்தைப் பற்றி போதிக்கும் கல்வி சிறுகச் சிறுக ஊட்டப்பட்டு வந்தது. ஆகையால் எதிலும் மேற்பூச்சான பளபளப்பால் பிரமையடைந்து விடாதீர்கள். கண்மூடித்தனமாய் வீண் பிரமையடைந்து எல்லாவற்றிலும் அன்னியரைப் பின்பற்றி விடாதீர்கள். காலம் இடம் இவற்றின் பேதத்தால் ஒருவர்க்கு அமிர்தமாயிருப்பது மற்றொருவர்க்கு விஷமாக ஆய்விடும். விஷந்தின்றவன் அதற்கு முறிப்பாகிய வேறொரு விஷத்தை யருந்தினால் பிழைக்கிறான். அதை யறியாமல் இன்னொருவன் அதே முறிப்பு விஷத்தை யருந்தினால் மரித்துப் போவான். ஆகையால் கண் மூடித்தனமாக அன்னியரை எல்லா விஷயங்களிலும் பின்பற்றல் முடிவில் பெருந் தீங்கையே விளைவிக்கும் என்பது உண்மை. தங்கள் தேசாசார வொழுக்கங்களைக் கைவிடும் எந்த ஜாதியாரும், தேசத்தாரும், அன்னியரால் அவமதிக்கப்படுவதோடு ஒரு போதும் மேலோங்கி வரமாட்டார்கள்.

சகோதரர்களே ! இவையாவும் மனதில்வைத்து நம் முன்னோர் விஷயங்களை யவமதிக்காதீர்கள். அவர்கள் ஆழ்ந்த அறிவோடும் பிரத்தியட்ச அனுபவத்தின் பேரிலுமே ஒவ்வொரு ஏற்பாட்டையும் செய்திருக்கிறார்கள். யாவும் நம் இருமைப்பயன்களையும் கருதியே செய்யப்பட்டன. மூத்தோர் வார்த்தைகள் உலகஅனுபவத்தோடு பொருந்தியவை யாதலின் அவற்றைப் பொன்னேபோல் போற்றுங்கள். அது பற்றியே "மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தம்" என்று கூறப்பட்டது. (தொடரும்.)

சீடன்.

## இல்லறம்—ஜீவகதி.

(392-வது பக்கத் தொடர்ச்சி)

அன்றியும் ஆதி சிருஷ்டியில் பிதிர்த்தேவர்கள் பிரமதேவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இது முன்னமே கூறப்பட்டது. இவர்களையே தென்புலத்தாரென்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். இந்தத் தேவர்களே இந்தக் கிரியைகளுக்குரிய அதிதேவதைகள். நாம் முன்கூறியவாறு நமது திவசதர்ப்பணாதிக் கிரியைகளில் விடப்படும் நீர் முதலியவற்றை அவற்றிற்குரிய பிதிர்க்களுடன் சேர்த்துவிடுவார்கள். முன்பு அது கூடுவது இயற்கையாமென்று கூறினோமாயினும் பிதிர்த்தேவர்களும் காரணமாயிருக்கின்றார்கள். பிதிர்க்கர்மங்கள் எல்லாவற்றிற்கும் இவர்களே பிரதான தேவர்கள். பிதா, பிதாமகன், பிரபிதாமகன் (மூன்றாம் பாட்டன்) மாதா, பிதாமகி, பிரபிதாமகி இவர்களாகப் பாவித்து, நாம் கொடுக்கும் பதார்த்தங்களையும் தட்சிணைகளையும் ஏற்றுக்கொள்வதற்காக ஆவாகனம் செய்யப்படுகிறார்கள். இவர்களை அழைப்பதற்காகத் திவசதிதிக்கு மூன்று நாட்கள் முன்பாகவே கர்த்தா விரதம் அனுஷ்டிக்கவேண்டும். அம்மூன்று நாட்களிலும் அவன் பிரமதியானத்திலிருக்கவேண்டும். பிரமதியானத்தாலும் விரதத்தினாலும் நிர்மலமாயிருக்கும் இதயதாமரையில் பிதிர்த்தேவர்கள் ஆவிர்ப்பவிப்பார்கள். அப்போது அந்தத் தேவர்களைப் போஜனம் செய்பவர்கள் முதலியவர்கள் பேரில் ஆவாகனம் செய்கிறார்கள். பிதிர்த்தேவர் அவர்களிடத்தில் பிரத்தியட்சமாய் நின்று நாம் கொடுப்பனவற்றை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டவைகளை நமது பிதிர்க்கள் எந்த இடத்திலிருந்தாலும் அவ்வவ்விடங்களிற் சேர்ப்பித்து விடுவார்கள். இவ்வாறு இயற்கையாலும் தெய்வ சகாயத்தாலும் நமது பிதிர்க்களைக் குறித்து நாம் செய்கிற புண்ணியங்களும் தான தர்ம பலன்களும் அவர்களிடம் சேர்ந்துவிடுகின்றன. இவ்வாறு கர்மங்களைச் சிரத்தையோடு செய்கிறவனைப் பிதிர்த்தேவர்கள் ஆசீர்வதிக்கின்றார்கள். இதனால் கர்மத்தைச் சிரத்தையாகச் செய்கிறவனும், அவனுடைய புத்திரன் பேரனாகிய இவர்களும் பாவனமாகிறார்கள். இவர்களோடு முன் கூறிய பிதா பிதாமகன் பிர பிதாமகன் இவர்களைக் கூட்டி ஏழுதலைமுறை என்று கூறப்படும். அதாவது கர்மஞ் செய்கிறவனுக்கு முன் மூவர், பின் மூவர், கர்த்தாவாகிய அவன், இவ்வெழுவர்களு மாசீர்வதிக்கப் படுகின்றார்கள்.

சொர்க்கத்தில் உள்ளவர்கள் தாம் பூலோகத்திற் செய்த புண்ணியத்தின் பயனாகிய சுகமொன்றையே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். நரகலோகத்திலுள்ளவர்கள் பாபபலனாகிய துக்கத்தையே அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். அவ்விடங்களில் (பாப புண்ணிய)[*] கர்மங்கள் ஒன்றுஞ் செய்யப்படுவதில்லை. பூலோகத்தில் செய்ததின் பலனையே அனுபவிக்கவேண்டும். அப்படி அனுபவித்துக்கொண்டிருக்கும்போது பூலோ



கத்தில் அவர்களைக் குறித்துச் செய்யப்படுகிற புண்ணிய பலன் அவர்களையடையும். அடைதலால் சொர்க்கத்திலுள்ளவர்கள் இன்னம் சிறிதுகாலம் அவ்வுலக போகங்களை அனுபவிப்பார்கள். நரகத்திலுள்ளவர்களுக்கு மிகவும் உபகாரமாயிருக்கும். ஏனெனில் அவர்கள் பாபபலனை அனுபவிக்கிறபோது இந்தப் புண்ணிய பலன் ஏறும். புண்ணியம் ஏறவே பாபபலன் குறையும். அதனால் அந்த ஆத்மாக்கள் சீக்கிரத்தில் நரகத்தை விட்டு நீங்கும். நரகத்தினின்றும் நமது பிதிர்க்களை விடுவிப்பதற்காகவும், புண்ணியவுலகங்களில் வசிப்பவருடைய புண்ணிய பலனை விருத்தியாக்குவதற்காகவுமே சிராத்தாதி பிதிர்க்கர்மங்கள் செய்யப்படுகின்றன. சிரத்தையுடன் செய்யப்படுவதால்தான் திவசத்திற்குச் சிராத்தமென்று பெயரிடப்பட்டது. இந்தக் கிரியையினால் நரகத்தில் வருந்துகிறவர்களும் அதினின்றும் தப்பித்துக் கொள்ளும் மார்க்கமறியாதவர்களுமாகிய முன் மூன்று தலைமுறையாரைக் காப்பாற்றுகிறதாக இதனாலுண்டாகும் புண்ணியம் அளவற்றதாம். எந்தக் கர்மத்தை விட்டவனானாலும் பிதிர்க் கர்மத்தைப் பக்தி சிரத்தையுடன் செய்வானானால் புண்ணிய லோகத்தையடைவான்.

இவ்விஷயத்தில் மனு—“வேதங்களை யோதித்தத்துவஞான முணர்ந்தவனே பிதிர்க்கிருத்தியத்தில் போஜனத்துக்கு முக்கியமாக வரிக்கத்தக்கவன், அல்லது வேதங்களை அங்கங்களுடன் ஓதினவன் அருகனாவான்; அல்லது வேதம்மாத்திர மோதினவன். இவர்களைத் தவிர மற்றவர்கள் சிராத்த போஜனத்தில் வரிக்கத்தக்கவர்களல்லர். சிராத்தத்துக்கு இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது முன்னதாகவே முற்குறித்த சற்பாத்திரர்களைச் சிராத்த போஜனத்துக்காக வரிக்கவேண்டும். இப்படியுபசரித்து வரிக்கப்பட்டவனும் கர்த்தாவும் அதுமுதல் சந்தியா வந்தனந்தவிர வேறொரு ஜபம் செய்யாமலும் வேதாத்தியானஞ் செய்யாமலும் சம்போகாதிகளில்லாமலும் ஜிதேந்திரியர்களாய்ப் பிரமதியானத்திலிருக்கவேண்டும். ஏனென்றால் விதிப்படி பூஜித்து வரிக்கப்பட்டவனிடத்தில் அப்போதே பிதிர்த்தேவர்கள் வாயுரூபமாகப் பிரவேசிக்கிறார்கள். ஆதலால் வரிக்கப்பட்ட அக்கால முதல் அவன் விரதானுஷ்டானம் செய்யவேண்டும். வேதமோதினவனிடத்தில் சகல தேவர்களும் வசிக்கிறார்களாதலால் அவன் பரிசுத்தமானவன். அவனிடத்தில் பிதிர்த்தேவதைகள் உடனே பிரசன்னராகிறார்கள்.”

இங்ஙனங் கூறப்பட்டவன், ஐந்தாம் வயதில் உபநயனஞ் செய்யப்பெற்றுப், பிரமசரிய விரதமுடையவனாய்க் குருகுலவாசம் செய்து, ஜிதேந்திரியாய்க் குருபணிவிடை செய்து சதா வேதசிந்தனையிலிருப்பவனாதலால் அவனிடத்தில் சகல தேவர்களும் வசிப்பார்கள் என்றார். அன்றியும், “அநாதி தேவர்களான பிதிர்க்கள் சின மில்லாதவர்களாயும், உள்ளும் புறம்பும் பரிசுத்தர்களாயும், எப்போதும் பிரம்ம விசாரஞ் செய்பவர்களாயும், சண்டை

யில்லாதவர்களாயும், மஹானுபாவர்களாயும், கருணையுள்ளவர்களாயுமிருக்கிறார்கள். ஆதலால் கர்த்தாவும், போக்தாவும் (புசிக்கிறவனும்) விரதானுஷ்டானம் செய்யவேண்டும்.'' இப்படிச் சிரத்தையுடன் சிராத்தம் செய்தால் பிதிர்த்தேவர்கள் திருப்தி யடைவார்கள். நமது பிதிர்க்களும் நற்கதி பெறுவார்கள். கர்த்தாவும் சந்ததி, செல்வம், ஆயுசு, ஆரோக்கியம் முதலிய பெற்று நீடித்து வாழ்வான்.

இவ்வாறு சிராத்தம் செய்வதால் கர்த்தாவடைவதெவ்வாறென்னில், கிருதக்ஞை (நன்றியறிதல்) என்னும் பெரும் புண்ணியத்தைப் பெறுகிறான். நன்றி என்பது உபகாரம். "நன்றி மறப்பது நன்றன்று'' என்று தேவர் கூறினார். அன்றியும்

"எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

என்று கூறி, நன்றி செய்தவரை யெழுபிறப்பிலும் மறக்கக் கூடாதென்றும், மறந்தானானால் அந்தப் பாபத்துக்கு வேறு பிராயச்சித்தமில்லை யென்றுங் கூறினார். இதனால் நன்றியறிவு பெரும் புண்ணியமாமென்றும், மறத்தல் மஹாபாவமாம் என்றும் புலப்படும். தாய் தந்தையர்களைப்போல உபகாரம் செய்தவர் வேறெவருமில்லை. இம்மை மறுமைப் பயன்களையும் மோட்சத்தையு மடைவதற்குச் சரீரமே காரணம். மனித சரீரம் மற்றெல்லா சரீரங்களையும் விட மேலானது. அவ்விதமான சரீரோற்பத்திக்குக் காரணர்களாயிருந்து புத்திரர்களைப்பெற்று, அவர்களுக்கு ஒரு கெடுதியும் வாராமல் காப்பாற்றி, உலக அறிவையும் உலகங்கடந்த தெய்வபக்தியையும் புகட்டி வளர்த்த உபகாரத்திற்குக் கைம்மாறு யாதொன்றுமில்லை. அவர்கள் சரீர போஷணாதி உபகாரங்களைச் செய்யாவிட்டால் இம்மை மறுமைப்பயன்களை யொருவன் அடைவதில்லை. யாவற்றுக்கும் காரணமான சரீரோற்பத்திக்குக் காரணர்களான மாதா பிதாக்களாகிய உபகாரிகள் எல்லாரையும்விட மேலானவர்களென்பதில் தடையில்லை. ஜனன முதல் மோட்சபரியந்தம் நினைக்கத்தக்க பேருபகாரத்தைச் செய்த மாதா பிதாக்களை நரகதுன்பத்தினின்றும் விடுவிப்பதற்கும், சொர்க்காதிபுவன போகங்களை விருத்தியாக்கி அவர்களை மகிழ்விப்பதற்கும் இந்தக் கிரியை எவ்வளவு சிறப்புடையது! நன்றியறிதலாகிய இவ்வுபகாரத்தினால் பெறப்படும் புண்ணியமும் மஹாபெரிதேயாம். சிராத்தமென்கிற இந்தக்கன்மம் எல்லாவற்றிலும் பெரிது. இதை விட்டவன் ஆரியகுலத்தானாகமாட்டான். நம்முன்னோர்களா லேற்படுத்தப்பட்ட இது இந்தக் கலிகாலத்திலும் விடாமற் செய்யப்பட்டு வருகின்றது. கிற்க, .



சொர்க்காதி போகங்களை யனுபவித் தொழிந்ததும், நரகத்திலிருந்து விடுபட்டதுமான ஆன்மா அதோகதி மார்க்கத்தையடைந்து பிதிர்லோகமாகிய சந்திர மண்டலத்தையடையும். அவ்விடத்தில் பரிபாகப்பட்டிருக்கிற சரீரோற்பத்தி காரணவணுக்களைக் கிரகித்துக்கொண்டு சிலநாளங்கிருக்கும். நன்றாய்ப் பரிபாகப்பட்ட பின் மீண்டும் பூமியை நோக்கி வரும். எவ்வாறு வரும் எனில் சந்திரனிடத்திலிருந்துண்டாகும் பனியின் வழியாகப் பூமியிலிறங்கும். பூமியிலடங்கிக்கிடக்கும் செடி கொடி விருட்சங்களிற் பிரவேசிக்கும். பிரவேசித்த அந்த ஜீவனே வித்து சொருபமாகும். பாபசேஷமுள்ள ஆன்மா அப்பாவத்திற்கேற்ற ஈனசரீரத்தையும், புண்ணிய சேஷமுள்ளவை அப்புண்ணியத்துக்கேற்ற உயர்ந்த சரீரத்தையும் பெறும். (இன்னும் வரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

உ

# பகவத்கீதை வசனம்.

## விநாயகர் காப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து விளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஐந்து திருக்கரங்களையும், யானை முகத்தையும், மூன்றாம் பிறைச்சந்திரனை யொத்த பிரகாசம் பொருந்திய ஒற்றைக் கொம்பினையும் உடையவரும், பரமசிவனது மூத்த குமாரரும், ஞானக்கொழுந்துபோல் பிரகாசிக்கும் திருமேனியை யுடையவருமாகிய விநாயகக்கடவுளது பாதகமலங்களை யடியேன் சித்தத்தில் வைத்துத் துதிக்கின்றேன்.

---

## பரம்பொருள் வணக்கம்.

உலகமுதற் பொருளையும்பர்க் குணர்வரிதாம் பொருளை
யோதியவே தாகமத்தி னுச்சியினுட் பொருளைப்
பலகலையின் பொருள்முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப்பற் றியபெரியோர் பரவியவான் பொருளை
யலைதிவலை நுரைகடலி லுதித்தொடுங்கு மாபோ
லகிலாண்ட முதித்தொடுங்கு மதன்மூலப் பொருளை
யிலகியசற் குருவாகி யாளுகும் பொருளை
யெங்குமாம் பரம்பொருளை யாமும்வணங் குதுமே.

இந்த அண்டாண்ட சராசரங்களுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள வஸ்துவை, தேவர்களாலும் உணர்வதற்கரிதாகிய பொருளை, வேதாகமங்களின் முடிவாகிய கருத்தாயுள்ள பொருளை, எல்லா சாத்திரங்களின் கருத்துகளும் எப்பொருளில் போய் முடிகிறதோ அப்பொருளை, இகபரபோக ஆசை யாவும்ஒழித்துப் பரம்பொருளே பற்றாகவுடைய மகான்கள் நேசிக்கும் மேலான பொருளை, அலை, திவலை, நுரை முதலியவை கடலிலே தோன்றிக் கடலையே யிடமாகக் கொண்டிருந்து, கடலிலேயே இலயமாவதுபோல், இந்த அகில அண்டங்கள் அனைத்தும் எந்த வஸ்துவினிடத்தில் தோன்றி, எந்த வஸ்துவினிடத்தில் நிலைத்திருந்து, எந்த வஸ்துவிலேயே இலயமாகிறதோ, யாவற்றிற்கும் மூலகாரணமாகிய அத்தகைய பொருளை, எந்தப் பொருள் தன்மை முன்னிலையாகிய ஆசாரியராகவும் நானாகவும் எல்லாமாகவும் விளங்கி யிருக்கின்றதோ, எங்கும் நிறைந்த அத்தகைய பரம் பொருளைத் திரிகரண சுத்தியோடு போற்றுவோமாக.

---

## தக்ஷிணாமூர்த்தி துதி.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலா
யெல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் [வாம்.
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்

வேதாகமங்களனைத்தும் கற்றுணர்ந்து, முடிவான ஐக்கிய நிலையைப் பெறும் வழியைப் போதிக்க வேண்டுமென்று தவம்புரிந்த ஜனக ஜனாதிகளுக்காகக் கல்லால விருட்சத்தின்கீழ் குரு மூர்த்தமாக எழுந்தருளி, மனோவாக்குக் கெட்டாத அகண்ட பரிபூரணமான மௌன சாக்ஷாத்கார நிலையைச் சின்முத்திரைக் குறியால் சொல்லாமற் சொல்லி யருளிய தட்சணா மூர்த்தத்தை மனமற்ற நிலையில் நாடிப் பிறப் பிறப்பாகிய பவப்பிணியை யொழித்து நித்தியானந்த நிலையை யடைவாம்.

---

## நூல்.

## கண்ணன் துதி.

ஐவகைப் பொருளு நான்கு காணமுங் குணங்கண் மூன்றுஞ்
செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

ஐந்து வகையாகிய பஞ்ச பூதங்களும், பிராணாதி பஞ்ச வாயுக்களும், கன்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், அந்தக் காணங்களும், சத்துவம், ரஜசு, தமசு என்ற முக்குணங்களும், புண்ணிய பாவங்களாகிய



வினைகளும், யாவும் தாமேயாகப் பொருந்தி (அஞ்ஞானிகள்) அனைவரும் பிரமிக்கும்படி நிற்கின்றவரும், பொய்யாகிய மாயாந்தகாரமானது ஒழியும் வண்ணம் ஞானார்த்தம் நிறைந்த கீதா சாத்திரமென்னும் கிரணங்களைப் பரப்பிய பரமாதித்தனாகியவரும், திருக்கரத்தில் ஏந்திய சக்கரத்தையும் சிவந்த கண்களையு முடையவருமாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை இருதயத்தில் வைத்துத் துதிப்பாம்.

கீதை யெனின் பாட்டு என்று சாதாரணமான பொருள். பூர்வ சரித்திரத்தைக் கூறுவதற்கும் கீதை யென்று பெயர். ஈண்டு அப்பொருளே. கீதையில் பகவற்கீதை, ரிபுகீதை, பிரம்மகீதை, ஈசுரகீதை அல்லது சிவ கீதை, உத்தரகீதை, அவதூதகீதை எனப் பலவகையுண்டு. யாரார் எதைக் கூறினார்களோ அவரவர்கள் நாமதேயமே அததற்கு வைக்கப்பட்டது. நாம் இங்கு கூறத்தொடங்குவது பகவற் கீதை. கிருஷ்ணபகவானால் கூறப்பட்டதற்கு பகவற்கீதை யென்று பெயர். கீதைகளில் விசேடமாக உலகில் போற்றப்படுவது பகவற்கீதையே யாகும். இதற்குப் பரமார்த்த தரிசனம் என்றும் பெயர்.

இராமாயணத்தில் வாசிஷ்டம் எப்படி அதன் சிரோபூடணம்போல் விளங்குகிறதோ, அதுபோல் பாரதத்திற்கு இக்கீதை சிரோபூடணமா யிருக்கிறது. கிருஷ்ணபகவான் இக்கீதையைப் பாரத யுத்தாரம்பத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததாக வியாஸர் தாம் எழுதிய பாரதத்தில் கூறுகிறார். இது அர்ச்சுனனுக்குக் கூறப்பட்டதாக விருந்தாலும், உலகோர் அனைவர்க்கும் மேலான ஒப்பற்ற பிரம்ம ஞானத்தை யுதவக்கூடிய தென்பது வெளிப்படை.

சிலர், யுத்த ஆரம்பத்தில் யுத்த களத்தில் இவ்வளவு விஷயங்களைக் கிருஷ்ணர் எப்படிப் போதித்திருப்பார்? அதற்கு அவகாச மேது? என்று சங்கிக்கிறார்கள். இது கீதையின் பயனைத் பெறத்தக்க நல்வினைப் பயனில்லாக் குறையாலுண்டாகும் சந்தேக விபரீத புத்தியேயாகும். கையிற் கிடைத்தது ஜராமரணத்தைப் போக்கும் அமிர்தம் என்று தெரிந்தவரையில் அதை யருந்திப் பயன் பெறுவதைவிட்டு, “இது எப்படி இங்கு வந்தது? யார் கொண்டுவந்து வைத்தது?” என்பது முதலிய கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வீண்காலம் போக்குவது மதியீனமே யன்றோ. பகவான் அர்ச்சுனனுக்குக் கீதையை யெந்தச் சமயத்தில் போதித்ததாக விருப்பினும் இருக்கட்டும். அல்லது உலகோபகாரமாக வியாச பகவானே இப்பிரம்ம ஞான போதனையைப் பாரதத்திற் சேர்த்ததாக விருந்தாலு மிருக்கட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. எக்காரணத்தாலோ வெளிவந்த இவ்வரும் பொருளை யுணர்ந்து பயனடைய முயல்வதே நமது கடமையாகும்.

வேறு சிலர் “அர்ச்சுனன் தன் சுற்றத்தார் ஆசாரியர்கள் முதலியவர்களை யெல்லாம் கொன்றுவிட்டு அநித்தியமாகிய இப்பூமியை யாள்வதில்

யாது பயன்? நான் அடவிக்குச்சென்று தவம் புரிந்து நற்கதி பெறவேன் என்று கூறியது நன்மார்க்கந்தானே. அப்படியிருக்கக் கிருஷ்ணர் அவனுக்கு எதைப் போதித்தாராயினும், கடைசியில் யுத்தம் செய்து யாவரையும் கொல்லும்படிதானே அவனைத் தூண்டினார்? அது அக்கிரமமான செய்கைதானே'' என்கிறார்கள்.

அர்ச்சுனன் உலகமுதல் பரபோகம் ஈறாக யாவும் அநித்தியம், சடம், துக்கம் என்று நித்தியா நித்திய வஸ்து விவேகம் ஜனித்து ஞானவைராக்யம் கொண்டு தவத்திற்குச் செல்ல முயலவில்லை. ஆனால் நான் என்பதும், இவர்கள் என் சுற்றத்தார் என்பதுமாகிய பிராந்தியில் அழுந்தி, சோக மோக வயத்தனாய்த் தன் க்ஷத்திரிய தருமத்திற்கு மாறாக நடக்கக் கருதினான். சோகமோகம் தமோகுணமாகிய அஞ்ஞானமேயாகும். ஆகையால் பகவான் அவனுக்கு ஆத்மஞான விளக்கமுண்டாகச் செய்து சோகமோகங்களை யொழித்து, அவன் தன் தருமத்தின்படி யொழுகும்படி செய்தார்.

இக்கீதை கிருஷ்ணார்ச்சுன சம்வாதமாகப் பதினெட்டு அத்தியாயங்களில் கூறப்பட்டிருக்கிறது.

## 1-வது சோக அத்தியாயம்

பாண்டவர்கள் பனிரண்டு வருடங்கள் வனவாசமும் ஒருவருடம் விராடதேயத்தில் அக்கியாதவாசமும் கழித்த பின், தங்கள் தாயபாகத்தை யளிக்கும்படி துரியோதனனைக் கேட்டார்கள். துரியோதனன் ஊசி நாட்டுமிடமும் அவர்களுக்குக் கொடேனென்று மறுத்ததாலேயே பாரதப் போர் உண்டாயிற்று. 'சஞ்சயர்'* அன்றாடம் குரு க்ஷேத்திரத்தில் நடக்கும் சமாசாரத்தைக் கண்ணில்லா வரசனாகிய திருதராட்டிரனுக்குக் கூறிக் கொண்டிருந்தார்.

துரியோதனாதியரும் பாண்டவர்களும் தத்தமது சைனியங்களோடு புண்ணிய பூமியாகிய குருக்ஷேத்திரத்தி†ல் போய் சேர்ந்த பின், திருதராட்டிர மகாராஜன் சஞ்சயரை நோக்கிப் பின் வருமாறு வினவலுற்றான்:—

"ஓ சஞ்சயரே! புண்ணிய பூமியாகிய குரு க்ஷேத்திரத்தில் யுத்தம் செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடு ஒருங்குகூடியிருக்கும் நமது புத்திரர்களும் பாண்டு மைந்தர்களும் என்ன செய்கிறார்கள்?'' என்றான்.

[தன் புத்திரர்களும் பாண்டவர்களும் யுத்தம் புரியவேண்டியே அங்கு சென்றிருக்கிறார்கள் என்பதை யுணர்ந்த திருதராட்டிரன் அவ்வாறு பொதுவாய்க் கேட்பானேன்? என்றால், அவனுக்கியற்கையாயுள்ள பாரபக்ஷ புத்தி

* 'சஞ்சயன்' என்றால் இராகத்துவேஷாதிகளை வென்றவன் என்று பொருள்.

† குரு க்ஷேத்திரம்=குரு பூமி.



யாலுண்டான சந்தேகமே அதற்குக் காரணம். என்னை யெனின், பாண்டவர்கள் தருமிஷ்டிகள் ஆதலால் யுத்த பூமியில் சென்ற பின் அந்தோ இத்தனை ஜீவர்களைக் கொன்றன்றோ நாம் ஜெயம் பெறவேண்டும் என்று சிந்தித்து ஜீவகாருண்ய மேலீட்டால் யுத்தம் புரியாமற் போய்விடுவார்களே யாகில் நமது புத்திரரே ஒரு கஷ்டமுமின்றி முழு இராஜ்ஜியத்தையும் அடைவார்கள்; அப்படிக்கின்றி அப்புண்ணிய பூமியின் தரிசன விசேடத்தால் நமது புத்திரராகிய துரியனாதியர் பாண்டவர்மேல் பச்சாத்தாபமடைந்து, முன்பு கபடமாகச் சூதாடி யபகரித்த இராச்சியத்தைப் பாண்டவர்களுக்கே கொடுத்து விடுவார்களாயின் யுத்தம் செய்யாமலே இராச்சியத்தின் ஓர் பாகத்தை யிழந்து விடுவார்களே, ஒரு சமயம் இத்தகைய விஷயம் ஏதேனும் நடைபெறுகிறதோ வென்ற மனக்கலக்கங் கொண்டே திருதராட்டிரன் அவ்வாறு 'என்ன செய்கிறார்கள்' என்று பொதுவாய் வினவினான்.

சஞ்சயர்:—கேளும் திருதராட்டிர மகாராஜனே! யுத்தத்தின் ஆரம்பத்தில் தமது புதல்வனும் அரவக்கொடியோனுமாகிய துரியோதனன் யுத்தத்திற்கு ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருக்கும் பாண்டவர்கள் சேனையைக்கண்டு துரோணாசாரியரை நெருங்கிப் பின்வருமாறு கூறினான்:—

"ஓ! துரோணாசாரியரே! துருபதராஜ புத்திரனாகிய திருஷ்டத்யுமனன் என்பவனால் பலவித அணிகளாக வகுக்கப்பட்டதும், யுத்த சாமார்த்தியத்தில் பீமார்ச்சுனர்களுக்குச் சமானமானவர்களாய்க் கருதப்பட்ட விராடன், துருபதன், திருஷ்டகேது, சேகிதானன், குந்திபோஜன், முதலிய அரசர்களும் இன்னும் அபிமன்னு முதலிய மகாரதரான அனேக அரசர்களும் படைத்தலைவர்களாய் அமையப்பெற்றதுமான பாண்டவாது திரண்ட சேனையை நோக்குவீராக.

எனது சேனையில் மிக்க சுத்தவீரராகிய தாங்கள் இருக்கிறீர்கள். அவ்வாறே பீஷ்மபிதாமகர், எனது பிராணசிநேகனும் அங்கதேசாதிபதியுமாகிய கர்னன், அசுவத்தாமர், கிரிபாசாரியர், விகர்ணன், சல்யன், பகதத்தன் முதலிய அனேகம் சூரர்கள் எனக்கு ஜெயம் உண்டாக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு தங்கள் அருமையான பிராணன்களைத் தத்தம் செய்ய ஆயத்தமாக வந்திருக்கிறார்கள். மேலும் என்னுடைய சேனை பதினொரு அக்ரோணியிருக்கிறது. பாண்டவர் சேனையோ ஏழக்ரோணியே யிருக்கிறது. இனி அவரவர்கள் தத்தமது சேனைப் பகுதிகளை அதனதன் இடத்தில் நிறுத்திப் பிரியாமல் சாக்கிரதையோ டிருந்து சேனாதிபதியான பீஷ்மபிதாமகரை நாற் புறங்களிலும் காத்துக்கொள்ளுங்கள்'' என்றான்.

(தொடரும்)

சீடன்

## கனவு.

கனவு அல்லது சொப்பனம் என்பது ஜீவர்கள் அஞ்ஞான தசையில் அனுபவிக்கும் சாக்கிரம் முதலிய அவஸ்தைகளில் ஒன்று. அது சாக்கிரத்திற்கும் சுழுத்திக்கும் இடையிலுள்ள நிலைமை. இந்த நிலைமையில் தசவாயுக்களும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும், ஐந்து வகையாகிய அந்தக் கரணமும் தொழில் செய்கின்றன.

கனவு எப்படி யுண்டாகின்றது?

சாக்கிரத்தில் நடப்பதுபோன்றே கனவில் தோன்றுகிறது. கனவு காணும்போது சாக்கிரம்போல் அது பிரத்யக்ஷமான உண்மை யென்றே தோன்றுகிறது. ஆயினும் சாக்கிரத்திற்கும், சொப்பனத்திற்கும் மிக்க வித்தியாசமுண்டு. கனவில் ஆன்மா சாக்ஷி மாத்திரமாய் நடக்கும் விவகாரங்களைக் காண்கிறதே யன்றி அதிகமான அறிவு விளக்கமில்லை. விவேகம் மங்கி யிருக்கிறது. அதனால் அசம்பாவிதமான விஷயங்களைக் கண்டாலும் அது ஒரு அதிசயமெனத் தோன்றாது. திருட்டாந்தமாக சாக்கிரத்தில் ஒரு நாய் வானத்தில் நடந்துசெல்லக் காண்போமேயாயின் எவ்வளவோ வியப்பும் பிரமையு மடைவோமன்றோ. அதே காட்சியைக் கனவிற் கண்டால் வியப்பே தோன்றாது. ஏனெனில் கனவில் பூர்வம் நடந்த விஷயங்களின் நினைவில்லை. அப்போது காண்பது மட்டில்தான் தெரியும். அதுவும் அப்போதுதான் தோன்றியதாகத் தெரியாது.

கனவில் சாக்கிரத்தில் நடந்த விவகாரங்களின் நினைப்புவரின் அப்போது காண்பது கனவென்ற ஞாபகம் வரும். அது வந்தவுடனே கனவு ஒழிந்து விழிப்பு வந்துவிடும். இறந்த காலத்தைப்போல் எதிர்கால சிந்தனையும் கனவில் இல்லை. கனவில் ரயிலில் ஏறிக்கொண்டு செல்வதுபோல் கண்டால், அப்படிச் செல்வதுமட்டும் தெரியுமன்றி இன்ன ஊருக்குப் போகவேண்டும் இன்ன காரியம் செய்யவேண்டும் என்பன முதலிய சிந்தனையிராது. ஆகவே கனவில் ஆன்மா சாட்சிமாத்திரமாய் இருந்து நடப்பவற்றைக் காண்கிறது. அதனாற்றான் நாம் 'கனவு காண்கிறது,' 'கனவு கண்டேன்' என்று கூறுகிறோம்.

1\. சிலர் கனவு காணும்போது ஆன்மா வெளியிற்சென்று, அங்குள்ள வஸ்துக்களைக் காண்கிறது என்று கருதுகிறார்கள். இது முற்றும் தவறான கொள்கை. ஆன்மா இந்திரியங்கள் கரணங்கள் முதலியவை யடங்கிய சூக்கும தேகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால்தான் கனவு நிகழும். அப்படி சூக்கும தேகத்தோடு ஆன்மா ஸ்தூல தேகத்தைவிட்டு வெளிப்படுவதாயின் தேகம் சவமாகி விடவேண்டும். கனவு காணும்போது பிராணன் ஸ்தூல தேகத்தில் இயங்கிக்கொண் டிருப்பதால் சவமாக மாறவில்லை யென்பது பிரத்யக்ஷம்.

அதோடு, அப்படி ஆன்மா வெளியிற்சென்று அங்குள்ளவற்றைக் காண்பதாயின் கண்டவைகள், காலம் இடம் பொருள் யாவும், சத்தியமானவைகளாக விருக்கவேண்டும். அப்படி யில்லை. நடு இரவில் கனவு காண்பவன் மத்தியான சூரியனைக் காண்கிறான். மேலும் ஆன்மா தேகத்தை விட்டு வெளிப்போந்தால் மறுபடி அதே தேகத்திற்கு வந்து நுழைவதில்லை.



2\. சிலர் சாக்கிரத்தில் கண்ட பதார்த்தங்களே கனவில் தோன்றுகின்றன வென்கிறார்கள். கனவிலோ எந்த வஸ்துவையும் நாம் முன்பு கண்டதாக உணர்ச்சியே யில்லை. ஒருவன் "நான் கனவில் புலியைக் கண்டேன்" என்கிறானேயன்றி "நான் நேற்று ஸர்கஸ் விளையாட்டில் கண்ட புலியைக் கனவில் கண்டேன்" என்று கூறுவதில்லை. மேலும் நான் சாக்கிரத்தில் கண்டவற்றையே கனவில் காண்கிறோமென்ற நியமமில்லை. என்றும் கண்டிராததையும், இயற்கையில் சம்பவிக்க முடியாததையும்கூடக் கனவில்காண்கிறோம்.

பகவான் கீதையில் "உலகு கனவைப்போல் பொய். உலகத் தோற்றம் கனவுபோன்றதே. விழித்துக்கொண்டால் எப்படிக் கனவு பொய்யெனத் தோன்றுகிறதோ, அப்படியே ஞானமான விழிப்பு வந்தால் உலகமாகிய கனவும் பொய் எனத் தோன்றும்" என்றபோது அர்ச்சுனன்,

"பகவானே! சாக்கிரத்தில் பார்த்த பொருளையே கனவில் காண்கிறோம். கனவில் கண்ட பொருள் பொய்யாயினும் அத்தகைய உண்மையான பொருள் ஒன்று இருக்கிறதென்பது மெய்யேயன்றோ. அதுபோல் மெய்யாகவே இத்தகைய ஒரு உலகம் இருந்து, நாம் அதைப் பார்த்திருந்தால் தானே இப்போது கனவில் அதைப்போன்ற உலகைக் காண்கிறோம் என்று கூறலாம்?" என்றான்.

அதற்குப் பகவான் "சாக்கிரத்தில் காணாதவற்றையும் கனவில் காண்கிறோம். ஒருவன் கனவில் தான் ஆகாயத்தில் பறப்பதுபோல் காண்பதே அதற்குத் திருட்டாந்தம்" என்றார்.

இவ்வாற்றால் சொப்பனத்தில் ஆன்மா தேகத்தைவிட்டு வெளிச் செல்வதுமில்லை யென்பதும், சாக்கிரத்தில் கண்ட பொருளையேதான் சொப்பனத்தில் காண்கிறோம் அல்லது ஸ்மரிக்கிறோம் என்று கூறுவதற்கும் இடமில்லை யென்பதும் நன்கு விளங்குகிறது. பின்னை சொப்பனம் எப்படி யுண்டாகிறது?

மனம் சதா விஷயாதிகளில் நுழைந்து உழன்றுகொண் டிருப்பதே சொப்பனத்திற்குக் காரணம். சாக்கிரத்தி லிருக்கும்போது நாமே மனோராஜ்ஜியம் செய்வதைப் பகற் கனவு என்கிறோம். நமக்குண்டாகும் சித்தவிர்த்திகளனைத்து மனதினிடமே படிந்து கிடக்கின்றன. நமக்கு அவை மறக்கப்பட்டவைபோல் காணப்படினும், கிணற்றில் எறியப்பட்ட கற்கள் கண்ணுக்குப் புலப்படாவிடினும் கிணற்றின் அடியில் படிந்து கிடப்பதுபோல், விஷய வாசனைகளும் மனமாகிய கடலின்கீழ் படிந்து கிடக்கின்

றன. கனவில் அவை ஏகதேசமாகத் தாமே வெளிக் கிளம்புகின்றன. பூர்வ ஜன்ம வாசனையும் அவ்வாறே மனதின்கண் ணுண்டு. ஆனால் கனவில் இறந்தகால அனுபவ உணர்ச்சியில்லை யாதலாலும், புத்தி மங்கியிருப்பதாலும் நமக்கு யாவும் அப்போதுதான் காணப்படுவனபோல் தோன்றுகின்றன. கனவில் தோன்றும் விஷயங்களில் ஒரு ஒழுங்காவது, ஒன்றுக்கொன்று சம்பந்தமாவது, காரணகாரிய உணர்ச்சியாவது, வரம்பாவதுகிடையாது. ஒருவன் சாக்கிரத்தில் செய்ய அருவருக்கும் காரியத்தைக் கனவில் சர்வ சாதாரணம்போல் செய்துவிடுவான்.

கனவில் தோன்றும் யாவும் நித்திரா மோகசம்பந்தமுடைய அவித்தையினால் உண்டாக்கப்பட்டவையே யாகும். அவை யாவும் பொய்யே. ஏனெனில் தக்க காலமும் சாமக்கிரியைகளுமின்றி க்ஷண நேரத்தில் தோன்றும் எந்த வஸ்துவும் சத்தியமானதாக விருக்கமுடியாது. மண்ணும், தண்டசக்கரமும், குலாலனு மிருந்து அவசியமான காலம் செலவழிந்தபின் ஒரு குடம் உற்பத்தியாயின், அது சத்தியமானதாக விருக்கும். அப்படிக்கின்றி ஒன்றுமில்லாத இடத்தில் திடீலென்று புலப்படும் ஒரு குடம் சத்தியமானதாக விருக்குமோ? இராது. அது திருஷ்டி தோஷத்தால் தோன்றி மறையும் பொருளாகுமே யன்றிச் சத்தியமானதாகாது.

கனவில் தோன்றும் கால அளவையும் பொய்யே. அதாவது ஒருவன் தான் சுமார் காலை எட்டு மணிக்கு வண்டியிலேறிப் புறப்பட்டு பனிரண்டு மணிக்கு ஒரு பட்டணத்திற்குள் பிரவேசிப்பதாகவும், அங்கு ஒரு புலி வரக்கண்டு ஓடுவதாகவும், ஐந்தாறு வீதிகள் ஓடுந்தனிலும் புலி துரத்தி வருவதாகவும், பிறகு ஒரு வீட்டிற்குள் ஒளிந்து கொண்டு நெடுநேரம் இருந்ததாகவும், தீபம் வைத்தபின் வெளிப்பட்டதாகவும் கனவு காண்கிறான். இக்கனவில் சுமார் ஒன்பது மணிநேரம் கழிந்ததாக அவனுக்குப் புலப்பட்டாலும் உண்மையில் அவன் கனவு கண்டது ஒரு விநாடியே யிருக்கும்.

இந்த விஷயம் அனுபவமாகக் கண்டறியப்பட்டது. ஒரு ஐரோப்பியர் ஒருநாள் இரவு போஜனம் செய்து விட்டு மேல் மாடியில் ஒரு அறையில் இருந்த சாளரத்தருகில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டே யிருந்தவர் உறங்கி விட்டார். அப்போது அவர் கீழ்க்கண்டபடி கனவு கண்டார்:—

அவர் ஒரு சிநேகர் வீட்டிலிருந்த ஒரு கன்னிகையைக் கண்டு அவள் மேல் காதல் கொண்டு சில தினங்கள் பழகியதன் பின், தன்னை மணம் புரியும்படி அவளைக் கேட்க, அவள் சம்மதித்தாள். ஒருநாள் இருவரும் தோட்டத்தில் உலவிக்கொண் டிருக்கையில், அவளை முன்பு காதலித்திருந்து அன்னிய நாடு போய் அன்று திரும்பிவந்த ஒருவன் இவர்களைக்கண்டு; இம்மனிதனைச் சண்டைக்கழைக்க இருவரும் கைத்துப்பாக்கிகளை யெடுத்துக்



கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவர் சுடுகிறார்கள். தன் எதிரி தன்னைச் சுட்டதே டுமீல் என்ற சத்தம் கிளம்பியது. உடனே அச்சத்தம் இன்னும் செவியிலிருக்கும் போதே இம்மனிதன் விழித்துக் கொண்டு, சே கனவு கண்டோம் என்றுணர்ந்து பீதிதெளிந்து, கையிலிருந்த சுருட்டைப் பார்த்தான். அதிலிருந்த நெருப்பணையவில்லை. ஏனெனில் இவன் கனவு கண்ட காலம் முழுமையும் சேர்ந்து துப்பாக்கிச் சத்தம் இவன் செவிவழி நுழைந்து மனதில் தாக்க எவ்வளவு காலம் செல்லுமோ அவ்வளவு காலமே. அதாவது இரண்டொரு விநாடியே.

இம்மனிதன் கனவுகண்ட காரணம் என்னவெனில், இவன் வீட்டில் இவன் மைத்துனன் வந்திருந்தான். இவன் சாப்பிட்டுச் சுருட்டு பிடித்துக் கொண்டிருக்கையில் இவன் மைத்துனன் வீட்டைச் சூழ்ந்துள்ள தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தான். அச்சமயம் இவன் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த அறையின் எதிரிலுள்ள பெரிய மரத்தில் ஒரு கோட்டான் குந்திச் சத்தமிட்டது. இவன் மைத்துனன் அதைச் சுட்டான். அத்துப்பாக்கிச் சத்தமே இவன் செவிப்புலன் வழி நுழைந்து மனதில் தாக்கி விழிப்பை யுண்டாக்கும்போது இக்கனவைத் தோற்றுவித்தது. இம்மாதிரி பல திருஷ்டாந்தங்களுண்டு.

கனவு பலிக்கிற துண்டென்றும் கூறுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அப்படிக் கனவில் கண்டது பிறகு உண்மையாகவே நடப்பதுண்டு. ஆனால் அது அவரவர் மனோநிலைமையைப் பொருந்தியது. மனதில் அபாரமான சக்தியிருக்கிறது. ஆனால் நாம் மனதை வயப்படுத்தி அச்சக்தியை யுணரவில்லை. அறிவாளிகள் பலர் அம்மனோவல்லமையை யுணர்ந்து தூரத்தில் நடக்கும் எதிர்கால நிகழ்கால விஷயங்களை யெல்லாம் உணர்கிறார்கள். நமக்கு அன்பார்ந்த ஒரு நண்பர் அல்லது சுற்றத்தார் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவருக்கு ஒரு விசேஷ நன்மையோ தீமையோ நேரும்போது மனோவல்லமையால் அது நம் மனதிற்குப் புலப்படுவதுண்டு. அது நித்திரையிலும் நிகழும், சாக்கிரத்திலும் மனதில் திடீலென்று புலனாவதுண்டு. நித்திரையில் நிகழ்ந்தால் நாம் அதைக் கனவெனக் கருதிக்கொள்கிறோம். சாக்கிரத்தில் தோன்றின் நாமே எண்ணிக்கொண்டதாக நினைக்கிறோம். பிறகு நான் அப்படியே நினைத்தேன் என்கிறோம். ஆனால் மனதை வயப்படுத்த அப்பியாசம் செய்தவர்கள் அதனுண்மையை யுணர்வார்கள். ஒவ்வொரு சமயம் நாம் ஒருவரைப்பற்றிச் சிந்திக்காமலே யிருக்கையில் அவர்கள் இரயில்விட்டிறங்கி வருவதுபோல் அல்லது அவர்களிடமிருந்து கடிதம் வருவதுபோல் திடீலென்று மனதில் தோன்றுவதும், சற்று நேரத்திற்குள் அவ்வாறே நடப்பதும் உண்டு. இவையாவும் மனதின் அபாரமான வல்லமையால் ஒவ்வொரு சமயம் நேர்வதே யாகும்.

இவ்வாறே இருவர் மூவர் ஏககாலத்தில் ஒரே மாதிரிக் கனவு காண்பதுண்டு. அச்சமயம் கனவில் சம்பந்தப்பட்ட விஷயத்தின் சிந்தனை இவர்கள் அனைவரின் மனதிலும் பதிந்து கிடப்பதாக விருக்கும். சில தெய்வீக காரணங்களாலும் கனவில் கண்டபடி நடப்பதுண்டு. இத்தகைய விஷயங்கள் நடப்பதாலேயே கனவு பொய்யல்லவென்று கூறலாகாது.

யார் கனவே காண்பதில்லையோ அவர்கள் சுத்த மூடர்களாகவாவது, பைத்தியம் பிடித்தவர்களாகவாவது, கொலைபாதகர்களாகவாவது இருப்பார்கள் என்று ஒரு மேல்நாட்டு ஸாஸ்திரியார் கூறுவதாக ஒரு சஞ்சிகையிற் கண்டோம். இது சுத்தத் தவறான அபிப்பிராயமும் அனுபவத்திற்கு மாறானதுமானது. மனம் ஆன்மா முதலியவற்றைப்பற்றி நமது சாத்திரங்களில் கூறியுள்ள அவ்வளவு விவரம் மேல்நாட்டுச் சாத்திரங்களிலில்லை. சடசம்பந்தமாக எது வரையில் கூறக்கூடுமோ அவ்வளவு மட்டுமே மேல்நாட்டார் ஆராய்ச்சியில் அடங்கியது. அவர்களுடைய சித்தாந்தப்படி மனதிற்கப்பால் ஒன்றுமே கிடையாது. உண்மையில் மனதிற்கப்பாலுள்ள நிலையிலேயே ஆன்மாவின் அபாரமான சக்தி முழுமையும் வெளியாகிறது. நமது முன்னோர் அதை யனுபவமாக அறிந்து அனேக அரியகாரியங்களை யெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆன்ம சக்தியால் அவர்கள் செய்ய முடியாதது ஒன்றுமேயில்லை.

இப்போது கனவே காணாமல் இருக்கமுடியுமா என்பதைப் பற்றியும் அப்படி யார் காணாமலிருக்கக்கூடும் என்பதைப்பற்றியும் கூறுவாம். மனமிருக்கிற வரையில் சாக்கிர சொப்பன சுழுத்தி மூன்றும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கும். தூலசரீரத்தில் நிகழ்வது சாக்கிரம், சூக்கும சரீரத்தில் நிகழ்வது சொப்பனம், காரண சரீரத்தில் நிகழ்வது சுழுத்தி. அவித்தையே தூலசூக்கும சரீரங்கட்குக் காரணமானதால் அது காரண சரீரம் என்னப்பட்டது. காரணம் ஒழிந்தாலன்றிக் காரியம் ஒழியாது. அதாவது காரண சரீரம் என்ற அவித்தை அல்லது நித்திரை யொழிய வேண்டும். மனம் அடங்கி ஞான சூரியன் உதயமானால்தான் அவித்தையாகிய இருள் நீங்கும். அப்போதுதான் சுழுத்தியோடு சொப்பனமும், நான் எனதென்னும் அகங்கார மமகாரங்கள் பொருந்திய இந்த அஞ்ஞான சாக்கிரமும் ஒழிய, தூங்காமற் றூங்குவதென்றும், சாக்கிரத்தில் சுழுத்தியென்றும் கூறப்படும் நினைவிற் சுழுத்தியாகிய சமாதி நிலை தோன்றும்.

“நனவிற் சுழுத்தி நிலை மேவி” என்று ஆன்றோர் அருளியிருப்பது இந்நிலையே. ‘இரவு பகலற்ற இடம்’ என்றும் கூறப்படுவது இதுவே. அதாவது சகல கேவலமற்ற விடம். கேவலம் என்பதே சுழுத்தி. இங்கு சுழுத்தியுமில்லை, கனவுமில்லை, சாக்கிரமுமில்லை.



“ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே.”
“நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
சுத்த வருணிலைநீ செப்பாய் பராபரமே.”

(தாயுமானவர்.)

மனோலயத்திற்கு அப்பியாசம் செய்யும்போதே கனவு ஒடுங்குவதை யனுபவமாய்க் காணலாம். ஆகையால் அவித்தை யொழிந்த ஞானிக்கு மட்டுமே கனவு இராது.

இப்பிரபஞ்சமும் கனவு போன்றதே என்று சாத்திரங் கூறுகிறது. ஞானமாகிய விழிப்பு வந்தால் அப்போது இவ்வுலகம் கனவுபோல் பொய்யென்பது அனுபவமாய்த் தெரியும். நாம் ஒவ்வொருவரும் அந்த விழிப்பை யடைய முயலவேண்டும். அதுவே மானிட ஜன்ம மெடுத்ததனா லடைய வேண்டிய பயனாகும். ஓம் தத் ஸத்.

சீடன்.

---

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(398-ம் பக்கத் தொடர்ச்சி.)

அம்பலவாணன் பயத்தோடு நடந்த உண்மையைக் கூறினான். ஆனந்தலிங். நீ பேசாமல் அங்கேயே யிருந்திருக்க வேண்டும். சீக்கிரத்தில் உன்னை விடுதலை செய்துவிட்டிருப்பேன். இப்போது சட்டப்படி நான் உன்னை மறுபடி சிறை செய்யவேண்டும் என்றான். அம்பலவாணன் திடுக்கிட்டுத் திகிலோடு, “அய்யோ! மறுபடி யென்னை யங்கா போகச்சொல்லுகிறாய்?” என்று பரிதாபமாய்க் கூறினான்.

ஆனந்த:—“இந்தப் போலீஸார்களில் யாருக்கேனும் நீ தெரியுமோ” என்றான்.

அம்ப:—யாருக்கும் தெரியாது.

ஆனந்த:—நல்ல காலம். வந்துவிட்டது வந்துவிட்டாய். யாருக்கும் தெரியாமல் எங்காவது மறைந்திரு. இப்போது இங்கு பேச நமக்கு அவகாசமில்லை.

அம்ப:—மிக்க வந்தனம். ஒரு சங்கதிமட்டும் கூறிவிடு. இக்கனவு செய்கிறவர்கள் யார்?

ஆனந்த:—“சாமிநாதனும் இரங்கநாதனுமே. நடக்குமிடம் மெயில் வண்டியிலேயே. இனி நீ சீக்கிரம் போய்விடு” என்றான்.

அம்பலவாணன் உடனே செடிகளின் மறைவில் மறைந்துவிட்டான். போலீஸார் பழையபடி தங்கள் தங்கள் காவலிடத்திற்குச் சென்றார்கள்.

இரவு சுமார் 12 மணிக்கு மேலாய்விட்டது. அச்சமயம் இவர்கள் காத்துக்கொண்டிருக்கும் வீட்டிற்குள் இருந்து ஆத்திரமான கூச்சல்கள் கிளம்பின. உடனே சிலர் கையில் இராந்தலோடு வெளியில் புறப்பட்

டார்கள். அவர்கள் நமது கோமளவல்லி தப்பித்துக்கொண்டு போய்விடவே அவளைத் தேடிச் செல்லவே இவர்கள் புறப்பட்டார்கள்.

ஆனந்தவின் சமயோசிதப்படி அவர்களைத் தாக்கிப்பிடிக்கும்படி தன் ஆட்களுக்குக் கட்டளை யிட்டுவிட்டான். கள்ளர்களுக்குப் போலீஸார் வந்திருக்கும் சங்கதி யப்போதுதான் தெரிந்தது. கள்ளர்கள் மூவரும் இரங்கநாதனும் சாமிநாதனும் வெளியில் வந்தார்கள். இரங்கநாதனே தலைவனாய் நடத்திவந்தான். கள்ளர் தலைவனாகிய ஜக்கன் சங்கதி யறிந்ததே கள்ள பாஷையில், "ஓகோ! போலீஸார்" என்று கூச்சலிட்டான். உடனே இரங்கநாதன் முதல் யாவரும் தாங்கள் நோக்கிவந்த திக்கைவிட்டு மறு திக்கில் அவரவர்கள் தப்பித்துக்கொள்ள ஓட்டமெடுத்தார்கள்.

அத்தோட்டத்திற்குப் பக்கத்தில் சற்றுதூரத்தில் ஹரியாறு ஓடுகிறது. அதற்கிடையில் கொஞ்சதூரம் புலங்கள் தோட்டங்கள் இருக்கின்றன. கள்ளர் வீட்டின் தோட்டத்தைக் கடந்ததும் அத்திக்கே யோடினார்கள். போலீஸாரும் பின்தொடர்ந்து சென்றார்கள். கொஞ்ச நேரத்திற்குள் போலீஸார் அவர்களை நெருங்கி விட்டார்கள்.

* * * * * *

* * * * *

ஒரு வாரத்திற்குள் நீ சாமிநாதனை மணம்புரிய வேண்டுமென்று இரங்கநாதன் கூறிச்சென்ற கெடுவு நெருங்கிவிட்டது. ஏழாவது நாள் வந்துவிட்டது. கோமளவல்லியின் மனம் மிக்க பரிதாப நிலைமைக்கு வந்துவிட்டது. எப்படித் தப்புவதென்று சிந்தித்தாள். வழி யேதாவது இருக்கிறதாவென்று சாளரத்தைப் பார்த்தாள். பயனில்லை. அதில் நெருக்கமாக இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. கடவுளே கதியென்று சற்று நேரம் சிந்தித்தாள். அவள் மனதில் ஒரு யோசனை யுதித்தது.

அதாவது சாமிநாதன் வீட்டிலிருக்கும் வேலைக்காரியே அவளுக்கு வேளை வேளைக்கு ஆகாரம் கொண்டு வருவதும் காவல் காப்பதும். அவள் உள்ளத்தில் சற்று இரக்கமுள்ளவளென்றும் கோமளவல்லியின் மனதிற் பட்டது. இவள் சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே அவள் அங்கு வந்தாள். கோமளவல்லி மிக்க பரிதாபமான குரலோடு அவளை நோக்கி,

"அம்மா! நான் இச்சமயம் உன்னையே யென் தேவதைபோல் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் நீ வெளிக்கு மற்ற பேர்போலவே தோன்றினும் உண்மையில் இங்கிருக்கும் துஷ்டரைப்போல் இரக்கமற்றவளல்ல. உன் உள்ளத்தில் கருணையும் இரக்கமும் இருக்கிறது." என்றாள்.

அம்மாது திடுக்கிட்டு வியப்படைந்து "குழந்தாய்! நீ கூறுவது உண்மையே. அந்தோ அன்று இரங்கநாதன் உன்னை யிங்கழைத்து வந்து



அடைத்துவைத்த போது என் மனம் பட்டபாடு கடவுளுக்கே தெரியும். அவன் ஏன் உன்னை யிப்படிச் சிறை வைத்திருக்கிறானோ தெரியவில்லை" என்றாள்.

அதன்மேல் அக்கன்னிகை பரிதாபத்தோடு தன் குறைகளை யெல்லாம் அவளிடம் கூறி "அம்மா! நீயும் ஒரு காலத்தில் என் போல் கன்னிகையாயிருந்தவளே. இப்படி எனக்குச் சற்றும் விருப்பமே யில்லாத ஒருவனை மணம் புரியச்சொல்லி கட்டாயப்படுத்தினால் அதைவிடப் பிராணத்தியாகமாவது செய்து கொள்ளாமல் என்ன செய்வாய்; நான் இதை விட்டுத் தப்பித்துக்கொண்டு போய்விடமட்டும் கொஞ்சம் உதவி செய்தால் உனக்குப் பெரும் புண்ணியமாகும். இச்சமயம் என்னிடம் 50 லட்சம் ரூபாயிருந்தாலும் உனக்களித்து விடுவேன். அந்தோ 50 ரூபாயேயிருக்கிறது" என்று கூறிக்கொண்டே தன் உள்மடியிலிருந்து ஒரு 50 ரூபா நோட்டை யெடுத்து அவளிடம் கொடுத்தாள்.

அம்மாது மனங்கரைந்து அக்கன்னிகையை நோக்கி "அந்தோ குழந்தாய் நீ இங்கிருந்து தப்பித்துக்கொண்டு போனாலும் நீ யெங்கு செல்வாய்" என்றாள்.

கன்னிகை:—"அம்மா! நீ யென்னை யிதைவிட்டு வெளிப்படுத்தி விடு. பிறகு நான் எப்படியாவது தப்பித்துக்கொள்வேன். நீ மட்டும் எப்படியாவது எனக்கு மனங்கரைந்து உன் மகள் போல் நினைந்து என்னை யெப்படியாவது வெளிப்படுத்தி விடு" என்றாள்.

அம்மாது:—அய்யோ நான் அவனுக்கு என்ன பதில் கூறுவேன்.

கன்னிகை:—நீ எந்தச் சாக்காவது கூறிவிடலாம்.

அம்மாது:—"அய்யோ தெய்வமே! நான் என் செய்வேன்" என்று பரிதபித்தாள்.

கன்னிகை:—"கடவுள் உனக்கு ஒரு கெடுதியும் வரவிடார். நீ செய்வது பெரும் புண்ணியமான வேலை. நான் என்றும் உன் நன்றியை மறவேன். எப்படியாவது நான் மேலான நிலைமைக்கு வருவேன். செல்வவதியா யிருப்பேனென்று எதுவோ என் மனதில் கூறிக் கொண் டிருக்கிறது. நீ என்னைக் காப்பாற்றுவதால் உனக்கு எள்ளளவு கெடுதியும் நேரிடாது. மனங்கலங்காமல் என்னைக் காப்பாற்று" என்று கண்ணீர் பெருக வேண்டிக் கொண்டாள்.

வேலைக்காரியின் மனம் அம்மொழிகளைக் கேட்டதே கரைந்து இரக்கமுற்று, கடைசியில் அவள் இக்கன்னிகையைக் காப்பாற்றியே தீர வேண்டுமென்று துணிந்து விட்டாள்.

ஆகையால் கள்ளர் கூட்டம் கூடிப்பேசியபின், சாமிநாதன் அப்பெண்ணை யழைத்து வா வென்று இரங்காதனிடம் கூறுவதற்குச் சுமார்

ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் வேலைக்காரி கோமளவல்லியை அழைத்துக்கொண்டுபோய்க் கட்டிடத்தைக் கடந்து வெளியிலுள்ள தோட்டத்தில் விட்டு விட்டுத் தான் வீட்டிற்குள் திரும்பினாள்.

கோமளவல்லி தோட்டத்தின் ஒரு இருள் சூழ்ந்த மரத்தடியில் நின்று அச்சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டதற்காகச் சந்தோஷமடைந்து கடவுளைச் சற்று துதித்து, எந்தத்திக்கே செல்லலாமென்று யோசித்தாள். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்து பெருங்கூச்சலும் குழப்பமும் உண்டானது அவள் செவியில் விழுந்தது. உடனே அவளுக்குப் பெருந்திகில் உண்டாய் விட்டது.

மறு நிமிடம் ஜனங்கள் கையில் லாந்தல்களோடு ஓடி வருவதைக் கண்டாள். கள்ளர் ஓடுவதையும் அவர்களைத் துரத்திக்கொண்டு போலீஸார் ஓடுவதையுங்கண்ட அக்கன்னிகை யாவரும் தன்னைத் தேடிக் கொண்டு வருவதாகவே நினைத்துக் கொண்டு சிங்கங்களின் கூட்டத்தைக் கண்ட மான் குட்டிபோல் இன்னதிக்கென்று கவனியாது கால் போன வழியே ஓட்டம் பிடித்தாள்.

(தொடரும்.)

**ஆரணி-குப்புசாமி முதலியார்.**

---

# விளம்பரம்.

## புதுச்சத்திரம் வியவசாய சங்கம்.

மகா-ள-ள-ஸ்ரீ இராசிபுரம் தாலூகா தாசில்தார் அவர்களின் பிரேரேபணையின்பேரில் இராசிபுரம் தாலூகாவிலுள்ள வியவசாயிகள் சகலருக்கும் அனுகூலமாயிருக்கும் பொருட்டு ஒரு வியவசாய சங்கம் புதுச்சத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, ஷை சங்கம் ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல் சனிக்கிழமை பகல் 12-மணிக்கு புதுச்சத்திரத்தில் நடைபெற்று வருவதால் இந்த விளம்பரத்தையே பிரதி மாதங்களுக்கும் நோட்டீசாக வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மீட்டிங்குக்கும் ஒவ்வொரு மிராசுதாரர்களும், நிலச்சுவான்தாரர்களும், கிராமாதிகாரிகளும், தவறாமல் ஆஜராய் சங்கத்தை நடைபெறச் செய்யவேண்டுமாய்க் கோறப்படுகிறது.

ஷை ஒவ்வொரு மீட்டிங்குக்கும் வியவசாய டிமான்ஸ்டிரேடர் வந்திருந்து குடிகளுக்கு வியவசாய சீர்திருத்தங்களை நிதர்சனமாயும் பிரசங்கத்தினாலும் போதிக்கிறார்.

**மீட்டிங்கு நடைபெறும் தேதிகள்.**

6-5-22, 3-6-22, 1-7-22, 5-8-22, 2-9-22, 7-10-22, 4-11-22, 2-12-22.

புதுச்சத்திரம்,
17-4-1922.

சோலை முத்துடையான்,
பிரசிடெண்டு.

# பொது விஷயங்கள்.

## ஓர் முக்கிய அறிவிப்பு.

### தபால் கட்டண உயர்வு.

சந்தாநேயர்கள் கீழ்க்கண்டவற்றை யவசியம் கவனிக்கக் கோருகிறோம்:—

1922ஆு ஏப்ரல் மாதம் 24-ம் தேதி முதல் தபால் கட்டணம், கார்ட் அரையணாவாகவும், கவர் ஒரு அணாவாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகையால், கடிதங்களுக்குப் பதில் விரும்புவோர் ரிப்ளை கார்ட் அல்லது ஒருஅணா தபாற்பில்லை யனுப்பினாலன்றிப் பதிலளிக்கப்படமாட்டாது. 24-4-22க்குப் பின் யாரேனும் காலணா கார்டின்மேல் இன்னொரு காலணா பில்லை யொட்டாமல் தபாலில் போட்டிருந்தால், அத்தகைய கார்ட்கள் தபாலதிகாரிகளால் அழிக்கப்பட்டுப் போயிருக்கும் என்று அறியவேண்டும். கார்டின் மேல் இன்னொரு காலணா பில்லையும், கவரின்மேல் இன்னொரு அரையணா பில்லையும் ஒட்ட மறக்கவேண்டாம்.

---

**குருடும் செவிடும் சம்பாஷித்தல்.**—மிஸ் வில்லெட்டா ஹக்கின்ஸ் என்ற குருட்டுப் பெண்ணும், மிஸ் ஹெலென் கெல்லர் என்ற செவிட்டுப் பெண்ணும் ஒருவர் கரங்களை மற்றவர் முகத்தின்மேலும், மார்பின்மேலும் வைத்துக்கொண்டு மிக்க சுலபமாகத் தங்கள் தங்கள் மனோபாவங்களை வெளியிட்டுச் சம்பாஷித்துக் கொள்கிறார்கள். மிஸ் ஹக்கின்ஸ் என்ற குருட்டுப் பெண் மிக்க அபூர்வமான கந்த உணர்ச்சியால் எந்த வஸ்துவையும் முகர்ந்து பார்ப்பதாலேயே அதன் நிறத்தைக் கூறிவிடுகிறாள்.

**உலகில் பெரிய நாணயம்.**—உலகத்தில் பெரிய நாணயம் பாரன் ஸெர்ப் என்பவரிட மிருக்கிறது. அது 1730ஆு போடப்பட்ட ஒரு செம்பு நாணயம். அது 10 அங்குல சதுரமும், ஆறரை இராத்தல் எடையு முடையது. அத்தகைய நாணயங்கள் ஸ்வீடன் தேசத்தில் 12-வது சார்லஸ் அரசர் காலத்தில் சாதாரணமாக வழங்கி வந்தன.

**மிக்க பலசாலி.**—சில சிறு பூச்சிகளோடு ஒத்திட்டுப் பார்க்கும் பட்சத்தில், மிக்க பலசாலியென்று கருதப்பட்ட மனிதன் மிக்க பலஹீனனாகத் தோற்றுவான். ஒரு எறும்பு ஒரு கூழாங்கல்லைச் சரிவான விடத்தின்மேல் தள்ளிச் செல்வது ஒரு மனிதன் தனியே இருப்புப்பாதையில் ஒரு வண்டித் தொடரை யிழுத்துச் செல்வதற்குச் சமமாகும். ஒரு வண்டு தன் பாரத்தினும் 45 மடங்கு அதிகமான பாரத்தை யிழுக்கிறது. அதன்மேல் ஒரு தகரட் டப்பியைக் கவிழ்த்து விட்டபோது, தான் தப்பித்துக்கொள்ளத் தன்னிலும் 1800 மடங்கு பாரத்தை அது கிளப்பிவிட்டது.

---

**ஜீவிய சந்தாவில் புதியதாகச் சேர்ந்தவர்கள்.**

1. Mrs. M. SINNAPPA,
C/o Mr. M. SINNAPPA,
Tinnevelly South, JAFFNA.
2. D. C. ARUNACHELAM CHETTYAR,
26—32, Rattan Bazaar Street.
MADRAS.

# " ஆனந்த போதினி " பஞ்சாங்கம்.

துந்துபி௵ ஆனிமீ—சாலிவாகனம் 1845—கலி 5024
பசலி 1331—கோல்லம் 1097-98—ஹிஜரி 1340—41
இங்கிலீஷ் 1922௵ ஜூன்மீ-ஜூலைமீ

| ஆனிமீ | ஜூன்மீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | வியா | சஷ்50-13 | அவி-16-40 | சி-16-40ம | கரிநாள் |
| 2 | 16 | வெ | சப்56-18 | சதை-24-0 | சித்-60 | சர்வமுகூர்த்தம் |
| 3 | 17 | சனி | அ60-0 | பூரட்-31-43 | ம-31-43சி | திரிலோசன பூஜை |
| 4 | 18 | ஞா | அ2-28 | உத்-89-8 | அமி-60 | பிரயாணம் விலக்க |
| 5 | 19 | திங் | நவ8-3 | ரேவ-45-43 | சித்-60 | உபநயனம்,கோடியுடுத்த |
| 6 | 20 | செ | தச-12-40 | அசு-50-58 | சித்-60 | கரிநாள் |
| 7 | 21 | புத | ஏகா15-40 | பர-54-30 | சி54-30அ | சர்வ ஏகாதசி |
| 8 | 22 | வியா | துவ16-50 | கிரு-56-15 | மர-60 | கிருத்திகை |
| 9 | 23 | வெ | திர16-8 | ரோ-56-20 | ம-56-20சி | |
| 10 | 24 | சனி | சது13-43 | மிரு-54-40 | சித்-60 | சர்வத்திர அமாவாசை |
| 11 | 25 | ஞா | ● 10-5 | திரு-52-0 | சித்-60 | |
| 12 | 26 | திங் | பிர5-0 துதி59-18 | புன 48-20 | அ48-20சி | |
| 13 | 27 | செ | திரி53-10 | பூச-44-10 | சித்-60 | |
| 14 | 28 | புத | சது46-45 | ஆயி-39-50 | சித்-60 | |
| 15 | 29 | வியா | பஞ்40-28 | மக-35-33 | அ35-33சி | |
| 16 | 30 | வெ | சஷ்34-35 | பூர-31-33 | சித்-60 | |
| 17 | 1 (1922௵ ஜூலைமீ) | சனி | சப்28-55 | உத்-27-55 | மர-60 | |
| 18 | 2 | ஞா | அ23-53 | அஸ்-24-48 | சித்-60 | |
| 19 | 3 | திங் | நவ19-23 | சித்-22-13 | பி22-13அ | |
| 20 | 4 | செ | தச15-28 | சுவா-20-13 | சி2-013ம | சர்வ ஏகாதசி, |
| 21 | 5 | புத | ஏக12-3 | விசா-18-50 | சித்60 | |
| 22 | 6 | வியா | து9-28 | அனு-18-10 | சி-18-10பி | பிரதோஷம் |
| 23 | 7 | வெ | திர7-40 | கேட்-18-20 | ம18-20அ | |
| 24 | 8 | சனி | சது6-48 | மூல-19-25 | சித்-60 | வியாசபூஜை |
| 25 | 9 | ஞா | ○6-58 | பூரா-21-43 | சி21-43அ | பகலில் தனியநாள் |
| 26 | 10 | திங் | பிர8-38 | உத்-25-18 | ம25-13அ | ஆஷாடபகுளம் |
| 27 | 11 | செ | து11-58 | திரு-29-8 | சித்-60 | |
| 28 | 12 | புதன் | திரி15-30 | அவி-36-8 | பிர36-8சி | |
| 29 | 13 | வியா | சது20-48 | சதை43-8- | மர43-8சி | |
| 30 | 14 | வெ | பஞ்26-48 | பூரட்-50-53 | சித்-60 | பிரயாணம் விலக்க |
| 31 | 15 | சனி | சஷ்33-13 | உத்-58-38 | சி-58-38பி | கடகரவி நா. 54-40 |

| | | | |
|---|---|---|---|
| கே | | | கு பு |
| | 12உ ரி-பு<br>19-மிது-பு<br>24-சிம்-சு | | சு |
| | | | |
| | செ | | குரு ரா-ச |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம :

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துந்துபி௵ ஆனிமீ கஉ / 1922௵ ஜூன்மீ 15உ { பகுதி 12

## கடவுள் வணக்கம்.

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதுவோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே
யெந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே. (1)

---

வானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப் புரந்து மாற்றவல்ல.
கோனே யென்னைப் புரக்குநெறி குறித்தா யிலையே கொடியேனைத்
தானே படைத்திங் கென்னபலன் றன்னைப் படைத்தா யன் கருத்தை
நானே தென்றிங் கறியேனே நம்பி னேன்கண் டருள்வாயே. (2)

கண்டார் கண்ட காட்சியுநீ காணார் காணுங் கள்வனுநீ
பண்டா ருயிர்நீ யாக்கையுநீ பலவாஞ் சமயப் பகுதியுநீ
எண்டோண் முக்கட் செம்மேனி யெந்தாய் நினக்கே யெவ்வாறு
தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ கூட்டிக் கொள்வ தெவ்வாறே. (3)

## அரும் பொருள் விளக்கம்.

1, தந்தை தாய்...கூட்டம்=தந்தை தாய் மனைவி புத்திரன் முதலிய சுற்றத்தாரனைவரும் ஒரு சந்தையிற் சேரும் கூட்டமாகிய ஜனங்களைப் போன்றவர்கள்.

சந்தை கூடுமிடத்திற்குப் பலவிடங்களிலுள்ள ஜனங்களும் தத்தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கவும், தம்மிடமுள்ள பொருள்களை விற்கவும் செல்கிறார்கள். அங்கு கூடியபின் ஒருவரோ டொருவர் சிநேக பாவமாகப் பேசிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் அவரவர் வந்த காரியம் முடிந்ததே பிரிந்து போய்விடுகிறார்கள்.

அவ்வாறே தாய், தந்தை, புத்திரன், மனைவி முதலிய சுற்றத்தாரும் தத்தமது வினையை யனுபவிக்க வேண்டி யிங்கு வந்து ஜனித்திருக்கிறார்கள். அவரவர் வினை யொழிந்தால் ஒரு விநாடியும் நில்லாது போய்விடுவார்கள். ஆதலின் புறப்பற்றாகிய அவர்களிடத்தில் நம்மவர் என்ற அபிமானம் வைக்கலாகாது என்றபடி.

மாடமாளிகை...இந்திர ஜாலக்கோலம்=மாடமாளிகை முதலிய போகங்களோடு கூடிய வாழ்வு ஒரு இந்திர ஜாலம் போன்றதாம்.

ஒரு மந்திரவாதி காட்டி மறைக்கும் இந்திர ஜாலத்தில் காணப்படும் காட்சிகள் எப்படி தோற்றமாத்திரமா யிருக்கும் அநித்தியக் காட்சியோ அது போலவே உலகவாழ்க்கையும் நிலையில்லாதது என்பதாம்.

வஞ்சனை பொறாமை...கனவே=சதா அலைந்து நமக்குப் பிறப்பிறப்பை யுண்டாக்கும் மனமும், வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய துர்க்குணங்களும் உடைய மலபாண்டமாகிய இத்தேகமோ சந்தேகமின்றிக் கனவு போன்றதே யாகும். தேகம் நீர்மேற் குமிழிபோல் நிலையில்லாத அநித்தியப் பொருளாதலின் இதன் மேலும் அபிமானம் வைக்கலாகாது என்பதாம்.

இரவு பகலில்லாவிடம்=சகல கேவலங்களற்ற சமாதி நிலை.

நானென்பதறவுமூழ்கி=(சகல கேவலங்களற்ற அருள் மயமான ஆனந்த வெள்ளத்தில்) நான் என்ற உணர்ச்சியாகிய தற்போதமற்று அழுந்தி.

2. வானே முதலாம் பெரும்பூதம்=ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களை; வகுத்து...மாற்றவல்ல=சிருட்டித்துக் காத்து அழிக்கக்கூடிய.

---

# ஆனந்தபோதினி

துந்துபி௵ ஆனி௴ ௧௨

## வீண் பிரமை.

பிரமை யென்றால் அறியாமை, பைத்தியம், மயக்கம் என்று பொருள். ஒரு வஸ்துவின் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கி விடுதல். அவ்வாறு ஒன்றைக் கண்டதும் அதன் விஷயங்களை யாராய்ச்சிசெய்து அது நமக்கு நன்மை பயக்குமா தீமைபயக்குமா என்று சிந்திக்காமல் அதன் வெளிப்பகட்டைக் கண்டதனாலேயே மயங்கிப்போய் அதன் வழி யொழுகல் எப்போதும் தீமையையே தரும். அவ்வாறு யார் வீண் பிரமைகொண்டு தீங்கடைந்தார்கள் எனின், நமது நாட்டாரே யென்று விடையளிக்க வேண்டி யிருக்கிறது.

நமது நாட்டார் அந்நிய நாட்டார் விஷயங்களிலும் அந்நிய நாட்டுப் பொருள்களின் விஷயங்களிலும் வீண் பிரமை கொண்டதே நம் நாட்டின் தற்காலப் பரிதாபமான நிலைமைக்குக் காரணமாகும். நமது தற்கால நிலைமையின் சீர்கேடு நன்கு விளங்கும் பொருட்டு நம் இறந்த கால நிலைமையைப் பற்றி இரண்டொரு விஷயங்கள் மட்டும் கூறுவாம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் வரையில்கூட நம் நாட்டில் உணவுப் பொருள்கள் மிக்க மலிவாயிருந்தன. கைத்தொழில் திருப்தியான நிலைமையிலிருந்தது. நமக்கு வேண்டியயாவும் நமது நாட்டிலேயே உற்பத்திசெய்து கொள்ளப்பட்டதோடு வெளிநாடுகளுக்கு மனுப்பப்பட்டு வந்தன. நம் நாட்டு மிக்க நாணயமான துணிகள், ஐரோபாவிலிருந்த இராஜகுடும்பங்களில் மிக்க பெருமையோடணியப்பட்டு வந்தன. பருத்தி பட்டு கம்பளம் முதலிய வற்றால் செய்யப்பட்ட துணிகள் மேல் நாடுகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டு வந்தன. காஷ்மீரத்தில் செய்யப்படும் சால்வைகள் இன்றும்

உலகப்பிரசித்தி பெற்றவை. காலஞ்சென்ற கருணை பொருந்திய விக்டோரியா மகாராணியவர்கள் காலத்தில் மிக்க விலைமதிப்புள்ள காஷ்மீரச் சால்வைகள் பிரத்யேகமாய் செய்து அனுப்பப்பட்டன.

நெசவுத்தொழிலோடு நூலுக்கும் துணிகளுக்கும் சாயமேற்றுந்தொழிலையும் நம் நாட்டாரே செய்துகொண்டிருந்தார்கள். அதிகச் செலவில்லாத முறையில் நம்நாட்டு மரம் செடிகளின் வேர் பட்டை விதை பூ முதலிய வற்றினின்றே உயர்ந்த கெட்டிச் சாயங்களையுற்பத்தி செய்துகொண்டிருந்தார்கள். சாயக்காரர் என்ற ஒரு ஜாதியாரே நம் நாட்டிலுண்டு என்பதே யிதற்குப் போதிய சான்றாகும். அவர்களில் ஒரு சாரார் லங்காரிகள் என்றழைக்கப்படுகிறார்கள். அவர்கள் சாயம்போடும் தொழிலையே செய்பவர்கள். கம்மியர் நம் நாட்டிற்கு வேண்டிய இரும்பு எஃகுச் சாமான்களைச் செய்து வந்தார்கள். நமது நாடு சுகமும், க்ஷேமமும், நிம்மதியும் உடையதா யிருந்தது. அத்தகைய நிலைமையிலிருந்த நாம் இப்போது கட்டத்துணிக்கே கப்பலை யெதிர்பார்க்கும் வெட்கக்கேடான நிலைமையி லிருக்கிறோம். இதற்குக் காரணமென்ன? இரண்டு காரணங்களுண்டு.

முதலாவது கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தார் (ஈஸ்ட் இந்தியா கம்பெனி) இங்கு இராஜாங்கம் செய்ய வந்தபோது அவர்களுக்கு துரைத்தனம் செய்வதோடு வர்த்தகம் செய்யும் தொழிலு மிருந்தது. இரண்டிலும் சம்பந்த மிருந்ததே நமது நாட்டுக்கைத்தொழில் நசித்ததற்குக் காரணம். ஏனெனில் அவர்கள், தங்கள் நாட்டிலிருந்துவரும் துணி முதலிய சாமான்கள் அதிகமாக விலையாகவும், தங்கள் நாட்டார் வர்த்தகத்தில் மிக்க அபிவிர்த்தி யடையவும் கருதி நம் நாட்டுக் கைத்தொழில்களை யழித்து விட்டார்கள். இது மனிதர்களுக்கு இயற்கையாயுள்ள சுயநல நாட்டம் என்றகுணமே. மேலும் இது நம் தாய்நாடு க்ஷேமாபிவிர்த்தி யடையவேண்டுமென்ற தேசாபிமான குணமேயாகும்.

பதினெட்டாவது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து நயமும் நாணயமுமான காலிகோ, மஸ்லின், சீட்டுத்துணிகள் முதலியவை ஏராளமாக இங்கிலாந்துக்கு வரவழைக்கப்பட்டன. அதனால் அங்கிருந்த கம்பளி, பட்டுத் தொழிலாளர்கள் மிக்க பீதியடைய வேண்டியதாயிற்று. ஆகையால் இரண்டொரு தினுசுகள் தவிர பருத்தி சம்பந்தப்பட்ட வேறு எவ்விதமான சீட்டுத்துணிகள் சாயத்துணி



கள் காலிகோ துணிகள் முதலியவைகளையும் உடுப்புகளுக்காவது, மெத்தை ஸோபா முதலிய சாமான் வகைராக்கள் செய்வதிலாவது உபயோகிக்கலாகாது என்று 1700௵த்திலும் 1721௵த்திலும் பார்லிமென்டில் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. [இது லெக்கீ என்பவர் எழுதிய இங்கிலாந்து தேசத்தின் 18-வது நூற்றாண்டு சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது)

இத்தகைய தேசாபிமான மிருப்பதால்தான் அவர்கள் மேலான நிலைமையி லிருக்கிறார்கள். அந்தோ! நம்மவருடைய தேசாபிமானம் எவ்வாறிருக்கிறது என்பதை நினைக்கும்போது நாம் தலைநாணமடைய வேண்டி வருகிறது.

இனி நாம் இந்த நிலைமை யடைந்ததற்கு இரண்டாவதாகிய காரணம் என்னவெனில் அது தான் வீண் பிரமை என்று நாம் தலைப்பில் கூறியது. மேற்கண்டவாறு நம் தாய்நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துபோனபின் அன்னிய நாடுகளினின்றும் வரும் பொருள்களின் மேல்பினுக்கைக் கண்டு நாம் முட்டாள் தனமாக மயங்கிவிட்டோம். வெளித்தளுக்கைக் கண்டு மட்டும் மயங்கினோமேயன்றி உண்மையில் நம் நாட்டில் நாம் உற்பத்திசெய்த சாமான்கள் குணத்தில் இவற்றினும் தாழ்ந்தவையா, அல்லது இந்த வெளிநாட்டுச் சாமான்கள் விலையிலாவது குறைந்தனவா என்பனவற்றை நாம் கருதவில்லை. அஷ்டமத்தில் வந்த சனி நம் அறிவாகிய கண்களை மறக்கச்செய்து விட்டது.

அதன்மேல் நம்மவர்கள் தங்கள் பூர்வீக ஆசாரத்தை மறந்ததோடு அன்னிய நாட்டுச் சாமான்களையே பிரியமாய் வாங்கத் தொடங்கினார்கள். அந்நிய நாட்டுத் துணிகளை வாங்கத் தொடங்கவே நம் நாட்டு நெசவுத் தொழில்காரர்களெல்லாம் தறிகளைச் சுருட்டிவிட வேண்டியதாயிற்று. வெண்கலத்தில் செய்யப்பட்ட உண்கலங்கள், பானபாத்திரங்கள் முதலியவற்றிற்குப் பதிலாய் அந்நிய நாட்டினின்று வரும் பீங்கான்கள், பீங்கான் பூச்சிட்ட தகரச் சாமான்கள் (போர்ஸலின்) முதலியவைகளை வாங்கத் தொடங்கவே கன்னாருடைய தொழிலும் விசேஷமாகக் குறைந்துவிட்டது. நமது நாட்டில் இருக்கும் கம்மியர், குணத்தில் மேல் நாட்டிலிருந்து வரும் கத்திகள் முதலிய வெட்டாயுதங்களுக்குப் பின் வாங்காதவைகளைச் செய்யக்கூடியவர்கள். இன்னும் மலையாளத்தில் பேர்போன பலவிதக் கத்திகள் செய்யப்படுவதைக் காணலாம். ஆனால் மேல்

தளுக்கு சரியாய்ச் செய்ய நம்மவர்கள் முயல்வதில்லை. இப்போது நாவிதன் கத்தி முதல் அன்னியநாட்டுச் சாமானாகவே யிருப்பதால், கம்மியர் தொழில் கட்டைவண்டிக்கும் உழவுத் தொழிலுக்கும், மாடு குதிரைக்கு லாடத்திற்கும் அவசியமான சாமான்கள், கரண்டி முதலிய சமயலுக்கு வேண்டிய சொற்ப கருவிகள் இவைகள் மட்டுமே செய்வதில் ஒடுங்கிவிட்டது.

நம் நாட்டிலிருக்கும் பஞ்சை வெளிக்கனுப்பிவிட்டு அவர்களிடம் அதிக விலை கொடுத்துத் துணி வாங்கும் நிலைமைக்கு வந்துவிட்டிருக்கிறோம். சொல்ப செலவில் நாட்டுப் பொருளில் கெட்டிச்சாயம் செய்துகொண்டதுபோய், அதிக விலை கொடுத்து இரசாயன முறையிற் செய்த அந்நிய நாட்டுச் சாயப் பொருளை வாங்குகிறோம். மேல் தளுக்குக்கு ஆசைப்பட்டுக் கடையில் குப்பையில் போடவும் கூலி கொடுக்கவேண்டிய காலணா அரையணாகூட பெறாத இரும்பாலும், தகரத்தாலும் செய்யப்பட்ட பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குகிறோம்.

மேற்கண்ட காரணங்களால் கைத்தொழில்கள் ஒடுங்கிவிடவே, கிராமாந்தரங்களிலிருந்த கைத்தொழிலாளிகளெல்லாம் நகரங்களிலுள்ள அந்நிய நாட்டு வர்த்தகர்களின் தொழிற்சாலைகளுக்குச் சென்று அடிமைகள்போல் அலைச்சல் படுகிறார்கள். இதனால் நம் நாட்டிற்கு அவசியமானதும், சிறப்பான நிலைமையிலிருந்ததுமாகிய விவசாயம் குன்றிவிட்டது. அந்தோ! இவ்வளவு மட்டுமோ நம் வீண் பிரமையால் உண்டான கேடு? நம்மவர் நம் நாட்டில் கைக்கோளரால் நெய்யப்பட்ட கோரஞ்சி வேஷ்டியைக் கட்டிக்கொண்டிருந்த காலத்தில் நாட்டில் சுகமும், க்ஷேமமும், மனோ நிம்மதியும் நிறைந்திருந்தன. அப்போது அரிசி ரூபாய்க்குப் பத்துப் பனிரண்டு படிக்கும் அதிகமாகவும், பருப்பு எட்டு ஒன்பது படியும், நெய் வீசை ஒரு ரூபாய்க்குள்ளும், எள் எண்ணெய் வீசை ஆறு அணாவும், வெல்லம் ஒன்றரை இரண்டணாவும், இப்படியே மற்றபொருள்களும் மிக்க சரசமாக இருந்தன.

இப்போதோ, நாணயமான துணி, தலைகிராப்பு, காலர் பட்டையும், பயாஸ்கோப் டிராமாவும், ஸிகரெட் பீடியும், ஸோடா லெமனேட் முதலிய ஆடம்பரங்கள் மட்டுமே கண்டதன்றி வியாதியும், பஞ்சமும், பட்டினியும், கடனும், திகிலும், அவமானமுமே கைகண்ட பலன்களாகவிருக்கின்றன. நமது வீண் பிரமையாலும்,



கண்மூடித்தனத்தாலும், தேசாபிமானக் குறைவாலும், ஒற்றுமையின்மையாலுமே யித்தகைய நிலைமைக்குப் படிப்படியாய் வந்துவிட்டோம்.

கடைசியில் கடந்த மகா யுத்தத்தின் போது கப்பல்கள் வராததால் துணி முதலியவைகளுக்குப் பஞ்சம்நேர்ந்தபோதுதான் நமக்கு அறிவு விளங்கத் தொடங்கியது. நமக்கு வேண்டிய பொருள்களில் முக்கியமானவைகளையேனும் நாமே செய்துகொள்ளாது அவற்றிற்கு அன்னியரை யெதிர் பார்ப்பது சுத்த மூடத்தனமென்று உணர்ந்தோம்.

ஆயினும் அந்தோ! நம்மவர்களில் பெரும்பாலார்க்கு இன்னும் கௌரவம் இன்னதென்றும் அகௌரவமின்னதென்றும் விளங்கவில்லை யென்றும், தேசாபிமானம் தோன்றவில்லை யென்றும், இந்தியர் என்றால் அன்னியநாட்டார் அலட்சியமாக நடத்துவதும் மனதில் உறுத்தவில்லை யென்றும் நன்கு விளங்குகிறது. அந்த வீண்பிரமைப்பேய் இவர்களை விட்டு எப்போதொழியுமோ தெரியவில்லை. நம் நாட்டு நெசவுத்தொழிலை பூர்வநிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அறிவாளிகளாகிய தேசபக்தர்கள் எவ்வளவோ முயற்சி செய்யும்போதும் சிலர் நம் நாட்டில் நெய்யப்பட்ட துணி நாணயமாயில்லை யென்கிறார்கள். இவர்கள் எதை நாணயமெனக் கருதுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. நம் நாட்டுத்துணியை யுடுத்துக்கொண்டு நல் உணவையுண்டு, மன நிம்மதியோடு சுயாதீனமாய் வாழ்வது இவர்களுக்கு நாணயக் குறைவாய்த் தெரிகிறது போலும். மெல்லிய உடையணிந்து அன்னிய நாட்டாரை—அன்னிய ஜாதியாரைப்போல் அரைவேடங் கால்வேடந்தரித்து அடிமைத்தொழில் செய்துகொண்டு, நரகலையுருட்டும் வண்டு அதை நறுமணமாய் எண்ணுவதைப்போல, அதைக் கௌரவமான தொழிலாய் எண்ணிக்கொண்டு கால்வயிறு உணவோடும், கடனோடும், மன வேதனையோடும், கிலேசத்தோடும் காலங்கழிப்பதையே மிக்க நாணயமான வாழ்வென மதிக்கிறார்கள் போலும். தாய் நாட்டின் க்ஷேமத்தில் கருத்துவைத்து நடப்போர் இம்மாதிரி நினைப்பரோ? நாம் க்ஷேமமடைய வேண்டுமென்ற உறுதியுடையோர் இத்தகைய அற்பவிஷயத்திற்குப் பின்னிடையலாகுமோ? நாம் மனம்வைத்து ஊக்கத்தோடு தொழிலை விர்த்திசெய்தால் முன் நாட்களில் உற்பத்தி செய்ததுபோல், இன்னும் நம் நாட்டில் சில

விடங்களில் செய்வதுபோல், மிக்க நாணயமான துணிகளை உற்பத்திசெய்யலாகும் என்பதை யித்தகையோர் கருதவேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் மூரடான துணியை யுடுக்க அஞ்சும் நாம் நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு எத்தகைய தியாகத்தைத் தான் செய்யக் கூடியவர்களாக மதிக்கப்படுவோம்.

சகோதர சகோதரிகளே! இனியேனும் நாம் இத்தகைய அற்ப எண்ணங்களை யடியோடொழித்து, வீண் பிரமைக்கு இடங் கொடாமல், நம் தாய்நாட்டின் முன்னேற்றத்தை மனதில் வைத்து, எத்தகைய சுய நலத்தையும் கஷ்டத்தையும் கருதாமல், வீண் பகட்டான கௌரவத்தை மதியாமல், உண்மையன்போடு நடந்து கொள்ளும் வண்ணம் பரம்பொருள் நமக்கு நல்வழிகாட்டி யருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

---

## பிரகலாதன்.

(416-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பு:—இரணியன் யாருடைய புத்திரன்? யாரை நோக்கித் தவம் செய்தான்? தானே தெய்வம் என்று ஏன் கூறினான்? தெய்வ முண்டென்று அறியானா? என்பது முதலான விஷயங்களை யறிவிக்கும்படி இரண்டொரு சந்தாநேயர்கள் நமக்கு எழுதியுள்ளார்கள். ஆதலின் பின் வருவனவற்றை யறிவிக்கிறோம் :—

ஸ்ரீ வைகுந்தத்தில் பகவானாகிய மகா விஷ்ணுவிடம் வாயில் காப்போராகிய துவார பாலகர் இருவர் உளர். அவர்கள் ஜெயன் விஜயன் என்ற இரண்டு சகோதரர்கள். ஒருநாள் பகவான் அவர்களுக்கு "உள்ளே யொருவரையும் விடவேண்டாம்" என்று கட்டளை யிட்டிருந்தார்.

அச்சமயம் துர்வாச மகாரிஷி பகவானைத் தரிசிக்க வருவதை அவர்கள் கண்டார்கள். அவர் கோபத்தில் பிரசித்திபெற்றவர். துவாரபாலகர் பாடு திண்டாட்டத்தில் வந்துவிட்டது. இருதலைக் கொள்ளி வாய்ப்பட்ட எறும்புகள் கதியானார்கள். ஏனெனில் உள்ளே விட்டால் சுவாமியின் கட்டளையை மீறியதற்காகச் சாபம் கிடைக்கும்; இந்த ரிஷியைப் போகவொட்டாது தடுத்தாலோ இவர் கடுஞ்சாபமிடுவார். எப்படியும் ஒருவர் சாபம் கிடைத்தே தீரும். இவர்களில் யார் சாபத்தைப் பெறுவது நலமென்று சிந்தித்துக் கடைசியில் சுவாமியிடம் சாபம்பெறுவதே நலம் என்று தீர்மானித்து, ரிஷி வாயிலில் வந்ததும் நமஸ்காரம் செய்து உள்ளே விட்டுவிட்டனர்.



பிறகு சுவாமி இவர்களுக்கு "நீங்கள் பூமியில் மும்முறை ஜனனம் எடுக்கவேண்டும்" என்று சபித்து, "மூன்று முறைகளிலும் நமக்கு மித்துருவாகச் சனிக்கப் பிரியமா சத்துருவாகச் சனிக்கப் பிரியமா?" என்று வினவினார். துவார பாலகர் சிந்தித்தார்கள். 'சுவாமிக்கு மித்திரராகச் சனித்தால் நெடுங்காலம் அழிவின்றிப் பூமியிலேயே யுழலவேண்டிவரும். சத்துருவாய்ச் சனித்தால் சீக்கிரம் சங்கரிக்கப்பட்டுப் பழையபடி யிங்கு வந்து சேரலாம்' எனக் கருதி, சத்துருவாகவே சனிக்கிறோ மென்றார்கள்.

இவர்களே இரணிய கசிபு — இரணியாக்கன் என அவதரித்தார்கள். பிரம்மாவின் சந்ததியிலுதித்த கசியபப் பிரம்மா என்பவர்க்கு திதி, அதிதி என இரண்டு மனைவியர்கள். அவர்களில் திதி என்பவள் வயிற்றில் இவர்கள் புத்திரர்களாகச் சனித்தார்கள். அதிதி என்பவள் கருப்பத்தில்தான் மகா விஷ்ணு வாமனாவதாரம் செய்தார்.

இவர்கள் தாய்வயிற்றில் கருவுற்றதே கசியபப் பிரம்மா தமது மனைவியை நோக்கி "உன் கர்ப்பத்திலிருந்து இரண்டு அசுரர்கள் ஜனிப்பார்கள். இருவரும் மகா விஷ்ணுவால் கொல்லப்படுவார்கள்" என்று கூறினார். இவர்கள் சிறுவர்களாக விருக்கையிலேயே தாயார் "குழந்தைகாள்! உங்களை விஷ்ணு கொல்வார் என்று உங்கள் தந்தை கூறியிருக்கிறபடியால் நீங்கள் விஷ்ணு விஷயத்தில் எச்சரிக்கையா யிருங்கள்" என்று கூறினாள். ஆகையால் அதுமுதலே இவர்களுக்கு விஷ்ணுவின்மேல் பகை சனித்துவிட்டது.

மூத்தவனாகிய இரணிய கசிபு இமோத்கிரி பர்வதச் சாரலில் சென்று ஒருகால் பெருவிரல்மேல் நின்று பிரம்மாவை நோக்கி அகோர தவம் புரிந்தான். பிரம்ம தேவர் பிரத்தியக்ஷமாகி உனக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்டபோது,

"சுவாமி! தேவராலும், நரராலும், விலங்குகளாலும், அல்லிலும் பகலிலும், பூமியிலும், ஆகாயத்திலும், எந்த ஆயுதத்தாலும், எனக்கு மரணமில்லாமல் மூவுலகத்தவரும் எனக்குப் பணிசெய்ய நான் ஏக சக்ராதிபதியாய் அரசாளும்படி வரந் தரவேண்டும்" என்றான். பிரம்மா அவ்வாறே வரமளித்தார். இரணியன் உடனே பிரம்மாவை நோக்கி "மூவுலகத்தவரும் எனக்குப் பணிசெய்ய வரமளித்தபடி நடப்பது மெய்யெனின், தாங்கள் எனது பூச்சக்கரக் குடையைப் பிடித்து வாருங்கள்" என்றான். பிரம்மா என்ன செய்வார் பாபம்! அவ்வாறே பணி செய்ய உடன்பட்டார்.

இரணியன் தவம் செய்துகொண் டிருக்கையில் அவன் தம்பியாகிய இரணியாக்கதன் பூமியைச் சுருட்டி கடலில் ஒளித்துவைக்க முயன்றபோது, பகவான் வராகாவதாரம் எடுத்து அவனைச் சங்கரித்துப் பூமியைப் பழையபடி நிலைக்கச் செய்தனர். இரண்யன் வரம்பெற்றுத் தன் நகரத்தை நோக்கி வந்துகொண் டிருக்கையில் வழியில் மகா விஷ்ணு கருடன்மேல்

வருவதைக் கண்டு அவரைக் கொல்லக் கருதி அவர்மேல் பாயப் போனான். அவனை யழிக்கவேண்டிய காலம் இன்னும் வராததால் பகவான் சட்டென்று கடலில் முழுகி மறைந்தார். இரண்யன் அக்கோபத்தோடு வீட்டிற்கு வந்தபோது, தன் தம்பியை விஷ்ணு கொன்றுவிட்டதையும், தம்பி செய்த துர்க்காரியங்களுக்காக இந்திரன் கோபங்கொண்டு தன் மனைவியாகிய லீலாவதியைச் சிறை பிடித்துச் சென்றதையும் கேள்விப்பட்டான்.

உடனே இரண்யன் சொல்லொணாக் கோபமூண்டு தன் சேனைகளோடு இந்திரனிடம் சென்று போர்புரிந்து அவனைச் சிறை பிடித்துக் கொண்டு, தன் மனைவியாகிய லீலாவதியை மீட்டுக்கொண்டு வந்தான். அதுமுதல் அவன் எவ்விதத்திலேனும் விஷ்ணுவை யெதிரில் வரும்படிச் செய்து அவரைக் கொன்றுவிட வேண்டுமென்று வைராக்கியம் கொண்டு "என் தம்பியைக் கொன்ற விஷ்ணுவைச் சங்கரித்து அவன் உதிரத்தால் தான் என் தம்பிக்குத் தர்ப்பணம் செய்வேன்" என்று சபதம் செய்து கொண்டான். இந்திரனைச் சிறையிலிட்டான். இந்திரன் சபையிலிருந்த அரம்பா முதலிய மாதர்கள் தன் சபையில் வந்து நடனம் புரியச் செய்தான். வாயு தனக்குச் சாமரை வீசவும், வருணன் பனிநீர் தெளிக்கவும், குபேரன் தன் பொக்கிஷத்தைக் காவல்காக்கவும், இவ்வாறே மற்ற தேவர்கள் தனக்கு ஊழியம் செய்யவும் கட்டளையிட்டான். இதோடு தன் படைத்தலைவர்களை யழைத்து "நீங்கள் நான்கு திக்குகளிலும் சென்று, விஷ்ணு சிவன் இவர்களைத் தெய்வமாகத் துதிக்கும் பிராம்மணர்கள், சந்நியாசிகள், யோகிகள், தபசிகளையும், பசுக்களையும் இம்சை செய்யுங்கள். அப்போது அந்த விஷ்ணு அவர்களுக்காகப் பரிந்து வருவான். அவனைப் பிடித்துக்கட்டி என் முன் கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டான். இந்த இம்சைகளைச் சகிக்க முடியாமல் யாவரும் பகவானிடம் முறையிட்டுக் கொண்டார்கள்.

இரண்யன் மனைவியாகிய லீலாவதி இந்திரனிடம் சிறைப்பட்டிருக்கையில் கருவுற்றிருந்தாள். வருங் காலத்தில் நடக்கவேண்டிய விவகாரங்களை யுணர்ந்த நாரதர் லீலாவதி நித்திரை செய்யுங் காலத்தில் அவள் கர்ப்பத்திலிருந்த சிசுவுக்கு அஷ்டாக்ஷர மந்திரத்தை யுபதேசம் செய்து வைத்தார். அக்குழந்தையே பிரகலாதன்.

இரண்யன் தன் புதல்வனுக்கு ஐந்து வயதானபோது தேவகுருவாகிய சுக்கிராசாரியின் புதல்வர் சண்டாமார்க்கர் என்பவரைக்கொண்டு வித்தியாரம்பம் செய்வித்தான். இரண்யன் யாவரும் ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதில் "ஹிரண்யாய நமஃ" என்றே ஜபிக்க வேண்டுமென்றும், யாகயக்யாதிகள் யாவும் தன் பெயராலேயே நடத்தப்படவேண்டும் என்றும் கட்டளையிட் டிருந்தான். தானே என்று மழியாத பரம்பொருள் என்றும், தன்னையன்றி வேறு கடவுளில்லை யென்றும் அகங் கொண்டான்.



சண்டாமார்க்கர் பாடசாலையில் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பத்தில் கற்பிக்கும் வழக்கம்போல் பிரகலாதனுக்கும் "ஓம் ஹிரண்ய நமஃ" என்று கற்பிக்கத் தொடங்கினார். ஆனால் பிரகலாதனோ நாராயண மந்திரத்தையே கூறத் தொடங்கியதோடு உபாத்தியாயரில்லாத காலத்தில் மற்ற பிள்ளைகளுக்கும் ஸ்ரீமந் நாராயணரே தெய்வமென்றும், அவர் மந்திரத்தையே ஜெபிக்க வேண்டுமென்றும் போதிக்கத் தொடங்கினான். உபாத்தியாயர் என்ன தண்டித்தும் முடியவில்லை.

இதைக் கண்ட சண்டாமார்க்கர் மிக்க பீதியடைந்து நடுக்கத்தோடு இரண்யனிடம் சென்று "அய்யா இரண்யேசா! உமது புத்திரன், தங்கள் நாமதேய மந்திரத்தைக் கூற மறுத்து நாராயண மந்திரத்தையே பிடிவாதமாகக் கூறுகிறான். என்னாலானவரை சதுர்வித வுபாயத்தாலும் கூறிப் பார்த்தேன்" என்று மொழிந்தார்.

இரண்யன் கடுஞ்சினங்கொண்டு சண்டாமார்க்கரை விலங்கிட்டுக் காவலில் வைத்துவிட்டுத் தன் மைந்தனாகிய பிரகலாதனை யழைத்துத் தன்னைவிட வேறு கடவுளில்லை யென்றும், தன் விரோதியாகிய விஷ்ணுவைத் தெய்வமாகக் கருதலாகாதென்றும் எவ்வளவுகூறியும் பிரகலாதன் விஷ்ணுவே பரம்பொருளென்று பிடிவாதமாகக் கூறினதால், அவனை மல்லர்களைக் கொண்டும், மலைமேலிருந்துருட்டியும், கல் செக்கிலிட்டும், கொடிய நாகங்களை விட்டுக் கடிக்கச்செய்தும், கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் போட்டும் வேதனைப் படுத்தினான். பிரகலாதன் பக்தியால் எல்லாவற்றிற்கும் தப்பித்துக்கொள்ளக் கடைசியில் எமனை யழைத்து அவனைக் கொல் என்றான். எமன் முன்னம் தான் மார்க்கண்டரைப் பிடிக்கப்போய் பட்டபாட்டை நினைந்து துக்கித்து, கடைசியில் தானும் தன் தூதரும் அவனருகில் செல்ல முயன்றபோது அக்னிச்சுவாலை வீசுவதை யுணர்ந்து இரண்யனிடம்சென்று கூற அவன் எமனையும் சிறைப்படுத்திவிட்டு, தானே கையில் வாளேந்தி பிரகலாதனை நோக்கி "நீ தெய்வமெனக் கூறும் ஹரி எங்குளான் கூறு" என்றான். பிரகலாதன் "தந்தையே! உம்மையும் என்னையும் இந்த அண்டாண்ட சராசரங்களையும் படைத்துக் காத்துத் துடைக்கும் பரம்பொருளாகிய அப் பகவான் தூணிலும் துரும்பிலும் அணுவிலும் எங்கும் சர்வவியாபியா யிருக்கிறான்" என்றான். அதைக்கேட்ட இரண்யன் கடுஞ்சினங்கொண்டு "ஆ. அப்படியாயின் இதோ இத்தூணில் அவனைக் காட்டு. இன்றேல் உன்னைக் கொன்று தின்பேன்" என்று அக்கம்பத்தைத் தன் கைவாளால் அடித்தான்.

"உம்பர்க்கு முனக்கு மொத்திவ் வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே யிங்குக் காட்டுதி காட்டா விட்டால்
கும்பத்தின் கரியைக் கொன்ற கோளரி யென்ன வுன்றன்
செம்பொத்த குருதி தேக்கி யுடலையுந் தின்பே னென்றான்."

பிரகலாதனுடைய பக்திப் பிரபாவத்தால் உடனே அக்கம்பம் இரண்டாகப் பிளந்ததும் அதற்குள் நரசிங்க மூர்த்தமாகப் பகவான் உதயமானார். இரணியன் தேவர் மனிதர் விலங்கு பறவை இவற்றால் மரிக்கா வரம் பெற்றதால், பகவான், சிரம் மட்டும் சிங்க சிரமும், இடுப்பு வரையில் தேவ சரீரமும், அதன்கீழ் மனித வடிவமுமாய்த் தோன்றினார். பிறகு அனேக சிரங்களும் கரங்களு முடையவராக விசுவரூபங் கொண்டு இரணியனைச் சங்கரித்தார். வானம் பூமி யிரண்டிலும் மரிக்கா வரமுடையவனாதலால் வாயிற்படியில் உட்கார்ந்து அவனைத் தமது மடியில்வைத்துச் சங்கரித்தார். ஆயுதங்களால் மரணமில்லை யாதலின் தமது கைவிரல்களிலுள்ள நகங்களால் மார்பைக் கிண்டு சங்கரித்தார். இரவிலும் பகலிலும் மரணமில்லாத வரமுடையவனாதலின் சூரியன் அஸ்தமித்தபின் தீபம் ஏற்றுவதற்குமுன் இடையிலுள்ள வேளையில் சங்கரித்தார். அதனால் அதற்கு இரணிய வேளை யென்று பெயர் வழங்குகிறது.

இரணியன் சங்கரிக்கப்படும் சமயம் பகவானருளால் பூர்வக்கியானத்தைப் பெற்றான். உடனே பகவானை நோக்கி "ஓ எம்பெருமானே! கேவலம் ஒரு தலை இரண்டு கரங்களுடைய அடியேனைச் சங்கரிக்கத் தாங்கள் எண்ணிறந்த சிரங்களும் கரங்களும் கொண்டீர்களே. இதற்குப் பதிலாக அடுத்த அவதாரத்தில் அடியேன் குறைந்தது பத்துச் சிரங்கள் இருபது கரங்களோடேனும் ஜனிக்கும்படிச்கும், தாங்கள் ஒரு சிரம் இரண்டு கரங்களோடேயே வந்து அடியேனைச் சங்கரிக்கும்படிக்கும் வரமளிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். பகவான் "அவ்வாறே யாகுக. நீ இராவணனாகப் பிறப்பாய். நாம் இராமனாக வந்து சங்கரிப்போம்" என்றார்.

ஆகவே இரண்டாவது ஜனனத்தில் அந்த ஜயவிஜயாள் இராவண கும்பகர்ணர்களாகத் தோன்றினார்கள்.

மூன்றாவது ஜனனத்தில் அவர்கள் கஞ்சன் சிசுபாலனாகச் சனிக்கவும் பகவான் கிருஷ்ணாவதாரமெடுத்துச் சங்கரித்தார். சிசுபாலன் சங்கரிக்கப்பட்டபோது அவன் தேகத்திலிருந்து ஒரு சோதி கிளம்பி வந்து கிருஷ்ண பகவான் தேகத்தில் புகுந்துகொண்டதாகவும், அந்த அற்புதத்தைக் கண்ட தருமாதியர் அதென்னவென்று பகவானைக் கேட்டபோது, அவர் ஜயவிஜயர்களுடைய சாபவிருத்தாந்தத்தைக்கூறி இதே கடைசி ஜனனமாதலால் இவர்களை நம்மோடு சேர்த்துக்கொண்டோம் என்று கூறியதாகவும் புராணங் கூறுகிறது.

பத்திரிகாசிரியர்.

---

## சர்வகலாசாலையும் தமிழின் உயர்ந்த பாத்தியதையும்.

கடந்த ஏப்ரல்மீ 15உ சனிவாரம் சென்னைத் தொண்டைமண்டலம் பாடசாலையைச் சேர்ந்த தமிழ்ச் சங்கத்தின் முதல் வருடக் கொண்டாட்டம் நடந்தபோது, பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீமான் M. கந்தசாமி



முதலியார் அவர்கள், பி. ஏ, தலைப்பில் கண்ட விஷயத்தைப் பற்றி மனக்கிளர்ச்சியை யளிக்கும் ஓர் அரிய பிரசங்கம் செய்ததாகவும், அவ்வமயம் சென்னை மந்திராலோசனை சபையைச்சேர்ந்த ஸ்ரீமான் ஒ. தணிகாசலம் செட்டியாரவர்கள் பீ. ஏ.; பீ. யல்.; யம். யல். ஸி., (B. A.; B.L.; M.L.C.) அக்ராசனம் வகித்திருந்ததாகவும் 22-4-22 இல் வெளியான "ஸ்வராஜ்ஜியம்" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அப்பிரசங்கத்தில் அக்கல்விமான் தமிழ்ப் புராதனத் தன்மையிலும், ஆழ்ந்த கருத்தும் விசால திருஷ்டியும் உடைத்தாயிருப்பதிலும் வேறெந்தப் பாஷைக்கும் மேற்பட்ட ஸ்தானத்திலிருப்பதென்றும், தமிழில் இலக்கியம், இலக்கணம், தர்க்கம், தத்துவம், வைத்தியம், சோதிடம் முதலிய பல பிரிவுகளைப்பற்றி ஏராளமான நூல்களிருப்பதே அதனுடைய அகன்ற தன்மைக்கு அத்தாட்சி யென்றும் கூறினார். மேலும் தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, குறள், முதலிய சங்கநூல்களின் பெருமையையும், மற்றப் பாஷைகளில் அவற்றுக் கிணையானவையில்லை யென்பதையும், தர்க்க சாத்திரத்தை யொட்டி வியாக்கியானங்கள் வரையப்பட்டிருக்கும் சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களின் அருமையையும் பற்றிக் கூறியிருக்கிறார். முடிவில் சென்னை சர்வகலாசாலைச் சங்கத்தினர் இப்போது தமிழை மிக்க அலட்சியம் செய்திருப்பதைப்பற்றிக் கூறித் தமிழ் முன்னிருந்த நிலைமைக்கு வரவேண்டியதற்கு என்ன செய்யவேண்டியதென்பதைப்பற்றி விவகரிக்கிறார்.

அந்தோ! நம் அருமைத் தமிழ்த் தாயின் தற்கால நிலைமை மிகப்பரிதாபமானது. அது இன்னும் சீர்கேடான நிலைமையையடையும் பாதையில் துரிதமாகச் சென்றுகொண் டிருப்பதே மிக்க துக்ககரமாக விருக்கிறது. இவ்வாறே இன்னும் கொஞ்சகாலம் நடக்குமாயின் ஆங்கிலம்கற்கும் நமது மாணவர்கள் தாய்ப்பாஷையில் பேசவே சக்தியற்றவர்க ளாவார்களென்பதில் சற்றும் ஐயமில்லை. ஆங்கிலத்தில் இவர்கள் கற்கும் கல்வியில் சில பிரிவுகள் இவர்கள் பரீட்சையில் தேர்ச்சி யடையுமட்டுமே பயன்படுமன்றிப் பிறகு ஒரு காசுக்கும் பயன்படாது. இப்போது அனேகம் பிள்ளைகள் தமிழைத்தள்ளிவிட்டுத் தேசசரித்திரம் (History) முதலிய இத்தகையவற்றைப் பாடமாக எடுத்துக்கொள்கிறார்கள். பிரான்ஸ், கிரீஸ், இடலி, டென்மார்க் இந்தத் தேசங்களின் சரித்திரங்களை நமது பிள்ளைகள் நுனிப்புல் மேய்வது போல் உருப்போட்டுப் பரீட்சையில் எழுதிவிட்டு உடனே மறந்துவிடுவதில் என்னவேனும் பயனுண்டோ? வங்காள மாகாணத்தில், மத்திய வகுப்புப் பள்ளிக்கூடங்களின் பயிற்சி முறைகள் மாற்றப்படும் என்று அறிகிறோம்.

(1) தேச பாஷையே முதற் பாடமாகவும், ஆங்கிலமொழி இரண்டாம் பாடமாகவும் கொள்ளப்படும். (2) ஆங்கிலத்தைத் தவிர மற்றப் பாடங்கள் தேச பாஷையிலேயே கற்றுக் கொடுக்கப்படும். (3) விவசாயம், தோட்ட

வேலை, நூல் நூற்றல், நெசவுத்தொழில் முதலியன யாவும் கற்றுக்கொடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

ஆங்கில பாஷாபாடம் தவிர மற்றப் பாடங்கள் தாய்ப்பாஷையில் கற்பிக்கப்பட்டால்தான் இரசாயன சாத்திரம் (Chemistry), பிரகிருதி (Physics), ஜந்து தேக தர்மசாஸ்திரம் (Physiology) முதலியவற்றை நம்மவர் படிப்பதால் நம் தாய்நாட்டிற்குப் பயனுண்டாகும்.

நமது இராஜதானியில் கேவலம் முதலில் தாய்ப்பாஷையையும் ஒரு கட்டாயப் பாடமாகவாவது செய்ய முயலவேண்டும்.

இப்போது கலாசாலைகளில் உயர்தரக்கல்வி கற்கும் மாணவர்கள் தாய்ப்பாஷையைப் பாடமாக எடுத்துக் கொள்ளாதபடியால் இரண்டொரு தமிழ் மாணவர்களுக்காக ஒரு தமிழ்ப் பண்டிதரை வைத்துக்கொண்டிருப்பது வீண் செலவென்று இப்போதிருக்கும் பண்டிதர்களையும் எடுத்து விடுகிறதாகத் தெரிகிறது. அதன்பிறகு கலாசாலையில் தமிழ் உபாத்தியாயர் இல்லையென்ற குறையால் ஒருவருமே தமிழைப் பாடமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

அந்தோ! இவ்வாறு நேர்ந்தால் கொஞ்ச நாட்களில் நமது தாய்நாடு எத்தகைய நிலைமைக்கு வருமென்பதை யறிவாளிகளே சிந்திக்கலாகும். தாய்ப்பாஷையை யலட்சியம் செய்த எந்த நாட்டாரேனும் முன்னுக்கு வந்திருக்கிறார்களா? தன் தாய்ப்பாஷையில் மேல்நாட்டுச் சாத்திரங்களை யெல்லாம் மொழிபெயர்த்துச் சனங்களுக்குக் கற்பித்ததாலன்றோ யாவரும் ஆச்சரியப்படத்தக்க காலத்தில் ஜப்பான் மேல்நாடுகளோடு சமமான அந்தஸ்தை யடைந்தது. தாய்ப்பாஷை குன்றினால் நாம் ஒரு ஜாதியாரென்பதும், ஒரு மதத்தவரென்பதும் அடியோடில்லாதுபோம். பிறகு தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கென்று நம் நாட்டுத் தேசபக்தர்கள் அனைவரும் படும்பாடுகளனைத்தும் பயனற்றனவாகமுடியுமன்றோ. இனியாயினும் மந்திராலோசனை சபையிலுள்ள நம்மவர்கள் இவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொண்டு தமிழைப் பழையபடி கட்டாய பாடமர்க ஏற்படுத்த முயல்வார்களென்று நம்புகிறோம். இன்றேல் நம்மவர் மந்திரிகளா யமைந்தும் நம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள். ஆண்டவன் அருள் புரியப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

## கடிதங்கள்.

“ஆனந்தபோதினி” பத்திராதிபர் அவர்களுக்கு,

சென்னை.

ஐயா,

தங்கள் அருமை ஆனந்தனின் மாசி மாத இதழில் வெளிவந்துள்ள விக்ரஹ ஆராதனையைப் பற்றிய தலையங்கத்தைக் கண்டு உவகை கொண்டு அது விஷயமாகவே சிற்சில அம்சங்களை கீழ்க்குறிக்க விரும்புகிறேன்.



சரித்திர முறையாக விமர்சனஞ் செய்யப்பட்டபடி பல்லாயிரம் வருடங்களுக்குக் குறையாமல் நிலவி வரும் நம் நாகரீகத்தில், கண் காணுமிடத்தெல்லாமும் மனம் நோக்குமிட மெல்லாமும் உள்ளதோர் பரத்தைப் பல தத்துவத்தாலான உடம்பினுள் காண்பதற்கு, உள் நோக்கு கொள்வது எளிதன்றென, உடம்பை ஆலயமாக உருவகப்படுத்தி ஊனினுள் உள்ள உத்தமனை அவ்வாலயத்தில் ஓர் மூர்த்தத்தில் இலயப்படுத்தி, பகிர்முகங்கண்டவாறு உண் முகம் நாடுவது முறையெனப் பண்டைமறை எல்லாம் பறைசாற்றப் பக்குவ முனிகள் பழாப் பழங்களையும் பழுக்கச்செய்து வந்திருக்கின்றனர். இவ்வூனினுள் உத்தமனைக் காண்டலே உடம்பினலாய பயனென்பதும், அவ்வாறு காணாதார் ஜென்ம துக்கம் நீங்கி நீங்காயின்பம் அடைதலில்லை என்பதுமே நம்கொள்கை. எனவே நமதருமை நாவுக்கரசும் “தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக்கண்டுகொண்டேன்” எனத் தம்மருமை அனுபவத்தை விளக்கியுள்ளார். இருதய குகையில் வாசம் செய்யும் அணுவுக்கணுவானதும் மகத்துக்கு மகத்தானதுமான இப்பொருளை வேதாந்த விஞ்ஞானத்தால் காண்டலே சர்வ துக்க நிவர்த்திக்கும் பரமானந்தப் பிராப்திக்கும் வழியாயிருப்பது. நம் ஜீவியலக்ஷியமெல்லாம் தேவர்களும் அடைதற்கரிய இவ்வுத்தம சரீரத்தில் உத்தமனைக் காண்டலேயாகும். இதுவரை வரைந்த இத்தனை வாக்கியங்களிலும் நான் “காண்டல்” என்பதையே வற்புருத்துகிறேன். இப்பிறவியிலேயே காணவேண்டும். ஏனெனில் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? எது வருமோ? எனவே அத்தத்துவப் பொருளைக் காண, உள்ளே காண, வெளியே ஆயத்தமாகக் கற்பனா சரீரத்தில் காணவேண்டுவது அவசியமாகிறது. இது நம் கொள்கை.

ஆனால் என் ஒரு சார்பார், இச்சகுணத்தை, சகுண ஆராதனையை, விக்ரஹ பூஜையைக் கண்டிக்கிறார்களென்றால், அவர்களுடைய லக்ஷியமெல்லாம், மனிதனாய்ப் பிறந்ததற்கு, நல்லவனாகவும் உலகத்துக்கு உபயோக முடையவனாகவு மிருத்தலேயாம். அவ்வாறிருந்தால் இறந்தபிறகு கடவுள் அவர்களுக்கு மோக்ஷம் கொடுப்பார் என்பது அவர்கள் கொள்கை. இந்தக் கொள்கை இந்துக்களல்லாதவர்களில் பெரும்பாலோர் கொள்கையாம். இவர்கள் மோக்ஷமடைய நல்லவர்களா யிருக்கவேண்டு மென்பது தவிர்த்து செய்யவேண்டுவ தின்னதென்பது விளங்கவில்லை. இவர்கள் கொள்கை நம் சோபானத்தில் முதல்படியி லடங்கிவிட்டது. இதை இயமம், நியமம், என நாம் சொல்லுவோம். அல்லது சரியை என்ற படியில் வைப்போம். இப்படியில் இந்திரியங்களுக் கியற்கையாயுள்ள சேட்டைகளால் நேரும் எல்லா பாதகங்களையும் களைந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகி அம்தணராதலே இச்சோபானத்தின் தேவையாம். இதற்கு மேம்பட்டதான சோபானங்களில் கிரியை ஒருவேளை சில மதங்களிலும் புகுந்ததா யிருக்கலாம். அதற்கு மேம்பட்ட யோகம், தபஸ், ஞானம், இத்யாதி முறைகள் இவர்களிடத்து எங்கேனும் காணப்படுவதாகப் புலப்படவில்லை.

இதனால் அவ்வப்போது அவதரித்த மகான்கள் அந்தந்த காலத்திற்கும், இடத்திற்கும் தக்கபடி எவ்வளவு வரையில் கூறினால் விளங்குமோ அவ்வளவு மட்டிலேயே மதபோதனை செய்திருக்கின்றனரென்ற ஆன்றோர் சித்தாந்தம் உண்மையே யென நன்கு விளங்குகிறது.

ஆனால் கடவுள் எங்கு முளாரென இவர் வாயார வாழ்த்தலாம். ஆனால் சுவானுபவத்தில் எங்கும் பெருவழக்காய் நின்று தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்ட கோடிகளெல்லாம் நிற்க இவர்கள் காண்கின்றனரா? இல்லையே. நம்மவரோ, தூண், துரும்பு, முதல் மகத்தான ஆகாசம் வரையிலுள்ள எல்லா அண்டசராசரங்களையும் தாண்டு சுடரனைய சோதிபோல் காணக் கூடியவர்கள். இதுவன்றோ அன்னார் இலக்ஷியத்துக்கும் நம்மனோருடைய தற்குமுள்ள வித்தியாசம். இத்தகைய கொள்கைக்கு இப்பூர்வ பீடிகையான பகிர்முக விக்ரஹாராதனம் இன்றியமையாததன்றோ. எனவே சிலநாட்கள் முன்பாக நாகரீக விவரணஞ் செய்துகொண்டோரின் நயமான வார்த்தைகளைக் கேட்டு நம்மவர் கெடுவது காலத்தின் கொடுமையே! இதனால் நான் பிறமதத்தின் இலக்ஷியங்களைக் குறை கூறவந்ததாகக் கொள்ளலாகாது. உண்மையில் விஷயம் அவ்வாறிருக்கிறது.

வாஸ்தவமாக இவ்விக்ரஹங்களுடைய மகிமையை யறிய, அவைகளின் சந்நிதானத்தில் நின்று காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கினாலன்றி வீண் வாதம் செய்வதில் பயனில்லை, பரீக்ஷிக்க விரும்புவோர் கருணை வள்ளலான, ஆரழலாய் நீண்டுகந்த எம் தேஜோமூர்த்தியாகிய அருணாசல இலிங்கத்தின் முன்பாக ஐந்து நிமிடங்கள் நிற்கட்டும். பாழான மனமெல்லாம் குவிந்து பரம்பொருளை நாடுமென்பதி லையம் சிறிதளவுமில்லை, முக்காலுமில்லை. அக் கருணாமூர்த்தி தன் கருணை வெள்ளத்தை அன்பரனைவர்க்கும் திறப்பாராக.

ஓம் தத் ஸத்.

திரு. கி. சுந்தரேசையர்,
திருவண்ணாமலை.

## ஓர் கடிதம்.

சோதர சோதிரிகளே!

நான் எனது நண்பரிடம் துன்மதி௵ பங்குனி௴ சஞ்சிகையை ஒருநாள் வாங்கி வாசித்துக்கொண்டு வருகையில் "குரு வணக்கம்" என்ற தலைப் பெயருள்ள வியாசத்தை வாசிக்க ஆரம்பித்தேன்,

அதைப் படித்து வருகையில் அந்த வியாசம் நான் கொஞ்சகாலத்திற்கு முன் ஒரு புஸ்தகத்தில் வாசித்த ஞாபகம் வந்தது. அதைப் பரிசோதிக்க ஆர்வமுற்றுப் பரிசோதிக்கும்போது அது மதுரை வித்தியாபாநு பத்திராதிபர் ஸ்ரீமான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களால் இயற்றப்பட்ட வியாசத் திரட்டின் முதல் பாகத்தில் இருந்ததைக் கண்டேன். இத்துடன் துர்துமி௵ வைகாசி௴ சஞ்சிகையில் "திருநீறு" என்ற வியாசமும் அதிலிருந்து எடுத்தது என்றறிந்தேன். இதுபோன்ற குற்றங்களுக்கு ஆளாகாத நமது ஆனந்தன் மேற்படி கவிராயருக்குக் குற்றவாளியானானே என்று நான் விசனிக்கிறேன்.

பகல் கொள்ளை அடிப்பதுபோல் தானே வியாசம் எழுதியதாகப் பாவித்து வியாசத்தின்கீழ் கையொப்பமிட்டிருக்கிறார். அன்னவரை நாம் தூஷிப்பது நமக்கு அழகல்ல. இனியாவது அன்னவர் இக்காரியம் செய்யாதிருப்பார் என்றும், எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியுமாறு பிரார்த்திப்போமாக.

பட்டுக்கோட்டை க. நாடிமுத்துப் பிள்ளை,
மாயவரம்.

குறிப்பு:—மேற்கண்ட இரண்டு வியாசங்களும் பா. பஞ்சாபகேசன், (மாயவரம்) என்பவரால் அனுப்பப்பட்டவை. இவ்வாறு முன்னமே பலர் தங்களுக்கு உண்மையில் இல்லாத கௌரவத்தை யடையக்கருதி அன்னியர் எழுதியதைத் தாங்கள் எழுதியதாக அனுப்பியிருக்கிறார்கள். இத்தகையார் அதனால் அவமானமடைவதைக் கண்டிருந்தும் சிலர் இன்னும் இத்தகைய மிக்க இழிவான களவுசெய்து ஆனந்தனுக்கு மனவருத்த மளிக்கிறார்கள். இதனால் ஒரு வியாசம் வந்தால் நாம் அதை நம்பி யுடனே வெளியிடாமல் சிந்திக்கவேண்டி யிருக்கிறது. இத்தகையார் ஆனந்தனுக்குத் தீங்கிழைக்கும் பெரும்பாதகத்தை யடைவார்களென்பது நிச்சயம்.

பத்திரிகாசிரியர்.



## பகவத்கீதை வசனம்

(429-ம் பக்கத் தொடர்ச்சி)

துரியோதனன் துரோணாசாரியரிடம் அவ்வாறு கூறியபின் அவனுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவதற்காகக் கங்கா புத்திரராகிய பீஷ்மர் தமது வெண்சங்கை யெடுத்து வாயில் வைத்துச் சங்கநாதம் செய்தார். உடனே துரியோதனனுடைய சைனியத்தி லிருந்த மற்ற படைத்தலைவர்களும் தத்தமது சங்கங்களைப் பூரித்தனர். பேரிகை முதலிய அனேகவாத்தியங்கள் எங்கும் கோஷித்தன.

எதிரிகளின் இக்கோஷத்தைக் கேட்டதே, இந்த அண்டாண்ட சராசரங்களை யெல்லாம் தமது உதரத்தில் வைத்துக் காக்கும் மாதவனாகிய ஸ்ரீகண்ணபிரான் பாஞ்சசந்நியம் என்ற தமது சங்கை மலர்க்கரத்திலேந்திச் சிவந்த பவழம்போன்ற வாயில் வைத்துச் சப்தமேகங்களும் ஒன்றுசேர்ந்து முழங்கினாற்போலும், சப்த சமுத்திரங்களும் பொங்கிச் சத்தித்தாற்போலும் பூரித்தார். அச்சத்தம், "ஏ துரியோதனாதியரே! இப்பாண்டவர்கள் நமது பிராணனுக்குச் சமானமானதால் நீங்கள் இந்த யுத்தத்தில் தப்பிப் பிழைக்கப்போவதில்லை" என்று கூறுவதுபோன்றிருந்தது.

பகவான் தமது பாஞ்சசந்நியத்தை முழக்கத் தொடங்கியதே தருமர் அனந்தவிஜயம் என்ற தமது சங்கையும், பீமன் பௌண்டரீகம் என்ற சங்கையும், அர்ச்சுனன் தேவதத்தம் என்ற சங்கையும், நகுலன் சுகோஷம் என்ற சங்கையும், சகதேவன் மணிபுஷ்பகம் என்ற சங்கையும் எதிரிகளின் இருதயம் நடுங்கும்படி தொனித்தார்கள். இன்னும் பாண்டவர் சேனையிலுள்ள துருபதன், சிகண்டி, திருஷ்டத்யும்நன், விராடராஜன் முதலிய மற்றப் படைத்தலைவர்களும் தத்தமது சங்கங்களை யெடுத்துக் கோஷித்தார்கள். இச்சங்கநாதங்கள் கௌரவருடைய நெஞ்சை யூடுருவி ஆகாயத்திலும் பூமியினும் எதிர் ஒலிமயமாய் நிறைந்தன.

இனி யுத்தத்தைத் தொடங்கப்போகும் சமயம் காண்டீபனாகிய அர்ச்சுனன் கண்ணபிரானை நோக்கிப் பின் வருமாறு கூறலானான்:—

"எல்லா வுலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் பகவானே! இங்கு நம்மோடு யுத்தம் செய்யக்கருதி வந்திருப்பவர்கள் யார்? இங்கு வந்திருப்பவர்களில் எவரோடு நாம் போர்தொடுக்கலாம்? என்பனவற்றை யறிந்து கொள்வதற்காக, எந்தவிடத்தில் நின்று பார்த்தால் அனைவரையும் நன்றாகப் பார்க்கக்கூடுமோ, அந்தவிடத்தில் எனது இரதத்தைக்கொண்டு போய் நிறுத்தப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

அர்ச்சுனன் அவ்வாறு பிரார்த்தித்ததே, கார்வண்ணனாகிய கண்ணபிரான் வெள்ளைப்புரவிகள் பூட்டப்பட்ட தமது ரதத்தை இருசேனைகளுக்கும் மத்தியில் கொண்டுபோய் பீஷ்மாதியர் இருக்குமிடத்திற்கு நேர்முகமாய் நிறுத்தி "ஹேபார்த்த! இங்கு யுத்தசந்நத்தராய் ஒருங்குகூடி யிருக்கும் கௌரவர்களைப்பார்!" என்றருளினார்.

அவ்வாறே யர்ச்சுனன் எதிரிகளின் சேனையை நோக்கியபோது அங்கு தன் தந்தைமார்களும், பாட்டன்மார்களும், ஆசாரியர்களும், மாதுலர்களும், சகோதரர்களும், புத்திரர்களும், பௌத்திரர்களும், சிநேகர்களுமாக உள்ளவர்களையே கண்ணுற்றான். உடனே "அடடா இவர்களெல்லாம் நமது சுற்றத்தார்களல்லவா? இவர்களைக்கொல்வது அதர்மமும் பாபமுமல்லவா" என்று அவன்மனதில் தோன்றிய சோகமோகத்தால் சித்தக்கலக்கமும் துக்கமு மடைந்தவனாகிப் பகவானை நோக்கிப் பின் வருமாறு கூறினான்:—

"ஓ பகவானே! யுத்தம்புரியக்கருதி இந்த இரணகளத்தில் வந்து நிற்கும் எனது பாட்டன்மார், தந்தைமார், சகோதரர், மாதுலர் முதலிய இச்சுற்றத்தாரைக் காணுந்தோறும் என் கைகால் முதலிய அவயவங்கள் சோர்வடைகின்றன, நாவரள்கின்றது, முகங்காய்கின்றது, என்தேகம் வெதும்பி நடுக்கமும் மயிர்க்கூச்ச முண்டாகின்றன, என்கையினின்றும் காண்டீபமென்ற வில்லும் நழுவுகின்றது. சரியாக நிற்க என்னால் கூட



வில்லை. இவற்றோடு பல அவசகுனங்களையும் காண்கின்றேன். பகவானே! இந்த யுத்தத்தில் பீஷ்மர் முதலிய என் சுற்றத்தாரை யெல்லாம் சங்காரம் செய்துவிட்டு நான் அடையத்தக்க பலன் ஒன்றையுங் காண்கிலேன். எனக்கு வெற்றியும் வேண்டாம், இராஜ்யமும் வேண்டாம், இவற்றாலடையும் சுகபோகமும் வேண்டாம்.

நாம் யாருக்காக இராஜ்யத்தையும், அதனால் வரும் போகத்தையும், சுகத்தையும் அடைய விரும்புகிறோமோ, அத்தகைய சுற்றத்தாரே தங்கள் உயிர்பொருள் முதலியவற்றிலுள்ள ஆசையை விடுத்து மரணத்திற்குத் துணிந்து இப்போரின் முன்வந்து நிற்கின்றனர். விஷயம் இவ்வாறிருப்பதால் இவர்களைக் கொல்வதால் எங்களுக்கு இழிவும் பாபமுமே சம்பவிக்குமன்றி இன்பம் எவ்விடத்தும் உளதாகாது. ஏ மதுசூதன! இவர்கள் என்னைக் கொல்வதாயினும் நான் இவர்களைக் கொல்லமாட்டேன். மூவுலகமும் எனக்குக் கிடைப்பதாயினும் கொல்லேன் எனின், இம்மண்ணுலகத்தை யடையும் பொருட்டு இவர்களைக் கொல்ல விரும்புவேனோ? அரசர்கள் தம் குலம் நாசமாகும்படி செய்வதனா லுண்டாகும் தோஷத்தையும், மித்திரர்களுக்குத் துரோகம் செய்வதனா லுண்டாகும் பாபத்தையும் துரியோதனாதியர் அறியாத தன்மையால் மறந்திடினும் நான் அவற்றை மறக்கேன்.

குலம் நாசமாகவே குலத்தின் சர்வதர்மங்களும் நாசத்தையடையாநிற்கும். குலதருமம் நாசமாகவே குலம் முழுவதையும் அதர்மம் சூழ்ந்து கொள்ளும். அது சூழவே குலமாதர் நெறிதவறி விடுவார்கள். மாதர்கள் நெறிதவறினால் மாதர் பதிவிரதாதர்மம் கெடவே வர்ணாசிரம தர்மங்களனைத்தும் தலை தடுமாற்றமுறும். வருணாசிரமதர்மம் கெடவே அக்குலத்தைச் சார்ந்தவரும், சாராது குலங் கெடும்படியான செயலைச் செய்தோரும் மீளாநரகிற் சேர்வர். இப்படி நேர்வதால் பிதுர்க்களும், தங்களுக்குப் பிண்டக்கிரியைசெய்ய ஒருவருமில்லாததால், நரகத்தில் வீழ்வர்.

மின்னல்போல் தோன்றியழியும் இராஜ்ஜியம் முதலிய செல்வத்தை யிச்சித்துத் தங்கள் உயிரையே விடத்துணிந்து வந்துநிற்கும் இத்துரியோதனாதியரைக் கொல்லத்துணிந்த நான், என்ன ஆச்சரியம்! மஹாபாவத்தைச் செய்யவிருந்தேன். ஆயுதபாணிகளாக நிற்கும் இவர்கள் முன்னே நான் ஆயுதங்களை வைத்துவிட்டு யுத்தம்செய்யாது நின்றால் இவர்கள் என்னைக் கொல்லத் துணிவரோ? அப்படி யிவர்கள் என்னைக் கொன்றாலும் அதை க்ஷேமமாகவே நான் பொறுத்துக் கொள்வேன்" என்று கூறி, சோகத்தால் பிடிக்கப்பட்ட மனதையுடைய அர்ச்சுனன், தன்கையிலிருந்த வில்லும் அம்பும் நழுவி விழவும் கண்களில் நீர் அரும்பவும் தேர்த்தட்டில் அமர்ந்தான்.

சோக அத்தியாயம் முற்றிற்று.

## 2-வது சாங்கியயோக வத்தியாயம்

மேற்கண்டபடி பீஷ்ம துரோணாதியர்களிடம் உண்டான இரக்கத்தால் சோகமுற்றுச் செய்வதின்னதென் றுணராது தியங்கி நின்ற அர்ச்சுனன் ஈடேறும் வண்ணம் மனதில் உன்னிய கிருஷ்ணபகவான் அவனை நோக்கி,

"ஏ அர்ச்சுனா! உனக்குண்டாகி யிருக்கும் இச்சோகமாகிய மோகமானது அவிவேகிகளுக்கும், பேடிகளுக்கும் உரியது. துர்க்கீர்த்தியை யுண்டாக்குவது. குறையாத ஞானத்தைக் குறைப்பது. துன்பத்தில் மகாதுன்பமானது. நித்திய நரகத்திற் றள்ளத்தக்கது. சுத்தவீரனாகிய உன்போன்றவர்க்குத் தகுதியல்லாதது. இத்தகைய சோகம் இந்த யுத்தபூமியில் எவ்வாறுனக் குண்டாயிற்றோ நான் அறியகில்லேன். சுத்தவீரனென்று பிரக்யாதிபெற்ற உனக்கு இக்கோழைத்தனம் தகாது. இதையொழித்து உனது க்ஷத்திரிய தருமத்தின்படி யுத்தம்செய்யத் தொடங்குதி!" என்று கூறியருளினார்.

அர்ச்சுனன்:—ஓ பகவானே! இங்கு யுத்தம்செய்ய வந்திருப்போர் நான் மனம், வாக்கு, காயம் என்ற மூக்கரணங்களாலும் பூஜித்தற் குரிய பாட்டன்மார், தந்தைமார், ஆசாரியர் முதலியவர்களாக விருக்கின்றார்களே. இத்தகையோரை நான் எவ்வாறு கொல்லத் துணிவேன்? இவர்களைப் பகைவரெனக்கருதிக் கொன்று அதனால் பெருவாழ்வு பெறுவதைக் காட்டிலும், இவர்களது கீர்த்தியைக் கூறிக்கொண்டு அன்னியரிடம் யாசித்துச் சீவித்தல் சிரேஷ்டமாகுமல்லவா? அப்படிக்கின்றி யிவர்களைக்கொன்று நான் இவ்வுலக போகங்களை யனுபவிப்பது இவர்கள் உதிரத்தில் சமைத்த அன்னத்தைப் புசிப்பதுபோலல்லவோ ஆகும்?

இப்போது பாணப்பிரயோகம் செய்து யுத்தத்தைத் தொடங்குவதோ, அல்லது இதை விட்டுவிட்டுப் பிட்சையெடுத் துண்பதோ எனக்குப்புலப்படவில்லை. அப்படி யுத்தம் செய்யினும் இவர்களே யென்னை வெல்வார்களோ, நானே யிவர்களை வெல்வேனோ, நிச்சயம் ஏது எனக்கூற முடியாது. இங்குள்ளவர்களில் எவர்கள் இறந்தால் அதைச் சகித்துக்கொண்டு நான் உயிர் வாழமாட்டேனோ, அத்தகைய பீஷ்மர் துரோணர் முதலியோரே வெற்றியைக்கருதி யுத்தத்தைத் தொடங்கென்று முன்வந்து நிற்கின்றனர்.

ஓ பிறப்பிறப்பற்ற பரம்பொருளாகிய பகவானே! இந்த பீஷ்ம துரோணாதியர்களிடம் நான் வைத்துள்ள பாசமாகிய இருள் என் அறிவாகிய கண்ணை மறைப்பதனால் நான் ஈடேறும்வழி யின்னதென்று எனக்கு விளங்கவில்லை. நான் செய்யத்தக்க சிரேஷ்டமான காரியம் இன்னதென்று கூறியருளப் பிரார்த்திக்கிறேன். ஏ செந்தாமரைபோலுங் கண்களையுடைய



மேகவர்ணனாகிய சுவாமி! "பிழைத்தற்குரிய மேலானவழியை நீ வேண்டிக்கேளாமல் நான் கூறுவேனோ" என்று கருதுவீராயின், இதோ தாங்களே எனக்குத் தஞ்சம் என்று நம்பித் தங்களைச் சரணடைந்து தங்கள் பாததாமரையை யடியேன் சிரசிற்றரித்துக் கொள்கிறேன். தங்கள் சீடனாய்த் தங்களுக்குச் சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பிக்கின்றேன். அஞ்சேல் என்று அபயஸ்தம் தந்து இங்கு நான் செய்யவேண்டுவது இன்னதென்று அருள்புரிவீராக.

இப்பூமண்டல முழுமையும் அரசாக்ஷிசெய்யும் பெருஞ் செல்வத்தையும், தேவலோக போகங்களையு மடைந்தாலும், எனது தேகேந்திரியங்களை வருத்தா நிற்கும் இச்சோகமானது என்னைப் பொருந்தாமலும் வருத்தாமலும் பாதுகாக்கத்தக்க உபாயத்தை யெங்கும் கண்டிலேன்." என்று கண்ணீர்சொரிய அழுதான்.

அர்ச்சுனன் பாசமாகிய அக்கினியால் வெந்தழியா வண்ணம், எவ்விதப் பிரதிபலனையும் கருதாமல் உயிர்களைப் பாதுகாப்பதையே தம்கடமையாகக்கொண்ட கிருஷ்ணபகவான், அருள்மாரியால் அர்ச்சுனனது பாசமாகிய அக்கினியைத் தணித்தற் பொருட்டு, வேதமுடிவாகியதும், உலகிற்கு முதற்பொருளானதுமாகிய பரமார்த்த வஸ்துவின் ஞானத்தை அர்ச்சுனனுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்:—

ஹே அர்ச்சுன! துக்கப்படத்தகாத பீஷ்ம துரோணாதியர்களுக்காக நீ துக்கிக்கின்றனை. அறிவாளிகள் மொழியத்தகாத வார்த்தைகளை மொழிகின்றனை. நித்தியா நித்திய வஸ்துக்களைப்பற்றி ஆராய்ந்தறிந்த அறிவுடையோர்கள் இறந்துபோன சுற்றத்தாரைக் குறித்தும் இறவாதிருக்கும் சுற்றத்தாரைக் குறித்தும் விசனமடைய மாட்டார்கள் என்பதை யறியாய் போலும். ஏ அர்ச்சுனா! நீயும், நாமும், இங்கிருக்கும் மற்ற அரசர்களும் முன்னம் இல்லாதிருந்தவர்களல்ல, இனிமேலுள்ள எதிர்காலத்தும் இல்லாமற்போகிறவர்களுமல்ல. நாம் ஆன்மசொரூபமாக எப்போதுமேயுள்ளோம்.

இறந்துபோவது தேகமே. அதற்குள் இருக்கும் ஆன்மசொரூபம் அழியாதது. தேகமே பிறத்தல், பாலியம், கௌமாரம், யௌவனம், விருத்தாப்பியம், மரணம் என்ற மாறுதல்களை யடைகின்றது. ஆன்மாவிற்கு எவ்விதமாறுதலு மில்லை. தேகமே அழிந்து மறுபடி வேறுதேகம் உண்டாகிறது. ஆன்மா நாசமடைவது மில்லை, ஜநநமடைவது மில்லை, அது நித்தியம். இந்த உண்மையை அனுபவமா யறிந்தவன் தேகம் அழிந்து பிரியும்போதும் அது தன்னது என்றுகருதிச் சற்றும் துக்கிக்கமாட்டான்.

அர்ச்சுன ...ப்பரீட... ...வ்வாறு எல்லா அவஸ்தைகளும் தேகத்திற்கே யெனின் ... உஷ்ணம், சீதம் முதலிய இவற்றை ஒரு கிரியையு

மில்லாதிருக்கும் ஆன்மா (நான்சுகி, நான் துக்கி என்று) அடைவது யாதினால் ?

கிருஷ்ணபகவான்:—ச்ரோத்திரம் முதலிய இந்திரியங்களும், சத்தம் பரிசம் முதலிய விஷயங்களும் சம்பந்தப்பட்டுச் சீதோஷ்ண முதலியவற்றை யந்தக்கரணத்திற் களிக்க, அந்தக்கரணத்தோடு தாதான்மிய சம்பந்தமுடைய ஆன்மாவோடு அவை பொருந்துகின்றன.

மேலும், ஏ அர்ச்சுனா ? சீத உஷ்ணங்கள், சுகதுக்கங்கள் இவற்றின் தன்மைகளை நோக்கின் இவை அநித்தியமாம். அதாவது தோன்றுவதும் மறைவதுமானவை. அவற்றை நீ சகித்துக்கொள்வாயாக. அவ்வாறு சுகதுக்கங்களைச் சகித்துக்கொள்ளும் பெரியோரை யவை கலங்கச்செய்யா.

[சீதோஷ்ண சுகதுக்காதிகள் இந்திரிய வாயிலாய் மனதைத்தாக்குகின்றன; சாட்சியாயுள்ள ஆன்மாவை அவை தாக்குவதில்லை. ஆன்மா நிர்விகாரி, நிர்க்குணமுடையது. அவ்வாறிருக்க நாம் ஏன் அதையுணர்ந்து சந்தோஷமும் துக்கமும் அநுபவிக்கிறோ மெனின், இந்த ஆன்மா தன்னை மறந்து அந்தக்கரணத்தோடு தாதான்மியமடைந்துள்ள பிராந்தியால் அவ்வாறு அநுபவிப்பதாய் மயங்கி வருந்துகிறது. "நாம் சாக்ஷிமாத்திரமே, நமக்கு ஒரு கிரியையுமில்லை, சுகதுக்கம் ஒன்றுமில்லை" என்றதிடம் பொருந்தி மனதோடு தாக்கற்று நிற்போரைச் சுகதுக்கங்கள் பாதிக்கா. அத்தகைய தன்னையறிந்த ஞானிகள் தேக உணர்ச்சி யில்லாதவர்களாய் இருப்பதை யநுபவமாய்க் காணலாம்.

ஆன்மா தாதான்மியங்களால், தான் சுகதுக்கங்களை யநுபவிப்பது போல் மயங்கி யிருப்பதற்கு ஒரு திருட்டாந்தம் கூறுகிறோம். ஒரு குடத்தில் ஜலத்தைவிட்டுத் தீயின்மேல் வைத்தால், தீ குடத்தில் தாக்க அதிலுள்ள ஜலத்திற்குச் சூடேறி அச்சலம் கொதிக்கிறது. அப்போது அச்சலத்திலுள்ள சூரியபிம்பம் துள்ளிக்குதித்துச் சிதறுவதுபோல் தெரிகிறது.

குடமே தேகம்—அதிலுள்ள ஜலமே அந்தக்கரணம்—பிரதி பிம்ப சூரியனே ஜீவன்—அப் பிரதிபிம்பத்திற்கு ஆதாரமான வானத்திலுள்ள சூரியனே சிவசாட்சியாகிய ஆன்மா—விஷயாதிகளே அக்னி. அக்கினியின் சூடு ஜலத்தைத் தாக்குவதுபோல் விஷயாதிகளா லுண்டாகும் சுகதுக்காதிகள் இந்திரிய வாயிலாய் அந்தக் கரணத்தையே தாக்குகின்றன. சூடு வான சூரியனைத் தாக்குவதில்லை. அதுபோல் சுகதுக்காதிகள் ஆன்மாவைத் தாக்குவதில்லை. ஜலம் கொதிப்பதால் பிம்ப சூரியன் துள்ளுவது போல் தெரிவது எப்படி பொய்த் தோற்றமோ, அவ்வாறே அந்தக்கரணத்தில் தாக்கும் சுகதுக்கங்கள் தன்னைத் தாக்குவதுபோல சீவன் பிரமை யடைகிறது. நாம் சாக்ஷியென் றுணர்ந்தால் பிறகு அப்பிரமை யொழியும்.

மேலும் சுகதுக்கம் என்பவை மனதாலுண்டாவதே யெனலாம். உண்மையில் உலகிலுள்ள பொருள்களில் சுகமாவது துக்கமாவது நிலையா



யில்லை. நமக்குக் குளிராக விருந்தால் அக்கி இதம் செய்கிறது. இன்றேல் துன்பம் செய்கிறது: இவ்வாறே தாரம், புத்திரன், தனம் இவற்றால் ஒருவேளை சுகமும் ஒருவேளை துக்கமும் உண்டாவது அநுபவம். இவ்வாற்றால் சுகமாவது துக்கமாவது, இவை உலகப் பொருள்கள் எதிலுமில்லை. சுகதுக்கங்கள் மனோநிலையைப் பொருந்தியவைகளே. மனம் மாயையாதலின் அவை மாயாசம்பந்தமே. அவித்தையாகிய மாயையொழிந்து நாம் சாக்ஷியாகிய நமது நிஜசொரூபத்தை யுணரின் அவை யொழிந்துபோம்.

ஞானத்தையடைய விரும்பும் அதிகாரி சுகதுக்கங்களில் சமதிருஷ்டியுடையவனாய், அவற்றைப் பொறுமையோ டநுபவிக்க வேண்டு மென்பது விதியாதலின், பகவான் அர்ச்சுனனையும் அவ்வாறு சகித்துக்கொள்ளும்படி கூறினார்.]

(தொடரும்.)

சீடன்

---

## மாணவர்கள் பக்கம்

மாணவ நண்பர்களே! இண்டர்மீடியட் (F. A.) என்ற பரீக்ஷையின் முடிவைப்பற்றிய ஜாப்தாபத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்ததை 20-5-22ல் கண்டோம். யாராருடைய எண் அதில் காணப்படவில்லையோ அவர்களெல்லாம் மிக்க விசனப்படுவார்கள் என்று நாம் கூறவேண்டுவதில்லை. அந்தோ நீண்டகால விடுமுறையைச் சந்தோஷமாகவும் உல்லாசமாகவும் அநுபவித்துக்கொண் டிருக்கும் போது இடையில் இத்துயரம் புகுந்தது மிக்க விசனிக்கத்தக்கதே யென்பதில் ஐயமின்றாம்.

இக்காலத்தில் நாம் திருப்தியாகவே விடைகளை யளித்திருக்கிறோம். தேறவேண்டியதற்குப் போதுமான புள்ளிகள் (Marks) வாங்குவோம் என்று நம்பியவர்களும் கூடத் தவறி விடுவது (இக்காலத்திய கல்வி முறையால்) இயற்கையா யிருக்கிறது. எவ்வாறெனின், ஒரு பாடபுத்தகத்தைப் பாடசாலையில் போதிக்கும் உபாத்தியாயர், அதில் சில அம்சங்களை முக்கியமானவை யென்று கருதிக் கற்பிக்கிறார். ஆனால் பரீட்சையில் கேள்வி கேட்கும் பரீக்ஷகர் அப்பாடத்தில் வேறு அம்சங்களை முக்கியமானவைகளாகக்கருதி, அந்த அம்சங்களைக் கூறாவிட்டால் புள்ளிகளைக் குறைத்துவிடுகிறார். சில சந்தர்ப்பங்களில் போதனாசிரியர் ஒருவிதமாய்ப் போதித்திருக்கப் பரீக்ஷகர் வேறு விதமான விடைகளை யெதிர்ப்பார்க்கிறார். இவற்றால் மாணவர்கள் பட்ட கஷ்டமனைத்தும் வியர்த்தமாகி, காலமும் பணமும் வீண் செலவாய்முடிகின்றன.

சில மாணவர்கள் பரீட்சையில் தேறாவிட்டால் அஃதைப் பெரியதுக்க சம்பவமாகக் கருதி மனதிற்கு மிக்க வியாகூலத்தை யுண்டாக்கிக் கொள்கிறார்கள். இதில் ஒருவித அகௌரவத்தையும் கற்பித்துக்கொள்கிறார்கள்.

நண்பர்களே ! இது பெருந்தவறு. உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு இப்பரீட்சையில் தேறுவது இன்றியமையாததான சாதனமல்ல.

இப்போதிருக்கும் கல்வி முறைப்படி இது ஒரு வெளிப்பட்டமே யன்றி வேறில்லை. ஆங்கில பாடசாலைகளில் வாசித்துப் பட்டம்பெற்றாலும் கடைசியில் பாஷாஞானமட்டுமே ஜீவனாதாரவழிக்குப் பயன் படுகிறதயன்றி, அதனால் வேறு எவ்விதப் பெறுபேறு மில்லையென்பது திண்ணம். மிக்க புத்திசூக்ஷ்ம முடையவனும், மிகக்கஷ்டப்பட்டு வாசித்தவனும் பரீக்ஷையில் தவறிவிடுவதையும், மட்டியும், சோம்பேறியும் ஒவ்வோர் சமயங்களில் தேறி விடுவதையும் காண்கின்றோம். ஆதலின் இதில் கௌரவ அகௌரவ மொன்றுமில்லை.

பரீட்க்ஷையில் தேறியவனே செல்வமும் புகழும் பெறுகிறானென்ற நியமமுமில்லை. அர்த்த விஷயம் பொதுவாய் நாம் முன்செய்த வினையின் பயன்படி நடக்கிறது. மனச்சோர்வு இன்னும் எதிர்காலத்திலும் தீமையை யளிக்கும். ஆகையால் நண்பர்களே! பரீட்சையில் தேறவில்லை யென்று மனங் குன்றிவிடாதீர்கள். வேண்டிய சௌகரியங்கள் இருந்தால், ஊக்கத்தோடும், உரோஷத்தோடும் மறுபடி முயற்சிசெய்யுங்கள். அப்போது அடுத்த பரீட்சையில் தேறுவீர்கள். இன்றேல் கடவுளை நம்பி உத்தமமான துறையில் பொருள்தேட முயலுங்கள். எப்போதும் அறிவை வளர்க்கத் தக்க கல்வியில் நீங்களேயாவது பயில்வதைமட்டும் கைவிடாதீர்கள். சிடன் பதவியை யெப்போதும் கைப்பற்றியிருங்கள். ஆண்டவன் உங்களுக்கு இம்மை மறுமையாகிய இருபயன்களையும் அவசியமளிப்பார்.

சீடன்.

---

## சிந்தனைத் திரட்டு

1. பிறரை நல்வழிப்படுத்த நீ வெளிப்படுமுன், உன் நெஞ்சை முந்தவில் நீ பரிசுத்தப் படுத்துவாயாக.
2. நீ எக்காலும் ஈசனையே நம்பியிருப்ப துண்மையாயின், உனக்கு யாதொரு துன்பமுமில்லை.
3. உனது பிறப்பும், உன்செல்வமும், நீ வகிக்குமுயர்ந்த உத்தியோகமும், உன்னை உண்மையில் சிரியோனாக்காது. நீ செல்கிற நன்மார்க்கமும், இயற்றுகிற நற்கருமங்களும் மட்டுமே உன்னை மேன்மைப்படுத்தும்.
4. நற்குணமே நன்னிலைக்குக் கொண்டுவரும். துற்குணம் உன்னைக் கட்டாய மழித்துவிடும்.
5. தாரான நெஞ்சினனா யிரு. கடினசித்தனா யிராதே.
6. சத்தியமே உன் வாழ்வாகிய கட்டிடத்தின் முதல் அஸ்திவாரக் கல்லாயிருக்கட்டும்.
7. அன்பு, தியாகம், பயமின்மையே உன்வாழ்நாளின் முக்கியகொள்கைகளாகக் கொள்வாயாக.



8. அடிமையாய் ஒருக்ஷணமுமிராதே. மனோதைரிய முடையவனாயும், ஞானவானாயும், சுதந்திரியாயு மிரு.
9. பேராசை பெருநஷ்டம், உனக்குக் கடவுள் கொடுத்ததைக்கொண்டு திருப்தியாய் வாழ்.
10. ஈஸ்வரனிடத்தில் என்றைக்குப் பயபக்தி உண்டாகிறதோ, அன்றானே ஞானத்துக்காரம்பம்.
11. உன் சுய ஆசைகளை அடக்குவாயாக.
12. உன் கொடிய பகைவர்களைக்கூடக் கனவிலும் துன்புறுத்தக் கருதாதே.

எம். பி. எஸ். வேலாயுதம்,
சென்னை.

---

## பெண்கள் பக்கம்

### அவசரம்.

சகோதரிகளே! நான் மேற்குறித்த அவசரத்தைப் பற்றி யுங்கட்கு இரண்டொரு வார்த்தைகள் சொல்லத் துணிகின்றேன். இதனை நீங்கள் ஆழ்ந்து யோசிக்கின் என்மேல் சிறிதும் வருத்தமுற மாட்டீர்கள். அதற்கு மாறாக இவ்வியாசத்தை நன்றாகப் படித்து அதன்படி நடப்பீர்களாயின் மேம்படுவீர்கள்.

"ஐந்து வந்தாலும் அவசரம் ஆகாது" "பத்து வந்தாலும் பதற்றம் ஆகாது" என்னும் பழமொழியைச் சகோதரிகள் பலமுறைகளிலும் கேட்டிருக்கலாம். அவசரமானது ஆபத்தை யுண்டுபண்ணும். நீங்கள் ஒவ்வொரு வேலையைச் செய்யும்போதும் அவசரப்படாமல் சாந்தமாகச் செய்வீர்களானால் ஒருவிதத்திலுங் கெடுதியை யனுபவிக்க மாட்டீர்கள். அவசரமானது உங்களிடம் பொருந்தி விடுவதால் உங்களிடம் அமைந்திருக்கும் நற்குணங்களெல்லாம் தாழ்ந்து மேலோங்காமல் பரிதபிக்கின்றன. நீங்கள் பேசும்போது வெகு அவசரமாகப் பேசி விடுகின்றீர்கள். ஆனால் உங்களிற் சில சகோதரிகள் வெகு சாந்தமாகப் பேசுகிறார்கள். அதனால் நன்மை யெய்துகின்றார்கள். நீங்கள், உங்கள் கணவர்களிடம் பேசும்போதும் வெகு அவசரமாக வார்த்தைகளைக் கோபத்தின் தூண்டுதலால் கொட்டி விடுகின்றீர்கள். பிறகு, "அந்தோ! அறியாமற் சொல்லி விட்டோமே" என்று வருந்துகிறீர்கள். உங்களுடைய கணவர்கள் உங்களுடைய உயிருக்கு இருப்பிடமானவர்களன்றோ! அவர்கள் வேலைக்குப் போய் வரும் களைப்பாலும் வருத்தத்தாலும் சிறிது கோபத்துடன் பேசநேரிடும். அக்காலங்களிலன்றோ எந்த நேரத்திலு முங்கள் கணவர்களை மகிழ்விப்பது போல் மகிழ்விக்க வேண்டும். கணவர்கள் ஒன்று சொல்லு முன் நீங்கள் இரண்டு சொல்ல ஆரம்பிக்கின்றீர்கள். அதனால் உண்டாகும் துன்பமே அதிகம். கணவர்கள் ஏதேனும் கோபமாகப் பேசினாலும் நீங்கள் அவை

களைப் பொறுத்துக் கொண்டு அவசரப்பட்டுப் பேசாமல் அமைந்திருக்க வேண்டும். இவ்விதம் அமைந்திருப்பதற்கு உங்கட்குப் பொறுமை யவசியமானது. பொறுமையை நீங்கள் கொண்டிருந்தால் அவசரம் தலைகாட்டா தோடிவிடும்.

அவசரம் தலைகாட்டா தொழிய நிதானம் ஏற்படும். நிதானம் ஏற்பட்டவுடன் ஒவ்வொரு வேலையுஞ் சரிவர நடைபெறும். சண்டை, சச்சரவு, கலகம் முதலியவைகளை யடியோடு நீக்கிவிடும். "எல்லாத் தானத்திலும் நிதானம் சிறந்த" தென்று பெரியோர்கள் உங்கட்குக் கூறியிருக்கின்றார்களல்லவா? நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாயறிந்திருக்கிறீர்கள். ஆனால் அதன்படி நீங்கள் நடப்பதுதான் காணோம். ஆனால் நீங்கள் இவ்விடத்தில் ஒரு வினா விடுக்கலாம். அதாவதென்னவெனில் ஆண் பிள்ளைகள் மாத்திரம் சரிவர நடக்கின்றார்களா வென்பதே. எந்த விஷயத்திலும் ஒவ்வொருவரும் தம்மிடம் பொருந்தியுள்ள தீக்குணங்களை யொழிக்க முயல வேண்டுவதே கடமையன்றோ! ஆண்பிள்ளைகட்கும் இது போன்ற போதனைகள் எண்ணிறந்தன போதிக்கப்படுகின்றன வென்பது நீங்கள் அறியாததல்ல. ஆண்மக்களும் பெண்மக்களுந் திருத்தமடைந்து விட்டால் இந்தியா பண்டைய சிறப்பெய்த யாது தடை. உலகத்துத் தாய்மார்களாகிய நீங்கள் இவ்விதமான கெட்ட குணங்களை யடியோடு நீக்கி விடுவீர்களானால் மற்றோரும் நல்வழி யடைந்துவிடுவார்கள். ஆகலின் சகோதரிகளே! நீங்கள் நல்வழி யடையவேண்டுமாயின் உங்கள் தேசத்துக்கு நன்மைபுரிய வேண்டுமாயின், உங்கள் உயிரனைய கணவர்களை மகிழ்விக்க வேண்டுமாயின், உங்கள் சந்ததியார்கள் நன்மைபெற வேண்டுமாயின் நல்லோர்களாக இருக்க வேண்டுமாயின் "அவசரம் ஆபத்துக்கிடம்" என்பதை யுங்கள் கவனத்தில் பதிய வைத்து அதிஜாக்ரதையுடன் ஒவ்வொரு விஷயத்திலும் அவசரப்படாமல் நிதானமாகவும் முன் யோசனையோடும் பேசப்பழகுவீர்களாக.

மு. மாணிக்க நாயகர்.
புதுவை.

---

## இல்லறம்—ஜீவகதி.

(425-வது பக்கத் தொடர்ச்சி)

சிரத்தை பக்திகளுடன் செய்யப்படும் இக்கர்மங்களினால் சொர்க்காதி புவனங்களில் வசிக்கும் புண்ணியாத்மாக்களுக்குப் புண்ணிய பலன் விர்த்தியாகும். நரகலோகங்களில் வசிக்கும் ஆத்மாக்களுக்குப் பாபபலன் குறையும். குறையவே அத்துன்ப உலகத்தினின்று விடுபடும். இதனாலே சற்புத்திரன் தன் குலபிதிர்க்களை நரகத்தினின்றும் விடுதலையாக்கிக் கரை யேற்றுகிறானென்று நூல்கள் கூறுகின்றன. நரகத்தினின்றுந் தன் பிதிர்க்களை விடுவிப்பதினால் கர்த்தா வெகு புண்ணியத்தை யடைகிறான். பிதிர்க்களும் பிதிர்த்தேவர்களும் அவனைப் பூரண திருப்தியுடன் ஆசீர்வதிக்கிறார்கள். தன்



பிதிர்க்களிடத்தில் பக்தியினால் நன்றி மறவாமை யென்னும் பரம தர்மத்தைச் சிரத்தையுடன் செய்கிற கர்த்தாவைச் சகல தேவர்களும் வாழ்த்திக் கொண்டாடுகிறார்கள். அவன் கருதியவை யிடையூறின்றி நிறைவேறும் வண்ணம் அனுக்கிரகிக்கிறார்கள். மாதுர் யக்ஞம், பிதிர் யக்ஞம் என்னப்படும் இக்கர்மம் எல்லாவற்றினும் சிறந்ததாகப் பெரியோர்கள் புகழ்கிறார்கள். நமது சாஸ்திரங்களில் இதற்கு மேற்பட்ட கர்மம் வேறொன்றென்று கூறப்படவில்லை. இதுகாறும் கூறியவை எல்லா வுலகங்களுக்கும் பொதுவாகும். இனி, மேலே சென்ற ஆன்மாக்கள் இப்பூலோகத்துக்கு வருவதைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

போக பூமியினின்றும் விடுபட்டுப் புண்ணிய சேஷங்களை யனுபவிக்கவும், மேலும் மேலும் புண்ணியங்களை யீட்டுதற்கும் பூலோகத்தை நோக்கி வருமான்மாக்களும், நரகத்தினின்றும் விடுபட்டுப் பாவசேஷ பலனையாவது அதற்குமுன் புரிந்துள்ள புண்ணிய சேஷபலனையாவது அனுபவிக்கப் பூலோகத்தை நோக்கி வரும் ஆன்மாவும் சந்திர மண்டலமாகிய பிதிர் லோகத்தை யடையும். சூட்சும சரீரத்துடன் கூடியே யடையும். பிதிர் லோகத்திற் பரிபாகத்தை யடையும். பரிபாக முதிர்ந்தபின் சந்திர மண்டலத்தினின்று மிறங்கும். எவ்வாறென்னில் சந்திர மண்டலத்தினின்று வருகிற பனித்துளியுடன் அல்லது மழைத்துளியுடன் கலந்திறங்கும். இறங்கிப் பூமிக்குள்ளிருக்கும் வித்துக்களிற் பிரவேசித்துச் செடி, கொடி, மரம், புல் முதலியவையாகக் கன்மத்துக்குத் தக்கபடி உருவத்தைக் கொள்ளும். புண்ணிய பலத்தை யனுபவிக்கப் பிறக்கும் ஆன்மா புண்ணிய தேசத்தில் புண்ணிய நதிக்கரையில், தேவாலயத்தைச் சூழ்ந்திருக்கும் பூமியிற் பிறக்கும். கன்மத்துக்குத் தக்கபடி ஐசுவரியத்திற் சிறந்த குலத்தில், புண்ணிய மிகுந்த குலத்தில், கல்வியும் ஞானமும் சிறந்த குலத்திற் பிறக்கும். எவ்வாறென்னில் வித்துருவத்திற் பிரவேசித்துச் செடி கொடிகளாதியான வுருவமாய்த் தோன்றும். அதிலுண்டாகும் பலனைப் புண்ணியவான்கள் புசிப்பார்கள். புசித்தஆடவர்மகளிர் சரீரத்திற் சுக்கில சுரோணிதங்களாக மாறும். ஆடவர் சரீரத்திற் சென்றதே வித்தாய்ச் சோணிதத்துடன் கலந்து சரீரோற்பத்தியை யடையும். பெண் சரீரத்திற்சென்ற ஆன்ம சத்தி வேர்வையாதி மலங்களுடன் கலந்து வெளிப்பட்டு வேறு சரீரத்தை யவாவி முன்கூறியது போல அலைந்து திரியுமேயன்றிச் சரீரோற்பத்தியை யடைவதில்லை. புண்ணிய பலனுக் கேற்றவாறு உயர்ந்த ஜாதி உயர்ந்த குலம் கல்வி ஞான மிவற்றில் சிறந்த விடத்திலுள்ள புண்ணியவான்களுக் காகாரமாய்ச் சரீரத்தை யடையும். புண்ணியக் குறைவுள்ளவை தாழ்ந்த ஜாதி தாழ்ந்த குலமுடையாரை யடையும். மிகுந்த பாபமுடைய வான்மாக்கள் பசு பட்சிகளுக் காகாரமாய் அவ்வச் சொரூபங்களை யடையும். அவ்வாறு வித்தாகவோ, காய் கனி, ஔஷதமாகவோ அல்லது ஜலரூபமாகவோ வினைப்படி

தான் ஜனிக்கவேண்டிய ஆடவன் தேகத்தில் பிரவேசித்து விந்தாய் மாறும் இவையெல்லாம் அவ்வவற்றின் வினைப் பயனை யனுசரித்து ஈசுவர சக்தியால் கூட்டப்படுகின்றன. அவ்வினைப் பயனை யறிந்தூட்டும் சக்தி யீசுவரன் ஒருவனுக்கே நிரந்தரமாயுளதாம். கூட்டும்பொழுது இன்னின்ன காலத்தில் இன்னின்ன பலனை யனுபவிக்கக் கடவதென்று விதிக்கப்படுவதால் அவ்வினைப் பயனுக்கு விதி என்று பேர் கூறப்படும். அது அனுபவித்தாலன்றித் தீராது.

பிதாவின் சரீரத்தில் இரண்டு மாதகால மிருந்து பரிபாகப்பட்ட வான்மா விந்து என்னும் வித்தின் வடிவாகத் தாயின் கர்ப்பாசயத்தை நோக்கிச் செல்லும். செல்லும்போது தனஞ்செயன் என்னும் வாயுவோடு கூடி வெளிப்படும். வெளிப்படும்போது விந்து அவ்வாயுவைச் சூழ்ந்து மூடிக் கொள்ளும். காட்டாமணக்கின் பாலை யொரு தொன்னையில் வைத்துக் கொண்டு, ஒரு சிறு துரும்பை வட்டமாக முடிந்து, அந்தப்பாலில் நனைத்து ஊதினால் அதினின்று ரசமணிகள்போல அளவிலாதன வெளிப்பட்டுக் காற்றில் பறப்பதை நாம் காணலாம். அவையாவை? அந்தப்பால் தன்னை வெளியிலூந்தும் காற்றைச் சுற்றிக்கொள்ளும். அவையே உருண்டைகளாக வெளிப்படுகின்றன. நீரில் குமிழி உண்டாவதும் இவ்வாறேயாம். ஓர் அறுகம்புல்லினுனியில் தங்கும் பனித் துளியைப்போல அளவுள்ள ஒரு சிறியமணியாய்க் கருப்பாசயத்தை யடைந்து சோணிதத்தால் உருவம் பெற்றுப் பிறக்கும். "அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு ஆகமாகியோர் பாலரூபமாய்" என்ற பெரியோர் (பட்டினத்தார்) கூற்றுனுமுணரக்கிடந்தது. தனஞ்செயன் என்னும் வாயுவே சோணிதத்துடன் வளர்ந்து சரீரமாய்ப் பரிணமிக்கின்றது. அது சிரசிலேயே வசிக்கும். மரணகாலத்தில் மற்ற வாயுக்கள் வெளிப்பட்டுப் போகவும் தனஞ்செயன் நீங்குவதில்லை. அக்கினியால் தகிக்கப்படும்போது கபாலத்தைப் பிளந்துகொண்டு வெளிப்படும். பூமியில் புதைக்கப்படுவதினால் கபாலம் வெடிப்பதில்லை. அவ்வாயுவும் வெளிப்படாது. வெளிப்படாத அந்தவாயு ஜீவசக்தியுடையதாதலாலும் அதுவே சரீரமாகப் பரிணமித்தலாலும் அது இருக்குமிடத்தில் உருவங்கள் தோற்றும். சரீரம் முற்றும் மண்ணாய் மடிகிறவரையில் அவ்வுருத்தோற்ற முண்டாகும். அதையே பேய் என்பார்கள். அது யாதொரு தீமையுஞ் செய்யாதாயினும் பயப்படும் சுபாவமுள்ளவர்களுக்குத் தீமை நேரிடுவதுண்டு. விசேஷமாய்ப் பெண்களுக்கே தீமையுண்டாகும். பயப்படுமியல்புள்ள சில ஆடவர்களுக்கும் தீமை பயக்கும். பிணங்களை யெரித்துவிடுகிற சுடுகாட்டினிடத்தில் இவ்விதமான சொரூபம் காணப்படுவதில்லை. ஏனென்றால் எரியும்போது கபாலம் வெடித்து வாயுவெளிப்பட்டு வெளிவாயுவோடு கலந்து சென்றுவிடும்; அங்கேதங்குவதில்லை. ஆதலால் அவ்விடத்தில் உருத்திரமூர்த்தி வசிக்கிறார் என்றும், அதனால் அவருடைய பரிவாரமாகிய பைசாசகணங்கள் அவரது சந்நிதியில் ஒருவருக்குந் தீமைசெய்யாவென்றும் கூறுவது உலகவழக்கம். ஸம்ஹாரகாலத்தில் சகல சராசரங்களையும் தமது நெற்றிக்கண் நெருப்பினால் தகித்துவிட்டுச் சர்வசூன்னியமான அவ்விடத்தில் தனித்துச் சிவபெருமான் வசிப்பாரென்று வேதாதிநூல்கள் கூறுகின்றன. இதையே "கோயில் சுடுகாடு" என்று பெரியார் கூறினார்கள். அதுபோலவே சுடுகாடும் சகல பிராணிகளையும் தகிப்பதினால் உருத்திரமூர்த்திக் கிருப்பிடமென்று கூறுவர். இந்தப் பிதிர்க் கர்மத்துக்கனுசரணையாகவே தேவர், பூதம், விருந்து, இவர்களை யாராதிப்பதும் விதிக்கப்பட்டது. இவற்றைத் தேவ யக்ஞம், பிதிர் யக்ஞம், பூத யக்ஞம், பிரம யக்ஞம், மானிட யக்ஞம் என்பர். இதற்குப் பஞ்ச மஹா யக்ஞம் என்று பெயர் கூறுவர். இவற்றுள் வேதமோதுதல் பிரமயக்ஞம்; பிதிர்களைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம் முதலியன பிதிர்யக்ஞம்; தேவர்களைக் குறித்து அக்கினியில் ஓமம் செய்வது தேவயக்ஞம்; காகபலி சுவானபலி முதலியன பூதயக்ஞம்; அதிதிகளுக்கு அன்னமிட்டு உபசரிப்பது மானிட யக்ஞம். இவ்வைந்து யக்ஞங்களும் ஒரு கிரஹஸ்தன் அவசியம் செய்து தீரவேண்டும்.



இவற்றால் சித்த சுத்தியடைந்த ஆன்மா புண்ணியான்மா எனப்படும். இவ்வான்மாவே சொர்க்காதி புவன போகங்களை யனுபவித்து அவற்றில் நிராசையுண்டாய்ப் பிரம நிஷ்டைகூடி மீளாக்கதியாகிய சாயுஜ்ய பதவியை அடைந்து நித்தியானந்த சுகத்தை யனுபவிக்கும். இவை எல்லாவற்றுக்கும் தெய்வபக்தியே ஆதாரமா யுள்ளது. தெய்வ பக்தி யில்லாமற் செய்யப்படும் எந்தக் கர்மமும் பலன் தராது. கர்மம் என்பது இன்னதென்பதை விளக்குவோம். (தொடரும்)

இல்லறம்—ஜீவகதி முற்றும்.

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## நீதி வாக்கியங்களின் உரைப் பிரதி.

அன்னிய நாட்டு நாகரீகத்தால் நம் நாட்டுச் சிறப்பு எத்துணை மாறினும், வாடிய புஷ்பத்தினுந் தேனிருப்பதுபோல அது குன்றாமல் இன்னும் நிலை பெற்றிருப்பது மிகவும் வியக்கத்தக்கது. ஆயினுஞ் சிற்சிலர் காலத்துக் கேற்ற கோலங்கொண்டு பழைய நூற்களையே பழைமைக்கு விரோதமாக மேற்கோள் காட்டியும், தம் நாஸ்திகக் கொள்கைக்குத் தக்கபடி ஆஸ்திக நூற் கொள்கைகளைத் திரித்தும் கூறித்திரிகிறதைக் காண எம்மனம் நாணுகின்றது. இத்தகைய இழுக்குக்களுக்குப் பண்டைய உரையாசிரியரும் உட்பட் டிருக்கின்றனர். வடநூற் போக்குக்குந் தங்கருத்துக்கும் பொருந்தியபடி திருக்குறளுக்கு உரைவகுத்தார் பரிமேலழகர் என்பது, அவருடைய உரையையும், இப்போது பதிப்பிக்கப்பட்ட மணக்குடவர்

உரையையும் ஒற்றிட்டுப் பார்த்தால் நன்கு விளங்கும். ஈண்டு விரிக்கிற் பெருகுமாதலின், ஸ்ரீமான் தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள் இயற்றியுள்ள திருவள்ளுவரென்னும் வியாசத்தின்கண் பரக்கக் காணலாம்.

இவ்விதமாகப் பொருள் கொள்வது எக்காலத்தும் இயல்புபோலும்; ஔவையார் இயற்றிய நீதிவாக்கியங்களிற் போதிய சான்றுகள் மலியும். அவ்வம்மையார் வேதாந்தப் பொருள் நாடாது இருக்க, அக்கருத்தேயுடையார் என 'ஆத்திச்சூடி வேதாந்த ரஹஸ்யம்' ஆதிய நூற்கள் கூறும். உதாரணமாக 'இல்லற மல்லது நல்லறமன்று' எனக் கற்புவாழ்க்கையிற் பட்ட நல்லாளுடன் கூடி நடாதது மில்லறதருமமென வெள்ளிதாக விளங்கிநிற்க, இச்சான்றோர்கள் 'நிலைபெற்ற இல்லாகிய மோட்சத்தை நாடிச் செய்யும் அறமாகிய துறவறம்' என்ப. எனின், துறந்தார் எவ்வணம் அறமியற்ற வியலும்? இல்லறத்துள்ளார் மோட்சத்தைக் கருதிச் செய்வதா அன்றோ அறங்கள்? இல்லையெனின் வசிட்டர் வள்ளுவர் முதலாயினர்க்குத் தனியே யோர் துறக்கங் குறிப்பித்தனர் போலும்.

நிற்க, ஆத்திச்சூடி கொன்றைவேய்ந்தன் ஆய நீதிவாக்கியங்களின் சிறப்பெடுத்தோதுதல் பொன்னில மாட்சிமைக்கு மங்கலகரமான மஞ்சணிறத்தை ஒப்பவைத்தல் போலாமென அஞ்சிக்கூறாது விடுத்தனன். அவைகளைத் தொல்காப்பியவுரை முதலிய சிறந்த நூற்களிலும், தருக்கப் பிரசங்கங்களிலும் மேற்கோளாகவும், இன்றைக்குஞ் சிறு பாலர்கள் முதல் ஓத்தாகக் கொள்ளுதலுமே அவைகளின் சிறப்பை நன்கு விளக்கும். இத்தகைய சிறப்புவாய்ந்த நூலிற்கு ஓர் உரையிருந்திருக்க வேண்டுமென்பதே என் துணிபு. பண்டைய நூற்கள் ஏறக்குறைய எல்லாவற்றிற்குந் தக்க உரைகளும், சில நூற்களுக்கு ஒன்றுக்குமேல் உரைகளும் அமைந்திருக்க என் இந்நூலுக்கும் இராது? யான் நினைத்தபடியே உரையொன்றும் இருக்கின்றது. அவ்வுரையும், அதன்கண் கண்ட பாடமும் தமிழுலகோர் அறியுங்கால், இந்நூலின் கண் தோன்றும் பலவித ஐயப்பாடும் நீங்குவது நிச்சயம். அவ்வித ஐயப்பாடுகளுக்கு முதற்காரணம் தற்போழ்து வழங்கும் குற்றமான பாடமே; இரண்டாவது, இந்நூல் இயற்றிய காலத்திருந்த நோக்கமும் ஆசார நிலைமையும் உணராது, தாந்தாங்கொண்ட கொள்கைக்கும் தமது காலத்துக்கு கோலத்திற்கு மேற்றபடி பொருளுரைத்தலுமாம். யான் சிறிது கடுமையாகக் கூறுவதற்கு ஆன்றோர் மன்னிக்க வேண்டுகிறேன். சந்தேகத்துக் கிடமான வாக்கியங்களும் அதற்குப் பல பொருளுரையும், எட்டுப் பிரதியுரையால் விளக்கமும் ஆன சிலவாக்கியங்களை ஈண்டுக் குறிக்கின்றேன்:

1. அக்கஞ் சுருக்கேல்.
2. ஙப்போல் வளை.
3. இடம்பட வீடேல்.



4. தானமது விரும்பு.
5. பாம்பொடு பழகேல். (இஃது அரவமாட்டேலென்பதுடன் நோக்கக் கூறியதுகூறலென்னுங் குற்றமாதல் காண்க)
6. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
7. உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு-முதலியன.

இவைகளிற் சில சந்தர்ப்பங்களில் இராமாநுஜர் விருத்தியுரை விளக்கஞ்செய்யும். ஆயினுஞ் சில கல்வியாளர் அவர்வேண்டுமென்றே பாடத்தைத் திரித்துப் பொருள் கூறினரென்ப.

யான் கூறிய எட்டுப்பிரதி சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்துக் குரிமையானது. அந்நூலைச் சீக்கிரத்திற் பதிப்பிக்கவேண்டிய முயற்சிசெய்து வருவதாக அறிகிறேன். அந்நூல்வரையில் வெளிப்போழ்ந்தால் மன் பதை யுலகத்துக்குக் கழிபெரு நன்மையாம். அவ்வுரைக் காசிரியர் இன்னார் என விளங்காவிடினும், உரையின் சொற்பொலிவும் பொருணயமும் உரைப்போக்கும் நோக்குழி பண்டைய காலத்ததாகவே கருதுவதற் கிடமுண்டு. மிகவுங் கடினமும் அநேக விபரீத உரை யீட்டுக்குங் காரணமான இரண்டு வாக்கியங்களுக்கு அமைத்த உரையை யீண்டுக் குறிக்கின்றேன்.

(குறிப்பு—அந்நூலில் அறஞ்செயவிரும்பு என்ற தொடக்கத்துக்கே "கொன்றைவேய்ந்தன்" என்றும், மற்றைய வொன்றுக்கு "அன்னையும் பிதா" என்றுந் தலைக் குறிப்புக் காணப்படுகின்றது. வேண்டுவோர் மேற்கண்ட கல்லூரித் தமிழ்ச்சங்கத்துக் காரியதரிசிக்கு எழுதினால் விபரங் கிடைக்கும்.)

ஙப்போல் வளை:—இதற்குப் பற்பலர் பலப்பல உரைகூறுவர். நமது போதினியிலும் (5-ம் தொகுதி, முதற்பகுதி, 21-24 பக்கங்கள்) ஸ்ரீமான் ஸ்ரீநிவாசன் என்னும் பண்டிதர், ஙகரத்தைப்போல் உன் சுற்றத்தாரை ஆதரித்துத் தழுவிக்கொண்டிரு......ஙகரமானது தான் பிரயோசனமுள்ள எழுத்தாயிருந்தும் பிரயோசன மில்லாத தன் இனத்தையுந் தழுவுதல் போல" என்றும் கூறிய உரையை ஆதரித்து அநேகர் கூறுகின்றனர். இன்னுஞ் சிலர் கூறும் உரை விநோதமாக இருக்கும். அஃதாவது, ஙகரம், முற்காலத்தில் 'ங' கரத்திற்கு இடைச்சுழி யிட்டாற் போல் (ங) எழுதப்பட்டது; அவ்வெழுத்துத் தன்னை வளைந்தது போலச் சுற்றத்தைக்கொண்டு வளைக, என்பதாம். இரு உரையுஞ் சுற்றத்தைத் தழுவுதலே கருத்தாதலின் ஏன் முதற்பொருளையே கொள்ளலாகாது. இஃதெல்லாம் பாடபேதக்குற்றமாகும். இனி உரையிற்கண்ட,

"ஙப்போல் வளை" என்பது ஙகரவடிவமாய்ப் போரில் மாற்றானை வளைக; அது படைகளுக்கு உடற்றவும் ஒதுங்கவுமாம்; என்றவாறு; (ஙகர) வடிவம் என்பது யூகம்—அது சக்கரயூகம், கிரவுஞ்ச யூகம், பாசயூகம், துசி

யூகம், என்பன போல் ஒன்று) இவ்வியூகங்கள் பாரதம், இராமாவதார முதலிய பெருநூல்களிற் காணலாம்.

“இஃதறியாத பிறரெல்லாம் ஐ என்பது யூகிபாடையிலே பரிமாவாதலின், அப்படை கொண்டு போரில் வெல்லக் கருதுவார் பகைவரை வளைக என்று, “படைக்குட்டம் பாய்மா வுடையா னுடைக்கிற்கும்” என்ற அடியைக்காட்டாகக் கொண்டுரைத்தும்; “போல” என்னு மூலபாடந் திரித்துக் கருத்துவழுப் படுத்தியும் உரைகண்டனர்; யூகிபாடை ஒளவையார் பாடலுக்கிலக்கன்மையானும் பிறவானும் அவருரைகள் பொருந்துவன வல்லவாம்.

இதனால் நாம் கொள்ளும் பாடமும், உரையும் பிசகென்பது தெற்றென விளங்கும்.

இதே போல “உண்டி சுருங்குதல்...” வேறுபட்டுளது.

“உண்டி சுருங்கிற் பண்டிக் கழகு” என்றது,..........உண்டியாகிய உணவு இல்லறத்தார்க்குந் துறவறத்தார்க்கும் விதித்த வளவில் ஏகதேசங் குறைந்தால் பண்டியாகிய வயிற்றினோய்க்காகாது அதனால் நித்திய கன்மவொழுக்கம் நிறைவேற அழகு வாய்ந்துவரும் என்றவாறு”———— என்றுளது.

இப்பாடத்தை யறியாதே பலரும் பலவிதமாகக் கொள்வர். இதன் ஐயத்தை நமது போதினியி லெடுத்தோதிய (தொகுதி 5. பகுதி 4. பக்கம் 156) சங்கர நாராயணர்க்கு விடை பகர்ந்தவருட் சிவானந்த யோகீஸ்வரர் உரையே மேற்பட்டதெனக் கொண்டனம். ஒருவர் ‘பண்டி’ என்றிருக்க வேண்டும் என்று கூறியதாகச் சொன்னார். அதற்கு உரையையும் அனுப்பியிருந்தாராயின் சிறந்திருக்கும்.

மிற்க யோகீஸ்வர ரவர்கள் சர்வ சாதாரணமான ஐயமுந் தற்கால நாகரிகத்தாலுண்டான அவவமென முனிகின்றனர். “முன்னோர் மொழி பொருளேயன்றி யவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்” ஆயினும் பசுத்தோல் போர்த்த புலி பைக்கூழ் மேயின் என் செய்வாம்? ஐயப்படுதல் குற்றமாயின் திரிபுற்ற பாட மேற்றுவாரும் ஓதுவாரும் அக்குற்றத்துக் காளாகாரோ? அவர்கூறும் விளக்கமே, நியாயவாதி (Vakil) ஒருவர் “அமெரிக்கா நாட்டுப் பிரசித்திபெற்ற நிபுணர் ஆராய்ச்சியின் பயனாக ஆண் சந்ததி விரும்புவார் பெண்மக்களின் சுரோணிதக் குறைவாலும் ஆண்மக்களின் சுக்கில மிகுதியாலும் அடையலாம் என்றதைமறுத்து, டெயின் (Dr.Taine) என்பார், உணவின் குறைவால் அஃது சாத்தியமாகாது என்றார்” என உதாரித்துக் காட்டினர். அவைகளை விவரப் படுத்தல் இடக்கராதலாலும், இடமிக்குக் கொள்ளலாலும் நிறுத்தினேன். உணவாதிகளாலே ஆடவரும் மாதருமே ஏனைய சௌகரியங்களைக் கொள்ளலாமென்பது நம் ஆயுள் வேதக் கோட்பாடு. மாதர்கள் ஊண்குறைத்தலால் வேறுவிதமான வியாதிகள் சம்பவித்தற் கிடமுண்டாதலாலும் பழைய உரையின் கொள்கையாலும் ஏனையோர் உரைகளை மறுத்தற்குச் சாலும். குறை கண்டார் வேறு விதமாகக் கொள்ளாது என் கருத்தைக் கொள்வரெனக் கருதுகிறேன். பாடந் திருந்தியவரைக் குறை கண்டேனே யன்றி உரை கண்டாரை யன்று என உணரற்பாலது. பெரியோர் வாக்கின் உண்மையை நிலைநிறுத்தப் புகுந்தவன், வேறு இழுக்குகளிற் படினும் ஆன்றோர் க்ஷமிப்பாராக!

சு. தீனதயாளு, சூளை, சென்னை.



---

## ஓர் முக்கிய அறிவிப்பு.

### அன்பார்ந்த சந்தா நண்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

(1) ஆனந்தனுடைய சந்தா நேயர்கள் ஆனந்தன் விஷயத்தில் மிக்க அன்புடையவர்களென்பதும், அவனுடைய அபிவிர்த்தியில் உண்மையான சிரத்தையுடையவர்களென்பதும் அனுபவமாயறிந்த விஷயம். உண்மையில் இது ஆனந்தனுக்கு ஒருவிதப் பெருமையையும் சந்தோஷத்தையு மளிக்கிறது. இச்சஞ்சிகையோடு 7-வது வருடம் முடிகிறது. நாம் கடந்த இரண்டு சஞ்சிகைகளிலும் பிரசுரித்தபடி முன்பண மனுப்பாதவர்களுக்கெல்லாம் இச்சஞ்சிகையை வி. பி யி லனுப்புகிறோம்.

8-வது வருடத்திற்குச் சஞ்சிகையை நிறுத்தும்படி எழுதியவர்களுக்கு இச்சஞ்சிகையைச் சாதாரண தபாலில் அனுப்பிவிடுகிறோம். ஆயினும் இன்னும் ஒருமாதம் வரையில் அவர்கள் பெயர்கள் புத்தகத்திலிருந்து எடுக்கப்படமாட்டா.

ஒவ்வொருவருடமும் சிலர் சந்தாவினின்று நீங்கிக்கொள்வதால் இரண்டு வருடங்களாய்ச் சந்தாதாரரின் தொகை ஒரே அளவில் நின்று வருகிறது. இதனால் நாம் உத்தேசித்துள்ளபடி சஞ்சிகையை விர்த்திசெய்யக் கூடாமலே யிருக்கிறது. சந்தாதாரர்கள் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டால் மிகச் சுலபமாகவே தலைக்கொரு புது சந்தாதாரரைச் சேர்க்கலாம். எட்டாவதுவருடம் ஒவ்வொருவரும் தயவுசெய்து அவ்வாறே ஆனந்தனுக்கு உதவி செய்வார்களாயின், இது நம்தெய்வத் திருமொழியாகிய தாய்மொழிக்கும், நம் தாய் நாடாகிய பாரத மாதாவிற்கும் செய்த பேருபகாரமாகுமாதலின், பெரும்புண்ணிய மெய்தப் பெறுவார்களென்பது திண்ணம்.

(2) ஜூன்மாத ஆரம்பத்தில் யாவர்க்கும் சம்பளம் கிடைக்குமாதலால் 30—5—22 க்குள் சந்தா செலுத்தியவர்களுக்கே பஞ்சாங்கம் அளிக்கப்படும் என்ற தவணையைத் தள்ளிவைக்கவேண்டு மென்று இரண்டொரு சந்தாதாரர்கள் கேட்டுக் கொண்டதால், ஆனிமாத சஞ்சிகை வி. பியில் வெளியாக வேண்டிய தினத்திற்கு முன்தினமாகிய 14—6—22 வரையில் தவணையை ஒத்திவைத் திருக்கிறோம். பத்திராதிபர்.

## பெரியோரைத் துணைக்கொள்

கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் மக்களாய்ப் பிறந்த நாம் கல்வி யறிவொழுக்கங்களினாலும், குணவிசேடத்தினாலும் மேம்பாடெய்திய பெரியோரைத் துணைக்கொண் டொழுகுதல் அத்தியாவசியமாக வேண்டற்பாலது.

இதுபற்றியே ஔவைப் பிராட்டியாரும் 'ஆத்திசூடி'யிற் 'பெரியோரைத் துணைக்கொள்' என்று திருவாய்மலர்ந்தார். பெரியோரைத்துணைக் கொள் என்று சொல்லுமளவில் உருவத்தினாலே மாத்திரம் பெரியவர்களாகத் தோன்றுபவர்களைத் துணைக்கொள் எனக்கருதாது, கல்வி, அறிவுடமை, தானம், தவம், முயற்சி முதலிய நற்குண நற்செய்கை யுடையவர்கள் யாவரோ, அவர்களை நாம் துணையாகக் கொண்டொழுகினால், சந்தனமரத்தைச் சார்ந்த அகிலமரமும் வாசனை வீசுமாறுபோல் பெரியோர்களிடத்திலுள்ள பெருந்தகைய குணங்கள் அவர்களைத் துணைக் கொள்ளுபவர்களாகிய நம்மிடத்திலும் தோற்றப்படும். அங்ஙனந் தோற்றப்படவே நம்மிடத்திலேயுள்ள தீக்குணங்க ளெல்லாம் சிறிது சிறிதாக வகன்றுவிடும்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

'அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்' என்று எதன் பொருட்டுக்

கூறியிருக்கின்றார். அறிவிற் சிறந்த பெரியவர்கள் விரும்புவதைக் குறிப்பாலறிந்து செய்து அவரைத்தனக்குச் சிறந்தவராகக் கொள்ளுதலே உலகில் ஒருவனடையும் பேறுக ளெல்லாவற்றிலும் அரியபேறு என்று கூறலாம். பெரியோரைத் துணைக்கொள்ளுதலினாலே இம்மைக்கு மாத்திரமல்ல மறுமைக்கும் எவ்வளவோ நன்மைபயக்கக் கூடியவா யிருப்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கின், ஒவ்வொரு நன்மையும் நமது மனத்திற்கு நன்றாய்ப் புலப்படும். நமது அருமை பெருமைவாய்ந்த ஸ்ரீமகா பாரதமே இதற்குச் சான்றாக விருக்கின்றது.

துரியோதனாதியர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த பாரத யுத்தத்தில் பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் கைத்துணையாகக் கொள்ளாவிடில் போரிற் செயமுறுவார்களோ? இல்லை. துரியோதனாதியர் சேனையோ பாண்டவரின் படையிற் பன்மடங்கதிகமாக விருந்தும் அமரில் அபஜெய முறவேண்டி நேரிட்டதே! பாண்டவர் பெரியோரைத் துணைக் கொள் என்னும் கருத்தை கடைப்பிடித் தொழுகிய படியினாற்றான் அவர்கள் உய்ந்தனர். அன்றியும் பாண்டவருக்கு எவ்வெந் நேரத்தில் எவ்விதவிடையூறு வந்து நேரிட்டதோ அவ்வச் சமயங்களில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி அவர்களுக்குக் கைத்துணையாக நின்று காப்பாற்றி யருளியதை நாம் மகாபாரதத்தில் வாசித்தும் கேட்டு மிருக்கிறோம்.



அன்றியும் "இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவுடை யாரைக்
கனவிலும் நனவிலுங் காண்பது தானே."

என்னும் வாக்கியத்தினாலும் அறிவுடையவர்களாகிய பெரியோரைக் கனவிலும் நனவிலும் வைத்துக்கொண் டிருத்தலே பரம்பொருளாகிய இறைவனைத் தொழுதலினும் பார்க்க இனிது என்று கூறியிருக்கின்றார்.

தந்தையுரை தட்டினவன் றாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம் மாணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி தாண்டியவிந் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்.

என்பதனாலு மறியக்கிடக்கின்றது. ஆதலால் நாம் பெரியோரைத் துணைக் கொண் டொழுகுதலே இன்றி யமையாத வொழுக்கமாகும்.

'குற்றங் களைந்து குறைகளைந்து கைக்கொள்ளல்
கற்றறிந்த மாந்தர் கடனா மென்க.'

ஆ. கனகசபை, குருநாக்கல்.

---

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(438-ம் பக்கத் தொடர்ச்சி.)

போலீஸார் கள்ளரைவிடாது துரத்திச் சென்றார்கள். இடையிலுள்ள தோட்டம் கழனி யாவுங் கடந்த பின் ஆற்றின் கரைமேல் நெடுக ஒரு தோட்டமிருக்கிறது. கள்ளர் அதில் நுழைந்து மறைந்து விட்டார்கள். போலீஸார் அத்தோட்டத்தில் நுழையும் போது கள்ளர் கண்களுக்குப் புலப்படவில்லை. அந்த விடத்தில் ஆறு சற்று நெருக்கமாய்ச் செல்வதால் சுலபமாய்த் தாண்டக்கூடியதா யிருந்தது.

போலீஸார் அங்கு வந்து பார்த்துக் கள்ளர் எப்படிப் போய்விட்டிருப்பார்கள் என்று நாற்புறமும் பார்த்தார்கள். அங்கு சில மரங்களின் இடையில் மறைவில் ஒரு சிறு மரக்குடிசை புலப்பட்டது. அது யாரோ ஆற்றில் கொள்ளையடிக்கும் கள்ளனுடைய குடிசையென் றெண்ணிக்கொண்டார்கள். அதோடு அச்சமயம் அது தோன்றியமாதிரியால் தற்சமயம் அது காலியாய் மூடப்பட்டிருக்கிறதென்று எண்ணிக்கொண்டு, எதற்கும் பார்ப்போமென்று ஆத்திரத்தோடு போய்க் கதவைப் படபட வென்று தட்டினார்கள்.

இரண்டொரு நிமிடங்களில் உள்ளிருந்து ஒருவன் கிழக்குரலாய் "யாரது இரவில் இந்த வேளையில்கூட வந்து தொந்திரவு கொடுக்கிறது?" என்று சத்தங் கேட்டது. ஆனந்தஸிங் அதிகாரத் தொனியோடு "நாங்

கள் போலீஸார்; உடனே கதவைத்திற!" என்றான். மறு நிமிடம் கதவு திறக்கப்பட்டதும் காடியைப்போல் தாடியையுடைய ஒரு கிழவன் பாதி பயந்த முகத்தோடு வெளியில் வந்து "என்ன வேண்டும்; நான் படகு விட்டுச் சீவனம் செய்துகொண்டிருக்கும் நிரபராதியான மனிதன்" என்றான்.

ஆனந்தஸிங் "நாங்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள். கள்ளரைத் தேடிக்கொண்டு வந்தோம். எங்களைத் தவிர வேறு யாரேனும் இப்பக்கம் வந்தார்களா?" என்றான்.

கிழவன்:—இங்கு நான் யாரையும் காணவில்லை. நித்திரைசெய்துகொண்டிருந்தேனாதலால் ஒரு சந்தடியும் எனக்குக் கேட்கவில்லை.

ஆனந்த:—உன் படகுகள் எங்கேயிருக்கின்றன? அக்கள்ளர்களுக்குப் புலப்படத்தக்க விடத்தில் ஒரு படகாவது இருந்ததோ?

இதைக்கேட்ட கிழவன் "அய்யோ" வென்று அலறியெழுந்து "தெய்வமே என்படகு ஆற்றோரத்தில் விட்டிருந்தேனே" என்று கூவிக்கொண்டே ஆற்றோரத்திற் கோடினான். ஆனந்தஸிங்கும் அவன் ஆட்களும் அவன் பின்னாலேயே சென்றார்கள்.

ஆற்றின் கரையை நெருங்கியதும் கிழவன் "அய்யோ நான் நினைப்பதைப்போலவே முடிந்துவிட்டதே. கள்ளர் என்படகைக் கொண்டுபோய் விட்டார்களே" என்று பிரலாபிக்கத் தொடங்கினான். கள்ளர் படகில் எதிர்க்கரைக்குப் போய்விட்டார்கள் என்று ஆனந்தஸிங் மனதிற்பட்டுவிட்டது. அவன் படகுக்காரக்கிழவனை நோக்கி,

"நீ பிரலாபிப்பதை நிறுத்து; உடனே நான் சொல்வதைக்கேள். உன்னிடம் இன்னொரு படகிருக்கிறதா கூறு சீக்கிரம்!" என்றான்.

கிழவன் தடுமாற்றத்தோடு "ஆம் இருக்கிறது......ஆனால்......" என்பதற்குள் ஆனந்தஸிங் கோபத்தோடு "ஆனால் கீனால் ஒன்றும் வேண்டாம். மறுவார்த்தை கூறாமல் அந்தப்படகு எங்கிருக்கிறது கொண்டுவா சீக்கிரம்" என்றான்.

கிழவன் பயமடைந்து உடனே பக்கத்திலிருக்கும் ஒருகாலிக் குடிசையிலிருந்த ஒரு பெரிய படகையெடுத்துக் கொடுத்தான். அதில் 5 பேர் உட்காரலாம்.

ஆனந்தஸிங் அப்படகை யெடுத்துக்கொண்டு சென்று ஆற்றில்விட்டுத் தன்னோடு நான்குபேரை யேற்றிக்கொண்டு மற்ற பேரைக் கரையோரம் நடந்துவரும்படி கட்டளையிட்டான். கள்ளர் ஆற்றுப்போக்கின் வழியே சென்றிருப்பார்களென்று கருதி யவ்வழியே சென்றான். அவன் கருத்தாவது கள்ளர் ஒரு பெரியவூர் புலப்படும் மட்டும் சென்று அங்கு இறங்கிவிடுவார்கள்; அப்போது நாம் அவர்களைக் கண்டுபிடிப்பது கஷ்டம் என்பதே.



அவ்வாறே யவர்கள் ஆற்றின் வாட்டத்திலேயே நெடுந்தூரம் சென்றார்கள். ஆனந்தஸிங்கு திடீலென்று "படகை நிறுத்து நிறுத்து" என்று கட்டளையிட்டு, வலதுகைப்பக்கம் படகைத்திருப்பிக் கரையோரம் நிறுத்தி யிறங்கினான். அவன் அப்படிச்செய்ததன் காரணம் அங்கு கரையின்மேல் ஒருபடகு இருந்ததைக் கண்டான். அப்படகே கள்ளர் ஏறிவந்தபடகு.

ஆனந்தஸிங் உடனே யாவரையும் அங்கு இறங்கச்செய்து தாங்கள் ஏறிவந்தபடகையும் கரையில் வைத்துவிட்டுக் கரையிலுள்ள காட்டில் கள்ளரைத் தேடத்தொடங்கினான். சற்றுநேரம் பார்த்துவிட்டுத் தன் ஆட்களைப் பிரித்துவிட்டு அவரவர்கள் தனித்தனியாய்ப் போய்த் தேடவேண்டுமென்றும், கள்ளராகப்பட்டால் ஒருவித இரகசியக்குறியால் அறிவிக்கவேண்டுமென்றும், பிறகு யாவரும் இன்னவிடத்தில் வந்து கூடவேண்டுமென்றும் ஏற்பாடு செய்துவிட்டுத் தானும் ஒருப்பக்கம் தேடப்புறப்பட்டான்.

ஆனந்தஸிங் சில மைல்கள் தூரம் அலைந்து திரிந்து எங்கும் யாரையும் காணவில்லை. கடைசியில் ஒரு நெருங்கிய கானகத்தின் மத்தியில் கொஞ்சம் இடைவெளி யிருந்தது. அதில் ஒரு குடிசையிருந்தது. அதிலிருந்து வெளிச்சம் தெரிந்தது. ஆனந்தஸிங் சாக்கிரதையோடு அதன் அருகிற் சென்றபோது உள்ளே ஆட்கள்பேசும் அரவம்கேட்டது. அக்குடிசை மரக்குடிசையாதலால், பலகைகளின் இடையில் சந்துகள் இருந்தன. அவற்றின் வழியாய் ஆனந்தஸிங் உள்ளேபார்த்தான்.

அங்கு அவனுக்குப் புலப்பட்ட காட்சிகள் அவனைத் திடுக்கிடச் செய்தன. ஏனெனில் அக்குடிசையில் இரங்கநாதன் முதல் எல்லாக் கள்ளர்களும் இருந்தார்கள். ஆனந்தஸிங் இரண்டொரு நிமிடம் அங்குநடக்கும் சம்பாஷணைகளைக் கேட்டுவிட்டு இனி நமது ஆட்களுக்கு இரகசியமாய்ச் சங்கதியைத் தெரிவிக்கவேண்டுமே, இடையில் இவர்கள் ஓடிவிடாவண்ணம் செய்யவேண்டுமே யென்று சிந்தித்துத் திரும்பப் போகிறான். அதே நிமிடம் யாரோ பின்பக்கம் ஒரு பலத்தகழியால் தன் மண்டைமேல் அடித்தது தான்தெரியும். உடனே அடியோடு ஸ்மரணையற்றுச் சவம்போல் பூமியில் விழுந்து விட்டான்.

## 13-வது அத்தியாயம்.

நமது கோமளவல்லியின் கதி யென்னாயிற்றென்று கவனிப்போம். அவள் கள்ளர்கள் நம்மையே தேடிவருகிறார்களென்றெண்ணிக்கொண்டு அவர்களுக்குமுன் ஓடுகிறாள். அச்சமயம் அவர்கள் அவள் விஷயத்தைக் கவனிக்கமாட்டார்கள். அவர்கள் போலீஸாரால் தொடர்ந்து வரப்படுகிறார்களென்று அவளுக்குத் தெரியாது. வினைப்பயன் எவ்வாறிருக்கிறதென்று நண்பர்கள் இச்சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டும்.

அவன் பின்னால் ஓடிவரும் கள்ளர்க்குப்பயந்து மூச்சுப்பிடித்துக் கொண்டு, வேலியென்றும், கழனியென்றும், புதரென்றும், மேடென்றும், பள்ளமென்றும் பாராமல் ஓட்டமாய் ஓடினான். கடைசியில் அவள் கால்கள் ஓய்ந்து விட்டன. இனிப்பேசாமல் உட்கார்ந்து விடவேண்டிய வேளை வந்துவிட்டது.

அச்சமயம் சமீபத்தில் ஆட்கள் ஓடிவரும் சத்தம் கேட்டு நடுநடுங்கி ஒரு மரத்தின் நிழலில் பதுங்கினாள். ஓடிவந்த ஆட்கள் அவளிருக்கு மிடத்திற்கு வலது பக்கமாய் ஓடிவிட்டார்கள். அவள் அப்போதும் தெய்வகெதியாய் அவர்கள் நம்மைக்காணமற் போய்விட்டார்கள் என்று எண்ணிக் கொண்டாளே யன்றி அவர்கள் போலீஸாருக்குப்பயந்து ஓடுகிற சங்கதி யவளுக்குப் புலப்படவில்லை. அவர்கள் காலடிகள் தன் செவிக்கெட்டாமற் போம்வரையிலும் அங்கேபதுங்கி யிருந்து பிறகு தான் அவர்கள்கையில் சிக்காது தப்பித்துக் கொண்டதற்காகக் கடவுளைச் சற்றுநேரம் பிரார்த்தித்து விட்டுப் பிறகு புறப்பட்டாள்.

இன்னவழி செல்கிறோ மென்று சிந்திக்காமல் சற்றுதூரம் சென்றதே நாட்டுப் புறங்களுக்குச் செல்லும் ஒரு பாதை புலப்பட்டது. அவ்வழியே சென்றாள். கிழக்குவெளுக்கும் சமய மாய்விட்டது; அதற்குமேல் நடக்க முடியவில்லை. மிக்க ஆயாசம் தோன்றியது. ஒரு மரத்தடியின் கீழிருந்த புல்தரையில் படுத்தாள். ஆயாசத்தால் தன்னைமறந்து நித்திரைபோய்விட்டாள். அவள் விழித்துக் கொண்டபோது சூரியன் நன்றாய் உதயமாய் இருக்கிறது. (தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

---

## பொது விஷயங்கள்.

### லண்டன்மாநகரம்

லண்டன் நகரம் 1888-ம் வருடத்தில் ஸ்தல ஆட்சி சட்டத்தின்படி ஒரு கவுண்டி ஆக்கப்பட் டிருக்கிறது. இதன் விஸ்தீரணம் 64816 சதுர மைல் (சுமார் எழுபத்தைந்தாயிரம் ஏக்கர்) இதில் 1911-ம் வருஷத்திய ஜனசங்கைப்படி 45 லக்ஷம் ஜனங்கள் வசிக்கின்றார்கள். லண்டன்மாநகரில், 1086 தபாலாபீசுகளும், 3845 தபால் பெட்டிகளும், 33,000 (முப்பத்திமூன்று ஆயிரம்) தபாற்சேவகர்களும் உண்டு. 1476 லக்ஷம் காகிதங்கள் தினந்தோறும் பட்டுவாடா வாகியும், 2121 லக்ஷம் காகிதங்கள் பெட்டிகளிலிருந்து எடுத்து வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டும் வருகின்றன.

பூமிக்கு 20 அடிக்கு கீழ்போகும் மின்சார வண்டிகளுக்கு "அண்டர் கிரௌண்ட் ரயில்வே" என்றுபெயர். சுமார் 100 அடிக்குக் கீழும் 150 அடிக்குக் கீழும் செல்லும் இரண்டு தண்டவாளமுள்ள ரெயில்வேக்களுக்கு (குழாய்) டியூப் ரயில்வேக்கள் என்றபெயர். ஒரு வருஷத்தில் இப்பாதைகளின் வழியாக பிரயாணஞ் செய்வோர் 450 லக்ஷம் ஜனங்கள். அதன்றி



பூமிக்குமேல் போகும் டிராம்வண்டிகள் 2500. இதில் பிரயாணஞ் செய்வோர் 700 லக்ஷம். தண்டவாள மில்லாத மோட்டார் ஆம்னிபஸ் வண்டிகளுண்டு. அதிற்போகும் ஜனங்களின் மொத்தம் வருஷத்தில் 720 லக்ஷம். ஆக ஒரு வருஷத்தில் பூமிக்குக் கீழும் மேலும் ஓடும் ரெயில்களிலும் டிராம் வண்டிகளிலும் போகும் ஜனங்கள் 1800 லக்ஷம் அல்லது 18 கோடி. இதன்றி மோட்டார்கள் 11,000 மும், குதிரைவண்டிகள் அநேகமுமுண்டு. லண்டனில் மொத்தம் போலீஸ் 22, 000. தேம்ஸ்நதி காவல் போலீஸ் 240 பேர். லண்டனில் முனிசிபல் சங்கப்பள்ளிக் கூடங்கள் 950. அதில் 7½ லக்ஷம் மாணாக்கர்கள் வாசிக்கின்றார்கள். முனிசிபல் உபாத்தியாயர்கள் மொத்தம் 19, 000. அதில் மாணாக்கர்களே உபாத்தியாயர் வேலைபார்ப்பவர்கள் 350.

பார்லிமெண்ட் மகாசபைக் கட்டிடம்:—

இக்கட்டிடமானது 1836-ம் வருஷத்தில் பிளான் எழுதித் தயாரிக்கப்பட்டு இரண்டு லக்ஷம்பவுன் செலவில் கட்டி முடிந்திருக்கின்றது. இதன் விஸ்தீரணம் 8 ஏக்கர்நிலம். தேம்ஸ் நதிக்கரையில் 900 அடி நீளத்தில் கட்டிடம் நிற்கின்றது. பிரபுக்கள் சபை (House of Lords) 91 அடி நீளம், 45 அடி அகலம், 45 அடி உயரத்துடன் சித்திரவேலையும் தஞ்சாவூர் தங்கத்தகடு (நகாஸ்) வேலைகளும் செய்யப்பட் டிருக்கின்றன. சாமான்ய ஜனசபை (House of Commons) 75 அடி நீளம் 45 அடி அகலம் 41 அடி உயரம்; இதல்லாமல் நடைபாதைகள், உள்ளறைகள், ஹால்கள், கோர்ட்டுகள், சாப்பாட்டு விடுதிகள், புஸ்தகசாலைகள் நிறைந்துள்ளன. இதில்கெடிகாரகோபுரம், விக்டோரியா கோபுரம், சக்கிரவர்த்தியவர்கள் ஏறும் படிக்கட்டு, காவல் அறை, ராஜா உடுப்பு தரிக்கும் அறை, ராஜாமேடை, இளவரசர் அறை, சபாநாயகர் அறை, கமிட்டி அறைகள். இன்னும் இவை போன்றவைகணக்கில்லை. இவ்வளவும் சேர்ந்தது பார்லிமெண்டு கட்டிடம். விக்டோரியா கோபுரம் சற்சதுரம் 75 அடி, உயரம் 340 அடி; இதற்குள் ராஜா அவர்கள் மட்டும் பிரவேசிக்கும் வளைவு (ஆர்ச்சு) ஒன்று இருக்கிறது. மணிகோபுரம் சற்சதுரம் 40 (நாற்பது) அடி, உயரம் 320 அடி. 13½ டன் நிறையுள்ள மணி கெடிகாரத்தில் அடிபடுகின்றது. இந்த ராஜாங்கத்தில் இந்த கடிகாரத்திற்குப் பெரிய கடிகாரம் இல்லை. நான்குபக்கமுமுள்ள கடிகார டயல்களின் குறுக்களவு 21½ அடி. சிறுமுள் 11 அடி நீளம். பெண்டுலம் தொங்கல் 175 அடி ஆழம். பெண்டுலம் எடை 700 ராத்தல். பார்லிமெண்டு நடக்கும் பொழுது கெடிகாரத்தில் பிரகாசமான விளக்கு போடப்படுகிறது. பகலில் ஆங்கில இராஜாங்கக் கொடிபறக்கின்றது. இங்கிலாந்தின் முக்கியரகசியம் "எல்லோரும் சுறு சுறுப்பாயும், விசுவாசமாயும், ஒற்றுமையாயும் வேலைசெய்தல்" தான். (சீர்திருத்தப் பத்திரிகையி லிருந்து இது எடுத்து எழுதப்பட்டது)

ரவி, சத்திரப்பட்டி.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

துந்துபி௵ ஆடிமீ—சாலிவாகனம் 1845—கலி 5024
பசலி 1331—கொல்லம் 1097-98—ஹிஜரி 1340—41
இங்கிலீஷ் 1922௵ ஜூலைமீ—ஆகஸ்டுமீ

160929 ... 600 008.

| | | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | ஞா | சப்39-10 | ரேவ-60-0 | அமி-60 | தக்ஷிணாயனபுண்யகாலம் |
| 2 | 17 | திங் | அ44-15 | ரேவ-5-45 | சித்-60 | கரிநாள் |
| 3 | 18 | செ | நவ47-53 | அசு-11-53 | சித்-60 | பிரயாணம் விலக்கப்பட்[டது |
| 4 | 19 | புத | தச49-35 | பர-16-45 | சி16-45அ | கிருத்திகை |
| 5 | 20 | வியா | ஏக49-20 | கிரு-18-50 | மர-60 | சர்வ ஏகாதசி |
| 6 | 21 | வெ | துவ47-5 | ரோ-19 23 | ம-19-23சி | இரவில் தனியநாள் |
| 7 | 22 | சனி | திர43-8 | மிரு-18-8 | சித்-60 | சனிப்பிரதோஷம் |
| 8 | 23 | ஞா | சது37-33 | திரு-15-0 | சித்-60 | சிம்மாயனம் நா-39-45 |
| 9 | 24 | திங் | ● 30-58 | புன-10-43 | அ10-43சி | சர்வத்திர அமாவாசை |
| 10 | 25 | செ | பிர23-23 | பூச-5-28<br>ஆயி-59-45 | சித்-60 | கரிநாள் |
| 11 | 26 | புத | துதி15 35 | மக-53-55 | சி53-55அ | வாகனமேற, ஆயுதம்பயி |
| 12 | 27 | வியா | திரி7-40 | பூர-48-18 | சி48-18ம | நாகசதுர்த்தி |
| 13 | 28 | வெ | சது0-13<br>பஞ்53-23 | உத்-48-15 | சி43-15அ | கருடபஞ்சமி, நாகபஞ்[சமி |
| 14 | 29 | சனி | சஷ்47-15 | அஸ்-39-0 | மர-60 | சஷ்டி சூரிய சஷ்டி |
| 15 | 30 | ஞா | சப்42-3 | சித்-35-43 | சித்-60 | தர்னியம், மாடு வாங்க |
| 16 | 31 | திங் | அ37-53 | சுவா-33-20 | அ33 20ம | பிரயாணம் விலக்க |
| 17 | 1 | செ | நவ34- 53 | விசா-32-10 | ம32-10 சி | பிரயாணம் விலக்க |
| 18 | 2 | புத | தச32-55 | அனு-32-0 | சித்-60 | ஆயுதம்பயிற்ற, நிஷேதம் |
| 19 | 3 | வியா | ஏக32-5 | கேட்-33-0 | பி33-0சி | சர்வ ஏகாதசி |
| 20 | 4 | வெ | து32-20 | மூல-34-58 | அ34-58பி | வரலட்சுமி விரதம் |
| 21 | 5 | சனி | திர33-40 | பூரா-33-0 | சித்-60 | சனிப்பிரதோஷம் |
| 22 | 6 | ஞா | சது36-5 | உத்-42-30 | அமி-60 | சீமந்தம் |
| 23 | 7 | திங் | ○ 39-33 | திரு-47-25 | அ47-25சி | |
| 24 | 8 | செ | பிர44-13 | அவி-53-33 | சி 53-33 ம | |
| 25 | 9 | புத | து49-45 | சதை-60-0 | சித்60 | |
| 26 | 10 | வியா | திரி56-0 | சதை-0-38 | ம-0-38-சி | |
| 27 | 11 | வெ | சது60-0 | பூரட்-8-18 | சித்-60 | |
| 28 | 12 | சனி | சது2-20 | உத்-16-13 | சி16-10பி | |
| 29 | 13 | ஞா | பஞ்8-45 | ரேவ-28-50 | அ23-50சி | |
| 30 | 14 | திங் | சஷ்14-50 | அசு-30-45 | சித்-60 | |
| 31 | 15 | செ | சப்18-55 | பர-36-23 | சித்60 | |
| 32 | 16 | புத | அ21-40 | கிரு-40-20 | அ40-20சி | கிருத்திகை விரதம் |

1922௵ ஆகஸ்டுமீ

| | | | |
|---|---|---|---|
| கே | | | பு |
| | 12உடட-பு<br>19- கன்-சு<br>27-சிம்-பு | | கு |
| | | | சு |
| | செ | | ரா-கு<br>சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE
"ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.